WWW.EBCWA.ORG.AU

BIBLICAL LEADERSHIP
வேதாகமத் தலைமைத்துவம்

DR JOHN C MCEWAN
டாக்டர் ஜான் சி மெக் இவான்

[BOOK 112]

Revised 14 August 2012

18-05-2014

இஸ்லாமிய இல்லங்களில் வளரும் அன்பர்களுக்கு,

நான் இப்புத்தகத்தின் ஆசியராய் இருக்கிறே. உங்களைப் போன்றே ஒரே தெய்வத்தை வழிபடுகிறவனாய் இருக்கிறேன், அவர் சிருஷ்டிக்கர்த்தரும், எல்லா ஜீவராசிகளுக்கும் நாசியிலே சுவாசம் தந்து தாங்கிவருகிறவராய் இருக்கிறார், வைராக்கியமாய் பக்தியுடன் வாழும் தமது மக்களுக்கு பிரதிபலன்களை அளிக்கிறவராய் இருக்கிறார், மற்றும் எல்லா மனுக்குலத்தையும் அவர் நியாயந்தீர்க்கிறவராய் இருக்கிறார். இப்புத்தகத்தை நீங்கள் வாசிப்பீர்களானால், வேதாகமத் தலைமைத்துவம் என்கிற கருத்தைக்குறித்து இஞ்சிலில் என்ன எழுதப்பட்டுள்ளது என்பதை அறிந்து கொள்கிறவர்களாய் இருப்பீர்கள். உங்களுக்கு சமாதானமும், ஆசீர்வாதமும் உண்டாக, மற்றும் உங்கள் குடும்பம், உங்கள் சமுதாயம் வளமடைய ஜெபிக்கிறேன், மற்றும் இதில் எழுதப்பட்டுள்ள முக்கியமான கருத்துக்கள் உங்கள் வாழ்வுக்கு பயனுள்ளதாய் அமைய ஜெபிக்கிறேன்.

முகமது நபி அவர்களது வார்த்தைகளை நீங்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறீர்கள் என்பதை நான் அறிவேன், அல்லா அருளிய எல்லாப் புத்தகங்களிலும் மிகப்பெரிய புத்தகத்தில் பதிவாகியுள்ளதும், மற்றும் மகத்துவமுள்ள குர் ஆனில் பதிவாகியுள்ளதையும் ஏற்றுக்கொண்டுள்ளதை நான் அறிவேன். (Quotes below are from the translation of the Noble Qur'an from the King Fahd Complex for the printing of the Holy Qur'an Madinah KSA.)

SURAH 5 AL – MA'IDAH 46

'"We sent Isa (Jesus), son of Maryam (Mary), confirming the Taurant (Torah) that had come before him, and we gave him the Injeel (Gospel), in which was guidance and light and conformation of the Taurant that had come before it, a guidance and an admonition for Al – Muttaqun (the pious)."

SURAH 12 YUSUF 111
"Indeed, in their stories, there is a lesson for men of understanding. It (The Qur'an) is not a forged statement but a confirmation of (Allah's existing Books) which were before it (ie the Taurant and the Injeel and other scriptures of Allah) and a detailed explanation of everything and a guide and a Mercy for the people who believe."

SURAH 42 ASH – SHURA 15
"I believe in whatsoever Allah has sent down of the Book (all the Holy Books, - this Qur'an and the Books of the old from the Taurant (Torah), or the Injeel (Gospel) or the pages of Ibrahim (Abraham)

and I am commanded to do justice among you. Allah is our Lord and your Lord. For us our deeds and for you your deeds. There is no dispute between us and you. Allah will assemble us (all), and to Him is the final return."

SURAH 43 AZ – ZUKHRUF 61/63
"And he (Isa (Jesus) son of Maryam (Mary) shall be a known sign for (the coming of) the Hour (Day of Resurrection) (ie, Isa's descent on the earth). ….

"And when Isa came with (Our) clear proofs, he said, 'I have come to you with Al-Hikmah (Prophethood), and in order to make clear to you some of the (Points) in which you differ. Therefore fear Allah and obey me!'."

இயேசுவின் (Isa) வார்த்தைகளை முக்கியமாய் குறிப்பிட்டு அவரை பின்பற்றுகிறவர்களுக்கும், மற்றும் உங்களுக்கும் பயனுள்ள நிலையில் வேதாகம தலைமைத்துவம் என்கிற இப்புத்தகத்தினை சமர்ப்பிக்கிறவனாய் இருக்கிறேன், இதில் உள்ள அநேக வேதபகுதிகள் Torat லிருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. தேவனது எல்லா நபிமார்களும் இணைந்து உண்மையான தலைமைத்துவத்தின் பெற வேண்டியவர்களாய் இருக்கின்றனர். இவ்வார்த்தைகளை படிக்கும் உங்களுக்கு சமாதனமும் ஆசீர்வாதமும் உண்டாக மறுபடியும் ஜெபிக்கிறவனாய் இருக்கிறேன்.

தயவு செய்து, நான் இக்கையேட்டை எழுதிய மனிதராய் விளங்குகிறேன் என்பதை நினைவில் கொள்ளுங்கள், எனக்கு வழக்கமாய் உள்ள சில காரியங்களை எனது பாணியில் எழுதியுள்ளேன், அவைகள் உங்களுக்கு வினோதமாய் தோன்றலாம், அல்லது அவைகள் உங்களுக்கு தவறாகவும் தோன்றலாம். தயவு செய்து என்னை மன்னித்து பொறுத்துக்கொண்டு இதை வாசியுங்கள், இதை வாசிக்கும் உங்களுக்கு வியப்புகள் பல காத்திருக்கும் என்பதை உணர்கிறவனாய் இருக்கிறேன். வேத வசனங்களாய் உள்ள குறிப்புகளை ஒப்பிட்டுப்பாருங்கள், நீங்கள் கற்றுக்கொள்வதற்காக அவைகள் பட்டியலிடப்பட்டுள்ளன. வேதாகம வல்லுநர் பலரது மேற்கோள்களை குறிப்பிட்டுள்ளேன், மற்றும் இப்படிப்பட்ட மனிதர்களை இணைய தளத்தில் தேடிக் கண்டுகொண்டு அவர்களது நல்ல புத்தகங்களை வாசித்தறிவது உங்களுக்கு பெரிதளவில் நற்பயனைக் கொண்டு வரும் என்பதில் சந்தேகமேயில்லை.

வேதாகம மக்களில் ஒருவனாய் விளங்கும் உங்கள் நண்பர்:

Dr John C McEwan
Dean EBCWA(NZ)

Auckland – New Zealand

14 August 2012

கிறிஸ்தவ தலைமைத்துவம் = சேவகம் / ஊழியம் செய்யும் தலைமைத்துவம்

முகவுரை:

வேதாகம ரீதியில் முழுமையான அறிவைப் பெற்றிராத எளிமையான சூழலில் வாழ்ந்து வரும் தலைவர்களுக்கான தலைமைத்துவ பயிற்சிகருதி, இப்பாடமானது தொகுக்கப்பட்டு பரிந்துரை செய்யப்படுகிறது. இது ஒரு வேதபாட அடிப்படையில் எழுதப்பட்டு, தலைமைத்துவத்தைக் குறித்த தவறான புரிந்து கொள்ளுதல் அழிக்கப்படும் வகையில், எழுதப்பட்டுள்ளது, மற்றும் இன்றைய நவீன உலகில், பொருளாதார கருத்துக்களை வலியுறுத்துவதன் மூலம், தங்களது தலைமைத்துவத்தை வலியுறுத்தி, அதுவே வெற்றிக்கான அளவுகோல் என மதிப்பிடுகிறதாய் இருக்கிறது. இது ஒரு பாடமாக அமைக்கப்பட்டு, நமது மத்திய ஆப்பிரிக்க இயக்குநனாரான, Reverend Dr Howard Mwindula அவர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டு, போதக இறையியல் பாடத்துடன் துணை நூலாக போதகப்பயிற்சியில் இடம் பெறுகிறதாய் இருக்கிறது, மற்ற புதிய ஏற்பாட்டு புஸ்தகங்களுடன் இதுவும் பாடத்திட்டமாய் EBCWA Diploma of Theology course ல் இடம்பெறுகிறதாய் இருக்கிறது. இதன் கருத்தானது சேவகம் செய்யும் தலைமைத்துவம் என்பதாய் இருக்கிறது.

இந்நூலின் பொருளக்கமானது, எங்கள் தத்துவத்தின் இருதயமாகவும், எங்கள் அனுதின வாழ்க்கையில் நடைமுறையாகவும், எங்கள் உலகலாவிய பணியின் அடிப்படையாயும் இருக்கிறது. இப்பாடத்தை முழுவதுமாய் அறியாத பட்சத்தில், நாமனைவரும், இயேசுக்கிறிஸ்துவின் அழைப்பில், நிலை நிற்கத்தவறுகிறவர்களாய் இருப்போம். இப்புஸ்தகத்தில் உள்ள முழுமையான பாடங்கள் அனைத்தும், Diploma Course notes ல் இருந்து எடுத்துத் தொகுக்கப்பட்டுள்ளது, மற்றும் வேதாகம வியாக்கியான புஸ்தகங்களில் இருந்து மேற்கோள் காட்டப்பட்டுள்ளன. இப்புஸ்தகத்தினை முழுமையாய் பெற அல்லது இதில் பாடங்களின் தொகுப்புகள் குறித்து அறிய, EBCWA website or the CD ஒப்பிட்டுப்பாருங்கள்.

நிர்வாகக் கையேடு மாதிரிகளை உலகப்பிரகாரமான, புறஜாதிய மனிதர்களிடமிருந்து பெற்று பயன்படுத்துகிறவர்களாய் இருக்கின்றனர். தச்சு வேலை செய்த இயேசுவைப் பின்பற்றுகிறோம், எனக் கூறுபவர்கள், சேவகரைப் போலல்லாது, இராஜாக்களைப் போன்று வாழ்ந்து வருகின்றனர். இன்றைய அளவில் சபையின் ஊழியரைக் கண்ணோக்கும்போது, கர்த்தரைப் பிரதிபலிக்கிறோம் என்று கூறிக்கொண்டு, ஏரோது இராஜவைப்போன்று ஆடையணிந்து, ஆடம்பரமாகவும், பகட்டாகவும் காணப்பட்டு வருகின்றனர், எளிமையான நிலையில் பவுலை அல்லது பேதுருவைப் போன்றல்லாது தங்களுக்கே உரித்தாகும் தோரணையில் தங்களைக் காட்டிக்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். அப்போஸ்தலர் 12:1-2, 20-25. தலைமைத்துவத்தின் புதிய திறமைகளை நாம் கற்றுக்கொள்ளும்போது, நமது பிரதிபலிப்பு யாரைப்போன்றிருத்தல் வேண்டும் என்பது, நமக்கு ஒரு சவாலாக இருக்கிறது. நமது தோரணை இயேசுவைப்போன்றிருத்தல் வேண்டும், மற்றும் தேவனது பெரிய சேவரைப்போன்றிருத்தல் அவசியம். அவ்வாறு இல்லாதிருப்போமானால், நாம் தீமையான மனிதரைப் பிரதிபலிக்கிறவர்களாய் இருப்போம்.

இயேசுவைப் பின்பற்றுவோர்கள், இயேசு இவ்வுலகில் நடந்து கொண்டதைப் போல நடக்கக்கடமைப்பட்டுள்ளனர், அவர் விலை மதிப்பற்ற இரதங்களில் தனது ஊழிய நாட்களில் பயணிக்கவில்லை, மாறாக நடந்தே சென்று ஊழியம் செய்தார். அப்போஸ்தலர் காலத்தில், வாகனங்கள் அவசியமான இடங்களில் வாகனங்களை பயன்படுத்தினர். அவர்கள் தகுதியான வஸ்திரங்களை உடுத்தினர், சமயசந்தர்ப்பங்களுக்கு தக்கவாறு அவர்களை உடை இருந்தது. அவர்கள் நல்ல ஆடைகளை உடுத்தினர், ஆனால் அவைகள் இராஜாக்கள் உடுத்தும் இரத்தாம்பர ஆடையாய் இல்லாது இருந்தது. அவர்களுக்கு நேரிட்ட தரித்திர சூழலில் அவர்கள் தர்மசங்கடத்துக்குள் இருப்பதை அவர்கள் வெளிக்காட்டிக்கொள்ளவில்லை. மற்றும் அவர்களுக்கு பெரிய அளவில் கர்த்தர் ஐசுவரியத்தை அளித்தபோதும், அவைகள் மீது தங்கள் கண்களை வைக்காது, அவர்கள் தேவனையே நோக்கினவர்களாய் தங்கள் சேவையினை சிறப்பாய் செய்தனர். பிலிப்பியர் 4:11-13. அவர்கள் இவ்வுலக வாழ்க்கையை யாத்திரிக பயணமாய் மேற்கொள்கிறவர்களாய் இருந்தனர். அவர்கள் தேவன் ஒருவருக்கே கடமைப்பட்டவர்களாய், தேவன் அவர்களுக்கு அளித்த பணிக்கென அவைகளை செலவளித்தனர்.

நாம் சபையின் ஊழியர்களைக் குறித்து பெரும் அதிர்ச்சிக்குள்ளாகிறவர்களாய் இருக்கிறோம், (இவர்கள் தங்களை இயேசுவின் ஊழியர்கள் என

அழைத்துக்கொள்வதை, நான் அரோசிக்கிறவனாய் இருக்கிறேன், அவர்களது நடத்தையானது, இயேசுவைப் பின்பற்றுவதைத் தவிர்த்து வேறொருவரைப் பின்பற்றுவதாய் இருக்கிறது) அவர்கள், இயேசுவைப்பின்பற்றுவதைத் தவிர்த்து, மூர்க்கத்தனமான இராஜாக்களைப் போன்று செயல்படுகிறவர்களாய் இருக்கின்றனர். சபையில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு செலவளிப்பதைவிட, தங்களது சுய ஆடம்பரத்திற்கென செலவளிக்கும் ஊழியரைக் குறித்து, அதிக கரிசனை உள்ளவர்களாய் இருக்கிறோம். வேதாகம தலைமைத்துவம் என்பது, இயேசுவைப்போன்றும் அவரது அப்போஸ்தலரைப் போன்றும் இருப்பதற்கு நம்மை சவால் விடுவதாய் இருக்கிறது. ஏரோது இராஜாவைப் போன்று, நாம் பிரதிபலிக்கிறவர்களாய் இருப்போமேயானால், ஏரோது இராஜாவுக்கு முடிவை ஏற்படுத்திய அதே தேவன்தாம் நமக்குமுண்டு! வேதாகம ரீதியில் அமைந்த தலைமைத்துவத்தை இப்பாடத்தில், நாம் காணவிருக்கிறோம், இயேசுவும் அப்போஸ்தலரும் இத்தலைமைத்துவத்தில், நமக்கு முன்மாதிரிகளாய் இருக்கின்றனர். இயேசுவும் அப்போஸ்தலரும், நாம் செய்ய வேண்டிய பணி, நமது மதிப்பீடுகள், போன்றவற்றை அளவீடு செய்து, தேவனது அழைப்பிற்கிணங்க அவைகளை செய்கிறோமா என சவால்விடுகின்றனராய் இருக்கின்றனர்,

2005 ஜூன் மாதத்தில், மேற்கு ஆஸ்திரேலியா, பெர்த் என்னுமிடத்தில், எங்களது வேதாகமக் கல்லூரி வளாகத்தில் நிகழ்ந்த் கூட்டத்தில், நாங்கள் எல்லா தேசங்களிலும் வாழும் தேவனது மக்களது மிகவும் அத்தியாவசியமான தேவைகள் எவைகள் என விவாதித்தோம். அதில் நாங்கள் உணர்ந்து கொண்டது என்னவெனில், அப்போஸ்தலர்களின் வலியுறுத்தலில் அடங்கிய வேதாகம அடிப்படையிலான பயிற்சி என்பதைக் கண்டு கொண்டோம். இதற்காகவே, இயேசுவால் நாங்கள் அழைக்கப்பட்டிருப்பதையும், உணர்ந்து, வேதாக அடிப்படையில் சேவை செய்ய விரும்புவோரையும், மற்றும் வாழ்வு செய்ய விரும்புவோரையும் கண்டுகொண்டு, அவர்களுக்கு வேதாகம அடிப்படைகளை போதிக்கவும், ஒவ்வொரு விசுவாசியும், இயேசுக்கிறிஸ்து, மற்றும் அப்போஸ்தலரின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி நடக்க அவர்களை வழிநடத்தும்படி, எங்களை அதற்கென அற்பணித்துக் கொண்டோம். ஒரே அஸ்திபாரமாகிய இயேசுவில் அவர்களைக் கட்டியெழுப்புவது எனத் தீர்மானித்தோம், அவரே நம்மை அழைத்தவராய் இருக்கிறார், மற்றும் நமக்கு இந்த யுகத்தில் இருக்கவேண்டிய ஒரே முன்மாதிரி, அது இயேசுக்கிறிஸ்துவின் முன்மாதிரியாய் இருத்தல் வேண்டும், மற்றும் ஆதி சபையின் முன்மாதிரி நமக்கிருத்தல் வேண்டும். இவைகள் நமது கரத்தில் கொடுக்கப்பட்ட பரிசுத்த வேதாமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நாம் அனவரும் பாவிகள், தேவனது பெரிதான கிருபையினால், இரட்சிப்படைந்து இருக்கிறோம். நாம் நமது ஊழியத்தின் தராதரத்தைக் குறித்த கரிசனையும் அக்கரையும் நமக்குத் தேவை, தேவனது வல்லமையால், ஆவிக்குரிய நிலையில் உயர்த்தப்பட்டு இயேசுக்கிறிஸ்து நம்மில் வாஞ்சிக்கும் ஆவிக்குரிய சேவையின் தராதரத்தின் நிலையை நிலைநாட்டுகிறவர்களாய் இருத்தல் அவசியம். ஒருவரும் தனது சுய பெலத்தால், தேவன் விரும்பும் தராதரத்தை நிறைவேற்றுவது என்பது இயலாத காரியம். ஆனால், தேவன் அருளும் தமது வல்லமையினால், நமது பாவங்களிலிருந்து மீட்படைந்து, நமது இயலாமையில், இருந்து உயர்த்தப்பட்டு, நமக்காக எல்லாவற்றையும் நமக்கு அருளுகிறவரின் பேரன்பால் நிறைவேற்ற சாத்தியம் உண்டு.

இயேசுக் கிறிஸ்துவின் தராதரத்தின்படி, நாம் செய்வதற்கு, நாங்கள் எவ்விதத்திலும் மன்னிப்புக்கோர வேண்டிய அவசியமில்லை எனக்கருதுகிறோம், காரணம் இது நம்மேல் விழுந்த கடமையாய் இருக்கிறது, மட்டுமல்லாது வேதவசனங்களும் அவற்றையே வலியுறுத்துகிறதாயும் இருக்கிறது. எப்படியிருப்பினும், நம்மில்தாமே விழுந்து போனவர்களாயும், தோல்வியினாலும் பாவத்தினாலும் நிர்வாணிகளாக்கப்பட்டிருந்தும், நாமனைவரும் வேதாகம தராதரத்தை, அடைய வேண்டியவர்களாய் இருந்து, நம்மைக் குறித்துள்ள தேவனது சித்தத்தை நிறைவேற்றவேண்டியவர்களாய் இருக்கிறோம். உயர்ந்த தராதரத்தை அடைவது என்பது, தேவனது வல்லமையற்றவர்களுக்கு அதைரியத்தை அளிக்கக்கூடியதாய் இருக்கும், ஆனால், இயேசுவைப் பின்பற்றுவோருக்கு, பரிசுத்த ஆவியானவரின் நிறைவைப் பெற்றோருக்கு, அவர் எதிர்பார்க்கும் அந்த உன்னத தராதரத்தை அடைவது என்பது மிகவும் சாத்தியமானதாய் இருக்கிறது. மிகக்கடினமான பட்டணங்களிலும், சிட்டிகளில் வாழும் மூன்றாம் உலக மக்களுக்கு [Third World people,], இது புரியக்கூடிதாய் இருக்கிறது. மேற்கத்திய கலாச்சாரத்தில் வாழ்கிறவர்களுக்கு இது போன்ற யதார்த்தத்தை அடைவது கடினமான ஒன்றாய் இருக்கிறது, மேற்கத்தைய தூரதொலைக்காட்சிகளால் கலங்கப்படுத்தப்பட்டுள்ளதும், பொழுதுபோக்குக் கண்ணோட்டமுடைய தலைமைத்துவமானது, ஏமாற்றங்களை அளிக்கிறதாய் இருக்கிறது.

ஏழு பிரிவுகள்:

இப்பாடமானது ஏழு பிரிவுகளாய் பிரிக்கப்பட்டுள்ளன:

1. "ஓட்டப்பந்தயம்" மற்றும் "சேவகப்பணி" இதுவே தலமைத்துவ கருப்பொருளாய் இருக்கிறது: தேவன் இது போன்ற தலைமைத்துவத்தை நாம் அடையும்படி மிகவும் கருத்துள்ளவரும் கவனமுள்ளவருமாய் இருக்கிறார், இதை அறிந்து நாம் நமது தலைமைத்துவத்தைக் குறித்த மதிப்பீடுகள், மற்றும் முன்னுரிமைகள், கர்த்தர் எதிபார்ப்பதற்கு இசைய இருத்தல் வேண்டும்.

2. "பாடுபடும் சேவகன்" இதுவே வேதாகமத் தலைமைத்துவத்தில் நம் அனவருக்கும் இருக்க வேண்டிய பண்பு. இவ்வகையான கருத்துக்கள் இவ்வுலக கண்ணோட்டங்களுக்கு முறண்பட்டதாய் இருக்கிறது. வேதாகமக் கண்ணோட்டமானது, கீழ்ப்படிதல், தாழ்மை, மற்றவர்களுக்கு சுயநலம்பாராது சேவை செய்தல், மற்றும் பரிசுத்த ஆவியானவரைச் சார்ந்து வாழ்வதை அடிப்படையாகக் கொண்டு, வேதாகம கருத்துக்களுக்கு மதிப்பை சேர்ப்பது இவ்வகையான தலைமைத்துவத்தின் குறிக்கோளாய் இருக்கிறது.

3. கிறிஸ்துவின் தலைவர்களது தலைமைத்துவ தகுதிகளானது, குறிப்பிடத் தக்கவிதத்தில், அநேக நிர்வாகம் குறித்த நூல்களில் வேறுபட்டு காணப்படுகிறதாய் இருக்கிறது.

4. இயேசுக்கிறிஸ்துவின் சேவையில், அலுவலக அரசியல் தவிர்க்கப்பட்டு, பதவி உயர்வுக்கு பதிலாக, சேவை பொறுமை மற்றும் விசுவாசம் போன்றவை இச்சேவையின் செய்முறையாய் திகழ்கிறது.

5. சேவை செய்யும் தலைமைத்துவத்தின் அர்த்தம் எஜமானரின் அவசியத்திற்கேற்ப, கனிகொடுத்து சேவையில் கண்ணோட்டமாய் இருப்பதாகும்.

6. இவ்வுலகமானது யுத்த கலமாய் இருக்கிறது, நாம் கர்த்தரது இராணுவத்தில் யுத்தவீரர்களாய் அழைக்கப்படுகிறோம். தலைமைத்துவம் என்பது, இராணுவ மதிப்பீடுகளைப் பெற்றதாய் இருக்கிறது, பண்புகள் மற்றும் நடத்தைகள், போன்றவைகள் இதர தலைமைத்துவ கையேடுகளில் கவனிக்கப்படுவதில்லை.

7. கர்த்தரின் பணியில் ஓய்வு பெறுவது என்பதே கிடையாது, அது மரணபரியந்தம் செய்யும் சேவையாய் இருக்கிறது. ஓய்வு என்பது பரலோகில் மட்டுமே கிடைக்கிறதாய் இருக்கிறது.

போதக தலைமைத்துவ, வேதாகமப் போதனை புஸ்தகமானது, "வேதாகமப் போதனைப் புஸ்தகம்" போன்றே வடிவமைக்கப்பட்டுள்ளது. இப்புத்தகத்தை வேதாகமத்தின் உதவிகொண்டு படிக்கும் வண்ணம் வடிவமைக்கப்பட்டு, சபையில் நேரடியாக ஒரு போதகர் தங்களது சபை அங்கத்தினருக்கும், மற்றும் கல்லூரி அளவிலும் போதிக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வேதாகமப் பகுதியும், அல்லது தொடர்ச்சியான சிறு வேதபகுதிகளும், தலைமைத்துவ நடைமுறை காரியங்களை விவாதிக்கும்படி உதவியாய் தொகுக்கப்பட்டுள்ளன், இவைகள் சிறு குழுக்களுக்கும், போதக மாணவ மாணவியருக்கும் உதவியாய் தொகுக்கப்பட்டுள்ளது. ஒழுங்குபடுத்தப்பட்ட வேதாகம தலையங்க பாடமானது, Bible Topic Book (BTB) யிலிருந்து, குறிப்பிடப் படுகிறதாய் இருக்கிறது. இது போன்றவற்றை இணைய தளத்தில் பதிவிறக்கம் செய்து, புத்தக வடிவில் வைத்துக் கொள்வது சிறப்பாய் இருக்கும்.

இப்புத்தகத்தை களிகூறுதலுடன் திறந்து, இயேசு வேதாகம தலைமைத்துவத்தில், நம்மை, எவ்வித போதனையின்றி விட்டுவிடவில்லை என்பதை அறிந்து, வாசிக்கத் தலைப்படுங்கள். வேதாகமத்தில் உள்ள ஒவ்வொரு புத்தகமும், தலமைத்துவ அறிவுரைகளை வழங்குகிறதாய் இருக்கிறது. ஜலப்பிரளயத்திற்கு முன் தேவன் மனிதனுக்கு அளித்த முதல் வார்த்தைகள், ஆபிரகாமுக்கு கூறியவைகள், மோசேக்கு கூறியவைகள், புதிய ஏற்பாட்டில் அடங்கியுள்ள வார்த்தைகள் அனைத்தும், உண்மையான வேதாகம தலைமைத்துவத்தை வலியுறுத்துகிறவைகளாய் இருக்கின்றன. நமக்காய் வழிவகுக்கப்பட்ட தலமைத்துவத்தை நாம் பின்பற்றுவோமாக, மனிதனால் இதற்காக எழுதப்பட்ட நூல்களை, வேதத்துடன் ஒப்பிட்டு திருத்துதல் செய்வோமாக.

Auckland – New Zealand
14 August 2012

பொருளடக்க அட்டவணை

TABLE OF CONTENTS

CHAPTER	**DESCRIPTION**
அதிகாரம்	***விபரம்***

1 INTRODUCTORY CONCEPTS
கருத்துக்களுக்கான அறிமுகம்

HEBREWS 12:1-3 - The Race of our life!
எபிரெயர் 12:1-3 - நமது வாழ்வின் ஓட்டப்பந்தயம்.

MATTHEW 20:25-28, MARK 10:43-45, LUKE 22:24-27, JOHN 13:1-17.
மத்தேயு 20:25-28, மாற்கு 10:43-45, லூக்கா 22:24-27.

We lead the Lord's flock, we do not drive them, nor do we dominate, or use and abuse them.
நாம் தேவனது மந்தையை வழிநடத்துகிறவர்களாய் இருக்கிறோம். நாம் அவற்றைத் துரத்துகிறவர்கள் அல்லர், மாறாக நாம் அவைகளை ஆதிக்கம் செலுத்துகிறவர்களும் அல்லர், அல்லது அவைகளை பயன்படுத்திக்கொண்டு, துஷ்ப்பிரயோகம் செய்கிறவர்களும் அல்லர்..

2 தலைமைத்துவ குணங்களுக்கான நியமம் - இயேசுக்கிறிஸ்து ஏசாயா 53, பிலிப்பியர் 2:5-8

3 தலைமைத்துவத்திற்கான தகுதிகள்
1 தீமோத்தேயு, தீத்து.

"பரிசுத்த ஆவியானவரின் கனி" என்பது உண்மையான ஆவிக்குரிய தலைமைத்துவ ஆற்றலின் அடையாளமாய், அவர்களது வாழ்வில் விளங்குகிறதாய் இருக்கிறது. நீதியின் கனியானது இல்லாத பட்சத்தில், ஆதாரப்பூர்வமான பணி என்பது இல்லாது போகும், கிறிஸ்துவைப் பின்பற்றி ஊழியம் செய்பவர்கள் ஆவிக்குரிவர்களாய் இருத்தல் வேண்டும், மற்றும் தெய்வீகமுள்ளவர்களாயும், நீதியுள்ளவர்களாயும் இருத்தல் வேண்டும். தேவனது வல்லமையானது மட்டுமே, இப்படிப்பட்ட காரியங்களை சிருஷ்டித்துள்ளது. இதையல்லாத மற்ற வல்லமைகள் சத்துருவின் வல்லமையாய் இருந்து, ஒரு நபரை தேவனது ஊழியத்திலிருந்து வழிவிலக மற்றும் தகுதியற்றவர்களாக்குகிறதாய் இருக்கிறது. - கலாத்தியர் 5:13-26.

4 தலைமைத்துவத்தை உயர்த்துதல்

பொறுமை (கர்த்தர் நம்மை உயர்த்தட்டும், அலுவலக அரசியலோ, நமது பிரபலமோ, பணமோ அல்லது இலட்சியமோ நம்மை உயர்த்தாதிருப்பதாக.) 1 பேதுரு 5:5-9.

PATIENCE (letting the Lord lift us up not office politics, influence, money or ambition)

1 PETER 5:5-9

5 சேவகம் செய்யும் தலைமைத்துவம்

எல்லா அப்போஸ்தலரும் தங்களை சேவகர்களாகவே கண்டனர், மட்டுமல்லது கர்த்தரின் அடிமைகளாக கண்டனர். நாம் வேதவசனத்தின்படி உண்மையாய் இருக்க விரும்புவோமானால், அப்போஸ்தல அஸ்திரபாரத்தின் மேல் கட்டப்படுகிறவர்களாய் வாக்கிலும் வாழ்விலும், அவர்களைப் போன்று செயல்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம், இயேசுவைப் போன்றும் அவர்களைப்போன்றும் நமது தலைமைத்துவம் அமைவதாக.

மத்தேயு 10:24-31, 18:23-35, 20:27-28, 23:8-12, 25:31-45, மாற்கு 9:33-37, 10:42-45, லூக்கா 16:1-13, யோவான் 12:24-26, 13:16, 15:15-21. ரோமர் 1:1, கொலோசெயர் 4:10-14, 2 தீமோத்தேயு 2:21-26, தீத்து 1:1, யாக்கோபு 1:1, 2 பேதுரு 1:1, யூதா 1.

6 கர்த்தரது இராணுவத்தின் இராணுவ வீரர்கள்.

ஒரு இராணுவ வீரன் எவ்வித மனக்குழப்பங்களுக்குள் செல்ல அனமதிக்கப்படுவதில்லை, தானாகவே எவ்வித மனக்குழப்பத்திற்குள்ளாச் செல்வதுமில்லை, யுத்தக்கலத்தில் அவனை கவனக்குறைவாய் விட்டு விட்டு மடிந்து போக அனுமதிப்பது இல்லை. யுத்த கலத்தில் இராணுவ வீரனை ஒன்றாகிலும் தடைசெய்யாது இருக்க பார்த்துக்கொள்வர், அவனால் இயன்ற மட்டும் அவனை இராணுவ அதிகாரி முன்னேறிச் செல்ல வழிநடத்துகிறவராய் இருப்பர்.

1 கொரிந்தியர் 9:24-27, 2 கொரிந்தியர் 5:9-20, கலாத்தியர் 5:5-12, 1

தீமோத்தேயு 6:11-16, எபிரெயர் 10:32-39, 11:32FF.

7 SERVICE IS “UNTO DEATH” – there is no retirement from Christian Leadership.
ஊழியம் என்பது "மரணபரியந்தமாய் இருக்கிறது" -- கிறிஸ்தவ தலைமைத்துவத்தில் ஓய்வு பெறுவது என்பதே கிடையாது.

2 தீமோத்தேயு 3:1-5, 4:1-8.
.

<u>அத்தியாயம் ஒன்று</u>

முகவுரைக் கருத்துக்கள்:

1. நமது வாழ்க்கையில், நாம் ஓட்டப்பந்தயம் செய்கிறவர்களாய் இருக்கிறோம்.

எபிரெயர் 12:1-4. விசுவாசியின் ஓட்டப்பந்தயம். (நம்மைக் குறித்துள்ள தேவனின் எதிர்பார்ப்பு அடங்கிய சித்திரம்)

"1. ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்; 2. அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல்,

சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார். 3. ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களை சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள். 4. பாவத்திற்கு விரோதமாகப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே.

<u>பிரதிபலித்தல்:</u>

நாம் நமது குறிப்பிட்ட வாழ்க்கைப் பந்தயத்தில் ஓடும்படியான சவால் இங்கு விடுக்கப்படுகிறது. ஒரு ஓட்டப்பந்தயக்காரன், தனது பந்தயத்திற்காக, பந்தய மைதானத்தில் ஜனங்கள் நிறைந்திருக்க, தனது பந்தயத்திற்காக நிற்பது போன்ற தோரணை நமக்கு இங்கு காணப்படுகிறது. நாம் இப்பூமியின் மீது, இடைவெளி மற்றும் காலம் இவற்றிற்கு மேல் நின்றுகொண்டு, பிரத்யேகமாய் தனிப்பட்ட "ஓட்டப்பந்தயத்தை" ஓடுகிறவர்களாய் இருக்கிறோம். பரலோகில் பதினொன்றாம் அதிகாரத்தில் பேசப்படுகிற அனைவரும், நமது பந்தயத்தை உற்றுக் கவனிக்கிறவர்களாய் இருக்கின்றனர். பரலோகிற்கு நாமும் சென்று, அவர்களுடன் இணயும் வரைக்கும் பரிசுத்தவானகளாகிய அவர்கள் என்ன செய்து கொண்டிருப்பார்கள்? இந்த வசனம் சுட்டிக்காட்டுவது என்னவென்றால், எபிரெய நிருபம் 11 ம் அதிகாரத்தில், அவர்கள் நம்மைக் கவனித்துக்கொண்டு இருக்கின்றனர், அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் நமது வாழ்க்கைப் பந்தயத்தில் எவ்வாறு ஓடுகிறோம் என்பதனை உற்றுக்கவனித்துக் கொண்டு இருக்கின்றனர். நான் தனிப்பட்ட விதத்தில் நம்புவது என்னவெனில், எனது தெய்வீக முன்னோர்கள், என்னை உற்சாகப்படுத்தி, நான் இயேசுவை சேவிக்கும் போது எத்தன்மையுள்ளவனாய் அவரது நீதியில் அமைந்து செயல்படுகிறேன் என்பதை கவனிக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

இது பரலோகத்தில் பரிசுத்தவான்களின் "முழு நேர" செயல்பாடாய் இருக்கிறதோ இல்லையோ, தேவ தூதர்கள் நம்மை கவனிக்கிறவர்களாய் இருக்கின்றனர், நாம் பரலோகம் சென்றடையும் போது அதைக் குறித்து தெளிவாய் அறிந்து கொள்வோம். ஆனால் இந்த வசனம் நமக்கு உறுதியுடன் தெளிவு படுத்துவது என்னவெனில், அவர்கள் நம்மை கவனிக்கின்றனர். பெருந்திரள் நம்மை உற்றுப்பார்த்து நம்மை உற்சாகப்படுத்துகிறவர்களாய் இருக்கின்றனர். இந்நிருபத்தை எழுதிய எழுத்தாளரின் மன நிலை என்னவென்றால், ஓட்டப்பந்தய

வீரனாய் ஓடி தங்கப் பதக்கத்தைத் தட்டிச் செல்லுதல் வேண்டும். எவ்வித கவனச் சிதறுதல் இல்லாமல், எவ்வித பக்க வழியாய் ஓடாது, நமக்கு நியமித்துள்ள ஓட்டப்பாதையைவிட்டு வழி விலகாது, ஓட்டப்பந்தய முடிவு எல்லையில் உள்ள, ரிப்பனைத் தொடுமாறு மற்றும் முதல்வராய் தொட்டு முதல் பரிசைத் தட்டிச்சென்று, கனம் மற்றும் மகிமையை நம்மை அழைத்து இவ்வித ஓட்டப்பந்தயத்தில் ஓடப் பணித்தவருக்கு கொண்டுவருதல் வேண்டும்.

1. ஆகையால், மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் நம்மைச் சூழ்ந்து கொண்டிருக்க, பாரமான யாவற்றையும், நம்மைச் சுற்றி நெருங்கி நிற்கிற பாவத்தையும் தள்ளிவிட்டு, விசுவாசத்தைத் துவக்குகிறவரும் முடிக்கிறவருமாயிருக்கிற இயேசுவை நோக்கி, நமக்கு நியமிக்கப்பட்டிருக்கிற ஓட்டத்தில் பொறுமையோடே ஓடக்கடவோம்;

இவ்வசனத்தின் துவக்கம் "ஆகையால்" எனத்துவங்குகிறது (இதன் கிரேக்க வார்த்தை - - toi gar oun). எழுத்தின்படி இதன் மொழிபெயர்ப்பு "இக்காரணத்தினால்" “for these reasons”, என்று இருத்தல் வேண்டும், நாம் தேவனுடைய இராஜரீக குடும்ப அங்கமாய் இருக்கிறபடியால், (இயேசுவை உண்மையாக பின்பற்றுபவர்கள்), நாம் வித்தியாசமானவர்களாய் நடந்து கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம். நம்மைச் சுற்றிலும் கடந்தகால தெய்வீக சாட்சிகள் இருக்கின்றனர், அவர்கள் நமது ஒவ்வொரு நடையையும் கவனித்துக் கொண்டிருக்கின்றனர், ஆகையால் நாம் பந்தயக்காரர்களைப்போல செயல்படவேண்டியவர்களாய் இருக்கிறோம். பந்தயக்காரர்கள் என்ன செய்கிறவர்களாய் இருக்கின்றனர்? அவர்கள் தங்கள் பந்தயத்திற்கு பாரமாய் தோன்றுகிற அனைத்தையும் களைந்து விடுவர், அதைப்போன்றே நாமும் களைய வேண்டியவைகளை களைந்து விடுதல் வேண்டும். இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையானது மிகவும் வலிமையானதாய் இருக்கிறது, நம்மை ஓடவிடாது ஓட்டத்தின் வேகத்தைத் தடை செய்யும் ஒவ்வொன்றையும், களைந்து ஒரு பக்கமாய் வைத்துவிடுதல் அவசியம். ஒவ்வொரு பாரத்தையும், ஓட்டத்தை திசைதிருப்பக்கூடிய ஒவ்வொரு பிரச்சனைகளையும், அல்லது பந்தயத்தைத் தடைசெய்து ஜெயம் பெறவிடாது தடை செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் ஒதுக்கி தள்ளிவிடுதல் வேண்டும்.

பண்டைய காலத்தில் ஓட்டப்பந்தய வீரர்கள், தங்களது அனைத்து ஆடைகளையும் களைந்து விட்டு, நிர்வாணமாய் ஓடுவார்களாம். இப்பொழுது, ஆடை என்பது "ஒரு நல்ல காரியமாய்" இருக்கிறது, அது கெட்டகாரியம் எனக்கூறுவதற்கில்லை.

ஆனால் ஓடும்போது அது உங்களை பின்னடையச் செய்யும். இது நமக்கு ஒரு பிரச்சனையாய் இருக்கிறது. நாம் பாவத்தை சரிகட்டுதல் வேண்டும், இவ்வசனம் பாவத்தோடு இடைபடவில்லை என்றபோதும், "வாழ்வின் அநேக காரியங்கள்" தங்களில் தாங்களே கெட்டவைகள் எனக்கூறுவதற்கில்லை. அவைகள் நமது ஆவிக்குரிய வாழ்வின் ஓட்டத்தை பின்னடையச் செய்கின்றனவாய் இருக்கின்றன. நாம் செயல்பாட்டிற்கென வாழ்வில் களையவேண்டியவற்றை களைந்து இருக்கிறோமா அல்லது பொருத்தமற்ற காரியங்களால் எப்பொழுதும் கவனச் சிதறல்களுக்கு உள்ளாகியிருக்கிறோமா?

யுத்தத்தில் கிறிஸ்தவ தலைவர் ஜெயம் பெறவேண்டியவராய் இருக்கிறார், அவர் ஜெயம் பெறவேண்டிய மூன்று பகுதிகள்: ஒன்று தீமைக்கு எதிராக, (சாத்தானின் கொள்கைகளுக்கு எதிராக) இரண்டாவது பாவத்திற்கு எதிராக (பழைய பாவசுபாவத் தன்மையின் பெலவீனங்களுக்கு எதிராக) மூன்றாவது, அனுதின வாழ்வில் கவனச் சிதறல்களை அளிக்கும் காரியங்கள் அனைத்திற்கு விரோதமாக ஜெயம் பெறுதல் வேண்டும். இப்படிப்பட்ட வாழ்வின் பாரங்கள் தங்களில் தாங்களே கெட்டவைகள் எனக்கூறுவதற்கில்லை, ஆனால் அவைகள் நமது ஆவிக்குரிய ஓட்டதைப் பின்னடையச் செய்கிறவைகளாய் இருக்கின்றன, இவைகள் அனைத்தையும் களைந்து ஓரம்கட்டி நமது பந்தயத்தில் ஓடும்போது, விரைவாய் இலக்கை அடைந்து பரிசை தட்டிச்செல்கிறவர்களாய் இருப்போம். கடைசியாய் பார்த்த மூன்றாவது காரியத்தைக் குறித்து, நாம் பகுத்தறிவுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும், அக்காரியம் கவனமாய் தேவனது வார்த்தைகளைக் கவனித்து, அதில் உள்ள தேவனது வழிநடத்துதல்களை அனுசரித்து, அவரது பாதையில் சீராய் ஓடுதல் வேண்டும். இப்படிப்பட்ட கடைசி இரு பகுதிகளில் நிருப எழுத்தாளர் மிகவும் கவனம் செலுத்துகிறவாய் இருந்து, தலைமைத்துவத்தில் இருப்பவர்கள், தீர்மானங்களை எடுத்தல் மற்றும் சுய தியாகம் செய்தல் போன்றவைகள் அவர்களுக்கு அவசியமானதாய் இருக்கிறது.

கிறிஸ்தவ பந்தயக்காரருக்கு, தங்களைக் கவனச்சிதறல்களுக்கு உட்படுத்தும், "பாரங்கள்" மற்றும் "பாவங்கள்" இவ்விரண்டோடு ஈடுபட்டு, நம்மை வெற்றிக்கோட்டைத் தொடவிடாது தடுத்து நிறுத்தும் இவைகளைக் குறித்து நாம் கவனமாய் இருத்தல் வேண்டும். பாரங்களையும், அனுதின வாழ்வின் ஓட்டத்தைத் தடைசெய்து குறுக்கிடும் காரியங்களை களைந்து ஒரு பக்கம் வைத்துவிட்டு, கவனச் சிதறல்களை அளித்து, உண்மையான நோக்கத்தை இப்பூமியில் நிறைவேற்ற இயலாது காரியங்களை நாம் ஒதுக்கிவிடுதல் வேண்டும்.

ஓட்டப்பந்தயத்தில், நியமிக்கப்படுகின்ற பாதை அவசியமாய் இருக்கிறது, அப்பாதையில் ஓடி நாம் முன்னேற வேண்டியவர்களாய் இருக்கிறோம். இந்நிரூபத்தை எழுதும் ஆசிரியர், மறுபடியும் "பாவப் பிரச்சனையை" இங்கு அறிமுகப்படுத்துகிறார். பாவம் நம்மை முன்னேறவிடாதபடி தடை செய்கிறதாய் இருக்கிறது, அது நமது முன்னேற்றத்தைத் தடைசெய்கிறதாய் இருக்கிறது, மற்றும் நமது ஜெயம் பெறும் வாழ்வின் ஓட்டப்பந்தயத்தை தடைசெய்கிறதாய் இருக்கிறது. நாம் ஜெயம் பெறவேண்டுமானால், இரு காரியங்களையும் கண்ணோக்கி, அவ்விரு காரியங்களும் வெற்றிக்கு அபாயகரமானவை என கண்ணோக்கி அவைகள் ஒவ்வொன்றுடன் ஈடுபடுதல் அவசியமாய் இருக்கிறது. நாம் இங்கு ஓட்டப்பந்தயத்தில் ஈடுபடுவது வெற்றி பெறுவதற்காய் இருக்கிறது. அவ்வப்போது குதித்து உடற்பயிற்சி செய்வதற்கல்ல!

கவனச்சிதறல்கள், மற்றும் திசைமாறிச் செல்லுதல் நம்மை வழிதவறிச் செல்ல வழிநடத்துகிறவைகளாய் இருக்கின்றன, நாம் இப்பூமியில் இருக்கும் நோக்கத்தை வழிதவறச் செய்கிறவைகளாய் இருக்கின்றன. நமது ஓட்டத்தில் பொறுமையுடனும், சகிப்புத் தன்மையுடனும் ஓட வற்புறுத்தப்படுகிறோம். (இங்கு பயன்படுத்தப்படும் கிரேக்கச் சொல்லானது மிகவும் வலுவுள்ள ஒன்றாய் இருக்கிறது hupomone). இவ்வார்த்தையானது இராணுவ மற்றும் பந்தயத்தில் பயன்படுத்தப்படும் வார்த்தையாய் இருக்கிறது. இது மிகவும் கடினமான சூழலில் எவ்வித முறையீடுமின்றி, ஒரு சிப்பாய் / பந்தயக்காரன் முன் செல்லுதல் என்ற பொருளை உடையதாய் இருக்கிறது. நாம் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருத்தல் வேண்டும், முடிவு எல்லையைவிட்டு நமது கண்ணோட்டம் அங்கும் இங்கும் அலைபாயுதல் கூடாது. இப்பூமியில் நாம் இருப்பது, இயேசுவுக்கு சேவை செய்வதற்காய், அதுவே நமது ஓட்டப்பந்தயமாய் இருக்கிறது. அது எவ்வளவு கடினமாய் இருப்பினும் பின்தங்காது முன்னேறிக்கொண்டே இருத்தல் வேண்டும். நமது வாழ்வின் இறுதியை நாம் கண்ணோக்குகிறவர்களாய் இருத்தல் வேண்டும். தேவதூதர்களும், பரித்தவான்களும் தங்களது நிலையில் நிற்க, நமக்கு நியமித்திருக்கிற ஓட்டத்தில் பொறுமையுடன் ஓடக்கடவோம்.

பிரச்சனைகள் என்பது ஒருவிசுவாசியின் வாழ்வில் தவிர்க்கமுடியாத ஒன்றாய் இருக்கிறது, நமது பிரச்சனைகள், மனதைப் பாதிக்கக்கூடிய வலுவான மனப்போங்காய் இருக்கிறது. கர்த்தர் பிரச்சனைகள் முன்பு நாம் மனக்கடினமுள்ளவர்களாயும், இழந்து போனோர், மற்றும் தேவைகளில் உள்ளோரைக் குறித்த இளகிய மனம் படைத்தவர்களாயும் நாம் இருக்க விரும்புகிறவராய் இருக்கிறார்.

2. அவர் தமக்கு முன் வைத்திருந்த சந்தோஷத்தின் பொருட்டு, அவமானத்தை எண்ணாமல், சிலுவையைச் சகித்து, தேவனுடைய சிங்காசனத்தின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கிறார்.

பந்தயத்தில் ஓடுகிறவர்கள் தங்களது பாதங்களை எங்குவைக்கிறோம் எனப் பார்க்கமாட்டார்கள், அவர்கள் ஓடத் துவங்கு முன்னரே, அவர்கள் ஓடும் பாதையை பரிசீலித்திருப்பர், அவர்களது முக்கிய குறிக்கோள் ஓட்டத்தின் முடிவு ஆகும், அவர்கள் இறுதிக் கோட்டை தொடுவதை நிதானிக்க நிற்கும் பந்தய நியாதிபதிகள் ஆகும். நாம் அழைக்கப்பட்டிருப்பது "முன் நோக்கி ஓடும்படியாக" நமது பார்வை அனைத்தையும் இயேசுவின் மீது பதித்தவர்களாய் ஓடுதல் வேண்டும். கடந்த கால போதகர்கள் இதை, மனப்போங்கு என அழைத்தனர், "கிறிஸ்துவுடன் ஆக்கிரமித்துக் கொள்ளுதல்" கிறிஸ்துவின் மீது மனதையும், இருதயத்தையும் பதித்து, பூமியில் நமக்கு நியமித்துள்ள அவரது பணியின் மீது கண்ணோக்கம் செலுத்தி, கவனச்சிதறல் உண்டாகா வண்ணம், அவர் பணியை இப்பூமியில் நிறைவேற்றி முடிப்பதே ஆகும். இயேசு நமக்கு பொறுமைக்கு முன் மாதிரியாய் இருக்கிறார், அவரைப் போன்றே நாமும் அனுதினமும் மாறவேண்டியது அவசியமாய் இருக்கிறது.

இயேசுவே விசுவாசத்தின் "துவக்கமும்" மற்றும் "முடிவுமாய்" இருக்கிறார், அவர் நமது தலைவரும், நமது வழிகாட்டியும், மற்றும் பின்பற்றக்கூடிய மாதிரியாயும் விளங்குகிறார். மட்டுமல்லாது இலக்கை அடையத் தக்க வல்லமையையும் சக்தியையும் நமக்கு அளிக்கிறவராய் இருக்கிறார். அவரது முன்மாதிரியானது நமக்கு அளிக்கப்பட்டு இருக்கிறது. இயேசுக்கிறிஸ்துவின் கண்ணோக்கமானது வேற்றியின் மகிழ்வாய் இருந்தது, அது அவரது ஓட்டத்தின் இறுதியை அடைய அவரை ஊக்கப்படுத்துவதாய் இருந்தது, அப்படிப்பட்ட மகிழ்வை மனதில் கொண்டு, அவர் தனது வழியில் விபரீதங்கள் மற்றும் வேதனைகளை சகித்தார், அவர் வெட்கம், அவமானங்களை சகித்தார், அவைகளின் மூலம் அவரது சிங்காசன அரியனையைக் கண்டார், அது அவரது கனத்துக்குரிய சிங்காசனமாய் இருந்தது. அவர் தனது ஜெயத்தை முன்னதாகவே கண்டார் மற்றும் அப்படிப்பட்ட உறுதியானது, அவரது மனதில் பதிந்திருந்தது, வேதனையும் பாடுகளுமுள்ள அவரது பயணம் நமது இரட்சிப்பிற்குரிய ஜெயத்தை அவர் பெற்றுக்கொள்ளுமாறு செய்தது. மகிமையின் கிரீடத்தின் மீது, நமது கண்களைப் பதித்த வண்ணம், அதைப் பெற்றுக்கொள்ளுமாறு நன்கு ஓடும்படி தலைப்படுவோம், நாம் ஏற்கனவே

பரலோகில் இருக்கிறோம் என்பதைக் கண்டு கொண்டு, நாம் களைப்புறும்போது, தொடர்ந்து ஓடி ஜெயம் பெற பிரயாசப்படுவோமாக.

3. ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்து போகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களை சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்.

அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்! இயேசுக் கிறிஸ்துவின் வாழ்க்கையினை சீர்தூக்கிப்பார்த்து, உண்மையான பாடங்களைக் கண்ணோக்குங்கள், இதை நீங்கள் சரிவரக் கண்டு கொள்ளும்போது, உங்கள் வாழ்க்கயைக் குறித்த உண்மைகளைக் கண்டு கொள்வீர்கள். அவரது வாழ்க்கை பரிசீலனை செய்து, உங்கள் வாழ்வில் உள்ள முறண்பாடுகள் மற்றும் கலக்கங்களுக்குரிய பதிலைக் கண்டுகொள்ளுங்கள். இங்குள்ள வினைச் சொல்லானது வலிமை மிக்க சொல்லாய் இருக்கிறது, நம்மை சட்டரீதியாக சிந்திக்க வற்புறுத்துகிறதாய் இருக்கிறது, திரும்ப திரும்ப மனித அபிப்பிராயங்களை நாடாது, கர்த்தரிடம் திரும்பத், திரும்ப சரியான கேள்விகளைக் கேட்டு, பதில்களை பெறுவதற்கு அவரை மட்டும் நாடுங்கள்.

அவர் கலிலேயா சாலைகளில் நடந்தபோது, இயேசுக்கிறிஸ்துவில் காணப்பட்ட உறுதி, மற்றும் பொறுமை குறித்து சிந்திக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், அவ்வாறு அவர் நடந்து திரிந்த காலத்தில், மற்றும் பிரசங்கித்து வந்தபோது, சில நேரங்களில் மட்டும் அவருக்கு புகழ்ச்சி உண்டானது, அநேக சந்தர்ப்பங்களில் அவர் தூற்றப்பட்டார், வார்த்தைகளால் அவர் அவமதிக்கப்பட்டார், சரீரப்பிரகாரமாய் அவர் பயமுறுத்தப்பட்டார், இறுதியில் கொடூரமாய் கொலை செய்யப்பட்டார். ஆரம்ப கால சபையில் "செழிப்பு சுவிஷேசம்" “prosperity gospel” என்பது இல்லாதிருந்தது, அவர்கள், "துக்கம் நிறைந்த, பாடுகள் அனுபவித்த" கர்த்தருக்கு மிகவும் அருகில் வாழ்ந்தவர்களாய் இருந்தனர். இவைகளுக்கு நடுவே ஊழியம் செய்த இயேசுவைப் போன்றே, நாமும் அழைத்தவரின் ஊழியத்தை நிறைவேற்றக் கடமைப்பட்டுள்ளோம். நாம் களைத்துப் போய், சோர்வுற்று இருக்கும்போது, நமக்கு சவாலாய் இருப்பதற்கு இது ஒரு காரணமாய் இருக்கிறது, "நாம் நமது மனதில் சோர்ந்து போக ஒரு போதும் இடமளித்தல் கூடாது." இந்நிருபத்தை எழுதும் ஆசிரியர், தோல்வி எங்கு ஆரம்பமாகிறது என்பதை நன்கு அறிந்தவராய் இருக்கிறார், அது உண்மையாகவே சரீரத்தில் ஏற்படுகிறதாய் இருக்கிறது. முதலில், மனதில் வளருகிற மென்மையான பெலவீனமாய் இருந்து,

உண்மையான இலக்கின் மீதுள்ள கண்ணோட்டத்தை இழக்கச் செய்கிறதாய் இருக்கிறது.

4. பாவத்திற்கு விரோதமாகப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே.

இவ்விடத்தில் இந்நிருப ஆசிரியர். சிறிதளவு குத்திக்காட்டுகிறவராய் இருக்கிறார். நாம் குத்திக்காட்டுவதைக் குறித்து எச்சரிப்புடன் இருத்தல் வேண்டும், ஆனால் இங்கு உத்திரவாதம் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது, இப்படிப்பட்ட சபையின் அங்கத்தினரும் மற்றும் தலைவர்களும், மிகவும் விலையேறப்பட்டவர்களாய் இருக்கின்றனர். மற்றும் அவர்கள் கீழ்ப்படிய மறுத்தவர்களாய் விளங்குகின்றனர். ஆகையால் அவர்கள் எதைக்குறித்தும் சுயதிருப்தியடைய தகுதியில்லாதவர்களாய் இருக்கின்றனர். சிலர் தங்கள் விசுவாசத்திற்காய் எருசலேமில் மரித்துள்ளனர், ஆனால் அது கிட்டத்தட்ட 40 ஆண்டுகளுக்கு முன்னதாகவே நிகழ்ந்த ஒன்றாய் இருக்கிறது, அந்த சமயத்தில் சபையானது நன்கு வளர்ச்சியடைந்து, வலிமைமிக்கதாயும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மீதுள்ள விசுவாசத்தில் உறுதிப்பாட்டுடன் விளங்கியது.

அவர்கள் பிரச்சனைகளை சந்தித்தனர், ஆனால் இந்த காலகட்டத்தில், மரணத்திற்கேதுவான (இரத்தம் சிந்துவதற்கான) பயமுறுத்துதல்களுக்கு அவர்கள் உள்ளாகவில்லை, அவர்கள் அனுதின நடக்கையில், குறிப்பிடத்தக்கவிதத்தில் "எதிர்த்து நிற்காதவர்களாய் இருந்தனர். அவர்கள் பாரம்பரிய யூதாயிஸத்தை தழுவினவர்களாய் காணப்பட்டனர், இக்காலக் கட்டத்தில், அவர்கள் தொடர்ந்து தேவாலயத்திற்கு சென்று வந்தனர், அங்கு அவர்கள் பலிசெலுத்தி ஆராதனை செய்து வந்தனர். அவர்கள் தங்களது பழைய பாவசுபாவத்திற்கு விரோதமாய் "எதிர்த்து" நிற்காதவர்களாய் இருந்தனர். அவர்கள் பழைய பாரம்பரிய அனுசாரத்தை எதிர்கொள்வதைத் தவிர்த்து, அதனுடன் ஒத்துப்போகிறவர்களாய் விளங்கினர்.

இங்கு பயன்படுத்தப்படும் பதமானது, குத்துச்சண்டையிடும் பதமானது உபயோகிக்கப்பட்டுள்ளது, பண்டைய காலத்தில் குத்துச் சண்டையிடும் போட்டியானது இக்காலத்தில் உள்ளது போன்று இல்லாதிருந்தது. பண்டைய கால குத்துச்சண்டையில், வெற்றிபெற்றவர் உயிருடன் இருப்பர், தோல்வியுற்றோர்

பெரும்பாலும் மரணத்தைத் தழுவியிருப்பர். இந்நிருபத்தை எழுதிய ஆசிரியர், இப்படிப்பட்ட கருத்தை மனதில் கொண்டே, இதனை விசுவாசிகளுக்கு எடுத்துரைக்கிறார், அவர்கள் கீழ்ப்படிவார்களெனில், அவர் ஜீவனுடன் கர்த்தரை சேவித்து ஆசீர்வதிக்கப்படுவார்கள். அவர்கள் தங்கள் சொந்த வழியாகிய கீழ்ப்படியாமையின் பாதையில் செல்வார்களேயானால், வரப்போகிற நியாயத்தீர்ப்பின் கீழ் மரணத்திற்கு உட்படுவர். கி.பி. 67 - 70 வரை ரோம இராணுவம் யூதேயா மீது வந்து யூத தேசத்தை அழிக்கத்துவங்கினர், எல்லா மக்களும், இந்த எபிரெய நிருபத்தை முதன் முதலில் வாசித்த சமயத்தில், அவர்கள் எருசலேமை விட்டு ஓட வேண்டியதாய் இருந்தது, மற்றும் அப்படிப்பட்ட யுத்தம் முடியும் வரை அவர்கள் வேறு இடங்களுக்குச் சென்று குடியேற வேண்டியதாய் இருந்தது.

தலைமைத்துவ நடைமுறைகள்:

1. **கவனச்சிதறல்கள்:** "தலைக்கனம்பிடித்த" விசுவாசிகளுடன் ஈடுபடுங்கள், இப்படிப்பட்டவர்கள் வாழ்வில், கவனச்சிதறல்களுக்கு உட்பட்ட வர்களாய், இயேசுக் கிறிஸ்து நாம் நடக்க வேண்டிய பாதையை அமைத்து கொடுத்திருக்க, அதில் நடவாது திசைமாறி செல்லக்கூடியவர்களாய் இருக்கிறார்கள். ஒவ்வொரு நாளுக்காகக் கவலைப் பட்டு, உங்கள் நேரத்தை எவ்வாறு செலவழிக்கிறவர்களாய் இருக்கிறீர்கள்? இன்றைய அளவிலான விரைவு தணிக்கையைச் செய்யுங்கள். எது உங்கள் வாழ்வில் உங்கள் நேரத்தை எடுத்துக்கொண்டு, "கவலைப்பட" அல்லது கரிசனை கொள்ளச்செய்கிறது? அவைகள் உங்கள் நித்திய வாழ்விற்கு எந்த அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது? கர்த்தர் நாம் கவலையினால் உண்டாகும் கவனச்சிதறல்கள் இன்றி நாம் வாழ்வு செய்ய எதிர்பார்க்கிறார், காரணம் நாம் ஜெபத்தில் அவற்றை, தேவன் மீது வைத்து விட்டு, நமது பிரச்சனைகளுக்கு அவர் முடிவுண்டாக்க எதிர்பார்த்தல் வேண்டும், இதினிமித்தம் கவனச்சிதறல் இன்றி, நமது முழு பெலத்தையும் அவர் விரும்பும் காரியங்களை நிறைவேற்ற ஏதுவுண்டாகும். 1 கொரிந்தியர் 7:22, பிலிப்பியர் 4:6, 7, 1 பேதுரு 5:6-7.

கவனச்சிதறல்களை உண்டாக்கும் காரியங்களை ஒரு பக்கமாய் வைத்துவிடுதல் என்பது, வேதாகமத்தின் பொதுவான கருத்தாய் இருக்கிறது, கர்த்தரும் அப்போஸ்தலரும், கவனச் சிதறல்கள் பல வடிவங்களிலும், பல உருவங்களிலும், பலவிதங்களிலும் வரலாம் எனக்கூறுகின்றனர். . மத்தேயு 10:37-39, லூக்கா 8:14, 9:59 - 62, 12:15, லூக்கா 14:26- 33, 18:22 - 30, 21:34 - 36, ரோமர் 13:11-14, 2 கொரிந்தியர் 7:1, எபேசியர் 4:22 - 24, கொலோசெயர் 3:5 - 8, 1 தீமோத்தேயு 6:9, 10, 2 தீமோத்தேயு

2:4, 1 பேதுரு 2:1, 4:2, 1 யோவான் 2:15, 16. உங்கள் பராமரிப்பின் கீழ் உள்ள மக்களுக்கு இப்படிப்பட்டச் சத்தியத்தை எத்துனை முறை முழுமையாக பிரசிங்கித்து இருப்பீர்கள்? சாத்தான் கர்த்தரின் ஜனங்களை தனிப்பட்ட விதத்தில் தாக்குதலுக்கு உட்படுத்தாது இருக்கிறான் காரணம், அவர்கள் ஏற்கனவே, கவனச் சிதறல்களுக்கு உள்ளாகி, கர்த்தர் தங்களுக்கு வைத்திருக்கும் வழியை விட்டு விலகிச் செல்லலாமா என ஆலோசித்துக் கொண்டிருக்கிறவர்களாய் இருக்கின்றனர். கர்த்தருடைய ஜனங்களை கவனச்சிதறல்களுக்கு உள்ளாகதபடி அவற்றை அவர்கள் வாழ்விலிருந்து அகற்றிவிட வழிநடத்துதல் வேண்டும், மற்றும் அவர்களது வாழ்விற்குரிய சத்தியத்தை கண்டுகொள்ள அவர்களை வழிநடத்துதல் வேண்டும். சட்ட ரீதியான காரியங்கள், சிறப்பான காரியங்களில் இருந்து நம்மை வழி விலகச் செய்யக்கூடியதாய் இருக்கிறது. இது தலைமைத்துவத்தில் இருப்பவர்கள் பகுத்தறிந்து செயல்பட ஒரு சவாலாய் இருக்கிறது.

இன்றைய அளவில் சபையில் உள்ள ஒரு பெரும் பிரச்சனை என்னவென்றால், விசுவாசிகள் அனுதினமும் கவனச்சிதற்களைச் சந்திக்கிறவர்களாய் இருக்கின்றனர், ஆகையால் தேவனுக்கு முன்பாக அவர்கள் தங்களது கடமைகள், தேவனது நோக்கம் போன்றவற்றை நிறைவேற்றத் தவறுகிறவர்களாய் இருக்கின்றனர். மேலே நாம் கண்ட வசனங்கள் மிகவும் தெளிவுற இவற்றைப் புலப்படுத்துகின்றவைகளாய் இருக்கின்றன. விசுவாசிகளை கர்த்தருக்கான சேவையின் மீது கவனச்சிதறல்களின்றி செயல்பட அழைப்புவிடுப்போமாக, நாம் அனைவரும் நமது உன்னத அழைப்பிற்கேற்ற வெகுமதிகளை பெற்றுக்கொள்ளவிருக்கிறோம். பிலிப்பியர் 3:14, 1 தீமோத்தேயு 1:9.

2. பாவங்கள்: நாம் நமது சரியான பாதையைக் கண்டு கொண்டு, அதில் செல்லும்போது, இரண்டாவது பிரச்சனையாய் நமது வழியில் குறுக்கிடுபவை, பாவ பழக்க வழக்கங்கள், இவை நம்மை திசை மாறிச் செல்ல வழிநடத்துகிறதாய் இருக்கிறது. மற்றவர்களை வழிநடத்தும் போது, நீங்கள், முன்மாதிரியான செயல்பாடுகளில் கண்ணோக்கம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். பாவ பழக்கவழக்கங்களில் நீங்கள் சிக்கிக்கொண்டு வாழும் போது, மற்றவர்களை இவற்றிலிருந்து வழி நடத்துவது என்பது இயலாத காரியமாகிவிடும், மாறாக, நீங்கள் செய்துவரும் அதே பாவத்திற்குள் அவர்களை நீங்கள் அவர்களை வழிநடத்துகிறவர்களாய் இருப்பீர்கள். மத்தேயு 15:14. உங்களை வழக்கமாய் பாவத்திற்குட்படுத்தும் காரியங்களை நீங்கள் சரிகட்டுதல் வேண்டும், இல்லையேல், வெகு தூரம் ஓடவிடாது தடைசெய்யும் அல்லது வேகமாய்

ஓடவிடாது தடைசெய்யும், கவனச்சிதறல் உள்ள தலைவராய் குழப்பத்திற்குள்ளாய் உங்களை வழிநடத்துகிறதாய் இருக்கும். (1 யோவான் 1:9) அறிந்த பாவங்களை தவிர்ப்பது, ஒருவராலும் புரிந்து கொள்ள இயலாததாய் இருக்கும். எபிரெயர் 12:13. உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள், அறிந்துள்ள பாவங்களை எந்த அளவுக்கு என் வாழ்வில் நான் தவிர்க்கிறவனாய் இருக்கிறேன்? நான் எப்பொழுதும் அதே பாவத்தில் விழுகிறவனாய் இருக்கிறேனா? நான் எப்பொழுதும் அதே காரியத்தை அறிக்கை செய்கிறவனாய் இருக்கிறேனா? உங்களது பதில் "ஆம்" என இருக்குமேயானால், நீங்கள் ஜெயம் பெறும் பந்தயக்காரராய் மற்றும் ஒரு நல்ல தலைவராய் இருக்க அதைக் குறித்து சிந்திக்கவில்லை அல்லது முன்னதாகவே திட்டமிடவில்லை என்பது அதன் பொருளாய் இருக்கிறது.

3. **மனோரீதியான நடத்தை**: ஒரு பந்தயக்காரனுக்கு, மனோரீதியான நடத்தை, இருப்பது வரவேற்கப்படுகிறது, அவர்கள் முன்னதாகவே திட்டமிடுதல் அவசியம், இலக்கை அடைய பயிற்சி அவசியம், சரீரத்திற்கு ஒவ்வாத உணவு வகைகளை தவிர்த்தல் வேண்டும், மற்றும் பழக்கவழக்கங்களில் மாறுதல்கள் வேண்டும், அவர்கள் அனுதின நடத்தைகளில், அவர்களது சக்தி விரயமாகாதபடி காத்துக்கொள்ளுதல் வேண்டும். அவர்களது கண்ணோட்டம் ஜெயம்பெறுதலில் பதிக்கப்பட்டிருக்கிறது, அவர்கள் ஈவுஇரக்கமின்றி, ஜெயம்பெறுவதற்கு தடையாக இருக்கும் எல்லாவற்றையும் வாழ்விலிருந்து அகற்றிவிடுவர். ஒரு ஜெயம் பெறும் பந்தயக்காரன், ஈவு இரக்கமின்றி ஜெயத்துக்குத் தடையாய் இருக்கும் ஒவ்வொரு காரியங்களை வாழ்விலிருந்து அகற்றி விடுகிறவனாய் இருக்கிறான். ஒரு பந்தயக்காரன் ஜெயத்திற்காய் வெறி பிடித்தவனாய் இருக்கிறான். அவர்களே வெற்றி பெறுகிறவர்களாய் இருக்கிறார்கள். பயிற்சி பெறவில்லையானால், தங்களை ஒழுக்க நெறிகளுக்கு அற்பணித்து வாழவில்லையானால், அவர்கள் தோல்வியை தழுவுகிறவர்களாய் இருக்கின்றனர். கிறிஸ்துவைப் போன்ற தலைவர் என்பதன் பொருள், "இரக்கமற்றநிலையில்" (அல்லது "வெறித்தனமான உள்ளார்வத்துக்கு" இயேசுக்கு முதலிடம் அளிப்பதை தெரிந்துகொண்டு) இயேசுவின் சித்தத்திற்கு தங்களை அற்பணம் செய்து, வாழ்வின் ஒவ்வொரு கட்டங்களிலும் அவருக்குக் கீழ்ப்படிய அற்பணிப்பது ஆகும். பழக்கவழக்கங்கள் ஒன்றும் பரிசீலியாது நடைமுறைபடுத்துவது கிடையாது, நமது ஆத்தும முன்னேற்றத்திற்காய், கரிசனையுள்ள கர்த்தரது பிள்ளைகள் படும்பிரயாசத்தை, நமது வாழ்வில் காத்து நடக்க முயலுவது மிகவும் அவசியம். இவ்வாறு செய்யும்போது நாம் மறுரூபப்படுகிறவர்களாய் இருப்போம்.

ஓட்டப்பந்தயம் என்பது கிறிஸ்தவ வாழ்க்கைக்கான வலுமையான உட்கருத்தாய் இருக்கிறது, அநேக ஊழியர்கள், தங்கள் பழக்கவழக்கங்களில், மிகவும் மென்மையான வர்களாயும், தங்கள் சரீரங்களில் பெலவீனர்களாயும், ஆத்துமத்தில் பெலம் இழந்தவர்களாய் விளங்கி வருகின்றனர். இப்படி ஒரு போது இருக்கலாகாது! நாம் ஓட்டப்பந்தயக்காரர்களைப் போன்றிருக்க அழைக்கப்பட்டதினிமித்தம், எந்த அளவுக்கு கடின முயற்சி அவசியமோ அந்த அளவுக்கு கடினமானவர்களாய் பயிற்சி செய்தல் அவசியம். ஆவிக்குரிய நிலையில், "காவற்காரர்களாய்" நிற்பதை எப்பொழுதும் நினைவில் இருத்துதல் அவசியம். . 1 கொரிந்தியர் 9:24 - 27, கலாத்தியர் 5:7, பிலிப்பியர் 2:14 - 18, 3:7 - 17, 2 தீமோத்தேயு 4:6 - 8.

பொறுமையுடன் ஓடப்பழகுதல் வேண்டும். இது ஓட்டப்பந்தயத்தில் ஜெயம் பெறுபவர்களது சிறப்பான பண்பாய் இருக்கிறது. எபிரெய நிருபத்தை எழுதிய ஆசிரியரின் ஆவல், எல்லா தேவ ஜனங்களும் வெற்றி பெற வேண்டியர்களாய் இருத்தல் வேண்டும் என்பதாய் இருக்கிறது. வாழ்க்கையின் ஓட்டப்பந்தம் என்பது, ஒரே பந்தயமாய் இருந்து, எல்லோரும் கிரீடத்தை பெறுகிறதாய் இருக்கிறது. இதற்கு பொறுமை, சகிப்புத்தன்மை, மெய்யான மன உறுதி போன்றவைகள் வாழ்வின் நெருக்கங்கள் சூழ்ந்த நிலையில் அவசியமானவைகளாய் இருக்கிறது. ஒவ்வொரு நாளிலும், நாம் திரும்பத் திரும்ப பந்தயத்திற்கென அற்பணித்துக் கொள்ளுதல் வேண்டும், ஒவ்வொரு நாளுக்கும் சரியான திட்டமிடுதல், இலக்குகளை அமைத்தல் ஆவிக்குரிய ஜீவியத்தில் மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. நமது கண்ணோட்டத்தை இயேசுவின் மீது வைத்தல் வேண்டும், அவரே நம்மை உருவாக்குகிறவர், அவரே நமக்கு தேவையான பெலத்தின் ஆதாரமாய் இருக்கிறார், இதினிமித்தம் நாம் ஓடி முடித்து ஜெயம்பெற, அனுகூலங்கள் உண்டாகிறதாய் இருக்கிறது. ஓடுவதற்கும், மற்றவர்களை வழிந்தடத்துவதற்கும், பந்தயத்தில், "நமக்கு முன்மாதிரியை அமைத்துக்கொள்ளுதல்" மிகவும் முக்கியமானதாய் இருக்கிறது, நமக்கு நியமிக்கப்பட்டுள்ள பணியில் நாம், தளர்வடைந்து சோர்ந்து போகாதிருக்க, வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

ஜெயம் பெறுபவர்கள் சிலரே, ஆனால் நாம் அனைவரும் ஜெயம் பெறுகிறவர்களாய் இருக்க அழைக்கப்பட்டிருக்கிறோம். சிலர் மட்டும் வேதாகம தராதரத்தை அடைகிறவர்களாய் இருக்க, அவ்வாறு இருக்க இயலாதோரின் தராதரமானது, கர்த்தரால் குறைவாய் மதிப்பிடப் படுவதில்லை, ஒரு வேளை தோல்வியை தழுவுகிறவர்கள், தங்களது நித்திய பிரதிபலனை அடையும்படி,

விடாப்பிடியாய் நாடுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். தங்களது சொந்த ஓட்டத்தை ஓடுகிற ஒவ்வொருவரும், ஜெயமடைய முடியும், ஆனால் அவர்களது 100% கண்ணோட்டமானது ஓட்டத்தில் இருத்தல் அவசியமானதாய் இருக்கிறது.

பந்தயத்தில் 100% முன்னோக்கி செல்ல முயலுங்கள், அது பந்தயமாய் இருக்கலாம் அல்லது யுத்தக்கலமாய் இருக்கலாம், மற்றும் யுத்தக்கலத்தை குறித்த பகுப்பாய்வை மனதில் கொள்ளுதல் வேண்டும், கிறிஸ்தவ போராயுதங்கள் மட்டும் நமக்கு முன்னிருத்தல் அவசியம். "ஆவிக்குரிய போராயுதங்கள்" மட்டுமே நாம் முனைந்து முன்செல்ல நன்மை பயப்பனவாய் இருக்கிறது, நாம் பின்னடைவோமானால், நமக்கு பாதுகாப்பின்றி இருப்போம். தேவனது வல்லமையால், நாம் பின்வாங்காது முன்னேற வேண்டியவர்களாய் இருக்கிறோம். அவ்வாறு முன்னேறும் போது, நமக்கு எவ்வித பொருளாதாரக் குறைவும் ஏற்படாது. இப்படியிருக்க, நாம் விழுந்து போய், அவமானத்திற்குள்ளாகி அவமதிக்கப்பட்டு, கர்த்தரின் தராதரத்தை விட்டு அகல முடியுமா?

மனிதர் ஒருபோதும் சென்றிராத கடைப்பாதையில், கடந்து சென்ற போது, எல்லாவற்றிற்கும் அப்பாற்பட்டவைகளின் மீது கண்ணோக்கமாய் இருந்தார். அவரது கண்ணோட்டமெல்லாம், அவருக்காய் பரலோகில் அமைக்கப்பட்ட சிங்காசனத்தின் மீதாய் இருந்தது, மற்றும் அவர் மரிக்கும் முன்னர், அவர் சந்தித்த திரளான பாடுகளுக்கும், துன்பங்களுக்கும் அவர் ஈடுகொடுக்க வேண்டியதாய் இருந்தது. வழிநடத்த வேண்டியவர்களாகிய நாம், இயேசுக் கிறிஸ்து, எல்லாவற்றையும் "நன்கு செய்தார்" என்பதைக் கண்ணுற வேண்டியவர்களாய் இருக்கிறோம். "வசதியான ஆசனங்களில் அமர்ந்து" அமர்ந்து கொண்டு விமரிசிப்பவர்களது, விவாதங்களை குறித்து எவ்வித கரிசனையும் கொள்ளாது, இயேசுவை மட்டும் கண்ணோக்கியவர்களாய் அவரையே இலக்காய் கொண்டு, எல்லாவற்றிற்கும் மேலான வெகுமதியை பெறுவதற்கு எப்படிப்பட்ட தியாகமானாலும் செய்வது தகுதியாய் இருக்கிறது.

4. முன்னோக்கி கண்ணோட்டம் செய்தல்: - இயேசு முன்னோக்கி கண்ணோக்கியது போன்றே, நாமும் முன்னோக்கி கண்ணோக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஆகையால் தற்போதுள்ள நெருக்கங்கள், இப்பூமியில் இருக்கும்பொழுது, நமக்குண்டாகும் பாடுகள், துக்கங்கள் மீது கண்ணோக்கி தவறி விழாது, முன்னோக்கி கவனம் செலுத்தி, இவைகளை பாராது முன்செல்லுதல் அவசியமானதாய் இருக்கிறது. இவைகள் அனைத்தையும் நமது நித்திய பிரதிபலன் முன் கண்ணோக்கும் போது, இவைகள் ஒரு குறிப்பிட்ட

காலத்திற்குள் நடந்து முடிந்துவிடுகிறவைகளாய் இருக்கிறது. உங்கள் மனதானது பெலவீனப்படும்படி விட்டுவிடாதிருங்கள். நீங்கள் பெலப்படும்படி, உங்கள் கண்ணோட்டத்தை கிறிஸ்துவின் மீது வையுங்கள். நாம் தோல்வியடைய, நமக்கு இடமில்லாது இருக்கிறது, நமக்கு வல்லமைக்கு குறைவில்லை, நாம் பின்பற்றும்படியாய் முன்மாதிரிகளுக்குக் குறைவில்லை.

"இயேசுவைப் பார்த்துக் கொண்டு" அனுதினமும் முன்னேறுவது, நமது வாழ்வின் இலட்சியமாய் இருப்பதாக. கடவுளுக்கு பயந்த கிரேக்கர்கள், தேவாலயத்தில் வந்திருந்த போது, "ஐயா, நாங்கள் இயேசுவைக் காணும்படி விரும்புகிறோம்" என்றனர். கர்த்தரின் போதகர்களாகிய நம்மைப்பார்த்து, இழந்து போனோர்களும், இரட்சிப்படைந்தவர்களும் இதே கேள்வியைக் கேட்கிறவர்களாய் இருக்கின்றனர். யோவான் 6:40, 12:21, பிலிப்பியர் 3:20, 21. வேதாகம ரீதியிலான தலைமைத்துவ அமைப்பு என்பது, சீஷத்துவம், அல்லது உருவாக்குபவர் [mentorship] என்பதாய் இருக்கிறது. நாம் தேவனது மந்தைக்கு முன்மாதிரிகளாய் இருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் எல்லாவற்றிலும் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாய் இருப்போமாக! நாம் இப்பொழுது அவரது முன்மாதிரிகளை மட்டும் கண்ணோக்குகிறவர்களாய் இருப்போமாக. அவரது வார்த்தைகளை மட்டும் கைக்கொள்கிறவர்களாய் இருப்போமாக!

2. சுவிஷேச வேதபகுதிகள்:

<u>மத்தேயு 20:25-28.</u>

25. அப்பொழுது, இயேசு அவர்களை கிட்டவரச்செய்து: புறஜாதியாருடைய அதிகாரிகள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், பெரியவர்கள் அவர்கள் மேல் கடினமாய் அதிகாரஞ்செலுத்துகிறார்கள் என்றும், நீங்கள் அறிந்திருக்கிறீர்கள்.

26. உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.

27. உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.

28. அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார்.

<u>மாற்கு 10:43-45.</u>

43. உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன்.

44. உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன்.

45. அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக்கொடுக்கவும் வந்தார் என்றார்.

<u>லூக்கா 22:24-30.</u>

24. அன்றியும் தங்களில் எவன் பெரியவனாயிருப்பான் என்று அவர்களுக்குள்ளே வாக்குவாதம் உண்டாயிற்று.

25. அவர் அவர்களை நோக்கி: புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள்; அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகிறார்கள்.

26. உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன்.

27. பந்தியிருக்கிறவனோ, பணிவிடைசெய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன்.

28. மேலும் எனக்கு நேரிட்ட சோதனைகளில் என்னோடே கூட நிலைத்திருந்தவர்கள் நீங்களே.

29. ஆகையால், என் பிதா எனக்கு ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்தினதுபோல, நானும் உங்களுக்கு ஏற்படுத்துகிறேன்.

30. நீங்கள் என் ராஜ்யத்திலே என் பந்தியில் போஜனபானம்பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின்மேல் உட்காருவீர்கள் என்றார்.

<u>யோவான் 13:1-17.</u>

1. பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்புவைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்புவைத்தார்.

2. சீமோனின் குமாரனாகிய யூதாஸ்காரியோத்து அவரைக் காட்டிக்கொடுக்கும்படி பிசாசானவன் அவன் இருதயத்தைத் தூண்டினபின்பு, அவர்கள் போஜனம்பண்ணிக்கொண்டிருக்கையில்;

3. தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்து;

4. போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைச் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு,

5. பின்பு பாத்திரத்தில் தண்ணீரை வார்த்து, சீஷருடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார்.

6. அவர் சீமோன் பேதுருவினிடத்தில் வந்தபோது, அவன் அவரை நோக்கி: ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா என்றான்.

7. இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் செய்கிறது இன்னதென்று இப்பொழுது நீ அறியாய், இனிமேல் அறிவாய் என்றார்.

8. பேதுரு அவரை நோக்கி: நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது என்றான். இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்றார்.

9. அதற்குச் சீமோன் பேதுரு: ஆண்டவரே, என் கால்களைமாத்திரமல்ல, என் கைகளையும் என் தலையையும்கூட கழுவவேண்டும் என்றான்.

10. இயேசு அவனை நோக்கி: முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும், மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான்; நீங்கள் சுத்தமாயிருக்கிறீர்கள்; ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார்.

11. தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார்.

12. அவர்களுடைய கால்களை அவர் கழுவினபின்பு, தம்முடைய வஸ்திரங்களைத் தரித்துக்கொண்டு, திரும்ப உட்கார்ந்து, அவர்களை நோக்கி: நான் உங்களுக்குச் செய்ததை அறிந்திருக்கிறீர்களா?

13. நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள். நீங்கள் சொல்லுகிறது சரியே, நான் அவர்தான்.

14. ஆண்டவரும் போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்.

15. நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்.

16. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல.

17. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால், பாக்கியவான்களாயிருப்பீர்கள்.

பிரதிபலித்தல்:

இயேசு மிக வலுவான முறண்பாடை, புறஜாதிய தேசத்தை ஆழுபவர்களுக்கும், மற்றும் தேவனை விசுவாசிப்போர்களிடையே ஆழுகை செய்பவர்களுக்கும் இடையே ஏற்படுத்தியுள்ளார். விசுவாசிகள் ஆதிக்கம்செலுத்தும் ஆழுகைமுறையினை ஒருபக்கம் ஒதுக்கி வைத்துவிட்டு, அவர்களது தலைமைத்துவம், அல்லது நிர்வாகம் செயல்படுதல் வேண்டும், என சவாலாய் கூறியிருக்கிறார். அவர் அவர்களுக்குச் சொன்னது, அவர் ஒரு புதிய அமைப்பையும், தலைமைத்துவத்திற்கான தராதரத்தையும், ஏற்படுத்தியுள்ளதையும், மற்ற புறஜாதிய தராதரங்களை ஒரு போதும் கைக்கொள்ளாதிருக்க வேண்டுமென வலுயுறுத்திக் கூறினார். சபை சரித்திரம் மூலம் நாம் காணும்பொழுது, சபையில் இவ்வித தராதரமானது இப்படிப்பட்டவைகளை அறியாதபடியால், பிரச்சனைகளுக்கூடாக கடந்து சென்றது. எல்லா சம்பிரதாயங்களும் இப்படிப்பட்ட அடிப்படைக் காரியங்களை மீறி நடக்கிறதாய் இருக்கிறது,

முதலாவதாக, மத்தேயு மற்றும் மாற்கு வேதபகுதிகளில், இயேசு கூறுவது சபையின் தலைமைத்துவம் எது அல்ல எனக்கூறுகிறவராய் இருக்கிறார். பின்னர் எது தலைமைத்துவத்தில் இருக்க வேண்டியது என கூறுகிறார்.

1. "ஆதிக்கம் செலுத்துதல்" கூடாது. மற்றவர்களை ஆதிக்கம் செலுத்தி, உங்கள் கட்டளைகளைக் கனப்படுத்துவது, இந்த வசனங்களில் கூறப்படும் கருத்தாய் இருக்கிறது. இப்படிப்பட்ட ஆதிக்கம் செலுத்துவது, ரோமர்கள் வட்டாரங்களிலும், இன்றும் கூட நிகழ்ந்து வருகிறதாய் இருக்கிறது. அவர்கள் கட்டளையிடுவார்களெனில், அதை உடனடியாக நிறைவேற்றப்படுதல் வேண்டும். இது வேதாகம ரீதியிலான தலைமைத்துவம் அல்ல. மற்றவர்கள் மீது ஆதிக்கம் செலுத்துதல் விசுவாசிகளிடையே இடம்பெறுதல் தவிர்க்கப்படல் வேண்டும்.

2. "அதிகாரம் செலுத்துதல்" கூடாது. எல்லா போதகர்களிடையே, அதிகாரம்,

மரியாதை, மற்றும் கனப்படுத்துதல் போன்றவை எதிர்பார்க்கப்படுகிறவகளாய் இருக்கிறது. கர்த்தரது தராதரத்தில் இவைகள் பொருத்தமற்றதாய் இருக்கிறது. ஒரு போதகருக்கு வருகின்ற அதிகாரமானது, வேதவசனத்தினால் உண்டாகிறதாய் இருத்தல் வேண்டும். அதை அதிகாரத்துடன் அறிவிக்க வேண்டியது கடமையாய் இருக்கிறது. ஒரு விசுவாசிக்கு வாழ்விற்கான மெய்யான அதிகாரம் இயேசுக்கிறிஸ்துவின் அதிகாரமாய் இருக்கிறது, மற்றும் போதகர், தேவனது வார்த்தைக்கு ஒரு நபரை இழுத்துக்கொள்வதைத் தேடுகிறவராய் இருக்கிறார். மற்றும் அவர்களை பரிசுத்த ஆவியானவருக்கு கையளிக்கிறவராய் இருக்கிறார், மற்றும் வாழ்க்கை முன்மாதிரியினால் அவர்களை வழிநடத்துகிறவராய் இருக்கிறார். இதினிமித்தம் அவர்கள் கிருபையிலும் இயேசுவை அறிகிற அறிவிலும் வளர இது உதவியாய் இருக்கிறது, மற்றும் அவர்கள் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு வாழ வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

3. <u>இது "சேவை" செய்வதை உள்ளடக்கியுள்ளது:</u> இது வழி நடத்தப்படுகிறவர்களுக்குரிய ஊழியமாய் இருக்கிறது. ஜனங்கள் பின்பற்றுவது, அன்பினாலும், மரியாதையினாலும் ஏற்படுகிறதாய் இருத்தல் வேண்டும்.

4. <u>இயேசு வகுத்த முன்மாதிரியின்படியே, செய்யும் ஊழியமாய் இருக்கிறது.</u> மரிப்பதற்கும் கூட வழிநடத்தப்படுகிறவர்களாய் இருக்கின்றனர்.

ஒரு தலைசிறந்த தலைவராய் இருப்பதற்கு, உங்களது சக விசுவாசிகளுக்கு ஒரு தலைசிறந்த சேவகனாய் இருத்தல் வேண்டும். தேவனது மக்கள் நடுவே பெருமைக்குரிய காரியம் என்னவெனில், ஒரு சேவனுக்குரிய மனப்பான்மையாய் இருக்கிறது, தேவனது மந்தைக் குரிய தேவைகளை எவ்வித சேவை மூலம் சந்திப்பது, என்பதை ஒரு தலைவன் தேடுகிறவனாய் இருக்கிறான். தலைவர்களை வழிநடத்தும் தலைவரானவர், மிகவும் கண்ணியத்துக்குரிய மந்தையின் சேவகராய் இருக்கிறார். இயேசு இந்த வகையான முன்மாதிரியை ஸ்தாபித்து இருக்கிறார்.

இப்பொழுது கவனமாய் லூக்கா எழுதின சுவிஷேசத்தின் வேதபகுதியினை பார்ப்போம்: இயேசு, மேஜையின் மீது பந்தியிருப்போர் மற்றும் அவர்களுக்கு பணிவிடை செய்பவர் இவர்களுக்கிடையே உள்ள முறண்பாட்டை எடுத்துரைக்கிறார். தமது சீஷரிடம் இவ்விருதிரத்தாரில் எவர்கள் பெரியவர் என வினவினார். சீஷர்களின் பதில் வெளிப்படையாய் இருந்தது, அங்கு பணிவிடை செய்கிறவனைவிட, பந்திக்கு அமர்ந்திருப்பவர்களே பெரியவர்கள் என்றனர்,

சபையைப் பொறுத்தமட்டில், சேவை செய்கிறவனே அவரது பார்வையில் பெரியவனாய் இருக்கிறான், மந்தைக்கு அவர்கள் செய்யும் சேவை, மந்தையின் ஆவிக்குரிய தேவைகளை சந்திப்பது, போன்றவைகள் ஒரு போதக சேவைக்கு ஆதாரமாய் விளங்குகிறது. நாம் தேவனது மந்தையை போஷித்தல் வேண்டும். யோவான் 20:15-19. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மீது நமது அன்பைக் காட்டுவது, அவரது மந்தைக்கு செய்யும் சேவை மூலம் விளங்குகிறதாய் இருக்கிறது.

தொடர்ந்து லூக்கா வேதபகுதியின் இறுதியில் நாம் வாசிப்பது என்னவென்றால், வசனம் 27 ல், இதற்கடுத்த வசனங்களில் சொல்லப்படுவதை கவனித்தல் அவசியம். நமது சேவைகுறித்து கர்த்தரது செய்தியானது நிறைவடைகிறது. இப்பூமியில் நமது அழைப்பானது, கர்த்தரின் "சோதனைகள் / பரீட்சைகள்" இவற்றை பகிர்ந்தளிப்பது ஆகும், மற்றும் நமது நேரத்தின் மூலம், அவரது ஜனங்களுக்கு சேவை செய்வதும் ஆகும். சேவை செய்யும்படி நாம் அழைக்கப்பட்டுள்ளோம், ஓய்வு கால ஆதாயங்களையும், ஓய்வூதிய நிதி குறித்தும் கூச்சல் குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு அல்ல. இயேசுக் கிறிஸ்து நமக்காய் திறக்கும் எந்த வாசலானாலும் அதில் பிரவேசித்து அவருக்கு சேவை செய்தல் வேண்டும், நாம் மரிக்கும் வரைக்கும், அல்லது வியாதிப்படுக்கை வரைக்கும் புதிய வாசல்கள் மீது கண்ணோட்டமாய் இருத்தல் அவசியம், அதன் பின்னர் உள்ள நாட்களெல்லாம், ஜெப சேவையில் ஈடுபடுவது அவசியம். நமது மனநிலையும், சரீரமும் விழுந்து போகிற நிலையில் நாம் இதற்கு விதிவிலக்காகிறோம்.

இப்படிப்பட்ட சேவைக்குரிய பிரதிபலனானது, நாம் "அவரது மேஜையில் அமர்ந்து" நித்தியத்தில் எந்நாளும் சேவை பெறப்போகிறோம். அது நமது ஓய்வு நாட்களாகவும், மற்றும் பரலோகில் சேவையைப் பெறுவதாயும் இருக்கும். உண்மையான வேதாகமத் தலைமைத்துவம், பரலோகம் வரை செய்யப்படும் சேவையை உள்ளடக்கியுள்ளது. நாம் ஓய்வு பெற்று, பரலோகில் நமது பிரதிபலனைப் பெறும்படி பிரவேசிக்கிறவர்களாய் இருக்கிறோம், அது வரை நாம் சேவை செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம். தேவனது மந்தைக்காய், நாம் பாடுபடவும், மரிக்கவும் கூட ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் அவசியமாய் இருக்கிறது. ஒரு விசுவாசி தனக்கு சேவை செய்வதை எதிர்பார்ப்பாரானால், கர்த்தர் எதிர்பார்க்கும் தலைமைத்துவத்திற்கு அவர் தகுதியில்லாதவராய் இருக்கிறார், நாம் பூமியில் இருப்பதன் நோக்கம், சேவை செய்வதற்காய்

இருக்கிறோம், தொடர்ந்து சேவை செய்து நமது மரணத்திற்குப் பின், கர்த்தரை முக முகமாய் தரிசிக்கும் நாள் பரியந்தம், நாம் சேவை செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இப்பொழுது யோவான் 13 அதிகாரத்தை திரும்ப ஒரு முறை வாசிப்போமாக: கர்த்தர் தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் அன்பு கூர்ந்தார், இவ்வன்பை அவர்கள் பாதங்களை கழுவி சுத்திகரித்ததன் மூலம், அவர்களுக்கு விவரித்துக்காட்டினார். இதன் மூலம் அவர், தங்கள் வசத்தில் உள்ள, பிறரிடம் எவ்வாறு அன்பு கூறுதல் வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டி, முன்மாதிரியை ஏற்படுத்தினார். கால்களை கழுவுதல் என்பது, அன்பின் முன்மாதிரியாய் இருக்கிறது, இது சபையின் போர்டு அங்கத்தினர் கைக்கொள்ள வேண்டிய முன்மாதிரியாய் இருக்கிறது, மற்றும் நமது ஊழிய வாழ்வில் பின்பற்ற வேண்டிய ஒன்றாயும் இருக்கிறது.

இப்படிப்பட்ட செயல்பாட்டினை, ஒரு அடிமை செய்வது இயேசுக்கிறிஸ்துவின் நாட்களில் இருந்து வந்தது, அடிமையில்லாத ஒருவன் இத்தகைய செயலை செய்வது வழக்கத்திற்கு மாறான ஒன்றாய் இருந்து வந்தது. இதைக் கர்த்தர் செய்ததன் மூலம், சீஷர்களுக்கும், நமக்கும் ஒரு கருத்தை வெளிப்படுத்த விரும்பினார். அது தேவனது மந்தைக்கு செய்யும் சேவையானது, மரியாதையை எதிர்பாராது, மிகவும் கீழ்த்தரமான செயலாய் இருப்பினும், மற்றும் இது அடிமட்ட செயலாய் இருப்பினும், மனமுவந்து அவற்றை செய்ய முன்வருதல் இதில் உள்ளடங்கிய கருத்தாய் இருக்கிறது. ஒரே மெய்யான தேவனுக்குள் சக விசுவாசிகளாய் இருப்பவர்களுக்கு, அவசியமான ஒவ்வொன்றையும் செய்ய நாம் கடமைப் பட்டுள்ளோம். நமது கலாச்சாரத்தின் பண்பாடானது, ஏற்றுக்கொள்ளக்கூடியதாய் இருந்தாலும், ஏற்றுக்கொள்ள இயலாது இருப்பினும், ஒரு வேளை நமது தகுதிக்கு அப்பாற்பட்ட செயலாய் இருந்தாலும் கூட அவற்றை மனமுவந்து செய்தல் வேண்டும். எந்த பணியும் ஒரு சேவகருக்கு / கிறிஸ்துவை பின்பற்றுவோருக்குக் கீழானது அல்ல, அவர் எல்லா நிலைகளிலும் சேவை செய்கிறவராய் இருந்தார். அவரைப்பின்பற்றுதல் என்பது, அவரது முன்மாதிரிகளை கைக்கொண்டு, முழுமையான அடிமைத்தன மனப்பான்மையுடன், தேவனது மந்தைக்குச் சேவை செய்வதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

வசனம் 13, ஒரு கருத்தை நாம் கைக்கொள்ளுமாறு செய்கிறது, நாம் இக்கருத்தைப் பிரதிபலிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அவர் எல்லாவற்றின் மீதும் கர்த்தராய் இருக்கிறார், இப்படிப்பட்ட அடிமையின்

வேலையையும் செய்கிறவராய் காணப்பட்டார். அவரது ஜனங்களை வழிநடத்தும்போது, அவர் எதிர்பார்க்கும் எப்பேர்பட்ட வேலையாய் இருப்பினும், அவைகள் கீழ்த்தரமானவைகள் அல்ல. வேதாகமத் தலைமைத்துவம் என்பது, செய்ய அவசியமான எந்த ஒரு பணியிலும் அதன் மூக்கை நுழைப்பது அல்ல, மாறாக மிகவும் மோசமான பணிகளையும் செய்யும்படி, கர்த்தருடைய ஜனங்களை வழி நடத்தி, அவர்களுக்கு சேவைக்குரிய முன்மாதிரியை அமைத்துக் கொடுப்பதாய் இருக்கிறது. நாம் நமது கர்த்தரை விட பெரியவர்கள் என தீர்மானித்தல் கூடாது, அவர் இப்படிப்பட்ட அடிமையின் வேலையை மனமுவந்து செய்திருக்க, நாமும் அவரது ஜனங்களுக்காக, எப்பட்டிப்பட்ட வேலையையும் செய்ய அவசியமாய் இருக்கிறது.

தலைமைத்துவ நடைமுறை:

1. அதிகார ஆதிக்கம் மற்றும் அதிகாரம் செலுத்துதல் வேதாகம் தலைமைத்துவம் ஆகாது: அதிகாரம் செலுத்துதலை விரும்புத்ல், மரியாதையை எதிர்பார்த்தல், வணக்கத்தை எதிர்பார்த்தல், ஆதிக்கம் செலுத்துதலில் ஆர்வம் காட்டுதல், எவ்விதமான ஆதிக்கம் செலுத்துதலை மையமாய் கொண்டுள்ள நிர்வாகமானது, நிர்வாக ஸ்தானத்தை எதிர்பார்க்கிறதாய் இருக்கிறது. விசுவாசிகள் கூடுகையில் இப்படிப்பட்ட செயல்பாடுகள் இருத்தல் கூடாது.

பரிசுத்த ஆவியானவராகிய தேவன், விசுவாசிகள் ஆவிக்குரியவர்களாய் இருக்கும் போது, அவர்களை தனது கட்டுப்பாட்டில் வழி நடத்துகிறவராய் இருக்கிறார், ஒரு வேதாகம தலைவர் கூட, இவ்வாறு பரிசுத்த ஆவியானவர் தனது காட்டுப்பாட்டில் விசுவாசிகளை செயல்பட வைப்பதை தடைசெய்கிறவர்களாய் இருத்தல் கூடாது. இயேசு எல்லா விசுவாசிகளின், இராஜாவும், அவர்களது கர்த்தருமாய் இருக்கிறார், இதினிமித்தம் ஒரு வேதாகமத் தலைவரும் தங்களை ஜனங்கள் மதித்து, தங்களுக்கு அவர்கள் கர்த்தத்துவத்தை அளிக்க முயற்சித்தல் கூடாது. நாம் ஜனங்களை தேவனது வார்த்தைக்குள் வழிநடத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் அவர்களை பரிசுத்த ஆவியானவருக்கு ஒப்புவித்து அவர்கள் அவரால் வழிநடத்தப்பட உற்சாகப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். எந்த ஒரு விசுவாசியையும், நமது அதிகாரம் மற்றும் வல்லமையைச் சார்ந்து இருக்க நாம் எதிர்பார்த்தல் கூடாது.

2. சேவகம் செய்யும் தலைமைத்துவம் வேதாம தலைமைத்துவமாய் இருக்கிறது: நமது கர்த்த்ர் சீஷர்களுக்கு சேவை செய்தது போல, நாம் நமது வசத்தில் உள்ள

கர்த்தரது ஜனங்களுக்கு சேவை செய்தல் வேண்டும். நாம் பரலோகில் சேவை பெறுகிறவர்களாய் இருக்கிறபடியால், அங்கு சென்றடையும் வரை, சபைக்காக நாம் சேவை செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம். தேவனது மந்தையை போஷித்து, எவ்வித குறைகூறுதலும் இல்லாது, இங்கு ஓய்வை எதிர்பார்த்து பணிசெய்யாது இருத்தல் வேண்டும். நாம் பரலோகில் சேவை பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம்.

3. ஒரு உண்மையான தலைவர், எதிர்பார்க்கப்படும் பணியை ஒரு போதும் தவிர்த்துவிட மாட்டார்: ஒரு பணியானது செய்து முடிக்கப்பட வேண்டுமானால், முதலாவது அதை ஒரு தலைவரால் செய்து முடிக்கப்படுதல் வேண்டும். அவற்றில் கழிவறையை சுத்தம் செய்தல், மற்றும் பாத்திரங்களை கழுவுதல் போன்றவைகளும் உள்ளடங்கும். எந்த ஒரு பணியும் கீழ்த்தரமானது என எண்ணுதல் கூடாது. ஒரு தலைவரும் முதலில் தாங்கள் செய்யாத எந்த ஒரு பணியையும், மற்றவர்களை செய்யப் பணித்தல் கூடாது. ஒவ்வொரு தலைவரும் தன்னை சேவை செய்வதில் முன்மாதிரியைக் காண்பித்தல் வேண்டும், அதினிமித்தம் ஜனங்கள் அம்முன்மாதிரியை பின்பற்ற ஏதுவுண்டாகும். ஒரு வேளை ஒரு அடிமையின் வேலையை செய்ய நேர்ந்தாலும், அப்படிப்பட்ட வேலையை எவ்வித முறுமுறுப்பின்றி செய்து மடிவதற்கும் நம்மை அற்பணித்துக்கொள்ள ஆயத்தமுள்ளவராய் இருத்தல் வேண்டும். இயேசுக்கிறிஸ்து நமது முன்மாதிரியாய் இருக்கிறார்.

குறிப்புகள்:

<u>அத்தியாயம் இரண்டு</u>

தலைமைத்துவ குணாதிசயத்தின் தராதரமானது, இயேசுக்கிறிஸ்துவின் முழுமையான தராதரத்தைச் சார்ந்து இருக்கிறது:

உண்மையான விசுவாசம் என்பதன் தராதரமானது, "அவரைப் போலவே இருப்பதாகும்" இதைத்தவிர வேறு தராதரங்கள், நமது குணாதிசயங்களை வரையறுக்க இல்லை, ஆவியானவரின் வல்லமையால் நிரப்பப்பட்ட வாழ்க்கையானது இதை வகையறுக்கிறதாய் இருக்கிறது. அப்போஸ்தல குழுவினர், அவர்களது ஆட்கள், மற்றும் பெண்கள், சக ஊழியர்கள், போன்றோர்

உருவாக்குகிறவர்களும், நமக்கு முன்மாதிரிகளாய் அமைந்து, கிறிஸ்துவின் அடிச்சுவடுகளை பின் பற்றிவாழ நமக்கு முன்மாதிரிகளாய் இருக்கின்றனர். இது மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது, காரணம், இது இரு காரியங்களை நமக்குப் புலப்படுத்துகிறதாய் இருக்கிறது, முதலாவதாக இதற்கு முற்றிலும் ஆவியானவரால் நிரப்பப்பட்ட வாழ்கையானது மிகவும் அத்தியாவசியமாய் இருக்கிறது. அவ்வாறு வாழ இயலாத பட்சத்தில், அழைக்கப்பட்டவர்களாய் இருக்கும் நம்மால் அப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ இயலாதவர்களாய் இருப்போம்.

இரண்டாவதாய், நமது முரட்டாட்டம், மற்றும் மனிதப் பெருமை இவைகளுக்கு முடிவுண்டாக்குவதாகும். ஒருவரும் இப்படிப்பட்ட தராதரத்தில் முழுமையாய் அளவிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. இருப்பினும் அதனால் எவ்விதத்திலும் மனம் தளர்ந்துவிடாதபடி, கிறிஸ்துவின் முன்மாதிரியை எல்லாவற்றிலும் செயல்படுத்த எத்தனித்தவர்களாய், அவருக்கு முன்பாக மகிழ்வுடன் இருக்க முயலுவோமாக. அவைகள் அனைத்தையும் அளவிடாதபடி, நாம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறோம், அன்புக்குரியவர்களாய் இருக்கிறோம், நமது சேவையில் முன்னேறும்படி அழக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம். இதுவே வேதாகம தலைமைத்துவத்தை நாம் கற்றுக்கொள்ளும் போது, நமக்கு மகிழ்ச்சியளிப்பதாய் இருக்கிறது, நம்மில் மிகுந்த அன்பை பாராட்டி, நமக்காய் தன்னைத்தானே அற்பணித்தவருக்குக் கீழ் நாம் சேவை செய்கிறவர்களாய் இருக்கிறோம். அவர் உயர்ந்த அந்தஸ்தை அமைத்து இருக்கிறபோதிலும், நாம் மண்ணென்று அறிந்தவராய் இருக்கிறார். தாவீது இதை மிகவும் வலுவான நிலையில் நமக்கு நினைவு படுத்துகிறவராய் இருக்கிறார். சங்கீதம் 103:6-17.

பழைய ஏற்பாட்டிலிருந்து ஒரு வேதபகுதியையும் (705 கி. மு வில் அசீரியர்கள் இஸ்ரவேலை முற்றுகையிட்ட போது நிகழ்ந்த காரியம்) புதிய ஏற்பாட்டில் ஒரு வேபகுதியையும் (கி.பி 50 ல் பவுல் ரோம அரசாங்க சபைக்கு எழுதியகளில் இருந்து) ஆய்வு செய்து பார்ப்போமாக. இவற்றில் சில அடிப்படை வேதாகமக் கருத்துக்களானது, புறஜாதிய தலைமைத்துவத்திற்கு எதிராக விவரிக்கப்படுகிறது.

1. ஏசாயா 53 ம் அதிகாரம் - பரிசுத்த பூமி - நமது தலைமைத்துவ முன்மாதிரி:

பிரதிபலிப்புகள்:

53:1 எங்கள் மூலமாய் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? கர்த்தருடைய

புயம் யாருக்கு வெளிப்பட்டது?

இவ்வதிகாரம் முழுமையும், 52ம் அதிகாரம் வசனம் 14ல் கொடுக்கப்பட்டதன் அடிப்படையில் உள்ள வெளிப்பாட்டின் மீது கட்டப்படுகிறதாய் இருக்கிறது. அவ்வசனத்தை வாசித்து, சிலுவையில் தொங்கிய இயேசுவை நினைத்துப் பாருங்கள். சங்கீதம் 22 ஐ திரும்ப வாசியுங்கள் அதில் அவர் அவரது ஆவியில் அடைந்த உள்ளான பாடுகளையும், வேதனைகளையும் பிரதிபலிப்பதைக் காணக்கூடும். அந்த பயங்கரமான அதேவேளையில் அந்த மகிமையான நாளில் இடம்பெற்றது என்னவென்றால், அளவிட இயலாத, மற்றும் தீர்க்கதரிசிகள் நின்று வியத்தகு நிலையில் காணக்கூடியதாய் இருந்தது அக்காட்சி. மத்தேயு 11:25. இப்படிப்பட்ட நிகழ்வுகளை ஜனங்களுக்குள் யாரால் விசுவாசிக்க இயன்றது? சுவிஷேச செய்திக்கு, "ஆமென்" என யாரால் சொல்ல இயன்றது?

ஏசாயா இப்படிப்பட்ட சூழலில், சுவிஷேசத்தை (நற்செய்தியை) பிரசங்கிக்க தலைப்பட்டார். இஸ்ரவேல் தேசமானது அசீரியர்களால் முற்றுகையிடப்பட்டு அழிவை எதிர்நோக்கிக்கொண்டிருந்த தருணத்தில், சிலுவை மற்றும் உயிர்த்தெழுதல் அத்தேசத்தின் நம்பிக்கையாய் இருந்தது. இதை நாம் அறிந்து கொள்வதன் நோக்கம், இன்றைய அளவில் சபைத் தலைவர்களாகிய நாம் முன்மாதிரியை அமைத்துக் கொண்டு, நமது சொந்த தேசிய வாழ்வில் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். இச்சூழலில் இயேசுவின் கிரியைகளை உயர்த்திக்காட்டி, சுவிஷேசத்தை அறிவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். மனுவர்க்கத்தின் ஒரே நம்பிக்கையானது, உண்மையான இயேசுவைக் கண்டுகொண்டு, தேவன் அவர்களிடத்தில் எதிர்பார்க்கும் காரியங்களை இனங்கண்டு கொண்டு, பரிசுத்த ஆவியானவராகிய தேவனுக்கு தங்கள் இருதயத்தை திறந்து கொடுத்து, தேவனது எதிர்பார்ப்புக்கு இணங்கி செயல்படுவது ஆகும்.

53:2 **இளங்கிளையைப் போலவும், வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப்போலவும் அவனுக்கு முன்பாக எழும்புகிறார். அவருக்கு அழகுமில்லை சௌந்தரியமுமில்லை அவரைப்பார்க்கும்போது, நாம் அவரை விரும்பத்தக்க ரூபம் அவருக்கு இல்லாதிருந்தது.**

வசனம் 2 இயேசுவின் மனுஷீகத்தை நமக்கு அறிமுகப்படுத்துகிறதாய் இருக்கிறது, நாசரேத்தூரில் தனது குடும்பத்தினர் யோசேப்பு, மரியாள் மற்றும் அவரது சகோதர சகோதரிகள் இவர்களுடன் வளர்ந்ததை சித்தரிக்கிறதாய் இருக்கிறது. இந்த

வசனம் இயேசு தேவாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டதை லூக்கா 2:21-39, மற்றும் 12 வயதில் அவர் தேவாலாயத்திற்கு சென்றது லூக்கா 2:42-50, போன்றவற்றிற்கு அப்பாற்பட்ட காரியங்களை நமக்கு போதிக்கிறதாய் இருக்கிறது. அவரது வாழ்வின் இளம்பிரயாத்தின் நிகழ்வுகள், அவரைக் குறித்து உரைக்கப்பட்ட தீர்க்கதரிசன வார்த்தைகள், மற்றும் தேவதூதர்களால் உரைக்கப்பட்ட வார்த்தைகள் போன்றவற்றை, மரியாள் அம்மையார் இரகசியமாய் வைத்திருந்து, அவற்றைக் குறித்து அவரது உயிர்த்தெழுதலுக்குப் பின்னர், லூக்காவிற்கு மட்டும் முழுமையாய் அவற்றை எடுத்துரைத்தார்கள். லூக்கா 2:19,51. இவர் கிரேக்க ஹீரோக்களைப்போன்று வளராது, இயல்பான வளர்ச்சியைப் பெற்றவராய் இருந்தார். இவரது முதலாவது அற்புதம் கலிலேயாவில் உள்ள கானா ஊரில் நிகழ்ந்தது. யோவான் 2.

மனுஷீக ரீதியில் அவர் வளர்ந்தார். அவர் தமது தெய்வீக தன்மையில் எப்பொழுதும் இருக்கிறவராய் இருந்தார், இருப்பினும் அவர் மனுஷராய் இருந்து மனிதர் நடுவே வளருகிறவராய் இருந்தார், அவர் தன்னை ஒழுங்கிற்கு கீழ் அமைத்துக்கொண்டு, மற்றவர்களைப் போன்று கற்றுக்கொள்கிறவராய் இருந்தார், அவர் மற்ற மதக்குருக்களைக் காட்டிலும் மிகவும் ஞானமுள்ளவராய் விளங்கினார்.

அவர் மனுஷீகத்திற்கு தன்னை மனமுவந்து அற்பணிக்கிறவராய் இருந்தார், இதன் மூலம் மனுக்குலத்திற்கு தாழ்மைக்குரிய முன்மாதிரியை அளிக்கிறவராய் இருக்கிறார். அவரது ஒவ்வொரு அடியும் மனுஷீகமாய் இருந்தது. கிறிஸ்து என்ற தலைப்பில் உள்ள BTB studies ஐ ஒப்பிட்டுப்பாருங்கள். ("கிறிஸ்து" என்பது கிரேக்க தலைப்பாய் இருக்கிறது, இதன் எபிரேய தலைப்பு "மேசியா" என்பதாகும்) தன்னைத்தான் தாழ்த்துதலும், மற்றும் உயர்த்தப்படுதலும், இருதன்மைகளின் இணைப்பு, வெறுமையாக்கப்படுதல் போன்ற தலைப்புகளை ஒப்பிட்டுப் பார்க்கவும். இவைகள் இறையியல் பாடத்தில் "Christology”, என்கிற தலைப்பில் உபதேசங்களாய் இருக்கின்றன. அவரது ஆளத்துவம் மற்றும் கிரியையை புரிந்து கொள்ள இவைகள் உதவியாய் இருக்கின்றன.

அவர் இஸ்ரவேல் மரத்தின் கிளையாய் அல்லது திராட்சைச் செடியாய் வளருகிறவராய் இருக்கிறார். அவர் ஆவிக்குரிய நிலையில் மிகவும் வறண்ட நிலையிலிருந்து வருகிறவராய் இருக்கிறார். அவர் புறஜாதியாரின் கலிலேயாவின் நடுவிலிருந்து வருகிறவராய் இருக்கிறார், அவர் வளர்ந்த கலிலேயா பட்டணத்தின் மனுஷர் தீமையில் பலத்துக் கொண்டவர்களும், மாம்சீக இச்சைகளில்

பேர்போனவர்களுமானவர்கள். அவர்கள் ஆவிக்குரிய காரியங்களுக்கு மிகவும் குறைவான மதிப்பை அளிக்கிறவர்களாய் இருந்தனர். எரேமியா 23:5-8, எசேக்கியேல் 17:22-24, சகரியா 6:12-13, யோவான் 1:45-46.

அவர் தாழ்மையுடன் வாழ்கிறவராய் இருந்தார், அவர் மனுஷரால் அசட்டை பண்ணப்படுகிறவராய் இருந்தார். அவர் ஒரு ஸ்திரீயின் குமாரனாய் இருந்தார் அந்த ஸ்திரீயோ திருமணத்திற்கு முன்பே, கருத்தரித்தரிந்தபடியால் அவள் திருமணம் செய்து கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அவர் தனது ஜனங்களால் புகழப்பட்டு துதிக்கப்படுவதற்குப் பதிலாக, மிகவும் பரிகாசமாகவும், ஏளனமாகவும் கருதப்பட்டார். அவர் மிகத்தாழ்மையுடனும், பொறுமையுடனும் தனது சேவையைத் தொடருகிறவராய் இருந்தார். அவர் பொறுமையைக் காத்துக்கொண்டு, தனிப்பட்ட நிலையில் நிந்தனைக்குள்ளும், நெருக்கத்திற்குள்ளும் முன்மாதிரியை வகுத்துப் போனார். மாற்கு 6:3, லூக்கா 2:7, 39-40, 51-52, 9:58.

அவர் சிருஷ்டித்துப் படைத்த உலகில் அவர் வந்திருந்தும், அவரால் உண்டாக்கப்பட்ட மனுக்குலமானது அவர் சிருஷ்டிகராய் இருந்த பிரகாரம் அவரைக் காணவில்லை. அவர்கள் எதிர்பார்த்த வண்ணம் அவர் இராஜ தோற்றத்தில் இல்லாதிருந்தார், ஆகையால் அவர்கள் அவரை விரும்ப மறுத்தனர். இவ்வாறு இருந்த போதிலும், அவரது ஆழமான வாஞ்சையும் தவனமும் அவர்களது இரட்சிப்புக்கு அடுத்ததாய் இருந்தது. யோவான் 1:10-14, 9:28-34, 18:37-40, 19:5-7, 14-16. கிறிஸ்து - கிளை இத்தலைப்பை ஒப்பிட்டுப் பார்க்க.

53:3 அவர் அசட்டை செய்யப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அனுபவித்தவருமாய் இருந்தர், அவரை விட்டு நம்முடைய முகங்களை மறைத்துக்கொண்டோம். அவர் அசட்டைபண்ணப்பட்டிருந்தார். அவரை எண்ணாமறபோனோம்.

அவர் அசட்டைப் பண்ணபட்டவராயும், புறக்கணிக்கப்பட்டவருமாய் இருந்தார். அவர் தமது விரோதிகளாலும், தனது சிநேகிதராலும் இறுதியில் காட்டிக்கொடுக்கப்படுகிறவராய் இருந்தார். விரோதிகள் அவரை அவமதித்து, வெறுத்தனர், அவரது மனிதர்கள் அவரை விட்டு விலகி ஓடுகிறவர் களாய் இருந்தனர். இப்படிப்பட்ட காரியங்கள், முன்னதாகவே முழுமையாய் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டிருந்தை கீழ்க்காணும் BTB studies ல் காண்கிறவர்களாய் இருக்கிறோம். சங்கீதம் 22:6-8, 69:10-12, 19-20, மீகா 5:1-2, சகரியா 11:8-13. பின்ன இவைகள் அனைத்தும் முழுவதுமாய் நிறவேறின. மத்தேயு 26:56, 67, 74-75, 27:39-44, 63, மாற்கு 9:12, 15:19, லூக்கா 8:53, 9:22, 16:14.

நாம் அவரைப் பின்பற்றுவதற்கான தராதரத்தை அமைத்துள்ளார், முற்றிலும் கீழ்ப்படிதலுக்கும், சுய மதிப்பை அவர் எண்ணாது, தனிப்பட்ட நிலையில் அவர் தனது சொந்த பாசத்திற்குரியவர்களால் காட்டிக் கொடுக்கப்பட்டு, புறக்கணிக்கப்பட்டுள்ளது நமது வாழ்விற்கு முன்மாதிரிகளாய் அமைந்துள்ளன. எபிரெயர் 12:1-3. அவர் துக்கம் நிறைந்தவரும், பாடுஅனுபவித்தவருமாய் இருந்தார். இதை மிகத்தெளிவுடன் கெத்சமனே தோட்டத்தில் அவர் கைது செய்யப்படுவதற்கு முன்னர் காணக்கூடும். மத்தேயு 26:36-44, யோவான் 17:1-26.

கர்த்தருடன் நெருங்கி வாழ்தல் என்பது, கண்ணீருடன் அவரை நெருங்கி வாழ்தலைக் காட்டுகிறதாய் இருக்கிறது. நாம் அவரை நெருங்க, நெருங்க, இழந்து போகப்பட்டோரின் இறுதி நித்தியத்திற்கடுத்த சத்தியத்தை தெளிவுடன் அறிந்து உணர்ந்து கொள்ள இயலுகிறதாய் இருக்கிறது, மற்றும் அவர் ஏன் இழந்து போனோருக்காய் மிகவும் கரிசனையுள்ளவராயும், அவர்களது இரட்சிப்பிற்காக ஏன் பாடுபட்டார் என்பதனையும் தெளிவுற புரிந்து கொள்ள இயலுகிறதாய் இருக்கும். அவரில் எவ்வித இறுமாப்பும் காணப்படவில்லை, அவரை வெறுத்து ஒதுக்கியவர்களிடம் இவர் எவ்வித வெறுப்பையும் காண்பிக்கவில்லை. அவர் தனது நாட்களில் எருசலேமிக்கிற்காய் கண்ணீர் சிந்தியது போன்று, இன்றைய அளவிலும், வீழ்ந்து போன மனிதருக்காக கண்ணீர் சிந்துகிறவராய் இருக்கிறார், மத்தேயு 23:27-39, லூக்கா 13:34-35.

"நமது முகத்தை அவரை விட்டு மறைத்துக் கொண்டோம்." தீர்க்கதரிசியானவர், 700+ ஆண்டுகளுக்கு முன்னதாகவே ஜனங்கள் தங்கள் மேசியாவை புறக்கணிப்பதனால் உண்டாகும் துக்கத்தின் நிறைவேறுதலை பதிவு செய்துள்ளார். இருந்தபோதிலும், அவர்கள் வாழ்ந்தகாலத்திற்கு 700+ ஆண்டுகளுக்கு முன்பதாகவே மோசேயின் வருத்தத்திற்குரிய வார்த்தைகளையே திரும்பக் கூறுகிறவர்களாய் இருந்தனர். உபாகமம் 32:13-21. மட்டுமல்லாது இவ்வசனங்களோடும் ஒப்பிடுக: சகரியா 13:7-14, மத்தேயு 27:3-10, யோவான் 1:9-11, அப்போஸ்தலர் 3:12-26. அவர் எதிர்பார்த்த அளவுக்கு ஜனங்கள் அவரைக் கனப்படுத்தவில்லை, ஆனால் மீந்து இருந்த சொற்ப ஜனம் மட்டும் அதைச் செய்கிறவர்களாய் இருந்தனர். அவர்கள் உண்மை விசுவாசிகளாய்த் திகழ்ந்தனர், அவர்கள் ஆரம்பகால மக்களாய்த் திகழ்ந்தனர். அப்போஸ்தலர் 4:12.

மீந்திருந்த சொற்ப ஜனங்களால் மட்டுமே தேவன் எதிர்பார்ப்பதைச் செய்ய இயன்றது. நாம் கர்த்தரையும் தீர்க்கதரிசிகளையும் பின்பற்ற

அழைக்கப்பட்டிருக்கிறோம், ஜனங்களில் மிகுதியானோர் மோசேயைப் புறக்கணித்தனர், ஏசாயாவைப் புறக்கணித்தனர், அப்படிப்பட்டோர் இயேசுவையும் புறக்கணித்தனர், தீர்க்கதரிசிகள் கூறியபடியே அவர்கள் புறக்கணிப்புக்குள்ளாயினர். தேவனது நியமங்களில் இருந்து விழுந்துபோவது அதிகமானோராய் இருக்கின்றனர், ஆனால் அவரது நியமங்களில் எவ்வித மாற்றமுமின்றி, நாம் தாழ்மையுடன் அவற்றை அனுசரித்து நடக்க அழைக்கப்பட்டு இருக்கிறோம். வெகு சிலரே தேவனது நியமங்களை அனுசரித்து வாழ்வதால், உங்களுக்கு கவனச்சிதறல் உண்டாகபடி, நீங்கள் சத்தியத்தில் நிலைநிற்கும்படி அழைக்கப்பட்டவர்களானபடியால், நீங்கள் ஒரு வேளை தனிமையில் இருக்க நேர்ந்தாலும், அவருக்காக நிலைநிற்க முயலுங்கள். உண்மையான தலமைத்துவத்திற்கு தைரியமும், அர்ப்பணிப்பும் அவசியமாய் இருக்கிறது.

53:4 மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு துக்கங்களைச் சுமந்தார்; நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைபட்டவரென்று எண்ணினோம்.

ஏசாயா தனது சாட்சியை கர்த்தருக்கு வெளிக்காட்டுகிறதை இங்கு நாம் காண்கிறோம், மற்றும் ஏசாயா கர்த்தர் மனு உருஎடுக்கும் வருடங்களையும் சத்தியத்தையும் முன்கூட்டியே காண்கிறவராய் இருக்கிறார். அவர் சத்தியத்தைக் கண்டுணர்ந்து, தேவனை முன்னதாகவே துதிக்கிறதைக் காண்கிறோம். இதுவே நாமும் பின்பற்றக்கூடிய நியமமாய் இருக்கிறது, நாம் நமது கர்த்தரின் இரண்டாம் வருகையைக் குறித்து வாக்குத்தத்தத்தைப் பெற்றவர்களாய் இருக்கிறோம். அவற்றை அறிந்தவர்களாய், கர்த்தரின் எதிர்கால கிரியைகளை மனதில் கொண்டு இப்பொழுதே நாம் கொண்டு அவற்றை முன்னதாகவே கொண்டாட வேண்டியவர்களாய் இருக்கிறோம். எதிர்கால மகிமையை மனதில் கொண்டு அவரை துதித்து, கடந்த காலத்தில், மற்றும் தற்போது அவர் செய்த, மற்றும் செய்துவருகிற யாவற்றையும் மனதில் கொண்டுவந்தவர்களாய் அவரை துதித்து உயர்த்த கடமை பட்டுள்ளோம்.

தேவன் தமது பரிசுத்த வார்த்தைகள் மூலம், சத்தியத்தை அறிவித்து இருக்கிறார், ஆகையால், இப்பொழுது முன்கூட்டியே அவைகளை அறிந்தவர்களாய் அவரை துதித்து மகிழ்தல் வேண்டும், பின்னர் தீர்க்கதரிசன நிறைவேறுதலின் போது,, அதன் பின்னர் எந்நாளும் நாம் துதித்து மகிழ வேண்டியவர்களாய் இருக்கிறோம். மத்தேயு 8:14-17. அவர், பாவம், வியாதி, மரணம் போன்றவற்றிலிருந்து, குணமாக்கும் தேவ வல்லமைக்கு மத்தியஸ்தராய் இருக்கிறார், கிறிஸ்து

மத்தியஸ்தர் என்கிற BTB study ஐ ஒப்பிட்டுப் பார்க்க. கலாத்தியர் 3:13-14, எபிரெயர் 9:27-28, 1 பேதுரு 2:24, 3:18-20, 1 யோவான் 2:2.

தேசங்களின் நடுவே வாழ்ந்த அவிசுவாசிகள், கர்த்தராகிய இயேசுவைக் குறித்து மதிப்பிடும்போது, அவர் தேவனால் நியாயந்தீர்க்கப்பட்டவராய் இருந்தார், ஆகையால் அவர் மேசியாவே இல்லை எனக் கணித்தனர். மற்றும் அவர்கள் அவர் சபிக்கப்பட்டவர், அவர் நல்லவர், பரிசுத்தர் அல்லர் அவர் கெட்டவர், அவர் தங்களுக்கு உகந்த கர்த்தர் மற்றும் இராஜா அல்லர் என அவர்கள் விசுவாசித்தனர். அவர் மனிதருக்கும், தேவ தூதர்களுக்கும் கர்த்தரும் இராஜாவுமானவர் என்பதற்கு தெளிவான ஆதாரங்கள் இருந்தன, மற்றும் அவ்வப்போது திரும்ப திரும்ப அவர் செய்த அற்புதங்கள் அதற்கு ஆதாரமாய் இருந்த போதிலும், தேசத்தின் அதிகாரிகள் அவற்றை விசுவாசிக்க மறுத்தனர். அநேகர் அவரைப் புறக்கணித்த போதிலும், அநேகர் சத்தியத்தை ஏற்றுக்கொள்கிறவர்களாய் இருந்தனர், மற்றும் அநேகர் இன்றும் பரிசுத்த ஆவியானவரின் செயலால் சத்தியத்தை அறிந்து ஏற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். அப்போஸ்தலர் 2:36-41, 4:1-4, 13-23, 29-31, 5:29-32, 40-42, 6:10, 7:51-60.

கர்த்தர் ஒருவர் மட்டுமே சரித்திரத்தில் பிரபலமான கனத்துக்குரியவராய் திகழ்கிறார், நாம் அவரின் சேவகராய் இருக்கிறோம், நாம் அவரை கனப்படுத்துகிறவர்களாய் இருக்கிறோம் மற்றை அவரை மட்டுமே துதித்து உயர்த்துகிறவர்களாய் இருக்கிறோம். நாம் இங்கிருப்பது புகழ்ச்சிக்காகவோ, பிரபலத்திற்காகவோ, வல்லமைக்காகவோ, ஐசுவரியத்திற்காகவோ, அல்லது எவ்வித மகிமைக்காகவோ இல்லை. நாம் மனுஷீக புகழ்ச்சியுடையவர்களாய் இருப்போமானால், அவரது சேவகராய் இருக்கும் நாம் புன்னகை செய்வோமாக மற்றும் நம் சுயவிளம்பரத்தை விசுவாசியாது இருப்போமாக. நாம் மனுஷரின் உண்மையற்ற தன்மையை அறிந்துள்ளோம், ஆகையால், எல்லா புகழ்ச்சிக்கும் பாத்திரராய் இருக்கும் இயேசுவை மட்டுமே நோக்கிப்பார்ப்போமாக. BTB study ல் கிறிஸ்து: பிரபலத்துவம் என்கிற தலைப்பை ஒப்பிட்டுப் பார்க்க.

53:5 நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களின் நிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார், நமக்கு சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர் மேல் வந்தது; அவரது தழும்புகளால் குணமாகிறோம்.

"நமது மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டார்." நமது தொடர்ச்சியான மீறுதல்கள் நிமித்தம் அவர் உண்மயிலே உருவக்குத்தப்பட்டார். மனுஷர்களின்

பாவம், தேவனது பரிபூரண நியமத்தைப் புறக்கணித்து வாழ்வதானது, சிலுவையில் அவரை அநேக அம்புகள் துளைப்பதைப் போன்று அவரை துளைத்தன. அவர் நமது பாவங்களுக்காக ஆணிகளால் துளைக்கப்பட்டார். நமது தொடர்ச்சியான மீறுதல்களின் விளைவானது, அவரைப் பாடுகளுக்கு உட்படுத்தியது. தானியேல் 9:24-26, சகரியா 12:10, 13:7, மத்தேயு 20:28, ரோமர் 3:23-26, 4:23-25, 5:6-11, 15-21, 1 கொரிந்தியர் 15:3-7, 2 கொரிந்தியர் 5:21, எபேசியர் 5:1-2, எபிரெயர் 9:11-17, 10:10-14, 1 பேதுரு 3:18.

அவர் நொறுக்கப்பட்டார், "மனோரீதியாக அவர் நொறுக்கப்பட்டு, தூளாக்கப்பட்டார்." இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையானது, மனோரீதியான நிலையில் உச்சக்கட்டத்தில் உபாதிக்கப்பட்டதை காட்டும் வார்த்தையாய் இருக்கிறது. பாவத்திற்கு காரணன் குறித்து ஏதேன் தோட்டத்தில் தீர்க்கதரிசனமாய் உரைக்கப்பட்டதின்படி, அவன் மேசியாவை நசுக்க வேண்டியதாய் இருந்தது, அவர் ஸ்திரீயின் வித்தாய் இருந்தார், அவரே மனிதரின் பாவப்பிரச்சனைக்கு விமோச்சனம் உண்டாக்குகிறவராய் இருந்தார். ஆதியாகமம் 3:15, ரோமர் 16:20. BTB topics களை ஒப்பிடுக: இரட்சிப்பு, மீட்பு, மட்டுமல்லாது பாவம், மனிதனின் வீழ்ச்சி. சிலுவையில் உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கும்போது அவருக்கு உண்டான அக்கொடிய வேதனையை, சங்கீதக்காரன் தீர்க்கதரிசன வார்த்தைகளால் விவரித்துள்ளார். சங்கீதம் 22:1-18. கிறிஸ்து: சிலுவையில் கதறிச் சொன்ன வார்த்தைகள். இவற்றை ஒப்பிட்டுப் பார்க்க.

தண்டனை, கடுமையான சிட்சையானது, நாம் தேவனோடு (ஒப்புரவாக) சமாதனம் செய்யச் செய்துள்ளது, அவரது பாடுகள் நமக்குப் பிராயச்சித்தத்தையும், ஒப்புரவாகுதலையும் ஏற்படுத்தியிருக்கிறது. BTB studies ல் இப்படிப்பட்ட தலைப்புகளை ஒப்பிட்டுப் பார்க்க: இரட்சிப்பு, பிராயச்சித்தம், மட்டுமல்லாது ஒருவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டு சுமத்தல், குற்றம் சுமத்தப்படுதல் மற்றும் ஒப்புரவாக்கப்படுதல் போன்ற தலைப்புகளையும் ஒப்பிட்டுப்பார்க்க.

இயேசு நமக்கு சமாதானக் காரணராய் இருக்கிறார். அவர் நமக்கு சமாதானத்தின் வழியை திறந்து கொடுத்து, தேவனோடு நம்மை ஒப்புரவாக்குகிறவராய் இருக்கிறார். 2 கொரிந்தியர் 13:11, எபேசியர் 2:14-16, கொலோசெயர் 1:20-22, 1 பேதுரு 2:21-24. அவரது தழும்புகளால் நாம் குணாகிறோம். ஒரு பட்டயத்தால் ஆழமாய் வெட்டப்பட்டு, பின்னர் அது ஒன்று கூடி ஆறி சுகமடைந்த தழும்பு இங்கு குறிப்பிடப்படுகிறது. இதைப்போன்றே பாவம் என்கிற பட்டயத்தால் வெட்டப்பட்டு, தேவனைவிட்டு பிரிக்கப்பட்ட நாமும், அவருடன் மறுபடியும்

இணைக்கப்பட்டுள்ளோம். BTB studies ல் இரு பகுதிகளை ஒப்பிட்டுப்பார்க்க: குணமாகுதல், அற்புதங்களும் மற்றும் குணமாகுதலும்.

எல்லா நேரங்களிலும், சரீரப்பிரகாரமான "குணமாகுதல் பிராயச்சித்தத்தில்" இருக்க வேண்டிய அவசியமில்லை. தேவன் எல்லா நேரங்களிலும் இன்னும் அற்புத சுகத்தை அருளுகிறவராய் இருக்கிறார், நாம் வியாதியஸ்தருக்காக ஜெபிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறோம், கர்த்தர் தமது தயவுள்ள சித்தத்தின்படியே அவர்களுக்கு குணமாகுதலை அருளுகிறவராய் இருக்கிறார், ஆனால் இங்கு அர்த்தம் செய்துகொள்ளப்படுவது வேறுபட்ட காரியமாய் இருக்கிறது. இவ்வசனமானது, மூலபாஷையின் வார்த்தைகளைக் கொண்டு அர்த்தம் செய்து கொள்ள வேண்டியதாய் இருக்கிறது, மட்டுமின்றி வரையறையைத் தாண்டி தவறான நிலையில் அர்த்தம் செய்து கொள்ளப்படுதல் தவிர்க்கப்படல் வேண்டும். பாவத்தினால் உண்டாகும் வியாதி குணமாக்கப்படுகிறது என்பது இவ்வசனத்தின் மறுக்க இயலாத உண்மை, ஆனால், நமக்கு உண்டாகும் சரீரப்பிரகாரமான, மற்றும் மனோரீதியான வியாதிகள், நமது தனிப்பட்ட பாவத்தினால் நமக்கு உண்டாகிறது எனக் கூறுவதற்கில்லை, அவைகள் வீழ்ச்சியுற்ற உலகில் வாழ்ந்து கொண்டிருப்பதால், நம்மைச் சுற்றியுள்ள தீமையிழைக்கும் வைரஸ்கள், பூரணமற்ற மரபணுக்கள், தவறான நரம்பியல் சார்ந்த நிலைகள் (தூக்கமின்மை, மன அழுத்தங்கள், மன உலைச்சல்கள்) நம்மை பாதிப்பனவைகளாய் இருக்கின்றன. எல்லா நேரங்களிலும், நாம் தேவ சித்தத்தை தேட வேண்டியவர்களாய் இருக்கிறோம், சில சந்தர்ப்பங்களில் நாம் வியாதிகளால் துன்பப்படவேண்டியவர்களாய் இருக்கிறோம், (2 தீமோத்தேயு 4:20), மறுபக்கம் பெரிதான அற்புதங்களும், குணமாகுதலும் இடம் பெறுகிவைகளாய் இருக்கின்றன. தேவனது வல்லமையானது பாடு துன்பங்களை சகிப்பதற்கும், குணமாகுதலால் அவைகளில் களிகூறவும் வழி நடத்துகிறதாய் இருக்கிறது - அவர் எப்பொழுதும் உன்னத நிலையை வகிக்கிறவராய் இருக்கிறார்.

தங்களைத் தாங்களே "தெய்வீக சுகமளிப்பவர்கள்" என அழைத்துக் கொள்பவர்களால் நாம் தவறாய் நடத்தப்படுதல் கூடாது, அவர்கள் தங்களது சொந்த வல்லமையால் எவரையும் "குணமாக்குதல்" இல்லை. ஒவ்வொரு சமயமும் அவர்கள் ஜனங்களுக்காய் ஜெபிக்கிறவர்களாய் இருக்கின்றனர்! வாழ்க்கைக்கு தேவனது வசனங்களை நடைமுறைப் படுத்தும்போது, யதார்த்தமான காரியங்கள் நம்மைச் சரிப்படுத்துவதாய் இருக்கிறது. திறவுகோள் யதார்த்த பரீட்சையானது விசுவாசியின் மரணத்தினால் ருசுப்படுத்தப்படுகிறது. நாம் அனைவரும் ஏதோ சிலவியாதிகளால் அல்லது மற்ற பெலவீனங்களால்

மரிக்கிறவர்களாய் இருக்கிறோம். விசுவாசிகளாகிய நாம் பாவத்தில் ஒரு போதும் மரிப்பது இல்லை. மாறாக தேவனது கிருபையில் மரிக்கிறவர்களாய் இருக்கிறோம். நமது மரணம் தேவனது பார்வையில் அருமையானதாய் இருக்கிறது. சங்கீதம் 68:20, 116:15. இயேசு நாம் கிருபையில் வாழ சவால் விடுகிறவராய் இருக்கிறார், கிருபையில் சேவை செய்ய, மற்றும் மரிக்கும் கிருபையை பெற்று அனுபவிக்கவும் கிருபையில் மரித்து இவ்வுலகைவிட்டு கடந்து செல்லவும் நமக்கு அனுக்கிரகம் செய்கிறவராய் இருக்கிறார்.

53:6 நாமெல்லாரும் ஆடுகளைப்போல வழிதப்பித் திரிந்திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம், கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார்.

மனுக்குலமனைத்தும் பாவத்தில் இருக்கிறது, எல்லோருக்கும் ஒரு இரட்சகர் அவசியமாய் இருக்கிறது, கிறிஸ்துவின் நற்செய்தி என்பது அவரே நம் அனைவரின் இரட்சகராய் இருக்கிறார். அவரது தியாக பலியானது, எல்லா மனுக்குலத்திற்கும் உரியதாய் இருக்கிறது. இவற்றைக் குறித்து the BTB study ல் பிரயாச்சித்தம் என்கிற தலைப்பில் நீங்கள் காணக்கூடும். நாம் அனைவரும் மதியற்ற ஆடுகளைப் போன்றிருக்கிறோம். கர்த்தர் நமக்கு நியமித்திருக்கும் வழியைவிட்டு திசைதப்பி அலைகிறவர்களாய் இருக்கிறோம். மகிமையான சத்தியம் என்னவெனில், அவர் நம்மைத் தேடிவந்து, நமக்கு இலவசமான இரட்சிப்பை அருளுகிறவராய் இருக்கிறார். இரட்சிப்பிற்கான கிரியையானது, கிறிஸ்துவினால் நிறைவேற்றப்பட்டு, எல்லாரது பாவங்களையும் தன்மீது ஏற்றுக்கொண்டு அதற்கான பிராயச்சித்தத்தை ஏற்படுத்த வைத்தது. சங்கீதம் 119:176, மத்தேயு 18:12-14, லூக்கா 15:3-10, ரோமர் 3:10-26, 1 பேதுரு 2:25.

கெட்டகுமாரன் சம்பவமானது இச்சத்தியத்தைப் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது. லூக்கா 15:11-32. பரிசுத்த ஆவியானவரது கிரியையானது, கர்த்தரின் பணியாய் இருந்து, இழந்து போனோரைத் தேடவும், அவர்களை உணர்த்தவும் செய்கிறதாய் இருக்கிறது. யோவான் 16:8-11. BTB studies ல் கீழ்க்கண்ட தலைப்புகளை ஒப்பிட்டுப்பாருங்கள்: பரிசுத்த ஆவியானவர், அழைப்பின் முக்கியத்துவம், புதிய ஏற்பாட்டு ஊழியம், மற்றும் செயல்பாடுகள் [OPERATION.] கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் போதகர்களாய் இருக்கும் போது, அவரது மகிமையான வாத்தையைப் போதிக்கிறவர்களாய் இருக்கிறோம், பாவத்தைக் குறித்து போதித்து இரட்சிப்பின் அவசியத்தை உணர்த்தும்படியான, கௌவரத்திற்குரிய கடமையைப் பெற்றவர்களாய் இருக்கிறோம், தேவனை அறியாது வாழ்வதற்குரிய விளைவை

மக்களுக்கு எச்சரித்து உணர்த்துதல் நமது தலையாய கடமையாய் இருக்கிறது. எசேக்கியேல் 3:15-19, யாக்கோபு 5:19-20, யூதா 22-23.

53:7 அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை, அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர்கத்தரிக்கிறவனுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப்போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாது இருந்தார்.

நமது பாவங்களுக்காக, அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார், நியாயமற்ற பாடுகளையும், துக்கங்களையும் எவ்வித முறு முறுப்பின்றி சகித்தார். ரோமர் 4:24-25. அவர் தமது முகத்தை சிலுவைக்கு நேராக திருப்பினார், அவருக்கு தெரியும் இதுவே இவ்வுலகில் தனது இறுதி முடிவு என்பதை அவர் நன்கு அறிந்திருந்தார். லூக்கா 9:51, யோவான் 12:23-28, 1 பேதுரு 3:18. இவ்வேதபகுதியானது கர்த்தரை ஆறு நியாய விசாரனை செய்ததன் மூலம் நிறைவேறியது, அவர் சிலுவையில் ஆணிகளால் அடிக்கப்பட்டு பின்னர் பாடுகளுக்குட்படுத்தப்பட்டார். அவர் சத்தியத்தை நேரிடையாகப் பேசினார், அவர் தன்னை எதிர்த்து தவறான குற்றச்சாட்டை தன்மீது அபாண்டமாய் சுமத்தினவர்களோடு பேசினார், அவர் சிலுவையில் தொங்கிக்கொண்டிருந்தபோது, பேசினார், அவர் எவ்வித புகாரும் செய்யாதிருந்தார். 1 பேதுரு 2:22-23.

சனகெரிம் சங்கத்தின் பிரமாணமானது, விசாரனையின் போது, வன்முறையாய் எதிர்த்து தண்டனை அளிக்கிறதாய் இருந்தது. இறுதியில் மிஷ்னா வை மீறினார் என யூதர்கள் குற்றம் சாட்டினர். BTB ஐ ஒப்பிட்டு, மிஷ்னா சட்டம் கிறிஸ்துவால் மீறப்பட்டது என்பதையும், கிறிஸ்துவின் நியாய விசாரனை போன்ற தலைப்புகளில் இவற்றை சரிபார்க்கவும். அவர் "அடிக்கப்படும் ஆட்டைப்போல" கொண்டு போகப்பட்டார், லேவிய பலிகளின் நிறைவேறுதலாய் இது நிகழ்ந்தது, நம் அனைவரின் பாவங்களுக்காய் அவர் இரத்தம் சிந்தினார். கிறிஸ்து பழுதற்றவர், பலியாதல், கிறிஸ்து ஒப்பிடப்படுதல் பஸ்கா, காணிக்கைகள், கிறிஸ்துவை பிரதிபலிக்கும் லேவிய காணிக்கைகள் போன்ற தலைப்புகளை BTB doctrinal studies ல் ஒப்பிட்டுப் பார்க்க. சங்கீதம் 22:12-21.

<u>கர்த்தரை ஆறு கட்டங்களாக நியாயவிசாரனை செய்தல்:</u>

1. பிரதான ஆசாரியனாகிய அன்னாவுக்கு முன்பாக நியாய விசாரனை செய்யப்படுதல் - தனது மருமகன் காய்பாவுக்கு தயவு செய்யும் மனதாய்

ரோமர்களால் அகற்றப்படுதல், இருப்பினும் அநேக ஜனங்களால் உண்மையான பிரதான ஆசாரியன் எனக் கருதப்பட்டு, காய்பாவிற்காய் காத்திருத்தல். யோவான் 18:12-24.

2. தனிப்பட்ட விதத்தில் காய்பாவிற்கு முன், இரவு நேரத்தில் விசாரிக்கப்பட்டு பரிகாசம் செய்யப்படுதல், இது மிஷ்னா பிரமாணத்திற்கு முற்றிலும் முறனானது. மத்தேயு 26:56-68, மாற்கு 14:61.

3. சனகரிம் சங்கத்திற்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்படல். லூக்கா 22:66-71.

4. பிலாத்துவுக்கு முன்பாக கொண்டு போகப்பட்டு முதன்முறையாக நியாயம் விசாரிக்கப்பட்டு, ரோம சட்டத்திற்கு முன்பாக நிரபராதியாக காணப்படுதல். மத்தேயு 27:11-14, லூக்கா 23:1-7..

5. கலிலேயாவை ஆழுகை செய்து வந்த, ஏரோது அந்திப்பாவிற்கு முன்பாக நியாயம் விசாரிக்கப்படுதல். லூக்கா 23:8-12.

6. பிலாத்துவுக்கு முன்பாக திரும்ப அனுப்பப்பட்டு, இறுதி தீர்ப்பு அளிக்கப்படுதல். யோவான் 18:29 - 19:16.

53:8 இடுக்கனிலும் நியாயத்தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார். அவருடைய வமசத்தை யாரால் சொல்லி முடியும், ஜீவனுள்ளோருடைய தேசத்திலிருந்து அறுப்புண்டு போனார், என ஜனத்தின் மீறுதலினிமித்தம் அவர் வாதிக்கப்பட்டார்.

சுவிஷேசகனாகிய பிலிப்பு இவ்வேதபகுதியை மேற்கோள்காட்டி, கந்தாகேயின் மந்திரியாகிய எத்தியோப்பியனுக்கு, செப்துவஜிந்து மொழிபெயர்ப்பிலிருந்து சுவிஷேசத்தை எடுத்துரைத்தார். ஏசாயா 53:7-8. சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட வேதபகுதியிலிருந்து, நேரடியாக இயேசுக்கிறிஸ்துவைக் குறித்து யாவருக்கும் எடுத்துரைத்தார். எத்தியோப்பிய மனிதருக்கும் அவ்வண்ணமே சுவிஷேசத்தை அறிவித்தார். அப்போஸ்தலர் 8:27-39. இயேசு கைது செய்யப்பட்டார், மதத்தலைவர்கள் அவரை சிறையில் அடைத்தனர், தானியேலின் தீர்க்கதரிசியின் படி அவர் "சங்கரிக்கப்பட்டார்" தானியேல் 9:26, யோவான் 11:49-52.

இயேசுக்கிறிஸ்துவின் மரணத்தைக் குறித்து ஏசாயா நேரிடையாக பேசுகிறதை இங்கு காண்கிறோம், ஜனங்களின் மீறுதல்களுக்காக, அவர் மரணமடைந்தாள. அவர்கள் தங்கள் சொந்த மேசியாவை உருவக் குத்தினார்கள். சகரியா 12:10. இஸ்ரவேலர் மேசியாவைப் புறக்கணீத்த்ப்படியால், அந்நாள் முதற்கொண்டு "பாழாக்கும் அருவருப்பானது" அவர்கள் மீது வந்தது அது ஒரு நாளில் முடிவடைய இருக்கிறது, அவர்கள் தங்கள் தேசிய மற்றும் தனிப்பட்ட பாவங்களை சந்திக்க நேரிடும்போது இது நிகழும். இதற்கு முன்னுள்ள ஏசாயா அதிகாரம், மற்றும் தானியேல் புஸ்தகத்தில் இவற்றை காண்கிறோம். தானியேல் 9:27ff, சகரியா 12:11-13:9. மூன்றில் ஒரு பங்கு இஸ்ரவேலர், மகா உபத்திரகாலத்தில் இரட்சிப்படைவர், 1% இஸ்ரவேலர்கள் இயேசுக்கிறிஸ்துவின் முதல் வருகையில் இரட்சிப்படைந்தனர். EBCWA book 121B ல், "அவர்கள் முற்பிதாவாகிய ஆபிரகாமின் விசுவாசத்தை திரும்பக் கண்டுகொள்ளுதல்." என்கிற தலைப்பில் உள்ள கருத்தை ஒப்பிட்டுப்பாருங்கள். - இதில் மகா உபத்திரவக்காலத்தில் இடம்பெறும் சம்பவங்கள் தொகுக்கப்பட்டுள்ளன.

53:9 துன்மார்க்கரோடே அவரது பிரேதக்குழியை நியமித்தார்கள், ஆனாலும் அவர் மரித்த போது ஐசுவரியவானோடே இருந்தார். அவர் கொடுமை செய்யவில்லை, அவர் வாயில் வஞ்சனை இருந்ததுமில்லை.

அவரது மரணம் இரு குற்றவாளிகள் நடுவே, நிகழ்ந்தது, இரு புரட்சியாளர்கள், அல்லது இன்றைய நடைமுறை வார்த்தைகளில் கூறுவோமானால் இரு தீவிரவாதிகள் மற்றும் கொலைக் குற்றவாளிகள் எனக்கூறலாம். அவர் தீவிரவாதிகளின் மத்தியில் மரணமடைந்தார், அவர் மரணமடைந்ததன் காரணம் எல்லா தீவிரவாதிகளின் பாவப்பிரச்சனைகளை நிவிர்த்தி செய்யும்படியாய் இருந்தது. இருப்பினும் அவரது அடக்கமானது ஒரு செல்வந்தரின் கல்லறையில் செய்யப்பட்டது. குற்றவாளிகள் மரித்தபின்னர் அவர்கள் சரீரமானது, குப்பைக் கூளங்கள் மிகுந்த இடத்தில் எரியப்பட்டு, நாய்கள் அவர்கள் பிரேதத்தை தின்று தீர்க்கும், அல்லது அவர்களது சரீரம் எரிக்கப்பட்டு அதன் சாம்பலானது ஆறுகளில் கரைத்துவிடப்படும். எப்பொழுதும் அப்படிப்பட்டவர்களை நாகரீக முறையில் அடக்கம் செய்ய மறுக்கப்படும். சில சமயங்களில் இதில் விதிவிலக்கு காணப்படும், தண்டணைக்குட்பட்டு மரித்தவர்கள் ஒருவேளை செல்வந்தர்களாய் இருப்பார்களேயானால், அவர்களது பெற்றோர் அல்லது அவர்களது சிநேகிதர், அவர்களை அடக்கம் செய்து கௌரவிப்பர், அரிமத்த ஊரானாகிய யோசேப்பு மிகவும் செல்வந்தனாய் இருந்தான், அவன் பொந்தியு பிலாத்துவிடத்தில் அனுமதி பெற்று, இயேசுவை கல்லறையில் நல்லடக்கம் செய்தான். இவ்வாறு சடலத்தைப்

பெற்றுக்கொள்வதற்கு குறிப்பிடத்தக்க பணத்தை இலஞ்சமாய் கொடுக்கப்படுவது வழக்கமாய் இருந்தது.

இன்றைய அளவிலும், தீவிரவாதிகள் திரளான மக்களால், வெறுக்கப்பட்டு ஒதுக்கப்படுவது போல், அந்நாட்களிலும் இருந்து வந்தது. தங்களது கோரிக்கைகள் நியாயங்களுக்காய் போராடும் தீவிரவாதிகள், இன்றைய அளவிலும், ஜனங்களை வழிவிலகச் செய்கிறவர்களாய் இருக்கின்றனர். இன்றைய அளவிலும், கர்த்தரின் நாட்களில் நிகழ்ந்தது போல நிகழ்ந்து வருகின்றன. இப்பாடத்தை ஆயத்தம் செய்யும் நாட்களில், இலண்டன் மாநகரில், வெடிகுண்டு வைத்ததினிமித்தம், சுமார் ஐம்பது அப்பாவி மக்கள் உயிரிழந்தனர். தங்களது சொந்த நீதி நியாயத்திற்காய், இப்படிப்பட்ட கொடுமைகளை இழைக்கிறவர்களாய் இருக்கின்றனர். இருந்தபோதிலும், நமது ஆண்டவராகிய இயேசுவை நோக்கிப்பார்ப்போம், இப்படிப்பட்ட இரு தீவிரவாதிகளின் மத்தில், அவர் சிலுவையில் தொங்கினார், அவ்விருவருக்கும் சாட்சி பகர்ந்ததன் மூலம், ஒருவனை இரட்சிப்பிற்குள் வழிநடத்தினார். நமது கடமையானது, "எரிகிற அக்கினித் தனலில் இருந்து கொள்ளிக்கட்டையை எடுத்துவிடுவது" ஆகும். நாம் இவ்வுலகில் இழந்து போனோரை இரட்சிப்பிற்குள் வழி நடத்துகிறவர்களாய் இருக்கிறோம். மீன்பிடிக்கும் குட்டையில் மீன்பிடிப்பவர்களாய் இருக்கிறோம், அக்குட்டையை சுத்திகரிக்கிறவர்களாய் அல்ல. மத்தேயு 4:19, மாற்கு 1:17, யூதா 20-25. நாம் தீவிரவாதிகளுக்கும் சத்தியத்தை கூற கடமைப் பட்டுள்ளோம், அவர்களது நீதிநியாயங்களுக்கு நாம் சாய்ந்து போய்விடக்கூடாது.

அரிமத்தா ஊரானாகிய யோசேப்புக்கு, பிலாத்து இயேவை அடக்கம் செய்ய அனுமதி அளித்தது, தெய்வச்செயலாகவும், பெரிதான அற்புதமாகவும் விளங்கி வருகிறது. மத்தேயு 27:44, 57-60, மாற்கு 15:27-28, 43-46. இயேசுவின் வாழ்வில் எவ்வித வஞ்சனையும் இருந்ததில்லை. எவ்வித கலகத்தையும் அவர் நடப்பிக்கவில்லை. பணம் மாற்றி வியாபாரம் செய்தவர்களை அவர்கள் சவுக்கினால் அடித்தார், அவர்களை தேவாலயத்திற்கு புறம்பாக்கினார். இவ்வாறு செய்தது நீதிக்குரிய செய்கையாய் இருந்தது, இதற்கான காரியங்களை அவர் சிலுவைக்குச் செல்லும் முன்னர் பிரசங்கித்து சரிசெய்தார். இது போன்று இயேசு செயல்பட்ட விதமானது இரு சந்தர்ப்பங்களில் நிகழ்ந்தது. முதன் முறையாக, யோவான் 2:13-25, லும், இரண்டாம் முறையாக தனது இறுதிகால ஊழியத்திலும் நிகழ்ந்தது. மத்தேயு 21:10-14, மாற்கு 11:15-19, and லூக்கா 19:45-46. அவர் பாவமறியாத பரிசுத்தராய் இருந்தார், இதினிமித்தம் அவர் ஒருவரே எல்லா மனுக்குலத்தின் பாவத்திற்கு பரிகாரம் உண்டாக்க கிருபாதார பலியாவதற்கு

தகுதியுள்ளவராய் இருந்தார். 2 கொரிந்தியர் 5:21, எபிரெயர் 4:14-16, 7:26, 1 பேதுரு 2:22, 1 யோவான் 3:4-6.

53:10 கர்த்தரோ அவரை நொறுக்கச் சித்தமாகி, அவரைப் பாடுகளுக்குட்படுத்தினார்; அவருடைய ஆத்துமா தன்னைக் குற்றநிவாரணபலியாக ஒப்புக்கொடுக்கும்போது, அவர் தமது சந்ததியைக் கண்டு, நீடித்த நாளாய் இருப்பார், கர்த்தருக்குச் சிந்தமானது அவர் கையினால் வாய்க்கும்.

சிலுவை என்பது தற்செயலாய் நிகழ்ந்த ஒன்றல்ல, இவ்வுலகின் பாவத்திற்காய் பிதாவாகிய தேவன் வடிவமைத்த பரிகாரமாய் இருக்கிறது. மத்தேயு 3:16-17, 17:5, 26:38-42, யோவான் 17:4-5, 20-26. பிதாவாகிய தேவன் அவரைப் "பாடுகளுக்குட்படுத்தினார்" காரணம் நாம் பாடுகள் மற்றும் வருத்தங்களின்றி இருக்கும்படியாக. ரோமர் 8:32-39, கலாத்தியர் 3:13-14, 1 யோவான் 4:7-19. அவரது ஆத்துமா உலகின் பாவத்திற்காய் தன்னைக்குற்ற நிவாரணபலியாய் ஒப்புக்கொடுக்கப்பட்டது, நாம் அவரது இரத்தத்தால் தெளிக்கப்பட்டவர்களாய், ஆக்கினைத்தீர்ப்புக்கு நீங்களாகும்படி இருக்கும்படியாக அவ்வாறு ஒப்புக்கொடுக்கப்பட்டது. எபேசியர் 5:2, எபிரெயர் 7:27, 9:14, 25-28, 10:5-14, 13:10-15, 1 பேதுரு 2:24-25. அவர் தமது ஜனத்தாரிலிருந்து "சங்கரிக்கப்பட்டார்", அவர் தமது ஆவிக்குரிய பிள்ளைகள் செழிப்படைவதைக்காண்கிறவராய் இருக்கிறார், அவர்கள் அவரை விசுவாசிக்கும் போது, அவரால் தனது சொந்தப்பிள்ளைகளாய் சேர்த்துக்கொள்ளப்படுகிறார்கள், தனது சொந்தக் குடும்பத்தில் வளர்க்கப்படுகிறவராய் இருக்கின்றனர். யோவான் 12:23-26, ரோமர் 8:15, 23, கலாத்தியர் 4:5, எபேசியர் 1:5, 1 பேதுரு 2:7-10. BTB study ஐ ஒப்பிட்டுப்பார்க்க: கிறிஸ்து: இயேசுக்கிறிஸ்துவின் கீழ்ப்படிதல்.

அவரது உயிர்த்தெழுதல் மூலம் தமது நாட்களை நீடிக்கப்பண்ணுவார். அவர் கொலை செய்யப்பட்டார், இருப்பினும் அவர் மரணத்தை தோற்கடித்தார். மத்தேயு 27:50-54, லூக்கா 23:46-48, யோவான் 19:30. அவரது உயிர்த்தெழுதலானது, அவர் மரணத்தை தோற்கடித்தார் என்பதற்கு ஆதாரமாய் இருக்கிறது. கீழ்க்காணும் தலைப்புகளை ஒப்பிட்டுப் பார்க்க: கிறிஸ்து: உயிர்த்தெழுந்து காட்சியளித்தல், உயிர்த்தெழுந்த சரீரம். பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசன ஆகமங்களில் உயிர்த்தெழுதல் குறித்து முன்னறிவிக்கப்பட்டு அவைகள் இயேசுக்கிறிஸ்துவில் நிறைவேறியுள்ளன. சங்கீதம் 16:9-11, 21:4, 72:17-19, 89:29, 36, தானியேல் 7:13-14. கர்த்தருக்குச் சித்தமானது அவரது கையினால் வாய்க்கும். இயேசுக்கிறிஸ்துவின்

கிரியைகள் பரலோகத்தின் மகிழ்ச்சியாய் இருக்கிறது. சங்கீதம் 85:9-13, 147:11, 149:4, ஏசாயா 55:11-13, 62:3-5, எசேக்கியேல் 33:11.

53:11 அவர் தமது ஆத்தும வருத்தத்தின் பலனைக் கண்டு திருப்தியாவார். என் தாசனாகிய நீதிபரர் தம்மைப்பற்றும் அறிவினால் அநேகரை நீதிமான்களாக்குவார். அவர்களுடைய அக்கிரமங்களைத் தாமே சுமந்து கொள்வார்..

தேவன் இயேசுக்கிறிஸ்துவின் ஆத்தும வருத்தத்தை பலனைக் கண்டு திருப்தியடைகிறவராய் இருக்கிறார். இது பாவ நிவாரண செயலைக் குறித்த உபதேசமாய் இருக்கிறது, இது பிதாவாகிய தேவன், இயேசுவின் கிரியையால் உண்டான நீதியை நமக்கு அறிவிக்க ஒரு திறந்த வாசலாய் இருக்கிறது. மற்றும் இது நம்மை மறுபடியும் பிறக்கவைத்து, புதுவாழ்க்கையை நமக்கு அவர் மூலம் அளிக்கிறதாய் இருக்கிறது. உபதேச பாடங்களை ஒப்பிட்டுப்பாருங்கள்: இரட்சிப்பு, நீதிக்குட்படுத்துதல் மற்றும் ஒப்புரவாக்குதல்.

பிரசவ வேதனை போன்று, புதிய வாழ்வின் பிறப்பானது இருக்கிறது, சிலுவை வேதனையானது மறக்கப்பட்டு, மறுபிறப்பின் போது மகிழ்ச்சியுண்டாகிறதாய் இருக்கிறது. நாம் அப்படிப்பட்ட மகிழ்ச்சியை உண்டாக்குகிறவர்களாய் இருக்கிறோம். நாம் மறுபடியும் பிறந்து (புதிய வாழ்க்கைக்காக ஆவிக்குரிய பிறப்படைந்து) இயேசுவின் விசுவாசிகளாய் / அவரைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கிறோம், ஆரம்ப காலத்தில், "பரிசுத்தவான்கள்" (அல்லது பிரித்தெடுக்கப்பட்டவர்கள்) என அழைக்கப்பட்டனர். யோவான் 12:23-32, 16:20-24, கலாத்தியர் 4:19-20, எபிரெயர் 12:2, வெளிப்படுத்தல் 5:9-10, 7:9-17. மகிமையான ஆயிர வருட அரசாட்சியும், அதைத் தொடரும் நித்திய ஜீவனும் நம்முடையவைகளாய் இருக்கின்றன, காரணம் தேவனது இரட்சிப்பின் அளிக்கப்படும் வரங்களானது இதை ருசுப்படுத்துகிறதாய் இருக்கிறது. நமது சார்பாக கர்த்தர் தமது கிரியைகளைக் கொண்டு நம்மை நீதிக்குட்படுத்துகிறவராய் இருக்கிறார். அவரது அறிவானது நமக்கு ஆசீர்வாதங்களை திறந்து கொடுத்து, தீமையின் மீது ஜெயம் கொள்ளுமாறு செய்கிறது. 1 கொரிந்தியர் 6:11, தீத்து 3:5-7, 1 யோவான் 2:1-2, 2 யோவான் 1-8.

53:12. அவர் தமது ஆத்துமாவை மரணத்திலூற்றி, அக்கிரமக்காரரில் ஒருவராக எண்ணப்பட்டு, அநேகருடைய பாவத்தைத் தாமே சுமந்து அக்கிரமக்காரருக்காக வேண்டிக்கொண்டதினிமித்தம் அநேகரை அவருக்குப்

பங்காகக் கொடுப்பேன், பலவான்களை அவர் தமக்குக் கொள்ளையாகப் பங்கிட்டுக் கொள்வார்.

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து, தனது வாழ்வில், ஆழுகை செய்தவர்களாலும், இராஜாக்களாலும் அவமதிப்பு செய்யப்பட்டார், ஆனால் அவரது மரணத்தில் அவர் வெற்றியடைந்து, பூமியிலுள்ள எல்லா இராஜாக்களாலும் மேன்மையாக அறியப்பட்டார். அவர்கள் அவரை அவமதிப்பு செய்தபோதும், மனுவர்க்கத்தில் உள்ள எல்லா ஹீரோக்களுக்கும் மேலாக அவர் உன்னத ஸ்தானத்திற்கு உயர்த்தப்பட்டார். அவர் மனுஷீகத்தில் இராஜாக்களுக்கெல்லாம் இராஜாகவாகவும், கர்த்தாதி கர்த்தராகவும் (தேவதூதருக்கெல்லாம்) உயர்த்தப்பட்டார். சங்கீதம் 2:8, தானியேல் 2:44-47, மத்தேயு 12:28-29, பிலிப்பியர் 2:8-11, கொலோசெயர் 1:13-14, 2:15, எபிரெயர் 2:14-15.

கர்த்தர் தன்னை முற்றிலுமாய் பலிபீடத்தில், நமது பாவங்களுக்காய் அற்பணித்தார், மற்றும் நமது இரட்சிப்பிற்காக தன்னைத்தான் முழுவதுமாய் ஊற்றிவிட்டார். . சங்கீதம் 22:14-15, பிலிப்பியர் 2:17-18, 2 தீமோத்தேயு 4:6-8, எபிரெயர் 12:2. அவரது சிலுவைப் பாடுகளின்போது அவர் தீமைசெய்யும் மனிதரில் ஒருவராய் எண்ணப்பட்டார், அவர் உயிர்த்தெழுந்த போதோ, மகிமையாய் உயர்த்தப்பட்டார். அவரது கிரியைகள் நம்மை பரலோகம்வரை உயர்த்திற்று. நமது வாழ்வில் ஏற்படும் உய்ரவு தாழ்வுகளில் நாம் முழுமையான நம்பிக்கையை உடையவர்களாய் இருக்கிறோம். இரட்சிப்பின் மூலம் அவர் நமக்களித்துள்ள காரியத்தால் இதை உறுதி செய்கிறவர்களாய் இருக்கிறோம். ரோமர் 8:31-39, எபேசியர் 2:4-10.

தலைமைத்துவத்தில் செயல்படுத்தும் நடைமுறைகள்:

1. வியப்பூட்டக்கூடிய விசுவாசம்: இயேசுக்கிறிஸ்துவின் சிலுவை, உயிர்த்தெழுல், பரலோகிற்கு எழுந்தருளி அங்கு வீற்றிருத்தல், போன்றவற்றை அவை நிகழுமுன்னர் சுமார் 730 ஆண்டுகளுக்கு முன்னதாகவே துள்ளியமாய் கூறப்பட்டிருப்பது நம்மை வியப்பில் ஆழ்த்துகிற காரியமாய் இருக்கிறது. நாம் வியக்கத்தக்க தேவனை உடையவர்களாய் இருக்கிறோம், அவர் சரித்திரத்தை தனது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருக்கிறவர். இப்படிப்பட்ட அறிவு நமது வாழ்வை ஒவ்வொரு நாளும் உற்சாகப்படுத்துவதாய் இருப்பதாக. இப்படிப்பட்ட நிகழ்வுகளை சரியாய் முன்கூட்டியே கூறுகிறவரின் கரத்தில் சாய்ந்து இளைப்பாறுகிறவர்களாய் இருக்கிறோம். இப்படிப்பட்ட விசுவாசத்தைப் பெற்றவர்களாய் நாம் இருக்கிறோமா?

இப்படிப்பட்ட விசுவாசத்தையே தலைவர்களாகிய நாம் பெற்றிருக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் உற்சாகமடையவும் தேவனது மந்தையை இளைப்பாறுதலுக்கு வழிநடத்தவும் இப்படிப்பட்ட விசுவாசம் நமக்கு அவசியமாய் இருக்கிறது. நாம் நமது ஆத்துமாவிற்கு இளைப்பாறுதல் கிடைக்கவில்லையானால், நாம் மற்றவர்களை இளைப்பாறுதலுக்கு வழிநடத்த இயலாதவர்களாய் இருப்போம்.

2. **ஆச்சரியப்படக்கூடிய நடத்தை**: கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பூரணமாய் மற்றும் முழுவதுமாய் நமது பாவத்திற்காய் செய்து நிறைவேற்றியுள்ள அவரது இரட்சிப்பின் கிரியைகளானது எவ்வளவு ஆச்சரியமானதாய் இருக்கிறது? கர்த்தர்தாமே எல்லாவற்றையும் நமக்காய் செய்து முடித்திருக்கிறார், நாம் அதற்கு மாறாக துதிபலியை ஏறெடுக்க கடமைப் பட்டுள்ளோம். நமது இரட்சிப்பானது மிகவும் ஆச்சரியத்திற்குரியதாயும், மிகவும் பாராட்டுவதற்குரியதாயும், எவ்வளவு துதித்தாலும் அதற்கு ஈடுஇணையற்றதாயும் இருக்கிறது. இதை ஒவ்வொரு நாளும் அனுபவத்திற்கு கொண்டுவருவோமா? இப்படிப்பட்ட செய்தியை ஒவ்வொரு நாளும் அறிவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். .

3. **தாழ்மை**: நாம் கர்த்தரது பாடுகளை பிரதிபலிக்கும்போது, கர்த்தரின் ஆரம்பநாட்களை சீர்தூக்கிப் பார்க்கவேண்டிய அவசியம் ஏற்படுகிறதாய் இருக்கிறது. நமது கற்பனைக்கு அப்பாற்பட்ட நிலையில், அவரது பாடுகள் அமைந்துள்ளது. அவர் அவமதிக்கப்பட்டும் புறக்கணிக்கப்பட்டவருமாய் இருந்தார். அவர் தூஷிக்கப்பட்டும், நிந்தனைக்குட்பட்டவருமாய் இருந்தார். நாம் அவரது சேவகராய் இருக்கிறோம், நாம் ஆச்சரியப்படாதிருக்க வேண்டும், காரணம் இப்படிப்பட்ட காரியங்கள் நமக்கும் சம்பவிக்கலாம். நாம் கர்த்தருக்கு முன்பாக தாழ்மையுடன் நடக்க கடமைப் பட்டவர்களாய் இருக்கிறோம். கர்த்தர் துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்தவருமாய் இருந்தார்.

மேற்கத்திய நாடுகளில் இன்றைய அளவில் செழிப்படையும் சுவிஷேசத்தைப் பிரசங்கித்துக் கொண்டு, விலை மதிப்புள்ள வாகனங்களை ஓட்டிக்கொண்டு இருக்கின்றனர், இது சத்தியத்தைப் பரிகசிப்பதாய் இருக்கிறது. இது சாத்தானின் குகையிலிருந்து கடந்து வருகிற பொய்யாய் இருக்கிறது. நாம் கர்த்தரின் பட்சத்தில் நிற்கத் தலைப்படுவோமாக, அவரது பாடுகளிலும், நிந்தைகளிலும் பங்கெடுப்போமாக. இவ்வுலகின் காரியங்களுக்கு இடமளியாது, அவரது பணி செய்வோமாக. கர்த்தரின் சேவகர்களாக நாம் யாரைப் பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கிறோம்? நமது தலைமைத்துவத்தின் தராதரம் என்ன? ஒரு தலைவரை

அவரது விலையேறப்பெற்ற வாகத்தை வைத்து மதிப்பிடுகிறவர்களாய் இருக்கிறோமா அல்லது அவரது பாடுகள் துக்கங்களை வைத்து மதிப்பிடுகிறவர்களாய் இருக்கிறோமா? அவசியப்பட்டால் பாடுகளையும் துக்கங்களையும் அனுபவிக்க ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் அவசியம்.

4. வெட்கப்படுவதில்லை: ஊழியத்தினால் ஏற்படும் கண்ணீர் குறித்து வெட்கப்படாதிருங்கள். கர்த்தருக்கு முன்பாக கண்ணீர் சிந்துவதற்கு ஏறாளமான காரணங்கள் இருக்கக்கூடும். இழந்து போகப்பட்டோரின் முடிவு எத்தகையது என்பது தெளிவாக நாம் காணவேண்டியவர்களாய் இருக்கிறோம். நரக அக்கினியின் அகோரத்தை நாம் உணரவேண்டியவர்களாய் இருக்கிறோம், அதன் பின்னர் நம்மை நிந்தித்தவர்கள், பரிகசித்தவர்கள் போன்றோரைப் பாருங்கள், அது எல்லாவித வெறுப்பையும், கோபதாபங்களையும் நம்மைவிட்டு அகற்றி நம்மை தர்மசங்கடத்திற்குள் வழிநடத்துவதாய் இருக்கும். இழந்து போனோரை கர்த்தர் காண்பது போன்று நாம் காண்போமென்றால், அவர்களது இறுதி நிலையை அறிந்து கொள்வதோடு மட்டுமல்லாது அவர் அவர்களது முடிவு நிலைக் குறித்து எவ்வகையான துக்கமுடையவராய் இருக்கிறார் என்பதையும் அறிந்து கொள்ள இயலும். மட்டுமல்லாது தீமையான மனிதரிடம் எவ்வாறு நடந்து கொள்வது என்பது குறித்தும் அறிந்துகொள்ள நமக்கு மிகவும் உதவியாய் இருக்கும். இழந்து போனோரைக் குறித்தும் அவர்களது இறுதி நிலைக் குறித்தும் நாம் அக்கரையும் கரிசனையும் உள்ளவர்களாய் இருக்கிறோமா?

5. சத்தியத்திற்காய் தைரியமாய் இருத்தல்: இயேசுவைக் குறித்த சத்தியத்தைக் கூறுவது நமது பணியாய் இருக்கிறது, பல நூற்றாண்டுகளாய் மனிதர் அவரைக் குறித்துத் தவறாக வியாக்கியானித்து வருகின்றனர். நமது பணீயானது, சத்தியத்தை யதார்த்தமாய் அறிவிப்பது நமது தேவனாகிய கர்த்தர் நமக்களித்த கடமையாய் இருக்கிறது. சிலுவை என்பது ஏதோ தற்காலிகமாய் நடந்த ஒன்று எனக்கூறுவதற்கில்லை. மனிதன் தனக்காக எதையும் செய்துகொள்ள இயலாத நிலையில், இது ஒரு நிர்ணயிக்கப்பட்ட செயலாய் விளங்கிவருகிறது. இதுவே நமது வாழ்வின் மையக்கருத்தாய் இருக்க வேண்டியதாய் இருக்கிறது.

6. ஜெபத்தில் வல்லமை: கர்த்தர் நமக்காய் சிலுவைக்குச் சென்றார். பூலோகத்தாரின் பாவங்ளுக்காக இயேசு பாடுகளை அனுபவித்தை நாம் நினைவு கூறுதல் வேண்டும். இது ரோமர்களால் அல்ல, யூதர்களால் அல்ல, அவரைச் சிலுவையில் அறைந்த எந்த குழுவினராலும் அல்ல. நம் அனைவரின்

பாவங்களுக்காக, தன்னைத்தானே பழுதற்ற பாவப்பரிகாரமாய் சிலுவையில் மரிக்கத் தன்னை ஒப்புக்கொடுக்க துணிந்தார் நமதாண்டவர். அவர் தன்னைத்தானே சிலுவைக்கு அற்பணித்து, தனது இரத்தத்தை நமக்காய் சிந்தினார், அத்தியாப்பலியினால் நாம் அனைவரும் மீட்கப்பட்டவர்களாய் இருக்கிறோம். இதினிமித்தம் கிருபையின் சிங்காசனத்திற்கு முன்பாக தைரியமாய் நெருங்கி, இலவசமாய் அளிக்கப்படும் இரக்கத்தைப் பெற்றவர்களாய், நாம் வழி நடக்க அழைக்கப்பட்ட பரிசுத்தப்பாதையில் தொடர்ந்து முன்னேறுவோமாக.

7. குணமாகுதலுக்காக ஜெபிக்கும்படியான ஆயத்தம் அல்லது நிலைத்திருப்பதற்கு அவசியமான பெலனுக்காக ஜெபித்தல்: குணமாகுதல் என்பதன் பாடம், சில இடங்களில் முறண்பாடாய் இருக்கிறது. குணமாகுதலின் அற்புதங்கள் பல நூற்றாண்டுகளாய் நிகழ்ந்து வருகின்ற ஒன்றாய் இருக்கிறது, அது தொடர்ந்து நிகழ்கிறதாய் இருக்கிறது, கர்த்தர் இவ்வற்புதங்களின் பிண்ணனியில் இருக்கிறவராய் இருக்கிறார். எப்பொழுதும் நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவெனில், சில புறஜாதியார்கள், இயல்பாகவே வியாதிகளில் இருந்து குணமாகிறவர்களாய் இருக்கின்றனர், இவ்வகையான குணமாகுதலை அவர்கள் "அதிர்ஷ்டம்" என்கின்றனர் அல்லது அவர்களது "தேவர்களை" புகழ்ந்து நன்றி செலுத்துகிறவர்களாய் இருக்கின்றனர், இப்படிப்பட்ட குணமாகுதலும் உண்மையானவையாக இருக்கின்றன.

எல்லாவித காரணாகாரியங்களை குணமாகுதல் குறித்து நாம் அளித்த போதும், கர்த்தர் ஜெபத்தின் மூலம் கண்டிப்பாய் குணமாக்குகிறவராய் இருக்கிறார், அவர் செயல்படும்போது, தனது திட்டத்திற்கு இசைய செயல்படுகிறவராய் இருக்கிறார். அவரது திட்டத்தின்படியே நாம் கீழ்ப்படிய வேண்டியவர்களாய் இருக்கிறோம், அவர் நம்மை இருள் சூழ்ந்த நிலையில் இருந்து வெளிச்சத்திற்கு அழைக்கிறவராய் இருக்கிறார், சில நேரங்களில் அவர் நேரடியாக வெளிச்சத்தைக் கொண்டுவருகிறவராய் இருக்கிறார். குறைந்த பட்சம் ஒரு முறையாவது நமது வாழ்வில், வியாதியிலிருந்து குணமாகாது இருக்கிறவர்களாய் இருக்கிறோம், ஜெபம் எவ்வளவு வலிமையாய் இருந்தும் பயனில்லாது போகிறது, இப்படிப்பட்ட நேரம் நாம் மரணத்தைத் தழுவக்கூடியதாய் இருக்கிறது.

யாக்கோபைப் போன்று நாம் மரிக்க, கர்த்தரின் கரத்தில் மரிக்க நம்மை சவாலாக அற்பணிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், அல்லது பேதுருவைப்போன்று பதிலலிக்கப்பட்ட ஜெபத்தினால் வாழ்வை களிகூர்ந்து வாழ அற்பணிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அப்போஸ்தலர் 12:2, 5, 16-17, 24. யாக்கோபோ

அல்லது பேதுருவோ எவ்வித பாவமும் செய்யவில்லை, இருப்பினும் அவர்கள் படுகொலை செய்யப்பட்டு மரித்தனர். இப்படிப்பட்ட சூழலில் கர்த்தர் நம்மை பாடுகளுக்கு உட்படுத்தி அவைகளை அனுபவிக்க அனுமதிக்கிறவராய் இருக்கிறார், இப்படிப்பட்ட பாடுகளை அனுபவிக்கும் போது அவர் அதிகமான கிருபைகளை அளித்து நமக்கு துணை செய்கிறவராய் இருக்கிறார். நாம் நெருக்கப்படுகிற காலங்களில், முன்மாதிரிகளாய் அமைந்து துதிக்கிறவர்களாய் இருந்து தேவனது மந்தையை மேய்க்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். நெருக்கப்படுகிற காலங்களில் நாம் கர்த்தரை துதிக்கிறவர்களாய் இருக்க இயலவில்லையானால், நமது கர்த்தரின் மீது நாம் கொண்டிருக்கும் விசுவாசத்தில் பெலவீனமாய் இருக்கிறோம் என்பதை அது சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது.

2. பிலிப்பியர் 2:5-8 - தலைமைத்துவத்தில் இருக்க வேண்டிய உண்மையான தாழ்மை:

பிரதிபலிப்புகள்:

2:5 "கிறிஸ்துவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது."

"கிறிஸ்துவின் சிந்தை" என பவுல் குறிப்பிடுவதை நாம் பெற்றவர்களாய் இருத்தல் வேண்டும். [1 கொரிந்தியர் 2:16]. நமது மனதில் மறுரூப மடைந்தவர்களாய் விளங்குதல் வேண்டும். [ரோமர் 12:2]. தேவனது வார்த்தையைக் குறித்த அறிவானது, நம்மைக் கிறிஸ்துவுடன் நாம் இருப்பதை உறுதி செய்து, நமது எண்ணங்களை பரிசீலனை செய்கிறதாய் இருக்கிறது. தேவனது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, முறையாய் அவரது வழியில் நடக்கும்போது, நீங்கள் ஒரு தேவ ஊழியராகவும் ஒரு நல்ல தலைவராகவும் செயல்பட்டுவருகிறீர்கள் என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. நாம் முன்னணியில் இராத பட்சத்தில், நம்மால் வழி நடத்த இயலாதவர்களாய் இருக்கிறோம்.

ஏறாளமான சபைகள் நேர்மறையான மற்றும் எதிர்மறையான காரியங்களை நேரடியாய் எதிர்கொள்ளும் மனப்பக்குவத்தைப் பெற உரிய பயிற்சிகளை அளித்து வருகின்றன. இப்படிப்பட்ட பயிற்சியை வேதாகமத்திலிருந்து கொடுக்க வேண்டியது நமக்கு சவாலாக அமைந்துள்ளது. விசுவாசிகளாகிய நமக்கு, ஆவியில் தாழ்வு மனப்பான்மை இருக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது,

எப்பொழுதும் மற்றவர்கள் உயர்வானவர்கள் சிறப்பானவர்கள் என்ற சிந்தை நம்மில் இருப்பது வரவேற்கக் கூடிய ஒன்றாய் இருக்கிறது. ஒருவேளை மற்றவர்கள் இப்படிப்பட்ட சிந்தை இல்லாது இருக்கலாம், இருப்பினும், அவர்கள் இருக்கிறபிரகாரம் அவர்களைக் குறித்த எண்ணங்களை உடையவர்களாய் இருப்பது அவசியமாய் இருக்கிறது. இது மாயமான தாழ்மையாகாது, மற்றவர்களை உங்களைக் காட்டிலும், மேன்மையானவர்களாய் எண்ணி அவர்களை உயர்த்துவது, நமது யதார்த்தமான ஆவலாய் இருத்தல் வேண்டும். உங்களைவிட அவர்கள் அதிகமான ஆசீர்வாதங்களுடன் இருக்குமாறு அவர்களை மனதார ஆசீர்வதியுங்கள். இதுவே தலைமைத்துவத்திற்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது, மற்றவர்களை தேவன் எவ்வாறு காண்கிறாரோ அதைப்போன்றே நாமும் அவர்களைக் காணவேண்டியவர்களாய் இருக்கிறோம். மற்றவர்கள் எப்பொழுதுமே நமது ஆசீர்வாதங்களைவிட ஒரு படி உயர்ந்தவர்களாய் இருத்தல் வேண்டும் என்ற எண்ணமுடையவர்களாய் இருத்தல் வேண்டும்.

இதன் பொருள் எல்லோரும் தங்கள் கால்களை துடைக்கும் டோர் மேட்டாக [door mat] இருக்க வேண்டும் என்பதல்ல, மற்றவர்களது நித்திய நலனுக்காக நீங்கள் அவர்களைக் கடிந்து கொண்டு புத்தி சொல்லி நடத்தலாம். நீங்கள் அவர்களுக்கு போதிக்க, உதவி செய்ய, அவர்களுக்காய் ஜெபிக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். உங்களது செயல்பாடுகள் ஒவ்வொன்றிலும் அன்பு விளங்குகிறதாய் இருத்தல் வேண்டும். அவர்கள் உங்களுக்கு செவி கொடுப்பார்கள் என்றால் அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள், அவர்கள் உங்களுக்கு செவிசாய்க்காமல் இருப்பார்களேயானால், அவர்களுக்காய் ஜெபியுங்கள், எப்படி அவர்கள் உங்களிடம் நடந்து கொண்டாலும், உங்களது அன்பை அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள். நீங்கள் கிறிஸ்துவின் ஸ்தானாபதியாய் இருப்பதனிமித்தம், அவர்கள் உங்களை நிந்திப்பார்கள் என்றால், அவர்கள் இயேசுவை நிந்திக்கிறவர்களாய் இருக்கிறார்கள், அப்படிப்பட்ட நிந்தைகளை ஒருபுறம் வைத்துவிட்டு, அவர்களுக்காக, அவர்களது ஆசீர்வாதங்களுக்காய் ஜெபிக்க தலைப்படுங்கள். கிறிஸ்துவைப் போன்ற நற்குணங்களை வெளிப்படுத்துவது கிறிஸ்தவர்களின் குணாதிசயமாய் இருத்தல் வேண்டும். யாக்கோபு இவ்வாறு கூறுகிறார், "வசனத்தைக் கேட்கிறவர்களாய் மட்டும் இராது, அதன்படி செய்கிறவர்களாயும் இருங்கள்." யாக்கோபு 1:22ff.

2:6 அவர் தேவனுக்கு சமமாய் இருப்பதைக் கொள்ளையாடின பொருளாய் எண்ணாமல்:

"இயேசுக்கிறிஸ்து நேற்றும் இன்றும் என்றும் மாறாதவராய் இருக்கிறார்."

[எபிரெயர் 13:8, வெளிப்படுத்தல் 1:8]. இயேசுக்கிறிஸ்து தேவனது சாயலாய் இருப்பதை, சாத்தான் அறிய விடாது மனுதரின் கண்களை குருடாக்கியிருக்கிறான். [2 கொரிந்தியர் 4:4]. ஆதிமுதற்கொண்டு கர்த்தர் தேவனாய் இருக்கிறார். அவர் தேவனாகவே நிலைத்து இருக்கிறார். இங்கு நித்தியரான கர்த்தருக்கும் மற்றும் சிருஷ்டிக்கப்பட்ட சாத்தானுக்கும் உள்ள வித்தியாசத்தைப் பவுல் வேறுபடுத்திக் காட்டுகிறார். பரலோகிலிருந்து இப்பூமிக்கு கர்த்தர் வந்தபோது, அவரது தெய்வத்துவத்தில் எதையும் இழக்கவில்லை அவரது மகிமையோ அல்லது வல்லமையோ எதுவும் குறையவில்லை, ஆனால் பிதாவின் திட்டத்திற்கு இசைய எல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்தார். நாம் தேவன் அல்லர், ஆகையால் நாம் தெய்வத்துவத்தின் வல்லமைக்கு நிகராய் செயல்படுத்த இயலாதவராய் இருக்கிறோம். பரிசுத்த ஆவியானவராகிய தேவன் நமக்குள் வாசம் பண்ணுவதன் மூலம், நமது வாழ்வில் தேவனது திட்டத்தின்படி இச்சையடக்கத்தை செயல்படுத்த அழைக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம். இயேசு பயன்படுத்தியது போன்று, இதே வல்லமையை நாமும் பயன்படுத்த இயலும், இவ்வல்லமையானது பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணுவதால் நமக்கு கிடைக்கிறதாய் இருக்கிறது. ஆவியானவரின் வல்லமையால், இயேசுவின் மனுஷீகமானது நிரப்பப்பட்டதாய் இருந்தது, நாம் பெற்று இருக்கும் ஆவியானவரின் வல்லமையானது அவருக்கு ஆதராவாயும், பெலப்படுத்துகிறதாயும் இருந்தது.

2:7 தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து மனுஷ சாயலானார்.

இயேசு நமக்காக அமைத்திருக்கும் முன்மாதிரி மற்றும் தியாக பலியினால், ரோமர் 12:1-2 ல் கூறப்பட்டுள்ள அறிவுரைகளை உறுதி செய்து கொள்ள மனதுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். நமது வாழ்வில் இயேசுவைப் பின்பற்றும் நாம் கர்த்தரை பிரதிபலிக்கிறவர்களாய், நமக்குள் வாசம் பண்ணும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பயன்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். இங்கு நாம், கன்னிகை பிறப்பின் மூலம், கடவுள் மனித உருவில் தோன்றினதைக் காண்கிறவர்களாய் இருக்கிறோம். சிருஷ்டிக்கர்த்தர் ஒரு சிருஷ்டியானார். தேவன் இயேசுவின் ஆளத்துவத்தில் மாட்டுத்தொழுவத்தில் கிடத்தப்பட்டார். இப்படிப்பட்ட சிந்தையானது அநேக சபைப்பிதாக்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. நம்மை இரட்சிப்பதற்காய் தேவன் மிகவும் அதிசயத்தக்க விதமாய் மாட்டுத்தொழுவத்திற்கு செல்ல நேர்ந்தது. தேவனே இப்படிப்பட்ட சிறுமைக்கு சென்றிருப்பாரானால், நீங்கள் எந்த அளவுக்கு

தேவனுக்காய் செல்ல மனதுள்ளவர்களாய் இருக்கிறீர்கள் மற்றும் உங்கள் சகோதரருக்காக, மற்றும் இழந்து போனோருக்காக செல்லவேண்டியவர்களாய் இருக்கிறீர்கள்?

கன்னிகை பிறப்பானது மாபெரும் அற்புதமாய் இருக்கிறது, அதேசமயம் சிலுவை என்பது எல்லாவற்றிலும் மேலான அற்புதமாய் இருக்கிறது. சிலுவையில் தொங்கிய ஒரு மனிதன் என்று சொல்வதற்கில்லை, தனித்தன்மையுடன் விளங்கிய இயேசு, அவரை முழுமையாய் புரிந்து கொள்ள இயலாத தேவனும் மனிதனுமாய் விளங்கினார். அவர் ஆறு முறை நியாயம் விசாரிக்கப்பட்டார், வாரினால் அடிக்கப்பட்டது எல்லா கொடுமைகளிலும், மிகமோசமான ஒன்றாய் இருந்தது, நமது பாவம் அவர் மேல் சொரியப்பட்டது. 2 கொரி. 5:21. நமது பாவங்களுக்குரிய பரிகாரமாய் தீர்ந்தார், இதினிமித்தம் தேவனுக்கும் மனிதருக்கும் இடையே இருந்த பாவத்தடைச்சுவரானது தகர்க்கப்பட்டது. அவர் தடைச்சுவரை அகற்றிவிட்டபடியால், தேவனுக்கும் நமக்கும் இடையே எவ்வித தடையும் இன்றி செயல்படமுடிகிறது. இது நமது சுவிஷேச நற்செய்தியாய் இருக்கிறது.

மனிதன் பின்பற்றும் மார்க்கமானது, வற்புறுத்திக்கூறுதலாயிருக்கிறது, அகந்தையாய் இருக்கிறது, விளம்பரமாய் இருக்கிறது, பெருமைக்கடுத்ததாய் இருக்கிறது மற்றும் அரசியலாய் இருக்கிறது. மகிமைக்கான தேவனது மார்க்கமானது முற்றிலும் வித்தியாசமான ஒன்றாய் இருக்கிறது. கிறிஸ்தவ ஸ்தாபனங்கள், விளம்பரங்கள், அரசியலை சார்ந்து இருக்கும்போது, சத்தியமார்க்கத்தைவிட்டு வழுவி போகிறதாய் இருக்கிறது. உங்கள் சபையானது வளர்ச்சியடைய வேண்டுமானால், வசனம் பிரதி வசனமாய் போதனை செய்ய ஆரம்பியுங்கள். செய்தியுடன் வெளிப்பட்ட செய்தியாளராகிய யோவான் ஸ்நானகனைப்போன்று, செயல்படுங்கள். பரிசுத்த ஆவியானவரது கட்டுப்பாட்டின் கீழ் செய்தியை அளியுங்கள். கர்த்தர்தாமே ஜனங்களை உங்களுக்காய் கூட்டிச் சேர்க்கிறவராய் இருக்கிறார். செம்மறி ஆடுகள் ஈர்க்கப்பட்டு மந்தையில் சேர்க்கப்படும், வெள்ளாடுகளோ அதைரியமடைந்து மந்தையை விட்டு ஓடிப்போம். விசுவாசிகளை போஷிப்பதில் கவனம் செலுத்துங்கள், அவிசுவாசிகளுக்கு சுவிஷேசத்தை நற்செய்தியாய் அறிவியுங்கள், அவற்றைக் கர்த்தரின் வழியில் செய்யுங்கள்.

2:8 அவர் மனுஷரூபமாய் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி தம்மைத்தாமே தாழ்த்தினார்.

இயேசுக்கிறிஸ்து முன்மாதிரியாய் இருக்கிறபடியால், ஒரு விசுவாசி கர்த்தரின் முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டுமானால், மற்றவர்களை முதன்மையான இடத்தில் வைக்க வேண்டும், அவர்களுடன் நட்புறவுடன் சேர்ந்து வாழ்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். தேவனது நோக்கமெல்லாம், தமது ஜனங்கள், தெய்வீகத்தன்மையுள்ள போதகர்களின் தலைமைத்துவத்தின் கீழ், தங்களது வாழ்க்கைப் பிரச்சனைகளில் இருந்து குணமாக்கப்பட்டு, கிருபையில் இணைந்து வளரவேண்டும் என்பதாய் இருக்கிறது. நமது பணியானது இப்படிப்பட்ட ஆவியுடன், முன்மாதிரியை அமைப்பதாய் இருக்கிறது. ஸ்தல ஐக்கியத்தில் கூடிவரும் அனைவருக்கும் அது பாதுகாப்பானதாயும், ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளும் ஸ்தலமாயும் இருக்க உறுதி செய்தல் வேண்டும். இதினிமித்தம் அவர்கள் கிறிஸ்துவைப் போன்று வளர உதவி செய்வதாய் இருக்கும்.

இயேசு நமது பாவங்களுக்கு மாத்திரமல்லாது, சர்வ உலகத்தின் பாவங்களை நிவிர்த்தி செய்யும் கிருபாதார பலியாய் இருக்கிறார். [1 யோவான் 2:2] தேவனுக்கும் மனிதனுக்குமிடையே பெரிதான இடைவெளி இருந்துவந்தது, அதை இயேசுக்கிறிஸ்துவின் முழுமையான கிரியையினால், சிலுவை மூலம் பாலம் அமைத்து சரிசெய்தார். பண்டைய உலகில், விடுதலைக் கிரயமாய் ஒரு அடிமையானவன், ஒரு பெரிய தொகையைக் கொடுத்து விடுதலை பெறுவது வழக்கமாய் இருந்து வந்தது எவ்வித உரிமையும் இல்லாத அடிமையானவன், புறஜாதிய ஆலயங்கள் தனது பணத்தை சேர்த்து வைப்பான், பின்னர் அக்கடவுள் அவனை விடுதலை செய்யும், அவ்வடிமையின் பழைய எஜமான் ஆலயத்தில் உள்ள பணத்தைச் சேகரித்து கொண்டு அவனை விடுதலை செய்வான், அவனது விடுதலைப் பத்திரத்திரத்தில் அந்த புறஜாதிய ஆலயப் பூசாரி தனது கையொப்பம் இட்டு அவனிடத்தில் கொடுப்பான். இப்படிப்பட்ட செய்கையானது மிக முக்கியமான ஒன்றாய் இருக்கிறது (இது தியாகபலியான இயேசுக்கிறிஸ்துவின் பிராயசித்தப்பலியைக் காட்டுகிறதாய் இருக்கிறது) இதை பண்டைய கால ஆதி சபையில் நன்கு புரிந்து வைத்திருந்தனர். பாவ வல்லமையிலிருந்து மற்றும் பாவத்திற்கான அபராதம் [கிரயம்] செலுத்தாத நிலையில் ஒரு மனிதனும் தன்னைத்தானே விடுவித்து கொள்ளுதல் என்பது இயலாத காரியமாய் இருந்தது, இயேசுக்கிறிஸ்துவின் சிலுவை மூலம் எல்லோரும் விடுதலையாக்கப்பட்டிருக்கின்றனர்.

தேவனது பிரமாணமானது முழுமை பெற்றதாய் இருக்கிறது, அதை மீறுபவர்கள் வரையறையற்ற கிரயத்தைச் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றனர்,

அப்படிப்பட்ட கிரயத்தை ஒரு மனிதனாலும் செலுத்த இயலாததாய் இருக்கிறது. பாவமற்ற பரிசுத்தராய் வாழ்ந்த இயேசுவால் மட்டுமே இப்படிப்பட்ட கிரயத்தை செலுத்த இயன்றது. சிலுவையில் செய்து முடிக்கப்பட்ட கிரியைகளாகிய, மீட்பு, நிவிர்த்தி செய்யும் கிருபாதார பலி, பாவப் பரிகாரம் மற்றும் இதைப்போன்ற மற்ற உபதேசங்களையும் அதிகமாய் அறிய அறிய கிறிஸ்துவையும் அவரது தியாக செயலையும் பாராட்டாமல் இருக்க இயலாது.

அவர் தனக்குத்தானே எவ்வித நற்கீர்த்தியையும் உண்டாக்கிக்கொள்ளவில்லை. இதுவே கர்த்தர் உங்களுக்கு ஆயத்தம் செய்துள்ள வழியாய் இருக்கிறது, அது தாழ்மையின் வழியாய் இருக்கிறது, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை உயர்த்திக் காட்டும் வழியாய் இருக்கிறது, உங்கள் சொந்த கிரியைகளை உயர்த்திக்காட்டாமல் இருப்பது மட்டுமே மெய்யான தாழ்மையும், நித்திய மகிமைக்கு வழிநடத்துவதாயும் இருக்கிறது. நீங்கள் ஒரு காரியத்தை உங்கள் சொந்த பெலத்தால் செய்து முடிக்கமுடியும் என எண்ணுவீர்களானால், அக்காரியத்தை பரிசுத்த ஆவியானவர் செய்யாதவராய் இருக்கிறார். எந்த ஒரு காரியத்தையும் உங்கள் சுய பெலனால் செய்ய இயலாது என எண்ணுவது சரியான மனநிலையைக் காட்டுகிறதாய் இருகிறது.

தேவனுக்கு பயன்படும் எந்த ஒரு காரியத்தையும் உங்கள் சொந்த பெலனால் செய்ய இயலாது. இதினிமித்தமே, மனிதன் பொதுவாக நீண்ட காலம் எடுத்து, தேவன் அவர்களை விரும்பும் இடத்திற்கு வந்து சேருகிறவனாய் இருக்கிறான். எல்லா தலைமைத்துவத்தின் பணியானது பரிசுத்த ஆவியானவரால் நிறையப்பெற்று, மெதுவாய் நடக்கப் பழகுவதாய் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் துணையின்றி ஜனங்களை வழிநடத்துவது, சட்டப்பூர்வமான காரியங்களுக்கும் மற்றும் ஆவிக்குரிய அழிவுக்கும் ஏதுவாக வழிநடத்துகிறதாய் இருக்கிறது. நமது மனித பெலத்தினால், தேவன் நம்மிடத்தில் வேண்டுவன எல்லாம் நம்மில் அழுத்தங்களை ஏற்படுத்துகிறதாய் இருக்கும், ஆனால் இலவசமாய் அளிக்கப்படும் பெலத்தால், பரிசுத்த ஆவியானவர் மூலம் எல்லாவற்றையும் செய்ய பெலனளிக்கப்படுகிறது, எல்லாவற்றையும் மகிழ்ச்சியுடனும், அவரது இரக்கத்தாலும் மற்றும் கிருபையாலும் செய்து முடிக்கக்கூடிய புதிய அந்தஸ்துக்கு உயர்த்தப்படுகிறவர்களாய் இருக்கிறோம்.

தலைமைத்துவ நடைமுறை:

1. தேவனது வார்த்தைக்குக் கீழ்ப்படிதல்: நாம் இருந்திராத இடத்திற்கு

வழிநடத்துதல் இயலாது. நாம் முன்னோக்கி செல்லாத பட்சத்தில் ஜனங்கள் நம்மைப் பின்தொடரமாட்டார்கள். தலைமைத்துவத்தின் இப்படிப்பட்ட அடிப்படைக் காரியங்களை, அடிக்கடி நிர்வாகம் குறித்து எழுதப்பட்ட புஸ்தகங்களில் தவறிவிடுகின்றனர், கிறிஸ்தவர்களாகிய நாம் இப்படிப்பட்ட அடிப்படை மற்றும் அஸ்திபார காரியங்களை வேதாகம தலைமைத்துவத்தில் அறியாமல் இருந்துவிடக்கூடாது. ஆவிக்குரிய வாழ்விற்கு அனுதின ஆகாரத்தை உண்ணுதல் வேண்டும், ஆவிக்குரிய ஆகாரமானது தேவனது வார்த்தையாய் இருக்கிறது. ஆகாரமின்றி மாம்சீக சரீரமானது அழிவைக் காண்கிறதாய் இருக்கிறது, ஆவிக்குரிய ஆகாரமின்றி ஆத்துமா பசியால் வாடுகிறதாய் இருக்கிறது.

2. இயேசுவின் சிலுவைக்கு முன்னால் தாழ்மைப்படுதல்: கிறிஸ்துவின் சிலுவையின் மெய்யானத் தன்மையை நாம் பிரதிபலிக்கும் போது, பரிசுத்தத்தின் இரகசியத்தை வெளிக்கொண்டுவருகிறவர்களாய் இருக்கிறோம். கர்த்தர் தன்மீது, கொடுமையான பேச்சுக்கள், நிந்தைகள், மற்றும் பாடுகள், துன்பங்கள், அவமானங்கள் அனைத்தையும் ஏற்றுக்கொண்டு, நமக்கு இரட்சிப்பை அளிக்கிறவராய் இருந்தார். நாம் சிலுவைக்கு முன்பாக நிற்கும்போது, கர்த்தரது அற்பணிப்பை நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம், அதைப்போன்ற அற்பணிப்பை நாம் மக்கள் மீது கொண்டவர்களாயிருக்க வேண்டும் என்பது கர்த்தர் விரும்புகிறதாய் இருக்கிறது. நம்மை நாமே கற்றுக்கொள்ளுதல்/போதித்தல்/ஜெபம் என்கிற பலிபீடத்தின் மீது வைத்து கர்த்தரது ஜனங்களுக்கு பணிவிடை செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம், அவர்களது நலன்கருதி முழுமனதுடன் அவர்களுக்கு சேவை செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

3. பரிசுத்த ஆவியானவராகிய தேவனை சார்ந்து இருத்தல்: பரிசுத்த ஆவியானவரின் துணையின்றி எதைச் செய்தாலும், அது கிறிஸ்தவாழ்வின் நடைமுறையாகாது, அது கிறிஸ்தவ தலைமைத்துவமும் ஆகாது. வேதாகம தலைமைத்துவமானது பரிசுத்த ஆவியானவரை சார்ந்து இருத்தல் ஆகும். கர்த்தருக்குப் பணி செய்யும் போது, ஆவியானவரால் நிரப்பப்பட்டு, ஆவியில் நடந்து அவரோடு ஐக்கயப்பட்டு செயல்படுவதே அல்லாது வேறு வழியில் அவருக்கு பணிசெய்வது என்பது இயலாத ஒன்றாய் இருக்கிறது. தலைமைத்துவம் என்பதன் பொருள், இவைகளை நாம் மாதிரிகளாய் வாழ்வில் அமைத்துக்கொண்டு, நம்மைப் பின்பற்ற மற்றவர்களை உருவாக்குகிறவர்களாய் இருப்பது ஆகும்.

4. சுயத்திற்கு முன்பாக மற்றவர்கள்: மரிக்கும் தருவாயில், இரட்சன்ய சேனை,

ஜெனரல் வில்லியம் பூத் என்பவரது இறுதி வார்த்தைகள் இவ்வாறு இருக்கின்றது: "மற்றவர்களின் நலன்" என்பதாகும். இதுவே அவரது இலட்சியம் மற்றும் சமாதி கல்வெட்டில் எழுதப்பட்டது ஆகும், இது வேதாகம தலைமைத்துவத்தை தொகையாய் சுட்டிக்காட்டும் முக்கியமான அடிப்படைக் கொள்கையாய் இருக்கிறது. சுயத்திற்கு முன்பாக பிறர் நலன் என்பது வேதாகமத் தலைவரின் இலட்சியமாய் இருத்தல் வேண்டும். தங்களை முதல் இடத்தில் இருத்தி காண்பிப்பவர்கள் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் அல்லர்.

BTB [BIBLE TOPIC BOOK] பாடங்கள் - கிறிஸ்தவ இறையியல்:

கிறிஸ்து: தாழ்மைப்படுதலும் உயர்த்தப்படுதலும் - மகிமைக்கான மார்க்கம்

1. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து உயர்த்தப்படுதல்: - எபிரெயர் 8:1 "மேற்சொல்லியவைகளின் முக்கியமான பொருளென்னவெனில்; பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்திலே உட்கார்ந்திருக்கிறார்."

2. மகிமைக்கான மார்க்கம்: பிலிப்பியர் 2:5-11.

3. "கிறிஸ்து இயேசுவில் இருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது." [வச. 5]

[a] " இப்படிப்பட்ட சிந்தை உங்களிலும் இருக்கக்கடவது" - (Present. Active. Imperative) இப்படிப்பட்ட மனநிலை உள்ளவர்களாயிருத்தல் வேண்டும். எண்ணங்களுக்கு இலக்கு இருத்தல் வேண்டும், விளையேறப்பட்ட சிந்தனைகள் தெய்வீகக் கண்ணோட்டத்தில் கிறிஸ்துவின் சிந்தையை அடிப்படையாய் கொண்டுள்ளது. 1 கொரிந்தியர் 2:10 ஐ 2 கொரிந்தியர் 10:4-5 உடன் ஒப்பிட்டுப்பார்க்க.
[b] "உங்களில்" விசுவாசிகளில் இருக்கக்கடவது வச 4 "நோக்குதல்" - (Present. Active. Participle] கண்ணோக்கத்தை தீர்மானித்தல், வாழ்க்கையில் கிறிஸ்தவ வழிமுறைகளுக்கான 4 பிரமாணங்களின் அடிப்படையை கண்ணோக்குதல் வேண்டும்.

4. "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாய் இருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்..." [வச 6]

[a] "தேவனுடைய ரூபமாயிருந்தும்" - உள்ளான குணாதிசயம். தெய்வீகத் தன்மை - அவர் மனித உரு எடுக்கும் முன்னர் உள்ள நிலை.

[b["சமமாய் இருப்பதை" - (Present. Active. Participle.) நித்தியமாய் நிலைத்திருப்பதை காட்டுகிறது. வெளிப்படுத்தல் 1:8, யோவான் 1:1, கொலோசெயர் 2:16.

[c] "கொள்ளையாடின பொருள்" - "கைப்பற்றிக்கொள்ளுதல்" - (Present. Active. Infinitive.)

i) கொள்ளையிடும் செயலுக்குப் பயன்படுவது.
ii) ஒரு பொருளை கொள்ளையிடுவதற்கு பயன்படுவது.
iii) ஒரு வெகுமதியை அல்லது ஒரு பொருளை கைப்பற்றி வெற்றி கொள்ளுதல், ஆனால் ஒன்றை இறுகப் பற்றிக்கொள்ளுதல்.

5. "தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷ சாயலானார். [வச 7]

[a] அவர் மனுஷ அவதாரம் எடுத்தது எதை அடைவதற்காக அல்ல, பெயருக்காகவோ புகழ்ச்சிக்காகவோ அல்ல. - "வெறுமையாக்கப்படல்" - (Aorist. Active. Indicative.) தனது சிலாக்கியங்களை அனைத்தையும் ஒதுக்கி வைத்தல், சாதாரணமாய் செயல்பட தன்னைத்தான் உட்படுத்திக்கொள்ளுதல்.

i) இவ்வாறு செய்தல் தெய்வீகத்தை இழத்தல் ஆகாது.
ii) இவ்வாறு செய்தல் தெய்வீக குணாதிசயங்களை இழத்தல் ஆகாது.
iii) மாறாக அவர் தனது தன்மைகளை அடக்கி வைத்து, "நம்மைப்போல" ஆகும்படி தெரிந்து கொண்டார். எபிரெயர் 2:14-17.

[b] "ரூபமெடுத்தல்" - (Aorist. Active. Participle.) மனித தன்மையுள்ளவராதல் - சரீரம், ஆத்துமா, ஆவியுடையவராதல், ஆனால் பழைய பாவ சுபாவமற்றவர்.
[c] "எடுத்தல்" (Aorist. Middle. Participle.) உருவாகுதல். "தாழ்மைக்கு" வழிநடத்தப்படுதல்.
[d] "மனுஷ சாயலாதல்" - மனிதருக்குரிய தன்மை, இயல்பு, திறமை போன்றவைகளுடன் திகழுதல்.

6.அவர் மனுஷ ரூபமாய் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். [வச. 8]

[a] அவரது தாழ்மை - "கண்டு கொள்ளப்படுகிறது" - (Aorist. Passive. Participle) அர்த்தம் செய்து கொள்ளப்படுதல், கண்டுகொள்ளப்படுதல்.

[b] "காணப்படுதல்" - மற்றவர்களுக்கு வெளிப்படையாய் தோற்றமளித்தது, எல்லாவற்றிலும் முறண்பாடாய் இருந்தது.

[c] "தம்மைத்தாமே தாழ்த்துதல்" - (Aorist Active Indicative.) பிறப்பு முதல் மரணம் வரையிலான அவரது மனோ நிலை.

[d] "கீழ்ப்படிந்தவராகி" - (Aorist. Middle Participle.) கேட்டல் & கீழ்ப்படிதல்.

[e] "மரணபரியந்தம்" - ஆவிக்குரிய மரணம். கிறிஸ்து பாடுகள் உபத்திரவங்கள் வாயிலாக கீழ்ப்படிதலைக்கற்றுக்கொண்டார்.(எபிரெயர் 5:8) அதிகபட்ச சுயக்கட்டுப்பாடு.

[f] அவரது தாழ்மை - "சிலுவை மரணம்" - மிகவும் இரக்கமற்ற கொடிய மரணம். இப்படிப்பட்ட மரண தண்டனையானது, மனக்கடினப்பட்ட குற்றவாளிகளுக்கும், மற்றும் ஓடிப்போன அடிமைகளுக்கும் அளிக்கப்பட்டு வந்தது.

7. "ஆதலால், தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தினார்." [வச 9].

[a] அவர் உயர்த்தப்படல் - "ஆதலால்" - அவரது தாழ்மையினிமித்தம் "உன்னதநிலைக்கு உயர்த்தப்படல்" - (Aorist . Active. Indicative.) எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்படல்.

[b] கடந்தகால நித்தியத்தில் கிறிஸ்து தேவனது மகிமையை பகிர்ந்து கொள்கிறவராய் இருந்தார், இருந்தபோதிலும், இது அவரது மனுஷீக உயர்வாய் விளங்குகிறது. ஒப்பிடுக எபேசியர் 1:20-23.

[c] "எல்லாவற்றிற்கும்" - (Aorist. Middle. Indicative.) கிறிஸ்து தன்னைத்தானே அற்பணித்தபடியால் அவர் எல்லாவற்றிற்கும் மேலாக உயர்த்தப்பட்டார்.

[d] "நாமம்" - அந்தஸ்து, அலுவல், மரியாதைக்குரிய. எல்லா நாமத்திற்கும் மேலான எபிரெயர் 1:4-8.

8. "இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்குபடிக்கும்...." [வச 10]

அவரது பிரபலத்துவமானது அறிந்துணரப்பட்டது / அவரது அகிலாண்ட பிரபலமானது அறிந்துணரப்பட்டது. "நாமத்தில்" - வாழ்க்கை நடைமுறையில் அவரது உயர்த்தப்பட்ட அந்தஸ்து.

i) பரலோகில் இருப்பவர்கள் - தூத சயனியம்.

ii) பூமியில் இருப்பவர்கள் - மனிதவர்க்கம்.

iii) பூமியின் கீழானோர் - மரித்துப்போன அவிசுவாசிகள் மற்றும் சிறைப்படுத்தப்பட்ட பிசாசுகள்.

9. பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுக் கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கைபண்ணும்படிக்கும், எல்லா நாமத்திற்கும் மேலான நாமத்தை அவருக்குத் தந்தருளினார். [வச. 11].

[a] "நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்" - (Aorist. Middle. Subjunctive.) வெளிப்படையாகவும், தன்னிச்சையாகவும் அறிந்துணரல் - சுய ஆக்கினைத்தீர்ப்பு.

[b] " இயேசுக்கிறிஸ்து கர்த்தர்" - தெய்வீகம்.

[c] "தேவனுக்கு மகிமையாக"

.

நடைமுறைப் படுத்துதல்:

1. மெய்யான தாழ்மையானது பெரிய அளவிற்கு வழிநடத்துவதாய் இருக்கிறது. லூக்கா 22:24-27 கிருபையை மையமாய்க் கொண்ட சிந்தனை. ரோமார் 12:3.

2. அதிகாரத்துடன் வழிநடத்தும் வழியானது ஒப்புக்கொடுத்தலை பின்பற்றுவதாய் இருக்கிறது. லூக்கா 7:1-10.

3. உண்மையான அதிகாரத்தைப் புரிந்துகொள்ளுதலானது, ஒருவர் சேவை செய்தலில் விளங்குகிறதாய் இருக்கிறது - சேவை பெறுதலில் அல்ல. 1 கொரிந்தியர் 9:1-18. மேன்மையான பலிக்குரிய பிரமாணம், மற்றும் கிறிஸ்தவ மரியாதைக்கான பதக்கம்.

4. போதகருக்கான நடைமுறைப் படுத்துதல். 1 பேதுரு 5:1-4.

CHRIST: HYPOSTATIC UNION – GOD - MAN

<u>இருதன்மைகளின் இணைப்பு தேவன் - மனிதன்.</u>

1. Hypostasisஎன்பதன் பொருள் இரு தன்மைகள் ஒரேத்தன்மையில் இருப்பது. எவ்வித இழப்போ, மாற்றமோ இன்றி ஒன்றாய் இணைந்து இருப்பது. இயேசுக்கிறிஸ்துவின் ஆளத்துவத்தில், தெய்வத்தன்மையும், மனிதத்தன்மையும் வேறுபிரிக்க இயலாதவண்ணம் இணைந்து இருந்தது.மற்றும் இத்தன்மையில் கலப்போ, அல்லது பிரிக்கக்கூடிய இழப்போ இல்லாத இணைப்பாய் இருந்தது, இவ்விணைப்பு தனித்தன்மை
வாய்ந்ததும், நித்தியமானதுமாய் இருந்தது. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பூரணமான மனிதத்தன்மை மற்றும் தெய்வீகத்தன்மையுள்ளவராய் இருக்கிறார். See ஏசாயா7:14, ஏசாயா 9:6, யோவான்1:1-14, ரோமர்1:2-5, ரோமர் 9:5, பிலிப்பியர்2:5-11, 1 தீமோத்தேயு3:16, எபிரெயர்1:4.

2. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து மனித உருவில் வெளிப்பட்டபோது, அவரது தெய்வீகத்தில் எவ்வித குறைபாடுமின்றி இருந்தது. அவர் பிதாவாகிய தேவனுக்கு சமமாயும், சமநித்தியராகவும் இப்பூமியில் இருந்தார். அவர் குழந்தையாய் தொட்டிலில் இருந்தபோது, அண்டசராசரம் அணைத்தையும் பிடித்துக்கொண்டு இருந்தார்.

3. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து மெய்யான மனிதனாய் இருந்தார். அவரில் ஆவி, ஆத்தும, சரீரம் இருந்தது, அவர் கன்னிகை வயிற்றில் பிறந்தபடியால், பழைய பாவ சுபாவம் இல்லாதிருந்தது. 1 பேதுரு2:22.

4. அவரில் இரு தன்மைகளும், குணாதிசய மாற்றமில்லாமல் இணைக்கப்பட்டு இருந்தன; தெயவத்துவம் மற்றும் மனிதத்துவத்தின் தன்மைகள் அவரில் மாறா வண்ணம் இருந்தது.

5. தெய்வீகத்தன்மை எவ்வித குறைவுமின்றி அவரில் இருந்தது; பிதாவின் திட்டப்படி, சில குணாதிசயங்கள் பயன்படுத்தப்படவில்லை. மத்தேயு 4:1-10.

6. கிறிஸ்துவின் ஆளத்துவத்தில் இருத் தன்மைகளின் இணைப்பானது, தனித்தன்மை வாய்ந்ததாயும், மனிதத்தன்மைக்கு மனிதத்தன்மை வாய்ந்ததாயும், தெய்வீகத்தன்மைக்கு தெய்வத்தன்மை வாய்ந்ததாயுமாய் இருந்தது. அவை ஒருபோதும், ஒன்றோடு ஒன்று கலவாது இருந்தது. இவ்வகையான

இணைப்பானது தனித்தன்மை வாய்ந்தாயும், மற்றும் மனுஷீகம், தெய்வீகம் இணைக்கப்பட்ட தன்மை, ஒரே மூலக்கூறுகள் அடங்கிய இருத் தன்மைகள்.

7. தெய்வத்துவம், மனிதத்துவத்தில் வாசம் பண்ணுவது இல்லை அல்லது மனிதத்துவத்தை ஆட்கொள்வதும் இல்லை. கிறிஸ்துவில் இருந்த இணைப்பு புறிந்துகொள்ளக்கூடியதும், ஒத்துப்போகக்கூடியதுமாய் இருந்தது, இது பிரத்தியேகமான இரு நித்திய தன்மைகளின் இணைப்பாய் இருந்தது. அவர் மனிதனாயும் தேவனுமாயும் இருந்தார்.

8. கிறிஸ்து இரு தன்மைகளை ஒரே நபரில் கொண்டவராய் இருந்தார், இதினிமித்தம் அவர் எல்லாவற்றிற்கும் மேலான வல்லமையுள்ள வராகவும், அதே சமயம், பலவீனமுள்ளவராயும் இருந்தார்.

a) தெய்வீகம் சோதிக்கப்படமுடியாது, அனால் மனுஷீகம் சோதிக்கப்படமுடியும். மத்தேயு4:1-10.

b) தெய்வீகத்திற்கு தாகம் இல்லை ஆனால் மனுஷீகத்திற்கு தாகம் உண்டு யோவான்19:28.

c) தெய்வீகம் சர்வ ஞானமுள்ளது, மனுஷீகம் கற்றுக்கொள்கிறதாய் இருக்கிறது லூக்கா2:40,52.

9. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின், மனுஷீகத்தின் அவசியம் கீழ்க்காணும் விதங்களில் காண்கிறோம்.

a) தேவன் மரணம் எய்தாதவராகையால், நமது இரட்சகர் மனிதனாய் இருக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டது. எபிரெயர்2:14,15, பிலிப்பியர்2:7,8.

b) அவர் நமது மத்தியஸ்தராய் இருப்பதால் அவர் தேவனாயும், மனிதனாயும் இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. யோபு 9:2, 32-33, 1 தீமோ.2:5-6.

c) அவர் நமது பிரதான ஆசாரியராய் இருப்பதால், அவர் கண்டிப்பாய் மனிதனாய் இருக்கவேண்டும். எபிரெயர் 7:4,5 14-28; 10:5, 10-14.

d) அவர் இராஜாவாய் இருக்கிறபடியால், கண்டிப்பாய் மனிதனாய் இருக்க வேண்டும், மற்றும் தாவீதின் சந்ததியில் வழிவந்த யூதனாய் இருக்கவேண்டும். சங்கீதம் 89:20-37, 2 சாமுவேல் 7:8-16.

10. கர்த்தர் தமது கிரியை மற்றும் வாக்கினால் வெளிக்காட்டிய மூன்று வகை காரியங்கள்:

a) தனது தெய்வீகத்தின் மூலம் - யோவான்8:58.
b) தனது மனுஷீகத்தின் மூலம் - யோவான் 19:28.
c) இருத்தன்மைகளின் இணைப்பு மூலம் - யோவான் 11:25,26.

11. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் தனித்தன்மை வாய்ந்த ஆளத்துவத்தை, எல்லா விசுவாசிகளும் புறிந்துகொள்வது, திறவுகோள் உபதேசமாய் இருக்கிறது. இந்த உபதேசத்தைச் சார்ந்தே சுவிஷேசத்தின் பிரசங்கம் துள்ளியமாய் விளங்குகிறது. 1 தீமோத்தேயு 3:16.

12. சுவிஷேசத்தை ஒரே வார்த்தையில் கூறவேண்டுமானால் அவ்வார்த்தை - இம்மானுவேல் = தேவன் நம்முடன் இருக்கிறார். யோவானின் சாட்சி இதன் அடிப்படையில் யோவான் 1:14.ல் காண்கிறோம். கிறிஸ்துவில் தேவனுடைய அன்பு, மற்றும் மனிதனுக்கு அவர் காட்டும் தயவு போன்றவற்றை காண்கிறோம். தேவன் தன்னை பழைய ஏற்பாட்டில் வெளிப்படுத்தியுள்ளார், அண்ட சராசரத்தின் தனித்தன்மை வாய்ந்த தேவ மனிதனாகிய இயேசுக்கிறிஸ்துவில் தன்னை பரிபூரணமாய் வெளிப்படுத்தியுள்ளார்.

கிறிஸ்து வெறுமையாக்கப்படல் (KENOSIS OF CHRIST)

1. Kenosis - கெனோஸிஸ் என்பதன் பொருள் "வெறுமையாக்கப்படுதல்" அல்லது "தன்னைத்தானே தரம் தாழ்த்திகொள்ளல்" ஆகும்.

2. கெனோஸிஸின் அடிப்படை:- (பிலிப்பியர் 2:5-8)

3. கடந்தகால நித்தியத்தில், இயேசுக்கிறிஸ்து தேவனாயிருந்தார். அவர் சகலமும் அறிந்தவர், சர்வ வல்லவர், நித்திய ஜீவனைப்பெற்றிருந்தவர், மற்றும் தேவனுக்குறிய முழுமையான தன்மைகளைப்பெற்றிருந்தவராய் இருந்தார். அவர் நித்தியராய் இருந்தபடியால் அவர் சிருஷ்டிக்கப்படவில்லை.

4. இயேசுக்கிறிஸ்து தேவ தூதர்களைவிட சற்று சிறியவராய் இருக்க தெரிந்து கொண்டு அவர் மனுஷ ரூபமெடுத்தார்.

5. முதல் மனிதனாகிய ஆதாம் தேவனாகும்படி வாஞ்சித்தான். தேவனாயிருந்த இரண்டாம் ஆதாமாகிய இயேசுக்கிறிஸ்து தெய்வத்துவத்தை உரிந்துகொண்டு, (Kenosis) மனுக்குலத்தை இரட்சிக்க மனிதனானார்.

6. அவரது பூமிக்குறிய ஊழியத்தின் போது, தனது தெய்வத்துவத்திற்குரிய வல்லமைகளை பயன்படுத்தாமல், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையையே பயன்படுத்தினார்.

கிறிஸ்து - கிளை: கிறிஸ்து சித்தரிக்கப்படுதல்:

1. கிறிஸ்து நான்கு வழிகளில் கிளை என அறியப்படுகிறார், நான்கு சுவிஷேசங்களும் அவரைக் கிளை என காட்டுகிறது.

a) மத்தேயு சுவிஷேசம் இயேசுக்கிறிஸ்துவை இஸ்ரவேலின் ராஜாவாக முக்கியப்படுத்திக் காட்டுகிறது. இயேசுக்கிறிஸ்து தாவீதின் கிளை என அழைக்கப்படுகிறார். (ஏசாயா 11:1; எரேமியா 23;5; எரேமியா33:15) இஸ்ரவேலின் ராஜாவாக வரப்போகிறார் என்பது ஆயிர வருட அரசாட்சியில் நிறைவேறும்.
b) மாற்கு சுவிஷேசம் இயேசுக்கிறிஸ்துவை பாடு அனுபவிக்கும் ஊழியக்காரனாகக் காண்பிக்கிறது. இயேசு கிளை எண்ணப்பட்டவராகிய என் தாசன் என அழைக்கப்படுகிறார். (சகரியா 3:8) முதன் முறையாக இயேசு மனிதனாய் இப்பூமிக்கு வந்தபோது இது நிறைவேறிற்று. (ஏசாயா 53)
c) லூக்கா சுவிஷேசம் இயேசுக்கிறிஸ்துவை பரிபூரண மனிதனாகக் காட்டுகிறது. சகரியாவில் இயேசு "ஒரு புருஷன் அவர் நாமம் கிளை என்பது" எனக்கூறுகிறது. (சகரியா 6:12) இது ஆயிரவருட அரசாட்சியில் இயேசுவின் ஆழுகயை குறித்து கூறுகிறது.
d) யோவான் சுவிஷேசம் இயேசுக்கிறிஸ்துவை தேவனாய் கூறுகிறது. இயேசு "கர்த்தரின் கிளை" என அழைக்கப்படுகிறார். (ஏசாயா 4:2) மற்றும் தேவன் நம்மோடு இருக்கிறார் - இம்மானுவேல் எனவும் குறிப்பிடப்படுகிறார். (ஏசாயா 7:14)

2. தவறான கிளை ஐரோப்பா தேசத்தில் ஒவ்வொரு கிறிஸ்மஸ் நாளிலும் ஓர் குறிபிட்ட பசுமயான மரத்தின் கீழ் நின்று, ஒருவரையொருவர் முத்தமிட்டு, தங்கள் ஒப்புரவாகுதலை தெரிவிப்பது பொதுவான பழக்கமாய் இருந்து வருகிறது. இப்பசுமையான, மரம் கிளை என அழைக்கப்படுகிறது. இது உண்மையான கிளை

அளிக்கும் மெய்யான ஒப்புரவாகுதலை, தவறான வழியில் பரிகசிப்பதாய் இருக்கிறது.

CHRIST: MEDIATORSHIP கிறிஸ்து - மத்தியஸ்தர்.

1. இவ்வார்த்தையின் கிரேக்க மூல அர்த்தம் என்னவெனில், நடுநிலை வகிக்கும் குழுக்கள் / தேசம், எச்சரிப்பு செய்யும் இரு தேசங்களின் நடுவே நின்று, நியாயந்தீர்த்து, சமரசப்படுத்துவது ஆகும். இப்பதத்தின் இரு அடிப்படைத்தத்துவங்கள், நியாயந்தீர்ப்பது மற்றும் சமாதானப்படுத்துவது ஆகும்.

2. மத்தியஸ்தர் இருதரப்பினருக்கும், சமமாய் கருதப்படுகிறவரும், அவர்களால் ஏற்றுக்கொள்ளப் படுகிறவர்களுமாய் இருக்க வேண்டும்.

3. பழைய ஏற்பாட்டு வழக்கப்படி இவ்வடிப்படை தத்துவம், யோபு 9:9; 32; 33 காணப்படுகிறது. மனிதனுக்கும், தேவனுக்குமிடையே சமரசப்படுத்துபவரை யோபு அழைக்கிறார்.

4. முழுமையான மனித சுபாவத்திலும், முழுமையான தெய்வீக சுபாவத்திலும் இணைக்கப்பட்ட கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து, மனிதனுக்கும் தேவனுக்கும் இடையே மத்தியஸ்தராய் இருக்கிறார், அவர் ஒருவரே இருவர் சார்பிலும் சமமான மத்தியஸ்தராய் விளங்குகிறார். 1தீமோத்தேயு2:5.

5. சிலுவையில் கர்த்தரின் ஒப்புயர்வற்ற பணியானது, மத்தியஸ்த பணிக்கு அடிப்படையாக விளங்குகிறது, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே தடையாய் நின்ற பாவச்சுவரை அகற்றி மத்திய்ஸ்தம் செய்ய அது ஏது உண்டாக்கியது. எபிரெயர்9:12 1-5.

6. மோசேயின் நியாயப்பிரமாணம், கர்த்தரின் மத்தியஸ்த செயலுக்கு முன் உருவகமாய் இருக்கிறது. எபிரெயர்8:6, 12:24, கலாத்தியர்3:19, 20.

கிறிஸ்து - கிறிஸ்துவின் பிரபலத்துவம்: CHRIST - CELEBRITYSHIP OF CHRIST

1. கர்த்தர் தெய்வீக மனிதனாய் கனத்துக்கும் மற்றும் ஜெயத்திற்கும் உரியவராய் பிதாவின் அருகில் பரலோகில் அமர்ந்தார். முழுமையான ஜெயத்தைப்பெற்று, மற்றும் பிதாவால் வாரிசாக ஏற்றுக்கொள்ளப்படும் செய்கையானது, பண்டைய உலகின், மார்க்கமாய் இருந்துவந்தது. எபிரெயர் 1:3. சிருஷ்டிகராக இருப்பவர் எப்பொழுதும், இராஜாதி இராஜாவாகவும், மற்றும் கர்த்தாதி கர்த்தராகவும் இருக்கிறார். ஆனால் இப்பொழுது சிருஷ்டிப்பின் இரட்சகராகவும், அதன் இராஜாவாகவும், கர்த்தராகவும் பிதாவினால் அறியப்பட்டவராகவும் இருக்கிறார். ஒப்பிடுக: இரு தன்மைகளடங்கிய இணைப்பு. சிலுவை.

2. முழு மனிதச் சரித்திரத்திலும், ஒரே ஒரு பிரபலமானவரே இருக்கிறார். அது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவாய் இருக்கிறார். அவர் ஒருவரே தெய்வத்துவத்தில் ஒருவராய் பரலோகில் அமர்ந்து இருக்கிறார். நாம் அவரை கனப்படுத்துகிறவர்களாய் இருக்கிறோம். காரணம் அவர் ஒருவரே இவ்வண்டசராசரத்தில், தனித்தன்மை வாய்ந்தவராய் இருக்கிறார், நித்தியத்திலும் அதற்கப்பாற்பட்ட நிலையிலும் அவர் அப்படிப்பட்டவராய் இருக்கிறார். மத்தேயு 6:28-34, யாக்கோபு 1:10-11.

3. கர்த்தரது சேவையில் சேவகர்கள் மட்டுமே இருக்கின்றனர், பிரபலமானவர்கள் இல்லை. யோவான் 12:26, 13:4-17.

4. மனிதர் நமக்கு அளிக்கும் பிரபலத்திற்குரிய வெளிச்சமாகிய ஒளியை ஏற்றுவதைக் காட்டிலும், அவரது ஒளியில் வாழும்படி அழைக்கப்பட்டுள்ளோம், யோவான் 8:12, 12:35-46.

SALVATION: REDEMPTION

<u>இரட்சிப்பு</u>

1. இரட்சிப்பு தேவனுடைய ஈவு, இது கிருபையினால், விசுவாசத்தின் மூலம் பெற்றுக்கொள்ளக்கூடியதாய் இருக்கிறது.

2. இரட்சிப்பிற்காய் நாம் கிரியை செய்ய வேண்டுவதில்லை. - இதை ஈவாய் நாம் பெற்றுக் கொள்ளவேண்டும்.. (எபேசியர் 2:8, 9, ரோமர் 4:4-5).

3. இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளும் ஒரே வழி, இயேசுக்கிறிஸ்து நமது பாவங்களுக்காய் மரித்து, அடக்கம் செய்யப்பட்டு, மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என நம்புவதே ஆகும். இதினிமித்தம் அவர் பாவத்திற்கான கிரயம் செலுத்தி, மரணத்தை வென்று இருக்கிறார்.. (அப்போஸ்தலர்16:30-31, யோவான் 3:16, 14:6, 1 கொரிந்தியர்15:3-4).

4. நாம் இரட்சிக்கப்பட்டுள்ளதால், நாம் தேவனை சேவிக்க முடியும்.. (எபேசியர் 2:8-10). நமது நற்கிரியைகள் நாம் இரட்சிப்படைந்துள்ளதை காட்டுகிறது.

5. இரட்சிப்பு, குற்றம் சுமத்தல், நீதிகரித்தல், மீட்பு, தயை அல்லது கருணை பெறுதல், ஒப்புரவாக்குதல், மற்றும் பரிசுத்தமாக்கப்படுதல் போன்ற மற்ற அநேக உபதேசங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இரட்சிப்பு: மீட்பு

1. மீட்பு என்பது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து, பாவத்திலிருந்து மீட்கும் செயலாய் இருக்கிறது. இதன் கிரேக்க வார்த்தைகள் (lutron, lutrosis, apolutrosis, antilutrosis) கிரயம், மீட்பு, (பாவத்தின்) அடிமைச் சந்தையில் ஓர் அடிமையை விலைக்கிரயம் கொடுத்து வாங்கி, அவ்வடிமையை விடுதலை செய்வதே மீட்பு ஆகும்.

2. மீட்பின் அடிப்படை காரியங்கள். யோவன் 8:31-36 ல் காணப்படுகின்றன.

3. கிறிஸ்து சிலுவையில் பாவத்திற்கான கிரயத்தை கொடுத்து தீர்த்தார். அவர் நமது மீட்பை கிரயம் கொடுத்து வாங்கினார். . எபேசியர் 1:7, கொலோசெயர் 2:14.

4. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மட்டுமே, தகுதிவாய்ந்த மீட்பராய் இருக்கிறார். அவரது கன்னிகைப் பிறப்பின் மூலம் அவர் பழைய பாவசுபாவத்திற்கு விதிவிலக்காய் இருக்கிறார். அவரது பரிபூரண வாழ்வால், பாவத்தன்மையோ, பாவம் சுமத்தப்படுதலோ இன்றி வாழ்ந்தார், இருத்தன்மைகளின் இணைப்பால், அவர் சமநிலையாய், மனிதனாகவும், தேவனாகவும் இணைக்கப்பட்டிருந்தார். ஏசாயா 53:9, யோவான் 8:46, 19:4, 2 கொரிந்தியர் 5:21, எபிரெயர் 1:3,4:15,7,25,28, 1 தீமோத்தேயு 3:16.

5. பழைய ஏற்பாட்டில் மீட்பு என்பதை, ஒரு மிருகம் பலி செலுத்தப்பட்டு, அதன் இரத்தம் சிந்துவதன் மூலம் போதிக்கப்பட்டு வந்தது. எபிரெயர் 9:22, Job 5:19,25,26.

6. மீட்பை வாங்கும் கிரயம் இரத்தமாய் இருந்துவந்தது எபேசியர் 1:7, கொலோசெயர் 1:14, 1 பேதுரு 1:18,19. இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம், பழைய ஏற்பாட்டு பலிமுறைகளை சித்தரிக்கிறதாய் இருக்கிறது, மட்டுமல்லாது கிறிஸ்துவின் இரத்தம் மீட்பின் கிரியைகளை நடப்பிக்கிறதாய் இருக்கிறது. 2 கொரிந்தியர் 5:21.

7. விசுவாசியின் சரீரமல்ல, அவர்களது ஆதுமாவே மீட்கப்படுகிறதாய் இருக்கிறது. சங்கீதம் 34:22, மத்தேயு 8:17.

8. மீட்பு என்பது பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணங்களின் எதிர்பார்ப்புகளை அகற்றுகிறதாய் இருக்கிறது. கலாத்தியர் 3:13,10, 4:4-6. .

9. மீட்பு என்பது விசுவாசியானவன் நெருக்கப்படுகிற காலத்திலும், மற்றும் கொடிய இழப்புகள், மற்றும் துரதிஷ்ட காலத்திலும் நடைமுறைப் படுத்தக்கூடிய உபதேசமாய் இருக்கிறது. (யோபு 19:25,26), இதன் மூலம் ஆசீர்வாதத்தையும் மற்றும் மகிழ்ச்சியையும் கண்டு கொள்ளலாம்.

10. மீட்பு என்பதன் விளவு புத்திர சுவிகாரமாய் இருக்கிறது. (கலாத்தியர் 4:4-6).

11. மீட்பு என்பது விசுவாசிக்கு நித்திய சுதந்தரத்திற்கான அடிப்படையை அளிக்கிறதாய் இருக்கிறது. (எபிரெயர் 9:15).

12. இயேசுக் கிறிஸ்துவின் இரத்தமானது கிரய ரொக்கமாய் இருக்கிறது அல்லது மீட்பிற்கான கிரய ரொக்கமாய் இருக்கிறது. (எபேசியர் 1:7; கொலோசெயர் 1:14; 1 பேதுரு 1:13,19; 1 யோவான் 1:7).

13. மீட்பு பாவமன்னிப்பை உள்ளடக்கியுள்ளது. (எபிரெயர் 9:22).

14. மீட்பு நீதிக்குட்படுத்துதலின் அடிப்படையையும், இரட்சிப்பின் போது உடனடியான சுத்திகரிப்பையும் அளிக்கிறதாய் இருக்கிறது. (ரோமர் 3:24).

15. மீட்பானது, கிறிஸ்தவ வாழ்வின் நடக்கையின் போது, பாவத்திலிருந்து

கழுவப்படுதலுக்கான அடிப்படையாய் விளங்குகிறது. (லேவியராகமம் 4:5; 6:1-6; 1 யோவான் 1:7,9).

பாவம்: மனிதனின் வீழ்ச்சி

1. மனிதனின் வீழ்ச்சி குறித்து ஆதியாகமம் 3 ம் அதிகாரத்தில் அளிக்கப்பட்டுள்ளது.

2. சோதனைக்குட்படுவதற்கு மனிதன் சுயசித்தம் என்ற ஒன்றை பெற்றவனாய் இருக்கிறான், மற்றும் இவ்வாறு தேவனது கட்டளைகளை மீறுகிறவனாய் இருக்கிறான். (ஆதியாகமம் 2:16, 17, ஆதியாகமம் 3:1-8).

3. ஆதிப்பெற்றோரின் கீழ்ப்படியாமையானது அவர்களது அறியாமையிலிருந்து பாவ நிலமைக்கு வீழ்ச்சியடையச் செய்கிறதாய் இருந்தது.

4. முதன் மனிதனின் வீழ்ச்சியானது உலகலாவிய பாவத்தின் விளைவாய் அமைந்தது, இது மனித வர்க்கத்திற்கு மாற்றப்பட்டு, கருத்தரிக்கும் போதும், மற்றும் சரீரப் பிறப்பின்போதும் பாவத்திலேயே பிறக்கும் செய்தது (சங்கீதம் 51:5, யோவான் 3:6, ரோமர் 5:12). பாவத்தன்மையானது ஒவ்வொரு ஆண்மகன் மூலம் வருகிறதாய் இருக்கிறது.

5. மரணம் என்பது ஆவிக்குரியதாகவும் மற்றும் தற்காலிகமானதுமாய் இருக்கிறது, இது பாவத்தின் விளைவாய் இருக்கிறது.

6. பாவத்துடன் தொடர்புள்ள பாடுகளும் உபத்திரவங்களும் மனிதனுக்கும் மனுஷிக்கும் இருபாலருக்கும் அளிக்கப்பட்டது. ஆதியாகமம் 3:16-19. இது சுற்றுச் சூழலைப் பாதிப்பதாயும் இருந்தது. (ரோமர் 8:20-22).

7. முதலாவது சுவிஷேச செய்தியானது ஆதியாகமம் 3:15ல் அளிக்கப்பட்டது.

8. பாவம் மற்றும் மரணத்திற்கு காரணராய் ஆதாம் சம்பந்தபட்டவராய் இருக்கிறார், கிறிஸ்துவானவர் நீதிக்கும் மற்றும் ஜீவனுக்கும் காரணராய் இருக்கிறார். (ரோமர் 5:12-21, 1 கொரிந்தியர் 15:21-22, 45-49).

கிறிஸ்து: சிலுவையிலிருந்து கிறிஸ்துவின் கதறுதல்.

1. ஏழு சொற்றொடர்களை நமது கர்த்தர் சிலுவையிலிருந்து மொழிந்தார்.

2. சிலுவையில் அறையப்படுதலுக்கும் கர்த்தரின் மரணத்திற்கும் இடைபட்ட ஆறு மணி நேரத்தில் இப்படிப்பட்ட தொடர் நிகழ்வு இடம் பெற்றது.

3. கிறிஸ்து வாரினால் அடிக்கப்பட்ட பின்னர், சிலுவையில் அறையும் குழுவினர் கொல்கதாவிற்கு வந்தடைந்தனர், அது கபால ஸ்தலம் என அழைக்கப்படுகிறது. (மத்தேயு 27:33).

4. சிவப்பு நிற திராட்சை இரசத்தில், கசப்புகலந்த பிச்சானது சேர்க்கப்பட்டு இயேசுவுக்குக் கொடுக்கப்பட்டது, ஆனால் அதை அவர் வாங்க மறுத்துவிட்டார், காரணம் இது அவரது சுயசித்தத்தை செயல் இழக்கச் செய்வதால் வாங்க மறுத்துவிட்டார். (மத்தேயு 27:34).

5. இயேசு இரு கள்ளர்கள் நடுவே சிலுவையில் அறையப்பட்டார், அவர்கள் நடுவே இவர் தொங்கும்போது தனது முதலாவது சொற்றொடரைக் கூறினார். "பிதாவே இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாமல் செய்கிறார்கள்." (லூக்கா 23:32-34).

6. முதலாவது இயேசுக்கிறிஸ்து சிலுவையிலிருந்து கூறியது ஒரு ஜெபமாய் இருந்தது, பிதாவே தன்னை சிலுவையில் அறைந்தவர்களை மன்னியும். இது முக்கியமானதாய் இருந்தது காரணம் அவர் அவர்களது பாவங்களுக்காகவும் நியாயந்தீர்க்கப்பட்டவராய் இருந்தார்.

7. போர்ச்சேவகர்கள் அவரது வஸ்திரத்தின் மீது சீட்டுப்போட்டனர். (மத்தேயு 27:35,36, **சங்கீதம்** 22:18).

8. அவரது வஸ்திரத்தை விற்று பணமாக்கப்பட்டதினால், அவர்கள் சிவப்பு திராட்சை இரசத்தை வாங்கி பருகினர். பாரம்பரிய பிரகாரம், சிலுவையில் அறையப்படுபவர்கள் முற்றிலும் நிரவாணமாக்கப்படிருப்பர்.

9. யூதர்கள் அவரை பரிகசித்தனர் (மத்தேயு 27:39-43). அவரை சிலுவையிலிருந்து

இறங்கிவரக் கூறி சோதித்தனர். அப்பொழுது அவர் செய்த அனைத்தையும் விசுவாசிப்போம் என்றனர். (சங்கீதம் 22:7-8).

10. கள்ளர்களில் ஒருவன் அவரை விசுவாசித்தான். (லூக்கா 23:42). விசுவாசிப்பது என்பது கள்ளர்களாலும் இயலும் என்பது வியப்பை அளிக்கிறதாய் இருக்கிறது. அவன் ஞானஸ்நானம் பெறவில்லை, அவன் சபைக்கு வரவே இல்லை.

11. அடிப்படைக் காரியம்: கிறிஸ்துவின் கிரியையில் விசுவாசம் வைப்பது என்பது, ஒருவர் தனிப்பட்ட விதத்தில் இரட்சிப்பை அடைவதன் வழியாய் இருக்கிறது.

12. இரண்டாவது இயேசு கூறியது: "இன்று என்னுடன் நீ பரதீசிலிருப்பாய்." (லுக்கா 23:43).

13. அடிப்படைக் காரியம்: இயேசுக் கிறிஸ்துவின் ஆத்துமா பரதீசுக்குச் சென்றது, இயேசுவின் சரீரமானது கல்லறைக்குச் சென்றது, அவரது ஆவி பிதாவினிடத்திற்குச் சென்றது. (லூக்கா 23:46).

14. பரதீசு, அல்லது ஆபிரகாமின் மடி, தற்காலிகமாய் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களை பாதாளத்தில் அடக்கி வைக்கிற இடமாய் சிலுவையானது சரித்திர உண்மையய் உருவாகும் வரை கருதப்பட்டது. அவிசுவாசியான கள்ளன், மரணத்தில் வாதிக்கப்படுகிறமாகிய பாதாளத்திற்குச் சென்றான், இவ்விடத்திற்கும் பரதீசிற்கும் பெரிதான பிளவு காணப்பட்டது.

15. இரு கள்ளரும் மனிதவர்க்கத்தின் இரு பெரும் பகுதிகளைச் சித்தரிக்கிறவர்களாய் இருக்கின்றனர். விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் (யோவான் 19:26,27).

16. மூன்றாவதாய் சிலுவையில் இயேசு கூறியது: தனது தாயாரை நோக்கி, "ஸ்திரீயே, அதோ உன் மகன்." பின்னர் தனது சீஷனை நோக்கி, "அதோ உன் தாய்." (யோவான் 19:26,27).

17. இயேசு தனது தாயை ஒருபோதும் "அம்மா' என அழைக்கவில்லை. எப்பொழுதும் "ஸ்திரீயே" என அழைத்தார். தனது மனுஷீகத்தில் மரியாளை தனது தாய் என வலியுறுத்தினார், அவர் ஸ்திரியின் வித்தாய் இருந்தார். (ஆதியாகமம் 3:15). அவள் தேவனுக்கு தாயாக இருக்கவில்லை. அவர் தாய் / அம்மா என்கிற

பதத்தை உபயோகிக்கவில்லை, அவர் முன்னதாகவே எதிர்காலத்தில் உண்டாகும் பிரச்சனை அறிந்துணர்ந்தவராய் இவ்வாறு அழைத்தார், மரியாள் தேவனது தாயார் ஆவது என்பது பிரச்சனைக்குரிய ஒன்றாய் இருக்கிறது.

18. தனது தாயாருக்கு ஐந்தாம் கற்பனையின் படி "உன் தகப்பனையும் தாயையும் கனப்படுத்துவாயாக." (யாத்திராகமம் 20:12) என்பதற்கிணங்க, யோவானைப் பார்த்து, "அதோ உன்தாய்" என்றார். யோவான் 100 ஆண்டுகளுக்கு மேலாக வாழ்ந்தார் என்பது ஐந்தாம் கற்பனையின் பிற்பகுதியை சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. (உன் வாழ்நாள் நீடித்திருக்கும்படியாய்).

19. மதியம் 12 மணியளவில் பூமியை அந்தகாரம் சூழ்ந்தது. (மத்தேயு 27:45).

20. சிலுவையில் கூறிய நான்காவது சொற்றொடர்: "ஏலி, ஏலி, லாமா, சாபக்தானி?" (மத்தேயு 27:46; மாற்கு 15:34). என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? (cf. சங்கீதம் 22:1). கிறிஸ்து கைவிடப்பட்டார். இப்படிப்பட்ட கூக்குரல் இயேசுக் கிறிஸ்து நமது பாவங்களுக்காய் நியாயந்தீர்க்கப்பட்டதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. (2 கொரிந்தியர் 5:21; 1 பேதுரு 2:24). பிதாவாகிய தேவனும், ஆவியானவரும் அவரைக் கைவிட்டனர் காரணம் அவர்களே பாவத்தை நியாயந்தீர்க்கிறவர்களாய் இருந்தனர்.

21. சிலுவையில் கூறிய ஐந்தாவது சொற்றொடர்: "அதன் பின்பு, எல்லாம் முடிந்தது என்று இயேசு அறிந்து, வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, தாகமாயிருக்கிறேன் என்றார்." (யோவான் 19:28). இப்பொழுது அவரது பணியானது சிலுவையில் நிறைவு பெற்றது, அவர் வேதவாக்கியங்களை எல்லாம் நிறைவேற்றி முடித்தார் (சங்கீதம் 69:21) கசப்புக் கலந்த காடியும், திராட்சை இரசமும் பருக வேண்டியதாய் இருந்தது.

22. இயேசுவின் மிகப்பெரிய சாதனையில், அவர் வலியுறுத்துவது என்னவெனில் முழுமை பெற்ற தீர்க்கதரிசன காரியங்களின் நிறைவேறுதலாய் இருந்தது, அவைகள் சரியான வரிசையில் நிறைவேறுகிறதாய் இருந்தது. முதலாவது அவருக்களிக்கப்பட்ட காடியை மறுதலித்திருந்த போதும் பின்னர் அதை இறுதியாய் ஏற்றுக்கொண்டு ஜீவனை விடுவதைக் காண்கிறோம்.

23. சிலுவையில் கூறிய ஆறாவது சொற்றொடர்: "இயேசு காடியை வாங்கிய பின்னர், "எல்லாம் முடிந்தது" என்றார். (யோவான் 19:30). பூமியின் மீது கிறிஸ்துவுக்கு இருந்த பணியானது நிறைவு பெற்றது. அவர் முழு உலகின்

பாவத்திற்காக நியாயந்தீர்க்கப்பட்டாயிற்று. இரட்சிப்பின் பணியானது நிறைவு பெற்றது.

24. அடிப்படைக் காரியம்: இரட்சிப்பின் கிரியைகளுக்கு மனித கிரியைகளை நீங்கள் சேர்க்க இயலாது. இரட்சிப்பின் கிரியையானது, கி.பி. 32ல் கொல்கொதாவில் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தனிப்பட்ட நபரின், கிறிஸ்துவின் பலியைக் குறித்த மனநிலையானது, அவர்களது நித்திய எதிர்காலத்தைத் தீர்மானிக்கிறதாய் இருக்கிறது. பரலோகில் பிரவேசிக்கும்படியாக அவர்களது சுயக்கிரியைகளினாலாவது, (ஏசாயா 64:6; எபேசியர் 2:9; தீத்து 3:5) அல்லது கிறிஸ்துவின் கிரியைகளை விசுவாசிப்பதன் மூலமாவது முயற்சி செய்தல் வேண்டும்.

25. சிலுவையில் கூறிய ஏழாவது சொற்றொடர். "பிதாவே உமதுகரங்களில் எனது ஆவியை ஒப்படைக்கிறேன்." (லூக்கா 23:46). இங்கு மிக முக்கியமான உரையாடல் தேவனுடன் நிழுவதைக் காண்கிறோம். சிலுவையில் தொங்கிய இயேசு நமது பாவத்தையெல்லாம் சுமந்து தீர்த்துவிட்டார். அவர் மறுபடியும் தனது பிதாவுடன் நெருங்கி உறவு கொள்வதை இங்கு காண்கிறோம். கைவிடப்பட்ட நிலையில் திரும்ப சேர்த்துக்கொள்ளப்பட்டதை இங்கு காண்கிறோம். (பாயிண்ட் 12 ல் உள்ள நான்காவது சொற்றொடரைக் காண்க) இயேசுக் கிறிஸ்து தக்க சமயத்தில் பிதாவின் கரத்தில் தனது ஆவியை அற்பணிப்பதை இங்கு காண்கிறோம். இது பிதாவின் சித்தப்படியே நிகழ்ந்த ஒன்றாகும்.

26. சரீரப்பிரகாரமாய் கிறிஸ்து மாலை 03:00 மணியளவில் மரணம் எய்தினார். (மத்தேயு 27:50). இவ்வாறு மோசேயின் பிரமாணத்தை நிறைவேற்றினார் மரத்திலே தூக்கி கொலை செய்யப்பட்ட நபர் இரவெல்லாம் மரத்தில் தொங்கலாகாது. ஆகையால் கிறிஸ்துவின் அடக்கம் சூரிய அஸ்தமனத்திற்கு முன்னதாகவே நிகழ்ந்து முடிந்துவிட்டது. (மத்தேயு 5:17, உபாகமம் 21:22,23).

இரட்சிப்பு: பிராயச்சித்தம்: வரையறைக்குட்பதாத பிராயச்சித்தம்:

1. விளக்கம்:

a) மனுக்குல பாவத்திற்கான கிரயத்தை, இயேசுக்கிறிஸ்து சிலுவையின் மீது பாடுபட்டு செலுத்தினார்.

b) பிராயசித்தம் என்பதன் பெயர்ச்சொல்லுக்கான அர்த்தம் விரோதத்துவத்தை

ஒப்புரவாக்குதல், செய்த தவறுக்கு பிரதி உபகாரம் செய்தல்.

c) பிராயச்சித்தம் என்ற வினைச்சொல்லுக்கு பல அர்த்தங்கள் உண்டு. ஒன்றாக்குதல், ஒருமைப்படுத்துதல், பிரதி உபகாரம் செய்தல் அல்லது சரிகட்டுதல், தவறுகளை சரிசெய்தல் அல்லது குறைவை நிறைவாக்குதல், ஒப்புரவாக்குதல்.

d) பழைய ஏற்பாட்டில், இதன் உண்மை அர்த்தம் எபிரேய வினைச்சொல்லுடன் சம்பந்தப்பட்டது "மூடப்படுவதற்கு கடந்து செல்லுதல்" மற்றும் நோவாவின் பேழைக்கு உள்ளும் புறம்பும் பூசப்பட்ட ’கீல்" என்ற எபிரேய சொல்லும் இச்சொல்லுடன் சம்பந்தப்படுகிறது.

2. பழைய ஏற்பாட்டுக்காலத்தில், பாவம் மூடப்பட மிருகங்கள் பலிசெலுத்தப்பட்டு வந்தன.

a) மிருகபலிகளால் இரத்தம் சிந்தி பாவம் மூடப்பட்டபோது, தேவன் மன்னித்து, திரும்ப சேர்த்துக்கொண்டார்.

b) மிருகங்களை பலிசெலுத்துவதன் மூலம் பிராயசித்தம் என்பதன் உண்மயான ஆதாரம் கண்டுகொள்ளப்படவில்லை. இதினிமித்தம் பலிகள் திரும்ப திரும்ப செலுத்தப்பட்டு வந்தன.

c) உண்மையான தியாகபலியாக இயேசுக்கிறிஸ்து தன்னை சிலுவையில் ஒப்புக்கொடுக்கும் வரை, மிருகங்களின் இரத்தம் பாவங்களை மூடி வந்தது.

d) பழைய ஏற்பாட்டு பிராயச்சித்தமாகிய மிருகங்களை பலி செலுத்துதல், இயேசுக்கிறிஸ்துவின் இரட்சிப்பின் கிரியைகளை பிரதிபலித்துக் காட்டுகின்றன.

e) பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் பிராயசித்தத்தை குறித்த, அடிப்படை உண்மைகள் ரோமர் 3:23-26 ல் இணைந்து காணப்படுகின்றன.

3. பிராயச்சித்தம் வரையரையற்றதாய் இருக்கிறது.

a) இயேசுக்கிறிஸ்து பாவங்களுக்காக சிலுவையில் நியாயந்தீர்க்கப்பட்டபோது, தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு மட்டுமல்லாது, முழு மனுக்குல வர்க்கத்தினரின் பாவங்களுக்கான கிரயத்தை செலுத்தி தீர்த்தார். (ரோமர் 5:6, 2கொரிந்தியர் 5:14-15, 1 தீமோத்தேயு 2:6, 4:10, 2பேதுரு 2:1, 1யோவான் 2:2)

b) "வரையறுக்கப்பட்ட பிராயசித்தம்" இதன்படி இயேசுக்கிறிஸ்து விசுவாசிகளுக்கு மட்டும் மரித்தார் என்று கூறுவது முற்றிலும் தவறு.

4. வரையறுக்கப்படாத பிராயச்சித்தம் அவிசுவாசிகளின் பாவங்களை அகற்றி, இறுதி நியாயத்தீர்ப்பில் அவர்கள் மீது குற்றம் சுமத்துவதாய் இருக்கிறது.

அ) இயேசுக்கிறிஸ்து சிலுவையில் மரித்தபோது, முழு மனுக்குலத்தின் பாவங்களுக்காய் நியாயந்தீர்க்கப்பட்டார்.

ஆ) இதினிமித்தம் இரட்சிப்பு என்பது பாவம் சம்பந்தப்பட்டது அல்ல, அது இயேசுக்கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசம் ஆகும். தேவனுடைய அங்கீகாரம் பெற, இயேசுக்கிறிஸ்துவின் கிரியைகளை ஏற்றுக்கொள்ளுதல் (யோவான் 3;18,36) அல்லது தங்களது சுய நற்கிரியைகள் மூலம் தேவனைப்பிரியப்படுத்துவது இவற்றை ஜனங்கள் தெரிந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள்.

இ) இதினிமித்தம், இறுதி நியாயத்தீர்ப்பில், தாங்கள் நடப்பித்த நற்கிரியைகளை அடிப்படையாக்கொண்டே தாங்கள் நியாந்தீர்க்கப்படவேண்டும் என்பதே அவிசுவாசிகளின் குற்றச்சாட்டாயிருக்கும். (வெளி 20:12)

பாவப்பரிகாரம் மற்றும் நிவிர்த்தி செய்யும் கிருபாதார பலி: [SALVATION: EXPIATION AND PROPITIATION]

1. பாவப்பரிகாரம் மற்றும் நிவிர்த்தி செய்யும் கிருபாதார பலி ஆகிய இவ்விரண்டும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்கள் போன்றவைகள், நிவிர்த்தி செய்யும் கிருபாதார பலி என்பது தேவனோடு சம்பந்தப்பட்டது, அதே சமயம் பாவப்பரிகாரம் என்பது மனிதரின் பக்கத்திலிருந்து காணும் பிரச்சனையாய் இருக்கிறது.

2. பாவப்பரிகாரம் மூலம் ஒரு நபரின் குற்றமனசாட்சியானது நிவிர்த்தி செய்யப்பட்டு, பயனுள்ள முறையில் நிவிர்த்தி செய்யும் கிருபாதார பலி மூலம் சரி செய்யப்படுகிறதாய் இருக்கிறது.

3. ஆசரிப்பு கூடாரத்தில் மகா பரிசுத்த ஸ்தலத்தில் வைக்கப்பட்டிருந்த உடன்படிக்கைப்பெட்டியின் மீது உள்ள கிருபாசனமே தேவனுடைய தயை அல்லது கருணை பெறும் இடமாய் இருந்தது.

4. உடன்படிக்கைப்பெட்டியின் வெளிச்சத்தில், கிருபாசனத்தைப்பற்றிய அறிவை நாம் பெற்றுக்கொள்ளலாம். (யாத்திராகமம் 25:10-22, 37:1-9).

5. உடன்படிக்கைப் பெட்டி (45" * 27" * 27") சித்தீம் மரத்தினால் செய்யப்பட்டு, (கிறிஸ்துவின் மனுஷீகம்) அது பொன் தகட்டால் (கிறிஸ்துவின் தெய்வீகம்) மூடப்பட்டிருந்தது.

6. உடன்படிக்கைப் பெட்டியில், பொற்பாத்திரத்தில் மன்னா, கற்பலகை, ஆரோனின் துளிர்த்தகோல், இவைகள் வைக்கப்பட்டிருந்தன. (எபிரெயர் 9:4). கற்பலகை தேவனின் பூரணத்தன்மைக்கு விரோதமான மனிதனின் செயல்பாட்டைக் குறிக்கிறது, துளிர்ர்த கோல் தேவன் அதிகாரத்தை நியமிக்கும்பொழுது, அதற்கு விரோதமான கலகத்தை இது காட்டுகிறது, பொற்கலசத்தில் வைக்கப்பட்ட மன்னா தெய்வீக அன்பளிப்பை புறக்கணித்தைக் காட்டுகிறது.

7. உடன்படிக்கைப்பெட்டி, நமது பாவங்களை தனது சரீரத்தில் சுமந்து மரத்தில் தொங்கின கிறிஸ்துவை சித்தரிக்கிறது. . (2 கொரிந்தியர்5:21).

8. கிருபாசனம் என்பது பொன்தகட்டால் செய்யப்பட்டு, அதன் மீது ஒன்றையொன்று நோக்கிக்கொண்டு இருக்குமாறு இரு கேருபீன்களை உடன்படிக்கைப்பெட்டியின் இரு விளிம்பில் வைத்து அங்கு தேவனுடைய பரிசுத்தம் விளங்கச்செய்யும் இடமாய் இருந்தது. (எபிரெயர் 9:5).

9. வருடத்தில் ஒருமுறை பிராயச்சித்த நாளில் பிரதான ஆசாரியன் கையில் இரத்தம் நிறைந்த பாத்திரத்துடன் மகா பரிசுத்த ஸ்தலத்தில் இருமுறை பிரவேசிப்பான். (முதல் முறை தனது பாவங்களுக்காகவும், மறுமுறை ஜனங்களின் பாவங்களுக்காகவும் பிரவேசிப்பான்) (எபிரெயர் 9:7). கிருபாசனத்தின் மீது அந்த இரத்தத்தைத் தெளிப்பான். தேவனின் நீதியும் அவரது நியாயமும் திருப்தி செய்யப்படும்.

10. தேவனுடைய தயை மற்றும் கருணையைப் பெறுவதினிமித்தம் அல்லது அவரது பரிசுத்த தன்மையை திருப்தி படுத்துவதால், அவர் விசுவாசியினிடத்தில் அன்பு கூற தடையின்றி விளங்குகிறார்.

11. கிருபாசனம், இயேசுக்கிறிஸ்துவின் ஆளத்துவத்தை வலியுறுத்துவதுடன், அவர் நமது மகா பிரதான ஆசாரியராய் இருக்கிறார் என்பதையும் பிரதிபலிக்கிறது.

12. எபிரெயர் 9:5 ல் கூறப்பட்டுள்ள "கிருபாசனம்" என்ற பதத்தின் பொருள் தயை அல்லது கருணைபெறுதல் என்கிற அர்த்தத்தை உடையது. (கிரேக்கச்சொல் - ஹிலாஸ்டெரியன் hilasterion) ரோமர் 3:25 ல் இப்பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

13. தயை அல்லது கருணை பெறுதல், என்ற பதம் மெய்யாய், தேவனுடைய அன்பை, எல்லா விசுவாசிகளும் அவரது தகுதிக்கு அப்பாற்பட்ட நிலையில், பெறுவதை குறிக்கிறது.(1 யோவான்4:10).

14. தயை அல்லது கருணை பெறுவது, கிறிஸ்துவின் ஆளத்துவத்தை சம்பந்தப்படுத்தும் சொல் மற்றும் தேவனது தன்மையினால் மூடிமறைக்கும் சொல்லாய் பயன்படுத்தப்படுகிறது. (ரோமர் 3:25).

இரட்சிப்பு: குற்றம் சுமத்தப்படல்:

1. கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் அடிப்படையில், நமது குற்றங்களை (பாவங்களை) அவர் மீது சுமத்துவது தெய்வீக நீதியாய் இருக்கிறது. (ரோமர்3:22).

2. பழைய ஏற்பாட்டு அநேக புறஜாதியினர், தேவனுடைய நீதியை கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசத்தின் மூலம் கண்டுகொண்டனர், அதே சமயம், அநேக யூதர்கள், நியாயப்பிரமாணத்தைச் சார்ந்துகொண்டு, அவர்களது குற்றங்களை கிறிஸ்துவின் மீது சுமத்துவதில் தவறிவிட்டனர். (ரோமர்9:30-33).

3. நமது குற்றங்களை கிறிஸ்துவின் மீது சுமத்துவதே, நீதிக்குட்படுத்துதலின், அடிப்படையாய் இருக்கிறது. (ரோமர்4:22, 5:1).

4. நமது குற்றங்களை கிறிஸ்துவின் மீது சுமத்துவது, நாம் அவரில் விசுவாசம் வைக்க நம்மை உற்சாகப்படுத்துகிறது. (ரோமர் 4:24, 25).

5. நமது குற்றங்களை கிறிஸ்துவின் மீது சுமத்துதல், கிறிஸ்து சிலுவையின் மீது செய்த கிரியைகளின் அடிப்படையில் இருக்கிறது. (2 கொரிந்தியர்5:21).

இரட்சிப்பு: ஒப்புரவாக்கப்படல்: [SALVATION: RECONCILIATION]

1. ஒப்புரவாக்கப்படுதல் தேவனுக்கும், மனிதனுக்கும் இடையே உள்ள தடைச்சுவர் அகற்றப்படுதல் ஆகும் அல்லது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே சமாதானமாய் இருத்தல். மீட்பு என்பது பாவத்துடன் சம்பந்தப்பட்டது, கருணை

அல்லது தயைபெறுதல் தேவனுடன் சம்பந்தப்பட்டது, ஒப்புரவாகுதல் மனிதனுடன் சம்பந்தப்பட்டது.. (2 கொரிந்தியர் 5:18எபேசியர் 2:16, கொலோசியர் 1:20, 21).

2. ஒப்ப்ரவாகுதல் மற்றும் இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம்:
a) இயேசுக்கிறிஸ்துவின் இரத்தம், சிலுவையின் மீது கிறிஸ்துவின் இரட்சிப்பின் கிரியை மற்றும் ஒப்புரவாக்குதலின் அடிப்படையில் ஒப்புமை உள்ளதாய் இருக்கிறது.. (கொலோசெயர்1:20).
b) ஒப்புரவாக்குதலுடன் சிலுவைக் கிரியைகள் சம்பந்தப்பட்டுள்ளது. (எபேசியர் 2:16).

3. ஒப்புரவாகுதலும் மனுக்குலமும்: மனுக்குலம் தேவனுக்கு விரோதிகளாய் கருதப்படுகின்றனர், அவர்கள் தேவனுடன் ஒப்புரவாக வேண்டும். (ரோமர்5:10, கொலோசெயர் 1:2 1).

4. சமாதானம், ஒப்புரவாகுதலின் ஒப்புமையாய் இருக்கிறது. ஒப்புரவாக்குதல் மனிதனை தேவனுக்கு விரோதியாய் கண்டுகொள்கிறது, ஆனால் சிலுவையினால் இரட்சிக்கும் கிறிஸ்துவின் கிரியை தேவனுக்கும் மனிதனுக்குமிடையே சமாதானத்தைக் கொடுக்கிறது. (எபேசியர்2:14 cf. 2:16 cf. கொலோசெயர் 1:20).

5. ஒப்புரவாகுதல், லேவியரின் பலி முறைகளில் விவரிக்கப்படுகிறது: லேவியராகமம் 3 ம் அதிகாரத்தின் சமாதான பலி கிறிஸ்து, தேவனுக்கும்; மனிதனுக்குமிடையே உள்ள தடைச்சுவரை அகற்றுவதை விவரிக்கிறது. (லேவிரராகமம்7:11-38, 8:15).

6. சபை யுகத்தி,ல் வாழும் விசுவாசிக்கு ஒப்புரவாகுதல் பொருந்தும் விதம்: கிறிஸ்துவின் சரீரத்தில் உள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் இப்பூமியில் அவரின் ஸ்தானாபதிகளாய் இருக்கிறார்கள். இதினிமித்தம் அவர் சரீரத்தின் அங்கங்கள் ஒவ்வொருவரும் ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை செய்கிறவர்களாய் இருக்கிறார்கள்.. (2 கொரிந்தியர் 5:18-20).

7. ஒப்புரவாக்குதலைக் குறித்த தீர்க்கதரிசனம். (ஏசாயா57:19).

8. ஒப்புரவாக்குதலின் வழிமுறைகள்: தடைக:ள் அகற்றப்படுவது:

a) வரையறையற்ற பிராயசித்தத்தின் மூலம் பாவம் அகற்றப்பட்டது. (2 கொரிந்தியர்5:14, 15, 18, 1 தீமோத்தேயு2:6, 4:10, தீத்து 2:11, எபிரெயர்2:9, 1 யோவான் 2:2).
b) பாவத்திற்கான தண்டணை, தண்டணைக் கிரயம் மூலம் அகற்றப்பட்டது (சங்கீதம்22:1-6, கொலோசெயர் 2:14).
c) சரீரப்பிரகாரமான பிறப்பினால் உண்டான பிரச்சனை மறுபடி பிறத்தல் மூலம் அகற்றப்பட்டது. . (யோவான் 3:1-18, தீத்து 3:5, 1 பேதுரு1:23).
d) நியாயப்பிரமாணத்தின் நீதி கிறிஸ்து குற்றம் சுமந்ததின் மூலம் அகற்றப்பட்டது (ரோமர் 3:22, 9:30, 10:10, 2 கொரிந்தியர் 5:21, பிலிப்பியர்3:9, எபிரெயர்10:14) மற்றும் நீதிக்குட்படுத்துதல் (ரோமர் 4:1-5, 4:25, 5:1, 8:29, 30, கலாத்தியர்2:16, தீத்து 3:7).

9. தேவனுடைய பூரண குணாதிசயங்களால் உண்டாகும் தடை தயை அல்லது கருணைப் பெறுவதன் மூலம் அகற்றப்பட்டது. (ரோமர் 3:22-26, 1 யோவான் 2:1, 2).
10. ஆதாமில் உண்டான பிரச்சனைகள் பரிசுத்தமாக்கப்படுவதினால் அகற்றப்பட்டது. (1 கொரிந்தியர் 15:22, 2கொரிந்தியர் 5:17, எபேசியர் 1:3-6).

குணமாக்கப்படல்: பிரயாச்சித்தத்தில் குணமாக்கப்படல் கிடையாது. (நாம் கிருபையினால் அவருடன் நடக்கிறவர்களாய் இருக்கிறோம்)

1. வேதபகுதி (மத்தேயு 8:16-17) "அஸ்தனமானபோது, பிசாசு பிடித்திருந்த அநேகரை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள்; அவர் அந்த ஆவிகளைத் தமது வார்த்தையினாலே துரத்தி, பிணியாளிகளெல்லாரையும் சொஸ்தமாக்கினார். அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களை சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது."

2. இவ்வேதபகுதியை அநேகர் தவறாய் வியாக்கியானிக்கிறவர்களாய் இருக்கின்றனர், இயேசுக்கிறிஸ்துவின் பிராயச்சித்தக் கிரியையானது பாவத்தை மன்னிக்கிறதாயும் மற்றும் நமது வியாதிகளை சுமக்கிறதாயும் இருக்கிறது என்கின்றனர்.

3. மத்தேயு 8:1-17 ல் நான்கு வகையான வியாதிகள் கூறப்படுகின்றன - குஷ்டரோகம், திமிர்வாதம், ஜுரம், பிசாசு பிடித்தவர்கள்.

4. மத்தேயு 8:17 ல் "ஏற்றுக்கொண்டு" என்ற பதத்தின் அர்த்தம், அவைகளை கரத்தினால் எடுத்து, வெளியே அவைகளை வழிநடத்தினார் எனப்பொருள்படும். பாடுகளை மட்டுப்படுத்துதலானது பாடுகளை கிறிஸ்துவினிடம் ஒப்புக்கொடுத்தலாக கண்ணோக்கப்படுகிறது. இப்படிப்பட்ட கொடிய வியாதிகள் இயேசுக் கிறிஸ்துவிடம் மாற்றப்படவில்லை. அவர் நமது குஷ்டரோகம், திமிர்வாதம், அல்லது ஜுரம் போன்றவற்றை ஏற்றுக்கொண்டார் எனக்கூறுவதற்கில்லை. இயேசு பிசாசு பிடித்தவர் எனக்கூறலாமா? - அவ்வாறு கூறுவது அவதூறு செய்வதாய் / தூஷிப்பதாய் இருக்கும்.

5. வியாதி மற்றும் மரணம் போன்றவைகள் பாவத்தின் விளைவாய் இருக்கிறது. இயேசுக்கிறிஸ்து பாவத்தை மன்னிக்க அதிகாரமுடையவராய் இருந்தார். இதினிமித்தமே அவர் வியாதிகளை குணமாக்கினார். இயேசு வியாதிகளை குணமாக்கி தன்னை மேசியாவாக காட்டுகிறவராய் இருந்தார். (மாற்கு 2:3-12).

6. பிரயாச்சித்தத்தில் கிறிஸ்து நமது பாவங்களை தமது சரீரத்தில் சிலுவை மரத்தில் சுமந்து தீர்த்தார். நமது வியாதிகளை அவர் ஒரு போதும் சுமந்து தீர்த்தார் எனக் கூறமுடியாது. (1 பேதுரு 2:24). இயேசுக்கிறிஸ்து அவர்களில் இருந்த வியாதியை எடுத்துப் போட்டார், ஆனால் அவ்வியாதிகளை தன்மீது ஏற்றுக்கொண்டு பரிமாற்றம் செய்யவில்லை.

7. பிரயாச்சித்தத்தின் நோக்கம், பாவத்திற்கான கிரயத்தைச் செலுத்துவதாய் இருந்தது, வியாதிகளை குணமாக்குதலை அளிக்கக்கூடியதாய் இருக்கவில்லை.

அற்புதங்கள்: குணமாக்கப்படுதல் மற்றும் அற்புதங்கள்

1. இயேசுக்கிறிஸ்துவின் சுகமளிக்கும் ஊழியங்கள், அடிப்படையில் வேதனைகளிலிருந்து விடுவிப்பது மட்டுமல்லாது, யூதர்களுக்கு தன்னை மேசியாவாகக் காட்டுவதாயிருந்தது.

2. இயேசுக்கிறிஸ்துவின் ஊழியத்தில், முக்கியமான அம்சம் என்னவெனில், அவர் சரீர சுகத்தை விட பாவத்திலிருந்து சுகமாக்குவதற்கே முக்கியத்துவம் கொடுத்தார். காரனம் பாவத்திலிருந்து சுகாமாக்குவது நித்திய விளைவையும், சரீர சுகம் தற்காலிக விளைவையும் அளிக்கிறது.

3. இயெசுக்கிறிஸ்துவினால் குணமாக்கப்பட்ட உதாரணங்கள்:

a) குஷ்டரோகி (மத்தேயு 8:1 -4).

யூதன் குணமாக்க இயலாத வியாதியினால் வருத்தப்பட்டான் - அது குஷ்டரோகம். சரித்திரத்தில், அக்காலத்தில் சாதாரணமாக குணமாக்க இயலாத வியாதியாகவும், கைவிடப்பட்ட நிலையிலும் குஷ்டரோகிகள் இருந்தனர். இயேசுவால் குணமாக்கப்பட்ட குஷ்டரோகி ஆசாரியனிடத்தில் செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டான். தேவனால் லேவிய ஆசாரியருக்கு பழய ஏற்பாட்டில் இதைப்போன்ற வியாதிகளை பரிசீலிக்க இரண்டு அதிகாரங்கள் கொடுக்கப்பட்டு இருந்தன. அசுத்தன் என்று தீர்க்க (லேவியராகமம் 13), சுத்தமானான் என்று அறிக்கை செய்ய (லேவியராகமம் 14). 14 ம் அதிகாரத்தை உபயோகிக்க அறியாதிருந்தனர். மேசியா பூமியில் இருக்கிறார் என்பதை குஷ்டரோகம் சுகமாக்கப்பட்டதன் மூலம் லேவிய ஆசாரியர்கள் எச்சரிக்கப்பட்டனர்.

b) நூற்றுக்கதிபதியின் வேலைக்காரன்: (மத்தேயு8:5-13).

நூற்றுக்கதிபதி, பெரிய விசுவாசத்தைப்பெற்ற புறஜாதிய விசுவாசியாய் இருந்தான். அவன் ஒரு முதிர்ந்த விசுவாசியாய் காட்டப்படுகிறான். அவனது வேலைக்காரன் திமிர்வாத வியாதியினால் (போலியோ) கஷ்டப்பட்டான். நூற்றுக்கு அதிபதி, இயேசுக்கிறிஸ்து, வேலைக்காரனை குணமாக்க தனது வீட்டுற்குள் வர அவசியமில்லை, என பெரிய விசுவாசத்தை காண்பித்தான். இதை இயேசுக்கிறிஸ்து யூதர்கள் தன்னில் நம்பிக்கை வைக்க சவாலாய் எடுத்துக்கூறினார்.

c)திமிர்வாதக்காரன் குணமடைதல்: (மத்தேயு 9:1-8).

ஒரு யூத விசுவாசி தன் பாவங்கள் மன்னிக்கப்பட உறுதியற்ற நிலையில் இருத்தல். அவனது நண்பர்கள் நால்வர் அவனை இயேசுவிடம் பெரிதான விசுவாசத்துடன் கொண்டு வந்தனர். இயேசு அவனை குணமாக்கி, பாவங்கள் மன்னிக்கப்பட்ட நம்பிக்கையை அருளினார்.

d) பேதுருவின் மாமி (மத்தேயு 8:14-17).

இயேசு அவளை குணமாக்கினார் காரணம் அவள் கர்த்தருக்கு பணிவிடை செய்ய, மற்றும் அவருக்கு உதவி செய்து அவரைத் தாங்க.

4. தேவனால் குணமாக்கப்பட்ட பற்பல விதங்கள்:

a) நேரடித்தொடர்பின் மூலம் (மத்தேயு 8:3,15; மாற்கு6:5)-

b) நண்பர்களின் விசுவாசத்தின் பிரதிபலனாய் (மாற்கு 2:5).

c) ஜெபத்திற்கு பிரதிபலனாய் (யாக்கோபு 5:15,16).

d) வைத்தியர்கள் மூலம் (கொலோசியர்4:14) மற்றும் மருந்து மூலம் - அத்திப்பழ அடை - ராஜ பிளவைக்கட்டிக்கு (2 இராஜாக்கள்20:7),குடற்புண்ணுக்கு திராட்சை இரசம் (1 தீமோத்தேயு 5:23).

5. வியாதியுடனும் அல்லது பிரச்சனையுடனிருந்த அநேக மிகப்பெரிய பரிசுத்தவான்களை தேவன் குணமாக்கவில்லை.
a) எலிசா (2 இராஜாக்கள் 13:14).
b) பவுல் (2 கொரிந்தியர் 12:7-10)
c) எப்பாபிராதீத்து (பிலிப்பியர் 2-26,27)
d) தீமோத்தேயு (1 தீமோத்தேயு 5:23)
e) வியாதிபடுகிற பரிசுத்தவான்களுக்குரிய அடிப்படை (2 கொரிந்தியர் 12:9).

6. வியாதி பல காரணங்களால் அநுமதிக்கப்படுகின்றன:
a) தேவனுடைய வார்த்தைக்கு நாம் திரும்ப வரும்படி (சங்கீதம்119:6 7).
b) தேவனுடைய வார்த்தை உயர்த்தப்படும் படியாக (யோவான்9:1-3)
c) இயேசுக்கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்படியாக (யோவான் 11:4)
d) மற்றவர்களுக்கு நாம் ஆறுதலாய் இருக்கும்படியாக (2 கொரிந்தியர்1:4)
e) எதிர்கால மகிமைக்கு நம்மை ஆயத்தப்படுத்தும்படியாக (2 கொரிந்தியர் 4:17)
f) ஐக்கியத்திற்கு நாம் திரும்பும்படிக்கு (எபிரெயர்12:5-10)
g) நம்மை அதிக கனிகொடுக்கும்படி செய்ய (யோவான் 15:2; எபிரெயர் 12:1).

7. அற்புத குணமாக்குதல் ஒவ்வொரு நேரங்களிலும் நிகழ்ந்து வருகின்றன. தேவன் ஒரு நபரை எந்த நேரத்திலும் குணமாக்கலாம், ஆனால் வேதம் அப்படிச் செய்வது பொதுவாய் அவரது நோக்கமில்லை எனக்காண்பிக்கிறது. தெய்வீக சுகத்தை சாத்தான் தெய்வீக சுகமளிப்பவர்கள் மூலம் போலி சுகத்தை அருள முடியும்,

பரிசுத்த ஆவியானவர் - பயனுள்ள அழைப்பு:

1. வரவழைத்தல் (gk. elkuo) இதன் பொருள் வரவழைத்தல் ஆகும், வழிநடத்துதல் அல்லது வற்புறுத்துதல். இவ்வகையில் வரவழைத்தல் அல்லது அழைத்தல் என்பது அன்புடன் செயல்படுவதைக்காட்டுகிறது. தெரிந்து கொள்ளப்பட்ட அனைவரும், பரிசுத்த ஆவியானவரின் கிரியைக்கு இலகுவாய் செவிமடுப்பர். வரவழைத்தல் பிரதிக்கிரியை செய்ய வழிவகுக்கிறதாய் இருக்கிறது.

2. எல்லா மக்களும் மனந்திருந்த அழைக்கப்படுகின்றனர், இருந்தபோதிலும் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மட்டுமே இழுத்துக்கொள்ளப்படுகின்றனர். (யோவான் 3:16, 36 , 12:32 16:8-11, 1 யோவான் 2:2).

3. விசுவாசிகள், அழைக்கப்பட்டவர்கள், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள், இப்படிப்பட்ட எல்லா பெயர்களும் ஒரே நபரைக் குறிக்கிறதாய் இருக்கிறது. தேவன் அழைக்கிறவராய் இருக்கிறார், பரிசுத்த ஆவியானவர் கிரியை நடப்பிக்கிறார், நாம் அழைக்கப்பட்ட அன்பிற்கு இசைய செயல்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம். (எரேமியா 31:3, யோவான் 3:16).

4. இரட்சிப்புக்கு செவிமடுக்கும் அவிசுவாசி அன்பினால் உந்தப்பட்டு அழைக்கப்படுகிறவராய் இருக்கிறார். (பிலிப்பியர் 2:13).

5. தேவன் தனது இரட்சிப்பின் வரங்களை தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு அளிக்கிறவராய் இருக்கிறார். (யோவான் 1:13, ரோமர் 9:16 எபேசியர் 2:8-9, Titus 3:5-6)

6. இதினிமித்தம் தேவன் தனது கிரியைக்காய் மகிமையைப் பெற்றுக்கொள்கிறவராய் இருக்கிறார், நாம் அதனால் பயனடைகிறவர்களாய் இருக்கிறோம். (யூதா 24-25)

a) தேவன் கடந்த கால நித்தியத்தில் திட்டமிட்டார்.
b) தேவன் சிலுவையில் அதை அளிக்கிறவரானார்.
c) தேவன் அதை வாழ்வில் உறுதிப்பாட்டின் மூலம் ஆயத்தப்படுத்துகிறார்.
d) தேவன் அதை செய்யும்படியான ஊக்கத்தை அளித்து, அதனால் அளிக்கப்படுவதை ஏற்றுக்கொள்கிறவராய் இருக்கிறார்.
e) தேவன் தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு வரங்களை அளிக்கிறவராய் இருக்கிறார்.
f) தேவன் புதிய விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியானவரை அளிக்கிறவராய் இருக்கிறார்.
A) தேவன் விசுவாசிக்கு புதிய சரீரத்தை உண்டாக்குகிறவராய் இருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவர்: புதிய ஏற்பாட்டில் அவரது ஊழியம்.

1. அவிசுவாசிகளுக்கு அவரது ஊழியம்:

a) தடைசெய்கிறவர் (2 தெசலோனிக்கேயர் 2:7). சபையுகத்தில் அவிசுவாசிகள் தடைசெய்யப்படாது இருப்பார்கள் என்றால் சாத்தானால் ஏற்படுத்தப்படும் ஒரு உலக அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கும். சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பின்பு இது செயலாக்கப்படும்.

b) கண்டித்து உணர்த்துதல் (யோவான்16:7-11).

i) பாவம் (கண்டித்து உணர்த்தப்படுதல்) - அவிசுவாசத்தில் நிலைத்து இருக்கும் தடை..

ii) நீதி - தேவன் முற்றிலும் நீதிபரராய் இருக்கிறார், மனிதன் தனித்தன்மையற்ற நீதியை உடையவனாய் இருக்கிறான் அவனது இரட்சிப்பிற்கு தேவனது நீதி அவசியமாய் இருக்கிறது.

iii) நியாயத்தீர்ப்பு - சாத்தான் மற்றும் எல்லா அவிசுவாசிகளும் நியாயந்தீர்க்கப்பட்டு இருக்கின்றனர்.

c)மறுபிறப்பு (யோவான்3:5).

ஆவியில்லாத மனிதனால் ஆவிக்குரியவைகளை அறியமுடியாது. சுவிஷேசம் ஆவிக்குரியதாய் இருக்கிறது, பரிசுத்த ஆவியானவர் அவிசுவாசிக்கு சுவிஷேசத்தை உண்மையாக விளங்கப்பண்ணி, விசுவாசத்தின் மூலம் "மறுபிறப்பை" அந்நபரில் ஏற்படுத்துகிறார். (1 கொரிந்தியர் 2:14).

2. இரட்சிப்பில் விசுவாசிக்கு,

a) மறுபிறப்படையச்செய்தல் (யோவான் 3:1-16, தீத்து3:5).

b) ஞானஸ்நானம் (அப்போஸ்தலர்1:5, 1 கொரிந்தியர்12:13, எபேசியர்4:5)கிறிஸ்துவோடு இணைக்கப்பட மற்றும் கிறிஸ்துவின் சரீரத்தில் ஓர் அங்கமாக ஞான்ஸ்நானம் பெறுகிறோம். இதை பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதுடன் குழப்பக்கூடாது.

c) வாசம்பண்ணுதல் (ரோமர்8:9, 1 கொரிந்தியர்6:19, 20) ஒருவிசுவாசியின் இரட்சிப்பிலிருந்து அந்நபரில் பரிசுத்த ஆவியானவர் வாசம் பண்ணுகிறார்.

d)முத்திரையிடப்படுதல் (2 கொரிந்தியர் 1:22, எபேசியர்1:13, 4:30). இந்த ஊழியம் தேவனுடன் உங்கள் எதிர்கால சம்பந்தப்பட்டது, இது நித்திய பாதுகாபுக்கு உத்திரவாதம் அளிக்கிறது..

e) ஆவிகுரிய வரங்களை பகிர்ந்தளித்தல்: (1 கொரிந்தியர்12:11). ஒவ்வொரு விசுவாசியும், இரட்சிப்பின் போது, கிறிஸ்துவின் சரீரத்தில் செயலாற்ற, ஆவிகுரிய வரங்களைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

3. இரட்சிப்படைந்த விசுவாசிக்கு: (ஆவிக்குரிய நிலையில்)
பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் ஒருவர் இரட்சிப்படைந்த பின்னர், தேவன் அந்நபருக்கென நியமித்துள்ள கிறிஸ்தவ வாழ்க்கை வாழ வழிநடத்துது.
(எபேசியர் 2:10, 5:18).

a) பரிசுத்த ஆவியனவரால் நிரப்பப்படுதல் (ஆவிக்குரிய நிலையில் பாவங்களை அறிக்கை செய்தல் மூலம், வாழ்க்கையை அவருக்கு ஒப்புக்கொடுப்பதன் மூலம் அவரால் நிரப்பப்படுகிறோம்.) (1 யோவான்1:9எபேசியர்5:18).

b) பரிசுத்த ஆவியானவரால் ஒரு விசுவாசி நிரப்பப்படும்போது, அவர் அந்நபரில் இயேசுக் கிறிஸ்துவின் குணங்களை உருவாக்குகிறார். (கலாத்தியர் 4:19, 5:22, 23)

c) கிறிஸ்துவை மகிமைப் படுத்துகிறார். (யோவான் 7:39, 16:14, 1 கொரி.6:19, 20).

d) நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுகிறார். (ரோமர் 8:2-4).

HOLY SPIRIT OPERATION பரிசுத்த ஆவியானவரின் செயல்பாடுகள்

பற்பல சூழல்களில், இடங்களுக்குத் தக்கவாறு பரிசுத்த ஆவியானவரின் கிரியையானது பலவழிகளில் முறண்படுகிறதாய் இருக்கிறது. ஆய்விற்குக் கீழான ஸ்தலங்கள் அந்தியோகியா மற்றும் இக்கோனியம் போன்ற ஸ்தலங்கள். இந்த ஸ்தலங்களில் பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் வேறுபடுவதை தெளிவாகக் காணமுடிகிறது. (அப்போஸ்தலர் 15:22-35) அந்தியோகியா (அப்போஸ்தலர் 14:1-7) இக்கோனியம்.

1. அநிதியோகியாவில் பிரசங்கம் மட்டும் இருந்து வந்தது. இக்கோனியத்தில் பிரசங்கம் மற்றும் அற்புதங்கள் நிகழ்ந்தன.

2. விசுவாசிகள் ஒரு நடைமுறை அமைப்பை மட்டும் அடிப்படையாகக் கொண்டிருக்கவில்லை.

3. பரிசுத்த ஆவியானவர் இக்கோனியத்தில் அனுமதித்த அற்புதங்கள், எல்லா இடங்களிலும் தொடரவில்லை.

4. இக்கோனியத்தில் அடைந்த அதே வெற்றியை, அந்தியோகியாவில் பிரசங்கம்

மற்றும் போதனை மூலம் அடைய முடிந்தது.

5. விசுவாசிகளின் ஊழியமானது பரிசுத்த ஆவியானவருடன் சம்பந்தப்பட்டதாய் இருந்தது. அப்படிப்பட்ட ஊழியமானது உபதேசம் மூலமாகவோ அல்லது வாய்மொழி மூலமாகவோ கூறப்பட்டது, இயற்கைக்கு அப்பாற்பட்ட நிகழ்வுகள் இவ்வுழியத்தில் நிகழ்ந்தன மற்றும் நிகழாமலும் இருந்தன.

6. இக்கோனியத்தில் நிகழ்ந்த அந்நிய பாஷை மற்றும் குணமாதல் போன்று, தங்களது ஸ்தலத்தில் நிகழ பரிசுத்த ஆவியானவரை விசுவாசி வற்புறுத்த இயலாது, காரணம் தேவன் இவைகளை கடந்த காலத்தில் அனுமதித்திருந்தார், அதேபோன்று இக்காலத்திலும் நிகழும் என எதிர்பார்த்தல் கூடாது.

7. குணமாக்கும் அற்புதங்கள் மற்று அந்நிய பாஷை போன்றவற்றை கேட்டுப்பெற்றுக்கொள்வது தேவனை கட்டளையிடுவதற்கு சமமாய் இருக்கிறது, இந்த இடத்தில் விசுவாசி தேவனது திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கிறவனாய் விளங்குகிறான்.

8. அற்புதங்கள் எப்பொழுதும் வசனத்திலிருந்து அளிக்கப்படும் செய்திக்கு கவனத்தை திருப்புகிறதாய் இருக்கிறது, அது ஒரு போதும் ஆவிக்குரிய தன்மைக்கு மற்றும் வல்லமைக்கு அடையாளங்களாய் இருந்ததில்லை.

i) செய்தியே முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது அற்புதங்கள் எப்பொழுதும் அதற்கான உண்மையான காரணமாய் இருந்ததில்லை.
ii) அற்புதத்திற்கு முக்கியத்துவம் அளிப்பது, செய்தியிலிருந்து வழிவிலகச் செய்கிறதாய் இருக்கிறது. பரிசுத்த ஆவியானவர் எப்பொழுதும் செய்தியை வலியுறுத்துகிறவாய் இருக்கிறார்.
iii) இன்றைய அளவில் அற்புதங்கள், அந்நியபாஷை, குணமாகுதல் போன்றவற்றை வலியுறுத்துதல் தேவனுடைய வார்த்தைக்கு இடையூறாய் இருந்து வருகின்றன.

கிறிஸ்து: கிறிஸ்துவின் நியாயவிசாரணை

1. பண்டைய உலகில் இரு மகத்தான சட்டங்களில் ஒன்று, எவ்வாறு கிறிஸ்துவை குற்றம் சாட்ட பிராது செய்தது?

2. சனகரிம் சங்கத்தின் அதிகாரம் - உலகிலேயே தலைசிறந்த நியாயஸ்தலம். சனகரிம் சங்கத்துக்கு மரண தண்டனை அளிக்கும் உரிமையில்லை காரணம் கி பி 6 ல் ரோம அரசாங்கம் அப்படிப்பட்ட உரிமையை அகற்றிவிட்டது.

3. கர்த்தருக்கு விரோதாமான இரு குற்றசாட்டுக்கள் இருந்தன.

a) தேவாலயத்தை இடித்துப்போட்டு அதை மூன்று நாளைக்குள் மீண்டும் கட்டுவேன் என்றது. (மத்தேயு 27:40, மத். 26:61)

b) தன்னை தேவனுடைய குமாரன் என்று கூறிக்கொண்டது. (மத்தேயு27:43).

4. சட்டவிரோதமான யூத விசாரணை:

a) நியாதிபதி குறுகிய மனப்பான்மையுடன், கிறிஸ்துவுக்கு மரணதண்டனையை முன் நிர்ணயம் செய்தது.. (மத். 26:59).

b) நியாஸ்தலம் அதிகாரமின்றி மரணதண்டனையை நிறைவேற்ற தீர்மானித்தது.

c) நீதிபதிகளின் குறுக்கு விசாரணையில் அவர்களது திறமையற்ற தன்மையும், சுயமாய் கிறிஸ்துவின் மீது குற்றம் சாட்டுவதுமே அவர்கள் நோக்கமாய் இருந்தது.. (மத்தேயு26:57-67).

d) பொய்க்குற்றச் சாட்டுக்களைக் கொண்டு முன் விசாரணையின்றி முன்னதாகவே தீர்ப்பு செய்தது.

e) இவ்விசாரணை இரவில் நடந்தபடியால் இது சட்டவிரோதமானது.

f) குற்றத்திற்கான தீர்ப்பை விடியும் வரைக் காத்திராமல் இரவோடு இரவாக கூறினர்.

g) அவர்களது காலை கூடுகை பண்டிகை நாளில் இருந்தது.

h) அவர்களது தீர்ப்பு சட்டரீதியான சான்றுகள் இல்லாது அளிக்கப்பட்டது.

i) அடிப்படையானவை: மதம் யூதப்பிரமாணத்தின் நோக்கங்களை அழித்துவிட்டன.

5. பொதுவான அடிப்படைகள்:

a) எப்படிப்பட்ட சட்ட அமைப்பு அதிகாரப்பூர்வமாய் இருந்தாலும், ஒரு நபர் மீது நிரூபிக்கப்பட்ட குற்றச்சாட்டு இல்லாத வரை அவர் குற்றமற்றவரே எனத்தீர்ப்பளிக்கும்.

b) குற்றமானது நன்கு விசாரணை செய்யப்பட்டு அவை பிரமாணங்களின் ஆதாரத்துடன் தீர்ப்பளிக்கப்படவேண்டும்.

c) கிறிஸ்து விசாரணை செய்யப்படும்பொழுது இரண்டு சட்ட அமைப்பு செயல்பாட்டில் இருந்தது ஒன்று ரோம சட்ட அமைப்பு, இரண்டு யூத சட்ட அமைப்பு.
d) யூத சட்டம் மனிதன் உருவாக்கிய மத அமைப்பால் ஒருபக்கவாதம் செய்து அச்சட்டம் மீறப்பட்டது.
e) ரோம சட்டம் அரசியல் ஆதாயத்திற்காக ஒருபக்கவாதத்திற்கு சாய்ந்து போனது.
f) இயேசுக்கிறிஸ்துவின் நீதி விசாரணையின் போது, இரு மகத்தான சட்ட அமைப்புகள் இருந்த போதிலும் அவைகள் ஒருதலைப்பட்சமாய் மனிதனால் தீர்ப்பளிக்கப்பட்டு நியாயக்கேடு இழைத்தன.

கிறிஸ்து: கிறிஸ்துவின் பிழையின்றி, தவறின்றி வாழும் தன்மை:

1. கிறிஸ்து சோதிக்கப்பட்டும் பாவம் செய்யாதவராய் இருந்தார் என வேதாகமம் அறிவிக்கிறதாய் இருக்கிறது. மத்தேயு 4, 2 கொரிந்தியர் 5:21, எபிரெயர் 4:15.

2. கிறிஸ்து பிழையின்றி, தவறின்றி வாழ்ந்தத் தன்மைக்குரிய திறவுகோளானது, அவரது இருதன்மைகளடங்கிய இணைப்பின் தனித்தன்மையில் கண்டுகொள்ளப்படுகிறது.
[a]. இரு தன்மைகளும் கலப்பின்றி தனித்தனியே அவரில் விளங்கிற்று, அது தனித்தன்மை வாய்ந்ததும், நித்தியத்திற்கடுத்ததுமாய் இருந்தது. யோவான் 1:1-14; ரோமர் 1:2-5, 9:5, பிலிப்பியர் 2:5-11, 1 தீமோத்தேயு 3:16.
[b]. கிறிஸ்து நித்தியரான தேவனாய் இருக்கிறார் மற்றும் பூரண மனிதனாயும் விளங்கினார், தேவனால் மனிதரில் வாசம் செய்தல் கூடாது, மனிதனும் "தேவனுடன் ஒத்துப்போக இயலாது, மற்றும் அவருடன் இரக்கமுள்ளவனாய் இருத்தல் கூடாது."
[c]. இருத் தன்மைகளடங்கிய இணைப்பானது கீழ்க்காணும் காரியங்களால் அவசியமாகிறது.

i) அவர் இரட்சகராய் இருப்பதற்கு - பிலிப்பியர் 2:7-8, எபிரெயர் 2:14-15.
ii) மத்தியஸ்தராய் இருப்பதற்கு - யோபு 9:32-33, 1 தீமோத்தேயு 2:5-6.
iii) பரிந்து பேசும் பிரதாண ஆசாரியராய் இருப்பதற்கு - எபிரெயர் 7:4-5, 10:5-14.
iv) இராஜாவாய் இருப்பதற்கு - 2 சாமுவேல் 7:8-16, சங்கீதம் 89:20-37.

3. கிறிஸ்து மனிதனாய் இருந்ததனால், சோதிக்கப்பட்டார் மற்றும் சோதிக்கப்படக்கூடியவராய் இருந்தார். (மத்தேயு 4, எபிரெயர் 4:15) அவர் தேவனாய்

இருப்பதால், அவரால் பாவம் செய்ய இயலாது அல்லது தீமையினால் சோதிக்கப்பட இயலாது. 1 யோவான் 1:5, யாக்கோபு 1:13.

4. கிறிஸ்துவின் மனுஷீகம் நம்மைப் போல எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டது, இருப்பினும் அவர் பாவம் இல்லாதவராய் வாழ்ந்தார். எபிரெயர் 4:15; 1 யோவான் 2:16

5. கிறிஸ்துவின் கன்னிகைப் பிறப்பால் அவரில் பழைய பாவ சுபாவம் இல்லாதிருந்தது. லூக்கா 1:35, யோவான் 8:46, 14:30, 1 யோவான் 3:5.

6. கிறிஸ்து உண்மையான மத்தியஸ்தராய் இருக்கிறார், அவர் பரிசுத்தராயும், சோதனைகளுக்கு அப்பாற்பட்டவருமாய் இருக்கிறார் இது அவரது தெய்வீகத்தால் சாத்தியமானது - இருப்பினும் மனுஷீகத்தில் அவர் சோதிக்கப்பட்டார் - இருப்பினும் அவரால் பாவம் செய்ய இயலாது இருந்தது.

கிறிஸ்து: கிறிஸ்துவின் தியாக பலி.

கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்து சிலுவை மீது செய்த தியாக பலியானது அநேக பாதிப்புகளை ஏற்படுத்தியது. அவைகள்:

1. நியாயப்பிரமாணத்தின்படி தண்டனைக்குள்ளாக தீர்க்கப்படுதல். கலாத்தியர் 3:13 2 கொரிந்தியர் 5:21.

2. பதிலீடு செய்தல். லேவியராகமம் 1:4 ஏசாயா 53:5-6 2 கொரிந்தியர் 5:21 1 பேதுரு 2:24.

3. தன்னார்வ செயல்பாடு. ஆதியாகமம் 22:9 யோவான் 10:18.

4. மீட்பின் பணி. கலாத்தியர் 3:13 எபேசியர் 1:7 1 கொரிந்தியர் 6:20.

5. நிவிர்த்தி செய்யும் கிருபாதாரபலி. ரோமர் 3:25 1 யோவான் 2:2.

6. ஒப்புரவாக்குதல். 2 கொரிந்தியர் 5:18,19 கொலோசெயர் 1:21,22.

7. பயன் அளிக்கக்கூடிய செயல்பாடு. யோவான் 12:3 20-23 ரோமர் 5:9,10 2 கொரிந்தியர் 5:21 எபேசியர் 2:13 எபிரெயர் 9:12.

8. வெளிப்பாடுள்ள ஊழியம். யோவான் 3:16, 1 யோவான் 4:9,10.

கிறிஸ்துவின் ஒப்புமைகள்: **பஸ்கா கிறிஸ்துவுக்கு ஒப்புமையாய் இருக்கிறது.**

1. பஸ்கா கிறிஸ்துவுக்கு ஒப்பிடப்படுகிறது, கி பி 32 ல் சரியாக பஸ்கா தினத்தில் கிறிஸ்து இதை நிறைவேற்றினார்.

2. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து நமது பஸ்காவாக பலியிடப்பட்டிருக்கிறார்.(1 கொரிந்தியர் 5:7).

3. பஸ்கா ஆட்டுக்குட்டி பண்டிகைக்கு நான்கு நாட்களுக்கு முன்னதாக வீட்டிற்கு கொண்டு வரப்பட்டு கட்டிவைத்து அது பழுதற்றது என்பதை உறுதி செய்யப்படும்.. (யாத்திராகமம்12:5-6).

4. இதன் நிறைவேறுதலாய் கிறிஸ்து மூன்று ஆண்டு காலங்களாய் தன்னை குற்றமற்றவராகவும் பழுதற்றவராகவும் இவ்வுலகின் பாவத்தை சுமந்து தீர்க்கும் பஸ்காவுக்கு தகுதியுள்ளவரென்று நிரூபித்துக்காட்டினார்.. (எபிரெயர்4:15).

5. பழுதற்றது என்பதை ஊர்ஜிதம் செய்த குடும்பம் தங்கள் பாதுகாக்கப்பட அந்த ஆட்டுக்குட்டியை கொல்லவேண்டும். (யாத்திராகமம்12:6).

6. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பூரணமானவராக காணப்பட்டு மனமுவந்து தன்னையே பலியாக அற்பணித்தார். . (எபிரெயர்9:22).

7. பலி செலுத்தப்பட்ட ஆட்டுக்குட்டியின் இரத்தம் வாசலின் நிலைக்காலில் பூசப்படவேண்டும் (யாத்திராகமம் 12:7).

8. கிறிஸ்துவின் மரணத்தை தனிப்பட்ட நிலையில் உணர்ந்து செயல்படவேண்டும். கிறிஸ்துவின் மரணத்தால் எல்லோரும் இரட்சிக்கப்பட்டுவிட்டனர் என்ற கூற்று உண்மையல்ல, கிறிஸ்துவின் மீது விசுவாசம் உள்ளவர்களுக்கு மட்டுமே நித்திய ஜீவன், மற்றவர்களுக்கு ஜீவனில்லை (மரணமே) தேவனுடைய கோபம் அவர்கள் மீது நிலை நிற்கும்.. (யோவான் 3:36).

9. இரத்தத்தை ஒரு முறை பூசினால் போதும் அது நியாயத்தீர்ப்புக்கு விலக்கி காக்க வல்லதாய் இருந்தது. (யாத்திராகமம் 12:13).

10. கிறிஸ்துவின் மரணத்தை ஒரு முறை வாழ்வில் உணர்ந்து செயல்பட்டு விசுவாசித்தால் போதுமானது, அது நம்மை நியாயத்தீர்ப்பிலிருந்து பாதுகாக்க வல்லதாய் இருக்கிறது. (ரோமர்8:1).

11. எகிப்தின் தலைச்சன்கள் அனைத்தும் இறந்து போயினர் காரணம் பாதுகாப்பிற்காக அவர்கள் எதுவும் செய்யவில்லை.. (யாத்திராகமம் 12:29).

12. தேவன் நமக்கு ஒரேபேரான குமாரனை தந்தருளி நம்மை இரண்டாம் மரணத்திலிருந்து இரட்சித்தார் (யோவான் 3:16)

காணிக்கைகள்: லேவிய காணிக்கைகள் கிறிஸ்துவை பிரதிபலிக்கின்றன

1. லேவிய காணிக்கைகள் மற்றும் பலி முறைகள் இயேசுக்கிறிஸ்துவின் கிரியையை சித்தரிக்கின்றன (எபிரெயர்10:1).

2. லேவியராகமம் 1-6 அதிகாரங்களில் காணிக்கை விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

a) சர்வாங்க தகனபலி - அதிகாரம் 1 - கிறிஸ்துவின் கிரியை.
b) போஜனபலி - அதிகாரம் 2 - கிறிஸ்துவின் ஆளத்துவம்.
c) சமாதான பலி - அதிகாரம் 3 - ஒப்புரவாக்குதல்.
d) பாவ நிவாரண பலி - அதிகாரம் 4 - அறியப்படாத பாவங்கள்.
e) குற்ற நிவாரண பலி - அதிகாரம் 5,6 வச.7 அறிந்து செய்த பாவங்கள்.

3. சர்வாங்க தகன பலிகள் (லேவியராகமம் 1).

பலி செலுத்துபவரின் பாவங்களுக்காக பழுதற்ற ஒரு மிருகம் கொலைசெய்யப்பட்டது. சிலுவை மீது நமது பாவங்களுக்காக கிறிஸ்து மரித்ததை இது பிரதிபலிக்கிறது.

a) செல்வந்தன் பலிசெலுத்த ஒரு பழுதற்ற காளையை தெரிவு செய்ய வேண்டும் வச 2-7

பழுதற்ற காளை = பூரண புருஷன் இயேசுக்கிறிஸ்து.

வெண்கல பலிபீடத்தில் பலியிடப்பட்டது = சிலுவையில் இயேசு மரித்தார்.

மனப்பூர்வமாய் பலி செலுத்தப்பட்டது = கிறிஸ்துவில் வைக்கும் விசுவாசம் சுய சித்தத்தின் அடிப்படையில் இருக்கிறது.

பாவி (பலி செலுத்துபவர்) பிராயசித்தத்திற்காக தன் கையை பலி செலுத்தப்பதும் மிருகத்தின் தலை மீது வைக்கவேண்டும் = சிலுவையில் தொங்கிய கிறிஸ்துவின் மீது சர்வ லோகத்தின் பாவங்கள் சுமத்தப்பட்டது. கிறிஸ்து மனுக்குலத்தின் பாவங்களுக்காய் மரித்தார். (2 கொரிந்தியர் 5:21).

காளை கொலை செய்யப்பட வேண்டும் = கிறிஸ்து சிலுவையில் மரித்தார்.

காளையின் இரத்தம் பலிபீடத்தில் தெளிக்கப்பட வேண்டும் = இயேசுவின் இரத்தம் பாவங்களிலிருந்து முற்றிலும் கழுவி சுத்திகரிக்கிறது.

அடிக்கப்படும் மிருகம் உள்ளான நிலையில் பழுதற்றதாய் இருக்கவேண்டும் = இயேசு பூரணமானவராயும், உள்ளான மற்றும் புறம்பான நிலையில் பாவமற்றவராய் இருந்தார்.

அக்கினி முழுவதுமாய் தகனித்தது = மனித நன்மை அகற்றப்பட்தது (1 கொரிந்தியர் 3:12.15).

தலை தகனிக்கப்பட்டது = கிறிஸ்துவின் பூரண மனதை காட்டுகிறது.

கொழுப்பு தகனிக்கப்பட்டது = வெளிப்பிரகாரமான கிறிஸ்துவின் பூரணத்தை இது காட்டுகிறது.

வெண்கல கடல் தொட்டியிலிருந்த தண்ணீரால் பலி மிருகத்தின் குடல்கள் கழுவப்பட்டது = இது பாவத்திலிருந்து கழுவப்படுவதை காட்டுகிறது (1 யோ.1:9).

கால்கள் கழுவப்பட்டன = பாவங்களிலிருந்து கழுவப்படுவது சேவை செய்வதற்கு அனுமதிப்பதைக் காட்டுகிறது.

காளை முற்றிலும் தகனிக்கப்பட்டது = இரட்சிப்பின் போது பாவப்பிரச்சனைக்கு தீர்வு உண்டானது, மற்றும் கிறிஸ்தவ வாழ்க்கையில், அது சிலுவையில் நிறைவேற்றப்பட்டது.

b)ஆட்டுக்கடா லேவி., 1:10-13. நடுத்தர வகுப்பினரால் செலுத்தப்படும் சர்வாங்க தகன பலி.

c)பறவைகள் லேவி., 1:14-17., ஏழைகளால் செலுத்தப்படும் சர்வாங்க தகன பலி.

4. போஜனபலிகள் - (லேவியராகமம் 2)
a) போஜன பலி = போஜன பலி இயேசுக் கிறிஸ்துவை காட்டுகிறது.
மெல்லிய மாவு = கிறிஸ்துவின் பூரணத்தை காட்டுகிறது.
எண்ணெய் = பரிசுத்த ஆவியானவர்.
தூபவர்க்கம் = பிதாவாகிய தேவனை திருப்திபடுத்துவது.
உப்பு = கெட்டுப்போகாமல் பாதுகாப்பது.
புளித்தமா (சேர்க்கப்படவில்லை) = பாவம்.
தேன் (சேர்க்கப்படவில்லை) = மனித நற்கிரியைகள்.
கைப்பிடி நிறைய எடுத்து தகனிக்கப்படவேண்டும். = இரட்சிப்பை தனிப்பட்ட விதத்தில் சொந்தமாக்கிக்கொள்ளுதல்.
பலிபீடத்தில் தகனிக்கப்படுதல் = சிலுவையில் கிறிஸ்து நியாயந்தீர்க்கப்படுதல்.
எண்ணெய் = இயேசு பரிசுத்த ஆவியினால் நிறைந்து இருந்தார்.
மீதியானதை ஆசாரியன் உண்ணவேண்டும் = வேத வசனத்தாலும் மற்றும் பரிசுத்த ஆவியானவராலும் ஆசாரியன் தாங்கப்படுவதை இது காட்டுகிறது.
b)அடுப்பில் பாகம் பண்ணப்பட்ட போஜன பலி.
புளிப்பில்லா அப்பம் = பாவமற்ற கிறிஸ்து.
நெருப்பு = தேவ நியாயம்
பலி = இயேசுக்கிறிஸ்துவின் மனுஷீகம்
அடுப்பு = சிலுவை
எண்ணெய் = அதிகாரம்பெற்ற கிறிஸ்து.
தூபவர்க்கம் = தேவனை திருப்திபடுத்துதல்
c) தட்டையான சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலி.
எண்ணெயில் பிசைந்த மெல்லிய மாவு = கிறிஸ்துவின் பூரணத்தனமை.
புளிப்பில்லாத = பாவமற்ற அல்லது பாவத்தன்மையற்ற.
தூபவர்க்கமிடாத = உலகத்தின் பாவங்களை தேவன் நியாயந்தீர்க்காதவரையில், அவரது கருணையைப் பெறமுடியாது.
பாகம் பண்ணப்படுதல் = நொருக்கப்படுதல் - முழுவதும் அழிக்கப்படுதல் - கிறிஸ்துவின் சரீரம் நமது பாவங்களுக்காய் நொறுக்கப்பட்டது (ஏசாயா 53).
d)பொறிக்கும் சட்டியில் பாகம்பண்ணப்பட்ட போஜனபலி.

இப்பலி பகுதி மூடப்பட்டதும், பகுதி திறக்கப்பட்டதுமாய் இருக்கிறது = காணப்படாத பகுதி - தேவனை நோக்கியும், தேவனை திருப்திபடுத்துவதாயும், காணப்படும் பகுதி - மனிதனை நோக்கியும், ஒப்புரவாக்குதலாயும் இருக்கிறது.

பலிசெலுத்துபவர் பலிபீடத்திற்கு எடுத்துச்செல்லும் ஆசாரியரிடம் தன் போஜன பலியை கொடுப்பர், அவற்றில் ஒரு பகுதியை ஞாபகார்த்தமாய் பலிபீடத்தில் தகனிப்பர். = இது கர்த்தருடைய மேஜையை ஒப்பிடுவதாய் இருக்கிறது.

அதில் மீதியை ஆசாரியர் புசிக்க வேண்டும் - கிறிஸ்துவை விசுவாசத்தில் ஏற்றுக்கொள்வதை காட்டுகிறது.

e)போஜனபலிக்கான விதிமுறைகள்:

புளித்தமா புறக்கணிக்கப்படுதல் = பாவம் அல்லது தீமை புறக்கணிக்கப்படுதல் வேண்டும்.

தேன் புறக்கணிக்கப்படுதல் = மனித நற்கிரியைகள் அல்லது மனித இனிமை புறக்கணிக்கப்படல் வேண்டும்.

உப்பால் சாரமாக்கப்படுதல் = தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உடன்பாட்டை காட்டுகிறது.

f) பஸ்கா ஆசரிக்கும் சமயத்தில் படைக்கப்படும் போஜனபலி.

பஸ்கா முழுவதும் அக்கினிக்கு உட்படும் = நியாயத்தீர்ப்பு = சிலுவை.

முதற்பலன் (அக்கினிக்கு உட்படாதது) = உயிர்த்தெழுதல்.

பிராயசித்த நாள் (அக்கினிக்கு உடபடுவது = நியாயத்தீர்ப்பு = சிலுவை.

g)ஞாபகார்த்த போஜனபலி.

பச்சையான கதிர்கள் = கிறிஸ்துவின் உயிர்த்தெழுதல்

நெருப்பிலே வாட்டப்பட்ட = நியாயத்தீர்ப்பு.

எண்ணெய் வார்த்தல் = மேசியா நியமிக்கப்படுதல்.

தூபவர்க்கம் = தேவனை திருப்திபடுத்துதல்.

5. சமாதான பலி லேவியராகமம் 3 ம் அதிகாரம் ஒப்புரவாக்கப்படுதல்.

இப்பலி சர்வாங்க தகனபலிக்கு ஒத்தது. கடா (ஆண்) மற்றும் கடாறி (பெண்) மிருகங்கள் பலி செலுத்தப்பட்டன.

6. பாவ நிவாரண பலி லேவி. 3 ம் அதி. ஒப்புரவாக்கப்படுதல்.

பாவங்களிலிருந்து மனந்திரும்புதல் மற்றும் பாவங்களை அறிக்கை செய்தல் 1 யோவான் 1:9 க்கு சமமாய் இருக்கிறது. (இது அறியாது செய்த எல்லா பாங்களிலிருந்து கழுவி, எல்லா அநீதிகளுக்கு விலக்கி காக்கிறது)

7. குற்ற நிவாரண பலி லேவி. 5:6-7 அறிந்து செய்த பாவங்கள்.
பாவங்களிலிருந்து மனந்திரும்புதல் மற்றும் பாவங்களை அறிக்கை செய்தல் 1 யோவான் 1:9 க்கு சமமாய் இருக்கிறது. (நாம் அறிக்கை செய்த / அறிந்து செய்த பாவங்களை மன்னிக்கப்படுதல்).

கிறிஸ்து: இயேசுக் கிறிஸ்துவின் கீழ்ப்படிதல்.

1. இயேசுக்கிறிஸ்து கீழ்ப்படிதலில் பூரணமானவராய் இருந்தார் (லூக்கா 2:51; பிலிப்பியர் 2:8). கர்த்தரின் பூரணமான கீழ்ப்படிதலுக்கு உதாரணம், பிதாவின் சித்தத்திற்கு தன்னை பரிபூரணமாய் அற்பணித்து வாழ்ந்தது.

2. வனாந்திரத்தில் கர்த்தர் சோதிக்கப்பட்டது. (மத்தேயு 4:1-11), கர்த்தர் சோதிக்கப்படுகிற போது, அவற்றிற்கு எதிர்த்து நின்றார், இது அவரது மனுஷீகத்தில் பிதாவின் சித்தத்திற்கு அப்பாற்பட்ட தெய்வீக வல்லமையைப் பயன்படுத்தினார். (பிலிப்பியர் 2:5-8, எபிரெயர் 10:7).

3. கெத்சமனே தோட்டத்தில் கர்த்தர் முறண்பாடாய் இருந்த எல்லா சோதனைகளையும் எதிர்த்தார், மற்றும் தனது முகத்தை உறுதியாய் சிலுவை கொடுமைகளுக்கு உள்ளாக செல்வதற்கு நேராக திருப்பிக்கொண்டார். (மத்தேயு 26:38-46, மாற்கு 14:34-42, லூக்கா 22:41-44).

4. நியாய விசாரணையின் போது கர்த்தர் உறுதியாய் இருந்து மேற்கொண்டார். தான் கைது செய்யப்படப்போகும்பொழுது, தனது வல்லமை அவர்களுக்கு காண்பித்த போதும், தன்னை கைது செய்கிறவர்களுக்கு அற்பணித்தார் (யோவான் 18:6), அவர் தன்னார்வத்துடன் தன்னை பிடிக்கவந்த சேனைகளுடன் சென்றார், பேதுரு பட்டயத்தை பயன்படுத்திய போதும் அவருக்கு புத்திகற்பித்தார். (லூக்கா 22:49-51). தவறாய்க் குற்றம் சாட்டப்பட்டிருந்தும் (மத்தேயு 26:67-68), அடிக்கப்பட்டிருந்தும் (யோவான் 18:22), சவுக்கால் அடிக்கப்பட்டிருந்தும் (மத்தேயு 27:26), பரிகசிக்கப்பட்டுக் கோலால் அடித்த போதும், (மத்தேயு 27:27-31), இறுதியாக

சிலுவையில் அறையப்பட்டிருந்த போதும் அவை அனைத்தையும் அமைதியாய் சகித்து, அவை அனைத்தும் பிதாவின் திட்டம் என ஏற்றுக்கொண்டார். எல்லா சோதனைகளையும் எதிர்த்தார், எல்லா அநியாயங்களையும் சகித்தார், எல்லா தீமைகளையும், கொடுமைகளையும் பொறுத்துக்கொண்டார். மாறாக தனக்கு கொடுமை இழைத்தவர்களாய் ஜெபித்தார், பிலாத்துவை நினைவுகூர்ந்தார், இவைகள் அனைத்தும் அவர் இரட்சகராய் இருந்து செயலாற்றிய தீரச்செயலாய் இருக்கிறது. (லூக்கா 23:34, யோவான் 18:37)

5. ஏரோது அந்திப்பாவால் அற்புதம் எதிர்ப்பார்க்கப்பட்டபோது, (லூக்கா 23:8-11) கர்த்தர் அதை எதிர்த்தார், எந்த ஒரு சோதனகளையும் பொருட்படுத்தாது, உடனடியாய் அந்த தீமையான மனிதனை நியாயந்தீர்த்து, அவனுக்கு ஒன்றும் பிரதியுத்தரம் சொல்லாது, தனது முகத்தை சிலுவைக்கு நேராக திருப்பிக்கொண்டு, ஏரோது அந்திப்பாவின் பாவங்களையும் சுமந்து தீர்க்க தன்னை சித்தப்படுத்திக்கொண்டார். (1 யோவான் 2:2).

6. அவர் தனக்களிக்கப்பட்ட சிலுவையை சுமக்க இயலாது தடுமாறி விழுந்த போது, தனது தெய்வீக வல்லமை பயன்படுத்த விரும்பவில்லை, மாறாக சிரேனே ஊரானாகிய சீமோன் அவரது சிலுவை சுமந்து அவருக்கு உதவி செய்தான். (மத்தேயு 27:32, லூக்கா 23:26).

7. சிலுவையில் தொங்கிய போது, கூட்டத்தினர் தனக்குவிரோதமாய் சீறிப்பாய்ந்த போது, அவர் செய்து முடிக்க வேண்டியவற்றை செய்தார். அவர் சிலுவையிலிருந்து இறங்கி வரக்கூடிய சோதனையை மேற்கொண்டார், அவர் சிலுவையில் தொங்கி எல்லாரது பாவங்களையும் சுமந்து தீர்க்கிறவரானார். (மத்தேயு 27:39-44, மாற்கு 15:29-32, லூக்கா 23:35-39).

கிறிஸ்து; உயிர்த்தெழுந்த பின்னர் தரிசனமானது:

அவர் உயிர்த்தெழுந்த பின்னர் பதிவான தரிசனங்கள்:

1. மகதேலானா மரியாளுக்கு (யோவான் 20:14-18).

2. கல்லறையிலிருந்து திரும்பிய ஸ்திரீகளுக்கு (மத்தேயு 28:8-10)

3. எம்மாவூருக்கு சென்ற சீஷர்களுக்கு (லூக்கா 24:13-31).

4. பேதுருவுக்கு (லூக்கா 24:34).

5. பத்து சீஷர்களுக்கு (லூக்கா 24:36-43).

6. தோமாவுடன் இருந்த சீஷர்களுக்கு (யோவான். 20:24-29).

7. திபேரியாக் கடலில் தரிசனமானது (யோவான் 21:1-23).

8. 500 க்கும் அதிகமானோருக்கு (1 கொரிந்தியர் 15:6).

9. யாக்கோபுக்கு (1 கொரிந்தியர் 15:7).

10. பரமேறியபோது சீஷ்ர்களுக்கு (அப்போஸ்தலர் 1:3-12).

11. ஸ்தேவானுக்கு (அப்போஸ்தலர் 7:55)

12. தமஸ்கு சாலையில் பவுலுக்கு (அப்போஸ்தலர் 9:3-6).

13. தேவாலயத்தில் பவுலுக்கு (அப்போஸ்தலர் 22:17-21).

14. இரவில் பவுலுக்கு (அப்போஸ்தலர் 23:11).

15. பத்மு தீவில் யோவானுக்கு. (வெளிப்படுத்தல் 1:10-19).

கிறிஸ்து: உயிர்த்தெழுந்த சரீரம்:

இயேசுக்கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரம்:-

1. ஆணிகளால் உண்டான தழும்புகள் பாதங்களிலும் கைகளிலும் காணப்படுதல் (சங்கீதம் 22:16, சகரியா 12:10, யோவான். 20:25-29).

2. விலாவில் குத்தப்பட்ட தழும்புடன் காணப்படுதல் (யோவான். 20:25-29).

3. கிறிஸ்து 15 தடவை மரித்து உயிர்த்தெழுந்த பின்னர் உயிர்த்தெழுந்த சரீரத்தில் காணப்படுதல்.

4. மரித்து உயிர்த்தெழுந்த கிறிஸ்துவின் சரீரத்தில், அவரால் உணவு உட்கொள்ள முடிந்தது. (லூக்கா 24:42-43).

5. உயிர்த்தெழுந்த சரீரம் திடமானதாயும், தொட்டு உணரக்கூடிய வகையிலும் இருந்தது. (மத்தேயு. 28:9, லூக்கா 24:39, யோவான். 20:17).

6. உயிர்த்தெழுந்த சரீரத்தில் அவரால் சுவாசிக்க முடிந்தது. (யோவான். 20:22).

7. அவரது சரீரம் எலும்பையும், மாம்சத்தையும் பெற்று இருந்தது. (லூக்கா. 24:39-40).

8. பூட்டிய கதவின் ஊடாய் கடந்து செல்ல முடிந்தது. (லூக்கா. 24:36, யோவான்.20:19).

9. தோன்றி மறையக்கூடிய தன்மை வாய்ந்ததாய் இருந்தது. (லூக்கா. 24:31,36).

10. செங்குத்தாக மற்றும் சம நிலையில் அசைவுறக்கூடியதாய் இருந்தது. (அப்போஸ்தலர். 1:9,10).

11. நமது சரீரம் அதைப்போன்றே, ஆணிகளால் உண்டான தழும்புகள் மற்றும் விலாவில் உண்டான தழும்புகளின்றி உயிர்த்தெழுதலில் இருக்கும்.

இரட்சிப்பு: நீதிமானாக்கப்படுதல்:

1. நீதிமானாக்கப்படுதல் என்பதன் பொருள் "நிலையை மெய்பித்துக்காட்டுவது" [vindication"], இதினிமித்தம் தேவனது நீதிச் செயலின்படி ஒரு புதிய விசுவாசியின் இரட்சிப்பின்போது, தனது நீதியை விசுவாசியின் மீது சுமத்தி அவரை நீதிக்குட்படுத்துவது ஆகும். (2 கொரி. 5:21).

2. இரட்சிப்பு, நீதிமானாக்கப்படுதல் கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் போது நிகழுகிறது. (ரோமர் 3:28, 5:1, கலாத்தியர் 3:24).

3. இரட்சிப்பு நீதிமானாக்கப்படுதல் கிருபையின் அடிப்படையில் இருக்கிறது. (ரோமர் 3:24, தீத்து 3:7).

4. இதினிமித்தம் இரட்சிப்பும், நீதிமானாக்கப்படுதலும் மோசேயின் நியாயப்பிரமாணத்தால் நிகழுவது இல்லை. (ரோமர் 3:20, 28, கலாத்தியர் 2:16).

5. இரட்சிப்பு மற்றும் நீதிமானாக்கப்படுதல் ஒருவர் கிறிஸ்துவை விசுவாசிக்கும்போது அந்நபர் மீது தெய்வீக நீதியானது சுமத்தப்படுகிறதாய் இருக்கிறது. (ஆதியாகமம் 15:6, ரோமர் 3:22, 4:4, 5, 16, 8:30-32).

6. நீதிமானாக்கப்படுதலுக்குரிய கிரியைகள் கிறிஸ்துவினால் சிலுவையின் மீது செய்து நிறைவேற்றப்பட்டது. (ரோமர் 5:8, 9).

7. நாம் நீதிமானக்கப்படுதலுக்குரிய கிரியையானது சிலுவையில் நிறைவேற்றி முடிக்கப்பட்டுவிட்டதால், கிறிஸ்து மரித்து உயிர்த்தெழுந்த பின்னர், நீதிமானாக்கப்படுதலை வெற்றியாய் சம்பந்தப்படுத்தி காட்டப்படுகிறது. (ரோமர் 4:25).

8. கிறிஸ்தவ வாழ்க்கைக்குரிய நீதிமானாக்கப்படுதல் என்பது முதிர்ச்சியின் உற்பத்தியாய் இருக்கிறது. (யாக்கோபு 2:21-25).

திரும்ப உருவாக்கப்படுதல் அல்லது மறுபிறப்பு

1. பொதுவான வேதபகுதி: யோவான் 3:5-8 "நீங்கள் மறுபடி பிறக்க வேண்டும்." வச 7 - பரிசுத்த ஆவியானவரால் பிறக்கிறோம். வச 8 நாம் மறுபடி பிறத்தல் மூலம் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டியாகிறோம்.

2. ஜென்ம சுபாவமுள்ள மனுஷனால் ஆவிக்குரியவைகளை அறிந்துகொள்ள முடியாது. (1 கொரிந்தியர் 2:14). அவன் தேவனுடைய இராஜ்ஜியத்தில் பிரவேசிக்கும் தகுதியை இழந்தவனாய் இருக்கிறான் (யோவான் 3:5).அவர்கள் தேவனை திருப்தி செய்ய இயலாதவர்களாயிருக்கிறார்கள். (ரோமர்8:7, 8).

3. மறு பிறப்பு என்பது பரிசுத்த ஆவியானவரின் சிருஷ்டிப்பாய் இருக்கிறது. (யோவான் 1:12, 2 கொரிந்தியர் 5:17, எபேசியர்2:10, 4:24).பரிசுத்த ஆவியானவர் மூலம் நாம் கிறிஸ்துவுக்கு உடன் பங்காளிகளாய் இருக்கிறோம் என்கிற உணர்வை பெறுகிறோம். (ரோமர் 8:16, 17).

4. புதிதாய் பிறப்பதற்கு, கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டு உயிர்த்தெழுந்தார் என்ற நம்பிக்கையை அவர் மீது வைப்பது அவசியமாய் இருக்கிறது. (யோவான்1:12, 3:16-18,36).நம்பிக்கை வைக்கும் போதே உடனடியாய் புது பிறப்பு நிகழ்கிறது.

5. மறு பிறப்பின் மூலம் (திரும்ப உருவாக்கப்படுதல் மூலம்) விசுவாசி கிறிஸ்துவுக்குள் வாழ்கிறார், மற்றும் கிறிஸ்து விசுவாசியில் வாழ்கிறார். (கலாத்தியர்2:20, எபேசியர்2:10, 4:24, 1 பேதுரு1:23-25, 1 யோவான் 5:10-12).

6. ஒருமுறை பிறந்த நீங்கள், பிறவாதிருக்க முடியாது.

NOTES:

அத்தியாயம் மூன்று

புதிய ஏற்பாட்டின் தலைமைத்துவ தகுதிகள்

1. 1 **தீமோத்தேயு** 3:2-7.

3:2 **கண்காணியானவன் குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், ஜாக்கிரதையுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், யோக்கிதையுள்ளவனும், அந்நியரை உபசரிக்கிறவனும், போதக சமர்த்தனுமாய் இருக்க வேண்டும்.** 3:3 **அவன் மதுபான பிரியனும், அடிக்கிறவனும், இழிவான ஆதாயத்தை இச்சிக்கிறவனுமாயிராமல், பொறுமையுள்ளவனும், சண்டை பண்ணாதவனும், பண ஆசை இல்லாதவனுமாய் இருந்து,** 3:4 **தன் சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்துகிறவனும், தன் பிள்ளைகளைச் சகல நல்லொழுக்கமுள்ளவர்களாகக் கீழ்ப்படியப்பண்ணுகிறவனுமாயிருக்க வேண்டும்.** 3:5 **ஒருவன் தன் சொந்த குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்?** 3:6 **அவன் இறுமாப்படைந்து, பிசாசு அடைந்த, ஆக்கினையிலே விழாதபடிக்கு, நூதன சீஷனாய் இருக்கக்கூடாது.** 3:7 **அவன் நிந்தனையிலும், பிசாசின் கண்ணியிலும் விழாதபடிக்கு, புறம்பானவர்களால் நற்சாட்சி பெற்றவனாயிருக்க வேண்டும்.**

பிரதிபலிப்புகள்:

இவ்வசனங்களில் கூறப்பட்ட பதினெட்டு தகுதிகளைகளையும் பாருங்கள், விசுவாசிக்கும் ஒரு நபருக்கு, போதகக் கடமையை நிறைவேற்ற இப்படிப்பட்ட தகுதிகள் கூறப்பட்டுள்ளன இவைகள் அனைத்தும் ஒழுக்க நெறி சார்ந்தவைகளாய் இருக்கின்றன. சமூக நெறி சார்ந்த இரு தகுதிகளை பவுல் கூறுகின்றார், அவைகளை கீழ்க்காணும் தகுதிகளில் 6, 18 வது பாயிண்டகளில் காணலாம். இரு ஊழியத் தகுதிகளாகிய திறமை மிக்க வேதாகம போதனையாளராய் இருத்தல் வேண்டும், மற்றும் புதிதாய் மனந்திருந்தவர்களாய் இருத்தல் கூடாது. (7, 17). சத்துருக்கள் மிகுதியான இவ்வுலகில் சபையின் மக்கள், எல்லாவித குற்றச்சாட்டுகளுக்கும் அப்பாற்பட்ட நிலையில் செயல்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர். சபையை சத்துருவானவன் தாக்குகிறவனாய் இருக்கிறான் காரணம் அது அளிக்கும் செய்தியானது அப்படிப்பட்டதாய் இருக்கிறது, ஆகையால் அதை அளிக்கக்கூடிய செய்தியாளரை அவன் தாக்கும்படி எத்தனிக்கிறவனாய் இருக்கிறான்.

எந்த ஒரு மனிதனும் இப்படிப்படிப்ப தகுதியில்லாமல் போதக பயிற்சிக்கு வருவானேயானால் அவன் அப்பயிற்சிக்கு தகுதியில்லாதவனாய் இருக்கிறான். இது நிரந்தரமான தகுதியற்ற நிலையாகாது, ஆனால் இது ஒரு எச்சரிக்கையாய் அளிக்கப்பட்டு, அவர்கள் தலைமைத்துவத்தை நாடும் போது, தேவனது ஜனங்களை வழிநடத்தும் போது மிகவும் கவனம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றனர். அதிக அளவில் ஊழியங்களை அளித்து அவர்கள் தவறி விழுந்து, தகுதியற்றவர்களாகிறது இன்றைய அளவில் நிகழுகின்ற காரியமாய் இருந்து வருகிறது. இப்படிப்பட்ட தகுதிகளை உடையவர்களை கண்டறிந்து சபையில் பதவியில் அமர்த்திய போதும், கிறிஸ்தவ தலைவர்கள் அதிகமான பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர். கூறப்பட்டுள்ள தகுதிகள் இயலாத காரியமாய் இருக்கிறது எனக்கூறுவதற்கில்லை, பரிசுத்த ஆவியானவருக்குள் நடந்து கொண்டு, "ஆவியின் கனியை" தனது திருமணவாழ்வில், சமுதாயத்தில், குடும்பத்தில் வெளிக்காட்ட வேண்டியவர்களாய் இருக்கிறோம். விழுந்து போகிறதற்கேதுவான தகுதிகள், மற்றும் தகுதியற்ற நிலையானது பரிசுத்த ஆவியானவரின் கிரியை மூலம் மாற்றமடைந்து தக்க காலத்தில் சரியாகிறதாய் இருக்கிறது. இப்படிப்பட குணாதிசயங்களே காணக்கூடிய தகுதிகளாய் இருந்து, போதக தலைமைத்துவத்தை ஏற்று நடத்த ஒருவரை ஆயத்தப்படுத்துகிறதாய் இருக்கிறது.

ஆரம்ப கால சபையின் தலைமைத்துவத்தில் அதிகமானோர் ஆண்களாய் இருந்தனர், இருப்பினும், இதற்கு விதிவிலக்காய், பிரிஸ்கில்லாள், லிதியாள் போன்றவர்கள் போதிக்கும் ஊழியத்திலும், சபை நிர்வாக சேவையிலும் செயல்பட்டனர். இருப்பினும் சபையில் பெண்கள் ஜெபிக்க மற்றும் தீர்க்கதரிசினிகளாய் இருக்க, இப்படிப்பட்ட ஊழியங்களில் அவர்கள் ஈடுபடும்போது அவர்கள் தலையில் முக்காடிட்டுக்கொண்டு செயல்படுதல் வேண்டும் என பவுல் வற்புறுத்துகிறவராய் இருக்கிறார். இது கிரேக்க சமுதாயத்தில் அன்று மரியாதைக்குரிய செயலாய் மதிக்கப்பட்டு வந்தது. பெண்களுக்குரிய ஊழியத் தகுதி குறித்து செக்ஷன் மூன்றில் கற்றுக்கொள்ள இருக்கிறோம். தீத்து 2:4-8.

தலைமைத்துவ தராதரங்கள்:

தலமைத்துவ தராதரங்கள் குறித்து ஒன்றன் பின் ஒன்றாக கீழே காண்போம்:

1. குற்றம் சாட்டப்படாதவன்: - ஒழுக்க நெறி சார்ந்த நிலையில், ஒரு போதகர் எவ்வித தாக்குதலும் இன்றி இருத்தல் வேண்டும்.

எந்த ஒரு மனுஷரும் எழுந்து நின்று ஒழுக்கக்கேடான பாவங்கள் ஒரு போதகரில் உண்டு என்று விமர்சித்தல் கூடாது. போதகரின் பெயருடன் எவ்வித பாவகாரியங்களை பிணைத்து பேசுவது கூடாது, அது சுவிஷேசம் அறிவிப்பதில் அவ கீர்த்தியை கொண்டுவருகிறதாய் இருக்கும்.

2. ஒரே மனைவியை உடைய புருஷன் - ஆரம்பகால சபையில் இதை மிகவும் கவனமாக எடுத்துக்கொண்டனர். ஒரு விசுவாசியான ஒரு சகோதரன் இரு முறை திருமணம் செய்து கொண்டால், அப்படிப்பட்ட நபர் போதகராய் பணியாற்றுவதற்கு தகுதியற்றவர் என அவரை ஒதுக்கி வைத்தனர். மூன்றாம் நூற்றாண்டில், ஒரு போதகரது மனைவி இறந்து தனிமையில் இருந்து மறுபடி திருமணம் செய்தல் கூட, போதகருக்கு தகுதியல்ல என்று தீர்த்தனர், மட்டுமல்லாது அவர் அவிசுவாசியாய் இருந்த காலத்தில் திருமணம் செய்திருந்தால் கூட, அவரை போதகராய் அங்கீகரியாது இருந்தனர். இவ்விரு காரியமும் பவுலின் வார்த்தையினால் மிகவும் கவனமாய் எடுத்துக்கொள்கிறவர்களாய் இருந்தனர்.

நாம் இரட்சிப்படைவதற்கு முன்னர் உள்ள காரியங்கள் ஒரு குற்றச்சாட்டு ஆகாது, நாம் இரட்சிப்படைந்த பின்னர் இயேசுவுக்குள் புது சிருஷ்டிகளாகிறோம் 2 கொரிந்தியர் 5 :17, இரட்சிப்படைந்த பின்னர் செய்யும் காரியங்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும். இங்குள்ள பிரச்சனையானது, ஒரு போதகர் "ஒரே மனைவியை உடைய புருஷனாய் இருத்தல் வேண்டும்." பிறர் முகம் நோக்காது அவள் வாழும் வரை, அவளையே நோக்கி வாழுதல் வேண்டும். ஒரு தார விவாகமானது இங்கு வலியுறுத்தப்படுகிறது. ஒரு கிறிஸ்தவர் விவாகரத்து செய்தாலும் அவர் தகுதியற்றவராகிறார். தன் மனைவிக்கு அப்பாற்பட்ட ஒரு சகோதரியை காதலித்து திருமணம் செய்துகொண்டாலும் அவர் தகுதியற்றவராகிறார். இவ்வாறு இருப்பவர்களை புறம்பாக்குவது நிரந்தமான தீர்வாய் இருந்தது அல்லது நீண்டகாலத்திற்கு இத்தீர்வானது அமல் படுத்தப்பட்டதாய் இருந்தது. ஒரு நபர் இப்படிப்பட்ட பாவத்திற்கு உட்படுவாரேயானால், அவர் ஒழுக்க நெறி சார்ந்த நிலையில் தகுதியற்றவராகிறார், அவர் முழுமையாய் மனந்திருந்தி ஒழுக்கரீதியாக நடந்து கொள்வது உறுதிப்படுமேயானால் அவர் திரும்ப சேர்த்துக்கொள்ளத் தகுதியுள்ளவராகிறார். இப்படிப்பட்ட நிலையில் ஒழுக்க நெறி தவறியவர்களுக்கு

ஏழு ஆண்டுகாலம் அவகாசம் அளித்து அவர்கள் மெய்யாய் மனந்திருந்தி தங்களது தவற்றினை உணர்திருப்பார்களேயானால், ஆதிசபையில் அவர்களை திரும்ப போதகப் பணியில் சேர்த்துக்கொண்டனர்.

3. ஜாக்கிரதையுள்ளவன்: - இது ஒழுக்க நெறி சார்ந்ததும், மற்றும் புத்திசாலித்தனமான தன்மையாய் இருக்கிறது. இதன் பொருள் ஒரு நபர் தெளிவாய் சிந்தித்து செயல்படுகிறவராய் இருத்தல் வேண்டும், அவர்களது சிந்தனையில் குழப்பமுற்றவர்களாய் இருத்தல் கூடாது. அவர்கள் சொல்லுகிற காரியங்கள் அர்த்தமுள்ளதாய் இருத்தல் வேண்டும், மற்றும் தெளிவாய் இருத்தல் வேண்டும், இன்றைய அளவில் நாம் கூறுகிறபடி, மனோரீதியான நிலையில் மிகவும் "புத்திக்கூர்மையுடன்" இருத்தல் வேண்டும். அவர்களது ஆவிக்குரிய வாழ்விலும், ஒழுக்கம் சார்ந்த நிலையிலும் மிகவும் ஞானமாய் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

4. தெளிந்த புத்தியுள்ளவராய் இருத்தல்: - இதன் பொருள் மது அருந்துவதில் கட்டுப்பாட்டுடன் இருத்தலைக் காட்டுகிறது. மட்டுமல்லாது இதன் பொருள் இன்னும் ஒரு படி முன்னே செல்லுகிறதாய் இருக்கிறது மனோரீதியில், பரந்த அர்த்தத்தில் பவுல் இத்தகுதியை இங்கு கூறுகிறவராய் இருக்கிறார். இங்கு பவுல் கூறவருதன் கருத்து என்னவெனில், குடிப்பதற்கு அப்பாற்பட்ட நிலையில், வார்த்தையிலும் செயலிலும் நிலையான தன்மை வகித்தல் வேண்டும் என்பதாகும். ஒரு போதகர் தனது வாழ்வில் நிலைத்தன்மையை வகித்தல் மற்றும் சார்ந்து இருத்தல், வேண்டும் அவர்களது மனோ நிலையில் அடிக்கடி மாறுகிறவர்களாய் இருத்தல் கூடாது.

5. யோக்கிதையுள்ளவராய் இருத்தல்: - நிலைத்து இருத்தல் என்ற கருத்தை இது பின்தொடர்கிறதாய் இருக்கிறது, இது ஒரு நபர், தனது வாழ்வின் எல்லா நிலைகளிலும், சுயக்கட்டுப்பாட்டுடன் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது, அவர்கள் சிறப்பான முறையில் நேரத்தை செலவு செய்கிறவர்களாய் இருப்பர், சுயக்கட்டுப்பாட்டுடன் தங்களது சரீரத்தை, தகுதியுடனும், நல்ல பழைக்க வழக்கங்களுடனும் பேணிக்காக்கிறவர்களாய் இருப்பர்.

6. உபசரிக்கிறவர்களாய் இருத்தல்: - இது வீட்டிற்கு வருகிற அனைவரையும் உபசரிக்கும் "எல்லொருக்கும் திறந்த வீடாக" இருக்க வேண்டும் என்பது பொருள்படாது. இதை சரியாய் அர்த்தம் செய்து கொள்ள வேண்டுமானால், உடன்

கிறிஸ்தவ வேலையாட்களை உபசரிக்க ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல், தங்களது வீட்டை, வீட்டு கூட்டங்கள் நடத்த திறந்து கொடுத்து வீட்டில் கூடுகிறவர்களை உபசரித்தல், மற்றும் அவற்றை நேர்த்தியாகவும் சரியாகவும் செய்வதை குறிக்கிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்டவைகளைச் செய்ய போதகரின் குடும்பத்தின் அளவு, வருமானத்தின் அளவு, போன்றவற்றிற்கு ஒரு அளவு திட்டம் உண்டு. ஒரு மிஷனரி விருந்தாளி, வீட்டில் தங்க நேரிடும் போது, போதகரின் பிள்ளைகள் தரையில் படுத்து உறங்க அவசியமில்லாது பார்த்துக்கொள்ள வேண்டும், அவருக்கு வேண்டிய மற்றும் பிள்ளகளுக்குரிய வசதிகள் இருந்தால் மட்டும் அவரை வீட்டில் தங்க வைப்பது உத்தமம். சபையில் உள்ளவர்கள் போதுமான அறை உள்ள வீடுகளில் இருப்பார்களேயானால் அவர்களது வீட்டில் அப்படிப்பட்டவர்கள் தங்க ஏற்பாடு செய்யலாம்.

இது ஒரு போதகர் அவிசுவாசிகளுக்கு தனது வீட்டை திறந்து கொடுத்து இப்படிப்பட்டவைகளைச் செய்ய வேண்டும் என்று பொருள்படாது, இப்படிப்பட்ட காரியங்களை ஆரம்ப சபையினர் செய்யும்படி எதிர்பார்க்கவில்லை, இப்படிப்பட்ட செயல் ஆபத்தான நிலையில் முடிவடையும். ஆரம்ப கால சபை போதகர் தனது குடும்பத்தைத் தீமையினின்று பாதுகாக்கும் பணியில் கவனம் செலுத்தினர், தங்களது பிள்ளைகளை புறஜாதியார் / அவிசுவாசிகளுக்கு விலக்கமாய் காத்துக்கொண்டனர். சுவிஷேச ஊழியமானது, பொது இடங்களிலும், வேலை ஸ்தலங்களிலும் செய்யப்பட்டு வந்தது, போதகரின் வீடானது, தங்கள் வாசம் பண்ணுவதற்கும் சபைக்கும் பயன்படுகிறதாய் இருந்தது. அவர்கள் வீட்டை சுவிஷேசம் அறிவிப்பதற்கு பயன்படுத்துவதில் எவ்வித தவறும் இல்லை, அவ்வாறு செய்யும் போது, பாதுகாப்புடன் செய்வது சிறப்பானதாய் இருக்கும். மிகவும் ஆர்வமுள்ளவர்கள், புத்தியில்லாதோர் தங்கள் வீட்டை அவிசுவாசிகளுக்கும், புறஜாதிகளுக்கும் திறந்து கொடுத்து தங்களது பிள்ளைகள் முறைகேடானவற்றை கற்றுக்கொள்ளவும், அவர்கள் முறைகேடாய் நடத்தப்படவும் இடம் கொடுக்கிறவர்களாய் இருக்கின்றனர். இது வேதாகம ரீதியில் உள்ள காரியமோ அல்லது ஞானமான காரியமோ அல்ல, தங்களது அவர்களால் கெட்டுப்போவது, பண்டைய நாட்களில் குழந்தைகளை பலிகொடுப்பதற்கு சமமான செயலாய் இருக்கிறது.

7. போதக சமர்த்தராய் இருத்தல்: - இது போதிக்கப்பட வேண்டியதாய் இருக்க, இது போதக ஊழியத்திற்கு மிகவும் அவசியமான ஒன்றாய் விளங்குகிறது. ஒரு நபர் ஊழியத்திற்காய் வழிநடத்தப்படுகிறார் என விசுவாசிப்பாரானால், அவருக்கு

தேவனது வார்த்தையை சரியாய் நிதானித்து போதிக்க இயலாதவராய் இருப்பாரானால், அவர்கள் தங்களது அழைப்பை சரியாய் இனங்காணாதவர்களாய் இருக்கின்றனர். நாம் அனைவரும் சிறப்பான போதனையாளராய் உருவாக உரிய பயிற்சி பெற வேண்டியவர்களாய் இருக்கிறோம், இருப்பினும் இப்படிப்படிப்பட்டவர்களுக்கு ஆரம்ப முதலே, தேவனது வார்த்தையை அறிவிப்பதற்கு, எடுத்துரைப்பதற்குரிய வரத்தை பெற்றிருத்தல் மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. போதக வரம் பெற்ற நபர், ஞாயிறு பள்ளி ஊழியங்களில் மிகவும் சிறப்பானவர்களாய் திகழுவர், வீட்டுக்குழுக்கள், மற்றும் பணியாற்றும் ஸ்தலங்கள் போன்றவற்றில் இவர்கள் எடுக்கும் வேதபாடங்கள் மூலம் அற்புதமானவைகள் நிகழுகிறதாய் இருக்கும்.

8. மது பான பிரியனாய் இருத்தல் கூடாது: - வேதாகமத்தில் மது பானம் அருந்துவது தவறு என எவ்விடத்திலும் கூறவில்லை, ஆனால், அளவுக்கு மிஞ்சி குடித்து தங்களைக் கெடுத்துக்கொள்வது, மற்றும் போதைவஸ்துக்களுக்கு அடிமையாகி தங்களைக் கெடுத்துக்கொள்வது தவறு அப்படிப்பட்ட காரியங்களால் தங்களைக் கெடுத்துக்கொள்ளுதல் கூடாது என வேதம் அறிவுறுத்துகிறது. ஒரு போதகர் மதுபானம் அருந்துவதில் தவறில்லை, அதை அளவுடன் கட்டுப்பாட்டுடன் அருந்துவது வரவேற்கப்படுகிறதாய் இருக்கிறது. மதுபானத்திற்கு அடிமையாகி, அளவுக்கு அதிகமாய் அதைப்பயன்படுத்துவோர் போதக ஊழியத்திற்கு தகுதியில்லாதவர்களாய் வரையறுக்கப்படுகின்றனர்.

9. அடிக்கிறவனாய் இருத்தல் கூடாது: - கொடுக்கப்பட்ட ஊழியத்தில் அடிக்கடி கடினமான பிரச்சனைகளை எதிர்கொள்ளக்கூடியதாய் இருக்கிறது. ஒரு போதக ஊழியம் செய்யும் நபர், கோபதாபப்படுவது, மற்றவர்களை அடிப்பது, குத்துவது தவிர்க்கப்படல் வேண்டும். எந்த ஒரு போதகனும், ஆத்திரப்பட்டு கோபதாபத்திற்குட்பட்டு மற்றவர்களை அடிப்பானேயாகில் அப்படிப்பட்ட நபர் ஊழியத்திற்கு தகுதியில்லாதவனாய் தீர்க்கப்படுகிறான், அவன் தன்னை ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்கு ஒப்பு கொடாமல் இருப்பதாலும், அப்படிப்பட்ட கோபதாபங்களை சரியாய் கையாள இயலாத நிலையிலும் அப்படிப்பட்ட நபர் ஊழியத்திற்கு விலக்கமாக்கப்படுதல் வேண்டும்.

10. இழிவான ஆதாயத்தை இச்சித்தல் கூடாது: - ஊழியம் என்பது ஒரு மனிதர் ஆதாயத்தைத் தேடி, தனக்கு அதிர்ஷ்டத்தை தேடிக்கொள்வதல்ல. ஊழியரை சிறப்பான முறையில், போதிய அளவு ஊதியம் கொடுத்து, பராமரித்தல் மிகவும்

அவசியம். 1 தீமோத்தேயு 5:17, ஆனால் அவர்கள் மிகவும் ஊழியத்தில் பெரிய பணக்காரர்களாய் இருத்தல் என்பது அவசியமற்றது, போதகப்பணியை அல்லது ஊழியத்தை ஒரு வேலை என எண்ணி, பணக்காரர் ஆவது என்ற எண்ணம் உடையவர்களாய் இருப்பார்களேயானால், அவர்கள் தகுதியற்றவர்கள் எனக்கருதப்படுகின்றனர்.

11. பொறுமையுள்ளவராய் இருத்தல் வேண்டும்: - ஒரு போதகர் எப்பொழுதும் ஒருவரில், அவர்களது பாவத்தைக் காணுமுன்னர், அவர்களில் உள்ள நற்பண்புகளைக் காண்பது மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. இதினிமித்தம் மந்தைக்குட்பட்ட அப்படிப்பட்டவர்கள் மீது பொறுமையுடன் இருந்து, அவர்களது பிரச்சனைகளை பொறுத்துக்கொள்ள வழிவகுக்கிறதாய் இருக்கும், மற்றும் அவர்களில் அன்பு செலுத்த இது வழி வகுக்கிறதாய் இருக்கும். இது அவர்கள் செய்யும் "பாவத்தைக் குறித்து" கண்டும் காணாமல் இருப்பதாகாது, பொறுமையுடனும், நிதானத்துடனும், குழப்பத்தில் இருக்கும் மக்களை சரிசெய்வதில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

12. சண்டை பண்ணாதவன் / வாக்குவாதம் செய்யாதவன்: - [Not an argumentative person.] சில மக்கள் வாக்குவாதம் செய்வதை அதிகம் விரும்புகிறவர்களாய் இருக்கின்றனர், எல்லோரும் விவாதம் முடிந்துவிட்டது என எண்ணிக்கொண்டிருக்கும் போது, மற்றொரு பிரச்சனையை விவாதத்திற்கென முன் வைத்து திரும்ப விவாதம் செய்ய முனைகிறவர்களாய் இருப்பர். இப்படிப்பட்ட விவாவதங்கள், போதக ஊழியம் செய்பவர்களுக்கு தகாததாயும், அவர்கள் அவ்வூழியம் செய்வதற்குரிய தகுதியை இழக்கச் செய்கிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட சுயத்தை மையமாய் கொண்ட மனப்பான்மையானது, அவர்களது பெருமையைக் காட்டுகிறதாய் இருக்கிறது, இப்படிப்பட்ட மனப்பான்மை அவர்களில் இருந்து அகற்றப்படாத பட்சத்தில், சபையில் பிரிவினைகள், வாக்குவாதங்கள், குழப்பங்களை ஏற்படுவதற்கு இவர்கள் காரணமாய் அமைவர்.

13. பண ஆசையில்லாதவனாய் இருத்தல் வேண்டும். Not envious of others wealth. மற்றவர்களது ஐசுவரியத்தின் மீது பொறாமையுள்ளவனாய் இருத்தல் கூடாது {இது சரியான மொழிபெயர்ப்பு} சிலர் பணத்தின் மீது இச்சையுள்ளவர்களாய் இருப்பர், போதக ஊழியம் செய்பவர்கள் தங்கள் சுய ஆதாயத்திற்கென, ஆடுகளிடம் எப்படி "கறப்பது" ["fleece the sheep"] எனக்குறியாய் இருப்பர். [இந்த

லிஸ்ட்டில் உள்ள 10 வது பாயிண்டை பார்க்கவும்] சிலர் மற்றவர்களிடமிருந்து பணத்தை சேகரிப்பதில் குறியாய் இருக்கமாட்டார்கள், ஆனால் பணக்கார வாழ்க்கைமுறையினை இச்சிக்கிறவர்களாய் இருப்பர். இப்படிப்பட்டவர்கள் தங்களுக்கு உள்ளவைகள் மீது திருப்திபடாமல், இன்னும் அதிகமாய் வேண்டுமென்பதில் குறியாய் இருப்பர். இப்படிப்பட்ட பாவ இச்சையானது சரி செய்யப்பட்டு, ஓரங்கட்டப்படவில்லையானால், அவர்கள் ஊழியத்திற்கு தகுதியற்றவர்களாகிறவர்களாய் இருப்பர்.

14. தனது சொந்த குடும்பத்தை நன்றாய் நடத்த அறிந்திருத்தல் வேண்டும்: தனது சொந்த குடும்பத்தை நடத்துதல் அல்லது நிர்வகித்தல் என்பது அதிகாரக்கட்டுப்பாட்டில் செயல்பட வேண்டும் எனச் சுட்டிக்காட்டுவதாய் இல்லை, ஆனால் ஆரோக்கியமான நிலையில், ஒத்துழைப்புடன் கூடிய நிர்வாக முறையில் தகப்பனானவர் தனது குணாதிசயத்தில் முன்மாதிரியுடனும், திறமையுடனும், நல்ல தீர்மானங்களுடனும் குடும்பத்தை நடத்திச் செல்வதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

15. பிள்ளைகள் தங்கள் தகப்பனை மதித்து நடக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்: இதன் பொருள் பிள்ளகள் தங்கள் தகப்பனுக்கு பயந்து நடுங்கிக்கொண்டு அஞ்சி வாழ வேண்டும் என்பது பொருளாகாது. தகப்பனது அதிகாரத்தை மதித்து, அவரது கருத்துக்களை மதித்து அவரைக் கனப்படுத்துதல் வேண்டும்.

யூத ஜெப ஆலயங்களில் மூப்பர்கள் திருமணம் முடிந்தவர்களாய் இருத்தல் வேண்டும், திருமணமின்றி இருக்கும் வயோதிபர், அவரது குணாதிசய விஷயத்தில் பரிசீலனை செய்யப்படுகிறவராய் இருப்பார்கள், அவர்களது குணநலன்கள் சார்ந்த விஷயத்தில் பரிசீலனை அவசியபடுவதை எதிர்நோக்கினர். இப்படிப்பட்டவர்களை சோதனைக்குட்படாதவர்கள் எனத் தீர்த்தனர். மனைவியும் குடும்பமும் எல்லா நிலைகளிலும் விசுவாசத்தை பரிசீலனை செய்வதற்கும் மற்றும் குணாதிசயங்களை வகையறுக்கவும் உறுதுணையாய் விளங்கின.

16. பிள்ளைகள் நல்லொழுக்கமுள்ளவர்களாயும், மற்றவர்களை மதித்து நடக்கிறவர்களாயும் இருத்தல் வேண்டும்: பிள்ளைகளின் மனநிலையானது, அவர்களது தந்தை தனது நல்லொழுக்கங்களால், தனது பிள்ளைகளுக்குச் சுட்டிக்காட்டி நடத்துவதில் விளங்குகிறதாய் இருக்கிறது. பிள்ளைகளின் மனநிலை மற்றும் அவர்கள் மற்ற முதியோரை மதித்து நடத்தல் அவர்கள் குடும்பத்தில்

கற்றுக்கொண்ட நற்பாடமாய் அமைகிறதாய் இருக்கிறது. ஒரு போதகருடைய பிள்ளைகளின் பிள்ளைகளும் முதியோரை மதித்து நடக்க கற்றிருத்தல் வேண்டும்.

17. நூதன சீஷனாய் இருத்தல் கூடாது. [Not a new convert.] புதிய விசுவாசியாய் இருத்தல் கூடாது: ஒரு போதக ஊழியம் செய்பவர், புதியதாய் இரட்சிப்படைந்தவராய் இருத்தல் கூடாது, அவர் கற்றுக்கொள்வதற்கும், முதிர்ச்சியடைவதற்கு கால அவகாசம் தேவைப்படுகிறது. அதன்பின்னரே அவர் போதிக்கவும், வழிநடத்தவும் தலைப்படுதல் வேண்டும். ஒருவர் இட்சிப்படைந்து சில ஆண்டுகளுக்குள்ளாக ஊழியம் செய்ய தெரிவு செய்தல் கூடாது. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன, அவைகள் அனைத்தும் இன்னும் அர்த்தமுள்ளவைகளாய் இருக்கின்றன:

முதலாவதாக புதிய விசுவாசி, அவர்கள் வாழ்வின் கனியினால் அறியப்படவேண்டியவர்களாயிருக்கின்றனர், அவர்கள் உண்மையிலே இரட்சிப்படைந்திருக்கிறார்களா மற்றும் தேவனது குமாரராய் இருக்கிறார்களா என நிதானித்து அறிய வேண்டியதாய் இருக்கிறது. பல ஆண்டு காலங்கள் எடுத்து அவர்கள் குணாதிசயங்களினால் அறியப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர், அவர்களது குணாதிசயங்களை தெளிவுறப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். அவர்கள் விசுவாசத்தில் புதியவர்களாய் இருப்பார்களேயானால், அவர்களுக்கு பெரிதளவிலான உபதேசங்களை கற்றுக்கொள்ள சமயம் இல்லாதிருக்கும், அவைகளை வாழ்வில் நடைமுறைப் படுத்த இயலாது இருக்கும், இப்படி நடைமுறைபடுத்தாத உபதேசங்களால், அவர்கள் ஆவிக்குரியகாரியங்களில் நிச்சயமற்றவர்களாயும், ஞானத்தில் குறைவு பட்டவர்களாயும் காணப்பட்டு ஊழியத்தில் வரும் பாடுகள், துன்பங்கள், நெருக்கங்களில் துவண்டு தடுமாறுகிறவர்களாய் இருப்பர்.

பவுல் புதிய விசுவாசிகள் எளிதான முறையில் சாத்தானால் சோதிக்கப்பட்டு பெருமைக்கு உள்ளாகி, மற்றும் இதர பாவங்களுக்கும் உள்ளாகி அவர்கள் ஊழியத்தையே அழித்துவிடுவர் என்பதை பவுல் இனமறிந்து கூறுகிறவராய் இருக்கிறார். ஊழியம் என்பது மாரதான் ஓட்டம் போன்றது, இது பல ஆண்டுகள் முயன்று, தேவனுடன் நடந்து பழகி கட்டப்பட வேண்டியதாய் இருக்கிறது. ஆரம்ப கால சபையில் சில மாதங்களுக்குள்ளாகவே தலமைத்துவத்தை ஸ்தாபிக்க வேண்டிய அவசியம் சபைகளில் ஏற்படுகிறதாய் இருந்தது, அது விதிவிலக்கான காலகட்டமாய் இருந்தது, பவுல் பரீட்சிக்கப்பட்ட தலைவர்களை தெரிவு செய்து

தான் ஸ்தாபித்த சபைகளில் அமர்த்தும்படி நேர்ந்தது.

18. அவன் அவிசுவாசிகளிடமிருந்து தனது குணாதிசய விஷயத்தில் நற்சாட்சி பெற்றவனாய் இருத்தல் வேண்டும்: நாம் கர்த்தருக்கென பொது மேடைகளில் சேவை செய்யும் போது, உலகத்தார் நம்மைக் கவனித்து சாட்சிபகருபவர்களாய் இருக்கின்றனர், நமது வாயை அவர்கள் முன் திறக்கும் முன்னர், அவர்கள் நமது குணாதிசயங்களைக் கண்டு நம்மை அவமதிக்கிறவர்களய் இருத்தல் கூடாது. ஒரு போதகர் அவிசுவாசிகளாலும், தனது குணாதிசயம் குறித்து நன்கு பேசப்படுதல் வேண்டும். அவர்கள் அவரது விசுவாசம் மற்றும் அவரது நம்பிக்கை குறித்தும், அவர்கள் அவமதிக்கக்கூடும், அவ்வாறு அவர்கள் அவமதிப்பார்களேயானால் அவரில் ஏதோ பிரச்சனை உள்ளது என அது சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது.

அவமரியாதையான காரியங்கள் மற்றும் கண்ணி என பவுல் குறிப்பிடுவது, சாத்தான் பயன்படுத்தும் தந்திரங்களாய், அவிசுவாசியானவர்கள் ஒரு தேவ ஊழியர் மீது, குணாதிசய விஷயங்களில் கூறும் குறைபாடாய் இருக்கிறது.

முதலாவதாய், இப்படிப்பட்ட சாட்சியை அவிசுவாசிகளிடமிருந்து பெற்றவர்கள், சபையை அவமரியாதைக்குள் கொண்டுவருகிறவர்களாய் இருக்கின்றனர், அவிசுவாசிகளை அப்படிப்பட்டோரைப் பார்த்து "பாருங்கள் எப்படிப்பட்ட யோக்கியமானவன் சபையை வழிநடத்துகிறவனாய் இருக்கிறான்?" என்பர். இதினிமித்தம் சத்துருவானவன் ஒரு வலையை விரிக்கிறவனாய் இருக்கிறான். அல்லது அன்னாரது பலவீனங்களை பயன்படுத்தி ஒரு கண்ணியை சத்துரு அப்படிப்பட்ட இடங்களில் வைக்க முயலுவான், இதினிமித்தம் நாளடைவில் அப்பகுதியில், ஊழியமானது உடைந்து சீர்குலைந்து போக வழி உண்டாகிவிடும்.

தலைமைத்துவ நடைமுறை:

1. **விசுவாசித்தலும், நடந்து கொள்ளுதலும்:** தேவனை சேவிக்க ஒரு போதகராகவோ / தலைவராகவோ தலைப்படும்போது, விசுவாசித்தலும், நடந்து கொள்ளுதலும் மிகவும் அவசியமாகிறது, தேவனுக்கு முன்பாகவும், நமது குழுக்களுக்கு முன்பாகவும் சரிசமமாய் நிற்பதற்கு இது மிகவும் அவசியமானதாய் விளங்குகிறது. வேதாகம ரீதியில் சேவை செய்வது என்பது, மேற்கண்டவைகளை நிறைவேற்றாதபட்சத்தில், ஒருவராலும் முழுமையாய்

சேவை செய்ய இயலாது.

வாழ்வின் சாட்சியானது மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது, மேற்கூறியவற்றிலுருந்து தவறுவோமெனில், தேவனுக்கேற்ற சேவை செய்ய தகுதியற்றவர்களாகிறோம். போதக தலைமைத்துவத்தை ஏற்றுக்கொள்ளும் போது இப்படிப்பட்ட தகுதியற்ற காரியங்களை தெரியக்காட்டுதல் வேண்டும். மேற்கூறிய தகுதிகளை தங்கள் வாழ்வில் காட்டாதவர்கள், தங்கள் வாழ்வில் ஏற்படும் சோதனைகளை மேற்கொள்வது என்பது அரிதாகிவிடும், தலைமைத்துவத்தில் ஒழுக்க சீர்கேடுகள் உண்டாகி, தங்களது மற்றும் பிறரது விசுவாசக்கப்பலானது சேதமுற நேரிடும். இப்படிப்பட்ட தராதரத்திலிருந்து தவறுததல் என்பது ஒரு நபரை பதவியிலிந்து விலக்குதல், அல்லது "உபயோகமற்றவர்" எனப்பொருள்படாது, குறைவுள்ளவர்களாய் இருப்பினும், அவர்களை ஆவியானவருக்குள் நடக்க ஊக்கமளித்தல் வேண்டும், இப்படிப்பட்ட குறைபாடுகள், ஆவியானவரால் தக்க சமயத்தில் தீர்த்து வைக்கப்படும்

இப்படிப்பட்ட காரியங்களில் குறைபாடுகளுடன் அநேகர் சேவை செய்கிறவர்களாய் இருக்கின்றனர், நாம் அனைவரும் "முன்னேற்றமடைய வேண்டிய வேலையாட்களாய் இருக்கிறோம்." அனுதினமும் பாவத்துக்கு எதிராய் யுத்தம் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம். இவைகள் வேதாகம ரீதியிலான தராதரமாய் இருக்கின்றன, இருப்பினும், கர்த்தர் நம்மை மண்ணென்று அறிவார், மற்றும் நாம்மிடத்தில் பூரணத்தை அவர் எதிர்ப்பார்க்கிறவர் அல்லர், நமக்கு இப்படிப்பட்ட தராதரங்களை அனுசரித்து நடக்கிற தீர்மானம் நமது வாழ்வில் அவசியமாய் இருக்கிறது. நாம் இப்படிப்படிப்பட்ட தராதரங்களிலிருந்து வழுவிப்போக நேரிடலாம், இருப்பினும், தூசியை உதறிவிட்டு எழுந்து நின்று, அவரது அருட்பணியை செய்கிறவர்களாய் இருத்தல் வேண்டும், நமது பாவங்களை அறிக்கை செய்து, தேவனுடன் நல்மனம் பொருந்த வேண்டியவரகளாய் இருக்கிறோம். தவறான, பிழையானவற்றை தேவனது தராதரத்திற்கு ஏற்ப சரிசெய்து கொள்ளுதல் வேண்டும். இராணுவத்தில் சேர்ந்தவர்கள் சில காரியங்களில் தகுதியற்றவற்றவர்களாகும்போது, அவர்கள் தொடர்ந்து அக்காரியங்களில் போதிய பயிற்சி பெற்று, தேர்ச்சியடைந்து, தொடர்ந்து இராணுவத்தில் பணிபுரிகிறவர்களாய் இருக்கின்றனர். அதைப்போன்றே நாமும் சில காரியங்களில் தகுதியில்லை என்றால் தொடர்ந்து முயற்சி செய்து, தகுதியை அடைந்து கர்த்தரின் பணியை நிறேவேற்றுவோமாக!

ஒரு சகோதரனையோ அல்லது சகோதரியையோ ஊழியப் பயிற்சியில் உட்படுத்தும்போது, இவ்வகையான பதினெட்டு தராரதரங்களையும் அவர்களது வாழ்வில் கடைபிடித்து நடக்க அவர்களுக்கு இது குறித்து விளக்கம் அளித்தல் வேண்டும், இவைகள் அவர்களது வாழ்வில் இருக்கின்றனவா என பரிசோதித்து அறிதல் வேண்டும். கூறப்பட்டுள்ள தராதரத்தில் ஏதாகிலும் ஒன்றில் குறைவுபட்டு காணப்படுவார் களேயானால், அவர்கள் போதகப்பணி நியமனத்திற்கு தகுதியற்றவர்கள், இக்காரியங்களில் அவர்கள் தங்களது குறைபாடு நீங்கிய பின்னர், அவர்களைப் போதகப்பதவிக்கு ஏற்படுத்துவது உத்தமம். இராணுவத்தில் ஒருவர் உயர் அதிகாரியாக தெரிவு செய்யப்பட வேண்டுமானால், "தெரிவு செய்யும் போர்ட்" மூலமாக பல பரிசீலனைகளுக்கூடாக கடந்து சென்று தெரிவு செய்யப்படுவர். இத்தேர்வானது பல நட்கள் அறிமுகத்தேர்வு நடந்த பின்னர், மற்றும் கல்வி அறிவு மற்றும் நடைமுறைப்பாடம் போன்றவைகளில் தேர்வு பெற்ற பின்னர் அபாயகரமான சூழ்நிலைகளில் இராணுவத்தை அவரது கரத்தில் ஒப்புவிப்பர். அவர்கள் எப்பேர்பட்ட கல்வி அறிவில் தேர்ச்சிபெற்றவர்களாயிருப்பினும், தேர்வுக் கமிஷன் அவர்களைத் தெரிவு செய்யாவிட்டால் அவர்கள் இப்பதவில் அமர்த்தப்படுவது கிடையாது. இவ்வேதபகுதியினால் நாம் கட்டளை பெறுகிறவர்களாய் இருக்கிறோம், இரண்டாவது அம்சமாய் நாம் கற்றுக்கொள்ளப்போவது, விதிமுறைகள் மற்றும் செய்முறைகள் குறித்து இராணுவம் நமது தேசத்தில் செயல்படும் விதம் குறித்து அறிந்து கொள்ளப்போகிறோம்.

<u>**2. தீத்து 1:5-16.**</u>

"1:5 நீ குறைவாய் இருக்கிறவைகளை ஒழுங்கு படுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தாதீவிலே விட்டுவந்தேனே. 1:6
குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், துன்மார்க்கரென்றும், அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம். 1:7 ஏனெனில், கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்ற விதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபான பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும்,
1:8 அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர் மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும், 1:9

ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும், வல்லவனாய் இருக்கும்படி, நான் போதிக்கப்பட்டதிற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்கிறவனுமாய் இருக்க வேண்டும்."

பிரதிபலிப்புகள்:

1:5 **நீ குறைவாய் இருக்கிறவைகளை ஒழுங்கு படுத்தும்படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கிரேத்தாதீவிலே விட்டுவந்தேனே.**

தீத்து தனக்கு இடப்பட்ட கட்டளைகளை இங்கு நினைவு கூற அழைக்கப்படுகிறவராய் இருக்கிறார். கிரேத்தாவில் பவுல் ஸ்தாபித்த சபைக்கு தலமைத்துவ அமைப்பை ஏற்படுத்தி, அச்சபைகள் சுமூகமாகவும், பாதுகாப்புள்ள நிலையில் பரவிப் பெருகவும், தகுதிவாய்ந்த போதக தலைமைத்துவ குழுக்களை ஏற்படுத்த பவுல் தீத்துவுக்கு அளிக்கிற கட்டளைகளைக் காண்கிறோம். ஏற்படுத்தப்பட்ட நபர்கள் சரியான தெய்வீக முறையில் சபையை நடத்த எதிர்பார்க்கப்பட்டனர். ஜாக்கிரதையாய் தெரிவு செய்வதற்கான திறவுகோள் காரணம் என்னவெனில், இப்படிப்பட்ட தலைவர்கள், சபையை பாதுகாப்பான முறையிலும், ஆவியானவரின் வழிநடத்துதலிலும் செயல்படச் செய்கிறவர்களாய் இருக்கும்படியாய் தெரிவு செய்யப்பட்டனர். கர்த்தர் அளித்த தராதரத்தின் அடிப்படையில் இப்படிப்பட்டவர்கள் தெரிவு செய்யப்படவில்லையானால், கர்த்தரின் வழியில் சபையை நடத்த தகுதியில்லாவர்களாகிவிடுவர். இங்கு மூப்பர் / போதகரை நியமணம் செய்வதற்குரிய தகுதியானது, 1 தீமோத்தேயு 3:2-7 வரையுள்ள வேதபகுதியில் கொடுக்கப்பட்டுள்ள தகுதி ஒப்பாகவே இருக்கிறது.

சுவிஷேச ஊழியத்தினால் ஆரம்பிக்கப்பட்டு, ஸ்தாபிக்கப்பட்ட சபையானது ஒழுங்குபடுத்தப்பட்டு, தவறான உபதேசங்கள் மற்றும் வஞ்சகர்களுக்கும் விலக்கிக் காக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது, காரணம் வஞ்சகர்கள் சபை மக்களைக்கொண்டு தொழில் செய்யாதவண்ணம் அவர்களுக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டது. ஸ்தல சபையின் தலைவர்கள் தேவனால் அளிக்கப்பட்டவர்களாயிருந்து, சத்துருவின் தாக்குதலுக்கு பதில் அளித்து, அவனிடமிருந்து பாது காக்கும் பொறுப்பில் ஏற்படுத்தப்படுகிறவர்களாய்

இருந்தனர். தேவன் அழைக்கப்பட்ட, பரிசுத்த ஆவியானவரின் வரங்களைப் பெற்ற, வல்லமையால் தரிப்பிக்கப்பட்ட, கீழ்ப்படிதலுள்ள ஆண்கள் மற்றும் பெண்கள் மூலமாய் கிரியை செய்கிறவராய் இருக்கிறார். தேவனுக்கேற்ற தலைவர்களை தெரிவு செய்வது தீத்துவின் பணியாய் இருந்தது.

ஒவ்வொரு ஸ்தல சபையின் தேவையை சந்திக்கும்படி. தேவன் எப்பொழுதும் பரிசுத்த ஆவியானவரின் வரம் பெற்றவர்களை தெரிவு செய்து உறுதி செய்கிறவராய் இருக்கிறார். 1 கொரிந்தியர் 12 ம் அதிகாரம். தேவன் கடந்த கால நித்தியத்தில் யார் இரட்சிப்படைவார்கள் என்பதை முன்னறிந்தவராய் இருக்கிறார், மற்றும் ஸ்தல சபையை நிர்வகிக்கும்படியான அவசியமான வரங்களை ஒவ்வொருவருக்கும் அவர் அளிக்கிறவராய் இருக்கிறார். எப்பொழுதும், போதுமான போதகர்கள், மூப்பர்கள், சுவிஷேசகர்கள், நிர்வாகிகள் இருக்கிறார்கள், ஆனால், பரிசுத்த ஆவியானவருக்கு செவிகொடுத்து, தேவனது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து, அவர்களுக்கு நியமிக்கப்பட்ட அவர்களது கடமைகளை செய்யத் தேடுபவர்களையே தேவன் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார், தங்களுக்கு தேவன் அளிக்காத பதவிகளை தேடுதல் கூடாது.

1:6 குற்றஞ்சாட்டப்படாதவனும், ஒரே மனைவியை உடைய புருஷனும், துன்மார்க்கரென்றும், அடங்காதவர்களென்றும் பேரெடுக்காத விசுவாசமுள்ள பிள்ளைகளை உடையவனுமாகிய ஒருவனிருந்தால் அவனையே ஏற்படுத்தலாம். 1:7 ஏனெனில், கண்காணியானவன் தேவனுடைய உக்கிராணக்காரனுக்கேற்ற விதமாய், குற்றஞ்சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபான பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும், 1:8 அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர் மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும், 1:9 ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும், வல்லவனாய் இருக்கும்படி, நான் போதிக்கப்பட்டதிற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்கிறவனுமாய் இருக்க வேண்டும்.

இப்பட்டியலில் மூப்பர்களுக்குரிய குணாதிசயங்களின் பட்டியல் நமக்கு உணர்த்துவது என்னவெனில், தேவன் அழைக்கும்போது, இப்பட்டிப்பட்ட குணாதிசயங்கள் ஒருவரில் இல்லையானால், அவர்கள் வரம் பெற்றவர்களாய்

இல்லாதிருப்பர் அல்லது ஆவிக்குரிய நிலையில் மாம்சீகத்துக்குரியவர்களாய் இருப்பர், இப்படிப்பட்டவர்கள் தங்கள் சாட்சியை இழந்து போகிறவர்களாயும், தங்களைத்தாங்களே தகுதியற்றவர்களாக்குகிறவர்களாயும் இருப்பர். இது நிரந்தரமானதன்று, பரிசுத்த ஆவியானவர் ஆத்துமத்தில் உருமாற்றமடையச் செய்கிறவர் மற்றும் அழைக்கப்பட்டவர்கள் தங்கள் தவறுகளை சரிசெய்து கொள்ள இயலும்.

சிலர் இவ்வாறு கேள்வி எழுப்பக்கூடும் இங்கு "மூப்பர்" எனக்குறிப்பிடப்படுவோர் போதகர்களா, மற்றும் 1 தீமோத்தேயு 3 குறிப்படப்படும் "பிஷப்களா?" என, இவ்வேதபகுதியில் கொடுக்கப்பட்டுள்ள குணாதிசயங்களைக் காண்போம், ஆவிக்குரிய தலைவர்கள் அனைவருக்கும் ஒரேவிதமான வரமானது அளிக்கப்பட்டிருப்பது இங்கு தெளிவாகிறது. சிலரை சபையில் இனங்கண்டு கொள்ளும்படிக்கு அவர்களது அடைமொழிகள் இவ்வாறு இட்டு அழைக்கப்படுகிறது.

"மூப்பர்' என்பதன் கருத்து, ஒரு போதகரின் கடமையை விவரிக்கிறதாய் இருக்கிறது, "போதகர்" என்கிற பதமானது, மந்தையைக் குறித்த கரிசனை உள்ளவர்களை இனங்கான பயன்படுத்தப்படுகிறதாய் இருக்கிறது. "பிஷப்" என்கிற பதம் சபையின் ஆவிக்குரிய ஆரோக்கியத்தை பொறுப்பெடுப்பவர்களை இனங்கான அளிக்கப்படுகின்ற பதமாய் இருக்கிறது.

திடீரென மூப்பரிலிருந்து பிஷப்பிற்கு மாறுவது வசனம் 7 ல் தெளிவுபடுத்தப்படுகிறது. இவ்விருபதங்களும், பவுல் பயன்படுத்தும்போது, மாற்றப்பட இயலாத பதங்களாயிருக்கிறது. சபை சரித்திரத்தின் பிற்காலப்பகுதியில், "பிஷப்" என்கிற பதம், பட்டணத்தில் உள்ள மூத்த வயோதிப போதகர்களைக் குறிக்கப்பயன்பட்டது. பின்னர் சபையானது ரோம சாம்ராஜ்ய சபையாய் மாறிய போது, இப்பதம் பயன்படுத்தப்படாது மறைந்துவிட்டது.

இங்கு கொடுக்கப்பட்டுள்ள குணாதிசயங்கள் விவரிப்பது என்னவென்றால், ஒருவர் கர்த்தரை சேவிப்பாரென்றால், அந்நபருக்கு, கர்த்தருடைய தன்மையும், கர்த்தரின் இருதயம் போன்ற இருதயமும் இருத்தல் வேண்டும். Gene Getz என்பவர் கூறும் பொழுது, "சேவை செய்யும் மனிதர், கிறிஸ்து போன்ற நடத்தையுள்ளவர்களாய், அவரது மாதிரியை விளங்கப்பண்ணுதல் வேண்டும்." என்கிறார். இங்கு கூறப்படும் தாராதரங்களை நாம் காணும்போது, நவீன கால மக்கள் கூறுவது என்னவெனில், வேதாகம ரீதியில் உள்ளவர்கள் விவாகரத்து மலிந்துள்ள சமுதாயத்தில்

எங்கிருந்து கிடைப்பார்கள்? இது போன்ற கேள்விகளை நாமும் கேட்டகக்கூடும், ஆனால் இது வேதாகம தராரதரமாய் இருக்கிறது, இப்படிப்பட்ட தராதரமானது, ரோம சாம்ராஜ்யம் ஆழுகை செய்து வந்தகாலத்தில் நடைமுறைப் படுத்தப்பட்டது என்றால், இதை மாற்றி அமைப்பது குறித்து நாம் எதுவும் சொல்வதற்கில்லை. இதைக் குறித்து சந்தேகம் எழுமானால், ரோமரின் ஒழுக்கநெறி குறித்து எழுதிய சரித்திர ஆசிரியர்களாகிய Tacitus and Seutonius, இவ்விருவரின் ரோமர் ஒழுக்க நெறி சீர்கேடந்ததை குறித்து எழுதியிருப்பதை சரித்திர ஏடுகளில் கண்டறியுங்கள். இப்படிப்பட்டவர்களது புஸ்தகங்கள் இன்றும் Penguin paperbacks. ல் கிடைக்கிறதாய் இருக்கிறது.

தேவனை சேவிப்பவர்களுக்கு ஒழுக்க சுத்தம், மற்றும் குணாதிசயத்தில் பெலன் அவசியமாய் இருக்கிறது. G B Wilson அவர்கள் கூறும்போது, இதுபோன்ற பொக்கிஷத்தை தேவன் மண்ணான பாத்திரங்களில் அருளியிருக்கிறார், அப்பாத்திரங்கள் தூய்மையானதாய் இருத்தல் வேண்டும் மற்றும் சாட்சியுள்ள பாத்திரமாய் இருத்தல் வேண்டும்." என்கிறார். ("The Pastoral Epistles", page 101). மூப்பத்துவத்தின் கடமையானது "பரிசுத்த அழைப்பாய்" இருக்கிறது. ஒரு போதகர் இது போன்ற பரிசுத்த வாழ்க்கை வாழ்ந்து, "பரலோகப் பிரஜையாய் பொருந்த வாழவேண்டும்." (Ibid page 131).

தீத்து மூப்பர்களை நியமித்தாரா அல்லது சபை நியமித்த மூப்பர்களை அங்கீகாரம் செய்தாரா என சர்ச்சைகளும் விவாதங்களும் எழும்புகின்றன. இது குறித்து E. Scott அவர்கள் குறிப்பிடும்போது: தீத்து மேற்பார்வை செய்தார், பவுலின் கட்டளையின்படி அதிகமான மூப்பர்களை நியமனம் செய்யவில்லை, இவ்வாறு அவரது கட்டளைகளை மேற்கொண்டார்." ("Pastoral Epistles", page 153). மற்றொரு எழுத்தாளர் இவ்வாறு கூறுகிறார், "தெரிவு செய்தலும், நியமித்தலும் வேறு வேறாய் இருந்தது, சுவிஷேசகனாகிய தீத்து அலுவலகத்தை அமைத்துக்கொடுத்தார், மற்றும் சந்தேகமின்றி சபையாரிலிருந்து தெரிவு செய்து உதவினார்."

தீத்து "சபையின் காரியங்களை முறையாக அமைத்துக் கொடுத்தார்," பவுல் தனது வார்த்தைகளினால் தெளிவுபடுத்துவது என்னவென்றால், சில காரியங்களைச் செய்யும்படி தீத்துவை அங்கு விட்டுச் சென்றார். இதன் பொருள் சில மாதங்களில் உருவான சபையில், பவுல் கூறிய வேதாகம தகுதிக்கேற்ப, மூப்பர்கள் முதிர்ச்சியடையாமல் இருப்பதினிமித்தம், சில காலம் தீத்து சபையுடன் இருந்து மூப்பர்களை நிதானமாய் ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தீத்துவை

அங்கு விட்டு சென்றிருக்கலாம் எனக்கருதப்படுகிறது. ஆனல் தீத்து எவ்வித தெரிவு செய்தலும் அங்கு நடப்பிக்கவில்லை என்பது தெளிவாய் விளங்குகிறதாய் இருக்கிறது. (J. W. Roberts, "Titus", page 9).

இங்கு கூறப்படும் கருத்துக்கள், அர்த்தமுள்ளவைகளாய் இருக்கின்றன. ஆனால் இவைகள் வேதபகுதி என்ன சொல்கிறதோ அதைக் கூறவில்லை. நாம் வேதபகுதியின் படி எதிர்பார்ப்பதெல்லாம், பரிசுத்தாவியானவரால் நிரப்பப்பட்டு, வேதாகம ரீதியில் பவுல் குறிப்பிட்ட படி மனிதரை சபைக்கு ஏற்படுத்துதல் வரவேற்கப்படுகிறதாய் இருக்கிறது.

இதுவே சபையானது ஆரம்பிக்கப் படுகிற காலத்தில் அதற்கு அவசியமானதாய் விளங்குகிறது. தீத்து பிரத்தியேகமான சூழ்நிலையில் இருந்தார், இதற்கு பின்னர் தீத்து கிரேத்தா சபையில் இருந்தார் என நாம் காண்பதற்கில்லை.

பவுல் தெளிவுற ஒரு நோக்கத்துடன் தீத்துவை நியமணம் செய்து மூப்பர்களை ஒவ்வொரு பட்டணத்திலும் ஏற்படுத்துமாறு விட்டுச்சென்றதை பார்க்கிறோம். ஒவ்வொரு ஸ்தலத்திலும் ஒரு சபையானது ஸ்தாபிக்கப்படும் பொழுது, யூதர்கள் எவ்வாறு மூப்பர் குழுக்களால் ஜெப ஆலய நிவகித்தனரோ அவ்வாறே சபைகளையும் நிர்வாகம் செய்யும்படி மூப்பர் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டது. வேதாகமும் இப்படிப்பட்ட மூப்பர் குழு நிர்வாகத்தை ஆதரிக்கிறதாய் இருக்கிறது. இரண்டாம் நூற்றாண்டு வரையிலும் போதகர் என தனிப்பட்ட நிலையில் ஒருவராய் சபையை நிர்வகித்தது இல்லை, இரண்டாம் நூற்றாண்டுக்குப் பின்னர் பிஷப் ஆதிக்கம் மெலெழும்பியது. ஒரு ஆணோ அல்லது பெண்ணோ தனிப்பட்ட "ஆழுகை" செய்ய விருப்பமுள்ளவராய் இருப்பாரானால், அவர்கள் பெருமை என்னும் பாவத்தினால் காட்டிக்கொடுக்கப்படுகிறவர்களாய் இருந்தனர். இங்கு நாம் காண்கிறபடி, அவர்களது தகுதியற்ற நிலையானது நிரூபணம் செய்யப்படுகிறது.

இங்கு பவுல் கூறும் குணாதிசயங்கள் அனைத்தும் முக்கியம் வாய்ந்த ஒன்றாய் விளங்குகிறது, தெரிவு செய்யப்படுகிற மனிதர், "தேவனது உக்கிராணக்காரனாய் இருக்கிறார்" ஆகையால் அவர்கள் தேவனது வீட்டாரை நிர்வகித்து நடத்தக் கடமை பட்டுள்ளனர்.

1. குற்றம் சாட்டப்படாதவர்: - மூப்பராய் ஏற்படுத்தப்படுகிறவர், பொது மக்களிடமிருந்து எவ்விதக் குற்றச்சாட்டுகளோ, முறண்பாடுகளோ இன்றி

இருத்தல் வேண்டும், இப்படிப்பட்டவரைக் குறித்த, எவ்வித குற்றச்சாட்டுகளும் சபைக்குள் விவாதிக்க கொண்டுவரப்படக்கூடாது. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் எதும் கடந்த காலத்தில் கூட அன்னாரது வாழ்வில் இருந்திருக்கக்கூடாது, மற்றும் இது வரை நியாய சங்கமானது அவர் குற்றம் செய்து அதற்குரிய விசாரணை செய்து இருக்கக்கூடாது. [அவர் எவ்வித குற்றச்சாட்டும் அல்லது தண்டனை பெற்றவராய் இருத்தல் கூடாது] ஆரம்பகால சபையானது இப்படிப்பட்ட காரியங்களில் மிகவும் வைராக்கியமாய் இருந்து சபையின் கௌரவத்தைக் காத்து நடக்கிறவர்களாய் இருந்தனர்.

கர்த்தர் பாவிகளை மன்னித்து ஏற்றுக்கொண்ட போதும், உலகமானது அவ்வாறு ஏற்றுக் கொள்ள மறுக்கிறதாய் இருந்தது, ஒரு விசுவாசி ஒழுக்க நெறி தவறி பாவம் செய்யும் போது, (விபச்சாரம், குழந்தைகளிலிடம் பாலுணர்வைத் தூண்டும் வண்ணம் நடந்து கொள்ளுதல் [paedophilia] அல்லது எந்த ஒரு சட்டவிரோதமான குற்றத்தில் செயல்படுதல்) ஆரம்ப கால சபையானது, இவ்வித குணாதிசயங்களை மனதில் கொண்டு, மூப்பர்கள் இவ்வாறு செயல்பட்டது கண்டுபிடிக்கப்படுமேயானால் அவர்களை நிரந்தரமாய் மூப்பர் பதவியிலிருந்து விலக்கி வைத்தனர். அவர்களது சபைக்கடுத்த அலுவல்கள் அப்படிப்பட்ட செய்கையால் தீட்டுப்பட்டுப் போனதாலும், உலகத்தாரின் கண்களுக்கு முன்னதாய் அப்படிப்பட்டவர்கள் குற்றவாளிகளானபடியாலும் இவ்வாறு முடிவெடுத்தனர். இது போன்ற காரியங்கள் இப்பகுதியில் திரும்பத்திரும்ப கூறப்படுகிறது. வசனம் 6 மற்றும் 7 ல் இது குறித்த முக்கியத்துவமானது அதிகம் வலியுறுத்தப்படுகிறது.

2. ஒரே மனைவியை உடைய புருஷன்: தீமோத்தேயுவில் நாம் கண்டவண்ணம், இங்கு பரந்த நிலையில் இதன் அர்த்தம் குறிப்பிடப்படுகிறதாய் இருக்கிறது. இப்பாட ஆசிரியர் Ed Glasscock (Bibliotheca Sacra September 1983, pages 244 - 258), இவருடன் சேர்ந்து விசுவாசிப்பது என்னவெனில், பவுல் இங்கு வலியுறுத்துவது என்னவெனில், மூப்பர் என்பவர் "ஒரே மனைவியை உடைய புருஷனாய் இருத்தல் வேண்டும். மற்ற பெண்களில் மேல் உள்ள அன்பு இவரை மேற்கொள்ளாதிருத்தல், மனைவியைத் தவிர வேறு எவருக்கும் தன்னை அற்பணியாது வாழுதல் முக்கியத்துவப்படுத்தப்படுகிறது. (See also Gene Getz, IBID, pages 43-45.). பாலியல் அறநெறியில், இவ்வுலகில் உள்ளவர்களைப் பார்க்கிலும் மேன்மையான நிலையில் மூப்பரானவர் உயர்ந்து காணப்படுதல் வேண்டும்.

3. குற்றம் சாட்டப்படுகிற மற்றும் அடங்காத பிள்ளைகளை உடையவராய் இருத்தல் கூடாது, உண்மையுள்ள பிள்ளைகளை உடையவராய் இருத்தல்

வேண்டும்: - எல்லா பிள்ளைகளும் பெற்றோருக்கு சில சந்தர்ப்பங்களில் தர்மசங்கடத்தை ஏற்படுத்துகிறவர்களாயிருப்பர், இங்கு கூறப்படும் கண்ணோட்டம் அத்தகையது அன்று. பவுல் தெளிவு படக் கூறுகிறார், அவர் பயன்படுத்தும் வார்த்தைகளின் மூலம், அவர் என்ன செல்ல வருகிறார் என்பதை புரிந்து கொள்ளலாம், வயதுக்கு வந்த பிள்ளைகள், முழுவதுமாய் அடங்காதவர்களும், தேவனுக்கும் பெற்றோருக்கும் ஒழுக்க ரீதியான நிலையில் தவறி வாழ்பவர்களைக் குறித்து பவுல் குறிப்பிடுகிறார். இங்கு பவுல் கூறுபவன, ஒழுக்க சீர்கெடுள்ள பிள்ளைகள், அடங்காதவர்கள் போன்ற பதங்களின் அர்த்தம், தங்களது பெற்றோரின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட நிலையில் வாழும் பிள்ளைகளை குறிப்பிடுகிறதாய் இருக்கிறது.

இது போன்ற காரியங்கள் ஒரு நபரை மூப்பராய் தெரிவு செய்வதற்கு விதிவிலக்கல்ல, ஒருபிள்ளை வளர்ந்து பெரியவராகும்போது, தந்தையின் போதனைகளை புறக்கணிப்பார் என்றால், அல்லது தனது தந்தை புறஜாதியனாய் இருந்த காலத்தில், அவரது முன்மாதிரிகளை தற்போது பிள்ளை பின்பற்றுகிறவனாய் இருக்கக்கூடும். As Getz observes, "குடும்பத்தில் ஒரு நபர் கெட்டுப்போனவராய் [black sheep] இருப்பாரேயானால், அது எப்பொழுதும் தகுதியற்ற நிலையை உருவாக்காது." (IBID page 47).

எந்த ஒரு மனிதனும் தனது பிள்ளைகளுக்கு தெய்வீக வழியில் போதித்து நடத்தி, ஊக்கமளியாது இருப்பானேயானால், அந்நபர் ஒரு போதனையாளராகவோ, அல்லது ஜாக்கிரதையுள்ள விசுவாசியாகவோ இருப்பது குறித்து சந்தேகிக்கப்படுகிறவனாய் இருக்கிறான்.

தனது சொந்த பிள்ளிகளை சரிவர பராமரியாதவன், மற்றவர்களை எப்படி பராமரிக்கிறவனாய் இருக்கமுடியும்? இப்படிப்பட்டவர்கள் தங்கள் குடும்பத்தில் கவனம் செலுத்துகிறவர்களாய் இருத்தல் வேண்டும். அவர்கள் சபையின் தலமைத்துவத்தை எடுக்கும் முன்னர், இப்படிப்பட்ட காரியங்களை சரிப்படுத்துதல் வேண்டும். ஒரு அலுவலர் தெரிவு செய்யும்போது, தனது குடும்பத்தை நிர்வகிப்பதில் தவறும்போது, அவரை நிர்வாக விஷயத்தில் நம்புவது அரிதான காரியமாய் இருக்கிறது.

இது பவுல் குறிப்பிடுகிற காரியங்கள் முதன்மைவாய்ந்ததாய் இருக்கிறது. ஒரு மூப்பரின் குடும்பவாழ்க்கையானது முதலாவது சரிசெய்யப்பட வேண்டியதாய்

இருக்கிறது. குடும்பத்தினர் அனைவரையும் அவர் திருப்தி செய்ய வேண்டியவராய் இருக்கிறார். குடும்பத்தில் பிரிவினைகள், குழப்பங்கள், கலகம் அல்லது மன வருத்தங்கள் இல்லாது ஒரு மூப்பரானவர் தனக்கு அளிக்கப்பட்டுள்ள சபைக்கடுத்த அலுவல்களில் கவனம் செலுத்த முழு மனதுடனும், முழு பெலத்துடனும் இருத்தல் வேண்டும். மூப்பரின் குடும்பமானது "ஒரு பரலோகமாய்" இருத்தல் வேண்டும், ஊழியத்தில் அவருக்கு ஏற்படுகிற பாடுகள், வருத்தங்களின் போது, அவரது குடும்பமானது அவரை இளைப்பாறச் செய்கிற இடமாய் இருத்தல் வேண்டும். அப்படியில்லாதிருந்தால் அவர் வெகுவிரைவிலே, தனது பணியில், தனது வாழ்வை முடித்துக் கொள்ள வேண்டியதாய் இருக்கும்.

4. தன்னிஷ்டப்படி செய்யாதவன்: - இது தீமோத்தேயுவின் பட்டியலில் இருந்து புதிய குணாதிசயமாய் விளங்குகிறது. இது அபகரித்தல் மற்றும் சுய பெருமையினிமித்தம் வாதாடுதல் போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது. ஒரு மூப்பன் இன்றைய அளவில் நடைபெறுகிறது போன்று, தனிப்பட்ட பட்டியலை தனக்கென, தனது பதவிக்கு வைத்துக் கொள்ளக்கூடாது. அவர் கர்த்தரை சேவிக்கிறவராய் இருத்தல் வேண்டும், தனது சொந்தக் கொள்கைகளின் மீது இலக்காய் இருத்தல் கூடாது, தனது கண்ணோட்டம், தனக்கு இஷ்டமானவைகள் மீது நோக்கமாய் இருத்தலும் கூடாது. கர்த்தரின் சித்தமே தனது சித்தமாய் அமைத்துக்கொள்ளுதல் வேண்டும், இப்படிப்படிப்பட்ட காரியங்களில் தீர்மானத்துடன் செயல்படுதல் வேண்டும்.

5. முற்கோபியாய் இருத்தல் கூடாது: - சுய அடக்கம் என்பது பரிசுத்த ஆவியானவரின் கனியாய் இருக்கிறது, கர்த்தருக்கென செய்யப்படும் எவ்வித பணியிலும், இது அவசியமான ஒன்றாய் இருக்கிறது. ஒருவர் கோபப்படும் போது, அவர் அதை நிறுத்திவிட்டு, தான் ஏன் அவ்வாறு கோபப்படுகிறோம் என்பது குறித்து எண்ணிப்பார்த்தல் வேண்டும். தான் கோபப்படுவதற்கு அதிகாரப்பூர்வமான காரணங்கள் இருக்கக்கூடும், இருப்பினும் கோபப்பட்ட பின்னர் உள்ள விளைவை எண்ணிப்பார்த்தல் வேண்டும். இவ்வகையான குணாதிசயத்தை ஒரு நபர் கட்டுப்படுத்த இயலாதபட்சத்தில் அவர் தலைமைத்துவத்திற்கு தகுதியற்றவராகிறார்.

6. மதுபான பிரியனாய் இருத்தல் கூடாது: இது ஆங்கிலத்தில் Not given to wine என இருக்கிறது. "மது அதிகமாய் அருந்துதல்" அல்லது அதன ஆதிக்கத்திற்கு கீழ் இருத்தல், என்று பொருள்படும், பரிசுத்த ஆவியானவரது ஆதிக்கத்தின் கீழ் இராது

எந்த ஒரு காரியத்திற்கு கீழ் இருப்பது கர்த்தரது சேவையில் தவிர்க்கப்படல் வேண்டும். எபேசியர் 5:18. 1 தீமோத்தேயுவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, மனிதர் திராட்சை இரசம் அருந்தக்கூடாது என்பது நியமமல்ல, ஆனால் அதைக் குடிப்பதற்கு தன்னை அடிமையாக்கிக்கொள்ள தெரிந்து கொள்ளுதல் தவறு என கூறப்படுகிறது. தான் பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டுமே ஒழிய மதுபானக் கட்டுப்பாட்டிற்குள் இருத்தல் கூடாது.

7. மற்றவர்களை அடிக்கிறவனாய் இருத்தல் கூடாது: - மறுபடியும் ஒரு முறைகூட சுயக்கட்டுப்பாடு குறித்து இங்கு காண்கிறோம். மிகவும் உணர்ச்சி வசப்படக்கூடிய பகுதிகளான இறையியல் மற்றும் சபை அரசியலில் சபையின் மூப்பரானவர்கள் திடீரென கோபப்பட்டுவிடக்கூடாது மற்றும் முன் யோசனையின்றி ஒருவரையும் அடித்துவிடக்கூடாது. சில சந்தர்ப்பங்களில் மற்றவர்களின் பாதுகாப்பிற்காக அடிக்கலாம், ஒருவர் ஒன்றுமறியாத ஒருவரை அடிக்கும்பொழுது, அவரைக் காக்கும்படிக்கு மற்றவரைஅடித்து அச்சூழ்நிலையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரலாம், இது விதிவிலக்காய் இருக்கிறது, இது கோபதாபத்தின் விளைவாய் இருத்தல் கூடாது.

8. இழிவான ஆதாயத்தை இச்சியாதவனாய் இருத்தல் வேண்டும்: பணம் என்பது நல்ல வேலையாளாய் இருக்கிறது ஆனால் கொடிய எஜமானனாய் இருக்கிறது, ஒரு மூப்பனானவன் தனக்குள்ளது போதுமென்றிருத்தல் வேண்டும், அதிகம் அதிகமாய் சேர்த்தல் வேண்டும் பேராசையுடன் திகழுதல் கூடாது. ஒரு நபர் அதிகாரத்தை அபகரிப்பதற்கு அடிமைத்தனப்பட்டு இருப்பாரேயானால், அதை பணத்தினால் அபகரிக்க எண்ணமுடையவராய் இருப்பர், இப்படிப்பட்டவர், அதிகாரத்தில் இருக்கும் போது பணத்தை சேகரித்து பாதுகாப்பது எப்படி என்பதில் கண்ணும் கருத்துமாய் இருப்பாரேயன்றி, சபையை எவ்வாறு நடத்துவது என்பதில் கவனம் செலுத்தாது இருப்பர்.

ஒரு நபரை பண ஆசையானது மேற்கொண்டு வழி நடத்துமேயானால், அப்படிப்பட்டவர்கள் தேவைக்கு அதிகமாகவே பணம் உண்டாக்குகிறவர்களாய் இருப்பர். அவ்வாறு அவர் தலைப்படும்போது, அவர் உண்டாக்கும்பணத்திலிருந்து கர்த்தருக்கென கொடுக்க கடமை பட்டுள்ளார். அவர் தலைமைத்துவத்தின் மீது கவனம் செலுத்தாது, சபைப் பொறுப்புகளின் மீது கவனம் செலுத்தாதவராய் இருப்பார். இப்படிப்பட்ட வியாபார நோக்குடன் இருப்பாரேயானால், அப்படிப்பட்டவர் மூப்பராய் இருப்பதற்குரிய தகுதியை இழக்கிறவராய் இருக்கிறார்.

வெற்றிகரமான வியாபார நோக்குடன் இருப்பவர் ஊழியத்தையும் வியாபாரத்தையும் இணைத்து நல்ல ஆவிக்குரிய தலைமைத்துவத்தில் ஈடுபடுகிறவராய் இருக்கலாம். அப்படிப்படிப்பட்டவரை மேற்கொள்ளும் ஆர்வம் என்னவாய் இருக்கிறது என்பதை பகுத்து அறிய வேண்டியதாய் இருக்கிறது. பணத்தின் மீது உள்ள இச்சையாய் இருக்குமேயானால், அவரது ஜனங்களால் தலைமைத்துவத்திற்கு உரிய தகுதியில்லையென தீர்க்கப்படுகிறவராய் இருப்பர்.

9. அந்நியரை உபசரிப்பதில் ஆர்வம் காட்டுதல்: - உலகம் போகும் போக்கில், ஒருவர் விசுவாசியாய் இருப்பது என்பது பயங்கரமான காரியமாய் இருக்கிறது. கர்த்தருடைய வேலையாய் வரும் விருந்தினருக்கு ஒரு மூப்பரது வீடானது எப்பொழுதும் திறந்து இருப்பதாக இருத்தல் வேண்டும். இன்றைய அளவிலும் இது செயல்பட்டு வருகிறதாய் இருக்கிறது. அநேக இடங்களில், மூப்பரானவர் தனது வீட்டை கர்த்தரின் பணியில் ஈடுபடுவோருக்கு திறந்து கொடுத்து அவர்களை உபசரிப்பது வழக்கமான காரியமாய் நிகழ்ந்து வருகிறது.

இப்படிப்பட்ட உபசரிப்பானது மிஷனரிகள், கர்த்தருடைய வேலையை செய்துவருபவர்கள், வேதாகம போதனையாளர்கள், மற்றும் தீர்க்கதரிசிகள் போன்றோருக்கு அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. இது எல்லோருக்கும் அளிக்கபடுகிறதாய் இல்லை.

10. நல்லோர் மேல் பிரியம் உள்ளவர்கள்: இது தீமோத்தேயு பட்டியலில் உள்ள குணாதிசயமாய் இருக்கிறது. "உலகிற்கு நற்சாட்சி பகருகிறவர்களாய் இருத்தல்" இது ஒரு நபரின் தன்மையை இனங்கான உதவுகிறதாய் இருக்கிறது. ஒரு நபர் உலகத்தாரின் கண்களில் சரி எனப்படுகிறவராய் இருக்கலாம், ஆனால் அந்நபர் உண்மையான நற்பண்புகள் இல்லாதவராய் இருக்கலாம். அப்படிப்பட்ட மனிதரின் சிநேகிதர்கள் அந்நபர் எப்படிப்பட்டவர் என்பதை விளங்கப்பண்ணுகிறவர்களாய் இருக்கின்றனர். மெய்யான நல்ல மனிதர், இன்னொரு உண்மையான நல்லமனிதரின் சவகாசத்தை நாடுகிறவர்களா இருப்பர். நாம் நமது நல்ல நண்பர்களாலும், நமது சத்துருக்களாலும் அறிப்படுகிறவர்களாய் இருக்கிறோம். கர்த்தரை வெறுக்கிறவர்களை நாம் வெறுத்தல் வேண்டும். அவரை பின்பற்றுகிறவர்களை சிநேகித்தல் வேண்டும், மற்றும் ஒரு வேளை ஒழுக்க நெறியுடன் வாழ்பவர்கள் கர்த்தரை பின்பற்றாதவர்களாய் இருந்தாலும் அவர்களையும் நேசித்தல் வேண்டும்.

11. தெளிந்த புத்தியுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்: - கடந்தகால சந்ததியில்

மனிதரைக் குறித்து இவ்வாறு கூறுவதுண்டு "his word is his bond". "ஒருவரது வார்த்தையே அவரது பாண்டாக இருக்கிறது" இதை வேறு வகையாய் கூறுவோமெனில், அந்த நபர் நம்பிகஸ்தர், அவர் வாக்களிப்பார் என்றால் வாக்குத் தவறமாட்டார். அவர் இரகசியத்தை வெளிவிட மாட்டார், நம்பிக்கைக்குப் பாத்திரர். இப்படிப்பட்ட குணாதிசயம் இங்கு கூறப்படுகிறது. தலைமைத்துவத்தில் உள்ளவர்கள் தனித்தன்மைவாய்ந்தவர்களாயும், நம்பிக்கைக்கு பாத்திரராயும், சபைக்கடுத்த காரியங்கள் அனைத்திலும் உண்மையைக் காக்கிறவர்களுமாய் இருத்தல் வேண்டும்.

குற்றஞ்சாட்டப்படாதவனும், தன் இஷ்டப்படி செய்யாதவனும், முற்கோபமில்லாதவனும், மதுபான பிரியமில்லாதவனும், அடியாதவனும், இழிவான ஆதாயத்தை இச்சியாதவனும், 1:8 **அந்நியரை உபசரிக்கிறவனும், நல்லோர் மேல் பிரியமுள்ளவனும், தெளிந்த புத்தியுள்ளவனும், நீதிமானும், பரிசுத்தவானும், இச்சையடக்கமுள்ளவனும்,** 1:9 **ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும், வல்லவனாய் இருக்கும்படி, நான் போதிக்கப்பட்டதிற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்கிறவனுமாய் இருக்க வேண்டும்.**

12. நீதிமானாய் இருத்தல் வேண்டும்: - கிரேக்க கருத்தின் படி நீதிமானாய் இருத்தல் என்பது இங்கு கூறப்படுகிறது. இது இன்றைய அளவில் உள்ள கருத்துக்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் செல்லுகிறதாய் இருக்கிறது. இது இயல்பான நீதியை உள்ளடக்கியுள்ளது, மனிதரால் கடைபிடிக்கப்படும் நீதியை மூப்பர்களும் கடை பிடித்தல் அவசியமாய் இருக்கிறது. காரணம் மற்றவர்கள் செய்யும் நீதியின் படி நடந்து கொள்ளும்போது, இவர்கள் மற்றவர்களுடன் ஈடுபடும்பொழுது, மற்றவர்களால் மதிக்கப்படுகிறவர்களாய் இருப்பர்.

13. பரிசுத்தவானாய் இருத்தல் வேண்டும்: - தேவனுக்கு சேவை செய்யும்படி, வேறுபடுத்தப்படல், அல்லது பிரத்தியேகப்படுத்துதல் இங்கு அர்த்தம் கொள்ளப்படுகிறது. இப்படிப்பட்ட மனிதர் எப்பொழுதும், கர்த்தருக்கு சேவை செய்வதில் தங்களை அற்பணித்து கொண்டிருப்பர். இப்படிப்பட்ட பணியை கர்த்தரது நாமத்திற்கென, எல்லா நேரத்திலும் செய்கிறவர்களாய் இருப்பர். இதுவே பரிசுத்தராய் இருத்தல் என்பதன் பொருளாய் இருக்கிறது. இதையே பவுலும் போதிக்கிறவராய் இருக்கிறார். மனிதரால் போதிக்கிறபடி, பக்தியுடன் விளங்குதல், மற்றும் சுய நீதியுடன் விளங்குதல் போன்றவை இதன் அர்த்தமாகாது.

இப்படிப்பட்டவைகள் மனிதரால் போதிக்கப்பட்டு பரிசுத்தம் என்பதற்கு அர்த்தம் விளங்கப்பண்ணுகிறவர்களாய் இருக்கின்றனர்.

14. இச்சையடக்கமுள்ளவராய் இருத்தல்: - பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டின் கீழ் அனைத்து இயக்கங்களும் இருத்தல் வேண்டும். அவர்கள் தேவனைக் கனப்படுத்தும் வழியில் எல்லாக் காரியங்களையும் செய்தல் வேண்டும், மற்றும் மாம்சீக இச்சைகளுக்கேற்ற காரியங்களை செய்தல் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

15. ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்தி சொல்லுதல்: - ஒரு மூப்பரை நியமணம் செய்வதில், தேவனது வசனத்தைப் போதிப்பதில் அவருக்குள்ள அறிவானது முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. ஒரு நபர் தான் கர்த்தரை மெய்யாய் நேசிக்கிறேன் எனக்கூறி, அவர் நேசியாமலும், கர்த்தரது வார்த்தையை அறியாமலும் இருப்பாரானால், அவர் போலியான மூப்பராய் இருக்கிறார் அல்லது சோம்பலானவராய் இருக்கிறார்! அவர் மூப்பராய் இராத வண்ணம் தகுதியற்றவராய் கருதப்படுகிறார்.

16. ஒரு நல்ல வேத போதனையாளராய் இருத்தல் வேண்டும்: - அவர் வேதவசனத்தை இறுகப்பற்றிக்கொள்கிறவர் மட்டுமல்லாது, அதன் முழுபயனை அடைவதற்கேதுவாக அவற்றைப் பயன்படுத்துகிறவராயும் இருத்தல் வேண்டும். பவுல் தேவ வசனத்தை குறிப்பிடும் போது, அதை "ஆவியின் பட்டயம்" எனக் குறிப்பிடுகிறார். எபேசியர் 6:17. ஒரு நல்லப் போர்ச்சேவகனாய் இருப்பதற்கு ஒரு மூப்பர், தேவவசனத்தி இறுகப் பற்றிக்கொள்வதோடு அதை யுத்தக்களத்தில் பயன்படுத்தவும் வேண்டியதாய் இருக்கிறது. அவர் தேவனது ஜனங்களை உள்ளே நடத்திக்கொண்டு செல்கிறவராய் இருக்கிறார்.

ஒரு மூப்பரானவர் கர்த்தரது வார்த்தையை முழுமையாய் பயன்படுத்தி, எதிர் பேசுகிறவர்களை அடக்கி, ஜனங்களை திருப்திபடுத்த இயலாதவராய் இருப்பாரென்றால், அவர் முறண்பாடுள்ள மூப்பராய் இருக்கிறார் என்பது தெளிவாகிறது.

Warren Wiersbe என்பவர் கூறும் பொழுது: "உலகப்பிரகாரமான சபை அங்கத்தினர் சொல்வது, நாங்கள் உபதேசத்தை விரும்பவில்லை, எங்களுக்கு தியானச் சிந்தனைகளை மட்டும் அளியுங்கள், அவர் என்ன சொல்கிறார் என்பது எங்களுக்குப் புரியவில்லை. சத்தியத்திற்கு (இதன் பொருள் வேதாகம உபதேசம்)

அப்பாற்பட்ட நிலையில், எவ்வித ஆவிக்குரிய உதவியோ அல்லது ஆவிக்குரிய ஆரோக்கியமோ இருக்கவில்லை." ("Be Faithful", page 102).

தலைமைத்துவ நடைமுறை:

1. ஆவியின் கனி: மேற்கூறிய தராதரங்களுக்கு மேலாக மூப்பர்களாயிருப்பவர்கள் எல்லா விசுவாசிகளுக்கு பயனுள்ளவர்களாயிருத்தல் முக்கியமான ஒன்றாயிருக்கிறது, இவற்றை பரீசீலனை செய்து நிச்சயப்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் கர்த்தர் அழைத்த அழைப்பிற்கிணங்க, அவர்கள் கர்த்தருக்கென அவர் வழியில் சேவை செய்தல் வேண்டும் இல்லையேல் அவர்கள் இப்பதவிக்குரிய தகுதியை இழக்கிறவர்களாய் விளங்குவர். கலாத்தியர் 5:16-26 ல் உள்ள ஆவியின் கனி குறித்த பட்டியலிலும், பரிசுத்த ஆவியானவரின் சர்வாயுத வர்க்கம் குறித்த பட்டியலிலும் எபேசியர் 6:10-18, நாம் கண்டுகொள்வது என்னவெனில், இவைகள் அனைத்தும், சபையில் உள்ள ஒரு முதிர்ந்த விசுவாசியின் வாழ்வில், ஒரு பாகமாய் இருக்கவேண்டிய குணாதிசயங்களாய் விளங்குகிறது. சிலவேளைகளில் விசுவாசிகள் நினைவில் கொள்ளவேண்டியது, தேவனுடைய தராதரத்திற்கிசைய நாம் இராது அதில் குறைவு பட்டவர்களாய் விளங்கக்கூடும், ஆனால் பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால், நாம் அனைவரும், கிறிஸ்துவின் வளர்ச்சிக் கேற்ப பூரண புருஷராகும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம் என்பது மறுக்க இயலாத உண்மையாய் இருக்கிறது.

இப்பட்டியலை நாம் ஒப்பிடும்போது, மூப்பர்கள் குறித்த பட்டியல் 1 தீமோத்தேயுவிலும், மற்றும் தீத்துவிலும், ஒவ்வொரு விசுவாசியும் சவாலாய் எடுத்துக்கொள்ள வேண்டியது என்னவென்றால், நாம் அனைவரும் வாழ வேண்டிய பிரகாரம் வாழ வேண்டியவர்களாய் இருக்கிறோம், நமது குணாதியசயங்களாலும், நடத்தையாலும் மூப்பர்களுக்குரிய தகுதியுடன் வாழுதல் வேண்டும். ஸ்தல சபையில் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொண்டு, எதிர்பார்க்கப்படுகிற தராதரத்தின்படி மூப்பர்களாய் வாழுதல் எதிர்பார்க்கப்படுகிற ஒன்றாய் இருக்கிறது. பவுல் தீத்துவையோ அல்லது தீமோத்தேயுவையோ "சூப்பர் கிறிஸ்தவர்களை" கண்டு கொள்ள வேண்டும் என கேட்டுக்கொள்ளவில்லை, அவர் கேட்டுக்கொள்வதெல்லாம், முதிர்ந்த மற்றும் கீழ்ப்படிதலுள்ள கிறிஸ்தவர்களையாய் இருக்கிறது. இது எல்லா விசுவாசிகளும் ஒருரிரு ஆண்டுகளுக்குள் அவர்கள் விசுவாசத்தில் முதிர்ச்சியடைந்தவர்களாய் மாறுதல் வேண்டும்.

2. சுய பரிசீலனை செய்வதை பழக்கமாக்கிக்கொள்ளுதல்: ஒவ்வொரு விசுவாசியும், தங்களை தற்பரிசோதனை செய்துகொள்ள அவர்களுக்கு ஊக்கமளித்தல் வேண்டும், கர்த்தருடைய வார்த்தையின் தராதரத்துக்கு இணங்க தாங்கள் அனுசரித்து நடக்கிறார்களா என்பதனை, ஒரு மூப்பரால் தொகுத்தளிக்கப்பட்ட கேள்விகளைத் தங்களுக்கு தாங்களே கேட்டுக்கொண்டு கர்த்தரின் தராதரத்திற்கேற்றவாறு நடந்து கொள்ள முனைதல் வேண்டும். இவ்வாறு செய்யும் போது மட்டுமே, அவர்கள் போதனைகளுக்குட்படவும், குணாதிசயங்களில் வளரவும், அவசியப்படும் பரிசுத்த ஆவியானவரின் வரங்களை அடையவும், விசுவாசிகள் விசுவாசத்தில் பெலப்படவும் மிக உதவியாய் இருக்கும்.

நாம் அனைவரும் தேவனது வார்த்தையை போதிக்கும் போதனையாளராய் இருக்க வேண்டிய அவசியமில்லை, இங்கே நாம் கண்ட பட்டியலின்படி உள்ள காரியங்களை உடையவர்களாய் இருத்தல் நம் அனைவருக்கும் பொருந்தக்கூடியதாய் இருக்கிறது, இதுவே ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்வின் தராதரமாய் இருக்கிறது.

இப்பட்டியல்களில் மூப்பர்களின் குணாதிசயங்களின்படி இன்றைய அளவில் மூப்பர்களை நியமனம் செய்யும்போது, கடைபிடிக்கிறவர்களாய் இருக்கிறோமா? ஆரம்பகால சபையைப் போல நமது சபைகளும் வல்லமையுள்ள சபைகளாய் அமைய விருப்பமுள்ளவர்களாய் இருத்தல் அவசியமானதாய் இருக்கிறது. ஸ்தல சபையை வழிநடத்துவதற்கு, கர்த்தர் தெரிவு செய்யும் ஆண்களும் பெண்களும் அநேகராய் இருக்கின்றனர், மற்றும் விசுவாசிகளான அவர்களுக்கு வரங்களை அளித்து, சபையை குறைவின்றி செயல்படச் செய்யக் கருத்துள்ளவராய் இருக்கிறார். இவ்வாறு கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்டு, வரங்களை பெற்றுக்கொண்டவர்களைத் தேடிக் கண்டறிந்து அவர்களை தேவனுக்குக் கீழ்படிகிறவர்களாய், ஸ்தல சபையின் தலைமைத்துவத்தில் ஏற்படுத்துவது நமது கடமையாய் இருக்கிறது. ஆவியோடும் உண்மையோடும் கர்த்தரை சேவித்து, கர்த்தருக்கு கீழ்ப்படியும் ஆண்களும் பெண்களும் இப்படிப்படிப்பட்ட தலைமைத்துவத்திற்கு ஏற்றவர்களாய் இருக்கின்றனர். ஒரு காலத்தில் கொடுக்கப்பட்டுள்ள பட்டியலின் படி நாம் குறைவுபட்டவர்களாய் இருந்தோம், ஆனால் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலின் பேரிலும், அவரது வல்லமையினாலும் அவரது தராதரத்திற்கு உயர்த்தப்படுகிறவர்களாய் இருக்கிறோம், இதனால் உண்மையான ஐக்கியத்தையும் சேவையையும் பெற்றுக்கொண்டவர்களாய் இருக்கிறோம்.

மூப்பர் தலமைத்துவத்திற்கு ஏற்படுத்தப்படுகிறவர்கள் தங்களைத் தாங்களே கேட்டுக்கொள்ளக்கூடிய ஒன்பது கேள்விகளை Getz என்பவர் பரிந்துரை செய்கிறார். (IBID, pages 58 - 60). இக்கேள்விகளை கேட்கும்பொழுது, நாம் குறைவுள்ளவர்களாய்க் கண்டால், ஜெபத்தில் அவற்றை வைத்து குறைகளை நிறைவு செய்து கொள்ள பரிசுத்த ஆவியானவரின் வழி நடத்துதலைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும், ஒரு பந்தயக்காரனைப் போன்று, தனக்குரிய நிகழ்ச்சிக்குரிய தகுதியில் குறைவு படும்போது, அதைரியங்கொள்ளாது, கடினப்பயிற்சி செய்து, அதை தொடர்ந்து நீண்டகாலம் செய்து, சிறப்பான பந்தய வீரராய் உருவாகிறவனாய் இருக்கிறான்.

1. கேள்வி கேட்கப்படாத கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறவனாய் இருக்கிறேனா? (பிலிப்பியர் 2:3,4).

2. எளிதில் கோபப்படுகிறவனாய் இருக்கிறேனா? (யாக்கோபு 3:17,18)

3. தேவனுக்குக் கீழ்ப்படிவதைக் காட்டிலும் வேறொன்றிற்கு அடிமையாய் இருக்கிறேனா? (1 கொரிந்தியர் 6:19-20)

4. தன்னைக்குறித்த பெருமையானவைகளைப் பேசுகிறவனாய் இருக்கிறேனா? (யாக்கோபு 3:17,18).

5. எல்லாவற்றிலும் நான் நேர்மையுள்ளவனாய் நடந்து கொள்கிறவனாய் இருக்கிறேனா? (ரோமர் 13:7, 8)

6. நான் உபசரிக்கிறவனாய் இருக்கிறேனா? (ரோமர் 12:10 - 13)

7. நான் சுய அடக்கமுள்ளமுள்ளவனாய் இருக்கிறேனா? (தீத்து 2:11, 12).

8. மற்றவர்களுடன் உள்ள ஈடுபாட்டில், பரிசுத்தமாயும் நேர்மையுடனும் நடந்துகொள்கிறேனா? (எபேசியர் 4:22-24).

9. தேவனுடன் எனது நடக்கையில் ஒழுங்குடன் காணப்படுகிறேனா? (2 தீமோத்தேயு 1:7)

3. தேவனது வார்த்தையில் உறுதியான நம்பிக்கை: இந்நாட்களில் அநேகப் போதகர்கள் தேவனது வார்த்தையின் மீது சந்தேகம் கொள்கிறவர்களய் இருக்கின்றனர், ஒரு மூப்பரானவர், எவ்வித சந்தேகத்திற்கும் இடங்கொடாமல், தேவனது வார்த்தையின் சத்தியத்தை உறுதியாய் பற்றிக்கொண்டு, அதற்கேற்ப உண்மையான வாழ்க்கை செய்ய நினைப்பூட்டப்படுகிறார். தேவனது வார்த்தையின் உண்மையில், எவ்விதமான சந்தேகம் எழும்பினாலும், அதை போதிப்பதில் உள்ள வல்லமையை அது குறையச்செய்கிறதாய் இருக்கும். சந்தேகப்படுகிறவன் கர்த்தரிடமிருந்து எதையும் பெற்றுக்கொள்ள இயலாது (யாக்கோபு 1:6-8) போதகப்பயிற்சியானது, கேள்விகளுக்கு பதில் அளித்தலும், மற்றும் சந்தேகங்களை தீர்த்துவைப்பதாய் இருக்கிறது, எந்த ஒரு நபரும் இவ்வித பயிற்சியை பெறாது இருப்பார்களேயானால், அவர்கள் தொடர்ந்து படித்து அவர்களது விசுவாசத்தைக் குறித்து நிச்சயித்து கொள்ளுதல் அவசியமான ஒன்றாய் இருக்கிறது.

4. தேவனது வார்த்தையை தெளிவுடனும் மற்றும் வல்லமையுடனும் போதிக்க தகுதியுள்ளவராகுதல்: ஒரு மூப்பர் தெளிவாய் பிரசிங்கிக்க தகுதியுள்ளவராய் இருத்தல் வேண்டும், இதை மேம்போக்காய் விட்டுவிடுதல் கூடாது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திற்கு தக்கவாறு, மூப்பரானவர் பிரசிங்கிக்க அறிந்திருத்தல் வேண்டும், தான் வேத வசனத்தை அறிந்திருத்தல் மற்றும் விசுவாசித்தல் மட்டும் போதாது, அவற்றை மற்றவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் அவர்களுக்கு எடுத்துரைக்க அறிந்திருத்தல் வேண்டும். மற்றவர்கள் கேட்கும் கேள்விகளுக்கு தக்க பதில் கூற இயலவில்லையானால், தனிப்பட்ட விதத்தில் அவர் தகுதியை இழக்கிறவராய் விளங்குகிறார், அல்லது அப்படிப்பட்டவர் வரத்தில் குறைபாடுள்ளவராய் திகழ்வர். தெளிவுற பிரசங்கிக்க அறிந்திருத்தல் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. சிலருக்கு இப்படிப்பட்ட பயிற்சியானது அவசியமான ஒன்றாய் இருக்கிறது, அது பயனுள்ளதாயும், அவசியமானதாயும் விளங்குகிறது. அவர்களது சேவையில் சிறப்புடன் பணியாற்ற இவைகள் மிகவும் அவசியம் வாய்ந்ததாய் விளங்குகிறது வேதாகம போதனையாளர்களில் பெரியவர்களான அநேகர், பயிற்சியின் மூலம் தெளிவுற வேதாகமத்தைப் போதிக்கிறவர்களாய் இருக்கின்றனர், மற்றும் தெளிவுற விளங்கிக்கொள்ளுமாறு போதிக்கிறவர்களாயும் இருக்கின்றனர். ஒரு நபர் மற்றவர்களிடம் இருந்து கற்றுக்கொள்வதைக் காட்டிலும் தாங்கள் உயர்ந்தவர் எனக்கருதுவது, அவர்களது தாழ்மையில் குறைவுபட்டு விளங்குகின்றனர் எனப் பொருளாகிறது. பரிசுத்த ஆவியானவரின் வரம் பெற்ற போதனையாளர்கள் எப்பொழுதும், தங்களை உருவாக்குபவர்களுக்குக் கீழ் அடங்கி, தெய்வீகமுள்ள மூப்பர்களிடம் கற்றுக்கொள்கிறவர்களாயிருப்பர்.

<u>3. தீத்து 2:4-8.</u>

2:4. தேவ வசனம் தூஷிக்கப்படாதபடிக்கு, பாலிய ஸ்திரீகள் தங்கள் புருஷரிடத்திலும், பிள்ளைகளிடத்திலும், அன்புள்ளவர்களும், 2:5 தெளிந்த புத்தியுள்ளவர்களும், கற்புள்ளவர்களும், வீட்டிலே தரித்து இருக்கிறவர்களும், நல்லவர்களும், தங்கள் புருஷருக்குக் கீழ்ப்படிகிறவர்களுமாய் இருக்கும்படிக்கும்படி, அவர்களுக்குப் படிப்பிக்கத்தக்க நற்காரியங்களைப் போதிக்கிறவர்களுமாயிருக்கவும், முதிர்வயதுள்ள ஸ்திரீகளுக்குப் புத்தி சொல்லு. 2:6 அப்படியே, பாலிய புருஷரும் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருக்கவும் நீ புத்தி சொல்லி, 2:7 நீயே எல்லாவற்றிலும் உன்னை நற்கிரியைகளுக்கு மாதிரியாய் காண்பித்து, 2:8 எதிரியானவன் உங்களைக்குறித்துப் பொல்லாங்கு சொல்லுகிறதற்கு ஒன்றுமில்லாமல் வெட்கப்படத்தக்கதாக, உபதேசத்திலே விகற்பமில்லாதவனும் குற்றம் பிடிக்கப்படாத ஆரோக்கியமான வசனத்தைப் பேசுகிறவனுமாய் இருப்பாயாக.

பிரதிபலிப்புகள்:

இளம் வயதுள்ள போதகராகிய தீத்து, சபையில் உள்ள அனைத்து வாலிபர்களுக்கும் முன்மாதிரியாய் இருக்க வேண்டியவராய் இருக்கிறார். இதில் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவெனில், தீத்து இளம் வயதுள்ள சகோதரிகளுக்கு போதிக்க அனுமதிக்கப்படவில்லை, அப்படிப்பட்டக் கடமையை முதிர் வயதுள்ள தாய்மார் செய்யும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தீத்து இப்படிப்பட்ட விஷயங்களை முதிர்வயதுள்ள தாய்மாருக்கு போதிக்க, அவர்கள் இளம் வயதுள்ள பெண்களுக்கு போதிக்க வேண்டி கேட்டுக்கொள்ளப்பட்டனர். இளம் வயதுள்ளோர் என்பதன் பொருள், தீத்து வயதுக்கு சமமாய் இருப்போர் அல்லது அவரது வயதிற்கும் குறைவாய் இருப்போர் எனப் பொருள்படும். "முதிர்வயதுள்ள ஸ்திரீ" என்பதன் பொருள் அறுபது வயதிற்கும் மேற்பட்ட ஸ்திரீகளைக் குறிக்கிறது, இதைப்போன்ற ஏற்பாடு, இளம் வயதுள்ள போதகர்கள் பாலியல் சோதனைகளுக்கு தப்பும்படி அளிக்கப்பட்டது. இவ்விஷயத்தில் மிகவும் கவனமாய் இருக்க வேண்டியுள்ளது, இளம் வயதுள்ளோருக்கு அதிக நேரம் எடுத்து போதனை செய்வது இறுதியில் பாலியல் தவறான உறவுகளில் முடிவடைகிறதாய் இருக்கும்.

ஒரு ஆண்போதகர் மனைவிக்கும் அவளது புருஷனுக்கும் இடையே

சிக்கிக்கொள்ளக்கூடாது, அவர்களது திருமண உறவில் சில பிரச்சனைகளை அவர்கள் எதிர்கொள்ளக்கூடும், பிரச்சனைக்குரிய மனைவியானவள் தனது புருஷனைவிட போதகர் மீது அனுதாபியாக இருக்கக்கூடும், காரணம் போதகர் அவளை ஆறுதல் படுத்தி அவளை சரிவர புரிந்து கொள்வதனால். பவுல் இத்தகைய அபாயங்களை குறித்து தெளிவுடன் இருந்த படியால், 1 கொரி. 14:34,35 இதை குறிப்பிடுகிறவராய் இருக்கிறார். புருஷர்களாயிருக்கும் ஆண்கள் கர்த்தருக்கு முன்பாக அதிக பொறுப்புகளை வகிக்கிறவர்களாய் இருக்கின்றனர், போதகர்கள் அதில் தலையிட்டு "வக்காளத்து" எடுக்கிறவர்களாய் இருக்கக்கூடாது, தேவனால் கொடுக்கப்பட்ட கடமைகளையும், திருமண உறவில் தேவனது திட்டத்தையும், அவளது புருஷன் நிறைவேற்றுகிறவனாய் விட்டுவிடுதல் வேண்டும் அதில் போதகர் தலையிடுதல் கூடாது.

புருஷர்கள், வயாதான ஸ்திரீகளின் ஆலோசனைகளுடன், தங்களது மனைவிமார்களுக்கு, போதிக்கிறவர்களும், அறிவுரை வழங்குகிறவர்களுமாய் இருக்கின்றனர், மனைவியானவளுக்கு ஏதாகிலும் சந்தேகம் இருக்குமேயானால், அவள் முதலாவது தனது புருஷனிடத்தில் அதைக் கேட்டுப் பதில் பெற முனைதல் வேண்டும். புருஷனால் பதில் அளிக்க இயலாதபட்சத்தில், வயதான ஸ்திரீயுடன் போதகரை அணுகலாம். மனைவியானவளுக்கு தனது புருஷனைத்தவிர வேறு எந்த ஆவிக்குரிய அதிகாரத்தில் உள்ள ஆண்களுடன் தொடர்பு என்பது இருத்தல் கூடாது.

தலைமைத்துவம் என்பது, தேவன் அளித்த அதிகார அமைப்பில் கனத்திற்குரிய ஒன்றாய் இருக்கிறது. எந்த ஒரு நபரும் திருமணத்தையோ அல்லது குடும்பவாழ்வையோ தரக்குறைவாய் எண்ணுவார்களேயானால் அவர்கள் தகுதியிழக்கிறவர்களாய் இருப்பர். சபையில் ஆவிக்குரிய அதிகாரம் வகிக்கும் வயதான ஸ்திரீகள், இளம் வயதுள்ள பெண்களுக்கு போதனையாளர்களாய் இனம்கண்டுகொள்ளப்படுகிறார்கள். போதகர்கள் மற்றும் மூப்பர்களுடன் இப்படிப்பட்டவர்களும் சபையில் அதிகாரம் உடையவர்களாய், இளம் பெண்களுக்கு மட்டுமல்லாது, சபையின் பரிசுத்தவான்களுக்கு உற்சாகம் அளிக்கிறவர்களாய் இருக்கின்றனர், இவர்கள் இளம் பெண்களுக்கு ஆவிக்குரிய இரகசியங்களை பாதுகாக்கிறவர்களும், அவர்களை உருவாக்குகிறவர்களாயும் இருக்கின்றனர், சில வேளைகளில் ஆண்களுக்கும் தகுந்த ஆலோசனைகள் அளித்து அவர்களையும் ஊக்கப்படுத்துகிறவர்களாய் இருக்கின்றனர், பிரிஸ்கில்லாளும் தனது புருஷனாகிய ஆக்கில்லாவுடன், இத்தகைய ஊழியத்தை அப்பல்லோவுக்கு செய்து வந்தாள். அப்போஸ்தலர் 18:24-28, 21:8-9, 1 கொரிந்தியர் 11:4-16. இவ்வேதபகுதிகளை புதிய

ஏற்பாட்டு EBCWA Commentaries களில் ஒத்துப்பார்க்கவும். புருஷர்களின் கடமையானது அவிக்குரிய தலைவனாய் தனது குடும்பத்திற்கு இருக்க வேண்டிதாய் இருக்கிறது, இது எவ்விதத்திலும் சபையின் தலைமைத்துவத்திற்கு விகற்பமாய் மீறி நடத்தல் தவிர்க்கப்படல் வேண்டும், மற்றும் பரிசுத்த ஆவியானவரால் வரம் அளிக்கப்பட்ட பெண்களையும் சபையில் தவிர்த்தல் கண்டிப்பாய் கூடாது.

சபையில் பெண்கள் போதக கடமைகளை ஏற்று நடத்த இருப்பார்களேயானால், ஆவிக்குரிய சட்டதிட்டங்களாகிய மூப்பருக்குரிய சட்டதிட்டங்கள் இவர்களுக்கும் பொருந்தும். சபை சரித்திரத்தில் இதைப்போன்ற நிகழ்வுகள் அநேக முறைகள் நிகழ்ந்துள்ளன, விஷேசமான சந்தர்ப்பங்கள் பெண்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அற்பணித்தபடியாலும், ஆண்கள் இப்படிப்பட்ட தலைமைத்துவத்தை எடுக்க தங்களை அற்பணித்து கர்த்தருக்குக் கீழ்ப்படியாதபடியாலும் இதைப் போன்றவை நிகழ்ந்தன. மட்டுமல்லாது, ஆண்மக்கள் AIDS வியாதியினால் பத்தில் ஒருவர் வீதம் பாதிக்கப்பட்டு மரித்த காலத்தில் இது போன்ற கீழ்ப்படிதலுள்ள பெண்கள் சபைப் பொறுப்பை ஏற்று நடத்தினர். பெண்கள் மிஷனரி சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது,, மற்றும் இவர்கள் சபையை வழிநடத்தி அநேக இடங்களில் போதப் பொறுப்பிலிருந்து சபையை வழிநடத்துகிறவர்களாய் ஆரம்ப காலத்தில் தலைப்பட்டனர்.

மூப்பர்களுக்குரிய தகுதிகள் அனைத்தும் ஆண்களுக்குரியதாய் இருக்கிறதாய் இருக்கிறது. இது பரிசுத்த ஆவியானவரால் வரம் அளிக்கப்பட்ட ஆண்களுக்குரிய கடமையாயும், கர்த்தரது திட்டமாயும் இருக்கிறது. ஆதாமின் வீழ்ச்சிக்குப் பின்னர், தேவனுக்கு முன்னதாக ஆண்களின் கடமையாய் இருந்து வருகிறது. ஆதாம் வீழ்ச்சியினால், ஆண்கள் கடினமான பணியை ஏற்று செயல்படுவது கர்த்தருக்கு முன்பாக நிர்ணயிக்கப்பட்ட காரியமாய் இருக்கிறது. இதுவே சபையைக் குறித்து கர்த்தரது நேரடியான சித்தமாய் இருந்துவருகிறது. அடிக்கடி ஆண்கள் இத்தகைய கடமைகளைச் செய்யத்தவறுகிறவர்களாய் இருக்கிறார்கள், இப்படிப்பட்ட சூழல்களில் தேவனது திட்டமானது தடைபடாமல் இருப்பதற்கு, தெய்வீகமான பெண்கள் கர்த்தரால் உயர்த்தப்பட்டு அதை ஈடுகட்டுகிறவர்களாய் செயல்பட்டனர், தெபோராள், பாராக்கை வழிநடத்தினாள், இவ்வகையில் சபையானது ஸ்தாபிக்கப்படுகிறதாயும், தெய்வீகம் நிறைந்த பெண்களால் கட்டப்பட்டும் வருகிறதாய் இருக்கிறது. அநேக இடங்களில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் நிறைந்தவர்களாய் போதகப்பணியை சிறப்பாய் செய்து சபையை

பராமரித்து வருகிறவர்களாய் இருக்கின்றனர்.

இப்படிப்பட்ட இடங்களில் ஆண்கள் ஆவிக்குரிய வளர்ச்சி பெற்று அவர்களது ஸ்தானத்தை பொறுப்பெடுத்தல் வேண்டும். ஆனால் பெண்களது தலைமைத்துவத்தை எவ்விதத்திலாகிலும் விமர்சித்தல் தவிர்க்கப்படல் வேண்டும். அத்தகைய தலைமைத்துவத்தில் இருக்கும் பெண்கள் தேவனின் கரத்தால் உயர்த்தப்பட்டு தலைமைத்துவம் வகிக்கிறவர்களாய் இருக்கின்றனர். (இத்தகைய இடங்களில் ஆண்கள் கீழ்ப்படிய மறுத்தபடியினால், இந்நிலை தேவனால் உருவானது) அப்படிப்பட்ட பெண்கள் ஆண்களுக்களிக்கப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அடங்கி தங்களது தலைமைத்துவத்தில் சிறந்து விளங்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். ஆண்கள் ஆதிக்கம் மிகுந்த சபைகளில், மாய்மாலம் தலைதூக்கி ஆழத்துவங்கியது, மூன்றாம் உலக நாடுகளில் பெண் மிஷனரி ஊழியர்களை அனுப்பி ஊழியத்தை மேற்கொண்டனர், ஆனால் இப்படிப்பட்ட பெண்களை தங்கள் சபைகளுக்குத் திரும்பும் போது, பேசுவதற்கு இவர்கள் உரிமம் அளிப்பது இல்லை. நாம் நினைவுகூறவேண்டியது, கர்த்தர் தன்னை பரிகாசம் செய்யவொட்டார். அவரது நியமம் ஆண்களுக்கு எவ்வாறு அளிக்கப்பட்டுள்ளதோ அதைப் போன்றே பெண்களுக்கும் அளிக்கப்படவேண்டியதாய் இருக்கிறது.

வயது சென்ற பெண்கள், தெளிவான வரத்தினைப் பெற்று, போதிக்கும் இலக்குகளை அமைத்துக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர், அவர்களது போதனைகளை சபையின் மூப்பர்குழு நிதானித்து பரிசீலனை செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றனர். இத்தகைய காரியங்கள் முதல் நூற்றாண்டில் புரட்சியை ஏற்படுத்துகிறதாய் இருந்தது, Getz அவர்கள் குறிப்பிடும்போது, "அது ஒரு புதிய செய்தியாய் இருந்தது, சுத்திகரிப்பிற்கான செய்தியாய் இருந்தது, திருமண உறவுகளில் உண்மையாய் நடப்பதுக்குரிய செய்தியாய் இருந்தது. என்கிறார். ("The Measure of a Christian", page 115). அவர்களது போதனையானது, உபதேச ரீதியில் அர்த்தமுள்ளதாய் இருந்தன, ஆனால் கீழ்க்கண்ட குணாதிசயங்களை உருவாக்குகிறவைகளாய் இருந்தன. இவைகள் ஒவ்வொன்றையும் வாசிக்கும் பொழுது, பாலிய ஸ்திரீகளை அவர்கள்து எதிர்கால தலைமைத்துவத்திற்கா உருவாக்க பயனுள்ளவைகளாய் இருக்கின்றன. வேதாகம தலைமைத்துவத்தின் மையக் கருத்து என்னவெனில், தலைவர்களுக்கு தெய்வீக ரீதியில் பயிற்சி அளித்தல் வேண்டும், அவர்களை உருவாக்கும்போது அவர்களில் விளங்க வேண்டியது பரிசுத்த ஆவியானவரின் கனியாய் இருக்கிறது.

சபையின் விவாகமான பாலிய ஸ்திரீகள்:

1. "தெளிந்த புத்தியுள்ளவர்கள்" இக்கருத்தானது வினைச்சொல்லாய் பயன்படுத்தப்படும்போது, "போதித்தல்" என்று மொழியாக்கம் செய்யப்படுவதாய் இருக்கிறது. இவ்வார்த்தையானது கல்வி சம்பந்தமான வார்த்தைகளை உள்ளடக்கியுள்ளது, ஒரு போதனையாளரின் நடந்து கொள்ளும் விதம் மற்றும் அவரது செய்கைகள் போன்றவை இதன் கருத்தில் அடங்கியுள்ளவை, சுய அடக்கத்துடன் மற்றும் மெய்யான தெய்வீகத்தன்மையுடனும் வாழ்வது இதன் விளவாய் இருக்கிறது. வயது சென்ற ஸ்திரீகள் வேதவசனங்களைக் கொண்டும், மற்றும் தங்களது நடக்கையாலும் பாலிய ஸ்திரீகளுக்கு போதனை செய்து, அவர்களுடன் முன்மாதியாய் திகழ்ந்து, சுய அடக்கமுள்ள வழ்க்கை செய்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். விசுவாசத்தில் எவ்வித அலசடியுமின்றி, உணர்ச்சிவசப்படுதலினால் பின்னிட்டு திரும்பாமலும் இருத்தல் வேண்டும்.

இதன் வினைச்சொல்லானது the subjunctive mood, the mood of potential. ஆக இருக்கிறது. இது பிரதிபலிப்பது என்னவென்றால், எவ்வித விளவும் உத்திரவாதத்தினை அளிப்பது இல்லை, தன்னிச்சயாய் சிலர் வயதான் ஸ்திரீகளின் பாடங்களை தங்களது வாழ்விற்கென எடுத்துக்கொள்வர், சிலர் அவர்களது பாடங்களைப் புறக்கணிப்பர். அவரிடம் பயிற்சி பெறுபவர்களின் கீழ்ப்படியாமையினாலே தலைவர் நியாந்தீர்க்கப்படுகிறவராய் இருத்தல் கூடாது, மற்றும் தகுதியில்லாதவராயும் இருத்தல் கூடாது, அவர்கள் முன்மாதிரியினை அமைத்துக் கொடுக்கிறவர்களாய் இருக்கிறார்கள், ஆனால் பயிற்சி பெறுபவர்களின் தன்னிச்சையான நடைமுறையானது வரையரைக்குட்பட்டதாய் எல்லா சமயங்களிலும் விளங்குகிறதாய் இருக்கிறது.

2. "தங்கள் சொந்த புருஷரித்தில் அன்புள்ளவர்களாய் இருத்தல்:" மற்றவர்களை விட, "தங்களது சொந்த புருஷர்" என்பது இங்கு வலியுறுத்திக்கூறப்படுகிறது. பாலிய ஸ்திரீகள் தங்கள் சொந்த புருஷரிடத்தில் அன்பு கூறுவது அவர்களுக்கு அதிகமான பாதுகாப்பை அருளுகிறதாய் இருக்கிறது, இது அவர்களை விபச்சாரத்திற்கு விலக்கிக் காக்கிறதாய் இருக்கிறது. பாலிய ஸ்திரீகளின் கண்கள் தங்கள் சொந்த புருஷர்களின் மீதே கண்ணாய் இருப்பார்களேயானால் எவ்வித சோதனைக்கும் இடமில்லாது தங்களைக் காத்துக்கொள்ள அது வகை செய்கிறதாய் இருக்கும்.

3. தங்கள் சொந்த பிள்ளைகளிடத்தில் அன்புள்ளவர்களாய் இருத்தல்: பிள்ளைகள் என இங்கு வலியுறுத்திக்கூறப்படுவது, எல்லாப் பிள்ளைகளுக்கும் பெற்றோரின்

அரவணைப்பும், புத்திமதிகளும் அவசியமானவை என்பதைச் சுட்டிக்காட்டி உணர்த்துகிறதாய் இருக்கிறது. பிள்ளைகள் தங்கள் பெற்றோர்கள் வார்த்தையினால் தாங்கள் அன்புகூறப்படுகிறோம் என்பதை மட்டும் கேட்கிறவர்களாய் இருத்தல் அவர்களில் வளர்ச்சியை உருவாக்காது, தங்களது பெற்றோர்கள் தங்களில் கவனம் செலுத்துகிறார்கள் என்பதை அவர்கள் அறிவதன் மூலமும், அவர்கள் தங்களுக்குச் செய்யும் பணிவிடைகள் மூலமும் அவர்களது அன்பை அவர்கள் உணருகிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

பிள்ளகளுக்குப் பயிற்சி அவசியமாய் இருக்கிறது, பிள்ளைகளிடத்தில் அன்பு கூறுதல் என்பது, அவர்களுக்கு போதிய அளவு பணம் கொடுப்பது அல்லது அவர்கள் விரும்புவதை அவர்களுக்கு வாங்கிக்கொடுத்தல் மூலம் இல்லை, அவர்களுடன் தனிப்பட்ட விதத்தில் நேரம் ஒதுக்கி, அவர்களில் கவனம் செலுத்துவதன் மூலம் ஆகும். எல்லா கிறிஸ்தவ பெற்றோர்களும், தங்கள் பிள்ளைகளை அரவணைத்து, அவர்களை கிறிஸ்துவின் தராதரத்திற்கு அறிவுரை அளித்து அவர்களை உருவாக்குதல் அவசியமானதாய் இருக்கிறது.

ஒவ்வொரு பிள்ளைகளுக்கும், பாசம் காட்டுதல், கவனம் செலுத்துதல், உறுதி செய்தல் அல்லது நிச்சயப்படுத்துதல், சேர்த்துக்கொள்ளுதல் அல்லது இணைத்துக்கொள்ளுதல், அங்கீகரித்தல், ஏற்றுக்கொள்ளுதல், மற்றும் செயல்பாடுகள் போன்றவை அவசியமாய்த் திகழ்கின்றன. இவைகள் பிள்ளைகளுக்கு "ஆரோக்கியமான சுற்றுச்சூழலை" அமைத்துக்கொடுக்கிறதாய் இருக்கிறது. இவைகள் பிள்ளைகளை தன்னம்பிக்கை உள்ள வாலிபராய் உருவாக்கி, மற்றவர்களது ஆலோசனையின்றி உலகில் செயல்படவைத்து, சபைக்குடும்பத்தில், அவர்கள் சிறந்து விளங்கச்செய்கிறதய் இருக்கிறது.

4. "சமயத்திற்கேற்றவாறு நடந்து கொள்ளுதல்" அல்லது "சமயோகித புத்தியுள்ளவர்களாயிருத்தல்" . "Discreet". இக்கருத்தானது வாழ்வின் எல்லா பகுதிகளிலும் சுயக்கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுதலை காட்டுகிறது. இதினிமித்தம் குணாதிசயத்தில் நிலையானத் தன்மையும், சாட்சியும் உருவாக வழியுண்டாகிறதாய் இருக்கிறது. நமது செய்தியை உலகம் கவனிப்பதற்கு முன்பு, நமது குணாதிசயத்தின் நிலையானத் தன்மையைக் காண்கிறதாய் இருக்கிறது. நாம் அலைகளைப் போன்று முன்னும் பின்னுமாய் அலைக்கழிக்கப்படுகிறவர்களாய் இருத்தல் கூடாது. யாக்கோபு 1:6.

5. "கற்புள்ளவர்களாயிருத்தல் வேண்டும்" புறஜாதிய சமுதாயத்தில் கலங்கமற்ற

பாலுறவானது அதிமுக்கிய சாட்சியை அளிக்கிறதாய் இருக்கிறது. நாம் கலங்கப்படுத்தப்பட்டு காணப்படுவோமானால், உலகம் நமக்கு செவிகொடாது போகும். புறஜாதிய மதங்கள் மிகவும் அடிமட்டரகமானதாய் கருதப்பட்ட போதிலும், அவர்களது கோவில்களில் ஆசாரிய சேவை செய்யும் பெண்கள் தங்கள் பதவியில் ஏற்படுத்தப்படும்போது கற்புள்ள கன்னிகைகளாய் அமர்த்தப்படுகிறவர்களாய் இருக்கின்றனர்.

புறஜாதிய கோவில்களில் இத்தகைய கற்பு நிலையானது அனுசரிக்கப்படுமேயானால், சபைகளில் கற்புள்ளத்தன்மையானது கடைபிடிக்கப்படுவது அதிக முக்கியமானதாய் இருக்கிறது. கிரேக்க வார்த்தையான “agnas” என்பதன் பொருள், கலங்கமற்ற பாலுறவு என்பதனை விட அதிகமான பொருளை உடையதாய் இருக்கிறது, எல்லாவிதங்களிலும், மனதிலும் கலங்கமற்று இருத்தல் என்பதனை உள்ளடக்கியுள்ளது. இதை அடைவதற்கு சுத்த ஜலமான வேத வசனத்தால், தொடர்ந்து மனதைக் கழுவிக்கொண்டே இருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், எபேசியர் 5:26. பாவமான காரியங்கள் மனதில் புகும்போது அவற்றைக் கழுவி சுத்திகரிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். 1 யோவான் 1:9.

6. "வீட்டிலே தரித்திருக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்" இதன் பொருள் எவ்வித வேலைக்கும் செல்லாது வீட்டிலேயே இருக்க வேண்டும் என்பது பொருளாகாது. வீட்டு நிகழ்வுகள் அனைத்திற்கும் இவளே பொறுப்பு வகிக்க வேண்டியவளாய் இருக்கிறாள். நீதிமொழிகள் 31:10-31 இங்கு கூறப்படும் புத்தியுள்ள ஸ்திரீ வியாபாரக்கப்பலை போன்றிருக்கிறாள் என்று கூறப்படுகிறாள், நேரப்பட விழித்து தனது கைகளால் வேலை செய்கிறாள் எனக்கூறப்படுகிறது. அவள் தனது வேலகாரர்களுக்கு படியளக்கிறாள், அவள் தனது வீட்டுக்காரியங்களை சரிவர கவனித்து தனவீட்டை ஆளுகை செய்கிறவளாய் விளங்குகிறாள். ஆண்களைப் போன்றே, தனது சொந்த வீட்டு அலுவல்களை பொறுப்பெடுத்துக் கவனிக்கிறவளாய் இருக்கிறாள், இதைப்போன்றே குடும்பப்பெண்கள் தங்கள் வீட்டின் அடிமட்ட வேலை துவங்கி அனைத்து வேலைகளையும் கவனிக்கும் பொறுப்பில் இருக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

இக்கருத்தானது எல்லா நேரங்களிலும் குடும்பப்பெண்கள் வீட்டில் அடங்கியே கிடக்க வேண்டும் என்ற பொருளில் கூறப்படவில்லை. அவளது வீட்டுக்காரியங்கள் மற்றும் அலுவல்கள் அனைத்தும் இவளது கட்டுப்பாட்டில்

செயல்படுகிறதாய் இருக்கிறது, தனது வீட்டு நிர்வாகத்தை திறம்பட இவள் செய்ய வேண்டும் என பொருள்பட கூறுகிறதாய் இருக்கிறது. இதன் பொருள் ஒரு குடும்பப்பெண்ணின் பிரதாணக் கடமை தனது புருஷனையும் மற்றும் தனது வீட்டாரையும் கவனித்துக்கொள்ளுதல் ஆகும் சபைக்கடுத்த காரியங்கள் அவளுக்கு இரண்டாவது இடத்தில் வருகிறதாய் இருக்கிறது. போதகராய் இருப்பவர்கள், இப்படிப்பட்ட பெண்களுக்கு அதிகமான வேலைப்பழுவை அவர்கள் மீது சுமத்தாது இருக்கப்பார்த்துக்கொள்ளுதல் வேண்டும், காரணம் அதிக வேலைப்பழுவால் அவர்கள் சோர்ந்து போய், தனது வீட்டாரைக் கவனிப்பதில் அவர்கள் தவறிப் போக நேரிடுகிறதாய் இருக்கிறது.

7. "நல்லவர்களாய் இருத்தல் வேண்டும்" - “agathos” என்ற கிரேக்க வார்த்தையானது, ஒழுக்க நெறி சார்ந்த நன்மைகளை குறிக்கிறதாய் இருக்கிறது. இவ்வார்த்தையின் படி, எவ்வித "சந்தேகத்திற்குரிய காரியங்களுக்கு" இடமில்லாது நடந்துகொள்ளுதல் என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. ஒரு குடும்பப்பெண் மற்றவர்களால் ஒழுக்க ரீதியில், எவ்வித சந்தேகத்திற்கு இடமில்லாது நடந்து கொள்ளுதல் மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் விளங்குகிறது.

8. "சொந்த புருஷருக்குக் கீழ்படிகிறவளாய் இருத்தல் வேண்டும்" இங்கு கேட்டுக்கொள்ளப்படுவது என்னவென்றால், சுயநல வாதியான புருஷனுக்கு ஒரு அடிமையாய் கீழ்ப்படிதலை அல்ல, ஆனால் புருஷனுடைய அதிகாரத்திற்கு அடங்கி நடக்கும் அன்புள்ள பெண்மணியாய் திகழ வேண்டும் என்பதே வலியுறுத்தப்படுகிறது. கிறிஸ்து சபையை நேசித்து அன்பு செலுத்துவது போன்ற அன்பானது எதிர்பார்க்கப்படுகிறது. எபேசியர் 5:25. இங்கு அன்புகூறுதல் என்பது ஆண்மகனின் கடமையாய் இருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட மனப்பக்குவம் ஒவ்வொரு மனைவி ஸ்தானத்தில் இருக்கும் பெண்களுக்கு அவசியமான ஒன்றாய் இருக்கிறது. இப்படிப்பட்ட பெண்கள் தெய்வீக குணம்படைத்தவர்களாயும், எல்லா கனத்திற்கும் உரியவர்களாய் விளங்குகின்றனர்.

இப்படிப்பட்ட காரியங்களுக்கான நோக்கங்கள் என்னவெனில், தலைமைத்துவத்தின் மற்ற குணாதிசயங்கள், தேவனது வசனமானது புறஜாதியாருக்குள் பரிகாசத்திற்கு இடமளியாது கிறிஸ்தவ ஆண்களும் மற்றும் பெண்களும் நற்குணசாலிகளாய் விளங்க வேண்டும் என்பதாய் இருக்கிறது. எதிராளியானவன் சுவிஷேச செய்தியை புறக்கணித்து தள்ளுவதற்கான தருணத்தை எதிர்பார்த்து காத்திருக்கிறவனாய் இருக்கிறான். சுவிஷேச செய்தியை

அளிப்பவர்கள் புத்தியீனராகவோ, அல்லது தகுதியற்றவர்களாகவோ, மாய்மாலக்காரராகவோ இருத்தல் கூடாது. J W C Wand அவர்கள் குறிப்பிடும்போது, "எதிராளியானவன் சுட்டிக்காட்டும்படி எவ்வித காரியங்களும் ஒருவரில் காணப்படக்கூடாது, காணக்கூடிய இலக்கானது பரிகசிக்கக்கூடிய நிலையில் ஒருவரில் காண்ப்படக்கூடாது." என்கிறார். ("the New Testament Letters", page 105). இவ்வகையான அடிப்படைக் கருத்துக்கள் இருபாலரான ஆண்களுக்கும் மற்றும் பெண்களுக்கும் பொருந்தக்கூடியதாய் இருக்கிறது.

எல்லா ஆண்களும், அவர்கள் குணாதிசய விஷயத்தில் சவாலாய் ஜீவிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். நமதாண்டவர் வலியுறுத்திக்கூறும் கனிகொடுத்தலை போல இருத்தல் வேண்டும். மத்தேயு 7:16. பவுல் வலியுறுத்துவதைப் போன்று, சுவிஷேச செய்தியை சுமந்து செல்பவர்கள், தங்களது வாழ்வானது தெய்வீகம் நிறைந்ததாயும், பொருத்தமானதாய் இருக்கிறதாயும் இருத்தல் வேண்டும் என்கிறார். ஆண்களுக்குரிய சாவலுக்குரிய வாழ்வின் மாதிரியானது அவர்களது போதகர்களது நன்னடக்கையிலிருந்து, வெளிப்பட வேண்டியதாய் இருக்கிறது. இதினிமித்தமே தலைமைத்துவம் என்பது மிகவும் முக்கியம் வாந்ததாய் கருதுகிறோம், ஒருவர் குணாதிசயங்களில் குறைவு பட்டு காணப்படுவாரேயானால், அவர்கள் தலைமைத்துவத்திலிருந்து விலக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர், மற்றும் தலைமைத்துவ பயிற்சியிலிருந்தும் விலக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கின்றனர்,

Homer Kent என்பவர் சரியான காரியத்தை வலியுறுத்தி கூறுகிறவராய் இருக்கிறார்: "ஒரு தேவ ஊழியர் தொடர்ந்து தன்னை நற்கிரியைகளைச் செய்வதற்கு அற்பணித்துக் கொண்டவராய் இருத்தல் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. இளம் வாலிபர்கள் பின்பற்ற வேண்டிய ஹீரோக்களை நாடுகிறவர்களாய் இருக்கின்றனர். தேவ ஊழியர்கள் தகுதிவாய்ந்த காட்சிப்பொருளாய் இருக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர்" (H A Kent, "The Pastoral Epistles", page 231).

சுய அடக்கம் என்பது ஆண்களுக்கானப் பட்டியலை வழி நடத்துகிறதாய் இருக்கிறது, இதிலிருந்தே எல்லாக் காரியங்களும் பின்தொடர்கிறதாய் இருக்கிறது. அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பார்களேயானால், அவர்களது சொந்த மனசாட்சியானது, சாட்சி கூறுவதற்குரிய திறந்த வாசலைக் காண்கிறதாய் இருக்கும். மேற்குறிப்பிட்டபடி, மாய்மாலமானது தருணங்களுக்கான கதவுகளை விரைவில் அடைத்துவிடுகிறதாய் இருக்கிறது.

Dr Harry Ironside இக்கருத்தைக் கூறுகிறவராய் இருக்கிறார், "மனிதர் ஒரு பிரசங்கியாரை வாக்கு வன்மையில்லாதிருந்தாலோ அல்லது உயர்தரமான கலாச்சாரப்பண்பாடுகள் இல்லாதிருந்தாலோ அவரை மன்னித்துவிடுவர், தனிப்பட்ட கவர்ச்சியில் குறைவுபட்டாலோ, ஞானமற்றவராகவோ இருந்தால் கூட அவர்கள் மன்னிப்பர், ஆனால் அவர்கள் ஒழுங்கற்று இருப்பார்களேயான அவர்கள் அதை ஒருபோதும் மன்னியாதவர்களாய் இருக்கின்றனர். பரிசுத்தமான காரியங்களை கையாளுகிறவர்கள், அவர்களது வல்லமையில் வாழ்கிறவர்களாய் இருக்கின்றனர்." (H A Ironside, "Timothy and Titus", page 268).

ஆண்கள் கீழ்க்கண்ட உயர் பண்பு அல்லது நன்னடத்தையின்படி நடந்து கொள்ள அழைக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர். இவ்விரு வார்த்தைகளையும் மனதில் கொள்வோமாக, "உயர்பண்பானது" நமது நன்னடத்தையில் விளங்குகிறதாய் இருக்கிறது. மட்டுமன்றி நல்ல பழக்கவழக்கங்களிலும் இதில் விளங்குகிறதாய் இருக்கிறது. உதட்டளவில் சொல்லும் காரியங்களில் அல்ல, நமது வாழ்க்கையே கர்த்தரின்பணியில் நம்மை தகுதியுள்ளவர்களாக்குகிறதாய் இருக்கிறது. கீழ்க்காணும் பட்டியலானது ஆண்களுக்காக இருந்த போதிலும், தங்களை தலைமைத்துவத்திற்காய் ஆயத்தம் செய்யும் ஒவ்வொருவருக்கும் உரியதாய் இருக்கிறது.

சபையின் வாலிபர்கள்:

1. "தெளிந்த புத்தியுள்ளவர்கள்" - இது பெண்களைப் போன்றே ஆண்களிலும் சார்ந்து இருக்கக்கூடிய நிலையான ஒழுக்க நெறியாய் இருக்கிறது. இச்சைகளுக்கடுத்த காரியங்களில் இவர்கள் சுய அடக்கமுள்ளமுள்ளவர்களாய் இருக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். மனதில் எழும் இச்சைகளுடன் யுத்தம் செய்து, அதனை கீழடக்கி கட்டுப்பாட்டுக்குள் வைத்துக்கொள்வது கிறிஸ்தவ நடக்கையில் பயனுள்ளதாய் தீர்மானிக்கிறது.

ஒரு ஆணோ அல்லது பெண்ணோ பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பார்களேயானால், அவர்கள் கட்டுப்பாட்டுக்குரிய வழியில் பாவம் செய்வதற்கு நீங்கலாகி இருப்பர், அனுதினமும் பரிசுத்த ஆவியானவருக்குக் கீழ்ப்படியும் பழக்கமானது, கட்டுப்பாடுள்ள வாழ்க்கை வாழச் செய்கிறதாய் இருக்கிறது, மட்டுமல்லாது, கர்த்தரின் பணி செய்வதற்கான தருணங்களை அளித்து, கர்த்தர் உண்மையான பணியாளருக்கு அளிக்கும் பிரதிபலன்களை அடையும்படி செய்கிறது. கீழ்ப்படிதலில் விதைக்கப்படுகிறவைகள், சுய அடக்கம்

என்கிற அறுவடையையும் ஆவிக்குரிய கனியாகிய அறுவடையையும் அளிக்கிறதாய் இருக்கிறது, மற்றும் இதர ஆசீர்வாதங்களையும் அளிக்கிறதாய் இருக்கிறது, கலாத்தியர் 6:7.

வாலிபப்பருவமானது ஆவிக்குரிய வளர்ச்சியடைகிற காலமாய் இருக்கிறது, எதிர்காலத்திற்குரிய ஆசீர்வாதங்களுக்கு அடிஸ்தானம் இடக்கூடிய காலமாய் இருக்கிறது. சங்கீதம் 144:12, 15, பிரசங்கி 11:9, 10, 12,:1, 1 இராஜாக்கள் 18:12.

2. "உபதேசத்திற்கடுத்த விஷயங்களில், கலங்கமற்றவர்களாயிருத்தல் வேண்டும்" - தீத்து மற்ற எவ்வித காரியங்களுக்கு இடமளியாது, சத்தியம் அறிப்பட வேண்டிய நோக்கோடு, சுத்தமான உபதேசத்தை தனது அற்பணிப்பு மூலம் போதனை செய்கிறவராய் இருந்தார். பணம், அதிகாரம், அல்லது செல்வாக்கு போன்றவை அவரது ஊழியத்தில், அவரது நோக்கமாக இருக்கவில்லை.

சபையில் உள்ள ஒவ்வொரு மனிதரும், தங்களது கடமைகளில், இவ்வித மனப்பான்மையுடன் செயல்ல்படுவது அவசியமாய் இருக்கிறது. பணமோ, அதிகாரமோ, செல்வாக்கோ கொண்டு வருகிறவைகளுக்காக கர்த்தருடைய பணியைச் செய்யாது, கர்த்தருக்கு மகிமை கொண்டுவருவதே இலக்காகக் கொண்டு செயலாற்றுதல் வேண்டும். இதுவே சத்தியமும், தேவனது பார்வையில் நீதியுமாய் இருக்கிறது.

3. "ஈர்ப்பு சக்தி" - ஒரு கிறிஸ்தவன் எப்பொழுதும், உலகத்தால் கவர்ந்திழுக்கப்பட்டு செயல்படுகிறவனாய் இருக்கிறான். புறஜாதிய உலகமானது நமது செய்தியை ஏற்றுக்கொள்ளாதிருக்கலாம், இருப்பினும் அவர்களுக்கு அதற்கான காரணத்தை ஒரு போதும் அளித்தல் கூடாது, நமது நன்னடத்தை மூலம், நமது வாழ்வை சீர்தூக்கிப்பார்த்து, நமது செய்தியானது அவர்களுக்கு பரிகாசமாய் தோன்றினாலும் தொடர்ந்து அச்செய்தியை அவர்களுக்கு அளிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

4. "நேர்மையானவராய் இருத்தல்" - நமது தராதரமானது நித்திய தராதரமாய் இருக்கிறது. மகிமையின் கர்த்தரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழ்க்கை வாழ வேண்டியவர்களாய் இருக்கிறோம். இவ்வுலகம் நம்மில் எதைக்காண்கிறதாய் இருக்கிறதோ, அதையே அது பெற்றுக்கொள்கிறதாய் இருக்கிறது. மறைக்கப்பட்ட விரிசல்களோ, அல்லது நமது சாட்சியானது மாய்மலமுள்ளதாய் இருக்கச் செய்யும் பூரணமற்ற தன்மையோ நம்மிடமில்லை.

5. "குற்றம் கண்டுபிடிக்க இயலாத ஆரோக்கியமான பேச்சை பேசுதல் வேண்டும்" போதகர்களும், தேவமனிதர்களுமாய் இருக்கிற நமது சுவிஷேச செய்தியில் குற்றம் கண்டுபிடிக்க இயலாத நிலையில் பிரசங்கித்தல் வேண்டும். நமது பேச்சானது எப்பொழுதும், "ஆரோக்கியமானதாய்" இருத்தல் அவசியம். அவைகள் ஜனங்களை இடித்து அழிப்பதைக்காட்டிலும், கட்டி எழுப்புகிறதாய் இருத்தல் வேண்டும். நாம் எப்பொழுதும் நேர்மறைவாதிகளாய் இருத்தல் வேண்டும், எதிர்மறைவாதிகளாய் இருத்தல் கூடாது.

இவைகள் எல்லாவற்றிலும் முக்கியமான இலக்கு என்னவெனில், நமது சுவிஷேச செய்தியை எதிர்ப்போர், நம்மைக்குறித்து எதையும் விரோதமாய் கூறிவிடக்கூடாது என்பதாகும். அவர்கள் நமது செய்தியை நிராகரிக்கலாம் அல்லது ஏற்றுக்கொள்ளலாம், நாம் அவர்களது வழியில் நில்லாதவர்கள் இருத்தல் மிகவும் அவசியமானதாய் இருக்கிறது.

தலைமைத்துவ நடைமுறை:

1. **ஒரு உண்மையான தலைவர் வேதாகமச் செய்திக்கு தலைவணங்குகிறவராய் இருக்கிறார்**: இப்பகுதியில் நாம் படித்த தராதரங்களானது, நமது "தராதரங்களாய்" இருக்கின்றன. இவைகள் மற்றவர்கள் நமது வாழ்வில் காணக்கூடிய நடைமுறைக் கனிகளாய் இருக்கின்றன, இதனால் நாம் "கிருபையிலும், கிறிஸ்துவை அறிகிற அறிவிலும்" வளருகிறவர்களாய் இருக்கிறோம் என்பதை இனங்கண்டுகொள்ளும் அடையாளமாய் இருக்கிறது.

இப்பகுதியில் ஒரு பெண்ணானவளின் உண்மை அழகானது, அவளது குணாதிசயங்களில் விளங்குகிறது என்பதனைக் கண்டோம். ஒரு மனிதனில் மதிப்பை அவனது குணாதிசயங்களால் அளவிடுகிறவர்களாய் இருக்கிறோம். நாம் தலைவணங்க வேண்டிய சுவிஷேசத்திற்கு முன் தலைவணங்குகிறவர்களாய் இருக்கிறோமா? தீத்து 2:10.

இப்படிப்பட்ட தராதராதை அடையாதவர்கள், தலைமைத்துவத்தை அடைவதற்கு இன்னும் ஆயத்தப்படாதவர்களாய் இருக்கின்றனர். இருப்பினும் அப்படிப்பட்டவர்கள் "இத்தராதரங்களை அடைந்து சிறந்து விளங்க" ஊக்கமளிக்கப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். இதனை அவர்கள் தங்களது சொந்த பெலத்தாலோ வல்லமையாலோ பெற இயலாது, பரிசுத்த ஆவியானவரை

இதற்காக சார்ந்து இருப்பதன் மூலமும், அவருக்குக் கீழ்ப்படிந்து அவர் வழியில் நடப்பதன் மூலமாகவும் பெற்று கொள்ள இயலும் என்பதில் எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பது தெளிவு.

2. **மெய்யான தலைமைத்துவம், திருமணம் மற்றும் குடும்பம் இவற்றை தெய்வீக நிர்வாகங்களாய் ஆதரிக்கிறது**: நமது குடும்பத்தைப் பாதுகாப்பாய் வைத்துக்கொள்கிறோமா, அல்லது வாரம் முழுமையும் சபைக்கடுத்த காரியங்களால் வீட்டுக்காரியங்களை புறக்கணித்து திருமண உறவு மற்றும் குடும்பம் பாதிக்கப்படுமளவிற்கு விட்டு விடுகிறோமா? அவ்வாறு செய்வோமெனில் அது நீதியான நடத்தையாய் இருக்காது, இது மனைவிக்கோ அல்லது புருஷருக்கு தகாத காரியமாய் கர்த்தரின் பார்வையில் இருக்கிறது. முதலாவது புருஷன் மனைவியாய் இருத்தல், இரண்டாவது பெற்றோராய் இருத்தல், மூன்றாவது சபையின் சேவகராய் இருத்தல். நாம் குடும்பத்தில் புருஷன் மனைவியாகவோ, அல்லது பெற்றோராகவோ இருக்க தவறுவோமானால், சபையின் பணிகளைச் செய்ய தகுதியில்லாதவர்களாய் போய்விடுவோம். 1 தீமோத்தேயு 3:2 - 6,12. Refer to doctrinal study of GOD: DIVINE INSTITUTIONS OF MARRIAGE AND THE FAMILY

நீங்கள் ஒரு ஆண் போதகராய் இருந்து கொண்டு சபையின் பெண்களுக்கு சர்வ சாதாரணமாக போதனை செய்து வருகிறவர்களாய் இருக்கிறீர்களா? ஒரு ஆண் போதகர் இப்பகுதியில் மிகவும் கவனமாய் இருக்க வேண்டியவராய் இருக்கிறார், உங்களுக்கும் சபையின் பெண்களுக்கும் நன்மை பயக்கும்படிக்கு இவ்வாறு செய்தல் வேண்டும். ஒரு ஆண்போதகர் இளம் வாலிப சகோதரிகளுக்கு குழுக்களாகவோ, அல்லது தனிப்பட்ட நிலையிலோ போதித்தல் கண்டிப்பாக தவிர்க்கப்படல் வேண்டும். அவர்களுக்கு போதனை அளிப்பது சபையில் உள்ள முதிர்ந்த வயதான பெண்களுக்குரியதாய் இருக்கிறது. திருமணமான சகோதரிகளுக்கு சபையில் போதிக்கப்பட்டவைகளைக் குறித்து கேள்விகள் உண்டானால், அவர்களது சொந்த புருஷர்களிடத்தில் அதற்கான பதிலை தெரிந்து கொள்ள முனைதல் வேண்டும். இதினிமித்தம் புருஷர்கள் தங்கள் ஆவிக்குரிய தலைமைத்துவத்தை வீட்டில் செயல்படுத்த ஏதுவுண்டாகும். இளம் வயதுள்ள பெண்களை உருவாக்குகிறவர்கள் வயது சென்ற பெண்களின் கடமையாய் இருக்கிறது, ஆண்களாயிருக்கும் போதகர்கள், அவர்களை உருவாக்குகிறவராய் இருப்பாரானால், அவர் அவர்களுக்கு சோதனையாய் இருப்பர் அல்லது அவர்கள் இவருக்கு சோதனையாய் விளங்குவர்.

உங்களது சொந்த ஐக்கியத்தில் இக்காரியத்தை பரிசீலனை செய்யுங்கள். ஒரு புருஷனின் தலைமைத்துவத்தை மதிக்கிறவர்களாய் இருக்கிறீர்களா, அல்லது நீங்கள் பக்கவழியாய் நுழைய எத்தணிக்கிறவர்களாய் இருக்கிறீர்களா? அப்படிச் செய்வீரகளெனில், புதிய ஏற்பாட்டு அமைப்பைப் புறக்கணிப்பவர்களாயிருப்பர்.

அநேக இளம் பெண்கள் தங்களது குடும்பங்களில் தங்களது பிள்ளைகளை எவ்வாறு ஆரோக்கியமான மன நிலையிலும், மற்றும் தன்னம்பிக்கையுடனும் வளர்ப்பது என்பது குறித்து கற்றுக்கொள்ளாதிருப்பர். இப்பகுதியில் சபையின் வயது முதிர்ந்த பெண்கள் பெரிதளவில் அவர்களுக்கு உதவியாய் இருந்து அவர்களுக்கு அறிவுரை வழங்கி, ஒரு நல்ல தாயாக தனது பிள்ளைகளுக்கு அவர்கள் விளங்கச் செய்தல் வேண்டும். கணவன்மார்களுடன் அவர்களுக்கிருக்கும் பிரச்சனைகளையும் வயது முதிர்ந்த பெண்களிடம் அவர்கள் பகிர்ந்து கொள்ள, அவர்கள் அதற்கான தீர்வுகளையும், ஆலோசனைகளையும் வாலிப ஸ்திரீகளுக்கு தங்கள் அனுபவங்களில் இருந்து கற்றுக்கொடுப்பவர்களாய் இருப்பர். இக்காரணங்களால், எவ்விதத்திலும் ஆண்போதகர்கள் இப்படிப்பட்ட குழுக்களில் தலைபோடாமல் ஒதுங்கிக் கொள்வது, இளம் பெண்கள் மனந்திறந்து தங்களது ஐயப்பாடுகளை வயது முதிர்ந்த சபையின் தாய்மார்களிடமிருந்து எவ்வித தர்மசங்கடமின்றி தீர்த்துக்கொள்ள ஏதுவுண்டாகும்.

4. கலாத்தியர் 5:13-26.

புதிய வாழ்க்கையின் ஐக்கியத்தில் இயேசுக் கிறிஸ்துவுடன் உருவாக்கப்படக்கூடிய நற்கனி:

13. சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கென்று அழைக்கப்பட்டீர்கள், இந்த சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள், 14. உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது
போலப் பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும். 15. நீங்கள்
ஒருவருக்கொருவர் கடித்துப் பட்சிப்பீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவருக்கொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். 16.
பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாது இருப்பீர்கள். 17. மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு
விரோதமாகவும் இச்சிக்கிறது, நீங்கள் செய்ய

வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுகொன்று விரோதமாய் இருக்கிறது. 18. ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல, 19. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாய் இருக்கின்றன; அவையாவன: விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், 20. விக்கிரக ஆராதனை, பில்லிசூனியம், பகைகள் விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கப் பேதங்கள், 21. பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுக்கள் முதலானவைகளே. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று, முன்னே நான் சொன்னது போல, இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். 22. ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், 23. சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. 24. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள். 25. நான் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம். 26. வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமைக் கொள்ளாமலும் இருக்கக்கடவோம்.

பிரதிபலிப்பு:

வேதாகம சுயாதீனம் என்பது இழந்து போனோரிடத்தில் காட்டும் அன்பைக் காட்டுகிறது (Gk: agape = concern for the wellbeing of others மற்றவர்களின் நலனைக் குறித்து கரிசனையாய் இருத்தல்), சகோதரரின் நலனில் அன்பு செலுத்தி கரிசனையைக் காட்டுவது. இது ஒரு போதும், நமது சகோதரர்கள் மீது ஆர்வக்குறைக் காட்டுகிறதாய் இல்லை. தலைமைத்துவம் இதற்கு எடுத்துக்காட்டை அமைக்கிறதாய் இருக்கிறது, ஒரு உருவாக்குகிறவர் agape அன்பை சபையினருக்குக் காட்ட வேண்டியவராய் இருக்கிறார்.

சுயாதீனம் என்பது "எதையும் செய்யலாம்" என்கிற பிரமாணம் மூலம் எளிதாய் திசைதிரும்பச்செய்கிறதாய் இருக்கிறது, ஜனங்களுக்குள் அவர்களது மதத்தின் ஒரு பகுதியாக, பாலியல் ஒழுக்கக்கேடானது பயன்பட்டு வந்தது, ஆண்டி - நோமியனிஸம்,. [antinomianism = the theological doctrine that by faith and God's grace a Christian is freed from all laws (including the moral standards of the culture] எப்பொழுதும், வாசலில் படுத்து கிடந்து, தருணங்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது, அது

கர்த்தரின் கிருபைக்குள் உள்ளாக பொதியப்பட்டு நுழைய சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. இது சாத்தானின் கண்ணோட்டமாய் இருக்கிறது, இதற்கு எதிராக தேவனது பிள்ளைகள் காக்கப்படவேண்டியவர்களாய் இருக்கின்றனர், லீகலிஸம் [legalism] மனிதன் அமைத்துக்கொள்ளும் சரியான சட்டப்பிரகாரம் தேவனுக்கு பாத்திரராக தனது சொந்த பெலத்தில் வாழும்படி எதிர்பார்க்கப்படுகிறான். பவுல் இப்பகுதியில் அதை எச்சரிக்கிறவராய் இருக்கிறார் மற்றும் அதன் அபாயத்தை எடுத்துரைத்து, அதன் இரு கொள்கைகளாகிய libertinism [தாராள வாதம்] and legalism, [லீகலிஸம்] குறித்துள்ள அபாயத்தை உணர்த்தி, பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டில் வாழும் நடக்கையை வற்புறுத்துகிறவராய் இருக்கிறார்.

இவ்விரு அபாயங்களில் இருந்து பரிசுத்த ஆவியானவர் கட்டுப்பாட்டுக்குள் அமைந்து வாழும் வாழ்க்கையானது வகை செய்கிறதாய் இருக்கிறது. சுயாதீனத்தை தவறாய் பயன்படுத்தி, ஒழுக்க சீர்கேடுகளுக்கான அனுமதி, திமிரான பெருமை, மற்றும் அன்புக் குறைவு போன்றவை லீகலிஸ்ட்டுகள் போதித்து மக்களை தவறான பாதையில் வழிநடத்த பயன்படுத்தி வந்தவைகளாகும். கிறிஸ்தவ தலைமைத்துவத்தில் இருப்பவர்கள், நம்மை உருவாக்குகிறவரான பவுலின் மாதிரியை அமைத்துக்கொண்டு, இது அனுதினமும் ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கையில் இருக்க வேண்டியது அவசியமான ஒன்றாய் இருக்கிறது. அவர்களது போதனையில் கிருபையிலும் தேவ அன்பிலும் வளர உதவுவதாய் இருத்தல் அவசியம், லீகலிசத்தின் திமிரான பெருமையை பற்றிக்கொண்டு வாழ அனுமதித்தல் தவிர்க்கப்படல் வேண்டும். தலைமைத்துவத்தில் இருப்பவர்கள் ஆவியினால் நிரப்பப்பட்ட நடத்தையை மட்டும் போதித்தல் கூடாது, அவர்கள் அதை நடைமுறைப் படுத்திக்காட்டுதல் வேண்டும், அவர்கள் தேவனது மந்தையை உருவாக்குகிறவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் என் மாதிரியை பின்பற்றுகிறாகுங்கள் என ஆணித்தரமாய் சொல்லக்கூடியவர்களாய் இருத்தல் வேண்டும். மத்தேயு 7:15-20, பிலிப்பியர் 3:13-19.

13. சகோதரரே, நீங்கள் சுயாதீனத்திற்கென்று அழைக்கப்பட்டீர்கள், இந்த சுயாதீனத்தை நீங்கள் மாம்சத்திற்கேதுவாக அநுசரியாமல், அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்,

இவ்வசனமானது கிருபையினால் இரட்சிப்படைந்த விசுவாசிகளாய் இருக்கும்

நமது கடமையை நமக்கு அறிமுகப்படுத்துகிறதாய் இருக்கிறது. நமது இரட்சிப்பிற்காய், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் கிரியைகளை ஏற்றுக்கொண்ட போது, பரிசுத்த ஆவியானவரது வழிநடத்துதலையும் நமது ஆவிக்குரிய வாழ்விற்கு ஏற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம், தேவ அன்பினால் நிரப்பப்பட்டு வாழும் வாழ்க்கை ஆரம்பிக்கிறவர்களாய் இருக்கிறோம், லீகலிசம் அதன் அனுமதி இவைகளின் படி நடாவாதிருக்க எச்சரிக்கப்படுகிறவைகளாயும் இருக்கிறோம். பழைய பாவ சுபாவத்திலிருந்து ஜெயம் பெற [வசனம் 13 ல் "மாமிசம்" என கூறப்பட்டுள்ள வார்த்தை] ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கை, மற்றும் ஆவியானவரால் வழிநடத்தப்படும் வாழ்க்கையினால் மட்டுமே சாத்தியமாகிறது. பாவமாகிய சோதனையை மேற்கொண்டு வாழ இவைகள் அனுகூலங்களால் இருக்கின்றன. பாவத்திற்குள்ளாய் கிருபையானது ஒருபோதும் ஒருவரை வழிநடத்தாது, மாறாக பாவத்திலிருந்து ஒருவரை விடுதலை செய்கிறதாய் இருக்கிறது. இயேசுவுக்குள்ளான விசுவாசி இப்பொழுது பாவத்தை எதிர்க்கும்படி விடுதலையாக்கப்பட்டுள்ளார். (இதன் பொருள்: பரிசுத்த ஆவியானவர் அவர்களுள் வாசம் செய்வதால் இது சாத்தியமாகிறது) அவர்களுக்குள் உள்ளான வழிநடத்துதலைப் பெறுகிறபடியால் புறம்பான நியாயப்பிரமாணமின்றி அவர்களால் செயல்பட இயலும்.

பவுல் கலாத்தியரை "சகோதரரே" என அழைக்கிறவராய் இருக்கிறார், இதன் வாயிலாக அவர்களுக்கு நினைப்பூட்டுவது என்னவெனில், அவர்கள்து பாவங்கள், இறையியல் பிழைகள், இவற்றுடன் வாழ்ந்து வந்தாலும், அவர்கள் இன்னும் இரட்சிப்படைந்தவர்களாகவே இருக்கின்றனர், இன்னும் அவர்கள் சகோதரர்களாக கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகவே இருக்கின்றனர், பவுலின் வாஞ்சையெல்லாம், அவர்கள் மறுபடியும் குடும்பகடமைகளையும் அதன் சிலாக்கியங்களையும் முழுமையாய் அடைந்து அனுபவிக்க வேண்டும் என்பதாய் இருந்தது. அவர்கள் மற்ற விசுவாசிகளைப் போன்றே அழைக்கப்பட்டவர்களாய் இருந்தனர், (GK: aorist passive indicative of Kaleo = called to freedom or liberty. சுயாதிானத்திற்காய் அழைக்கப்பட்டவர்கள் அல்லது சுதந்தரமாய் இருப்பதற்கு அழைக்கப்பட்டவர்கள்), The Greek word eleutheria என்பதன் பொருள் அடிமைத்தனத்திற்கு எதிரான விடுதலை என்பதாகும். இது நமக்கு புலப்படுத்துவது என்னவெனில், ஆத்துமாவில் ஏற்படும் உள்ளான சுதந்திரம், ஒருவர் உண்மையில் அடைய விரும்பும் உண்மையான சுதந்திரமாய் இருக்கிறது.

நீங்கள் இரட்சிப்படைந்த போது, என பவுல் இங்கு குறிப்பிடுகிறார், தேவன் உங்களை அழைக்கும்போது குறிப்பிட்ட வழிமுறையில் உங்களை

அழைக்கிறவராய் இருக்கிறார். பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் வாழும்படியான உரிமை உங்களுக்கு இருக்கிறது. லீகலிஸ்ட் மோசேயின் பிரமாணத்திற்கு கீழ்ப்படிந்து வாழ வற்புறுத்துகிறவர்களாய் இருக்கின்றனர், பவுல் இதற்கு மாறாக கூறுகிறவராய் இருக்கிறார், எதற்கு நாம் முதலிடம் கொடுக்கிறவர்களாய் இருக்கிறோம், கர்த்தரது நேரடி கட்டளைக்கா? cf கலாத்தியர் 3: 19,20 அல்லது பழமையானது என அழைக்கப்படும் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கா? ஒரு உண்மையான தலைவர் தனது ஜனங்களுக்கு, சத்தியத்தை எடுத்துரைக்கிறவராய் இருக்கிறார், மற்றும் சரியான காரியத்திற்கு முதலிடம் அளிக்க எடுத்துக் கூறுகிறவராய் இருக்கிறார். ஜனங்கள் பழைய நியமங்களை பின்பற்றும்போது, பழையவற்றிற்காக புதிய நியமங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளபோது, பழையவற்றை விட்டுவிட்டு புதியனவற்றை பின்பற்ற அவர் நினைவுபடுத்துகிறவராய் இருக்கிறார்.

சுயாதீனம் என்பது சில மக்களைப் பயப்படுத்தக்கூடிய ஒன்றாய் இருந்து வருகிறது. காரணம் அவர்களது சொந்த பாவபழக்கத்தை வலிமை வாய்ந்த பிரமாணத்தினால் கட்டப்படுமாறு அவர்கள் தேடுகிறவர்களாய் இருக்கிறார்கள், தங்களுக்கும் தங்களது கர்த்தருக்கும் அது அவகீர்த்தியைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது. லீகலிசம் சமூக ரீதியில் வாழ உரிமம் அளிக்கின்றபோது, அதற்காக செலுத்தப்படும் கிரயம் உயர்ந்ததாய் இருக்கிறது, தனிப்பட்ட அழுத்தங்கள், பரபரப்பு, ஆத்துமாவை கடினப்படுத்துதல், பெருமை போன்ற இவைகள் இயேசுக்கிறிஸ்துவின் அழைப்பிற்கு எதிரானவைகளாய் இருக்கின்றன. லீகலிஸம் ஆவியானவரால் நிரப்பப்பட்டு வாழும் வாழ்க்கையைவிட எளிதான ஒன்றாய் விளங்கின போதும், வாழ்வில் தவறான கனியை உருவாக்குகிறதாய் இருக்கிறது, நாம் அவற்றை கீழ்க்காணும் பட்டியலில் காண இருக்கிறோம்.

நீச்சல் குளத்தில் உள்ள ஒரு குழந்தையைப் போல, தண்ணீருக்கு பயந்து கொண்டு, 'மரணத்தின் விழிம்பில்" தவித்துக் கொண்டிருக்கின்றர். அவர்கள் ஒருவேளை சிரிக்கலாம் அது அசட்டு சிரிப்பாய் இருக்கிறது, அதன் முழுமையான அனுபவம் அவர்களுக்கு ஒரு சோதனையாய் இருக்கிறதேயல்லாமல், அவர்களுக்கு உண்மையான மகிழ்ச்சியைக் கொண்டுவருகிறதாக இல்லை.

இது போன்றே ஆவிக்குரிய வாழ்க்கையும் இருக்கிறது. மனிதனும் பிரமாணத்தல் "தாங்கி நடத்தப்படுகிறவனாய்" இருக்கிறான், இது ஒரு குழந்தை நீச்சல் பழக தண்ணீரில் மிதக்க பயன்படுத்து மிதவை போன்றிருக்கிறது. ஆனால், பரிசுத்த ஆவியானவரின் நெருங்கிய பிரசன்னத்தினால் மட்டுமே வாழ்க்கைப்பாடங்கள்

மகிழ்ச்சியைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது. ஒருவிசுவாசியின் நடக்கை, பரிசுத்த ஆவியானவர் அவரில் வாசம் செய்யும்போது அன்பு மற்றும் சந்தோஷம் இவைகளை உருவாக்குகிறதாய் இருக்கிறது. இவைகள் அவர்களது ஆத்துமத்தில் நிறைந்து வழிந்து, மற்றவர்களை அது ஆசீர்வதிக்கிறதாய் இருக்கிறது. தலமைத்துவ மாதிரிகள், வாழ்வின் வழியாயும், மற்றும் அனுதின செயல்பாடுகளுமாய் இருக்கிறது, இது நீச்சல் குளத்தில் தனது பிள்ளைகளுடன் இருக்கும் பெற்றோர்களைப்போன்று இருக்கிறது, தேவனது எல்லா ஜனங்களையும், உற்சாகப்படுத்தி, நம்பிக்கையில் பெருகவும், அவர்களது கர்த்தரில் மகிழவும் அன்பு, இரக்கம், கிருபையில் வளரவும் செய்தல் வேண்டும்.

எப்பொழுதும் சபை அங்கத்தினரில் ஒருவர் பாவத்தை செய்து அதற்கான மன்னிப்பைப் பெற நிற்கிறவர்களாய் இருப்பர், அப்படிப்பட்டவர்கள் உபதேசங்களை அரைகுறையாய் கேட்டு நடக்கிறவர்களாய் இருப்பர், அவைகளைத் தவறாய் பயன்படுத்திவருகிறவர்களாகவும் இருப்பர். அவர்கள் ஏதோ சில தீமையான காரியங்களைச் செய்வதில் தவறில்லை எனக்கருதுபவர்களாய் இருப்பர். இப்படிப்பட்டவர்கள் "தாராளவாதிகளாய், அவ்வப்போது மாம்சீகத்துக்கு" இடமளித்து செயல்பட்டுவருகிறவர்களாய் இருப்பர். இப்படிப்பட்டவர்களை பவுல் இங்கு கண்டனம் செய்வது போல, கண்டித்து அவரது எல்லா போதனைகளையும் அவர்கள் கவனிக்க வழிநடத்துதல் வேண்டும். இப்படிப்பட்ட நிலையற்ற தன்மையுடன் இருப்பவர்களை கவனித்து நடக்கும்படிக்கு, மற்ற விசுவாசிகளையும் வற்புறுத்துவது அவசியமானதாய் இருக்கிறது. (கலாத்தியர் 6:1) கிறிஸ்துவின் தலைமைத்துவ முன்மாதியானது இப்படிப்பட்டவர்களை முற்றிலும் அகற்ற வகை செய்யாது, இப்படிப்பட்டவர்களுக்கு உதவி அளித்து அவர்களை கூடிய மட்டும் நல்வழிப்படுத்த வழிநடத்துகிறதாய் இருக்கிறது.

பவுல் முதிர்ந்த ஆவிக்குரிய தன்மையை விவரிக்கும்பொழுது, "அன்பினாலே ஒருவருக்கொருவர் ஊழியஞ்செய்யுங்கள்" என்கிறார், "ஊழியம் செய்யுங்கள்" என்கிற வார்த்தையானது கிரேக்க சொல்லில், douleuo எனப்பயன்படுத்தப்பட்டுள்ளது, இதன் பொருள், ஒரு அடிமையின் கடமை நிறைவேற்றி, மற்றவர்கள் நலனிலும், மற்றவர்களது சௌகரியத்திலும் அக்கரை காட்டுதல் என்பதாகும். ஒரு அடிமையானவன் (doulos) முற்றிலுமாய் தனது பணிக்கென தன் வாழ்வை அற்பணித்துக்கொண்டவனாய் இருக்கிறான், இதைப் போன்றே ஒரு விசுவாசியும் பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு அற்பணிப்புடன் வாழுதல் வேண்டும். அவர்கள் பயத்தினால் அவ்வாறு செய்யாமல், அன்பினாலும், நன்றி உணர்வுடனும் அப்படி செய்கிறவர்களாய்

இருத்தல் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் மகிழ்ச்சியானது அவர்கள் வாழ்வில் வழிந்தோடுகிறதாய் இருந்து, மற்றவர்களும் தேவனது கிருபையின் ஐசுவரியத்தை அறியும்படிக்கு செய்கிறதாய் இருக்கிறது.

Christian author Clark Pinnock, இவ்வாறு குறிப்பிடுகிறார்: "கிறிஸ்தவர்கள் விடுவிக்கப் பட்ட அடிமையைப் போன்று இருக்கிறோம், ஆனால் வீட்டு எஜமானோ அளவற்ற அன்புடன் தனது வீட்டை விட்டு அவ்வடிமை வெளியேற மறுப்பு தெரிவிப்பவராய் இருக்கிறார். இதை அறிந்த அடிமை எந்நாளும் அவரையே சேவிப்பதை தெரிந்து கொள்கிறவனாய் இருக்கிறான். (யாத்திராகமம் 21:1-6). இப்பணியானது தன்னார்வத்தினால் செய்யப்படுகிறது, இது அன்பினால் வற்புறுத்தப்பட்டு, செய்யப்படுகிறதாய் இருக்கிறது." இவ்வித மனநிலையானது ஒரு உண்மையான கிறிஸ்தவ தலைவரின் மாதிரியாய் அமைதல் வேண்டும், காரணம் இதுவே உண்மயாய், கர்த்தருடன் அவர்களுக்கிருக்கும் மனப்பாங்கை வெளிக்காட்டுகிறதாய் இருக்கிறது.

14. உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போலப் பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக, என்கிற இந்த ஒரே வார்த்தையிலே நியாயப்பிரமாணம் முழுவதும் நிறைவேறும்.

இவ்வசனமானது, கர்த்தர்தாமே போதனை செய்த, மையக்கருத்துக்கள் அடங்கிய, அடிப்படைக் காரியங்களை கலாத்தியருக்கு நினைவுபடுத்துகிறதாய் இருக்கிறது. இவர்கள் இயல்பாகவே பிரமாணத்தை கூட்டிக்கழித்து, அவற்றைத் தங்களது வாழ்விற்கு ஆதாரமாகக் கொண்டவர்கள். கர்த்தர் மோசேயின் நியாயப்பிரமாணத்தின் சாராம்சம் அன்பு என வியாக்கியனத்து இருந்தார், மற்றும் கர்த்தரது ஊழியத்தின் மையமாய், அன்பு கூற அழைப்பைப்பெறுகிறதாய் இருந்தது. (மத்தேயு 22:37-40, யோவான் 15:12,17, ரோமர் 13:9, யாக்கோபு 2:8). விசுவாசிகள் வளர்ச்சியடையும் போது அவர்கள் மற்றவர்களிடம் agape-love அகாப்பே அன்பைக் காட்டவேண்டியவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் ஆழமாய் அவர்களது ஆத்துமாவைக் குறித்தும், அவர்களது நலன் குறித்தும், மனதில் கொண்டவர்களாய், அவர்கள் தங்களுக்குரிய அதே உரிமையை பிறரும் அடைய கருத்துள்ளவர்களாய் இருப்பர். அகாப்பே அன்பானது அடிக்கோடிட்டு காட்டும் முக்கியத்துவம் என்னவெனில், மற்றவர்களது நலனில் அக்கறை கொண்டு, எல்லாவற்றிற்கும் மேலான அகாப்பே அன்பை வெளிப்படுத்தி, மற்றவர்களது இரட்சிப்பு / பரிசுத்தமாக்கப்படுதல் பூரணப்பட பாடுபடுவதை காட்டுகிறதாய்

இருக்கிறது.

பவுல் இங்கு கூறும் வசனத்திற்கு ஒப்பாக, ரபிமார்கள் தல்மூதில் எழுதியுள்ளனர்: In Makkot 23b - 24a Rabbi Simlai சொல்கிறார்: "613 கட்டளைகள் மேசேயால் கொடுக்கப்பட்டன. அவைகளில் 365 கட்டளைகள் எதிர்மறையானவைகள், அது சூரிய காலக்கணக்கின்படி ஒரு நாளுக்கு ஒன்று வீதம் கணக்கிடப்படுகிறது. அக்கட்டளைகளில் 248 கட்டளைகள் நேர்மறையானவை, இவைகள் மனித சரீர உருப்புகளின் எண்ணிக்கையைக் காட்டுகிறதாய் இருக்கிறது. தாவீது அவைகளை பதினொன்றாக குறைத்தார். (சங்கீதம் 15) ஏசாயா அதை ஆறாகக் குறைத்தார் (ஏசாயா 33:15), மீகா அதை மூன்றாக்கினார். (மீகா 6:8), ஏசாயா மீண்டும் அதை இரண்டாக்கினார். (ஏசாயா 56:1). ஆமோஸ் அவைகளை ஒன்று ஆக்கினார். "என்னைத் தேடுங்கள் அப்பொழுது பிழைப்பீர்கள்" (ஆமோஸ் 5:4) ஆபகூக் "விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான்" என்றார் (ஆபகூக் 2:4)." (Quoted from “Jewish New Testament Commentary” , David Stern, on page 565.)

15. நீங்கள் ஒருவருக்கொருவர் கடித்துப் பட்சிப்பீர்களானால் அழிவீர்கள், அப்படி ஒருவருக்கொருவர் அழிக்கப்படாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள்.

Dr J Vernon McGee, என்பவர் கிறிஸ்தவ வேதாகம தலைமைத்துவத்திற்கு மிக சிறப்பான உதாரணமாய் விளங்குகிறார். இப்பகுதியை அவர் குறிப்பிடும்போது, நாவானது "கிறிஸ்தவ நரமாமிச பட்சினி" ["Christian Cannibals",] என அழைக்கிறார். ஒவ்வொரு சபையிலும், சில விசுவாசிகள் நாய்களைப்போல "கடிக்கிறவர்களாய்" இருக்கின்றனர், கலாத்திய சபைகளில் யுத்தம் செய்வதற்கேற்ற யுத்தகமாய் இருந்தது, காரணம் அங்கு சரியான தலைமைத்துவ செயல்பாடுகள் இல்லாதிருந்து, மந்தையானது, தவறான போதனைகளுக்கு நீங்கலாக பாதுகாக்கப்படாது இருந்தது. அவர்கள் அன்பிலும் சத்தியத்திலும் சரிவர உருவாக்கப்படாதிருந்தனர்.

16. பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாது இருப்பீர்கள்.

[06-07-2014 saved in the desktop]

மக்கள் பழைய பாவசுபாவத்திற்கு உட்படும்போது, அவர்கள் "நாய்ச்

சண்டையிடுகிறவர்களாய்" இருப்பர். போதகரானவர், தனது அன்பை அதிகாரத்தை ஆதாரமாய்க் கொண்டு பயன்படுத்த வேண்டியவராய் இருக்கிறார். கர்த்தரின் நாமத்தில் கர்த்தரது கொள்கையானது பின்பற்றப்பட வேண்டியதாய் இருக்கிறது. (1 தீமோத்தேயு 4:6,11, 2 தீமோத்தேயு 3:2). .பவுல் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு அன்பானது வழக்கமாய் செயலாற்றும் பண்பாய் இருக்கிறது எனக் கட்டளையிடுகிறவராய் இருக்கிறார். [வசனம் 14 - "ஊழியஞ்செய்யுங்கள்" என்கிறவார்த்தையானது கட்டளையாய் இருக்கிறது - present active imperative of douleus), ஆகையால், இப்பொழுது கௌவிக்கொண்டிருக்கிற நாயானது "நடக்கும்படி" கூறுகிறார். நமது பழைய பாவசுபாவத்தைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் ஒரே வழியானது ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கையை பழக்கமாக்கிக்கொண்டு வாழ்வில் ஸ்தாபிப்பதே ஆகும், இதன் மூலம் சோதனைகளுக்கு அற்பணிப்பதைவிட ஆவியானவருக்கு அற்பணித்து வாழுவது சிறப்பானதாய் இருக்கிறது. பவுல் புதிய பழக்க வழக்கங்களின்படி வாழும் முறையினை ஒப்பிட்டுக் காட்டுகிறவராய் இருக்கிறார். லீகலிசத்தைச் சார்ந்து வாழ்பவர்களுக்கு புதிய வழியில் வாழக்கற்றுக்கொடுக்க வேண்டியது அவசியமாய் விளங்குகிறது.

மனிதர் இரு காலால் நடக்கும் போது, முழு சரீரமும் சமநிலையில் காணப்படுகிறது, இது குதிங்கால் தொடங்கி, நுனிக்கால் வரையுள்ள செயல்பாட்டினால் சாத்தியமாகிறது. மட்டுமல்லாது வலது கால் மற்றும் இடது கால் மாறி மாறி எடுத்து வைக்கப்படுவதால் முன்னேறி நடக்கிறவர்களாய் இருக்கிறோம். இவ்வாறான செயல்பாடு நிகழ்வதற்கு, மூளை, காதுகளில் ஏற்படும் சமநிலை மையம், தசைநார்கள், நரம்பு மண்டலம், மற்றும் முழு சரீரத்தின் எலும்புகள் போன்றவைகள் ஒத்துழைப்பு செய்கின்றன. நடப்பது என்பது ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கை ஒரு நல்ல பகுப்பாய்வாய் விளங்குகிறது. இதற்கும் செல்லும் திசை, நோக்கம், கட்டுப்பாடு, உள்ளான மனநிலை மற்றும் பெலன் போன்றவை அவசியப்படுகிறதாய் இருக்கிறது. இவைகள் அனைத்தையும் அருளுவது பரிசுத்த ஆவியானவரின் கிரியையாய் இருக்கிறது. விசுவாசிகள் ஆவியானவரின் கிரியைகளுக்கு செவிசாய்க்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் தங்களது ஆத்துமாவில், தேவனது வார்த்தையின் மூலம் பாவ சோதனைகளுக்கு இடமளியாது, தேவனது வார்த்தையின் போதனைகளுக்கும் மற்றும் நடைமுறைப்படுத்தி வாழ்வதற்கும் செவிகொடுத்து முன் செல்கிறவர்களாய் விளங்குதல் வேண்டும்.

Harry Ironside அவர்கள் குறிப்பிடுவது போல: ஆவியானவர் நம்மில்

வாசம்பண்ணுவதற்கும், வழிநடத்துவதற்கும் நாம் ஒன்றைப் பெற்றிருத்தல் வேண்டும், அனுதின வாழ்வில் தீர்மானம் எடுக்கும் போது, ஆவியில் நடந்து கொண்டவர்களாய் எடுத்தல் வேண்டும். பாவத்திற்கு அல்லது லீகலிசத்திற்கு அடியோடு எதிர்ப்பு தெரிவித்து, ஒரு விசுவாசி ஆவியானவரின் வழிநடத்துதலின் பேரில், இரண்டிற்கும் இடமளியாது, தேவனது நோக்கப்படி, பாவ அமைப்பை தேவனது வார்த்தையின் மூலம் இனங்கண்டு கொண்டு அவைகளை நிறைவேற்றாது, சரியானவற்றை தெரிந்து கொண்டு, ஆவியானவருடன் அனுதின வாழ்வில் படியெடுத்து வைப்பதாகும்.

.

பவுல் "நடவுங்கள்" என்று சொல்லும் போது, அதைப் பழக்கமாக்கிக்கொள்ளுங்கள் என்ற அர்த்தத்தில் கூறுகிறார். (GK: present active imperative of peripateo,) பழக்கப்படுத்திக்கொள்ளுதல் என்பது, ஒரே தீர்மானத்தை திரும்பத்திரும்ப செய்வதன் மூலம் அதன் அமைப்பை பெறுகிறவர்களாய் இருப்போம். விசுவாசிகள் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஒவ்வொரு நாளிலும், பழைய பாவ சுபாவ அமைப்பை தெரிவு செய்வதைத் தவித்து, தேவனது வழியை தெரிவு செய்து அதில் நடந்து பின்பற்றுதல் வேண்டும். தலைவர்கள் இப்படிப்பட்ட அன்பிற்கடுத்த காரியங்களை மனதில் கொண்டு மற்றும் இவ்வுண்மைகளால் வழிநடத்தப்படுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். உண்மையான தலைவர் தனது ஜனங்களுக்காக நலமானதை செய்யும்படி ஊக்கப்படுத்தப்படுகிறார். மந்தையானது உங்கள் கைவசம் இருக்கும் வரையில், அவர்கள் கர்த்தரின் மகிமையிலிருந்து விழுகிறவர்களாய் இருப்பர். ஒரு உண்மையான தலைவரின் இருதயமானது அவரது மந்தையானது இப்படிப்பட்டவைகளை அறியாமல் இருக்கும் வரைக்கும், அல்லது இப்படிப்பட்ட முக்கியமான சத்தையத்தை கைக்கொள்ளும் வரைக்கும் அமைதிகொள்ளாது இருக்கும்.

17. மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்திற்கு விரோதமாகவும் இச்சிக்கிறது, நீங்கள் செய்ய வேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு இவைகள் ஒன்றுகொன்று விரோதமாய் இருக்கிறது. 18. ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்கள் அல்ல,

பவுல் "கலப்பட பரிசுத்தவானாய்" இல்லாதிருந்தார். ஆத்துமாவில் எழும் யுத்தமானது மிகவும் எளிதானது அன்று என பவுல் அறிந்திருந்தார். இப்படிப்பட்ட யுத்தத்தில் அநேக முறைகள் விசுவாசிகள் இழக்கப்படுகிறவர்களாய் இருந்தனர்.

(ரோமர் 7:21-24), நீங்கள் வாழ வேண்டிய பிரகாரம் வாழ அழைக்கப்பட்டிருக்கும் போது, நீங்கள் ஒரு போர்வீரனாய், தீமையைக்காட்டிலும், பாவத்தை எதிர்த்து போராட வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். (வசனம் 15) லீகலிஸ்ட்டுகள் தங்களது சட்டதிட்டங்களை இனங்கண்டு கொண்டுகொள்கிறவர்களாய் இருக்கின்றனர், லிபர்டைன் Libertine சிந்திப்பது மிகக்குறைந்த அளவு எதிர்ப்பு தெரிவிப்பது சரியானதாய் இருக்கும் என எண்ணுகிறார்கள், ஆனால் ஆவியினால் நிரப்பப்பட்ட விசுவாசிகளோ, தங்களை யுத்தத்தில் அமைத்துக்கொண்டு, சரியான விதத்தில் யுத்தம் செய்து, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் ஜெயம் பெறுகிரவர்களாய் இருக்கின்றனர்.

இவ்வசனங்கள் மூலம் ஒவ்வொரு விசுவாசியும் அறியவேண்டியது, ஆவியில் நடக்கிறவர்களாய் இருக்கிறார்களா (பழைய பாவ சுபாவத்தை பின்பற்றிச்செல்வதைக்காட்டிலும், தேவனது வார்த்தையை தங்கள் வாழ்வில் நடைமுறைப் படுத்துவதை தெரிவு செய்கிறார்களா) அல்லது ஒவ்வொரு சோதனையிலும் விழுகிறவர்களாய் இருக்கிறார்களா? ஒவ்வொரு விசுவாசியும் தேவனுடன் மனமுவந்து, பாவத்தை அவர்களது ஆத்துமாவில் எதிர்த்து, தங்களை இரட்சித்தக் கர்த்தர் மீதுள்ள அன்பினிமித்தம் அவைகளுக்கு விலகி நடக்க ஊக்குவிக்கப்படுகிறவர்களாயிருத்தல் வேண்டும். இதுவே ஆவியினால் நிரப்பப்பட்ட விசுவாசிக்கு திறவுகோளாய் அமைந்து, தங்களுக்காய் கர்த்தர் செய்துள்ளவற்றைக் குறித்து உணர்வுள்ளவர்களாய் இருக்கும்படி செய்கிறதாய் இருக்கிறது. அவர்களது முழுமையான வாஞ்சையெல்லாம் தேவனை பிரியப்படுத்தவும், அவரையும் அவரது கிருபையையும் குறித்து மற்றவர்களுக்கு அறிவிக்கச் செய்கிறதாய் இருக்கிறது. இதுவே ஆவியானவரின் கிரியையாய் இருந்து அவருடன் இணைந்து நடக்கச்செய்கிறதாய் இருக்கிறது. இதுவே எல்லா விசுவாசிகளையும் ஆதிக்கம் செய்யும் நோக்கங்களாய் இருந்து ஆவியானவருடன் நடக்கிறதை நிரூபிக்கிறதாய் இருக்கிறது. மட்டுமின்றி வேதாகம தலைவரின் வாழ்க்கை மையக்கருத்தாக இருந்து அவரைச் செயல்பட வைக்கிறதாய் இருக்கிறது.

19. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாய் இருக்கின்றன; அவையாவன: விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், 20. விக்கிரக ஆராதனை, பில்லிசூனியம், பகைகள் விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கப் பேதங்கள், 21. பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுக்கள் முதலானவைகளே. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்ஜியத்தைச்

சுதந்தரிப்பதில்லையென்று, முன்னே நான் சொன்னது போல, இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன்.

சபையில் உள்ள "அதிபரிசுத்தர்" இவ்வாறு கூறக்கூடும், நாங்கள் பாவத்தை நியாயப்பிரமாணத்தாலும், எங்கள் சுயசித்த அதிகாரத்தாலும் பாவத்தை அடித்துத் துரத்திவிட்டோம். இங்கு பவுல் ஒரு பட்டியலை அளிக்கிறவராய் இருக்கிறார், இந்தப்பட்டியலில் கலாத்தியருக்கு சவால் விடப்படுகிறது, நமக்கும் இப்படியல் உரியதாய் இருக்கிறது, மற்றும் அவர்களுக்கும் இப்பட்டியல் உரியதாய் இருக்கிறது. (சங்கீதம் 26:2, 1 கொரிந்தியர் 11:28, 2 கொரிந்தியர் 13:5), அவர்களது மனப்பான்மையையும் அவர்களது ஆத்துமா பாவத்திற்கு நேராக இருப்பதையும் இனங்கண்டுகொள்ளக்கூடும்.

விசுவாசிகள் நீதிமொழிகளில் 6:16-19 ல் கூறப்பட்டுள்ள "கொல்லும் கொடிய பாவங்களில்" 7 ல், ஐந்து பாவஙளை நினைவு படுத்த வேண்டியது அவசியமாய் இருக்கிறது. அவைகள் மனோ ரீதியான பாவங்கள், அவைகள் வெளிப்பிரகாரமாக வெளிப்படுத்த இயலாதவை, "இருப்பினும்" நமது சவால் அப்படிப்பட்ட சிந்தனைகளை "பிடித்து" அவைகள் நமது வாழ்வில் வெளிப்படுவதற்கு முன்னதாகவே, அவைகளுக்கு செய்யவேண்டியவற்றை செய்து முடிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அவைகளை சுவைக்கத்துவங்குவோமெனில் அவைகள் நம்மை பரவசப்படுத்தும்,, மற்றும் அவைகள் நமது குறுகிய கால வாழ்வில் நமது பழக்கவழக்கங்களில் ஒன்றாய் மாறிவிடும்.

தேவன் நமது இருதயமும், ஆத்துமாவும், சுத்திகரிக்கப்பட்டிருப்பதை விரும்புகிறார், சரீரத்தை அல்ல, நியாயப்பிரமாணமானது, ஜனங்களை பாவம் செய்வதிலிருந்து விலக்கி வைக்கிறதாய் இருக்கிறது அல்லது தீமையானது அவர்களது சிந்தனையில் அக்கிரமச் செய்கைகளை ஏற்படுத்தாது, தேவனிடமிருந்து விசுவாசியை வேறுபிரிக்கிறதாய் இருக்கிறது (சங்கீதம் 66:18). நினைவில் கொள்ள வேண்டியது என்னவெனில், தீமையோ அல்லது பாவ சிந்தனையோ நமது சிந்தனையில் தோன்றி நம்மை ஆக்கினைக்குட்படுத்துவது இல்லை, அவற்றை சுவைத்து தங்கள் பழக்கமாக்கிக் கொள்வதே அவர்களுக்கு பாவமாய் இருக்கிறது. சிந்தனைகள் நமது பழைய பாவ சுபாவத்திலிருந்து, மாம்சீகத்தின் சோதனைகளாய் வெளிவருகிறவைகளாய் இருக்கின்றன, நாம் அவைகளைக் கையாண்டு, பாவமாக உருவெடுக்க விடுகிறவர்களாய் இருக்கிறோமா இல்லையா என்பது நாம் செய்ய வேண்டிய கடமையாய் இருக்கிறது. ஒரு உண்மையான தலைவர் தேவனது மந்தையை, சிந்தனையில்

ஏற்படும் போர்களத்தில் ஜெயம் பெற வழிநடத்துகிறவராய் இருக்கிறார். இவற்றைக்குறித்து லீகலிஸ்ட்டுகள் அக்கரை கொள்வதும் இல்லை, மற்றும் லிபர்டைன்கள் libertine [தாராளாவதிகள்] சர்வசாதாரணமாய் தங்கள் இச்சைகளின்படியே நடக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

பவுலின் பட்டியலானது எல்லா கலாத்தியரையும் பாதிக்க உத்திரவாதம் அளிக்கிறதாய் இருக்கிறது (இன்றைய அளவில் நம்மையும் கூட), மற்றும் ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்வின் ஆவியின் கனி குறித்த பட்டியலானது அவைகளிலிருந்து முற்றிலும் முறண்பட்டதாய் விளங்குகிறது. வசனம் 22-23. இங்கு கூறப்பட்டுள்ள பாவங்கள் நான்கு பாகங்களாய் பிரிக்கப்பட்டுள்ளன:

1. உணர்ச்சிகள் சம்பந்தப்பட்ட பாவங்கள்:

2. மத சம்பந்தப்பட்ட பாவங்கள்:

3. சமூக ரீதியான பாவங்கள்.

4. தனிப்பட்ட பாவங்கள்.

1. உணர்ச்சிகள் சம்பந்தப்பட்ட பாவங்கள்:

அ. வேசித்தனம் (GK: porneia = all illicit sexual activity முறண்பாடுகளுள்ள பாலியல் செயல்பாடுகள்). தேவன் பாலுறவு சம்பந்தமான திருப்திகரமான பாலுறவு, நிறைவேற்றப்படக்கூடிய மற்றும் பாதுகாப்பான பாலுறவு போன்ற திட்டங்களை உடையவராய் இருக்கிறார். இக்கருத்தானது ஒரு சரியான மனிதன், தனக்குச் சொந்தமான ஒரு பெண்ணுடன் வாழ்ந்து, மன அழுத்தங்கள் இல்லாது, மற்றும் இணைந்து விளையாடி மகிழ்ந்து, அவர்கள் இருவரும் ஒருவரில் ஒருவர் மகிழ்ச்சியை கண்டடைந்து வாழும் வாழ்க்கை தேவனால் வடிவமைக்கப்பட்டதாய் இருக்கிறது. இதில் எங்கு தவறு நேர்ந்தாலும், அது துன்பத்திற்கு வழிநடத்தக்கூடியதாய் இருக்கிறது, அது சரீரப்பிரகாரமான வியாதியையும் அல்லது சமூக ரீதியான அதிருப்தியையும், மற்றும் பழ இழப்புகளையும் கொண்டுவருகிறதாய் இருக்கிறது. திருமணத்திற்கு வெளியே செயல்படுத்தப்படும் பாலுறவானது பாவமாய் இருக்கிறது.

ஆ. அசுத்தம்: (GK: akatharsia = all acts of indecency and uncleanness which shock people நேர்த்தியற்ற செயல்பாடுகள், மற்றும் ஜனங்களை அதிர்ச்சிக்குள்ளாக்கும் அசுத்தமான நிலை.). இது போன்ற செயல்பாடுகள் எல்லாவித ஆபாச படங்கள், சலனச் சித்திரங்கள், அல்லது "அசுத்தமான பாலுறவு" ஜனங்களது ஒழுக்கக்கேடான தகாத பாலுறவு செயல்பாடுகள், குழந்தை பாலியல் பலாத்காரம், பலாத்கார பாலியல் செயல்பாடுகள் மற்றும் மிருகங்களைப் போன்ற நடத்தையுள்ள ஜனங்கள் இதில் அடங்குவர். பாலுறவு குறித்த தேவனது நோக்கம், நிதானமாய் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து, ஒருவரில் ஒருவர் அன்பு செலுத்தி மகிழ்ந்து கொள்ளும் பாலுறவாய் இருக்கிறது, மற்ற நபரின் இன்பத்தைப் பறித்துக் கொண்டு அவர்களை அவல நிலைக்கு உள்ளாக்குவது அல்ல.

இ. காமவிகாரம்: (GK: aselgeia = unrestrained and unbridled lust, that is totally selfish in it's greed for personal gratification, அடக்கமுடியாத மற்றும் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட இச்சை, இது முற்றிலும் சுயதிருப்திக்காய் செயல்படுதலாய் இருக்கிறது.) இவ்வார்த்தையானது ["jet-set"] இன்பம் நுகர்வதற்காக இடம் விட்டு இடம் சென்று உல்லாச வாழ்வில் ஈடுபடுவதைக் குறிக்கிறதாய் இருக்கிறது. akatharsia type வகையைச் சார்ந்ததாய் இச்செயல்பாடு இருந்தும் அதன் விளவுகள் ஒன்றாய் இருக்கிறது. மட்டுமல்லாது இது நமக்கு உணர்த்துவது என்னவென்றால், பாலுறவு என்பது "மற்றவர்களை மையமாய் கொண்டது" தனக்குள்ள இன்பத்தைக் காட்டிலும் மற்றவர்களுக்கு இன்பம் அளிப்பது மிக முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது.

மத்தேயு 5:27-28 ல் கர்த்தரது வார்த்தையை நினைவு கூற வேண்டியவர்களாய் இருக்கிறோம், இருதயத்தின் நினைவுகள் பவுலின் பட்டியலில் இடம்பெறுகிறதாய் இருக்கிறது மட்டுமல்லாமல் சரீரத்தின் செய்கைகளும் கூட இடம் பெறுகிறதாய் இருக்கிறது.

2. மத சம்பந்தப்பட்ட பாவங்கள்:

அ. விக்கிரக ஆராதனை: (Gk: eidolatria = worship of things rather than God, தேவனை விட பிறபொருட்களை ஆராதிப்பது). இது எளிதாய் மறைந்து காணப்படும் வஞ்சகமிகுந்த காரியமாய் இருக்கிறது. அநேக ஒழுக்க ரீதியில் மேம்பாடுடன் வாழும் பரிசுத்தவான்கள் அதிகாரத்தையும், ஸ்தானத்தையும், ஐசுவரியத்தையும், சமுதாய கௌரவத்தையும், தவறாது காணக்கூடிய தொலைக்காட்சி பலிபீடத்தையும்

ஆராதித்து வருகின்றனர். தொலைக்காட்சி காணும் நேரத்தை ஜெபத்தில் செலவு செய்யத் தவறுகிறவர்களாய் இருக்கின்றனர். உங்கள் வாழ்வில் தேவனுக்குரிய இடத்தை எது எடுத்துக்கொண்டாலும் அது விக்கிரகமாக கருதப்படுகிறது!

ஆ. பில்லிசூனியம் (GK: pharmakeia = drugs, magic, astrology, séances, sorcery... போதைவஸ்துக்கள், மந்திரம், ஜோஸ்யம், ஆவிகளுடன் தொடர்புகொள்ளுதல், குறிசொல்லுதல்,...). இப்படிப்பட்டவைகள் நமது நாட்களில் பெருமளவில் நிகழ்ந்து வருகின்றன. விசுவாசிகளும் கூட, நாள் நட்சத்திரம் பார்த்தல், அல்லது டீ இலை ஜோசியம் பார்த்தல், ஆவிகளிடம் குறிகேட்டல், மற்றும் போதைவஸ்துக்களால் மனதை தங்களுக்கேற்றவாறு அமைத்துக்கொள்ளுதல் போன்ற காரியங்களில் ஈடுபடுகிறவர்களாய் இருக்கின்றனர். இப்படிப்பட்ட காரியங்கள் குறித்து பவுல் கூறும்பொழுது, நீங்கள் ஆவிக்குரிய நிலையில், கீழ்ப்படியாது, தேவனது ஐக்கியத்திலிருந்து புறம்பே காணப்படுகிறவர்களாய் இருக்கிறீர்கள் என உணர்த்துகிறவராய் இருக்கிறார். (cf எபேசியர் 4:17-20). இது காணக்கூடிய ஒன்றாய் இருக்கிறது, மற்றும் மெய்யான வேறுபாட்டை இப்படிப்பட்ட பழக்க வழக்கங்களில் காட்டுகிறதாய் இருக்கிறது, இப்படிப்பட்ட புறஜாதிய பழக்கவழக்கங்கள் நிறைந்த உலகில் நாம் வாழ்ந்து வருகிறோம், இப்படிப்பட்ட புறஜாதிய மத அமைப்பில் உள்ள எவ்வதக்காரியங்களுக்கும் நாம் விலகி வாழ வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இ. வெறுப்புணர்வு: (GK: echthros - hatred. enmity, rage that knows no reason. வெறுப்பு, பகைமை, காரணமின்றி கோபப்படுதல்). இது சில கலக குணமுள்ள விசுவாசிகளின் தனித்தன்மையாய் இருக்கிறது, இவற்றைப் போதகர்கள் நேரடியான போதனைக்குப்பின்னர் கண்டு கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். இப்படிப்பட்ட போதனைகளைக் கேட்டு, அவர்கள் மனந்திருந்துவதற்குப் பதிலாக, செய்தியாளரை வெறுக்கிறவர்களாய் மாறுவார்கள், (of கலாத்தியர் 4 :16, John 15:18. 1 யோவான் 3: 13). ஜனங்கள் குற்ற மனசாட்சியை உணரும்போது, தங்களது கோபத்தை வெளிக்காட்டுகிறவர்களாய் இருப்பர். இது பாவமாய் இருக்கிறது, அவர்கள் குற்றமனசாட்சியானது சிலுவைக்கு முன் கொண்டுவரப்பட்டு, மனந்திருந்துதல் அவசியமாய் இருக்கிறது.

ஈ. சண்டைகள்: (GK : eris - contentiousness, argumentativeness சண்டையிடுதல், தர்க்கித்தல்). சிலர் நிதானமாய் கேட்கிறவர்களாய் இருக்கமாட்டார்கள், பாதி வாக்கியம் முடியுமுன்னர் பேசுகிறவர்களை இரண்டாகக் கிழித்துவிடுவர்.

இப்படிப்பட்ட அடக்கமில்லாத மக்கள் பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் இராதவர்களாய் இருக்கின்றனர்.

3. சமூக ரீதியான பாவங்கள்.

அ. வைராக்கியம்: (GK: zelos - this is the bitter hatred directed at someone who has what the jealous person wants இது ஒருவரை கசப்பும், வெறுப்பும் வழிநடத்துகிறதாய் இருக்கிறபடியால், இப்படிப்பட்டவர்கள் ஒரு வைரக்கியமுள்ள நபர் விரும்புவதை இவர்கள் விரும்புகிறவர்களாய் இருக்கிறார்கள்,). இவ்வாறு மனநிறைவில் குறைவுபட்டு இருப்பவர்கள் தேவனால் அளிக்கப்பட்ட கிருபையுடன் (cf பிலிப்பியர் 4:11) இறுதியாக ஏதோ ஒரு வழியில் தங்களது சுபாவத்தில் வேறுபட்டு விளங்குவர். பகைமை மற்றும் வைராக்கியம் இவ்விரண்டும் முழு குடும்பத்தையும் துன்பங்களுக்குள் நடத்தும் ஏதுக்களாய் இருக்கிறது.

ஆ. கோபம் (GK: thumos = "The terrible flare up of temper" ஒருவரது உணர்ச்சியானது பயங்கரமான நிலையில் கிளறிவிடப்படல்). ஒருவரது "தலை அதிக சூடாகும்" போது, ஆவியானவரின் கட்டுப்பாடு அவருக்கு அவசியமாய் இருக்கிறது, மற்றவர்களது உதவியானது எவ்விதத்திலும் பயன்தராது. வேறு எந்த வல்லமையும் இப்படிப்பட்ட தீமையை கட்டுப்படுத்த முடியாது. அவர்கள் ஆவிக்குள்ளாய் நடந்து, வேதாகம உபதேசங்களை உரிமைபாராட்டி, பாவத்தை எதிர்த்து நடப்பார்களேயானால் இவ்வித தீமைக்கு விலக்கி காக்கப்படுகிறவர்களாய் இருப்பர். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தேவ அன்பை உணர்ந்து, கோபப்படும் சந்தர்ப்பங்களில் நிதானமாய் நடந்து கொள்வார்களேயானால், இதை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர இயலும்.

இ. பிரிவினைகள்: (GK: eritheia = faction forming activity to split the church சபையை இரண்டாய் உடைக்க குழுக்களை உருவாக்கும் செயல்பாடுகள்,). இப்படிப்பட்டவர்கள் போதகரின் போதகத்தில் குறை கண்டுபிடித்து, அவைகளைப் பெரிதுபடுத்தி போதகருக்கு விரோதமாய் கலகம் செய்கிறவர்களாய் இருப்பர். இப்படிப்பட்ட சூழ்நிலமையில், அப்படிப்பட்ட காரியங்களை ஆவியானவர் கரத்தில் விட்டுவிடுதல் தேவனது வழியாய் இருக்கிறது. அவர் சரி தவறு இன்னதென்பதை உணரச் செய்கிறவராய் இருக்கிறார். இப்படிப்பட்ட காரியங்களில் தேவன்தாமே இடைபட்டு சரி செய்கிறவராய் இருக்கிறார். இவ்வணுகுமுறையை பிரிவினை உண்டாக்கும் நபர் விரும்புவது இல்லை, ஆனால் அவரது பெருமையானது

தேவனது சிட்சையை அவருக்கு தருவிக்கிறதாய் இருக்கிறது.

ஈ. மார்க்கப் பேதங்கள்: (GK: dichostasiai and airesie = sect forming குழு அமைத்தல்) இது பாவச்செயலாய் விளங்குகிறது, இது சபையில் புதிய குழுக்களை உருவாக்கி, சிறு உபதேச வித்தியாசத்தை ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது. இது சுய ஆர்வத்தை உள்ளடக்கியதாய் இருக்கிறது, இது தனிப்பட்ட விதத்தில் சிறு குழுக்களை உருவாக்கி அதிகாரம், அங்கீகாரம், பணம் அல்லது அச்சிறுகுழுவிற்கு தலவராய் இருப்பதற்கான முயற்சி போன்றவற்றிற்காக செயல்பட வைக்கிறதாய் இருக்கிறது.
.

உ. பொறாமைகள் (GK: phthonos = the desire to deprive others of what they have மற்றவர்கள் பெற்றிருப்பனவற்றை அபகரிக்கும் ஆசை உடயவர்களாய் இருத்தல்.) இப்படிப்பட்ட சுபாவம் திருட்டுக்கு ஆதாரமாய் விளங்குகிறது மற்றும் சர்ப்பனைக்கும் ஆதாரமாய் விளங்குகிறது வைராக்கியத்தை போன்றே இப்படிப்பட்ட சுபாவத்தைப் பெற்றோரின் ஆத்துமாவையே சாப்பிட்டு ஏப்பம் விடுகிறதாய் இருக்கிறது. போதுமென்கிற மனதுடனே கூடிய தேவ பக்தியே மிகுந்த ஆதாயம். (1 தீமோத்தேயு 6:6), நாம் தேவன் நமக்களித்துள்ளவைகளில் சமாதனத்துடன் காணப்படுவோமெனில், அவர் நமக்களித்துள்ளவைகள் சரியானவை எனக்காண்கிறவர்களாய் இருப்போம், மற்றும் அவரது பணி செய்ய அவைகள் போதுமென்றிருப்போம். பணி செய்வது நமது கடமையாய் இருக்கிறது, இப்படிப்பட்ட போதுமென்கிற பண்பு நமக்கு போதுமானதாய் இருக்கிறது, பொறாமையின் பிரசன்னம், நாம் நடக்க வேண்டிய பிரகாரம் நடக்கவில்லை என்பதன் அடையாளமாய் இருக்கிறது.

4. தனிநபர் சார்ந்த பாவங்கள்:

அ. மதுபான வெறிகள்: (GK: methai = alcoholism, or all excess in drinking மது அருந்துதல், அல்லது அளவுக்கதிகமாய் குடித்து வெறித்தல்). தேவனது வார்த்தையின்படி மதுபானம் வெறி ஒரு வியாதியல்ல, அது பாழைய பாவசுபாவத்தின் பலவீனமாயும் மற்றும் பாவமாயும் இருக்கிறது, இப்படிப்பட்ட பாவத்தை சிலர் பெற்றவர்களாய் இருக்கின்றர், சிலர் பெறாதவர்களாய் இருக்கின்றனர். மற்ற பழைய பாவ சுபாத்துடன் ஈடுபட்டு அவைகளை புறம்பாக்க பிரயாசப்படுவதைப் போன்றே, இப்படிப்பட்ட பெலவீனத்திலிருந்தும் விடுபட பிரயாசப்படுதல்

வேண்டும். ஆவியினால் நிறைந்து வாழும் வாழ்க்கையினால் இவற்றை மேற்கொள்ள இயலும். மாதுபான அடிமைத்தனத்திலிருந்து விடுபட உதவி செய்யும் ஸ்தாபனங்கள் தவறு எனக்கூறுவதற்கில்லை. அவைகள் இது போன்ற பெலவீனமுள்ளவர்களுக்கு உதவியாய் இருக்கிறார்கள், அவர்களுக்கு அத்தியாவசியமான ஆதரவுகளை அளித்து, அவர்கள் சரியான வழியில் நடக்க/வாழக் கற்றுக்கொடுக்கிறவர்களாய் இருக்கிறார்கள், மற்றும் இவர்களது பழை பழக்கவழக்கங்களிலிருந்து விடுபட்டு வாழ கற்றுக்கொடுக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

ஆ. கொலைகள்: (GK: phonos = murder or slaughtering of people without concern for those killed கொலைகாரன், அல்லது மக்களை வெட்டிசாய்த்தல் அவர்களைக்குறித்த கரிசனையில்லாது அவர்களை கொலை செய்தல்). மனித வாழ்க்கையை குறித்து தாழ்வான கண்ணோட்டமுடையவர்கள், ஆவியின் கட்டுப்பாட்டுக்குள் இல்லை என்பது, நிச்சயிக்கப்பட்ட அடையாளமாய் இருக்கிறது. ஒரு தீமை செய்த மனிதன் நியாயந்தீர்க்கப்பட்டு, தனது குற்றத்திற்கு தண்டனையாய், தூக்கிலிடப்பட்டு மரித்தாலும் கூட, விசுவாசிகள் அவனுக்காய் கண்ணீர் சிந்த வேண்டியவர்களாய் இருக்கிறார்கள், அவர்கள் மனந்திருந்தியிருக்கலாம் அல்லது கர்த்தரை தனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டிருக்கலாம் என நினைத்து அந்நபருக்காய் கண்ணீர் சிந்துதல் வேண்டும். மரித்த நபர் ஆணோ அல்லது பெண்ணோ, அவர்களுக்காக கிறிஸ்து மரித்துள்ளார், அவர்களது துக்ககரமான முடிவு எல்லா விசுவாசிகளுக்கும் கண்ணீர் சிந்தி அந்நபருக்காய் வருந்த அவசியமாய் இருக்கிறது. அப்படிப்பட்ட நபர் மரித்தது நமக்கு பாதுகாப்பிற்கு அவசியமாய் இருந்தபோதிலும், அவ்வாறு செய்வது ஏற்றதாய் இருக்கிறது.

இ. வெறித்தனமான செயல்கள்: (GK: jomoi = carousing or "hell raising" அளவுக்கு மீறி குடிபோதையில் கூட்டமாய் செயல்படும் வெறிச்செயல்கள், அல்லது வெறித்தனமான தீய செயல்களை தங்களுக்கு விளையாட்டாய் இருக்க அவற்றை செய்தல்). சிலர் தனது சொந்த கூட்டாளிகளுடன் மனமகிழ்ச்சியாய் இருக்க கூடாதவர்களாய் இருக்கின்றனர். ஆனால், தங்களைச் சூழ இசை, நடனம், வெறித்தனமான செயல்கள் போன்ற செயல்பாடுகளீல் ஈடுபடும் மக்கள் நடுவே இவர்கள் மனமகிழ்ச்சியை கண்டு கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். இவர்களது வாழ்வானது காலியாயும் மற்றும் நோக்கமில்லாததுமாய் இருக்கிறது, ஆனால் அவர்கள் பார்டிகளில் கலந்து கொண்டு உற்சாகமடைகிறவர்களாய் இருக்கின்றனர். இது அவர்களது ஆத்துமத்தில் உள்ள வெறுமையை ஈடுசெய்ய அவர்கள் இவ்வாறு ஈடுபாடுகொள்கிறார்கள். சில விசுவாசிகள் கூட அழையாத

விருந்தினராய் இப்படிப்பட்ட கூடுகைகளில் கலந்து கொள்கிறவர்களாய் இருக்கின்றனர், இப்படிப்பட்டவர்கள் வழிதவறி, அல்லது நோக்கமின்றி ஒவ்வொரு இப்படிப்பட்ட கூடுகைகளிலும் இடம் விட்டு இடம் செல்கிறவர்களாய் இருக்கின்றனர். இதற்கு பரிகாரம், விசுவாசிகள் மற்ற பாவபழக்க வழக்கங்களிலிருந்து விடுபட, அவர்கள் ஆவியினால் நிரப்பப்பட்ட வாழ்க்கை செய்வது போல, இப்படிப்பட்ட செயல்பாடுகளில் இருந்து விடுபட தங்கள் வாழ்வில் செயல்படுத்த வேண்டியவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் ஒவ்வொரு அடி எடுத்து வைக்கும் போதும், ஒவ்வொரு தீர்மானம் எடுக்கும்போதும், அவர்கள் தேவனது வார்த்தையை கைக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர், இது பரிசுத்த ஆவியானவர் அவர்களது பாவத்தை உணர்த்தி, நல்வழிப்படுத்த உதவியானதாய் இருக்கும். மற்றும் பாவத்தை எதிர்த்து போராடி ஜெயம்பெற உதவியாய் இருக்கும்.

ஒரு சிலர் இப்படிப்பட்ட செயல்பாடுகளில் திருப்திகொண்டு விடுபட இயலாதவர்களாய் இருப்பார்களேயானால், அவர்களது குறிப்பிட்ட அந்த பெலவீனமானது இன்னும் ஆணியடிக்கப்படவில்லை, நம்மைப் போன்றே கலாத்தியரும், இப்படிப்பட்ட வசனங்களால் எச்சரிப்படைந்தனர், நாம் அனைவரும் தீர்மானிக்க வேண்டியது என்னவென்றால், நாம் தொடர்ந்து பன்றிகளைப் போன்று வாழவிரும்புகிறோமா? அல்லது பன்றிகளிடமிருந்து திரும்ப வந்த இளைய குமாரனைப் போன்று பிள்ளைகளாய் வாழ விரும்புகிறோமா? (லூக்கா 15:17ff).

நாம் அனைவரும் மேற்கண்ட பெலவீனத்தில் குறைந்தபட்சம் ஒன்றையாவது உடையவர்களாய் இருக்கிறோம், இதை ஒருவேளை மறுதலிப்போர் தேவனை பொய்யராக்குகிறவர்களாய் இருக்கிறோம். (1 யோவான் 1: 8,10). நமது பாவத்தை தேவனது வழியில், பார்க்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். கிறிஸ்தவ தலைவர்களானவர்கள் மேற்கண்ட பட்டியலின்படியலில் கண்ட குணாதிசயங்களுக்கு விதிவிலக்கானவர்கள் அல்லர். நம்மில் ஒருவர் கூட, பூரணமானவர்கள் எனக்கூறுவதற்கில்லை, ஆனால் இப்படிப்பட்ட குணாதிசயங்கள் புறக்கணிக்கப்பட்டு, எதிர்க்கப்பட வேண்டியதாய் இருக்கிறது. தேவனது பிள்ளைகளுக்கேற்ற பிரகாரம் வழிநடத்தப்பட்டு வாழ்க்கை நடத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். கர்த்தருக்கு நாம் பணிசெய்ய வேண்டுமானால், இப்படிப்பட்ட காரியங்கள் வேரருக்கப்பட்டு, அவைகளுக்குப் பதிலாக பரிசுத்த ஆவியானவரின் நிறைவானது அவ்வெற்றிடத்தை நிரப்புகிறதாய் இருத்தல் வேண்டும்.

22. ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், 23. சாந்தம், இச்சையடக்கம், இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.

ஆவியின்படி நடப்பதை பின்பற்ற நாம் தெரிவு செய்திருப்போமானால், மேற்கண்ட தீமையான குணாதிசயங்களுக்குப்பதிலாக, நமது வாழ்வில் படிப்படியாக மெய்யான ஆவிக்குரிய கனியானது உருவாகத்துவங்கும், கனிகொடுப்பதற்குரிய பகுப்பாய்வு குறித்து, கர்த்தர் யோவான் 15ம் அதிகாரத்தில் விவரித்துள்ளார், அது மிகப்பொருத்தமானதாய் இருக்கிறது. ஒரு மரமானது முதிர்வடையும் போது கனி கொடுக்கிறதாய் இருக்கிறது, அதன் வேரானது மண்ணுக்கடியில் ஆழமாய்ச் சென்று, அதில் இருக்கும் தாதுப்பொருட்களை எடுத்து, அதன் தண்டுப்பகுதி வழியாக இலைகளுக்குத் தேவையான உணவை அளிக்கிறதாய் இருக்கிறது.

இவைகள், ஆவிக்குரிய வளர்ச்சிக்கு, ஆவிக்குரிய கனியானது அத்தியாவசியமாய் இருக்கிறது என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறதாய் இருக்கிறது. மந்தையின் தலைவர்களாய் இருப்பவர்கள், இளம் மரங்களைப் பாதுகாத்து, அதன் நல்லுணவை புசிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர். இவைகள் அனைத்தும் நிகழ்ந்தாலும், கனியானது அதன் பருவகாலத்திலே கிடைக்கிறதாய் இருக்கிறது, பூக்கள் மகரந்த சேர்க்கையால், கனி உருவாக வேண்டும், சூரியன் தன கதிர்களை அதன் மேல் படரவிட வேண்டும், மழை பொழிய வேண்டும் அதன் தண்ணீரை மரமானது ஈர்த்துக்கொள்ளுதல் வேண்டும், மரமானது ஒரு ஆண்டு முழுவதும் அதன் பருவ காலங்களில் கடந்து சென்று வளருதல் வேண்டும். தோட்டக்காரர் பொறுமையுடன் காத்திருந்து அதன் பருவகாலத்திலே அதன் கனிகளை சேகரிக்கிறவனாய் இருக்கிறான், விசுவாசிகள் ஒரு இரவில் உடனடியாக முதிர்ச்சியடைந்து கனி கொடுத்துவிடுவார்கள் என எண்ணலாகாது. இதைப்போன்றே வேதாகம போதகத் தலைவரும், விசுவாசிகளுக்கு பொறுமையாய் போதனை அளித்தல் வேண்டும், மற்றும் கர்த்தருக்கு அவர்களை கீழ்ப்படியும்படி அறிவுறுத்துதலும் வேண்டும்.

அநேக ஆவிக்குரிய சத்தியங்கள் இதைப்போன்ற அடிப்படை பையாலஜி பாடங்களைக் கற்கும் போது வெளிப்படுகிறதாய் இருக்கிறது.

கனியைக் குறித்துள்ள ஐந்து விதமான அடிப்படைக் கருத்துக்கள்:

[1] உடனடியாய் உருவாகும் கனி என ஒன்றும் இல்லை, ஆவிக்குரிய

முதிர்ச்சியும் உடனடியாய் நிகழுவதில்லை. கனியானது கனியானது மெதுவாக வளருகிதாய் இருக்கிறது, மரமானது தான் செய்பனவற்றை இயல்பாய் செய்யும்போது, கனியானது அதில் உருவாகிறதாய் இருக்கிறது, இதைப்போன்றே ஆவிக்குரிய கனியும் விசுவாசியின் வாழ்க்கையில், ஆவியாவருடன் நடப்பதன் விளைவாய், அதிக காலம் எடுத்து உருவாகிறதாய் இருக்கிறது.

[2] கனியானது தன் காலத்தில் உருவாகிறதாய் இருக்கிறது, குளிர்கால புயலுக்குப்பின்னரும், மழைக்காலத்திற்குப் பின்னரும், கோடைகால உஷ்ணத்திற்கு பின்னரும் இளவேனிற்காலத்தில் கனி உருவாகிறதாய் இருக்கிறது. ஆவிக்குரிய கனியானது சோதனைகளுக்குப் பின்னரும், பரீட்சைக்குப்பின்னரும், தொடர்ந்து, விசுவாசியின் நடக்கையானது பரிசீலனை செய்யப்பட்ட பின்னரும், அவர்களும் ஆவியானவரும் இடைபட்ட ஐகியத்தின் விளைவிற்குப் பின்னர், நீண்ட காலம் சென்ற பின்னர் அவர்களில் உருவாகிறதாய் இருக்கிறது.

[3] கனியானது முழுவதும் பழுத்த பின்னர், உண்பதற்கு மட்டுமே பயன்படுகிறதாய் இருக்கிறது. இளம் விசுவாசிகள் அறிய வேண்டியது அவர்கள் ஆவிக்குரிய கனியின் கருவாய் இருக்கிறார்கள், அக்கனியின் உண்பதற்குரிய பகுதியானது உண்மையான வளர்ச்சியின் முதிர்ச்சியாய் இருக்கிறது, இச்சமயத்தில் மட்டுமே கனியின் உண்மையான மதிப்பானது நிரூபணம் செய்யப்படுகிறது.

[4] இயல்பாக கனியனது மரத்தில் உருவாகிறதாய் இருக்கிறது. எந்த ஒரு மரமும் கனியை உருவாக்க சிரமம் எடுத்துக்கொள்வதில்லை, அது மரமாய் இருக்கிறது, ஒரு மரம் செய்யவேண்டியதை அது இயல்பாய் செய்கிறதாய் இருக்கிறது. இதைப்போலவே ஒரு விசுவாசி கனியை உருவாக்க வாஞ்சிப்பார்களெனில், அவர்கள் கர்த்தர் அழைத்த அழைப்பில் நிலைகொண்டு, ஆவியானவரால் நிரப்பப்பட்ட, மற்றும் வழிநடத்தப்படுகிர விசுவாசியாய் இருந்தால் மட்டும் போதுமானது (கலாத்தியர் 5:13). இதைக்கீழ்க்காணும் வரைபடம் மூலம் வெளிப்படுத்தப்படுகிறது.

தண்ணீர் + தாதுப்பொருட்கள் => மரத்தினால் உறிஞ்சப்படுகிறது = அது வளர்ச்சி + கனியை அளிக்கிறது.

வேதாகம உபதேசம் => பரிசுத்த ஆவியானவர்** + விசுவாசம் + நடைமுறைபடுத்துதல் + பரிசீலனை செய்தல் = வளர்ச்சி + ஆவிக்குரிய கனி

[உருவாக்கிறது] ** பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுதல் + அவரால் வழிநடத்தப்படுதல்.

Water + minerals --> drawn up by tree = growth + fruit

Bible doctrine -> Holy Spirit + faith + application + testing = growth + fruit

[5] கனியை உற்பத்தி செய்வதன் நோக்கம் அறிவிப்பதற்கு, விதைகளை எங்கும் அள்ளித்தூவுவது, தேவனது வழியாய் இருக்கிறது. ஆவிக்குரிய கனியும் இதே நோக்குடன் வடிவமைக்கப்பட்டுள்ளது, போஷக்கு அளித்து, மற்றவர்களை உற்சாகப்படுத்துதலுக்காக. , (e.g. 2 தீமோத்தேயு 1:16), ஒரு அருமையான பழுத்து முதிர்ந்த ஆப்பிள் மற்றும் மாம்பழம் போன்று, சுவிஷேசமாகிய விதையை அள்ளி தூவி, அவிசுவாசிகளை கவர்ந்திழுத்து, விசுவாச வாழ்க்கை வாழச்செய்வதாய் இருக்கிறது. அவர்களது பழைய வாழ்க்கையின் முறண்பாடுகளை உணரச்செய்வதாயும் இருக்கிறது. அவர்களது பழை பாவ சுபாவத்துடன் அவர்கள் அளித்துவந்த கனியானது தீமைக்கேற்ற கனியாய் இருந்து வந்தது, உண்மையான கனியானது போஷாக்கு அளிக்கிறதாய் இருக்கிறது. சுவிஷேசத்தின் நற்செய்தியானது, நல்வாழ்வை அமைத்துக்கொள்ள வழிநடத்துவதாய் இருத்தல் வேண்டும்.

விசுவாசிகளாகிய நாம் கவர்ந்திழுக்கக்கூடிய கனிகளை கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், அது மகிழ்ச்சியை அளிக்கக்கூடியதாயும், அறியப்படக்கூடியதாயும் இருத்தல் வேண்டும். லீகலிசத்தினால் உருவாக்கப்படுகிற கனியானது, கவர்ச்சியற்றதாய் இருக்கிறது, ஆனால் கிருபையினாலும், பரிசுத்த ஆவியானவரின் நிறைவினால் ஒரு விசுவாசியில் உருவாக்கப்படுகிற கனியானது கவர்ந்திழுக்கக்கூடியதும், சுவை, மணம், ஜீவனுடையதாய் இருக்கிறது. இதற்கு முன் நாம் கற்றுக்கொண்ட பாடத்திலிருந்து கேட்கப்படும் கேள்விகளுக்கு பொய்யுரைக்கிறவர்களாய் இருக்கிறோமா? ஒரு விசுவாசியை எந்த அளவுகோலால் அளவிடுவீர்கள்? நீங்கள் எவ்வாறு இனிமையானவராய் இருக்க முடியும்? நீங்கள் புதிதான பழுத்த பழமாய் இருக்கிறீர்களா அல்லது புளிப்புள்ளதும் பற்களைக் கூசப்பண்ணுகிறவர்களாய் இருக்கிறீர்களா? மந்தையின் உண்மையான தலைவர்கள், நற்கனி கொடுப்பதற்கு உதாரணமாய் இருக்கிறார், தவறான போதனையாளர் கெட்ட கனிகொடுப்பதற்கு உதாரணமாய் இருக்கிறார். மத்தேயு 7:15-23.

பவுல் வெளியரங்கமான மாம்சீகத்தின் கிரியைகளைக் கூறிவிட்டு, தொடர்ந்து கூறுமிடத்து "ஆவியின் கனியோ" என்கிறார், இது ஆங்கில வேதாகமத்தில், "But the fruit of the Spirit is.." என இருக்கிறது, But என்பதன் கிரேக்கச்சொல் "but" (GK = de), இரு பட்டியலுக்கும் இடையே உள்ள முறண்பாட்டைச் சுட்டிக்காட்டும் சொல்லாய் இருக்கிறது. இது இரண்டாவதாய் கூறப்பட்டுள்ள ஆவிக்குரிய கனி குறித்த உன்னத நிலையை மேன்மைபடுத்திக்காட்டுகிறதாய் இருக்கிறது. ஆவியின் கனியானது ஒன்பதாய் இருக்கிறது, இதற்கு அப்பாற்பட்ட நியாயப்பிரமாணம் என்பது கிடையாது. இது மேற்கோள் காட்டப்படும் உதாரணமாய் இருக்கிறது, மட்டுமன்றி இதற்கப்பாற்பட்ட நியாயப்பிரமாணத்தை ஒருவராலும் உருவாக்க இயலாததாய் இருக்கிறது. அவைகளை ஒன்றன் பின் ஒன்றாய் கற்றுக்கொள்ள இருக்கிறோம், ஒரு மெய்யான தலைவரில் இருக்க வேண்டிய குணாதிசயத்தின் அடையாளமாய் இருக்கிறது, இவைகள் ஒரு நபரில் இல்லை என்றால், அவர்கள் இன்னும் தேவனுடைய தலைவர்களாக உருவாகவில்லை என்பதைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது.

வேதாகமத்தின் படி "பரிசுத்த ஆவியானவரின் நற்கனி"

(இவ்வேதபகுதிகளில் ஆவியானவரின் நற்கனி குறித்து, மற்ற பட்டியல்களும் காணப்படுகின்றன: மத்தேயு 7:15-23, 12:33, 13:23, யோவான் 15:2-16, ரோமர் 6:21-23, 7:4-6, 9:16-23, பிலிப்பியர் 1:9-11, யாக்கோபு 3:17-18.).

[1] அன்பு: Love (GK : agape = concern for the ultimate well being of others, not emotional but deep and practical மற்றவர்களது நலனில் அக்கறை கொள்ளுதல், உணர்ச்சி வசப்பட்டு அல்ல, ஆனால் மிக ஆழமாகவும் மற்றும் நடைமுறைக்கு ஒத்த நிலையிலும் அன்புகூறுதல்). ஒரு விசுவாசியானவர் அன்பின் வாகனமாய் இருந்து, கர்த்தர் இல்லாத இடத்தில் அவரது அன்பை நிலைநாட்டுகிறவராய் இருக்கிறார்.

[2] சந்தோஷம்: Joy (GK : chara = gladness of soul ஆத்துமாவின் மன மகிழ்ச்சி), உள்ளுணர்வில் தேவனுடன் கொள்ளும் உறவில், ஏற்படும் மகிழ்ச்சி. இது மனநிலை சார்ந்ததாய் இருக்கிறது, கர்த்தரின் ஆசீர்வாதங்களை அறிந்த நபர், அவைகளை பாராட்டி மகிழ்கிறவராய் இருக்கிறார்.

[3] சமாதானம்: Peace (GK : eirene = inner-tranquillity of soul ஆத்துமாவின் உள்ளான

நிலையில் கலக்கமற்று இருத்தல்), உள்ளான நிலையில் முறண்பாடின்றி இருத்தல், நம்பிக்கையுடன் இருத்தல், செழிப்புடனிருத்தல், உள்ளான குழப்பங்கள் மற்றும் முறண்பாடின்றி இருத்தல்.

[4] நீடிய பொறுமை: Longsuffering (GK : makrothumia = patient endurance, constancy, perseverance, steadfastness. பொறுமை, சகிப்புத்தன்மை, உறுதியுடனிருத்தல், விடாமுயற்சியுடனிருத்தல், நிலைத்திருத்தல்). இவ்வார்த்தைக்குரிய எழுத்தின்படியான பொருள் "big souled" (பெருந்தன்மையுடனிருத்தல்) - i.e. சில்லரைத்தனமான மனநிலையைத் தவிர்த்து, வாழ்வில் எப்பேர்பட்ட நெருக்கம், மற்றும் மன அழுத்தங்களாய் இருப்பினும் அவற்றை ஏற்றுக்கொண்டு நடத்தல்.

[5] தயவு: Kindness (GK : chrestotes = kindness and integrity, gentleness இரக்கம் மற்றும் நாணயத்துடனிருத்தல், கருணையுடன் நடந்துகொள்ளுதல்). இவ்வார்த்தையின் அர்த்தம் தாராளவாத உணர்ச்சி, ஒரு நபர், மற்றவர்களைக் குறித்து அக்கறையும், கரிசனையும் உடையவராய், தாராளமான நிலையில் தன்னை, தனது நேரத்தை, தாலந்துகளை, அன்பை, கவனத்தை மற்றவர்கள் நலன் கருதி அளிப்பதை குறிக்கிறது. அன்புள்ளம் கொண்ட நபர், ஒரு போதும் பிறர் பாதிக்கப்படக்கூடிய நிலையில் அல்லது மற்றவர்கள் புண்படும் வகையில் நடந்துகொள்ளமாட்டார். மாறாக எல்லாரிடமும் தான் எவ்விதத்தில் மிகவும் சிறப்பாய் நடந்து கொள்வது என்பதைக் குறித்து கரிசனையுள்ளவராய் இருப்பர்.

[6] நற்குணம்: Goodness (GK : agathosune moral goodness of the soul ஒழுக்க ரீதியான ஆத்துமத்தின் நற்குணம்), "நல்ல" காரியங்களை செயல்படுத்துபவர், மட்டுமல்லாது பிறரைக் குறித்து சிந்தனை செய்பவர்.

[7] விசுவாசம்: Faithfulness (GK : piskis = dependable, trustworthy சார்ந்திருத்தல், நம்பிக்கைக்குப் பாத்திரராய் இருத்தல்). சில விசுவாசிகள் உண்மையிலே சார்ந்திருக்கிறவர்களாய் இருக்கின்றனர், ஆனால் இக்குணாதிசயப்படி எல்லோரும் எப்பட்டி இருக்க வேண்டுமென்றால், இக்குணாதிசயமானது ஆவியின் கனியாய் இருக்கிறது, மட்டுமின்றி இது மெய்யான ஆவிக்குரிய அடையாளமாய் இருக்கிறது.

[8] சாந்தம்: Meekness (GK : praotes = gentleness, கருணையுடன் நடந்துகொள்ளுதல்), கனிவுடனிருத்தல் அதில் வலிமையுடனிருத்தல், ஆனால் உராய்வின்றிருத்தல். நாணயமுள்ளவரய் இருத்தல், ஆண்மைத்துவத்துடன் நடந்து கொள்ளுதல் இது

இன்றைய அளவில் போற்றப்படுகிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட குணாதிசயமானது பவுலின் நாட்களில், புறஜாதிய உலகத்தில் எடுத்துக்கொள்ளப்படாது இருந்தது, இன்றைய அளவிலும் இது எண்ணங்களும் கருத்துக்களும் நிலவி வருகின்றன. இதற்கு எதிராக பெருமையானது மேற்கொண்டு, இப்படிப்பட்ட ஆவியின் கனியை குறைவுபடச் செய்கிறதாய் இருக்கிறது.

[9] இச்சையடக்கம்: Self-control (Gk: egkrateia = self-government of the soul ஆத்துமாவின் சுய ஆழுகை), மிதமிஞ்சிய ஆர்வம், மற்றும் உணவு பதார்த்தங்களின் மீது மிதமிஞ்சிய ஆசை போன்றவற்றை அடக்கி ஆளுதல். சுயக்கட்டுப்பாடு [பாலுறவு சம்பந்தமான ஒழுக்கக்கேடுகளுக்கு விலகியிருத்தல்] இப்படிப்பட்ட கட்டுப்பாடானது பரிசுத்த ஆவியானவரின் கிரியையினால் மட்டுமே சாத்தியமாகிறது, விசுவாசியின் சுயசித்தத்தை பெலப்படுத்தி, தேவனது வார்த்தையை போதிப்பதினால் இது சாத்தியமாகிறது.

இப்படிப்பட்ட ஆவிக்குரிய முதிர்ச்சியினால் உருவாகும் கனியானது, நியாயப்பிரமாணத்தை கைக்கொண்டு ஜீவிப்பதால், உருவாகுவதில்லை. ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் கிரியையினால் உருவாகிறதாய் இருக்கிறது. (ரோமர் 12:12). Warren Wiersbe அவர்கள், நியாயப்பிரமாணத்தின் கிரியைகள் மற்றும் ஆவியானவரின் கனி குறித்து குறிப்பிடுகையில்: "ஒரு தொழிற்சாலையில் உள்ள இயந்திரமானது கிரியை செய்வதனால், அது உற்பத்தி செய்கிறதாய் இருக்கிறது, அது ஒரு போதும் கனியை உண்டுபண்ணுவது கிடையாது. கனியானது ஜீவனிலிருந்து உருவாகிறதாய் இருக்கிறது, ஒரு விசுவாசியைப் பொறுத்தமட்டில், கனிகொடுப்பது என்பது ஜீவனுள்ள ஆவியானவரால் மட்டுமே சாத்தியமாகிறது. கிரியைகளைக் குறித்து நீங்கள் சிந்தனை செய்யும் போது, பணியாட்கள், முயற்சி, கடின உழைப்பு, உற்பத்தி நோக்கு போன்றவற்றை சிந்திக்கிறவர்களாய் இருக்கிறீர்கள், கனி குறித்து சிந்திக்கும் போது, அதன் அழகு, நிறம், சுவை, அதன் அமைதி, அதற்குள் அடங்கியுள்ள ஜீவன் போன்றவற்றைக் குறித்து சிந்திக்கிறவர்களாய் இருக்கிறீர்கள்."

24. கிறிஸ்துவினுடையவர்கள் தங்கள் மாம்சத்தையும் அதின் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்திருக்கிறார்கள்.

பவுல் சிலுவையில் அறையப்படுதல் என்கிற கருத்தை அதிகம் விரும்புகிறவராய் இருக்கிறார். (கலாத்தியர் 2:20; கொலோசெயர் 3:3). இங்கு இக்கருத்தானது நன்கு வெளிப்படுத்தப்பட்டுள்ளது, பாவம் சார்ந்த நிலையில் ஒரு விசுவாசியின் ஸ்தானம் என்ன என்பதை விட, ஒரு விசுவாசியின் மன நிலை பாவத்தைக் குறித்து என்ன எண்ணுகிறது என்பதாய் இருக்கிறது. இயேசு நமது பாவங்களுக்காக சிலுவையில் மரித்தபோது, நமது ஸ்தான நிலை பிரகாரம் நாம் அவருடன் இருந்தோம், நமது பாவங்களுக்காக அவர் மரித்தார், ஆகையால் இப்பொழுது நமது வாழ்வில், இவ்வுண்மையின்படி பாதிப்புண்டாகிறதாய் இருக்கிறது. நாம் இரட்சிக்கப்பட்ட போது, நமது பழைய வாழ்க்கையானது, அது இருந்தபிரகாரம் சிலுவையில் அறையப்பட்டுள்ளது, இப்பொழுது நாம் அது அங்கேயே மரிப்பதற்கு விட்டுவிடுதல் வேண்டும்.

இயேசுவுடன் சிலுவையில் அறையப்பட்ட பழைய பாவசுபாவ இச்சைகளின் வற்புறுத்தலின்படி, வழக்கமாய் பின்பற்றுவதைத் தவிர்த்தல் வேண்டும். ஆவியானவரால் நிரப்பப்பட்ட விசுவாசி, இன்னும் பழைய பாவ சுபாவத்தின் வற்புறுத்தல் இருப்பதை உணரக்கூடும், இருப்பினும், "அவர்கள் அதின்படி கீழ்ப்படிய மறுக்கிறவர்களாய் இருக்கின்றனர்" அவர்கள் பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கின்றனர். Harry Ironside அவர்கள் இவ்வசனத்தை சுருங்க கூறும்பொழுது: "இது எல்லாம் செய்து முடிக்கப்பட்ட காரியமாய் இருக்கிறது. மாம்சத்தை சிலுவையில் அறைந்து இருப்பீர்கள் என்றால், கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது உங்களுக்காக என்பதை உணருவீர்களானால், பின்னர் நீங்கள் மரித்தகாரியங்களுக்காக வாழாது இருங்கள். நீங்களும் நானும் பரிசுத்த ஆவியானவருக்கு அற்பணித்து இருப்போமானால், அவரை இக்காரியங்கள் நமது வாழ்வில் உறுதிப்பட அனுமதியுங்கள், பின்னர் நமக்கு முன் வைத்திருக்கும் நன்மையானவற்றை அடைகிறவர்களாய் இருப்போம்." உண்மையான கிறிஸ்துவைப் போன்ற தலைமைத்துவம் இப்படிப்பட்ட உதாரணமான காரியங்களால் வாழ்ந்து காட்டப்பட வேண்டியதாய் இருக்கிறது.

25. நான் ஆவியினாலே பிழைத்திருந்தால், ஆவிக்கேற்றபடி நடக்கவும் கடவோம்.

நமது ஆவிக்குரிய வாழ்வானது ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்கு அற்பணிக்கப்பட்டிருக்குமேயானால், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் நாம்

ஆவியானவருக்கு நம்மை ஒப்புக்கொடுத்து வாழுதல் வேண்டும். ஆவிக்குரிய வாழ்வானது பரிசுத்த ஆவியானவரின் கிரியையைகளை விளைவாய் கொண்டிருத்தல் வேண்டும். (யோவான் 3:5,6), அது எவ்வாறு தொடருகிறது என்பதை அறிந்துகொள்ள மனநிறைவுடன் இருத்தல் வேண்டும். நாம் எவ்வாறு துவங்கினோமோ அவ்வாறு நடத்தல் வேண்டும். இங்கு நடத்தல் என்கிற வார்த்தையானது இதற்கு முன் நாம் கண்ட வார்த்தையைப் போலில்லை, இங்கு கிரேக்க இலக்கலணப்படி இவ்வார்த்தையானது the present active subjunctive of stoicheo, இவ்வார்த்தை இங்கு இராணுவ வார்த்தையாகப் பயன்படுத்தப்படுகிறது, இதன்பொருள் நிதானமாக முன்னேறுதல், படிப்படியாக முன்னேறுதல்.

இது hortatory subjunctive (Let us .....), இது ஒரு கட்டளையாக இனங்கண்டு கொள்ளப்படுகிறது, சிலர் இதற்கு கீழ்ப்படிய தீர்மானிப்பதும், சிலர் கீழ்ப்படியாதிருப்பதற்கு இதன் பொருளாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. இவ்வார்த்தையின் நிகழ்காலமானது, நமக்கு புலப்படுத்துவது என்னவெனில், ஒரு விசுவாசி தான் தெரிவு செய்வதானது ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், ஒவ்வொரு நாளும் நமது வாழ்வில் நிகழ்கிறதாய் இருக்கிறது, அவ்வாறு நாம் தெரிவு செய்யும் போது, உபதேசங்களை தெரிவு செய்கிறவர்களாய் இருக்கிறோமா? மற்றும் பரிசுத்தாவியானவரின் நடைமுறைபாடங்களுக்குக் கீழ்ப்படிகிறவர்களாய் இருக்கிறோமா? அல்லது பழைய பாவசுபாவத்தின் இச்சைகளுக்கேற்றபடி நடந்து கொள்கிறோமா அல்லது லீகலிச வழியில் நடக்கிறவர்களாய் இருக்கிறோமா?

"அது அப்படித்தான்; தேவன் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்வார்" என்கிற விஷயங்கள் அல்ல, சுயசித்தத்தினால் எடுக்கின்ற தீர்மானமாய் ஆவியானவரின் வழியில் நடக்க அற்பணிப்பதாய் இருக்கிறது. "ஆவியானவரின் கட்டுப்பாட்டுக்குள் ஒப்புக்கொடுப்பது மட்டும் போதாது, நாம் ஆவியானவரின் வழியில் நடந்து செயல்படுகிறவர்களாய் இருத்தல் மிகவும் அவசியமானது. அவ்வாறு நடந்து செயல்படும்போது மட்டுமே ஆவியின் கனி தோன்றுவதற்கு அது காரணமாக அமையும். இது செயல்பாட்டுடன் அற்பணிப்பை உள்ளடக்கியுள்ளது, வேதவசன கட்டளைகளுக்கு அனுதினமும் கீழ்ப்படிவதையும் உள்ளடக்கியுள்ளது.

விசுவாசிகள் தேவனது கிருபையைப் பெற்றவர்களாய் அழைக்கப்பட்டிருக்கின்றனர், மற்றும் பிரியமான பிள்ளைகளாய் செயல்படுவதற்கும் அழைக்கப்பட்டுள்ளோம், மற்றும் கீழ்ப்படிகிற இராணுவ வீரராய் இருப்பதற்கும் அழைக்கப்பட்டுள்ளோம். வாழ்வில் கனியானது வளர்ச்சியடைய, கர்த்தரும் பிதாவுமானவரை நோக்கி அனுதினம் வாழுதல், மற்றும் அனுதினம் ஆவியானவர் வெளிப்படுத்தும் வேத

சத்தியங்களுக்குக் கீழ்ப்படிந்து நடத்தல் மிகவும் அவசியமானதாய் இருக்கிறது. கனிதரும் தேவப் பிள்ளையும், இராணுவப் போர்ச்சேவகனும், சர்வாயுத வர்க்கத்தைத் தரித்துக்கொண்டு, கர்த்தரின் சத்துவத்தின் வல்லமையில் பெலப்பட்டு, பல ஆண்டுகள் பரீட்சைக்கும் நடைமுறைக்கும் உகந்தவாறு நடந்து கொள்ளுதல் அவசியமானதாய் இருக்கிறது. (எபேசியர் 6:10-17).

இராணுவப் பயிற்சி என்பது கடினமான ஒன்று ஆனால் மகிழ்ச்சியளிக்கக்கூடிய ஒன்று. இப்பயிற்சியானது சவாலுக்குரியது, மகிழ்ச்சி அளிக்கக்கூடியது, நாம் அழைக்கப்பட்ட ஆவிக்குரிய வாழ்விற்கு நிதானத்தை அளிக்கக்கூடியது. ஒரு இராணுவ வீரர் பயிற்சியில் மகிழ்வதும், தனது கமாண்டருடன் மனமகிழ்ச்சியுடன் இருப்பதும், இராணுவ சீருடையில் கெம்பீரத்தோற்றத்துடன் காட்சியளிப்பதும் சிறப்பானதாய் இருக்கிறது. அனுதினம் ஜெபிப்பது, தேவனது வார்த்தையினால் போஷிக்கப்படுதல், ஆவியினால் நடைமுறை பாடங்களின்படி வழிநடத்தப்படுதல், காலா காலங்களில் மனோரீதியான நடத்தையை உருவாக்கி, கனியுள்ள வாழ்வை மலரச்செய்கிறதாய் இருக்கிறது. Refer to the BTB study of CHRISTIAN LIFE: MENTAL ATTITUDE.

26. வீண் புகழ்ச்சியை விரும்பாமலும், ஒருவரையொருவர் கோபமூட்டாமலும், ஒருவர்மேல் ஒருவர் பொறாமைக் கொள்ளாமலும் இருக்கக்கடவோம்.

பவுல் சபைக்குள் பழைய பாவசுபாவ செயல்பாடுகளுக்கு ஒரு முடிவுண்டாக்கி ஒரு வேண்டு கோளுடன் இப்பகுதியை நிறைவு செய்கிறார். ஒரு முறை கூட பவுல் சபைக்குட்பட்டவர்களில் சிலர் மறுபடியும், மனந்திருந்தாது, சபையில் பிரச்சனைகளைக் கொண்டுவருவார்கள் என்பதை முன்னறிந்து தான் பயன்படுத்திய வசனங்களை மறுபடியும் இங்கு பயன் படுத்துகிறதைக் காண்கிறோம்.

லீகலிசத்திற்கு அடிப்படைக் காரணம் பெருமை, இங்கு அதை "வீண் புகழ்ச்சி" என்ற வார்த்தைகளால் வெளிப்படுத்துகிறார். “vain glory" (AV), (Gk: Kenodoxos = empty glorying, vain minded, one who seeks to win undeserved respect by big words and posturing வெறுமையான மகிமை, வெறுமையான மனப்பான்மை, மரியாதையைப் பெறும்படி, பெரிய தகுதியற்ற வார்த்தைகளைக் கொண்டு புகழப்படுதல்). தலைமைத்துவத்தின் அழைப்பு இராஜாவின் கொள்கைகளையும், சத்தியத்தை அறிவிக்கும்படியாய் இருக்கிறது. இதனால் ஜனங்கள் எவ்வித சாக்குப்போக்கு சொல்லாதிருக்க வாய்ப்புண்டாகிறது. நாம் கீழ்ப்படியாதவர்களை தொடர்ந்து

பொறுமையுடன் எச்சரிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், அப்படிப்பட்டவர்கள் மற்றவர்களுக்கு அபாயகரமானவர்களாய் உருவாகும்போது அவர்களை நேரடியாய் கண்டனம் செய்து ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். Refer to the doctrinal study of CHURCH – CHURCH DISCIPLINE.

அவர்களது மனநிலையானது மற்றவர்களது அங்கீகாரத்தை பெற முயன்று, பார்வைக்கு தேவனைப் பிரியப்படுத்துவது போன்று செயல்படுவதாய் இருக்கிறது. அப்படிப்பட்ட செயல்பாடுகள் வீணானதாய் இருக்கிறது, தேவன் ஒரு போதும் பாவிகளான மனிதரின் செயல்பாடுகளில் திருப்தி கொள்கிறவர் அல்லர். நாம் நம்மை அவருக்கு ஒப்புக்கொடுத்து, அவர் நம்மிலும், நம்மைக்கொண்டும் செய்கிற செயல்பாடுகளே உகந்ததாய் இருக்கிறது. ஒவ்வொரு காரியமும் கிறிஸ்துவின் முடிக்கப்பட்ட பணியைச் சார்ந்து இருக்கிறது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையிலும், நாம் தேவனது வார்த்தைக்கு கீழ்ப்படிதலிலுமாய் இருக்கிறது. யூதர்கள் மனிதரின் புகழ்ச்சியை அதிகம் விரும்பினர், அதைக் குறித்து பவுல் இங்கு குறிப்பிடுகிறவராய் இருக்கிறார், அதை மட்டுமே அவர்கள் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர், தேவன் அவர்களது பாவம் நிறைந்த வாழ்வினைக் குறித்து வெறுப்புள்ளவராய் இருக்கிறார். லீகலிஸ்டுகள், மற்றும் லிபர்டைன் போன்றோரது உபதேசங்களுக்கு முன்னர், ஒரு ஆவியினால் நிறைந்து வாழும் விசுவாசியின் வாழ்வானது சீர்தூக்கிப்பார்க்கப்படுகிறது. லிபர்டைன் அவர்களது உபதேசமானது வீணான வெறுமைமிக்கதும், லீகலிஸ்டுகளின் உபதேசம் ஒன்றுக்கும் பயன்படாததுமாய் இருக்கிறது.

தலைமத்துவ நடைமுறை காரியங்கள்:

1. மற்றவர்களில் அன்பு கூறுவதில், ஆவிக்குரிய வாழ்விற்கான அனைத்து காரியங்களும் கிறிஸ்து அவர்களுக்காய் மரித்ததினாலே 'நிறைவாக்கப்பட்டு மற்றும் பூரணமாக்கப்பட்டு இருக்கிறது. அன்பு என்பது பரிசுத்த ஆவியானவரின் கனியாய் இருக்கிறது, இது மாற்றமடைந்த வாழ்வின் மெய்யான ஆதாரமாய் இருக்கிறது. அன்பானது அவர்களது வாழ்வின் அடையாளமாய் இருந்து, அவர்கள் உண்மையாக கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கிறார்கள் என்பதைக் காட்டுகிறது. நமது அன்பினால் நாம் மிகவும் சிறப்பு வாய்ந்த சகோதரராகவும் சகோதரிகளாகவும் இருக்கிறோம் என அறியப்படுகிறோம். கொடிய இரக்கமற்ற மிருகங்களைப் போல சண்டையிட்டு, ஒருவரையொருவர் கடித்துப் பட்சியாதபடி இருத்தல் வேண்டும். தலைமைத்துவம் ஆவிக்குரிய கனிநிறைந்ததாய் இருத்தல் வேண்டும், அவர்களது வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் ஆவிக்குரிய

கனியில்லாதபட்சத்தில், ஒருவரும் தலைமைத்துவ பதவிக்கு என தீர்மானிக்க இயலாதவர்களாய் இருக்கின்றனர்.

2. லீகலிஸமோ, அதற்கான அனுமதியோ, வேதாகம தலைமைத்துவத்துடன் ஒரு போதும் ஒத்துப்போகாதிருக்கிறது. இது எல்லா யுகங்களிலும் சபைக்குரிய எச்சரிப்பாய் விளங்கிவருகிறது. நாம் லீகலிஸத்திற்கு விரோதமாய் எதிர்த்து நிற்க வேண்டியவர்களாய் இருக்கிறோம் மற்றும் அதன் அனுமதிக்கும் எதிர்த்து நிற்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் இயேசுவுடன் இருந்தவர்கள் என மற்றவர்கள் நம்மைக்காணும்போது கண்டு கொள்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். பரிசுத்த ஆவியானவராகிய தேவன் நம்மில் என்ன செய்து கொண்டு இருக்கிறார் என்பதையும் அவர்கள் கண்டு கொள்ள வேண்டும். நாம் யாருடன் இருக்கிறோம் என்பதை அவர்கள் தெளிவுற காண்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

நியாயப்பிரமாணத்தின்படி மற்றும் கிருபையின்படி வாழ்தலுக்குரிய முறண்பாடானது இங்கு நமக்கு முன்பாக இருக்கிறது. நியாயப்பிரமாணத்தின் படி வாழ்ந்து, கட்டளைகளைக் காத்து நடக்க சிரமப்படுகிறவர்களாய் இருக்கிறோம். கிருபையின்படி வாழ்வதற்கு, தேவனது அன்பைச் சார்ந்து நிதானமாய் நடக்கிறவர்களாய் இருக்கிறோம், இதனால் பாவத்தை எதிர்கொண்டவர்களாய் அதை அறிக்கை செய்து வாழும் தைரியத்தினை அடைந்தவர்களாய் இருக்கிறோம், பின்னர் கர்த்தரது வார்த்தையால் ஆத்துமாவை ஜெபத்துடன் போஷித்துக் காப்பாற்றி, தருணங்களை எதிர்பார்த்து, அவைகளை வாழ்வில் நடைமுறைபடுத்தவும், நீங்கள் கற்றுக்கொண்டவைகளை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கவும் வேண்டும். கிருபை வழியில் உள்ள வாழ்வானது, அவரைக் குறித்து கற்றுக்கொள்வதும் மற்றும் அவருடன் உறவு கொள்வதும் ஆகும்.

தலைமைத்துவத்திலிருந்து எல்லா ஜனங்களும் பெற்றுக்கொள்ளும் செய்தி இதுவாய் இருக்கிறது. விசுவாசத்தின் வழி, பரிசுத்த ஆவியானவரின் வழியானது தெளிவாக விவரித்து அளிக்கப்பட்டுள்ளது, இதினிமித்தம் விசுவாசிகள் அனுதின வாழ்வில் என்ன செய்யவேண்டும் என்கிற தெளிவை அடைவார்கள். இவைகள் புரிந்து கொள்வதற்கு கடினமானவைகள் அல்ல, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து தன்னுடன் தமது பிள்ளைகள் நடக்க விரும்புகிறார், ஆதாம் வீழ்ந்து போவதற்கு முன் ஏதேன் தோட்டத்தில் தேவனுடன் எப்படி நடந்தாரோ அதோ போல தேவனது பிள்ளைகளும் அவருடன் நடக்க எதிர்பார்க்கப்படுகிறார்கள். இப்படிப்பட்ட சத்தியத்தினை விசுவாசிகளுக்கு அறிவிக்கப்படல் அவசியம், காரணம் அவர்கள்

லீகலிஸத்தைப் பின்பற்றி விழுந்து போகாதபடிக்கு, எது கிருபையா அல்லது நியாயப்பிரமாணமா எது எளிதான நிலையில் கிரியை செய்ய ஏற்றது போன்றவற்றை அறிந்திருத்தல் அவசியம்.

3. இயேசுவைப் போன்று இருப்பது தலைமைத்துவத்தின் தராதரமும் மற்றும் எல்லா விசுவாசிகளின் தராதரமுமாய் இருக்கிறது. சபையின் தராதரமும், கிறிஸ்துவின் தராதரத்தை போன்றிருத்தல் அவசியம். மோசேயின் தராதரத்தை சபைக்கு அமைத்துக்கொள்ளுதல் கூடாது. மோசே ஜனங்களை கர்த்தருக்கென ஆயத்தப்படுத்தி வந்தார், நாம் கர்த்தரின் வழியில் நடந்து கொள்ளுதல் அவசியமாய் இருக்கிறது, அதுவே மோசேயின் நோக்கமாகவும் இருந்தது.; மோசே மேசியாவிற்குரிய வழியை ஆயத்தப்படுத்தி, அவர் மேசியா அறியப்படுகிறவராய் இருக்கவும் மற்றும் பின்பற்றக்கூடியவராயிருக்கவும் வகை செய்தார். இயேசுவைப் பின்பற்றுவது என்பதன் பொருள், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் நடந்து கொள்ளுதல் என்பதாகும், பழைய பாவ சுபாவத்தின் பெலத்திலோ அல்லது பெலவீனத்திலோ நடந்துகொண்டே இருப்பதல்ல.

4. நாம் யாரைப் பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கிறோம்? பவுல் நியாப்பிரமாணத்தை அனுசரித்து வாழும் லீகலிஸ்டுகளுக்கும், இன்றைய அளவில் நமக்கும் தெளிவுபடுத்துவது என்னவென்றால், இவ்வழியில் செல்வது முறையாகாது, அவர்கள் அனைவரும் சத்தியத்திற்குத் திரும்ப வேண்டியவர்களாய் இருக்கின்றனர், இல்லையேல், வாழ்வின் அனைத்து ஆசீர்வாதங்களையும் இழந்து போகிறவர்களாய் இருக்கின்றனர். ஒவ்வொரு போதகரும், லீகலிஸ்டுகளுக்கு எதிராய் அணிவகுத்து நிற்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் கொடிய விலங்குகளைப் போன்று விசுவாசிகளுக்கு எதிர்த்து நின்று கொலை செய்கிறவர்களாய் இருக்கின்றனர், அவர்களது கோபதாபங்கள், வெறுப்புணர்வு, போன்றவற்றை வெளிக்காட்டி பட்சிப்பதற்கு ஆயத்தமானவர்களாயும் பயந்து அஞ்சக்கூடியவர்களுமாய் இருக்கின்றனர். இங்கு நமக்களிக்கப்பட்டுள்ள சவாலானது அவர்களது நடத்தையை நாம் ஒரு போதும் பின்பற்றுகிறவர்களாய் இருத்தல் கண்டிப்பாக கூடாது.

5. மனோரீதியான யுத்தம் அவசியமாய் இருக்கிறது: நமது வாழ்வில் எப்படிப்பட்ட பழக்க வழக்கங்களை "ஏற்படுத்திக்கொள்கிறவர்களாய்" இருக்கிறோம்? ஒரு காரியம் நிச்சயமானதாய் இருக்கிறது, இன்றைய அளவில் நாம் பின்பற்றும் பழக்க வழக்கங்கள் மற்றும் நடத்தையானது, நமது வாழ்வின் நாளைய தினத்தின் inner

"soft ware" programme ஆக பதிவாகி வருகிறது. நேற்றைய தினத்தில் பதிவான புரோகிராமானது இன்றைய அளவில் பயன்பட்டு வருகிறது. நாம் பழக்க வழக்கத்தின்படி வாழ்கிற ஜீவிகளாய் இருக்கிறோம் மற்றும் உயர்ந்த அந்தஸ்தில் வாழ்கிற ஜீவிகளாயும் இருக்கிறோம். இதினிமித்தமே சரீரத்தாலும் மனதாலும் செய்யும் யுத்தத்தில் அனுதினமும் நாம் ஜெயம் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் அனுதினமும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நிமிஷந்தோறும் நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம் என்பதை தீர்மானிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்? பரிசுத்த ஆவியானவரைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கிறோமா அல்லது பழைய பாவ சுபாவத்தைப் பின்பற்றிக்கொண்டிருக்கிறோமா? நமது அனுதின வாழ்வில் யார் யுத்தத்தில் ஜெயம் பெற்று வருகிறவர்களாய் இருக்கிறார்கள்?

ஒவ்வொரு நாளும் பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, நம்மை அவருக்கு அற்பணித்து, தேவனது வசனத்தால் போஷிக்கப்படுதல் வேண்டும், இதினிமித்தம் நாம் நீதியின் பழக்கவழக்கங்களால் உருவாக்கப்பட்டு, பழைய பாவசுபாவத்தை மேற்கொண்டு ஜீவிக்கிறவர்களாய் விளங்குவோம். பிசாசு நம்மைத் தாக்க வேண்டுமென்கிற அவசியம் அவனுக்கில்லை, காரணம் நம்மில் உள்ள பழைய பாவசுபாவமே போதுமான சோதனைகளை நமக்களித்து, தீமையின் ஆதிக்கத்தில் கீழ் வைக்கிறதாய் இருக்கிறது.

நாம் ஆவியானவரின் வல்லமையில் நடக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும், அல்லது நாம் பழைய பாவ சுபாவமாகிய "மாம்சீகத்தின்" வல்லமையினால் மேற்கொள்ளப்படுவோம், இவ்வாறு மேற்கொள்ளப்பட்டு நடக்கும்போது, நமக்கும் புறஜாதியாருக்கும் வித்தியாசமின்றி இருக்கும். இங்கு பவுல் பயங்கரமான பாவ பட்டியலை அளித்துள்ளதன் நோக்கம் நம்மையே நாம் அனைவரும் பரிசீலனை செய்து கொள்வதற்காக ஆகும். முதல் கொடுக்கப்பட்டுள்ள பட்டியல் படி வாழுவது நமது பழக்கமாய் இருக்கிறதா அல்லது இரண்டாம் பட்டியல் பிரகாரம் ஜீவிப்பது நமது பழக்கமாய் இருக்கிறதா? நாம் முதல் பட்டியல் பிரகாரம் இன்னும் வாழ்ந்து கொண்டிருப்போமானால், நாம் தேவனது எதிர்பார்ப்பின்படி அவரது தராதரத்தின்படி வாழத்தவறி வருகிறவர்களாய் இருக்கிறோம்.

6. முன்மாதிரி: தலைமைத்துவத்திற்கு முன்மாதிரியான வாழ்க்கை அவசியமாய் இருக்கிறது. அது ஆவியானவரால் நிரப்பப்பட்டு அவரால் உருவாக்கப்படுவதை உள்ளடக்கியுள்ளது. ஒரு போதகரின் கடமைகளில் ஒன்றாய் விளங்குவது என்னவென்றால், விசுவாசிகளுக்கு போதனை அளித்து அவர்கள் சீராக நடக்க,

போதனை அளித்து, பழைய பாவ சுபாவம் எவ்வாறு கண்ணியில் அகப்படுத்துகிறதாய் இருக்கிறது என்பது குறித்து அவர்களுக்கு கருத்தாய் போதித்து வழிநடத்த வேண்டியவராய் இருக்கிறார். தேவன் எவ்வாறு அவர்கள் வாழ வேண்டும் என எதிர்பார்க்கிறாரோ அதன்படி அவர்கள் வாழக் கற்றுக்கொடுத்தல் அவசியம் இல்லையேல் புறஜாதியாரைப் போன்று ஆறு நாட்கள் மட்டும் எதிர்பார்ப்பின்படி வாழ்ந்து ஏழாவது நாளில் மாய்மாலம் பண்ண நேரிடும். ஒரு பாவமும் புதியது எனக்கூறுவதற்கில்லை, அவைகள் ஆத்துமாவைப் பாதிக்கிறவைகளாய் இருக்கிறது, பரிசுத்த ஆவியானவரின் கட்டுப்பாட்டிலிருந்து விடுபட்டு ஜீவிப்போமானால், நாம் அனைவரும் பழைய பாவ சுபாவத்தால் மேற்கொள்ளப்பட்டு வாழ நாம் அனவரும் தகுதி பெற்றவர்களாய் இருக்கிறோம்.

7. சுயத்தையும் மற்றவர்களையும் எதிர்கொள்வதற்கு, விடாப்பிடியான தைரியம் அவசியம்: இந்த கலாத்திய நிருபத்தில் அளிக்கப்பட்ட இரு பட்டியல்களானது பரிசீலனை செய்வதற்காக கொடுக்கப்பட்டுள்ளது. போதகரானவர் தனது வாழ்விலும் மற்றவர்கள் வாழ்விலும் கனி தேடும் உயர் அதிகாரியாய் இருக்கிறார். இதன் பொருள் அனுமதியின்றி பிறரது வாழ்வில், அனாவசியமாய் நுழைந்து ஆராய்தல் என்பது அர்த்தமாகாது. இதன் பொருள் விசுவாசிகள் புறஜாதியாரைப் போன்று ஜீவிப்பார்களேயானால், அதைத் தெளிவுபடுத்திக்கொண்டு, போதகத் தலைவரானவர் அவர்களுக்காய் ஜெபித்து, எவ்வழியிலாவது அவர்களை அணுகி அவர்களை தேவனது தராதரத்திற்கு இசைய வாழும்படி செய்தல் வேண்டும்.

நாம் கர்த்தருடைய மந்தையை பிரதாண மேய்ப்பரின் கீழ் மேய்த்துவருகிறபடியால், ஆட்டுக்குட்டிகளை பொறுப்பெடுத்துக்கொள்ளுதல் அவசியமாய் இருக்கிறது. அபாயகரமான இடத்திற்கு செல்லக்கூடாது என அவைகளை அடித்தல் கூடாது. ஒரு விசுவாசி கொடுக்கப்பட்டுள்ள பட்டியலில் உள்ள பாவப்பழக்கவழக்கங்களை ஒரு விசுவாசி பெற்றிருப்பார் எனில், பழைய பாவ சுபாவத்தின் கீழ் வீழ்ச்சியடைந்துள்ளனர். அவர்கள் தங்களது ஆத்துமத்திற்குரிய உண்மையான மேய்ப்பரைப் பெறாதவர்களாய் இருக்கிறார்கள் என்பது இதன் பொருளாகிறது. அப்படிப்பட்டவர்களை அன்புடனும், கரிசனை மற்றும் அக்கரையுடன் விசாரித்து, மனதுருக்கத்துடனும், தனிப்பட்ட நிலையில் அவர்களைச் சந்தித்து, அவர்களை உணர்த்தும்போது, அவர்கள் தேவனது தராதரத்துடன் வாழ அவர்களை வழிநடத்துகிறதாய் இருக்கும்.

இப்படிப்பட்ட பாவங்களைக் குறித்துப் பவுலைப்போல நாம் எண்ணுகிறதில்லை. இப்படிப்பட்ட பாவங்களை மகிழ்வுடன் செய்து, தேவனது பிள்ளைகளாய் வாழாதவர்கள், நித்திய ஜீவனுக்குப் புறம்பானவர்களாய், சாத்தானும் அவனைப் பின்பற்றுவோரும் அடையும் நித்திய ஆக்கினையில் பங்கடைகிறவர்களாய் இருக்கின்றனர். ஒரு பிள்ளையானது குறிப்பிட்ட காலம் கெட்ட குமாரனைப் போன்று இருக்கலாம், ஆனால், அவர்கள் ஒரு நாளில் எழுந்திருக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர், இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் ஒரு போதகர் அவர்களுடன் நின்று, அவர்கள் மனந்திரும்ப வேண்டிய அவசியத்தை அவர்களுக்கு உணர்த்த வேண்டியது அவசியமாய் இருக்கிறது. இது வேதாகமச் சவலாய் இருந்து, பரிசுத்த ஆவியானவர் மாம்சீக வாழ்வை உணர்த்தி வழிநடத்தும் செயலாய் இருக்கிறது, மற்றும் இழந்து போனோரைக் குறித்து உணர்த்துவதுமாய் இருக்கிறது. நாம் ஆடுகளை பாதுகாப்பதில், தொலைந்து போனவற்றை தேடுவதில் களைத்துப் போகக்கூடாது, மற்றும் ஓநாய்கள் அவைகளை பீறிப்போடா வண்ணம் அவைகளுக்கு மறைவாய் ஆடுகளை பாதுகாக்கும் பொறுப்பிலும் சோர்ந்து விடக்கூடாது.

ஒரு தலைவராய் இருப்பதன் பொருள் என்னவெனில், அனுதினமும் பரிசுத்த ஆவியானவரில் நிறைந்து, சரியான வழியில் நடப்பதும் ஆகும். நன்மை தீமை இவற்றின் கனிகளாகிய இவைகளைக் குறித்து நமது மன நிலை எப்பொழுதும் சரியானவற்றை தெரிவு செய்து செயல்படுத்துதல் வேண்டும். சாத்தானின் கொள்கையானது பழைய பாவசுபாவத்தின் கனியை வாழ்வில் இணைத்து செயல்படச்செயவதாய் இருக்கிறது. இவை சுயத்தை மையமாய் கொண்டு செயல்படும் ஏதுக்களாய் இருக்கிறது. கிறிஸ்துவின் சிந்தைப்படி, கர்த்தரின் இருதயமானது, ஆவிக்குரிய கனியுடன் இணைந்து செல்கிறதாய் இருக்கிறது. மற்றும் இழந்து போனோரைக் குறித்த கரிசனையுடனும் இருக்கிறது. நாம் சுவிஷேசத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம், நமது பாவக்களை தொடர்ந்து அறிக்கை தவறாது அறிக்கை செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம், அனுதினமும் தேவனது வார்த்தையினால் போஷிக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம், அவைகளை வாழ்வில் அனுசரித்து நடக்கும் தருணங்களைப் பயன்படுத்திக்கொள்கிறோம்.

வாழ்வின் சுழற்சியில், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நமது மனதானது கர்த்தரை நேசிப்பதால் நிரப்பப்படுதல் வேண்டும், அதுவே ஆவிக்குரிய கனியின் வளர்ச்சிக்கு திறவுகோளாய் இருக்கிறது. மற்றும் இதுவே வேதகாம தலைமைத்துவத்திற்கு பரிசுத்த ஆவியானவரின் கனியானது உருவாகும் அடிப்படையாய் இருக்கிறது.

நித்தியத்தின் மதிப்பீடு பிரகாரம், நாம் ஆவியானவரால் நிரப்பட வில்லையானால், நம்மால் சபையில் பணியாற்ற இயலாது. உங்களது பழைய பாவ சுபாவமானது கர்த்தருடன் சிலுவையில் அறையப்பட்டுள்ளதைக் காண்கிறவர்களாய் இருக்கிறீர்களா? நீங்கள் உண்மையாகவே கர்த்தர் உங்களை இரட்சித்துள்ளார், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால், பழைய பாவ சுபாவத்தின் வல்லமையானது மேற்கொள்ளப்பட்டு வாழ்வதே இரட்சிப்படைந்த வாழ்விற்குரிய அர்த்தமாய் விளங்குகிறது. அனுதின சவாலானது, தனிப்பட்ட விதத்தில் ஆவியில் நடத்தலாய் இருக்கிறது, மற்றும் சபையாய் சேர்ந்து இதே ஆவிக்குரிய வல்லமையில் நடந்து கொள்வதாயும் இருக்கிறது.

முடிவுரை:

தேவனது தராதரமானது உயர்ந்ததாய் இருக்கிறது, ஒருவரும் அதை மாற்ற இயலாது. ஒரு ஐக்கியமானது இத்தகைய தேவனின் தராதரத்தை, கடைபிடித்து நடக்கத்தவறும் போது, அவர்கள் பாவ மனிதர்களை ஊழியத்தில் அமர்த்துகிறவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் ஊழியத்திற்கும், இயேசுக்கிறிஸ்துவின் சுவிஷேசத்திற்கும் அவகீர்த்தியை உண்டாக்குகிறவர்களாய் இருப்பர். நமது சபையில் அப்போஸ்தலரின் கொள்கைகளை பயன்படுத்தி, தலைவர்களை தெரிவு செய்தல் வேண்டும். இதினிமித்தம் அப்போஸ்தல சபைகளில் இருந்த அதே வல்லமையானது, நமது நாட்களில் இன்றைய அளவிலும் விளங்குகிறதாய் இருத்தல் வேண்டும். நமது தலைவர்கள் இக்கொள்கைகளின்படி தெரிவு செய்யாத பட்சத்தில், தேவன் தமது சபையை வழிநடத்த பாவ மனிதர்களை மட்டுமே தெரிவு செய்கிறவர்களாய் இருப்போம். பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தபடாத எந்த ஒரு நபரும், வேதாகமத்திற்கு கீழ்ப்படியதவர்களும், ஆவியின் கனியினால் நிரப்பப்படாதவர்களும் கர்த்தரது தராதரத்தை அடையாதவர்களாயும் தலைமைத்துவத்திற்கு தகுதியற்றவர்களாயும் இருக்கின்றனர். நாம் அனைவரும் இப்படிப்பட்ட தராதரத்தை நிறைவேற்ற முடியும், நாம் ஆவியானவரால் நடத்தப்படுதல் வேண்டும் என்ற சவாலை ஏற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம், நமது அழைப்பை நிறைவேற்றுகிறவர்களாய் இருந்து, பரிசுத்த தேவனின், பரிசுத்த பிள்ளைகளாய் நடந்து கொள்வோமாக!

BTB [BIBLE TOPIC BOOK] STUDIES:

தேவன்: தெய்வீக நிர்வாகங்கள் - திருமணம்:

1. மனிதன் மற்றும் தேவதூதர்கள் ஆளத்துவம் உடையவர்கள், ஆனால் மனிதன் மற்றும் மிருகங்கள் "nephesh" ஐப்பெற்று இருக்கின்றனர் மற்றும் அவர்கள் சரீர மரணம் அடைகிறவர்களாய் இருக்கிறார்கள். தேவதூதர்கள் மரிப்பதில்லைகாரணம் அவர்கள் ஆவிகளாய் இருக்கின்றனர்.

2. திருமணத்திற்கு ஆளத்துவம் மற்றும் வாழ்க்கை இவ்விரண்டும் அவசியமாய் இருக்கிறது. இதினிமித்தம் விவாகம் மனிதனுக்கு மட்டுமே பொருந்தக்கூடியதாய் இருக்கிறது. தேவதூதர்களுக்கு விவாக வாழ்க்கை என்பது இல்லை.

3. விவாகம் குறித்த விளக்கம்: - விவாகம் மனித வர்க்கத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே உள்ள தனிப்பட்ட உறவை காட்டுகிறது, மற்றும் இது கிறிஸ்துவுக்கும் விசுவாசிக்கும் இடையே உள்ள இரட்சிப்பின் உறவுக்கு ஒப்பணையாய் இருக்கிறது.

4. **தேவனின் போதனை:-** "ePq;fs; gYfpg; ngUfp> g+kpia epug;gp> mijf; fPo;g;gLj;jp> rKj;jpuj;jpd; kr;rq;fisAk; Mfhaj;Jg; gwitfisAk;> g+kpapd;Nky; elkhLfpw rfy [Pt[e;Jf;fisAk; Mz;Lnfhs;Sq;fs;" என தேவன் மனிதனுக்கு கட்டளை கொடுத்தார். இது மனிதன் மிருக இராஜ்ஜியத்தை கீழ்ப்படுத்தி, அதை ஆண்டுகொள்ள வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

5. தேவன் தனிப்பட்ட ஆளத்துவத்துடன் இருப்பாரேயானால், உறவைக்குறித்த தெய்வீக உதாரணங்கள் இருக்கமுடியாது. எப்படியிருப்பினும் தேவனுடைய ஆளத்துவத்தில் மூன்று ஆளத்துவம் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்லது. அவர் நம் சொந்தமாய் இருக்கிறார், இதினிமித்தம் அவருடன் நாம் உறவு கொண்டாடமுடியும்.

6. விவாகம் கிறிஸ்துவுக்கும் சபைக்கும் இடையே உள்ள உறவின் ஒப்பணையாய் இருக்கிறது.

a) கிருபை மற்றும் விசுவாச அமைப்பில், (எபேசியர்5:22), இவ்வசனத்தில் கீழ்ப்படிதல் என்பதன் பொருள், மாம்சீக சிந்தையினால் செய்ய இயலாத சூழலில், தேவனுடைய நியமத்திற்கு அற்பணிப்பது (ரோமர்8:7; 10:3).

b) நீங்கள் உங்களுக்கு கீழ்ப்படிதல் .சுயசித்தத்தின் செயலாய் இருக்கிறது.

c) திருமண உறவு குடும்பத்தில் குழப்பங்களை கொண்டுவருமானால், அது ஒருவருக்கொருவர் கீழ்ப்படியாமையின் விளைவாய் இருக்கிறது. (ரோமர்13:1,5).

7. கிருபை ஆணுக்கும் விசுவாசம் பெண்ணுக்கும் ஒப்பிடப்படுகிறது, இவ்வித அமைப்பு செயல் படாததன் விளைவு துன்பங்களும், வேதனைகளுமாம்.

8. கிருபையும் - ஆணும்:

a) ஆண் ஆரம்பித்து வைக்கிறவராய் இருக்கிறார்.

b) ஆண் தகவல்களை அளிக்கும்போது பெண் அதற்கு பிரதி உத்தரவு அளிக்கலாம் ஆனால், தனது சுயசித்தத்தை அதில் வற்புறுத்தக்கூடாது.

c) ஆண் தனது குணாதிசயங்களை பெண்ணுக்குக் காட்டவேண்டும்.

d) ஆண் கிருபையின் அமைப்பில், தனது பொறுமையைக் கையாள வேண்டும்.

9. விசுவாசமும் - பெண்ணும்:

a) பெண் பிரதி விளைவுகளை ஏற்படுத்துகிறவளாய் இருக்கிறாள்.

b) பெண்ணானவள் தனது சுயசித்தத்தின்படி தெரிவு செய்கிறவளாய் இருக்கிறாள்.

c) அவள் விசுவாசத்தைப் பயன்படுத்துகிறவளாய் இருக்கிறாள்.

d) பெண் வளர்ச்சியடைய கால அவகாசம் தேவையாய் இருக்கிறது.

10. மகிமை வெளிப்படுதல்:

a) மறுபிறப்பின் மூலம் மாறுதல் அடைந்த வாழ்வின் அமைப்பில், தேவனின் மகிமை ஆணின் வாழ்வில் காணப்படுகிறது.

b) ஆணின் மகிமை பெண்ணில் ஏற்படும் மாற்றங்களினால், காணப்படுகிறது.

11. மனம் ஒன்றுபட்ட வாழ்க்கை:

a) மனம் ஒருமித்த வாழ்வின் முக்கிய பகுதி, ஆவிக்குரிய இராஜ்ஜியத்தில், மனோரீதியான நிலையில் அநேக மக்களுடன் மனமொருமித்து இருக்கமுடியும் என்பதாய் இருக்கிறது.

b) ஆவிக்குரிய மனமொத்த நிலையை குறிக்கும் சொற்றொடர் "ஒரே மாமிசமாய் இருப்பார்கள்" எனக் குறிப்பிடப் படுகிறது, இது கிறிஸ்து மற்றும் சபை இணைக்கப்படுவதை சித்தரிக்கிறது.

12. சாத்தான் ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே கருத்து வேறுபாடுகளை கொண்டுவர முயர்ச்சித்து, ஆதன் விளைவாக பிரச்சனைகளை ஏற்படுத்துகிறான். இது சமுதாயத்தில் ஏற்படும்பொழுது, ஒழுக்க சீர்கேட்டை அவை பிரதிபலிக்கிறது.

13. விவாகத்தின் முடிவிற்கு தகுதியான காரணங்கள்:-
a) இரு தம்பதிகளில் ஒருவர் மரித்தல்.
b) திருமணத்திற்குப்பின் தம்பதிகளில் இருவரில் ஒருவர் விசுவாசியானதினிமித்தம் அவிசுவாசியால் கைவிடப்படுதல். (1 கொரி 7:10-16).
c) தகுதியற்ற முறைகேடான திருமணம் புரிந்த தம்பதிகள் லேவியராகமம் 18 ல் கூறப்பட்டுள்ளபடி நெருங்கிய உறவில் திருமணம் செய்தவர்கள்.
d) விபச்சாரம் அல்லது வேசித்தனம் போன்ற காரணங்களால், ஒரே மாமிசம் என்கிற அடிப்படையிலிருந்து விலகி மற்ற மாமிசத்துடன் சம்பந்தப்படுவதால் அது அழிவை ஏற்படுத்துகிற காரணத்தால். (மத்தேயு5:32; 19:9).

தேவன்: தெய்வீக நிறுவனங்கள் - குடும்பம்.

1. தேவன் மனுக்குலத்தின் ஆரம்பத்தில் இப்பூமியில் குடும்பங்கள் மற்றும் திருமணம் இவைகளை தொடங்கி வைத்தார். (ஆதியாகமம்2:24).

2. திருமணம் ஒரே மனைவி மற்றும் ஒரே புருஷனையையுடையதாய் இருந்தது. (ஆதியாகமம்2:24). "ஒரேமாமிசம்" என பகுக்கப்பட்டு இருந்தனர். அவர்கள் தாய் தகப்பனை விட்டுப்பிரிந்து தங்கள்து சொந்த வீட்டை தாங்களே அமைத்துக்கொள்ள வேண்டும். (ஆதியாகமம் 2:24; எபேசியர்5:31; மத்தேயு 19:4-5).

3. விபச்சாரம் மற்றும் விவாகரத்து மிக கவனத்துக்குரிய காரியமாக கருதப்பட்டது, இவைகளை பத்து கட்டளைகள் உள்ளடக்கியுள்ளது. (யாதிராகமம் 20:14).

4. புருஷன் குடும்ப தலைவனாயிருக்கிறான். (ஆதியாகமம் 3:16).
a) தன் மனைவிக்காய் புருஷன் மரிக்கவும் சித்தமுள்ளவனாய் இருக்கவேண்டும். (எபேசியர்5:22-23).
b) வீட்டின் தேவைகளை அவன் சந்திக்கவேண்டும். (ஆதியாகமம்3:19; 1 தீமோத்தேயு5:8).

c) அவன் தனது பிள்ளைகளை தேவனுக்கு பயப்படும் விதத்தில் வளர்க்கவேண்டும். (எபேசியர்6:4உபாகமம்6:6,7).
d) தனது பிள்ளைகளை அவன் மனமடிவாக்கக்கூடாது. (கொலோசெயர்3:21).

5. மனைவிகள் தங்கள் புருஷருக்கு அடங்கி நடத்தல் வேண்டும். (ஆதியாகமம் 3:16; எபேசியர் 5:22,23. 1 பேதுரு3:1-6).
a) அவள் வீட்டில் கனப்படுத்தபடக்கூடியவளாய் இருக்கிறாள் (1பேதுரு 3:7).
b) அவள் தனது புருஷனக்குறித்து ஆழ்ந்த ஆசையுடையவளாய் இருக்கிறாள் (ஆதியாகமம்3:16).

6. பிள்ளைகள் தாய், தகப்பனுக்கு கீழ்ப்படிந்திருக்க வேண்டும். (எபேசியர்6:1-3; நீதிமொழிகள் 22:15; 23:13).
a) அவர்கள் பெற்றோரை கனப்படுத்தவேண்டும். (எபேசியர் 6:2; 1 தீமோத்தேயு 5:4; யோவான் 19:26).
b) அவர்கள் பெற்றோரை கனப்படுத்தும்போது அவர்கள் நீண்ட ஆயுளைப்பெறுவர். (யாத்திராகமம்20:12).

7. சாதாரண குடும்ப வாழ்க்கை மூன்று வழிகளில், பிதாவாகிய தேவனுக்கு, கிறிஸ்துவுடன் உள்ள உறவில், இணையாக உள்ளது.
a) ஒரே தலைமைத்துவத்தை அடிப்படையாய் கொண்டு இருக்கிறது. (1 கொரிந்தியர் 15:45-50).
i) ஏதேன் தோட்டத்தில் ஆதாமே முதலில் சிருஷ்டிக்கப்பட்டார், ஏவாள் ஆதாமின் விலா எலும்பிலிருந்து சிருஷ்டிக்கப்பட்ட்டாள். அதாமிலிருந்து ஏவாள் எடுக்கப்பட்டாள். இரண்டாம் ஆதாம் இயேசுக்கிறிஸ்து, அவரிலிருந்து ஒரு ஆவிக்குரிய சந்ததி வரும்.
ii) நான் என் தகப்பனுடைய பிள்ளையாய் இருக்கிறேன் காரணம் அவரது சாயலை நான் அவரிடமிருந்து பெற்று இருக்கிறேன். இதற்கொப்பாக நாம் மறுபடியும் பிறக்கும்போது, நாம் தேவனின் சாயலைப்பெறுகிறோம்.
b)குடும்பம் ஒழுங்குக்கு கீழ்ப்பட்டுள்ளது - (எபிரெயர்12:3-15)
i) நீதிக்குரிய வழிகளில் உங்கள் பிள்ளைகள் வாழ கற்றுக்கொடுப்பது முக்கியம்.
ii) தேவனது சிட்சை அவரது சித்தத்தில் நடக்க நம்மை பயிற்றுவிக்கிறது. அது நமக்கு ஆசீர்வாதங்களை கொண்டுவருகிறது.

iii) பிள்ளைகள் தங்களது பெற்றோரிடமிருந்து ஞானத்தைக்கற்றுக் கொள்ளவேண்டும். .(யாதிராகமம்12:24-28உபாகமம்6:6-25, யோசுவா4:5-8). தேவன் ஞானமுள்ளவர.

c)ஒழுக்க ரீதியாகவும், சட்டரீதியாகவும் குடும்ப நடக்கை இருக்க பெற்றோர் பொறுப்பாளிகளாய் இருக்கின்றனர். நமது சாட்சியுள்ள வாழ்க்கை தேவனை பிரதிபளித்துக் காட்டுகிறது.

8. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் எடுத்த கணக்கெடுப்பின்படி, குடும்ப அமைப்பு அத்தேசத்தில் பெலவீனப்பட்டு இருப்பதற்கு எட்டு காரணங்களை கூறுகின்றனர்.

a) உடலுறவு பழக்கத்தை அநேகருடன் வைத்துக்கொள்வது பெருகிவருகிறது.

b) குடும்பத்தலைவர் குடும்பத்தைப்பாதுகாப்பதற்கு பதில் அரசாங்கத்திடம் அதன் பாதுகாப்பு கருதி மாற்றுவது.

c) பிள்ளைகளின் கல்விக்காக பெற்றோரிடமிருந்து மாற்றுவது.

d) சுற்றுலாவிற்காக குடும்பமாய் வெளியே செல்லும்பொழுது தொலைக்காட்சிப்பெட்டியுடன் செல்லுதல்.

e) வீட்டில் தயாரிக்கவேண்டியவைகளை, தொழிற்சாலைக்கு மாற்றுதல்.

f) முதியோர்களை வீட்டில் வைத்து பராமரிப்பதற்குப் பதிலாக அவர்களை முதியோர் இல்லத்தில் சேர்த்தல்.

g) கைப்பக்குவத்தில் வீட்டில் தயாரிக்க வேண்டிய உணவு பதார்த்தங்களை சூப்பர் மார்க்கெட் சொசைட்டியில் வாங்கி உண்ணும் பழக்கம் எழும்பிவருகிறது.

h) மதசம்பந்தமான அறிவுரைகளை வீட்டிலிருந்து வெளியே மாற்றுதல்.

கிறிஸ்தவ வாழ்க்கை - [மனோநிலை:] மனோ ரீதியான நடத்தை:

1. விளக்கம்: மனோரீதியான நடத்தை என்பது, மனோ நிலையக் குறிக்கிறதாய் இருக்கிறது, ஆத்துமாவின் சிந்தனை செயல்பாட்டிற்கிசைய மனமானது குறிப்பிட்ட செயல்பாட்டில் ஈடுபடுவதைக் காட்டுகிறது.

2. ஒவ்வொரு விசுவாசியும் தெய்வீகம் மற்றும் மனுஷீகக் கண்ணோட்டம் சார்ந்த உள்ளான முறண்பாடுகளைச் சந்திக்கிறவர்களாய் இருக்கின்றனர். இவ்விரு மனப்பான்மைகளும், மனிதனின் வீழ்ச்சிக்குப் பின்னர் அவர்களில் யுத்தத்தை நடப்பித்து வருகின்றன. (ஏசாயா 55:7-9).

3. நமது ஆத்துமாவில் தெய்வீகக் கண்ணோட்டமுடையவர்களாய் இருக்க கட்டளைப்பெற்றுள்ளோம், சாத்தான் அளிக்கும் உலகப்பிரகாரமான கண்ணோட்டத்தைத் தவிர்க்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறவர்களய் இருக்கிறோம். 2 கொரிந்தியர் 1:7, 10:5. (via Doctrine in the Soul).

4. மனப்பான்மையானது ஒரு நபரின் வாழ்க்கையையும் மற்றும் அவரது குணாதிசயத்தையும் வகையறுக்கிறதாய் இருக்கிறது. நீங்கள் எவ்வாறு சிந்திக்கிறீர்களோ நீங்களும் அப்படிப்பட்டவர்களாய் இருக்கிறீர்கள். (நீதிமொழிகள் 23:7)

5. கிறிஸ்துவின் சிந்தைக்கேற்ப நாம் சிந்திக்க கிறிஸ்தவர்களாகிய நாம் கட்டளைப் பெற்றுள்ளோம். நமது ஆத்துமாவில் புதிய மனப்பான்மையுடன் நடந்து கொள்வது தேவனது திட்டமாய் இருக்கிறது, மனிதக்கண்ணோட்டத்தை அல்லாத புதிய கண்ணோட்டத்துடன் வாழவும், பாவ மனோ ரீதியான நடத்தையைத் தவிர்த்து வாழவும் தேவன் நமக்கு திட்டம் வகுத்தளித்திருக்கிறார். (1கொரிந்தியர் 2:16, 2 கொரிந்தியர் 10:4-5 ரோமர் 12:2, பிலிப்பியர் 2:5, 2 தீமோத்தேயு 1:7).

6. சபைக்குள் உள்ள ஐக்கியமானது, வேதாகப் போதனைகளுக்கிசைய அனைத்து விசுவாசிகளும் நடந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர். பிலிப்பியர் 2:2.

7. வேதாகமத்தைப் பற்றிய அறிவானதும் (கிறிஸ்துவின் சிந்தையானது, 1 கொரிந்தியர் 2:16) பரிசுத்த ஆவியானவரால் கட்டுப்படுத்தப்படுவதும் விசுவாசியின் மனதை புதிதாக்கி, புதிய கண்ணோட்டத்தை அவர்களுக்கு அளிக்கிறதாய் இருக்கிறது. (ரோமர் 12:2).

8. சரியான மனோ ரீதியான நடத்தையானது சந்தோஷத்தையும் (பிலிப்பியர் 2:2) தன்னம்பிக்கையையும் (2 கொரிந்தியர் 5:1,6,8), நிலையான தன்மையையும் (ஏசாயா 26:3-4, பிலிப்பியர் 4:7, 2 தெசலோனிக்கேயர் 2:2), உண்மையாய் கொடுப்பதையும் (2 கொரிந்தியர் 9:7), தெய்வீக அன்பையும் (1 கொரிந்தியர் 13:5), உருவாக்குகிறதாய் இருக்கிறது.

9. மனுஷீகக் கண்ணோட்டமானது உலகப்பிரகாரமானது என அழைக்கப்படுகிறது.

(ரோமர் 12:2, கொலோசெயர் 3:2).

10. சாத்தானது கொள்கையைப் பின்பற்றி நடந்து, நீங்கள் சிந்திக்கும் ஒவ்வொன்றும் தீமையாய் இருக்கிறது. மத்தேயு 9:4, கலாத்தியர் 6:3. மனோரீதியான பாவங்கள் துன்பங்களையும் துயரங்களை வெளிக்கொண்டுவருகிறதாய் இருக்கிறது. (நீதிமொழிகள் 15:13).

11. தெளிவான சிந்தனையில்லாவிடில் விசுவாசியின் மனதில் முறண்பாடுகள் ஏற்படுகின்றன. ஏசாயா 55:6-9, யாக்கோபு 1:7-8.

12. உண்மையான சுபாவங்களின் நிலையான தன்மை இப்படிப்பட்டவழிகளில் வருகிறதாய் இருக்கிறது. பிலிப்பியர் 4:7, 2 தெசலோனிக்கேயர் 2:2.

13. கொடுப்பது என்பது மனோரீதியான செயலாய் இருக்கிறது. 2 கொரிந்தியர் 9:7 அன்பு செலுத்துவதும் மனோரீதிய செயலாய் இருக்கிறது. 1 கொரிந்தியர் 13: உபாகமம் 6:5,10:12.

14. உலகப்பிரகாரமாய் நடப்பதும் மனோரீதியான செயலாய் இருக்கிறது. இவை கிருபையற்ற சிந்தனையாய் இருக்கிறது; i.e. தேவனது திட்டத்திற்கு எதிராய் செயல்படுவதாய் இருக்கிறது. கொலோசெயர் 3:2.

15. பணிசெய்வதில் ஏற்படும் தன்னம்பிக்கை மற்றும் பொதுவான வாழ்க்கை வாழ்வது போன்றவை "தெய்வீகக் கண்ணோட்டத்தினால்" உருவாகிறவைகளாய் இருக்கின்றன. அவைகளால் ஏற்படும் பலன்களாவன:

[அ] வாழ்வில் ஸ்திரத்தன்மை - யாக்கோபு 1:8.

[ஆ] ஆத்துமாவின் செழிப்பு - பிலிப்பியர் 4:7.

[இ] கர்த்தருக்கென கொடுப்பது - 2 கொரிந்தியர் 9:7.

[ஈ] உலகப்பிரகாரமாய் நடந்து கொள்வதைவிட ஆவிக்கேற்றபிரகாரம் நடந்து கொள்ளுதல். - ரோமர் 12:2, கொலோசெயர் 3:2.

[உ] தீமையைக் காட்டிலும் சுத்தமாய் நடந்துகொள்ளுதல். - மத்தேயு 9:4.

[ஊ] திமிராய் நடந்து கொள்வதை தவிர்த்தல். - கலாத்தியர் 6:1-5.

[எ] உள்ளான அழகுடன் திகழ்தல். - 1 தீமோத்தேயு 2:9,10,15.

சபை: சபை ஒழுங்கு

1. சபைக்குள் வேத வசனங்களுக்கு கீழ்ப்படியாதவர்களை முதலாவது அவர்களை எச்சரிக்க வேண்டும், பின்னர் அவர்களை கடிந்துகொள்ள வேண்டும். (தனிப்பட்ட நிலையில் அத்தவறுகளை செய்திருப்பாரெனில் தனிப்பட்ட நிலையில் எச்சரித்து கடிந்து கொள்ள வேண்டும், பொதுவாய் எல்லார் முன்னிலையில் செய்திதுப்பார் எனில் எல்லார் முன்னிலையில் எச்சரித்து கடிந்துகொள்ளபடுதல் வேண்டும்) 2 தெசலோனிக்கேயர் 3:14, தீத்து 1:13, 14.

2.. பின்னரும் சத்தியத்திற்கு கீழ்படியாமல் மீறி நடக்கும் தனிப்பட்ட நபரை சபை ஐக்கியத்தை விட்டு புறம்பாக்க வேண்டும், சபையின் மற்ற அங்கத்தினர் அத்தகைய நபரிடமிருந்து தங்களது ஐக்கியத்தை விலக்கிக்கொள்ள வேண்டும். 1 தீமோத்தேயு 6:3-5.

3. பின்னரும் அவர்களில் ஒரு மாற்றம் காணப்படவில்லையானால் அப்படிப்பட்டவர்களை முழுவதுமாய் (நிரந்தரமாய்) ஐக்கியத்திலிருந்து விலக்கிவிட வேண்டும். தீத்து 3:10 கலாத்தியர் 1:6 -10.

4. பவுல் தவறான போதனை குறித்து எச்சரிப்பு கொடுக்கிறார். 1 தீமோத்தேயு1: 4, 11. இம்மனேயு, அலெக்சாந்தர் இவ்விருவரையும் தவறான போதனை கொடுத்ததினிமித்தம் அவர்கள் சத்தியத்தை அறியவும், தூஷணங்களை நிறுத்தவும் அவர்களை சபையிலிருந்து வெளியேற்றினார். 1தீமோத்தேயு1:18-20.

5. சபைக்கு புறம்பாக்குதல் தற்காலிகமாயிருக்கிறது, இது அந்நபர் மனந்திரும்பாதவரை நீடிக்கும், அவர் மெய்யாய் மனந்திரும்பி வருவாரேயானால் அவரை கெட்ட குமாரனைப்போல மறுபடியும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். லூக்கா15:11-32,விபச்சாரத்தில் உள்ள மனிதனுக்கும் அப்படியே செய்யப்படவேண்டும். 1 கொரிந்தியர் 5:1-13. 2கொரிந்தியர்2:5-11.

அத்தியாயம் நான்கு

தலைமைத்துவத்தை "உயர்த்திக் காட்டுதல்"

சபை போர்டுகளில் அரசியலைப் பயன்படுத்தி மற்றும் பதவி மோகத்தினால் பல யுக்திகளை கையாளும் காலத்தில் நாம் வாழ்ந்து வருகிறோம். அவர்களது ஆதரவிற்காய், கைபேசி அழைப்பு, அச்சிடப்பட்ட விளம்பர சுவரொட்டிகள், அவர்கள் உதவி செய்தவைகளை மேற்கோள்காட்டி விளம்பரம் செய்தல், மூப்பர்களுக்கான கேம்பைன்கள் நடத்துதல் போன்ற காரியங்களைச் செய்து எப்படியாகிலும் தலைமைத்துவ பதவியில் அமர பிரயத்தனம் செய்கிறார்கள். இதைப்போன்ற எவ்வித செயல்பாடுகளும் ஸ்தல சபைகளில் காணப்படுதல் கூடாது, ஸ்தாபனங்களிலும் கூட காணப்படக்கூடாது, ஒவ்வொரு நபரும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்காக பணிசெய்வதற்கு உயர்த்தப்பட வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். வேதாகம தலைமைத்துவ அமைப்பானது, சரியானவர்கள் குறிப்பிட்ட கடமையை செய்ய, பரிசுத்த ஆவியானவரால் "கண்டுகொள்ளப்படுதல்" அவசியமானதாய் இருக்கிறது, அவர்கள் தேவனது பிள்ளைகளை வழிநடத்துகிறவர்களாய் இருத்தல் அவசியமாய் இருக்கிறது. தனிப்பட்ட விசுவாசி ஸ்தல சபையில் பணியாற்ற ஊக்கமளிக்கப்படுகிறார் அவர் பொறுமையுடனும், வழிநடத்தக்கூடிய திறமையுள்ளவராயும் இருத்த அவசியம். இதைக்குறித்த வேதபகுதியானது பேதுரு எழுதின நிருபத்திலிருந்து கொடுக்கப்படுகிறது.

1 பேதுரு 5:5-9.

"5.அந்தப்படி இளைஞரே மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள், நீங்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். (லேவியராகமம் 19:32, நீதிமொழிகள் 3:34, also see ஏசாயா 57:15, சங்கீதம் 138:6). 6. ஆகயால், ஏற்றக்காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கரத்தில் அடங்கியிருங்கள். (சங்கீதம் 75, நீதிமொழிகள் 15:33, எரேமியா 45:5). 7.

அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள். (சங்கீதம் 55:22). 8.தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில், உங்கள் எதிராளியான பிசாசானவன், கெர்ச்சிக்கிற சிங்கம் போல, எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான். 9.விசுவாசத்திலே உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள், உலகத்தில் உள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே."

பிரதிபலிப்பு:

இதினிமித்தமே நாம் இதை "கூட்டிச் சேர்த்து வடிவமைக்கப்பட்ட வேதபகுதி" என அழைக்கிறோம், இதில் பழைய ஏற்பாட்டு மேற்கோள்களைக் காட்டி எழுதப்பட்டுள்ளது. பேதுரு தனது ஆவிக்குரிய பாரம்பரிய, அடிப்படைக் கருத்துக்கள் சிலவற்றை, ஆவிக்குரிய வாழ்விற்கும் மற்றும் பணிசெய்வதற்கும் மூலாதாரமாக தேவன் இஸ்ரவேலருடன் இடைபடத் துவங்கிய காலந்தொட்டே நடந்து வருகிற நிகழ்ச்சிகளைக் கொண்டு இங்கு சுட்டிக்காட்டுகிறவராய் இருக்கிறார். தேவனது திட்டத்தின் தொடர்ச்சியானது இந்த வசனங்களால் வலியுறுத்தப்படுகின்றன. தேவன் எப்பொழுதும் கிருபையினால், விசுவாசத்தின் மூலம் இரட்சித்துவருகிறார், விசுவாசத்தின் பிரதிபிம்பம் எப்பொழுதுமே கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவாய் இருக்கிறார், ஒப்புமை, பலிமுறைகள், அல்லது சிலுவையின் மீது மெய்ப்பித்த காரியங்கள் போன்றவை மூலம் இவற்றை விளங்கப்பண்ணுகிறார்.

அவிக்குரிய வளர்ச்சியும் அதே வழியிலேயே இருக்கிறதாய் இருக்கிறது, தேவன் கிருபையாய் அளித்த அவரது வார்த்தை மற்றும் அதில் விசுவாசிகள் வைக்கும் விசுவாசம் மூலம் இது விளங்குகிறது. இது எப்பொழுதும், நம்புதலும் மற்றும் கீழ்ப்படிதலுமாய் இருக்கிறது. பழைய ஏற்பாட்டில், இரட்சிப்படைந்து தேசத்தில் மீந்தவர்கள், கர்த்தருக்குரியவர்கள் என எப்பொழுதும் கூறப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். இதைப்போன்றே விசுவாசிகளும் எப்பொழுதும் கர்த்தருக்கு உரியவர்களாய் இருக்கிறார்கள் என்பது இங்கே கண்ணோக்கமாய் கருதப்படுகிறது. தனது மாசற்ற திரு இரத்தத்தினால், நம்மை கிரயம் கொடுத்து வாங்கி நமக்கு மீட்பை அளித்திருக்கிறார், இதன் பொருள் நமது பிரச்சனைகளைக் கூட அவர் தமக்கு "சொந்தமாக்கிக்" கொண்டுள்ளார். நாம் கர்த்தருக்குள் விசுவாசிகளானது

முதற்கொண்டு, நமது பிரச்சனைகள் அனைத்தும் ஒரு முடிவுக்கு வந்து விட்டன, நமது பிரச்சனைகள் அனைத்தும் அவரது பிரச்சனையாகிவிட்டது. அவைகளில் எதையாகிலும் நம்முடையது எனக்கூறுவோமெனில், அதன் பொருள், பெருமை அல்லது அறியாமை போன்றவை மிகைப்படுத்தப்படுகிறதாய் இருக்கிறது, இவ்விரண்டுமே, மிகவும் வல்லமை மிக்க ஆவிக்குரிய வாழ்வின் எதிரிகளாய் இருக்கின்றன. Refer to BTB study of BIBLE: BIBLE AND THE BELIEVER : வேதாகமும் விசுவாசியும் என்கிற BTB study ஐ ஒப்பிட்டுப்பார்க்க.

வசனம் 5 ஐ நாம் நெருக்கமாய் சென்று காண்பதற்கு முன்னதாக, எபேசியர் 5:8-21 மற்றும் யாக்கோபு 4:6-10. இவ்விரு இணையான புதிய ஏற்பாட்டு வேத பகுதியினை வாசியுங்கள். இவ்வேத பகுதியிலும் இத்தலைப்பானது நமக்காக இடம் பெற்றுள்ளதாய் இருக்கிறது. சரியான அதிகாரத்திற்குக் கீழ்ப்படிவது மற்றும் நமக்குண்டான பிரச்சனைகள் அனைத்தும் கர்த்தருக்குரியது, இவ்விரு அத்தியாவசியமான நடத்தைகளும் நாம் கற்றுக்கொள்ள அவசியமானதாய் இருக்கிறது, இவைகள் கிருபையில் வளர கிறிஸ்து இயேசுவைப் பற்றிய அறிவில் வளர நமக்கு பெரும் உதவியாய் இருப்பவை.

இப்பொழுது 1 பேதுரு ஐந்தாம் அதிகாரத்திற்கு நமது வேதாகமத்தை திருப்பிக்கொள்வோமாக. இவ்வசனமானது இதற்கு முன் பேதுரு கூறிய தலைப்பை தொகையாய்/முழுமையாய் பின்பற்றுகிறதாய் இருக்கிறது, சரியான தலைவர்களுக்கு ஒப்புவித்து ஜீவிப்பது, அல்லது அவர்களுக்கு துணையாய் இருந்து செயல்படுவது, போன்றவைகள் இவ்வசனத்தில் இடம் பெறுகின்றன. இவைகள் அதிகாரம் 2:13 லும் மற்றும் 3:1,5 வசனங்களிலும் காணலாம்.

5.அந்தப்படி இளைஞரே மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள், நீங்கள் எல்லோரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள், பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோ கிருபை அளிக்கிறார். (லேவியராகமம் 19:32, நீதிமொழிகள் 3:34, also see ஏசாயா 57:15, சங்கீதம் 138:6).

"போதிப்பதற்கு நியமனம் செய்யப்பட்ட போதனையாளர்கள், தேவனால் நியமனம் செய்யப்பட்டவர்கள், என ஏற்றுக்கொள்ளப்படுதல் வேண்டும், அவர்களது ஆழுகை மற்றும் வழிநடத்துதல் அவர்களது ஒப்புக்கொடுத்தலுடன் இருத்தல் வேண்டும்." (Lumby, 1897, p 213). மனுக்குலத்திற்கு கர்த்தர்தாமே இப்படிப்பட்ட முன்மாதிரியை ஏற்படுத்தியிருக்கிறார், நமக்கு போதனையாளராய் இருக்கும் அனைவரும்,

தேவனது சித்தத்திற்கு தங்களை அற்பணித்து இருத்தல் வேண்டும். யோவான் 13:4, லூக்கா 12:37. இதனுடன் கூட ஒப்பிடுக: நீதிமொழிகள் 3:34. மகிமைக்குரிய வழியானது தாழ்மையின் வழியாய் இருக்கிறது, இது நமக்கு கொடுக்கப்பட்ட பணியை செய்வதற்கு, தேவனுக்கு சரியான மனநிலையை விவரித்துக்காட்டுகிறதாய் இருக்கிறது

எவ்வித இறுமாப்பின்றி / திமிரின்றி இருக்க கர்த்தர் நம்மை அழைத்துள்ளார், கர்த்தரால் விடுவிக்கப்பட்டவர்களுக்கு இப்படிப்பட்ட குணம் எவ்வளவேனும் தகாது, நமது இரட்சிப்பானது நன்றி செலுத்தும் ஆவிக்கு வழிநடப்படுதல் வேண்டும், குழுவாய் செயல்பட்டு ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து / விட்டுக்கொடுத்து அளிக்கப்பட்ட பணியை நிறைவேற்றுதல் வேண்டும். இப்படிப்பட்ட தராதரங்களுக்கு ஏதேனும் குறைவு பட்டால் அது பாவமாய் இருக்கிறது. Refer to doctrinal studies of CHRISTIAN LIFE: OBEDIENCE, CHRISTIAN LIFE: SUBMISSION ஒப்பிடுக: கிறிஸ்தவ வாழ்க்கை, கீழ்ப்படிதல், ஒப்புக்கொடுத்தல்.

முதலாவதாக தலைமைத்துவ அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு எல்லா ஆவிக்குரிய காரியங்களுக்கும் ஒப்புக்கொடுத்தல் அவசியமாய் இருக்கிறது. இரண்டாவதாக ஒருவருக்கொருவர் ஒப்புக்கொடுத்தல் அவசியமாய் இருக்கிறது. பவுல் இத்தகைய குறிப்பை எபேசியர் வேதபகுதியில் கொடுத்துள்ளார், கர்த்தரது கட்டளையாகிய மற்றவர்களைக் குறித்து கரிசனையாய் இருத்தல், "மற்றவர்கள் நலனை மையமாய் கருதுதல்" அகாப்பே அன்புடன் ஒருரிலொருவர் அன்பு கூறுதல். யோவான் 15:12-14, 17. இது போன்று வாழ்வதற்கு எவ்வித விதிவிலக்குமின்றி இருக்கிறது, இவைகளைக்கொண்டு, நாம் தேவனது தராதரத்தை அளந்து பார்க்கவேண்டியவர்களாய் இருக்கிறோம், நாம் திருப்தியுடன் பணி செய்ய இதுவே அவரது தராதரமாய் இருக்கிறது.

பேதுரு கட்டளையிடுவதாவது: "தாழ்மையை அணிந்து கொள்ளுங்கள்" என்கிறார், இதன் எதிரொளியாக கொலோசெயர் 3:8-16, மற்றும் எபேசியர் 6:10-17 ல் பவுல் கூறுவது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட கட்டளையானது இராணுவக் கட்டளையாய் இருக்கிறது. இப்பகுதியில் அநேக இராணுவ வார்த்தைகள் இடம்பெற்றுள்ளன, ஒரு விசுவாசியின் மனநிலை, மற்றும் அவர்களது நடத்தை இப்படி இருக்க வேண்டும் என்பது குறித்து இவ்வார்த்தைகள் விவரிக்கின்றனவைகளாய் இருக்கின்றன. நமது நடத்தையில் தாழ்மையை உறுதியாய் அணிந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். இது ஆரம்பமாய் இருந்து, நாம் செய்ய வேண்டிய ஆவிக்குரிய யுத்தத்திற்கு பயன்படும்

முதலாவது
"ஆயுதங்களில்" ஒன்றாய் இருக்கிறது. இதன் படியே ரோம இராணுவ வீரர்களது இடைக்கச்சையும் / பெல்ட்டும் இறுக உறுதியாய் கட்டிக்கொள்ளப்பட வேண்டியதாய் இருக்கிறது.

ஏசாயா 57:16,17 ல், கர்த்தர், இரண்டாம் வருக்கைக்கான சர்வாயுத வர்க்கங்களை தரித்துக்கொள்வது குறித்து சித்தரிக்கப்படுகிறது, இவ்வேதபகுதிகளை பவுலும், பேதுருவும் எழுதும்போது இவ்விதமான சித்திரத்தை மனதில் கொண்டு தங்களது நிருபங்களை எழுதியிருக்க வேண்டும் என கருதப்படுகிறது. கர்த்தரைப்போன்றே நாமும் ஆவிக்குரிய யுத்தங்களை நடத்த அழைக்கப்பட்டிருக்கிறோம், பேதுருவுக்கு தாழ்மை என்பது மனோரீதியான நடத்தையாக, ஒவ்வொருன்றையும் செய்வதற்குரிய ஆயத்தத்தை காட்டுகிறதாயும், ஒருவரையும் தங்களுக்கு கீழானவர்கள் எனக்கருதாது, நமக்காக முற்றிலுமாய் தன்னைத்தான் அற்பணித்த கர்த்தருக்காக எவ்வித பணியானாலும் அதைச் செய்வது தகுதியானது என்ற மனப்பான்மையுடன் அவர் பணி செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஏசாய 6:10, மற்றும் சங்கீதம் 132:9 இவ்வசனங்களை ஒப்பிடுக: Refer to doctrinal study of CHRISTIAN LIFE: SOLDIER – CHRISTIAN SOLDIER IN EPHESIANS 6 கிறிஸ்தவ வாழ்க்கை: போர்வீரன் - கிறிஸ்தவ போர்வீரன் எபேசியர் 6 ம் அதிகாரம் இவற்றை ஒப்பிடுக:

இவ்வேத வசனங்களில் பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார் என்கிற தேவனது அடிப்படைக் கருத்தானது சேர்க்கப்பட்டுள்ளது. தனது சொந்த தகுதியில் நிற்போரை, தேவன் எதிர்க்கிறவராய் இருக்கிறார், இப்படிப்பட்டவர்கள் "இராஜரீகத்தைத்" தவிர மற்றெல்லாம் தங்களது அந்தஸ்த்திற்குக் கீழானது எனக் கருதுகிறவர்களாய் இருக்கின்றனர். இதைப் போன்ற பெருமையை மையமாய் கொண்ட குணாதிசயமானது, பிசாசுக்குரியதாய் இருக்கிறது, இது போன்ற குணாதிசயம் தேவனுக்கேற்றதாக இல்லை. ஒப்பிடுக:, நீதிமொழிகள் 29:23, ஏசாயா 2:10, 11, 57:15, எரேமியா 13:18, 44:10, 11, தானியேல் 5:22 - 29, மீகா 6:8.

கடைசி வசனமானது [மீகா 6:8.] இதை மேற்கோள் காட்ட முக்கியமானதாய் இருக்கிறது, இவ்வடிப்படைக் கொள்கையினை நேரடியாய் எடுத்துரைக்கிறதாய் இருக்கிறது. "மனுஷனே, நன்மை இன்னதென்று அவர் உனக்கு அறிவித்து இருக்கிறார், நியாயஞ்செய்து, இரக்கத்தைச் சிநேகித்து, உன் தேவனுக்கு முபாக மனத்தாழ்மையாய் நடப்பதை அல்லாமல் வேறே என்னத்தைக் கர்த்தர் உன்னிடத்தில் கேட்கிறார்." இதுவே வேதாகம விசுவாசமானது செயல்பாட்டில் விளங்குகிறதாய் இருக்கிறது. இதுவே தேவனைப் பிரியப்படுத்த அவசியமானதாய்

பேதுரு கூறுகிறவராய் இருக்கிறார். மட்டுமல்லாது சபைக்கு வரவிருக்கும் உபத்திர காலங்களில் நிலைத்திருக்க இது பேருதவியாய் இருக்கும் என்றும் கூறுகிறவராய் இருக்கிறார். இப்படிப்பட்ட தராதரங்கள் அதைரியப்படுத்த அல்ல என்பதை நினைவில் கொள்ள வேண்டும், ஆனால் இவை ஆவியினால் நிறைந்து வாழ சவாலாய் இருக்கிறது, இதனால் மட்டுமே வரக்கூடிய சோதனைக் காலங்களில் நிலைத்திருக்க இயலுகிறதாய் இருகிறது. Refer to doctrinal study of CHRISTIAN LIFE: FAITH, CHRISTIAN LIFE: FAITH – OVERCOMING BY FAITH கிறிஸ்தவ வாழ்க்கை: விசுவாசம் - விசுவாசத்தால் மேற்கொள்ளுதல்.

6. ஆகயால், ஏற்றக்காலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கரத்தில் அடங்கியிருங்கள். (சங்கீதம் 75, நீதிமொழிகள் 15:33, எரேமியா 45:5).

வசனம் 6 ஐ படிப்பதற்கு முன், யாக்கோபு 4:6 வாசியுங்கள்: கர்த்தருக்காக பயனுள்ள சேவை செய்வதிலிருந்து, அவர்களை பின் இழுத்து, சேவை செய்ய விடாது தடை செய்வது பெருமையாய் இருக்கிறது. அகஸ்டின் அவர்கள் கூறும் பொழுது: "முதலாவது மனிதனை மேற்கொள்ளும் காரியத்தினை மனிதன் இறுதியில் மேற்கொள்கிறவனாய் இருக்கிறான்." (quoted in Meyer, 1953, p 169). நாம் நம்மை நாமே உயர்த்துவோமெனில், நமது வல்லமையானது எதை அடைய முடியுமோ அதையே அடைகிறவர்களாய் இருப்போம். நாம் தேவனைச் சார்ந்து இருப்போமானல், தேவனது சர்வ வல்லமையினால் அடையக்கூடியவைகளை அடைகிறவர்களாய் இருப்போம். பதவிக்காக விசுவாசிகள் சபைக்குள் அரசியலை பயன்படுத்து கிறவர்களாய் இருக்கின்றனர், பொய் சொல்வதும், ஏமாற்றுவதும், பதவி மோகத்திற்காக எதையும் கொடுக்க தயராக இருக்கின்றனர்.

இந்த வேத பாடத்தின் ஆசிரியர் இப்பாடத்தினை கற்றுக்கொண்டவராய் இருக்கிறார், மேற்கு ஆஸ்திரேலியாவின் சுவிஷேச வேதாகமக் கல்லூரியின் பணியானது, ஜெபத்தால் மட்டுமே ஸ்தாபிக்கப்பட்டதாய் இருக்கிறது. பணமின்றி அல்லது எவ்வித சொத்துமின்றி ஒரு சிறு குழு இதை செய்ய நேர்ந்தது, நாங்கள் சிறு குழுவாய் கூடி தேவனுக்கு முன்பாக தாழ்மைப்பட்டு கர்த்தரை நோக்கி தருணங்களை எங்களுக்கு ஏற்படுத்தித் தாரும் என ஜெபித்து வந்தோம், ஐந்து குறுகிய ஆண்டுகாலத்திற்குள் ஐந்து வித்தியாசமான தேசங்களில் கர்த்தர் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்தார். இன்னும் நாங்கள் பணத்தை அல்லது

விளம்பரத்தையோ கேட்கவில்லை, மற்றும் ஜனங்களை வியாபார நோக்குடன் பயன்படுத்தவில்லை. நாங்கள் ஜெபிப்பதில் மட்டும் தலைபட்டோம், தேவன் தமது கிரியைகளை நடப்பித்து வருகிறார், இது எப்பொழுதும் மனிதர் செய்வதைவிட மேன்மையானதாய் இருந்து வருகிறது.

இதையே பேதுருவும் விசுவாசிகளை எல்லா சூழல்களிலும் அவர் எதிர்கொள்ளும் பணியிலும் செய்யும்படி உற்சாகப்படுத்துகிறவராய் இருக்கிறார். கிருபை கிடைக்கும் இறுதிப்பகுதியில் உங்களை அமைத்துக்கொள்ளுங்கள், பேதுரு கூறுகிறதாவது அவர் நம்மை உயர்த்துகிறவராய் இருக்கிறார். தேவன் தாழ்மையுள்ளோரை உயர்த்துகிற பணியில் ஈடுபடுகிறவராய் இருக்கிறார். மட்டுமல்லாது பெருமையும் அகந்தையுமுள்ளோரை இழுத்து தாழத் தள்ளுகிறவராயும் இருக்கிறார். இதுவே அவரது குணாதிசயமாய் இருக்கிறது. இதைத் தவிர தேவன் வேறு எதையும் செய்கிறதில்லை, ஆகையால் கர்த்தர் உங்களை எந்த இடத்திலிருந்து எடுத்தாரோ அதே இடத்தில் உங்கள் ஸ்தானத்தை அமைத்துக்கொள்ளுங்கள். அந்த இடமே தாழ்மையின் இடமாகவும், அவரைச் சார்ந்து வாழக்கூடிய இடமாயும் இருக்கிறது, எவ்விதப்புகாரோ அல்லது முறுமுறுப்போ இல்லாது, அவர் எதைச் செய்ய வழிநடத்துகிறாரோ அதை செய்ய ஆயத்தமுள்ளவர்களாய் இருங்கள்.

இங்கு பேதுருவின் தன்னம்பிக்கையானது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. கர்த்தர் உங்களை உயர்த்த வல்லவராய் இருக்கிறார், காரணம் அவரது திட்டமும், வல்லமையும் அதைச் செய்கிறதாய் இருக்கிறது. அவரது "சர்வ வல்லமையை" நீங்கள் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறீர்கள், அவர் சர்வத்தையும் ஆழுகை செய்கிறவராய் இருக்கிறார். அநேக ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு விசுவாசி போதகரிடம் இவ்வாறு கேட்டுக்கொண்டார்களாம், "உங்கள் வாழ்வில் இடம் பெறும் சிறிய காரியங்கள் குறித்து தேவன் இஷ்டப்படுகிறவராய் இல்லை." என்றாராம், அதற்கு போதகர் ஞானமாய் பதில் அளித்தாராம், "சகோதரியே தேவனது பார்வையில், எது உங்களது வாழ்வில் பெரிதாய் விளங்கி வருகிறது? என்றாராம். இதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், தேவனது பார்வையில் "பெரியது" என கூறுவது எதுவுமில்லை, நமது பிரச்சனைகள் அல்லது கஷ்டங்கள் போன்றவைகள், அவரது "சர்வ வல்லமையை" அளவிடும் போது, இவைகள் அனைத்தும் சிறியவைகளாகவே இருக்கின்றன. தாழ்மையின் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு, அவரது வல்லமையைச் சார்ந்து வாழ்வோமாக.

இவ்வாக்கியமானது (subjunctive mood of the verb to exult, meaning, maybe he will, maybe he won't, it depends on something; a choice made), நாம் தெரிவுசெய்வதை அறிமுகப்படுத்துகிறதாய் இருக்கிறது. நாம் நம்மையேத் தாழ்மைப் படுத்தும்போது, (it is an order, imperative mood), நாம் உயர்த்தப்படுகிறவர்களாய் இருக்கிறோம். இவ்விஷயத்தில் நாம் கீழ்ப்படியாத விசுவாசிகளாய் இருக்கக்கூடும்! வல்லமை என்பதற்கு பேதுருவால் பயன்படுத்தும் வார்த்தையானது, பேதுருவால் சுட்டிக்காட்டப்படுவது என்னவென்றால் ஒரு விசுவாசியின் ஸ்தானம் சம்பந்தப்பட்ட நிலையில் எந்த ஒரு பிரச்சனையும், தேவனது வல்லமையால் நிகழவில்லை என்பதைக் கூறுகிறவராய் இருக்கிறார். அவர் வல்லமையுடையவராகவும், நம்மை விடுவிக்க வல்லவராகவும் இருக்கிறார், நமது ஸ்தானமே அதைத் தீர்மானிக்கிறதாய் இருக்கிறது, அவரது வல்லமையானது நம்மில் செயல்படுவது. நாம் தாழ்மையான சிந்தனையை நடைமுறைப் படுத்தும்போது, நமது வாழ்வில் நாம் சந்திக்கும் பிரச்சனைகள் ஒவ்வொன்றிலும், கர்த்தர் வழிநடத்தும் பாதையில் அவரைப் பின்பற்ற ஆயத்தமுள்ளோராய் இருப்போமெனில், அப்பொழுது அவர் நமது சார்பில் செயல்படுகிறவராய் இருக்கிறார். ஏற்ற காலத்திலே அவர் நம்மை உயர்த்துகிறவராய் இருக்கிறார்.

தாழ்மை மற்றும் உயர்த்தப்படுதல் இவ்விரு கருத்துக்களையும் இங்கே நாம் காண்போம். உயர்த்தப்படுதல் என்கிற கருத்தானது, பேதுரு பெரிதான அளவில் கனப்படுத்தப்படுதல் என்கிற அர்த்தத்தில் கூறுகிறவராய் இருக்கிறார். இன்றைய அளவிலான இராணுவத்தில் இதே கருத்தானது பயன்பட்டு வருகிறதாய் இருக்கிறது. இது ஒரு இராணுவ வீரர் "உயர்பதவிக்கு உயர்த்தப்படுவது" குறித்து கூறப்படுகிறது, அவர் யுத்தம் செய்யும் காலத்து, அவரது வீரதீரச் செயல்கள், கீழ்ப்படிதலுள்ள பணிகள், மற்றவர்களுக்காக தனது உயிரையும் துச்சமாய் கருதி செயல்பட்ட விதங்கள், தியாகமாய் சகித்த பாடுகள் அனைத்தையும், ஞாபகப்படுத்தி அவரை கௌரவிப்பர், மற்றும் அவருக்கு தற்போது ஆற்றிவரும் பதவிலிருந்து உயர்பதவிக்கு உயர்த்தப்படுவர், இராணுவத்தில் உயர்பதவியிலிருந்து பணியாற்றுவார். இப்படிப்படிப்பட்ட கௌரவிக்கும் செயலானது, இராணும் அனைத்தும் கூடி, அவர்களது கண்களுக்கு முன்பாக நடைபெறும். இப்படிப்பட்டக் கருத்தை பேதுரு மனதில் கொண்டு இந்நிருபத்தில் இக்கருத்தை தெரிவிக்கிறவராய் இருக்கிறார். தாழ்மையுடன் பணிசெய்வோரை, கர்த்தர் கனப்படுத்துகிறவராய் இருக்கிறார். தங்களது சொந்த பெலத்தை சார்ந்திராது கர்த்தரின் பெலத்தைச் சார்ந்து பணிசெய்வோருக்கு, நித்திய

பிரதிபலனும், இப்பொழுது பெரிதான கர்த்தரின் பணியும் அளிக்கப்படுகிறது.

இவ்வாறு கனப்படுத்தப்படுவதை எப்பொழுது பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம்? அது கர்த்தரது "சரியான நேரத்தில்" நிகழக்கூடியதாய் இருக்கிறது. நமது வாழ்விற்கான கால அட்டவணை அவரது கரத்தில் இருக்கிறது, அது கடந்த கால நித்தியத்தில் அவரது திட்டத்திற்கு இசைய இருக்கும். நாம் இப்பொழுது கர்த்தருக்காய் செய்யும் பணியில், பரிசுத்த ஆவியானவரது வல்லமை விளங்குவது நமது கண்ணோட்டமாய் இருத்தல் வேண்டும். அவர் நமது பணியை கனப்படுத்துகிறவராய் இருக்கிறார். அதை அவர் அவரது வழியில், அவரது நேரத்தில், அவர் செய்து முடிக்கிறவராய் இருக்கிறார். இதற்கென நாம் நம்மை அவரது கரத்தில் முற்றிலுமாய் விட்டுக்கொடுத்து வாழ வேண்டியவர்களாய் இருக்கிறோம். மெய்யான கர்த்தரது பணியானது, மனத்தாழ்மையில் துவங்குகிறதாய் இருக்கிறது, பரிசுத்தாவியானவர் மூலம், முற்றிலும் கர்த்தரது சர்வ வல்லமையைச் சார்ந்து அவர் பணியை செய்தல் வேண்டும். கர்த்தர் நம்மை எப்படியெல்லாம் நடத்துகிறாரோ, அதற்கு கீழ்ந்து செயல்படுதல் இதில் மிகவும் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. நமது உற்சாக செயல்பாட்டின் காலம், கர்த்தர் நம்மை உயர்த்துவதுடன் நிறைவு பெறுகிறதாய் இருக்கிறது, அது அதிகமான ஊழியத்தை செய்யும் படியான பெரிய அளவிலான் தருணமாய் இருக்கும், இறுதியில் அவர்கள் நித்தியத்தில் பிரவேசித்து, நித்திய பிரதிபலனை அடைகிறவர்களாய் இருப்பர். அது மகிமையின் கிரீடமும், நித்திய ஜீவனுமாய் இருக்கும்.

வசனம் 7 ஐப்பார்க்கும் முன்னர், இவ்வேதபகுதிகளை வாசியுங்கள், சங்கீதம் 27:13, 14, 37:3 - 7, 55:22, சங்கீதம் 56:3 -4, 9-11, மத்தேயு 6:25, 34, பிலிப்.4:7. இவ்வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள வினைச் சொற்களானது மிகவும் வலிமை வாய்ந்த வினைச்சொற்களாய் இருக்கின்றன. ஆங்கிலத்தில் cast, [வைத்துவிடுதல்] என்ற சொல்லானது, மிகவும் சக்திவாய்ந்த இராணுவச் சொல்லாய் இருக்கிறது, அந்நாட்களில் ஒலிம்பிக் விளையாட்டுகளில் பயன்படுத்தப்படும் மல்யுத்த சொல்லாய் இருக்கிறது. இவ்வார்த்தையின் பொருள் “body slam”, [சரீரத்தை தூக்கியெறிதல்] ஒன்றை தீவிரமாய் எடுத்துத் தூக்கி எறிதல் என்பது இதன் பொருளாகும். இவ்வார்த்தையானது, மனீரிதயான நடத்தை மற்றும் ஜெபத்தில் செயல்படுவது போன்றவற்றை உள்ளடக்கியுள்ளது, அவர்களை கலங்கடிக்கும் கவலைகள், எதிர்பார்ப்புகள், போன்றவற்றை இவ்வாறு கையாளுதல் வேண்டும்.

7. அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர் மேல் வைத்துவிடுங்கள். (சங்கீதம் 55:22).

விசுவாசிகள் கவலை மற்றும் கலக்கங்களை அவர்களது ஆத்துமா மற்றும் ஆவியின் சத்துருவாய் காணுதல் வேண்டும். அவற்றை நாம் எடுத்து, தீவிரமாய் / மிகுந்த பெலத்துடன் சிலுவையின் அடியில் எறிந்து விடுதல் வேண்டும், கர்த்தர் அவைகளைச் சரிசெய்ய அவ்வாறு செய்தல் வேண்டும். நமது கவலைகளை நிஜமாய் அவ்வாறு செய்தல் வேண்டும். நாம் தேவனில் உள்ள நமது விசுவாசத்தை நடைமுறைப்படுத்த அழைக்கப்பட்டிருக்கிறோம், கவலைகள் இன்றி அவரை நம்புவதன் மூலம், அவைகளை அவரிடத்தில் விட்டுவிட்டுதல் வேண்டும். அவர் நமக்கான கிரயத்தை சிலுவையில் செலுத்தி தீர்த்தபோது, கவலைகளுக்கும் கிரயத்தை செலுத்தி தீர்த்துவிட்டதால், அவைகள் உங்களுடையதாய் இல்லை. நாம் அவருடையவர்களாய் இருக்கிறோம், நமது கவலைகள் நம்முடையது அல்ல, அது கர்த்தருடையது. நாம் நமது கவலைகளை இறுகப்பற்றிக்கொண்டிருப்போமெனில், அது பெருமை அல்லது மதியீனத்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது, கவலைப்படுவது, கலங்குவது உங்களுக்குரியது அல்ல. கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறவர்களாய் இருங்கள், "கனமான சரீரத்தை தூக்கியெறிந்து விடுங்கள்" [“body slam”] இங்குள்ள வாக்குத்தத்தமானது, அவர் நம்மைக்குறித்து கரிசனை உள்ளவராய் இருக்கிறார். நமது வாழ்விற்கு அவசியமானவற்றை அருளி, அன்புக் கரிசனையைக் காட்டுகிறவராய் இருக்கிறார்.

கவலைகளை இன்னொருவர் கரத்தில் அளித்த பின்னர், அவரது பாதத்தில் அமர்ந்து, ஓய்வு பெறுகிறவராயிருங்கள். பேதுரு "கவலைகள் மீது ஓய்வு" பெறும்படி உற்சாகப்படுத்துகிறவராய் இருக்கிறார், அவர் நம்மை அறிவுறுத்துவது, நமது கவலைகளை எறிந்துவிட்டு, அதிகமாய் கர்த்தரின் பணியில் கண்ணோக்கக் கூறுகிறவராய் இருக்கிறார். கவலைகள் கவனச்சிதறல்களைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது, நமது சக்தியை விரயம் செய்கிறதாய் இருக்கிறது, கர்த்தரது பணியில் முழுக்கவனமும் செலுத்தி அவரது பணியில் கண்ணோக்கமாய் இருப்பது சிறப்பானதாய் இருக்கிறது.

ஆகையால் கவனச்சிதறல்களை அவர் பாதத்தில் வைத்த பின்னர், யுத்த வீரனது பணியில், மற்றும் யுத்தவீரனது எதிராளி மீது, கவனம் செலுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். எதிராளியானவன் இன்னும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறான். அநேகர் இன்றைய அளவில், தவறான இறையியலைப் எடுத்துக்கொண்டுவருகிறார்கள், மற்றும் சத்துருவானவனது

"கட்டுகளுக்காய்" ஜெபிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். பேதுரு இங்கு நமக்கு கூறுவது என்னவெனில், சத்துருவானவன் இன்னும் கட்டப்படவில்லை, கர்த்தரது இரண்டாம் வருகை வரையில் அவன் கட்டப்படாது இருப்பான். இங்கு நடைமுறைப் படுத்தப்படக்கூடிய உபதேசம் என்னவெனில், பின்னர் நிகழப்போகும் சிலவற்றிற்காக இப்பொழுது ஜெபித்துக் கொண்டிராமல், தற்போதுள்ள பாதுகாப்பிற்காகவும், அனுதின யுத்தத்தில் சத்துருவை அனுதினமும் மேற்கொள்வதற்காகவும் ஜெபியுங்கள்.

சத்துருவானவன் இப்பூமியின் மீது, கட்டப்படாதவனாய் விட்டுவிடப்பட்டுள்ளான், இது நமக்கு சோதனயாய் இருக்கிறது. கர்த்தரின் பணியை சிறப்பாய் செய்ய இது நமக்கு சவாலாய் இருக்கிறது. சாத்தான் மற்றும் பிசாசுகள் செயல்பாடுகளை சம்பந்தப்படுத்தி, நான்கு பகுப்புகளை பேதுரு நமக்கு அளிக்கிறவராய் இருக்கிறார். இதற்குள்ளாக நாம் நகர்ந்து செல்லும் முன்னர், வெளிப்படையாக ஆனால் அடிக்கடி நாம் நமது கவலைகளைக் குறித்து சிந்திக்க தவறிவிடுவிடுகிறவர்களாய் இருக்கிறோம்.

நமது கவலைகள், நமது கவலைகளாக இருக்கின்றன. கலக்கங்கள் தன்னில்தானே சாத்தனுக்குரியது அல்ல, அவைகள் நமது பழைய பாவ சுபாவத்தின் பகுதியாகவும், பெலவீனத்தின் பகுதியாகவும் இருக்கிறது. சாத்தான் வெளிப்பிரகாரமாய் சுற்றி அலைந்துவருகிறான், அவனுக்கு உள்ளானநிலையில் எவ்வித வல்லமையும் கிடையாது, பரிசுத்த ஆவியானவர் நம்முடன் இருக்கிறவராய் இருக்கிறார், உலகத்தின் இருப்பவனிலும் நம்முடன் இருப்பவர் பெரியவராய் இருக்கிறார். சாத்தானின் தாக்குதல்கள் விசுவாசிகளின் வாழ்வில் வரையறைக்குட்பட்டதாய் இருக்கிறது. அநேகமாய் விசுவாசிகள் அனைவரும் இன்றைய அளவில் சாத்தானுக்கும் அவனது வல்லமைக்கும் அதிக மேன்மையை அளிக்கிறவர்களாய் இருக்கின்றனர். சில விஷயங்களில் அவன் தலையிடுவதே கிடையாது, மற்ற விஷயங்களில் கண்டிப்பாய் அவன் தலைபோட இயலாதவனாய் இருக்கிறான் காரணம் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மரணத்தாலும் உயிர்த்தெழுதலாலும் அவன் செயல் இழந்தவனாய் இருக்கிறான். சிங்கம் வியாதிப்பட்டவைகளையும், பெலவீனமானவைகளையும், தனித்து விடப்பட்டவைகளையுமே தாக்குகிறதாய் இருக்கிறது. Refer to doctrinal studies of CHRISTIAN LIFE: DOUBT, FEAR. : ஒப்பிடுக: கிறிஸ்தவவாழ்க்கை: சந்தேகம், பயம்.

8.தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள், ஏனெனில், உங்கள்

எதிராளியான பிசாசானவன், கெர்ச்சிக்கிற சிங்கம் போல, எவனை விழுங்கலாமோ என்று வகைதேடி சுற்றித்திரிகிறான். 9.விசுவாசத்திலே உறுதியாயிருந்து, அவனுக்கு எதிர்த்து நில்லுங்கள், உலகத்தில் உள்ள உங்கள் சகோதரரிடத்திலே அப்படிப்பட்ட பாடுகள் நிறைவேறி வருகிறதென்று அறிந்திருக்கிறீர்களே.

சத்துருவானவனுக்கு எதிராய் யுத்தம் செய்ய செய்ய வேண்டிய ஐந்து "அனுதின ஒழுங்குகள்." இவைகள் சபையுகத்தில், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நடைமுறைப் படுத்த வேண்டியவைகளாய் இருக்கின்றன. அவைகள் நம்மை கர்ஜ்ஜிக்கிற சிங்கத்திடமிருந்து நம்மைக் காக்கிறதாய் இருக்கிறது, இவைகள் கர்த்தர் அவனை தனது இரண்டாம் வருகையில் கட்டும் வரைக்கும் செயல்படுத்தப்பட வேண்டியதாய் இருக்கிறது.

வாழ்வின் ஆவிக்குரிய யுத்தத்தில் கிறிஸ்தவர்கள் கடைபிடிக்க வேண்டிய அனுதின ஒழுங்குகள்: (இவ்வொழுங்கானது உபத்திரவக் காலத்திற்கும் பொருந்தும்)

1. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் - எல்லா நேரங்களிலும், சுயக்கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுங்கள், எவ்வித உணர்ச்சிகளின் கட்டுப்பாட்டுக்கு கீழ் இராதவாறு இருத்தல் வேண்டும், மது பானம், அல்லது போதைவஸ்துக்களின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் இருத்தல் கூடாது, பரிசுத்த ஆவியானவரது கட்டுப்பாட்டுக்குள் மட்டும் அடங்கியிருத்தல் வேண்டும். ரோமர் 13:11-13. 1 தெசலோனிக்கேயர் 5:6 -8.

2. விழித்திருங்கள்: - எல்லா நேரங்களிலும், அபாயம் நேரிடாதாவறு விழித்திருத்தல் வேண்டும், நீங்கள் பாதுகாப்பு செய்யும் நேரத்தில் ஓய்வு பெறலாகாது, கவலையீனமாய் இருத்தல் கூடாது.

3. எதிர்த்து நில்லுங்கள்: - எதிர்த்து நிற்க எழுந்து நில்லுங்கள், அவன் எழுந்து நின்று எதிர்க்கும் ஒவ்வொன்றிற்கும் நீங்கள் எதிர்ப்பு தெரிவியுங்கள். நமது வாழ்விற்கு தீமையை சகித்தல் என்பது தராதரமாய் அமைதல் வேண்டும். இவ்வசனங்களையும் ஒப்பிடுக: லூக்கா 4:3-12, எபேசியர் 4:27, 6:11-13, யாக்கோபு 4:7.

4. அப்போஸ்தலருக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தில் உறுதியாய் இருங்கள்: தாக்குதலை எதிர்த்து நிற்க திரள் கூட்ட இராணுவ வீரர்களாய் நிற்றல் வேண்டும், அப்போஸ்தல உபதேசங்களுடன் எழுந்து நில்லுங்கள், மற்றும் அவர்களது பழக்கவழக்கங்களை கைக்கொள்கிறவர்களாயிருங்கள். ஸ்தல சபையானது ஐக்கியப்பட்டு, ஒன்றுபட்டு நிற்றல் வேண்டும், தோள்கொடுத்து நிற்றல் வேண்டும், ஒருவொருக்கொருவர் அற்பணித்து நிற்றல் வேண்டும்.

5. நீங்கள் மட்டும் தனித்துவிடப்படவில்லை என்பதை அறிந்திருத்தல் வேண்டும். கர்த்தருக்காய் நிற்கும் பொழுது ஒவ்வொரு விசுவாசியும், நெருக்கங்களை அனுபவிக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

மற்ற விசுவாசிகளின் "வேதனைகள் அல்லது பாடுகள்" போன்றவற்றை குறிக்கும் பதங்களை பேதுரு பயன்படுத்துகிறவராய் இருக்கிறார், இது ஆர்வத்தை அளிக்கக்கூடிய ஒன்றாய் இருக்கிறது. அவர் குறிப்பிடும் போது, பாடுகள் நிறைவேற வேண்டியதாய் இருக்கிறது, அவ்வார்த்தை சுட்டிக்காட்டுவது, செய்யும் கர்த்தரது பணியில் ஒரு பாகமாய் இருக்கிறது, இப்பணியில் கடமையானது சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது.

ஒரு விசுவாசியாய் இருக்க வேண்டுமானால், பாடுகளுடன் சம்பந்தப் பட்டவர்களாய் இருத்தல் வேண்டும். ஒருமுறைகூட விசுவாசிகளின் பாடுகளை சாதாரணப்படுத்துவதைக் காண்கிறோம். இது விநோதமான காரியமல்ல, இது நமது கடமையாய் இருக்கிறது, மற்றும் இதை நாம் ஒரு போர்ச்சேவகனைப் போன்று, நீண்ட காலம் கடினமான சூழல் உள்ள கேம்பில் தங்குவதைப் போன்று இருக்கிறது, அப்போர்ச் சேவகன் எவ்வித புகாரும் செய்வதில்லை, அப்படிப்பட்ட வாழ்வை பெலத்துடனும் மற்றும் மதிப்பிற்குரியாதாகவும் கருதுகிறவனாயிருக்கிறான். பிலிப்பியர் 1:3-14, இவ்வேதபகுதி சுட்டிக்காட்டுவது என்னவென்றால், பாடுகள் தேவனிடம் இருந்து கிடைப்பெறும் வரமாய் இருந்து, கிறிஸ்துவுக்கு பெரிதான மகிமையைக் கொண்டுவருகிறதாய் இருந்தது. மட்டுமல்லாது இப்பாடுகளில் கர்த்தருடன் பங்கு பெறும் விசுவாசிகளுக்கு, கர்த்தரின் நாமத்தில் கனமும், புகழ்ச்சியும் உண்டாகிறதாய் இருக்கிறது. Refer to BTB study of CHRISTIAN LIFE: SUFFERING: ஒப்பிடுக: கிறிஸ்தவ வாழ்க்கை: பாடுகள்.

தலைமைத்துவ நடைமுறை:

1. தாழ்மை: இன்றைய திருச்சபைகளில் தாழ்மை என்கிற தலைப்புகுறித்து குறிப்பிடப்படாதிருக்கிறது. நாம் உலகத்துடன் இணைந்து கொண்டு, சுய

உறுதியுடன் செயலாற்றுவதை வலியுறுத்துகிறவர்களாய் இருக்கிறோம், வேதாகம தாழ்மையை வலியுறுத்தாதவர்களாய் இருக்கிறோம், (கர்த்தரின் பணியில் எவ்வித வேலையாயினும் செய்யும் மனப்பான்மை, எந்த ஒரு பணியும் உங்களுக்கு கீழானது என எண்ணாதிருத்தல்) அப்படிப்பட்ட பணியை பெலத்துடன் செய்தல் (பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்ட வல்லமையுடன் செய்தல்). இப்பகுதியில், பேதுரு வலியுறுத்திக்கூறுவது வேதாகம கருத்துக்களையாகும். இவைகள் நமது வாழ்வின் தராதரங்களுக்கு ஏற்ப கூறுகிறகிறவராய் இருக்கிறார். நாம் சபையில், மற்றவர்களுடன் ஈடுபடும்போது, தாழ்மையுடன் செயல்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம், ஒருவர் மீதாவது ஆதிக்கம் செலுத்த வேண்டும் என்கிற மனப்பான்மையில் செயல்படக்கூடாது, எதை வேண்டுமானாலும் செய்து எல்லோருக்கும் கர்த்தருக்குள் ஆசீர்வாதமாய் இருக்க ஆயத்தமாய் இருத்தல் வேண்டும்.

நாம் மனத்தாழ்மையில் முதலாவதானவர்களாய் இருத்தல் வேண்டும், எப்பணியை செய்யும்படி நம்மைக் கேட்டுக்கொண்டாலும் அதை மனத்தாழ்மையுடன் செய்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். நமது எதிர்கால பணி மற்றும் அவருக்கான சேவை போன்றவற்றிற்காய் நம்மை முற்றிலும் தேவனது கரத்தில் அற்பணித்துக் கொண்டு, செயலாற்றுதல் வேண்டும். கர்த்தரது பணியில் எந்தப்பகுதியானாலும், எந்த வழியிலாகிலும் செய்வதற்கு ஆயத்தமுள்ளவராய் இருத்தல் வேண்டும், கர்த்தருக்காய் காத்திருந்து இரகசியமாய் நமக்கு வாஞ்சையுள்ள பணி செய்ய அவருக்காய் காத்திருத்தல் வேண்டும். நாம் நம்மையே உயர்த்த முற்படுவோமெனில், அரசியல் எதைச் சாதிக்குமோ அதையே அடைகிறவர்களாய் இருப்போம். இங்கு பேதுரு கட்டளையிடுகிற பிரகாரம், தேவனுக்கு முன்பாக நாம் தாழ்மைப் படும்போது, அவர் நம்மை உயர்த்தி நாம் செய்ய வேண்டியவற்றை செய்யும்படி அருள் செய்கிறவராய் இருக்கிறார்.

2. கவலைகளை கர்த்தர் மீது வைத்துவிடுதல் வேண்டும்: அடுத்த வேதபாடமானது இங்கு குறிப்பிடப்படுகிறது இங்கு கலக்கங்கள் குறித்து பேசப்படுகிறது, உங்களது கவலைகளுடன் எவ்வாறு ஈடுபடுவது என்பது குறித்து இங்கு பேசப்படுகிறது. முதலாவது, குறிப்பாக பேதுரு குறிப்பிடும் போது, நமது கவலைகள் நம்முடையவைகள் அல்ல, உண்மையிலே அவைகள் அவருடையதாய் இருக்கிறது, அவைகளை முழுவதுமாய் கர்த்தரிடமே கொடுத்துவிடுதல் வேண்டும்,. நமது இரட்சிப்பிற்காய் எவ்வாறு அவரை நம்பினோமோ, நமது கவலைகள் குறித்தும் அவ்வாறே அவரை நம்புதல் வேண்டும். நம்மை இரட்சித்துப் பாவ அடிமைத்தனத்திலிருந்து விடுவித்த தேவன், நமது

பிரச்சனைகள், கவலை, கலக்கம் போன்றவற்றிலிருந்தும் விடுவிக்க வல்லவராய் இருக்கிறார். "கலக்கம் என்கிற கண்ணாடியானது, உடைந்து போகக்கூடிய தன்மையுடையதாய் இருக்கிறது, இது நாம் கர்த்தரை நம்பும் திறனை உடைந்து போகச்செய்கிறதாய் இருக்கிறது. இது நமது சுயசித்தத்தை பெலவினப்படுத்தி தேவனை நம்புவதிலிருந்து விலகச் செய்கிறதாய் இருக்கிறது. (Mounce, 1982, p 87).

"கலக்கங்களிலிருந்து பிதாவாகிய தேவனது கரமானது விடுவிக்கிறதாய் இருக்கிறது என்பதை உணருதல் வேண்டும்.... இதற்கு ஆதாரமாய் இருப்பது கிறிஸ்துவின் சிலுவையும் அவரது உயிர்த்தெழுதலுமாய் இருக்கிறது. கொல்கொதாவும் தேவனது கரிசனையை நிரூபனம் செய்கிறதாய் இருக்கிறது." (Cranfield, 1958, p 118). நாம் எல்லாக்காரியங்களையும் சிலுவை மற்றும் காலியான கல்லறை மூலம் காண வேண்டியவர்களாய் இருக்கிறோம். நமது எல்லா பிரச்சனைகளையும் நமது இரட்சகரின் விடுவிக்கும் வல்லமை மூலமாகவும், விடுவிக்கும் தேவன் மூலமாகவும் காண வேண்டியவர்களாய் இருக்கிறோம். பேதுரு சொல்கிறார் அவர் நம்மை விடுவிக்க வல்லவராய் இருக்கிறார், ஆகையால் நமது கவலைகள் கலக்கங்கள் அனைத்தையும் அவர் மீது வைத்துவிடுவோமாக!

3. எதிராளியின் வல்லமை மற்றும் நடைமுறை செயல்பாடுகள் குறித்து உணர்ந்து உண்மையாய் புகழுதல்: Of the devil Meyer observes, "பிசாசுகள் இல்லவே இல்லை என்று மனுக்குலத்தை கூறவைப்பது, கொடிய வஞ்சனை செயலாய் இருக்கிறது. அயலகத்தார் மூலம், திருட்டுக்கும்பலானது அந்த அளவுக்கு மிகவும் பயங்கரவாதிகள் அல்லர் என வதந்திகளை பரவச்செய்வது, திருட்டுக் கும்பலுக்கு சாதகமானதாய் இருக்கிறது." (Meyer, 1953, p 181).

சாத்தான் இன்னும் கட்டப்படாது பூமியிலே நடமாடிக்கொண்டிருக்கிறான், சிலுவையினால் அவன் தோற்கடிக்கப்பட்டுள்ளான், மற்றும் நித்தியமான அழிவை சந்திக்கக்கூடியவனாய் இருக்கிறான், இருப்பினும், இக்காலத்தில் இவன் அபாயகரமானவனாய் இருக்கிறான், கர்த்தர் திரும்ப வருமளவும் அவன் இப்படிப்பட்டவனாய் இருக்கிறான். தேவதூதர்களின் முறண்பாட்டை அறிந்த நாம், ஆவிக்குரிய அனுதின கிரமங்களை அனுசரித்தவர்களாய் நமது பாதுகாப்பு கருதி, அனுதினமும் அவனுடன் யுத்தம் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம். காட்டில் சிங்கம் இருக்கும்வரைக்கும் நாம் பாதுகாப்புடன் இருப்போம், ஆனால் நாம் எப்பொழுதும் எச்சரிப்புடன் இருப்போமானால், அதை நம்மை எதிர்த்து வரும்பொழுது ஆயத்தமுள்ளவர்களாய் இருப்போம். கவலையீனமான மக்கள்,

அவைகளால் பீறிப்போடப்படுகிறவர்களாய் இருக்கின்றனர்! ஜாக்கிரதையுள்ளவர்களோ கவனமாய் இருப்பார்கள், அவர்கள் தங்கள் நிலையில் உறுதியாய் நிற்கிறவர்களாய் இருக்கின்றனர். கர்ச்சிக்கிற சிங்கமானது திரள் கூட்டத்தினரையும், உறுதியாய் நிற்கு இராணுவ வீரர்களைக் காணும்போது அவைகள் தலைதெறிக்க ஓடிவிடுகிறதாய் இருக்கிறது.

4. கர்த்தரின் பராமரிப்பிலும் அவரது பாதுகாப்பிலும் தன்னம்பிக்கையுடன் இருத்தல்: கர்த்தர் நம்மைக் குறித்து கரிசனையுள்ளவராய் இருக்கிறார். இதுவே நமது விசுவாசத்தின் மைய சத்தியமாய் இருக்கிறது, இது மட்டுமே கிறிஸ்தவ விசுவாசமாய் இருந்து மற்றவர்களுக்கு முன்பாக தனிப்பட்ட நிலையில் நிற்கச்செய்கிறதாய் இருக்கிறது. "மற்ற மதங்களில், செய்யப்படும் ஆச்சாரங்கள், சடங்குகள் மூலம் அவர்களது தேவர் தேவிகளை இவர்கள் பாதுகாத்து பரமாரிப்பு செய்கிறவர்களாய் இருக்கின்றனர், அவைகளுக்கு செலுத்தும்பலிகள் மூலம் அவைகளை எழுப்பிவிடுகின்றனர், அல்லது அவைகளை நோக்கி செய்யும் ஜெபதபங்களாலும் அப்படிச் செய்கிறவர்களாய் இருக்கின்றனர், (Mastermann). கிறிஸ்தவர்களுக்கு தங்களை பாதுகாத்து, பரமாரிக்கும் தேவன் ஒருவரு உண்டு என்கிற தன்னம்பிக்கை உள்ளவர்களாய் இருக்கின்றனர்! மத்தேயு 6:25-35, ரோமர் 5:8, 8:32." (Stibbs, 1959, p 171). Refer to BTB studies of GOD: COMFORT FOR BELIEVERS, CHRISTIAN LIFE – BLESSING OF THE BELIEVER, ஒப்பிடுக: தேவன்: விசுவாசிகளுக்கான ஆறுதல், கிறிஸ்தவ வாழ்க்கை: - விசுவாசியின் ஆசீர்வாதம்.

"இப்படிப்பட்ட சிலவார்த்தைகளால், கிறிஸ்து வெளிப்பட்டதற்குரிய மைய சத்தியமானது வெளியாகிறதாய் இருக்கிறது. மற்ற மதங்களிலிருந்து, கிறிஸ்தவத்தை வேறுபடுத்திக்காட்டுவது, தேவன் தமது மக்களைப் பாதுகாத்து பரமாரிக்கிறவராய் இருக்கிறார் என்கிற விசுவாசமே ஆகும். ஆனால் புறஜாதிய மக்களது மதத்தில், கடவுளை அவர்கள் வித்தியாசமான முறையிலும், சடங்குகளாலும் பாதுகாத்து பரமாரிப்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது." (Mastermann, 1912, p 167). இந்த சத்தியத்தின் மிகவும் வல்லமையுள்ள உபதேசக்கருத்தானது, தேவன் நம்மை பாதுகாத்து பரமாரிக்கிறவராய் இருக்கிறார் என்பதே, நெருக்கங்களின் மத்தியிலும், பாடுகள் மத்தியிலும், கலக்கங்கள் மத்தியிலும், மரணத்திலும் எல்லா வார்த்தைகளுக்கும் அப்பாற்பட்ட நிலையில் அவர் தேவனாய் இருந்து நம்மக் கருதுகிறவராய் இருக்கிறார். அவரது கிருபை மற்றும் கரிசனையும் அக்கரையும், ஒருபோதும் நின்றுவிடுவது இல்லை. . எரேமியா 9:24, 31:3, 32:18, சங்கீதம் have 23 references to the loving kindness of God, தீத்து 3:3-7.

பேதுரு இவ்வேதபகுதியில் பயன்படுத்தும் இராணுவ வார்த்தைகளானது, பெலத்தையும், உறுதியாய் நிற்றலைக்குறித்தும் நமது மனோரீதியான நடத்தைக் குறித்தும் வலியுறுத்துவதாய் இருக்கிறது, மட்டுமல்லாது கிறிஸ்தவத் தலைவர்கள் இதைப்போன்ற மனநிலையை நமது மக்களது மனதில் உருவாக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம். சபையானது உறுதியாகவும், நிலையானதாயும் செயல்பட வேண்டியதாய் இருக்கிறது இதுவே கர்த்தர் எதிர்பார்ப்பதாய் இருக்கிறது. போதகர்களாகிய நமக்கு, நமது பிரசங்கம், நமது அமைப்புகள் அனைத்தும் சரியானவைகளாய் இருத்தல் வேண்டும். நமது பணியில் தாழ்மையானது அவசியமாய் இருக்கிறது, நெருக்கமான சூழலில் விசுவாசம் அவசியமாய் இருக்கிறது, தீமையை எதிர்த்து நிற்க உறுதியான பெலன் அவசியமாய் இருக்கிறது. இத்தகைய காரியங்கள் சபையின் தலைமைத்துவத்தில் நிறக மிகவும் அத்தியாவசியமானவைகளாய் இருக்கின்றன. பிசாசின் உலகத்தில், யுத்தம் செய்யும்படி வழிநடத்திச் செல்வது ஒரு தலமைத்துவத்தில் இருப்பவரின் கடமையாய் இருக்கிறது. 6 ம் அதிகாரத்திற்கு கடந்து வரும்போது, இதைக் குறித்து விவரமாக கற்றுக்கொள்ள இருக்கிறோம். Refer to doctrinal study of ANGELS – ANGELIC CONFLICT : ஒப்பிடுக: தேவதூதர்கள் - தேவதூதர்களின் முறண்பாடு.

BTB [BIBLE TOPIC BOOK] STUDIES

வேதாகமம்: வேதாகமும் விசுவாசியும்

1. வேதம் கீழ்க்கண்ட தன்மைகள் ஒரு விசுவாசி பெற்று இருக்குமாறு வடிவமைக்கப்பட்டுள்ளது.

a) பிரகாசிக்கப்பண்ணுகிறது (சங்கீதம் 119:130)

b) பேதையை ஞானியாக்குகிறது (சங்கீதம் 19:7)

c) விசுவாசத்தை உருவாக்குகிறது (யோவான்20:31), நம்பிக்கையை உருவாக்குகிறது (Psalm 119:49, Romans 15:4),மற்றும் கீழ்ப்படிதலை உருவாக்குகிறது (உபாகமம்17:19-20)

d) இருதத்தை சுத்திகரிக்கிறது (யோவான் 15:3, Ephesians 5:26)மற்றும் வழிகளை சுத்திகரிக்கிறது (Psalm 119:9)

e) அழிவுக்குரிய பாதைகளிலிருந்து நம்மை காக்கிறது (சஙீதம் 17:4)

f) ஜீவனை ஆதரிக்கிறது (மத்தேயு 4:4 cfஉபாகமம் 8:3)

g) விசுவாசத்தில் கட்டி எழுப்புகிறது (அப்போஸ்தலர் 20:32)

h) ஆறுதல் படுத்துகிறது (சங்கீதம் 119:82,ரோமர் 15:4)

i) கிருபையில் வளரச்செய்கிறது (1 பேதுரு 2:2)

j) எச்சரிக்கிறது (1 கொரிந்தியர் 10:11)

k) இருதயத்தை களிகூறச்செய்கிறது (சங்கீதம் 119:18,111)

l) பரிசுத்தமாக்குகிறது (யோவான் 17:17,எபேசியர் 5:26)

2. வேதம் இப்படி இருக்கவேண்டும்:

a) விசுவாசிக்கக்கூட்யதாகவும் (யோவான் 2:22)மற்றும் கீழ்ப்படியக்கூடியதாகவும் (யாக்கோபு 1:22)

b) போதிப்பதற்கு நிலையானதாய் இருக்கவேண்டும் (பேதுரு 4:11)

c) ஆர்வமுள்ளதாயிருக்க வேண்டும் (1 கொரிந்தியர் 1:31, 1பேதுரு1:16)

d) பொதுவாய் எல்லோருக்கும் வாசிக்கக்கூடியதாய் இருக்கவேண்டும். (அப்போஸ்தலர்13:15)

e) அறியப்பட்டதாயிருக்க வேண்டும் (2தீமோத்தேயு 3:15)

f) தேவனுடைய வார்த்தையாக ஏற்றுக்கொள்ளப் படுவதாயிருக்கவேண்டும் (1 தெசலோனிக்கேயர் 2:13)சாந்தத்துடன் (யாக்கோபு1:21)

g) ஆராயப்படக்கூடியதாய் இருக்கவேண்டும் (யோவான் 5:39,அப்போஸ்தலர் 17:11)

h) நமது ஆவிக்குரிய எதிரிகளுக்கு எதிராகப் பயன்படுத்தக்கூடியதாய் இருக்கவேண்டும். (எபேசியர் 6:11,17)

i) ஒவ்வொருவருக்கும் மற்றும் சிறுபிள்ளைகளுக்குக்கூட போதிக்கப்படக்கூடியதாய் இருக்க வேண்டும். (உபாகமம் 6:7, 11:19, நெகேமியா 8:7-8)

j) தொடர்ந்து பேசக்கூடியதாய் இருக்கவேண்டும் (உபாகமம் 6:7)

k) வஞ்சிப்பதற்கேதுவாய் பயன்படுத்தக்கூடாததாய் இருக்கவேண்டும். (2 கொரிந்தியர் 4:2)

3. அவிசுவாசிக்கு வேதம் இப்படி இருக்கவேண்டும்:-

a) மறுபடி ஜெனிப்பிக்கக்கூடியதாய் இருக்கவேண்டும்.(யாக்கோபு1:18, 1பேதுரு 1:23)

b) துரிதப்படுத்துவதாயிருக்க வேண்டும். (சங்கீதம் 119:50,93)

c) ஆத்துமாவை ஆதாயப்படுத்துவதாய் இருக்க வேண்டும் (சங்கீதம் 19:7)

கிறிஸ்தவாழ்க்கை -- கீழ்ப்படிதல்

1. பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலே உத்தமம் (1 சாமுவேல் 15:22; நீதிமொழிகள் 21:3; 28:9). தேவனது சித்தித்தில் இல்லாது எப்படிப்பட்ட "ஆராதணை" செய்தாலும் அது தேவனால் ஏற்றுக்கொள்ளப்படாது.

2. கீழ்ப்படிதல் என்பது நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டிய ஒன்றாய் இருக்கிறது. கீழ்ப்படிதலின் அடிப்படைப் பயிற்சி குழந்தை பருவத்தில் இருந்து துவங்க வேண்டியதாய் இருக்கிறது. in (யாத்திராகமம் 20:12 and உபாகமம் 5:16), "உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக." (நீதிமொழிகள் 4:3,4; 22:6; 29:15-17; எபிரெயர் 5:8).

3. பிள்ளைகளுக்கு கீழ்ப்படிதலை அன்பு கூறும் செயலாய் கற்றுக்கொடுத்தல் வேண்டும் (நீதிமொழிகள் 3:12; 19:18; 23:13-14).

4. நமக்கு மேல் உள்ள அதிகாரிகளுக்குக் கீழ்ப்படிதல் வேண்டும் (யாத்திராகமம் 20:12; 22:28; லேவி. 19:3; உபாகமம் 5:16; ரோமர் 13:1-5; எபேசியர் 6:1-5; கொலோசெயர் 3:18-22; தீத்து 3:1).

5. அதிகாரத்தில் உள்ளவர்களை தேவன் அந்த ஸ்தானத்தில் நியமித்துள்ளார். (ரோமர் 13:1).

6. அதிகாரத்தில் உள்ளவர்களுக்குக் கீழ்ப்படிதல், தேவனுக்குக் கீழ்ப்படிதலைக் காட்டுகிறது. (நீதிமொழிகள் 24:21; எபேசியர் 6:7; கொலோசெயர் 3:23-24; ரோமர். 13:5).

7. அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு கீழ்ப்படியாது இருத்தல் தேவனுக்கு கீழ்படியாதிருத்தலைக் காட்டுகிறது. (ரோமர் 1:30; 13:2).

8. இருப்பினும் அதிகாரிகள் தேவனுக்கு விரோதமான காரியங்களுக்கு கீழ்ப்படிய வற்புறுத்தும் போது, அவற்றிற்கு கீழ்ப்படிய மறுத்தல் வேண்டும். (அப்போஸ்தலர் 4:19; 5:40-42).

9. ஐந்தாவது கட்டளை (யாத்திராகமம் 20:12; உபாகமம் 5:16) இக்கட்டளை மட்டுமே வாக்குத்தத்துடன் அமைந்துள்ளது (நீதிமொழிகள் 10:17; எபேசியர் 6:1-3). சமுதாயத்தில் உள்ள சமூக வாழ்வில் மட்டுமே ஜனங்கள் கீழ்ப்படிந்து வாழ சாத்தியம் அமைந்து இருக்கிறது.

10. இந்தக்கட்டளையானது புறக்கணிக்கப்பட்டு, குடும்பத்தில் உள்ள அதிகாரம் மறுதலிக்கப் படுமேயானால், சமுதாயமானது சீக்கிரத்தில் அராஜகத்தில் நழுவிச்செல்ல வேண்டியதாய் இருக்கும். (ஏசாயா 3:12; நீதிமொழிகள் 29:21; 30:21-23; ரோமர் 1:30).

CHRISTIAN LIFE: SUBMISSION

கிறிஸ்தவ வாழ்க்கை: பணிந்து செல்லுதல்:

1. இதன் பொருள் ஒருவர் தாழ்மையுடன் மற்றவர்களுக்கு பணிசெய்ய முன்வருதல், இது உங்களது நன்மையை பிரதிபலிப்பதாய் இருக்கிறது. ஆதியாகமம். 16:9, 1 பேதுரு 5:6, எபிரெயர் 13:17.

2. நாம் நம்மை நாமே முழுவதும் தேவனுக்கு அற்பணித்து வாழுதல் வேண்டும் யாக்கோபு 4:7, ரோமர் 12:1-2. மரணபரியந்தம் கீழ்ப்படிந்தவராகி தன்னைத்தானே தாழ்த்தி ஒப்புக்கொடுத்தது போல நமது தாழ்மை மற்றும் கீழ்ப்படிதல் அற்பணித்தல் இருத்தல் வேண்டும். பிலிப்பியர் 2:18.

3. நாம் கிறிஸ்துவுக்குள்ளாக சபையில் ஒருவருக்கொருவர் அடிபணிந்து செல்லுதல் வேண்டும். இது மற்றவர்களின் ஆவிக்குரிய தேவைகளை மனதில் கொண்டு, தனிப்பட்ட ஆர்வத்துடன் செயல்படுதலைக் காட்டுகிறது. எபேசியர் 5:21.

4. சபைக்குள் விசுவாசிகள் போதிக்கும் அதிகாரத்தையுடைய போதகருக்கு, தேவனது வார்த்தைகளை போதிக்கும்போது அவற்றிற்கு அடை பணிந்து செல்லுதல் வேண்டும். எபிரெயர் 13:17, 1 கொரிந்தியர் 16:6, 1 பேதுரு 5:5.

5. மனைவியானவள் தனது சொந்த புருஷனுக்கு திருமண பந்தத்தில் அடிபணிந்து செல்லுதல் அவசியம். இது தனது புருஷனை அவள் மதிப்பதையும், புருஷனை தனது ஆவிக்குரிய தலைவனாயும் தனது பாதுகாப்பாளராகவும் இருப்பதை உள்ளடக்கியுள்ளது. எபேசியர் 5:22, கொலோசெயர் 3:18, தீத்து 2:4 -5.

6. பிள்ளைகளும் தனது பெற்றோருக்கு, தேவனுக்குக் கீழாக, அன்புடன் கூடிய அற்பணிப்புடன் இருத்தல் அவசியம். கொலோசெயர் 3:20.

7. எல்லா விசுவாசிகளும் அவர்கள் வாழும் தேசத்தின் சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிந்து, அதற்கு அற்பணித்து வாழுதல் வேண்டும். அப்படிப்பட்ட சட்டதிட்டங்கள் தேவனது கட்டளைகளைகளை மீறாத வண்ணம் இருத்தல் அவசியம். ரோமர் 13:1 , 2, மத்தேயு 22:21, 1 பேதுரு 2:13-17, exception example, அப்போஸ்தலர் 4:15-20, 5:40-42.

8. வேலை செய்கிறவர்கள் தங்களது மேலதிகாரிகளுக்கு அற்பணித்து வாழுதல் வேண்டும். கொலோசெயர் 3:22-25, எபேசியர் 6:5-8, தீத்து 2:9, 10, 1 பேதுரு 2:18-24.

9. அதிகாரத்தில் இருப்பவர்கள் தங்களுக்கு கீழாக பணிபுரிபவர்களை விஷேசமான நிலையில் மதித்து, அவர்களை அன்புடனும், கரிசனையுடனும், மரியாதையுடனும் நடத்துதல் அவசியம். கொலோசெயர் 4:1.

கிறிஸ்தவ வாழ்க்கை: போர்வீரன்: எபேசியர் 6 ம் அதிகாரத்தில் உள்ள கிறிஸ்தவ போர்வீரன்:

1. பொதுவான வேதபகுதி: எபேசியர் 6:11-17.
இவ்வேதபகுதி ஒரு ரோம போர்வீரன் அணியும் போர் ஆயுதங்களைக்குறித்து கூறுகிறது, இப்போர் ஆயுதங்களை ஆவிக்குரிய ரீதியில் எவ்வாறு பகுத்து புறிந்துகொள்வது என கீழே பார்ப்போம்:

2. போர் ஆயுதங்களின் உபயோகம் எபேசியர் 6:11 "தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொள்ளுங்கள்" எபேசியர் 6:11 a. "தரித்துக்கொள்ளுங்கள்" (ENDUO Gk) எனப்போதிக்கப் படுகிறோம். இதன் கிரேக்கப்பொருள் "அணிந்துகொள்ளுதல்" - இது கிறிஸ்தவ போர்வீரனுக்கு தேவனால் கொடுக்கப்படும் கட்டளையாய் இருக்கிறது. நாம் "நமக்கு உடுத்திக்கொள்ள வேண்டும்" அல்லது "அணிந்து கொள்ளவேண்டும்". "சர்வாயுத வர்க்கம்" (PANOPLIA Gk) - "தேவனுடைய" (THEOS Gk) - சர்வாயுத வர்க்கத்தின் ஆதாரம் தேவனாய் இருக்கிறார்.
தேவனுடைய சர்வாயுத வர்க்கம் எபேசியர் 6:14-17. இவைகளில் காணப்படும் ஆயுதங்கள் பின்வருமாறு.
a) சத்தியம் என்னும் இடைக்கச்சை. எபேசியர்6:14a

b) நீதியென்னும் மார்கவசம் எபேசியர் 6:14b.
c) ஆயத்தம் என்னும் பாதரட்சை எபேசியர் 6:15.
d) விசுவாசம் என்னும் கேடகம் எபேசியர் 6:16.
e) இரட்சண்யம் என்னும் தலைச்சீரா எபேசியர் 6:17a
f) ஆவியின் பட்டயம் எபேசியர் 6:17b.
அடிப்படையான காரியங்கள்:
a) ரோம போர்வீரன் இவ்விதப் போர் ஆயுதங்களை தனது தற்காப்புக்காகவும் மற்றும் பாதுகாப்பிற்காகவும் அணிந்து கொள்வான்.
b) ஒரு ரோம போர் வீரன் மிகவும் ஒழுக்கசீலனாய் இருந்தபோது, அவன் உலகை ஆள்பவனாய் இருந்தான்.
c) ஒரு ரோமப் போர்வீரன் ஒழுங்கீனமாய் இருந்த போது, அவனது சாம்ராஜ்ஜியம் சரிவடைந்து வீழ்ச்சிக்குள்ளானது.
d) ஒரு ரோமப் போர்வீரன் வரத்தில் ஏழு நாட்களும் ராணுவ தளத்தில் இருந்தான்.

3. ஆவிக்குரிய பகுப்பாய்வு:
a) கிறிஸ்தவ போர்வீரர்களாகிய நாம் சர்வாயுத வர்க்கத்தை தனது தற்காப்பிற்காகவும் மற்றும் பாதுகாப்பிற்காவும் அணிந்துகொள்ள வேண்டும்.
b) கிறிஸ்தவ வாழ்வில் நாம் மிகவும் ஒழுக்கத்துடன் இருப்போமானால் நமது யுத்தத்தில் நாம் மிகவும் சிறப்பாய் செயல்படுவோம்.
c) நாம் கிறிஸ்தவ வாழ்வில் ஒழுங்கு இன்றி அல்லது சாட்சியின்றி விசுவாச துரோகிகளாய் வாழ்வோமெனில் நமது சாட்சிக்குரிய வாழ்வில் சரிவடைந்து, ஆவிக்குரிய யுத்தத்தில் படுகாயமடைந்து பலவீனராய் விளங்குவோம்.
d) கிறிஸ்தவ போர்வீரன் யுத்தக் களத்தில் வாரத்தில் ஏழு நாளும் இருக்கவேண்டும். பகுதி நேர போர் வீரனால் ஆற்றல் மிக்க போர்வீரனாய் இருக்கமுடியாது.
"பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்க திராணியுள்ளவர்களாக இருக்கவேண்டும்" "நிற்கவேண்டும்" (HISTEMI (Gk) ”ஹிஸ்டமி’ இதன் அர்த்தம் உங்கள் ஸ்தானத்தைப் பிடித்துக்கொள்ளவேண்டும். நாம் ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபட்டு கொண்டு இருக்கிறோம், நமது போராயுதங்களை தரித்துக்கொண்டு சத்துருவுக்கு எதிராய் நமது ஸ்தானத்தை பிடித்துக்கொண்டு நிற்றல் வேண்டும். "தந்திரங்கள்" (METHODEIA DIA Gk) -மெத்தோடியா டையா இந்த கிரேக்கச்சொல்லின் அர்த்தம் தந்திரம், வஞ்சனை அல்லது மோசம்போக்குதல். "பிசாசின்" (DIABOLOS Gk).டயாபோலோஸ் இக்கிரேக்கச்சொல்லின் அர்த்தம் பிசாசு.

இதினிமித்தம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொண்டு, நமது ஸ்தானத்தில் சத்துருவின் தந்திரங்களுக்கு எதிராக உறுதியுடன் நிற்றல் வேண்டும்.

அடிப்படையான காரியங்கள்: இவ்வாறு நாம் பிசாசின் தந்திரங்களை கற்றுக்கொண்டு, கிறிஸ்தவ போர்வீரராய் ஆவியின் பட்டயமாகிய தேவவசனத்தை பயன்படுத்தி அவனை எதிர்க்க வேண்டும். (வச 17)

4. சத்துரு / எதிராளி (எபேசியர் 6:12)

""Vnddpy;> khk;rj;NjhLk; ,uj;jj;NjhLky;y> Jiuj;jdq;fNshLk;> mjpfhuq;fNshLk;> ,g;gpugQ;rj;jpd; me;jfhu NyhfhjpgjpfNshLk;> thdkz;lyq;fspYs;s nghy;yhj Mtpfspd; NridfNshLk; ekf;Fg; Nghuhl;lk; cz;L."

"போராட்டம்" - மல்யுத்தம் (HE PALE ESTIN Gk)ஹி பேலஸ்டின் இதன் கிரேக்கப்பொருள் கைகளால் மல்யுத்தம் செய்வது போட்டிகளில் நடைபெறும் மல்யுத்தம் போன்றல்ல. "மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல" - மனித வர்க்கத்தின் மற்ற நபரோடு அல்ல,

a) துரைத்தனங்கள் (ARCHE Gk)' 'ஆர்க்கே' இதன் கிரேக்கப்பொருள் ஆழுகை செய்யும் பிசாசுகள்:-

b) அதிகாரங்கள் (EXOUSIA Gk) 'எக்ஸௌசியா' இதன் கிரேக்கப்பொருள் அதிகாரத்துடன் உள்ள பிசாசுகள், பிசாசுகளின் ராணுவத்தில் உள்ள அதிகாரிகள்.

c) இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதி (KOSMOKRATOR Gk) - 'காஸ்மோக்ரட்டர்' இதன் கிரேக்கப்பொருள் உலகை ஆழும் பிசாசுகள், தானியேலில் நாம் காணும் அரசாங்கத்திற்கு நெருங்கின நிலையில் செயல்படும் பிசாசுகள் (தானியேல் 10:13, 20).

d) வானமண்டலத்திலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகள் (PNEU MATIKOS PONERIA Gk) 'நியூ மேடிகோஸ் பொனேரியா' இதன் கிரேக்கப்பொருள் பிசாசுகளின் ராணுவம்.

இதன்படி, நமது யுத்தம் ஆவிக்குரிய சத்துருக்களுடன் என்பது தெளிவாகிறது. எபிரெயர் 2:7 ன் படி நாம் தேவதூதர்களுக்கு கீழானவர்கள் எனப்பார்க்கிறோம். ஆனபடியால், நாம் நமக்கு மேலுள்ள சத்துருக்களின் மீது ஜெயம் பெறும் வண்ணம், நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

5. ஆயத்தமாயிருத்தல் (எபேசியர் 6:13).

"Mifahy;> jPq;FehspNy mitfis ePq;fs; vjph;f;fTk;> rfyj;ijAk; nra;JKbj;jth;fsha; epw;fTk; jpuhzpAs;sth;fshFk;gbf;F> NjtDila rh;thAjth;f;fj;ijAk; vLj;Jf;nfhs;Sq;fs;."

இயேசுக்கிறிஸ்து உயிர்த்தெழுந்து, பரமேறி, பிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருக்கிறபடியால், சாத்தான் அவருடைய சந்ததியுடன் யுத்தம் செய்வதை

தவிர்த்து, தனிப்பட்ட விசுவாசியுடன் யுத்தம் செய்கிறவனாய் இருக்கிறான். நாம் தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை சார்ந்து இருக்கவேண்டும் என்பது, மாபெரும் கட்டளையாய் இருக்கிறது, இருப்பினும், அநேக விசுவாசிகள் சில ஆயுதங்களையோ, அல்லது எல்லாவற்றையும் புறக்கணித்து விட்டதால், அதன் விளைவாக அநேகர் படுகாயமுற்று காணப்படுகின்றனர்.
மறுபடி ஒருமுறை கூட தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொள்ள உற்சாகப்படுத்தப்படுகிறோம்.

6. **சத்தியம் என்னும் அரைக்கச்சை** (எபேசியர் 6:14a, ஏசாயா 11:5).

"rj;jpak; vd;Dk; fr;iria cq;fs; miuapy; fl;bdth;fshAk;>"

ரோம அரைக்கச்சை அகலமான தோலினால் ஆனது இதில் பட்டயம் வைக்கும் உறை இருக்கும், மற்றும் உணவு பொருட்கள், இதர போர்த்தளவாடங்கள் பொறுத்துவதற்கு வளையங்கள் காணப்படும். மற்றும் இதில் தோலினால் ஆன குறுக்கு பெல்ட் தோல்களில் மாட்டப்பட்டு அரைக்கச்சையில் பொறுத்தத்தப்பட்டிருக்கும், மற்று அடிவயிறு பாதுகாக்கப்பட உலோகத்தகடுகள் மற்றும் தோலினால் பின்னப்பட்ட பெல்ட்டும் இதனுடன் பொறுத்தப்பட்டிருக்கும். ஆகவே போர்வீரனுக்கு இது ஒரு அத்தியாவசியமான அடிப்படை ஆயுதங்களில் ஒன்றாய் விளங்குகிறது.

அடிப்படையான காரியங்கள்: நமது அடிப்படையான தற்பாதுகாப்பு, சத்தியம் அடங்கியுள்ள தேவனுடைய வார்த்தை ஆகும். ஆவியின் பட்டயமாகிய வாக்குத்தத்தங்கள் பாதுகாப்புடன் அரைக்கச்சையில் தொங்கவேண்டும். தேவனுடைய சத்தியத்தில் எவ்வளவுக்கதிகமாக நம்பிக்கை வைக்கிறோமோ, சத்துருவுக்கு எதிராய் அது நமக்கு மிகப்பெரிய பாதுகாப்பை அளிக்க வல்லதாய் இருக்கிறது.

7. **நீதி என்னும் மார்க்கவசம்**: (எபேசியார் 6:14b, ஏசாயா59:17).

"ePjpnad;Dk; khh;f;ftrj;ijj; jhpj;jth;fshAk;@" மார்க்கவசம் (THORAX Gk) ’தொராக்ஸ்’ வழக்கமாய் இது தோலினால் செய்யப்பட்டு அதன் மீது உலோகத்தகடுகள் பொருத்தப்பட்டிருக்கும், அந்தஸ்தில் உயர் அதிகாரிகளுக்கு உலோகத்தகடுகளுக்குப் பதிலாக வெள்ளி அல்லது பொன் தகடுகளால் இது செய்யப்பட்டிருக்கும். இது பார்ப்பதற்கு கையில்லாத கோட்டு போன்று காணப்படும், அரைக் கச்சை மார்க்கவசத்தை உறுதியாய் அதன் ஸ்தானத்தில் இருக்க உதவியாய் இருக்கும். இது ஓர் போர்ச்சேவகனின் மிக முக்கியமான சரீரப்பகுதியை பாதுகாக்கின்றது.

அடிப்படையான காரியங்கள்: கிறிஸ்துவின்நீதி நம்மைப் பாதுகாக்கின்றது. நாம் அவரது நீதியில் மட்டும் நிற்கிறவர்களாய் இருக்க வேண்டும். கிறிஸ்து தமது நீதியை சிலுவையில் நமக்காய் தந்தருளினார். (2 கொரிந்தியர் 5:21). பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுவதன் மூலம், அவரது நீதியினால் நாம் தொடர்ந்து காக்கப்படுகிறோம். (எபேசியர் 5:18).

8. ஆயத்தம் என்னும் பாதரட்சை (எபேசியர்6:15, ஏசாயா52:7).

"rkhjhdj;jpd; RtpNr\j;jpw;Fhpa Maj;jk; vd;Dk; ghjul;iriaf; fhy;fspNy njhLj;jth;fshAk;@"

பாதரட்சை(CALIGAE Gk) 'கலிகே' இது 15 மி மி (1/2") கனமுள்ள தோலினால் அடிப்பாதத்தில் ஆணிகள் பொருத்தப்பட்டு, கணுக்கால் மணிக் கட்டோடு பொருந்தக்கட்டுமாறு தோலினால் ஆன கயிறுகளுடன் இருக்கும். நல்ல நேர்த்தியான பாதரட்சை ஓர் காலாட்படைப் போர்ச்சேவகனுக்கு மிக மிக அவசியம், இன்றைய அளவிலும் (நவீன ஆயுதங்கள் நிறைந்த இக்காலத்திலும்) ஓர் போர்ச் சேவகனுக்கு நேர்த்தியான பாதரட்சைகள் மிக அவசியமாய் விளங்குகிறது.

அடிப்படையான காரியங்கள்: ஆவிக்குரிய அர்த்தத்தில் பாதங்கள் சேவை செய்வதைக் காட்டுகிறது. பாதங்கள் நம்மை சத்துருவிடம் நடத்திச் செல்கிறது. சமாதானத்தின் சுவிஷேசம் சத்துருவின் மீது நேரடித்தாக்குதலை நடப்பிக்கிறது. சமாதானம் என இவ்விடத்தில் காணப்பதுவது, தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள ஒப்புரவாக்குதலைக் காட்டுகிறது. (ரோமர்1:14-16, 2 கொரிந்தியர் 5:18-20).

9. விசுவாசம் என்னும் கேடகம்: (எபேசியர்6:16; 1 யோவான்5:4).

"nghy;yhq;fd; va;Ak; mf;fpdpah];jpuq;fisnay;yhk; mtpj;Jg;Nghlj;jf;fjha;> vy;yhtw;wpw;Fk; Nkyhf tpRthrnkd;Dk; Nflfj;ijg; gpbj;Jf;nfhz;lth;fshAk; epy;Yq;fs;."

ரோமர்களின் கேடகம் (THUREOS Gk) 'துரெயோஸ்' கதவு போன்ற வடிவில் ஒட்டவைக்கப்பட்ட அட்டையில் கேன்வாஸ் அல்லது கன்றுக்குட்டியின் தோலினால் பொதியப்பட்டிருக்கும், அதன் மேல் மற்றும் கீழ் ஓரங்கள் இரும்பினால் பாதுகாக்கப்பட்டிருக்கும். ஒரு ரோம போர்சேவனுக்கு இது ஓர் தற்காப்பு ஆயுதமாய் விளங்கினது. கேடகத்தை ஓர் போர்வீரன் இழப்பானேயானால் அவனுக்கு மரணம் என்பது உறுதி.

அடிப்படையான காரியங்கள்: கிறிஸ்தவ போர்வீரனின் கேடகம் என்பது வாக்குத்தத்தங்களைப் பற்றிக்கொண்டு, மற்றும், தேவனுடைய வார்த்தைகளை அடிப்படையாக அமைத்துக்கொண்ட வாழ்வில் சீராய் நடப்பது ஆகும். நாம் நமது விசுவாசத்தை பயன்படுத்தவில்லையானால், ஆவிக்குரிய வாழ்வில்

படுகாயமுற்று காணப்படுவோம். விசுவாசம் என்னும் கேடகத்தைப் பயன்படுத்த நாம் 7000 வாக்குத்தத்தங்களை சொந்தமாக்கிக்கொள்ளவேண்டும், மற்றும் ஏசாயா 41:10; 1 கொரிந்தியர் 10:13; 1 யோவான்4:4.இவ்வசனங்களில் காணப்படும் வாக்குத்தத்தங்களையும் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டும்.

10. இரட்சண்யம் என்னும் தலைச்சீரா: (எபேசியர்6:17a; ஏசாயா59:17).

",ul;rzpankd;Dk; jiyr;rPuhitAk;>"

ஒவ்வொரு ரோம போர்ச்சேவகனும், உலோகத்தாலான தலைக்கவசத்தை (PERIK Gk) 'பெரிக்' அணிய வேண்டும், இது வழக்கமாய் வெண்கலத்தால் செய்யப்பட்டு இரும்பினால் மூடப்பட்டிருக்கும். இது சரீரத்தின் மிக முக்கிய உறுப்பான தலையை பாதுகாக்கிறது.

அடிப்படையான காரியங்கள்: கிறிஸ்துவின் போர்வீரனாவதற்கு முன்பு, அவர் மறுபடி பிறந்தவராய் இருத்தல் வேண்டும். அவர் இரட்சண்யம் என்னும் தலைச்சீராவை அணிந்து கொள்ளவேண்டும். சாத்தான் தந்திரங்களில் ஒன்று, விசுவாசியை, தனது இரட்சிப்பை இழந்து விட்டதாய் உணர வைப்பது. ஒரு விசுவாசி இரட்சிப்பின் நிச்சயத்தை இழப்பார் என்றால், அவர் தனது இரட்சண்யமாகிய தலைச்சீராவை அணியவில்லை என்பது அர்த்தமாகிறது, அவர் அவ்வாறு இருப்பார் என்றால், மிகவும் மோசமான நிலைக்கு உள்ளாகி சத்துருவால் மிகவும் கொடுமையாக தாக்கப்படுவதற்கு உள்ளாவார்.

11. ஆவியின் பட்டயம்: (எபேசியர் 6:17b).

"Njttrdkhfpa Mtpapd; gl;laj;ijAk; vLj;Jf;nfhs;Sq;fs;."

பட்டயம் என்பதன் கிரேக்கச்சொல் MACHAIRA 'மச்சரியா' ரோம போர்வீரனின் குறுவாள். பட்டயம் நெருங்கிய அளவில் யுத்தம் செய்யும் போது, பயன்படுத்தப்படக்கூடிய ஆயுதம். அது தனது உறையிலிருந்து வெளியே எடுக்கப்படும் போது மட்டுமே, அதிக பலனுள்ளதாய் இருக்கும்.

அடிப்படையான காரியங்கள்: பட்டயம் உறையில் இருக்கும் வரை பயனற்றதாய் இருக்கும், அதை வெளியே எடுத்து யுத்தக்களத்தில் சத்துருவை தோற்கடிக்கும் போதே அதன் முழுபயனும் பெறப்படுகிறது, நாம் இதினிமித்தம் நமது சத்துருவை ஜெயங்கொள்ள அடிப்படையான தேவ வாக்கியங்கள், வாக்குத்தத்தங்கள், மற்றும் உபதேசங்கள் இவைகளை கவனமாய் பயன்படுத்துதல் வேண்டும்.

கிறிஸ்தவ வாழ்க்கை: விசுவாசம்

1. கிறிஸ்தவ வாழ்க்கையை மூன்று பகுதிகளாக பிரிக்கலாம்:
a) முதல் நிலை: - இரட்சிப்பு
b) இரண்டாம் நிலை - கிறிஸ்தவ நடக்கை
c) மூன்றாம் நிலை - பரலோகில் கிறிஸ்தவன்

2. மனிதன் மூன்று வழிகளில் அறிவைப்பெறுகிறவனாய் இருக்கிறான்:
a) விசுவாசம் - சில காரியம் உண்மை என்பதை விசுவாசிப்பதன் மூலம் அல்லது நம்புவது மூலம் உணர்வது.
b) அறிவாற்றல் - மனித அறிவின் மூலம் உண்மையை யூகித்து அறிந்துகொள்ளவது
c) சோதித்து அறிதல் - பரிசீலனை செய்து நிரூபனம் மூலம், தங்களுக்குத்தாங்களே திருப்தியடைந்த பின்னர் உண்மையை ஏற்றுக்கொள்வது.

3. கிருபையை ஏற்றுக்கொள்வதற்கான ஒரே வழிமுறை விசுவாசம் மூலமே. நமது மனித தகுதியை அன்றி, தேவனையே சார்ந்துகொள்ளும் வழியாய் இது இருக்கிறது.
a) முதல் நிலை: - கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை விசுவாசி அப்பொழுது இரட்சிக்கப்படுவாய் - இரட்சிப்பு (அப்போஸ்தலர்16:31).
b) இரண்டாம் நிலை: - வாக்குத்தத்தங்களிலும் தேவனது வார்த்தைகளின் அடிப்படையிலும் நம்பிக்கை வைப்பது - கிறிஸ்தவ நடக்கை
c) மூன்றாம் நிலை: - தேவன் அளிக்கும் நன்மைகளில் நம்பிக்கை வைப்பது - பரலோகம்.

4. விசுவாசம், அவிசுவாசம் இவ்விரண்டை விவரிப்பதற்கு எகிப்திய வாதைகளிலிருந்து காக்கக்ப்பட்டு யோர்தானைக் கடந்த யூதர்களைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கிறோம்.

நிகழ்வுகள்	**தேவனது வாக்குத்தத்தம்**	**வேதபகுதி**	**பிரயுத்தரம்**	**விளைவுகள்**
இறுதி வாதை	பஸ்கா ஆட்டுக்குட்டி	யாத்திராகமம்12:21-30	நம்பினர்	இறுதி வாதையினின்று காக்கப்
எகிப்திய இராணுவம்	செங்கடலைக் கடத்தல்	யாத்திராகமம் 14:1-31	நம்பினர்	மோசே செங்கடலை கடந்து செ

தண்ணீர் இல்லாத நிலை	தண்ணீர்.	யாத்திராகமம் 17:1-7	நம்பினர்	பாறையை அடித்தபோது (கிறி
பொன் கன்றுக்குட்டி	தேவனது உபதேசம்.	யாத்திராகமம்32:15-28	நம்ப மறுத்தனர்	லேவியின் புத்திரர் (ஆசாரியர்க
Quails காடைகள்	மன்னா	எண். 11:10-33	நம்ப மறுத்தனர்	Many deaths due to quails காடைகஎ
இராட்சதர்கள்	கானானுக்குள் பிரவேசித்தல்	எண். 13:1-14:38	நம்ப மறுத்தனர்	பயம் நிறைந்த ஒற்றர்களால் அலைந்து திரிய நேரிட்டது.
தண்ணீர் இல்லை.	தண்ணீர்	எண். 20:2-13	நம்ப மறுத்தனர்	கீழ்ப்படியாது பாறை அடித்தா பிரவேசிக்கவில்லை.
அலைந்து திரிதல்.	யோர்தானைக் கடத்தல்	யோசு. 3:1-17	நம்பினர்.	இஸ்ரவேலர் யோர்தான் நடுவே

5. இரட்சிப்புக்குரிய விசுவாசமானது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை முழுவதுமாய் விசுவாசிப்பது ஆகும், அவர் நமது பாவங்களுக்காக மரித்து, மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்து நித்திய ஜீவனை நமக்கு அருளியிருக்கிறார். (அப்போஸ்தலர் 16:31, ரோமர் 4:20-25).

6. இதனுடன் கிரியைகள் என ஏதாவது இணைந்தால், அவைகள் விசுவாசத்தை செயல் இழக்கச்செய்து விடுகிறது (ரோமர்4:4)

7. விசுவாசம் வாயினால் அறிக்கை செய்வதன் மூலம் வெளிப்படையாய் காணப்படுகிறது. (ரோமர் 10:9-10)

8. விசுவாசம் என்பது, எவ்விதமான நமது சொந்த முயற்சிகளைச் சார்ந்து இராமல் இருக்கிறபடியால், எவரும் விசுவாசிக்க முடியும், சிறு பிள்ளைகள் கூட விசுவாசிக்க இயலும். (மத்தேயு 18:2-4).

9. விசுவாசத்தின் மூலம் நிச்சயம் உண்டாகிறது (எபிரெயர் 10:22).

10. விசுவாசம் என்பது, நம்பிக்கையாய் இருக்கிறது, அது தேவனைக்குறித்து எல்லாவற்றையும் அறிந்து கொள்வதற்கு கேள்வி கேட்காது. ஆனால், தேவன் சொன்ன எல்லாவற்றையும் நம்பும். [Faith is trust which does not ask to know all about God but believe all that God has said.]

11. இரட்சிப்பின் விசுவாசமானது கிறிஸ்துவை இரட்சகராகவும் மற்றும் கர்த்தராகவும் ஏற்றுக்கொள்ளும். (யோவான் 1:12, 3:16, 3:36)

12. இரட்சிப்பின் விசுவாசம் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை முற்றிலுமாய் நம்புவதாய் இருக்கிறது, அவர் நமது மீறுதல்களிலிருந்து விடுவித்து இருக்கிறார், மற்றும் மறுபடியும் நம்மை நீதிக்குட்படுத்தும் படியாய் எழுந்துமிருக்கிறார். (ரோமர் 4:20-25).

13. விசுவாசத்தின் மூலம் தேவன் காணப்படாதவைகளின் நிச்சயத்தை ஆத்துமத்தில் அருளியிருக்கிறார். (எபிரெயர் 11:1-3)

14. விசுவாச வாழ்வின் அனுதின வெற்றியானது, எபிரெயர் 11:1-39. ல் விசுவாசிக்காக விவரிக்கப்பட்டுள்ளது, உ.ம், ஆபேல், நோவா, மோசே etc.

15. விசுவாசம் கேள்விப்படுவதால் வரும், கேள்விப்படுதல் தேவனது வசனத்தினால் வரும் (ரோமர் 10:17).

16. காரியங்களை புரிந்துகொள்வதற்கு விசுவாசம் மட்டுமே புகழ்சியில்லாத மார்க்கமாய் இருக்கிறது, மற்றவைகள் பகுத்தறிவுவாதத்தைச் சார்ந்ததாயும், அனுபவத்தைச் சார்ந்து நம்புதலாகவும் இருக்கிறது. [Faith is the only non meritorious means of understanding things the other being rationalism and empiricism.]

17. சிறுபிள்ளையைப் போலாகுதல் என்பதன் பகுப்பாய்வு, ஒரு சிறு பிள்ளையின் விசுவாசத்தை போன்ற விசுவாசத்தை அடைவது / பெறுவது ஆகும். (மத்தேயு 18:2-4)

கிறிஸ்தவ வாழ்க்கை: விசுவாசம் - விசுவாசத்தினால் மேற்கொள்ளுதல்.

1. வாழ்விற்கான தேவனது சித்தத்தை, விசுவாசத்தின் மூலம் ஏற்றுக்கொண்டு கற்றுக்கொள்வது நிபந்தனைகளாய் இருக்கின்றன, மற்றும் அவருக்கு நன்றியுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். - ரோமர் 8:28, 1 தெசலோனிக்கேயர் 3:3; 5:18

2. விசுவாசத்தினால் தேவனுடன் உள்ள ஐக்கியத்தை பாதுகாத்து, வெளிச்சத்தில் நடக்கிறவர்களாய் இருக்கிறோம். - 1 யோவான் 1:7.

3. விசுவாசத்தினால் தொடர்ந்து ஒவ்வொரு நாளும் உங்களது நடக்கைகளை சீர்தூக்கிப்பார்த்து, அறிந்து கொள்ளப்பட்ட எல்லாப் பாவங்களையும் அறிக்கை செய்தல் வேண்டும். - 1 கொரிந்தியர் 11:28, 31; 1 யோவான் 1:9.

4. விசுவாசத்தினால் தேவனது வார்த்தையை அனுதினம் பெறுவது, ஆகாரத்தைப்பார்க்கிலும் அதிக அவசியமானதாய் இருக்கிறது. மத்தேயு 4:4; 5:6, 2 பேதுரு 3:18.

5. விசுவாச அணுகுமுறையினால், ஒவ்வொரு தேவைக்காகவும் கிருபாசனத்திடம் தைரியத்துடன் நெருங்கிக் கேட்பது சாத்தியமாகிறது, மற்றும் அவசியப்படும் உபகரணங்களையும், தேவனைகளையும் கேட்டல் வேண்டும், ஒவ்வொரு கவலையையும் அவர் மீது வைத்து விடுதல் வேண்டும். - எபிரெயர் 4:15-16; 1 பேதுரு 5:7.

6. விசுவாசத்தில் உறுதியாய் இருந்து சாத்தானுக்கு எதிர்த்து நில்லுங்கள் அப்பொழுது அவன் ஓடிப்போவான். எபேசியர் 6:10-13, 1 பேதுரு 5:8.

7. விசுவாசத்தினால் ஆவிக்குரிய மதிப்பீடுகள் மற்றும் முக்கியம் வாய்ந்தவைகள் போன்றவற்றைச் சிந்தித்து, தியானித்து அவற்றைப் பழக்கமாக்கிக் கொள்ளுங்கள். பிலிப்பியர் 4:6-9.

8. தரிசித்து நடவாமல் விசுவாசித்து நடவுங்கள். - 2 கொரிந்தியர் 5:7.

கிறிஸ்தவ வாழ்க்கை -- சந்தேகம்

1. நாம் சந்தேகப்படும் போது, தேவனுடன் நேர்மையுடன் நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. ஒரு வெள்ளைத்தாளில் உங்களது சந்தேகங்களை தெளிவாய் எழுதுங்கள், அதற்கான பதில்கள் வரும்பொழுது அதைக் காண நீங்கள் ஆயத்தமுள்ளவர்களாய் இருப்பதற்கு இது ஏதுவுண்டாக்கும்.

3. சந்தேகங்களை தேவனுக்கு முன்னிலையில் அற்பணியுங்கள். தேவன் பதில் அளிக்கும் வண்ணம் வெளிப்படையாகவும் ஒளிவுமறைவின்றியும் தெரியப்படுத்துங்கள். நெகேமியா 1:4-11, மாற்கு 9:24.

4. உங்கள் கவலைகள் எல்லாம் அவர் மீது வைத்துவிடுங்கள் என வேதாகமம் கூறுகிறது, 1 பேதுரு 4:19, 5:7. கவலை என்பது நம்மைப்பற்றியதாய் இருக்கிறது.

5. ஒத்த வாக்கிய அகராதியில் உங்களைக்குறித்த வசனங்கள் கண்டுபிடித்து அவைகள் என்ன கூறுகின்றன ஆராய்சி செய்யுங்கள். கீழ்க்கண்ட கேள்விகளைக் கேட்டு அதற்கான பதிலை கண்டறியுங்கள்.
a) வேதாகமம் சந்தேகம் குறித்து என்ன கூறுகிறது?
b) இந்த பாடங்கள் குறித்து வேதாகமம் எப்படிப்பட்ட திட்டவட்டமான அறிக்கையினைத் தருகிறது?
c) இப்படிப்பட்ட காரியங்களில் தேவனது வார்த்தையை நான் விசுவாசிக்கலாமா?

FEAR பயம்:

1. வேதாகமத்தில் பயம் என்பதைக் குறித்து இருவழிகளில் காண்கிறவர்களாய் இருக்கிறோம்.

[அ] முதலாவதாக மனோரீதியான பாவ நடத்தையானது, உன்னதமானவரின் பிள்ளைகளாய், இப்பிரபஞ்சத்தை ஆழுகை செய்பவரின் பிள்ளைகளாய் இருப்பதற்கு எவ்விதத்திலும் முறணானதாய் இருக்கிறது.

[ஆ] இரண்டாவதாக: எல்லா சிருஷ்டிகளுக்கும் கர்த்தராகிய தேவனிடத்தில் சரியான நடத்தையுள்ளவர்களாய் இருப்பது விவரிக்கப்படுகிறது.

தெய்வ பயம், பயபக்தி, தேவனைத் தேவனாகக் கனப்படுத்துதல், பொருத்தமற்ற பயமும் உண்டு, அது கெஞ்சுகின்ற பயமாய் இருக்கிறது, மற்றவர்கள் தங்களுக்கு

தீங்கு செய்துவிடுவார்களோ என ஒருவர் விசுவாசிப்பது. இரண்டாவது வகையானது தவறாய் இருக்கிறது, காரணம் தேவனது அனுமதியின்றி ஒருவரும் நமக்கு தீங்கு செய்வதில்லை, நாம் அவருடையவர்களாய் இருக்கிறோம்.

2. நபர்களுடன் நமக்குள்ள தொழில், மற்றும் தேவனது மாட்சிமை குறித்து அடிக்கடி "பயம்" என பேசப்படுகிறது, இது சட்டரீதியானதாக அர்த்தத்தில் விசுவாசிக்கு கூறப்பட்டுள்ளது. 2 சாமுவேல் 23:2-3, நெகேமியா 5:9, Job 28:28, சங்கீதம் 19:9, 34:11-12, 111:10, நீதிமொழிகள் 1:7, 9:10, 10:27, 22:4, மல்கியா 3:16, எபேசியர் 5:21.

3. பயம் என்பது மனோரீதியான பாவ நடத்தையாய் இருக்கிறது எனப் பேசப்படுகிறது, 1 சாமுவேல் 17:11, 24, நீதிமொழிகள் 29:25.

4. நமக்குரிய தேவனது கிருபையின் திட்டத்தில், பயம் என்பதற்கு இடமே இல்லை. நமக்குரிய தேவனது திட்டமானது, எப்பொழுதும் தெய்வீக நன்மை நிறைந்ததாய் இருக்கிறது. எவ்விதப் பரீட்சையானலும் அவை நமது நன்மைக்கேதுவாய் இருக்கிறது. ரோமர் 8:28.

5. தேவனது திட்டத்தில் விசுவாசத்தின் தோல்வியானது பயமாய் வெளிப்படுத்தப்படுகிறதாய் இருக்கிறது. யாத்திராகமம் 14:13-14, உபாகமம் 31:6-8, யோசுவா 8:1, 1 நாளாகமம் 28:20, ஏசாயா 41:10, 2 தீமோத்தேயு 1:7.

6. ஆவிக்குரிய மரணமானது ஒருவழியில் சாத்தானின் இராஜ்ஜியத்தை விவரிக்கிறதாய் இருக்கிறது, அது பயத்திற்கான ஆதாரமான இடமாய் விவரிக்கப்படுகிறது. எபிரெயர் 2:14,15.

7. ஆவிக்குரிய மரணத்தின் போது, ஆதாம் பயப்படுகிறவராய் விளங்கினார். ஆதியாகமம் 3:10 இப்படிப்பட்ட பயமே ஆதாமை மதம் சார்ந்த செயல்பாடுகளை செய்யும்படி செய்தது. (அத்தி இலை) மற்றும் பொய்சொல்லும்படி வைத்தது. ஆதியாகமம் 3:7.

8. இரட்சிப்பானது பயத்தின் அடிப்படையை அகற்றுகிறதாய் இருக்கிறது, இது தேவனது நீதியின் பிரகாரம் உள்ள ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாகும் பயமாய் இருக்கிறது. (ஆவிக்குரிய மரணம்).

9. அவிக்குரிய முதிர்ச்சியானது பயத்தின் அடிப்படைக்காரியங்களை அகற்றுகிறதாய் இருக்கிறது. 2 தீமோத்தேயு 1:7, எபிரெயர் 13:6, 1 யோவான் 4:18, 1 கொரிந்தியர் 13:5b.

10. மாம்சீகத்துக்குரிய காரியங்கள் மற்றும் மதசம்பந்தமான செயல்பாடுகள் கிருபையினின்று நம்மை வழிவிலகச்செய்வதும், அனுதினம் வேத வசனங்களுக்கு கீழ்ப்படிவதினின்று விலகி வாழும்படிச் செய்து, விசுவாசியை சாத்தானுக்கு பயத்தின் மூலம் அடிமைப் படுத்துகிறதாய் இருக்கிறது. கலாத்தியர் 5:1, ரோமர் 8:15.

11. முதிர்ந்த விசுவாசிக்கு வாழ்வில் பாடுகள் நேரிடலாம் ஆனால் அந்நபர் பயப்படக்கூடாது எனக் கட்டளையிடப்படுகிறார், தேவனது கிருபையின் மூலம், நமக்கு அவசியமான அனைத்தும் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. வெளிப்படுத்தல் 2:10.

12. விசுவாசத்தில் குழந்தைகளானவர்கள், தேவனது வார்த்தைகளால் நிலைத்திருக்கிறவர்களாய் இருக்கின்றனர், தேவனது கட்டளைகளுக்கு அவர்களது வாழ்வில் ஒவ்வொரு மணி நேரமும் கீழ்ப்படிந்து நடக்க வேண்டியவர்களாய் இருக்கின்றரன், மற்றும் அவரது வாக்குத்தத்தங்களைச் சார்ந்து வாழ வேண்டியவர்களாய் இருக்கின்றனர். எபிரெயர் 4.

13. நாம் முதிர்ச்சியடைகிற விசுவாசிகளாகும் போது, தொடர்ந்து தேவனது வாக்குத்தத்தங்களில் நிலைத்து இருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், இதோடு மட்டுமல்லாது, தேவனது வார்த்தையை எல்லா விதங்களிலும், புரிந்துகொண்டு நடைமுறைப் படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். - இதனால் நாம் தேவனது குணாதிசயங்களில் தன்னம்பிக்கை உள்ளவர்களாய் அவரது வாக்குத்தத்தங்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் கடந்து செல்கிறவர்களாய் இருக்கிறோம்.

14. விவரணம்: ஒரு பெண் ஒவ்வொரு மணி வேளையிலும் இவ்வாறு கேட்பாளாம்: "நீங்கள் என்னை நேசிக்கிறீர்களா?" அநேக வாக்குத்தத்தங்கள் மூலம் நிச்சயம் அவசியப்படுகிறதாய் இருந்தது, அநேக செயல்பாடுகள் வாக்குத்தத்தங்களுக்கு ஆதரவாய் இருந்தன. ஒரு சமயம் அவளது புருஷனை உண்மையாய் அறிய விரும்பினாள், அவன் தனது மனையிடம் உண்மையாய் நடந்து கொண்டதினிமித்தம், அவளது அன்பானது அவன் மீது முழுவதுமாய்

செலுத்தப்பட்டது, இப்பொழுது அவளுக்கு முழுமையான நிச்சயம் உண்டானது, இப்பொழுது அவளுக்கு தொடர்ந்து மணிக்கொரு முறை கேட்பது அவசியமில்லாது போனது. அவள் தனது புருஷனின் குணாதிசயத்தை புரிந்து கொண்டதினிமித்தம், முழுமையான தன்னம்பிக்கையை அவன் மீது வைக்கலானாள்.

15. எபிரெய நிருபம் 3-6 அதிகாரத்தில், விசுவாசிகள் தன்னம்பிக்கை மற்றும் வளர்ச்சியினின்று விழுந்து போகிறவர்களாய் காணப்படுகின்றனர். 4 ம் அதிகாரத்தின் ஆவிக்குரிய அடிப்படை காரியம் மூலம் இலக்கை அடைவதற்கு வழி முறைகள் கற்பிக்கப்படுகிறது.

16. எபிரெயர் 13:6 ல் இந்நிருபத்தை எழுதியவரின் நோக்கத்தினைப் பார்க்கிறோம். பயத்திலிருந்து விடுதலைப் பெற்று, அனுதினமும், ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் வாழ்ந்து, கிறிஸ்துவின் அன்பை உணர்ந்து, அவர்களுக்கு கிடைக்கப்பெறும் கிறிஸ்துவின் வல்லமை உணர்ந்து வாழுதல் வேண்டும்.

17. வேதாகமத்தை எழுதியவர்கள் விசுவாசியானவன் பயப்படும்பொழுது, அவன் அவிசுவாசியை பிரதிபலிக்கிறவனாய் இருக்கிறான், (பயமுள்ளவனாய் விளங்குகிறான் / கோழையாய் இருக்கிறான். வெளிப்படுத்தல் 21:8), மற்றும், நமது பெரிதான ஸ்தானத்தை விட்டுக்கொடுப்பது சரியானது அல்ல. எபிரெயர் 11:27 "விசுவாசத்தினாலே அவன் அதரிசனமானவரைத் தரிசிக்கிறது போல, உறுதியாய் இருந்து, ராஜாவின் கோபத்துக்குப் பயப்படாமல், எகிப்தைவிட்டுப் போனான்." இதுவே நமது தராதரமாய் இருக்கிறது!

18. பயம் என்பது மனோரீதியான பாவ நடத்தையாய் இருக்கிறது, அது கர்த்தரைக் குறித்து சிந்திக்க விடாதபடி நமது மனமானது விலகிச்செல்வதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. 1 சாமுவேல் 17:11,24.

19. பயமானது "இப்பிரபஞ்சத்தின் தேவனாவனது" ஆழுகைக்குள் விழுந்து போவதை காட்டுகிறதாய் இருக்கிறது. 1 சாமுவேல் 18:12,29 21:12 28:20.

20. பயமற்ற நிலையானது மனோ நிலையை வல்லமையாய் செயல்பட வைக்கிறதாய் இருக்கிறது. எபிரெயர் 13:6, 11:27.

21. சட்டரீதியான ஒரே ஒரு பயம் இருக்கிறது, ஆவிக்குரிய முதிர்ச்சியில்

பிரவேசியாத வண்ணம், தோல்வியின் பயமாய் இருக்கிறது. எபிரெயர் 4:1.

22. அன்பானது பயமற்ற வாழ்வு செய்ய எதிர்பார்க்கிறதாய் இருக்கிறது. 1 யோவான் 4:18. அவைகள் இரண்டும் இரு மாறுபட்ட மனோ நடத்தையாய் இருக்கிறது.

23. விசுவாசிக்கான தெய்வீக திட்டத்தில் பயம் என்பது ஒரு பாகமாய் இருக்கவில்லை. 2 தீமோத்தேயு 1:7 யாத்திராகமம் 14:13-14, யோசுவா 8:1 ஏசாயா 41:10, 2 சாமுவேல் 1:7.

24. தைரியமும், பயமற்ற தன்மையும் முதிர்ந்த ஆவிக்குரிய நிலையின் அடையாளமாய் இருக்கிறது. சங்கீதம் 3:6, சங்கீதம் 56:3, எபிரெயர் 11:27.

25. பயம் சாத்தானது தீமையின் வல்லமையாய் மனுகுலத்தின் மத்தியில் ஆழுகை செய்கிறதாய் இருக்கிறது. எபிரெயர் 2:14-15, ஆதியாகமம் 19:30 (லோத்து) 1 இராஜாக்கள் 18:9-14, (ஒபதியா), லோத்து, ஒபதியா இருவரும் விழுந்து போன விசுவாசி தொடர்ந்துள்ள பயத்தில் வாழ்கின்றனர் என்பதைக் காட்டுகிறவர்களாய் இருக்கின்றனர்.

26. பயம் என்னும் வார்த்தையானது, "கிறிஸ்துவுடன் உள்ள பதவி" என்கிற அர்த்தத்தில் பயன்படுத்தப்படுகிறதாய் இருக்கிறது, இது ஒரு முதிர்ந்த விசுவாசி கிறிஸ்துவினிடத்தில் வைக்கும் பயபக்தியை குறிக்கப்பயன்படுத்தப்படுகிறதாய் இருக்கிறது. 2 சாமுவேல் 23:3, நெகேமியா 5:9,15 எபேசியர் 5:21, யோபு 28:28, சங்கீதம் 19:9, 34:10; நீதிமொழிகள் 1:7; 9:10, நீதிமொழிகள் 10:27, 1 பேதுரு 2:17.

கிறிஸ்தவ வாழ்க்கை: துன்பப்படுதல் / பாடுபடுதல்:

1. எல்லாவிதத் துன்பங்களும் ஆதாமின் பாவத்தால் வந்த விளைவே.

2. தேவன் ஏகாதிபதியாய் இருக்கிறார் மற்றும் அவர் துன்பங்களை இவ்வுலகில் ஒருநோக்கத்துடன் அனுமதிக்கிறார். (ரோமர் 8:28).
a) ஜனங்கள் உதவியற்ற நிலையில் தம்மை நோக்கி அவர்கள் அழைக்க அனுமதிக்கிறார்.

b) விசுவாசத்தை பரீட்சிக்க மற்றும் வளர்க்க, அதன் மூலம் தனக்கு மகிமை வருவித்துக்கொள்ள அனுமதிக்கிறார்..

3. நித்தியத்தில் விசுவாசிகளுக்கு பாடுகள் / துன்பங்கள் இருக்காது. (வெளிப்படுத்தல் 21:4)

4. அவிசுவாசிகள் நித்திய நித்தியமாய் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் வேதனைப்படுவார்கள். (வெளிப்படுத்தல்20:12-15).

5. துன்பங்களுக்கு காரணங்கள்:

a) சொந்த பாவங்களுக்கான சிட்சையாய் இருக்கலாம்,

b) மற்றவர்களின் பாவத்தால் புறங்கூறுதல், யுத்தம், குற்றம் இழைத்தல் போன்றவைகளால் இருக்கலாம்.

c) சொந்த செயல்களால் அனுபவிக்கும் துன்பங்கள், புகைபிடித்தலால் வரும் வியாதிகளால், உக்கிராணத்துவத்தில் மிகவும் பெலவீனமாயிருந்து அதனால் வரும் வறுமையாகிய துன்பம், குடிப்பழக்கத்தினால் வரும் வறுமை சரீர வியாதிகள் போன்றவை.

d) ஏகாதிபதியாகிய தேவனுடைய சித்தத்தின் படி - ஆரோக்கியத்தில், தட்பவெப்ப நிலையில் வரும் துன்பங்கள்.

6. துன்பங்களுக்கான அடிப்படை நோக்கங்கள்:

a) எல்லா துன்பங்களும் கிறிஸ்தவ நடக்கையில் ஆசீர்வாதங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன. (1 பேதுரு 1:7, 8, 4:14).

b) சிட்சைகளும் கூட மீண்டும் ஐக்கியப்பட வடிவமைக்கப்பட்டுள்ளது.. (எபி. 12:6).

c) துன்பங்கள், கிருபையின் அடிப்படையை பின் தொடர்கின்றன (ரோமர்8:28, 1 தெசலோனிக்கேயர் 5:18).

7. கிறிஸ்தவப் பாடுகளுக்கான காரணங்கள்:

a) பின்மாற்றம் அல்லது மாம்சீக காரியங்களில் மாற்றம் ஏற்பட சிட்சை அளிக்கப்படுகிறது. (சங்கீதம் 38).

b) தேவனை மகிமை படுத்துவதற்காக. (யோபு1:8-12, லூக்கா 15:20, 21).

c) உபதேசங்களை விவரிப்பதற்காக (ஓசியாவின் தீர்க்கதரிசன ஆகமம்).

d) கீழ்ப்படிதலை சார்ந்து இருக்கும்படி (பிலிப்பியர் 2:8, எபிரெயர்5:8).

e) பெருமையை கீழடக்க (2 கொரிந்தியர் 12:7-10).

f) விசுவாசத்தில வளர (1 பேதுரு1:7, 8).

g) கிறிஸ்துவுக்கு சாட்சியாய் இருக்க (2 கொரிந்தியர் 13:4).

h) தேவனுடைய வல்லமையை நிரூபிக்க . (2 கொரிந்தியர் 11:24-33, 2 கொரிந்தியர் 12:7-10).

i) ஆவிக்கேற்ற கனி கொடுக்க (2 கொரிந்தியர் 4:8-11).

j) பிறர் துன்பப்படும்போது அவர்களுக்கு உதவியாய் இருக்க. (2 கொரிந்தியர் 1:3-5).

k) ஐக்கியத்திலிருந்து வெளியே ஜீவிக்கும் விசுவாசிகளுடன் மறைமுகமாய் செயல் பட. (ரோமர் 14, 1 கொரிந்தியர் 12:12, 13, 26, 1 சாமுவேல்21, 1 நாளாகமம் 21).

8. பாடுகளுடன் ஈடுபடுதல் - ஆவிக்குரிய அனுதின ஒழுங்குகளை கடை பிடித்தல்: ஒரு விசுவாசியாய் பாடுகளுடன் சம்பந்தப்படும்போது, அது ஒரு வினோதமான காரியமாய் இருப்பதில்லை, இது நமது கடமையாய் இருக்கிறது, ஒரு யுத்த வீரன் நீண்ட காலம் யுத்த கலத்தில் தங்குவதைப் போன்றதாய் இருக்கிறது, எவ்வித முறையீடுமின்றி, அங்கு தங்குவதே தனக்கு மரியாதை அளிப்பதாயும், பெலனளிப்பதாய் இருப்பதாய் உணருகிறவனாய் இருக்கிறான்.

சத்துருவானவனுக்கு எதிராய் யுத்தம் செய்ய செய்ய வேண்டிய ஐந்து "அனுதின ஒழுங்குகள்." இவைகள் சபையுகத்தில், பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நடைமுறைப் படுத்த வேண்டியவைகளாய் இருக்கின்றன. அவைகள் நம்மை கர்ஜ்ஜிக்கிற சிங்கத்திடமிருந்து நம்மைக் காக்கிறதாய் இருக்கிறது, இவைகள் கர்த்தர் அவனை தனது இரண்டாம் வருகையில் கட்டும் வரைக்கும் செயல்படுத்தப்பட வேண்டியதாய் இருக்கிறது.

1. தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள் - எல்லா நேரங்களிலும், சுயக்கட்டுப்பாட்டுடன் நடந்து கொள்ளுங்கள், எவ்வித உணர்ச்சிகளின் கட்டுப்பாட்டுக்கு கீழ் இராதவாறு இருத்தல் வேண்டும், மது பானம், அல்லது போதைவஸ்துக்களின் கட்டுப்பாட்டிற்குக் கீழ் இருத்தல் கூடாது, பரிசுத்த ஆவியானவரது கட்டுப்பாட்டுக்குள் மட்டும் அடங்கியிருத்தல் வேண்டும். ரோமர் 13:11-13. 1 தெசலோனிக்கேயர் 5:6 -8.

2. விழித்திருங்கள்: - எல்லா நேரங்களிலும், அபாயம் நேரிடாதாவறு விழித்திருத்தல் வேண்டும், நீங்கள் பாதுகாப்பு செய்யும் நேரத்தில் ஓய்வு பெறலாகாது, கவலையீனமாய் இருத்தல் கூடாது.

3. எதிர்த்து நில்லுங்கள்: - எதிர்த்து நிற்க எழுந்து நில்லுங்கள், அவன் எழுந்து நின்று எதிர்க்கும் ஒவ்வொன்றிற்கும் நீங்கள் எதிர்ப்பு தெரிவியுங்கள். நமது வாழ்விற்கு தீமையை சகித்தல் என்பது தராதரமாய் அமைதல் வேண்டும். இவ்வசனங்களையும் ஒப்பிடுக: லூக்கா 4:3-12, எபேசியர் 4:27, 6:11-13, யாக்கோபு 4:7.

4. அப்போஸ்தலருக்கு ஒருவிசை ஒப்புவிக்கப்பட்ட விசுவாசத்தில் உறுதியாய் இருங்கள்: தாக்குதலை எதிர்த்து நிற்க திரள் கூட்ட இராணுவ வீரர்களாய் நிற்றல் வேண்டும், அப்போஸ்தல உபதேசங்களுடன் எழுந்து நில்லுங்கள், மற்றும் அவர்களது பழக்கவழக்கங்களை கைக்கொள்கிறவர்களாயிருங்கள். ஸ்தல சபையானது ஐக்கியப்பட்டு, ஒன்றுபட்டு நிற்றல் வேண்டும், தோள்கொடுத்து நிற்றல் வேண்டும், ஒருவொருக்கொருவர் அற்பணித்து நிற்றல் வேண்டும்.

5. நீங்கள் மட்டும் தனித்துவிடப்படவில்லை என்பதை அறிந்திருத்தல் வேண்டும். கர்த்தருக்காய் நிற்கும் பொழுது ஒவ்வொரு விசுவாசியும், நெருக்கங்களை அனுபவிக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

தேவன்: விசுவாசிகளுக்கான ஆறுதல்:

1. தேவன் கட்டுப்பாட்டில் இருக்கிறவராய் இருக்கிறார். (1கொரிந்தியர் 10:13)

2. தேவனது குணாதிசயங்கள் நிலையானது.

[அ] கர்த்தர் நம் பட்சத்தில் இருந்தால், நமது எதிராக இருப்பவர் யார்? (ரோமர் 8:31-34).

[ஆ] என்ன நடந்தாலும் நடக்கட்டும், தேவனது அன்பானது நிலையானதாய் இருக்கிறது. (ரோமர் 8:35-39).

3. தேவனது வாக்குத்தத்தங்கள் பாதுகாப்பானவைகளாய் இருக்கின்றன, தேவன் எப்பொழுதும் நம்முடன் இருக்கிறார். (மத்தேயு 28:19-20, எரே. 1:19)

4. தேவனது வல்லமையானது எப்பொழுதும் மாறுவதே இல்லை:

[அ] அவர் எப்பொழுதும் காக்கிறவராய் இருக்கிறார். . (யோவான் 10:29, 2 தீமோத்தேயு 1:12,)

[ஆ] தேவன் ஒருபோதும் நம்மை மறந்து போகிறவர் இல்லை அல்லது பாதுகாக்கும் தமது வல்லமையில் குன்றிப் போவதும் இல்லை. (யூதா 24)

[இ] ஐக்கியத்திலிருந்து நாம் விழுந்து போக நேரிட்டாலும், நாம் இன்னும் இரட்சிக்கப்பட்டவர்களாகவே இருக்கிறோம். (2 தீமோத்தேயு 2:13).

5. தேவன் நமது தேவைகளை முன்னதாகவே அறிந்தவராய் இருந்து, நமது தேவைகளை ஏற்ற வேளைகளில் கொடுக்கிறவராய் இருக்கிறார். (பிலிப்பியர் 4:19, எபிரெயர் 4:16, எபேசியர் 3:12,).

6. தேவன் நம்மை ஆசீர்வதிக்க வல்லமையுள்ளவராய் இருக்கிறார். (2 கொரிந்தியர் 9:8).

7. தேவன் தமது கிருபைகளை நம்மில் பெருகச் செய்கிறவராய் இருக்கிறார். (எபேசியர் 3:20).

8. உண்மையான தன்னம்பிக்கையும் மற்றும் ஆசீர்வாதமுமுள்ள இடத்தில் நாம் வளர வேண்டியவர்களாய் இருக்கிறோம். (2 பேதுரு 3:18).

9. இவைகளைச் செய்ய நாம் தேவனது வார்த்தையினால் போஷிக்கப்பட வேண்டும். (யோவான் 6:29, 33, 63).

கிறிஸ்தவ வாழ்க்கை - விசுவாசியின் ஆசீர்வாதம்.

1. வேதாகமக் கண்ணோட்டத்தில் ஆசீர்வாதம் என்பது, "சமாதனம் மற்றும் மகிழ்ச்சி" என்னும் அர்த்தத்தை உடையதாய் இருக்கிறது. சமாதானம் (eirene) இவ்வார்த்தைக்கு புதிய ஏற்பாட்டின் அர்த்தம், ஆத்துமத்தின் உள்ளான அமைதி மற்றும் பெரிதளவில் வாழ்வின் செழிப்பு இவ்விரண்டையும் குறிக்கிறதாய் இருக்கிறது. இதுவே பவுல் எல்லா விசுவாசிகளுக்கும் ஏறெடுத்த ஜெபமாய் இருந்தது. ரோமர் 1:7, 1 கொரிந்தியர் 1:3, 2 கொரிந்தியர் 1:2, கலாத்தியர் 1:3, கொலோசெயர் 1:2, எபேசியர் 1:2, பிலிப்பியர் 1:2, 1 தெசலோனிக்கேயர் 1:1, 2

தெசலோனிக்கேயர் 1:2, 1 தீமோத்தேயு 1:2, 2 தீமோத்தேயு 1:2, தீத்து 1:4, பிலமோன் 3

2. ஆவிக்குரிய மனநிலையில் இருத்தல் சமாதானமாய் இருக்கிறது. (ரோமர் 8:6) i.e. தேவன் நம்மை நினைத்திருக்கிறார் என்று எண்ணுவது ஆகும். சமாதானம் என்பது, போதுமென்கிற மனது, உள்ளான மன அமைதி மற்றும் வாழ்வில் ஆவிக்குரிய செழிப்பு. பவுல் இப்படிப்பட்ட ஜெபத்தை தனது நிருபங்களில் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார். இது எபிரேய வாழ்த்துதலைப் போன்றதாய் இருக்கிறது. Shalom, என வாழ்த்துதல் சமாதனத்தையும் மற்றும் செழிப்பையும் எடுத்துக்காட்டுகிறதாய் இருக்கிறது.

3. தேவன் கொடுப்பதன் மூலம் ஆசீர்வாதம் வருகிறதாய் இருக்கிறது மற்றும் அவரது நீதியானது முதல் இடத்தை வகிக்கிறதாய் இருக்கிறது. ஆசீவாதங்களை ஒழுங்குபடுத்துவோமெனில், பணம், வீடு, வாகனம், வேலை, வாழ்க்கைத் துணை போன்றவைகள் ஆகும். மத்தேயு 6:31-34, 1 கொரிந்தியர் 10:13, cf. பிலிப்பியர் 4:11.

4. விசுவாசிகள் வாழ்வில் தான் மிகுந்த ஐசுவரியவானாய் கல்லறையில் சேரவேண்டும் என எண்ணலாகாது Luke 12:16-21. முதலாவது பணத்தின் மீது கண்களை வைப்பது மதியீனமானதாய் இருக்கிறது. மத்தேயு 6:21 cf. யாக்கோபு 5:1-6. ஐசுவரியம் அல்லது சொத்து இவைகளை விட, தெய்வீகத்துடனும் மன நிறைவுடன் வாழ்வதே, உங்கள் வாழ்வைக் குறித்த தேவனது சித்தமாய் இருக்கிறது. (1 தீமோத்தேயு 6:6-12).

5. இயேசுவுடன் உள்ள நெருங்கிய உறவே நமது பொக்கிஷமாய் இருக்கிறது. (2 கொரிந்தியர் 4:6-7).

6. கிறிஸ்துவுக்குள்ளாக ஒவ்வொரு ஆவிக்குரிய ஆசீர்வாதங்களால் ஆசீர்வதிக்கப்பட்டுள்ளோம். - அவருக்காக அவை அனைத்தையும் பகிர்ந்து கொடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். (எபேசியர் 1:3).

7. தேவன் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களுடன் ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார் (3 யோவான் 2). எல்லா சூழ்நிலைகளிலும் நாம் மன ரம்மியமாய் இருக்க கற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். (பிலிப்பியர் 4:11-13)

8. தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளும் ஆசீர்வாதங்களாவன:

a) சமாதானம் (சங்கீதம் 29:11).
b) ஆறுதல்கள் (மத்தேயு 5:4).
c) ஐசுவரியம் (நீதிமொழிகள் 10:22).
d) மழை (Ezekiel 34:26).

9. விசுவாசிகள் தேவனிடமிருந்து பெறும் ஆசீர்வாதங்களால் மகிழ்வன:

a) நீதி (சங்கீதம் 5:12)
b) நியாயம் (நீதிமொழிகள் 3:33)
c) உண்மை (நீதிமொழிகள் 28:20)
d) இருதயத்தில் சுத்தம் (சங்கீதம் 24:4,5)

10. தேவனது ஆசீர்வாதங்கள் இவைகளால் பெற்றுக்கொள்ளப்படுகின்றன:

a) அவரது வார்த்தையில் மன மகிழ்ச்சி கொள்ளும்போது (யோசுவா 1:8; சங்கீதம் 1:1 -3).
b) தேவனது வசனத்திற்கு கீழ்ப்படியும் போது (உபாகமம் 28:1,2; யாக்கோபு 1:25)
c) தேவனது வசனத்திலிருந்து போதிக்கும்போது (சங்கீதம் 94:12; எபிரெயர் 12:5-11)
d) யூதர்களிடத்தில் அன்பு கூறும்போது (ஆதியாகமம் 12:3; சங்கீதம் 122:6).
e) தாரளமாய் கொடுக்கும்போது (நீதிமொழிகள் 11:26; மல்கியா 3:10)
f) தேவனது வழியில் நடக்கும்போது (சங்கீதம் 128:1-4)
g) ஜெபத்தின் மூலம் (யாக்கோபு 5:16).

11. வெளிப்படுத்தின விஷேசத்தில் உள்ள ஆசீர்வாதங்கள்:

a) இப்புஸ்தகத்தில் உள்ளவைகளுக்கு கவனமாய் செவிகொடுப்பவர்களுக்கு - 1:3, 22:7
b) கர்த்தருக்குள் மரித்தவர்களுக்கு - 14:13
c) இரண்டாம் வருகை குறித்து உபத்திரவ காலத்தில் ஜாக்கிரதையாய் உள்ளவர்களுக்கு 16:15
d) ஆட்டுக்குட்டியானவரின் திருமண விருந்தில் கலந்து கொள்பவர்களுக்கு - 19:9
e) முதலாம் உயிர்த்தெழுதலுக்கு பங்குள்ளவர்களுக்கு - 20:6
f) விசுவாசிகளானோருக்கு பரலோகில் நித்திய ஆசீர்வாதங்கள் உண்டு - 22:14

தேவதூதர்கள் - தேவதூதர்களின் முறண்பாடு:

1. தேவதூதர்களின் முறண்பாடுகள் இருக்கிறபடியால், இவ்வுலகில் நாம் இருக்கும்போது, அவைகளுக்கும் நமக்கும் நெருங்கிய சம்பந்தம் இருக்கிறது.

2. கடந்தகால நித்தியம்:

[அ] முதலாவதாக ஆரம்பத்தில் தேவன் தூதர்களைச் சிருஷ்டித்தார். அவர்கள் சிருஷ்டிப்பின்போது அவர்கள் ஒருமித்து ஏகமாய் பாடி துதிசெய்தார்கள் என சொல்லப்படுகிறது.

[ஆ] லூசிபர் என அறியப்படும் சாத்தான், அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி நட்சத்திரம் என அறியப்படுகிறான், அவன் தேவ தூதர்கள் அனைவருக்கும் தலைவனாய் இருந்தான் ஏசாயா 14. எசேக்கியேல் 28:12-15.

[இ] கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து இப்பொழுது அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளி நட்சத்திரம் என அழைக்கப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது 2 பேதுரு 1, இயேசு சிலுவையில் வெற்றி சிறந்ததன் விளைவாக சாத்தானுக்குப் பதிலாக இப்படிப்பட்ட அந்தஸ்தானது கிறிஸ்துவுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

3. சாத்தானின் வீழ்ச்சி:

[அ] சாத்தான் பெருமைக்குள்ளானவனாகி, தேவனுக்கு விரோதமான இன்னொரு அரசாளுகையை முயற்சி செய்தான். ஏசாயா 14:12-17.

[ஆ] சாத்தானின் வீழ்ச்சியின் போது, மூன்றில் ஒரு பங்கு தேவதூதரை தன்னுடன் எடுத்துக்கொண்டான். வெளிப்படுத்தல் 12:9.

[இ] எந்நாளும் இருக்கும்படியாக ஏற்படுத்தப்பட்ட தேவதூதர்கள் இதினிமித்தம் இரு பிரிவாக நிரந்தரமாய் பிரிக்கப்பட்டனர்.

i) தெரிந்து கொள்ளப்பட்ட தேவதூதர்கள், இவர்கள் தேவனுடன் உண்மயுடன் சேவித்து வருகின்றனர் (1 தீமோத்தேயு 5:21).

ii) விழுந்து போன தேவதூதர்கள் இவர்கள் சாத்தானைப் பின்பற்றிபோனவர்கள் இவர்கள் இரு பிரிவாகப் பிரிக்கப்படுகின்றனர்.

[1] ஜலப்பிரளயத்தின்போது செயல் இழந்தோராய் சிறைப்படுத்தப்பட்டவர்கள். (யூதா 6, 2 பேதுரு 2:4).

[2] பிசாசுகள் தற்போது செயல்பட்டு வருபவர்கள் (1 கொரிந்தியர் 10:20,21, மாற்கு 5:1-20).

[ஈ] இதினிமித்தம் ஆவிக்குரிய யுத்தமானது தெரிந்து கொள்ளப்பட்ட தேவதூதர்களுக்கும் மற்றும் விழுந்து போன தேவதூதர்களுக்குமிடையே நிகழ்ந்து வருகின்றன, இது மனுவர்க்கத்தையும் பாதிக்கிறதாய் இருக்கிறது. (எபேசியர், 6:12, வெளிப்படுத்தல் 12).

4. விழுந்து போன தேவதூதர்களுக்கான தண்டனை:

[அ] கடந்த கால நித்தியத்தில் சாத்தானும் விழுந்து போன தேவ தூதர்களும், நியாயந்தீர்க்கப்பட்டு, கந்தகமும் அக்கினியும் எரிகிற கடலில் தள்ளப்படும் தண்டனையைப் பெற்றனர். - மத்தேயு 24:51.

[ஆ] அவனுக்கு அளிக்கப்பட்ட தண்டனையை அவன் மறுபடியும் மறு பரிசீலனை செய்ய தேவனிடம் முறயிட்டான், "அன்புள்ளம் கொண்ட தேவன் தனது சிருஷ்டிகளுக்கு எவ்வாறு அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலுக்கு அனுப்பும் தண்டனைய அளிப்பது? என்றான்.

[இ] இதற்கான பதில் தேவனது குணாதிசயங்களில் விளங்குகிறதாய் இருக்கிறது, அவர் பரிசுத்தமும் அதே சமயம் அன்புள்ளவராயும் இருக்கிறார், அவரது பரிசுத்தமானது பாவத்தையும் மற்றும் கலகத்தையும் நியாயந்தீர்க்கிறதாய் இருக்கிறது.

[ஈ] அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலானது மனிதனுக்காக சிருஷ்டிக்கப்படவில்லை. மனிதன் தேவனுக்கு எதிரான தனது சொந்த எதிர்மறையான நடத்தையினால், அங்கு சென்று பங்கடைகிறவனாய் இருக்கிறான்.

5. தேவ தூதர்களின் முறண்பாட்டில், மனிதனது கடமை:

[அ] மேற்கூரிய தண்டனையானது மனிதன் தோன்று முன்னரே, அளிக்கப்பட்டதாய் இருக்கிறது, மற்றும் ஆயிர வருட அரசாட்சியின் இறுதிவரை இத்தண்டனையானது நிறைவேறாது. வெளிப்படுத்தல் 20:10.

[ஆ] இது நீண்ட கால இடைவெளியாய் இருந்து, தண்டனையானது நிறைவேற்றப்படும் கால இடைவெளியானது முழுமையான மனித சரித்திரம் நிறைவடைகிறவரை நீளுகிறதாய் இருக்கிறது. இதினிமித்தம் மனித வர்க்கம் இருப்பது மற்றும் அவர்கள் தேவனோடு சம்பந்தப்படுவது, தேவதூதர்களுக்கு சாட்சியாய் விவரிக்கப்படுவதற்காக மட்டும் ஆகும்.

[இ] மனிதனை தேவன் சிருஷ்டித்ததன் மூலம், சாத்தானுக்கும் அவனது தூதர்களுக்கும் அவர்களது பாவத்தைக் குறித்து, தேவன் தெளிவான சட்டரீதியான சாட்சியை விளங்கப்பண்ணுகிறவராய் இருக்கிறார். மனிதவர்க்கத்தின் முழுமையான சரித்திரமானது, தேவதூதர்களின் பாவத்தை நிச்சயப்படுத்துவதாய் இருக்கிறது. கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் விசுவாசிகளாய் இருக்கும் உங்கள் வாழ்வில், தேவதூதர்களுக்கு சாட்சியாய் விவரிக்கப்பட சில காரியங்கள் நிகழலாம்.

6. மனிதனின் வீழ்ச்சியும் மற்றும் தேவமனிதரின் ஜெயமும்:

[அ] மனிதனின் ஆரம்பமானது தேவ தூதர்களுக்கும் சற்று கீழானதாய் இருந்தது. எபிரெயர் 2:9, கூறுகிறது, இயேசுக் கிறிஸ்துவும் தேவதூதர்களுக்குச் சற்று சிறியவராக உருவாக்கப்பட்டார்.

[ஆ] ஆதாம் ஜெயமுள்ளவனாய் இருக்கத் தவறியதால், சரித்திரத்தில் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து ஆதாமுக்குப் பதிலாக தனது மனுஷீகத்தில் யுத்தத்தில் ஜெயம் பெற்றவராய் விளங்குகிறார். 1 கொரிந்தியர் 15:22 கூறுகிறது, ஆதாமுக்குள் எல்லோரும் மரித்தவர்களாய் இருக்கிறோம், கிறிஸ்துவுக்கும் எல்லோரும் ஜீவனைப் பெற்றவர்களாய் இருக்கிறோம்.

[இ] தேவ தூதர்களை நியாயந்தீர்க்கும் புதிய ஜீவிகள் உருவாகினர். 1 கொரிந்தியர் 6:1-3.

7. தேவதூதர்களுக்கும் மனிதருக்கும் இடையே உள்ள ஒற்றுமைகள்:

[அ] தேவ தூதர்களுக்கும் மனிதருக்கும் இடையே இணையான காரியங்கள் உண்டு, மனிதனின் சுய சித்தமானது பரீட்சிக்கப்பட்டது போலவே, தேவதுதர்களின் சுயசித்தமும் பரீட்சிக்கப்பட்டது.

[ஆ] தேவதூதர்களின் ஆரம்பம் அறியாமையுள்ளவராய் இருந்து முழு கீழ்ப்படிதலுடன் தேவனை சேவித்தனர். (யோபு 38:7 எசேக்கியேல் 28:14-15).

மனிதன் அறியாமையுள்ளவனாய் ஆரம்பம் செய்தான் (ஆதியாகமம் 2:25)

தேவதூதர் பாவம் செய்தனர் - சாத்தானின் கலகம் (ஏசாயா 14:12-14).

மனிதன் பாவம் செய்தான் - ஆதாமின் கலகம் (ஆதியாகமம் 3:1-7).

தேவ தூதர்கள் இருதரப்பினராய் பிரிக்கப்பட்டனர் - தெரிந்து கொள்ளப்பட்டோர் மற்றும் விழுந்து போனோர்.

மனிதரும் இரு பிரிவினராய் பிரிக்கப்பட்டனர் - விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள்.

8. ஆதாமும் சுய சித்தமும்:

[அ] தேவன் ஆதாமையும் ஏவாளையும் சிருஷ்டித்தார், சாத்தானுக்கு தேவ தூதரிலும் சிறியவராய் அவர்கள் உண்டாக்கப்பட்டனர் என்பதைக் காட்டும்படியாக (எபிரெயர் 2:6-7), மற்றும் அவர்கள் தேவனுக்கு கீழ்ப்படிந்திருப்பதை தெரிந்து கொள்ளும் படியாக. இதினிமித்தம் மனுக்குலத்திற்கு தெரிவு செய்யும் சுயசித்தமானது அளிக்கப்பட்டு, அவர்கள் தேவனுக்குக் கீழ்ப்படிந்து ஆசீர்வாதமாய் இருப்பதை அல்லது கீழ்ப்படியாது நியாயந்தீர்க்கப்படுவதை அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டியதாய் இருந்தது. (இது போன்ற தெரிவு செய்யும் சுயசித்தத்தினை சாத்தானும் பெற்றிருந்தான்).

[ஆ] மனிதனின் சுயசித்தத்திற்கு ஒரு பரீட்சையானது வைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டது: - தேவனுக்குக் கீழ்ப்படிவதா அல்லது கீழ்ப்படிய மறுப்பதா (ஆதியாகமம் 2:16-17). ஆதாமும் எல்லா மனுக்குலமும் பாவம் செய்து தேவனுக்கு விரோதமாய் பாவம் செய்தனர். சாத்தான் பாவம் செய்து கலகம் செய்தது போலவே எல்லா மனுக்குலமும் பாவம் செய்து சாத்தானைப்போன்று பாவ நிலையில் காணப்பட்டனர்.

[இ] இவ்வாறு இருக்க தேவன் மனுக்குலத்திற்கு இன்னொரு பரீட்சை வைத்து நிர்வகிக்கலானார் - அவர்கள் இயேசுக்கிறிஸ்துவின் மூலம் தேவனிடம்

திரும்புவதைத் தெரிவு செய்வார்களா? அல்லது அவர்கள் தொடர்ந்து தங்களது பாவத்தில் நிலைகொண்டு கலக்காரராய் இருப்பார்களா? என்பதே அப்பரீட்சையாய் இருக்கிறது. (யோவான் 3:16, 2 பேதுரு 3:9).

[ஈ] தேவனிடமாய் திரும்புவதைத் தெரிவு செய்பவர் இரட்சிப்படைவர், மற்றும் தொடர்ந்து தேவனுக்குக் கலகக்காரராய் இருப்பதைத் தெரிவு செய்பவர் நியாயந்தீர்க்கப்பட்டு அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் பங்கடைவர். இதைப்போலவே சாத்தானின் இறுதி தீர்ப்பாய் இருக்கிறது. (மத்தேயு 25:41).

[உ] இதினிமித்தம் சிலுவையில் கிறிஸ்துவின் தியாகக் கிரியையின் மூலம், மனிதனின் சுயசித்தத்தை கிறிஸ்து மீது வைக்கும் போது, தேவன் தமது அன்பின் மூலம் அந்நபரை இரட்சிப்பதற்கும் தனது நீதியினால் நியாந்தீர்க்கவும் குற்ற மனசாட்சியிலிருந்து விடுவிக்கவும் வல்லவராய் இருக்கிறார்.

9. தேவதூதர்களது முறண்பாட்டின் தீர்மானம்:

முதல் நிலை: - இரட்சிப்பு - விசுவாசத்தினால், மனிதன் இரட்சிப்படைந்து அவனது ஸ்தானமானது தேவதூதர்களைவிட உயர் நிலைக்கு உயர்த்தப்பட்டது. (எபிரெயர் 2:6-7).

இரண்டாம் நிலை: - கிறிஸ்தவ நடக்கை - விசுவாசத்தினால், விசுவாசியானவன் சாத்தானை மேற்கொண்டவனாய் இருக்கிறான். (எபேசியர் 6:10-17)

மூன்றாவது நிலை: - நித்தியம் - கிறிஸ்துவுக்குள்ளாய், விசுவாசியானவன் சாத்தானையும் அவனது தூதர்களையும் நியாயந்தீர்க்கிறவனாய் இருக்கிறான். (எபிரெயர் 2:8, 1 கொரிந்தியர் 6:3)

10. மேகம் போன்ற திராளன சாட்சிகள்:

தேவ தூதர்கள் மனித வர்க்கத்தைக் கவனித்துக் கொண்டிருக்கின்றனர். (1 கொரிந்தியர் 4:9, எபேசியர் 3:10, 1 தீமோத்தேயு 5:21, 1 பேதுரு 1:12). ஒவ்வொரு சமயத்திலும் ஒரு இரட்சிப்படையும் போது தெரிந்து கொள்ளப்பட்ட தேவ தூதர்கள் மகிழ்கிறவர்களாய் இருக்கின்றனர். (லூக்கா 15:10)

11. மூன்று அடிப்படைக் கேள்விகள்:

தேவதூதர்களின் முறண்பாடு மூன்று அடிப்படை கேள்விகளுக்கு பதில் அளிக்கின்றன:

[அ] மனிதன் உண்டாக்கப்பட்டதற்கான காரணம் என்ன? மனிதனுக்குள் ஆத்துமாவும், மனநிலையும் மற்றும் சுயசித்தமும் இணைக்கப்பட்டு தேவதூதரின் முறண்பாட்டை தீர்த்து வைக்கிறதாய் இருக்கிறது. (கொலோசெயர் 2:14-15, எபிரெயர் 2). சிலுவையானது தேவதூதர்களின் கலகத்தில் உண்மையான ஜெயமாய் இருக்கிறது.

[ஆ] பாவத்திற்கான காரணம் என்ன? பாவம் தீர்த்துவைக்கப்படுகிறதாய் இருக்கிறது தேவனது திட்டம் முதல் நிலை (ஒன்பதாவது பத்தியைப் பார்க்கவும்). பாவமானது சிலுவையின் மீது நியாயந்தீர்க்கப்பட்டதாய் இருக்கிறது மற்றும் மனிதனுக்கும் தேவனுக்குமிடையே இருந்த தடைச்சுவரானது அகற்றப்பட்டது, இதினிமித்தம் தேவனுடன் மனிதனது உறவானது, அவனது சுயசித்தத்தைச் சார்ந்ததாய் இருக்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், மனிதர் இரட்சிப்படையும் போது, தெரிந்து கொள்ளப்பட்ட தேவதூதர்கள் மனமகிழ்கிறவர்களாய் இருக்கின்றனர். ஏதேன் தோட்டத்தில் மனிதன் அறியாமையுள்ளவனாய் இருந்தான் மற்றும் அவன் செய்ய வேண்டியதெல்லாம் நன்மை தீமை அறியத்தக்க அவ்வொரு மரத்திற்கும் அதின் கனிக்கும் மட்டும் விலகியிருக்க வேண்டியதாய் இருந்தது. இப்பொழுது மனிதன் குற்றமனசாட்சியுடன் ஒரு மரத்திற்கு அருகில் வர வேண்டியதாய் இருக்கிறது (அது சிலுவை மரம்) (ஆதியாகமம் 2:17, 1 பேதுரு 2:24).

[இ] பாடுகளுக்கான காரணம்? பாடுகளும் துன்பங்களும் இரண்டாவது நிலையிலுள்ள பிரச்சனையை தீர்த்துவைக்கிறதாய் இருக்கிறது. பாடுகளும், துன்பங்களும் வாக்குத்தத்த அடிப்படையை உள்ளடக்கியதாய் இருக்கிறது. (1 பேதுரு 1:7-8, ரோமர் 5:2-4). பாடுகளும் துன்பங்களும் ஆசீர்வாதங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. அவைகள் சாத்தானுக்குக் கீழ்ப்பட்டவைகளாய் இருக்கின்றன. இது தேவனது அன்பை நிருபணம் செய்கிறதாய் இருக்கிறது, பாடுகளும், துன்பங்களும் நித்தியத்தில் இல்லாதவைகளாய் இருக்கின்றன, அங்கு வருத்தம், வேதனை அல்லது மரணம் இவைகள் இல்லை. (வெளிப்படுத்தல் 21:4).

12. முறண்பாட்டில் உள்ள நிலைகள் [தேவனது திட்டத்தில் சாத்தானின் தாக்குதல். பார்க்க:]

[அ] மனிதனின் வீழ்ச்சியிலிருந்து கிறிஸ்துவின் பரமேறுதல் வரை சாத்தானின்

தாக்குதல்கள் நிகழ்ந்து வந்தன. பரமேறுதல் சரித்திர உண்மையான பின்னர் இரட்சகரின் வம்சாவழியை சாத்தானால் தாக்குதல்கள் நடத்த முடியவில்லை.

[ஆ] கர்த்தராக்கிய இயேசுக்கிறிஸ்து, உயிர்த்தெழுதல், பரமேறுதல், பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருத்தல் மூலம் தேவ தூதரின் முறண்பாட்டை வலுப்படுத்த காரணமாய் அமைந்தது.

[இ] கிறிஸ்து மகிமையடைந்து பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்த பொழுது, சபையுகத்தில் தேவ தூதர்களின் முறண்பாடானது இன்னும் அதிகமாய் வலுப்பட துவங்கியது.

[ஈ] சபை யுகத்தில் வாழும் ஒவ்வொரு விசுவாசியும் அவனது இலக்காக இருக்கின்றனர், இக்காரணத்தினால் ஒவ்வொரு விசுவாசிக்கும் விஷேசமான காரியங்கள் தேவனால் அளிக்கப்பட்டுள்ளன:

i) பரிசுத்த ஆவியானவர் ஒரு விசுவாசிக்குள் வாசம் பண்ண அருளப்பட்டிருக்கிறார் (யோவான் 14:17).
ii) இயேசுக்கிறிஸ்து ஒரு விசுவாசிக்குள் வாசம் பண்ணுகிறவராய் இருக்கிறார். (யோவான் 14:23).
iii) வேத வசனங்களின் பகுப்பானது முழுமை அடைந்து விசுவாசிகளின் கரத்தில் அருளப்பட்டுள்ளது. (1 கொரிந்தியர் 13:10).

13. கந்தகமும் அக்கினியும் எரிகிற கடலின் முன்னேற்றம்:

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் அமரும் படி உயர்த்தப்பட்டது துவங்கி, இறுதி நியாயத்தீர்ப்பு வரையுள்ள காலங்களின் செயல்பாடுகளை இது விவரிக்கிறதாய் இருக்கிறது. சங்கீதம் 110:1 ன் படி, "கர்த்தர் [பிதாவாகிய தேவன்] என் ஆண்டவரை [குமாரானாகிய தேவன்] நோக்கி: நான் உம்முடைய சத்துருக்களை உமக்கு பாதப்படியாக்கி போடும் வரைக்கும், நீர் என் வலது பாரிசத்தில் உட்காரும் என்றார்."

[அ] முதல் நிலை: - கிளர்ச்சிப் போராட்டம் / யுத்தம் - பெந்தேகொஸ்தே நாள் முதல் - சபை எடுத்துக்கொள்ளப்படும் வரை.

இக்காலத்தில், ஆக்கினைக்குள்ளாக தீர்க்கப்பட்ட தேவதூதர்கள் ஆலோசனை சங்கத்தை மாற்றி அமைக்க, தம்முடையவர்களை கிறிஸ்து அழைக்கிறவராய் இருக்கிறார். 1 கொரிந்தியர் 4:8, 6:1-3, 2 தீமோத்தேயு 2:12, வெளிப்படுத்தல் 3:21.

தேவ தூதரின் ஆலோசனை சங்கத்திற்கு உட்படுவோர் தேவனும் இவ்வேத வசனங்களில் காணப்படுவோரும் ஆகும்: 1 இராஜாக்கள் 22:19-23 மற்றும் 2 கொரிந்தியர் 18:18-23.

[ஆ] இரண்டாம் நிலை: - சபை எடுத்துக்கொள்ளப்படுதல் முதல் இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகை வரை - எதிர்கொள்ளுதல். [Confrontation]

இக்காலத்தில் தேவ தூதர்களின் ஆலோசனை சங்கத்திற்காக புதிய அங்கத்தினர், பரிசீலிக்கப்பட்டு அவர்களது தெய்வீக மற்றும் மனுஷீக நன்மைகளுக்கு தக்கவாறு ஏற்படுத்தப்படுவர். இது அவர்களது பிரதிபலனைக் காட்டுகிறது .[1 கொரிந்தியர் 3:11-15], அவர்கள் உயிர்த்தெழுந்த சரீரத்தில் இருப்பர் தங்களது பழைய பாவ சுபாவம் அகற்றப்பட்டிருக்கும். கலகம் செய்த அங்கத்தினர், சாத்தான் மற்றும் அவனுடன் விழுந்து போன தேவ தூதர்கள் பரலோகிலிருந்து அகற்றப்படுவர். வெளிப்படுத்தல் 12:4.

[இ] மூன்றாம் நிலை: - இரண்டாம் வருகை முதல் - ஜெயம் பெற்ற நிஅலை வரை.

கிறிஸ்து சாத்தானையும் அவனுடன் விழுந்து போன தேவதூதர்களையும் ஆயிரம் வருடம் நரகத்திலே தள்ளுவார். இதைத், தமது உரிமையின் படியே உள்ள அதிகாரத்தினால் இதை நடப்பிப்பார்.

[ஈ] நான்காவது நிலை: - இறுதி நியாயத்தீர்ப்பு. அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலானது சாத்தானுக்காகவும் அவனுடன் விழுந்து போன தேவ தூதர்களுக்காகவும் சிருஷ்டிக்கப்பட்டது. மத்தேயு 25:41.

சாத்தான் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே, அவனது பிசாசுகளுடனும், அவிசுவாசிகளுடனும் தள்ளப்படுவான். அவிசுவாசிகள் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவதற்கான காரணம், அவர்கள் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை தங்களது சொந்த இரட்சகராயும், கர்த்தராயும்

ஏற்றுக்கொள்ளவில்லை. பழைய சிருஷ்டிப்பு அனைத்தும் அழிக்கப்பட்டு, தேவனால் புதிய வானங்களும், புதிய பூமியும் தேவனால் அளிக்கப்படும். இக்காலகட்டத்தில், எல்லா முழங்கால்களும் முடங்கும் மற்றும் அவரது சத்துருக்களை அவரது பாதப்படியில் கீழ்ப்படுத்தப்படுவது நிறைவேறும்.

14. விசுவாசிகளும் தேவதூதரின் முறண்பாட்டின் விளைவும்:

தேவ தூதர்களது முறண்பாட்டின் விளைவுகள்:

முதல் நிலை: இரட்சிப்பு - மனுக்குலமானது இரட்சிக்கப்படைந்து அவர்களது ஸ்தானமானது தேவதூதர்களின் ஸ்தானத்திலிருந்து உயர்த்தப்படல்.

இரண்டாம் நிலை: கிறிஸ்தவ நடக்கை: - பாடுகள் உபவத்திரவங்கள் மூலம், விசுவாசியானவன் கிறிஸ்துவின் மேல் உள்ள விசுவாசத்தில் பெலப்பட்டு, விழுந்து போன தேவ தூதருக்கான இறுதி அழிவை நிச்சயப்படுத்துகிறவனாய் இருக்கிறான்.

மூன்றாம் நிலை: - பரலோகம்: - நித்தியத்தில் தனது உயிர்த்தெழுந்த சரீரத்தினால், சரீரப்பிரகாரமாக தேவதூதர்களைவிட, உயர்ந்தவர்களாய் விளங்குவர்.

15. இறுதியுரை:

சாத்தான் மனிதனின் வீழ்ச்சியினால், உலகத்தைத் தனது கட்டுப்பாட்டில் வைத்துக்கொண்ட போதும், மனுக்குலத்தை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்ள அவசியமில்லாதிருந்தது.

பிசாசுகளின் உலகத்தில் அவர்களது கட்டுப்பாட்டிற்குள் இருக்கவிடாது செய்வது என்ன? - சுய சித்தம்.

தேவனது வார்த்தையை பயன்படுத்தி, சாத்தானுக்கும் அவனது கொள்கைகளுக்கும் எதிரான தீர்மானங்களை நீங்கள் எடுக்க இயலும்.

சாத்தான் இப்பிரபஞ்சத்தின் அதிபதியாய் இருக்கிறான். (2 கொரிந்தியர் 4:4, யோவான் 12:31, 14:30, 16:11, எபேசியர் 2:2).

எப்படியிருப்பினும் நமக்கு முழுமையாக்கப்பட்ட வேதாகமம் இருப்பதால், - முழுமையான கிறிஸ்துவின் சிந்தை அதில் இருப்பதால், (1 கொரிந்தியர் 2:16) நாம் அதை அறிந்து கொள்ள முடியும் மற்றும் அதை நமது வாழ்விற்காய் பயன்படுத்தவும் கூடும்.

Satan is the ruler of this world. (2 Corinthians 4:4, John 12:31, 14:30, 16:11, Ephesians 2:2)

<u>அத்தியாயம் ஐந்து</u>

சேவகனுக்குரிய தலைமைத்துவம் - எல்லா அப்போஸ்தலரும் தங்களை "சேவகர்" / "அடிமை" எனக் குறிப்பிடுகின்றனர். யூதா 1-4.

நாம் அப்போஸ்தலரின் விசுவாசத்தைக் கைக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம் - அப்போஸ்தலரையும், இயேசுவையும், பிரதிபலிக்கிறவர்களாய் இருப்போமாக.

1. சுவிஷேச வேதபகுகள்:

[அ] மத்தேயு 10:24-31.

"24. சீஷன் தன் போதகரிலும், வேலைக்காரன் தன் எஜமானிலும் மேற்பட்டவனல்ல. 25. சீஷன் தன் போதகனைப்போலவும், வேலைக்காரன் தன் எஜமானைப்போலவும் இருப்பது போதும், வீட்டெஜமானையே பெயல்செபூல் என்று சொன்னார்களேயானால், அவன் வீட்டாரை அப்படிச் சொல்வது அதிக நிச்சயமல்லவா? 26. அவர்களுக்குப் பயப்படாதிருங்கள்; வெளியாக்கப்படாத மறைபொருளும் இல்லை. அறிபப்படாத இரகசியமும் இல்லை. 27. நான் உங்களுக்கு இருளிலே சொல்வதை வெளிச்சத்திலே சொல்லுங்கள்; காதிலே கேட்கிறதை நீங்கள் வீடுகளின் மேல் பிரசித்தம் பண்ணுங்கள். 25. ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம்

கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமத்தையும், சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள். 29. ஒரு காசுக்கு இரண்டு அடைக்கலான் குருவிகளை விற்கிறார்கள் அல்லவா? ஆயினும் உங்கள் பிதாவின் சித்தமில்லாமல், அவைகளில் ஒன்றாகிலும் தரையிலே விழாது. 30. உங்கள் தலையில் உள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது. 31. ஆதலால் பயப்படாதிருங்கள்; அநேக அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும், நீங்கள் விஷேசித்தவர்களாய் இருக்கிறீர்கள்."

பிரதிபலிப்பு

காரியங்களின் இயல்பான ஒழுங்குகள் இயேசுவின் காலத்து உலகில் எல்லோராலும் எளிதாய் புரிந்துகொள்ளக்கூடியதாய் இருந்தது. ஒரு வேலைக்காரன் தனது எஜமானிலும் பெரியவன் அல்ல, அதே போல ஒரு சீஷன் தன் போதகரிலும் பெரியவன் அல்ல. பெரிதான காரியம் என்னவெனில், வேலைக்காரன் தனது கர்த்தரைப்போல இருக்க எதிர்பார்க்கப்படனர், சீஷர்கள் தனது ரபியைப் போல இருக்க கனவு காண்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். இதன் மூலம் அவர்கள் அர்த்தம் செய்து கொண்டது என்னவென்றால், அவர்கள் தங்கள் ஸ்தானத்தை சமுதாயத்தில் பகிர்ந்தளித்தல் வேண்டும். அவர்களது அந்தஸ்து மற்றும் கனம் மனுக்குலத்தில் விளங்குவதாய் இருத்தல் வேண்டும், அவர்களது ஐசுவரியம், அவர்களது குடும்பம், எதிர்காலம் அவர்களது முடிவு அனைத்தும் சமுதாயத்திற்கென அற்பணித்தவர்களாய் இருத்தல் வேண்டும். இப்படிப்பட்ட ஜனங்களது முழுமையான பெலன் மற்றும் இவ்வுலகப்பிரகாரமான தற்காலிக காரியங்களை இவ்வுலகில்தானே செலவழித்தல் வேண்டும் அவைகள் நித்தியத்தில் நிலைத்திருப்பவைகள் அல்ல. இயேசு இப்படிப்பட்ட மக்களில் இருந்து துவங்கி, அவரை அவரது ஊழியத்தில் அவரை எதிர்த்து தாக்கினவர்களை அவர், "பேலியாலின் மக்கள்" என அழைத்தார், தனக்குச் சொந்தமானவர்களுக்கும் அவர்களுக்கும் உள்ள அதிகாரமானது முறண்பாடாய் இருந்தது. தனது சீஷர்களை அவர்களது நடத்தையைப் பின்பற்றாதிருக்க தனது சீஷர்களை இயேசு வற்புறுத்தினார்.

எதிராளியின் "வீட்டு எஜமான்" என அழைக்கப்படுவது சாத்தானாய் இருக்கிறான், இயேசு இங்கு பழைய தலைப்பாகிய பெயல்செபூல் என்கிற பதத்தை பயன்படுத்துகிறவராய் இருக்கிறார், இதன் அர்த்தம் "ஈக்களின் கர்த்தன்" [“lord of the flies”,] சாத்தான் தன்னைச் சுற்றிலும் பலிசெலுத்தப்பட்டவர்களின் இரத்தத்திலும்,

மற்றும் வெட்டப்பட்டவர்களின் சரீரத்திலும் அமரும் ஈக்களைப்போல இருக்கிறான். அவன் ஆதிமுதற்கொண்டு மனுஷ கொலைபாதகனாய் இருக்கிறான், அவன் மற்றவர்களது துன்பத்தில் இன்பம் காண்கிறவனாயும், மனுக்குலத்தை வெறுக்கிறவனாயும் இருக்கிறான். அவன் தன்னில்தானே தீமையானவனாகவும், ஆளுகிறவனாகவும் இருக்கிறான், அவர் வெட்டி படுகொலை செய்வதில் மகிழ்ச்சியுள்ளவனாய் காணப்படுகிறான். தங்களது தீமையான எஜமானனை பின்பற்றுகிறவர்களும் அவனைப்போலவே இருக்கின்றனர், மற்றும் சாத்தான் கர்த்தரை வெறுத்துத் தாக்கினது போலவே, அவனைப் பின்பற்றுகிறவர்கள் சீஷர்களையும் தாக்குகிறவர்களாய் இருக்கின்றனர்.

இயேசு தனது சீஷர்களை இதைப் பார்க்கும்படி வற்புறுத்துகிறவராய் இருக்கிறார், இது இயல்பாய் எதிர்பார்க்கக்கூடிய ஒன்றாய் இருக்கிறது, அது வரும்போது கலங்க வேண்டிய அவசியம் இல்லை. அவர்கள் தீமையின் தன்மையை புரிந்து கொள்ள வேண்டியவர்களாய் இருந்தனர், அதன் அழிவாற்றலைக் குறித்து அவர்கள் ஆச்சரியப்பட வேண்டாதவர்களாய் இருந்தனர். அவர்கள் கர்த்தரால் தனிப்பட்ட விதத்தில் பயிற்சி அளிக்கப்பட்டு வந்தனர், அவர்கள் பயிற்சியின் போது கற்றுக்கொண்டவைகளை சரியான சமயம் வரும்போது வெளிப்படையாய் கூறும்படி வற்புறுத்தப்பட்டனர். தங்களுக்கு மரணமே நேரிடினும், பயமின்றி பேச வற்புறுத்தப்பட்டனர். தீமை செய்கிறவனைப் பின்பற்றுகிறவர்கள், தங்களது இறுதி நித்தியம் நரக அக்கினி என்பதை நிரூபணம் செய்கிறவர்களாய் இருந்தனர். கர்த்தரைப் பின்பற்றுகிறவர்கள் தங்களது இறுதி நித்தியம் பரலோகம் என நிரூபணம் செய்கிறவர்களாய் இருந்தனர். கர்த்தரைப்பின்பற்றின எல்லோரும், அவர் போதித்தவைகளை திரும்ப போதிக்கிறவர்களாய் இருக்கிறோம். அவர் நிலைத்து நின்றவைகளுக்காக நாமும் எவ்விதபயமுமின்றி நிலைத்து நிற்கிறவர்களாய் இருக்கிறோம், அவர் ஆகாயத்து பட்சிகளைவிட, நம்மைக்குறித்து அதிக கரிசனை உள்ளவராய் இருக்கிறார்,

தலைமைத்துவ நடைமுறை:

1. கிறிஸ்துவைப்போன்றிருத்தல்: எதிராளிகள் அவர்களது எஜமானனைப்போன்று இருக்கும் பொழுது, நாம் நமது கர்த்தரைப் பிரதிபலிக் கிறவர்களாய் இருத்தல் அவசியம். வேதாகம தலைவரானவர் இயேசுவைப் போன்றிருத்தல் அவசியம், குணாதிசயத்தில், மதிப்பிடுவதில், வார்த்தையில், செய்கையில், கர்த்தரின் சத்தியத்தைக் குறித்து சாட்சிபகருவதில் அவரைப் போன்றே இருத்தல் வேண்டும். சாத்தானின் மக்களைப் போன்று உடையணியாது மற்றும் "ஈக்களின் கர்த்தன்" ஐப்

போன்று செயல்படாது இருத்தல் வேண்டும்.

2. பயமின்றி இருத்தல் வேண்டும்: நாம் கர்த்தரின் பராமரிப்பிற்குக் கீழ் இருப்போமானால், மற்றும் நாம் அவரைச் சார்ந்து இருப்பவர்களாய் இருப்போமானால், நாம் அவருக்குரியவர்களாய் இருப்போமென்றால், நாம் அவரது கரத்திற்குள் மிகவும் பாதுகாப்பாய் இருக்கிறோம். நமது கண்ணோட்டம் அனைத்தும் நித்தியத்திற்கடுத்ததாய் இருத்தல் வேண்டும். இவ்வுலகில் வாழும் நமது வாழ்க்கையில் கீழ்ப்படிதலை அதிகம் மதிக்கிறவர்களாய் இருந்து பரலோக காரியங்களுக்கு பயத்திற்கு மேலாக கருதுகிறவர்களாய் இருக்கிறோம். Refer to BTB study of CHRISTIAN LIFE: CHRIST FORMED IN YOU. கிறிஸ்தவ வாழ்க்கை: கிறிஸ்து உங்களில் உருவாகும் விதம். ஒப்பிடுக.

[ஆ] மத்தேயு 18:23-35.

"23. எப்படியெனில், பரலோகராஜ்ஜியம் தன் ஊழியக்காரரிடத்தில் கணக்குப்பார்க்கவேண்டுமென்றிந்த ஒரு ராஜாவுக்கு ஒப்பாயிருக்கிறது. 24. அவன் கணக்குப்பார்க்கத் தொடங்கியபோது, பதினாயிரம் தாலந்து கடன்பட்டவன் ஒருவனை அவனுக்கு முன்பாக கொண்டுவந்தார்கள், 25. கடனைத் தீர்க்க அவனுக்கு நிர்வாகமில்லாதபடியால், அவனுடைய ஆண்டவன் அவனையும் அவன் பெண்ஜாதி பிள்ளைகளையும், அவனுக்குண்டான எல்லாவற்றையும் விற்று, கடனைத் தீர்க்கும் படிக்குக் கட்டளையிட்டான். 26. அப்பொழுது அந்த ஊழியக்காரன் தாழ விழுந்து, வணங்கி, ஆண்டவனே, என்னிடத்தில் பொறுமையாய் இரும், எல்லாவற்றையும் உமக்குக் கொடுத்துத் தீர்க்கிறேன் என்றான். 27. அந்த ஊழியக்காரனுடைய ஆண்டவன் மனதிரங்கி, அவனை விடுதலை பண்ணி, கடனையும் அவனுக்கு மன்னித்துவிட்டான். 28. அப்படியிருக்க, அந்த ஊழியக்காரன் புறப்பட்டுப்போகையில், தன்னிடத்தில் நூறு வெள்ளிப்பணம் கடன் பட்டிருந்தவனாகிய தன் உடன்வேலைக்காரரில் ஒருவனைக் கண்டு, அவனைப் பிடித்து தொண்டையை நெரித்து: நீ பட்டக் கடனை எனக்குக் கொடுத்துத்தீர்க்க வேண்டும் என்றான். 29. அப்பொழுது அவனுடைய உடன் வேலைக்காரன் அவன் காலிலே விழுந்து: என்னிடத்தில் பொறுமையாய் இரும்; எல்லாவற்றையும் கொடுத்துத் தீர்த்துவிடுகிறேன் என்று, அவனை வேண்டிக்கொண்டான். 30. அவனோ சம்மதியாமல், போய், அவன் பட்ட கடனையெல்லாம் கொடுத்துத்தீர்க்குமளவும், அவனைக் காவலில் போடுவித்தான். 31. நடந்தை அவன் உடன் வேலையாட்கள் கண்டு, மிகவும்

துக்கப்பட்டு, ஆண்டவனிடத்தில் வந்து, நடந்ததை எல்லாம் அறிவித்தார்கள். 32. அப்பொழுது அவனது ஆண்டவன் அவனை அழைப்பித்து; பொல்லாத ஊழியக்காரனே, நீ என்னை வேண்டிக்கொண்டபடியினால், அந்தக் கடன் முழுவதையும் உனக்கு மன்னித்துவிட்டேன். 33. நான் உனக்கு இரங்கினது போல, நீயும் உன் உடன் வேலையாளுக்கு இரங்க வேண்டாமோ? என்று சொல்லி, 34. அவனுடைய ஆண்டவன் கோபமடைந்து, அவன் பட்ட கடனையெல்லாம் தனக்குக் கொடுத்துத் தீர்க்குமளவும் உபாதிக்கிறவர்களிடத்தில் அவனை ஒப்புக்கொடுத்தான். 35. நீங்களும் அவனவன் தன் தன் சகோதரன் செய்த தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், என் பரம பிதாவும் உங்களுக்கு இப்படியே செய்வார் என்றார்,"

பிரதிபலிப்பு:

கர்த்தரது உண்மையான வேலைக்காரன் கர்த்தரைப் போன்றே இருப்பான், அவரைப்போன்றே பாவிகளின் மீது மனதுருக்கமுடையவனாய் இருப்பான், மட்டுமல்லாது அவர்கள் தங்களுக்கே விரோதமான செயல்களைச் செய்திருந்தாலும் அவர்கள் மீது மனதுருக்கமுள்ளவனாய் இருப்பான். வேதாம தலைமைத்துவத்திற்கு கிருபை, இரக்கம் மற்றும் மன்னித்தல் போன்றவற்றை முழுவதுமாய் ஏற்றுக்கொண்டிருப்பது அவசியமாய் இருக்கிறது. நாம் இலவசமாய் பெற்றுள்ளோம், இலவசமாய் கொடுக்க வேண்டும், நாம் மன்னிக்கப்பட்டுள்ளோம், ஆகையால் பிறரை நாம் மன்னிக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். தங்களுக்கென தனிக்கொள்கையோ அல்லது தனிப்பட்ட பழிதீர்க்கும் எண்ணங்களையோ வைத்துக்கொள்வது ஒரு உண்மையான கர்த்தரது பின்னடியாராக இருத்தல் இயலாத காரியம், இப்படிப்பட்டவர்கள் மட்டுமே கர்த்தரது மந்தையை மேய்க்கும் தலைவர்களாய் இருக்க இயலம். மற்றவர்களுக்கு நாம் பணிசெய்யும்போது, அன்புடன் அவற்றைச் செய்தல் வேண்டும், அநீதிக்கேடுகளும், முறைகேடுகளும் உண்டானால், அவற்றை நியாயந்தீர்த்து தண்டனை அளிக்கும் கர்த்தரிடம் விட்டுவிடுதல் வேண்டும். நாம் இங்கிருப்பது அவரைப் பிரதிபலிக்கும்படியாக, நியாயத்திற்காக நாம் வாதாடுகிறவர்களாய் இருத்தல் கூடாது.

தலைமைத்துவ நடைமுறை:

உண்மையான தேவனது பணிவிடைக்காரன், இயேசுவைப் போன்று இருப்பான்.

1. அநியாயங்களும், முறைகேடுகளும் கர்த்தரது கரத்தில் விட்டுவிடுதல் வேண்டும்: வேதாகமத் தலைவர்கள் பழிதீர்க்கப்படும்படி கர்த்தரை மட்டுமே நோக்கியிருப்பர், எல்லா காரியங்களிலும் இறுதி நியாயம் வெளிப்படுவதிலும் அவர்கள் கர்த்தரையே நோக்குவர். விசுவாசிகள் இயேசுவை நேசிப்பவர்களாய் இருப்பார்களேயானால், அவர்கள் அவரைப்போன்றே வளருகிறவர்களாய் இருப்பர். இதன்பொருள் இழந்து போனோரின் மீது அன்பு செலுத்தி வளருகிறவர்களாய் இருப்பர். ஒருவேளை அவர்கள் தங்களை விரோதிக்கிறவர்களாயும், மற்றும் வெறுக்கிறவர்களாயும் இருந்தாலும் அவர்கள் மீது அன்பு செலுத்துகிறவர்களாய் இருப்பர்.

2. கிருபைய விளங்கப்பண்ணுதல்: கிருபையுடன் இருத்தலானது, தேவனது மக்களுக்கு, உண்மையான பணிவிடை செய்யும் தலைவனது உயரிய பண்பாய் இருக்கிறது. நாம் மிகப்பெரிய அளவில் மன்னிக்கப்பட்டிருக்கும் போது, சிறியகாரிங்களை நமக்கு விரோதமாய் பீறர் செய்துள்ளபோது அதை அவர்களுக்கு மன்னிக்கக் கடமைப்பட்டுள்ளோம். நமக்கு இழைக்கப்பட்டுள்ள அநீதிகள் முறைகேடுகள் அனைத்தையும் கர்த்தரது கரத்தில் விட்டுவிடுதல் வேண்டும். வேதாகமத்தலைவர்கள் வேறுபட்ட கொள்கைகளை உடையவர்களாய் இருத்தல் கூடாது, அவர்களுக்கு அவர்களது கர்த்தரின் பணிசெய்தலே அவர்களது வாழ்வில், முதன்மை இடத்தைப்பெறுகிறதாய் இருத்தல் வேண்டும். Refer to BTB study CHRISTIAN LIFE : VIRTUES

[இ] மத்தேயு 20:27-28.

27. உங்களில் எவனாகிலும் முதன்மையாய் இருக்க விரும்பினால், அவன் உங்களுக்கு ஊழியக்காரனாய் இருக்கக்கடவன். 28. அப்படியே, மனுஷகுமாரனும், ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

[ஈ] மத்தேயு 23:8-12.

8. நீங்களோ ரபீ என்றழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குப் போதகராயிருக்கிறார், நீங்கள் எல்லாரும் சகோதரராய் இருக்கிறீர்கள். 9. பூமியிலே ஒருவனையும் உங்கள் பிதா என்று சொல்லாதிருங்கள்; பரலோகத்திலிருக்கிற ஒருவரே உங்களுக்குப் பிதாவாயிருக்கிறார். 10. நீங்கள் குருக்கள் என்றும் அழைக்கப்படாதிருங்கள்; கிறிஸ்து ஒருவரே உங்களுக்குக் குருவாயிருக்கிறார். உங்களில் பெரியவனாயிருக்கிறவன், உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன். 12. தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான். தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான்.

பிரதிபலிப்பு:

இவ்விரு வேதபகுதிகளும், "சேவகனுக்குரிய தலைமைத்துவக்கருத்தை" மையமாய் கொண்டதாய் இருக்கிறது. இயேசு தனது கால அரசியல் உலகத்திலே, தலைமைத்துவ ஒழுங்கை தலைகீழாக மாற்றுகிறவராய் இருந்தார். முதன்மையாய் இருக்கிறவர்கள், கனம், ஆராதனை, பணம், அதிகாரம் மற்றும் அதனுடன் உள்ள எல்லா ஆதாயங்களையும் பெறுகிறவர்களாய் இருப்பர். மிகவும் குறைவாக செய்கிறவர்கள் அதிகம் அதிகமான அதிகாரத்தைப் பெறுகிறவர்களாய் இருப்பர். மனிதர்களுக்கு தலைவர்களாய் இருப்பவர்கள், அன்றும், இன்றும், செய்யும் பணியில் தங்களது கரங்களை அசுத்தம் செய்து கொள்வதில்லை, இவ்வாறு அசுத்தம் செய்து கொள்வதை அவர்கள் கீழ்த்தரமாய் எண்ணினர். அவைகளை தங்களுக்குக் கீழானோர் செய்யும்படி பணிக்கிறவர்களாய் இருந்தனர் மற்றும் இருக்கின்றனர்.

கர்த்தருடைய மந்தையை மேய்க்கும் தலைவர்களுக்கு இவ்வுலகப்பிரகாரமான செயல்பாடுகள் அனைத்தும் அதற்கு மாறுபட்ட நிலையில் செய்யப்படும்படி பணிக்கப்பட்டது. .தலைமைத்துவத்தின் அடிப்படையில், ஆதிக்கம் செய்யும் அனைத்து கொள்கைகளும், அதற்கு மாறுபட்ட நிலையில் இயேசுக்கிறிஸ்துவால் மாற்றப்பட்டது. மனிதர்கள் தங்களுக்குரிய தலைப்புகளையோ, கனத்தையோ, ஆரதனையையோ தேடாதிருக்க இயேசு கூறினார். அவர்கள் ரபீ, குரு, அல்லது அப்பா என அழைக்கப்படுவதைத் தேடக்கூடாது எனக் கட்டளைப் பெற்றனர், இவ்வாறு அழைக்கப்படுவது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு மட்டுமே பொருந்தும் எனக்கூறினார். கிறிஸ்துவைப் போன்ற தலைவர்கள், தலைப்பை

எதிர்பார்த்து, மற்றவர்கள் தங்களது பணியை செய்யும்படி எதிர்பார்ப்பவர்களுக்கு முறண்பாடாய், கர்த்தரை பின்பற்றும் அவரது பின்னடியாரின் தேவைகளைச் சந்திக்கும் வகையில் எந்த அந்தஸ்தில் இருந்தாவது அவர்களுக்குப் பணிவிடை செய்யுமாறு பணிக்கப்பட்டது. எல்லோருக்கும் பணிவிடை செய்ய ஆயத்தப்பட்டவர்களாய், தேவனது மந்தையை மேய்க்கும்போது மற்றவர்களால் ஏளனமாய் கருதப்படும் எப்படிப்பட்ட பணியையும் செய்வோருக்குரிய கனமானது, பின்னர் கர்த்தரால் அருளப்படுகிறதாய் இருக்கிறது. இப்பொழுது கனத்தை விரும்புகிறவர்கள் பின்னர் தாழ்மைப்படுகிறவர்களாய் இருப்பர், அவர்களது திமிரும், பெருமையும் நித்தியமாய் காணப்படுகிறதாய் இருக்கும்.

தலைமைத்துவ நடைமுறை:

ஒரு முறைகூட இச்செய்தியில் உண்மையான கர்த்தரது பணிவிடைக்காரன், கிறிஸ்துவைப் போன்றே இருப்பான் எனக்கூறப்படுகிறது.

1. **வேதாகம தலைமைத்துவமானது அதிகாரத்தை பயன்படுத்தாது, ஆனால் அன்புடன் பணி செய்யும்:** உண்மையான வேதாகமத் தலைவர்கள் தலைப்புகளை எதிர்பார்க்கமாட்டார்கள், தேவனது மந்தையின் மீது, அதிகாரத்தைப் பயன்படுத்த மாட்டார்கள், அவர்கள் கர்த்தரை மட்டுமே ஆராதனை செய்வர், அவரது மகிமையை மட்டுமே நாடுகிறவர்களாய் இருப்பர், மற்றும் அவரது ஜனங்களுக்கு எந்த வகையிலெல்லாம் பணிவிடை செய்ய இயலுமோ அந்த வழிகளில் பணிவிடை செய்ய முணைந்து நிற்பர், கிறிஸ்துவை உயர்த்துவதே அவர்கள் குறிக்கோளாய் இருக்கும். எந்த ஒரு பணியும் அவர்களுக்குக் கீழானப் பணி என எண்ணமாட்டார்கள், மந்தைக்காய் எந்த பணீயையும் செய்கிறவர்களாய் இருப்பர், கர்த்தர் ஒவ்வொரு காரியத்தையும் அவர்களுக்காகச் செய்தார். Refer to BTB study CHRISTIAN LIFE: SERVICE. கிறிஸ்தவ வாழ்க்கை: பணிசெய்தல்

[உ] மத்தேயு 25:31-45.

31. அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தினவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மீது வீற்றிருப்பார். 32. அப்பொழுது, சகல் ஜனங்களும் ஆவருக்கு முன்பாகச் சேர்க்கப்படுவார்கள். மேய்ப்பனானவன் செம்மறியாடுகளையும் வெள்ளாடுகளையும் வெவ்வேறாகப் பிரிக்கிறது போல அவர்களை அவர்

பிரித்து, 33. செம்மறியாடுகளைத் தமது வலது பக்கத்திலும், வெள்ளாடுகளை தமது இடது பக்கத்திலும் நிறுத்துவார். 34. அப்பொழுது, ராஜா தமது வலது பக்கத்திலே நிற்பவர்களைப்பார்த்து, வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்ளுங்கள். 35. பசியாய் இருந்தேன் எனக்குப் போஜனம் கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன் என் தாகத்தைத் தீர்த்தீர்கள்; அந்நியனாய் இருந்தேன், என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள். 36. வஸ்திரமில்லாதிருந்தேன் எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள்; வியாதியாய் இருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலில் இருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள் என்றார். 37. அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனம் கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகம் உள்ளவராகக் கண்டு உமது தாகத்தைத் தீர்த்தோம்? 38. எப்பொழுது உம்மை அந்நியராய்க் கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராய்க் கண்டு உமக்கு வஸ்திரம் கொடுத்தோம்? 39. எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள். 40. அதற்கு ராஜா பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ. அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார். 41. அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே, என்னைவிட்டு, பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். 42. பசியாய் இருந்தேன், நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை; தாகமாய் இருந்தேன், நீங்கள் என்தாகத்தைத் தீர்க்கவில்லை; 43. அந்நியனாய் இருந்தேன், நீங்கள் என்னை சேர்த்துக்கொள்ளவில்லை; வியாதியுள்ளவனாகவும் காவலில் அடைக்கப்பட்டவனாயும் இருந்தேன், நீங்கள் என்னை விசாரிக்க வரவில்லை என்பார். 44. அப்பொழுது அவர்களும் பிரதியுத்தரமாக; ஆண்டவரே, ஆண்டவரே, உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலில் அடைக்கப்பட்டவராகவும் நாங்கள் கண்டு, உமக்கு உதவி செய்யாதிருந்தோம், என்பார்கள். 45. அப்பொழுது அவர் அவர்களுக்கு பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ,

அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்,

பிரதிபலிப்பு:

உண்மையான விசுவாசி செம்மறி ஆட்டிற்கும், கர்த்தரை மாய்மாலமாய் பின்பற்றும் விசுவாசிகள் வெள்ளாடுகளுக்கும் ஒப்பிடப்படுகிறார்கள். வெள்ளாடுகளாய் கருதப்படுவோர் பூமியில் மிகவும் மோசமான தீமை செய்யும் மக்கள் எனக்கூறுவதற்கில்லை, இப்படிப்பட்டோர் கர்த்தரது மந்தையின் ஒருபகுதியாய் இருக்கிறவர்கள், இவர்களை கர்த்தர் தமது வருகையின் போது வேறுபிரிக்கிறவராய் இருக்கிறார். இங்கு கூறப்பட்டுள்ள வெள்ளாடுகள் அவரது மந்தையின் ஒரு பகுதியாய் இருந்து, சுய நீதிக்காரராய் கண்டுபிடிக்கப்பட்டு கர்த்தரால் ஏற்றுகொள்ளப்படாதவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் நியாயந்தீர்க்கப்படும்போது, யதார்த்தமாய் ஆச்சரியப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். புறஜாதியார் நியாயந்தீர்க்கப்படும்போது இவ்வாறு ஆச்சரியப்படுகிறவர்களாய் இல்லை, அவர்கள் கர்த்தரையும் அவரது ஜனங்களையும் வெறுக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

இவ்வுவமையானது, இவ்வேதபகுதியைச் சூழ உள்ளனவும், நமக்கு நினைவுபடுத்துகிறது என்னவெனில், கீழ்ப்படிதலின் கனியானது, வாழ்வுக்கு அவசியமானதாய் இருக்கிறது, பரிசுத்த ஆவியானவர் மூலம் உருவாகும் ஆவியின் கனியானது நாம் தேவனது பிள்ளைகள் என்பதை விளங்கப்பண்ணுகிறதாய் இருக்கிறது. இயேசுவுக்காக வாழும் உண்மையான வாழ்க்கை, மற்றும் போலி வாழ்க்கை ஒவ்வொரு விசுவாசியின் வாழ்வின் மூலம் விளங்குகிறதாய் இருக்கிறது. நீதிக்கேற்ற கனியில்லாத பட்சத்தில், அதன் வேரானது சரியான இடத்தில் இல்லை என்பதைத் தெளிவாக்குகிறது. இயேசுவில் வேர்விடுகிறவர்கள் அவரது நடக்கையை பிரதிபலிக்கிறவர்களாய் இருப்பர். அவர்களது பேச்சும் மற்றும் சாட்சியின் வாழ்க்கையும் அதை வெளிப்படுத்துகிறதாய் இருக்கும். நாம் கிறிஸ்துவை பிரதிபலிக்கவில்லையானால், நாம் அவரில் வேர்விட்டு, அவரை அஸ்திபாரமாய் கொள்ளவில்லை என்பது புலனாகிறது. பரிசுத்த ஆவியானவரின் கனியானது இல்லையெனில், பழைய பாவசுபாவத்தின் கனியானது மேற்கொள்கிறதாய் இருக்கிறது, சத்தியமானது நாம் அவருடையவர்கள் அல்ல என்பதை ருசுப்படுத்துகிறதாய் இருக்கிறது.

தலைமைத்துவ நடைமுறை:

உண்மையான கர்த்தரது ஊழியக்காரன், கர்த்தரைப் போலவே இருப்பான்:

1. இயேசுவை உண்மையில் பின்பற்றுவோருக்கு, நீதியின் கனியானது அவர்களைப் பின்தொடருகிறதாய் இருக்கும்: ஆவிக்குரிய கனியில்லாதிருக்குமானால், வேரானது சரியான இடத்தில் இல்லை என தெளிவாகிறது. தேவனது மந்தைமீது உண்மையான கரிசனையானது, உண்மையாக தேவனுடன் இயேசுவின் மூலம் கொள்ளுகிற உறவின் ஆதாரமாய் இருக்கிறது. கர்த்தரைக் குறித்து பேசும் அனைவரும் அவருடையவர்கள் என அர்த்தம் ஆகாது. பெரிதான ஆவிக்குரிய வரங்களை பெற்றவர்கள் அனைவரும் அவருடைவர்களாக மாட்டார்கள். உண்மயாகவே தேவனது மந்தையின் மீது கரிசனை உள்ளவர்களே அவருடையவர்களாய் இருக்கிறார்கள்.

[ஊ] மாற்கு 9:33-37.

33. அவர் கப்பர்நகூமுக்கு வந்து, வீட்டிலே இருக்கும் போது, அவர்களை நோக்கி: நீங்கள் வழியிலே எதைக் குறித்து உங்களுக்குள்ளே தர்க்கம் பண்ணினீர்கள் எனக்கேட்டார். 34. அதற்கு அவர்கள் பேசாமல் இருந்தார்கள்; ஏனெனில் அவர்கள் தங்களுக்குள்ளே எவன் பெரியவன் என்று வழியில் தர்க்கம் பண்ணினார்கள். 35. அப்பொழுது அவர் உட்கார்ந்து, பன்னிருவரையும் அழைத்து; எவனாகிலும் முதல்வனாயிருக்க விரும்பினால் அவன் எல்லாருக்கும் கடையானவனும், எல்லோருக்கும் ஊழியக்காரனுமாயிருக்கக்கடவன் என்று சொல்லி; 36. ஒரு சிறு பிள்ளையை எடுத்து, அதை அவர்கள் நடுவே நிறுத்தி, அதை அணைத்துக்கொண்டு; 37. இப்படிப்பட்ட சிறுபிள்ளைகளில் ஒன்றை என் நாமத்தினாலே ஏற்றுக்கொள்கிறவன், என்னை ஏற்றுக்கொள்கிறான்; என்னை ஏற்றுக்கொள்கிறவன்; என்னை அல்ல, என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்கிறான். என்றார்.

பிரதிபலிப்பு:

கர்த்தரது உண்மையான பணிக்கு, குழந்தை விசுவாசிப்பதை போன்ற விசுவாசமும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் அன்பையும், அறிவுறைகளையும்

சிறுபிள்ளையைப் போல ஏற்றுக்கொள்ளுதலும், அவசியமானதாய் இருக்கிறது. விசுவாசத்தில் குழந்தையாய் இருக்கிறவர்களைக் குறித்த கரிசனையானது ஒரு தேவ ஊழியனுக்கு அவசியமானதாய் இருக்கிறது. நாம் எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு பெலவீனமானவர்கள் மீது அன்பு செலுத்தவில்லையானால், கர்த்தர், அவரது இருதயத்தில் உள்ள அன்பை இங்கு நிரூபணம் செய்து காட்டுகிறவராய் இருக்கிறார். நாம் "விசுவாசத்தில் சிறியோருக்கு" ஊழியம் செய்யும்போது, நமது தலைமைத்துவத்தின் ஆற்றலை நிரூபணம் செய்தல் வேண்டும். அன்பினால் நாம் பணிசெய்யும் போது, அன்பானது ஒருபோதும் "மிகப்பெரியனவற்றை" கருதாது, அது அன்பு செலுத்துவதில் கவனமாய் இருந்து அன்பு கூறுகிறவர்களுக்கு எதை வேண்டுமானாலும் செய்ய ஆயத்தமுள்ளதாய் இருக்கும். நாம் இயேசுவுக்கு செய்யும் ஆராதனை, சேவையில் அவரை விசுவாசிக்கும் மக்களுக்காக நமது அன்பை சொரிந்து அவர்களைக் குறித்த மிகுந்த கரிசனையுடன் அவரது சேவை செய்தல் வேண்டும்.

தலைமைத்துவ நடைமுறை:

கர்த்தரது உண்மையான ஊழியக்காரன், கர்த்தரைப் போன்றே இருப்பான்.

1. ஸ்தானத்தையோ அல்லது அந்தஸ்தையோ தேடாது, ஊழியம் செய்வதற்கு மட்டும் வாஞ்சையுடனிருத்தல்: உண்மையான வேதாகம தலைமைத்துவம் "விசுவாசத்தில் சிறியோராய்" இருப்போருக்கு உழியம் செய்யும் தருணத்தை தேடுகிறதாய் இருக்கும். அது மனிதரால் "தலைவர்" என இனங்காணுதலை தேடாது அல்லது பெரியவர் என்கிற தலைப்பை நாடாது. இளைஞருக்கு ஊழியம் செய்கிறதாய் இருக்கும், சபையில் கவனம் செலுத்தப்படாதோருக்கு, மற்றும் பெலவீனருக்கு இயேசுக்கிறிஸ்துவின் தலைமைத்துவத்தை போன்ற தலைமைத்துவத்தை நிருபணம் செய்கிறதாய் இருக்கும், மற்றும் அவரது காரியங்களுக்கு முதல் இடம் அளிக்கிறதாய் இருக்கும். இயேசுவைத் தேடி வந்தவர்களின் தேவைகளை அவர் சந்திக்கிறவராய் இருந்தார், அதைப்போன்றே நம்மைத்தேடிவருகிறவர்களின் தேவைகளைச் சந்திக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். நாம் பணிசெய்வதன் காரணம் நாம் அன்புகூறப்பட்டுள்ளோம், அதனால் அன்புகூறக் கடனாளிகளாய் இருக்கிறோம். இதைத்தவிர உண்மையான வேதகமத் தலைவரது நோக்கம் வேறு எந்த பக்கமும் சாயக்கூடாது. Refer to doctrinal study CHURCH: MINISTERS சபை: ஊழியங்கள்.

[எ] மாற்கு 10:42-45.

"42. அப்பொழுது இயேசு அவர்களைக் கிட்டவரச்செய்து; புறஜாதியாருக்கு அதிகாரிகளாக எண்ணப்பட்டவர்கள் அவர்களை இறுமாப்பாய் ஆளுகிறார்கள் என்றும், அவர்களில் பெரியவர்கள் அவர்கள்மேல் கடினமாய் அதிகாரம் செலுத்திவருகிறார்கள் என்றும் நீங்கள் அறிந்திருக்கிறீர்கள். 43. உங்களுக்குள்ளே அப்படி இருக்கலாகாது; உங்களில் எவனாகிலும் பெரியவனாயிருக்க விரும்பினால், அவன் உங்களுக்குப் பணிவிடைக்காரனாயிருக்கக்கடவன். 44. உங்களில் எவனாகிலும் முதன்மையாய் இருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக் கடவன். 45. அப்படியே, மனுஷ குமாரனும் ஊழியங்கொள்ளும்படிவராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்."

பிரதிபலிப்பு:

அதிகாரத்தைப் பயன்படுத்துவது குறித்து பல நூற்றாண்டுகளாக எல்லா கலாச்சாரத்திலும் விவாதிக்கப்பட்டு வருகின்றன. Sun Tzu என்னும் கி.மு. 500 ல் வாழ்ந்த சீன எழுத்தாளர், மற்றும் பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த Machiavelli, மற்றும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த Clausewitz என்னும் ஐரோப்பிய எழுத்தாளர் போன்றோர், அதிகாரம் பயன் பட்ட இரக்கமற்ற நிலை, மற்றவர்கள் மீது அவர்கள் காட்டிவந்த அதிகார தோரணை, அதிகாரத்தைப் பிடிக்கப்பயன்படுத்தப்பட்டு வந்த சுயசித்தம் போன்றவற்றைக் குறித்து விபரமாய் எழுதியுள்ளனர்.

மனுக்குலத்தை ஆழும் தன்மையானது இரக்கமேயில்லாத நிலையில் கையாளப்பட்டது மற்றும் அதிகார மோகமானது அவர்களைப் பற்றிக்கொண்டிருந்தது. கடந்த நூற்றாண்டின் George Orwell என்பவர் மேற்கோள் காட்டும்பொழுது, "எல்லா அதிகாரமும் கலங்கப்பட்டு போயிற்று, அதிகாரமானது முற்றிலுமாய் கலங்கப்பட்டு போயிற்று." மற்றும் அவரது புத்தகமான "மிருகப் பண்ணை" “Animal Farm”, அவரது மிருகங்களில் ஒன்று சொன்னதாம், "எல்லா மிருகங்களும் சமமானவைகள், ஆனால் சில இருக்கின்றன அவைகள் மற்றைவைகளைக்காட்டிலும் அதிக சமமாய் விளங்குகின்றன." இதுவே அரசியல் மற்றும் அதிகாரத்திற்கு பின்னணியில் உள்ள உண்மையாய் இருக்கிறது, மற்றும் சாத்தான் எப்பொழுதுமே "இவ்வுலகத்தின் அதிபதியாய் இருக்கிறான்."

கிறிஸ்துவைப் போன்று அதிகாரத்தை பயன்படுத்துவது அடிப்படையிலேயே வித்தியாசமானதாய் இருக்கிறது, அப்படிப்பட்ட அதிகாரமானது நேரடியாக இராஜாதி இராஜவும் மற்றும் கர்த்தாதி கர்த்தாவிடமிருந்து பொறுப்பளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. இவ்வதிகாரமானது ஊழியம் செய்வதற்கும், குணமாக்கவும் உதவிபுரியவும் அளிப்படுகிறதாய் இருக்கிறது, அப்படிப்பட்ட அதிகாரமானது மற்றவர்களைக் கீழ்ப்படுத்தவோ அல்லது சுயமாய் பயன்படுத்தவோ அல்ல. அவரது அதிகாரமானது, அதன் தன்மையிலேயே வித்தியாசமானதாய் மனிதர் பயன்படுத்துமாறு விளங்குகிறதாய் இருக்கிறது. ஜனங்கள் இவ்வதிகாரத்தைப் பயன்படுத்தும் போது, இவ்வல்லமை மற்றும் அதிகாரத்தின் வெளிப்படையான ஆதாரத்தை அளிக்கிறதாய் இருக்கிறது, இவ்வதிகாரத்தை பயன்படுத்தும் படி கர்த்தரிடமிருந்து அதைப்பெற்றுக்கொண்டவர்கள், தேவனது மக்களுக்கு ஊழியம் செய்கிறவர்களாய் இருத்தல் வேண்டும், அவரது ஜனங்களை திட்டவோ அல்லது அவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தவோ கூடாது.

வேதாகமத் தலைமைத்துவத்தை பரீசீலனை செய்யும்போது, ஒரு நபர் "கனியினால்" சோதித்தறியப்படுகிறார். மத்தேயு 7:15-23. அவர்கள் தலைமைத்துவத்தின் விளைவைக் காண வேண்டியவர்களாய் இருக்கிறோம். அவ்விளைவானது இயேசுவைப் போன்ற வளர்ச்சி உடையதாயும், கர்த்தரின் அன்பில் பெருகுகிறதாயும், வேத வசனத்தை தாகத்தோடு ஏற்றுக்கொண்டு செயல்படுத்துகிறதாய் இருக்குமேயானால், மற்றும் தேவனது சித்தம் எல்லாரது வாழ்விலும் விளங்குகிறதாயும், சத்தியமும், சமாதானமும் வல்லமையுடன் அவர்களில் செயல்படுகிறதாயும் கர்த்தருடைய அதிகாரமானது அவர்கள் மேல் முத்திரையிடப்படுகிறதாயும் இருக்குமானால், அது வேதாம ரீதியிலான உண்மே தலைமைத்துவமாய் விளங்கிவருகிறது.

தலைமத்துவ நடைமுறை:

கர்த்தரது உண்மையான ஊழியக்காரன், கர்த்தரைப் போலவே இருப்பான்.

1. ஒரு ஊழியக்காரனின் இருதயமானது, உண்மையான வேதாகம தலைமைத்துவத்திற்கு அடையாளமாய் இருக்கிறது. இருதய ஆழத்தின் வாஞ்சையானது, கர்த்தரை ஆராதிக்கவும், கனப்படுத்தவும் மற்றும்

மகிமைப்படுத்துவதுமாய் இருக்கிறது, மற்றும் கர்த்தரால் பொறுப்பளிக்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி அவரது ஜனங்களுக்கு ஊழியம் செய்ய வைக்கிறதாய் இருக்கிறது. ஜனங்களை ஆதிக்கம் செய்யவும், கலங்கப்படுதவும் செய்யும் அதிகார துஷ்பிரயோகமானது, இப்பிரபஞ்சத்தின் அதிபதியின் இச்சைக்கு ஆதாரமான அதிகாரமாய் இருக்கிறது, அவைகள் ஜீவாதிபதியின் அதிகாரமல்ல.

2. அதிகாரத்திற்கான இச்சை தகுதியிழக்கச் செய்கிறது: உண்மையான போதகத் தலைமைத்துவமானது பல நூற்றாண்டுகளாக, கர்த்தர் மீதுள்ள அளவற்ற அன்பினிமித்தம், மற்றவர்கள் மீது ஆதிக்கம் செய்வதை அருவறுத்து ஆண்களாலும் பெண்களாலும் செயல்படுத்தப்பட்டு வந்தது. அதிகார இச்சையுடையோர், அதற்கு தகுதியற்றோர் என நிரூபணம் செய்கிறவர்களாய் இருந்தனர். தேவனது பிள்ளைகள் அதிகாரத்தை எடுக்கத் துணியாதவர்களாய், மற்றும் அவரது அதிகாரத்தை மிகவும் கவனமாயும் மற்றும் ஜெபத்துடனும் உபயோகித்து கர்த்தரது மந்தைக்கு ஊழியம் செய்து வந்தனர், இராஜாதி இராஜவிடமிருந்து பெற்றுக்கொண்டு பயன்படுத்தும் சகல அதிகாரத்தைக் குறித்து அவர்கள் மிகவும் கவனமாய் இருந்தனர்.

[ஏ] லூக்கா 16:1-13.

1. பின்னும் அவர் தம்முடைய சீஷர்களை நோக்கி: ஐசுவரியவனாகிய ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் இருந்தான். அவன் தன் எஜமானது ஆஸ்திகளை அழித்துப்போடுகிறதாக எஜமானுக்கு அறிவிக்கப்பட்டது. 2. அப்பொழுது எஜமான் அவனை வரவழைத்து: உன்னைக் குறித்து நான் இப்படிக் கேள்விப்படுகிறதென்ன? உன் உக்கிராணக் கணக்கை ஒப்புவி, இனி நீ உக்கிராணக்காரனாய் இருக்கக்கூடாது, என்றான். 3. அப்பொழுது உக்கிராணக்காரன்: நான் என்ன செய்வேன், என் எஜமான் உக்கிராண விசாரிப்பிலிருந்து தள்ளிப்போடுகிறானே; கொத்துகிறதற்கு எனக்குப் பெலனில்லை, இரக்கவும் வெட்கப்படுகிறேன். 4. உக்கிராண விசாரிப்பைவிட்டு நான் தள்ளப்படும்போது, என்னைத் தங்கள் வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி செய்ய வேண்டியது இன்னதென்று எனக்குத் தெரியவந்தது, என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டு; 5. தன் எஜமானிடத்தில் கடன்பட்டவர்களை ஒவ்வொருவராய் வரவழைத்து, முதலாவது வந்தவனை நோக்கி: நீ எஜமானிடத்தில் பட்ட கடன் எவ்வளவு என்றான். 6. அவன் நூறுகுடம் எண்ணெய் என்றான், அப்பொழுது உக்கிராணக்காரன் அவனை

நோக்கி: நீ உன் சீட்டை வாங்கி, உட்கார்ந்து, ஐம்பது என்று சீக்கிரமாய், எழுது என்றான். 7. பின்பு அவன் வேறொருவனை நோக்கி: நீ பட்ட கடன் எவ்வளவு என்றான், அவன் நூறு கலம் கோதுமை என்றான், அப்பொழுது அவன்; நீ உன் சீட்டை வாங்கி, என்பது என்று எழுது என்றான். 8. அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய் செய்தான் என்று எஜமான் கண்டு, அவனை மெச்சிக்கொண்டான். இந்தப் பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள். 9. நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், நீங்கள் மாளும்போது, உங்களை நித்தியமான வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி, அநீதியான உலகப் பொருளால் உங்களுக்கு சிநேகிதரைச் சம்பாதியுங்கள். 10. கொஞ்சத்தில் உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாய் இருக்கிறான். கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான். 11. அநீதியான உலகப்பொருளைப்பற்றி நீங்கள் உண்மையாய் இராவிட்டால், யார் உங்களை நம்பி உங்களிடத்தில் மெய்யான பொருளை ஒப்புவிப்பார்கள்? 12. வேறொருவனுடைய காரியத்தில் நீங்கள் உண்மையுள்ளவர்களாயிராவிட்டால், உங்களுக்கு யாதொன்றைச் சொந்தமாகக் கொடுப்பவன் யார்? 13. எந்த ஊழியக்காரனும் இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ்செய்யக்கூடாது; ஒருவனைப் பகைத்து மற்றவனை சிநேகிப்பான், அல்லது ஒருவனைப் பற்றிக்கொண்டு மற்றொருவனை அசட்டைப் பண்ணுவான். தேவனுக்கும் உலகப்பொருளுக்கும் ஊழியம் செய்ய உங்களால் கூடாது.

பிரதிபலிப்பு:

இவ்வுவமையானது மிகவும் ஆர்வத்தை தூண்டுகிறது மற்றும் நகைச்சுவையுள்ளதாயும் இருக்கிறது, அநீதியான உக்கிராணக்காரனைக் குறித்த உவமையானது விவரிக்கப்படுகிறது, அவன் தீமையான மனுஷனாய் இருந்தும் ஞானமாய் தனது வாழ்க்கையின் யதார்த்தத்தை சந்திக்க திட்டமிடுகிறவனாய் இருக்கிறான், இது நமக்கும் சவாலாய் அமைந்து, நாம் அவரது தலைவர்களாய் இருந்து, நமது வாழ்க்கையின் யதார்த்தத்தை சந்திக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். இவ்வுவமையில் அநேக தலைமைத்துவ அடிப்படைச் சத்தியங்கள் இருக்கின்றன.

இந்த உவமையில் உள்ள உக்கிராணக்காரனைக் குறித்து நமது பாஷையில் சொல்ல வேண்டுமானால் "கடைந்த மோரில் வெண்ணெய் எடுக்கும் நபராய்"

இருக்கிறான். தனக்கு ஆதாயம் உண்டாகும்படி, சட்டப்பூர்வமான எல்ல கணக்கு வழக்குகளையும் மாற்றி அமைக்கிறவனாய் இருக்கிறான், தனது எஜமானிடத்தில் கடன் பட்டவர்களின் அதிக பட்ச தொகையிலிருந்து தனது வாழ்க்கைக்கு ஆதாயம் உண்டாகும்படி அவைகளை குறைவாக எழுதக்கூறி, ஆதாயம் தேடுகிறவனாய் இருக்கிறான்.

இவன் செய்யும் ஊழல்களை மிகவும் தந்திரமாய் செய்கிறவனாய் இருந்தான், எல்லோரும் பழைய பாவ சுபாவத்தைப் பின்பற்றுகிறது போல, இவனது பேராசையும் இவனை திருடும்படி உந்தியது. இவன் தனது எஜமானனால் கணக்கொப்புவிக்க அழைக்கப்பட்டவனாய் இருந்தான். இவனது அநியாயம் கண்டு பிடிக்கப்பட்டபடியால், இவன் இவ்வுத்தியோகத்திலிருந்து வெளியேற்றப்படுவது உறுதியாயிற்று, அவன் வெளி உலகிற்குச் செல்லும்போது, அவனை ஏற்றுக்கொள்ள நண்பர்கள் அவசியப்பட்டனர், இதினிமித்தம் அவனது எஜமானரிடத்தில் அவர்கள் பட்டக் கடனை திருத்தி எழுதும்படி செய்கிறவனாய் இருக்கிறான். இதை அவன் தனது எஜமானுக்கு சேரவேண்டிய பங்குத் தொகையை மீட்டுக்கொள்ளும்படி இப்படி செய்திருக்கலாம், ஆனால் இவன் இந்த கடாளிகளிடம் தான் தயவு பெறும்படி, தான் புறம்பாக்கப்பட்ட பின்னர் இந்த தயாளத்தை அவர்கள் உணர்ந்து அவனுக்கு உதவி நாடி இப்படிச்செய்தான்.

அவனது எஜமான் அநீதியுள்ள உக்கிராணக்காரன் புத்தியாய் செய்தான் என கூறுகிறவனாய் இருக்கிறான், அவன் தனக்கு ஒவ்வொருவரிடமும் தயவு கிடைக்கும்படிக்கு இப்படி செய்ததாக அவனை மெச்சிக்கொள்கிறவனாய் காணப்படுகிறான். அவன் சாமார்த்தியமாய் இவைகளைச் செய்து தன்னைக் காத்துக்கொள்ள இவைகளைச் செய்தான். அநேக விசுவாசிகள் இத்தகைய "சாமார்த்திய" செயல்களைச் செய்வதில்லை, தேவனது தராதரத்திற்கேற்றவாறு அவர்கள் சாமார்த்தியமாய் செயல்பட வில்லை. சிறிய காரியங்களில் நமது தகுதியை நிரூபணம் செய்ய வேண்டியவர்களய் இருக்கிறோம், இவ்வாறு செய்வது பெரிய தேவனது திட்டத்திற்கு நம்மைத் தகுதிபடுத்துகிறதாய் இருக்கிறது. இவ்வுலகில் எப்படியிருப்பினும், செயலாற்றும் படியான நியமங்கள் இருக்கின்றன! இயேசு அவர்களது கடமைகளை உணர்த்தும் சத்தியத்தை இங்கு கூறுகிறவராய் இருக்கிறார்.

இவ்வுலக பொருட்களில் நீங்கள் உண்மையாய் இராவிட்டால், நித்தியமான பொருட்களைக் குறித்து கர்த்தர் எவ்வாறு உங்களை நம்பமுடியும்? ஜனங்கள்

நன்றாய் வாழத்தவறும்போது, சரியாய் நிர்வாகிக்கத் தவறும்போது, திருமணம் செய்து கொள்ளத்தவறும்போது, சாதாரண அலுவல்களில் தவறும்போது, எந்த அதிகார ஸ்தானத்திலிருந்தும் கர்த்தருக்குப் பணிசெய்யத்தவறுகிறவர்களாய் இருக்கிறோம். மற்றொருவரின் நலத்தில், மற்றும் அவரைக் குறித்த காரியங்களை நன்கு நிர்வகித்து, அவரை நன்கு கவனித்துக்கொள்ளவில்லையானால், பின்னர் தேவன் எவ்வாறு நித்தியமான காரியங்களை நிர்வாகம் செய்ய உங்களை நம்பி அருளுவார்? இறுதியான அடிப்படைக் காரியம் இங்கு கொடுக்கப்படுகிறது, இது நம் அனைவருக்கும் சவாலாய் இருக்கிறது. நாம் இரு எஜமான்களுக்கு ஊழியம் செய்ய இயலாது, எப்படியிருப்பினும் தவிர்க்கமுடியாத முறண்பாடானது கண்டிப்பாய் நேரிடுகிறதாய் இருக்கும்.

தலைமைத்துவ நடைமுறை:

கர்த்தரது உண்மையான ஊழியக்காரன், கர்த்தரைப் போலவே இருப்பான்.

1. **நேர்மையாகவும் மற்றும் பட்சபாதமின்றி பங்குத்தொகையை பகிர்தளிக்கிறவராய் இருத்தல் வேண்டும்.** [HE WILL OPERATE WITH EQUITY, HONESTY AND FAIRNESS.] தேவனது ஊழியம் செய்யும் தலைவர்கள், பட்சபாதமில்லாதவர்களாயும், நாணயமுள்ளவர்களாயும், நேர்மையானவர்களுமாய் இருந்து சாட்சியை விளங்கப்பண்ணுகிறவர்களாய் இருத்தல் அவசியம். அனுதின அலுவல்களில் அவர்கள் வெற்றியுள்ளவர்களாய் பணி செய்து, "உலகத்தாரால் நற்சாட்சி பெற்றவர்களாய்" இருத்தல் வேண்டும். அவர்கள் பணத்தை தேடி ஓடாதபடி, அவர்களது எல்லா அலுவல்களிலும், நேர்மையானவர்களாயும், நேரஸ்தர்களாயும் இருத்தல் வேண்டும்.

2. **சாதாரண உலக அலுவல்களில், நற்சாட்சியுடன் திகழுதல் வேண்டும்:** [HE WILL HAVE A GOOD TRACK RECORD IN ORDINARY WORLDLY BUSINESS.] தலைவர்களது கவலையீனத்தால், சபைக்குள் வியாபார நோக்குடன் உள்ள செயல்பாடுகள் உட்புகுமேயானால், அவற்றை அவர்கள் தங்களது தவறுகளால் ஏற்பட்டது என்பதை உணர்ந்து, அவைகளை சரிசெய்தல் வேண்டும். என் வாழ்வில் அநேக துரதிஷ்டத்தைச் சந்தித்து வருகிறேன் எனக்கூறும் நபர்களிடம் எச்சரிக்கையாய் இருங்கள், இத்தகைய காரியத்தை நாம் உபத்திரவம் என எடுத்துக்கொள்ளுதல் கூடாது, அவர்களது கெட்ட நடத்தையினால் இவைகள் அவர்களுக்கு நேரிடுகிறதாய் இருந்தது. விசுவாசிகளுக்கு "துர் அதிர்ஷடம்" என்பது

எதுவுமே இல்லை! நாம் தேவனது கரங்களில் இருக்கிறவர்களாய் இருக்கிறோம், மற்றும் அவரது பராமரிப்பு, பாதுகாப்பிற்குள் இருக்கிறோம்.

3. ஒரு தலைவர் ஒருபோதும் இருவழிகளில் நடத்தல் கூடாது: வேதாகமத் தலைமைத்துவமானது ஏக சிந்தையாய் செயலாற்றப்படக்கூடியது, கர்த்தர் மீது மட்டுமே அவர்களது கண்ணோட்டம் இருத்தல் வேண்டும். யாக்கோபு 1:6-8. விசுவாசியான தலைவரது வாழ்வில் பிரிவினையான பற்றுதல் எந்தக்காரியத்திலும் இருத்தல் கூடாது, அவர்கள் கர்த்தரது கொள்கைகளை மட்டுமே கடைபிடித்து வாழவேண்டியவர்களாய் இருக்கின்றனர். அவர்களுக்கு எவ்வித சொந்தமான கொள்கையோ, கர்த்தரது கட்டளைகளுக்கு புறம்பான செயல்பாடுகளோ இருத்தல் கூடாது. தங்களது சுய இலாபத்தை நாடும் நபராய் இருத்தல் கூடாது, கர்த்தரது சித்தத்தை நாடுகிறவர்களாய் இருத்தல் வேண்டும், கர்த்தரது மக்களின் ஆசீர்வாதங்களை நாடுகிறவராய் இருத்தல் வேண்டும். அவர்களது ஒவ்வொரு செயல்பாடும் இந்தப்படியே இருத்தல் வேண்டும். Refer to BTB study CHRISTIAN LIFE: STEWARDSHIP கிறிஸ்தவ வாழ்க்கை: உக்கிராணத்துவம்.

[ஐ] யோவான் 12:24-26, 13:16.

"24. மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக் கொடுக்கும். 25. தன் ஜீவனைச் சிநேகிக்கிறவன் அதை இழந்து போவான். இந்த உலகத்தில் தன் ஜீவனை வெறுக்கிறவனோ அவன் அதை நித்தியகாலமாய்க் காத்துக்கொள்வான். 26. ஒருவன் எனக்கு ஊழியஞ் செய்கிறவனனால், என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம் பண்ணுவார்.

13:16. மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல, அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல,"

பிரதிபலிப்பு:

"நமது சொத்துக்களைப் பாதுகாக்கும்" யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நமது சொத்துக்களை நல்லவியாபரங்களில் மூலதனம் செய்து பாதுகாப்பதில் தவறில்லை, மற்றும் ஓய்வூதியத்திற்கென திட்டமிடுதலும் தவறில்லை. ஆனால், கர்த்தர் இங்கு தமது தலைவர்களுக்கு ஒரு பெரிய அடிப்படைக்கொள்கையை காண்கிறவர்களாய் இருக்கிறோம், இந்த அடைப்படைக் கொள்கையின்படி நமது சொத்துக்கள் கர்த்தரது சேவையில் பயன்பட வேண்டியதாய் இருக்கிறதாய் இருக்கிறது. லூக்கா 12:16-21 ல் இதற்கு முன் நாம் கண்டபிரகாரம், "தேவனிடத்தில் நாம் ஐசுவரியவான்களாய்" இராதபட்சத்தில் நமது சொத்துக்கள் அனைத்தும் பிறருக்காக சேர்த்து வைப்பதாய் இருக்கும்.

இங்கு சவாலாக சித்தரிக்கப்பட்டிருக்கும் கோதுமை மணி என்பது, நமது வாழ்வில் எல்லாராலும், அன்புகூரப்படுகிற ஒன்றாய் இருக்கிறது. கோதுமை மணியை நமது அலமாறியில் வைத்து வைப்போமெனில் அதை பலவருடங்களுக்கு வைத்து வைக்கலாம். அது காண்பதற்கு மனமகிழ்வை அளிக்கக்கூடியதாய் இருக்கிறது, இப்படிப்பட்ட கோதுமை மணியானது பண்டைய உலகில், செழிப்பு மற்றும் ஐசுவரியத்திற்கு அடையாளமாய் இருக்கிறது. இச்சித்திர வாயிலாக இரு அடிப்படைக் காரியங்களை நாம் புரிந்துகொள்ளலாம். ஒன்று: இது நீண்டகாலம் பாதுகாக்கப்பட்டு பயன்படாது இருக்கிறது, அதை உணவாகவோ அல்லது விதையாகவோ பயன்படுத்தப்படாமல் இருக்கிறதாய் இருக்கிறது. இவ்வுலக யுகத்தில் அனைத்துப் "பொருட்களும்" கெட்டுப்போகக்கூடியவைகளும், பயனற்ற நிலையில் போகக்கூடியவைகளுமாய் இருக்கிறது.

இரண்டாவதாக: அதைப்போன்றே வேறே தானிய விதையைப் பெற வேண்டுமானால், அதை நிலத்தில் விதைக்கவேண்டியதாய் இருக்கிறது. அதற்கு தண்ணீப்பாய்ச்சி, அது முளைத்து துளிர்க்க வேண்டியதாய் இருக்கிறது. விதை விதைப்பது என்பது எப்பொழுதுமே கடினமான வேலையாய் இருக்கிறது. ஒருவர் எல்லாவற்றையும் இழக்க வேண்டியிருக்கும், அது இல்லையேல், போதுமான மழையில்லாமல் போகலாம், இல்லாவிடில் அளவுக்கு அதிகமான மழை பெய்யலாம். விவசாயி தனது சொத்து முழுவதையும் செலவழித்து, மிகுந்த பலனை நல்ல அறுவடையில் காணலாம் எனக்காத்திருக்கிறவனாய் இருக்கிறான். விவசாயம் என்பது எப்பொழுதுமே தர்மசங்கடமான தொழில் எனக்கணக்கிடப்படுகிறது. நிலத்தைப் பண்படுத்த வேண்டியதாய் இருக்கிறது, புதிய பயிர் செய்யும்போது, சரியான காலத்தில் விதைக்க வேண்டியதாய் இருக்கிறது, சரியானகாலத்தில் பயிர்செய்தால் மட்டுமே நல்ல மகசூலை காண முடியும்.

இங்கு இயேசு குறிப்பிட விரும்புவது என்னவெனில், உங்களது சொத்து அனைத்தையும், நிலத்தில் மரிக்குமாறு புதைத்தல் வேண்டும் என்கிறார். இதைச் செய்யாத பட்சத்தில் உற்பத்திக்கான சந்தர்ப்பமே இல்லாது போகும்.

சீஷத்துவம் மற்றும் தலைமைத்துவம் போன்றவை, உங்களுக்கு சொந்தமான அனைத்தையும் துணிந்து செலவிட ஆயத்தமாய் இருத்தலை உள்ளடக்கியதாய் இருக்கிறது, இவ்வாறு செய்வதன் மூலம் ஆவிக்குரிய உற்பத்தியை உங்கள் ஊழியத்தில் காண இயலுகிறதாய் இருக்கும். கர்த்தர் இங்கு சவாலுக்குரிய காரியத்தை பேசுகிறவராய் இருக்கிறார், நமது ஆழமான மதிப்பீடு எவைகள் மீது இருக்கின்றன, அதைக் குறித்த நமது நடத்தை எவ்வாறு செயல்படுகிறது போன்றவை கருத்தில் கொள்ள வேண்டியவைகளாய் இருக்கின்றன.

நாம் உண்மையாகவே இப்பிரபஞ்சத்தில் வாழும் வாழ்க்கையின் விபரங்களை அதிகமாய் அன்பு செலுத்துகிறவர்களாய் இருக்கிறோமா அல்லது பரலோக பிரதிபலன்களின் உண்மையை விளங்கப்பண்ணும் விசுவாசத்தில் அன்பு செலுத்துகிறவர்களாய் இருக்கிறோமா? நமக்கு ஒருபோதும் இரு எஜமான்கள் இருக்க முடியாது. நாம் மதிப்பிடும்படியான இரு மதிப்பீடுகள் இருக்க இயலாது. ஒன்று இவ்வுலக இன்பங்கள் மற்றும் கடமைகள் போன்ற தற்காலிக மதிப்பீடுகள் நம்மை ஆழுகிறதாய் இருக்கும் அல்லது கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரலோக பிரதிபலன்கள் நம்மை ஆழுகிறதாய் இருக்கும்.

நமக்குரிய சவாலாய் விளங்குவது, "அவரை பின்பற்றுவது" அவர் எங்கு வழி நடத்தினாலும், அவரோடு ஐக்கியம் கொண்டு நிச்சயத்துடன் அவருடன் நடப்பது மற்றும் அவர் நம்மோடு கொள்ளும் ஐக்கியத்தில் நிலைத்திருப்பது, இப்படிப்பட்ட பாதுகாப்பையே எல்லாவற்றிற்கும் மேலாக நாம் மதிப்பிடுகிறவர்களாய் இருக்கிறோம். கர்த்தருடன் கொள்ளும் ஐக்கியமே நமது சவாலாய் இருந்து, ஐசுவரியம், பதவி, சமுதாய ஒருங்கிணைப்பு, மற்றும் இவ்வுலகம் அருளும் குடும்ப ஆதரவு போன்ற எல்லாவற்றிற்கும் மேலாக பெரிதான பாதுகாப்பாய் இருக்கிறது.

கர்த்தருடன் கொள்ளும் ஐக்கியமே நமது வாழ்வின் மைய சத்தியமாய் இருத்தல் வேண்டும், நம்மை அவர் வழிநடத்துவதற்கு முழுமையான நம்பிக்கையை அவர் மீது வைத்தல், நிலையற்ற இவ்வுலக வாழ்வில் ஒவ்வொரு அடியையும் அவரை நம்பி எடுத்துவைத்தல், போன்றவை அவருடன் கொள்ளும் ஐக்கியத்தை வலுப்படுத்துகிறதாய் இருக்கிறது. "செல்லும் செலவைக் கணக்குப்பார்க்க"

வற்புறுத்தப்படுகிறவர்களாய் இருக்கிறோம், இதன் பொருள், நமது நண்பர்கள், குடும்பம், வியாபார ஆலோசகர்கள் போன்றவர்கள் கூறுவனவற்றை ஒரு பக்கம் ஒதுவைத்தல் வேண்டும் என்பதாகும். லூக்கா 14:23-33. இதற்காக நமக்குண்டான எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு, நடுத்தெருவில் நிற்கவேண்டும் என்பது பொருளாகாது, குடும்ப பொறுப்புகளை எல்லாம் விட்டு விட்டு தனித்து இருத்தல் என்பதும் பொருளாகாது, அவைகள் நமக்கு அவசியமானவைகளாய் இருக்கின்றன. நாம் உட்கார்ந்து நாம் செல்லும் பாதையின் மதிப்பீட்டு அமைப்பை சீர்தூக்கிப்பார்த்து, இவ்வகையான காரியங்களை எண்ணிப்பார்த்தல் வேண்டும்.

இவ்வுலக வாழ்வில் நமக்கு ஆதாயம் என இருப்பது என்ன, நமக்குண்டான அனைத்தையும் நாம் இவ்வுலகில்தானே விட்டுவிட்டு கடந்து செல்லவேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் இவ்வுலகப் பொருட்களின் மேல் வாஞ்சை வையாது, இருப்போமானால், கர்த்தரது பணியின் மீது கவனம் செலுத்தி அதை சிறப்பாய் செய்கிறவர்களாய் இருப்போம். பின்னர் பெரிய அளவிலான ஆவிக்குரிய உற்பத்தையைக் காண்கிறவர்களாய் இருப்போம், நாம் நினைப்பதற்கு அதிகமான பரலோக ஐசுவரியத்தினால் நிரப்பப்பட்டிருப்போம். இயேசு தனது ஊழியருக்கு சவால் விட்டு தெரிவிப்பது என்னவெனில், அவர்களது நம்பிக்கையின் ஆதாரம் என்ன, அவர்களது வங்கிக்கணக்கில் உள்ள சொத்து நிலவரமா, அல்லது இயேசுவுடன் வாழும் பெலமுள்ள உறவா?

இயேசுக்கிறிஸ்துவோ அல்லது பவுலோ இப்பூமியில் சொத்துக்குவிப்பு மோசடியில் ஈடுபட்டதுண்டா? பவுல் இவ்வுலகில் சேர்த்து வைத்த சொத்து எவ்வளவு எனக் கணக்கிடமுடியுமா? இதைப்போன்றே உங்களது சொத்தையும் கணக்கிடுதல் வேண்டும். நமது கர்த்தரும் நமது எஜமானனுமாகிய இயேசுவைவிட பெரியவர்களாய் இருக்க எண்ணங்கொள்ளுதல் கூடாது. இருப்பினும் இன்றைய அளவில் இவ்வுலகில் தங்களது சொத்துக்களை குவித்துக் கொண்டே செல்கின்றனர், தங்களுக்கென கட்டிடங்களைக் கட்டிக்கொண்டே செல்கின்றனர், அவர்களது முடிவாகிய நித்தியத்தைக் குறித்த அக்கரையோ கரிசனையோ இல்லாதவர்களாய் மற்றும் அவர்களது பிரதிபலன்கள் குறித்த கரிசனையில்லாதவர்களாய் இருக்கின்றனர். கர்த்தருடன் கொள்ளும் உறவுக்கு மிகப்பெரிய மதிப்பீடு கொடுங்கள், கர்த்தருடன் கொள்ளும் ஐக்கியத்தில் மகிழ்வு கொள்ளுங்கள், நீங்கள் எதிர்பார்க்கும் அனைத்தும் உங்களை நாடிவருகின்றனவாய் இருக்கும். மத்தேயு 6:33-34.

தலைமைத்துவ நடைமுறை:

கர்த்தரது உண்மையான ஊழியக்காரன், கர்த்தரைப் போலவே இருப்பான்.

1. தெளிவான மதிப்பீடுகள் எல்லா இயேசுவின் ஊழியராகிய தலைவர்களுக்கு அவசியமாய் இருக்கிறது: நாம் முதலிடம் கொடுப்பவைகளை வேறுபிரித்தல் வேண்டும், நமது சொத்துக்களை மதிப்பிடும் போது, அவைகள் கர்த்தரது பணிக்கு பயன் தராதவைகளானால் அதற்கு முன் பூஜ்ஜியம் எனக் குறியிடவேண்டும். நமது நம்பிக்கையானது கர்த்தருடன் கொள்ளும் உறவில் மட்டும் இருத்தல் வேண்டும். நித்திய பிரதிபலன்கள் காலா காலங்களில் நமது சொத்தைக்காட்டிலும் விலைமதிப்பற்றதாய் விளங்கும்.

2. எல்லாம் தேவனது பணியில், கொள்ளையிடப்பட ஆயத்தமாயிருத்தல்: எல்லா சரீரப்பிரகாரமான சொத்துக்களும், கர்த்தரது பணிக்கென அற்பணித்து அவைகள் கர்த்தரது பணிக்கு மூல ஆதாரங்களாய் காணப்படுதல் வேண்டும். ஒவ்வொரு சொத்தும் தேவைப்படும் கர்த்தரது பணியில் பயன்படுத்த ஆயத்தமுள்ளவைகளாய் இருத்தல் வேண்டும். இவைகள் "சார்ந்திராது இருத்தல்" என்ற அடிப்படைக் கொள்கையைச் சார்ந்ததாய் இருக்கிறது.

[ஒ] யோவான் 15:15-21.

"15. இனி நான் உங்களை, ஊழியக்காரன் என்று சொல்லுகிறதில்லை, ஊழியக்காரன் தன் எஜமான் செய்கிறதை அறிய மாட்டான், நான் உங்களை சிநேகிதர் என்றேன்; ஏனெனில் என் பிதாவினிடத்தில் நான் கேள்விப்பட்ட எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தேன். 16. நீங்கள் என்னைத் தெரிந்து கொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்து கொண்டேன்; என் நாமத்தினாலே பிதாவைக் கேட்டுக்கொள்வது எதுவோ, அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும், நான் உங்களை ஏற்படுத்தினேன், 17. நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருக்க வேண்டுமென்றே இவைகளை உங்களுக்குக் கற்பிக்கிறேன். 18. உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிறதற்கு முன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள்.

19. நீங்கள் உலகத்தாராயிருந்தால், உலகம் தன்னுடையவர்களைச் சிநேகித்திருக்கும்; நீங்கள் உலகத்தாராயிராதபடியினாலும், நான் உலகத்திலிருந்து தெரிந்து கொண்ட படியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது. 20. ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்லவென்று நான் உங்களுக்குச் சொன்ன வார்த்தையை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் என்னைத் துன்பப்படுத்தினதுண்டானால், உங்களையும் துன்பப்படுத்துவார்கள்; அவர்கள் என் வசனத்தைக் கைக்கொண்டதுண்டானால், உங்கள் வசனத்தையும் கைக்கொள்ளுவார்கள்.அவர்கள் என்னை அனுப்பினவரை அறியாதபடியினால், என் நாமத்தினிமித்தமே இவைகளையெல்லாம் உங்களுக்குச் செய்வார்கள்."

பிரதிபலிப்பு:

இங்கு சபையின் எதிர்காலத் தலைவர்களுக்கு கர்த்தர் நேரிடையாய் பேசுகிறவராய் இருக்கிறார், அவர்களுக்கும், நமக்கும், அவரைப்பின்பற்றுகிறவர்கள், அவருடன் கொள்ளும் உறவில், என்ன நேர்ந்தாலும் அவரை உண்மையாய் பின்பற்றுகிறவர்களாய் இருத்தலை உணர்த்துகிறதாய் இருக்கிறது. நாம் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாய் இருக்கிறோம், இதன் பொருள் அவரது பணியை பகிர்ந்து கொண்டு அதைச் செய்கிறவர்களாய் இருக்கிறோம், மற்றும் அவரது பிரதிபலன்கள், அவரது முடிவு இவைகளில் இப்பொழுதுள்ள காலங்களுக்கு உட்பட்ட நிலையிலும், காலங்களைக் கடந்த நித்தியத்திலும் பங்குபெறுகிறவர்களாய் இருக்கிறோம். இறுதி காலக்கட்டத்தில், இதன் பொருள் கர்த்தர் எவ்வாறு கனப்படுத்தப்பட்டாரோ அதைப்போன்றே நாமும் கனப்படுத்தப்பட எதிர்பார்க்கிறவர்களாய் இருக்கிறோம். கர்த்தர் உபத்திரவப்படுத்தப்பட்டார், நாமும் அவ்வாறே உபத்திரவப்படுத்தப்படுவோம், நாம் அவரை வார்த்தையாலும் செய்கையாலும் பின்பற்றுகிறவர்காய் இருக்கிறோம். பாடுகள் மற்றும் நேரடித் தாக்குதல்கள் நமக்கு வியப்பைத் தருகிறதாய் இருக்கக்கூடாது, நமது சிந்தனையில் குழப்பமுறுகிறவர்களாய் இருத்தல் கூடாது, நமது விசுவாசத்திற்குச் சவாலாய் இருத்தலும் கூடாது, காரணம் நாம் முன்கூட்டியே இவைகளைக் குறித்து எச்சரிக்கப்பட்டுள்ளோம். அவரது மந்தைக்குள்ளாக நுழையும்போதே, ஒரு யுத்தத்துடன் நுழைந்திருக்கிறோம்.

நெருக்கங்களுக்கு ஊடாக அவரது பணிசெய்யும்படி நம்மை அவர் அழைத்திருக்கிறார். (2 கொரி. 4:8), இப்பணியானது கனிகொடுக்கும் பணியாய் இருக்கிறது, எல்லா சரீரப்பிரகாரமான சொத்தானாலும் உறவுகள் சார்ந்த

சொத்தானாலும், வளர்ச்சிக்காகவும் கர்த்தரது பணிக்காகவும் கொள்ளையிடப்பட கொடுத்தல் வேண்டும். மையமாய் விளங்கும் கனியானது, சகோதர அன்பாய் இருக்கிறது, இப்படிப்பட்ட ஒரு மன ஆவியில்லையேல், சபையானது அதன் நோக்கத்தை நிறைவு செய்ய இயலாமல் போய்விடும். நாம் செய்யும் கிறிஸ்துவின் பணியானது, ஜெபம் நிறைந்ததாயும், கனிகொடுக்கும் பணியாகவும் சபையின் குடும்பத்திற்குள் புதிதாய் இரட்சிப்படைந்தோரை இணைத்துக் கொண்டு செயல்படுகிறதாயும் இருத்தல் வேண்டும். நாம் உலகிற்கு இயேசுவை அறிமுகப் படுத்துகிறவர்களாய் இருக்கிறோம், அவர்கள் நமது பணியை புறக்கணிப்பார்களேயானால், ஆச்சரியப்பட வேண்டாம், காரணம் அவர்கள் இயேசுவின் பணியையும், அவரது ஆளத்துவத்தையும் நேரிடையாக புறக்கணித்தவர்களாய் இருக்கின்றனர்.

தலைமைத்துவ நடைமுறை:

1. பணிசெய்ய அழைக்கப்பட்டுள்ளோம் என்கிற உணர்வை உடையவர்களாய் இருத்தல்: ஒரு நபர் தனது தெய்வீக அழைப்பைக் குறித்து ஆழமான உணர்வற்றவராய் இருப்பாரேயானால், மற்றும் அவரது வாழ்வானது, கர்த்தரால் "கிரயம் கொடுத்து" வாங்கப்பட்டுள்ளது என்ற உணர்வு இல்லையெனில், அவர்கள் "கனியற்று" இருப்பர், மற்றும் வேதாகம தலைமைத்துவ ஆற்றலை பெற்று வாழாதவராய் இருப்பர். இப்படிப்பட்ட அழைப்பானது, **மகிழ்ச்சியுடன் துன்பங்களையும், பாடுகளையும் கர்த்தரின் மகிமைக்காய்** அனுபவிக்கும் யதார்த்தமுள்ளதாய் இருக்கிறது.

2. கனி கொடுப்பதில் முழுமையான கண்ணோக்கமாய் இருத்தல்: உண்மையான மந்தையின் தலைவர் தங்களது வாழ்வில் கனிதரும்படி தங்களை முற்றிலும் விற்றுப்போட்டவராய் இருப்பர், மற்றும் பிறரது வாழ்விலும் கனி உண்டாக இவர், ஊக்கமளிக்கிறவராய் இருப்பர். நாம் இங்கு கனியுள்ளவர்களாயும் மற்றும் கர்த்தருக்கென பிறர் கனிகொடுக்க உதவுகிறவர்களாயும் இருக்கிறோம். ஒவ்வொரு காரியமும் இப்படிப்படிப்பட்ட சத்தியத்தை மையமாய்க் கொண்டு இயங்குகிறதாய் இருக்கிறது. கனிக்கான திறவுகோள் ஆதாரம், சகோதர அன்பாய் இருக்கிறது மற்றும் இழந்து போனோர் இரட்சிப்படைய உள்ள பசிதாகமாய் இருக்கிறது. Refer to BTB study CHURCH: SHEPHERDING THE SHEEP: சபை: மந்தையை மேய்த்தல்.

BTB [BIBLE TOPIC BOOK] STUDIES:

கிறிஸ்தவ வாழ்க்கை: கிறிஸ்து உங்களில் உருவாகுதல்:

1. வேதபகுதி: (கலாத்தியர் 4:19) "என் சிறு பிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்பவேதனைப்படுகிறேன்."

2. மதிப்பீடு செய்தல்:

என் சிறு பிள்ளைகளே - கர்த்தரிடம் பவுலின் ஊழியம் மூலம் கொண்டுவரப்பட்ட கலாத்தியர்கள் - "கர்ப்ப வேதனை." - பவுல் அதிகமான மன வேதனையுடனும் மற்றும் சரீரப்பிரகாரமான வேதனையுடனும் கலாத்தியரின் செயல்பாடுகளைக்குறித்து இங்கு கூறுகிறவராய் இருக்கிறார். "உருவாகுமளவும்" - எதிர்காலச் சொல்" இன்னும் இது நிகழவில்லை, கிறிஸ்து உங்களில் உருவாக வேண்டும். (எபேசியர் 3:16,17; பிலிப்பியர் 1:20.).
இங்கு கிறிஸ்துவின் குணாதிசயங்கள் ஒரு விசுவாசியில் உருவாகுவது குறித்துப் பேசப்படுகிறது.

3. கிறிஸ்து உங்களில் உருவாகும் விதம் குறித்த அடிப்படைக் கருத்துக்கள்:

அ] கிறிஸ்து நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றித் தீர்த்தார். (மத்தேயு 5:17).

ஆ] விசுவாசிப்போருக்கு கிறிஸ்து நியாயப்பிரமாணத்தின் முடிவாய் இருக்கிறார். (ரோமர் 10:4, கலாத்தியர் 5:18, 23).

இ] எப்படியிருப்பினும் நமக்கு உயர்தரமான பிரமாணம் இருக்கிறது, அது ஆவியின் பிரமாணம். (ரோமர் 8:2-4).

ஈ] இப்படிப்பட்ட புதிய பிரமாணமானது, ஆவியானவருடன் இணைந்து செல்லும் கட்டளையாய் இருக்கிறது. (எபேசியர் 5:18).

உ] பரிசுத்த ஆவியானவர் ஒருவரின் உள்ளே வாசம்பண்ணும்போது, கிறிஸ்துவின் குணாதிசயங்களை அவர்களில் உருவாக்கி கிறிஸ்துவை மகிமையடையச் செய்கிறவராய் இருக்கிறார். (கலாத்தியர் 4:19)

ஊ] கிறிஸ்தவ நடக்கையிலே பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவை மகிமைப் படுத்தும் நபராய் விளங்குகிறார். (யோவான் 16:14, 7:39).

எ] கிறிஸ்துவானவர் மகிமைப் படுதல், ஒரு விசுவாசிக்குள் நிகழுவதாய் இருக்கிறது. (1 கொரிந்தியர் 3:16, 6:19,20).

.

கிறிஸ்த வாழ்க்கை:

CHRISTIAN LIFE: VIRTUES

கிறிஸ்தவ வாழ்க்கைள்: ஒழுக்க நெறிகள்

1. கிறிஸ்தவ குணாதிசயங்கள், "ஒழுக்க நெறிகள்" என வகைப்படுத்தப்படுகிறவைகளாய் இருக்கின்றன. இவைகள் பரிசுத்த ஆவியானவரது கனியானது உள்ளடக்கமாய் இருக்கிறது, மற்றும் காலாகாலமாக, கர்த்தரது வார்த்தைக்கும், தேவனது சித்தத்திற்கும் கீழ்ப்படிந்ததன் காரணமாய், உருவான குணாதிசயத்தையும் உள்ளடக்கியிருக்கிறது. கொலோசெயர் 3:12-17. இவைகளைத் "தரித்துக்கொள்ளுதல்" வேண்டும் எனக்கூறப்பட்டுள்ளதன் பொருள், நாம் கீழ்ப்படிதலில் வளருதலின் ஒரு பகுதியாய் இருப்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

2. இரக்கம் காட்டுதல் [Bowels of mercies.]. மென்மையானது, மற்றவர்கள் மீது இரக்கமும் அன்புமுள்ளது, அவர்கள் சிறப்பானவற்றை பெறும்படியான விருப்பமுடையவராய் இருத்தல்.

3. அன்புள்ளவர்களாயிருத்தல்: நமது அன்பின் இரகசிய நோக்கங்கள் எதுவும் இருத்தல் ஆகாது, மற்றவர்களது நலன் கருதி தூய்மையான அன்பைக் காட்டுகிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

4. தாழ்மை: மற்றவர்களிடம் திமிரைக்காட்டுதல் கூடாது, காரணம் உங்களைத் தேவன் எவ்வாறு காண்கிறாரோ அவ்வாறே நீங்களும் பிறரைக் காண்கிறவர்களாய்

இருத்தல் வேண்டும்.

5. சாந்தம்: உங்கள் வாழ்விற்கான கர்த்தரது சித்தத்திற்கு கீழ்ப்படிதலுடன் ஒப்புக்கொடுத்தல்.

6. நீடிய பொறுமை. நாம் கோபப்படுவதை நீண்ட காலமாய் அணைத்துவைத்தல் [கோப்பப்படாது இருத்தல்] சீக்கிரத்திலேயே கட்டுப்பாட்டை இழந்து கோபப்பட்டுவிடுதல் கூடாது. {முன்கோபியாய் இருத்தல் கூடாது}

7. ஒருவரையொருவர் தாங்குதல்: மற்றவர்களது தனித்தன்மை மற்றும் வேற்றுமைகளைக் கருதாது அவர்களிடம் செயல்படுதல்.

8. மற்றவர்களை மன்னித்தல்: வஞ்சனைகளை மறைத்துவைத்தல் கூடாது, மற்றவர்களின் தப்பிதங்களை அவர்களுக்கு மனப்பூர்வமாய் மன்னித்தல்.

9. பிறரைக் கிறிஸ்துவைப் போலவே சிநேகித்தல்.

கிறிஸ்தவ வாழ்க்கை: சேவை: CHRISTIAN LIFE: SERVICE

1. நமது வாழ் நாள் முழுவதும் நம்மை அற்பணித்து தேவனை சேவிப்பது நமது கடமையாய் இருக்கிறது. (ரோமர் 12:1).

2. அவரை சேவிப்பதில் முழு மனது மிகவும் அவசியமாய் இருக்கிறது. நியாதிபதிகள் 5:2, 8:25,ஏசாயா 1:19, 2 கொரிந்தியர் 8:3.

3. பெரிய காரியங்களில் ஆற்றப்படும் சேவை, சிறிய காரியங்களில் உள்ள உண்மையைப் பொறுத்ததாய் இருக்கிறது.

4. ஒரேவிதமான வாழ்வும், நெருக்கங்களும் சரியான மனப்பான்மையுடன் உருமாற்றமடையச்செய்யும் தருணங்களாய் இருக்கின்றன. (மத்தேயு 6:33).

5. நாம் செய்யும் ஒவ்வொன்றையும் கர்த்தருக்காய் செய்ய வேண்டும். (கொலோசெயர் 3:17).

6. கிறிஸ்துவுக்கு செய்யப்படும் சேவையானது, தேவனால் ஏற்றுக்கொள்ளப்படுவதாயும், மனிதரால் அங்கீகரிக்கப்படுவதாயும் இருக்கவேண்டும். (ரோமர் 14:18).

7. நமது கிரியைகள் நிறைவேற்றி முடிக்கப்படக்கூடியதாய் இருக்கவேண்டும். யோவான் 4:34, 17:4, அப்போஸ்தலர் 20:24,
2 தீமோத்தேயு 4:7.

8. கிறிஸ்துவின் முன்மாதிரி. மத்தேயு 20:28, லூக்கா 22:27, பிலிப்பியர் 2:7.

9. நமது சேவையின் தன்மைகள்:

a) எதிர்பார்க்கப்படுகிறது எபிரெயர் 12:28.
b) உடனடியாய் செயலாற்றப்படவேண்டும். மத்தேயு 21:28.
c) மிகுதியாய் இருக்கிறது 1 கொரிந்தியர் 15:58.
d) தகுதியைப்பொருத்து இருக்கிறது. மத்தேயு 25:22, லூக்கா 12:48.
e) தேவனோடு ஒத்துழைப்பதாய் இருக்கிறது. 2 கொரிந்தியர் 6:1.
f) தனிப்பட்டநிலையில் இருத்தல் வேண்டும் (லூக்கா 16:13).
g) ஆவியின் வல்லமையில் இருக்கவேண்டும். (ரோமர் 1:9).
h) தெய்வபயத்துடன் எடுத்துக்கொள்ளவேண்டும். (எபிரெயர் 12:28).
i) அன்பினால் ஏவப்படவேண்டும். (கலாத்தியர். 5:13).

10. சேவிப்பது என்பது:

a) கிறிஸ்துவைப் பின்பற்றுவது. (யோவான் 12:26).
b) அவருக்காய் எல்லா கிறிஸ்தவர்களும் சேவை செய்கின்றனர். (கொலோ. 3;24).
c) சேவை தேவனுக்கு செய்வதாய் இருக்கிறது. (அப்போஸ்தலர் 27:23).

11. சேவிப்பதற்கு அவசியமானவைகள்:

a) விக்கிரகங்களைவிட்டு விலகியிருத்தல் (1 தெசலோனிக்கேயர். 1:9).
b) உபவாசித்தலும், ஜெபமும் (லூக்கா 2:37).
c) தேவ வசனத்தைப்போதிப்பது (அப்போஸ்தலர் 6:1-4).

12. சேவையின் ஆதாயங்கள்:

a) தேவனை மகிமைப்பதுத்துகிறது மத்தேயு 5:16, யோவான் 15:8.
b) வாழ்வில் பெருக்கத்தை ஏற்படுத்துகிறது 1 தீமோத்தேயு 6:18-19.
c) பிரதிபலிக்கும் முன்மாதிரியை கொடுக்கிறது தீத்து 2:7.
d) மற்றவர்களின் பணியை ஊக்குவிக்கிறது. எபிரெயர் 10:24.
e) பிறர்நலத்தில் அக்கரை கொள்ளச்செய்கிறது லூக்கா 10:36-37.
f) வாழ்வின் பாரங்களை இலகுவாக்குகிறது கலாத்தியர் 6:2,16.
g) அன்பை நிலைநாட்டுகிறது யோவான் 21:15-17.
h) விசுவாசத்தை நிலைநாட்டுகிறது. யாக்கோபு 2:17-18, 1 பேதுரு 2:12.
i) கிறிஸ்துவைப்போன்றது. யோவான் 13:12-15.

13. சேவகனின் முன்மாதிரி: (ஆதியாகமம் 24). (ஆபிரகாம் எலெயேசர் முன்மாதிரி)

a) தன் எஜமானின் சொல்தவறாது செயல்படுதல்.(வச.2-9) நாம் தேவனுக்குக் காத்திருக்கவேண்டும், அவரது நேரத்திற்கு முந்திக்கொள்ளக்கூடாது.
b) எஜமான் அனுப்பிய இடத்திற்குச் சென்றான். (வச.4,10).பூகோள ரீதியாக தேவனுடைய சித்தத்தில் இருக்கவேண்டும்.
c) எஜமான் சொன்னதை செய்தான். செயலாற்றும்படி ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவன் பணியை வைத்திருக்கிறார், நமது பணிக்குரிய பகுதியில் கவனம் செலுத்த வேண்டும். வழிவிலகி செல்லக்கூடாது.
d) அவன் ஜெபத்துடனும், நன்றியுடனும் காணப்பட்டான். நாம் எப்பொழுதும் நம் வல்லமை எங்கிருந்து வருகிறது என உணர்ந்துகொள்ளுதல் வேண்டும், ஆவிக்குரிய ஆசீர்வாதங்களையும், செழிப்பையும் அடையும்போது பெருமை கொள்ளக்கூடாது.
e) அவன் தொடர்ந்து செயல்படுகிறதில் கவனமுள்ளவனாய் இருந்தான். (வச.17-18, 21).நாம் சுவிஷேசவேலையில் கவனமுள்ளவர்களாய் இருக்கவேண்டும். (ரோமர் 1:14-16).
f) தன்னைக்குறித்து எதையும் பேசாமல் தன் எஜமானனைக்குறித்து பேசினான். நாம் என்னவாய் இருக்கிறோம் நாம் யாராய் இருக்கிறோம் என்பது முக்கியமல்ல, கிறிஸ்து என்னவாய் இருக்கிறார் அவர் யார் என்பதே மிகமுக்கியமானதாய் இருக்கிறது.
g) உண்மையான காரியத்தைக்கூறி சரியான முடிவெடுத்தான். (வச.49)நாம் சுவிஷேசத்தையும், மற்ற உபதேசங்களையும் தெளிவாய் அறிவித்து, விளைவுகளை எதிர்பார்க்கவேண்டும்.

CHURCH: MINISTERS

சபை: ஊழியர்கள்:

1. ஒரு தேசத்தில் உள்ள அரசியல் தலைமைத்துவத்திற்காக பயன்படுத்தப்பட்டனர். (ரோமர் 13:4).

2. ஸ்தல சபையின் போதக ஊழியத்திற்கு பயன்படுத்தப்பட்டனர். (எபேசியர் 3:7; கொலோசெயர் 1:23,25; 4:7; எபே. 6:21; 1தீமோ. 1:12).

3. எல்லா விசுவாசிகளும் ஊழியராய் பயன்பட்டு வருகின்றனர் (2 கொரிந்தியர் 3:6; 4:1; 6:4).

4. துவக்கம்: - கிரேக்க வார்த்தையானது இப்பதத்திற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது, இவ்வார்த்தையின்படி வேலை செய்பவர்கள் கப்பலின் அடித்தளத்தில் தண்டு வலிக்கிறவர்களாய் இருப்பர், இது கப்பலில் மிகவும் கடினமாய் வேலை செய்யும் இடமாய் கருதப்படுகிறது - ஊழியக்காரன் அல்லது அடிமை இங்கு பணிசெய்கிறவர்களாய் இருப்பர்.

5. அடிப்படைக்கருத்து: - ஊழியக்காரன் தன்னை ஒரு ஊழியனாகவும், அதேசமயம் அவரது மந்தையின் தலைவனாகும் பார்க்கிறவனாய் இருத்தல் வேண்டும்.

CHRISTIAN LIFE: STEWARDSHIP

கிறிஸ்த வாழ்க்கை: உக்கிராணத்துவம்

1. நல்ல உக்கிராணத்துவத்திற்கு சம்மந்தப்பட்ட அநேக வாக்குத்தத்தங்கள் இருக்கின்றன.. (லூக்கா 6:38, அப்போஸ்தலர் 20:35, 2 கொரிந்தியர் 9:6, எபிரெயர் 6:10, 13:16).

2. பரிசுத்தவான்களின் குறைவில் அவர்களுக்கு பகிர்ந்தளிக்கவேண்டும். (ரோமர் 12:13).

a) உற்சாகமாய் (2 கொரிந்தியர் 9:7).

b) வஞ்சனையின்றி (ரோமர் 12:8).

c) தேவன் மகிமைப்படும்படி (1 கொரிந்தியர்10:31).

d) உண்மை மனதுடன் (1 கொரிந்தியர்4:2, லூக்கா 21:1-4).

3. பழைய ஏற்பாட்டில் உக்கிராணத்துவம் (உபாகமம்15:7-11; சங்கீதம் 112:9; நீதிமொழிகள் 11:24,25; பிரசங்கி 11:1; மல்கியா3:10).

4. ஐசுவரியவான்களுக்கான உக்கிராணத்துவம் 1 தீமோத்தேயு 6:17-19 ல் கொடுக்கப்பட்டுள்ளது.

CHURCH: -SHEPHERDING THE SHEEP

சபை: - ஆடுகளை மேய்த்தல்.

1 பேதுரு 5:2-4. "உங்களிடத்தில் உள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சனமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும், 3. சுதந்திரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும் கண்காணிப்புச் செய்யுங்கள். 4. அப்படிச்செய்தால் பிரதாண மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள்.

1. போதகர்களாகிய நாமனைவரும் "உடன் - மூப்பர்களாய்", தேவனுக்கு முன்பாக சமமானவர்களாய் இருக்கிறோம். பாடுகளை அனுபவித்த வர்களாய் இருக்கிறோம், பரிசுத்த ஆவியானவரது வல்லமையினால் தரிப்பிக்கப்பட்டு, மற்றும் கர்த்தரையே கண்ணோக்கமாய் கொண்டிருக்கிறோம். நம்மை செயல்படவைக்கும் மகிமைக்காய் எதிர்பார்ப்புடன் இருக்கிறோம்.

2. நாம் இங்கு மந்தையை மேய்த்து, அன்புகூர்ந்து, சுய தியாக பணிசெய்து ஊழியம் செய்ய ஊக்கமளிக்கப்படுகிறோம்.

3. நாம் மந்தையை போஷிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், அவைகள் நம்முடனிருக்கும் போது பசியினால் வாடக்கூடாது.

4. அவைகள் தேவனது மந்தையாய் இருக்கிறது, அவைகள் நம்முடையவைகள் அல்ல. நாம் அவைகளை பராமரிப்பு செய்து, அவைகளுக்கு செய்ய வேண்டிய கடமைகளை செய்ய ஏற்படுத்தப்பட்டுள்ளோம், நம்மிடம் கையளிக்கப்பட்ட மந்தை குறித்து நாம் கர்த்தருக்குப் பதில் சொல்ல வேண்டியவர்களாய் இருக்கிறோம்

5. நாம் வெறும் மேற்பார்வையாளராய் மட்டும் இருத்தல் போதாது, கர்த்தரிடத்திலிருந்து நற்சாட்சி பெறுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். இக்கண்ணோட்டத்துடன் அவரது பணிசெய்தல் வேண்டும், அவரது நல்லது உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே என்று பாராட்டுதலைப்பெற வேண்டியவர்களாய் இருக்கிறோம். (மத்தேயு 25:21-23).

6. சுதந்திரமாய் அவரது பணிசெய்தல் வேண்டும், பரிசுத்த ஆவியானவரது வல்லமையின்கீழ், மற்ற எந்த ஒரு காரியமும் நெருக்கி ஏவாத வண்ணம் அவரது பணீசெய்தல் வேண்டும். நமக்குள் இருக்கும் கர்த்தரின் அன்பைத் தவிர வேறொன்றும் நம்மை அவர் பணிசெய்ய வற்புறுத்துதலாய் இருக்கக்கூடாது.

7. தன் ஆர்வலராய் கவனத்துடன் அவர் பணி செய்தல் வேண்டும், கர்த்தர் அன்பு ஒன்றே நாம் பணிசெய்ய நமக்கு ஆர்வத்தை அளிப்பதாய் இருத்தல் வேண்டும்.

8. பண ஆசை, அதிக்கம் செய்தல், அதிகாரம், பதவி, அல்லது கீர்த்தி போன்றவை நமது வாழ்வின் ஒரு பகுதியாய் இருத்தல் கூடாது. தியோத்திரோப்புவினால் ஆதிக்கம் செய்தல் குறித்து விவரிக்கப்பட்டுள்ளது. (3 யோவான் 9-10).

9. நாம் உள்ளார்வத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும், பணி செய்ய ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும், நாம் அழைக்கப்பட்ட பணி செய்ய வைராக்கியமுடையவர்களாய் இருத்தல் அவசியம்.

10. மந்தையின் மீது அதிகாரம் செலுத்துதல் கூடாது, அதிகார பலத்தை பிரயோகித்தல் அல்லது சர்வதிகாரியாய் இருத்தல் கூடாது.

11. மற்றவர்கள் பரிசுத்தமும், பிழையற்றதும், மகிழ்ச்சி நிரம்பி வாழும் வாழ்க்கைக்கு முன் மாதிரிகளை அமைக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

12. மகிமையின் வாடாத கிரீடத்தைப் பெறுவதே கண்ணோக்கமாய் இருத்தல் வேண்டும், இதுவே நன்றாய் பணி செய்யும் போதகரது நித்தியமான பிரதிபலனாய் இருக்கிறது.

சோம்பற்தனமாய் ஊழியம் செய்யும் போதகர்கள், அதிகாரம் அல்லது பண ஆசையுள்ள போதகர்கள், இங்கு வன்முறையாய் கடிந்து கொள்ளப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்களைக் குறித்து கர்த்தரது எதிர்பார்ப்பு அதிகமாய் உள்ளது, அவர்களது ஊழிய விளைவுகள் தோல்வியே அல்லது ஜெயமோ (கர்த்தரது தீர்மானத்தின் படி), நித்தியமானதாய் இருக்கிறது. கர்த்தர் பிரதாண மேய்ப்பராய் இருக்கிறார், அவர் ஒரு வருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், நல்லது உண்மையும் உத்தமும் உள்ள ஊழியனே என்று அவர் கூறுவதே, நமது கண்ணோட்டமாய் இருக்கிறது.

புதிய ஏற்பாட்டு நிருபங்களில் இருந்து சேவை செய்யும் தலைமைத்துவத்திற்கான அறிவுரைகள்:

இப்பகுதியில், 1 பேதுரு ஐந்தாம் அதிகாரத்தில், பவுல், யாக்கோபு, பேதுரு மற்றும் யூதா போன்றோரின் மனோ நடத்தையை பரிசீலனை செய்கிறவர்களாய் இருக்கிறோம். கர்த்தரது ஊழியத்தில் தங்களது ஸ்தானம் இன்னதென்பதை இவர்கள் பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கின்றனர். இவர்களை நாம் காணும்போது, கர்த்தரின் அடிமைகளாகவே காண்கிறவர்களாய் இருக்கிறோம், அவர்களது எஜமானருக்கு பணி செய்கிறவர்களாய் நாம் காண்கிறோம், தங்களது சுயத் "தேவைகள்" எதையும் நாடாதவர்களாய் பணிசெய்தனர்.

இக்கால உழியர்கள் தங்களது தனிப்பட்ட உரிமைகளை நாடுகிறவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் தங்களக்கு நியாயமான அடிப்படைத் தேவைகளை எதிர்பார்க்கிறவர்களாய் இருக்கின்றனர். ஆனால், கர்த்தரும் அவரது அப்போஸ்தலரும் கர்த்தருக்குப் பணிசெய்வதிலேயே கண்ணோக்கமாய் இருந்தனர். கர்த்தரின் சவாலை மத்தேயு 6:25-34 ல் காண்கிறவர்களாய் இருக்கிறோம். அவரை முதல் ஸ்தானத்தின் வைத்து, நமது தேவைகளை சந்திக்கும்படி அவரை அனுமதித்தல் வேண்டும். மனிதர்கள் பட்டியலையும் திட்டங்களையும் தயார் செய்து நமது தேவைகள் சந்திக்கும்படி வற்புறுத்துகிறவர்களாய் இருக்கின்றனர், நமது உல்லாச வாழ்வானது நிறைபெற இவ்வாறு செய்ய வேண்டும் என்கின்றனர். நமது ஆண்டவர் தமது பணி செய்வதில் நாம் கண்ணோக்கமாயிருக்க நம்மை வற்புறுத்துகிறவராய் இருக்கிறார் அவ்வாறு செய்வதன் மூலம் அவர் நம்முடைய தேவைகளை சந்திக்கிறவராய்

இருக்கிறார், அதனால் நாம் மகிழ்ச்சி கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

அப்போஸ்தல எழுத்தாளர்கள் பயன்படுத்தியுள்ள சொற்களை புதிய ஏற்பாட்டு நிருபங்களில் காண்போம். அவர்கள் அதிகமா வலியுறுத்தும் சொற்கள் பிறர் நலன் கருதும், சேவகம் செய்யும் தலைமைத்துவ வார்த்தைகளாய் இருக்கின்றன. கீழ்க்காணும் வேதபகுதிகளில் அவைகளைக் காண்போம்:

(a) ரோமர் 1:1,2
(b) கொலோசெயர் 4:10-14
(c) 2 தீமோத்தேயு 2:20-26
(d) தீத்து 1:1
(e) யாக்கோபு 1:1
(f) 2 பேதுரு 1:1
(g) யூதா. 1

[அ] ரோமர் 1:1-2.

1. "இயேசுக்கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனாகும்படி அழைக்கப்பட்டவனும், தேவனுடைய சுவிஷேசத்திற்காய் பிரித்தெடுக்கப் பட்டவனுமாகிய பவுல், 2. ரோமாபுரியிலுள்ள தேவப்பிரியரும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களுமாகிய அனைவருக்கும் எழுதுகிறதாவது.

பிரதிபலிப்பு: (போதகர் Pastor Paul Oost அவர்களால் ரோமர் நிருபத்தை அவர்கள் வாசித்து அளித்தவைகளின் அடிப்படையில் கீழ்க்காண்பவைத் தொகுக்கப்பட்டுள்ளன.)

பவுல் ரோமர் நிருபத்தை எழுதும்போது, சுமார் 20 ஆண்டுகளுக்கு மேலாக கிறிஸ்தவ போதனையாளராய் ஊழியம் செய்தார். அவர் தனது நிருபத்தை எழுத துவங்கும் போது, தன்னை "இயேசுக்கிறிஸ்துவின் அடிமை" என அறிமுகப்படுத்துகிறவராய் இருக்கிறார். "அடிமை" என்னும் பதம் “DOULOS”, என்னும் கிரேக்கப்பதத்திலிருந்து வந்ததாகும், இதன் பொருள் எவ்வித உரிமையும் தனக்கென இராத ஒரு அடிமையை இது குறிக்கிறதாய் இருக்கிறது. பிலிப்பியர் 2:6-7 ல் இயேசு சரித்திரத்தில் மிகப்பெரிய அடிமையாக குறிப்பிடப்படுகிறார். அவர்

தானாகவே மனமுவந்து, நமது காலத்தில், மற்றும் நாம் வாழும் உலகில், ஒரு அடிமையாகி, கொடூரமான ரோம சிலுவையில், நமக்கு பதிலாகி மரித்தார். அவரது தியாக பலியினால், அவர் நம்மை அடிமைத்தனத்திலிருந்தும், மற்றும் பாவ அடிமைத்தனத்திலிருந்தும் விடுவித்து, நமக்கு "நற்செய்தியை" அளித்து, அதை விசுவாசிப்போர் அனைவருக்கும் இவ்விதமான விடுதலைக் கிடைக்கச் செய்தார்.

அவர் நமக்கு சரீரம், ஆத்துமா, ஆவி தந்தவர், அவர் நம்மை அவரது அடிமைகளாகுவதற்கு ஒரு போதும் வற்புறுத்துவது இல்லை. பவுல் செய்ததைப் போன்று, நீங்களாகவே மனமுவந்து அவரது அடிமைகளாக்கிக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள். நமது வேதபகுதியை பார்க்கும்பொழுது, பவுல் யாராக இருந்தார் என்பதைக் கண்டுக்கொள்ளமுடியும். அவர் தேவனது ஊழியம் செய்பவராகவும், தேவனிடமிருந்து செய்தியைப் பெற்றவராகவும் இருந்தார். பவுல் நமக்கு என்ன சொல்ல வருகிறார் என்றால், தன்னை அவர் இயேசுவின் அடிமையாக அற்பணித்துள்ளதை தெரிவிக்கிறவராய் இருக்கிறார். இப்படிப்பட்ட வார்த்தைகள் மூலம் அவர் கர்த்தரை மிகவும் நேசித்தவராக, மனமுவந்து தன்னை அவருக்கு அடிமையாக அற்பணித்துள்ளார். யூத மதத்திற்காக அவர் மிகவும் வைராக்கிய முள்ளவராய் இருந்தும், இப்பொழுது அதைக்காட்டிலும் இயேசுவின் மீது அதிக ஆர்வமுள்ளவராய் இருக்கிறார். பவுல் செய்ய வேண்டிய வேலைப்பலு அதிகம் இல்லாது, எல்லாம் செய்து முடிக்கப்பட்டதாயும், மக்களை மகிமையின் கர்த்தரிடம் வழிநடத்துவதே அவர் செய்யவேண்டியது எனக் கண்டார்.

புதிய எஜமானுக்கு பவுல் அடிமை மட்டுமல்லாது, அவர் அப்போஸ்தலராகவும் இருந்தார். "அப்போஸ்தலர்" என்கிற வார்த்தைக்குரிய அர்த்தம் "அனுப்பப்பட்டவர்" என்பதாகும். பவுல் தன்னை இராஜாதி இராஜாவின் ஸ்தானாபதியாய் இருப்பதாய் சிந்தித்தார். அவர் மற்றொரு தேசத்திற்கு பரலோகப் பிரதிநிதியாக அனுப்பப்பட்டவர் என்பதை அறிந்து உணர்ந்திருந்தார். ஒரு ஸ்தானபதி அவரது தேசத்திற்குரிய அனைத்து அதிகாரத்தையும், அவரை அனுப்பும் இராஜா அவருக்களித்து அவற்றை அவர் சுமந்து செல்கிறவராய் இருக்கிறார், பவுல் இதற்கு விதிவிலக்கானவர் அல்லர், அவர் செயல்பட்ட போது, அவர் பரலோகத்தின் பிரதிநிதியாகவே செயல்பட்டார். அவர் பயன்படுத்திய அதிகாரமானது, தேவனது அதிகாரமாகவே இருந்தது. Refer to the BTB study CHRISTIAN LIFE - AMBASSADOR. ஒப்பிடுக: கிறிஸ்தவ வாழ்க்கை - ஸ்தானாபதி.

அப்போஸ்தலனாய் இருப்பது என்பதன் கருத்து என்னவெனில், நீங்கள் விஷேசித்த ஸ்தானபதியாய் அல்லது செய்தியாளராய் அழைக்கப்பட்டு மற்றும்

இயேசுக்கிறிஸ்துவால், சுவிஷேசமாகிய நற்செய்தியை அறிவிக்கும்படிக்கு பூமியின் கடைசி பரியந்தம் அனுப்பப்படுவது என்பதாகும். பவுல் இப்படிப்பட்ட அழைப்பை இயேசுவிடமிருந்து பெற்றுக் கொண்டார். இயேசுக்கிறிஸ்து தனது பரமேறுதலின் போது, ஸ்தாபித்துச் சென்ற அலுவலானது, எல்லா அலுவல்களைக் காட்டிலும் மிக உன்னதமான ஒன்றாய் இருந்தது. தேவனது சித்தத்தினால் இப்பணியானது தகுதியான ஒன்றாய் பவுல் கருதுகிறவராய் இருந்தார். அப்போஸ்தலராகுவது பவுலின் தீர்மானமாய் இல்லை. பவுல் ஊழியத்திற்குச் செல்ல வேண்டும் என தீர்மானம் கொள்ளவில்லை. அவரது நண்பர்களோ, அவரது குடும்பத்தினரோ இவ்வாறு ஊழியம் செய்யும்படி அவரை வற்புறுத்தவில்லை. .அவர் ஊழியத்தில் அமர்த்தப்பட்டது சர்வ வல்லமையுள்ள தேவனில் செயலாய் இருந்தது. 1 தீமோத்தேயு 1:12-14. தேவனது கிருபையினால், தான் ஏற்படுத்தப்பட்டு, தனது வாழ்வில் அதன் மூலம் தான் செயல்பட்டுவருவதை அவர் உணர்ந்தார். 1 கொரிந்தியர் 15:10 ல் "நான் அல்ல, என்னுடனே இருக்கிற தேவ கிருபையே அப்படிச்செய்தது." என கூறுகிறவராய் இருக்கிறார்.

பவுல் முதலில் தன்னை "கிறிஸ்துவின் அடிமையாக" ஏற்படுத்திக்கொண்டார், இப்பொழுது அப்போஸ்தர் என அழைக்கப்படுகிறார், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் சாட்சியாயும் விளங்குகிறார். தேவன் தாமே தெரிந்து கொண்ட தேவனது ஊழியரை மட்டுமே தேவன் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார். இன்றைய அளவில் தேவனால் அழைக்கப்படாத அநேக மனிதர்கள், ஊழியத்தில் இருக்கிறவர்களாய் இருக்கின்றனர். தேவன் அழையாதபடி ஒருவரும் அவரது ஊழியத்தில் நுழைதல் கூடாது. (யோவான் 15:16; மத்தேயு 9:38; எபிரெயர் 5:14; எரேமியா 23:21; எசேக்கியேல் 13:4-6, 10.)

பவுல் 1 கொரிந்தியர் 9:16 ல் சுவிஷேசத்தைப் பிரசங்கிக்கும்படி தேவனால் அவர் அழைக்கப்பட்டதாய் கூறுகிறார், இவ்வழைப்பை அவர் நிறைவு செய்ய வேண்டியவராய் இருக்கிறார் இல்லையேல் தேவனது நியாயத்தீர்ப்பானது அவர் மீது கடந்து வருகிறதாய் இருக்கும். இப்படிப்பட்ட நிலையில் நன்கு ஸ்தாபிக்கப்பட்ட உண்மையின் படி, நாமும் தேவனது குமாரனின் ஊழியத்தை செய்யக் கடமைப் பட்டுள்ளோம். இதைத்தவிர நமக்கு வேறு மார்க்கம் இல்லை. அவர் நமது அற்புதமான எஜமானனாய் இருந்து, திருப்தியையும், சமாதானத்தையும் மற்றும் மகிழ்ச்சியையும் அவர் சேவையில் நமக்களிக்கிறவராய் இருக்கிறார்.

பவுல் இவ்வூழியத்தை நிறுத்திவிடவில்லை, அவரது வாழ்வின் கடின சூழலில்

அவர் துண்டை உதறிவிட்டு செல்லவில்லை. அவர் தேவனுக்கு பணிசெய்கிறவராய் இருந்து, பரிசுத்த அவியானவரின் வல்லமையினால், தனது முழுத்திறமையுடன் செய்து நிறவேற்றினவராய் விளங்குகிறார், இது நமக்கும் அரிய பாடமாய் விளங்குகிறது. எரேமியாவின் குழந்தைப் பருவத்தில் அவன் அழைக்கப்பட்டதை உங்கள் நினைவுக்கு வராலாம். கர்த்தரால் அனுப்பப்படாத கள்ள தீர்க்கதரிசிகள் எரேமியா 23:21, தீர்க்கதரிசனம் உரைத்ததை இங்கு காண்கிறோம்.

எரேமியா அழைக்கப்பட்ட தீர்க்கதரிசியாய் இருந்தார், பவுலும் அழைக்கப்பட்ட அப்போஸ்தலராய் இருந்தார். பவுல் கூறுவது என்னவெனில், தான் அப்போஸ்தலராய் அல்லது "அனுப்பப்பட்டவராக" விஷேசித்த செய்தியாளராய் புறஜாதிகள், மனநிரும்பவும், இயேசுவில் விசுவாசம் வைக்க அனுப்பப்பட்டவராய் இருந்தார். Refer to the study on CHURCH: APOSTLESHIP. ஒப்பிடுக: சபை: அப்போஸ்தலத்துவம்.

புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தலர் சபைகளை நிறுவினதை நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம். இவர்களே முதல் மிஷனரிகளாய் விளங்கி வருகின்றனர். அவர்கள் ஓரிடத்திற்கு கடந்து வந்து, சுவிஷேசத்தைப் பிரசங்கித்தனர், ஜனங்கள் மனந்திரும்புகிறதைக் கண்டனர், அவர்களை ஒருமிக்கக்கூட்டிச் சேர்த்து சபைக்குள் கொண்டுவந்தனர். இவ்வாறு அவர்களால் உருவாக்கப்பட்ட சபைகளில் பின்னர் மூப்பர்களை ஏற்படுத்தினர். இப்படிப்பட்டவர்கள் தொடர்ந்து சபை மக்களுக்கு அதிகாரத்துடன் போதனை அளித்து, ஆலோசனை கொடுத்து தலைமைத்துவம் ஏற்று வழிநடத்திச் சென்றனர். இப்படிப்பட்டவர்கள் தலைவர்களுக்கு தலைவர்களாய் விளங்கினர். பவுல் தேவனால் பயன்படுத்தப்பட்டு 26 புதிய ஏற்பாட்டுப் புத்தகங்களில் 13 நிருபங்களை எழுதினார் எனக்காண்கிறவர்களாய் இருக்கிறோம். இதுவே பவுலின் ஊழியமாய் இருக்கிறது. இதுவே அவர் அழைக்கப்பட்ட ஊழியமாய் இருந்தது. நம் ஒவ்வொருவருக்கும் ஊழியம் அளிக்கப்பட்டு இருக்கிறது. நாம் அப்போஸ்தல அலுவலைப் பெறாத பட்சத்தில் நாம் அனைவரும், பரலோக ஸ்தானபதிகளாய் பணியாற்றுகிறவர்களாய் இருக்கிறோம். நமது கர்த்தரும் எஜமானருமாகிய இயேசு நம்மை அழைத்திருக்கிறார், பவுலுக்கு அளித்த அதே செய்தியை அறிவிக்க நமக்கும் அளித்திருக்கிறார். அச்செய்தியானது கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் மகிமையின் சுவிஷேசச் செய்தியாய் இருக்கிறது. இழந்து போன மற்றும் மரித்துக்கொண்டிருக்கிற இவ்வுலகிற்கு, தேவன் நம்மை அவரது செய்தியாளராக இருக்கும் படி பணித்து கட்டளை அளித்திருக்கிறார். இவ்வுலகத்தினருக்கு,

தேவனது எழுதப்பட்ட வார்த்தையைக் குறித்து பேச வேண்டுமென வேதாகமம் வெளிப்படையாக நமக்குச் சொல்கிறதாய் இருக்கிறது. 2 கொரிந்தியர் 3:2-3.

உலகம் நம்மைக் காணும்போது, இவ்வுலகில், நாம் தேவனது சித்தம் செய்ய விற்கப்பட்டுப் போனவர்கள் என கண்டு கொள்ளட்டும். அவர்கள் தேவனது ஜனங்களைக் காணும்போது, பரலோகத்தின் பிரஜைகளாகவும் மற்றும் பரலோகின் பிரதிநிதிகளாகவும் வாழ்ந்து வருகிறோம் என்பதைக் கண்டுகொள்கிறவர்களாய் இருத்தல் அவசியமாய் இருக்கிறது. (பிலிப்பியர் 1:27). நமது ஊழியம் பவுலின் ஊழியத்தைப் போன்று இல்லாதிருக்கலாம், இருப்பினும் அவர் தமது ஊழியத்தை நிறைவேற்றி முடித்தது போலவே, நாமும் நிறைவேற்றி முடிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். தேவன் தனிப்பட்ட நிலையில் பவுலை தெரிவு செய்து, அவரைப் பரலோகப் பணியில் இப்பூமியில் அமர்த்தியது போல, நமக்கும் பரலோக தேவன் செய்துள்ளார். தேவன் உங்கள் ஊழியத்தை நீங்கள் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறார். இயேசு தனக்கு விரோதமாய் செயல்பட்ட கொடிய சத்துருவை, (தர்சுபட்டணத்தானாகிய சவுலை) தனது பிரசித்திபெற்ற பெரிய செய்தியாளராய் ஏற்படுத்த இயலுமானால், உங்கள் வாழ்வை அவருக்கு அற்பணிக்கும்போது, தேவன் உங்களது வாழ்வையும் பயன்படுத்தி தமது மகிமையை விளங்கப்பண்ணுகிறவராய் இருக்கிறார். (1 தீமோத்தேயு 1:15).

"அழைக்கப்பட்டவர்கள்" என்கிற இந்த வார்த்தையானது, இது சார்ந்த மூன்று வினைச் சொற்கள் மூன்று விதமாகச் செயல்படுகிறதாய் இருக்கிறது. முதலாவதாக: நமது இரட்சிப்பின் போதுள்ள அழைப்பைக் காணும்படி செய்கிறது. இரண்டாவதாக: நித்தியத்திற்குள் நம்மை அழைத்துச் செல்லும் அழைப்பை முன்னோக்கி காணும்படிச் செய்கிறது. மூன்றாவதாக: நம் அனைவருக்காய் தம்மையே தியாக பலியாய் அற்பணித்து அவரது பணியை தற்போது செய்யும்படி அழைத்த அவரது அழைப்பை காணும்படி செய்கிறது. சுவையற்ற உலகிற்கு, சுவை தரும் உப்பாக நமது வாழ்வானது, தேவனது மகிமையை வெளிப்படுத்தி, மற்றவர்களில் தேவனுக்கடுத்த காரியங்களில் தாகத்தை ஏற்படுத்த அமைதல் வேண்டும். (மத்தேயு 5:13-16).

இப்பொழுது, இயேசுவின் "அடிமையாய்" இருக்கிறார், அழைக்கப்பட்ட அப்போஸ்தலராய் இருக்கிறார், தேவனது சுவிஷேசத்தை அறிவிக்க வேறுபிரிக்கப்பட்டவராய் தன்னைக்குறித்து விவரிக்கிறவராய் இருக்கிறார். இது முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. பவுல் ஒரு பரிசேயன். "பரிசேயன்" என்பதன் பொருளே "வேறுபிரிக்கப்பட்ட ஒருவர்" என்பதாகும். பவுல் இவ்வூழியத்தில்

தலைப்படுமுன்னர், பரிசேயனாய், இவ்வுலகின் பொதுவான காரியங்களில் இருந்து, தேவனுக்கென சிறப்பாய் பணியாற்ற வேறுபிரிக்கப்பட்டிருந்தார். இவ்வாறு வேறுபிரிக்கப்பட்ட பரிசேயர், மிகவும் கண்டிப்பானவர்களாய் நடந்து கொள்கிறவர்களாய் நடந்து வந்தனர். அவர்கள் உலகிலிருந்து பிரிந்து வாழ பலவிதமான பழக்கவழக்கங்களை கைக்கொண்டு வந்தனர். இப்பொழுது, பவுல் வித்தியாசமான முறையில் பவுல் வேறுபிரிக்கப்பட்டவராய் திகழ்கிறார், அவர் பரிசேயனாய் இருந்த போது, மனிதப் பெருமையானது அதில் விளங்குகிறதாய் இருந்தது, இப்பொழுது வேறுபிரிக்கப்பட்ட செயலானது இரக்கம் மற்றும் கிருபையினால் உண்டானதாய் இருக்கிறது. முன்னர் அவர் மனிதச் சடங்குகள், பாரம்பரியங்கள் இவைகளை அனுசரிக்கும்படியாக வேறு பிரிக்கப்பட்டிருந்தார், இப்பொழுதோ, தேவனது சுவிஷேசத்தைப் பிரசங்கிக்கும்படி வேறுபிரிக்கப்பட்டவராய் திகழுகிறவராய் இருக்கிறார்.

"வேறு பிரிக்கப்படுதல்" என்ற வார்த்தையானது கிரேக்க மொழியில், “aphorizo”, என்றிருக்கிறது, - இதன் பொருள், "எல்லைகளைக் குறியிடுதல்" "to mark off by boundaries". என்பதாகும். இது கிரேக்க இலக்கணத்தில் perfect participle ஆக இருக்கிறது, இதன்படி கடந்தகாலத்தில் செய்து முடிக்கப்பட்டு அதன் விளைவாக, நிகழ்காலத்தில் தொடர்கிறதாய் இருக்கிறதாய் இருக்கிறது. பவுல் குறிக்கப்பட்ட மனிதராய் விளங்குகிறார், தேவனால் சுவிஷேசத்திற்கென குறிக்கப்பட்டவராய் விளங்குகினார். ஆங்கில வார்த்தை HORIZON என்ற சொல்லானது இப்பதத்திலிருந்து வந்ததாய் இருக்கிறது. பவுலின் எல்லைக்கோடானது [horizons] முற்றிலுமாய் மாற்றப்பட்டது. இதற்கு மதம் என்கிற நரகம் நோக்கி வழிநடத்தப்படுகிறவராய் இருந்தார். லீகலிச வாழ்வு வாழ்ந்து {நியாயப் பிரமாணத்தைக் கைக்கொண்டு வாழ்ந்து} இயேசுவுக்கு விரோதமாய் கலகம் செய்கிறவராய் திகழ்ந்தார். இப்பொழுது, அவரது வாழ்வானது முற்றிலுமாய் மாற்றப்பட்டது இப்பொழுது புதிய எல்லைக்கோட்டிற்குள் horizon கடந்து வந்துள்ளார். இவரது வாழ்வானது முற்றிலும் மாற்றப்பட்ட வாழ்க்கையாய் இருக்கிறது.

பவுல் ஏதோ சாதாரணமான காரியத்திற்காய் வேறுபிரிக்கப்படவில்லை, அவர் குறிப்பிட்ட காரியத்திற்காய் வேறுபிரிக்கப்பட்டவராய் இருக்கிறார். அக்குறிப்பிட்ட காரியம் அப்போஸ்தலர் 13:2 ல் குறிப்பிடப்பட்டுள்ளது, பவுல் அந்தியோகியா பட்டணத்தில் இருக்கும்போது, தனது முதலாவது மிஷனரி பிரயாணத்தை துவங்கினார். இதற்கு முன்னதாகவே அவர் ஊழியத்தில் இறங்கி ஊழியம் செய்துவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவர் தர்சு பட்டணத்தைவிட்டு

வெளியேறி, அந்தியோகியா பட்டணத்தில் ஊழியம் செய்துவந்தார், அங்கிருந்து தேவனால் அழைக்கப்பட்டார். பவுல் நமக்குக் கூறுவது என்னவெனில், தனது வாழ்வானது தேவனது மகிமைக்காகவும், கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்காகவும் வேறுபிரிக்கப்பட்டது என்கிறார். இதன் பொருள் இவ்வுலகில் ஒன்றும் ஒரு பொருட்டாக பவுலுக்கு தோன்றவில்லை, அவர் ஒரு பொருட்டாக எண்ணியது தேவனை மட்டுமே. உங்களது மனநிலையும் இப்படிப்பட்டதாய் இருக்கிறதா? தேவன் பவுலை அழைத்தார் அவரை வேறுபிரித்தார், இதினிமித்தம் அவர் இயேசுக்கிறிஸ்துவின் சுவிஷேசத்தை பிரசங்கிக்கிறவரானார். இதுவே அவரது ஊழியமாய் இருந்தது. அவரது ஊழியமானது அப்போஸ்தல ஊழியமாய் இருந்த போதிலும், அவரது மிஷனானது தேவனது சுவிஷேசத்தைப் பிரசங்கிப்பதாய் இருந்தது.

தேவன் ஜனங்களை தமக்காக வேறுபிரித்து, அவர்களை தமக்காக ஏற்படுத்துகிறவராய் இருக்கிறார், அவர் இஸ்ரவேலரை தமக்காக ஏற்படுத்தினார். லேவியராகமம் 20:26. அவர் நம்மை வேறுபிரிக்கப்பட்டு இருக்க அழைக்கிறவராய் இருக்கிறார். பவுல் அழைக்கப்பட்டார் - அது போல நாமும் அழைக்கப்பட்டுள்ளோம். பவுல் தேவனுக்காக வேறுபிரிக்கப்பட்டார் - அது போல நாமும் வேறுபிரிக்கப்பட்டுள்ளோம். பவுல் தேவனது சுவிஷேசத்திற்காய் வேறுபிரிக்கப்பட்டது போல, நாமு பிரதாணக்கட்டளையைப் பெற்றுள்ளோம். இயேசுக்கிறிஸ்துவின் கட்டளையை, சுவிஷேச புஸ்தகங்களின் இறுதியிலும், அப்போஸ்தல நடபடிகள் புஸ்தகத்தின் ஆரம்பத்திலும், உலகின் எல்லாப்பகுதிகளிலும் சுவிஷேசத்தை அறிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளோம். ஆகையால் நமது மிஷன் பவுலின் மிஷனைப் போன்றே இருக்கிறதாய் இருக்கிறது. கேட்கப்படுகிற கேள்வியானது நம்மைத் தெளிவுபடுத்துகிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட மிஷனைக் காண்கிற நாம், நமது நாட்களில் அதை நிறைவேற்றுகிறவர்களாய் இருக்கிறோமா? நாம் தேவனுக்காக வேறுபிரிக்கப்பட்டவர்களாய் காணப்படுகிறோமா?

பவுல் நமக்குச் சொல்வது என்னவென்றால், "தேவனது சுவிஷேசத்திற்காக" தான் வேறுபிரிக்கப்பட்டதாய்க் கூறுகிறார். சுவிஷேசம் யாருக்குரியதாய் இருந்தது, பவுலின் சுவிஷேசமா? - இல்லை அது தேவனது சுவிஷேசமாய் இருந்தது. புதிய ஏற்பாட்டுக் கடிதங்களின் கண்ணோட்டமானது சபையைக்குறித்தும், அதற்குரிய சவால்களைக்குறித்தும், அதன் பிரச்சனைகள் குறித்துமாய் இருக்கிறது - ரோமர் நிருபமானது அதிகமாய் தேவன் மீதுள்ள கண்ணோக்கத்தை உடையதாய் இருக்கிறது. தேவன் என்கிற வார்த்தையானது ரோமர் நிருபத்தின் மிகவும்

முக்கியமான வார்த்தையாய் இருக்கிறது. ரோமர் நிருபமானது தேவனைப் பற்றியதாய் இருக்கிறது. இதில் சம்பந்தப்பட்டுள்ள ஒவ்வொரு தலைப்பும் தேவனைக் குறித்ததாய் இருக்கிறது. இந்நிருபத்தில் பவுல் தேவனை சம்பந்தப்படுத்தியே ஒவ்வொரு காரியத்தையும் குறிப்பிடுகிறவராய் இருக்கிறார்.

தலைமைத்துவ நடைமுறை:

1. அழைப்பைக்குறித்த ஆழமான உணர்வு வேதாகமத் தலைவரின் தனிப்பட்ட குணநலனாய் இருக்கிறது: ஏனோதானோவென்ற உணர்வுகள், அனலுமின்றி குளிருமின்றி வெது வெதுப்பான அற்பணிப்புகள் தலைமைத்துவத்தில் ஒருபோதும் எதையும் சாதிக்காதவைகளாய் இருக்கின்றன. உண்மயானத் தலைவர்கள் தங்களுக்குள்ளாக ஆழமான உணர்வுள்ளவர்களாய் விளங்குகிறவர்களாய் இருக்கின்றனர். கர்த்தர் இவ்வித அழைப்பை நமக்குத் தந்துள்ளார், இது எல்லா விசுவாசிகளுக்குரிய நித்திய திட்டத்தின் ஒரு பகுதியாய் இருக்கிறது, அவர்களது முடிவானது இயேசுவில் இருக்கிறது. தேவனது ஜனங்களை வழிநடத்துவதற்கு இப்படிப்பட்ட சத்தியத்தினால் அனல் கொண்டவர்களாய் இருத்தல் வேண்டும், "கிறிஸ்துவின் சபையாகிய சரீரத்திற்கு" பணிசெய்யும் போது, எல்லோரும் கேட்பதற்குரிய சத்தியத்தை போதித்தல் வேண்டும்.

2. உண்மையான தலைவர் தர்க்கிக்கமாட்டார் மற்றும் தங்களது சுய உரிமைக்காய் போராட மாட்டார் / சண்டையிடமாட்டார். தலமைமைத்துவமானது மற்றவர்களது உரிமைகள் மற்றும் அவர்களுக்குரிய சிலாக்கியங்கள் போன்றவற்றை மையமாய் கொண்டுள்ளதாய் இருக்கிறது. மற்றும் ஜனங்களது பாதுகாப்பிற்காக சக்தி மற்றும் ஆற்றலை அளிக்கிறதாய் இருக்கிறது. தலைவர்கள் தங்களைக் கண்ணுறும்போது, "அடிமைகளாக" கண்ணுறுகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் எந்த கடினமான சூழல் குறித்து கலக்கமடைகிறதில்லை, அவர்களுக்குப் "பிரதிகூலமான" காரியங்களைக் குறித்து முறு முறுக்கிறதில்லை, அவர்கள் தாங்களுக்கு கர்த்தரால் அளிக்கப்பட்ட பணியின் மீதே கண்ணோக்கமிருந்து, ஜனங்களுக்கு சேவை செய்கிறவர்களாய் இருப்பர். சுயத்தை மையமாய் கொண்டிருப்பது, பழைய பாவத்தின் கனியாய் இருக்கிறது, பரிசுத்த ஆவியானவரின் கனியானது கர்த்தரை மகிமை படுத்துவதை மட்டும் கடமையாய் கொண்டிருக்கிறது.

[ஆ] கொலோசெயர் 4:10-14.

10. என்னோடு கூடக் காவலில் இருக்கிற அரிஸ்தர்கு உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; பர்னபாவுக்கு இனத்தானாகிய மாற்கும் வாழ்த்துதல்

சொல்லுகிறான், இவனைக் குறித்துக் கட்டளை பெற்றீர்களே; இவன் உங்களிடத்தில் வந்தால் இவனை அங்கீகரித்துக் கொள்ளுங்கள். 11. யுஸ்து எனப்பட்ட இயேசுவும் வாழ்த்துதல் சொல்லுகிறான். விருத்தசேதனமுள்ளவர்களில் இவர்கள் மாத்திரம் தேவனுடைய இராஜ்ஜியத்தின் பொருட்டு என் உடன் வேலையாட்களாய் இருந்து, எனக்கு ஆறுதல் செய்து வந்தவர்கள். 12. எப்பாபிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; உங்களைச் சார்ந்தவனும், கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும், தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்றும், தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான். 13. இவன் உங்களுக்காகவும், லவோதிக்கேயருக்காகவும், எராப்போலியருக்காகவும், மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாய் இருக்கிறான் என்பதற்கு நான் சாட்சியாய் இருக்கிறேன். 14. பிரியமான வைத்தியனாகிய லூக்காவும், தேமாவும், [Demas] உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

பிரதிபலிப்பு: (Pastor Paull Oost அவர்கள் கொலோசெயர் நிருபத்தை வாசித்து அறிந்ததன் அடிப்படையில் தொகுக்கப்பட்டவை)

பவுல் ஆத்தும ஆதாயம் செய்கிறவராய் மட்டும் இருக்கவில்லை, அவர் நண்பர்களை உருவாக்குவதில் மிகவும் தலைசிறந்தவராய் விளங்கினார். அவர் எளிதில் நண்பர்களை உருவாக்கினவர் மட்டுமல்ல, அவர்களை இறுக பற்றிக்கொண்டிருந்தவராய்க் காண்கிறோம். இதன் காரணம் தன்னை ஒரு பொருட்டாகவோ, உயர்வாகவோ எண்ணாது, மற்றவர்களை எப்பொழுதும் தனக்குச் சமமானவர்களாய் கருதி வந்தார். எனது எண்ணிக்கை சரியாய் இருக்குமேயானால், 100 க்கும் அதிகமான வித்தியாசமான கிறிஸ்தவர்கள் (பெயரிடப்பட்டவர்களும், பெயர் அறியப்படாதவர்களும்) பவுலுடன் சம்பந்தப்பட்டவர்களாய் அப்போஸ்தல புத்தகம், மற்றும் அவரது நிருபங்களில், காணப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். ரோமருக்கு எழுதின நிருபம் 16 ம் அதிகாரத்தில் மட்டும் 26 வித்தியாசமான பெயர்களை குறிப்பிடுகிறதைப் பார்க்கிறோம். பவுலின் நாட்களில் தாங்கள் எழுதும் நிருபத்தின் இறுதியில் தனிப்பட்ட வாழ்த்துதல்களைச் சொல்லுதல் வழக்கமாய் இருந்துவந்தது. நண்பர்கள் ஒருவரை ஒருவர் சரிவர அதிகமாய் பார்த்தது கிடையாது, கடிதத்தொடர்புகள் மிகவும் தாமதமாயும், வரையறைக்குட்பட்ட நிலையிலும் இருந்து வந்தது. இன்றைய அளவில் நாம் அனுபவித்துவரும் நவீன வசதிகள்

அவர்களுக்கு இல்லாதிருந்தது.

பவுலின் வாழ்த்துக்கள் சமூக ரீதியானவற்றைக்காட்டிலும், மேன்மையுள்ளதாய் இருந்தது, அவைகளின் பவுலின் ஆவிக்குரிய அக்கரையையும் கரிசனையையும் தனது நண்பர்களுக்காக காட்டுகிறதாய் இருந்தது. கொலோசெயருக்கு பவுல் எழுதிய போது, தனிப்பட்ட வாழ்த்துக்களை அவர்களுக்கு அனுப்பும்போது தன்னுடன் சம்பந்தப்பட்ட ஆறு நபர்களின் பெயர்கள் இடம் பெறுவதைக் காண்கிறோம்:- அரிஸ்தர்கு, யோவான் மாற்கு, யுஸ்து எனப்பட்ட இயேசு, இவர்கள் அனைவரும் யூதர்களாய் இருந்தனர், எப்பாபிரா, லூக்கா, தேமா இவர்கள் புறஜாதியாராய் இருந்தனர். பவுல் தனது வாழ்த்துச் செய்தியில் இரு சபை கூடுகைகள், மற்றும் அவைகளில் ஒரு சபை போதகருக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறவராய் இருக்கிறார்.

முதன் முறையாக நாம் இப்பெயர் பட்டியலை வாசிக்கும் போது, நாம் அதிகமாய் தொடப்படுகிறவர்களாய் இருக்க முடியாது. காரணம் அவைகளை விரைவாய் வாசித்து முடிக்கிறவர்களாய் இருப்போம். ஆனால் பவுலுடன் இணைந்து ஊழியஞ்செய்த இவர்களது செய்கைகளை கூர்ந்து நோக்குவோமெனில் அவைகள் நம்மை வியப்பிற்குள்ளாக்கும் என்பதில் எவ்வித சந்தேகமே இல்லை. இப்படிப்பட்ட பவுலின் நண்பர்கள், கிறிஸ்தவ தலைமைத்துவத்திற்கு எடுத்துக்காட்டுக்களும், முன்மாதிரியுமாய் திகழ்கிறவர்களாய் இருக்கின்றனர். இவர்களை மூன்று குழுக்களாய் நாம் அட்டவணையிட்டு காணலாம், பவுலுடன் தங்கியிருந்தவர்கள், பவுலிடத்தில் வந்தவர்கள், பவுலைவிட்டு கடந்து சென்றவர்கள்.

முதல் குழுவினர் பவுலுடன் தங்கியிருந்தவர்கள் [கொலோசெயர் 4:10,11, 14A] இக்குழுவில் சம்பந்தப்பட்டவர்கள் [அரிஸ்தர்கு, யோவான் மாற்கு, யுஸ்து எனப்பட்ட இயேசு] - மற்றும் ஒரு புறஜாதிய சிநேகிதர் (லூக்கா) இவர்களனைவரும் அப்போஸ்தலராகிய பவுலுக்கு உண்மையுள்ளவர்களாய் அவரது தேவையில் உதவி வந்தவர்களாய் திகழ்கின்றனர். இது பவுலுக்கு எத்துனை ஆறுதலாய் இருந்திருக்கும், பவுல் சங்கிலியினால் கட்டப்பட்டு வெளியே பட்டணத்திற்குள் சென்றுவர இயலாத நிலையில், இம்மூன்று எபிரெயக் கிறிஸ்தவ வாலிபரும், யூதர்களுக்கு பவுலின் சார்பாக ஊழியத்தை எடுத்துச் செல்கிறவர்களாக காணப்பட்டனர். இவர்களே பவுலுடன் இருந்தவர்களைக் குறித்த விபரங்கள்!!

10. என்னோடு கூடக் காவலில் இருக்கிற அரிஸ்தர்கு உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; பர்னபாவுக்கு இனத்தானாகிய மாற்கும் வாழ்த்துதல் சொல்லுகிறான், இவனைக் குறித்துக் கட்டளை பெற்றீர்களே; இவன் உங்களிடத்தில் வந்தால் இவனை அங்கீகரித்துக் கொள்ளுங்கள்.

அரிஸ்தர்கு: இவர் பவுலுடன் சிறைவைக்கப்பட்டவரும், உடன் ஊழியருமாய் இருந்தார் எனப்பார்க்கிறோம். (கொலோசெயர் 4:11). அரிஸ்தர்கு மக்கதோனியா நாட்டைச் சார்ந்தவர் மட்டுமல்லாது பவுல் பிரயாணம் செல்கையில் உடன் பயணம் செய்பவர். (அப்போஸ்தலர் 19:20). இவர் தெசலோனிக்கேயா பட்டணத்தைச் சார்ந்தவர் (அப்போஸ்தலர் 20:4) எபேசியர் கலகத்தின் போது தனது வாழ்வைக் கொடுக்கவும் துணிந்தவர். (அப்போஸ்தலர் 19:28-41.) பவுல் ரோமாபுரிக்கு கடல் பயணமாய் சென்றபோது, உடன் பயணம் செய்தவர். (அப்போஸ்தலர் 27:2), புயல் காற்றினால் கப்பல் சேதமடைந்தபோது, பவுலுடன் பாடுகளை அனுபவித்தவர். அப்போஸ்தலர் 27 அரிஸ்தர்கு பவுலுடன் எல்லா சூழ்நிலைகளிலும் தங்கியிருந்தார். எபேசுவில் கலகத்தின் போது, கடல் பிரயாணத்தின் போது, புயலின் போது, பவுல் சிறையிலிருக்கும் போதும். மிக நெருங்கிய நிலையில் இவர் பவுலுடன் இருந்தார். அரிஸ்தர்கு சட்டரீதியான ரோமக் கைதி கிடையாது.

"உடன் காவலில் இருக்கிற" என்பதன் பொருள், பவுலின் சிறைவாசத்தில் அவருடன் இருந்து அவருக்கு உதவியாயும், ஆறுதலமுமாய் இருந்தார். இவர் மனமுவந்து இயேசுக் கிறிஸ்துவுக்காக மற்றும் சுவிஷேசத்திற்காய் சிறையில் பவுலுடன் உடனிருந்தார். பவுல் செய்ய வேண்டிய அனைத்தையும் அவரது உண்மையான சிநேகிதர் அவருடன் இல்லையானால் அவரால் செய்து நிறைவேற்றிருக்க முடியாது.

தேவன் அருளியவற்றிற்காய் அவருக்கு நன்றி செலுத்தும்பொருட்டு, இவ்வாக்கியத்தில் விடுபட்ட சொல்லை தெரிவு செய்க: "கர்த்தர் எனக்கருளிய பணியை இவர்கள் இல்லையேல் ...." என்னால் செய்து நிறைவேற்றிருக்கமுடியாது. கிருபை, வழிநடத்துதலும் மற்றும் தேவனது வல்லமையும், எனது அன்பு மனவி மற்றும் பிள்ளைகளின் ஆதரவு, சபையினரின் ஜெபம், சபை அங்கத்தினரின் ஆவிக்குரிய வரங்கள்.

அரிஸ்தர்கு பவுலுக்கு உறுதுணையாய் நின்று உதவி செய்தவர்களுள் முக்கியமானவராய் திகழுகிறார். அநேகர் செய்வது போன்று, இவர் எப்பொழுதும் எளிதான பணியை தெரிந்து கொள்கிறவராக இல்லை. ஊழியக்கடினப் பாதையில் இவர் விட்டு விலகாதிருந்தார். பவுலுடன் வாழ்விலும் தாழ்விலும், உபத்திரவத்திலும் உடன் இருந்தார்.

யோவான் மாற்கு: - இரண்டாவது சுவிஷேசத்தை எழுதியவர் இவர். ஆரம்பகால சபை சரித்திரத்தில் முக்கியமான இடத்தை வகித்தவராய் இருக்கிறார். புதிய ஏற்பாட்டில் இவரது பெயர் 10 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது. இவர் ஒரு யூதனாய் இருந்தார், இவரது சொந்த ஊர் எருசலேம் ஆகும், இவரது தாயார் மரியாள், விசுவாசிகளுக்கென தனது வீட்டை திறந்து கொடுத்திருந்தாள். (அப்போஸ்தலர் 12:12). யோவான் மாற்கு, பர்னபாவின் சகோதரியின் மகனாக விளங்குகிறார், இவர் பவுலுடன் முதலாவது சுவிஷே மிஷனரி பிரயாணத்தில் பங்கு பெற்றவர். (அப்போஸ்தர் 13:1-3). பேதுருவின் ஊழித்தின் பலனாய், இவர் கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்திற்குள் கடந்து வந்தார். (1 பேதுரு 5:13).

பவுலும் பர்னபாவும் முதலாவது மிஷனரி பிரயாணத்தை மேற்கொண்ட போது, யோவான் மாற்குவை உடன் அழைத்துச் சென்றனர். இவர் பிரயாணத்திற்கான ஒழுங்குகள், பிரயாணத்திற்கு அவசியமானவைகள் போன்றவற்றை பொறுப்பெடுத்துக்கொண்டவராய் இருந்தார். அவர்களது மிஷனரி பயணமானது கடினமானதாகவே, இளம் வயதினான யோவான் மாற்கு பயணத்திலிருந்து திரும்பி எருசலேமுக்கு வந்து விட்டார். (அப்போஸ்தலர் 13:5-13). யோவான் மாற்குவின் தாயார் எருசலேமில் வாழ்ந்த பணக்கார விதவையாய் இருந்தாள். மாற்கு தனது தாயாரின் மீது அளவுகடந்த அன்பு வைத்திருந்தார், இதினிமித்தம் மிஷனரி பயணத்தில் கடினமான சூழல் நேர்ந்தபோது, தனது தாயாரின் நினைவினால், இவர் வீடு திரும்ப நேரிட்டது. இதினிமித்தம் அவர் சென்ற வேலையைக் கைவிட்டு வீடு திரும்பினார். இவர் பவுலின் காலத்தில் ஒரு கோழையாய் இருந்தார் என்பது இதன் வாயிலாக புலப்படுகிறது.

யோவான் மாற்கு எதற்காக வீடு திரும்பினார் என்பதற்கு வேதவசனங்கள் எவ்வித விளக்கமும் அளிக்கவில்லை. ஒரு வேளை அவர் அதிகமாய் பயந்திருக்கலாம், பவுலுடன் சென்ற குழுவானது அபாயகரமான எல்லைக்குள் செல்லவிருப்பதை அறிந்து வீடு திரும்பியிருக்கலாம். தலைமைத்துவத்தில் தனது மாமா பர்னபாவை ஒதுக்கிவைத்துவிட்டு பவுல் மட்டுமே பேசுகிறவராய் இருந்தார் என்ற ஆதங்கத்தினால் அவர் வீடு திரும்பியிருக்கலாம். அல்லது ஒருவேளை பவுல்

புறஜாதியாருக்கு செய்த ஊழியத்தை விரும்பாது வீடு திரும்பியிருக்கலாம். காரணம் என்னவோ அறியாது இருந்த போதும், அவர் அவர்களனைவரையும் விட்டு விட்டு வீடு திரும்பினார்.

பின்னர், பவுலும் பர்னபாவும் இரண்டாவது மிஷனரிப் பயணத்திற்கு ஆயத்தப்பட்டபோது, பவுல் யோவான் மாற்குவை தங்களுடன் அழைத்துச் செல்வதற்கு மறுப்பு தெரிவித்தார். (அப்போஸ்தலர் 15:36-41). இந்த இளைஞனைக்குறித்த விஷயத்தில் தவறாய் கணித்தாரோ? இக்காலக் கட்டத்தில் பதிலானது இல்லை என்பதாகும், இதற்கு முன் அவர் பின்திரும்பியதை குறித்து அவர் அறிந்து கொள்ள ஆதாரம் அவசியமாய் இருந்தது. நாம் மன்னித்தல் வேண்டும், மற்றவர்களை நாம் மன்னித்தே தீர வேண்டும், பின்னர் இவர் மனந்திருந்தினார் என்பதற்கும் கற்றுக்கொண்டார் என்பதற்கும் போதிய ஆதாரம் இருந்தது, இது போன்று நமது வாழ்வில் இல்லையேல் நமது ஊழியத்தில் அழிவை வருவித்துக்கொள்கிறவர்களாய் இருப்போம். நாம் பவுலை குற்றப்படுத்துவதில் அர்த்தமில்லாதிருக்கிறது, யோவான் மாற்கு விஷயத்தில். பவுல் ஏதோ ஒரு சிறப்பான பிரபல பயணம் மேற்கொள்ளவில்லை, அவர் இழந்து போன ஆத்துமாக்களைத் தேடி, இயேசுவுக்கு அவர்களை ஆதாயப்படுத்தும்படி, இப்பயணத்தை மேற்கொண்டார். அவிசுவாசிகளை கிறிஸ்துவுக்காக சந்திக்கும்படி பவுல் சென்ற போது, அவருக்கு அபாயமும், அசௌகரியமும் இல்லாமல் இல்லை, அவரை மரித்துப் போகுமளவிற்கு கல்லெறித்து, அவரைத் தவறாய் பேசிய அதே இடத்திற்கு மீண்டும் பவுல் செல்கிறவராய் இருந்தார். ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் கிறிஸ்தவ தலைவர்கள் அபாயத்தூடே சென்றிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர், அவர் எப்படிப்பட்ட சூழ்நிலையாயினும் ஊழியத்தை விட்டு பின்திரும்பிய நிலையில் இல்லாதவர்களாய் இருந்தனர்.

யோவான் மாற்கு பவுலுக்கும் பர்னபாவிற்குமிடையே பிரிவினையை ஏற்படுத்தியது வருத்தப்படக்கூடியதாய் இருக்கிறது. எப்படியிருப்பினும், பவுல் யோவான் மாற்குவை மன்னித்து ஏற்றுக்கொண்டதை இங்கு நாம் பார்க்கிறோம், கொலோசெயர் நிருபத்தில் அவர் யோவான் மாற்குவைக் குறிப்பிட்டது முதல் அவரது ஊழிய முடிவு வரை யோவான் மாற்குவைக் குறித்து, தனது நல்ல அபிப்பிராயங்களைத் தெரிவிக்கிறதை நாம் காண்கிறோம். "மாற்குவை உன்னோடுகூடக் கூட்டிக்கொண்டுவா, ஊழியத்தில் அவன் எனக்கும் பிரயோஜனமுள்ளவன்." (2 தீமோத்தேயு 4:11).

மாற்கு, தீத்து, மற்றும் தீமோத்தேயு போன்றவர்கள் இளைஞர்களாய், பவுலுக்கு

விஷேசித்த நிலையில் பிரதிநிதிகளாய் இருந்து ஊழியம் செய்து வந்தனர். பவுல் இவர்களை பிரச்சனைகளுள்ள சபைகளுக்கு, இப்படிப்பட்டோரை, அனுப்பிவைத்து அவர்களது பிரச்சனைகளுக்கு பரிகாரம் செய்யும் படி செய்தார். தேவனது கிருபையினால், யோவான் மாற்கு, தனது முதல் தோல்வியை மேற்கொண்டார், பின்னர் அவர் விலமதிப்பிற்குரிய தேவனது பணியாளராய் மாறினார். இவர் மாற்கு சுவிஷேசத்தை எழுதும்படி தெரிந்தெடுக்கப்பட்டார். யோவான் மாற்கு தனது முதல் மிஷணரி பயணத்தின் போது தனக்கு தோல்வியை தருவித்த அனைவருக்கும் இவர் பின்னர் உற்சாகப்படுத்துகிறவராய் மாறினார். ஒரு வேலையுமின்றி அமர்ந்திருப்பதை, அல்லது விழுந்து போவதையோ, தான் செய்த தவற்றிற்காக மனம் வருந்திக்கொண்டே இருக்கவில்லை. அவர் மறுபடியும் ஊழியத்திற்குள் பிரவேசித்தார், தன்னை உண்மையுள்ளவனாய் தேவனுக்கு அற்பணித்தார், மட்டுமல்லாது அப்போஸ்தலராகிய பவுலுக்கும் தன்னை அவ்வாறே அற்பணித்தார்.

பல ஆண்டுகள் கடந்து, இப்பொழுது நாம் கண்டுகொள்கிறகாரியம் நம்மை வியப்பில் ஆழ்த்துகிறதாய் இருக்கிறது, மாற்கு பவுலுடன் ரோமாபுரியில் இருக்கிறார். இவரும் பவுல் தங்கியிருந்தவர்களுள் ஒருவராய் இருந்தார். இப்பொழுது இவரை பவுல் கொலோசே பட்டணத்திற்கு அனுப்பி வைக்கிறார், அவரை அவர்கள் ஏற்றுக்கொள்ளும் வண்ணம், பாசம் மிகுந்த வார்த்தையாலும், பாராட்டுக்களுடனும், அறிவுரைகளுடன் அனுப்பி வைப்பதைப் பார்க்கிறோம். பவுல் மாற்குவுடன் ஒப்புரவானது மட்டுமல்லாது, கொலோசே சபையினர் அவரை வரவேற்கும்படியாகவும், அவருக்கு விரோதமாய் செயல்படாதவண்ணம் இருக்குமாறும் கட்டளை கொடுத்தனுப்புகிறார். பவுல் உண்மையாகவே மாற்குவை முதல் பயணத்தின் போது பவுலைவிட்டு பிரிந்ததை மனதார மன்னித்தது விட்டார்.

மன்னிப்பதும் மறப்பதும் வாழ்வில் மிகச்சிறந்த உயரிய பண்பாய் விளங்குகிறது. இன்றைய அளவில் இதைப் போன்று செய்ய இயலாதவர்களாய் அநேகர் தடுமாறுகிறவர்களாய் இருக்கின்றனர். நான் ஏன் மன்னிக்கவேண்டும், அவர்கள் என்னிடம் வந்து மன்னிப்பு கேட்கட்டும் என இறுமாப்பாய் இருந்து விடுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் தேவனது கட்டளையிலிருந்து தப்பிக்கொள்ள போக்குச்சொல்ல இடமில்லாது இருக்கிறதை இவர்கள் உணருதல் வேண்டும். அவர் நேர்மையாக இடைபடுகிறவராய் இருக்கிறார். நம்மால் செய்ய இயலாதவற்றை அவர் செய்து முடிக்கிறவராய் இருக்கிறார்.

நீங்கள் மற்றவர்களை மன்னியாதபட்சத்தில், உங்களது விடுதலைக்காக நீங்கள் அவர்களை மன்னித்துதான் ஆக வேண்டும். நீங்கள் உங்களை எதிர்த்து விரோதம் செய்தவர்களை மன்னியாதபட்சத்தில் அது ஒரு பிரச்சனையாய் உருவெடுக்கிறதாய் இருக்கிறது, அப்பிரச்சனையானது உங்களுக்கும் தேவனுக்கும் இடையே உள்ள பிரச்சனையாய் மாறிவிடுகிறது. ஒரு தலைவர் ஒருவரை மன்னித்து முன்னேறாதபட்சத்தில், அவர் இன்னும் பயிற்சிகாலத்திலேயே இருக்கிறார் என்பது பொருளாகிறது.

ஆங்கிலத்தில் “welcome” என்பதன் பொருள் உபசரிப்புடன் வரவேற்றல் என்பது அர்த்தமாகும். (மத்தேயு 10:14; யோவான் 4:45). பவுல் மாற்குவுக்கு பரிந்துரை செய்யும் போது, அவர் இவ்வாறு சொல்கிறார், "இவன் உங்களிடத்தில் வந்தால் இவனை அங்கீகரித்துக் கொள்ளுங்கள்." என்கிறார். மாற்கு பவுலை விட்டுப் பிரிந்து சென்றது சபையில் சிலருக்கு சந்தேகத்தை எழுப்புவதாய் இருந்தது. இதினிமித்தம், பவுல் சபைக்கு இப்படிப்பட்ட அறிவுரை அளிக்கவேண்டியதாய் இருந்தது. நாம் நினைவில் கொள்ள வேண்டிய மற்றொரு காரியம், கடந்த காலத்தில் பவுல் இவரைக் கிறிஸ்துவின் உழியத்திற்கு ஒத்துவராதவன் என விலக்கிவைத்திருந்தார்,

நாம் கருத்தாய் நினைவில் கொள்ள வேண்டியது என்னவென்றால், தோல்வி என்பது நிரந்தரமான தோல்வி என அர்த்தம் ஆகாது. வேதாகம் கிறிஸ்தவத்தில் அப்படியொரு காரியம் என்பது இல்லை, "சிறகு ஒடிந்தப் பறவையால் மறுபடியும் உயரப் பறக்க இயலாது." அழிந்து போகும் சரீரத்துடன் இப்பூமியில் வசிக்கும் வரைக்கும், தேவனுக்கு இன்னும் ஒரு நோக்கம் இருக்கிறது. கிறிஸ்தவ தலைவர் ஒருபோதும் சளைத்துப்போய்விடக்கூடாது. இப்பூமியில் தொடரும் அவர்களது வாழ்விற்கு, கர்த்தரது திட்டத்தில் இன்னும் நம்பிக்கை உண்டு. நமது செயல்பாடுகள் முடிவது அது நமக்குத் தெரியவரும், காரணம் அத்தருணத்தில் நாம் கர்த்தரின் முகத்தை நோக்கியிருப்பவர்களாய் இருப்போம்.

ஒரு வேளை, யோவான் மாற்குவின் உறவினராகிய பர்னபாஸ் அவருக்கு உதவியிராதபட்சத்தில், இது சந்தேகத்திற்கு இடமாய் தோன்றுகிறதாய் இருக்கிறது. தேவன் பர்னபாவை, யோவான் மாற்குவை திரும்ப ஊழியத்தில் உயிர்ப்பிக்கும்படி பயன்படுத்தினார். பர்னபா தனது பெயருக்கேற்ற வண்ணம் வாழ்ந்தார். இவரது பெயரின் அர்த்தம், "ஆறுதலின் மகன்" (அப்போஸ்தலர் 4:36) பர்னபா பவுலையும் கூட, அவரது இரட்சிப்பின் போது அப்போஸ்தலரிடம் அணுகி தங்களில்

ஒருவராய் விசுவாசிகளின் கூட்டத்தில் சேர்த்துக்கொண்டவர். பர்னபா பவுலின் வாழ்வில் குறிக்கிடாதவரை, சபையானது பவுலின் மீது நம்பிக்கைவைக்கவில்லை.

11. யுஸ்து எனப்பட்ட இயேசுவும் வாழ்த்துதல் சொல்லுகிறான். விருத்தசேதனமுள்ளவர்களில் இவர்கள் மாத்திரம் தேவனுடைய இராஜ்ஜியத்தின் பொருட்டு என் உடன் வேலையாட்களாய் இருந்து, எனக்கு ஆறுதல் செய்து வந்தவர்கள்.

"யுஸ்து எனப்பட்ட இயேசு" இவரது பெயரானது புதிய ஏற்பாட்டில் இங்கு மட்டுமே குறிப்பிடப்படுகிறதாய் இருக்கிறது. யுஸ்து எனப்பட்ட இயேசு ஒரு யூத விசுவாசியாய் இருந்தார், இவர் பவுலுக்கு சேவை செய்தவர்களில் ஒருவராய் விளங்குகிறார். இதற்கு மேல் இவரைக் குறித்து ஒன்றும் அறியாதவர்களாய் இருக்கிறோம். "இயேசு" என்பது கிரேக்கப்பெயராய் இருக்கிறது, எபிரெய பெயரானது யோசுவா. இந்நாட்களில் இயேசு அழைக்கப்படுவது யூதர்களுள் பொதுவான ஒரு பெயராய் இருந்தது. யோசுவா என்பதும் பிரசித்தி பெற்ற யூதப்பெயராய் விளங்கி வந்தது, யூத ஜனங்களுக்குள் ரோமப் பெயரான யுஸ்து என அழைக்கப்படுவது வழக்கத்திற்கு முறணானதாய் இருந்தது. யுஸ்து எனப்பட்ட இயேசு என அழைக்கக் காரணம் கர்த்தராகிய இயேசுவின் பெயரிலிருந்து வித்தியாசமாய் இருக்க இவ்வாறு அழைக்கப்பட்டது. அல்லது ஒருவேளை ரோம சாம்ராஜ்ஜியத்தில் தான் அங்கீகாரம் பெற யுஸ்து என்ற பெயரால் அழைக்கப்பட்டிருக்கலாம். அநேக இளம் யூத கிறிஸ்தவர்களானோர் இதைப்போன்று தங்களது பெயரில் மாற்றம் செய்து ரோமப்பெயர் மற்றும் கிரேக்கப் பெயர்களை தங்களுக்கு வைத்துக்கொண்டனர்.

பவுலும் தனது பெயர் சவுல் என்பதிலிருந்து பவுல் என அழைக்கப்பட மாற்றிக்கொண்டார். யோவான் மாற்குவும் இதைப்போன்றே பெயர்மாற்றம் செய்துகொண்டார். யுஸ்து என்பதன் அர்த்தம் "நீதியுள்ள" என்பதாகும், இப்பெயரானது பொதுப்பெயராய் நிலவிவந்தது. (அப்போஸ்தலர் 1:23; 18:7). பவுல் இவரது பெயரை மூடிமறைக்கவில்லை, அடுத்த சொற்றொடரில் "உடன் வேலையாள்" என இவரை அழைக்கிறார். யுஸ்து எனப்பட்ட இயேசு, உண்மையுள்ளவராய் தேவனுக்கென பணி செய்தவர்களில் ஒருவராய் விளங்குகிறார், இவரது செய்கைகள் உலகறிய அறிவிக்கப்படவில்லை என்ற போதிலும் இவர் தேவனுக்கென பணி செய்தவராய் விளங்குகிறார். இன்றைய அளவில் நமது சபையில் "மறைவாய் செயல்படும் ஹீரோக்களைப் போன்று"

இவரும் ஒருவராய் திகழ்ந்தார். இவர் பவுலுடன் இணைந்து பணியாற்றினார், பவுலுக்கு ஆறுதலாய் இருந்தார், இதுமட்டுமே இவரைக்குறித்து நாம் அறிந்து கொள்வதாய் இருக்கிறது. எப்படியிருப்பினும், கர்த்தர் இம்மா மனிதரின் உண்மையுள்ள வாழ்க்கை குறித்த பதிவேட்டை வைத்திருக்கிறார், இவரது செய்கைக்குத் தக்க பிரதிபலனை இவருக்கு அளிக்கப்போகிறவராய் இருக்கிறார். இதுவே நமக்கும் கூறப்படுகிற செய்தியாய் இருக்கிறது.

இம்மனிதரைக் குறித்த பவுலின் சாட்சி குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது; "என் உடன் வேலையாட்களாய் இருந்து, எனக்கு ஆறுதல் செய்து வந்தவர்கள்." கிறிஸ்தவ ஊழியத்தில் நண்பர்களைப் பெற்று வாழுதல், இராஜ்ஜியத்தின் வேலையில் மிகுந்த ஆதாயத்துக்குரிய செயலாய் இருக்கிறது. இப்படிப்பட்ட சிநேகிதர்கள் பவுலுக்கு அதிக அளவில் ஆறுதலாய் திகழ்ந்தனர். பவுலின் நெருக்கப்படுகிற காலங்களில் இப்படிப்பட்ட ஆறுதல்கள் அவரது உண்மையான நண்பர்கள் மூலம் அவருக்குக் கிடைக்கிறதாய் இருந்தது. இவைகள் அவர்களது ஆறுதலின் வார்த்தைகள் மூலம் மற்றும் அவரை ஊக்கப்படுத்துவதன் மூலம் அவருக்குக் கிடைக்கிறதாய் இருந்தது.

"ஆறுதல்" என்பதன் கிரேக்க வார்த்தையானது, இந்த ஒரே இடத்தில் புதிய ஏற்பாட்டில் இடம் பெறுகிறதாய் இருக்கிறது. இது மருத்துவப் பதமாய் இருக்கிறது, மனதிலும், சரீரத்திலும் பெரிதான விடுதலையை, மற்றும் சௌகரியத்தை உணரச்செய்வது என்பது இதன் பொருளாகும். மற்றும் இவ்வார்த்தையின் பொருள் வேதனையை ஆற்றுவது அல்லது பாடுகளின் போது, வேதனையை இலகுவாக்குவது என்பதாகும். தேவன் மற்றவர்களது வேதனையின் போது அவர்களது வேதனையை இலகுவாக்க நம்மிடத்தில் எதிர்பார்க்கிறவராய் இருக்கிறார். எப்படியிருப்பினும், நாம் லீகலிஸ்டுகளாகவோ, அல்லது கரிசனையற்றவர்களாய் இருப்போமெனில், (சுயத்தை மையமாய் கொண்டிருப்போமெனில்) மற்றவர்களது வேதனையிலிருந்து விடுவிக்க இயலாது. நாம் இவ்வாறு நம்மையே கேட்டுக்கொள்ள வேண்டியதாய் இருக்கிறது, நாம் ஜனங்களுக்கு ஆறுதலாய் இருக்கிறோமா அல்லது அவர்களுக்கு வேதனை அளிப்பவர்களாய் இருக்கிறோமா?

பவுல் நமக்கு கூற விரும்புவது என்னவெனில், நாம் கூறுவதைக் கேட்பர்கள் கட்டியெழுப்படத்தக்கதாய் இருத்தல் வேண்டும், அவர்களை இடித்து தரைமட்டம் ஆக்குவதாக இருத்தல் கூடாது. நமது வார்த்தைகள் கிருபையின் ஊழியத்தை நடப்பித்து, மற்றவர்களை கிறிஸ்துவண்டை வழிநடத்துகிறதாய் இருத்தல்

வேண்டும், மற்றும் தேவனது வார்த்தைக்குள் அவர்களை வழிநடத்துதலாய் இருத்தல் வேண்டும். புதிய ஏற்பாட்டிலிருந்து ஒரு வசனத்தை மனப்பாடம் செய்வீர்களானால், அதை நடைமுறைப் படுத்திக்கொள்ளுங்கள் அவ்வசனத்தை ஒருபோதும் மீறாது இருங்கள். இவ்வாறு செய்யும் போது, நமது குடும்பத்திலும், சபையிலும் உள்ள பிரச்சனைகளில் அரைபாகத்திலிருந்து முக்கால் பாகம் வரைக்கும் தீர்த்துவைக்கிறவர்களாய் விளங்குவோம். எபேசியர் 4:29 ல், கெட்ட வார்த்தை ஒன்றும் உங்கள் வாயிலிருந்து புறப்பட வேண்டாம்; பக்திவிருத்திக்கு ஏதுவான நல்ல வர்த்தை உண்டானால் அதையே கேட்கிறவர்களுக்குப் பிரயோஜனமுண்டாகும்படி பேசுங்கள்."

நமது வார்த்தைகளை பயன் படுத்தும்போது, மற்றவர்களுக்கு அவைகள் கிருபை அளிக்கிறது என்பது நம்மை ஆச்சரியப்படுத்துகிறதாய் இருக்கிறதல்லவா? நாம் ஒருவரையும் கீழே விழத்தள்ளுகிறவார்த்தைகளைப் பேசாது, மற்றவர்களைக் கட்டியெழுப்புகிற வார்த்தைகளைப் பேசுவோமெனில், அதாவது எபேசியர் 4:29 ல் கட்டளையிடப்படுகிறது போன்று, நாம் தேவனது சபையில், நாம் சாத்தானின் இடித்து நிர்மூலமாக்குபவர்களாய் இராது, கட்டுகிற சிப்பந்தி வர்க்கத்தில் நாமும் ஒரு அங்கமாய் திகழுவோம். சாத்தான், ஜனங்களை கிழித்தெறிந்து, தகர்க்கக்கூடிய வார்த்தைகளைப் பேசுவதை, அதிகமாய் ஊக்கமளிக்கிறவனாய் இருக்கிறான், இவ்வாறு செய்வதன் மூலம், கிறிஸ்துவின் அருட்பணியை முற்றிலும் அழிக்கிறவனாய் இருக்கிறான். உங்களது நாவின் வல்லமையை குறித்து இன்னும் உணர்வடையாது இருப்பீர்களானால், யாக்கோபு 3ம் அதிகாரத்தை வாசித்து, உணர்ந்துகொள்ளுங்கள்!!

12. எப்பாபிராவும் உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறான்; உங்களைச் சார்ந்தவனும், கிறிஸ்துவின் ஊழியக்காரனுமாகிய இவன், நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும், தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்றும், தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்.

இவரைக்குறித்து இந்நிருபத்தின் ஆரம்பவரிகளிலேயே நாம் ஏற்கனவே கண்டோம். எப்பாபிரா பிரசித்திப்பெற்ற வேதாகம போதனையாளராய் இருந்தார், மற்றும் இவர் கொலோசே பட்டணத்திலிருந்த வந்த சுவிஷேசகராகவும் இருந்தார். இவர் கொலோசே, லவோதேக்கேயா, ஹெய்ராப்போலிஸ் போன்ற பட்டணங்களுக்கு சுவிஷேசத்தை எடுத்துச் சென்று இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. பவுல்

எபேசுவில் இருந்து, போதித்து வந்த காலத்தில் இது நிகழ்ந்திருக்கலாம் என நம்பப்படுகிறது, பவுல் எபேசுவில் தேவனது வசனத்தை ஒரு நாளில் ஐந்து மணி நேரம் எடுத்து வாரத்தில் ஆறு நாட்கள், மூன்று ஆண்டுகாலங்கள் போதனை செய்தார், இவ்வாறு போதித்ததன் பின்விளைவுகள் மிக சிறப்பாய் அமைந்திருக்க வேண்டும்.

இவர் எவ்வாறு ரோமாபுரிக்குச் சென்றார் என்றார் என்பது குறித்து நாம் அறியோம், ஆனால் இவர் பவுலுடன் ரோமாபுரியில் இருந்ததாக இங்கு நாம் காண்கிறோம். கொலோசே பட்டண சபையில் நிலவி வரும் அதிகமான பாதிப்பை ஏற்படுத்தும் தவறான உபதேசம் குறித்து, பவுலிடம் அறிவுரை பெறும்படி இவர் ரோமாபுரிக்குச் சென்றிருக்கலாம் எனக்கருதப்படுகிறது. பவுல் பிலமோன் 23 ம் வசனத்தில் "என்னோடுகூட காவலில் வைக்கப்பட்ட எப்பாப்பிராவும்" என்று எழுதியுள்ளார். இது எப்பாப்பிரா பவுலைக் காண ரோமாபுரி வந்தபோது, ரோமர்கள் இவரையும் கைது செய்து பவுலுடன் சங்கிலிகளால் கட்டப்பட்டவராய் சிறையில் அடைத்திருக்கக்கூடும் என நம்பப்படுகிறது. கொலோசே பட்டணத்திற்கு இவர் திரும்ப செல்லாததற்கு ஒரு காரணமாய் இருக்கலாம் எனவும் நம்பப்படுகிறது. எப்பாப்பிராவும், பவுலும் ஒரு சிறை அறைக்கைதிகளாய் இருந்தனர்.

எப்பாப்பிரா நீண்ட பயங்கரமான பயணம் செய்து ரோமாபுரியை வந்தடைந்தார். அவர் பவுலிடம் வந்து சேர்ந்து லைகஸ் பள்ளத்தாக்கில் உள்ள சபைகளின் நிலவரம் குறித்து அவரிடம் அறிவித்தார். இதுவே பவுல் கொலோசெயர் நிருபத்தை எழுதக் காரணமாய் அமைந்தது. (1:7-9). முதலாவது பவுலுடன் இருந்த குழுவானது, "பவுலுடன் தங்கியிருந்தவர்கள்", இந்த மனிதனோ அவர்களுக்கு நிதிஉதவிகளை அளிக்க வந்தவர். இவர் பவுலின் தேவைகளை அறிந்தவராய், அவல நிலையில் இருந்த இவருக்கு தன்னாலான ஆதரவளித்துச் செல்ல வந்தவர்.

பவுல் எப்பாப்பிராவை எந்த அளவுக்கு மரியாதையுடன் நடத்தினார் என்பதற்கு அவர் அவரைக் குறித்து குறிப்பிடும் சொற்றொடர் மூலம் அறிந்து கொள்ளக்கூடும், "கிறிஸ்துவின் ஊழியக்காரன்" "கிறிஸ்துவின் உண்மையான ஊழியக்காரன்" (1:7), "கிறிஸ்துவின் ஊழியக்காரன்" (4:12). "கிறிஸ்துவுக்குள்ளாய் என்னுடன் காவலில் வைக்கப்பட்டவன்" (பிலமோன் 23). எப்பாப்பிராவின் தனித்தன்மையாக பவுல் குறிப்பிடுவது என்னவெனில், இவன் நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும், தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டுமென்றும், தன் ஜெபங்களில்

உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான். (கொலோசெயர் 4:12-13), அடுத்த சொற்றொடர், "உங்களில் ஒருவனாகிய" ஒநேசிமுவுடன் (வச. 9) எப்பாப்பிரா கொலோசே சபைக் கிறிஸ்தவன். இவர் கொலோசே சபையைச் சார்ந்தவர். இவர்கள் கொலோசே சபையின் போதகராய் இருந்தார். இவர் "கிறிஸ்துவின் ஊழியக்காரனாய்" இருந்தார். "ஊழியக்காரன்" என்ற வார்த்தையின் அர்த்தம் "அடிமை" என்பதை உங்கள் நினைவுக்கு கொண்டுவாருங்கள். இவர் ரோமரின் அடிமையாக அல்ல, மாறாக கிறிஸ்துவி அடிமையாக விளங்கினார். (ரோமர்.1:1; கலாத்தியர் 1:10; எபேசியர் 6:6).

அடிமைகளல்லாதோரைவிட ரோம சாம்ராஜ்ஜியத்தில் அடிமைகள் ஏறாளமானோர் இருந்தனர். அந்நாட்களில் அடிமைகளுக்கு எந்த உரிமையும் இல்லாதிருந்தது. எப்பாப்பிரா மனமுவந்து தனது உரிமைகள் அனைத்தையும் கிறிஸ்துவுக்கு விட்டுக்கொடுத்தான். எப்பாப்பிரா முற்றிலுமாய் தன்னைக் கிறிஸ்துவுக்கென அற்பணித்துக் கொண்டார். எபேசிய நிருபத்தைப் பொருத்தமட்டில், தனது குடும்பத்தைவிட அவரது சபைக்காய் கிறிஸ்து முதலாவது வந்தார். இன்றைய கிறிஸ்தவர்களாய் செயல்படுவோர், தங்களுக்கு பொருந்தக்கூடியவற்றை மட்டும் செய்தல் வருத்தப்படக்கூடியதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட ஜனங்களுக்கு கிறிஸ்தவம் என்பது ஏதோ சில மதிப்பை மட்டும் கொடுக்கிறதாய் இருக்கிறது, அவர்கள் தங்களது வாழ்வை அதற்கென அற்பணிக்காதவர்களாய் விளங்கி வருகின்றனர். கிறிஸ்துவுக்காக நமது வாழ்வை கொடுப்பது அவசியமான ஒன்றாய் இருக்கிறது, அப்பொழுது மட்டுமே கிறிஸ்தவம் என்பது விஷேசித்தமான ஒன்றாய் நமக்கு விளங்குகிறதாய் இருக்கும். ரோமர் 12:1.

ஒரு ஆப்பிரிக்க போதகர், தனது விசுவாசத்தை இவ்வாறு அறிக்கை செய்தார். அவர் தனது உயிரை கொடுப்பதாயினும் விசுவாசத்தை மறுதலிக்கவில்லை. அவர் உயிரை அவரைவிட்டு பிரிப்பதற்கு முந்தின இரவில், ஒரு துண்டு காகிதத்தில் கீழ்க்கண்டவாறு எழுதினாராம். "நான் வெட்கப்படாதவர்களின் ஐக்கியத்தில் ஒருவனாய் இருக்கிறேன்." எனக்கு பரிசுத்த ஆவியானவரது வல்லமை உண்டு, மரணம் என்னை நெருங்குகிறது. நான் மரணக்கோட்டைத் தாண்டிச் செல்கிறவனாய் இருக்கிறேன். தீர்மானங்கள் எடுக்கப்பட்டுத் தீர்ந்தன. நான் அவரது சீஷனாய் இருக்கிறேன். நான் பின் திரும்பிப் பார்ப்பது இல்லை. எனது கடந்த காலம் மீட்கப்பட்டுள்ளது, எனது நிகழ்காலம் அர்த்தமுள்ளதாய் இருக்கிறது. எனது எதிர்காலம் பாதுகாப்பானதாய் இருக்கிறது. எனது தாழ்வான வாழ்க்கை, பார்வையுடன் நடந்தது, சிறிய அளவில் திட்டமிடல், மென்மையான முழங்கால்கள், வண்ணமற்ற கனவுகள், பழக்கப்பட்ட தரிசனங்கள்,

உலகப்பிர்காரமான பேச்சு, கஞ்சத்தனமாகக் கொடுப்பது, குறுகிய இலக்குகள் போன்ற இவற்றிற்கெல்லாம் ஒரு முடிவுண்டானது. தனிச்சிறப்பு எனக்கு அவசியமில்லை, செழிப்பு எனக்கு அவசியமில்லை, பதவி எனக்கு அவசியமில்லை, பதவி உயர்வு எனக்கு அவசியமில்லை, பிரபலமாய் இருப்பது எனக்கு அவசியமில்லை. நேர்மையாய் இருக்க அவசியமில்லை, முதலவனாய் இருக்க அவசியமில்லை, மேன்மையானவனாய் இருக்க அவசியமில்லை, எல்லாராலும் அறிப்பட்டவனாய் இருக்க அவசியமில்லை, புகழப்படுகிறவனாய் இருக்க அவசியமில்லை, பிரதிபலனை பெறுகிறவனாய் இருக்க அவசியமில்லை. நான் இப்பொழுது அவர் சமூகத்தில் வாழ்கிறேன், விசுவாசத்தை சார்ந்து கொண்டிருக்கிறேன். பொறுமையினால் அன்பு கூறப்படுகிறேன், ஜெபத்தினால் உயர்த்தப்பட்டவனாய் இருக்கிறேன், வல்லமையினால் எனது பணியை செய்து முடித்து இருக்கிறேன். எனது முகத்தை நேராக்கியுள்ளேன், எனது நடையானது தீவிரமடைந்துள்ளது, எனது இலக்கு பரலோகம், எனது பாதை குறுகலானது, என வழிகள் கரடுமுறடானது, என் உடன் பயணிப்போர் மிகவும் சொற்பமானவர்களே, என்னை வழிநடத்துகிறவர் முற்றிலும் சார்ந்து இருக்கக்கூடியவர், எனது மிஷன் தெளிவாய் இருக்கிறது. என்னை ஒருவராலும் தங்களுக்கென கிரயம் கொடுத்து வாங்க இயலாது, என்னை வேறெந்த காரியத்துடனும் ஒத்துப்போகச் செய்ய இயலாது, என்னை ஒருவரும் வழி விலகச் செய்ய இயலாது, எந்த ஒரு காரியமும் என்னைக் கவர்ந்திழுக்க இயலாது, என்னை ஒன்றும் பின்திரும்பச் செய்ய இயலாது, என்னை ஒன்றும் தாமதப்படுத்த இயலாது. பலி செலுத்தப்படும்போது, நான் பின் திரும்ப மாட்டேன், சத்துருக்களின் சமூகத்தில் வெறுப்பு தெரிவிக்கமாட்டேன், சத்துருவின் மேஜையின் மீது பேரம் பேசமாட்டேன், பிரபலம் என்கிற குட்டையில் கிடந்து சிந்தித்துகொண்டிருக்கமாட்டேன், அல்லது எந்த ஒரு காரியத்திற்கும் வளைந்து கொடுக்கமாட்டேன். எனது விசுவாசத்தை விட்டுவிட மாட்டேன், அமர்ந்திருக்க மாட்டேன், பேசவேண்டியதை பேசாது இருக்கமாட்டேன், பிரசங்கிக்க வேண்டியதை பிரசங்கம் செய்வேன், ஜெபிப்பேன், கொடுத்துத் தீர்க்கவேண்டியதை கொடுத்துத்தீர்ப்பேன். பாதுகாக்கவேண்டியதை பாதுகாப்பேன், தரித்திருக்க வேண்டியவற்றில் தரித்திருப்பேன், கிறிஸ்துவுக்காய் இவை அனைத்தையும் செய்து முடிப்பேன். நான் கிறிஸ்துவின் சீஷனாய் இருக்கிறேன். அவர் வரும் வரை நான் செல்கிறவனாய் இருத்தல் வேண்டும். நான் இழந்து போகும் வரை கொடுக்கிறவனாய் இருத்தல் வேண்டும், எனக்கு தெரிந்த அனைத்தையும் பிரசங்கித்தல் வேண்டும், அவர் நிறுத்து என்று கூறும்வரை நான் பணிசெய்தல் வேண்டும், அவருக்குச் சொந்தமானவர்களை சேர்த்துக்கொள்ள வரும்பொழுது,

அவர் என்னை இனங்கண்டுகொள்ள எவ்வித பிரச்சனையும் அவருக்கு இருக்கக்கூடாது. எனது நிறம் அவருக்கு முன்பாக தெளிவாக இருத்தல் வேண்டும், !!!! அந்த ஆப்பிரிக்க போதகருக்கு இருந்த விசுவாசம் எவ்வளவு ஆச்சரியத்திற்குரியதாய் இருக்கிறது பாருங்கள்!!! இதுவே ஒவ்வொரு கிறிஸ்தவ தலைவரது தராதரமாய் இருத்தல் வேண்டும், இதுவே நாம் அழைக்கப்பட்ட அழைப்பாய் இருக்கிறது, நமது தலைமைத்துவம் மரணபரியந்தம் இவ்வாறு இருத்தல் அவசியம்.

இயேசுக்கிறிஸ்துவைப் பின்பற்றுதல் என்பது, ஒழுக்க நெறிகள், மனித உரிமைகள், அரசியல் உரிமைகள், சிறப்பான வீடு அல்லது கழிவறை வசதிகள் இவற்றுக்கு மேற்பட்டதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்கள் வேதாகம கிறிஸ்தவத்தை உருவாக்குவதாக இல்லை, மாறாக இவைகள் வேதாகமக் கிறிஸ்தவத்தின் துணை உற்பத்திப்பொருட்களாய் விளங்குகின்றன. சில நேரங்களில் நாம் துணை உற்பத்தி பொருட்களை உண்மையான பொருட்களுடன் ஒப்பிடுவதில் குழப்பமடைகிறவர்களாய் இருக்கிறோம். கிறிஸ்தவம் ஒருபோதும் முறையான ஒரு மதம் எனக்கூறுவதற்கில்லை, அல்லது சட்டங்கள் மற்றும் சடங்குகள் போன்றவைகள் இதில் இல்லை. தனிப்பட்ட நிலையில் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுடன் கொள்ளும் நெருக்கமான உறவைக் கொண்டதாய் இருக்கிறது. இது தன்னைத்தானே தியாக பலியாய் தனது பின்னடியார்களுக்கு அற்பணித்த அவருடன் கொள்ளும் நெருக்கமான உறவாய் இருக்கிறது.

"தன் ஜெபங்களில் உங்களுக்காக எப்பொழுதும் போராடுகிறான்." இவ்வார்த்தைகள் குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. இங்கு நாம், சபையில் தனது உடன் சக விசுவாசிகளுக்காய் ஜெபிக்கும் ஒரு நபரைக் காண்கிறோம். ரோமாபுரியில் சிறைவைக்கப்பட்ட போது, இவர் ஜெபத்தில், கொலோசே பட்டணத்தில் உள்ள தனது சபைக்காய் "அங்கலாய்ப்பதைக்" காண்கிறோம். ஜெபத்தைக் குறித்தப் பாடம் என்னவாய் இருக்கிறது எனப்புரிந்து கொள்ளமுடிகிறதா? இதைப் போன்ற அங்கலாய்ப்புடன் எத்துனைமுறை நமது சபைக்காய் ஜெபித்து வருகிறோம்? அநேக சந்தர்ப்பங்களில் அநேகர் தேவனிடம் இருந்து தாங்கள் எதைப் பெற்றுக்கொள்வது என்பதில் ஆர்வமுள்ளவர்களாய் இருக்கின்றனர், உண்மையான வேதாகமத் தலைமைத்துவம் தேவனுக்காக என்ன செய்துள்ளது என்பதைத் தேடுகிறதாய் இருக்கிறது. தேவன் நமது தகப்பனாய் இருக்கிறார், நம்மில் அநேகர் எண்ணுகிற பிரகாரம், ஜெபம் என்பது நாம் அவரிடமிருந்து காரியங்களை பெற்றுக்கொள்வது என அர்த்தம் செய்து கொள்கிறவர்களாய் இருக்கிறோம். அநேக சந்தர்ப்பங்களில் நமது ஜெபமானது மேலோட்டமான கருத்தை உடையதாய்

இருக்கிறது. ஆனால் எப்பாப்பிராவின் ஜெபமானது, மற்றவர்களுக்காக வேதனயுடன் மற்றும் விடாமுயற்சியுடன் செயல்படுதலைக் காட்டுகிறதாய் இருக்கிறது. நீங்கள் உங்களது அன்புக்குரியவர்களிடமிருந்து பிரிக்கப்பட்டு, அவர்களுக்கு ஆவிக்குரிய உதவிகள் அவசியப்படலாம். அல்லது உங்களது அன்புக்குரியவர்கள் விசுவாசத்தில் தடுமாற்றமடைந்து, வழியருகே விழுந்து கிடக்கிறவர்களாய் இருக்கலாம்.

நீங்கள் அவர்களுக்காக என்ன செய்ய முடியும்? அவர்களுக்காய் ஜெபிக்கமட்டுமே இயலும். ஜெபம் என்பது, நமக்களிக்கப்பட்ட மகத்தான ஒன்றாய் ஆவிக்குரிய வல்லமையை வெளிக்கொண்டுவந்து, ஒரு தனிப்பட்டவரின் வாழ்வில் மாற்றங்களை உருவாக்குகிறதாய் இருக்கிறது. அவர்களது வழ்வில் தடைகளை அகற்றும் ஆற்றல் உடையதாய் இருக்கிறது. மற்றும் அவர்களுக்கு திறந்த வாசலை திறக்கிறதாய் இருக்கிறது. இது சில காலம் எடுக்கலாம், ஆகையால் ஜெபமானது கெட்டுப்போகாமல் பாதுக்காக்கிறதாய் இருக்கிறது. இரு வழிகளில் அவர்களுக்காய் ஜெபித்தார் என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது, "போராடுதல்' மற்றும் "எப்பொழுதும்" [உள்ளார்வத்துடன்]] [labouring and fervently.] "போராடுதல்" என்பது மல்யுத்தம் செய்தல் என்பதை குறிக்கும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. (cf. யாக்கோபு in ஆதியாகமம் 32). எப்பாப்பிரா கொலோசே சபையினருக்காக ஜெபத்தில் மல்யுத்தம் செய்கிறவராய் இருந்தார். "எப்பொழுதும்" [உள்ளார்வத்துடன்]] இவ்வார்த்தை ஆங்கிலத்தில் "labouring" என்றுள்ளது, இதன் கிரேக்கப் பொருள் கடுந்துயர் / சொல்லொன்னா மன வேதனை என்பதாகும். இது ஒரு athletic term ஆக பயன்படுத்தப்பட்டு வந்தது, இது தனிப்பட்ட போராட்டத்தை உள்ளடக்கியுள்ளது. இவ்விரு வார்த்தைகளையும் அதன் கிரேக்க அர்த்தத்தில் மொழி பெயர்த்து அதன் பொருளை அறிந்து கொள்ளுதல் வேண்டும். இதன் பொருள் சரீரத்தில் கடைசி மூச்சு / பெலன் இருக்கும் வரை, மல்யுத்தத்தில் ஜெயம் பெற அதைப் பயன்படுத்துதல் என்பதாகும். பவுல் இதே பதத்தினை தன்னைக்குறித்து குறிப்பிடுமிடத்து, கொலோசெயர் நிருபத்தில் பயன்படுத்தியுள்ளார். கொலோசெயர் 1:29 மற்றும் 2:1, இயேசுவும் கடுந்துயருடன் கெத்சமனே தோட்டத்தில் போராடினார். (லூக்கா 22:44).

இன்றைய அளவில் சபைக்கு அவசியமான தேவைகளில் ஒன்றாக இப்படிப்பட்ட ஜெபம் அவசியமாய் இருக்கிறது, [கடுந்துயருடன், போராடி ஜெபித்தல் அவசியமாய் இருக்கிறது.] சமூக நலத்திட்டங்களை ஒழுங்குபடுத்துவதைவிட, கடுந்துயருடன் ஜெபிக்கும்படி ஜனங்களை ஏவி எழுப்புவது மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. எப்பாப்பிரா தான் தனது சபையிலிருந்து வேறுபிரிக்கப்பட்டு,

சிறையில் காவல்பண்ணப்படிருந்த போதும், இன்னும் அவர்களை தன் நினைவில் வைத்து, அவர்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கிறவராய் இருந்தார். அவர் தொலைபேசியை எடுத்து அவர்களது நலன் விசாரிக்க, இப்படிப்பட்ட உபகரணம் அவர் நாட்களில் இல்லாதிருந்தது. அவரது காலத்தில் இணைய தளத்தின் மூலம் நண்பர்களோடு தொடர்பு கொண்டு உரையாடுவது, பேசுவது இல்லாதிருந்தது. எப்படியிருப்பினும், அவருக்கு சர்வ வல்லவருடன் கொள்ளும் நேரடித் தொடர்பு மட்டுமே இருந்து வந்தது. அவரது நேரடித்தொடர்புக்கு ஜெபம் ஒன்றையே பயன்படுத்தினார் -- இத்தொடர்பு சாதனம் [ஜெபம்] நமக்குரியதாகட்டும்!!

சொல்லொன்னா தலைவலியுடன் எப்பாப்பிரா ஜெபித்திருக்கக்கூடும், அவர் களைத்துப் போயிருக்கும்போது ஜெபித்திருக்கக்கூடும், அவர் வியாதிப்பட்ட வேளையில் ஜெபித்திருக்கக்கூடும், காவலாலிகள் தன்னை சங்கிலிகளால் கட்டி காவல் செய்து கொண்டிருக்கும்போது ஜெபித்திருக்கக்கூடும். அவர் களைத்து, சலித்து, வியாதிப்பட்டு, சோர்வுற்ற நேரத்தையும் பொருட்படுத்தாது ஜெபித்தார். , *"Fervently."* [உள்ளார்வத்துடன்] இவ்வார்த்தையை கவனிக்க வேண்டும்: ஒரு மனிதன் உள்ளார்வத்துடன் ஜெபிக்கும்போது, அவர்களது இருதயமானது, தேவனுடன் நல்மனம் பொருந்தி ஜெபிக்கிறதாய் இருக்கிறது. யாக்கோபு 5:16-18.

எப்பாப்பிரா சிறைவாசத்திலும் தேவனை சேவிக்கிரவராய் கொலோசே சபைக்காக ஜெபிக்கிறவராய் இருந்தார். எப்பாப்பிரா தவறான போதனைகளில் தனது சபை மக்கள் விழுந்து போகாது ஸ்திரமாய் சத்தியத்தில் நிலைநிற்க, அவர்களுக்காய் போராடி ஜெபிக்கிறவராய் இங்கு காணப்படுகிறார். இதன் வாயிலாக நமது சபைக்காய் போராடி ஜெபிப்பது எந்த அளவுக்கு முக்கியம் என்பதை கண்டுகொள்கிறவர்களாய் இருக்கிறோம். நம்மிடம் அன்புகூறுகிறவர்களிடமிருந்து நாம் பிரிக்கப்படுகிற போது, அவர்கள் ஆவிக்குரிய தேவைகளிலிருப்பார்களேயானால், ஒரு காரியம் நம்மால் தங்கு தடையின்றி செய்ய இயலும் அது ஜெபம்! அவர்களுக்குத் தேவன் நண்பர்களை அறிமுகப்படுத்தி, நல்ல சூழ்நிலைகளை அவர்களுக்கு அமைத்து கொடுத்து, அவர்கள் வாழ்வில் ஆசீர்வாதம் பெற அவர்களுக்காக ஜெபிக்கலாம்.

தேவன் ஜெப சத்தம் கேட்டு, தனது சர்வ வல்லமையினால், அவர்களது எதிர்மறையான சூழ் நிலைகளை அவர்களுக்கு சாதகமான சூழ்நிலையாய் உருவாக்க அவரால் இயலும். ஒரு வேளை தமது பிள்ளைகளில் ஒருவர் தொடர்ந்து பாவத்தில் நிலைகொண்டிருக்க அன்னாரை தேவன் தம் பக்கமாய் இழுத்துக்கொள்ள, தேவன் நமது வாழ்வில் துக்கம் துயரம் நேரிடும் படி

அனுமதித்து இருக்கலாம். அவர் நமது பிள்ளைகள் அல்லது வேறொருவர் கொடிய வியாதிப்படுக்கையில் இருப்பதை அவர் அனுமதித்து இருக்கலாம், இப்படிப்பட்ட நேரங்களில் கடுத்துயருடன் ஜெபிக்கும் பழக்கத்தினை கற்றுக்கொள்வதற்காக இப்படிப்பட்ட சூழலை, தேவன் அனுமதித்து இருக்கலாம். Refer to the BTB study of CHRISTIAN LIFE: PRAYER, கிறிஸ்தவ வாழ்க்கை: ஜெபம். ஒப்பிடுக.

எப்பாப்பிரா தான் மிகவும் பாரப்படும் பொழுது மட்டும் ஜெபிப்பவராய் இல்லை, இதைப்போன்று இன்றய அளவில் அநேகக்கிறிஸ்தவர்கள் செய்து வருகின்றனர். யாரோ ஒரு ஜெபிக்கத் தூண்டியதன் பேரில் ஜெபிக்கவில்லை. அல்லது மற்ற விசுவாசி அவ்வாறு ஜெபிக்கிறார் அதை போன்று தான் ஜெபிக்க வேண்டும் என்ற கட்டாயத்தினால் அவர் அப்படிச் செய்யவில்லை. அவர் தொடர்ச்சியாக ஜெபத்தில் இருந்தார், தேவனது ஆசீர்வாதங்களை தேடி ஜெபிக்கிறவராய் இருந்தார். எப்பாப்பிரா உலக முழுவதிலும் உள்ள அனைவருக்காக ஜெபிக்கிறவராய் இல்லை, அவர் பொது ஜெபத்தை ஏறெடுப்பவராகவும் இல்லை, மற்றும் ஒரு குறிப்பிட்ட நபருக்காக் மட்டும் ஜெபிக்கொண்டிருக்கவில்லை. அவரது ஜெபமானது, கொலோசே, லவோதேக்கேயா, எராப்போலிஸ் போன்ற இடங்களில் உள்ள தேவனது சபைக்காக மன்றாடி ஜெபிக்கிறவராய் இருந்தார்.

எப்பாப்பிரா லவோதிக்கேயா மற்றும் எராப்போலிஸ் போன்ற இடங்களில் சபைகளை ஸ்தாபித்தார் எனத் தெரிய வருகிறது. (கொலோசெயர் 4:13) இன்றைய அளவில் உள்ள வார்த்தைகளால் சொல்வோமானால், எப்பாப்பிரா ஒரு “home missionary.” ஆக செயல்பட்டவராய் திகழுகிறார். இப்பட்டணங்களில் அவர் ஸ்தாபித்த சபையில் உள்ளவர்களின் பெயர்கள் இவருக்குத் தெரிந்து இருக்கும், அவைகளை உச்சரித்து ஜெபித்திருக்கலாம். ஜெபம் என்பது எப்பாப்பிராவுக்கு தனிப்பட்ட மதம் சார்ந்த ஒழுங்காக இருக்கவில்லை, அவர் தனது சபை மக்களை தன் இருதயத்தில் சுமந்து கொண்டு, அவர்களுக்காக தனிப்பட்ட விதத்தில் ஜெபிக்கிறவராய் காணப்பட்டார். அவர் உறுதியாகவும் - குறிப்பிட்ட விதத்திலும் ஜெபித்தார். ஒரு வேளை நீங்கள் எப்பாப்பிராவிடம், நீங்கள் எதற்காக ஜெபித்துவருகிறீர்கள்? என்று வினவினால், அவர் கச்சிதமாய், மற்றும் துள்ளியமாய் தான் ஜெபித்த காரியம் குறித்து சொல்கிறவராய் இருப்பார். அவரது அளவில்லா வாஞ்சையானது, அவர் ஸ்தாபித்த மூன்று சபையின் விசுவாசிகள் முதிர்ச்சியடைந்து கிறிஸ்தவ விசுவாசத்தில் காக்கப்பட்டு அதில் பெருகுகிறவர்களாய் இருத்தல் வேண்டும் என்பதாகும்.

பவுல் குறிப்பிடத்தக்க வார்த்தைகளை பயன்படுத்தி, எப்பாப்பிராவின் ஜெப

வாழ்வை நமக்கு சுருங்கக்கூறுகிறவராய் இருக்கிறார். கொலோசெயரின் நிருபத்தின் செய்தியை நான்கு வார்த்தைகளால் சுருங்கக்கூற இயலும் அவையாவன: “perfect—complete—all—will.” [பூரணம், முற்றிலும் / முழுவதும், எல்லாம், சித்தம்.]

பூரணம்: பூரணம் என்பதன் பொருள் ஆவிக்குரிய முதிர்ச்சியாகும். இவ்வார்த்தையின் பொருள் “the ability to carry a full measure.” [முழுமையான அளவுடன் எடுத்துச் செல்லுதல்] ஒரு நபர் முதிர்ச்சியடைந்து, கிறிஸ்தவ சேவைக்காக பயிற்சியடைதல். ஆவிக்குரிய முதிர்ச்சி கிறிஸ்தவ வாழ்க்கையின் ஸ்திரத்தன்மைக்கு அவசியமாய் விளங்குகிறது. எப்பாப்பிராவின் கரிசனையானது, இக்கிறிஸ்தவர்கள் தேவனது சித்தத்தை செய்வதும், அறிவதுமாக இருந்தது. இத்தேவ ஜனங்கள், தேவனது சித்தம் அனைத்திற்கும் உட்பட்டவர்களாயிருத்தல் வேண்டும், அதன் ஒரு பகுதையை மட்டும் நிறைவேற்றுகிறவர்களாய் இருத்தல் கூடாது. (எல்லா, என்பது கொலோசெயர் நிருபத்தின் திறவு கோல் சொல்லாய் இருக்கிறது, இது இந்நிருபத்தில் 30 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது).

முழுவதும்: எப்பாப்பிரா தனது சபைமக்கள் பூரணமானவர்களாயும் மற்றும் முழுவதும் தேவனது சித்தத்தில் இருக்க வேண்டும் என விரும்புகிறவராய் இருந்தார். நாஸ்திக போதனையாளர்கள் {Gnostic teachers} இப்படிப்பட்ட கிறிஸ்தவ சபைவிசுவாசிகளுக்கு, "பூரணமாகுதல் மற்றும் முதிர்ச்சியடைதல்" போன்ற உபதேசங்களை அளிக்கிறவர்களாய் இருந்தனர். இருந்தபோதிலும் அவர்கள் நன்மையானவற்றை அளிக்க தவறியவர்களாய் இருந்தனர். இயேசுக் கிறிஸ்துவில் மட்டுமே இப்படிப்பட்ட ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம். "நீங்கள் கிறிஸ்துவில் நிறைவடைந்து இருக்கிறீர்கள்," காரணம் கிறிஸ்துவில் மட்டுமே தெய்வத்துவத்தின் பரிபூரணமானது தங்கி வாசம் செய்கிறதாய் இருந்தது. கொலோசெயர் 2:9-10. இச்சிந்தனைக் கருத்தானது முதிர்ச்சிக்கும், பூரணமான தேவசித்தத்தை நிச்சயப்படுத்துதலுக்கும் எடுத்துச் செல்ல அவசியமாய் விளங்குகிறது, மற்றும் இப்படிப்பட்ட ஜெபமானது, பவுலின் ஜெப பாரமாக கொலோசெயர் 2:1-3 ல் காண்கிறோம்."

இவ்வசனமானது இச்சொற்றொடருடன் முடிவடைகிறது, "நீங்கள் தேவனுக்குச் சித்தமானவைகளெல்லாவற்றிலும், தேறினவர்களாயும் பூரண நிச்சயமுள்ளவர்களாயும் நிலைநிற்க வேண்டும்," இச்சத்தியமானது அசாதாரணமான ஆசீர்வாதமாய் இருக்கிறது. "நிறைவடைதல்" என்பதன் பொருள், முழுவதுமான நிச்சயத்தைப் பெற்ற அல்லது "முழுவதுமாய் திருப்தியடைதல்"

என்பதாகும். ரோமர் 4:20-21, ரோமர் 14:5. "ஒரு நபர் ஏதாகிலும் ஒரு நாளில் உயர்வடைவார், மற்றொருவர் அனுதினமும் உயர்வடைந்து கொண்டே இருப்பார். ஒவ்வொருவரும் தனது மனநிலையில் முழுவதுமாய் திருப்தி அடைந்தவர்களாய் இருத்தல் வேண்டும்." பவுலின் கரிசனை என்னவாய் இருந்தது எனில், கொலோசெய சபையினர் திருப்தி அடைதல் மற்றும் நிச்சயம் போன்றவற்றின் சத்தியத்தை உணர்ந்து, தவறான உபதேசத்தை தவிர்த்தல் வேண்டும் என்பதாய் இருந்தது. பவுல் எப்பாப்பிராவும், மற்றும் அனைத்து கொலோசெ பட்டண சபையினரும், சந்தேகத்தைத் தவிர்த்து, "தேவனது சித்தம் எல்லாவற்றிலும் நிலைநிற்க வேண்டும்" என்பதாய் இருந்தது. சாத்தான் அவர்களில் வேறு எந்த மாற்றத்தையும் கொண்டுவராதிருக்க வேண்டும் என்பதை விரும்பினார். தேவன் வடிவமைத்த மற்றும் அவர்களுக்காக ஏற்படுத்தப்பட்ட திட்டம் அனைத்தையும் கொடுக்குமாறு பவுல் அவர்களுக்காக ஜெபிக்கிறவராய் இருந்தார். பவுலும் மற்றும் எப்பாப்பிராவும் தேவனது எல்லா சித்தத்தையும் செய்ய மனதுள்ளவர்களாய் இருந்தனர், அதில் ஏதோ சிலவற்றைமட்டுமல்ல.

இயேசுக்கிறிஸ்து 100% தமது பிள்ளைகள் அனைவரும் கீழ்ப்படிதல் உள்ளவர்களாய் இருக்க விரும்புகிறவராய் இருக்கிறார், முக்கியமாக அவர்களது தலைவர்களுக்கு கீழ்ப்படிதல் வேண்டும். இதினால், அவர்களது முன்மாதிரியானது, பிறருக்கு ஊக்கமளித்து அவர் நம்பவும் மற்றும் கீழ்ப்படியவும் வழிவகுக்கிறதாய் இருக்கும். அப்போஸ்தலர் 13:22, ரோமர் 12:2.

எல்லா விசுவாசிகளுக்குரிய அதிகபட்ச நன்மைகளை நாம் தேடுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். தேவன் உடன் விசுவாசிகளுக்காக ஜெபிக்க விருப்பமுள்ளவராய் இருக்கிறார், அவர்கள் ஆவிக்குரிய குழந்தைகள் என்கிற நிலை மாறி, ஆவிக்குரிய வாலிபப் பருவத்தை அடைதல் வேண்டும், பின்னர் அவர்கள் முதிர்ச்சியடைந்து ஆவிக்குரிய பெரியவர்கள் என்கிற நிலைக்கு உயர வேண்டும். கிறிஸ்தவர்கள் அடிக்கடி தாங்கள் தேவையற்ற அலுவல்களில் சிக்கிக்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர், மற்றும் வாழ்க்கையில் சில்லரைத்தனமான காரியங்களிலும், கடந்து போகிற காரியங்களிலும் சிக்கிக்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். ஒரு விசுவாசி இயேசுவை பல ஆண்டுகளாய் அறிந்த பின்னர், "தேவனது அனைத்து சித்தத்திற்குள்ளாக நிலை நிற்றல்" அவர்கள் செய்யும் சிறப்பான காரியமாய் இருக்கிறது. தேவனது எல்லா சித்தத்தையும் செய்வதைத் தவிர வேறு சிறப்பான காரியம் எதுவுமில்லை. தேவனது சித்தம் என்பது காயப்படுத்துவதாய் இருக்கலாம், அது சில வேளைகளில் மலை சிகரத்தில் இருந்து யுத்தம் செய்வதைப் போன்று

இருக்கலாம். மனவேதனை அதன் ஒரு பகுதியாய் இருக்கலாம், உண்மையுடன் அவர் சித்தம் செய்வது மிக முக்கியமான ஒன்றாய் இருக்கிறது. நம்மில் ஒருவரும் வாழ்வில், கண்ணீர், தழும்புகள், எதிர்பாராத நிகழ்வுகள் மற்றும் கடினமான சூழ்நிலைகள் போன்றவற்றின் ஊடாக செல்லாதவர்கள் அல்லர்.

பரிசுத்த ஆவியானவர் நமது வாழ்வில் நாம் கடந்து செல்லும், ஒவ்வொரு பிரச்சனைகளையும், நமது சாட்சி, சிறப்படைய பயன்படுத்துகிறவராய் இருக்கிறார், நமது தரிசனத்தை பெரிதாக்கவும், நமது குணாதிசயங்கள் விரிவடையவும் செய்கிறவராய் இருக்கிறார். இதில் சரீரப்பிரகாரமான, பொருளாதார, அல்லது உலகப்பிரப்பிரகரமான கடின சூழ்நிலைகள் எதுவாகவும் இருக்கலாம். நாம் இவைகளின் ஊடாக கடந்து செல்லும்போது, தேவனது சித்தம் மற்றும் நமது வாழ்விற்கான அவரது திட்டம் இவைகளைக் கண்டுக்கொள்ளுதல் அவசியம். ஒருவிசுவாசி, வாழ்வில் நோக்கமில்லாது முறிந்து போக அவசியமில்லை. அவர்கள் தேவனது சித்தம் இன்னதென்று அறிந்து உணர்ந்து அதில் மனமகிழ்ச்சியுடனும், மன நிறைவுடனும் இருக்கலாம். தேவனது சித்தம் இன்னதென அறிந்து வாழும்பொழுது, அவர்கள் விசுவாசத்தில் முதிர்ச்சியடைந்து, தேவனது நிறைவை உணருகிறவர்களாய் இருப்பர்.

எப்பாப்பிரா தியாகமாக ஜெபிக்கிறவராய் இருக்கிறார். வசனம் 13ல் "மிகுந்த ஜாக்கிரதை" அல்லது "மிகவும் வைராக்கியமாய்" எனப்பார்க்கிறோம். உண்மையாக, உள்ளார்வத்துடன் ஜெபித்தல் என்பது கடினமான ஒன்றாய் இருக்கிறது. இயேசுக் கிறிஸ்து கெத்சமனேயில் ஜெபித்த போது, அவரது வியர்வையானது இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையில் விழுந்தது. பவுல் மிகவும் "மனவைராக்கியத்துடன்" (கடுந்துயருடன்) கொலோசெயருக்காக ஜெபித்தார் எனப்பார்க்கிறோம். கொலோசெயர் 2:1. எப்பாப்பிராவும், தனது ஜெபத்தில் "எப்பொழுதும் போராடுகிறவராய்" "laboured fervently" இருந்தார். இதன் பொருள் தேவனுடம் மல்யுத்தம் செய்து அவரிடமிருந்து பதிலை பெற்றுக்கொள்வது என அர்த்தம் ஆகாது. இதன் பொருள் நாம் வைராக்கியத்துடனும், ஆழமான கரிசனையுடனும் நம்மை உட்படுத்திக்கொண்டு ஜெபித்தல் என்ற அர்த்தத்தினை உடையதாய் இருக்கிறது. நாம் பாரத்தையோ, அல்லது கண்டிப்பாய் ஜெபிக்க வேண்டும் என்கிற உணர்வையோ பெறவில்லையானால், பெரிதான ஆசீர்வாதத்தை இழந்து போகிறவர்களாய் இருப்போம்.

பவுலுடன் இருந்த மனிதர்களில் எப்பாப்பிரா மட்டுமே இப்படிப்பட்ட ஜெப ஆவி உள்ளவராய் ஜெபிக்கிறதைப் பார்க்கிறோம். இதன் பொருள் மற்ற மனிதர்கள்

ஜெபிக்கவில்லை இதன் பொருளாகாது. இவரது உயர்ந்த பட்ச ஆர்வம் ஜெபமாய் இருந்தது என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. எப்பாப்பிரா பவுலுடன் கைதியாய் காவல் பண்ணப்பட்டு வந்தார், இப்படிப்பட்ட வேதனயின் காலத்திலும், பரலோக வளாகத்திற்குள் சென்று, தனது சபைக்குட்பட்ட, சகோதர சகோதரிகளுக்காய், ஜெபிக்கிறவராய் காணப்படுகிறார். மூன்று பட்டணங்களில் உள்ள தமது சபையினருக்காக எப்பாப்பிரா ஜெபிப்பது நமது கவனத்தை அதிகம் ஈர்ப்பதாய் இருக்கிறது. எழுப்புதல் தாமதிப்பதற்கான ஒரு காரணம், உள்ளார்வத்துடன் நாம் ஒருவருக்காய் ஒருவர் பாரத்துடன் ஜெபிக்க மனமற்றவர்களாய் இருப்பதே ஆகும்.

13. இவன் உங்களுக்காகவும், லவோதிக்கேயருக்காகவும், எராப்போலியருக்காகவும், மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாய் இருக்கிறான் என்பதற்கு நான் சாட்சியாய் இருக்கிறேன்.

"மிகுந்த ஜாக்கிரதையுள்ளவனாய் [great zeal] இருக்கிறான் என்பதற்கு நான் சாட்சியாய் இருக்கிறேன்." பவுல் தொடர்ந்து, கொலோசெ சபையினர், லவோதேயக்கேயா சபையினர், எராப்போலியா சபையினர் குறித்து, எப்பாப்பிரா பெற்றிருந்த "மிகுந்த ஜாக்கிரதை / மிகுந்த வைராக்கியம்" குறித்து இவ்வசனத்தில் குறிப்பிடுகிறார். “Zeal” என்பதன் பொருள் இங்கு “labour.” என பொருள்படுகிறதாய் இருக்கிறது. எப்பாப்பிரா கொலேசெ பட்டணத்திலுள்ள தனது சபையினருக்காக, கொடிய வேதனை மற்றும் பாடுஉபாதைகள் ஊடாக கடந்து சென்றார். “Zeal” என்பது வேதனை மற்றும் உபாதைகளுடன், கடினமான உழைப்பைக் காட்டுகிறதாய் இருக்கிறது. எப்பாப்பிரா தனது சபையினர் ஆவிக்குரிய சுய-ஸ்திரத்தன்மையுடன் மாறும்படி விரும்பினார். அவரது இலக்கானது அவர்களது போதகரைச் சார்ந்திருப்பதைவிட, தேவனது வார்த்தையை மட்டும் அவர்கள் சார்ந்திருத்தல் வேண்டும், என்பதாய் இருந்தது. (4:12).

"லவோதேக்கேயாவில் உள்ளவர்களுக்கு" இன்றைய அளவில் நாம் துருக்கி என்றழைக்கப்படுகிற இடத்தில், லோவோதேக்கேயா என்ற பட்டணம் மற்ற பட்டணங்களுடன் அமைந்திருந்தது. இப்பட்டணம் கொலேசெ பட்டணத்திலிருந்து 16 கி.மீ தூரத்தில் அமைந்திருந்தது. இப்பட்டணம் ஒரே சாலையில் அமைந்திருந்த போதும், கொலோசெ பட்டணத்தைவிட மிக செல்வம் செழிக்கும் பட்டணமாய்

விளங்கிவந்தது. இன்றைய அளவில் இப்பட்டணம் மண்மேடாய் காட்சியளிக்கிறது. "எராப்போலி பட்டணத்திலுள்ளவர்களுக்கு" எராப்போலி பட்டணம் அமேசான் இராணி "எரா" வின் பட்டணமாய் விளங்கிவந்தது. இப்பட்டணமானது சாயம் காய்ச்சும் தொழில் உள்ள மிகவும் செல்வம் கொழிக்கும் பட்டணமாய் விளங்கி வந்தது. இப்பட்டணமானது லவோதிக்கேயா பட்டணத்திற்கு வடக்கே 8 கி.மீ தூரத்தில் அமைந்திருந்தது. இதுவும் இன்றைய அளவில் அழிக்கப்பட்டு மண் மேடாய் கிடக்கிறது. எப்பாப்பிரா லவோதேக்கேயா, எராப்போலி ஸ்தல சபைகள் மற்றும் தனது சொந்த சபையான கொலேசெ சபை போன்ற சபைகளில் மிகவும் ஆர்வமுள்ளவராய் இருந்தார்.

ஒரு தேவனது பிள்ளை தனது ஸ்தல சபைக்காய் பெரிதளவில் தன்னை அற்பணித்துக்கொள்ளுதல் வேண்டும். தேவ ஆவியானவர் நடத்துதல் பேரில் அவ்வாறு செய்தல் வேண்டும், மற்ற சபைகளின் நலனிலும் ஆர்வம் காட்டுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். எப்பாப்பிராவைப் போன்று, நமது ஸ்தல சபையைக் குறித்த கரிசனையுடன் இருத்தல் வேண்டும். ஒவ்வொரு கிறிஸ்தவரும் மற்றக் கிறிஸ்தவர்களின் தேவையில் உதவ முன்வருகிறவர்களாய் இருத்தல் அவசியம். தேவைகளில் உள்ள மற்ற உண்மையான விசுவாசிகளுக்கும் தங்களது கரிசனை, அன்பு, உபசரிப்பு போன்றவற்றை செலுத்தி, இப்படிப்பட்ட நேரங்களில் இயேசுவைப் பின்பற்றுகிறவர்களாய் விளங்குதல் வேண்டும்.

14. பிரியமான வைத்தியனாகிய லூக்காவும், தேமாவும், [Demas] உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லுகிறார்கள்.

லூக்கா மிகவும் முக்கியமான மனிதராய் ஆரம்ப கால சபையில் விளங்கினார். லூக்கா ஒரு வைத்தியராய் இருந்தார், இவரைப் பவுல் அதிகமாய் நேசித்தார். மருத்துவ தொழிலானது கிரேக்கர்களால் மிகவும் சிறப்பானதாய் கருதப்பட்டது, மருத்துவர்கள் மிகவும் உயர்ந்த அந்தஸ்தில் மதிக்கப்பட்டு வந்தனர். பவுலுக்கு ஜனங்களை குணமாக்கும் வரத்தினை பெற்றவராய் இருந்த போதும், இவர் ஒரு மருத்துவருடன் பயணம் செய்தவராய் காணப்படுகிறார். துரோவா பட்டணத்தில் பவுலை வழி அனுப்பும் போது இவர் பவுலுடன் சேர்ந்து கொண்டார். (அப்போஸ்தலர் 16:10 முதற்கொண்டு, நாங்கள் என்ற பெயர் உரிச்சொல்லைக் கவனிக்கவும்). லூக்கா பவுலுடன் எருசலேமிற்கு பயணமாய்ச் சென்றார். (அப்போஸ்தலர் 20:5ff). மற்றும் இவர் பவுல் ரோமாபுரிக்கு கடற்பயணம்

செய்தபோது இவருடன் இருந்தார். (அப்போஸ்தலர் 27:1ff). இப்படிப்படிப்பட்ட கடினமான சூழல்களில் பவுலுக்கு, லூக்காவின் வைத்தியத் தொழிலும், அவரது சமூகமும், மிகவும் ஊக்கத்தை அளிப்பதாய் இருந்தது.

தேவன் அற்புதமான வழிகளில் பெலனையும் மற்றும் குணமாகுதலையும் அளிக்கும் பொழுது, இயற்கையிலும் இப்படிப்பட்ட தன்மைகளை அவர் வைத்து நமக்களிக்கிறவராய் என்பது குறிப்பிடத்தக்கது. இயற்கையில் தேவன் மருந்து உபகரணங்களையும் வைத்து இருக்கிறார். வைத்தியரான லூக்கா பவுலின் இறுதிகாலம் வரைக்கும் அவருடன் இருந்தார். (2 தீமோத்தேயு 4:11). பவுலின் ஊழியம் குறித்தும், ஆரம்பகால சபைகுறித்தும் அப்போஸ்தல நடபடிகளை எழுதும்படி, தேவன் லூக்காவைப் பயன்படுத்தினார். லூக்கா பிரகாசிக்கும் முன்மாதிரியாய், தனது திறமைகளை கர்த்தரது பணியில் பயன்படுத்துகிறவராய் தேவன் அனுப்பும் இடங்களுக்குச் செல்லுகிறவராய் இருந்தார். இவர்கள் பாசமுள்ள கிறிஸ்தவராயும், திறமை மிக்க வைத்தியராகவும், ஆத்மீக நண்பராகவும், கவனமுள்ள சரித்திர ஆசிரியராயும் திகழ்ந்தார். இவைகள் அனைத்தும் இவரில் ஒருங்கே அமைந்து காணப்பட்டது.

இவர் ஒரு புறஜாதியானாய் இருந்தார், இருப்பினும் இவர் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவராய் லூக்கா சுவிஷேசத்தையும், அப்போஸ்தல நடபடிகளையும் எழுதுகிறவராய் இருந்தார். இவர் வேதாகம எழுத்தாளர்களில் இவர் ஒருவரே புறஜாதியான் என்பது குறிப்பிடத்தக்கது. எப்பாப்பிராவுடன் இணைக்கப்பட்டவராய், இவரும் பவுலின் கூட்டாளிகளில் ஒருவராய் திகழ்ந்தார். இவர் டாக்டர் ஆக இருந்தார். 2 தீமோத்தேயுவில், அப்போஸ்தலரின் இறுதி நிருபத்தில், பவுல் எழுதுகிற போது, "லூக்கா மாத்திரம் என்னுடன் இருக்கிறார்." என எழுதுகிறார். மற்றவர்கள் அனைவரும் அவரை விட்டு பிரிந்து சென்றனர். லூக்கா உண்மையுள்ளவராய் பவுலுடன் இறுதி வரை இருக்கிறவராய் விளங்குகிறார்.

நித்தியம் மட்டுமே சபைக்காக செய்த லூக்காவின் கிரியைகளை வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது. நெருக்கங்களின் நடுவே உள்ள சிநேகமே உண்மையான சிநேகமாய் இருக்கிறது. இப்படிப்பட்ட நேரங்களில் மட்டுமே நமது உண்மையான சிநேகிதர் யார் எனக் கண்டு கொள்ள இயலும். சரித்திரமானது பாடுகளும் கஷ்டங்களும் நிறைந்த காலத்தில் பெயரளவு கிறிஸ்தவர்கள் விசுவாசத்தைவிட்டே ஓடிவிட்டதை காட்டுகிறதாய் இருக்கிறது. ஆனால் உண்மையான விசுவாசம் இவ்வாறு இராது. இதைக் குறித்த எச்சரிப்பை 2 தீமோத்தேயு 3:1-5, 4:3-5லும் காண்கிறோம். இதைப்போன்ற விசுவாச

துரோகமானது, அந்திக்கிறிஸ்து தன்னை முழுமையாய் இவ்வுலகில் காட்டத்துவங்கும்போது நிகழ்கிறதாய் இருக்கும். இக்காலங்களில் பில்லியன் கணக்கானோர் தங்களது உடன்பாட்டை இவனுடன் வைத்துக்கொள்ளத்துவங்குவர்.

இப்பொழுது பவுலுடன் இருந்த மூன்றாவது குழுவினரைக்குறித்துப் பார்ப்போம். தேமா [Demas] லூக்காவைப் போன்று பவுலுடன் இருந்தவர். இவ்விருவருமே பவுலுக்கு தோழமை பாராட்டியவர்கள். இவர்கள் இருவரும் ஒரேவிதமான போதனை மற்றும் பவுலின் ஒரேவிதமான முன்மாதிரியினைப் பெற்றவர்கள். ஆனால் இவர்கள் குணாதிசயங்களில் மாறுபட்டு விளங்குகிறவர்களாய் இருக்கின்றனர். இவர்களது கண்ணோட்டம் கூட வித்தியாசமானதாய் இருந்தது. இரு பிள்ளைகள் ஒரே குடும்பத்தில் வளர்க்கப்பட்டு தாங்கள் வித்தியாசமான திசைகளில் செல்வது ஆர்வத்தைத் தூண்டுகிறதாய் இருக்கிறதல்லவா? ஒன்று கிறிஸ்துவை பின்பற்றும், மற்றொண்டு அவரை மறுதலித்து இவ்வுலக வழிகளை பின்பற்றிப் போகும். ஒன்று எல்லாவிதமான அதிகாரத்தை எதிர்க்கிறதாய் இருக்கும், மற்றொன்ரு தேவனது வார்தையை போதிக்கும் போது அவற்றை சாந்தமாய் ஏற்றுக்கொள்ளும். லூக்கா பவுலுடன் இறுதிவரை உண்மையாய் நிலைத்திருந்தார், இது லூக்காவின் உண்மையான சுபாவத்தைக் காட்டுகிறது. உங்களது சுபாவமும் நெருக்கப்படுகிற காலங்களில் நிலை நிற்கிறதாய் இருக்குமா?

இங்கு பவுலின் வார்த்தைகளைக் காண்கிறோம், "தேமா உங்களை வாழ்த்துகிறார்" தேமா புவுலின் நிருபங்களில் மூன்று முறை குறிப்பிடப்படுகிறார். இம்மூன்று முறையும் வருத்தப்படக்கூடிய சம்பவங்களையே கூறுகிறதாய் இருக்கிறது. முதலாவது இவர் தேமா என் உடன் பங்காளி என அழைக்கப்படுகிறார். இவர் மற்ற மூன்று பேராகிய, மாற்கு, அரிஸ்தர்கு, லூக்கா இவர்களுடன் இணைத்துக் கூறப்படுகிறார். (பிலமோன் 24). பின்னர் சாதாரணமாய் "தேமா" என அழைக்கப்படுகிறார். இவரைக் குறித்த விவரனையே, அல்லது எவ்வித புகழ்சியுமே இல்லை. (கொலோசெயர் 4:14). மூன்றாவது முறையாக இவர் குறிப்பிடப்படும்போது, 2 தீமோத்தேயு 4:10, "தேமா இப்பிரபஞ்சத்தின் மீது ஆசை வைத்து, என்னை விட்டு பிரிந்து தெசலோனிக்கே பட்டணத்துக்குப் போய்விட்டான்." ஒரு காலக்கட்டத்தில் மாற்கு தன்வாழ்வில், பவுலை விட்டுச்செல்ல வேண்டி வந்தது, ஆனால் இவர் மறுபடியும் சேர்த்துக்கொள்ளப்பட்டவர். தேமா பவுலை விட்டு பிரிந்து போனபின்னர், தோற்றத்தில் இவர் தகுதியான கிறிஸ்தவ பணிசெய்தார் எனக் காண இயலவில்லை. இவரது பாவம் இப்பிரபஞ்சத்தின் ஆசைவைத்து பிரிந்து போகச்

செய்தது. இவருக்கு உலகமானது பெரிதாய் விளங்கியது. "உலகம்" என்ற சொல், இவ்வுலகை இயக்கிவருகிற உலக அமைப்புகளைக் குறிக்கிறதாய் இருக்கிறது. இதன் பொருள், தேவனற்ற சமுதாயம், ஜீவனுள்ள தேவனையும், சிருஷ்டிகரையும் முழுவதுமாய் உதாசீனப்படுத்தி வாழும் வாழ்க்கையை மேற்கொள்வது.

அப்போஸ்தலராகிய யோவான் தனது முதலாவது நிருபத்தில், இவ்வுலகமானது மூன்று காரியங்களால் விசுவாசிகளை வஞ்சிப்பது குறித்து கூறுகிறார். 1 யோவான் 2:15-17. "மாம்சத்தின் இச்சை, கண்களின் இச்சை, ஜீவனத்தின் பெருமை." -- "மாமிசத்தின் இச்சை" என்பது சரீரப்பிரகாரமான உணர்ச்சிகள், பழைய பாவசுபாவத்திலிருந்து புறப்படுகிறதாய் இருக்கிறது, "கண்களின் இச்சை" நாம் காண்பது மூலமாக ஏற்படும் தீமையான ஆசைகளைக் குறிக்கிறது. "ஜீவனத்தின் பெருமை" என்பது, சுய மகிமை, தன்னைப் பெரிதுபடுத்திக்காட்டுவதற்கான ஆசை போன்றவற்றைக் காட்டுகிறது.

சுயத்திற்கு இடமளிக்கும் போது, எப்பொழுதும், பிரபலமடைதலையே விரும்புகிறவர்களாய் இருப்போம். இப்படிப்பட்ட காரியங்களில் தேமா சிக்குண்டவராய் விளங்குகிறார். ஒருவேளை தேமா இம்மூன்று சோதனைகளுக்குள் விழுந்து போயிருக்கலாம். இன்றைய அளவில் கிறிஸ்தவர்கள், தேமாவைப் போன்றே இவ்வுலகிற்கு சரணடைகிறவர்களாய் இருக்கின்றனர். எல்லா காலங்களிலும் மதம் என்கிற போர்வைக்குள் மறைந்து கொண்டு வெளிப்பகட்டாய் ஜீவித்து, இவ்வுலக காரியங்களில் வாழ்ந்து கொண்டிருப்பது எவ்வளது எளிதான ஒன்றாய் இருக்கிறது? வருத்தப்படக்கூடிய காரியம் என்னவெனில், இன்றை அளவில் அநேகக் கிறிஸ்தவர்கள் இதைப் போன்ற வாழ்க்கையையே மேற்கொண்டுவருகிறவர்களாய் இருக்கின்றனர்.

தேமாவின் எண்ணப்படி இவர் இரு எஜமான்களுக்கு பணிசெய்யலாம் எனக்கருதினார், ஆனால் முடிவாக அவர் ஒரு தீர்மானம் எடுக்க வேண்டியதாய் இருந்தது - எதிர்பாராத வண்ணமாய் அவர் தவறான தீர்மானத்தை எடுக்க வேண்டியதாயிற்று. தேமா பவுலைவிட்டுப் பிரிந்து சென்றது, அவருக்கு பெரிதளவில் வருத்தத்தை அளிப்பதாக இருந்தது. கர்த்தரது பணியையும் அது பாதிக்கிறதாய் இருந்தது, காரணம் கர்த்தரது பணி செய்ய வேலைக்காரர் அநேகம் பேர் இல்லாத காலமாய் இருந்தது. தேமாவின் தீர்மானம் நம்மில் அனைவரையும் பாதிக்கக்கூடியதாய் இருக்கிறது, அவர் தனது வாழ்வை பயனற்றதாய்

ஆக்கிக்கொண்டார், நிலைத்திராத காரியங்களைப் பின்பற்றிச் செல்கிறவரானார்.

இவ்வுலகம் முழுமையாக தீமையினால் நிரப்பப்பட்டு இருப்பதினால், விழுந்து போன மனிதன், வேதவசம் அதன் போதனை, பரிசுத்தாவியா னவரின் உணர்த்தும் ஊழியம் இவையில்லாமல் அதனுடன் கலந்து வாழுதல் இயலாத காரியம். ஒரு விசுவாசி இவ்வுலக காரியங்களால் தீட்டுப்பட்டுப் போய், தேவன் ஒரு போதும் உபயோகிக்க இயலாத நிலை இருக்கிறது, அவர்கள் கல்வித் தகுதியோ, திறமையோ, அனுபவமோ எதுவும் பயன்படாது போகிறதாய் இருக்கிறது. விசுவாசிகள் இவ்வுலகிலானால் கறைபடுவதற்கு / தீட்டுப்படுவதற்கு ஏறாளமான காரியங்கள் இருக்கின்றன.

சிலர் தவறான கூட்டத்தினருடன் கலந்து போகிறவர்களாய் இருக்கின்றனர். இவ்வுலகத்தோடு ஒத்துப்போகும்படியாக, மற்றும் இவ்வுலக ஜனங்களுடன் ஒத்துப்போகிறவர்களாய் இருக்கிறார்கள் இவ்வுலக ஜனங்கள் இயேசுக்கிறிஸ்துவுக்கு விரோதிகளாகவும் கிறிஸ்தவ விசுவாசத்திற்கு எதிராரனவர்களுமாய் இருக்கின்றனர். தவறான இடங்களுக்குச் செல்வது. தவறான சினிமாக்களைப் பார்ப்பது, மற்றும் தவறான தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப்பார்ப்பது. இவ்வுலகப்பொருட்களின் மீதும், இவ்வுலக மக்கள் மீதும் கண்ணோட்டமாய் இருப்பது, இயேசுக்கிறிஸ்து, மற்றும் வேதவசனங்கள் மீது கண்ணோட்டமாய் இருக்கத் தவறுவது. நாம் வெளிப்படையாய் இவ்வுலக சிநேகம் குறித்து எச்சரிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம் அல்லது இவ்வுலகில் இருப்பனவற்றைக்குறித்து எச்சரிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம். காரணம் விழுந்துபோன இவ்வுலகத்தின் அன்பு செலுத்துவதும், பிதாவாகிய் தேவன் மீது அன்பு செலுத்துவதும் முறண்பாடுள்ளதாய் இருக்கிறது.

மற்றொரு வழியில் விசுவாசத்திலிருந்து முறிந்து போவது, தொடர்ச்சியாய் ஜெபம் மற்றும் வேதபாடம் இவைகளை புறக்கணிப்பது ஆகும். சபையிலிருந்தும், மற்ற கிறிஸ்தவர்களின் ஐக்கியத்திலிருந்து விலகியிருப்பதும், திரளான பாவங்களைக் குவித்துக்கொண்டே, செல்வதும் அவைகளை அறிக்கை செய்யாது விட்டுவிடுவதும் ஆவியில் மரித்துப் போகிற நிலையை உருவாக்குகிறதாய் இருக்கிறது. நம்மனைவருக்கும், சிறப்பான அறிவுரையானது, வேத வசனத்திலிருந்து கிடைக்கிறதாய் இருக்கிறது. 1 தீமோத்தேயு 6:11-12. பவுல் சொன்ன அதே வசனத்தை நாமும் சொல்லவேண்டியவர்களாய் இருக்கிறோம். 2 தீமோத்தேயு 4:7, "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன்,

விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்."

இவ்வுலகமானது பிதாவின் அன்புடன் போட்டியிடாதவாறு பார்த்துக்கொள்ளுங்கள், தேவனது வார்த்தையானது, பிதாவின் அன்பை உணரவும் அதை அனுபவமாக்கிக்கொள்ளச் செய்கிறதாய் இருக்கிறது. உலகப்பிரகாரமான வாழ்க்கைக்கு முதற்படியாய் திகழ்வது, கர்த்தரது வார்த்தையை புறக்கணிப்பது ஆகும். D.L. Moody அவர்கள் தனது வேதாகமத்தின் முகப்பில் இவ்வாறு எழுதியிருந்தார்களாம், "இப்புத்தகம் உங்களைப் பாவத்திற்கு விலகியிருக்கச் செய்கிறதாய் இருக்கிறது, அல்லது பாவம் உங்களை இப்புத்தகத்திற்கு விலகியிருக்கச் செய்யும்." யாத்திராகமம் 14:20 ல் மேகஸ்தம்பம் போல, அது எகிப்தியருக்கு இருளையும், இஸ்ரவேல் ஜனங்களுக்கு வெளிச்சத்தையும் அளித்தது போல, தேவனது வார்த்தையானது, இருண்ட இவ்வுலகில் நமக்கு வெளிச்சமாய் இருக்கிறது.

தலைமைத்துவ நடைமுறை:

1. பவுலின் குழு அங்கத்தினர்கள், கடந்த காலத்தில், நம்மை உருவாக்குகிறவர்களாய் திகழ்ந்தனர். இப்படிப்பட்ட மனிதர்கள் பாடுகளிலும், உபத்திரவங்களிலும் பங்கேற்கிறவர்களாய் திகழ்ந்தனர், சிறைவாசம் செய்யும் பவுலுடன் இவர்கள் பாடுகளைச் சகித்தனர், இவர்கள் தன்னலமற்ற சேவைக்கு மாதிரிகளாய் திகழ்கின்றனர். அவர்களது கண்கள் கர்த்தர் மீதே பதித்திருந்தது, எப்பொழும் அவர் பார்வைக்குப் பிரியமானவற்றை செய்வதையே குறிக்கோளாய் கொண்டிருந்தனர்.

2. ஜெப வல்லமையானது இப்படிப்பட்ட தலைவர்களின் குணங்களை ருசுப்படுத்திக் காட்டுகிறதாய் இருந்தது: கர்த்தரது சேவையில் இப்படிப்பட்ட மனிதர்கள் ஊற்றப்பட்டு இருந்தனர். இவர்கள் ஜெபிக்கிறவர்களாகவும், ஜெபத்தில் போராடுகிறவர்களாகவும் திகழ்ந்தனர். சிறையில் அடைக்கப்பட்ட தங்கள் தலைவருக்கு எவ்விதத்திலாகிலும் உதவுமாறு வகை தேடுகிறவர்களாய் இருந்தனர், அவர் இல்லாத நிலையில் சபைகளுக்கு அவரால் கிடைக்கக்கூடிய வழிநடத்துதல்களை பெற்றுச் சென்று வழிநடத்துகிறவர்களாய் காணப்பட்டனர். அவர்கள் தேவனது வல்லமையை மட்டும் சார்ந்து இருந்தனர். அவர்கள் ஞானமாயும் கருத்தாயும் ஜெபிக்கிறவர்களாய் திகழ்ந்தனர்.

Amy Carmichael, அவர்கள் 20 ம் நூற்றாண்டின் மிஷனரியாக திகழ்ந்தவர், அவர்கள்

ஜெபத்தைப்பற்றி குறிப்பிடுகையில், 1. கர்த்தர் அறிந்த காரியங்களைக் குறித்து அவருக்கு விவரித்து கொண்டிருக்க அவசியமில்லை. 2. தேவன் கொடுக்க மனமற்ற காரியங்கள் குறித்து, அவரை வற்புறுத்த அவசியமில்லை. 3. அவர் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து அவருக்கு பரிந்துரை செய்ய அவசியமில்லை. அவர் என்ன செய்ய வேண்டும் என்பது குறித்து அவர் அறிந்தவராய் இருக்கிறார். நாம் ஜெபத்தில் ஞானமுள்ளவர்களாயும், வல்லமையுடையவர்களாயுமாக இருப்போமாக.

3. அவர்களது எல்லா திறமைகளும் சேவை என்கிற பலிபீடத்தில் இருந்தன. லூக்கா ஒரு தலைசிறந்த வைத்தியராய் இருந்தார், அவர் தனது திறமைகளை எப்பொழுதெல்லாம் அவசியப்பட்டதோ, அல்லது பயன்பட்டதோ அச்சமயத்தில் பயன்படுத்துகிறவராய் இருந்தார். அவர் சுவிஷேசம் மற்றும் அப்போஸ்தல நடபடிகள் போன்ற வேதாகம புத்தகங்களை எழுதுவதற்கு ஆயுவுகளை மேற்கொண்டவராகவும் அவற்றை எழுதுகிறவராயும் திகழ்ந்தார். மட்டுமல்லாமது இயேசுவானவர் என்ன செய்யும்படி வழிநடத்தினாரோ அவைகளைச் செய்யும் படி தன்னை அற்பணித்துக்கொண்டார். ஆரம்ப காலகட்டத்தில் அவர் செய்வன அவரது திறமைக்கு அப்பாற்பட்ட காரியங்களாய் இருந்தன.

4. உண்மையான கிறிஸ்தவத் தலைவர்கள், இவ்வுலக அமைப்புகளாகிய சத்துருவின் சோதனைகளுக்கு எதிராக தங்களைக் காத்துக்கொள்கிறவர்களாய் திகழ்ந்தனர்: நல்ல தலைவர்கள் வழிநடத்துகிறவர்களாய் இருந்தனர், அவர்கள் சோதனைகளாலும், மற்றும் கவனச் சிதறல்களாலும் வழிநடத்தப்பட்டு சிதறிப்போகாதாவாறு தங்களைக் காத்துக்கொள்கிறவர்களாய் இருந்தனர்.

[இ] 2 தீமோத்தேயு 2:20-26.

20. ஒரு பெரிய வீட்டிலே பொன்னும், வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு, அவைகளில் சில கனத்திற்கும், சில கனவீனத்திற்குமுரியவைகள், 21. ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான். 22. அன்றியும் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி, சுத்த இருதயத்தோடேக் கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும், சமாதானத்தையும், அடையும்படி நாடு, 23. புத்தியீனமும்,

அயுக்தமுமான தருக்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, ஆவைகளுக்கு விலகியிரு. 24. கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், தீமையை சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும். 25. எதிர் பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், 26. பிசாசானவன் இச்சையின் படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும்.

பிரதிபலிப்பு:

ரோமர் 9:21-25 ல் பவுலின் சிந்தனைக்கருத்துக்கள் இப்பகுதியில் காணப்படுகிறதாய் இருக்கிறது. நமது கீழ்ப்படிதல் மற்றும் கீழ்ப்படியாமையினால் தீர்மானிக்கப்பட வேண்டிவற்றை குறிப்பிடுகிறார், மற்றும் எப்படிப்பட்ட ஊழியம் இப்பூமியில் செய்து நிறைவேற்றப்பட வேண்டியதாய் இருக்கிறது என்பது குறித்தும் குறிப்பிடுகிறார். நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது, அவரது இராஜ்ஜியத்தின் பணிக்காக நாம் மிகவும் சிறப்பான நிலையில் பயன்படுத்தப்படுகிறவர்களாய் இருப்போம். நாம் கீழ்ப்படிய மறுக்கும்போது அல்லது அவரது வார்த்தைகளைப் புறக்கணிக்கும் போது, நாம் பயன்படுகிறவர்களாய் இருப்போம், ஆனால் மிகவும் தாழ்வாக அல்லது அடிப்படையான நோக்கங்களுக்காக பயன்படுகிறவர்களாய் இருப்போம். ஒருவர் இராஜ பந்தியில் பொன் பாத்திரத்தைப் போன்று பயன்படுவார், மற்றொருவர் எல்லா வித கழிவுகளையும் அப்புறப்படுத்தப் பயன்படும் பாத்திரமாய் இருப்பர்.

இருவிதப் பாத்திரங்களும் பயன்படுகிறவைகளாய் இருக்கின்றன, ஆனால் நாம் தெரிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படும் பொற்பாத்திரங்களாய் இருத்தல் வேண்டும்., கழிவறையில் பயன்படும் பாத்திரமாய் இருத்தல் கூடாது. இதுவே தலைமைத்துவ பணியின் தெரிவு செய்தலாய் இருக்கிறது, இது நமது கீழ்ப்படிதல், அல்லது கீழ்ப்படியாமை இவற்றால் நமது வாழ்வில் தேவனது திட்டத்தை வெளிப்படுத்துகிறவர்களாய் இருக்கிறோம்.

20. ஒரு பெரிய வீட்டிலே பொன்னும், வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு, அவைகளில் சில கனத்திற்கும்,

சில கனவீனத்திற்குமுரியவைகள்,

பண்டைய உலகில், கனத்துக்குரிய பாத்திரங்களை இறுதிவரை பயன்படுத்துகிறவர்களாய் இருப்பர், கனவீனத்திற்குரிய பாத்திரங்கள் மரம் அல்லது மண்ணினால் செய்யப்பட்டவைகள் அவைகள் சில காலம் பயன்படுத்தப்பட்ட பின்னர் தூக்கி எறிந்துவிடுவர். யோவான் 15 ம் அதிகாரத்தில் கர்த்தரின் பகுப்பாய்வின்படி, திராட்சைக் கொடிகள் குறித்து இவ்வண்ணமே கூறப்படுகிறது. பவுலின் எண்ணத்தில் ஒரு நபர் மாற்றப்படக்கூடும், அவர்கள் ஒரு போதும் தேவனால் கனவீனத்திற்குரிய பாத்திரங்களால் உருவாக்கப்படவில்லை, அவர்கள் கனவீனமாய் மாறியதற்குக் காரணம் அவர்களது கீழ்ப்படியாமையே.

E M Blaiklock அவர்கள் குறிப்பிடும் போது, கனவீனத்துக்குரிய பாத்திரங்கள் "அழிவிலிருந்து பாதுகாக்கப்படுகிறவைகளாய் இருக்கின்றன" (IBID , page 108), இதுவும் அவர்களது கீழ்ப்படிதல் தேவனது திட்டத்திற்கு இசைய இருக்கும்போது மட்டுமே." " ஒரு மனிதன் எந்த ஒரு காரியம் கனவீனத்தைக் கொண்டுவருகிறதோ அவற்றினின்று தன்னை சுத்திகரித்துக் கொள்ளும் போது, அப்படிப்பட்ட நபர் மேன்மையான காரியங்களில் பயன் படுத்தப்படுகிறவராய் இருக்கிறார்." (R H Mounce, IBID, page 130).

பவுல் நாம் ராஜரீக குடும்பத்தின் அங்கத்தினராய் இருக்கிறோம், மற்றும் கிறிஸ்து இயேசுவில் நமக்கு பெரிய ஸ்தானத்தை தேவன் நமக்களித்துள்ளார் என ஆரம்பத்தில் துவங்குகிறவராய் இருக்கிறார். (கொலோசெயர் 3:1-15), நமது ஸ்தானத்தின் படி, நாம் இப்பொழுது, ராஜரீக நிலையில் வாழ வேண்டியவர்களாய் இருக்கிறோம், மற்றும் கண்ணியத்துடனும், கௌரவத்துடனும் தேவனது பெரிய வீட்டில் பொன் மற்றும் வெள்ளிப் பாத்திரங்கள் போன்று இருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். E F Scott அவர்கள் கூறுகிறார்கள், "ஒரு கிறிஸ்தவர் கெட்டசிந்தனைகளிலிருந்து விடுபட்டு ஜீவித்தல் வேண்டும், மற்றும் அதுவே தேவனது பெரிய வீட்டில் இருக்க தகுதியற்றவர்களாக்குகிறதாய் இருக்கிறது." (IBID, page 114). Barrett அவர்கள் குறிப்பிடும்போது, "கர்த்தரது சித்தத்தினை ஒவ்வொரு வழியிலும் செய்கிற சேவகராக இருத்தல் வேண்டும்." என்கிறார். (IBID, page 107).

இவ்வேதபகுதியின் பொருளானது, பவுல் இதற்கு முன் கள்ளப்போதகர்களைக் குறித்து பவுல் கூறியிருப்பதால் இதில் உள்ள அர்த்தமும் அதைப் பிரதிபலிப்பதாய் இருக்கிறது என ஒருவர் குறிப்பிடுகிறவராய் இருக்கிறார். இக்கருத்தானது சபை

அங்கத்தினருக்கான பொதுவான அடிப்படைக்கருத்தாய் இருக்கிறது. "ஒரு வீட்டில், மரம் மற்றும் களிமண்ணால் செய்யப்பட்ட பாத்திரங்கள் உடைந்து போகிறவைகளாய் இருக்கிறபடியால், அவைகளுக்குப் பதிலாக வேறுபாத்திரங்களை மாற்றவேண்டிவரும், ஆனால் பொன், வெள்ளி, போன்ற உலோகத்தால் செய்யப்பட்ட பாத்திரங்கள் ஒரு போதும் அவ்வாறு உடைந்து போகிறதில்லை. ஆகையால் சபையில், தவறான போதனையாளர்கள் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் எழும்பி மறைகிறவர்களாய் இருக்கின்றனர், முடிவில் அவர்களது பயனற்ற நிலையானது அறிந்துணரப்பட்டு, அவர்கள் அகற்றப்படுகிறவர்களாய் திகழ்கின்றனர்." (H Kent, IBID, page 277).

பாவத்திற்கும் மற்றும் தவறான உபதேசத்திற்கும் எவ்விதமான எதிர்காலம் இல்லாது இருக்கிறது, அவைகளுக்கு நியாயத்தீர்ப்பு மட்டுமே நிலைத்திருக்கிறதாய் இருக்கிறது, ஒரு மனிதன் தனது செயல்களை, மற்றும் மாற்றங்களை நியாயந்தீர்த்துக்கொள்ள இயலாது, தேவன் அவனை நியாயந்தீர்க்கிறவராய் இருக்கிறார் அவனை அவர் அகற்றுகிறவராய் இருக்கிறார். யோவான் 15:6, 1 கொரிந்தியர் 11:28, 31, 32, 2 Corinthians 13:5. சிறுவர்களின் ஸ்கௌட்டின் இலட்சியம், "எப்பொழுதும் ஆயத்தமாய் இருத்தல்" என்பதாகும், எல்லா விசுவாசிகளின் இலட்சியமும் இப்படியே இருத்தல் வேண்டும். எந்த நற்கிரியையும் செய்ய நாம் ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும், அவற்றைக் கர்த்தரது சித்தத்திற்கு இசைய செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம். ஆவிக்குரிய காரியங்களைச் செய்ய, நாம் ஆவிக்குரியவர்களாய் இருத்தல் வேண்டும், "ஊழியப்பணிக்கென சிறப்பான ஒழுக்கநெறியானது எல்லாவற்றிற்கும் மேலாக அவசியப்படுகிறதாய் இருக்கிறது, அது தெய்வீக இராஜ்ஜியத்தில் பணிசெய்வோருக்கு அவசியமான ஒன்றாய் விளங்குகிறது. மற்றக்காரியங்கள், குறைவாகவோ அல்லது அதிகமாகவோ தேவைப்படலாம் ஆனால் இக்காரியமோ மறுக்க இயலாத அளவுக்கு அவசியமாய் இருக்கிறது." (G B Wilson, IBID, page 147).

21. ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக் கொண்டால், அவன் பரிசுத்தமாக்கப்பட்டதும், எஜமானுக்கு உபோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்.

வேதவசனங்கள் முழுமையிலும் தொடர்ச்சியாக, பரிசுத்தத்தைக்

கைக்கொள்ளுதலின் அவசியத்தைக் குறித்து எச்சரிக்கிறதாய் இருக்கிறது, மட்டுமின்றி நாம் பரிசுத்தமாய் இருத்தல் வேண்டும் எனவும் அது நம்மை ஞாபகப்படுத்துகிறதாய் இருக்கிறது. கர்த்தர் பரிசுத்தராய் இருக்கிறதுபோல நம் நடக்கைகள் அனைத்திலும் பரிசுத்தமாய் இருத்தல் வேண்டும். 1 பேதுரு 1:15, 16, லேவியராகமம் 11:44, 19:2, 20:7. இக்கட்டளைகளுக்கு இருபக்கங்கள் இருக்கின்றன, பாவத்திற்கு எதிர்த்து நின்று அதற்கு பரிகாரம் தேடுதல் வேண்டும் மற்றும் நீதியின் குணநலன்களை தரித்துக்கொள்ளுதல் வேண்டும். நாம் வெற்றிடமாய் ஜீவிக்க இயலாது, பாவமானது புறக்கணிக்கப்பட்டு, அதைப் புறம்பே தள்ளும் போது, அதற்குப் பதிலாக நன்மையோ அல்லது முன் செய்ததைவிட மிக மோசமான பாவமோ அவ்விடைவெளியை நிரப்ப வேண்டும். மத்தேயு 12:43-45, கொலோசெயர் 3:8-15. "ஒருவரை சுத்திகரித்துக் கொள்ளும் வழியானது, தீமையை கழற்றிவிட்டு, நன்மையை இணைத்துக்கொள்ளுதல் வேண்டும்." (W Hendricksen, IBID, page 271).

தீமையினின்று நாம் சுத்திகரிக்கப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம். இதன் பொருள் என்ன? நமது பாவங்களை அறிக்கை செய்து விட்டுவிட்டு, நமது வாழ்வை, சோதனை மற்றும் தீமையான வழிகளிலிருந்து விலகி ஜீவிக்க அமைத்துக்கொள்ளுதல் என்பதாகும். இங்கு பயன்படுத்தப்படும் வினைச்சொல்லானது aorist subjunctive, ஆக பயன்படுத்தப்பட்டுள்ளது, ஒவ்வொரு முறையும் நாம் சோதிக்கப்படும்போது, அச்சோதனைகளுக்கு எதிர்த்து நிற்க வேண்டியவர்களாய் இருக்கிறோம் (aorist), என்பதை இது நமக்குணர்த்துகிறதாய் இருக்கிறது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், கீழ்ப்படிதலையும், கீழ்ப்படியாமையையும் தெரிந்து கொள்ளுதல் என்பது நமது கடமையாய் இருக்கிறது (subjunctive mood).

சுத்திகரித்துக்கொள்ளுதல் என்பது மதம் சார்ந்த முக்கியத்துவம் வாய்ந்த வார்த்தையாய் இருக்கிறது, தேவனுக்குரிய சேவை செய்ய நம்மைச் சுத்திகரித்துக்கொள்ளுதல் வேண்டும் என்பதை உணரவைக்கிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட சுத்திகரிப்பு இல்லாதபட்சத்தில், ஆலயப்பணிவிடை செய்ய நாம் சுத்தமில்லாதவர்களாய் இருப்போம். நாம் பரிசுத்தமாக்கப்பட்டவர்களும் அல்லது வேறுபிரிக்கப்பட்டவர்களுமாய் இருத்தல் வேண்டும், மனோநிலையிலும் சரீரப்பிரகாரமான ரீதியிலும், எஜமானனது பணிக்காக ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். "சந்தித்தல்" என்கிற வார்த்தையின் பொருளானது, மனவிருப்பத்தின்படி பயன்படல் என்பதன் பொருளாய் இருக்கிறது. தேவன் பயன்படுத்த நம்மில் காணப்படும் ஆயத்தம் பாவத்திலிருந்து சுத்திகரிப்பு மற்றும்

நமது ஆத்துமத்தில் உபதேசங்களைக் கைக்கொள்ள ஆயத்தம் என்பதாய் இருக்கிறது.

"இவைகளிலிருந்து நம்மை சுத்திகரித்துக் கொள்வது என்பது நமது இருதயம் மற்றும் வாழ்வில் காணப்படும் துன்மார்க்கம் மற்றும் நமது சிந்தனையில் உள்ள தவறான காரியங்களில் இருந்து கழுவப்படுதலின் அவசியத்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது. கிறிஸ்துவின் பணிசெய்வதற்கு, சுத்திகரிப்பு - உபதேசத்தினால் சுத்திகரிப்பு மற்றும் வாழ்க்கையில் சுத்திகரிப்பு அவசியமாய் இருக்கிறது. நமது மாமிசத்தை சிலுவையில் அறைந்து, ஆவிக்குள்ளாய் நடக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். இது ஈவு இரக்கமற்ற நிலையில் துன்மார்க்கத்தையும் பாவத்தையும் அவற்றை செய்பவர்களுடன் உள்ள ஈடுபாடுகளிலிருந்து, விலகியிருக்கும் போது, வேதவசனமானது பரிசுத்தத்தின் இரகசியத்துடன் நம்மை இணைக்கிறதாய் இருக்கிறது." (J R W Stott, IBID, page 73, and page 75).

22. அன்றியும் பாலியத்துக்குரிய இச்சைகளுக்கு விலகியோடி, சுத்த இருதயத்தோடேக் கர்த்தரைத் தொழுது கொள்ளுகிறவர்களுடனே, நீதியையும் விசுவாசத்தையும் அன்பையும், சமாதானத்தையும், அடையும்படி நாடு,

அடுத்தக் கட்டளையானது சாதாரண ஒன்றாய் இருக்கிறது, "விலகியோடுதல்" இதன் பொருள் "ஜீவன் தப்ப ஓடுதல்" என்பதாகும், ஊழியத்தையும் மற்றும் பிரதிபலனையும் அழிக்கக்கூடிய பாவத்தைவிட்டு விலகியோடுதல் வேண்டும். நாம் அனைவரும் ஒரு போதும் பாவம் இத்தகைய பயங்கமானது எனக்கண்டதில்லை, மற்றும் ஆபத்து நிறைந்த இடத்தில் நாம் ஒரு போதும் அமைதிகாப்பது இல்லை. பழைய பாவ சுபாவத்தின் இச்சைகள் எப்பொழுதும் பயங்கரமானவைகளாய் இருக்கின்றன. மற்றும் எப்பொழுதும் ஆத்துமாவைக் கட்டுப்படுத்தக்கூடியதும், அழிக்கிறதுமாய் இருக்கிறது. நாம் அவைகளை எதிர்த்தல் என்பது கூடாத காரியம், மேலே குறிப்பிட்டது போல, பாவத்திற்குப் பதிலாக, பரிசுத்தமானது இடம் பெறுதல் வேண்டும்.

பரிசுத்த ஆவியானவரின் கனியானது இதற்குப் பதிலாக குறிப்பிடப்பட்டுள்ளது, சுத்த இருதயத்துடனே நாம் கர்த்தரை அழைத்தல் வேண்டும், ஜெபம் என்பது நல்ல பழக்கமாய் இருக்கிறது, இது நம்மை தேவன் மீது கண்ணோக்கமாய் இருக்கச் செய்கிறதாய் இருக்கிறது, பாவத்தின் மீதுள்ள நமது கண்ணோட்டத்தை தவிர்க்கிறதாய் இருக்கிறது. சுத்திகரித்தல் (katharos) என்கிற கிரேக்கச் சொல்லானது ஆசாரிய பணியுடன் சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது, கிறிஸ்துவின்

ஸ்தானாபதியாய் இருக்கும் நமது கடமையும் இதுவாய் இருக்கிறது. இவ்வுலகில் நாம் ஆசாரியர்களாய் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கிறோம். இங்கு கலந்து செல்வதற்கு இடமே இல்லை, இப்புறஜாதிய உலகில் கர்த்தரும், எஜமானனுமானவர் நம்மை முற்றிலும் கவனிக்கிறவராய் இருக்கிறார். கால்வின் அவர்கள் குறிப்பிடும் போது, "தன்னைத்தானே கர்த்தருக்கென அற்பணிக்கும் போது, தங்களைத் தாங்களே அசுத்தம் மற்றும் தெய்வீகமற்ற காரியங்களில் இருந்து சுத்திகரித்துக் கொள்ளுதல் வேண்டும்." (quoted in P Fairburn, IBID, page 355).

பரிசுத்த ஆவியானவரின் கனியானது, ஜீவனுள்ள வார்த்தையை படிப்பதின் மூலமும் அதைக்கைக்கொள்வதன் மூலம் வருகிறதாய் இருக்கிறது. இங்கு பவுல் தெரிந்து கொள்ளும் விஷயம் என்னவென்றால், நீதிக்கேற்ற விஷயத்தில் நிலை நிற்க தேவனது குணாதிசய தராதரமும் அவசியமாய் இருக்கிறது, இது இல்லாதபட்சத்தில் அவரை சேவிப்பது என்பது கூடாத காரியமாய் இருக்கிறது. அடுத்துவருவது விசுவாசம், தேவனது வார்த்தையை விசுவாசிப்பதும், அதை வாழ்விற்குக் கைக்கொள்வதும் வேண்டும். மற்றும் அகாப்பே அன்பைப் பிறரிடத்தில் காட்ட வேண்டியவர்களாய் இருக்கிறோம், மற்றவர்கள் நலனில் அக்கரையும் கரிசனையும் காட்டுதல், ஒவ்வொரு விசுவாசியின் மீது விழுந்த கடமையாய் இருக்கிறது, இது இல்லாது சுவிஷேச செய்தியின் மூலம் பணிசெய்தல் என்பது அசாத்தியமான காரியமாய் இருக்கிறது. சமாதானமானது நமது வாழ்வில் பின்தொடருகிறதாய் இருக்கிறது, நாம் மற்றவர்களுடன் தொடர்புகொள்ளும் போது, இதுவே நமது குணாதிசயமாய் இருக்க வேண்டியதாய் இருக்கிறது. அமைதியான ஆத்துமத்தின் ஆவிக்குரிய செழிப்பானது, மற்றவர்களை கர்த்தரிடமும் அவரது வார்த்தையினிடமும் கவர்ந்திழுக்கும் காந்த சக்தியாய் இருக்கிறது. இதுவே ஆவிக்குரிய கனியின் நோக்கமாய் இருக்கிறது, பாவியானவன் தேவனுக்கு தன்னை ஒப்புக்கொடுக்கும்போது, அவர் அவனை இரட்சித்து, அவன் கிருபையில் வாழும்படி செய்கிறவராய் இருக்கிறார். Refer to the BTB studies of CHRISTIAN LIFE: LOVE, CHRISTIAN LIFE: HOPE. கிறிஸ்தவ வாழ்க்கை: அன்பு, கிறிஸ்தவ வாழ்க்கை: நம்பிக்கை.

23. புத்தியீனமும், அயுக்தமுமான தருக்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, ஆவைகளுக்கு விலகியிரு.

இப்படிப்பட்ட சத்தியமானது, கள்ளப்போதனையாளர் மற்றும் உண்மையான போதகர் இவர்களுக்கிடையே உள்ள முறண்பாட்டை தெரிவிக்கிறதாய் இருக்கிறது,

இங்கு கூறப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றுவது அவர்கள் பயனுள்ள மற்றும் இலாபகரமான சேவை செய்ய வழிநடத்துகிறதாய் இருக்கிறது. கள்ளப்போதனையாளர்களைக் குறித்து உண்மையான போதகர் கவனமுள்ளவராய் இருத்தல் வேண்டும், போதகரது நன்னடத்தையாலும், சரியான போதகத்தாலும், சில வேளை, கள்ளப்போதனையாளர் கூட மனந்திரும்பி, மாற்றப்பட்டு சத்தியத்தை ஏற்றுக்கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் நேரிடலாம்.

கள்ளப்போதனையாளர் குறித்த தீமையான விளைவுகளை நம்மில் ஒருவேளை உருவாக்கக்கூடும், அதை நாம் "பரிசுத்த கோபம்" என்கிறோம், ஆனால் இவை பழை காரியமாய் இருக்கிறது கர்த்தரின் பணியில் இது எவ்விதத்திலும் பயனளிக்காது. தீமையின் மீது நாம் கொள்ளும் கோபத்தினால், தீமைக்கு எவ்வித மாற்றத்தையோ அல்லது தாக்கத்தினையோ கொண்டுவராது. நாம் தீமை செய்கிறவர்கள் மீது, கோபப்பட்டு அவர்களுடன் வாதிட்டு, கள்ளப்போதனையாளருக்கு சத்தியத்தை அறிவித்து, அவர்கள் மனம் மாற வழிநடத்தும் போது, நாம் முழுமையாக பெருமை மற்றும் நமது முயற்சியானது, பெருமை மற்றும் திமிர் போன்றவற்றை அடைய நம்மை வழிநடத்துகிறதாய் இருக்கும். பவுல் அதற்கு தப்பிக்கொள்ளும் மேன்மையான வழியை நமக்கு இங்கு காட்டுகிறவராய் இருக்கிறார்.

"நாம் சாந்தமுள்ளவர்களாய், தர்க்கம் செய்யாது இருக்கும் போது மட்டுமே, கர்த்தரது மெய்யான சேவகராய் இருப்போம், அப்பொழுது மட்டுமே நமது எதிராளிகள் மனந்திரும்பும்படி, கர்த்தர் தமது கிரியைகளை நடப்பிப்பவராய் இருப்பார். மற்றும் அவர்களுக்கு நல்லறிவையும், தீமையின்று விடுதலையையும் அளிப்பார்." (J R W Stott, IBID, page 80) நாம் அவர்களுக்கு சாந்தமாயும், வணக்கமாயும், ஜெபத்துடன் அளிக்கும் சாட்சியானது, அவர்களுடன் நின்று சத்தியத்தை அளிக்கும்போது, அபாயத்திற்கு விலக்கி நம்மை பாதுகாக்கிறதாய் இருக்கும்.

அவர்களுடன் சரிக்கு சரியாக நின்று வாதிட்டு அவர்களது தவறுக்கு விலையாக நாம் போய்விடக்கூடாது, விவாதித்து வாக்குவாதம் செய்தல் நமக்கு அபாயத்தை வருவிக்கிறதாய் இருக்கிறது என்பதை மனதில் கொள்ளுதல் வேண்டும். "போதுமான ஆதாரமற்ற வேதத்தை சாராத கருத்துக்களும் மற்றும் அன்பற்ற இறையியல் அமைப்பும் சேர்ந்து கிறிஸ்துவின் மெய்யான உபதேசத்திற்கும் மற்றும் அவருக்கும் பெருத்த சேதத்தினை உண்டாக்குகிறதாய் இருக்கிறது." (Stott, IBID, page 77).

மிகவும் அர்த்தமுள்ள வாழ்க்கை செய்யும் கர்த்தரது பிள்ளைகள், தேவனது வார்த்தைக்காய் தாக்குதல் நடத்தி, வாதிட்டு தங்களை அதிகமான தீமைக்கு ஒப்புக்கொடுப்பதும், சுவிஷேசத்திற்கான வாசலை அடைத்து, தேவன் எவ்விதத்திலும் கள்ளப்போதனையாளர் வாழ்வில் கிரியை செய்யவிடாது தடை செய்வது, மிகுந்த வருத்தத்தையும், மன வேதனையையும் அளிக்கக்கூடியதாய் இருக்கிறது என இதன் ஆசியர் கூறுகிறார். இரு வகையான காரியங்களை உச்சரிப்பதை தவிர்த்தல் வேண்டும்: மதியீனமான பேச்சு மற்றும் கற்று நிச்சயம் பெறாத கேள்விகளையும் உச்சரித்தல் கூடாது. இவைகள் "அறியாமையுள்ள அல்லது கற்றுக்கொள்ளாத மனிதரின் அடையாளமாய்" இருக்கின்றன. (Hendricksen, IBID, page 274), இப்படிப்பட்ட விவாதத்தில் நீங்கள் ஈடுபடுவது, தர்த்த ரீதியிலிருந்து உங்களை வழிவிலகச் செய்கிறதாய் இருக்கும் மற்றும் அவர்களது குறுகிய உலகக்கண்ணோட்டதிலிருந்தும் வழிவிலகச் செய்யும். தவறான வழியில் செல்லும் ஒருவரை திரும்ப கொண்டுவந்து, அடிப்படை சுவிஷேசத்தை அவருக்களித்து மனந்திரும்புதலுக்கு அவரை வழிநடத்துதல் வேண்டும்.

24. கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், தீமையை சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும். 25. எதிர் பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும்,

தவறான போதனையாளர்களின் தர்க்கங்கள் உங்களது கவனத்தை சிதறவிடாது இருத்தல் வேண்டும். எப்பொழுதும் தேவனது கொள்கையினைச் சார்ந்து இருத்தல் வேண்டும், மனிதரின் மேற்கோள்கள், மற்றும் அவர்களது கருத்தை முற்றிலுமாக தவிர்த்தல் வேண்டும். உண்மையுள்ள போதகர், இவைகளைத் தவிர்ப்பர், அவர் வசனம் பிரதி வசனமாக வேதாகம சத்தியத்தினை போதிக்கிறவராய் இருப்பர். தேவனது கொள்கையினை ஒவ்வொரு கருத்தாக எடுத்துரைப்பர். அவைகளை எடுத்துரைத்து அவற்றில் உறுதியாய் நிலைநிற்பர். அன்புடன் செயல்படும் பரிசுத்தரின் நடைமுறைகளை கையாளுவர். இதில் எவ்வித சீர்திருத்தமும் வார்த்தைக்களுக்கடுத்த யுத்தத்திற்கு வழிநடத்தி, அது முடிவற்றதாய் போய்க்கொண்டே இருக்க வழிவகுக்கும்.

நாம் ஜனங்களுடன் வார்த்தையினால் போர் தொடுக்கிறவர்களாய் இருத்தல் கூடாது. பிரசங்க பீடத்தில் ஆவேச பேச்சுக்கு இடமில்லை, பிரசங்க பீடத்தை ஜனங்கள் கட்டியெழுப்பப்படுவதற்காகப் பயன்படுத்துதல் வேண்டும். அது

இடிப்பதற்கோ, கிழிப்பதற்கோ பயன்படுத்தப்படுதல் கூடாது. எல்லா போதனைகளும், முக்கியமாக சரிப்படுத்தும் போதனையானது, அன்பினால் செய்யப்படுதல் வேண்டும். (எபேசியர் 4:15), அந்தவகையில் போதிக்க நாம் "சாந்தமாய்" போதக திறமையுடன் சமார்த்தியமாய் பிரங்கித்தல் வேண்டும். தேவனது வார்த்தையை பகிர்ந்து கொடுக்கும் போது, வேதாகம போதனையாளருக்கு இருக்க வேண்டிய ஒவ்வொரு குணாதிசயத்தையும் பரிசீலனை செய்தல் வேண்டும்.

1. சாந்தமாய் இருத்தல் - இங்கு வலியுறுத்தப்படுவது குணமாக்குதலும் மற்றும் காயத்தை ஆற்றுதலும் ஆகும். சரிப்படுத்தக்கூடிய போதனையில் நாம் அடிக்கடி மறக்கிற காரியம் இதுவாக இருக்கிறது. தவறாக வழிநடத்தப்பட்ட மக்கள் தங்களது தவறுகளிலிருந்து மீளவும் அவர்கள் குணமாக்கப்படுதலும் அவசியமாய் இருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு கொடுக்கப்படும் செய்தியானது, குணமாக்குதலை அளிப்பதாய் இருத்தல் வேண்டும், நீங்கள் சரியென நிருபணம் செய்தலாய் இருத்தல் அதன் நோக்கமாய் இருக்கக்கூடாது.

2. போதிப்பதற்கு பொருத்தமானதாய் இருத்தல் - திறமையுடன் போதித்தல் போதனையில் முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது மற்றும், அது பயிற்சியை உள்ளடக்கியுள்ளது. தேவன் ஆயத்தமாய் உள்ளோரைப் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார். நாம் பயிற்சிபெற்று அதிகமான அளவில் பயன்படுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். பவுல் கமாலியேலின் பாதப்படியில் அநேகப்பாடங்களை கற்றுக்கொண்டார், மற்றும் இவரது அனுபவங்கள் அனைத்திலும் ஒரு நல்ல சிறப்பான தொடர்பாளராய் சத்தியத்தை எடுத்துரைக்க கற்றுக்கொண்டவராய் இருந்தார். இதைப்போன்றே நாமும் இருத்தல் வேண்டும்.
3. பொறுமையுட இருத்தல்: பொறுமையுடன் இருந்தால் மட்டுமே நமது இலக்கை நாம் அடைய முடியும். இதன் பொருள் ஒரு விசுவாசி குழப்பமடைந்துள்ள நிலையில், அல்லது கள்ளப்போதகரால் குழப்பமடைந்துள்ள நிலையில் அதைக்குறித்து விசுவாசிக்கு உணர்த்தி, அவர்கள் புரிந்துகொள்ள காத்திருப்பதைக் குறிக்கிறதாய் இருக்கிறது. இவ்வாறு குழப்பத்திற்குள் கடந்து சென்ற விசுவாசி சில மணி நேரத்திற்குள் சரியாகிவிடுவர் என எதிர்பார்த்தல் தவறு. அவர்கள் சிக்கியிருக்கும் குழம்பிய நிலையை உருவாக்கிய விஷயம் குறித்து அநேக வாரங்கள் அவர்களுடன் பேசி அவர்களுக்கு உணர்த்த வேண்டி வரும், இப்படிப்பட்ட தவறான போதனை குறித்து பல மாதங்கள் அவர்களுடன் ஈடுபட நேரிடலாம்.

4. சாந்தமாய் இருத்தல் - இது இன்றைய அளவில் மிகவும் பிரசித்தமானது என கூறுவதற்கில்லை, இதன் வேதாக விளக்கம் அறியப்படாததாய் இருக்கிறது. வேதாகம் சாந்தம் என்பது சுயவாஞ்சையிலிருந்து விடுபட்டு வாழும் ஆவியையை உடையவராய் இருத்தல் என்பதை உள்ளடக்கியுள்ளது, பதிலுக்கு பதில் செய்ய நாடாது இருத்தல், அல்லது எந்த ஒரு சுய நோக்கமின்றி அமைதியுடன் மற்றும் தெளிவுடன் ஒரு நபரைச் சத்தியத்தினால் சந்திக்கும்படி காத்திருத்தலை இது காட்டுகிறதாய் இருக்கிறது.

5. அறிவுரை கூறுதல் - இது ஒரு இராணுவ அதிகாரி, பயிற்சி நோக்குடன் முறையான அறிவுரை அளித்து அவர்களுக்கு அனுதின பயிற்சி அளிப்பதை உள்ளடக்கியுள்ளது, இது அவர்களுக்கு அளிக்கும் பிரதிபலன் மற்றும் தண்டனை போன்றவைகளை உள்ளடக்கி அவர்களை சரியான பாதையில் வழிநடத்துகிறதாய் இருக்கிறது.

26. பிசாசானவன் இச்சையின் படி செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந்தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாய் அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும்.

தீமோத்தேயு, இந்த ஜனங்கள் தனக்கு எதிராய் செயல்பட்டு வருவதன் காரணத்தை நினைவுகூறுகிறவராய் இருக்கிறார், அவர்கள் தவறு செய்து கொண்டு இருந்தபோதிலும், அவர்கள் கூடுமான வரையில் கிறிஸ்தவ வழியில் மறுபடியும் மீட்டுக்கொள்ள எத்தணம் செய்கிறவராய் இருக்கிறார். "இவரது சாந்தமானது எப்போழுதும் சரிசமமாய் இருக்கப்போவதில்லை அல்லது பாராட்டப்படுவதற்குரியதாயும் இருக்கவில்லை. அவரது போதனகள் எல்லா நேரங்களிலும், தவறாய் கருதப்பட்டு பரிகசிக்கப்பட்டது, அவருக்கு அவமானத்தையும் காயங்களையும் ஏற்படுத்துகிறதாய் இருந்தது. இவ்வாறு நிகழும்போது அவர் காயங்களுடன் பொறுமையுடன் இருக்க நேர்ந்தது. அவர் தீமையினால் பிடிபட்டிருந்தார்." (Hendricksen, IBID, page 275).

இப்படிப்பட்ட வார்த்தைகளுக்கு கீழ்ப்படிவது கடினமான காரியம் என்ற போதிலும், நாம் தீமையான போதனை மற்றும் குழப்பத்தில் ஆழ்ந்துள்ள மக்களை விடுவித்து வெளிக்கொணரும்படி நாம் அழைக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம். நமது

கண்ணோட்டம் எப்பொழுதும் தவறான வழியில் சென்று கொண்டிருக்கும் ஒருவரை விடுவித்து நல்வழிப்படுத்தி இரட்சிப்பிற்குள் வழிநடத்துவதாய் இருத்தல் வேண்டும். "மிகவும் கசப்புநிறைந்த நபரிடம் பொறுமையுடன் நடந்து கொண்டு, சத்தியத்தை அறிவிக்கும்போது, அவரிடம் மாற்றத்தை கண்டுகொள்ளக்கூடும்." (E F Scott, IBID, page 116

தவறான போதனையாளர்களைக் குறித்து பகைமை உணர்வு நம்மில் துவங்குவது எளிதான காரியமாய் இருக்கிறது, மற்றும் விஷேசமாக அவர்களை சரிபடுத்தும் நேரத்திலும் அவர்களை பகைமை உணர்வுடன் ஒதுக்க எண்ணலாம். இவ்விடத்தில், இதில் உள்ள அபாயத்தை இதை நமக்கு கட்டளையிடுகிறவர் தெளிவு படுத்துகிறவராய் இருக்கிறார். ஒருவர் குறிப்பிடும் போது, "ஒரு கிறிஸ்தவ தலைவரது வாழ்வில் பகைமை உணர்வு என்பதற்கு இடமே இருத்தல் கூடாது. தவறிழைத்தவரைக் குறித்த சிந்தனையை அது உருவழித்துவிடுகிறதாய் இருக்கிறது, மற்றும் எல்லோரையும் பாதிக்கக்கூடிய அளவில், கொடூரமாக எதிலும் தீமையையே காணுபவராய் மாற்றிவிடுகிறது.

தேவனது பணியை, கோபதாபத்துடனும், பகைமை உணர்வுடனும் எடுத்துச் செல்லுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும். ஒரு கிறிஸ்தவர் சாந்த குணமுள்ளவராய் இருத்தல் மிகவும் அவசியமானதாய் இருக்கிறது. (R. Mounce, IBID, page 132 and page 131). நமது கண்கள் எப்பொழுதும் திறந்தவைகளாய், துர் உபதேசக்காரது வாழ்வில் தேவன் என்ன செய்யவிருக்கிறார் என்பதைக் குறித்து காண்பதாய் இருத்தல் வேண்டும். "சந்தேகம்" என்கிறவார்த்தையானது இதை நமக்குள் கொண்டுவருகிறதாய் இருக்கிறது. கள்ளப்போதனையாளர் குறித்து தேவனது திட்டம் என்ன என்பது குறித்து அறியாது இருக்கிறோம், அல்லது புத்தியீனமான விசுவாசி குறித்தும் அறியாது இருக்கிறோம். ஒருவேளை இவர்கள் பாவத்தில் விழுந்து சத்தியத்தைவிட்டு வழிவிலகிச் சென்றது, தேவனால் பயன்படுத்தப்பட்டு தேவனது வார்த்தைக்கும் மற்றும் கர்த்தருக்கும் பெரிதளவில் மகிமையைக் கொண்டுவருகிறதாய் இருக்கலாம். அநேக ஜனங்கள் ஒருகாலத்தில் துர் உபதேசக்காரராய் இருந்தவர்கள் தற்போது தீவிரமாய் சத்தியத்தைக் கைக்கொண்டு பணியாற்றுகிற சுவிஷேசகராக இருந்து வருகின்றனர்.

நாம் ஜனங்களைக் காணும் போது. "ஒருவேளை" என்கிற மனப்போங்குடன் காண்கிறவர்களாய் இருத்தல் வேண்டும், இதற்கு முன்னிராத வகையில் தேவன் இப்படிப்பட்டோரைப் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார். நமது வாஞ்சையெல்லாம் அவர்கள் இரட்சிப்படைய வேண்டுமென்பதாய் இருத்தல் வேண்டும், அல்லது

அவர்களது மனநிலையானது சத்தியத்திற்கு செவிசாய்த்து வாழ்வதற்கு அவர்கள் அற்பணிக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும் என்பதாய் இருக்க வேண்டும். இதினிமித்தல் அவர்கள் நியாயத்தீர்ப்பிலிருந்து விடுவிக்கப்பட்டு, பயனுள்ள சேவைக்கென திரும்ப பயிற்சிபெற்று பயன்படுகிறவர்களாக வேண்டும். வழிவிலகி சென்றோரை பயிற்றுவித்து, சரியான வழியில் கொண்டுவருவது ஏமாற்றதை அளிப்பதாய் இருக்கலாம், இருப்பினும் இதுவே போதக ஊழியமாய் இருக்கிறது. Kent அவர்கள் நமக்கு நினைப்பூட்ட விரும்புவது என்னவெனில், "முதிர்ச்சியடையாதோருக்கும் மற்றும் தவறான உபதேசத்தைப் பின்பற்றி வாழ்வோருக்கும் கற்பிப்பது தொடர்ச்சியாய் நடக்க வேண்டிய ஊழியமாய் இருத்தல் வேண்டும், இப்படிப்பட்ட கற்பிக்கும் ஊழியத்தை, சாந்தத்துடன் அறிவுரை புகட்டுவது மிகவும் அவசியமான ஒன்றாய் இருக்கிறது." (IBID, page 279).

வசனம் 26 ல் பவுல், இப்படிப்பட்ட ஜனங்கள் கள்ள போதனையாளர்கள் என்பதனைத் தெளிவுபடுத்துகிறார், மற்றும் இவர்கள் தங்களது புத்தியீனத்தால், [வார்த்தை] யுத்தம் செய்வதற்கு சிறையாக்கப்பட்டுள்ளனர் என்பதனைக் கூறுகிறார். பவுல் மயக்கந்தெளிதல் என்கிறவார்த்தையை பயன்படுத்துகிறார், இதன் பொருள் குடிபோதை தெளிந்து என்பதாகும், இவர்கள் தெளிவடைந்து சத்தியத்தை அறிந்து கொள்ளுதல் வேண்டும் என்பது இதன் பொருளாய் இருக்கிறது. கண்ணியில் அகப்படுதல் என இச்சொற்றொடரை அவர் பயன்படுத்துகிறார், அவர்கள் சரியான மன நிலைக்கு வரும் முன்னர் இதை அறியாதவர்களாய் இருந்தனர். சத்துருவால் சிறைப்படுத்தப்படுதல் குறித்து முக்கியமான சித்திரமாய் இது வருணிக்கப்படுகிறதாய் இருக்கிறது, இவர்கள் சாத்தானின் உபாயதந்திரங்களை அறியாதவர்களாய் இருந்தனர், பாவத்தைக் குறித்தும் இவர்கள் அஜாக்கிரதையுடன் காணப்பட்டனர். இக்கருத்துக்கள் அனைத்தையும் பேதுருவும் திரும்பக் கூறுகிறவராய் இருக்கிறார். 1 பேதுரு 5:8,9. இதற்கு முன்னதாக யாக்கோபும் இதைக் குறிப்பிட்டுள்ளார். யாக்கோபு 4:7,8.

சாத்தான் விசுவாசிகளை கொலை செய்ய விரும்புவதில்லை, மாறாக அவர்களை சிறைப்படுத்தி, அவர்களது சித்தத்தை தனது விருப்பத்திற்கு / இச்சைக்கு ஏற்ப வசப்படுத்தி, சுவிஷேசத்திற்கும், கர்த்தருக்கும் அவகீர்த்தையை கொண்டுவருவதாய் இருக்கிறது. விசுவாசிகள் பாவத்திற்கு அடிமைகளாகும் போது, மற்றும் பிசாசின் கள்ளப் போதனைக்கு அடிமைப் படும்போதும், (1 தீமோத்தேயு 4:1) சாத்தான் எளிதாக இவர்களை செயல்படவைத்து, கர்த்தருக்கும் மற்றும் சுவிஷேச செய்திக்கும், அவ கீர்த்தியை வருவிக்கிறவனாய் இருக்கிறான். அறிவில் குறைவுள்ளவர்களாய் இருப்பதும், தேவனது வார்த்தையின் சத்திய

உபதேசத்தைக் கைக்கொண்டு நடக்கத் தவறும்போது, எல்லாவித புத்தியீனத்திற்குள்ளும் நம்மை வழிநடத்துகிறதாய் இருக்கிறது.

தேவனது உபதேசத்தையும் அவரது கொள்கைகளையும் அறிவிக்கும் போதகர் ஒருபோதும் வழிவிலகிச் செல்கிறவராய் இருத்தல் கூடாது, தேவனது வார்த்தையின் உபதேசத்தை தெளிவுபட போதியாமல் இருப்பது, ஒருவிசுவாசிக்கு பாதுகாப்பை அளிக்காது மற்றும் புத்தியீனமான நிலையில் தீமையின் சிறையிருப்புக்குள்ளும் வழிநடத்துகிறதாய் இருக்கும். நாம் தேவனது வார்த்தைக்குக் கீழ்ப்படியும் போது, பாதுகாப்புடன் இருக்கிறோம், அதை விட்டு வழிவிலகும்போது அபாயத்திற்குள்ளாகிறோம். கிறிஸ்தவ தலைமைத்துவம், நிலைத்து இருப்பதற்கும், மதியீனமானவர்களை சரிப்படுத்தவும், பலவீனரை பெலப்படுத்தவும் ஒருபோதும் மறவாது செயல்படுகிறதாய் இருத்தல் வேண்டும்.

தலைமைத்துவ நடைமுறை:.

1. கனத்துக்குரிய பாத்திரங்கள்: விசுவாசிகளாய் இருக்கும் நாம் கனத்துக்குரிய பாத்திரங்களாய் இருக்கிறோமா அல்லது கனவீனத்திற்குரிய பாத்திரமாய் இருக்கிறோமா? பாவத்துக்கான பரிகாரத்தை தேடி கர்த்தரது பணியை நிறைவேற்றுகிறவர்களாய் இருக்கிறோமா அல்லது கீழ்ப்படியானது ஆசீர்வாதத்தையும் மற்றும் கனத்தையும் இழந்து போகிறவர்களாய் இருக்கிறோமா? தலைவரின் மனநிலையானது இங்கு கண்ணோக்கப்படுகிறது. உன்னதமான தேவனது ஆசாரியர்களாய் சிந்தித்து செயல்பட வேண்டியவர்களாய் சவால் விடப்படுகிறோம், நமது வாழ்வில் சுத்திகரித்து கொண்டு, எந்த ஒரு பாவம் பரிசுத்தத்தை பாதுகாக்க இயலாத நிலையில் நம்மை விழச்செய்கிறதாய் இருக்கிறது என்பதை அறிந்து கவனமாய் நடக்க சவால் விடப்படுகிறவர்களாய் இருக்கிறோம். "விலகியோடுங்கள்" என்கிற சவாலை எடுத்துக்கொண்டு, நமது ஆவிக்குரிய வாழ்வை சீர்தூக்கிப் பார்க்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

2. தலைவர்கள் அனுதினமும் பாவத்திற்கும் மற்றும் கவனச் சிதறல்கள் போன்றவற்றிற்கு எதிராய் யுத்தம் செய்தல் வேண்டும். போதகர்களாகிய நாம் அனுதினமும் பாவத்திற்கு எதிராக போராட வேண்டியவர்களாய் இருக்கிறோம். இதைப்போன்றே ஒவ்வொரு விசுவாசிகளும் போராட வேண்டியவர்களாய் இருக்கின்றனர், ஆபத்து காலங்களில் மிகவும் ஜாக்கிரதையாய் இருத்தல் வேண்டும். மேஜையின் மீது பயன்படும் பாத்திரங்களாய் பயன்பட்டதிலிருந்து,

கழிவறை பாத்திரங்களாய் பயன்படாதவாறு இருக்க ஜாக்கிரதையைக் கையாளுதல் வேண்டும்.

3. உண்மையான தலைவர்கள் தேவ வார்த்தையின் படி ஜீவிக்கிறவர்களாய் இருக்கிறார்கள்: இங்கு நாம் காணும் அபாயகரமான காரியங்களில் எந்த அளவுக்கு நீங்கள் பாதுகாப்பானவர்களாய் இருக்கிறீர்கள்? நமக்குண்டான பாதுகாப்பான இடம், கர்த்தருக்கும் அவரது வார்த்தைக்கும் அருகில் இருப்பதுதான். நாம் அறிந்த உபதேசத்தை அனுதினம் கைக்கொண்டு வாழ்வதுதான் நமக்கு பாதுகாப்பை அளிக்கிறதாய் இருக்கிறது.

4. உண்மையான தலைவர்கள் மதியீனமான மக்களை கைவிட்டுவிட மாட்டார்கள்: விசுவாசிகளாகிய நாமும் கூட, விழுந்துபோன நண்பர்களிடம் பொறுமை காட்ட ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். "ஒருவேளை" என்பதனை நமது மனநிலையாய் இவர்களது மீது வைத்தல் வேண்டும். கிறிஸ்தவமானது சில நாத்திகர்களால் விமர்சிக்கப்படுகிறதாய் இருக்கிறது, தவறாய் போதிக்கும் சகோதரர்களைக் குறித்து, நாம் விமர்சித்து எழுதுவது, "நமது புண்ணில், திரும்ப நாம் சுட்டுக்கொள்வதற்கு" சமமாய் இருக்கிறது.

இவ்வசனங்கள், ஒரு சகோதரர் இவ்வுலகில் இன்னும் ஜீவிப்பாரேயானால் அவர் மனந்திரும்ப இன்னும் வாய்ப்பு இருக்கிறது என்பதை உணர்த்துகிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட வாய்ப்புகளை நாம் நழுவவிட்டுவிடாது பயன்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். இதன் பொருள் பாவம், தீமை அல்லது கள்ள உபதேசம் இவற்றை நாம் ஏற்றுக்கொள்கிறோம் என்பது பொருளாகாது. இதன் பொருள் நமது சபையில் சிட்சை மற்றும் தவறான போதனை செய்பவர்கள் மற்றும் பாவம் செய்துவரும் சகோதரரை வெளியேற்றுவதிலிருந்து நாம் தவறுகிறோம் என்பதும் பொருளாகாது, அவர்கள் சீராய் மனந்திரும்புவார்களேயானால் அவர்களை நாம் மறுபடியும் சபையில் சேர்த்துக்கொள்கிறவர்களாய் இருத்தல் வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. விழுந்து போன சகோதரரின் மனதில், அவர்களை வெளியேற்றம் செய்யும்போது, அவர்கள் மனந்திருந்தி குணப்படுவார்களேயானால், சபையின் கதவு அப்படிப்பட்டவர்களுக்கு திறந்தே இருக்கும் என்பதனை அவர்கள் மனதில் பட தெரிவிக்கும் போது, மனந்திருந்தி சபையில் அவர்கள் மறுபடியும் வரும்போது அவர்களுக்கு அது மகிழ்ச்சியை அளிக்கிறதாய் இருக்கும்.

5. தலைமைத்துவத்திற்கு நீடிய பொறுமை என்கிற மனநிலையானது

அவசியப்படுகிறதாய் இருக்கிறது: போதகர்களாகிய நமக்கு, கிறிஸ்துவைப் போன்ற பொறுமையானது, நமது ஈடுபாடுகளில், ஏமாற்றம் தோல்விகளை சந்திப்பவர் மீது இருத்தல் அவசியமாய் இருக்கிறது. கர்த்தரது வார்த்தையானது மீறப்பட்டதை நாம் உணரக்கூடும், மற்றும் கர்த்தர் ஒரு நபரின் செய்கைகளாலோ அல்லது வார்த்தையாலோ அவமதிக்கப்பட்டிருக்கலாம், இருப்பினும் நாம் அப்படிப்பட்ட பிரச்சனைகளை யதார்த்தமானதாயும் தெளிவுள்ளதாயும் நமது மனதில் இருத்தல் வேண்டும்.

6. எதுவும் தனிப்பட்டதல்ல: நமது தனிப்பட்ட உணர்வுகள், நாம் ஒரு தலைவராய் இருப்போமானால் பொருத்தமற்றதாய் இருக்கின்றன. நமது நோக்கம் ஒரு நபர் மீண்டும் சபைக்குள் கொண்டுவரப்படுவதாய் இருத்தல் வேண்டும். நாம் அவர்களுடன் சண்டையிடுதலோ, அல்லது வாக்குவாதம் செய்தலோ இராது, அவர்களை சாத்தானின் பிடியிலிருந்து விடுவித்து திரும்பக் கொண்டுவருவதே நமது அணுகுமுறையும், கண்ணோக்கமுமாய் இருத்தல் வேண்டும். இப்பட்ட மக்களுடன் தேவன் இன்னும் என்ன செய்ய இருக்கிறாரோ நாமறியோம்.

தேவனது கண்ணோட்டத்தின் மீது, நமது கண்கள் எப்பொழுதும் பதித்து இருத்தல் வேண்டும், நமது ஆர்வம், நமது எண்ணம் மற்றும் கண்ணோட்டங்களை தவிர்த்தல் வேண்டும் என்பதே இவ்வேதபகுதியின் மையக்கருத்தாய் இருக்கிறது. மதியீனமான மக்கள் மீது நாம் கோபதாபப்படுவதை தேவன் விரும்புவதில்லை, மாறாக அவர் சாத்தானின் பிடியிலிருந்து இப்படிப்பட்டவர்கள் எப்படியாவது மீட்கப்படுவதையே அதிகம் விரும்புகிறவராய் இருக்கிறார். அவர்கள் இவ்வாறு பிடிபட்டதற்கு அவர்களே பொறுப்பாளிகளாய் இருக்கின்றனர், இருப்பினும் நாம் அவர்களை இது குறித்து குத்திக்காட்டுதல், நான் அப்பொழுதே உனக்கு சொன்னேன், நீ சொன்ன பேச்சை என்னக்கிதான் கேட்டே, இது போன்ற சொற்களை அவர்களிடம் கூறுவதைத் தவிர்த்தல் வேண்டும்.

[ஈ] தீத்து 1:1.

"தேவனுடைய ஊழியக்காரனும், இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனுமாகிய பவுல், பொதுவான விசுவாசத்தின்படி உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு எழுதுகிறதாவது."

பிரதிபலிப்பு:

நமது இரட்சகர் வல்லமையுள்ள தேவனாய் இருக்கிறார்! இயேசுக்கிறிஸ்துவில் நமக்குண்டான ஸ்தானத்தின் மூலம், அவரது திட்டத்தின் படியே நித்திய ஜீவனை நமக்கு அளிக்கிறவராய் இருக்கிறார் என்கிற முழு நிச்சயத்தை நாம் பெற்றவர்களாய் இருக்கிறோம். இப்படிப்பட்ட செய்தியே இவ்வறிமுக வசனத்தில் பவுல் கூற தலைப்படுவதாய் இருக்கிறது. இது சுவிஷேச செய்தியின் சுருக்கமாய் இருக்கிறது மற்றும் சுவிஷேசத்தின் வல்லமையாய் இருக்கிறது.

தேவனது தெரிந்து கொள்ளுதல், செய்தியை ஏற்றுக்கொள்ளுதல், வாழ்வின் தெய்வீகத்தன்மை, நித்திய ஜீவனைக் குறித்த நம்பிக்கை அல்லது நிச்சயம், தேவனது திட்டம் மற்றும் அவரது வாக்குத்தத்தம், சுவிஷேச போதனை, கர்த்தரின் கட்டளைகள், தேவனது சேவகப்பணி, ஒரு போதகரின் சேவகப்பணி, சுவிஷேச குடும்பத்திற்குள் விசுவாசிகளின் ஐக்கியம் போன்றவற்றை இப்பகுதியில் அவர் பேசுகிறவராய் இருக்கிறார்.

பவுல் இந்நிருபத்தை தனது "குமாரன்" தீத்துவுடன் தொடர்பு கொள்கிறவராய் துவங்குகிறார். வழக்கமான வாழ்த்துக்களுடன் இந்நிருபம் துவங்குகிறது, இந்நிருபம் தனிப்பட்ட ஒரு நபருக்காக இல்லாது, தீத்து இந்நிருபத்தை அதிகாரப்பூர்வமாய் பயன்படுத்துப்படும்படியாய் எழுதப்பட்டது. தீத்து முதல் நான்கு வசனங்களில் கூறப்பட்டுள்ளவற்றை யாவையும் நன்கு அறிவார், இருப்பினும் பவுல் மிகவும் கடுமையான முறையில் இப்படிப்பட்ட அடிப்படை உபதேசங்களை மிகவும் சாதாரணமாகவும், அதே சமயம் வலிமை மிக்கதாகவும் கூறுகிறவராய் இருக்கிறார். இதை தனது பழைய சிநேகிதர் தீத்துவுக்கு ஏன் இப்படி எழுதுகிறார்?

இராணுவ சூழல்களில் என்ன நிகழும் என்றால், ஒரு இராணுவ தலைவர் [Colonel] யுத்தத்தின் நெருக்கத்தில் இருக்கும் போது, அவருக்குக் கீழாக இருக்கும் ஒரு பழைய நண்பர், ஒரு ஜெனரல் அங்கு வருவார் என்றால் அல்லது அவருக்கு ஒரு செய்தி அனுப்பும் பொழுது, இத்தகைய பதட்ட நிலை அவருக்கு தெரிவிக்கப்படும், காரணம் அவர் ஒரு சிநேகிதராய் அங்கு வரவில்லை, அவர் ஒரு கட்டளை கொடுக்கும் அதிகாரியாக அங்கு வந்திருக்கிறார். அவர் ஏதோ உபசரிப்பை பெறும்படி வரவில்லை, பதட்ட சூழ்நிலையில் சில முடிவுகளை எடுக்கவும், கட்டளை பெற்று கடந்து செல்லவும் அங்கு வந்திருக்கிறார். [Colonel] இந்த இராணுவத் தலைவரும் கூட ஒரு இராணுவ வீரராய் இருக்கிறார், இவர் தனது திறமைகளை சரிவர பயன்படுத்த வேண்டிய இக்கட்டில் இருக்கிறார், எதிராளி விரோதமாய் தனது நிலையை மிகவும் கடினமாக்கிக் கொள்ள வேண்டிய சூழலில் இருக்கிறார்.

இப்படிப்பட்ட காரியத்தையே இந்நிருபமானது எதிரொளிக்கிறதாய் இருக்கிறது. இது ஒரு நண்பருக்கு எழுதப்பட்டபோதிலும், இரு ஒரு கலோனல் தனது ஜெனரலை அழைத்து, யுத்தத்தின் மும்முர சமயத்தில் கொடுக்கும் அறிவுரை மற்றும் கட்டளை போன்று கலோனலாகிய பவுல், தனது ஜெனரலாகிய தீத்துவுக்கு இந்நிருபத்தை எழுதுகிறவராய் இருக்கிறார். 1 தீமோத்தியுவில் எழுதிய பிரகாரம், இந்நிருபத்தையும் பவுல் எழுதுகிறவராய் இருக்கிறார். இது போன்ற கட்டளைகள் தீத்துவுக்கும், தீமோத்தேயுவுக்கும் அளிக்கப்பட்டு, ஒரு கமாண்டர் தனது இராணுவ வீரர்களை அழைத்து, அவர்களது சக்திக்கு ஊக்கமளித்து அவர்களை யுத்தத்தில் வல்லவர்களாய் செயல்பட வைப்பது போன்று இந்நிருபமானது எழுதப்பட்டுள்ளது, அவர்கள் மனுஷீக நிலையிலும், தேவதூதர்களின் முறண்பாடுகளுக்கு எதிராகவும் போராட வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

இக்கடிதமானது சாதாரணமான நிலையில் பவுல் தீத்துவுக்கு எழுதியிருந்த போதும், இக்கடிதமானது சத்தமாக சபையில் வாசிக்கப்பட்டு, சபையில் உள்ள அனைவரையும் மிக கவனமாய் எச்சரித்து, அவர்கள் சத்துருவை எதிர்கொள்ள எச்சரிப்புச் செய்கிறதாய் இருக்கிறது.

பவுல் தனது சொந்த வாழ்வில் அநேக மாற்றங்கள் நிகழ்ந்துள்ளதை கண்டவராய் இருக்கிறார். இவர் தனது வியாக்கியானப்படி வேதாகமத்தை கற்றறிந்த நிலையில் இவர் கிறிஸ்தவர்களை எதிர்க்கிறவராயும் அவர்களை வெறுக்கிறவராயுமாக திகழ்ந்தார். அவர் வேதாகமத்தை புரிந்து கொண்டதன் அடிப்படையில், கிறிஸ்தவர்களை உபத்திரவப்படுத்தவும், கொலை செய்யவும், குடும்பங்களை சிதறடிக்கவும், அவர்களுக்கு நெருக்கங்களையும் இடுக்கண்களை அளிக்கவும் தலைப்பட்டவராய் இருந்தார். அப்போஸ்தலர் 7:58 - 8:1, 9:1-2. பவுல் தனது கடந்த கால சம்பவங்கள் ஒன்றையும் மறைக்காமல் விவரிக்கிறவராய் இருக்கிறார், தன்னால் கர்த்தருக்குள் வழிநடத்தப்பட்ட லூக்கா அப்போஸ்தல நடபடிகளை எழுதும் போது, பவுல் நடப்பித்த அனைத்து எதிர்மறையான காரியங்கள் அனைத்தும் இடம் பெறுகிறவைகளாய் இருக்கின்றன. தன் வாழ்க்கையில் நிகழ்ந்த எந்த ஒரு காரியத்தையும் மறைக்காமல் லூக்காவிற்கு எடுத்துரைத்தார், மற்றும் இவைகள் அனைத்திலிருந்தும் அவரை விடுவித்தது தேவனது சுத்த கிருபையாய் இருக்கிறது.

பூமியில் இருந்த தேவனது சபைக்கு வெகு தீமைகளைச் செய்ய தன்னை அற்பணித்து கொண்டவராய் இருந்தார், இதினிமித்தமே அவர் தனது வாழ்வில்

கிறிஸ்துவுக்காகவும், தேவனது சபைக்காகவும் அதிகம் பாடுகளையும், உபத்திரவங்களையும் அனுபவிக்க, தன்னை அற்பணித்துக் கொண்டவராய் விளங்கினார். அப்போஸ்தலர் 9:15-16. இவைகளை நாம் யூகித்தபோதிலும், 2 கொரிந்தியர் 11:23-31, ல் ஒரு பட்டியல் கொடுக்கப்பட்டுள்ளது. பவுல் தான் அவைகளை அனைத்தையும், தன் வாழ்வில் அனுபவித்தவராய் இருந்தார். தேவன் இவைகளை பவுலின் வாழ்வில் அனுமதித்து, எதிராளியானவன் இவைகளை அவரது வாழ்வில் நடப்பித்து, எல்லா மகிமையையும் தேவனுக்குண்டாகும்படி செய்தான், மற்றும் அவரது வாழ்வில் கிருபையானது அதிகமாய் வளர்ந்து அவர் முதியவராகும் வரை அவரை தாங்கி நடத்துகிறதாய் இருந்தது. பவுல் தன்னை "ஊழியக்காரன்" அல்லது "கொத்தடிமை" "servant", or “bond slave”, போன்ற தலைப்பினால் அழைத்துகொண்டு தேவனை மகிமைப் படுத்துகிறவராய் திகழ்ந்தார். எப்பொழுதும் தனது பெயருக்கு முன்பாக அப்போஸ்தர் என்கிற தலைப்பையும் அவர் எப்பொழுதும் அமைத்துக்கொண்டார்.

"doulos" என்கிற பதத்தின் உண்மையான பொருள், "கொத்தடிமை" அவர் தனது வாழ்நாள் முழுவதும் ஊழியக்காரனாய் இருந்தார். இதன் உண்மையான பொருள், யுத்த காலங்களில் எதிராளிகள் பிணைக் கைதிகளை உயிருடன் கொண்டு செல்வர், இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு, பின்னர் ஆயுள்கால அடிமைகளாய் பயன்படுத்துவர், இவர்களை அவர்கள் ஒருபோதும் விடுவிக்காதபடி, தங்களது ஆதிக்கத்தின் கீழ் வைத்துக்கொள்வர், இதுவே பவுல் தனக்கு பயன்படுத்திக்கொண்ட தலைப்பாய் இருக்கிறது, பண்டைய உலகில் இதுவே கனத்தையும் மற்றும் அவர்களது ஸ்தானத்தையும் தெரிவிக்க பயன்படுத்தப்பட்ட பதமாய் விளங்கியது. இதன் பொருள் நம்பிக்கையற்ற, முடிவில்லாத அடிமைத்தனம், ஒருவரது பிள்ளையானது ஒரு எஜமானனிடத்தில் விற்கப்பட்டுப்போனால், அவன் அப்பிள்ளையை, வேறொருவருக்கு விற்றுப்போடுவான்.

கொத்தடிமை என்ற சொல்லை பவுல் உயர்வாகவும், கனத்துக்குரிய சொல்லாகவும் எண்ணினார், காரணம் தனது எஜமான் யார் என்பதை அவர் நன்கு அறிந்தவராய் இருந்தார். அவர் தனது இரட்சகரும் மீட்பருமானவராய் இருந்தார். மகிமையின் கர்த்தருக்குப் பணிசெய்வது சிறப்பானது, அவரிடமிருந்து விடுதலை பெற்று அவரை விட்டு வெளியேறுவது என்பது பயனற்றதாயும் அர்த்தமற்றதாயும் இருக்கிறது, அடிமைத்தனம் என்பது பணிசெய்வதையும் அதன்பலனாக நித்தியமான பிரதிபலன்களைப் பெற்று யுகா யுகமாய் அவருடன் நிரந்தராமாய் நிலைத்திருப்பதையும் காட்டுகிறது.

பவுல் ஊழியக்காரனும், தேவனுக்கு கொத்தடிமையுமாய் இருக்கிறார். மற்ற இடங்களில் அவர் குறிப்பிடும்போது, தன்னை கிறிஸ்துவின் ஊழியக்காரன் எனக்குறிப்பிடுகிறார். ரோமர் 1:1, கலாத்தியர் 1:10, கொலோசெயர் 4:12. இப்படிப்பட்ட வேறுபாடுகள் காணப்பட்ட போதும் இதற்கு ஒரு காரணம் பிண்ணனியில் இருக்கிறது. P Fairburn அவர்கள் குறிப்பிடும் போது, (The Pastoral Epistles page 256), இது குறிப்பிடத்தக்க வேறுபாடாய் இருக்கிறது, "பிதாவானவர் எனக்குறிப்பிடும்போது, திரித்துவத்தில் உள்ள ஒரு நபர் என நமது கவனத்தைத் திருப்புகிறதாய் இருக்கிறது, கடந்த கால நித்தியத்தில் தேவன் திட்டமிடுகிறவராய் இருந்தார், அத்திட்டமானது பவுல் இரட்சிப்படைந்து கிறிஸ்துவின் அப்போஸ்தலராய் நியமிக்கப்பட்டார். பவுல் கிறிஸ்துவை சேவிப்பது, பிதாவாகிய தேவனையும் சேவிப்பதாய் இருக்கிறது, பிதாவாகிய தேவனை சேவிப்பது கிறிஸ்துவை சேவிப்பதாய் இருக்கிறது.

அடிமைத்தனம் சில வேளைகளில் வெட்கத்தை உண்டுபண்ணுகிறதாய் இருக்கிறது, ஆனால், Gene Getz இது குறித்து குறிப்பிடும் போது, ஏதோ ஒன்றிற்கு நாம் அனைவரும் அடிமைகளாய் இருக்கிறோம். "ஒருவரும் உண்மையிலே விடுதலைபெற்றவர்களாய் இல்லை" இயற்கையிலே மனிதன் தனது சுயசித்தத்திற்கு அடிமையாய் இருக்கிறான், மற்றும் தன் சகமனிதன் முன்பாகவும் சுயத்துடன் காணப்படுகிறான். அவன் பாவப்பிரமாணத்திற்கும், மரணத்திற்கும் அடிமையாய் இருக்கிறான். ஆனால் கிறிஸ்து அவனது பழைய சுபாவத்திலிருந்து அவனை விடுவிக்கிறவராய் இருக்கிறார். இவனுடன் அவனது சக கிறிஸ்தவர்களும் இப்பொழுது தேவனை சேவிக்கிறவர்களாய் இருக்கின்றனர், இது அன்பின் பிரமாணத்தினால் சாத்தியமாயிற்று. கலாத்தியர் 5:13, 14." ("The Measure of a Christian, page 17).

இதற்கு முன் கண்ட பிரகாரம், ஒரு அப்போஸ்தலரின் அலுவலானது வல்லமை மிக்க ஒன்றாய் இருக்கிறது. இது போன்ற அலுவல்களுக்கு, ஒரு சிலர் மட்டுமே தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டு ஆதி சபையில் ஸ்தாபிக்கும் ஊழியத்தினை செய்து வந்தனர். பவுல் தன்னை கொத்தடிமையாக அறிமுகம் செய்த பின்னர், தன்னை அப்போஸ்தலராய் குறிப்பிடுகிறதைப் பார்க்கிறோம். இது முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது, மற்றும் இப்பணியானது தனித்தன்மை வாய்ந்ததாயும், கர்த்தருக்கென எல்லாவற்றையும் அற்பணித்து, அவரது ஊழியத்திற்காக அனைத்தையும் கொடுப்பதை காட்டுகிறதாய் இருக்கிறது.

பவுல் இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தலராய் விளங்கினார், இவர் தனது செய்தியில் இரட்சிப்பைக் குறித்து அடுத்த பாடமாய் கூறுகிறவராய் இருக்கிறார். இயேசுக்கிறிஸ்துவின் இருதன்மைகள் அடங்கிய இணைப்பானது இங்கு காணப்படுகிறது மற்றும் கர்த்தரது தெய்வீகத் தன்மைகள் இரு தலைப்பில் இங்கு இணைக்கப்படுகிறதாய் இருக்கிறது.

கர்த்தருக்கான இருதலைப்புகள் யூத காரணாகாரியங்களை ருசுப்படுத்தும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளது, Yeshua Ha Meshiach, இயேசு அல்லது யோசுவா, மேசியா, இத்தலைப்பை இன்றும் Messianic Jews பயன்படுத்தி வருகின்றனர், இது கர்த்தர் இஸ்ரவேலரின் நம்பிக்கையாய் இருக்கிறார் என்பதை காட்ட பயன்படுத்துகின்றனர். கர்த்தருக்கான இரு தலைப்புகள் பவுல் இங்கு பயன்படுத்துவதன் நோக்கம், இன்றைய அளவில் நாம் அவரை இயேசு என்கிற மனுஷீகப் பெயரை மட்டும் பயன்படுத்திவருகிறோம் என்பதை குறித்த எச்சரிப்பை அளிப்பதாய் இருக்கிறது. கர்த்தரின் வாழ்ந்த நாட்களில் அநேக இயேசு என்னும் பெயர்கொண்டவர்கள் வாழ்ந்து வந்தனர், இது போன்று இன்றைய அளவில் வாழ்ந்து வருகின்றனர், அவரது பெயருடன் இணைக்கப்பட்ட பெயர்களான "கர்த்தர்" "கிறிஸ்து" அல்லது மேசியா அபிஷேகிக்கப்பட்டவர் போன்ற பெயர்களை பயன்படுத்துதல் வேண்டும்.

கர்த்தர் நமது விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிக்கிறவருமாய் இருக்கிறார். எபிரெயர் 12:2, நாம் விசுவாசத்தின் தராதரத்தின்படி இரட்சிக்கப்பட்டுள்ளோம், அல்லது நாம் அவரில் கொண்டுள்ள விசுவாசத்தின்படி இரட்சிக்கப்பட்டோம். நமது விசுவாசம் அல்ல நம்மை இரட்சித்தது, நமது இரட்சிப்பின் ஆதாரமாய் இருப்பதில் வைத்த விசுவாசமே, நமக்கு இரட்சிப்பையும் வல்லமையையும் அளித்தது. அப்போஸ்தலர் 4:12. தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் ஏற்ற காலத்தில் கண்டுகொள்ளப்படுவர், அவர்கள் தாங்கள் கர்த்தர் மீதுள்ள விசுவாசத்தை ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் தெரியப்படுத்தும் போது அவர்கள் இனங்காணப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். தேவனது பார்வையில் "தெரிந்து கொள்ளப்படுதல்" என்பது முன்னதாகவே தெரிந்து கொள்ளப்பட்டதை காட்டுகிறது. இது கிறிஸ்து இயேசுவில் இரட்சிப்படையும் போதே அவர் தெரிந்து கொள்ளுகிறவராய் இருக்கிறார். இப்படிப்பட்ட உபதேசத்தில் உள்ள பிரச்சனைகள் நேரத்திற்கும் மற்றும் நித்தியத்திற்கும் இடைப்பட்டதாய் இருக்கிறது, நாம் இடவெளி மற்றும் காலம் [space and time] இவற்றிற்குட்பட்ட ஜீவிகளாய் இருக்கிறோம்.

நாம் ஜனங்கள் இரட்சிக்கப்படுவதையும், பின்னர் தெரிந்து கொள்ளப்பட்டவர்களாய் சரீரமாகிய சபையின் அங்கமாய் இனங்காணப்படுவதைக் காண்கிறோம், தேவன் இவர்களை அவர்களது சரியான இடத்திலிருந்து அவர்களை காண்கிறவராய் இருக்கிறார், ஆரம்பகாலந்தொட்டு அவர்களுக்காக அவர்கள் மூலம் உருவாக்கப்பட்ட இடத்தை அவர் காண்கிறவராய் இருக்கிறார். நாம் நினைவில் கொள்ள வேண்டியது என்னவெனில், முன்கூட்டியே யார் இரட்சிப்படைவார்கள் யார் இரட்சிப்படைய மாட்டார்கள் என்பது குறித்து அறியாதவர்களாய் இருக்கிறோம், ஆனால் இவற்றை தேவன் முன்கூட்டியே அறிகிறவராய் இருக்கிறார், இவ்வுலக ஆரம்பத்திற்கு முன்னதாகவே அவற்றை அறிந்தவராய் இருக்கிறார். காரணம் அவர் தேவனாய் இருக்கிறார் மற்றும் எல்லாவற்றையும் தோன்றப்பண்ணினவராய் இருக்கிறார். இப்படிப்பட்ட உபதேசத்தை முறையாக படிப்பது பரிந்துரை செய்யப்படுகிறது மற்றும் இவைகள் கீழ்க்காணும் Bible Topic Books தலைப்புகளில் கொடுக்கப்பட்டுள்ளது. GOD – ELECTION AND PREDESTINATION, and also GOD – PLAN OF GOD. தேவன்: தெரிந்துகொள்ளுதல் மற்றும் முன்குறித்தல், மற்றும் -- தேவன்: தேவனது திட்டம்.

தெரிந்து கொள்ளுதல் என்பதன் கருத்து, நீங்கள் தேவனது இரட்சிப்பின் பக்கமாய் சார்ந்துகொள்வீர்களானால், கிறிஸ்துவில் நாம் வைக்கும் விசுவாசம் குறித்து தேவன் காண்கிற வண்ணம் பேசுகிறதாய் இருக்கிறது, ஆனால் அடுத்த சொற்றொடரானது நமது பக்கம் குறித்து பேசுகிறதாய் இருக்கிறது, அது நமது விசுவாசத்தின் திருப்திகரமானதாய் இருக்கிறது. நாம் சுவிஷேசத்தைக் கேட்கும்போது இயேசுக்கிறிஸ்துவைப் பற்றிய சத்தியத்தை முழுமையாயும் மற்றும் பூர்த்தியாயும் அறிய வேண்டியவர்களாய் இருக்கிறோம். epignosis என்கிற கிரேக்கச் சொல் நமக்கு நினைப்பூட்டுவது என்னவென்றால், ஏனோதானோவென்று கர்த்தரை அறிகிற அறிவல்ல, இந்த அறிவானது வாழ்க்கையில் கிரியை நடப்பிக்கிறதாய் இருக்கிறது. Epignosis அறிவானது ஒரு நபரை "அறிவடையச்" செய்து மாற்றம் ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது. தமஸ்கு சாலையில் பவுல், தேவனைக் குறித்த தனது அறிவு மிகவும் குறுகியது என்பதை உணர்ந்து கொண்டார். அப்பொழுது அவர் அறிந்து கொண்ட அறிவினால் எப்பொழுதும் மாற்றப்பட்டவராய் திகழ்ந்தார். இதுவே உயிர்த்தெழுந்த கர்த்தரை சந்திக்கும் ஒவ்வொருவரின் வாழ்வில் நிகழ்பனவாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட எதிர்கொள்ளுதல் எப்பொழுதும், "தெய்வீகத்தைச் சார்ந்ததாய் இருக்கிறது." இதையே பவுல் மனமாற்றத்தின் போது காட்டப்படுகிற சத்தியமாய் இருக்கிறதை வலியுறுத்துகிறார், ஒரு நபரின் தெய்வீக வாழ்வில், அவர்களது

விசுவாசத்தின் உண்மை நிலையைக் கண்டு திருப்தி கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். தெய்வீக வாழ்க்கை முறையில் விசுவாசமானது "செயலற்றதாய்" இருக்கிறதை யாக்கோபு சுட்டிக்காட்டி, அது செத்ததாய் இருக்கிறது என உணர்த்துகிறவராய் இருக்கிறார்.

Gene Getz என்பவர் தெரிந்துகொள்ளுதல் என்பதைக் குறித்துள்ள உபதேசத்தைக் குறித்து விசுவாசிகள் கொண்டுள்ள குழப்பத்தைத் தீர்க்கும் வண்ணம் மிகச் சிறப்பான கருத்தைக் கூறுகிறவராய் இருக்கிறார். "தேவன் எவ்வாறு இரட்சிப்பிற்காக ஜனங்களை, உலகத்தோற்றத்திற்கு முன்னதாகவே தெரிந்து கொண்டுள்ளார் மற்றும் அதே சமயம் தனது குமாரனை ஏற்றுக்கொள்ளவும், நிராகரிக்கவும் தெரிவு செய்தலை மனிதருக்கு அளித்து இருக்கிறார்? .["How could God choose people for salvation from before the foundation of the world and still give men the choice to accept or reject His Son?] இவ்விரு உண்மைகளும் வேதாகமத்தில் போதிக்கப்பட்டுள்ளன. மனுஷீக ரீதியில் இக்கருத்து வேற்றுமையைப் பேசி பரிகாரம் காணுதல் இயலாத காரியமாய் இருக்கிறது. இதைக்குறித்துள்ள கருத்து வேற்றுமை நிலவுவதற்கான காரணம் நாம் மனுஷீக ரீதியில் சிந்திக்கிறவர்களாய் இருக்கிறோம், தேவனோ வரையறையற்றவராய் / வரையறைக்கு அப்பாற்பட்டவராய் இருக்கிறார்.

இப்படிப்பட்ட உபதேசமானது விசுவாசிகளுக்கு அளிக்கப்படும்போது, பாதுகாப்பு மற்றும் நம்பிக்கையை அவர்களுக்கு அளிக்கிறதாய் இருக்கிறது. (see ரோமர் 8, எபேசியர் 1 and 1 பேதுரு 1), வேதாகமத்தைப் போதிப்பவர்களுக்கு, இந்த சத்தியத்தை சரியாக மற்றும் கருத்தாக விசுவாசிகளுக்கு போதித்து உணர்த்துவது என்பது உண்மையான பரீட்சையாய் இருக்கிறது, மற்றும் புதிய ஏற்பாட்டு எழுத்தாளர்கள் இது குறித்து என்ன சொல்லுகிறார்கள் என்பதை விசுவாசிகளுக்கு கூறி உணர்த்த வேண்டியவர்களாய் இருக்கிறார்கள், அவர்களது பாதுகாப்பைக் குறித்த கருத்து, விசுவாசிகளின் நலனில் உள்ள அக்கரை, தாழ்மை, மனிதன் ஆற்ற வேண்டிய கடமைகள் போன்றவற்றை போதித்து உணர்த்துவது அவசியமாய் இருக்கிறது." (Gene Getz, "The Measure of a Christian", page19).

கால்வினிஸக் காரர்களும் மற்றும் அர்மீனியஸக்காரர்களும் வருத்தப்படக்கூடிய நிலையில் அவர்களது போதனையான பாதுகாப்பற்ற காரியத்தைக் குறித்து [teaching insecurity] போதிக்கிறவர்களாய் இருக்கின்றனர், இதை அவர்கள் உணர்ச்சி வசப்படுகிறவர்களாயும், அவர்களது அறிவுத்திறமையின் குழப்பங்களுடனும், பெருமை ஆட்கொள்ள விவாத ஆவியுடனும், மனித கடமைநெறிகளை

தவறவிட்டு, சுவிஷேசம் அறிவிப்பது பயனற்றது என உதறி தள்ளிவிட்டு இவ்வுபதேசத்தை விவாதிக்கிறவர்களாய் இருக்கின்றனர்.

விசுவாசிகளாகிய நாம் நமது இறுதி நித்தியம் குறித்த தன்னம்பிக்கையைப் (elpis) பெற்றிருத்தல் வேண்டும் என்பது, பவுலின் அடுத்தப்பாடமாய் இருக்கிறது. தெரிந்து கொள்ளப்படுதல் என்பதன் உபதேசத்திலிருந்து நாம் பெரிதான ஆறுதலையும் மற்றும் உற்சாகத்தையும் பெறுகிறவர்களாய் இருக்கிறோம் மட்டு,மல்லாது சுவிஷேசம் அறிவித்தலை இது வலுப்படுத்தி நாம் பரிசுத்தமாய் வாழும்படியான அற்பணிப்பை பெலப்படுத்துகிறதாய் இருக்கிறது.

தலைமைத்துவ நடைமுறை:

1. பவுலின் வார்த்தைக்கு பின்னணியில் சேவகம் செய்யும் தலைமைத்துவக் கருத்தானது அடங்கியுள்ளது: ஒரு தலைவர் கர்த்தரும் இரட்சகருமானவரை சேவிக்க வாழ்கிறவராய் இருக்கிறார், கர்த்தரது ஜனங்களை குறித்து கரிசனையும் அக்கரையும் உள்ளவராக இருப்பதன் மூலம் அவரை சேவிக்கிறவராய் இருக்கிறார். கர்த்தரின் மிஷன் குறித்த நமது அடிமைத்தன மனநிலையானது, எந்த ஒரு அதிகார தலைப்பை நாம் பெற்றிருந்தாலும் மிக முக்கியமானதாய் இருக்கிறது.

2. நிலையான விசுவாசமானது தலைவரின் குணாதிசயமாய் விளங்குகிறது: வேதாகம உபதேசமான "தேவனது திட்டம்" மற்றும் "தெரிந்து கொள்ளுதல் மற்றும் முன்குறித்தல்" போன்ற இவ்விரு உபதேசங்களும் தலைவரின் மனதிலும் இருதயத்திலும், பாதுகாப்பை அளிக்கிறதாய் இருக்கிறது மற்றும் நெருக்கங்களின் கீழ் இவர்களது மனநிலையின் ஸ்தரத்தன்மையை வலுப்படுத்துகிறதாய் இருக்கிறது. முதிர்ச்சியடைந்த் ஒரு தலைவரின் வாழ்வில் இது நித்திய பாதுகாப்பில் மீதுள்ள விசுவாசத்தை உறுதிபடுத்துகிறதாய் இருக்கிறது.

3. அறிவானது தெய்வீகத்தை உருவாக்குகிறதாய் இருக்கிறது: வேதாகம தலைவரது உதடுகளும், வாழ்க்கையும் ஒத்துப்போகிறதாய் இருத்தல் வேண்டும். அவர்களது வாழ்வானது தேவனை அவமரியாதைக்குள்ளாக்குதல் கூடாது. நீதியின் கனியானது அனுதின வாழ்வில் இல்லையெனில், அந்நபர் தேவனது தலைவர்களில் ஒருவராக கருதப்படார்.

[உ] யாக்கோபு 1:1.

"1. **தேவனுக்கும் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கும் ஊழியக்காரனாகிய**

யாக்கோபு, சிதறியிருக்கிற பன்னிரெண்டு கோத்திரத்தாருக்கும் வாழ்த்துதல் சொல்லி எழுதுகிறதாவது."

இவ்வேதபகுதி கூறுவது என்ன? இது இப்புத்தகத்தின் முக்கிய கேள்வியாய் இருக்கிறது! Hooker's Law of interpretation; ஐ இங்கு நடைமுறைபடுத்துவது மிகவும் அவசியமானதாய் இருக்கிறது. "எழுத்தின் பிரகாரமாக அமைக்கப்பட்டது நிற்பது எங்கே, பொதுவாக இந்நிருபமானது மோசமான நிலையில் அமையப் பெற்றுள்ளது." (Quoted by Plummer, 1896, page 43). இந்த வேத வசனத்தில் இரு கருத்துக்கள் நமது கவனத்தை ஈக்கிறதாய் இருக்கிறது. முதலாவது யாக்கோபு தன்னைக் குறித்து அளிக்கும் விவரணை, இரண்டாவதாக, இந்நிருபத்தினை எழுதி அளிக்கும் சபை. யாக்கோபு இயேசுவின் ஊழியன் என வகைப்படுத்திக்காட்டுகிறார், இது பவுல் தன்னை அறிமுகப்படுத்துவது போன்று இருக்கிறது. "doulos" - என்ற கிரேக்க வார்த்தை கொத்தடிமை [யுத்தத்தில் பிடிபட்ட கைதி] என்கிற அர்த்தத்தினை உடையதாய் இருக்கிறது, இது எவ்விதத்திலும் விடுதலையே பெறமுடியாத நிலையைக் காட்டுகிறது, வெள்ளியினால் இக்கைதியை விடுவிக்க இயலாது. மத்தேயு 13:25 ல் யாக்கோபு இயேசுக்கிறிஸ்துவின் ஒன்றுவிட்ட சகோதரர் [half brothers] என நாம் அறிகிறோம். யாக்கோபு இவ்வுறவை இங்கு பயன்படுத்தவில்லை. அவிசுவாசிகள் இவரை நீதிமானாகிய யாக்கோபு என அறிந்திருந்தனர், இருப்பினும் இவ்வித கனத்துக்குரிய தலைப்பால் கூட தான் அறியப்பட விரும்பவில்லை. இவருக்கு "ஒட்டக முழங்கால்" என்கிற பட்டப்பெயரும் உண்டு, காரணம், முழங்காலில் நின்று, ஜெபித்து, ஜெபித்து ஒட்டக முழங்கால் போன்று காய்த்து, தேய்ந்து போன நிலையில் காணப்பட்டது. அவர் ஜெபிக்கிறவராயும், கீழ்ப்படிகிறவராயும் இருந்தார். ஜெபமில்லாது கீழ்ப்படிதலுள்ள ஊழியம் செய்தல் இயலாத காரியமாய் இருக்கிறது. அவர் நமக்கு ஞாபகப்படுத்துவது என்னவெனில், பெரிதான தலைப்புகளில் ஒன்றை நாம் பெற்றிருக்கலாம், அது தேவன் நமக்களித்த ஊழியத்தினால் கிடைக்கப்பெற்றதாய் இருக்கலாம். Getz அவர்கள் குறிப்பிடுவது போல "யாக்கோபு தன்னை சாதாரணமாக "ஊழியன்" எனக்கூறுவது நமக்கு வியப்பை அளிக்கிறதாய் இருக்கிறதல்லவா? (Getz, 1983, page 14.) கர்த்தரது வீட்டில் அடிமையாய் இருப்பது, இராஜ அரண்மனையில் சேவை செய்வதைவிட உன்னதமான பணீயாய் இருக்கிறது. புதிய ஏற்பாட்டில் உள்ள மற்றவர்களைப் போன்று தனக்கு ஜீவனை அளித்தவருக்கு அடிமை என யாக்கோபு அவரை மகிமைப் படுத்துகிறவராய் காணப்படுகிறார். வேதாகமத்தை எழுதிய மற்ற எழுத்தாளர் கூட தானும் அதிகபட்ச கனத்தைப் பெற்றுக்கொண்டவராய் தன்னை மனப்பூர்வமாக கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் அடிமை என தீர்மானித்தார்."

(Epp, 1980, page 33).

அநேகரை வியப்பிற்குள் ஆழ்த்துவது என்னவெனில், யாக்கோபு இயேசுவின் ஒன்று விட்ட சகோதரராய் இருந்த போதிலும் அதை அவர் உரிமைபாராட்டாது தன்னை இயேசுவின் ஊழியக்காரன் என உரிமைபாராட்டி எழுதியிருப்பதாய் இருக்கிறது. அப்போஸ்தர் 10 ம் அதிகாரத்தில் பேதுரு இவரைக் குறித்து குறிப்பிடுவதும் நம்மை வியப்படையச் செய்கிறதாய் இருக்கிறது. மற்றும் யோவான் 20:28 ல், இவரைப்பற்றிய தோமாவின் வார்த்தைகளும் நம்மை வியப்படையச் செய்கிறதாய் இருக்கிறது. இவர்கள் இயேசுவை யோசுவாவாகக் கண்டனர், இவர் மரியாளின் குமாரனாய் இருந்தார், ஆனால் இப்பொழுது இவவரை கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவாகவும், தேவ குமாரனாகவும் கண்ணுற்றனர். யாக்கோபில் மனுஷீகப்பிரகாரமான தற்பெருமை என்பது யாக்கோபிடத்தில் காணப்படவில்லை, இதைப்போன்றே நம்மிடமும் தற்பெருமை எவ்விதத்திலும் கானப்படக் கூடாது. "இவருக்கு இயேசு தனது சகோதரராகவோ, அல்லது தனது குடும்ப அங்கமாகவோ இருக்கவில்லை. இவர் இவருக்கு தற்போது தனிப்பட்டவிதத்தில் கர்த்தரும் இரட்சகருமாய் இருக்கிறார்." (Getz, 1983, page 10).

நமது நாட்களில் மனிதர் தங்களை "சூப்பர் ஸ்டார்" ஆக மற்றவர்கள் கருத வேண்டும் என்பதனை அதிகம் விரும்புகிறவர்களாய் இருக்கின்றனர், இதை யாக்கோபின் வாழ்விலிருந்து நாம் சரிசெய்து கொண்டு, ஊழியக்காரர் [அடிமை] என்கிற ஸ்தானத்தை நமக்கு அமைத்துக் கொண்டு அதில் களிகூறுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். இயேசுவின் அடிமையாய் / ஊழியக்காரனாய் இருப்பதிலும், கனத்துக்குரிய பதவி வேறொன்றுமில்லை. அவர் இராஜாதி இராஜாவாய் இருக்கிறார். இது பழைய ஏற்பாட்டின் எதிரொலியாய் இருக்கிறது, தன்னை அவர்கள் தேவனது ஊழியர் [அடிமை] என அழைத்துக்கொண்டனர்.

தலைமைத்துவ நடைமுறை:

1. ஒரு தலைவரின் மெய் அடையாளம் தாழ்மையுடன் செய்யும் ஊழியத்தினால் உண்டாகிறது: மனிதர் முன்பாக தனக்கிருக்கும் தலைப்பை ஒவ்வொருவரும் பயன்படுத்திக்கொள்ள விருப்பமுள்ளவராய் இருப்பதைக் குறித்து எச்சரிப்புடன் இருத்தல் வேண்டும், இதற்கு யாக்கோபு நமக்கு முன்மாதிரியாய் இருக்கிறார்.

[ஊ] 2 பேதுரு 1:1.

"நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவினுடைய நீதியால் எங்களைப்போல அருமையான விசுவாசத்தைப் பெற்றவர்களுக்கு, இயேசுக்கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு எழுதுகிறதாவது:"

இவர் ஒரு அப்போஸ்தலராய், உயர் மட்ட வரம் பெற்றவராய் சபையுகத்தில் ஊழியம் செய்தவர், இருப்பினும் இவரும் மற்றவர்களைப் போன்று, அடிமையாக இருந்தார். இவர் ஒரு விடுதலையுடன் இல்லை, இவர் இயேசுக் கிறிஸ்துவுக்கு உரியவராய் இருந்தார். **இயேசுக்கிறிஸ்துவின் ஊழியக்காரனும், அப்போஸ்தலனுமாகிய சீமோன் பேதுரு** என்கிற இச்சொற்றொடரில் உள்ள வார்த்தைகள் ரோம சாம்ராஜ்ஜியத்தில் பெரிதான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது, இவ்வார்த்தைகள் வேதாக கிறிஸ்தவ சரித்திரத்தில் முக்கியம் வாய்ந்த சொற்களாய் இருக்கின்றன, இவைகள் இன பாகுபாட்டை தகர்க்கிறதாய் இருக்கிறது, சமூக அந்தஸ்தில் உள்ள ஏற்ற தாழ்வை அகற்றுகிறதாய் இருக்கிறது, கர்த்தரின் சீஷனாய் உயர்ந்த மற்றும் தாழ்ந்த நிலையில் இவ்விரு நிலையுமே பரலோகிற்கு உயர்த்தும் கர்த்தரின் பணியை செய்யும் சொற்களாய் இருக்கின்றன.

வேதாகம பணியின் முறண்பாடானது இதுவாய் இருக்கிறது, நாம் உன்னதங்களில் சேவை செய்யும்படி "உயர்த்தப்பட்டவர்களாய்" இருக்கிறோம், அதே சமயம் அடிமைகளாக இருந்து செயலாற்றுகிறோம், தனது சொந்த இரத்தத்தால் "கிரயம் கொள்ளப்பட்டவருக்கு" அடிமைகளாய் இருக்கிறோம். நாம் அவருக்கு சதாகாலங்களிலும் சேவை செய்யும்படி தீர்மானித்துள்ளோம், நமக்கு தனிப்பட்ட சுதந்திரம் குறித்து எவ்வித நம்பிக்கையுமின்றி அவருக்கு சேவை செய்ய அற்பணித்துள்ளோம், நமது வாழ்விற்காய் அவரது சித்தத்தில் மகிழ்வுறுகிறவர்களாய் இருக்கிறோம். அவரது அடிமைகளாய் இருக்கும் நமக்கு விடுதலை என்பதே கிடையாது! இவ்வடிமைத் தனத்தில் களிகூறுகிறவர்களாய் இருக்கிறோம், காரணம் அது நமக்கு எதைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது என்பதை அறிந்திருக்கிறோம். வார்த்தைகளுக்கு அப்பாற்பட்ட ஆசீர்வாதங்களை நாம் அடைகிறவர்களாய் இருக்கிறோம்.

பேதுரு தனது நிருபத்தின் ஆரம்பத்தில் நமக்கு நினைவுபடுத்துவது என்னவெனில், அவர் தெரிவு செய்த இவ்வார்த்தைகள் மூலம், நாம் யார் என்பதையும், நமக்கு இரட்சிப்பின் இரத்தமானது ஏற்படுத்தியுள்ள தகுதியை ருசுப்படுத்திக்காட்டுகிறதாய் இருக்கிறது. பாவம், தீமை, மரணம் இவைகளின் வல்லமையிலிருந்து நாம் விடுவிக்கப்பட்டுள்ளோம், நம்மை மீட்டெடுத்தவரை எந்நாளும் சேவிக்க

விடுவிக்கப்பட்டுள்ளோம். நமது இரட்சிப்பின் மூலம், விஷேசித்த தயவை கர்த்தரிடமிருந்து பெற்றிருக்கிறோம். அவர் பயன்படுத்தும் வார்த்தை "பெற்றவர்கள்" [“obtained”] என்பதன் பொருள், இன்னொருவருக்காக "விளையாடி" சம்பாதித்த ஒன்று பொருள்படுகிறது.

நமது இரட்சிப்புடன், நாம் எதையுமே பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்களாய் இருக்கிறோம், ஆனால் நமது இரட்சிப்பானது ஆச்சரியத்திற்குரிய வெகுமதியாய் இருக்கிறது. இது "விலையேறப்பட்டதாய்" இருக்கிறது. இதனுடன், சிலாக்கியங்களையும், வாக்குறுதிகளையும் அளிக்கிறதாய் இருக்கிறது. ஒரு வழிபோக்கர் பத்து மில்லியன் அமெரிக்கப் பணத்தைக் கொடுப்பார் என்றால், நீங்கள் மறுபடியும் வேலை செய்து பிழைக்க வேண்டும் என்கிற அவசியம் வராது, இருப்பினும், நீங்கள் அவ்வழிப்போக்கரைப் பார்த்து "இவ்வுபகாரத்தை நீங்கள் எனக்கு செய்துள்ளபடியால், என் நன்றிக்கடனை எவ்வாறு திரும்ப செலுத்துவது? எனக் கேட்பீர்களல்லவா? இதைக் கேட்கும்பொழுது, நாம் நமது இரட்சகருக்கு எவ்வளவாய் கடன்பட்டு இருக்கிறோம், அவர் நமக்கு விலைமதிப்பற்ற காரியங்களை செய்துள்ளாரே!

பேதுரு "நமது இரட்சகரும், தேவனும்" என இவ்வசனத்தில் குறிப்பிட்டுள்ளார், அவரது நிருபத்தை வாசிப்போருக்கு இது மின்னலைப் போன்று பளிச்சிடுகிறதாய் இருக்கிறது. "பேதுரு பழைய ஏற்பாட்டு தேவனின் நாமமாகிய "யெஹோவா" [YHWH] என்கிற நாமத்தை இயேசுவுக்கு அளித்து தைரியமாய் இந்நிருபத்தை எழுதுகிறவராய் இருக்கிறார். இது இவர் தைரியமாய், பெந்தெகொஸ்தே நாளில் பிரசங்கித்ததற்கு ஒப்பாய் இருக்கிறது. அப்போஸ்தலர் 2:21." (Green, 1968, p 61). பேதுரு மிகத்தெளிவுடன், இயேசு நமது இரட்சகரும், நமது தேவனுமாய் இருக்கிறார் என்பதை தெளிவு படுத்துகிறவராய் இருக்கிறார், மற்றும் கிறிஸ்துவின் தெய்வீகத்தை இங்கு ருசுப்படுத்துகிறவராய் இருக்கிறார். திரித்துவம், இருதன்மைகளின் இணைப்பு, வெறுமையாக்கப்படுதல் போன்ற உபதேசங்கள் இவ்வசனத்தின் பின்னணியத்தில் இருக்கிறது, மற்றும் இதன் பின்னர் உள்ள வசனங்களிலும் இருக்கிறது. கர்த்தரின் தன்மைகளை எந்த அளவுக்கு அதிக அளவில் அறிகிறோமோ அந்த அளவுக்கு நமது விசுவாசத்தில் பாதுகாப்புள்ளவர்களாய் விளங்குவோம். Refer to the BTB studies on CHRIST: DEITY, TRINITY. கிறிஸ்து: தெய்வீகம், திரித்துவம் போன்ற தலைப்புகளை ஒப்பிடுக:

தலைமைத்துவ நடைமுறை:

1. கிருபையைச் சார்ந்த தாழ்மை: இது ஒரு தலைவரை அடையாளப்படுத்திக் காட்டுகிறது. பேதுரு கிறிஸ்துவில் தனது பெரிதான அந்தஸ்திற்கு, தன்னில் எவ்வித தகுதியும் இல்லை என்பதை அறிந்துணர்ந்தவராய் இருந்தார். இதினிமித்தம் அவர் பெரிதான களிகூறுதலையும், துதியையும் தனது சார்பில் தேவனுக்கு செலுத்துகிறவராய் விளங்குகிறார். கர்த்தரது ஊழியக்காரர்கள் எப்பொழுதும் அவரது பரிசுத்த நாமத்தைத் துதித்துக் கொண்டே இருப்பார்கள், தங்களது வாழ்வைக் குறித்த தேவனது திட்டம் மற்றும் நோக்கம் குறித்து களிகூறுகிறவர்களாய் இருக்கின்றனர். மட்டுமன்றி அவருடன் தாங்கள் கொள்ளும் தங்களது அனுதின ஐக்கியத்தினால், களிகூறுகிறவர்களாய் இருக்கின்றனர்.

[ஏ] யூதா 1.

"இயேசுக்கிறிஸ்துவினுடைய ஊழியக்காரனும், யாக்கோபினுடைய சகோதரனுமாயிருக்கிற யூதா, பிதாவாகிய தேவனாலே பரிசுத்தமாக்கப்பட்டவர்களும், இயேசுக்கிறிஸ்துவினாலே காக்கப்பட்டவர்களுமாகிய அழைக்கப்பட்டவர்களுக்கு எழுதுகிறதாவது:"

இவ்வசனம் நம்மை தேவனுடன் முக முகமாய் எதிர்கொள்ள வைக்கிறது, யூதா நமது இரட்சிப்புக்கு வழிநடத்தும் செயல்பாடுகளை இங்கு சுருங்கக் கூறுகிறவராய் இருக்கிறார். இக்கடிதத்தினை முதன் முறையாக நாம் வாசிப்போமெனில், விசுவாசிகளாகிய நமது ஸ்தானம் என்ன என்பதை நினைவு கூற இயலும், மற்றும் நமது அழைப்பு, கிறிஸ்துவில் நமது ஸ்தானம் என்ன என்பதை அறிந்து கொள்ள இயலும். யூதா ஒரு அடிப்படைவாதியாக இருக்கிறார், இது அடிப்படைவாத நிருபமாய் இருக்கிறது, சரித்திரப் பூர்வமான அப்போஸ்தல அஸ்திபாரத்தின் மீது இவர் நிற்கிறவராய் இருக்கிறார்.

யூதா நம்மையும் கூட இங்கு நிற்கும் படி கூறுகிறார், பரிசுத்த ஆவியானவரிடத்திலிருந்து ஆதி சபை பெற்றுக்கொண்ட சத்தியத்தில் நிலை நிற்க கூறுகிறார், இச்சத்தியத்தினை எந்த ஒன்றோடும் ஒத்துப்போகாத வண்ணம் அறிவுறுத்துகிறவராய் இருக்கிறார். நமது நிச்சயத்தைக் குறித்த உறுதிப்பாடு, தேவனது குணாதிசயத்தின் நிலையானத் தன்மையை அறியும் நமது அறிவில் இருக்கிறது, கர்த்தர் அவரது குணாதிசயத் தன்மையில் நிலைத்திருக்கிறவராய் இருக்கிறார். அவர் எப்பொழுதும் எல்லோருக்கும் கர்த்தராய் இருக்கிறார், நீதிபரராய் இருக்கிறார், நீதி செய்கிறவராய் இருக்கிறார், உண்மையுள்ளவராயும்,

அன்புகூறுகிறவராயும், கிருபையுள்ளவராயும், இரக்கமுள்ளவராயும், சர்வ வல்லவராயும், சர்வ ஞானமுள்ளவராயும், மாறாதவராயும் இருக்கிறார். நமது இரட்சிப்பு அவரது தன்மையை சார்ந்து இருக்கிறதேயல்லாமல், நமது விசுவாசத்தின் பெலத்தைச் சார்ந்தல்ல. மத்தேயு 17:20.

இவரும் இயேசுவுக்கு ஒன்று விட்ட சகோதரராய் இருந்த போதிலும், இவ்வுறவினால் இவர் ஒன்றையும் உரிமைபாராட்டதவராய் இருக்கிறார். இவர் உரிமை பாராட்டுவதெல்லாம், தான் உயிர்த்தெழுந்த கர்த்தரின் சேவையை செய்யும் ஒரு சேவகனாய் மட்டுமே உரிமைபாராட்டுகிறவராய் இருக்கிறார். இயேசுக்கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே, யாக்கோபையும், யூதாவையும் அவர் மேசியா என அவரை நம்பும்படி செய்தது. அவர்களது சரீரப்பிரகாரமான, மரியாள் மூலம் ஏற்பட்ட உறவானது, அவர்களுக்கு எவ்வித பின்விளைவையும் ஏற்படுத்துகிறதாய் இல்லை, அவர்கள் கர்த்தரைக் கண்ட போது, அவருக்கு சரீரப்பிரகாரமான எவ்வித உறவும் இல்லாதவர்களாய் கண்டனர், அவருக்கு ஆவிக்குரிய பிரகாரமாய், தனிப்பட்ட விசுவாசத்தின் மூலம், கிருபையினால் குமாரரும், குமாரத்திகள் மட்டு இருக்கின்றனர். யூதா தாழ்மையுள்ளவராய் இருந்தார், அவர் தனது கர்த்தருக்கு தன்னை அற்பணித்துகொண்டவராய் இருந்தார், இதைப்போன்றே நாமும் இருத்தல் வேண்டும். இன்றைய அளவில் அநேகம் விசுவாசிகள், இயேசுவுடன் பிரபலமாகி வருகின்றனர். யாக்கோபு 1:1 உடன் இவ்வசனம், நாம் மரியாதைக்குரியவராகவும் மற்றும் தாழ்மையுள்ளவர்களாய் இருக்கவும் நமக்கு நினைப்பூட்டுகிறதாய் இருக்கிறது. இயேசுக்கிறிஸ்து நமது கர்த்தரும், நமது தேவனுமாய் இருக்கிறார், அவரது அதிகாரத்தின் கீழ் நாம் குமாரரும் மற்றும் குமாரத்திகளுமாய் இருக்கிறோம், நாம் தற்பெருமையுடன் பேசவோ, செயல்படவோ கூடாது.

ஊழியக்காரராகிய இவர், தன்னைப் பவுலைப்போன்று வகைப்படுத்திக் காட்டுகிறவராய் இருக்கிறார். "doulos" யுத்தத்தில் சிறைப்பிடிக்கப்பட்ட கைதி / அடிமை. அடிமைகளில் இன்னொரு வகை இருக்கிறது உபாத்தியாயராகிய அடிமை, கலாத்தியர் நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள tutor and governor உபாத்தியாயர். இவர்களுக்கு கடமைகளும் மற்றும் குறிப்பிட்ட சிலாக்கியங்களும் உண்டு, ஆனால் யுத்தத்தில் சிறைப்பிடிக்கப்பட்ட அடிமைகளுக்கோ எவ்வித சிலாக்கியமோ அல்லது கடமைகளோ அவர்களது மரணபரியந்தம் கிடைப்பது இல்லை. இதோடு மட்டுமல்லாது இவர்கள் விடுதலையாகி செல்வதற்கு எவ்வித சந்தர்ப்பமும் இல்லை. நீங்கள் தேவனது வார்த்தையின் ஊழியக்காரர் என்றால், நீங்கள் இயேசுக்கிறிஸ்துவின் "doulos" ஆக இருக்கிறீர்கள். இது ஒரு

நேர்மறையான காரியமாய் இருந்த போதிலும், நாம் இங்கிருப்பது பணி செய்யும்படியாக, நமது பிரதிபலன் மற்றும் உண்மையான ஸ்தானம், பரலோகில் மட்டுமே காணப்படுகிறதாய் இருக்கிறது.

அவர்கள் பிதாவால் பரிசுத்தமாக்கப்பட்டிருக்கின்றனர், இயேசுக்கிறிஸ்துவால் பாதுகாக்கப்பட்டிருக்கின்றனர், பரிசுத்தாவியானவரால் அழைக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர். "பரிசுத்தமாக்கப்படுதல்" என்கிற பதத்திற்குப் பதிலாக அதிகமான மூல ஏடுகளில் பிதாவினால் "அன்பு கூறப்பட்டவர்கள்" என்கிற பதமானது பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்விடத்தில் இவ்வார்த்தையானது தொடர்ந்து அன்புகூர்ந்து மற்றும் பரிசுத்தமாக்கப்பட்டு என்றிருத்தல் சரியான அர்த்தத்தை அளிக்கிறதாய் இருக்கிறது. நாம் அன்புகூறப்பட்டு, இரட்சிப்படைவது தேவனது கிரியையாயும் அவரது திட்டமுமாய் இருக்கிறது.

நாம் தேவனது அன்பையும் மற்றும் அவரது கிருபபை பொருந்திய கிரியையும் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம். நாம் புதிதாய் உருவாக்கப்பட்டு, நிரந்தரமான பிதாவின் அன்புக்குரியவர்களாய் இருக்கிறோம். நம்மிடத்தில் தேவன் பாராட்டும் பூரணமான அன்பைக் குறித்த அறிவானது, எல்லாவித பயத்தையும் புறம்பே தள்ளி, நமக்கு பாதுகாப்பையும் மற்றும் நித்திய பாதுகாப்பையும் அளிக்கிறதாய் இருக்கிறது.

பாதுகாக்கப்படுதல் [Preserved] என்ற வார்த்தையானது the present passive participle of the Greek word "tereo" என்றிருக்கிறது, இவ்வார்த்தையானது இராணுவ பயன்பாட்டில் உள்ள வார்த்தையாய் இருக்கிறது இதன் பொருள் ‘guarded or garrisoned’ by God. "காவல் செய்தல் அல்லது அரணான இடத்தில் இராணுவீரருக்கு அளிக்கப்படும் பாதுகாப்பு" எனப்பொருள்படும். இப்படிப்பட்ட பொருள்பட சங்கீதம் 23 ல் கூறப்பட்டுள்ளது. இதில் தேவனது குணாதிசயத்தை காண்கிறோம். தேவன் நம்மை இழப்பாரேயானால், அவர் தமது குணாதிசயத்தை இழக்கிறவராய் இருக்கிறார். நாம் பூரணமான தேவனது அன்பைப் பெறுகிறவர்களாய் இருக்கிறோம். நாம் அழைக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம், அழைக்கப்பட்டவர்களை அவர் பாதுகாக்கிறவராய் இருக்கிறார்.

நாம் பாறையின் மீது கட்டப்பட்டவர்களாய் இருக்கிறோம், நமது ஸ்தானமானது பாதுகாப்பாய் இருக்கிறது. இது போன்ற கருத்தில், ஒவ்வொரு துர் உபதேசமும், விசுவாசிகளை தரம் தாழ்த்தி காண்கிறதாய் இருக்கிறது. இது போன்ற வசனங்களில், நமது "நித்திய பாதுகாப்பு" குறித்த உபதேசத்தை காண்கிறவர்களாய்

இருக்கிறோம், இதை பழைய கால்வினிஸ்டுகள் "பரிசுத்தவான்களின் நீடிய பொறுமை" என அழைக்கின்றனர். அர்மீனியனிஸம் உபதேசப்படி உங்களது இரட்சிப்பை நீங்கள் இழந்து போகக்கூடும், என்ற உணர்ச்சி வசப்படக்கூடிய பாதுகாப்பற்ற விசுவாசத்தை அளிக்கிறவர்களாய் இருக்கின்றனர். எல்லா இறையியல் வல்லுனர்களும் ஒரு கையில் நிலையற்ற தன்மையை பிடித்துக்கொண்டிருப்பது எச்சரிப்புக்குரியதாய் இருக்கிறது அல்லது மற்றொரு கையில் தற்பெருமையைப் பிடித்துக் கொண்டிருக்கின்றனர். இங்கு யூதா, கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களது ஸ்தானத்தை நினைவுபடுத்திக்கொண்டு, உறுதியாய் நிலைநிற்க வேண்டிக்கொள்கிறவராய் இருக்கிறார். அவர் நம்மைக் குறித்து கரிசனையுள்ளவராய் இருக்கிறார் - 1 பேதுரு 5:7, அவரது வல்லமையினால் பாதுகாக்கப்பட்டுவருகிறோம், நமது சொந்த வல்லமையினால் அல்ல யோவான் 6:47, 65. Refer to the doctrine of CHRISTIAN LIFE – ETERNAL SECURITY. கிறிஸ்தவ வாழ்க்கை: -- நித்திய பாதுகாப்பு.

தலைமைத்துவ நடைமுறை:

1. வேதாமத் தலைமைத்துவம் தற்பெருமையற்ற நிலையானத் தன்மையை உருவாக்குகிறதாய் இருக்கிறது: உண்மையான தலைமைத்துவமானது நிலையானதாய் இருக்கிறது, மற்றும் நிலையானத் தன்மையானது தேவனது குணாதிசயத்தையும், நித்தியபாதுகாப்பையும் அறிந்து கொள்வதன் மூலம் உருவாகிறதாய் இருக்கிறது, நித்திய பாதுகாப்பானது தேவனது திட்டத்தில் மிக அவசியமான ஒரு பகுதியாய் விளங்குகிறது. எவ்வித ஆசையுமின்றி ஒரு தலைவர் பணிசெய்வது முறண்பாடாய் இருக்கிறது. ஒரு தலைவர், தனது Commanding Officer [கட்டளை கொடுக்கும் அதிகாரி] மீது, முற்றிலும் நம்பிக்கை வைக்காவிட்டால் அவரது நம்பிக்கையில் முறண்பாடு உண்டாகும். நாம் தேவனது திட்டம் மற்றும் அவரது நித்திய பாதுகாப்பு இவற்றை சார்ந்து இருப்போமாக!

BTB [BIBLE TOPIC BOOK] STUDIES

கிறிஸ்தவ வாழ்க்கை: ஸ்தானபதித்துவம்:

1. ஓர் ஸ்தானதிபதி தன்னைத்தானே நியமித்துக்கொள்ள இயலாது, அவன் ஓர்

தேசத்தை பிரதிபலிக்க அத்தேசத்தால் நியமிக்கப்படுகிறான், அத்தேசத்தின் அரசனை, மற்றும் அத்தேசத்தின் பிரஜையாக தன்னை பிரதிபலிக்கிறான். நாம் ஸ்தானாதிபதித்துவத்திற்காக தேவனால் நியமிக்கப்படுகிறோம். (2 கொரிந்தியர் 5:20)

2. ஓர் ஸ்தானாதிபதி தனக்குத்தானே தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள இயலாது. நமது தேவைகள் அனைத்தும் தேவனால் சந்திக்கப்பட்டு, அவரால் நாம் பாதுகாக்கப்பட்டு வருகிறோம். (பிலிப்பியர் 4:19)

3. ஓர் ஸ்தானாதிபதி தன்னைத்தான் பிரதிபலிக்கிறவன் அல்ல. நாம் இப்பூமியில் தேவனை பிரதிபலிக்கிறவர்களாய் இருக்கிறோம். (மத்தேயு 28:19-20)

4. ஓர் ஸ்தானாதிபதி அனுப்பப்பட்டத்தேசத்திற்கு சொந்தமானவன் அல்ல. அனுபவப்பூர்வமாய் நாம் பூமியில் வாழ்ந்தபோதும் நாம் பரலோக பிரஜைகள். (பிலிப்பியர் 3:20, யோவான் 15:19)

5. ஒவ்வொரு ஸ்தானதிபதிக்கும் கட்டளைகள், எழுதப்பட்டுக் கொடுக்கப்படும். தேவன் நமக்கு தமது கட்டளைகள் அனைத்தையும் எழுதப்பட்ட வேதத்தில் கொடுத்துள்ளார். (1 தெசாலோனிக்கேயர் 4:1-2)

6. ஓர் ஸ்தானாதிபதி தனது சொந்ததேசத்தை பிரதிபலித்து வாழ்வதால், அவனுக்கு ஏற்படும் அவமானங்கள் அவனுக்கு சொந்தமானது அல்ல (மத்தேயு 5:11-12)

7. ஓர் ஸ்தானாதிபதி தான் நியமிக்கப்பட்டுள்ள தேசத்திலிருந்து, தனது சொந்த தேசத்திற்கு அழைக்கப்படுவார் என்றால் அது அவர் நியமிக்கப்பட்ட தேசத்துடன் யுத்தத்தை அறிவிப்பதற்கு சமமாய் இருக்கிறது. சபை மத்திய வானுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபின் இப்பூமியில் கொடிய யுத்தங்கள் நிகழ இருக்கின்றன. எல்லாக் கிறிஸ்தவர்களும், மத்திய ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவர். (1தெசலோனிக்கேயர் 4:13-17)

சபை: அப்போஸ்தலத்துவம். CHURCH: APOSTLESHIP

1. "அப்போஸ்தலர்" என்கிற வார்த்தையானது மூன்றுவிதமான அர்த்தத்தில் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அ. இஸ்ரவேலருக்கு அப்போஸ்தலர் (12 நபர்கள்) மத்தேயு 10.

ஆ. சபைக்குரிய அப்போஸ்தலர். (அப்போஸ்தலர் 1:21-26) (12).

இ. அனுப்பப்பட்டவர்கள் அல்லது பனிரெண்டு அப்போஸ்தலர்கள்.

புதிய ஏற்பாட்டு நிருபங்களில் குறைந்தபட்சம் ஏழுமுறை குறிப்பிடப்படுகிறது.

2. "Apostolos" என்கிற வார்த்தை தன்னில்தானே பொருள் கொண்டதாய் இருக்கிறது, இவ்வார்த்தை Attic Greek ல், [Admiral of the Athenian Navy] கப்பற்படையில் உள்ள அட்மைரலை குறிக்க பயன்படுத்தப்பட்டது. இவர் கப்பற்படையை கட்டளை கொடுத்து நடத்துகிறவர். இவர் "அனுப்பப்பட்டவராக" செயல்பட்டு, யுத்தங்களை நடத்துகிறவராய் இருக்கிறார். இதினிமித்தம் இவ்வார்த்தையானது உயர்மட்ட அதிகாரியைக் குறிக்கும் சொல்லாக பயன்பட்டு வந்தது.

3. பனிரெண்டு அப்போஸ்தலரின் செயல்பாடு (வெளிப்படுத்தல் 21:14, 1 கொரிந்தியர் 12:28, எபேசியர் 4:11 இவைகள் சுட்டிக்காட்டுவது என்னவெனில் இவைகள் முழுமையான எண்ணிக்கையாயும் அடிப்படைக் கருத்தில் இவர்கள் தங்கள் அலுவல்களில் ஈடுபடுதல் வேண்டும் எனக்கூறுகிறது) இவர்கள் சபைகளை ஸ்தாபித்து, அவற்றில் ஆழுகைகளை ஏற்படுத்தி, அவைகளை வழிநடத்தி, சபையின் ஆரம்ப நிலைகளில் அவர் செயல்படுமாறு ஏற்படுத்தப்பட்டனர், மற்றும் பகுக்கப்பட்ட வேதாகமத்தை உருவாக்கி அவைகளை சீர்திருத்தி சரியான முறையில் தொகுக்கும்படியான செயல்பாட்டினை செய்தனர்.

4. இஸ்ரவேலருக்குரிய அப்போஸ்தலர்கள் சபை யுகத்திற்குள் கொண்டுவரப்பட்டு, அவர்கள் சபைக்காக திரும்பவும் நியமிக்கப்பட்ட அப்போஸ்தலராய் செயல்பட்டனர் (யூதாஸ் ஸ்காரியோத்தைத் தவிர்த்து) அப்போஸ்தலர் 1:1-8. இது ஒலிவ மரத்தைப் பற்றிய மிக முக்கியமான வேதாகம அடிப்படைக் கருத்தை வலியுறுத்துகிறதாய் இருக்கிறது, ரோமர் 11:13-32. இது நமக்கு காட்டுவது என்னவெனில், தேவன் இணைக்கும் திட்டத்தினை உடையவராய் இருக்கிறார், இஸ்ரவேலும், சபையும் வேறுபட்ட நிலையில் இருந்தது இருப்பினும் அவைகளை இங்கு ஒன்றாக இணைக்கிறதைப் பார்க்கிறோம்.

5. யூதாஸ் ஸ்காரியோத்திற்குப் பதிலாக மத்தியாவின் பெயருக்குச் சீட்டு விழுந்ததின் பேரில், இவர் "சட்டப்பூர்வமாய்" ஏற்படுத்தப்பட்டார். (அப்போஸ்தலர் 1:15-26). யூத வட்டாரத்தில் இதற்கான அவசியம் இருந்தபடியால் இதைச் செய்தனர், இயேசு செய்த அற்புத நிகழ்வுகளுக்குச் சாட்சியாக இவர்கள்

பன்னிருவரும் ஏற்படுத்தப்பட்டனர், இக்காலத்தில் பரிசுத்த ஆவியானவர் இன்னும் அருளப்படாது இருந்தபடியால், எவ்வித வழிநடத்துதலையும் இவர்கள் பெறாதவர்களாயிருந்தனர். சீட்டுப்போடுதல், ஜெபித்தல், குச்சிகள் விழுவதன் மூலம் தெரிவு செய்வது, அட்டைகள் மூலம் எந்த ஒருவரையும் தெரிவு செய்வது தேவன் ஒருவரை நியமிக்கும் வழியில்லாது இருந்தது.

6. இக்கல்லூரியானது விசுவாசிப்பது என்னவெனில், யூதாஸ் ஸ்காரியோத்துக்குப் பதிலாக அப்போஸ்தலராகிய பவுல் ஏற்படுத்தப்பட்டிருக்கலாம் என விசுவாசிக்கிறது. (பவுல் ஒரு அவிசுவாசியாக இருந்தார், யூதாஸ் ஸ்காரியோத்தை போன்றே எல்லாவிதத்திலும் தீமை செய்கிறவராய் இருந்தார், இதினிமித்தம் கிருபையின் தெரிவு செய்தலானது, தேவனால் இவரை வல்லமையாய் உபயோகப்படும்படி வைத்தது). 1 கொரிந்தியர் 15:7-10.

7. அப்போஸ்தலர்கள் பூமியில் கர்த்தர் செய்த ஊழியத்திற்கு சாட்சிகளாகவும், மற்றும் அவரது உயிர்த்தெழுதலுக்கு கண்கண்ட சாட்சிகளாகவும் இருந்தனர். அப்போஸ்தலர் 1:21,22. இவர்கள் கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவினால் தனிப்பட்ட நிலையில் தெரிந்துகொள்ளப்பட்ட மனிதராய் இருந்தனர். அப்போஸ்தலர் 9:15, 26:16,17, எபேசியர் 4:8 cf. 4:11, 1 கொரிந்தியர் 12:11, 9:1, 15:8,9, கலாத்தியர் 1:1.

8. அப்போஸ்தலரை இனங்காணுதல் அவர்களது வரங்களைக் கொண்டு எளிதாய் கண்டுகொள்ளப்பட்டது, அவர்களது அலுவல்களைக் கொண்டு ஜனங்களது கவனமானது ஈர்த்துக்கொள்ளப்பட்டது. உ.ம். குணமாக்கும் வரம் அப்போஸ்தலர் 3:1-11, 19:11,12...etc. இவர்கள் அப்போஸ்தலர் என உலகளாவிய அளவில் பிரபலமானபோது, "அடையாளமாய் இவர்களில் காணப்பட்ட வரங்கள்" செயல்படாமல் நின்றுவிட்டது. உ.ம். பிலிப்பியர் 2:27, 2 தீமோத்தேயு 4:20. ஜெபத்திற்கும் மற்றும் தனது சர்வ அதிகாரத்திற்கும் மறுமொழியாக தேவன் இன்னும் குணமாக்குகிறவராய் இருக்கிறார்,

9. இயேசுக்கிறிஸ்துவினுடன் நெருங்கி ஐக்கியம் கொண்ட குறிப்பிட்ட மனிதராகிய பனிரெண்டு அப்போஸ்தலர்கள் "அனுப்பப்பட்டவர்களாய்" இருந்தனர், இவர்கள் சிலரை அப்போஸ்தலராக, குறிப்பிட்ட ஊழியத்திற்கென அனுப்பினர். உ.ம். பர்னபாஸ் அப்போஸ்தலர் 14:14, கலாத்தியர் 4:2. யோவான் மாற்கு, யாக்கோபு, யூதா, அப்பொல்லோ 1 கொரிந்தியர் 4::6,9. சீலா மற்றும் தீமோத்தேயு 1 தெசலோனிக்கேயர் 1:1, 2:6.

ஜெபம்

1. தேவன் கொடுக்கிறவர் என்பதை நாம் அறிந்து இருக்கலாம், ஆனால் நாம் அவருடன் சரியான தொடர்பு ஏற்படுத்திக்கொண்டால்தான் அவர் கொடுப்பதை நாம் பெற்றுக்கொள்ள முடியும்.

a) ஜெபம் என்பது ஒரு விசுவாசி தேவனுடன் தொடர்பு கொள்ளும் வழிமுறையாய் இருக்கிறது.
b) பரிசுத்த வேதாகமம் தேவன் மனிதனுடன் தொடர்புகொள்ளும் வழியாய் இருக்கிறது.

2. ஜெபத்தில் அடங்கியுள்ள வாக்குத்தத்தங்கள்:

a) மத்தேயு 21:22 விசுவாசத்துடன் நாம் கேட்கவேண்டும்.
b) மத்தேயு 18:19 குழுவாய் ஜெபித்தலின் வல்லமை.
c) சங்கீதம் 116:1,2. தேவன் எப்பொழுதும் நமது ஜெபத்தை கேட்கிறவராய் இருக்கிறார்.
d) ஏசாயா 65:24 நாம் ஜெபிக்கும்பொழுது தேவன் பதில் அளிப்பவராய் இருக்கிறார்.
e) மத்தேயு 7:7 நாம் ஜெபிக்க கட்டளை பெற்று இருக்கிறோம்.
f) யோவான் 14:13-14 அவரது நாமத்தினால் நாம் எதை வேண்டுமானாலும் கேட்கலாம்.
g) பிலிப்பியர் 4:6 ஜெபம் நன்றி செலுத்துதலுடன் இருக்க வேண்டும்.
h) 1 தெசலோனிக்கேயர் 5:17 நாம் இடைவிடாமல் ஜெபிக்க வேண்டும்.
i) எபிரெயர் 4:16 நாம் தைரியமாய் கிருபாசனத்தண்டைக்கு வர முடியும்.

3. ஜெபம் நான்கு பகுப்பாய் பிரிக்கப்படுகிறது:

a) பாவங்களை அறிக்கை செய்தல் (1 யோவான்1:9).
b) நன்றி செலுத்துதல் (1 தெசலோனிக்கேயர் 5:18).
c) மற்றவர்களுக்காய் பரிந்து பேசுதல் (எபேசியர் 6:18).
d) ஒருவரின் சுயத்தேவைகளுக்காய் விண்ணப்பித்தல் (எபிரெயர் 4:16).

4. ஜெபத்தின் வல்லமை:

a) தனிப்பட்ட நிலையில் - எலியாவும் சர்வாங்க தகனபலியும். (1 இராஜாக்கள்18:36-39).
b) கூடி ஜெபித்த பொழுது - சிறைச்சாலையிலிருந்து பேதுரு விடுவிக்கப்படுதல். (அப்போஸ்தலர்12:1-18).

5. பதிலளிக்க இயலாத ஒரு ஜெபம், நமது கர்த்தர் சிலுவையில் ஜெபித்த ஜெபம். (சங்கீதம் 22:1-18).

6. ஜெபம் யாரை நோக்கி ஏறெடுக்கபட வேண்டும்?

a) நேரடியாய் பிதாவை நோக்கி ஏறெடுக்கப்பட வேண்டும். - (மத்தேயு 6:5-9).
b) குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் ஏறெடுக்கப்பட வேண்டும். - (எபிரெயர் 7:25).
c) பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் ஏறெடுக்கப்பட வேண்டும்.- (ரோமர் 8:26-27).
குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவும், பரிசுத்த ஆவியானவரும் நமக்காய் பரிந்து பேசுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

7. ஜெபம், விண்ணப்பம் மற்றும் நமது வாஞ்சை என இரண்டாய் பிரிக்கலாம்.

a) விண்ணப்பம் - நீங்கள் எதைக்கேட்கிறீர்கள்? (உ.ம். ஒரு புதிய வாகனம்)
b) வாஞ்சை - விண்ணப்பத்திற்குப் பின் இருப்பது வாஞ்சையாகும் (உ.ம். மகிழ்ச்சி ஏனென்றால், நீங்கள் புதிய வாகத்தை பெற்று இருக்கிறீர்கள்)

8. ஜெபம் நான்கு விதங்களில் இணைந்து செல்லக்கூடும்.

a) பதிலளிக்கப்பட்ட விண்ணப்பம் - வாஞ்சைகள் பதிலளிக்கப்படாத நிலை சங்கீதம் 106:15 - யாத்திராகம சந்ததிக்கு காடைகள் அளிக்கப்பட்டது. 1 சாமுவேல் 8:5 - இஸ்ரவேலை ஆழும்படியான ராஜா கொடுக்கப்பட்டது.
b) விண்ண்ப்பங்கள் பதில் அளிக்கப்படவில்லை - வாஞ்சைகள் பதிலளிக்கப்பட்டன. ஆதியாகமம் 18:23 சோதோம் பாதுக்காக்கப்படுதல். 2 கொரிந்தியர் 12:7 - பவுலின் சரீரத்திலிருந்து முள் அகற்றப்பட ஏறெடுக்கப்பட்ட விண்ணப்பம்.

c) விண்ணப்பங்கள் பதிலளிக்கப்பட்டன - வாஞ்சைகளும் பதில் அளிக்கப்பட்டன. 1 இராஜாக்கள் 18:36-37 - எலியா பலிசெலுத்த அக்கினிக்காய் விண்ணப்பித்தல். லூக்கா 23:42 சிலுவையில் தொங்கின கள்ளனின் ஜெபம். இவ்வகை ஜெபமே பூரண ஜெபமாய் கருதப்படுகிறது.

d) விண்ணப்பங்கள் பதில் அளிக்கப்படவில்லை - வாஞ்சைகளும் பதிலளிக்கப்படவில்லை இவ்வறு பதில் இல்லாமைக்கு ஒன்பது முக்கியமான காரணங்கள் உண்டு.

9. பதில் அளிக்கப்படாத ஜெபத்திற்கான காரணங்கள்:

a) விசுவாசக்குறைவு. (மத்தேயு21:22).
b) சுய விருப்பங்களுக்காய் ஜெபித்தல் (யாக்கோபு4:3).
c) அறிக்கை செய்யப்படாத பாவங்கள் (சங்கீதம் 66:18).
d) மனதுருக்கமற்ற நிலை (நீதிமொழிகள்21:13).
e) பெருமை மற்றும் சுய நீதி (யோபு 35:12-13).
f) ஆவியானவரின் நிறைவு இல்லாமை (எபேசியர்6:18).
g) கீழ்ப்படியாமை (1 யோவான் 3:22).
h) தெய்வீக சித்தத்தில் இல்லாது இருப்பது (1 யோவான் 5:14).

பதிலற்ற ஜெபத்திற்கு பொதுவான காரணங்கள், ஏதோ ஒரு வகையில் பாவம் வாழ்வில் இருப்பதாகும், அறிந்த பாவங்களை 1 யோவான்1:9ன் படி, அறிக்கை செய்வதன் மூலம் இப்பிரச்சனைக்கு தீர்வு காண இயலும்

10. பரிந்து பேசும் ஜெபம்:

இப்படிப்பட்ட ஜெபம், ஜெபத்தின் நான்கு பகுப்பில் ஒன்றாய் விளங்குகிறது. 1. பாவங்களை அறிக்கை செய்தல்
2. நன்றிசெலுத்துதல் 3. பரிந்து பேசி ஜெபித்தல் 4. சுயத்தேவைகளுக்காய் ஜெபித்தல்.

a) பரிந்து பேசும் ஜெபத்தின் வல்லமை 1 இராஜக்கள்18:42-46ல் போதிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படை சித்தாந்தத்தை யாக்கோபு 5:16-18ல் காண்கிறோம்.
b) ஜெபத்தில் மேற்கொள்ளும் வல்லமையை அப்போஸ்தலர் 12 ம் அதிகாரத்தில் காட்டப்பட்டுள்ளது.

c) அவிசுவசிக்காய் பரிந்து பேசும் ஜெபம் (ரோமர் 10:1).

d) அறிப்படாத விசுவாசிக்காய் பரிந்துபேசும் ஜெபம் (கொலோசெயர்1:3-11).

e) அறியப்பட்டுள்ள விசுவாசிக்காய் பரிந்துபேசும் ஜெபம் (எபேசியர்1:15-23).

11. உண்மையான கர்த்தரின் ஜெபம். யோவான் 17 ம் அதி.

a) உம்முடைய குமாரன் உம்மை மகிமைபடுத்தும்படி நீர் உம்முடைய குமாரனை மகிமைபபடுத்தும் (வச. 2 cfபிலிப்பியர் 2:9-11).

b) உலகம் உண்டாகிறதற்குமுன்னே உம்மிடத்தில் எனக்கு உண்டாயிருந்த மகிமையினாலே இப்பொழுது நீர் என்னை உம்மிடத்தில் மகிமைப் படுத்தும்.(வச. 5)

c) உலகம் மற்றும் தீமை இவைகளினின்று விசுவாசிகள் பாதுகாக்கப்பட.(வச.11, 15)

d) விசுவாசிகளின் பரிசுத்தத்திற்காக (வச. 17)

e) விசுவாசிகளின் ஆவிக்குரிய ஒற்றுமைக்காக (வச. 21)

f) உலகம் விசுவாசிக்கத்தக்கதாய் (வச. 21).

g) விசுவாசிகள் பரலோகில் அவருடனிருந்து அவரைக்காணவும், அவரது மகிமையை பகிர்ந்து கொள்ளவும் (வச. 24)

கிறிஸ்தவ வாழ்க்கை: அன்பு

1. தேவன் செய்தவைகளுக்காக, அவரது எல்லா நன்மைகளுக்காகவும் அவரில் அன்புகூறுவது முழுமையான பாராட்டுதலுக்குரியதாய் இருக்கிறது.

2. கிரேக்க மொழியில் அன்பு என்ற சொல்லுக்குரிய வார்த்தைகள்.

a) எறாஸ்(eros) (பாலுணர்வு சார்ந்த அன்பு) இப்பதம் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படவில்லை.

b) ஸ்டார்கே (storge) (நட்பு சார்ந்த அன்பு) இப்பதம் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படவில்லை.

c) அகாப்பே (agape) (மற்றவர்களிடம் கூறும் அன்பு, அளவுக்கதிகமாய் ஒருவரில் பாராட்டப்படும் அன்பு, பயபக்திக்குரிய அன்பு, பணிந்து கொள்ளுவதற்கும், மரியாதை செலுத்துவதற்கும் பொங்கி எழும் அன்பு. அன்பு

கூறப்படுகிறவரிடத்தில், மனதுருக்கத்துடனும், தன்னலம் காருதாமல் செலுத்தப்படும் தியாக அன்பு.)

d) பிலயோ (phileo) (தழுவுதல் மற்றும் முத்தமிடும் அன்பு. இவ்வன்பு சிநேகம்பாராட்டுதலை குறிக்கிறது மற்றும் தன் சிநேகிதருக்காக செய்யப்படும் காரியங்களையும், சிநேகிதரிடத்தில் காட்டப்படும் அன்பு எனக்கூறப்படுகிறது.)

3. நமது ஆண்டவர், யோவான் 21:15-19 ல் அகாப்பே அன்பினால் தன்னுடன் உறவுகொள்ளவேண்டும் என்கிற உண்மையை பேதுருவுக்கு தெளிவுபடுத்தினார். அகாப்பே அன்பின் மூலம் கர்த்தருக்கு சேவை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தினார், மற்றும் விசுவாசிகள் மற்ற விசுவாசிகளிடம் அகாப்பே அன்பை வெளிப்படுத்த வேண்டும் என்பதும் இதில் அடங்கியுள்ள பாடம் ஆகும்.

4. இவ்வுலகம் அளிக்கும் பொருட்கள் மீது அன்பு கூறாதிருங்கள் 1 யோவான்2:15-17.

5. உண்மையான தேவ அன்பு எப்பொழுதும் சகோதர அன்புக்கு வழிநடத்தும் 1 யோவான் 1:3 -11, 1 யோவான் 3:1-3, 10, 4:7 -12, 19,

6. மெய் அன்பு ஆராதனையிலும், சேவையிலும் வெளிப்படுத்தப்படுகிறது 1யோவான் 5:1-5.

7. தேவனிடத்தில் கொள்ளும் அன்பு அவரது வார்த்தையின் அறிவினால் பெருக்கெடுக்கிறது மற்றும் வளருகிறது
1 கொரிந்தியர்2:9.

8. இந்த ஆழமான அன்பு கர்த்தரை குறித்து மற்றவர்களிடம் சாட்சி பகருவதில் வெளிப்படுகிறது2 கொரிந்தியர் 5:14.

9. தேவன் பூரணமான, மாற்றமில்லாத அன்பினால் ஒவ்வொரு விசுவாசியையும் நேசிக்கிறார், காரணம் அவரது நேசக்குமாரனுடன் நாம் இணைக்கப்பட்டுள்ளோம்.

10. அவிசுவாசிகளும் “agape” அன்பைப் பெற்று வெளிச்சத்தைவிட இருளை விரும்புகிறவர்களாய் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. யோவான் 3:19.

11. மற்றவர்களிடம் அன்பு பாராட்டுதல் வேண்டும் என்பது கிறிஸ்தவ வாழ்க்கையின் முக்கியமான அம்சமாய் இருக்கிறது.

12. மூன்று வகையான அன்பு இருக்கின்றன:

[அ] தேவனுக்கான அன்பு.

[ஆ] மனைவிக்கான அன்பு.

[இ] மனிதவர்க்கத்தின் மற்ற அங்கத்தினருக்கான அன்பு.

13. மனைவிக்கான அன்பானது மட்டும் சரீரம் சம்பந்தப்பட்டது, மற்ற இருவித அன்பும் ஆத்துமா அல்லது ஆவி மற்றும் ஆத்துமா சம்பந்தப்பட்டதாய் இருக்கிறது.

14 தேவனுக்கான அன்பு:

[அ] தேவனுக்கான அன்பு என்பது அவரது அன்பை உணர்ந்து அவரிடம் செலுத்தும் அன்பாய் இருக்கிறது. (உபாகமம் 6:5)

[ஆ] இவ்வன்புக்குரிய தகுதியானது, உங்களது முதிர்ச்சியை சார்ந்ததாய் இருக்கிறது. (பிலிப்பியர் 1:20,21; எபேசியர் 3:17-19; 1 யோவான் 4:17-18)

[இ] சபை யுகத்தில் விசுவாசிகள் அன்பு கூறுவது என்பது முதலில் இடம் பெறுகிறதாய் இருக்கிறது, இது பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்படுகிறதன் மூலம் நிகழுவதாய் இருக்கிறது. பாவத்தை அறிக்கை செய்தல் என்பது முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது. (எபேசியர் 5:2, c/f 5:18)

[ஈ] இயேசுக்கிறிஸ்து தேவன் மீதுள்ள அன்பை கிருபை மூலம் துவங்குகிறவராய் இருக்கிறார். (எபேசியர் 5:25-27; 1 யோவான் 4:8-10; 4:19)

[உ] தனது சுயசித்தத்தைப் பயன்படுத்தி, ஒரு விசுவாசி தேவனை நேசிக்கிறவராய் இருக்கிறார்.

[ஊ] ஒரு விசுவாசி கிறிஸ்துவினிடத்தில் அன்புகூறாது போனால், அது சாபகரமானதாய் இருக்கிறது, மற்றும் சிட்சையைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது. (1 கொரிந்தியர் 16:22).

[எ] தேவனுக்கான அன்பில் ஒருவர் தேவனுக்காக பணி செய்ய ஏவப்படுகிறவராய் இருக்கிறார், மற்றும் சாட்சிபகருவருமாய் இருக்கிறார். (2 கொரிந்தியர் 5:14).

[ஏ] இவ்வன்பானது கிருபையில் துவங்கி, தொடர்ந்து விசுவாசியில் பெருகி, தேவனிடத்திலும் மற்றும் மனிதரிடத்திலும் கிருபையுள்ள நடத்தையின் மூலம் வெளிப்படுகிறதாய் இருக்கிறது. . (தானியேல் 9:4; சங்கீதம் 31:23; 119:132; 1 கொரிந்தியர் 2:9)

[ஐ] தேவனுக்கான அன்பை செலுத்த வேண்டும் எனப் பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்கு கட்டளையிடப்பட்டுள்ளது. (உபாகமம் 6:5; 10:12; 11:1; 11:13).

[ஒ] தேவனுக்கான அன்பில் உண்மையான மகிழ்ச்சிக்கான அடிப்படை இருக்கிறது, மட்டுமின்றி மனித வர்க்கத்தை அன்புகூறும் தகுதியானது உருவாகிறதாய் இருக்கிறது. (உபாகமம் 30:16)

[ஓ] யுத்தத்தில் தேவனிடத்தில் செலுத்தும் அன்பானது தைரியத்தை அளிக்கிறதாய் இருக்கிறது. (யோசுவா 23:10-11).

[ஔ] அவரது வார்த்தையின் மூலம் நாம் தேவனைக் காணும்போது, தேவனது வார்த்தையின் மூலமாய் அல்லாது அவரை நேசிப்பது என்பது கூடாத காரியமாய் இருக்கிறது. (சங்கீதம் 119:165-167, 1 பேதுரு 1:8)

15. மனைவிக்கான அன்பு:

[அ] இப்படிப்பட்ட அன்பானது கடந்த கால நித்தியத்தில், எதிர்பாலரிடம் காண்பிக்க தேவனால் வடிவமைக்கப்பட்டதாகும், விவாகமற்று இருக்கும் விரதத்துவம் இருக்கும் நபர்கள் மட்டுமே இதற்கு விதிவிலக்காவார்கள். (உன்னதப்பாட்டு 8:6-7).

[ஆ] மரணம் போன்று வலிமையுடையது, இது தேவனால் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது.

[இ] அன்பை மரணத்தால் அழிக்க இயலாது (பிரசங்கி 9:5-6).

[ஈ] இப்படிப்பட்ட அன்பானது பிரத்தியேகமாய் ஒருவரிடம் மட்டுமே

காட்டப்படக்கூடியதாய் இருக்கிறது. (நீதிமொழிகள் 5:18-19)

[உ] இவ்வகையான அன்பு இரு ஒருவர் மறைவாய் இருப்பினும் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது. (உன்னதப்பாட்டு 1:13, 4:6) இருவர் ஓரிடத்தில் தாபரிக்கும் போதும் பாதுகாக்கப்பட்டு இருக்கிறது. (உன்னதப்பாட்டு 2:4). மனிதன், மனுஷியானவளுக்கு ஜெயக்கொடியாய் இருக்கிறான்.

[ஊ] மனைவியினிடத்தில் அன்பு கூறுதல், கர்த்தரில் உறவு வைப்பதை விவரிக்கிறதாய் இருக்கிறது. (எசேக்கியேல் 16:8, எபேசியர் 5:23-33).

[எ] திருமண உறவில் உள்ள பாவமானது, எல்லாவிதமான அன்பையும் தாக்குகிறதாய் இருக்கிறது. (1 யோவான் 5:18).

[ஏ] அன்பு கூறுவதற்கான காலத்தை தேவன் ஒதுக்கியுள்ளார். (பிரசங்கி 3:8).

16. பிறருக்கான அன்பு:

[அ] பிறரிடத்தில் காட்டும் அன்பானது பெரிதளவில் நிலையானத் தன்மை வாய்ந்ததும் மற்றும் வல்லமை மிக்கதுமாய் இருக்கிறது. (2 சாமுவேல் 1:26, நீதிமொழிகள் 27:9,10, யோவான் 15:13, கலாத்தியர் 5:4).

[ஆ] பிறரிடத்தில் அன்பு கூறும்போது, இன்பத்தையும் மற்றும் ஓய்வுடன் இருக்கும் சூழலையும் அளிப்பதாய் இருக்கிறது. (ரோமர் 13:10, நீதிமொழிகள் 10:12)

[இ] பிறரிடத்தில் அன்பு கூறுதல் மாய்மாலத்திலிருந்து விடுவிக்கிறதாய் இருக்கிறது. (ரோமர் 12:9).

[ஈ] பிறரிடத்தில் அன்பு கூறுதல் ஒருவருக்கொருவர் ஊழியம் செய்யும் நோக்கத்தை அளிக்கிறது. (கலாத்தியர் 5:13, 2 சாமுவேல் 1:26).

[உ] பிறரிடத்தில் அன்பு கூறுதல் கிருபையை பெருகச் செய்கிறதாய் இருக்கிறது. (பிலமோன் 9-12).

[ஊ] பிறரிடத்தில் அன்பு கூறுவதன் மூலம், சத்துருக்களை அழித்தல் சாத்தியம்:

1. மனோநிலை சார்ந்த பாவங்கள். (யோபு 19:19, நீதிமொழிகள் 16:28).
2. நாவினால் செய்யும் பாவங்கள். (நீதிமொழிகள் 17:9)

3. தேசிய அளவில் ஏற்படும் பெரிதான அழிவு. (எரேமியா 6:21-23, 20:4-6).

[எ] பிறரிடத்தில் அன்பு கூறுவது போன்று நடிக்கலாம். (நீதிமொழிகள் 19:6-7).

[ஏ] தெய்வீக சிட்சை காரணமாக, பிறரிடத்தில் அன்பு கூறுவது அகற்றப்படலாம். (சங்கீதம். 38:11, 88:18)

17. நாம் தேவனது அன்பை (AGAPE=ultimate concern) பெறுகிறவர்களாய் இருக்கிறோம், இதனை சிலுவை மூலம் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம். 1 யோவான் 4:10,19, யோவான் 3:16.

18. எல்லோருக்கும் சுவிஷேசத்தை அளிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், இதன் மூலம் அவர்கள் தேவனது அன்பை கண்டுகொள்ளச் செய்தல் வேண்டும். மத்தேயு 28:18-20.

19. நமது நடத்தையானது தேவனது அன்பை செயல் உருவில் காட்டுகிறதாய் இருத்தல் வேண்டும். 1 யோவான் 4:12, யோவான் 13:35.

20. எல்லா விசுவாசிகளும் தங்களது அன்பை சக விசுவாசிகளிடம் காட்டுதல் வேண்டும். யோவான் 13:34, 1 யோவான் 4:7,8, பிலிப்பியர் 2:2-8

21. கிறிஸ்துவில் வளரும்போது மட்டுமே, இது சாத்தியமாகிறது, அவரது வார்த்தையானது நமது சிந்தனையில் மாற்றம் பெறும்போது, அன்புகூறுவதற்குரிய சாத்தியத்தை அளிக்கிறதாய் இருக்கிறது. 1 பேதுரு 3:18. அன்பு என்பது ஆவியானவரின் கனியில் ஒன்றாய் இருக்கிறது.

22. அகாப்பே அன்பு ஒரு விசுவாசியில், நித்தியத்திற்கேதுவான பலனை ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது, இதை மற்றவர்களது வாழ்வில் செயல்படுத்தும் போது, நித்தியத்திற்கேதுவான மனநிலையுடன் செய்கிறவர்களாய் இருக்கின்றனர். 1 கொரிந்தியர் 13::1-8.

23. நாம் விசுவாசிகளிடத்தில் காட்டும் அன்பானது, நடைமுறைக்கேற்றதாயும், அவர்களது ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் மற்றும் சரீரப்பிரகாரமான நலனுக்கும் பயனுள்ள நிலையில் அமைதல் வேண்டும். 2 தெசலோனிக்கேயர் 3:15, யாக்கோபு 5:13-16, 1 தீமோத்தேயு 5:1-3, 1 தெசலோனிக்கேயர் 5:11-24.

24. தேவனது அளவுகடந்த அன்புக்குக் கீழ் இருப்பதை நாம் காண்கிறபடியால், மற்றவர்களிடத்தில் அன்புகூறும் பெலனை பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம். நாம் அவரது நேசப்பிள்ளைகளாய் இருக்கிறார், நமது நேசத்துக்குரியவர் நமக்குள் இருக்கிறார், நாம் எப்பொழுதும் அவரது அன்பை பெறுகிறவர்களாய் இருக்கிறோம். ரோமர் 8:37, யோவான் 13:1, 20:2, 21:7,20, 15:9, எபேசியர் 2:4, 5:2, 25, வெளி. 1:5.

நம்பிக்கை

1. நமது நம்பிக்கை கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் உண்மை வாழ்க்கையை மற்றும் அவரது செய்தியை அடிப்படையாகக் கொண்டுள்ளது (ரோமர்5:4-6, 1 தீமோத்தேயு 1:1).

2. நமது உயிர்த்தெழுதல்கூட, நமது நம்பிக்கையாய் இருக்கிறது (அப்போஸ்தலர் 24:15).நம்பிக்கையே இங்கும், இப்பொழுதும் நமது நடத்தையை ஊக்கப்படுத்துவதாய் இருக்கிறது. (1 யோவான்3:3).

3. பழைய ஏற்பாட்டுக்காலத்தில் உயிர்த்தெழுதலில் நம்பிக்கை வைத்தனர் மற்றும் வாஞ்சித்தனர் அனால் கர்த்தரின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் நமக்கு முழுமையான நிச்சயம் உண்டாயிருக்கிறது. (அப்போஸ்தலர்26:6-8)

4. உயிர்த்தெழுதலின் நம்பிக்கை "ஜீவனுள்ள நம்பிக்கையாய்" இருக்கிறபடியால், நமது ஆத்துமாவை ஊக்கப்படுத்தி, நாம் பெற்று இருக்கிறவைகளை, நமக்கு உணர்த்துகிறவராய் இருக்கிறார். (1 பேதுரு 1:3)

5. நித்திய ஜீவனுக்குரிய நம்பிக்கையையும் கூட நாம் பெற்று இருக்கிறோம். (தீத்து3:7)

6. இது சபையின் திறவுகோல் உபதேசமாய் இருக்கிறது, இது இல்லாமல் நமது விசுவாசம் செல்லுபடியாகாது (1 கொரிந்தியர்15:19)

7. உபத்திரவக்காலத்திற்குஉட்படாமல், சபை எடுத்துக்கொள்ளப்பட்டு விடுவிக்கப்படும் என்பது நமது நிச்சயமான நம்பிக்கையாய் இருக்கிறது, சபை எடுத்துக்கொள்ளப்படுதல் உபத்திரவக்காலத்திற்கு முன்னதாய் நிகழும் (ரோமர்8:24-25, 1 தெசலோனிகேயர்1:10; 4:13-18).

8. வரப்போகிற பேரழிவுக்கு நம்மை விலக்கி இரட்சிக்க, கர்த்தரின் வருகை "நாம் நம்பும் ஆனந்த பாக்கியமாய் இருக்கிறது" (தீத்து 2:13).

9. நாம் முதிர்ச்சியடைவோமானால், நம் அனைவரும் ஆசீர்வாதமான நம்பிக்கையைப்பெறுவோம். (கலாத்தியர்5:5)

10. நமது எல்லாரின் முதிர்ச்சியில், நமக்கு ஒரே நம்பிக்கை அளிக்கப்பட்டுள்ளது (எபேசியர்4:4-6).

11. எல்லா போதகர்களுக்கும், தங்களது மந்தை, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் பெரிதான மகிமைக்குள், முதிர்ச்சியடைந்து செல்லும் என்கிற நம்பிக்கை உண்டு. (1தெசலோனிகேயர் 2:19-20).

12. கர்த்தர் நமக்காகச் செய்ததை, கண்டும் அறிந்தும் இருக்கிற நாம், அவைகள் மூலம் நிச்சயத்தை எடுத்துக்கொள்கிறோம். (1பேதுரு 1:21).

13. தேவன் நமக்கு எப்படிப்பட்டவராய் இருக்கிறார், என்பது அவரது வார்த்தையை கேட்பதன் மூலம் நமக்கு கிடைக்கும் நம்பிக்கையாய் இருக்கிறது. (ரோமர்15:4).

14. ஸ்திரமாயும் உறுதியாயும் தேவ வசனத்தில் நிலைத்திருப்பது, நம்பிக்கையை அறியும் வழியாய் இருக்கிறது. (கொலோசெயர் 1:23).

15. நாம் நம்பிக்கையில் வளர கேட்டுக்கொள்ளப்படுகிறோம். (எபிரெயர் 6:11-12).

16. நமது உபதேசம் மற்றும் நம்பிக்கையை உறுதியாய்ப் பற்றிக்கொள்ள வேண்டும். (எபிரெயர் 3:6).

17. நமது ஆத்துமாவில், எல்லா நம்பிக்கையும் நங்கூரமிடப்படுகின்றன. (எபிரெயர் 6:18-19).

18. தேனன் நித்திய ஆறுதலையும் நம்பிக்கையையும் கிருபையாய் நமக்களித்து இருக்கிறார் (2தெசலோனிகேயர் 2:16-17).

19. போதகர் தேவ வசனங்களை போதிப்பதின் நோக்கம், தேவன் சொல்ல விரும்பும் அனைத்தையும், விசுவசிகளுக்கு கூறி, எல்லா விசுவாசிகளும், நம்பிக்கையில் பங்கெடுக்கச்செய்வதே. (1 கொரிந்தியர்9:10, 2 கொரிந்தியர் 3:12).

20. ஒரு போதகர் தனது ஜனங்களுக்காக, அவர்கள் தங்களது அழைப்பின் நம்பிக்கையை அறிந்து உறுதிப்படுத்திக்கொள்ள ஜெபிப்பது ஆகும். (எபேசியர் 1:18) . இது அவர்களது இரட்சிப்பு, உயிர்த்தெழுதல், நித்திய பாதுகாப்பு, நித்திய பிரதிபலன், நித்திய ஜீவன், ஆசீர்வாதங்கள் மற்றும் முதிர்ச்சி, மற்றும் அவர்களது வாழ்க்கைப்பிரச்சனைகளிலிருந்து விடுதலை போன்றவற்றிற்காக ஜெபிப்பது, உள்ளடங்கும்.

21. அவிசுவாசிகளுக்கு நம்பிக்கை இல்லை. சுவிஷேசத்தை அறியும்படி அவர்களுக்கு ஊக்கமளிக்கமளிக்கப்பட வேண்டும். (எபேசியர்2:12, 1 தெசலோனிக்கேயர்4:13).

22. நமது நம்பிக்கையை பாதுகாத்துக்கொள்ள நாம் எப்பொழுதும் ஆயத்தமாய் இருக்க வேண்டும். (1 பேதுரு3:15)

23. "இப்பொழுது விசுவாம், நம்பிக்கை, அன்பு இம்மூன்றும் நிலத்திருக்கிறது இவைகளில் அன்பே பெரியது." (1கொரிந்தியர் 13:13).

<u>தெரிந்து கொள்ளுதல் மற்றும் முன்குறித்தல்</u>

1. வேதாகம அடிப்படையிலான முன்குறித்தல், மனித சுய சித்தத்துடன் முறண்படுவது இல்லை.

2. கிறிஸ்து கடந்த கால நித்தியத்தில் குறிப்பிட்ட நோக்கத்திற்காக முன்குறிக்கப்பட்டவராய் இருந்தார். - சிலுவைக்குசென்று மகிமைக்கு உயர்த்தப்படுவது
(ஏசாயா42:1, 1 பேதுரு2:4-6, அப்போஸ்தலர்2:23)

3. மனித வர்க்கத்தின் எல்லா நபர்களும், வரையறுக்கப்படாத பிராயச்சித்தத்தின் கீழ் பிதாவாகிய தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டுள்ளனர். (2 பேதுரு 3:9, 1 யோவான்2:2)

4. ஒரு நபர் தனது இரட்சிப்புக்காய் கிறிஸ்துவில் நம்பிக்கை வைக்கும்போது, அந்நபர் கிரிஸ்துவுடன் இணைக்கப்பட்டு, கிறிஸ்துவின் தெரிந்துகொள்ளுதலிலும், மற்றும் முன்குறிக்கப்படுதலிலும் பங்குபெறுகிறார். (1 கொரிந்தியர் 1:2, 30, ரோமர் 8:28, 32, எபேசியர்1-4)

5. தெரிந்துகொள்ளுதலுக்கு, முன்அறிதலுடன் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. கடந்தகால நித்தியத்தில், யார் விசுவாசிப்பார் என்று தேவன் அறிவார், அப்படிப்பட்டவர்களை அவர் முன்குறித்துள்ளார், அழைத்தும் இருக்கிறர், மற்றும் அவர்கள் இரட்சிக்கப்பட்டும் இருக்கின்றனர். (ரோமர்8:29-30, 2 தீமோத்தேயு 1:9)

6. இதினிமித்தம், தெரிந்துகொள்ளுதலும், முன்குறித்தலும் விசுவாசிகளுக்கு மட்டுமே பொருந்தும். எந்தஒரு தனிப்பட்டநபரும் நரகத்திற்கென முன் குறிக்கப்படவில்லை - இது சுயசித்தத்தத்தின் தெரிந்து கொள்ளுதலாய் இருக்கிறது. (யோவான்3:18, யோவான் 3:36).

7. தெரிந்துகொள்ளுதல் என்பது ஒவ்வொரு விசுவாசியின் நிகழ்கால மற்றும் எதிர்கால உரிமை சொத்தாக இருக்கிறது.
(யோவான் 15:16, கொலோசெயர்3:12)

8. தெரிந்துகொள்ளுதல் உலகலாவிய சபையின் அஸ்திபாரமாகக்கூட இருக்கிறது. (1 தெசலோனிக்கேயர்1:4)

9. ஐந்து கிரேக்க சொற்கள், முன்குறித்தல் என்கிற சொல்லை இணைக்கும் சொற்களாய் இருக்கின்றன.

a) Pro Orizo ப்ரோ ஒரிஜோ - முன்பதாகவே வடிவமைத்தல் (ரோமர்8:28, 29எபேசியர்1:5, 11)

b) Protithemi ப்ரோடிதெமி - முன் நிர்ணயித்தல் (ரோமர் 3:25, எபேசியர் 1:9)

c) Prothesis ப்ரோதெஸிஸ் - ஒரு முன் நிர்ணயிக்கப்பட்ட திட்டம் (ரோமர் 8:28, 9:11, எபேசியர் 1:11, 3:11, 2 தீமோத்தேயு 1:9).

d) Proginosko ப்ரோகினோஸ்கொ - முன்னதாகவே தீர்மானித்தல், முன்தீர்மானித்தல், (ரோமர் 8:29, 11:2, 1 பேதுரு1:20)

e) Prognosis ப்ரோக்னோஸிஸ் - முன்னறிவு, அல்லது நோக்கத்துடன் முன்நிர்ணயித்தல் (அப்போஸ்தலர்2:23, 1பேதுரு 1:2)

10. யூதாஸின் வாழ்க்கை முன்தீர்மானம் மற்றும் சுயசித்தம் இவைகளுக்கு நல்ல எடுத்துக்காட்டாய் இருக்கிறது.

a) தேவனின் அழைப்பு எல்லா ஜனங்களுக்கும் உரியதாய் இருக்கிரது, அவரது ஆசை எல்லோரும் இரட்சிப்படைய வேண்டும் என்பதே (மத்தேயு 28:18-20, யோவான்3:16 1 யோவான் 2:2, 3:23)

b) இழந்து போனவர்கள் மீது தேவன் நீடிய பொறுமை உள்ளவராக இருக்கிறார், ஒருவரும் கெட்டுப்போவது அவரது சித்தம் அல்ல (2பேதுரு 3:9)

c) தேவனது அழைப்பு எல்லோருக்கும் உரியது, ஆனால் மக்கள் அதற்கு செவிசாய்க்கவேண்டும். (யோவான் 3:36, 16:8-11)

d) தமது மிகுந்த அன்பினிமித்தமே தேவன் அழைக்கிறார். (எரேமியா 31:3, யோவான்3:16)

e) அவரது அன்புக்கு எதிர்த்து நிற்கிறவர்கள், தங்களது ஆத்துமாவை கடினப்படுத்துகிறார்கள் மற்றும் சாத்தானுக்கு திறந்த வாயிலை ஏற்படுத்திக்கொடுத்து அவனது செயல்களுக்கும், அவன் பிடித்து ஆட்டிப்படைக்கவும் தங்களை அற்பணிக்கின்றனர். (ரோமர் 1:20-32, 2 தெசலோனிக்கேயர் 2:9-12)

f) கர்த்தர் தமது அன்பினிமித்தம் யூதாஸை தெரிந்துகொண்டார். (மத்தேயு10:1-4, யோவான்13:18) மற்றும் கனப்படுத்தப்படுகிற விருந்தினருக்கு அளிக்கப்படும், இரசத்தில் தோய்க்கப்பட்ட துணிக்கையைப் பெற்று இராவிருந்தின் போது கர்த்தரின் வலது பக்கத்தில் அமரும் பாக்கியத்தையும் பெற்றான். (யோவான் 12:6, 13:18)

g) திருடனும் அவரைக்காட்டிக் கொடுக்கிறவனாயிருந்தும் இயேசு அவனை நேசித்தார். (யோவான் 12:6, 13:18)

h) இரட்சிக்கப்படாத மனிதனாய் சுவிஷேச ஊழியத்தில் பங்கு பெற்றான். மற்ற அனைவரும் அவரது வார்த்தையை வாசித்தறிந்ததன் மூலம் இரட்சிக்கப்பட்டு இருந்தனர் ஆனால் யூதாஸோ இரட்சிப்படையவில்லை. (மத்தேயு10:1-8)

i) அவனது தீர்மானத்தால் பாழாக்குகிறவனின் குமாரனாய் மாறினான், அவனால் யாரையும் குற்றப்படுத்த இயலவில்லை (யோவான் 17:12)

11. இழுத்துக்கொள்ளுதல் (gk. elkuo) இதன் பொருள் இழு, வழிநடத்துதல் அல்லது பலவந்தமாய் முன்னேறச் செய்தல், என்பதாகும். தெரிந்து கொள்ளப்பட்ட அனைவரும், எளிதாக பரிசுத்த ஆவியானவரின் கிரியைகளுக்கு உட்படுகிறவர்களாய் இருப்பர். இழுத்துக்கொள்ளுதல் என்பது பதில் செய்யும்படியான ஊக்கத்தை அளிக்கிறதாய் இருக்கிறது.

12. எல்லா ஜனங்களும் மனந்திரும்பும்படியாய் அழைக்கப்படுகிறவர்களாய் இருக்கின்றனர், ஆனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் மட்டுமே இழுத்துக்கொள்ளப்படுகிறவகளாய் இருக்கின்றனர். . (யோவான் 3:16, 36 , 12:32 16:8-11, 1 யோவான் 2:2)

13. விசுவாசிகள், அழைக்கப்பட்டோர், தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் இவை அனைத்தும் ஒரே நபரைக் குறிக்கப் பயன்படும் சொற்களாய் இருக்கின்றன. தேவன் அழைக்கிறார், பரிசுத்த ஆவியானவர் கிரியை நடப்பிக்கிறார், நாம் அன்பின் அழைப்பிற்கு இசைய நடந்து கொள்ளுதல் வேண்டும். (எரேமியா 31:3, யோவான் 3:16)

14. ஒரு அவிசுவாசி இரட்சிப்பைக் குறித்து நேர்மறையாய் சிந்தித்து, அழைக்கப்படும்போது, அன்பானது வெளிப்பட்டு, அவர் இரட்சிப்படையும் முன்னேற்றத்தை அவரில் ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது. (பிலிப்பியர் 2:13).

15. தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு தேவன் தமது இரட்சிப்பாகிய வரத்தினை அளிக்கிறவராய் இருக்கிறார். (யோவான் 1:13, ரோமர் 9:16 எபேசியர் 2:8-9, தீத்து 3:5-6).

16 தேவன் தமது கிரியைகளுக்காக, மகிமையை பெற்றுக் கொள்கிறவராய் இருக்கிறார், நாம் அதன் பயனனைப் பெறுகிறவர்களாய் இருக்கிறோம். (யூதா 24-25).

அ] தேவன் இதை கடந்த கால நித்தியத்தில் திட்டம் வகுத்து இருந்தார்.
ஆ] தேவன் இதை சிலுவையில் அளிக்கிறவராய் இருக்கிறார்.
இ] வாழ்வில் ஏற்படும் உறுதிப்பாட்டின் மூலம், தேவன் இதை ஆயத்தப்படுத்துகிறவராய் இருக்கிறார்.
ஈ] இதை ஏற்றுக்கொள்ளும்படியான, ஊக்கத்தை தேவன் அளிக்கிறவராய் இருக்கிறார்.
உ] தெரிந்து கொள்ளப்பட்டவர்களுக்கு தேவன் இரட்சிப்பாகிய வரத்தை அருளுகிறவராய் இருக்கிறார்.
ஊ] புதிய விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியானவரை தந்தருளுகிறவராய் இருக்கிறார்.
எ] விசுவாசிக்கு புதிய சரீரத்தை, தேவன் உருவாக்குகிறவராய் இருக்கிறார்.

17. கடந்த கால நித்தியத்திலிருந்து கிறிஸ்து தெரிவு செய்யப்பட்டவராய் இருக்கிறார். (ஏசாயா 42:1, 1 பேதுரு 2:4-6). விசுவாசியின் தெரிந்து கொள்ளுதல் என்பதன் பொருள், கிறிஸ்துவின் தெரிந்து கொள்ளுதலை பகிர்ந்து கொள்கிறவர்களாயிருந்து, கிறிஸ்துவின் அந்தியத்தை பகிர்ந்துகொள்கிறவர்களாய் இருக்கிறோம்.

18. தெய்வீக திட்டம் என்பதன் அடிப்படையில், இயேசுக்கிறிஸ்து தெரிவு செய்யப்பட்டது இடம் பெற்றுள்ளது. (யோவான் 15:15, எபேசியர் 1:4, 2 தீமோத்தேயு 2:13, 1 பேதுரு 1:2)

19. ஒவ்வொரு விசுவாசியும் அவர்களது ஸ்தானத்திற்கேற்ற பரிசுத்தமாக்குதலின் மூலம் கிறிஸ்துவின் தெரிந்துகொள்ளுதலில் பங்கு பெறுகிறவர்களாய் இருக்கின்றனர். (1 கொரிந்தியர் 1:2, 30, ரோமர் 8:28, 32, எபேசியர் 1-4)

20. தெரிந்து கொள்ளுதல் என்பது, இரட்சிப்பின் போது இடம் பெறுகிறதாய் இருக்கிறது. (1 தெசலோனிக்கேயர் 1:4, 2 தெசலோனிக்கேயர் 2:13, 2 தீமோத்தேயு 1:9).

21. மனிதன் தனது சுயசித்தத்தை நேர்மறையாக நடைமுறைப்படுத்துவதன் அடிப்படையை, தெரிந்துகொள்ளுதல் சார்ந்து இருந்து, தேவனது திட்டத்தில் பங்குபெற வைக்கிறது. (யோவான் 3:16).

<u>தேவனின் திட்டம்</u>

1. கடந்த கால நித்தியத்தில், தேவன் ஒவ்வொரு விசுவாசிக்காக ஒரு திட்ட,ம் வகுத்திருந்தார், மானிட சரித்திரத்தில் ஒவ்வொரு நிகழ்வும், தீர்மானமும் அத்தீர்மானத்தை காரிய ரூபப்படுத்துகிறது.

2. தேவனது திட்டம் இயேசுக்கிறிஸ்துவின் ஆளத்துவதை மையமாய் கொண்டு செயல்படுகிறது. (1 யோவான் 3:23, எபேசியர் 1:4-6).

3. தேவனுடைய திட்டத்திற்குள் பிரவேசிப்பது கிருபையின் அடிப்படையில் இருக்கிறது. (எபேசியர்2:8, 9) தேவனின் ஏகாதிபதித்துவமும், மனிதனின் சுயசித்தமும் சிலுவையில் சந்திக்கிறதாய் இருக்கிறது. தேவன் முழுமையாக்கப்பட்ட இரட்சிப்பை கொண்டு வருகிறார், மனிதன் தனது விசுவாசத்தை கொண்டுவருகிறான்.

4. தேவனின் திட்டம் எல்லா நிகழ்வுகள் மற்றும் செயல்களை உள்ளடக்கி சித்தரிக்கப்பட்டிருக்கிறது. (1 பேதுரு1:2).

5. அவரது திட்டத்தின் கீழ், தேவன் சில காரியங்களை செய்ய நேரடியாய் கட்டளை கொடுக்கிறார், சிலவற்றை நிறுவணங்கள், இஸ்ரவேல், மற்று சபை மூலம் செய்கிறார்.

6. தேவன் மனிதரின் சுயசித்தத்தில் எவ்விதத்திலும் குறுக்கிடாத படி, அவர் தமது பூரணமான திட்டத்தை வகுத்துள்ளர், அத்திட்டத்தில் காரணங்களும் விளைவுகளும் உள்ளடங்கியுள்ளது. மட்டுமல்லாது தேவைகள் சந்திக்கப்படல், பாதுகாக்கப்படுதல், மற்றும் செயல்பாடுகள் போன்றவைகளும் அடங்கியுள்ளன.

7. தேவனது திட்டத்தில் அநேக செயல்பாடுகள் இருக்கின்றன. அவைகள் அனைத்தும் பூரணமான, நித்தியமான, மாறாத ஒரு முழுமையான திட்டத்தை நிறைவேற்றுகின்றன.

8. தேவனுடைய திட்டம் மனித சுதந்தரத்துடன் முறண்பாடற்ற நிலையில் இருக்கிறது, அது மனித சுயசித்தத்தை எல்லைக்குட்படுத்துவதோ, அல்லது பலவந்தம் செய்வதோ கிடையாது. தேவன் காரணப்படுத்துவதற்கும் அவர் அனுமதிப்பதற்கும் உள்ள வித்தியாசத்தை ஏற்படுத்துதல் அவசியம். தேவன்

சிலுவையைக் காரணப்படுத்தினார் ஆனால் பாவத்தை அநுமதித்தார். தேவன் பாவத்துக்கு காரணருமல்ல, அதை ஆதரிப்பவரும் அல்ல.

9. அவருடைய திட்டம் மனிதன் சுயசித்தத்தைப்பெற்று இருப்பதை வருணிக்கிறது. தேவன் மனுக்குலத்தில், பாவத்தை பாராமுகமாய் இருந்ததில்லை. மனிதனின் ஆரம்பம், பூரணமான சூழலிலும், அறியாமையிலுமிருந்து துவங்கியது. மனிதன் பாவம் செய்தபோது சுயமாய் தனது சுயசித்தத்தின்படியே அதை செய்தான். ஆயிரவருட பூரணமான சூழலிலும் மனிதனால் பாவம் செய்ய இயலும், அவன் பாவம் செய்வான்.

10. தேவனுடைய திட்டம் சார்ந்த, தெய்வீக திட்டங்களுக்கும், மற்றும் பூமியில் மனிதன் நடந்துகொள்வதற்கு ஏற்படுத்தப்பட்ட தெய்வீக பிரமாணங்களுக்குமிடையே உள்ள வித்தியாசத்தை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். தெய்வீக பிரமாணங்கள் தகுந்த நேரத்தில் நிகழும், தெய்வீகத் திட்டங்கள் நித்தியத்தில் நிகழும்.

11. தேவனது திட்டங்கள் அவரது அறிவிலிருந்து வந்தவைகளாகும். அவர் அவைகளை கடந்தகால நித்தியத்தில் நிச்சயமானவைகள் என கண்டுணர்ந்திருந்தார். தேவனது முன்னறிவு ஒரு காரியத்தை நிச்சயப்படுத்துவது இல்லை, ஆனால் கடந்த கால நித்தியத்தில் அக்காரியங்கள் நிச்சயம் என முன்னறியப்பட்டிருந்தது.

12. முன்னறிதலுக்கும், முன் தீர்மானித்தலுக்கும் வித்தியாசமுண்டு. முன் தீர்மானித்தல் நிச்சயமானவைகளை ஸ்தாபிக்கிறது ஆனால் ஸ்தாபிக்கப்பட்ட நிச்சயமானவைகளுக்காக அது அளிக்கப்படுவது இல்லை. இதைத் திட்டமே அளிக்கிறதாய் இருக்கிறது. (ரோமர்8:29, அப்போஸ்தலர்2:23, 1 பேதுரு 1:2).

13. இதினிமித்தம் தெரிந்துகொள்ளப்பட்டவர்கள் முன்னறியப்பட்டிருக்கிறார்கள், முன்னறியப்பட்டவர்கள் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாய் இருக்கிறார்கள். தேவன் கடந்தகால நித்தியத்தில் தனிப்பட்ட நபரின் சுயசித்தத்தினால் உண்டாகும், வாழ்க்கையின் ஒவ்வொரு தனிப்பட்டப் பிரச்சனையின் போது, அவர்கள் எவ்வழி செல்வர் என தேவன் அறிந்திருந்தார். தேவன் மனித சித்தத்தில் தலையிட்டு அதை வற்புறுத்துவது இல்லை, கொடுக்கப்பட்ட காலத்தில் ஒவ்வொரு

சுயசித்தத்தின் வழியையும் அவர் நன்கு அறிவார். சுயசித்தம் தீர்மானிக்க தேவன் பலனளிக்கிறவராய் இருக்கிறார்.

14. தேவன் தனது சுபாவத்தில் முறண்படாதவராகையால், விசுவாசிக்கு மிக சிறப்பானவற்றை திட்டமிட்டுள்ளார். தேவன் பூரணர், அவரது திட்டம் மற்றும் அவரளிப்பவகளும் அதனிமித்தம் பூரணமானவைகள்.

15. சிலுவை கடந்தகால நித்தியத்தில் திட்டமிடப்பட்டு இருந்தது, அனால் கிறிஸ்துவின் மனுஷீக சுயசித்தம் சிலுவைக்கு செல்ல, கெத்சமனேயில் தீர்மானம் எடுக்க வேண்டியதாய் இருந்தது. (மத்தேயு26:39-42). தேவன் இரட்சிப்பை சிலுவை மூலம் அளிக்கிறார் மற்றும் அது சுயசித்தத்தின் அடிப்படையில் எடுக்கும் தீர்மானத்தினால் ஒருவர் ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதுமாயிருக்கிறது.

16. எவ்விதத் திட்டமும் தன்னில்தானே மனித சுதந்தரத்தை எதிர்ப்பது இல்லை, மனித சுயசித்தத்தின் மூலம் ஒன்றை தெரிவு செய்துவிட்டபொழுது, தேவனது திட்டம் மனித சுதந்தரத்தை வரையறுக்கிறது. அதே நேரத்தில் தேவனிடத்தில் அன்பு கூறவும், அவரை பாராட்டவும் சுதந்திரம் அளிக்கப்படுகிறது. கிறிஸ்தவ வாழ்க்கை வாழ தேவன் வழிமுறைகளை விதித்து இருக்கிறார்.

<u>கிறிஸ்து: கிறிஸ்துவின் தெய்வீகம்:</u>

1. இயேசுக்கிறிஸ்து தேவனும் மற்றும் மனிதனுமாய் இருக்கிறார். அவரில் இவ்விருத்தன்மைகளும் பிரிக்கமுடியாதபடி இணைக்கப்பட்டுள்ளன. இப்படிப்பட்ட இணைப்பு தனிப்பட்டதாயும், நித்தியத்திற்குரியதாயும் இருக்கிறது. (பிலிப்பியர் 2:5-11,யோவான்1:1-14,ரோமர் 1:4, ரோமர் 9:5, 1 தீமோத்தேயு 3:16)

2. இயேசுக்கிறிஸ்து தெய்வீகத்தில் குறைவற்றவராய் இருக்கிறார். இது அவரது தெய்வீக குணநலன்களை உள்ளடக்கியது.

a) சர்வ வல்லமை (ஆதியாகமம் 1,வெளிப்படுத்தல் 1:5, 6,17:14,19:16)

b) நித்திய ஜீவன் (ஏசாயா 9:6,மீகா5:2,யோவான் 1:1-2, 8:58,கொலோசியர் 1:16-17,எபேசியர் 1:4,வெளிப்படுத்தல் 1:8)

c) பரிசுத்தம் (லூக்கா 1:35,அப்போஸ்தலர் 3:14, எபிரெயர் 7:26)

d) அன்பு (யோவான்13:1, 34, 1 யோவான் 3:16)

e) மாறாதவர் (எபிரெயர் 13:8)

f) சர்வ ஞானம் (மத்தேயு 9:4,யோவான்2:25,யோவான்18:4, 1கொரிந்தியர் 4:5,கொலோசெயர் 2:3,வெளிப்படுத்தல் 2:23)

g) சர்வ வல்லமை (மத்தேயு24:30, 28:18, 1கொரிந்தியர்15:28, பிலிப்பியர் 3:2 1,எபிரெயர்1:3, வெளிப்படுத்தல்1:8)

h) சர்வ வியாபகம் (மத்தேயு28:20, எபேசியர் 1:23, கொலோசெயர் 1:27)

i) சத்தியம் (யோவான்14:6,வெளிப்படுத்தல்3:7)

3. கிறிஸ்து தேவகுமாரனாய் இருக்கிறார், அவர் பிதாவாகிய தேவனுக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் சமமானவர். (மத்தேயு28:19, 2கொரிந்தியர்13:14, 1 பேதுரு 1:2).

4. இயேசுக்கிறிஸ்துவின் தெய்வீகத்திற்கான ஆதாரங்கள்:

a) அவர் எல்லாவற்றையும் சிருஷ்டித்தவர் (யோவான்1:3,10, கொலோசெயர்1:16,எபிரெயர்1:10)

b) அவர் எல்லாவற்றையும் பாதுகாக்கிறவர் (கொலோசெயர்1:17,எபிரெயர் 1:3)

c) பாவத்தை மன்னிக்கிறார். (லூக்கா 5:21,24)

d) மரித்தோரை உயிரடையச் செய்கிறவர். (யோவான் 5:21,28-29, 11:42-43)

e) பரிசுத்தவான்களுக்கு பலன் அளிப்பவர் (2கொரிந்தியர் 5:10)

f) கடைசி நாட்களில் இவ்வுலகை நியாந்தீர்க்கப்போகிறவர். (யோவான் 5:22)

g) ஆராதணையை ஏற்றுகொள்கிறவர். (எபிரெயர்1:6)

5. இயேசுக்கிறிஸ்து யெகோவாவாக இருக்கிறார்.

a) இயேசுக்கிறிஸ்து தேவனாய் இருக்கிறார். (ஏசாயா9:6; யோவான்1:1 ; யோவான்20:28; 2 பேதுரு 1:1 ; தீத்து 2:13).யெகோவா தேவனாய் இருக்கிறார் (எரேமியா32:18; ஏசாயா43:10;ஏசாயா45:22; பிலிப்பியர் 2:10).

b) இயேசு 'இருக்கிறேன்' என அறியப்படுகிறார். (யோவான் 8:24; 8:58; 13:19; 18:5).யெகோவாவும் 'இருக்கிறேன்' என அறியப்படுகிறார். (ஏசாயா43:10;யாத்திரகாமம்3:13-14;உபாகமம் 32:39).

c) இயேசுக்கிறிஸ்து ஆதியும் அந்தமுமாய் இருக்கிறார். (வெளிப்படுத்தல்I:17; 2:8; 22:13).யெகோவாவும் ஆதியும் அந்தமுமாய் இருக்கிறார். (ஏசாயா44:6; 48:12; 41:4).

d) கன்மலையாய் இருக்கிறார். (1கொரிந்தியர்10:4; ஏசாயா8:14; 1பேதுரு2:6; மத்தேயு16:18). யெகோவாவும் கன்மலையாய் இருக்கிறார்.(யாத்திராகமம் 17:6; ஏசாயா17:10; 2 சாமுவேல்22-32; உபாகமம் 32:4).

e) இயேசுகிறிஸ்து இரட்சகராய் இருக்கிறார். (அப்போஸ்தலர் 2:21; 4:12; ரோமர்10:9; யூதா 25). யெகோவாவும் இரட்சகராய் இருக்கிறார். (சங்கீதம்106:21; ஓசியா13:4; ஏசாயா 45:21; 43:3,11).

f) இயேசுக்கிறிஸ்து கர்த்தாதி கர்த்தராய் இருக்கிறார். (வெளிப்படுத்தல் 17:14; வெளிப்படுத்தல் 19:16; 1 தீமோத்தேயு 6:14-16).யெகோவாவும் கர்த்தாதி கர்த்தராய் இருக்கிறார். (சங்கீதம்136:1-3; உபாகமம்10:17).

g) இயேசுக்கிறிஸ்து சிருஷ்டிகராய் இருக்கிறார் (யோவான்1:3; கொலோசெயர்1:15-17; எபிரெயர் 1:10).யெகோவாவும் சிருஷ்டிகராய் இருக்கிறார் (யோபு 33:4;ஏசாயா 40:28; ஆதியாகமம் 1:1).

h) இயேசுக்கிறிஸ்து ஒளியாய் இருக்கிறார் (யோவான் 8:12; யோவான் 1:9;லூக்கா 2:32). யெகோவாவும் ஒளியாய் இருக்கிறார் (மீகா 7-8; ஏசாயா 60:20; சங்கீதம்27:1).

i) இயேசுக்கிறிஸ்து நியாதிபதியாய் இருக்கிறார். (2 தீமோத்தேயு4:1; 2கொரிந்தியர்5:10;ரோமர் 14:10).யெகோவாவும் நியாதிபதியாய் இருக்கிறார். (அதியாகமம் 18:25; யோவேல் 3:12).

j) இதன் படி இயேசுக்கிறிஸ்து தேவன் என்பது தெளிவாகிறது. (1 யோவான் 5:5)

6. பிதாவாகிய தேவனை முழுவதும் சார்ந்து இயேசுக்கிறிஸ்து இப்பூமியில் வாழ்ந்தார். (மத்தேயு 4:1-11, 27:42-43)

7. இயேசுக்கிறிஸ்துவின் பிறப்பினால், அவரின் தெய்வீகத்தில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. அவர் பூமியில் வாழ்ந்த நாட்களில் சில குணாதிசியங்கள் பயன்படவில்லை, ஆனால் அவைகள் அழிக்கபடவோ, அல்லது அழிந்து போகவோ இல்லை. அப்படி அவரது தெய்வீகத்திலிருந்து ஏதாகிலும் அகற்றப்பட்டு இருக்குமேயானால், அது அவரது தெய்வீகத்தை அழிக்கும் தெய்வீகமாகும்.

8. இயேசுக்கிறிஸ்து மெய்யான மனிதனாய் விளங்கினார். இது அவரது தாகம், பசி, களைப்பு போன்ற சுபாவங்களை உள்ளடக்கியது. (யோவான் 19:28)

9. இயேசுக்கிறிஸ்துவுக்கு, ஆவி, ஆத்துமா, சரீரம் இருந்தது. ஆனால் பழைய பாவத்தன்மை இல்லை. அவர் பாவத்தன்மையற்றவராய் இருந்ததன் காரணம், கன்னிகையின் வயிற்றில் பிறந்ததால்.

10. தேவன் மாமிசத்தில் தோன்றினார், அதன் பொருள் தேவன் மனுஷீகத்தை மட்டும் பெற்றிருந்தார் என்பது அல்ல.

தேவன் -- திரித்துவம்

1. தேவன் ஒருவரே. அவர் மூன்று ஆளத்துவத்தில் வியாபித்திருக்கிறார். (2 சாமுவேல் 23:1-3, ஏசாயா 48:16, ஏசாயா 63:7-10, மத்தேயு 28:19, அப்போஸ்தலர் 2:33, 2 13:14).

2. தேவனுடைய ஒருமைத்துவம் அவர்களது ஒற்றுமை அல்லது ஒரே தன்மையுள்ள குணாதிசயங்கள் போன்றவைகளால் குறிப்பிடப்படுகின்றன. திரித்துவத்தில் மூவரும் சமமானவர்கள். (பிலிப்பியர்2:6,உபாகமம் 6:4, அப்போஸ்தலர் 17:29, ரோமர் 1:20, கொலோசெயர் 2:9),மனிதனுக்கு அவர்கள் பல வகைகளில் செயலாற்றுவதிலும் / அவர்களது நோக்கங்களிலும் வேறுபட்டு இருந்த போதிலும் அவர்கள் சமமானவர்களாகவே இருக்கின்றனர்.

3. இரட்சிப்பின் திட்டத்தில் இம்மூவரும் அவர்களது செயல்பாடுகளுக்குத் தக்கவாறு வேறுபட்டு விளங்குகின்றனர்.
(1 பேதுரு 1:2-3).
a) பிதாவாகிய தேவன் - நமது இரட்சிப்பை திட்டமிட்ட அதிகாரத்தை உடையவர் (ஏசாயா14:27, யோவான் 4:34, 5:17, 12:44, 1 கொரிந்தியர் 8:6a, எபேசியர்3:11).
b) குமாரனாகிய தேவன் - கீழ்ப்படிதலுள்ள குமாரனாய், மனிதனாகப் பிறந்து, நமது பாவங்களுக்காய் மரித்து, மரணத்திலிருந்து உயிர்த்தெழுந்தார். (யோவான் 4:34, 5:17, எபிரெயர்10:7).
c) பரிசுத்த ஆவியானவர் - ஊழியம் செய்யும் சேவகர், குமாரனை வெளிப்படுத்துகிறவர் மற்றும் நம்மை சுத்திகரிக்கிறவர் (யோவான் 16:8-11).

4. குமாரனாகிய கிறிஸ்து மட்டுமே திரித்துவத்தில் காணப்படக்கூடியவராய் இருக்கிறார். (யோவான் 1:18, 6:46,
1 தீமோத்தேயு 6:16, 1 யோவான் 4:12).பழைய ஏற்பாட்டில் யெஹோவாவின் தூதனானவராய் வெளிப்பட்டவர் புதிய ஏற்பாட்டில் மாம்சத்தில் வெளிப்பட்டார். (யாத்திராகமம் 3:14 cf யோவான் 8:58; சங்கீதம் 10:16 cf வெளிப்படுத்தல் 11:15; சகரியா 14 cf வெளிப்படுத்தல் 19).

5. திரித்துவத்திற்கான ஆதாரங்கள்:

a) பழைய ஏற்பாடில், ’ஏலோகிம” என்கிற பன்மை சொல்லால் இது உறுதி செய்யப்படுகிறது மற்றும் ’நாம்’ என்கிற பெயர் உரிச்சொல்லின் மூலமாகவும் இது உறுதி செய்யப்படுகிறது. (ஆதியாகமம் 1:26, 3:22, 11:7).
b) தேவனை ஆராதிக்கும் போது சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என ஆராதிக்கப்படுகிறார். (ஏசாயா6:3, வெளிப்படுத்தல்4).
c) பிதா குமாரன் பரிசுத்தாவியாவரின் நாமத்தில் (ஒருமை) இதில் திரித்துவம் சுட்டிக்காட்டப்படுகிறது. (மத்.28:19-20).
d) கர்த்தரின் ஞானஸ்நானத்தில் - ஆவியானவர் புறா ரூபம் கொண்டு அவர் மீது இறங்கினார், பிதாவாகிய தேவன் வானத்திலிருந்து பேசினார், குமாரனாகிய தேவன் ஞானஸ்நானம் பெற்றார். (மத்தேயு 3).

6. வெளிச்சம் திரித்துவத்தை விளக்க நல்ல உதாரணமாய் பயன்படுத்தப்படுகிறது. (1 யோவான்1:5). வெளிச்சம் ஒன்றே, ஆனால் அதில் மூன்று மூலக்கூறுகளை பெற்றுள்ளது.
a) பிதா - actinic light - காணப்படாத வெளிச்சத்தின் ஒரு பகுதி, இதை உணர முடியாது.
b) குமாரன் - luminiferous - இது வெளிச்சத்தின் ஒரு பகுதி இதைக்காணமுடியும் மற்றும் உணர முடியும்.
c) ஆவியானவர் - calorific - இது வெளிச்சத்தின் ஒரு பகுதி இதைக்காணமுடியாது மற்றும் உணர முடியும்.

கிறிஸ்தவ வாழ்க்கை: நித்திய பாதுகாப்பு

1. ஒரு நபர் இரட்சிப்புக்காக உண்மையிலே இயேசுக்கிறிஸ்துவில் நம்பிக்கை வைக்கும்போது, அந்நபர் அதன் பின்னர் வாழ்நாள்முழுதும் இரட்சிக்கப்பட்டவராகவே இருக்கிறார். அவர் ஒருபோதும் தனது இரட்சிப்பை இழந்து போவது இல்லை.

2. நமது நிலை குறித்த அணுகுமுறை: (ரோமர் 8:38-39).
நாம் கிறிஸ்துவுடன் இணைக்கப்பட்டுள்ளோம் (கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம்) கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய அன்பை விட்டு முற்றிலுமாய் ஒன்றும் நம்மை பிரிக்கமாட்டாது.

3. பகுத்தறிவு சார்ந்த அணுகுமுறை: (ரோமர் 8:32, ரோமர் 5).
அவிசுவாசிகளாய் நாமிருந்தபோது தேவனுக்கு பகைஞராய் இருந்தோம். (ரோமர் 5),நாம் விசுவாசிகளானபோது பிள்ளைகளாயிருக்கிறோம். தனது சத்துருக்களுக்கு அதிகமாய் அவர் செய்தபோது, தமது பிள்ளைகளுக்காய் அவர் என்ன செய்வார்? நாம் அவரது சத்துருக்களாய் இருந்தபோது நம்மை இரட்சித்தவர், நமது இரட்சிப்பு இழக்கப்படாவண்ணம் செய்கிறார்.

4. தேவக்கரம் சார்ந்த அணுகுமுறை: (யோவான்10:28, சங்கீதம்37:24.
தேவனின் கரத்தில் உள்ளதை ஒருவனாலும் பறித்துக்கொள்ள முடியாது. தேவன் சர்வ வல்லவர்.

5. அனுபவரீதியான அணுகுமுறை: (2 தீமோத்தேயு 2:12-13).
நாம் கிறிஸ்துவை மறுதளிப்போமானால் அவரும் நம்மை மறுதளிப்பார். (இதன் பொருள் = உபத்திரவம் மற்றும் பிரதிபலன்). நாம் அவரை மறுதளிக்கும் போதும் அவர் உண்மையுள்ளவராகவே இருக்கிறார். விசுவாசி கிறிஸ்துவுக்குள் இருக்கும்போது கிறிஸ்து விசுவாசியில் வாசம்பண்ணுகிறார். அவர் தம்மைதாமே மறுதளிக்கமாட்டார்.

6. குடும்ப அணுகுமுறை: (கலாத்தியர் 3:26, யோவான் 1:12).
நீங்கள் இயேசுக்கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும்போது, மறுபடியும் பிறந்து தேவனின் பிள்ளையாயிருக்கிறீர்கள். நீக்கள் பிறவாதநிலையில் இருக்கமுடியாது. ஒருமுறை நீங்கள் பிள்ளைகளானால், எப்பொழுதும் நீங்கள் பிள்ளைகளாகவே இருக்கிறீர்கள்.

7. சுதந்தரிக்கும் அணுகுமுறை: (1 பேதுரு 1:4-5)
நமக்கு mopahjJk; khrw;wJk; thlhjJkhfpaசுதந்திரம் பரலோகில் உண்டு, அவைகள் தேவ வல்லமையினாலே நமக்காக வைக்கப்பட்டுள்ளது. அது நமக்காகவே வைக்கப்பட்டுள்ளது. நாமல்ல தேவனே அதை நமக்காக வைத்திருக்கிறார்.

8. ஏகாதிபதித்துவ அணுகுமுறை: (2 பேதுரு3:9, யூதா24)
ஒருவரும் அழிந்து போவது தேவனுக்குச்சித்தமல்ல. இந்த வாக்கியம் முழு மனுக்குலத்திற்கும் பொருந்தும். 2 பேதுரு3:9tOthjgb cq;fisf; fhf;fTk;>(அழிவிலிருந்து

காத்தல்) ஒருமுறை நீங்கள் இரட்சிப்படைந்து இருக்கிறீர்கள் எனில், தேவன் நீங்கள் அழிந்து போகாவண்ணம் காக்க வல்லவராய் இருக்கிறார்.

9. சரீர அணுகுமுறை: (1 கொரிந்தியர்12:21, கொலோசெயர் 1:18)
கிறிஸ்து தலையாய் இருக்கிறார், நாம் அவரது சரீரத்தின் அங்கங்களாய் இருக்கிறோம். யாராவது இழக்கப்படுவார்களேயானால், கிறிஸ்துவின் சரீரம் முழுமையடையாது.

10. கிரேக்க இலக்கண அணுகுமுறை: (எபேசியர்2:8-9)
"கிருபையினாலே இரட்சிக்கப்பட்டீர்கள்" "sozo".சோஜோ என்கிற கிரேக்கச்சொல், வினைச்சொல்லின் முடிந்துவிட்ட காலத்தை குறிக்கிறது. கிருபையின் மூலம் இரட்சிக்கப்பட்டு விட்டீர்கள் இவ்வாக்கியம் இறந்த காலத்தைக்குறிக்கிறது, இதன் பொருள் நீங்கள் எந்நாளும் இரட்சிக்கப்படுகிறவர்களாக இருக்கிறீர்கள்.

11. பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்படுகிற அணுகுமுறை:: (2 கொரிந்தியர் 1:22, எபேசியர்1:13, 4:30).
பண்டைய உலகில் முத்திரை என்பது, பாதுகாப்பிற்கு உத்திரவாதம் அளிக்கக்கூடியதாய் இருந்தது. நமக்குள் வாசம்பண்ணுகிற பரிசுத்த ஆவியானவர் நமது பாதுகாப்பாய் விளங்குகிறார்.

<u>தேவன்: தேவனின் குணாதிசயங்கள்</u>

1. தேவன் மூன்று நபர்களாய் இருந்தபொதிலும், அவர்கள் மூவரும் ஒரே தன்மையுடையவர்களும், அல்லது குணாதிசயங்களைக் கொண்டவர்களாய் இருக்கிறார்கள்.
a) ஏகாதிபதி:
பிதா (எபேசியர் 1:11 , cf ஏசாயா 40:8, மத்தேயு6:10,எபிரெயர் 10:7, 9).
குமாரன் (யோவான் 5:21, வெளிப்படுத்தல்19:16).
பரிசுத்த ஆவியானவர் (1 கொரிந்தியர் 12:11 , cf எபிரெயர் 2:4).

b) நீதியுள்ளவர்:
பிதா (யோவான் 17:25)
குமாரன் (லூக்கா 1:35, எபிரெயர் 7:26, 2 கொரிந்தியர் 5:21).

பரிசுத்த ஆவியானவர்

c) நியாதிபதி
பிதா (யோபு37:23, cf 8:3)
குமாரன் (அப்போஸ்தலர் 3:14, யோவான் 5:22, வெளிப்படுத்தல் 19:11).
பரிசுத்த ஆவியானவர் (நெகேமியா 9:20)

d)அன்புள்ளவர்:
பிதா (யோவான் 3:16)
குமாரன் (எபேசியர்5:25, 1யோவான் 3:16)
பரிசுத்த ஆவியானவர் (யோவான் 16:7-11, 1கொரிந்தியர் 2:10)

e)நித்திய ஜீவன்:
பிதா (யோவான் 5:26)
குமாரன் (மீகா5:2, cfயோவான் 1:1-2, 1 யோவான் 5:11).
பரிசுத்த ஆவியானவர் (ஏசாயா 48:16)

f)எல்லாம் அறிந்தவர்:
பிதா (எபிரெயர் 4:13, cfமத்தேயு 11:27, 1 பேதுரு 1:2)
குமாரன் (யோவான் 18:4, cf மத்தேயு 9:4, யோவான் 2:25, 1கொரிந்தியர் 4:5)
பரிசுத்த ஆவியானவர் (ஏசாயா 1:2, cf 1 கொரிந்தியர்2:11).

g) எங்கும் இருப்பவர்:
பிதா (2 நாளாகமம் 2:6)
குமாரன் (மத்தேயு 8:20, cf எபேசியர்1:23)
பரிசுத்த ஆவியானவர் (சங்கீதம் 139:7)

h) சர்வ வல்லமையுள்ளவர்:
பிதா (மாற்கு 14:36, cf 1 பேதுரு 1:5)
குமாரன் (எபிரெயர்1:3, cf மத்தேயு 24:30, 2 கொரிந்தியர் 12:9, பிலிப்பியர்3:21)
பரிசுத்த ஆவியானவர் (யோவான் 14:16)

i) மாறாதவர்
பிதா (எபிரெயர் 6:17, சங்கீதம் 33:11)
குமாரன் (எபிரெயர் 13:8)
பரிசுத்த ஆவியானவர் (யோவான் 14:16)

j) சத்தியம்:
பிதா (யோவான்7:28, யோவான் 17:3)
குமாரன் (1 யோவான் 5:20, cf யோவான் 1:14, 14:6, வெளிப்படுத்தல்19:11)
பரிசுத்த ஆவியானவர் (1 யோவான் 5:6, cf யோவான் 14:17, 15:26, 16:13)

NOTES:

அத்தியாயம் 6

கர்த்தரது இராணுவத்தின் இராணுவ வீரர்கள்:

கட்டளை கொடுக்கும் மேலதிகாரி மீதே முழுமையான கவனம் இருப்பது அவசியம் -- கவனச்சிதறல்களோ, அல்லது இவ்வுலகத்தின் சதி ஆலோசனைகளில் சிக்கிக்கொள்ளுதலோ கூடாது.

கர்த்தரது ஊழியம் செய்வதற்கான புதிய ஏற்பாட்டு வேத வசனங்களின் பகுப்பாய்வானது பந்தயக்காரர் அல்லது இராணுவவீரர் இவர்களைச் சம்பந்தபடுத்தி கூறுகிறதாய் இருக்கிறது. இவ்விரு செயல்பாடுகளும், பண்டைய உலகில் மிக முக்கியம் வாய்ந்தவைகளாய் திகழ்ந்தன. எல்லா பந்தய சம்பந்தமான நிகழ்வுகளும், யுத்தம் சம்பந்தமானதாய் இருந்தது, ஒவ்வொரு பகுதியும் இவற்றில் இனங்காணக்கூடியதாய் இருந்தது, ஒரு நல்ல பந்தயக்காரனும், ஒரு இராணுவ வீரனும் ஒரே காரியத்தை செய்கிறவர்களாய் இருந்தனர்.

இவ்விரு தொழிலும், திறவு கோல் கருத்து என்னவெனில், சுயக்கட்டுப்பாடு, அதிகாரத்திற்குக் கீழ்ப்படிதல், தெளிவான இலக்கு அமைத்துக்கொள்ளுதல், சட்டதிட்டங்களுக்கு கீழ்ப்படிதல், தங்களுக்கு கட்டளை கொடுக்கும் மேலதிகாரிகளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதலையே நோக்கமாய் கொண்டு செயல்படுதல் ஆகும். இது வரை நாம் கற்றுக்கொண்டுவந்தவைகளில், இப்படிப்பட்ட காரியங்கள் வலியுறுத்தப்படுவதைக் கண்டுவந்தோம், இவைகள் வேதாகம தலைமைத்துவம் சம்பந்தபட்டவைகளாய் இருக்கின்றன. கீழ்க்காணும்

வேத வசனப்பகுதிகளில், இன்னும் அதிகமான அடிப்படிக்கருத்துக்கள் கூறப்படுகின்றன. இப்படிப்பட்ட அடிப்படைக் கருத்துக்களை கூறும் ஏழு வேதவசனப் பகுதிகளைக் காண்போம்.

[அ] 1 கொரிந்தியர் 9:24-27. ஜெயங்கொள்ளும் பந்தய வீரர்.

[ஆ] 2 கொரிந்தியர் 5:9-20 தனக்கு கட்டளை கொடுக்கும் அதிகாரியின் அங்கீகாரத்திற்காய் எதிர்நோக்கியிருத்தல்.

[இ] கலாத்தியர் 5:5-11. ஓட்டயப்பந்தயத்திலிருந்து நம்மை தகுதியற்றவர்களாக்கும் நபர்கள்.

[ஈ] 1 தீமோத்தேயு 6:11-16. யுத்தம் செய்வதற்கான கட்டளைகள்.

[உ] எபிரெயர் 10:32-39. பயிற்சி காலத்தின் போது, ஊக்கமிழத்தல் கூடாது.

[ஊ] எபிரெயர் 11:32ff. தன்னை உருவாக்கும் நல்ல தலைவரது விசுவாசத்தை நோக்கிப்பார்த்தல்.

உண்மையான தலைமைத்துவம் வழிநடத்துகிறதாய் இருக்கிறது, தலைவர்களைப் பின்பற்றுகிறவர்கள், தங்களது முழுப்பெலனையும் பிரயோகித்து ஜெயம் பெறும் மன நிலையை அடைதல் அவசியமாய் இருக்கிறது.

[அ] 1 கொரிந்தியர் 9:24-27.

"24. பந்தய சாலையில் ஓடுகிறவர்களெல்லாம் ஓடுவார்கள், ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவான் என்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாய் ஓடுங்கள். 25. பந்தயத்திற்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கத்தோடிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழியாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம். 26. ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாய் ஓடேன். ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன். 27. மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே

ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்."

பிரதிபலிப்பு:

பவுல் இலக்கை அமைத்து செயல்படும் நிர்வாகியாய் இருக்கிறார். இவரது கண்ணோட்டமெல்லாம், கர்த்தர் இவருக்களித்த கடமைகளிலிருந்து எதிர்பார்க்கப்படுகிறதாய் இருந்தது. இவர் கொரிந்தியரை, அவர்கள் இருப்பதன் நோக்கத்தை கண்ணோக்க உற்சாகப்படுத்துகிறவராய் இருக்கிறார். அவர்களது நோக்கமானது, கர்த்தர் அவர்களுக்களித்திருந்த பந்தய சாலையில் ஓடும் ஓட்டமாய் இருந்தது. அவர் அவர்களுக்குச் சொல்லும்போது, "நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாய் ஓடுங்கள்." என்கிறார, இப்பகுதிக்கு நாம் இவ்வாறான தலைப்பை அளிக்கிறோம், "சுயக்கட்டுப்பாடு குறித்த பிரமாணம்" அல்லது "அற்பணிப்பின் பிரமாணம்."

தேவனது பிள்ளைகள், உண்மையாகக் கர்த்தரை சேவிக்க சுயக்கட்டுப்பாடு அவசியம் மற்றும் முழுமையான அற்பணிப்பு அவசியமாய் இருக்கிறது. இப்பகுதியில் பவுல் வாழ்க்கையில் வெற்றிக்கான அடிப்படைக் கருத்துக்களை அளிக்கிறவராய் இருக்கிறார், இவைகளை தனது வாழ்விலும் உறுதியான நிலையில் கடைபிடிக்கிறவராய் இருந்தார். இவ்வதிகாரம் ஜாக்கிரதையாய் இருக்க நினைப்பூட்டி நிறைவு பெறுகிறது, நித்தியப் பாதுகாப்பை குறித்த உபதேசத்தை நாம் விசுவாசிக்கும் போது, நாம் அதிகபட்ச பிரதிபலன்களை, நாம் அடையும் தோல்விகளால், பெறாதவர்களாய் இருப்போம் என்பதை நினைவுபடுத்துகிறது.

24. பந்தய சாலையில் ஓடுகிறவர்களெல்லாம் ஓடுவார்கள், ஆகிலும் ஒருவனே பந்தயத்தைப் பெறுவான் என்று அறியீர்களா? நீங்கள் பெற்றுக்கொள்ளத்தக்கதாய் ஓடுங்கள்.

பண்டைய ஒலிம்பிக் போட்டிகளில் முதன்மையில் வருகிறவர்களுக்கு மட்டுமே பரிசளித்து கௌரவிக்கப்பட்டது. நீங்கள் ஓடுவீர்களானால், ஜெயம் பெறும்படியாய் ஓடுதல் வேண்டும் இல்லையேல், உங்கள் நேரத்தை வீணடிப்பவர்களாய் இருப்பீர்கள். நீங்கள் பரிசைப் பெறவேண்டுமானால் அதிகப் பிரயத்தனம் அவசியமாய் இருக்கிறது, ஏனோதானோவென்ற பிரயத்தனம் ஒரு பலனையும் கொண்டுவராது. அரசியல் சார்ந்த நிலையில் எல்லாவித பிரயத்தனங்களுக்கும் பிரதிபலன்கள் உண்டு, இங்கு கூறப்படுவது அத்தகைய நிலையில் அல்ல. இதைப் பவுல் காண்கிற கண்ணோட்டத்தில் நாம் காணுதல் வேண்டும். இவ்வுலகில்

இருவித மக்கள் மட்டுமே இருக்கின்றனர், ஒருவர் வெற்றி பெற்றவர், மற்றவர் தோல்வியுற்றவர். அரசியல் ரீதியான கருத்தை நாம் எடுத்துக்கொண்டு மேற்கத்திய உலகினரைப் போல அறிவீனரை இருத்தல் கூடாது, இங்கு கூறப்படுகிற கருத்தை கவனித்து உணர்ந்து கொள்ளுதல் அவசியம்.

நித்திய பிரதிபலன்கள் "கிரீடங்கள்" (stephanos), எனக்குறிப்பிடப்பட்டுள்ளது, இவைகள் யுத்தத்தில் ஜெயம்பெற்றவர்களுக்கு அல்லது விளையாட்டுகளில் வெற்றிபெற்றவர்களுக்கு அளிக்கப்பட்டது. கர்த்தர் நம்மை அழைத்து ஒரு குறிப்பிட்ட ஓட்டத்தினை ஓடும்படி பணிப்பார் என்றால், நாம் வெற்றி பெற்றால் மட்டுமே பிரதிபலனைப் பெறுகிறவர்களாய் இருப்போம் என்பதனை நினைவில் கொள்ளுதல் வேண்டும். இதன் பொருள் நம்மிடத்தில் எதிர்பார்க்கப்படுகிற அனைத்தையும் செய்தல் வேண்டும் இல்லையேல் பரிசை இழந்து போகிறவர்களாய் இருப்போம். கர்த்தரது பந்தய சாலையில் நாம் ஓடும்போது பிறருக்கு போட்டியாக ஓடுதல் என்பது அர்த்தமாகாது, கடிகாரத்திற்கு எதிராய் ஓடுகிறவர்களாய் இருக்கிறோம், இவ்வுலகில் நாம் முடிக்க வேண்டிய பயிற்சி இருக்கிறது, அப்பயிற்சியை முடிக்கிறவர்களாய் இருக்கிறோமா அல்லது இல்லையா என்பது நிதானிக்கவேண்டியதாய் இருக்கிறது. சவாலானது மிக வலிமையுள்ளதாய் இருக்கிறது, ஓட்டப்பந்தயத்தின் இறுதி எல்லையை முதல்வனாய் எட்டிப்பிடிக்க வேண்டியுள்ளது, அல்லது நீங்கள் ஒரு பந்தய வீரர் எனக்கூறிக்கொள்வது வெட்டிப்பேச்சாய் இருக்கிறது.

கர்த்தரின் மகிழ்ச்சியே உங்களது பெலனாய் இருக்கிறது, உங்களக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தில் பொறுமையுடன் ஓடி முதல் நபராய் எல்லையை தொட வேண்டியவர்களாய் இருக்கிறீர்கள்! சங்கீதம் 19:5, கலாத்தியர் 2:2, பிலிப்பியர் 2:16, 3:13-17. உங்கள் முழு இருதயத்தோடும் கர்த்தரை சேவியுங்கள், அல்லது நீங்கள் உண்மையுள்ள சேவகன் என நடிப்பதை நிறுத்திவிடுங்கள். பந்தயத்தில் விடாப்பிடியாக ஓடுதல், முழுமையான அற்பனிப்பு என அழைக்கப்படுகிறது, இப்பந்தயத்தை இவ்வுலகை விட்டு நித்தியத்தில் பிரவேசிக்கும் வரை ஓட வேண்டியவர்களாய் இருக்கிறோம். பிரசங்கி 9:11-18, 2 தீமோத்தேயு 4:7, 8, எபிரெயர் 12:1-3, யாக்கோபு 1:12, வெளிப்படுத்தல் 3:10, 11.

25. பந்தயத்திற்கு போராடுகிற யாவரும் எல்லாவற்றிலேயும் இச்சையடக்கத்தோடிருப்பார்கள். அவர்கள் அழிவுள்ள கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறார்கள். நாமோ அழியாத கிரீடத்தைப் பெறும்படிக்கு அப்படிச் செய்கிறோம்.

இவ்வசனத்தில் பவுல் பயன்படுத்தும் வினைச்சொல்லைப் பாருங்கள் அது பந்தயத்திற்கு பயிற்சி பெறுவோரைக் குறித்து பயன்படுத்தப்படுகிறதாய் இருக்கிறது. Agonizomai, என்ற கிரேக்கப் பதம் பயன்படுத்தப்பட்டுள்ளது, இதன் பொருள் உடற்பயிற்சி சாலையில் மிகுந்த பிரயாசத்துடன் உடற்பயிற்சி செய்வதைக் குறிக்கிறதாய் இருக்கிறது. இவ்வினைச்சொல் கூறும் அர்த்தத்தில், பயிற்சி பெறாத பட்சத்தில் எந்த ஒரு பந்தய வீரனும் வெற்றிபெறுதல் என்பது அசாத்தியமானதாய் இருக்கிறது. இக்கடின பிரயாசத்திற்கு பின்னர், அவர்கள் தங்களை பந்தயத்தில் ஈடுபடுத்திக்கொள்ள முற்படுகிறார்கள்.

ஒவ்வொரு பயிற்சியும், இலக்கை அடிப்படியாய்க் கொண்டதாய் இருக்கிறது. அவர்கள் உடற்பயிற்சி சாலையில் தங்களது கண்ணோட்டத்தை சரிப்படுத்திக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர். இலக்கை அடைவதற்கு, ஒவ்வொரு பந்தய வீரனும், உணர்ச்சிக்கட்டுப்பாட்டுடன் பயிற்சி பெறுவர், இதன் அடிப்படையில் அவர்களது இலக்கை அடையும் முயற்சியில் பந்தயத்தில் ஈடுபடுவர். வேதனையின் தடைகளைத் தாண்டி பயிற்சியில் ஈடுபடுவதே பந்தயத்தில் வெற்றிக்கான வழியாய் இருக்கிறது. பண்டைய காலத்தில் பந்தயத்தில் வெற்றிபெறுவோருக்கு இலைகளினாலான கிரீடம் வெகுமதியாய் அளிக்கப்படும், அது ஒரு வார காலத்தில் வாடி காய்ந்து போம், ஆனால் நாம் பெற்றுக்கொள்வதோ மகிமையின் கிரீடமாய் இருக்கிறது, அது எந்நாளும் வாடாத கிரீடமாய் இருக்கிறது. இதனைப் பெற்றுக்கொள்ள பந்தயக்காரரைவிட எத்துனை அதிகமாய் பிரயாசப்படவேண்டியதாய் இருக்கிறது? அநித்தியமான வாடிப்போகும் கிரீடத்திற்காய் இவர்கள் கடினமுயற்சி செய்வார்களானால், நாம் அழியாத கிரீடத்திற்காய் அதிகம் பிரயாசப் படவேண்டியவர்களாய் இருக்கிறோம். கலாத்தியர் 5:22,23, தீத்து 1:7-9, 2:2, 2 பேதுரு 1:5-8.

26. ஆதலால் நான் நிச்சயமில்லாதவனாய் ஓடேன். ஆகாயத்தை அடிக்கிறவனாகச் சிலம்பம் பண்ணேன்.

பண்டைய கால விளையாட்டுக்களில் "கவர்ச்சிகரமான" இரு விளையாட்டுகளுக்கு நமது கவனத்தை இழுக்கிறவராய் இருக்கிறார், ஒன்று குறுகிய தூர வேக ஓட்டம், இரண்டு மல்யுத்தம். [sprints and the boxing]. பவுல் கொரிந்தியருக்கு கூறும்பொழுது, தான் இலக்கு இல்லாமல் ஓடவில்லை என்கிறார். மற்றும் மல்யுத்தமும் இலக்கு

இல்லாமல் செய்யவில்லை என்கிறார். அவர் செய்த ஒவ்வொன்றிற்கும் தெளிவான ஒரு இலக்கு இருந்தது, மற்றும் கர்த்தரது அருட்பணிக்கு தன்னை முழுவதுமாய் அற்பணித்துக்கொண்டு செயல்பட்டார். கொரிந்தியர் கடைபிடிக்கவேண்டியவைகள் தெளிவாய் இருக்கின்றன, நீங்கள் உங்கள் இலக்கை அமைத்துக்கொண்டு இதைப்போலவே செயல்படுங்கள், இலக்கு இல்லாத காரியங்களுக்காய் உங்களது நேரத்தையும், பெலனையும் விரயம் செய்யாது இருக்க தீர்மானியுங்கள். எபேசியர் 6:10-20, கொலோசெயர் 1:27-29.

27. மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்."

இவ்வசனத்தில், "என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்" என்கிறார் பவுல். இது கிறிஸ்தவர்கள் கேட்கும்பொழுது, அது அவர்களை ஆச்சரியத்திற்குள்ளாக்குகிறதாய் இருத்தல் வேண்டும், இது பவுலின் காலத்தில், பந்தயத்திற்கான உடற்பயிற்சி செய்யும் காலத்து பயன்படுத்தும் சொற்றொடராய் இருக்கிறது. பவுல் சாதாரணமாய் திரும்ப இவ்வாறு கூறுகிறார், "வெகுமதியைப் பெற்றுக்கொள்ளப்போகிறவனாய் இருக்கிறேன்" என்கிறார். அவரது சரீரத்தின் அவயவங்கள் ஒவ்வொன்றும் கட்டுப்பாட்டிற்குள் இருந்தன, எனது சித்தத்திற்கு இசைய அவைகள் எனக்குக் கீழ்ப்படிகிறவைகளாய் இருந்தன, எனது வெற்றியை தடைசெய்யும்படி அவைகள் எனக்கு எவ்வித தடையையும் அளிக்காது இருந்தன. என்கிறார் பவுல். 2 கொரிந்தியர் 6:3-10, 11:23-31. பவுலுக்கு ஒருவித பயமானது இருந்தது அதை அவர் இங்கு நம்முடன் பகிர்ந்து கொள்கிறவராய் இருக்கிறார்.

கர்த்தர் அவருக்கு நியமித்த பணியில் அவர் தவறிவிடுவாரோ என்கிற பயமாய் அது இருந்தது. அவரது பயம் உண்மையும், யதார்த்தமுமாய் இருந்தது, அடிக்கடி நமது வாழ்விலும் இவ்வகையான பயம், போதுமான அளவு இல்லாது இருக்கிறது. தேவனது பணியில், அவரது தராதரத்திற்கு இசைய செயல்படத் தவறும்போது, அவர் நம்மை பயன்படுத்துவதிலிருந்து புறக்கணிக்கிறவராய் இருக்கிறார், "மரணத்திற்கேதுவான பாவத்தில்" விழுகிறவர்களாகிறோம், மற்றும் நித்தியப் பிரதிபலனை இழக்கிறவர்களாய் இருக்கிறோம். தேவனது தராதரத்திலிருந்து விழுந்து போவதைக் குறித்து பயத்துடன் மற்றும் நடுக்கத்துடன் உணர்வடைந்து செயல்படவேண்டியவர்களாயிருக்கிறோம். லூக்கா 12:41-48, 13:23-30, 2 கொரி. 13: 3-6.

அநேகர் "பூரணமான அன்பு பயத்தைப் புறம்பே தள்ளும்" என்கிற வசனத்தை மேற்கோள் காட்டுகிறவர்களாய் இருக்கின்றனர், 1 யோவான் 4:18.

இவ்வேதபகுதிக்கு உங்கள் வேதாகமத்தை திருப்பிக்கொண்டு, 17-21 வரையுள்ள வேதபகுதியை கவனமாய் வாசித்துப்பாருங்கள், தேவனது நியாயத்தீர்ப்பு நாளைக்குறித்த நிச்சயத்தை குறித்து நீங்கள் அதில் காண்கிறவர்களாய் இருப்பீர்கள், காரணம் அவ்வேதபகுதியில், உங்கள் வாழ்வில் இயேசுக்கிறிஸ்துவுடன் உங்களுக்குள்ள உறவும், உண்மையான விசுவாசம் குறித்த அடையாளமானது விவரிக்கப்படுகிறதாய் இருக்கிறது. ஒரு பந்தய வீரன் அவமதிப்பைக்குறித்தோ அல்லது தோல்வியைக் குறித்தோ பயமற்றவனாய் இருக்கிறான், காரணம் அவன் பந்தயத்திற்காய் முழுவதுமாக தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறான், மிகவும் கடினப்பிரயத்தனம் செய்திருக்கிறான், தன்னை அனுதினமும் இவைகளுக்கு உட்படுத்தி ஆயத்தமுள்ளவனாய் இருக்கிறான், தனது தவறுகளிலிருந்து விரைவில் நிவாரணம் பெறுகிறவனாய் இருக்கிறான், மிகச் சிறப்பான நிலையில் எல்லாவற்றையும் செய்து முடிக்கிறவனாய் இருக்கிறான். இதைப்போன்றே நாமும் செயல்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

நாம் நியாயத்தீர்ப்பின் நாளில் பயமற்றவர்களாய் இருத்தல் வேண்டும், நாம் அன்பு கூறப்பட்டவர்களாயும் மற்றும் இரட்சிப்படைந்தவகளாயும் இருக்கிறோம் என்பதை அறிவோம், இருப்பினும் **ஒவ்வொரு நாளும் பரிசுத்த பயமானது, தேவன் நம்மை அழைத்த நோக்கத்திலிருந்து விழச்செய்யாதிருக்கச்செய்தல் வேண்டும்.** மற்றும் நம்மை நேர்மையானவர்களாயும், நீதியுள்ளவர்களாயும் அனுதின வாழ்வில் செயல்படுகிறதாய் இருந்து நமது ஓட்டத்தை முடிக்கச் செய்கிறதய் இருத்தல் வேண்டும். தனது ஓட்டத்தை ஜெயமுடன் ஓடிமுடிக்கும் விசுவாசிகளுக்கு மட்டுமே நித்திய பிரதிபலனானது அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. கர்த்தரிடத்தில் அன்பு கூறுகிற அனைவரும் பரலோகில் பிரவேசிக்கிறவராய் இருக்கின்றனர், ஆனால் தங்களது ஓட்டத்தை வெற்றியுடன் ஓடி முடிப்பவர்களுக்கே, நித்திய பிரதிபலன்கள் அளிக்கப்பட்டு நித்தியகாலமாய் அது அவர்களுக்கு புகழ்ச்சியாய் நிலை நிற்கிறதாய் இருக்கிறது. இதுவே அவர்களது பங்கும் சுதந்திரமுமாய் இருக்கிறது, தேவன் நமக்கு அளிக்கவிருக்கும் பிரதிபலன்களை பெற்றுக்கொள்ளத் தவறிவிடாது இருக்கும்படிக்கு, பயத்துடன் காணப்படுவோமாக! Refer to the doctrinal study CHRISTIAN LIFE – REWARDS AND CROWNS. கிறிஸ்தவ வாழ்க்கை -- பிரதிபலன்களும் மற்றும் கிரீடங்களும். ஒப்பிட்டுப்பார்க்க.

தலைமைத்துவ நடைமுறை:

1. வெற்றியடைவதற்காக ஓடுதல்: வாழ்க்கைப்பந்தயத்தில், நமது பணியை முடிக்கத்தக்கதாய் ஓடுகிறவர்களாய் இருக்கிறோமா? தேவனது வல்லமையை நீங்கள் நிராகரித்தது உண்டா, நீங்கள் வல்லமை மிக்கவர்களாய் பணிசெய்து உங்களுக்காக அமைக்கப்பட்ட ஓட்டத்தில் ஓடிமுடிக்கிறவர்களாய் இருக்கிறீர்களா? கர்த்தரது பணியில் நீங்கள் மூழ்கி செயல்பட ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கிறீர்களா? அல்லது மிகக்கவனமாய் வாழ்க்கைசெய்வதில் நீங்கள் திருப்திபடுகிறவர்களாய் இருக்கிறீர்களா? பந்தயக்காரர்கள், விவசாயிகள், இராணுவ வீரர்கள் போன்றோர் "கவனமாய் இருப்பவர்கள" அல்லர், இவர்கள் சிரமங்களை எடுத்துக்கொள்கிறவர்கள், பணியில் தங்களை மூழ்கடித்துக் கொண்டு செயல்படுகிறவர்கள், இதைப்போன்றே நாமும் செயல்படுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். நாம் "ஆகாயத்தில் சிலம்பம் பண்ணுகிறவர்களா?" அல்லது களத்தில் இறங்கி மல்யுத்தம் செய்கிறவர்களா? நாம் உண்மையிலே ஜெயம் பெறுகிறவர்களாய் ஓடுகிறோமா, அல்லது ஓய்வு பெறும் பூங்காவைச் சுற்றி ஓடுகிற கிறிஸ்தவ வாழ்க்கை செய்கிறோமா? பவுல் செயல்படும்படி நமக்களிக்கும் சவால், ஜெயமடைவதற்கான அற்பணிப்பு ஆகும்.

2. பரிசைத் தட்டிச்செல்வற்கான சிறப்பான முயற்சிகளின் மீதுள்ள ஆசை: நித்திய பாதுகாப்பைக் குறித்த உபதேசத்தினை போதிப்பது நல்லது, இது ஒரு வேதாகம உபதேசமாய் இருக்கிறது, ஆனால் இங்கு கூறப்படுகிற கருத்து என்னவெனில், நித்திய பலன்களை இழந்துபோதல் மற்றும் தேவனின் Bema நியாயத்தீர்ப்பைப் பற்றியதாய் இருக்கிறது. 2 கொரிந்தியர் 5:10-15. நாம் நமது காலத்தைக் குறித்து கவலையீனமாய் இராத படி, களத்தில் இறங்கி முன்னதாகவே செயல்படவேண்டியவர்களாய் இருக்கிறோம்.

கர்த்தரது பணி செய்வதில் போதகர்களாகிய நாம் எந்த அளவுக்கு பெலசாலிகளாய் இருக்கிறோம்? எந்த அளவுக்கு அவரது பணியை அதிகமாய் செய்கிறவர்களாய் இருக்கிறோம்? நமக்கு அருகில் சுகபோகமாய் வாழும் கொழுத்துப்போன பூனை போன்ற போதகரின் வாழ்வின் தராதரத்தை நாம் அமைத்துக் கொள்ளக் கூடாது, இவர்கள் தாராளவாத சபையினராய் இருக்கின்றனர். (ரோட்டரி கிளப்களில் பாடும் கீர்த்தனை போன்று இருத்தல் கூடாது) ஒலிம்பிக் பந்தயங்களில் போட்டியிடும் பந்தய வீரர்களின் தராதரத்தை அமைத்துக் கொள்ளுதல் வேண்டும். நமக்கு முன்மாதிரியாய் இருக்கும் அற்பணிப்பின் தராதரம் இயேசுக் கிறிஸ்துவின் சிலுவையாய் இருத்தல் வேண்டும். இத்தராதரத்தை அடைய நாம் ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும்! பவுலின் வார்த்தைகளைக் கேட்கும்

நாம், தேவனின் உறுதிப்பாட்டை இன்றைய அளவில் நமது இருதயங்களில் பெற்றுக்கொள்வோமாக!

[ஆ] 2 கொரிந்தியர் 5:9-20 - நமது கர்த்தரின் அங்கீகாரத்தை எதிர் நோக்குதல்:

"9. அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும், குடியிராமற் போனாலும், அவருக்கு பிரியமுள்ளவர்களாய் இருக்க நாடுகிறோம். 10. ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும், கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும். 11. ஆகையால் கர்த்தருக்குப் பயப்படத்தக்கது என்று அறிந்து மனுஷருக்குப் புத்திசொல்லுகிறோம். தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாய் இருக்கிறோம். உங்கள் மனசாட்சிக்கும் வெளியரங்கமாய் இருக்கிறோம் என்று நம்புகிறேன். 12. இதினாலே நாங்கள் உங்களுக்கு முன்பாக எங்களை மறுபடியும் மெச்சிக்கொள்ளாமல், இருதயத்திலல்ல, வெளிவேஷத்தில் மேன்மைபாராட்டுகிறவர்களுக்கு எதிரே, எங்களைக் குறித்து, நீங்கள் மேன்மைபாராட்டும்படிக்கு ஏதுவுண்டாக்குகிறோம். 13. நாங்கள் பைத்தியங்கொண்டவர்களென்றால், தேவனுக்காக அப்படியிருக்கும், தெளிந்த புத்தியுள்ளவர்களென்றால், உங்களுக்காக அப்படியிருக்கும். 14. கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லோரும் மரித்தார்கள் என்றும், 15. பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று, பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்று நிதானிக்கிறோம்."

பிரதிபலிப்பு:

தேவனது வார்த்தையில் அடங்கியுள்ள சத்தியங்கள், ஒவ்வொரு நாளின் வாழ்க்கைக்குரிய நடைமுறைச் சத்தியங்களாய் திகழ்கின்றன. கர்த்தரது பணி செய்யும்போது, உயிர்த்தெழுந்த சரீரமானது அனுதின வாழ்வில் நடைமுறைப் படுத்தப்படவேண்டியதாய் இருக்கிறது, அப்படிப்பட்ட அறிவானது இந்த சரீரத்தில் இருந்து அவரது எல்லா பணிகளையும் செய்வதற்கு பெலனளிக்கிறதாய் இருக்கிறது. மட்டுமின்றி பரலோகில் அளிக்கபட இருக்கிற சரீரத்தில் இருந்து அவரை மகிமைபடுத்த, மறுமையில் பெறுகிற சரீரத்தில் பிரதிபலன்கள் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. இதை மனதில் கொண்டு அவரது பணி செய்யும்போது, அளிக்கப்படும் பிரதிபலனானது நித்திய நித்தியமாய் அளிக்கப்படும்

என்பது பவுலின் சவாலாய் இருக்கிறது. கர்த்தருக்காய் கடினமாய் உழைப்பதை கனத்துக்குரியதாய் கருதுகிறவர்களாய் இருக்கிறோமா, அல்லது முறுமுறுப்புடன் அவரது பணி செய்கிறவர்களாய் இருக்கிறோமா? நாம் அவருக்காய் உழைக்க எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடியையும் மகிழ்வுடன் எடுத்துவைக்கிறோமா, அல்லது கடின உழைப்பினால் களைத்து தவித்துவிடுகிறோமா? நாம் களைத்து தவித்துவிடுவதற்கான காரணம், நித்தியமாய் இருக்கப்போகிற யதார்த்தத்தை மறந்து விட்டோம் என்பதை இது காட்டுகிறதாய் இருக்கிறது.

"9. **அதினிமித்தமே நாம் சரீரத்தில் குடியிருந்தாலும், குடியிராமற் போனாலும், அவருக்கு பிரியமுள்ளவர்களாய் இருக்க நாடுகிறோம்.**

அதனிமித்தமே, என்கிற இவ்வசனமானது, இவ்வதிகாரத்தின் முதல் எட்டு வசனங்களில் கூறப்பட்டுள்ள அனைத்தையும் ஒன்று திரட்டி, அதற்கான முடிவை இங்கு கூறுகிறதாய் இருக்கிறது, மற்றும் இதைத் தொடர்ந்துள்ள வசனங்களில் இது குறித்து விவரணை கொடுக்கிறதாய் இருக்கிறது. இந்த சரீரத்தை நாம் பெற்றுள்ளபடியால், நாம் நமது பணிகளைச் செய்கிறோம், நமது மனநிலையானது மறுரூபமடைகிறதாய் இருக்கிறது. நாம் நமக்காய் எல்லாவற்றையும் அளித்த கர்த்தருக்கு பிரியமாய் நடந்து அவரைக் கனப்படுத்த தீர்மானம் செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

நாம் இந்த பூமியில் வாழும்போது, பெலவீன சரீரத்திலிருந்தாலும், அல்லது பரலோகம் சென்று உயிர்த்தெழுந்த சரீரத்தில் இருந்தாலும், எல்லாக் காரியங்களிலும் தேவனைப் பிரியப்படுத்தி வாழ்வதே நமது பெரிதான வாஞ்சையும் தவனுமுமாய் இருக்க தீர்மானிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட விரும்புகிறவர்களாய் இருக்கிறோம். அவரை மிகவும் திருப்திபடுத்தக்கூடியவர்களாய் இருக்க விரும்புதல் வேண்டும், அவரால் நல்லது உண்மையும் உத்தமும் உள்ள ஊழியனே என அழைக்கப்படுதல் வேண்டும். மத்தேயு 25:14-30. இவ்வுலகில் ஒரு நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ளோம், நமது கீழ்ப்படிதலின் கிரியைகளுக்குத் தக்கவாறு, நாம் பிரதிபலன்கள் அளிக்கப்பட, நியாயந்தீர்க்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம், 1 கொரிந்தியர் 9:24-27, 15:58, கொலோசெயர் 1:27-29, எபிரெயர் 12:28-29.

10. **ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது, தீமைக்காவது**

தக்க பலனை அடையும்படிக்கு நாமெல்லாரும், கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்.

இப்பகுதியானது எல்லாவற்றையும் நிறைவு செய்கிற பாடமாய் இல்லை, ஆனால் இப்பகுதி நியாயத்தீர்ப்பைக் குறித்து நம்மை சிந்திக்கவைக்கும் பகுதியாய் இருக்கிறது, இதன் பொருள் நமது சொந்த நியாயத்தீர்ப்பு குறித்து. கர்த்தருடைய வார்த்தை தெளிவு படுத்துகிறது என்னவெனில், நமது கிரியைகள் ஒவ்வொன்றிற்கும் கணக்கொப்புவித்தல் வேண்டும், நமது கிரியைகள் மற்றும் நோக்கங்கள் அனைத்தும் நிறுத்துப்பார்க்கப் படுகின்றன. நாம் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டு நித்திய ஜீவனை பெற்றுக்கொண்டவர்களாய் இருக்கிறோம், இருப்பினும் கர்த்தரது "நல்லது உண்மையும் உத்தமும் உள்ள ஊழியனே" என அவர் கூறுவது, மற்றும் நாம் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் அவருக்குச் செய்த சேவையின் மீதுள்ள கண்ணோட்டமே, நமது வாழ்நாள் முழுவதும் இருக்க வேண்டியதாய் இருக்கிறது. இது பிரதிபலனின் நியாயத்தீர்ப்பாய் இருக்கிறது அல்லது கண்டனமாய், நிந்தையாய் இருக்கிறது, நமது இரட்சிப்புக்கு எவ்வித பங்கமும் அளிக்காது இருக்கிறது. நாம் அடைய வேண்டிய தெய்வீக தராதரத்தை அடையாத பட்சத்தில், அது நமக்கு நிந்தையும் அவமானமுமாய் இருக்கிறது.

நாம் செய்த அனைத்துக் கிரியைகளும் அந்த சந்தர்ப்பத்தில் வெளியாகும், விசுவாசிகளாய் நாம் செய்த எவ்வித கிரியைகளும் மறைந்திருப்பது இல்லை, நற்கிரியைகளும், துர்கிரியைகளும் வெளியரங்கமாகும். இவ்வசனத்தின் கடைசிப் பகுதி குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. அநேக விசுவாசிகள் தவறான நம்பிக்கையுடன், தங்களது பாவங்கள் மற்றும் தீமைகள், அனைத்தும் பரலோகில் மறைக்கப்பட்டதாய் இருக்கும் என்ற எண்ணத்துடன் இருக்கிறார்கள். அவைகளை மறுபடியும் நாமும், கர்த்தரும் காண வேண்டியவர்களாய் இருக்கிறோம். அவ்வாறு காணப்படும்போது அது நமக்கு வெட்கத்தை உண்டு பண்ணக்கூடியதாயும், தவறான நம்பிக்கையை உணரப்பண்ணுகிறதாயும் இருக்கும். பரலோகில் யாவும் வெளிச்சமாய் இருக்கும், ஒன்றும் மறைவாய் இருப்பதில்லை. இது ஒரு சிலருக்கு பிரதிபலனையும், அநேகருக்கு வெட்கத்தையும், நிந்தை மற்றும் அவமானத்தையும் அளிக்கிறதாய் இருக்கும்.

கிருபையை தவறாய் எடைபோட்டு, நமது சபைகளில், பாவம் விசுவாசிகளின் வாழ்வில் ஒரு பொருட்டல்ல எனப்போதிக்கும் சபைகள், அதிகமான அளவில் கணக்கொப்புவிக்க வேண்டியவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் தங்களது

பாவத்தை அறிக்கை செய்து மன்னிப்பைப் பெற்றுக்கொண்டு முன்செல்ல வேண்டியவர்களாய் இருக்கின்றனர். இவ்வேதபகுதியும் மற்றும் அநேக வேதபகுதிகளும், கர்த்தரது வார்த்தைகளும், விஷேசமாய் நியாயத்தீர்ப்பு உண்டு என்பதை தெளிவு படுத்துகிறவைகளாய் இருக்கின்றன, மற்றும் பாவம், தீமை போன்றவைகளை மிகவும் கவனமாய் எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம், மற்றும் எந்த ஒரு கீழ்ப்படியாமையும் மற்றும் தேவனுக்குக் கீழ்ப்படிதலை தவிர்த்தலானது அவமானத்திற்கும் வெட்கத்திற்கும் வழிநடத்தக்கூடியதாய் இருக்கிறது.

ரோமாபுரியின் நியாயசங்கமானது, பயத்துக்குரிய இடமாயும், அவர்களது நியாயத்தீர்ப்பானது முழுமையும் இறுதியுமாய் இருந்தது. ஒரு ரோம பிரஜை கோலால் அடிக்கப்படுவது, அவமானத்திற்கு உட்படுத்தப்படுவது அல்லது சிறைச்சேதம் செய்யப்படுவது அவர்களது தண்டனையாய் இருந்தது. இதைத்தவிர ரோம பிரஜைகளுக்கு வேறு தண்டனை இல்லாதிருந்தது. நாம் கொலை செய்யப்படவில்லை, கர்த்தர் நமக்காய் மரித்துள்ளார் (இதனால் நமது இரட்சிப்பின் நிலையானது உறுதிசெய்யப்படுகிறதாய் இருக்கிறது), இதன் மூலம் அநேகர் வெட்கத்திற்குள்ளாவார்கள், செய்ய வேண்டியவைகளை செய்தவர்களும், செய்ய வேண்டியவைகளை செய்யாதவர்களும் வெட்கப்படுகிறவர்களாய் இருப்பர்.

ஜனங்கள் கர்த்தரது நியாய சங்கத்தில் சிலவேளைகளில் இவ்வாறு கூறக்கூடும், "எனக்கு வரவிருக்கிறதை நான் விரும்புகிறவனாய் இருக்கிறேன்" இவ்வாறு கூறுகிறவர்களின் வாஞ்சையானது நியாய சங்கத்தில் நிறைவேற்றப்படும். தகுதியானவற்றை சரியான நிலையில் அவர்களுக்கு அளிக்கப்படும். சங்கீதம் :8, 9:7-11, 50:1-6, 96:10-13, 98:9, எசேக்கியேல் 18:30, மத்தேயு 25:31-46, ரோமர் 14:9-13, (ஒப்பிடுக with 8:1-4),எபிரெயர் 4:12, 1 பேதுரு 4:3-7, யூதா 14, 15, வெளிப்படுத்தல் 20:11-15. இவ்வேதபகுதியில் சில, இழந்து போனோருக்கிரியதாய் இருக்கிறது, நாம் இது குறித்து கவனமாய் இருத்தல் வேண்டும், பவுலும் பேதுருவும் இவ்வாறான நியாயத்தீர்ப்பில் இரட்சிப்படைந்தோர், அழிவார்கள் என்பதை தெளிவுற புரிந்து கொண்டிருந்தனர், ஆகையால் அவர்கள் இவற்றைக் குறித்த பயத்துடன் காணப்பட்டனர்.

பவுலும், பேதுருவும் இப்படிப்பட்ட நியாயத்தீர்ப்பைக் குறித்த பயத்துடன் காணப்படுவார்களேயாகில், தீமையையும், பாவத்தையும் குறித்து நாம் பயமற்றவர்களாயும், நிர்விசாரிகளாயும் இருத்தல் தவிர்க்கபட வேண்டியது அவசியமாய் இருக்கிறது, மற்றும் இவைகளுக்கு விலகியோடி நம்மைக்

காத்துக்கொள்ளுதல் அவசியமானதாய் இருக்கிறது. மற்றும் அவைகளை திரும்ப மறுபடியும் செய்யாது நம்மைக் காத்துக்கொள்ளுதல் அவசியமானதாய் இருக்கிறது. தேவன் நாம் மறுரூபமாக்கப்பட்ட வாழ்வை வாழ விரும்புகிறவராய் இருக்கிறார், அந்தகார கிரியைகளை விட்டொழித்து, முழுவதுமாக தேவனுக்காக வாழும் வாழ்வின் கண்ணோட்டத்தை அடைந்தவர்களாய் இருக்க அவர் விரும்புகிறார். எல்லோரும் அவரது நியாயாசத்திற்கு முன் எதிர்பட வேண்டியவர்களாயும், நியாயந்தீர்க்கப்பட வேண்டியவர்களாயும் இருக்கிறோம். See BTB study on JUDGMENT: JUDGMENT SEAT OF CHRIST. நியாயத்தீர்ப்பு: கிறிஸ்துவின் நியாயாசனம்.

தேவனது சித்தப்படி செய்யாத, எல்லா கிரியைகளின் மீதான நியாயத்தீர்ப்பு உறுதிப்படுத்தப்பட்டு இருப்பதால், பரிசுத்தாவியானவரின் வல்லமையால், அவருக்கு செய்த பணிக்கேற்ற பிரதிபலனும் அதிக நிச்சயமாய் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. ஆவிக்குரிய நலன் கருதி, புதிய ஏற்பாட்டு காலத்தில் வாழும் நாம், உலகிற்கோ, மாமிசத்திற்கோ, பிசாசுக்கோ நம்மை அற்பணித்து வாழாதபடிக்கு, ஆவியானவருடன் யுத்தம் செய்வதை நிச்சயித்துக் கொண்டு, ஆவிக்குரிய யுத்தத்தில் ஒவ்வொரு நாளும் ஜெயம் கொள்ளுகிறவர்களாய் விளங்குவோமாக. மத்தேயு 16:24-27, ரோமர் 2:1-11, 6:12-23, 12:1-2, 1 கொரிந்தியர் 4:1-5, 6:12-20, கலாத்தியர் 6:7-9, எபேசியர் 6:7-8, கொலோசெயர் 3:23-25, வெளிப்படுத்தல் 2:23-29, 20:12-15.

1 கொரிந்தியர் மூன்றாம் அதிகாரத்தில் பவுல், மனித நன்மைகளைக்குறித்து முழுமையாய் விவரித்துள்ளார். இது தேவனுக்கு முன்னதாய் எவ்வித நன்மை பயப்பனவாய் இல்லை. இவைகள் அக்கியினால் சோதிக்கப்பட்டு நியாயத்தீர்ப்பில் முடிவடைகிறதாய் இருக்கிறது. நம்மால் பரலோகில் பிரவேசிக்க இயலும், இது பவுலின் வார்த்தையினால், மற்றும் இதர அப்போஸ்தலரின் வார்த்தைகளால் அறிகிறவர்களாய் இருக்கிறோம், இது பெரிதான அவமானம் மற்றும் பெரிதான இழப்பை அளிக்கிறதாய் இருக்கிறது. மனித நன்மையானது (மனித முயற்சியினால், மனிதன் செய்யும் நற்கிரியைகள்) மதிப்பற்றவைகளாய் இருக்கின்றன, ஆனால் தெய்வீக நன்மைகளோ (பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் செய்யப்படும் நன்மைகள்) நித்தியமான மதிப்பை உடையவைகளாய் இருக்கின்றன.

11. ஆகையால் கர்த்தருக்குப் பயப்படத்தக்கது என்று அறிந்து மனுஷருக்குப்

புத்திசொல்லுகிறோம். தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாய் இருக்கிறோம். உங்கள் மனசாட்சிக்கும் வெளியரங்கமாய் இருக்கிறோம் என்று நம்புகிறேன்.

இப்பாட சம்பந்தமான வேதாகம உபதேசங்கள் இங்கு விவாதிக்கப்படுகின்றன, முதிர்ந்த, வளரும் விசுவாசிகள் செயல்பாடுகள் குறித்து பேசப்படுகிறது. பவுல் தனது புரிந்து கொள்ளுதலின்படி கர்த்தரின் நியாய சங்கத்தால் விளையும் உடனடி விளைவுகள் குறித்து கூறுகிறார். காரணம் அவர் கர்த்தரைக் குறித்த பயத்தில் இருக்கிறவராய் இருக்கிறார். மனுக்குலத்திற்கு (இரட்சிப்படைந்தோரும், இரட்சிப்படையாதோரும் இதில் உள்ளடங்குவர்). தான் பிரசங்கிக்கும் ஊழியத்தைக் குறித்து கூறுகிறார். கர்த்தருக்குப் பயப்படுவதைக் குறித்து பவுல் பேசுகிறவராய் இருக்கிறார், புதிய ஏற்பாட்டில் மற்றவர்களும் மற்றும் தீர்க்கதரிசிகளும் கர்த்தருக்கு பயப்பட்டவிதத்தைக் குறித்து அவர் பேசுகிறவராய் இருக்கிறார். கர்த்தரிடத்தில் அன்புகூறுவதைக் குறித்து இன்றைய அளவில் தாராளமாய் கூறிவருகின்றனர், ஆனால் மிகக்குறைவாக கர்த்தருக்குப் பயப்படுதல் குறித்து கூறுகிறவர்களாய் இருக்கின்றனர்.

இந்நிருபத்தின் இப்பகுதியில் உள்ள தலைப்புகளில் ஒன்று வஞ்சிப்பது, ஒரு துடிப்பான விசுவாசியிடம் சுய வஞ்சனையை பயன்படுத்தி சாத்தான் எளிதில் வழிவிலகச் செய்கிறவனாய் இருக்கிறான். பெரிதான வஞ்சனை என்னவெனில், நமது யுகத்தில், கர்த்தராகிய இயேசுவைக் குறித்த அறிவானது, மென்மையானதாயும், அன்பு கூறத்தக்கதாயும் மற்றும் பெலவீனமுள்ளதாயும் இருந்து வருகிறது. தோமா உயிர்த்தெழுந்த கர்த்தரை கண்டபோது, அவரது பாதத்தில் விழுந்து என் தேவனே என அழைத்து அவரைத் தொழுதுகொண்டார். யோவான் 20:28. கர்த்தரையும் அவரது கிரியைகளையும் புறக்கணிப்போருக்கு கொடூரமான நியாயத்தீர்ப்பு இருக்கிறது, மற்றும் பவுலின் வார்த்தைகளின் பிரகாரம், விசுவாசிகள் தங்களது நேரத்தையும், தருணங்களையும் தவறவிட்ட நிலையில் அவர்களுக்குரிய நியாயத்தீர்ப்பைக் குறித்த கொடூரமான வார்த்தையைப் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார். இழந்து போனோர் எல்லாவற்றையும் இழந்து போகிறவர்களாய் இருப்பர், நாமோ பிரதிபலன்களை மட்டும் இழந்து போகிறவர்களாய் இருப்போம், இவைகள் அனைத்தும் சத்தியத்திற்கு கீழ்ப்படியும் போது தவிர்க்கப்படுகிறதாய் இருக்கிறது. இப்பூமியில் ஆற்றிவரும் கடமைக்காய் உண்மையான பாராட்டு அவசியமாய் இருக்கிறது, மற்றும் நாம் இப்பூமியில் விடப்பட்டு எதைச் செய்து நிறைவேற்ற வேண்டுமோ அவற்றை செய்து முடிக்க வேண்டிய அவசியம் உள்ளவர்களாய் இருக்கிறோம்.

வேத வசனங்களில் கர்த்தரின் பயங்கரம் குறித்து பலமுறைகள் கூறப்பட்டுள்ளது மற்றும் இவ்வசனங்களை மிகவும் கவனமாயும், ஜாக்கிரதையாயும் வாசித்தல் அவசியம்: சங்கீதம் 73:12-25, 76:4-12, ஏசாயா 33:13-22, மத்தேயு 10:25-33, மாற்கு 8:23-38, 9:47-50, லூக்கா 12:4-5, எபிரெயர் 10:23-31, யூதா 21-25. அவரது நியாயத்தீர்ப்பின் ஆழ்ந்த சிந்தனைக்குப் பின்னர் நாம் எங்கு செல்வோம்? அவரது இரக்கம், கிருபை, அன்பான பாராட்டுக்களைத் தேடி அவரது ஆறுதலுக்காய் ஏங்குகிறவர்களாய் இருப்போம். 1 கொரிந்தியர் 4:4-16, எபேசியர் 2:1-14, 1 தெசலோனிக்கேயர் 2:3-13.

அன்பு செலுத்தி வாழவேண்டியவர்களாய் இருக்கிறோம், எந்தவிதத்திலும் நாம் கர்த்தருக்கு இடர்பாடுண்டாக்காது, பரிசுத்தப் பயத்துடன் வாழவேண்டியவர்களாய் இருக்கிறோம். நமது செயல்பாடுகள் அனைத்தும் முற்றிலும் தெளிவுடனும் மற்றும் தேவனுக்கு முன்பாக வெளிப்படையாகவும் இருத்தல் வேண்டும், மற்றும் நமது சகமனிதர்கள் கூட நமது செயல்பாடுகள், நமது நோக்கங்களை காண்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். மறைவானதாய் ஒன்றும் இருத்தல் கூடாது, நாம் நம்மை நாமே ஏமாற்றிக்கொள்ளுதல் வேண்டாம். தேவனுக்கு முன்பாகவும், நமது சகமனிதர் முன்பாகவும் நேர்மையுடன் நடந்து கொள்வோமாக.

12. **இதினாலே நாங்கள் உங்களுக்கு முன்பாக எங்களை மறுபடியும் மெச்சிக்கொள்ளாமல், இருதயத்திலல்ல, வெளிவேஷத்தில் மேன்மைபாராட்டுகிறவர்களுக்கு எதிரே, எங்களைக் குறித்து, நீங்கள் மேன்மைபாராட்டும்படிக்கு ஏதுவுண்டாக்குகிறோம்.**

பவுல் தன்னைக் குறித்து கொரிந்தியருக்கு விமர்சித்து எழுதுகிறவராய் இருக்கிறாரா. அவர் கர்த்தரின் அங்கீகாரத்தை மட்டுமே தேடுகிறவராய் இருந்தார், அது மட்டும் அவர் கருத்தில் இருந்தது. பவுல் கொரிந்தியர் கர்த்தரது நியாய சங்கத்தின் முன்பு நியாயம் விசாரிக்கப்பட்டு, நித்தியமான ஆசீர்வாதங்களை அடைந்து தேவனால் கௌரவிக்கப்படுவது தனக்கு மகிழ்ச்சியையும், புகழ்ச்சியையும் பரலோகில் கொண்டுவருவதை தேடுகிறவராய் இருந்தார். அவர் பேசுகிற அனைத்தையும் அவர் காணும்படி வாஞ்சிக்கிறவராய் இருந்தார், அவர்களது ஆசீர்வாதங்களை மட்டுமல்லாது, காலாகாலங்களில் தான் செய்தவற்றிற்கான ஆசீர்வாதங்களையும் நித்தியத்தில் தேடுகிறவராய் இருந்தார். இவ்விருபாலரையும் தாக்குதல் நடத்துகிறவர்களை அமைதிபடுத்துவதாய் இருந்தது. கள்ளப் போதனையாளர்களுக்கு எதிராக சிறப்பான வாக்குவாதம் சத்தியத்தில் வல்லமையுடன் வாழ வகை செய்கிறதாய் இருந்தது, மற்றும்

இப்படிப்பட்ட தீமை செய்யும் மனிதர் மற்றும் மனுஷிகளுக்கு இவர்கள் மீது எவ்வித வல்லமையும் இல்லை என்பதை உணர்த்துகிறதாய் இருக்கிறது.

விசுவாசிகள் அடிக்கடி தங்களது சுய விளம்பரத்தை நாடுகிறவர்களாய் இருந்தனர், நமது ஊழியத்தைக் குறித்த சிறப்பான விளம்பரம் என்பது நமது கீழ்ப்படிதலும், மற்றும் பரிசுத்தாவியானவரின் தாக்கமும் ஆகும்.. 2 கொரிந்தியர் 11:12-15, 12:1-10, கலாத்தியர் 6:12-15. கர்த்தர் நம்மை மகிமைக்காகவும், ஆசீர்வாதத்திற்காகவும் உயர்த்துகிறவராய் இருக்கிறார், நம்மை நாமே உயர்த்துகிறவர்களாய் இருப்போமானால் அது நம்மை நியாயத்தீர்ப்புக்கு வழிநடத்துகிறதாய் இருக்கும்.

13. நாங்கள் பைத்தியங்கொண்டவர்களென்றால், தேவனுக்காக அப்படியிருக்கும், தெளிந்த புத்தியுள்ளவர்களென்றால், உங்களுக்காக அப்படியிருக்கும்.

புலம்ப ஒரு காலம் உண்டு மற்றும் "நமது சார்பில் நிற்க" ஒரு காலமுண்டு, நாம் உணரும் உணர்ச்சிவசமானது எப்பொழுதும் தெளிவானதும் மற்றும் எல்லாருக்கும் திறந்த புத்தகம் போன்று இருத்தல் வேண்டும். உணர்ச்சிவசப்படுவது மனித வாழ்வில் சகஜமான ஒரு பகுதியாய் இருக்கிறது, ஆனால் அதற்கு ஆவிக்குரிய வல்லமையில்லாது இருக்கிறது, அல்லது தன்னில்தானே எவ்வித முக்கியத்துவம் இல்லாது இருக்கிறது. இது சரீர வல்லமையாய் மட்டும் இருக்கிறது. பவுல் தான் உணர்ச்சிவசப்படுவது குறித்து, கர்த்தருக்கு முன்னதாக உண்மையிலே களிகூறுகிறவராய் இருக்கிறார், ஆனால் ஆழ்ந்த சிந்தனை மற்றும் சத்தியத்தை போதித்தல் போன்றவற்றைவிட, இப்படிப்பட்ட உணர்வுகள் ஆவிக்குரியனவாய் இல்லை என தீர்மானித்து இருந்தார்.

உணர்ச்சி எந்த ஒரு காரியத்திற்கு அடையாளமாய் இருப்பதில்லை. தேவனது காரியங்களில் ஆர்வம் என்பது இருக்க வேண்டியதாய் இருக்கிறது. உணர்ச்சி சம்பந்தப்பட்ட காரியங்களில் இரு வழிகளில் நாம் தவறிழைக்கக்கூடும், முதலாவதாக உணர்ச்சிகளை சத்தியத்துடன் சமப்படுத்துதல், இரண்டாவதாக நமது ஆவிக்குரிய அனுபவங்களிலிருந்து முற்றிலுமாய் உணர்ச்சிகளை அகற்றிவிடுதல். இவ்வசனத்தின் இறுதிப் பகுதியைப் பாருங்கள், நாங்கள் அனைத்துக் காரியங்களையும் உங்களுக்காகவே செய்கிறோம்! பவுல் செய்த அனைத்து காரியங்களிலும், அவரது இலக்கே, அவரது குணாதிசயங்களை வழிநடத்துகிறதாய் இருந்தது, அவரது கரிசனை அனைத்தும் இரு காரியங்களைத்

தழுவியதாய் இருந்தது, முதலாவதாக தேவனது மகிமை, இரண்டாவதாக தேவ மக்களின் ஆசீர்வாதம். இவ்விஷயத்தில் பவுல் கர்த்தரைப் பின்பற்றினதை போன்று, அவரைப் பின்பற்றுவதை, சவாலாய் எடுத்துக்கொள்வோமாக, பிலிப்பியர் 3:7-17.

இவ்வுலக காரியங்களால் கவனச்சிதறல் அடையாத வண்ணம், நம்மை பாதுகாப்பது என்ன? இதற்கான பதிலை அடுத்த வசனத்தில் அளிக்கிறவராய் இருக்கிறார், கிறிஸ்துவின் சிலுவையை திரும்பவும் எடுத்துக்கொள்ளுதல். இங்கு சிலுவையானது ஆரம்பமாகவும் மற்றும் விசுவாசத்திற்கான வல்லமையாகவும் மறுபடியும் இங்கு காண்கிறவர்களாய் இருக்கிறோம். அப்போஸ்தலரின் மனதில், சிலுவையைக் குறித்து கூறும்போது, வெறுமையாய் காணப்படும் கல்லறை, கிறிஸ்துவின் பரமேறுதல், மற்றும் நித்தியம் போன்றவற்றை விவாதிக்க வேண்டியதாய் இருக்கிறது. சிலுவை என்பது தோல்வியின் அடையாளமாய் அல்ல வெற்றியின் அடையாளமாய் இருக்கிறது, வெட்கத்தின் அடையாளமல்ல, மகிமையின் அடையாளமாய் இருக்கிறது, பெலவீனத்தின் அடையாளம் அல்ல, வல்லமையின் அடையாளமாய் இருக்கிறது.

The cross was the symbol, not of defeat, but of victory; not of shame but of glory; not of weakness, but of power. It was the potent early symbol for Christianity, where the way the world saw the event, (as defeat and death), was contrasted to the spiritual reality of the Lord’s complete victory over sin and death.

14. கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது ஏனென்றால், எல்லாருக்காகவும் ஒருவரே மரித்திருக்க, எல்லோரும் மரித்தார்கள் என்றும்,

நாம் அன்பு கூறுகிறப்படுகிறவர்களாய் இருக்கிறோம். இவ்வுண்மை ஆரம்பமாக கொண்டு, பவுல் சிலுவையானது அன்புக்கு ஆதாரமாக உள்ளது, இதினிமித்தம் கொரிந்தியர் தாங்களது குணாதிசயம் மற்றும் தாங்கள் மதிப்பிடும் காரியங்களில் முடிவையும், மற்றும் மாற்றங்களையும் கொண்டு வந்து, அவர்களது வாழ்வும், சாட்சியின் ஜீவியமும் மாறுதல் வேண்டும் என அறிவுரை கூறுகிறவராய் இருக்கிறார். தேவன் நம்மிடத்தில் அன்பு கூற விடுதலையுடன் இருக்கிறார், தனது பரிசுத்தம் எவ்விதத்திலும் பாதிக்காத வண்ணம், இயேசுக் கிறிஸ்துவின் சிலுவை தியாகத்தின் மூலம் அன்புகூறுகிறவராய் இருக்கிறார். ரோமர் 5:12-6:12. கர்த்தரின் அன்பானது நம்மிடத்தில், அளவற்ற நன்மைகளை அளிக்க வல்லமை பொருந்தினதாய் இருக்கிறது. அவர் நமது எல்லா தேவைகளையும் சந்திக்கிறவராய் இருக்கிறார், சிலுவையை நோக்கிப்பார்க்கும் போது, பாவிகளாய்

வாழ்ந்த நமக்கு எல்லாவற்றையும் கொடுத்து தீர்த்தார், இப்பொழுது அவரது பிள்ளைகளாய் இருக்கும் நமக்கு அதிக நன்மைகளைக் கொடுப்பது நிச்சயமல்லவா? எபேசியர் 2:4-10, 3:14-21, See doctrinal studies on CHRIST: WORK ON THE CROSS, DEATH. சிலுவையின் மீது கிறிஸ்துவின் கிரியை, மரணம் போன்ற உபதேச பாடங்களை ஒப்பிட்டுப் பார்க்க.

கிறிஸ்துவின் அன்பு நம்மை நெருக்கி ஏவுகிறதாய் இருக்கிறது. நெருக்கி ஏவுதல் என்பதன் பொருள், எழுத்தின்படி, "ஒன்றாக இணைக்கப்படுதல்" “held together”. என்பதாகும். பவுல் சொல்லுகிறது என்னவெனில், நமது சிந்தனையானது சிலுவையின் உண்மையின் மூலமாய் ஒன்றாய் இணைக்கப்படுதல் வேண்டும் என்பதாகும். சிலுவையைப் பற்றிய உண்மையானது நமது சிந்தனையை வழிநடத்துகிறதாய் இருந்து, ஒரு குறிப்பிட்ட வழியில் நமது மனதை நடத்துகிறதாய் இருத்தல் வேண்டும், அது தேவனது குணத்தையும் அவரது திட்டத்தையும் சார்ந்ததாய் இருத்தல் வேண்டும். தேவனது குணம் மற்றும் அவரது செயல்பாடுகள் சரித்திரத்தில் துள்ளியமாய் வழிவகை செய்ததாகவும், நமது அனுதின நம்பிக்கையுடன், உலகமார்க்கமாய் நடவாதபடி, தேவனது திட்டப்படி நடக்க வழிவகை செய்கிறதாய் இருக்கிறது.

சட்டரீதியான மற்றும் முறையான காரணாகாரியங்களால், பவுல் இப்படிப்பட்ட தீர்மானத்திற்கு கடந்து வந்தவராய் இருக்கிறார். அவர் இதை krino, என்கிற கிரேக்க வினைச் சொல் மூலம் வெளிப்படுத்துகிறவராய் இருக்கிறார், இவ்வினைச்சொல்லானது the aorist, active, participle, ஆக இருந்து, இதைப்போன்ற சிந்தனை மற்றும் இவ்வகையான முடிவிற்குள் கடந்து வர அவரை வழி நடத்துகிறதாய் இருந்தது. அவரது முடிவானது, எல்லாருக்காகவும் இயேசு ஒருவரே மரித்திருக்க, எல்லோரும் மரித்தார்கள் என்ற முடிவுக்கு வர அவரை வழிநடத்துகிறதாய் இருந்தது.

பவுல் கருத்தானது இறையியல் சார்ந்த வலிமை மிக்க கருத்தாய் இருக்கிறது, எல்லோரும் அக்கிரமங்களிலும் பாவங்களிலும் மரித்தவர்களாய் இருந்தனர், மற்றும் நித்திய ஜீவனைக் குறித்த நம்பிக்கையற்று இருந்தனர், அவர்கள் இயேசுவோடும் அவரை பின்பற்றுகிறவர்களோடும் எவ்வித உறவுமின்றி இருந்தனர். பாவமானது தவிர்க்கமுடியாத தடைச்சுவராய் தேவனுக்கும் மனுக்குலத்திற்கும் இடையே நின்றது, இயேசுக் கிறிஸ்து சிலுவையின் மீது, பாவத்திற்குரிய பூரணமான, பிரயாச்சித்தத்தை ஏற்படுத்தினார். யோவான் 1:29, 36, 1

கொரிந்தியர் 2:10-16, கொலோசெயர் 2:11-15, 1 தீமோத்தேயு 2:3-6, 3:16, 4:10, தீத்து 2:11-14, எபிரெயர் 2:9, 2 பேதுரு 2:1, 1 யோவான் 2:1-2, 5:19.

15. பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று, பிழைத்திருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்று நிதானிக்கிறோம்.

தியாக பலி மற்றும் அவரது பிராயச்சித்த மரணத்தின் நோக்கமானது, ஒவ்வொரு விசுவாசியின் வாழ்விலும் மாற்றத்தினை கொண்டுவருவதாய் இருந்தது. நமது கண்ணோட்டம், அவருக்கு பணிசெய்வதில் முன்னேற்றத்தைக் காணவேண்டியதாய் இருக்கிறது. இதை பவுல் தனது ஊழியகாலத்தில், விசுவாசிகளுக்குச் சுட்டிக்காட்டி உணர்த்துகிறவராய் இருந்தார். புறஜாதியாரைப் போன்று சுய இன்பத்திற்காய் மற்றும் உல்லாச வாழ்க்கை வாழாது கர்த்தரது பணியில் நாட்டம் செலுத்தி வாழ உற்சாகப்படுத்துகிறவராய் இருந்தார். நாம் கர்த்தரை முக முகமாய் சந்தித்து வாழ அழைக்கப்பட்டிருக்கிறோம், நமது சுயமான காரியங்களைத் நோக்காது, கர்த்தரை நோக்கி, அவரது இராஜ்ஜியத்தின் முன்னேற்றத்திற்கான பணிகளைச் செய்யத் தேடுகிறவர்களாய் இருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். . யோவான் 3:15-17, 5:24-25, 6:53-65, ரோமர் 6:10-18, 8:1-10, 14:7-9, 1 கொரிந்தியர் 6:19-20, கலாத்தியர் 2:19-21, எபேசியர் 5:14-17, கொலோசெயர் 2:12-3:1, 3:17, 23, 1 தெசலோனிக்கேயர் 5:8-11, எபிரெயர் 13:14-21, 1 பேதுரு 1:14-16, 4:6, 1 யோவான் 4:8-13.

தலைமைத்துவ நடைமுறை:

1. தலைவர்கள் பணிசெய்வதற்கான தருணத்திற்காய் பசிதாகத்துடன் இருக்கவேண்டியவர்களாய் இருக்கின்றனர். கர்த்தரது மகிமையைத் தேடும் தருணங்களை நாம் ஒவ்வொரு நாளும் தேடுகிறவர்களாய் இருக்கிறோமா? பவுல் கர்த்தரது மகிமையையும், பரிசுத்தவான்களின் ஆசீர்வாதத்தையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் மற்றும் ஒவ்வொரு நாளிலும் தேடுகிறவர்களாய் இருத்தல் வேண்டும் என பவுல் சவால் விடுகிறவராய் இருக்கிறார். நித்திய பிரதிபலன் கர்த்தருக்கு மகிமையை கொண்டுவருகிறதாய் இருக்கிறது, இம்மகிமையானது நித்திய நித்தியமாய் அவருக்குச் செலுத்துகிறதாய் இருக்கும். விசுவாசிகள் பிரதிபலனாக கிரீடங்களைப் பெறுமாறு வற்புறுத்தப்படுகின்றனர். See doctrinal study

2. தலைவர்கள் தங்களது, தலைசிறந்த தலைவரது அபிப்பிராயங்களை மதித்து நடத்தல் வேண்டும். நாம் ஒரு கண்ணை நியாய சங்கத்தின் மீதும் மறு கண்ணை சிலுவை மீது வைக்கலாமா? கர்த்தருக்கான அன்பு மற்றும் கர்த்தரின் விருப்பமற்ற காரியங்களுக்கான பரிசுத்த பயம் உள்ளவர்களாய், இவ்விரு காரியங்களுக்கிடையே சம நிலையை நிலைநாட்டுகிறவர்களாய் இருக்கிறோமா? இது இன்றைய அளவிலான சபையில் ஒரு பாடமாய் எடுத்து கொள்வதில்லை, இது வேதாகம சமநிலையாய் இருக்கிறது, இதை அப்போஸ்தலரின் வாழ்வில் காண்கிறவர்களாய் இருக்கிறோம். நாம் அவர்களது வாழ்வின் மாதிரியைப் பின்பற்ற வேண்டியவர்களாய் இருக்கிறோம், அவ்வாறு செய்ய "கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தை" மிகவும் கவனமாய் எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். உண்மையான ஆராதனை என்பது, சிருஷ்டிகரான இரட்சிப்பின் தேவனை பரிசுத்த பயத்துடனும் மற்றும் அன்புடனும் இவ்விரு காரியங்களின் சமநிலையில் ஆராதனை செய்தல் வேண்டும்.

நமக்கு வர இருப்பதை நாம் பெற்றுக்கொள்ளப் போகிறோம். நமது செயல்பாடுகளின் விளைவிற்காக பயத்தை சுத்திகரிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், அவமானம், மற்றும் பாவத்தின் அவகீர்த்தி போன்றவற்றை சுத்திகரித்தல் வேண்டும். அவமானமானது நித்தியத்தில் நம்முடையதாய் இருக்கும், காரணம் பூமியில் நமது தருணங்களை வீணாக்கிவிட்டோம். தேவ தூதர்களின் முறண்ப்பாட்டின் யதார்த்தத்தைக் குறித்து நாம் எச்சரிப்புடன் இருப்போமாக, மற்றும் ஒவ்வொரு நாளிலும், இவ்வுலகம், மாமிசம், பிசாசு போன்றவைகள் மூலம் உண்டாகும் எல்லா சோதனைகளிலும் மனோரீதியாக வெற்றி பெற சர்வாயுத வர்க்கத்தை தரித்துக்கொள்வதற்கு நிச்சயமுள்ளவர்களாய் இருத்தல் அவசியம்.

3. தலைவர்கள் புகார் செய்தல் கூடாது, அவர்கள் பணிசெய்தல் வேண்டும். துயரத்தினால் புலம்பலாம், ஆனால் புகார் செய்தல் கூடாது, புலம்புதலும், அழுதலும் மனுஷீகத்திற்குரியது, ஆனால் ஆவிக்குரிய நிலையானது பாடுகள் துன்பங்களை, கல்வாரியின் அடிவாரத்திற்கு எடுத்துச் சென்று அங்கு வைக்கிறதாய் இருக்கிறது. சக மனிதர் துன்புறுவது போன்றே நாமும் வேதனையை உணருகிறவர்களாய் இருக்கிறோம், நமக்குண்டான ஆறுதல் என்னவென்றால், நாம் கர்த்தரில் நம்பிக்கை உள்ளவர்களாய் இருக்கிறோம், நாம் நமது துயரங்களை அவர் மீது குவித்துவிடுகிறவர்களாய் இருக்கிறோம். நாம்

பாடுகளையும், துன்பங்களையும் அனுபவிக்கிறவர்களாய் இருக்கிறோம் ஆனால் அவைகளில் வாழ்கிறவர்கள் அல்ல, நாம் கிறிஸ்துவுக்குள் வாழ்கிறவர்களாய் இருக்கிறோம். இயேசுவின் மீதுள்ள அன்பானது இன்றைய அளவில் எந்த அளவுக்கு உங்களை நெருக்கி ஏவுகிறதாய் இருக்கிறது? தேவனது குணாதிசயங்கள் உங்களை நெருக்கி ஏவுகிறதாய் இருக்கிறதா, அல்லது உங்களது சுயத்தால் அதனை மட்டுப்படுத்துகிறவர்களாய் இருக்கிறீர்களா? வாழ்வில் சட்டரீதியான காரியங்கள் அனுமதிக்குமேயானால், மீட்பு மற்றும் பிரயாசித்தம் போன்றவை தப்பிக்கொள்ள இயலாத சட்டரீதியான காரியங்களாய் விளங்குகின்றன. இதுவே பவுல் நம்மிடம் எதிர்பார்க்கும் ஒன்றாய் இருக்கிறது, பிரயாச்சித்தம் உங்கள் அனுதின கர்த்தருக்கான பணியில் கிரியை செய்வதாய் இருக்கட்டும். சுவிஷேசத்தின் முன்னேற்றத்திற்காய் இவ்வாரத்தில் நாம் வாழ்ந்துள்ளோமா அல்லது இச்சைகள் மற்றும் இவ்வுலக இன்பங்களுக்காய் இந்நாட்களை கடத்தி வருகிறோமா? தேவனது அன்பு மற்றும் அவரது பரிசுத்தம் இவற்றை வாழ்வில் செயல்படுத்த தீர்மானித்தல் வேண்டும், மற்றும் ஒவ்வொரு நிமிட செயல்பாட்டிலும் இதன் தாக்கத்தைப் பெற்று பணிசெய்தல் அவசியமாய் காணப்படுகிறது என பவுல் கேட்டுக்கொள்கிறவராய் இருக்கிறார்.

4. உண்மையான தலைவர்கள் அபாயங்களின் எச்சரிப்பைப் பெறுகிறவர்களாய் இருக்கின்றனர்: கர்த்தரது மந்தையின் போதகர்களாகிய நாம், கர்த்தரது மக்களை சுயவஞ்சனை குறித்து எச்சரிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். எல்லாம் சரியாகிவிடும் எனச் சொல்வது எளிதான காரியமாய் இருக்கிறது, எவ்விதமான கீழ்ப்படியாமை அல்லது காலத்தை விரயம் செய்தல் ஒருபோதும் சரியாகாது. பவுல் நமக்கு சவால் விடுவது என்னவெனில் தேவன் செய்வது போன்று காரியங்களை காணுதல் வேண்டும், ஒவ்வொரு சமய சந்தர்ப்பத்தை மதிப்பிட்டு, கர்த்தரை மகிமைபடுத்துதல் வேண்டும். நாம் பெற்றுக்கொள்ளும் அனைத்து பிரதிபலன்களும். நித்தியம் முழுவதிலும் கர்த்தருக்கு மகிமையைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது. விசுவாசியின் வாழ்வில் சரியான உணர்வுகளுக்கு இடமளித்தல் வேண்டும் என சவாலாகக் கூறுகிறவராய் இருக்கிறார், அமைதியாய் இருத்தல் மற்றும் ஆர்வத்துடன் செயல்படுதல் இவைகளுக்கிடையே ஏற்படக்கூடிய சரியான சமநிலைக் குறித்தும் கூறுகிறவராய் இருக்கிறார். மற்றும் இவைகள் குறித்து எவ்விதத்திலும் பயப்படாது, ஒவ்வொன்றிலும் சரியான காரியங்களை செய்யும்படி அறிவுறுத்துகிறார். கர்த்தரது ஜனங்கள் இப்படிப்பட்ட உண்மைகளை கண்டு மற்றும் இவைகளை அனுதின வாழ்வில் கடைபிடித்தல் வேண்டும், இல்லையேல், அவர்கள் சேவை செய்யும் தருணங்களை இழந்து மற்றும் இப்பொழுதுள்ள மகிழ்ச்சியையும் பின்னர் உள்ள

மகிமையை இழந்து போகிறவர்களாய் இருப்பர். இப்படிப்பட்ட காரியங்களை சீர்தூக்கிப்பார்க்க வேண்டியது நமது கடமையாய் இருக்கிறது.

நமது பிரசங்கத்திற்குப் பின்னர் ஜனங்கள் கர்த்தருடன் வாழுவதற்கான பரிசுத்த நடக்கை குறித்த உணர்வுடன் காணப்படுகிறார்களா? பவுல் இதை இங்கு தெளிவுபடுத்தி, பிரசங்கம் செய்யும் போது, உருமாற்றமடைந்த வாழ்வானது உருவாகவேண்டும் என வலியுறுத்துகிறதைப் பார்க்கிறோம். வேதாகம பிரசங்கமானது, இழந்து போனோர் இரட்சிப்படைவதற்கு அவர்களை நெருக்கி ஏவுகிற தாக்கத்தை ஏற்படுத்துவதாய் இருத்தல் வேண்டும். அத்தகைய பிரசங்கம் ஒவ்வொருவரையும் சிலுவையின் அடிவாரத்தில் கொண்டுவருகிறதாய் இருத்தல் வேண்டும், மற்றும் அவர்களது வாழ்நாட்களில் இப்பூமியில் உருமாற்றம் அடையச் செய்வதாய் இருத்தல் வேண்டும். நமது பிரசங்கத்தில் உருமாற்றம் நிகழவில்லையானால், நாம் வழிதப்பி செல்கிறவர்களாயிருக்கிறோம். நாம் சிலுவைக்குத் திரும்பக்கடவோம், காலியான கல்லறைக்குத் திரும்பக்கடவோம் ஜனங்களுக்கு இரட்சிப்பு மற்றும் விடுதலையின் வல்லமையை கொண்டுவரக்கூடிய பிரசங்கத்தை ஜனங்களுக்கு அளிக்கிறவர்களாய் இருப்போமாக.

[ஆ] 2 கொரிந்தியர் 5:16-21.

"16. ஆகையால், இது முதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம், நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறியோம், நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும், அவரை மாம்சத்தின்படி அறியோம். 17. இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாய் இருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. 18. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது, அவர் இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை, எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார். 19. அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். 20. ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக் கொண்டு புத்திசொல்லுகிறது போல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். 21. நாம் அவருக்குள் தேனுடைய நீதியாகும்படிக்கு,

பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்."

பிரதிபலிப்பு:

இவ்வதிகாரத்தில் பவுல் தனது முடிவுரையாக முன்கூட்டியே கூறுகிறவராய் இருக்கிறார். இம்முடிவுரையானது வல்லமை மிக்கதாயும், நடைமுறைக்குரியதாயும் இருக்கிறது, மன்னித்தல், பாவத்தை சுமத்துதல், ஒப்புரவாக்குதல், மீட்பு போன்றவற்றைக் குறித்த உபதேசங்களை கொண்டுவருகிறவராய் இருக்கிறார். இவைகளை பரிசீலனை செய்து, உங்கள் சிந்தனையில் இவ்வகையான பெரியதலைப்புகளை கொண்டு வர பிரயாசப்படுங்கள். Refer to the BTB studies of CHRISTIAN LIFE: CONFESSION AND FORGIVENESS at the end of this chapter, IMPUTATION and RECONCILIATION at page 22 and REDEMPTION at page 19.

16. **ஆகையால், இது முதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம், நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறியோம், நாங்கள் கிறிஸ்துவையும் மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும், இனி ஒருபோதும், அவரை மாம்சத்தின்படி அறியோம்.**

நாம் ஏதோ ஒன்றை கண்டுணர்கிறவரை, அவ்வுண்மயைக் குறித்து அறியாமையுடன் இருக்கலாம், ஆனால் அவ்வுண்மைய கண்டுணர்ந்த பின்னர் அவ்வுண்மையின்படி வாழும்படி நிர்பந்தமுள்ளவர்களாய் இருக்கிறோம். இப்பொழுது நம் அனைவருக்கும் சிலுவையைக்குறித்த உறுப்பாட்டை நடைமுறைபடுத்த அவசியமாய் இருக்கிறது. பவுலைப் பொருத்தமட்டில், நாம் எல்லா மக்களையும் வித்தியாசமானவர்களாய் பார்க்கிறவர்களாய் இருக்கிறோம், எனக் கூறுகிறார். நாம் அனைத்து மக்களையும், சிலுவையின் கண்ணோட்டத்தின் மூலம் காண்டு, சிலுவையானது அவர்களைக் குறித்த மதிப்பீட்டையும் மற்றும் அர்த்தத்தையும் நமக்களிக்கிறதாய் இருக்கிறது. இவ்வுலக நியதிகள் பிரகாரம் மாம்சீகத்தின் பிரகாரம், கடந்தகால நிகழ்வுகள் பிரகாரம் மக்களை காண்பதில் நமது கண்ணோட்டமானது உருமாற்றம் அடைய வேண்டியதாய் இருக்கிறது.

பவுல் நம் அனைவருக்கும் அவசியமான முழுமையான மாற்றத்திற்கான காரியங்களை ஒரு படி முன்சென்று விவரிக்கிறவராய் இருக்கிறார். அவர் குறிப்பிடும்போது, கர்த்தர் தம்மை அறிந்தவர்களின் மீது வைத்திருந்த கண்ணோட்டத்தில் கூட மாற்றம் நிகழ்ந்துள்ளதை இங்கு குறிப்பிடுகிறவராய்

இருக்கிறார். இவ்வுலக ஊழியத்தின் போது, அவரை அறிந்தவர்கள் உருமாற்றம் அடைந்தனர், அவர்கள் இப்பொழுது இயேசுக்கிறிஸ்துவைக் காணும்போது முற்றிலும் வித்தியாசமான கோணத்தில் காண்கிறவர்களாய் இருக்கின்றனர். இது அவரது உயிர்த்தெழுதலினால், உருமாற்றம் அடையப்பெற்றவர்களாய் மாறினர். சீஷர்கள் அப்போஸ்தலராய் மாறினர், இதினிமித்தம் தங்களது கர்த்தரைக் குறித்த அவர்களது கண்ணோட்டத்தில் மாற்றம் நிகழ்ந்தது, இப்பொழுது பவுல் தோமாவின் வார்த்தைகளைப் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார், என் கர்த்தாவே, என் தேவரீர் என்கிற பதங்களை அவர் உபயோகிக்கிறவராய் இருக்கிறார். The perfect tense of the Greek verb, மனநிலையில் நிரந்தர மாற்றத்தை தெளிவுடன் ஏற்படுத்தியுள்ளதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. யோவான் 6:62-63, கலாத்தியர் 2:5-7, 5:6, பிலிப்பியர் 3:4-11, கொலோசெயர் 3:9-17, 1 தீமோத்தேயு 5:21-22, யாக்கோபு 2:1-7.

17. இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால், புது சிருஷ்டியாய் இருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின.

சிலுவையின் மீது கர்த்தரின் கிரியையை புரிந்துகொள்ளுதலானது, எல்லா காரியங்களிலும், பெரிதான மாற்றத்தை கொரிந்தியருக்கும், நமக்கும் ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது என்பதை பவுல் விரும்புகிறவராய் இருக்கிறார். நாம் புதிய சிருஷ்டிகளாய் இருக்கிறோம், மனிதவர்க்கத்தில் நாம் புதிய ஜீவிகளாய் இருக்கிறோம். உண்மையான விசுவாசிகள் ஆவிக்குரிய அழிவை சந்திக்கும்போது, இதை அறியத்தவறுகிறவர்களாய் இருக்கின்றனர். நாம் மாற்றப்பட்டவர்களாய் இருக்கிறோம், ஏதோ "முன்னேற்றமடைந்துள்ள நிலை" அல்ல, முற்றிலுமாய் புதிய சிருஷ்டியாய் திரும்ப உருவாக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம், தேவனுக்கு மகிமையைக் கொண்டுவரத்தக்க புதிய ஜீவிகளாய் வடிவமைக்கப்பட்டுள்ளோம். இவ்வித வடிவமைப்பானது, இவ்வுலகக் காரியங்களால் எவ்வித கவனச்சிதறல்களையும் கொண்டுவருவதில்லை.

இரட்சிப்பின் போது, தேவனது கிரியையால், நாம் புதிய சிருஷ்டிகளாய் உருவாக்கப்பட்டுள்ளோம், இதற்காக நாம் எவ்வித கிரியைகளையும் செய்யவில்லை. நமது கிரியைகள், தேவன் நம்மை புதிய சிருஷ்டிகளாய் வடிவமைத்துள்ளதை, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால், செயல்பட்டு மாற்றத்திற்கான உண்மையினை பிரதிபலிக்க வேண்டியதாய் இருக்கிறது. உண்மை என்னவெனில், பழையவைகள் ஏற்கனவே ஒழிந்துவிட்டன, இருப்பினும் நம்மில் அநேகர் இன்னும் "பழையவைகள்" மத்தியில் வாழ்ந்து

கொண்டிருக்கிறவர்களாய் இருக்கிறோம். சிலுவையைக் குறித்த மதிப்பீடானது, நமக்குள் கவனச்சிதறல்களைக் கொண்டுவந்து, முற்றிலுமாக, எவ்வித மாற்றத்தையும் நம்மில் ஏற்படுத்தாதவைகளில் இருந்து நமக்கு உருமாற்றத்தை ஏற்படுத்துவதாக! மனிதர்களின் மதிப்பீட்டின்படி உள்ள எல்லா காரியங்கள் மீதுள்ள தனிப்பட்ட பெருமையானது, கர்த்தருடன் கொள்ளுகிற உறவின் மூலம் மாற்றமடைவதாக! 1 கொரிந்தியர் 1:29-31, கலாத்தியர் 3:28, எபேசியர் 1:3-7.

தாவீதுடன் நமது ஜெபமானது, புதிய ஆவியானது நமக்குள் செயல்பட ஜெபிப்பதாய் இருக்கட்டும். தாவீதைவிட மேன்மையான நிலையில், பரிசுத்த ஆவியானவரது கிரியை நம்மில் உருமாற்றத்தை ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது, காரணம் பெந்தெகொஸ்தே நாளில் இம்மாற்றத்தினை பரிசுத்த ஆவியானவர் ஏற்படுத்தியுள்ளார், பரிசுத்த ஆவியானவரால் அனுதின உருமாற்றமானது, நமது வாழ்வில் அவசியமானதாய் இருக்கிறது. சங்கீதம் 51:10, எசேக்கியேல் 11:17-21, 18:31-32, 36:25-32, மத்தேயு 9:16-17, 12:33-37, யோவான் 3:3-8, ரோமர் 6:4-6, 7:6, 8:9-10, எபேசியர் 2:4-15, 2 பேதுரு 3:10-14.

18. இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது, அவர் இயேசுக்கிறிஸ்துவைக்கொண்டு நம்மைத் தம்மோடே ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை, எங்களுக்கு ஒப்புக்கொடுத்தார்.

நமது திட்டங்கள் தேவனது திட்டத்துடன் இசைந்திருக்க வேண்டியதாய் இருக்கிறது, இவ்வுலகம் கேள்விப்படவேண்டிய மீட்பு மற்றும் ஒப்புரவாகுதல் போன்ற செய்தியினை அவர்களுக்கு அளிப்பது தேவனின் திட்டமாய் இருக்கிறது. எல்லாம் தேவனுடையதாய் இருக்கிறது. நமது சிருஷ்டிக் கர்த்தர் மற்றும் நமது இரட்சகரிடமிருந்து அனைத்தையும் நாம் பெற்றனுபவிக்கிறவர்களாய் இருக்கிறோம். எல்லா காரியங்களும் அவருக்கு மகிமை கொண்டுவரத்தக்கதாயும், மற்றும் அவரது திட்டத்தைக் கனப்படுத்தக்கூடியதாயும் இருக்கிறது. அத்திட்டத்திற்கு நாம் அனைவரும் உண்மையுள்ளவர்களாய் இருப்பதன் மூலம், தேவனது திட்டத்திற்கு இசைந்து செயல்படும்படி செய்வது, பவுலின் செய்தியாய் இருந்தது. நமது அனுதின வாழ்வில் தேவனது திட்டத்தினை வேதாகம உபதேசங்களில் கண்டுகொண்டு அவைகளை செயல்படுத்துவது நமது தலையாய கடமையாய் இருக்கிறது. ரோமர் 11:33-36, 1 கொரிந்தியர் 1:28-31, 8:5-6, 12:4-6, கொலோசெயர் 1:16-17, யாக்கோபு 1:17-20.

இயேசுக்கிறிஸ்துவின் கிரியையாலும் அவரது ஆளத்துவத்தாலும், நாம்

தேவனுடன் ஒப்புரவாக்கப்பட்டுள்ளோம். ஒப்புரவாக்குதல் என்பது தேவனது ஊழியத்தின் ஒரு பகுதியாய் இருக்கிறது, இது மீட்பின் நற்செய்தியை கேட்கவிருப்போருக்கு அளிக்கப்பட வேண்டியதாய் இருக்கிறது. ரோமர் 5:1-11, எபேசியர் 2:16-22, கொலோசெயர் 1:19-21, எபிரெயர் 2:16-18, 1 யோவான் 2:2, 4:10. இரட்சிப்பின் சத்தியத்தை அறியும்படி இருப்போருக்கு, நாம் முழு நேர கிறிஸ்த பணியாளராய் இருந்து சிலுவையைக் குறித்த செய்தியினை அளிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். மாற்கு 16:15-16, லூக்கா 10:5-16, 24:45-48, அப்போஸ்தலர் 10:34-43, 13:38-43.

19. அதென்னவெனில், தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்.

ஒப்புரவாக்குதலின் செய்தியானது, மிகவும் தெளிவுடன் இந்த வசனத்தில் அளிக்கப்பட்டுள்ளது. மூன்று கருத்துக்களை இவ்வசனத்தில் பவுல் கூறுவதைக் கவனித்தல் வேண்டும்.

1. தேவன் கிறிஸ்துவில் இருந்தார். கிறிஸ்துவுக்குள் தேவனது செயல்பாடுகளையும் அவரது இருதயத்தையும், அவர் மனுக்குலத்தின் பாவப்பிரச்சனைக்கும், அவர்கள்து வீழ்ச்சி முதற்கொண்டு அவர்களுக்குண்டான ஆக்கினைத்தீர்ப்புக்கு பரிகாரம் உண்டாக்கியதையும் நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம்.

2. இயேசுக்கிறிஸ்து சிலுவை மீது ஆற்றிய அவரது கிரியைகள் மற்றும் அவரது ஆளத்துவம் இவைகள் மூலம், தேவன் மனுக்குலத்திற்கு ஒப்புரவாக்குதல் என்ற வாசலைத் திறந்துள்ளார். கிறிஸ்துவுக்குள் ஒப்புரவாக்குதல் மனுக்குலத்திற்கு அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது, இது ஒரு முழுமையான செயல்பாடாய் இருக்கிறது.

3. இயேசுவின் தியாக பலியில், மனுக்குலத்தின் அனைத்துப் பாவங்களும் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிட்டன [blotted out] அவைகள் இனி ஒருபோதும் மனிதனுக்கு விரோதமாய் அவனைப் பிடித்துக் கொள்வதில்லை.

இது "நற்செய்தியாய் இருக்கிறது" இதை மற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்கவேண்டியது

நமது கடமையாய் இருக்கிறது. தேவனது செய்தியானது நற்செய்தியாய் இருக்கிறது, அது துர்ச்செய்தியல்ல. கேட்போர் அனைவருக்கும் பகிர்ந்தளிக்கக்கூடிய அற்புதமான செய்தியாய் இருக்கிறது. இதில் நாம் மிகவும் ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருத்தல் அவசியம், இதற்கு முன்னுள்ள அதிகாரத்தில் பவுல் இதைத் தெளிவுபடுத்தியுள்ளார். வெட்கம் என்பது கீழ்ப்படியாமையின் கனியாய் இருக்கிறது, கர்த்தரின் திட்டம் நன்மை பயப்பனவாய் இருக்கிறது., அவரது கிரியையின் விளைவுகள் எப்பொழுதும் நன்மைபயப்பனவாய் இருக்கிறது. மத்தேயு 1:22-25, யோவான் 14:9-14, 19-21, 17:20-26, சங்கீதம் 32:1-2, ஏசாயா 43:25-26, 44:21-26, ரோமர் 4:6-8.

கீழ்ப்படியாமை அல்லது கவனச்சிதறல் மட்டுமே, உண்மையாகவே அவமானம் மற்றும் துக்கத்திற்கான கதவை திறக்கிறவைகளாய் இருக்கின்றன. கந்தகமும் அக்கினியும் எரிகிற கடலைக் குறித்த பெரிதான வருத்தம் என்னவெனில், பாவத்திற்கான கிரயமானது முழுமையாய் கொடுத்துத் தீர்க்கப்பட்ட பின்னர் அவர்கள் அங்கு செல்வது அவசியமற்ற ஒன்றாய் விளங்குகிறது. கந்தகமும் அக்கினியும் எரிகிற கடலில் ஜனங்கள் பங்கடைவதற்கான காரணம் அவர்கள் இயேசுக்கிறிஸ்துவின் கிரியை குறைவாய் மதிப்பிட்டு, தங்களது பாவத்திற்கான பரிகாரத்தை தங்களது சொந்த முயற்சியாலும், கிரியாலும் அடையும்படி எத்தணித்தது ஆகும். காயீனைப் போன்று, அவர்கள் இரத்தம் மூலம் உண்டாகும் பரிகாரத்தைப் புறக்கணித்து, தங்களது சொந்த முயற்சியால் தேவனைப் பிரியப்படுத்திவிடலாம் என எண்ணினர். அவர்கள் எதைத் தெரிந்து கொண்டனரோ உணமையாய் அவைகளைப் பெறுகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்கள் இயேசுக்கிறிஸ்துவை விரும்பவில்லை, இதினிமித்தம் அவர்களது செய்கைகளுக்குரிய பலனை காயீன் அடைந்தது போல இவர்களும் அடைகிறவர்களாய் இருக்கின்றனர். இது கிறிஸ்துவின் சுவிஷேசத்தை ஏற்றுக்கொண்டவர்களுக்கு பெரிதான மகிழ்ச்சியையும், ஏற்றுக்கொள்ளாதோருக்கு துக்கத்தையும் அளிக்கிறதாய் இருக்கிறது. வெளி. 20:11-15. Refer to the doctrinal studies of JUDGMENT:GREAT WHITE THRONE JUDGMENT, HELL AND HADES. நியாயத்தீர்ப்பு: வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு, நரகம் மற்றும் பாதாளம். ஒப்பிட்டுப்பார்க்க.

20. ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக் கொண்டு புத்திசொல்லுகிறது போல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருந்து, தேவனோடே

ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவினிமித்தம் உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

இப்பூமியில், நாம் ஆற்ற வேண்டிய கடமை ஒன்று இருக்கிறது, அது பரலோக நியாய சங்கத்திற்கு முன்பு, விழுந்து போன மனுக்குலத்திற்காக ஸ்தானபதிகளாய் இருந்து செயல்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம். கர்த்தர்தாமே இப்பதவியில் நம்மை நியமனம் செய்துள்ளார். ஸ்தானாபதிகளாய் நாம் உரிமைகளையும் மற்றும் சிலாக்கியங்களையும் பெற்றவர்களாய் இருக்கிறோம். ஸ்தானாபதிகள் தங்களுக்குத் தாங்களே ஊதியம் அளித்துக் கொள்ள மாட்டார்கள், அவர்களது தேசத்தால் அவர்கள் ஊதியம் பெறுகிறவர்களாய் இருப்பர். ஸ்தானாபதிகள் தங்களுக்குத்தாங்களே பிரதிநிதிகள் அல்லர் அவர்கள் அவர்களது கர்த்தரின் பிரதிநிதிகளாய் இருக்கின்றனர். அவர்களுக்கு அமானம் நேரிடும் போது அதை அவர்கள் தங்களுக்காக எடுத்துக்கொள்ளுதல் கூடாது, அது அவர்களது எஜமானருக்குரிய அவமானமாய் இருக்கிறது. அவர்கள் தேசத்தைவிட்டு திரும்ப அழைத்துக்கொள்ளப்படுவார்களேயாகில் அத்தேசத்துடன் யுத்தம் பிரகடணப்பட்டுள்ளது அவர்கள் பாதுகாப்பு கருதி தங்கள் சொந்த தேசத்திற்கு அழைத்துக்கொள்ளபடுகிறவர்களாய் இருக்கின்றனர். அவர்களுக்கு உண்மையில் சொந்தமில்லாத இடத்தில் அவர்கள் வசிக்கிறவர்களாய் இருக்கின்றனர். லூக்கா 10:16, 1 கொரிந்தியர் 4:3-5, எபேசியர் 6:20, 1 தெசலோனிக்கேயர் 4:8.

நாம் இப்பூமியில் கர்த்தரது அலுவல்களைச் செய்கிறவர்களாய் இருக்கிறோம். நமது சொந்த அலுவல்களை அல்ல, அவரது பணியைச் செய்கிறவர்களாய் இருக்கிறோம். நாம் சாதூர்யமாய் அதேசமயம் உறுதியாய், எல்லோரையும் தேவனுடன் ஒப்புரவாக்குகிறவர்களாய் இருக்கிறோம். மனுக்குலமானது இத்தகைய ஊழியத்தைப் பெறுகிறதாய் இருக்கிறது, (passive voice of the verb here) இது எவ்விதத்திலும் அவர்களை பலாத்காரப்படுத்துவதில்லை. லூக்கா 14:15-27, யோவான் 20:21.

தலைமைத்துவ நடைமுறை:

1. கிறிஸ்தவ தலைமைத்துவம் மற்றவர்களை ஆவிக்குரிய நீதிநெறியினால் நியாயந்தீர்க்கிறது. மனித நியாயத்தீர்ப்பின் தராதரத்தின் அடிப்படையில் பவுல் இனி ஒரு போதும் ஜனங்களை மத்திப்பிடப் போவதில்லை என்பதை இங்கு தெளிவுபடுத்துகிறவராய் இருக்கிறார். நாம் இப்பொழுது "புதிய சிருஷ்டியாய்" இருப்பதால், பழைய சுபாவத் தன்மையினால், புதியத் தன்மையை

நியாயந்தீர்ப்பது என்பது பொருந்தாத ஒன்றாய் இருக்கிறது. "பலவான்களை" இவ்வுலகத்தார் நியாயந்தீர்த்து இருக்க, அவர்கள் குறைந்தபட்சம் தேவனது இராஜ்ஜியத்தின் மக்களைக் காண்கிறவர்களாய் இருக்கின்றனர்.

2. தேவன் அளித்த பணிகளில், கிறிஸ்தவ தலைவர்கள் தேவ ஜனங்களை வழிநடத்துகிறவர்களாய் இருக்கின்றனர்: நாம் செய்து முடிக்கவேண்டிய ஊழியத்தைப் பெற்றிருக்கிறோம், ஒரு தலைவர் அதன் மீது கண்ணும்கருத்துமாய் இருக்க வேண்டியவராய் இருக்கிறார், நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ள அப்பணியினை செய்து முடிக்க மக்களை எல்லா பழக்கவழக்கங்கள் மற்றும் செயல்பாடுகளுக்கு வழிநடத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். நமது ஊழியம் ஒப்புரவாக்கும் ஊழியமாய் இருக்கிறது மற்றும் நமது கடமை ஒரு ஸ்தானாபதியாய் இருந்து செயல்பட வேண்டியதாய் இருக்கிறது, பரலோக நியாய சங்கத்திலிருந்து இங்கு அனுப்பப்பட்டு, ஜனங்களை தேவனுடன் ஒப்புரவாக்க வற்புறுத்துகிறவர்களாய் இருக்கிறோம்.

[இ] கலாத்தியர் 5:1-12 - நம்மை தகுதியற்றவர்களாக்க முயற்சி செய்பவர்களுடனும் அல்லது வழிவிலக செய்பவருடனும் ஈடுபடுவது:

"1. ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலையிலே நிலைகொண்டிருங்கள். 2. இதோ நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால், கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். 3. மேலும், விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாய் இருக்கிறான் என்று மறுபடியும் அப்படிப்பட்டவனுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன். 4. நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து, கிருபையினின்று விழுந்தீர்கள். 5. நாங்களோ நீதிகிடைக்குமென்று ஆவியைக் கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம். 6. கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்த சேதனமும், விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும். 7. நீங்கள் நன்றாய் ஓடினீர்களே, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்கு தடைசெய்தவன் யார்? 8. இந்தப்போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல. 9. புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும். 10. நீங்கள்

வேறுவிதமாய்ச் சிந்திக்கமாட்டீர்களென்று நான் கர்த்தருக்குள் உங்களைக் குறித்து நம்பிக்கையாய் இருக்கிறேன். உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான். 11. சகோதரரே, இதுவரைக்கும் நான் விருத்தசேதனத்தைப் பிரசங்கிக்கிறவனாயிருந்தால், இதுவரைக்கும் என்னத்திற்கு துன்பப்படுகிறேன்? அப்படியானால் சிலுவையைப் பற்றிவரும் இடறல் ஒழிந்திருக்குமே. 12. உங்களைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டுபோனால் நலமாய் இருக்கும்.

பிரதிபலிப்பு:

பவுல் முறையாக லீகலிசத்தின் ஸ்தானத்தை இழிவுபடுத்துகிறவராய் இருக்கிறார், இவைகள் ஸ்தான ரீதியாக தாழ்வானதும் மற்றும் கிறிஸ்துவுக்குள்ளான விசுவாசிக்கு வேறுபடுகிறதுமாயும் இருக்கிறது. பவுல் லீகசம் மற்றும் கிருபை இவ்விரண்டும் ஒருபோதும் கலந்து இருக்க முடியாது என்பதை இங்கு தெளிவுபடுத்துகிறவராய் இருக்கிறார். இரட்சிப்படைவதற்கு தொடர்ந்து லீகலிஸத்தில் நிலைத்து இருப்பது என்பது பொய்யான வாழ்க்கையாய் இருக்கிறது, மற்றும் கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்க்கையை மறுதலித்து வாழுதலுக்கு ஆதாரமாயும் இருக்கிறது. விசுவாசியின் பங்கை மறுதலித்து, தொடர்ந்து தங்களைத்தாங்களே ஆக்கினைத்தீர்ப்புக்குள்ளாக அடிமைத்தனத்தில் வாழும் வாழ்க்கையை வாழுவதாய் இருக்கிறது.

இவ்வதிகாரமானது கிருபையின் அடிப்படைக் கருத்து, மற்றும் வாழ்க்கைக்குரிய விசுவாசம், விசுவாசியின் சாட்சி போன்றவற்றின் நடைமுறை பயன்பாடு குறித்து கூறுகிறதாய் இருக்கிறது.

அ] விசுவாசத்தினால் இரட்சிக்கப்பட்டுள்ளோம், நியாயப்பிரமாணத்தின்படி வாழ்வது கூடாது. கலா. 5:1-12. (கிருபையிலிருந்து விழுந்து போகக்கூடாது!)

ஆ] கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்வானது புதிய கனியை உருவாக்குகிறதாய் இருக்கிறது. கலா. 5:13-26.

இ] விசுவாசமானது குணாதிசயம் மற்றும் உறவுகளை பாதித்தல் அவசியம். கலா. 6:1-10.

நாம் எதை விசுவாசிக்கிறோமோ அது நமது வாழ்வில் செயல்பாட்டில் இருத்தல்

வேண்டும் என பவுல் நமக்கு சவால் விடுகிறவராய் இருக்கிறார். பவுலின் கட்டளைகள் முக்கியமாய் இக்கருத்திற்கு எதிர்மறையாய் இருக்கிறதாய் இருக்கிறது, லீகலிசத்தை களையெடுத்து, கிருபையின் விதைகளை நடுகிறவராய் இருக்கிறார், மற்றும் கிருபையின் கனியானது வாழ்வில் உருவாகுதல் என விவரிக்கிறவராய் இருக்கிறார். இயேசுக்கிறிஸ்து நம்மை விடுதலையாக்கியுள்ளபடியால், அவருடன் உறவுகொண்டு, நமது சுதந்தரத்தில் மகிழுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். இயேசுக்கிறிஸ்து நம்மை ஒரு சிறையிலிருந்து [அடிமைத்தனத்திலிருந்து] விடுவித்து, இன்னொரு சிறைக்கு மாற்றியுள்ளார் என யூகிப்பது மதியற்ற செயலாய் இருக்கிறது. இதைத்தான் லீகலிஸ்டுகள் செய்து வருகின்றனர். பவுல் இங்கு நேரடியாக, எல்லா விசுவாசிகளும் தங்களது ஆவிக்குரிய சுதந்தரத்தில் உறுதியாய் நின்று, அவர்களது உன்னதமான அழைப்பிலிருந்து விழுந்து போகா வண்ணம் இருக்க புத்திகூறுகிறவராய் இருக்கிறார், மற்றும் மிகவும் தாழ்ந்த நிலையில் நியாயப்பிரமாணத்தின் வாழுவதை தவிர்த்தல் வேண்டும் என உறுதிப்பட கூறுகிறவராய் இருக்கிறார்.

John MacArthur அவர்கள் உண்மையான விசுவாசியின் விடுதலையைக் குறித்து இவ்வாறு விளங்கக்கூறுகிறவராய் இருக்கிறார்: "தேவனால் முழுமையாய் ஏற்றுக்கொள்ளப்பட்டு மற்றும் அறியப்பட்டவர்களாய் இருக்கிறோம்" இது நியாயப்பிரமாண அமைப்பிலிருந்து முழுவதுமாய் விடுபட்டு, கர்த்தரால் நமக்களிக்கப்பட்டு, இரத்தத்தால் வாங்கப்பட்ட வட்டத்துக்குள் நாம் ஓய்ந்திருந்து பணிசெய்கிறவர்களாய் இருக்கிறோம்.

இப்படிப்பட்ட ஸ்தானத்தைக் குறித்த முழுமையான அறிவானது, எவ்விதத்திலும் நியாயப்பிரமாணத்தின்படி செய்ய நெருக்கி ஏவாதபடிக்கு, கிருபையைப்பற்றிக்கொண்டு, நன்றியறிதலுடன் அவர்களது கர்த்தருக்கு பணிசெய்ய உள்ளான நிலையில் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரால் ஏவப்படுகிறவர்களாய் இருக்கின்றனர்.

"1. **ஆனபடியினாலே, நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலையிலே நிலைகொண்டிருங்கள்.**

இவ்வசனம் எவ்விதத்திலும் பக்கவழியாக செல்லாது இருக்கிறது. பவுலின் கட்டளையானது எல்லா அதிகாரத்தோடும், இதன் பின்னணியில் பரிசுத்த

ஆவியானவரது ஏவுதலோடு அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. (2 பேதுரு 1: 20,21). பவுல் இங்கு இராணுவத்தில் பயன்படுத்தப்படும் சொற்களைப்பயன்படுத்துகிறவராய் இருக்கிறார்: நிலை கொண்டிருங்கள்! The Greek word chosen = present active imperative of steko = meaning to stand fast against the enemy, to hold the line under pressure! [சத்துருவுக்கு எதிராய் நில்லுங்கள், எல்லைக் கோட்டிலிருந்து அவன் உள்ளே நுழைந்துவிடாதிருக்க உறுதியாய் நில்லுங்கள்.]

இதை சரியான விதத்தில் மொழியாக்கம் செய்வோமெனில், "தவறான காரியங்களுக்கு எதிராகச் சத்தியத்தில் உறுதியாய் நிலைநில்லுங்கள்!" இராஜரீக கர்த்தரது குடும்பத்திலும், அவரது இராணுவத்திலும் விசுவாசிகளாகிய நாம் தேவ தூதர்களின் முறண்பாட்டிற்குள்ளாய் இருக்கிறோம், நாம் சத்துருவுக்கு எதிராய் சண்டையிட வேண்டியவர்களாய் இருக்கிறோம், சிலகாரியங்களுக்கு எதிராய் நாம் சண்டையிடுதல் வேண்டும். சிலகாரியங்களுக்காய் சண்டையிடுதல் வேண்டும். இரத்தத்தினால் கிரயம்கொள்ளப்பட்டு, பெற்ற சுதந்தரத்தை பாதுகாத்துக்கொள்ளும் வண்ணம், சண்டையிட பவுல் அழைப்பு கொடுக்கிறவராய் இருக்கிறார், திரும்ப அடிமைத்தன நுகத்திற்குட்படாது இருக்க இவ்வழைப்பானது எச்சரிப்பளிக்கிறதாய் இருக்கிறது. விசுவாசிகள் லீகலிஸ்டுகளால் வீண்வம்புக்கு இழுக்கப்படுகிறவர்களாகவோ அல்லது பயத்தினால் அடிபணிகிறவர்களாகவோ இருத்தல் கூடாது, மாறாக அவர்கள் கிருபைக்காக அவர்கள் உயர்ந்து நிற்கிறவர்களாகவும், மற்றும் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் சுத்த உபதேசத்திற்கு அடிபணிகிறவர்களுமாய் இருத்தல் வேண்டும்.

அடுத்த கட்டளையானது, "நுகத்துக்குட்படாது இருத்தல்" இக்கட்டளையும் இராணுவ சொற்றொடராய் இருக்கிறது. The Greek word chosen is the present middle imperative of ’enechomai’, enechomai, - என்பதன் பொருள் கண்ணியில் அகப்பட்டுக்கொள்ளக்கூடாது / சிக்கிக்கொள்ளக்கூடாது என்பதாகும். தீமையானது பதுங்கி காத்து இருந்து உங்கள் மீது தாக்குதல் நடத்த அனுமதியாதிருங்கள், தேவ தூதர்களின் முறண்பாடுகளுக்கு பலியாகிவிடாது எச்சரிக்கையுடன் இருங்கள். பந்தயப்பொருளானது மிகவும் உயர்ந்ததாய் இருக்கிறது, விசுவாசி லீகலிஸத்தை மேற்கொள்வதற்கு கிரயம் செலுத்துவது அசாத்தியகாரியமாய் இருக்கிறது. Wood அவர்கள் குறிப்பிடும்போது, "பாவ அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்கப்படுதல் மற்றும் தேவனது கோபாக்கினை இவைகள் கடந்து செல்பவைகளாய் இருக்கின்றன. இது நிறைவேறும் அனுபவத்தைக்காட்டிலும் நிரந்தர மகிழ்ச்சியை அளிப்பதாக இருக்கிறது. நியாயப்பிரமாணத்தின் நுகமானது, தற்காலிக அசௌகரியத்தை அளிப்பதைக் காட்டிலும், எப்பொழுதும் தொடர்கின்ற

அடிமைத்தனமாய் இருக்கிறது. நீங்கள் மறுபடியும் அடிமைத்தன நுகத்திற்குடபட அனுமதி அளியாதிருங்கள்."

"மறுபடியும் அடிமைத்தன நுகத்திற்குட்படாது" இதன் பொருள் ஒரு அடிமையாக, சிறைப்பட்டு விழுந்து போதலை வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது. இது கி.மு. 107 ல் ரோம இராணுவம், Cassius Longinus ன் இராணுவத்தை தோற்கடித்து, சிறைபிடித்து அவர்களது இராணுவத்தைப் பணிய வைத்து, நுகத்தை அவர்கள் மீது வைத்து அவர்களை சிறைக்கைதிகளாக்கி கொண்டு சென்றனர். நுகத்திற்குட்படுவது என்பது, ஒரு மிருகத்தைப்போன்று நடத்தப்படுவதைக் குறிக்கிறது, சுமை சுமக்கும் மிருகங்கள், உ.ம். காளைமாடுகள், போன்ற மிருகங்கள். இப்படி நுகத்திற்குட்படுவோர், விடுதலையானோர் அல்லர், இரட்சிப்படைந்தோருக்குரியத் தகுதியை அளிக்காது, தாழ்வான தேவன் எதிர்பார்க்காத தகுதியுடன் வாழ்வதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. நமக்குத் தகுதியான "நுகம்" எனப்படுவது, மத்தேயு 11:28 கூறப்படுகின்ற நுகமாய் இருக்கிறது. இப்படிப்பட்ட நுகமானது கீழ்ப்படிதலுடன், கற்றுக்கொள்வதும், நமது வாழ்விற்காக தேவன் அளிப்பனவற்றில் இளைப்பாறுதலுமாய் இருக்கிறது.

2. இதோ நீங்கள் விருத்தசேதனம் பண்ணிக்கொண்டால், கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது என்று பவுலாகிய நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். 3. மேலும், விருத்தசேதனம் பண்ணிக்கொள்ளுகிற எந்த மனுஷனும் நியாயப்பிரமாணம் முழுவதையும் நிறைவேற்றக் கடனாளியாய் இருக்கிறான் என்று மறுபடியும் அப்படிப்பட்டவனுக்குச் சாட்சியாகச் சொல்லுகிறேன்.

பவுல் இவ்வசனத்தை "இதோ!" என்கிற வார்த்தையைக் கொண்டு துவங்குகிறவராய் இருக்கிறார். (Gk: ide = aorist active imperative of horao = see this!). இதன் பொருள் இதைப்பாருங்கள் என்பதாகும். "உங்கள் கண்களைத் திறந்து லீகலிஸம் என்ன என்பதைக் கண்ணுறுங்கள்" என வற்புறுத்துகிறவராய் இருக்கிறார். விருத்தசேதனம் என்பது மோசேயின் நியாயப்பிரமாணக்கட்டளையாய் இருக்கிறது. பவுல் இதைக்குறித்து மிகவும் உற்சாகமிழந்தவராக, நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்படிந்து அது உங்களுக்கு இரட்சிப்பளிக்கும் என அதை நம்புவீர்களானால், நீங்கள் ஒரு போதும் இரட்சிப்படைந்தவர்களாகமாட்டீர்கள். விருத்தசேதனம் செய்துகொள்வதில் எவ்வித தவறும் இல்லை, அநேகர் ஏழாவது நாளில் விருத்தசேதனமடைந்து,

தீர்மானங்களை எடுப்பதில் தலைபட்டுவருகின்றனர், ஆனால் முதியோராகிய பின்னர், அதை சட்டரீதியில் கடைபிடிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக அதை செய்து கொள்வது குறித்து பவுல் இங்கு கேள்வி எழுப்புகிறவராய் இருக்கிறார். இதனால் நீங்கள் நிச்சயப்படுத்த விரும்புவதென்ன? இதனால் எதனை நிறைவேற்றுகிறவர்களாகிறீர்கள், சிலுவையையா, கிறிஸ்துவின் இரத்தத்தையா, கிருபையை உங்கள் வாழ்வில் தோல்வியடையச் செய்வதற்காகவா? என பவுல் கேள்வி எழுப்புகிறவராய் இருக்கிறார்.

நீங்கள் இயேசுக் கிறிஸ்துவைத் தவிற வேறு எதை நம்பினாலும், நீங்கள் கிறிஸ்துவை பின்பற்றுகிறவர்கள் அல்ல. நீங்கள் இயேசுக்கிறிஸ்துவையும், மற்றவைகளையும் நம்புகிறவர்களாய் இருந்தால் உண்மையாகவே இரட்சிப்படைந்தவர்களாக மாட்டீர்கள். இயேசுக் கிறிஸ்து ஒருவரே இரட்சிப்பளிக்கிறவராய் இருக்கிறார். எல்லா மகிமையும் அவர் விரும்புகிறவராய் இருக்கிறார், பெருமைக்கடுத்த விஷயங்களை அவர் விரும்புவதில்லை, அவர் சத்தியத்தில் பிரியம் கொள்கிறவராய் இருக்கிறார். இரட்சிப்பிற்காக அவர் செலுத்திய கிரயத்தினை, வேறு எந்த ஒரு காரியத்துடனும், கலந்து செல்வதை அவர் விரும்பாதவராய் இருக்கிறார், அது ஒரு வேளை கிரியையாகவோ, நியாயப்பிரமாணவாகவோ இருக்க அவர் ஒரு போதும் விரும்பாதவராய் இருக்கிறார்.

இது மிகவும் கவனமாய் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய வசனமாய் இருக்கிறது, பவுல் இவ்வசனத்தை மிகவும் கடினமான நிலையில் எடுத்துரைக்கிறவராய் இருக்கிறார், "எந்த மனிதனும் இருவழிகளில் நியாயந்தீர்க்கப்படல் அரிது." (வச 2). இது கிருபையுடன் வேறுஎது கலந்தாலும், ஒன்றுமில்லாமையாகிவிடுகிறது. அது உண்மையற்றதாகிவிடுகிறது. கலாத்தியர் சரக்குகளுக்கு தவறான ரசீது கொடுத்து விற்கிறவர்களாய் இருந்தனர், வசனம் 3 ல் பவுல் அவர்களுக்கு மீண்டும் நினைவுபடுத்துகிறவராய் இருந்தார் (கலாத்தியர் 3:10) இது நியாயப்பிரமாணத்தின் ஒரு பகுதியாய் இருந்து, முழுமையற்றதாக இருக்கிறது. லீகலிஸ்டுகளின் மார்க்கத்தின் வழியாய் செல்லும்போது, நியாயப்பிரமாணத்திற்கு விசுவாசி "கடனாளியாய்" விளங்குகிறவராய் இருக்கிறார். மட்டுமின்றி மறுபடியும் "திவாலான அடிமையாய் இருக்கிறார்" பழைய அடிமைத்தன நுகத்திற்கு உள்ளாகி அவதிப்படுகிறவராகிறார். Refer to BTB studies of CIRCUMCISION and LEGALISM. விருத்தசேதனம் மற்றும் லீகலிஸம் ஒப்பிட்டுப்பார்க்க.

4. நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டுப் பிரிந்து, கிருபையினின்று விழுந்தீர்கள்

லீகலிஸத்தின் விளைவு, பெரிதான வீழ்ச்சியாய் இருக்கிறது, கிருபையின் தராதரத்தினின்று நியாயப்பிரமாணத்திற்குள் வீழ்ந்து போவதாய் இருக்கிறது, இது சுயாதீனத்திலிருந்து அடிமைதனத்திற்குள் செல்வதாய் இருக்கிறது. விழுந்து போதல் என்பதற்குரிய கிரேக்கபதம் "ekpipto" இதன் பொருள் உயர்ந்த ஸ்தலத்திலிருந்து, தாழ்வான ஸ்தலத்தில் விழுந்து போதலைக் குறிக்கிறதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட வீழ்ச்சியானது அதாவது கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிப்படைந்த பின்னர் வீழ்ச்சியுறுவது ஒரு போதும் இரட்சிப்பை இழத்தலுக்கு பொருந்தாததாய் இருக்கிறது. இரட்சிப்படைந்த பின்னர் தவறாய் வழிநடத்தப்படுதல், இரட்சிப்பை இழந்து போவதற்கு பொருந்தாத காரியமாய் இருக்கிறது. இருந்த போதிலும், இது ஸ்தானம், ஆசீர்வாதம், அருட்பணி, நித்தியப் பிரதிபலன்கள், மற்றும் ஆவிக்குரிய வளர்ச்சி போன்றவைகளுக்கு பெரும் இழப்பைத் தருவிக்கிறதாய் இருக்கிறது.

Ironside அவர்கள் இது குறித்து குறிப்பிடும்போது, விசுவாசிகளில் பெரும்பாலானோர் இன்றைய அளவில், இப்படிப்பட்ட விழுந்து போன நிலையில் வாழ்கிறவர்களாய் இருக்கின்றனர், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதல் மற்றும் வல்லமையில் ஜீவிப்பதைவிட, தங்களது சுயமுயற்சிகள், மற்றும் சுயக்கிரியைகள், சுய பெலன் இவற்றைச் சார்ந்து ஜீவிக்கிறவர்களாய் இருக்கின்றனர். நியாயப்பிரமாணத்தில் நீதிக்குட்படுத்தப்படுதலோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ இல்லாதிருக்கிறது, கிருபையினின்று விழுதலானது மிகவும் மோசமானதாய் இருக்கிறது காரணம் விசுவாசியானவர், "தன்னைக் கிறிஸ்துவினின்று துண்டித்துக் கொள்கிறவராய்" இருக்கிறார். இவ்வாறு கிருபையினின்று விழுந்து போகிறவர்கள், தனித்து செல்ல தீர்மானித்தவர்களாகின்றனர், இவர்களுக்கு தேவன் அளிக்கும் உதவிகள் அவசியமாய் தோன்றாது தங்களது சுயவிருப்பத்தின்படி செல்கிறவர்களாய் விளங்குகின்றனர். . Refer to the BTB studies of GRACE, GRACE: FALLING FROM GRACE, கிருபை, கிருபையினின்று விழுந்து போதல் இவைகளை ஒப்பிட்டுப்பாருங்கள்.

5. நாங்களோ நீதிகிடைக்குமென்று ஆவியைக் கொண்டு விசுவாசத்தினால் நம்பிக்கையோடே காத்திருக்கிறோம். 6. கிறிஸ்து இயேசுவினிடத்தில் விருத்த

சேதனமும், விருத்தசேதனமில்லாமையும் ஒன்றுக்கும் உதவாது, அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்.

விசுவாசிகள் இப்பூமிக்குரிய வாழ்வில் முழுமையாய் பூரணப்பட்டவர்களாக முடியாது (அல்லது நீதிமான்களாக முடியாது) ஸ்தான ரீதியாக நாம் நீதிமான்கள் என்று அறிவிக்கப்படுகிறோம், ஆனால் நாம் தவறுகிறவர்களாகவும், பாவஞ்செய்கிறவர்களாயும் இருக்கிறோம், (Refer to the doctrinal study of CHRISTIAN LIFE: POSITION IN CHRIST. கிறிஸ்தவ வாழ்க்கை: கிறிஸ்துவுக்குள் நமது ஸ்தானம் ஒப்பிட்டுப்பார்க்க), நியாயப்பிரமாணத்தின்படி வாழ்ந்தாலும் அல்லது ஆவிக்குரியபடி வாழ்ந்தாலும், நாம் பழைய பாவசுபாவத்தில் வாழ்கிறவர்களாய் இருக்கிறோம். இயேசுவைப் போன்று இவ்வாழ்க்கையில் வாழ வளர நமக்கு சவால் விடப்படுகிறது, சரியான மார்க்கத்தில் செல்லவும், நீதியின் பாதைகளில் வழிநடக்கவும் நாம் உற்சாகப்படுத்தப்படுகிறோம். கிருபையினால் வாழ்கின்ற விசுவாசிக்கும், லீகலிஸ்டுகளுக்கும் உள்ள வித்தியாசத்தை இங்கு நாம் காண்கிறோம், லீகலிஸ்டுகள் தாங்கள் எல்லா நியாயப்பிரமாணத்தையும் கைக்கொண்டு வாழ்ந்து, முழுமையான நீதிபரராய் வாழ்கிறோம் என பொய்யுரைக்கிறவர்களாய் இருக்கிறார்கள், கிருபையை அறிந்து அதன் படி வாழும் விசுவாசிகள், நீதிமான்களாக்கப்படுவது குறித்து இருவித அணுகுமுறையில் வாழ்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

முதலாவதாக அவர்கள் தங்களது மனதானது கர்த்தரைப் பற்றிக்கொண்டு, அவரது வசனத்தால் போஷிக்கப்பட்டு, அவர்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் மாற்றத்தினை கொண்டுவர அனுமதிக்கிறவர்களாய் இருக்கின்றனர், இயேசுவைப்போல அதிக அதிகமாய் மாறுவதும், பரிசுத்த ஆவியானவர் உருவாக்கியுள்ள நீதியின் வழிகளில் அனுதினம் நடப்பது இவ்வணுகுமுறையாய் இருக்கிறது. இரண்டாவதாக: அவர்கள் விசுவாசத்துடன் இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்பார்க்கிறவர்களாய் இருக்கின்றனர், அத்தருணத்தில் எல்லா உண்மையான விசுவாசிகளும் முழுமையாய் மறுரூபமடைந்து, பூரணமான நீதியின் ஆடையால் உடுத்துவிக்கப்படுவர். (1 John 3:2 cf 1 Peter 1:3,4,13). இறுதி பூரணமாக்கப்படுதலை நாம் அடைகிறவர்களாய் விளங்குவோம், இரண்டாம் வருகையில் இதை இயேசுக்கிறிஸ்து நமக்களிக்கிறவராய் இருக்கிறார். ஆணவம் கொண்டு வாழும் லீகலிஸ்டுகள், தங்கள் சுயமுயற்சியால் எல்லாவற்றையும் சாதித்துவிட முடியும் என நம்புகிறவர்களாய் இருக்கிறார்கள், கர்த்தர் மட்டுமே அவரது வருகையில் செய்யும் காரியங்களை தங்கள் சுயமுயற்சியால் சாதித்துவிட முடியும் என்ற தவறான நம்பிக்கையுடன் வாழ்கிறவர்களாய்

இருக்கின்றனர்.

இதைத்தொடர்ந்து இதற்கடுத்த வசனம் தொடங்குகிறதாய் இருக்கிறது, ஒரு நபர் விருத்தசேதனம் செய்துள்ளாரோ இல்லையோ என்பது பொருட்டல்ல "அன்பினால் விசுவாசமானது கிரியை செய்கிறதாய் இருக்கிறது." விருத்தசேதனமானது சரீர அடையாளமாய் இருக்கிறது, மற்றும் இது ஒரு சடங்காச்சாரமான செயல்பாடாய் இருக்கிறது, மற்றும் இது மனிதனின் ஆவிக்குரிய அந்தஸ்தைக் காட்டுகிறதாய் இருக்கிறது; ஆனால் அவனது ஆத்துமத்தில், இது விசுவாசத்தையும் அன்பையும் வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது. பவுல் கலாத்தியருக்கு கூறும்போது இரட்சிப்புக்குரிய விசுவாசத்தை எவ்வாறு இனங்கண்டு கொள்வது என்பது கூறுகிறார். (வச. 2), "இரட்சிப்பைக் கொண்டுவரும் விசுவாசத்தைக் குறித்து கலாத்தியருக்கு பவுல் கூறும்போது, அன்பினால் கிரியை செய்யும் விசுவாசம்" எனக் குறிப்பிடுகிறார். இவ்வேதபகுதியானது யாக்கோபு 2:12-26 இணையானதும் மிகவும் முக்கியம் வாய்ந்ததுமாய் இருக்கிறது.

அன்பானது, ஆவிக்குரிய கனியில் ஒன்றாய் விளங்குகிறது, (வச 22), இது நியாயப்பிரமாணத்தின் கனியாய் உருவாக இயலாததாய் இருக்கிறது, விசுவாசி வாழும் பொழுது, இரட்சிப்படையும் போது, ஆவியின் பெலத்தால் நிறைந்து, கிறிஸ்துவில் நம்பிக்கை வைத்து, விசுவாசத்தைப்பெற்று அன்பு மூலம் கிரியை நடப்பிக்கிறதாய் இருக்கிறது. கிறிஸ்தவ வாழ்வும் மற்றும் கீழ்ப்படிதலும் இருதயத்திலிருந்து பொங்கி வழியும் ஊற்றாய் இருந்து, இயேசுக்கிறிஸ்து மீது வைக்கும் பயபக்திக்குறியதாய் இருக்கிறது. நமது அன்பானது, கர்த்தரின் அன்புக்கு பிரதிக்கிரியை செய்கிறதாய் இருக்கிறது. பவுலின் கருத்தானது யாக்கோபின் கருத்துக்கு பூரணமாய் இசைந்து செல்கிறதாய் இருக்கிறது (யாக்கோபு 2:22), விசுவாசம் பயனுள்ளதாய் இருக்கிறது, அல்லது அன்பின் மூலம் இது உண்மையான குணாதிசயமாய் நிருபணம் செய்கிறதாய் இருக்கிறது, அன்பின் கிரியைகள் உள்ளான உண்மையின், காணக்கூடிய அடையாளமாய் இருக்கிறது. லீகலிஸ்டுகள் கீழ்ப்படிதலுக்குரிய கிரியைகள் குறித்து விவாதிக்கிறவர்களாய் இருக்கின்றனர், அன்பினால் ஏவப்பட்டு செயல்படும் விசுவாசத்தை பவுல் காண்பிக்கிறவராய் இருக்கிறார். பவுல் இந்த சில வசனங்களில், கிருபைக்கு முறணான லீகலிசத்தின் ஸ்தானமானது நம்பிக்கையற்றதாய் இருக்கிறது மறுபடியும் நிருபணம் செய்கிறவராய் இருக்கிறார்.

1. இரட்சிப்பிற்கான விசுவாசத்துடன், நியாயப்பிரமாணம் சேர்க்கப்படுமானால் கிறிஸ்துவினால் ஒரு பயனும் இல்லை. (வச 2).

2. லீகலிஸ்டுகள் நியாயப்பிரமாணம் முழுமைக்கும் கடனாளிகளாக மாறுகிறவர்களாய் இருக்கின்றனர். (வச 3).

3. அவர்கள் கிருபையினின்று விழுந்து தாழ்வான நிலையில் அடிமையின் ஸ்தானத்திற்கு கொண்டு செல்லப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள். (வச 4)
4. கிருபையினால் மட்டும் வருகிற, நீதியின் நம்பிக்கையை இழந்தவர்களாய் விளங்குகின்றனர். (வச 5).

5. கர்த்தருக்காக வாழும் உண்மையான நோக்கமின்றி காணப்படுகின்றனர், அவர்களது ஆத்துமத்தில் அன்பற்றவர்களாய் விளங்குகின்றனர். (வச 6).

7. நீங்கள் நன்றாய் ஓடினீர்களே, சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போக உங்களுக்கு தடைசெய்தவன் யார்?

இங்கு பவுல் கூறும் உவமேயக்கருத்தானது, ஓட்டப் பந்தய அரங்கில் ஓடும் ஓட்டத்தைக் குறிக்கிறதாய் இருக்கிறது, இது கிறிஸ்தவ வாழ்க்கைக்குறித்து அவர் கூறுகிற, அவருக்கு பிடித்தமான உவமேயக் கருத்தாய் திகழ்கிறது. இவர் விசுவாசியின் வாழ்வை ஓட்டப்பந்தயமாய் கருதுகிறவராய் இருக்கிறார், இவ்வோட்டமானது கலாத்தியர் தலைப்படும் ஓட்டப்பந்தயமாய் இருக்கிறது, (GK: apokopto = to be cut in on, hindered, obstructed). அவர்கள் ஆரம்பத்தில் சிறப்பாய் துவங்கினர், ஆனால் தற்போது அதைத் தற்காலிக காரியமாய் எண்ணிக்கொண்டு ஓடுகிறவர்களாய் இருக்கின்றனர். லீகலிசம் அவர்களை வஞ்சித்து ஓடுகிறவர்களை ஏமாற்றுகிறதாய் இருந்தது, மற்றும் அவர்களை உற்சாகமற்ற பந்தய வீரர்களாக்குகிறதாய் இருந்தது, சிறப்பான காரியங்களல்லாதவற்றை சார்ந்திருக்கச் செய்கிறதாய் இருந்தது, லீகலிஸ்டுகள் ஒரு நபரை முன்னேறவிடாதபடி தடைசெய்கிறவர்களாய் இருந்தனர்.

இங்கு கூறப்படும் உவமேயமானது கலந்து காணப்பட்ட போதிலும், இதில் உள்ள வார்த்தைகள் இராணுவப் பயன்பாடுள்ள வார்த்தைகளாய் இருக்கின்றன. இவ்வார்த்தையின் பயன்பாடு, இராணும் முன்னேறிச் செல்வதற்குரிய சாலைகளை தகர்த்து அவர்களுக்கு தடை உண்டாக்கி முன்னேறிச் செல்வதை தடை செய்யும் சொற்களாக பயன்படுத்தப்பட்டுள்ளன. லீகலிஸ்டுகள் ஆவிக்குரிய முதிர்ச்சி அடையாவண்ணம், கலாத்தியரை தடை செய்கிறவர்களாய்க்

காணப்பட்டனர், இதன் விளைவாக கலாத்தியரின் விசுவாச வாழ்வில் கப்பற்சேதம் உண்டாகு அபாயத்திற்குள் கடந்து செல்கிறவர்களாய் காணப்பட்டனர்.

8. இந்தப்போதனை உங்களை அழைத்தவரால் உண்டானதல்ல.

லீகலிசமானது கலாத்தியரின் சத்தியத்தை புறக்கணிப்பதற்கு நிர்பந்திப்பதோடு மட்டுமல்லாது, அவர்களை அழைத்தவரின் அடிச்சுவடுகளை விட்டு வழிவிலகச் செய்கிறதாயும் இருந்தது. இவ்வகையான துர் உபதேசத்திற்கு தேவன் காரணராய் இல்லை, கலாத்தியர் தங்களைத்தாங்களே இவ்வுபதேசங்களுக்குள் தங்களை உட்படுத்திக்கொண்டு, மெய்வழியை விட்டு அகன்று, லீகலிசத்திற்கு சென்றவர்களாய் விளங்கினர், இவர்கள் தவறான உபதேசத்தைக் கைக்கொண்டு, அஞ்ஞானிகளான புறஜாதியாரைப் போன்று வாழும் அளவுக்கு துணிந்தவர்களாய் இருந்தனர். கர்த்தர் அவர்களை அப்போஸ்தலரைக் கொண்டு திரும்ப சத்தியமார்க்கத்திற்கு அழைக்கிறவராய் இருந்தார். பவுல் வசனம் 9 ல் லீகலிஸ வற்புறுத்துதலை விவரித்து, அதன் தவறுகளை பழையக் கூற்றினை வெளிக்கொண்டுவருகிறவராய் இருக்கிறார்.

9. புளிப்புள்ள கொஞ்சமாவானது பிசைந்த மாவனைத்தையும் உப்பப்பண்ணும்.

வேதாகம ரீதியில் புளித்த மா குறித்த பயன்பாடானது, ஊட்புகுதல் என்றக் கருத்தின் அடிப்படையில், அல்லது தாக்கங்களை ஏற்படுத்துதல் என்றக் கருத்தின் அடிப்படையில் நன்மை அல்லது தீமை செய்யும் கருத்தை வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது. தீமை செய்யும் மக்களைக் குறித்த கண்ணோட்டத்தில். . e.g. மத்தேயு 16:6,11, மாற்கு 8:15, லூக்கா 12:1, 1 கொரிந்தியர் 5:6, or the exception ; மத்தேயு 13:33, லூக்கா 13:21. புளித்தமா வானது, மெதுவாக தனது தன்மையை பிசைந்த அணைத்திலும் ஊடுருவிச் சென்று காட்டுகிறதாய் இருக்கிறது, "சிறிய காரணங்கள், பெரியவிளைவுகளை உருவாக்குகிறவைகளாய் இருக்கின்றன." இது "ஊடுருவிச்செல்லுதல்" என்கிற அடிப்படைக்கருத்தினை நமக்கு நினைவுபடுத்துகிறதாய் இருக்கிறது, சிறிய தவறினை சரிசெய்யாத பட்சத்தில் "பெரிதான தவறு" காலாகாலத்தில் உருவாகிறதாய் இருக்கிறது. தீமை ஒருபோதும் நிற்பது இல்லை, அது ஒருபோதும் திருப்தி அடைகிறதில்லை, அது ஊடுருவிச் சென்று, ஒவ்வொரு மூளை முடுக்குகளையும் கறைப்படுத்தும் வரைக்கும் கிரியை நடப்பிக்கிறதாய் இருக்கிறது. இத்தகைய தீமையை முற்றிலுமாய் வேரறுத்தல்

வேண்டும், இல்லையேல் இது புற்றுநோயைப் போன்று சபை முழுவதையும் அழித்து சின்னாபின்னமாக்கிவிடும்.

10. நீங்கள் வேறுவிதமாய்ச் சிந்திக்கமாட்டீர்களென்று நான் கர்த்தருக்குள் உங்களைக் குறித்து நம்பிக்கையாய் இருக்கிறேன். உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்.

பவுல் இன்னும் கலாத்தியரைக் குறித்து நம்பிக்கையுள்ளவராய் இருந்தார். அவர்கள் சத்தியத்தை உற்றுநோக்கி, மனந்திரும்புகிறவர்களாக வேண்டுமென்ற நோக்குடன், யூதா மதத்தினை தழுவுகிறவர்கள், அவர்கள் எப்படிப்பட்டவராய் இருப்பினும், தெய்வீக ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்படுகிறவர்களாய் இருக்கின்றனர் என தெளிவுபடுத்துகிறவராய் இருந்தார். யூதாயிஸத்தைக் கைக்கொள்கிறவர்கள் குறித்து, யாக்கோபும் தெளிவுபடக் கூறுகிறவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் தேவனால் ஆக்கினைத்தீர்ப்புக்கு உட்படுவர். தேவனது பிள்ளைகளை தவறான வழியில் கொண்டு செல்லும் யாராய் இருந்தாலும் ஒருவேளை பவுலோ அல்லது யாக்கோபோ, விஷேசித்த அப்போஸ்தலரோ யாராய் இருப்பினும், அப்படிப்பட்டவர்கள் நியாயத்தீர்ப்புக்கு தப்பிக்கொள்ள இயலாதவர்களாய் இருக்கின்றனர்.

11. சகோதரரே, இதுவரைக்கும் நான் விருத்தசேதனத்தைப் பிரசங்கிக்கிறவனாயிருந்தால், இதுவரைக்கும் என்னத்திற்கு துன்பப்படுகிறேன்? அப்படியானால் சிலுவையைப் பற்றிவரும் இடறல் ஒழிந்திருக்குமே. 12. உங்களைக் கலக்குகிறவர்கள் தறிப்புண்டுபோனால் நலமாய் இருக்கும்.

பவுலை உபத்திரவப்படுத்தினவர்கள் லீகலிஸ்டுகளாய் இருந்தனர். நான் இது வரைக்கும் விருத்தசேதனத்தைப் பிரசங்கிக்கிறவனாய் இருந்தால் என்னத்திற்கு துன்பப்படுகிறேன்? என வினவுகிறவராய் இருக்கிறார். பவுலின் இறுதி வாழ்க்கை வரை யூதா மதத்தினர் [Judaisers] அவரை வெறுக்கிறவர்களாய் இருந்து வந்தனர். பவுல் விருத்த சேதனமுள்ளவராய் இருந்தார் (அப். 16:3) ஆவிக்குரிய அடிப்படைக்காரியங்கள் என வரும்போது அதற்கு அவர் தலைவணங்காதவராய் இருந்தார்.

"பவுலின் விருத்த சேதனமானது தேசிய அளவில் அவருக்கு மதிப்பைக் கொண்டுவருகிறதாய் இருந்த போதிலும், அது அவர் இரட்சிப்படைவதற்கு அது எவ்விதத்திலும் உத்திரவாதம் அளிப்பதாக இல்லாதிருந்தது. யூதாமதத்தினருக்கு இது ஒரு பிரச்சனையாய் இருந்தது. இவர்களுக்கு சிலுவையைக் குறித்து பிரசங்கிப்பது ஒரு பொருட்டாக இல்லாதிருந்தது, ஆனால் ஒரு நபர் சுவிஷேசத்திற்கு செவிகொடுத்து, சபையில் சேருவதற்கு முன்னர் அந்நபர் விருத்தசேதனம் பெற்று யூதா மார்க்கத்தில் அமைந்த பின்னரே, அனுமதி பெற்றனர். கிறிஸ்தவ சபையில் யூதா மதத்தினருக்கென்று "தனி அமைப்பு" இருந்து வந்தது.

புதிய விசுவாசிகளுக்கு பவுல் விருத்தசேதனம் செய்கிறவராய் இருந்திருந்தால், அவர்கள் மகிழ்ச்சியுடன் இருந்திருப்பர். இதற்கான காரணம் மிகவும் அடிப்படை உள்ளதாய் இருந்தது. புதிதாய் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்கள் விருத்தசேதனமடைவது கிறிஸ்துவுடன் இணைவதைக் காட்டுகிறதாய் இருந்தது, அதன் மூலம் அவர்கள் யூதராய் மாறி, சபையானது இஸ்ரவேலரின் விரிவாக்கமடைய விருத்தசேதனம் அவசியமாய் இருந்தது.

இதைக்குறித்து பவுல் கூறும் பொழுது, இக்கொள்கையானது முற்றிலும் தவறானது என்கிறார். சபை என்பது "புதிய இஸ்ரவேலர்" அல்லர், "சபை என்பது புதிய காரியமாய் இருக்கிறது" சபையில் யூதர் என்றோ புறஜாதியார் என்றோ, அடிமை என்றோ விடுதலையானோர் என்றோ, ஆணென்றோ பெண்ணென்றோ பாகுபாடு இல்லாதிருந்தது. சபையில் யாவும் புதியனவாகவே இருந்தது. சபையானது தேவனது திட்டத்தில், புதிய ஸ்தானத்தை வகிக்கிறதாய் இருந்தது. இஸ்ரவேலுக்கு வேறுவிதமான முடிவுண்டாகி, அதன் வித்தியாசமானது கடைபிடிக்கப்பட்டு வந்தது. புதிய விசுவாசிக்கு விருத்தசேதனம் செய்வது என்பது, கலங்கிய தண்ணீருக்கு ஒப்பாய் இருந்தது, சபையின் தன்மையில் அது தவறான தோற்றத்தை அளிப்பதாய் இருந்தது, மட்டுமல்லாது ஆவிக்குரிய யுகத்தில் சபைக்கு தவறான கருத்தாக இருந்து வந்தது. இஸ்ரவேலும் நியாயப்பிரமாணமும் ஒன்றுபட்டு இருந்தனர், சபையும் கிருபையும் ஒன்றுபட்டு இருக்கிறது, இவ்விரண்டும் எவ்விதத்திலும் கலப்பதற்கு சந்தர்ப்பமே கிடையாது. Refer to the BTB study of CHURCH AND ISRAEL சபையும் இஸ்ரவேலும் என்னும் தலைப்பை ஒப்பிட்டுப்பார்க்க.

வசனம் பனிரெண்டில், "கலக்குகிறவர்கள் தரிப்புண்டு போதல்" எனக் குறிப்பிடுவது

அர்த்தமிக்கதாய் இருக்கிறது. லீகலிஸ்டுகள் புத்திர சந்தானமற்றுப் போதலை அவர் விரும்புகிறவராய் இருந்தார் அல்லது வேறுவிதமாய் கூறுவோமெனில், அவர்களது ஆண் உருப்பானது விருத்த சேதனம் அடைவதைக் காட்டிலும், முற்றிலும் அகற்றப்பட்டுப்போனால் நலமென கருதுகிறவராய் இருந்தார், இது வண்முறையையும் மற்றும் எதிர்மறையான சிந்தையையும் காட்டுகிறதாய் இருக்கிறது. இதைப் பவுல் வண்முறையாய் கண்டித்து விருத்த சேதனமானது ஆவிக்குரிய அடையாள அட்டையாய் இராது இருப்பதை சுட்டிக்காட்டுகிறவராய் இருக்கிறார், இது ஆவிக்குரிய அர்த்தத்தில் மிகவும் தாழ்வான நிலையில் இருப்பதை உணர்த்துகிறவராய் இருக்கிறார். கலாத்தியா நாட்டில் வாழும் யூதகுலத்தினரை ஒப்பிடுகிறவராய் இருந்தார், இதே தேசத்தில் சிபிலி என்ற பிராந்தியத்தில் வாழ்ந்து வந்த ஆசாரியர்கள் சடங்காச்சாரமாக விதைநீக்கம் செய்தல் அல்லது ஆண்தன்மையை இழத்தல் போன்றவற்றைக் கைக்கொண்டுவந்தனர். இதை மனதில் கொண்ட பவுல், லீகலிஸ்டுகளை, நுனித்தோலை அகற்றுவதற்கு பதிலாக, ஆண்குரியை முற்றிலும் அகற்றி விடுவது மேன்மையாய் இருக்குமே என நகைக்கிறவராக காணப்படுகிறார். லீகலிஸசம் மற்றும் புறஜாதிய பழக்கவழக்கம் போன்றவற்றை இணைப்படுத்திக்காட்டி, தனது திருப்தியற்ற தன்மையை இங்கு வெளிப்படுத்துகிறவராய் காணப்படுகிறார்.

மழுங்கிய நிலையில் உள்ளவர்களுக்கு பவுல் கூறுவது, "கடைசியானதும், உச்சக்கட்டமானதுமாய் விருத்தசேதனத்தை பற்றி கூறி முடிக்கிறவராய் இருக்கிறார்" இது அதிர்ச்சிக்குரிய கருத்தாய் இருக்கிறது. "தறிப்புண்டு போதல்" என்பது முக்கியம் வாய்ந்த கருத்தாய் இஸ்ரவேலில் விளங்கிவருக்கிறது. இது நியாயத்தீர்ப்பைக் குறிக்கும் சொற்றொடராய் இருக்கிறது. ஜனத்தாரிலிருந்து தறிப்புண்டுபோவது என்பது, தேவனது மிதமிஞ்சிய நியாயத்தீர்ப்பாய் இருக்கிறது. இவ்வசனத்தில் இது பவுலின் வலுவான கருத்தாய் அமைந்துள்ளது, அவரது விருப்பம் இப்படிப்பட்ட ஜனங்கள் "தறிப்புண்டு போனால்" நலமாய் இருக்கும் என விரும்புகிறவராய் இருக்கிறார். மட்டுமல்லாது, இப்படிப்பட்ட பிரச்சனைக்குக் காரணமானவர்களிடமிருந்து வேறுபிரிந்து வாழக்கூறுகிறார். பவுலைப் பொருத்தமட்டில் இப்பிரச்சனையானது லீகலிசமாய் விளங்கினபோதும், இது இன்னொரு உருவெடுத்துள்ள புறஜாதிய பழக்கவழக்கமாய் திகந்தது. Luther அவர்கள் இதைக்காணும் போது, இது முக்கியம் வாய்ந்த பிரச்சனையாய் இருக்கிறது, "கிறிஸ்தவர்களது சாபத்திற்கு இது காரணமாய் அமையுமோ எனக் கேள்வியை எழுப்புகிறவராய் இருக்கிறார்." Hendriksen அவர்கள் நான்கு கருத்துக்களை பவுலுக்கு சாதகமாய் கூறுகிறவராய் இருக்கிறார்.

1. பவுலும் (நாமும் கூட) தேவனுக்குக் கடமைபட்டவர்களாய் இருக்கிறோம். (ரோமர் 14:2)

2. கர்த்தர் பரிசேயருக்கு எதிரான மிக வலுமையான கருத்தை வெளிப்படுத்துகிறவராய் இருக்கிறார். (மத்தேயு 18:6, மாற்கு 9:42, லூக்கா 17:2).

3. தன்னால் கர்த்தருக்குள் வழிநடத்தப்பட்ட மக்கள் மீது, பவுலின் நோக்கமானது அன்பு நிறைந்ததாய் இருந்தது, அவர்களை சிதறடிப்போர் மீது அவருக்கு நீதிக்கேற்ற கோபம் வெளிப்பட்டதைக் காண்கிறோம்.

4. தீமையின் மீது பவுலுக்கு இருந்த அதே மனநிலையானது நமக்கும் இருக்க வேண்டியது அவசியமாய் இருக்கிறது. "இன்றைய அளவில் நிலவிவருகிற தவறான சுவிஷேசத்தின் மூலம் ஜனங்களை வேறுமார்க்கமாய் வழிநடத்தி, நித்திய அழிவுக்குட்படுத்துபவர் மீது நீதிக்கேற்ற கோபத்தை வெளிப்படுத்தாது இருப்பது நமக்கு வெட்கத்தை உண்டுபண்ணுகிறதாய் இருக்கிறது, சுவிஷேசத்தின் மெய்தன்மையானது, இக்குமெனிஸம் [Ecumenism] என்கிற பலி பீடத்தின் மீது பலி செலுத்தப்பட்டு வருகிறது.

தலைமைத்துவம் கைக்கொள்ளவேண்டியவைகள்:

1. சரியான சுதந்தரத்தின் முன்மாதிரியை தலைவர்கள் அமைத்துக்கொள்ளுதல் வேண்டும்: இயேசுவுக்காக நாம் எவ்வாறு வாழுதல் வேண்டும்? அடிமைகளாய் வாழுகிறோமா அல்லது சுதந்திரமான மனிதர்களாய் வாழுகிறோமா? நாம் சுதந்திரராய் வாழும் நிச்சயத்துடனிருக்க பவுல் நமக்கு சவாலாக கூறுகிறவராய் இருக்கிறார், தாழ்வான தராதரத்தை ஏற்றுக்கொள்ளாது வாழவும், மற்று லீகலிஸசத்திற்கு அடிமைகளாகதிருக்கவும் கூறுகிறவராய் இருக்கிறார். சடங்காச்சாரமான அணுகுமுறையினை ஆராதனை செய்ய ஏற்றுக்கொண்டிருப்போமானால், ஆவிக்குரிய ரீதியில் அவைகளை உபயோகிக்காது இருக்க நாம் கவனமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும், பரிசுத்த ஆவியானவர் நம் மூலம் கிரியை செய்யும் போது மட்டுமே நாம் ஆவிக்குரியவர்களாய் திகழுதல் சாத்தியம்.

இவ்விஷயத்தில் நாம் அனைவரும் நமது இருதயத்தை பரிசீலனை செய்யவேண்டியது அவசியமாய் இருக்கிறது, புராட்டஸ்டன்ட் ஆராதனையில்

சடங்காச்சார உபகரணங்கள் செயல்படுத்தப்படுமேயானால், அவைகள் சபை அங்கத்தினரை திசை திருப்பி கலகத்திற்கு வழிநடத்தக்கூடியதாய் இருக்கிறது.

2. சரியான ஆவிக்குரிய வழிமுறைமையினை, தலைவர்கள் பெரிதுபடுத்திக்காட்டுதல் வேண்டும்: உங்களது ஆவிக்குரிய தராதரத்தினை நம்புகிறவர்களாய் இருக்கிறீர்களா எனப்பவுல் வினவுகிறவராய் இருக்கிறார். ஆவியில் நடந்து கொள்வதைத் தவிர வேறுமார்க்கத்தில் செல்வது கிருபையின் பாதையைவிட்டு விலகி, நீதியினின்று அகலுகிறதாய் இருக்கும், மற்றும் இது பக்கவழியாய் லீகலிஸ சுயநீதிக்கு எடுத்துச்செல்கிறதய் இருக்கிறது. பவுலின் செய்தியானது இங்கு நம் அனைவருக்கும் உரியதாய் இருக்கிறது, நாம் சரியான பாதையில் செல்ல, கிருபையின் மார்க்கத்தில் செல்ல, வேறு எந்த வழியிலும் வழிவிலகிச் சென்றுவிடாது எச்சரிப்பதாய் இருக்கிறது.

3. தலைவர்கள் தைரியமாய் இருப்பதற்கு மாதிரிகளாய் இருத்தல் வேண்டும்: இராணுவத்தில் சத்துருவுக்கு முன்னதாக பெலமுள்ளவர்களாயும் மற்றும் தைரியமுள்ளவர்களாய் இருப்பது, அவசியமாய் இருக்கிறது, சத்தியத்தில் உறுதியாய் நிலை நின்று, லீகலிஸத்திற்கு ஒரு அணுவளவும் இடமளியாது அல்லது மற்ற பழைய பாவசுபாவத்தின் கனிக்கு இடமளியாது இருத்தல் வேண்டும். கர்த்தர் நம்மை விடுதலையாக்கியுள்ளார், அதைவிட்டு வழிவிலகுவது, அவரது தியாக பலியை அவமதிப்பதாய் இருக்கும். கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்களாகிய நமக்கு அவசியமான அனைத்தையும் பெற்றவர்களாய் இருக்கிறோம், நமது ஸ்தானமானது வல்லமையுடையதாய் இருக்கிறது, நமது வல்லமைக்குரிய ஆதாரம் பரிசுத்த ஆவியானவரின் ஆளத்துவத்தில் இருக்கிறது, அது காலா காலத்தில், முதிர்ச்சியடைவதற்கு எடுத்துச் செல்கிறதாய் இருக்கிறது, மட்டுமல்லாது கர்த்தரின் வருகையில் முழுவதுமாய் மற்றும் பூரணராக்கும் மட்டும் இது நம்மைக் காக்கிறதாய் இருக்கிறது. நாம் சத்தியத்தில் நிலை நிற்கவேண்டியவர்களாய் இருக்கிறோம், ஆவியில் நடக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், இயேசுவில் நமது ஸ்தானமாகிய வட்டத்திற்குள் இருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் மிருகங்கள் அல்ல, எந்த ஒரு நுகத்திற்கு உட்படுவதற்கு, மாறாக நாம் தேவனது மகனாக, மகளாக விசுவாசத்தின் மூலம் இருந்து வருகிறோம், நாம் இலவச கிருபையை பெற்று வாழ்கிறவர்களாய் இருக்கிறோம்.

4. தலைவர்களின் மாதிரி கிருபையில் மகிழ்தலாய் இருக்கிறது: கிருபையானது நமக்கு இலவசமாய் கிடைக்கிறதாய் இருக்கிறது ஆனால் அதற்காக

இயேசுக்கிறிஸ்துவின் விலையேறப்பட்ட இரத்தம் சிந்தப்பட்டுள்ளது. 1 பேதுரு 1:19. நாம் சத்தியத்தை உறுதியாய் பற்றிக்கொண்டு, பெரிதான ஸ்தானத்தில் கிருபையாய் வைத்துள்ளபடியால் அவரை ஆராதிக்க கடமைபட்டுள்ளோம். இயேசுக்கிறிஸ்துவின் கிருபையின் ஐசுவரியத்தைப் பெற்றுக்கொள்கிறவர்களாகிய நாம் அவரில் ஐசுவரியவான்களாய் இருக்கிறோம். இது இவ்வசனங்களில் பவுல் கூறும் பொதுவான மையக்கருத்தாய் இருக்கிறது. எபேசியர் 1:7, 18, 2:7, 3:8, 16, பிலிப்பியர் 4:19, கொலோசெயர் 1:27, 2:2. ஐசுவரியவான்கள் அவர்களைக் காட்டிலும் ஏழ்மை நிலையில் உள்ளவர்களுக்கு கடனாளிகளாவதில்லை, ஒரு விசுவாசி லீகலிஸ உடன்பாட்டிற்குள் செல்லும் பொழுது, ஒரு மில்லினியர் தனது செல்வத்தையெல்லாம் கொடுத்துவிட்டு ஒரு பிச்சைக்காரனுக்கு கடளாளியாவதைப் போன்று இருக்கிறது, இது உச்சக்கட்ட மதியீனமாய் இருக்கிறது,

5. கிறிஸ்தவ தலைமைத்துவமானது சுயநீதிக்கு எதிர்ப்பதமாய் இருக்கிறது: லீகலிஸத்தின் கனியானது மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதனால் உண்டாகும் சுயநீதியாய் இருக்கிறது; ஆவியின் கனியோ அன்பினால் கிரியை செய்து, மகிழ்ச்சியுடன் அவரை ஆராதிப்பதில் வெளிப்படுகிறதாய் இருக்கிறது. உண்மையான விசுவாசம் எப்பொழுதும் வாழ்வில் வெளிப்படுகிறதாய் இருக்கிறது, இயேசுவில் வைக்கும் மெய்யான விசுவாசமானது, கிருபையின் உண்மையான கனியை உடையதாய் இருக்கிறது, பிறரிடத்தில் காட்டும் அன்பு, இழந்து போனோருக்கு அறிவிக்கப்படும் சுவிஷேசத்தில் வெளிப்படுகிறதாய் இருக்கிறது. மற்றும் இருதயப்பூர்வமாய் நன்றியறிதலுடன் தேவனுக்கு செலுத்தும் ஆரதனையில் வெளிப்படுகிறதாய் இருக்கிறது, மற்றும் பரிசுத்தவான்களுக்கு அளிக்கும் உதவியில் வெளிப்படுகிறதாய் இருக்கிறது.

எல்லாப்போதகர்களுக்குமுள்ள சவால் இங்கு தெளிவுடன் காணப்படுகிறது. ஆராதனை என்பது, இயேசுக்கிறிஸ்துவில் வாழும் ஆவிக்குரிய யதார்த்தத்தினை மெய்யாய் பிரதிபலிக்கிறதாய் இருக்கிறது, இதன் பொருள் கர்த்தரை ஆராதித்து உயர்த்தி, இரட்சிப்பையும் மற்றும் பரிசுத்தமாகுதலையும் ஆதாரமாய்க் கொண்டு, ஆவியில் நடந்து ஒரு விசுவாசி தேவனை உயர்த்துவதாய் இருக்கிறது. நமது தராதரமாய் விளங்குவது மோசேயல்ல, இயேசுவே! பரிசுத்த ஆவியானவரின் கனியானது எல்லா விசுவாசிகளின் வாழ்விலும் வளரவேண்டியதாய் இருக்கிறது, இதுவே நமது நோக்கமாய் இருத்தல் வேண்டும், சடங்காச்சாரங்கள் பாரம்பரியங்கள் மற்றும் வெளிப்பிரகாரமான கீழ்ப்படிதல் அல்ல.

6. "கிரியையில் முன்னேறுவதை" நமக்குள் காண தலைவர்கள் உதவி செய்கிறவர்களாய் இருக்கிறார்கள், கிறிஸ்து இயேசுவுக்குள் நாம் எவ்வாறு வளருவது என்பதை அவர்கள் நிரூபனம் செய்கிறவர்களாய் இருக்கின்றனர்: தவறான உபதேசமாகிய "பூரணவாதத்துவம்" என்பது கிருபையின் விசுவாசிக்கு anathema வாக இருக்கிறது. இது சுட்டிக்காட்டுவது என்னவெனில், நித்தியத்திற்கு இப்பக்கத்தில் நாம் பூரணராய் வாழுதல் இயலும் எனக்கூறுகிறதாய் இருக்கிறது, பழைய பாவ சுபாவத்துடன் வாழும் நமக்கு இது அசாத்தியமான ஒன்றாய் இருக்கிறது. இதன் பொருள் பாவத்துடன் வாழ அனுமதி வழங்குகிறோம் என்பது பொருளாகாது. ஆவியானவரின் வல்லமையால் இயேசுவைப்போன்று வாழ, ஆவியில் நடக்க போதிக்கிறவர்களாய் இருக்கிறோம், மற்றும் நீதியைப் பிரசங்கிக்கிறவர்களாயும் இருக்கிறோம், நிறைவான பூரணம் என்பதை கர்த்தரின் வருகையில் அருளுவார் என எதிர்பார்த்து இருக்கிறோம். அவர் வருகையை எதிர்பார்க்கிறவர்களாய் இருக்கிறோம், அவர் வருகையைக்காய் காத்திருக்கிறவர்களாய் இருக்கிறோம், நமது இருதயத்தை ஆயத்தப்படுத்தி ஆவலுடன் எதிர்பார்க்கிறவர்களாய் இருக்கிறோம். மற்றும் பரிசுத்தத்துடனும், கீழ்ப்படிதலுடனும் கர்த்தருடைய வார்த்தையை கைக்கொண்டு வாழுகிறவர்களாய் இருக்கிறோம்.

பவுலின் நாட்களிலும் மற்றும் அதற்கப்பாற்பட்ட காலத்திலும், ரபிமார்கள் நியாயப்பிரமாணத்தைச் சுற்றிலும் வேலி அமைத்து தேவனுக்கு "உதவி" செய்கிற தவறைச் செய்துவந்தனர், இது கோஷேர் சட்டங்களாக மனிதனை சுத்திகரிக்கப்பட்ட நிலையில் வைப்பதைக் காட்டிலும், அவர்களை சுயநீதியில் திருப்தியடயச் செய்கிறதாய் இருந்தது. இது சுயத்தை திருப்தி செய்யும் அணுகுமுறையாய் இருந்து, கர்த்தர் இப்பூமியில் ஊழியம் செய்த காலத்தில் இதை மையமாய் வைத்து அவரை தாக்கினவர்களாய் விளங்குகின்றனர். கர்த்தர் எவ்விதம் தாக்குதலுக்கு உள்ளானார் என்பதை மனதில் கொண்டு பவுல் இதை சவலாக நமக்கும் எடுத்துரைக்கிறவராய் இருக்கிறார்.

7. கிருபை மட்டுமே ஒரு நபரை இரட்சிக்கிறதாய் இருக்கிறது; தலைவர்கள் இப்படிப்பட்ட சத்தியத்தில் வாழுகிறவர்களாய் இருத்தல் வேண்டும்: இரட்சிப்பு என்பது கிருபையினால் மட்டுமே கிடைக்கிறதாய் இருக்கிறது. ஆவிக்குரிய வளர்ச்சியும் கிருபையினால் மட்டுமே உருவாகிறதாக இருக்கிறது. இதை எவ்விதத்திலும், நமக்குரிய தேவனது திட்டத்துலிருந்து மனித கிரியைகளுடன் கலத்தல் கூடாது. தேவனுடைய வல்லமை மட்டுமே பழைய பாவசுபாவத்தில் அவசியமான மாற்றத்தினை கொண்டுவந்து பயனளிக்கக்கூடியதாய் இருக்கிறது,

மட்டுமின்றி நாம் ஆவியில் நடப்பதன் மூலம் தேவனது வார்த்தையில் ஐக்கியப்பட்டு, பலமுள்ளவர்களாய் வளர்ந்து மிகவும் சிறப்பான முறையில் பணிசெய்ய உதவுகிறதாய் இருக்கிறது. இதில் மனிதக்கிரியைகளுடன் கலப்பது என்பது அர்த்தமற்றதாய் இருக்கிறது, எவ்விதத்திலும் நியாயப்பிரமாணத்தை இதில் பயன்படுத்துவது தவிர்க்கப்படுதல் அவசியமாய் இருக்கிறது.

சிலுவைக்கு முன்னர், நியாயப்பிரமாணமானது முழுமையான அமைப்பாய் நின்று செயல்படுகிறதாய் இருந்தது, இன்னும் அது ஒருங்கினைக்கப்பட்ட அமைப்பாய் விளங்கிவருகிறது, ஆனால் இது தற்போது கடந்து செல்கிறதாய் இருக்கிறது. நாம் எவ்விதத்திலும் நியாயப்பிரமாணத்தின் சிறுபகுதியையாகிலும் கிருபையுடன் சேர்த்தல் என்பது கூடாது, கிருபை நியாயப்பிரமாணத்திற்குச் சம்பந்தப்பட்டது அல்ல. கிருபையை நியாயப்பிரமாணத்திலிருந்து வேறுபிரித்தல் இயலாத காரியம். நியாயப்பிரமாணம் ஒன்றோடொன்று இணைக்கப்பட்டதாய் இருக்கிறது, அதில் ஒரு பகுதியைமட்டும் வேறுபிரித்து எடுப்பது என்பது இயலாத காரியம். பத்துக்கட்டளைகளை இப்பொழுது நாம் பிரசங்கிப்பது இல்லை, மட்டுமல்லாது அவற்றை கைக்கொள்ள வேண்டும் என்ற வற்புறுத்துதலும் இல்லை. காரணம் கர்த்தரின் உயர்தரக் கட்டளைகளால், இவை கடந்து சென்றுவிட்டன. நமது ஸ்தானம் நியாயப்பிரமாணத்தை போதிப்பதோ, அதைக் கைக்கொள்ள வற்புறுத்துவதோ, அதற்கு கீழ்ப்படிவதோ அவசியமற்றதாய் இருக்கிறது, இயேசுவையும், அவர் சிலுவையில் அறையப்பட்டதையும் பிரசங்கிக்க கடமை பட்டுள்ளோம். 1 கொரிந்தியர் 1:23, 2:2.

8. தலைவர்கள் தவறாய் போதிப்பவர்களாய் மற்றும் கலக்குகிறவர்களாய் இருப்பது குறித்து ஜாக்கிரதையுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். நாம் எந்த அளவுக்கு நமது ஆவிக்குரிய வாழ்க்கையை சிறப்பாய் நடத்துகிறவர்களாய் இருக்கிறோம், மற்றும் மற்றவர்கள் நம்மை விசுவாசத்திலிருந்து வழிவிலகிச் சென்று பெலவீனப்படும்படி செய்கிறவர்களாய் இருக்கின்றனர் என்பதனை நாம் அறிந்து கொள்ளுதல் வேண்டும். சத்தியத்திலிருந்து வழிவிலகிச் செல்வது எளிதான காரியமாய் இருக்கிறது, மற்றும் நடுநிலைவாதிகளாவதும் எளிதாய் இருக்கிறது. அநேக மக்கள் சுவிஷேசத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர், இறையில் வகுப்பறையில் பயனற்ற காரியங்களைக்குறித்து வாக்குவாதம் செய்கிறவர்களாய் இருக்கின்றனர், அல்லது அரசியல்வாதிகளாகவோ மற்றும் சமூகவாதிகளாகவோ செயல்படுகிறவர்களாகி விடுகின்றனர். பக்கவழியாய் செயல்படுகிறவர்களுக்கு விரோதமாய் நம்மைக் காத்துக்கொள்ளுதல் அவசியம். சிறிய காரியங்களை நாம் ஏற்றுக்கொள்ளும்போது, அவை மிகவும் தீவிரமாய் பரவும் ஆற்றலுடையதாயும்

மற்றும் அழிக்கக்கூடியதாயும் இருக்கிறது. உபதேசங்களுக்குத் தண்ணீர்ப் பாய்ச்சுதல், கிருபை மற்றும் நியாயப்பிரமாணத்தின் திறவுகோள் பிரச்சனைகளாய் இருக்கிறது, கிருபைக் குறித்த பிரச்சனைக்காய் நாம் போராட வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

9. தலைவர்கள் இஸ்ரவேலைக் கனப்படுத்துதல் வேண்டும், அதேசமயம் இஸ்ரவேலுக்கும் சபைக்குமுள்ள வித்தியாசத்தை பேணிக்காத்தல் அவசியம்: பவுலின் விவாதத்தில், சபைக்கும், இஸ்ரவேலுக்கு இடையே உள்ள வித்தியாசத்தை பேணிக்காத்தல் குறித்த மையக்கருத்தை வலியுறுத்துகிறவராய் இருக்கிறார். அவைகள் வித்தியாசமானவைகளாய் இருக்கின்றன, தேவனது திட்டத்தினை உணர்ந்து இரு வழிகளிலும் அடையக்கூடிய பலாபலன்களை அடைந்து கொள்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். வேதாகமத்தை அடிப்படையாய்க் கொண்ட போதகர்கள், ஒன்றோடொன்று ஒவ்வாதா காரியங்களைக் கலவாது இருப்பது குறித்து நிச்சயமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். நியாயப்பிரமாணம், கிருபையைச் சார்ந்தது அல்ல, இஸ்ரவேல் மற்றும் அதன் முடிவு, சபையின் காரியங்கள் மற்றும் அதன் முடிவிலிருந்து வேறுபிரிக்கப்பட்டதாய் இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்கள் அறிவிக்கப்பட்டு, கொண்டாடப்படுகிறவைகளாய் இருக்கின்றன. காலத்தின் இறுதிவரை, இவைகள் ஆசீர்வாதத்தின் அஸ்திபாரக்கற்களாய் இருக்கிறது.

விடுதலை என்பது சிலுவை நமக்கு விட்டுச்சென்ற அரிய சொத்தாய் இருக்கிறது, எல்லா போதகர்களும், வரைகோடு அமைத்துக்கொண்டு தங்களைப் பாதுகாத்துக்கொள்ளுதல் அவசியமாய் விளங்குகிறது. யூத விசுவாசிகள் தங்கள் யூதக் கலாச்சாரத்தை கொண்டாட விடுதலையுடன் காணப்படுகின்றனர் மற்றும் புறஜாதிய விசுவாசிகள் தங்களது புறஜாதிய கலாச்சாரத்தைக் கொண்டாட விடுதலையுடன் காணப்படுகின்றனர், ஆனால் இவைகள் ஆவிக்குரிய காரியங்களுக்கு அப்பாற்பட்டவைகளாய் இருக்கின்றன. இயேசுவுடன் கொள்ளும் ஐக்கியத்தில், நாம் ஒருமைப் பட்டவர்களாய் இருக்கிறோம், நமது ஆவிக்குரிய வளர்ச்சி முறைமையும் ஒன்றாகவே இருக்கிறது, பரிசுத்த ஆவியானவரின் நிறைவும், தேவனது வார்த்தையினால் போஷிக்கப்படுவதும், மற்றும் அதற்குக் கீழ்ப்படிதலும் ஒன்றாகவே இருக்கிறது. புதிய சபை யுகத்தில், விருத்தசேதனம், அல்லது மற்றும் எவ்விதமான நியாயப்பிரமாண ஆச்சாரங்கள் நமக்கு பொருத்தமற்றதாய் விளங்கி வருகிறது. சபை என்பது ஒரு புதிய அமைப்பாய் இருக்கிறது. அதில் வேறு எந்த ஒரு காரியமும் பதிலாக செய்யப்படுவது

தவிர்க்கப்படுதல் வேண்டும், தேவன் இஸ்ரவேலருடன் இடைபட்டுவருவது இன்னும் நிறைவுக்குவரவில்லை. வித்தியாசம் என்பதை கைக்கொண்டு அவற்றைக் கொண்டாடுகிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

[ஈ] 1 தீமோத்தேயு 6:11-16. நமது யுத்த அணிவகுப்பு:

"11. நீயோ தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும், தேவ பக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. 12. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள், அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய். அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணுகிறவனுமாய் இருக்கிறாய். 13. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமாகும் வரைக்கும், நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும், குற்றமில்லாமலும், கைக்கொள்ளும்படிக்கு, 14. எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற தேவனுடைய சந்நிதானத்திலேயும், பொந்திய பிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்நிதானத்திலேயும் உனக்குக் கட்டளையிடுகிறேன். 15. அந்தப் பிரசன்னமாகுதலைத் தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏகச் சக்ராபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதிக் கர்த்தாவும், 16, ஒருவராய் சாவமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர், அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக, ஆமென்."

பிரதிபலிப்புகள்:

11. நீயோ தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும், தேவ பக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. 12. விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்திய ஜீவனைப் பற்றிக்கொள், அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய். அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணுகிறவனுமாய் இருக்கிறாய்.

இவ்வசனங்களில் மூன்று கட்டளைகளை காணப்படுகின்றன. விட்டோடு, நாடு / பின்தொடர், மற்றும் போராடு. இம்மூன்று கட்டளைகளும், ஆவிக்குரிய

நிலைநிற்றலுக்கு, அறிவுரையாக அளிக்கப்பட்டது, மற்றும் விசுவாசி வளருவதற்கான அறிவுரையாக அளிக்கப்பட்டது. இக்கட்டளையானது தொடர்ந்து "பற்றிக்கொள்" என்ற வார்த்தையில் சுருங்கக் கூறப்படுகிறதாய் இருக்கிறது. இது நமது உபதேசத்தில் மன உறுதியையும், தேவனது திட்டத்திலும், அவர் அளிக்கக்கூடியவற்றிலும் இளைப்பாறும்படி செய்கிறதாய் இருக்கிறது. இது விசுவாசிகளுக்கு அளிக்கப்படும் கட்டளையாய் இருந்து, அவர்கள் முழுமையாய் தேவனது பிள்ளைகளாய் வளர, "கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்க பூரண புருஷராகும்படி..." பிலிப்பியர் 4:11.

1. <u>விட்டோடு:</u> கர்த்தருக்குச் செய்யும் பணியை வேறு எந்த ஒரு காரியமும் மேற்கொள்ளாது, மற்றும் இச்சைகளுக்கு இடமளியாது விட்டோட வேண்டியவர்களாய் இருக்கிறோம். இது நிகழ்காலத்தை குறிக்கும் வினைச்சொல்லாய் இருக்கிறபடியால், இது அனுதின கட்டளையாய் இருந்து, அனுதினமும் பின்பற்றவேண்டியதாய் இருக்கிறது.

H A Kent அவர்கள் கூறுகிறார்: "The present imperative of the verb pheugo என்கிற கிரேக்கச் சொல், நடந்து கொண்டிருக்கும் நிகழ்ச்சியினைக் குறிப்பிடுகிறதாய் இருக்கிறது. ஒரு ஊழியர் தகுதியற்ற நோக்கங்களைவிட்டு தொடர்ந்து ஓடவேண்டியவராய் இருக்கிறார், இப்படிப்பட்ட நோக்கங்களை சாத்தான் ஓடக்கூடிய வழிகளில் வைக்கிறவனாய் இருக்கிறான்....... நன்மையானவற்றை அடையும்படி, ஊழியர் இவ்வாறு தீமையைவிட்டு ஓடவேண்டியவராய் இருக்கிறார்." (Page 198, 199).

சாத்தானின் பொய்களை நம்பி ஓட தீர்மானித்தோருக்கு ஒரு பதிலும் அளிக்கப்படவில்லை, நாம் நிலைத்திருக்க மற்றும் வளரவேண்டுமானால், இப்படிப்பட்ட தீமைகளையும் அவைகளின் தாக்கங்களையும் விட்டு ஓட வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் வளர அற்றும் ஆவிக்குரிய ஜீவியத்தில் முன்னேற, தீமையான காரியங்களை தவிர்த்துவிடுதல் மட்டுமல்லாது, நன்மையும், ஆரோக்கியமானவற்றையும் நோக்கி முன்னேற வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

2. <u>நாடு / பின்தொடர்</u>: பரிசுத்த ஆவியானவர்களின் கனியைப் பின்தொடர்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். ஆவிக்குரிய வளர்ச்சியானது, தேவனது காரியங்களில் கண்ணோக்கமாய் இருந்து, பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டு, தேவனது வார்த்தைக்குக் கீழ்ப்படிவதைச் சார்ந்து இருக்கிறதாய்

இருக்கிறது. நமது வாழ்வில் தேவனது வார்த்தையைக் கைக்கொள்ளுதலின் விளவு, நமது குணாதிசயத்தில் உருமாற்றம் அடைவதைக் காட்டுகிறதாய் இருக்கிறது, மற்றும் இங்கு கூறப்பட்டுள்ள பட்டியலின்படி, குணாதிசயங்களைக் காணும்படி செய்கிறதாய் இருக்கிறது. ஒரு வேட்டைக்காரன் வேட்டையாடி பசியாய் இருக்கும் தனது குடும்பத்தை போஷிப்பதை போன்று இது இருக்கிறது.

அ] தேவனுக்கு முன்பாக நிதிமானாக்கப்படுவது, சிலுவையின் மீது வைக்கும் விசுவாசத்தின் மூலம், முழுமையாய் ஏற்றுக்கொள்ளப்படுதலாய் இருக்கிறது.

ஆ] நடத்தையில் விளங்கும் தெய்வீகமானது, தேவனது பணிக்காக "வேறுபிரிக்கப்படுதலை" காட்டுகிறதாய் இருக்கிறது. பரிசுத்தமாய் இருப்பதற்கு, அல்லது தெய்வீகமாய் இருப்பதற்கு, "வேறுபிரிக்கப்பட்டு வாழுதல்" தேவனது பணியில் சுத்திகரிப்பு செய்கிறதாய் இருக்கிறது.

இ] நாம் வளருவதற்கு விசுவாசம் காரணமாய் இருக்கிறது, இங்கு விசுவாசம் என்பதன் பொருள், நாம் நம்பும் உபதேசத்தை நமது வாழ்வில் கைக்கொண்டு வாழ்வதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. ஜீவனுக்கேதுவான வார்த்தையைக் கைக்கொண்டு, ஆவியானவரின் வல்லமையால், நம்மில் உருமாற்றத்தை ஏற்படுத்துகிறதாய் இருக்கிறது. எபிரெய நிருபக்காரன், எபிரெயர் 4:2 ல் யாத்திராகம சந்ததியினரைக் குறித்து பேசும்போது, "சுவிஷேசம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டதுபோல, நமக்கும் அறிவிக்கப்பட்டது. கேட்டவர்கள், விசுவாசமில்லாமல், கேட்டபடியினால், அவர்களுக்குப் பிரயோஜப்படவில்லை."

ஈ] வாழ்க்கையில் அன்பானது உபதேசத்தினைக் கைக்கொள்ளச் செய்கிறதாய் இருக்கிறது. அகாப்பே அன்பானது மற்றவர்கள் மீது உண்மையான கரிசனையுடன், எல்லாவற்றிற்கும் மேலான நன்மையைக் கருதி அன்புகூறப்படுகிறதாய் இருக்கிறது, இப்படிப்பட்ட அன்பானது ஒருவரில் இல்லையானால், அது கிறிஸ்துவுக்குள்ளான வளர்ச்சியைப் பாதிக்கக்கூடியதாய் இருக்கிறது. 1 John 3:13-24, 4:7-21.

உ] பொறுமை என்னும் பண்பை, பரிசுத்த ஆவியானவரால் மட்டுமே, ஒருநபருக்குள் உருவாக்க இயலுகிறதாய் இருக்கிறது, நாம் கர்த்தரை நம்பி அவர் அளிப்பனவற்றிற்காய் முழுமையான விசுவாசத்துடன் காத்திருக்கும்போது, அதிக சிறப்பானவற்றை கர்த்தர் அருளுகிறவராய் இருக்கிறார். இது கடந்து செல்கிறதான பொறுமையல்ல, ஆனால் செயல்படும் நம்பிக்கையாய் இருக்கிறது,

சந்தேகிக்கக்கூடிய நெருக்கங்களுக்கு கீழாக இருக்கும்போது இது ஒரு வலுமையான பொறுமையாய் அல்லது சகிப்புத்தன்மையாய் விளங்குகிறது.

ஊ] சாந்தகுணம் என்பது பெலவீனமானது அல்ல, ஆனால் இது மென்மையாய் இருத்தலை காட்டுகிறது, ஒரு மேய்ப்பன் புதருக்குள் சிக்கிதவிக்கும் ஆட்டினை குனிந்து விடுவிக்க முயலுவதைக் காட்டுவதாய் இருக்கிறது. இது மென்மையான சிந்தனையுடன் ஒரு முதிர்ந்த விசுவாசி, ஜாக்கிரதையாய் பேசி செயல்பட்டு, எப்பொழுதும் சிறப்பானதை செய்து நிறைவேற்றுவதைக் காட்டுவதைக் குறிக்கிறது.

3. <u>ஜெயம் பெறுவதற்கு போராடுதல்:</u> ஆவிக்குரிய அரங்கில் இப்போராட்டத்தை செயல்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள வினைச் சொல்லானது, பந்தய அரங்கில் மரிப்பதைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. இச்சொல்லானது, ஒலிம்பிக் குத்துச்சண்டையில் ஒரு வீரனை மரணத்திற்குள்ளாக்கி பந்தயத்தை நிறைவு செய்வதைக் குறிக்கும் சொல்லாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதைப்போன்ற பந்தயம் பவுலின் நாட்களில் நிகழுவதாய் இருந்தது.

இறுதிவரை போராடு! இப்படிப்பட்ட கட்டளையானது ஒரு "வெற்றிபெறுபவரின்" வலுமையான மனநிலையின் கோரிக்கையாய் இருக்கிறது. இப்படிப்பட்ட மனநிலையை ஒரு விசுவாசி பெற்றிருத்தல் அவசியமாய் இருக்கிறது. விம்மி அழுதலுக்குரிய மனநிலை சபைக்குள் இல்லை, நாம் இராஜரீக குடும்பத்தின் அங்கங்களாய் இருக்கிறோம், நம்மை அழைத்தவர் நமக்களித்துள்ள பயிற்சியை நிறைவு செய்ய வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

4. <u>நித்திய ஜீவனைப் பற்றிக்கொள்:</u> ஒவ்வொரு நாள் அனுதின வாழ்விலும், நித்திய ஜீவனுக்குரிய கண்ணோட்டத்தை காத்துக்கொள்ளுதல் வேண்டும், நீங்கள் நித்தியத்தின் பிள்ளையாய் இருக்கிறீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள், உங்கள் சிந்தனையில் பரலோகில் வாழும் ஒருவரைப்போன்று சிந்தித்து வாழுதல் வேண்டும். பற்றிக்கொள் என்ற வார்த்தையானது, மல்யுத்தம்செய்தலுக்குரிய வார்த்தையாய் இருக்கிறது, இதன் பொருள், "உங்களுடன் மல்யுத்தம் செய்பவரை, இறுகப்பிடித்துக்கொள்ளுங்கள், அதினால், அவரை களத்திற்கு வெளியே தூக்கியெறிய வழியுண்டாகும்."

இது ஒரு ஜெயம்பெறுவோருக்குரிய வார்த்தையாய் இருக்கிறது, நமது சோதனை காலங்களில் எல்லா பாவங்களும் தவிர்க்கப்பட்டு, நாம் பரலோக வாசிகளாய் தீர்மானிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம். நாம் ஒரு நித்தியமான இறுதிநிலையை உடையவர்களாய் இருக்கிறோம், இதற்காகவே நாம் அழைக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம், இதற்காக இவ்வுலகில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

தீமோத்தேயுவைப் போன்று, அநேக சாட்களுக்கு முன்னதாக, அறிக்கை செய்யப்பட்டது போல, வரக்கூடிய வருடங்களிலும் சாட்சிகொடுத்து, தேவனது வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து நடக்க பவுல் வற்புறுத்துகிறவராய் இருக்கிறார்.

13. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து பிரசன்னமாகும் வரைக்கும், நீ இந்தக் கற்பனையை மாசில்லாமலும், குற்றமில்லாமலும், கைக்கொள்ளும்படிக்கு,

பவுல் இப்பொழுது, உறுதியான கட்டளைகளை தீமோத்தேயுவுக்கு அளித்து, கர்த்தரது மேய்ப்பர் ஊழியத்தின் கீழ் தனது கடமையைக் காத்துக்கொண்டு, கண்ணொக்கமாய் இருக்க சுருங்கக்கூறுகிறவராய் இருக்கிறார். இவ்வசனத்தை, இராணுவ வார்த்தைகளைக் கொண்டு துவங்குகிறவராய் இருக்கிறார், "உனக்குக் கட்டளையிடுகிறேன்" என்கிற சொற்றொடர், தீமோத்தேயுவுக்கு பவுல் கட்டளை அளிப்பதை தெளிவுபடுத்துகிறதாய் இருக்கிறது. இது இயேசுக்கிறிஸ்துவின் அப்போஸ்தல அதிகாரத்தை முழுமையாய் அளிப்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது.

இக்கட்டளையானது, பிதாவாகிய தேவன் மற்றும் இயேசுக்கிறிஸ்துவின் பிரசன்னத்தில் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது. இந்நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சத்தியங்களை முறையாய் பிரசங்கம் செய்ய திரும்ப வலியுறுத்தப்பட்டு அடிக்கோடிட்டு காட்டப்படுகிறதாய் இருக்கிறது. தேவனது குணாதிசயமாய், எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற தேவன் என்பதை பவுல் வலியுறுத்திக்கூறுகிறவராய் இருக்கிறார். இதை நினைவுபடுத்திக்கொள்வது நற்காரியமாய் இருக்கிறது, நாம் மேற்கண்டது போல, கர்த்தருக்குள் நாம் வாழ்ந்து, அசைந்து, செயல்படுகிறவர்களாய் இருக்கிறோம். (அப்போஸ்தலர் 17:28).

நாம் எப்பொழுதும், "இயேசுவின் சந்நிதானத்தில்" இருக்கிறவர்களாய் இருக்கிறோம், இக்கருத்தின்படி விசுவாசியானவர் அதிகமாய் அவருக்குச்

செவிகொடுத்து வாழ்வதலைக் குறிக்கிறதாய் இருக்கிறது. கர்த்தர் நாம் என்ன செய்கிறோம் என்பதைக் கவனிக்கிறவராய் இருக்கிறார், அவர் நம்மை அழைத்த உன்னத ஸ்தானத்திற்கு தக்கவாறு, நாம் பாத்திரவான்களாய், சரியாய் நடந்து கொள்ள எதிர்பார்க்கிறவராய் இருக்கிறார்.

நமது வாஞ்சையானது அவரது வார்த்தையைக் கேட்டு நடப்பதாய் இருத்தல் அவசியம், "நல்லது உண்மையும் உத்தமும் ஊழியனே" எனக்கேட்டு நடத்தல் வேண்டும். மத்தேயு 25:21. தாலந்துகளைக் குறித்த உவமையில், நாம் கர்த்தரிடத்தில் இருந்து என்னப்பெற்று இருக்கிறோம் என்பதைப் பற்றிய அடிப்படைக்கருத்தை நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம். இரட்சிப்பில் நமது ஸ்தானத்தை நாம் கண்டுகொண்டு, உருவாக்கும் பணியைச் செய்வதன் மூலம் நமது கடமையை நிறைவேற்ற அவசியம் உண்டாகிறதாய் இருக்கிறது. அதிகம் யாரிடம் அளிக்கப்படுகிறதோ அவர்களிடம் அதிகம் கேட்கப்படும், லூக்கா 12:48, கர்த்தர் நம்மைக் கவனிக்கிறவராய் இருக்கிறார்.

கர்த்தர் நம்மிடம் எதிர்பார்ப்பது, அவர் தமது வாழ்வின் மூலம் நமக்கு முன்மாதிரியையும், சாட்சியையும் வைத்துச் சென்றதை நாம் கைக்கொண்டு நடத்தல் வேண்டும் என்பதையே ஆகும். பொந்தியு பிலாத்துவின் முன்னிலையில் இயேசு நியாய விசாரணை செய்யப்பட்டதை பவுல் இங்கு தெரிவு செய்து குறிப்பிடுகிறவராய் இருக்கிறார். இதன் மூலம் நம்மிடம் எதிர்பார்க்கப்படுவன குறித்து பவுல் சுட்டிக்காட்டுகிறவராய் இருக்கிறார். கர்த்தர் சிலுவையில் அறையப்படுவதற்கு முன்னர், ஆறு இடங்களில் நியாய விசாரணைக்குட்படுத்தப்பட்டார். இவ்வாறு இடங்களிலேயும் இயல்பான நீதியானது மீறப்படுகிறதாய் இருந்தது, யூதர்களின் நியாயவிசாரணையில், நியாயப்பிரமாண சட்டம், மிஷ்னா சட்டங்கள் அனைத்தும் மீறப்படுகிறதாய் இருந்தன. இதை இதற்கு முன்னதாக நாம் கண்டிருந்த போதும், இதை பவுல் ருசுப்படுத்த எண்ணமுடையவராய் இருப்பதன் மூலம் முறையாக நாம் காண்போம்.

1. யோவான் 18:12-14 - அன்னா முன்பதாய் சட்டவிரோதமாய் நியாயம் விசாரிக்கப்படுதல்.

2. மத்தேயு 26 : 57 - 68. - அந்த நாளின் பிரதாண ஆசாரியன் காய்பா முன்னிலையில் நியாயம் விசாரிக்கப்படுதல்.

3. லூக்கா 22 : 66 - 71. விடிவதற்கு முன்னதாய் சனகரிம் சங்கத்தில் நியாயம் விசாரிக்கப்படுதல்.

4. யோவான் 18 : 28 - 38. - முதலாவது ரோம விசாரணையாக பிலாத்துவின் முன்னிலையில் நியாயம் விசாரிக்கப்படுதல்.

5. லூக்கா 23 : 8 - 12. ஏரோது அந்திப்பா முன்னிலையில் நியாயம் விசாரிக்கப்படுதல்.

6. யோவான் 18:39-19:6. - இறுதி நியாய விசாரணையாய் பிலாத்துவின் முன்னிலையில் நியாயம் விசாரிக்கப்பட்டு, மூன்று முறை பிலாத்து கர்த்தரை விடுதலை செய்ய எத்தனித்தும், யூதரைப் பிரியப்படுத்தும் முகாந்திரமாய் இயேசுவை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தல்.

இறுதி நியாயவிசாரணையின் போது, கர்த்தர் பிலாத்துவின் முன்னிலையில், மிகுந்த வேதனையுடன், சவுக்கால் தண்டிக்கப்பட்டும், அடிக்கப்பட்டு வாதிக்கப்படுகிறவராய் நின்றார், அவரை உருத்தெரியாத வண்ணம் அவரது தோற்றம் காணப்பட்டது, இருந்த போதிலும், அவர் தனது அந்தஸ்தை மற்றும் வைராக்கியத்தை விட்டுக்கொடாத வண்ணம் பிலாத்துவின் கோபமடையாது காணப்பட்டார். பிலாத்து பின்னர் வழக்கத்திற்கு மாறான ஒரு நபரை நியாயவிசாரணை செய்வதை உணர்ந்து கொண்டார், அவரது மனைவியும் சொப்பனத்தில் கர்த்தர் நீதிபரராய் இருப்பதைக் கண்டு அறிவிக்கிறவளாய் இருந்தாள். பிலாத்து ஆரம்பத்தில் கர்த்தரை ஏரோதுவிடம் அனுப்பி, இக்காரியம் ஒரு அமைதிக்கு திரும்ப எத்தனித்தவராய் இருந்தார், ஆனால் அவர் விரும்பினபடி எதுவும் நிகழவில்லை.

பிலாத்து யூத அதிகாரிகளை திருப்திபடுத்த தருணங்களை எதிர்ப்பார்த்தவராய் இருந்தபடியால், இயேசு உபதேசங்களிலிருந்து தன்னை இரட்சித்துக்கொள்ள முயன்றிருக்கலாம், ஆனால் கர்த்தர் அவர்களது குற்றச்சாட்டுக்கள் அனைத்தையும் 100% ஏற்றுக்கொண்டு மறு உத்தாரம் எதுவும் சொல்லாது மௌனம் சாதித்தார். பிலாத்து கர்த்தரை நியாய விசாரணை செய்த போது, மத்தியஸ்தர் யாரும் இல்லாது காணப்பட்டனர். பவுல் இயேசுவை விடுதலை செய்ய எவ்வித மத்தியஸ்தரும் இயேசுவின் சார்பில் இல்லாதிருந்தனர், நாம் அனேக சந்தர்ப்பங்களில் மனிதரைப் பிரியப்படுத்த மனதுள்ளவர்களாய், நமது

நற்செய்தியில் மனிதருடன் ஒத்துப்போகிறவர்களாய் காணப்படுகிறோம், இது இரட்சிப்பின் செய்தியை கலங்கிப்போன சேறும் சகதியுமான தண்ணீரைப்போலாக்குகிறவர்களாய் இருக்கிறோம்.

14. எல்லாவற்றையும் உயிரோடிருக்கச் செய்கிற தேவனுடைய சந்நிதானத்திலேயும், பொந்தியு பிலாத்துவின் முன்னின்று நல்ல அறிக்கையைச் சாட்சியாக விளங்கப்பண்ணின கிறிஸ்து இயேசுவினுடைய சந்நிதானத்திலேயும் உனக்குக் கட்டளையிடுகிறேன்.
14 That thou keep this commandment without spot, unrebukable, until the appearing of our Lord Jesus Christ:

கர்த்தர் நடப்பித்தது போன்றே தீமோத்தேயுவும் சத்தியத்தைப் பற்றிக்கொள்ள சவால் விடப்படுகிறவராய் இருக்கிறார், சுவிஷேச செய்தியுடன் அவருக்கு கையளிக்கப்பட்ட முழுமையான தராதரத்தை விட்டு வழிவிலகாதிருக்க பவுல் கூறுகிறார். பவுல் தீமோத்தேயுவுக்கு இக்கட்டளையை அளித்து கர்த்தரின் வருகைவரை இதைக் கைக்கொள்ள கட்டளையிடுகிறவராய் இருக்கிறார். இரட்சிப்பின் செய்தியானது கர்த்தர் வருமளவும் அதன் தூய்மையைக் காத்துக்கொள்ள கட்டளையிட்டார் இக்கட்டளையானது இன்றைய அளவில் நமக்கும் பொருந்துகிறதாய் இருக்கிறது. காத்துக்கொள்ளுதல் என்பதன் கிரேக்கப் பதம் 'tereo' இது ஒரு இராணுவ வார்த்தையாய் இருக்கிறது, பாதுகாப்பாளர்களுக்கு இவ்வார்த்தை கட்டளையாய் அளிக்கப்படும். இவர்கள் ஜாக்கிரதையாய் இருக்கவும், தங்களது உடைகளை பாதுகாத்துக்கொள்ளவும் கட்டளை பெறுகிறவர்களாய் இருந்தனர்.

இச்சொற்றொடரானது மிகவும் கவனத்தை ஈர்க்கக்கூடிய ஒன்றாய் இருக்கிறது, இராணுவ வீரர்கள் இரவு நேரத்தில் காவல் செய்யும் போது தூங்கிவிடுவார்கள் எனில், ரோந்து செல்லும் உயர் அதிகாரியானவர் தனது கையில் தீ பந்தத்துடன் செல்வாராம், தூங்கும் இராணுவ வீரரின் வஸ்திரத்தை தீ வைத்துக் கொழுத்திவிடுவது வழக்கமாய் இருந்துவந்தது. கவனக்குறைவாய் இருக்கும் இராணுவவீரர் மரணதண்டனை அடைவர் அல்லது இராணுவ பதவி நீக்கம் செய்யப்படுவர். இன்றைய அளவில் விசுவாசிகள் ஆவிக்குரிய விஷயங்களில் கவனக்குறைவாய் இராதிருக்க இதன் மூலம் எச்சரிக்கப்படுகிறவர்களாய் இருக்கின்றனர்.

நாம் காண்கிறபடி, மரணமானது நமது வாழ்வில் சீக்கிரமே நிகழ்ந்து கர்த்தர் நம்மை இப்பூமியிலிருந்து அகற்றிவிடுகிறவராய் இருக்கிறார், இதன் பொருள் நாம் சாத்தானால் "அடிக்கப்பட்டு வாதைக்குள்ளானோம்" என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது, நமக்காய் தேவன் அமைத்திருந்த அவரது சித்தத்திலிருந்து வழிவிலகிப் போனோம், நமது பாதுகாப்பு கருதி தேவன் சீக்கிரமே மரணத்தை அளித்து நம்மை இப்பூமியிலிருந்து அகற்றுகிறவராய் இருக்கிறார். நமது எதிராளியானவன் கர்ஜிக்கிற சிங்கத்தைப் போன்று (பசியுள்ள சிங்கத்தைப்போன்று) எவனை விழுங்கலாமோ என வகைதேடி அலைகிறவனாய் இருக்கிறான், இவன் பெலவீனமானவர்கள், நோய்வாய்ப்பட்டவர்கள், இளம் வாலிபர்கள், மந்தையை விட்டு வழிதப்பிச் சென்றவர்கள், போன்றோரை விழுங்க வகைதேடி அலைகிறவனாய் இருக்கிறான். சாத்தானின் எளிதான இலக்கு, ஐக்கியத்திலிருந்து வழிவிலகிச் சென்ற விசுவாசிகள், ஆரோக்கியமான உபதேசத்தைக் கைக்கொள்ளாது, வழிதப்பித்திரிகிறவர்கள் மீதாய் இருக்கிறது. 1 பேதுரு 5:8-9.

தீமோத்தேயு கறை திரையற்றவராய் தேவனது பணிசெய்ய வேண்டியதாய் இருந்தது. குணத்திலோ, நடத்தையிலோ, பேச்சிலோ தனது சாட்சியைக் கெடுத்துக்கொள்ளாத வண்ணம் இருக்க வேண்டியதாய் இருந்தது. அவர் அளித்த உபதேசத்தைவிட தன்னை மிகவும் காத்துக்கொள்ள வேண்டியது அவசியமாய் இருந்தது. அவர் தனது வாழ்வை பாவத்திலிருந்து காத்துக்கொள்ள வேண்டியதாய் இருந்தது. தனது கிருபைக்கு அற்பணித்து வாழும் பாவியிடம் தேவன் செயல்படுவதற்கு இவர் முன்மாதிரியாய் திகழ்ந்து எப்பொழுதும் பிரகாசிக்க வேண்டியவராய் இருந்தார். தீமோத்தேயுவின் கண்ணோட்டமானது கர்த்தரின் வருகைமீதாய் இருந்தது, தம்முடையவர்களைச் சேர்த்துக்கொள்ள மகிமையில் அவர் திரும்ப வருவதை எதிர் நோக்கி காத்திருந்தார். கர்த்தரின் வருகையானது கர்த்தரது நேரத்தில் நிகழுவதாய் இருக்கிறது, அவர் ஆயத்தமாகும்போது, தன்னை "பிரத்தியட்சப்படுத்துகிறவராய்" இருக்கிறார். இது கர்த்தரது கால அட்டவணையின் படி நிகழுகிறதாய் இருக்கிறது மனிதனின் கால அட்டவணையின் படியல்ல. இது சபையின் நம்பிக்கையாய் இருந்து, அவரது பரமேறுதலில் அறிவிக்கப்பட்டதாய் இருக்கிறது. அப்போஸ்தலர் 1:10,11. மற்றும் ஒவ்வொரு கர்த்தரது திருவிருந்திலும் நினைவு கூறப்படுகிறதாய் இருக்கிறது, விசுவாசிகளாகிய நாம் கர்த்தரது பந்தியில் பங்கு பெறும்போதெல்லாம், "கர்த்தர் வருமளவும்" என்கிற எதிர்பார்ப்பை வெளிப்படுத்துகிறவர்களாய் இருக்கிறோம். 1 கொரிந்தியர் 1:26. இதுவே ஆரம்பகால சபையின் கண்ணோட்டமும், நிச்சயமுமாய் (நம்பிக்கையாய்) இருந்து

வந்தது, கர்த்தர் உயிர்த்தெழுந்தார், அவர் மீண்டும் வருகிறவராய் இருக்கிறார்.

15. **அந்தப் பிரசன்னமாகுதலைத் தேவன் தம்முடைய காலங்களில் வெளிப்படுத்துவார். அவரே நித்தியானந்தமுள்ள ஏகச் சக்ராதிபதியும், ராஜாதி ராஜாவும், கர்த்தாதிக் கர்த்தாவும்,** 16, **ஒருவராய் சாவமையுள்ளவரும், சேரக்கூடாத ஒளியில் வாசம்பண்ணுகிறவரும், மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர், அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக, ஆமென்.**"

ஒவ்வொரு நாளும் இதை அவர்கள் நினைவுகூறுகிறவர்களாய் இருந்தனர், பரிசுத்த ஆவியானவரது வல்லமையானது அவர்கள் மூலம் வழிந்தோடுகிறதாய் இருந்தது. அவர்கள் தேவ வசனத்தை பிரசங்கித்தனர், ரோம சாம்ராஜ்யத்திற்கு ஊழியம் செய்கிறவர்களாய் விளங்கினர், அவர்கள் சந்ததியில் மாற்றம் நிகழ்வதை இவர்கள் கண்ணுற்றனர். இன்றைய அளவிலான சபைகள், இத்தகைய மனநிலையைப் பகிர்ந்து கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர், அப்போஸ்தலரின் அனுபவங்கள், அவர்கள் மூலம் செயல்பட்ட வல்லமை, போன்றவற்றை கண்டுணர்ந்து ஆதி சபையில் ஏற்பட்ட வளர்ச்சியினை காணவேண்டியவர்களாய் இருக்கின்றனர். சபைக்காக நிகழும் கர்த்தரது வருகையானது, சபையுகத்திற்கு முடிவுண்டாக்கி, மகா உபத்திரவகாலத்திற்கான வாசலை திறக்கிறதாய் இருக்கிறது, இதைத்தொடர்ந்து பாவம் மற்றும் மரணம் இவைகளிலிருந்து இறுதி வெற்றியடைந்து, தனது இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கிறதாய் இருக்கிறது. கர்த்தரின் வருகைக்கான பெரிதான சத்தியம், மனுக்குலத்திற்கு அரத்தத்தைச் சேர்க்கிறதாய் இருக்கிறது,

கர்த்தர் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்படுகிறார்:

1. **நித்தியானந்தமுள்ள ஏகச் சக்ராதிபதி:** கர்த்தர் பூரணமான மகிழ்ச்சியுடையவராய் இருக்கிறார், அண்டசராசரத்தையும் அடக்கியாளுகிறவராய் இருக்கிறார், அவர் தமது திட்டத்தின்படி யாவும் செயல்படுகிறதாய் இருக்கிறது. அவரே இவ்வுலகை உண்மையாய் ஆளுகிறவராய் இருக்கிறார், இதை ஒரு நாளில் அனைவரும் காண்கிறவர்களாய் இருப்பர்.

2. **இராஜாதி இராஜா:** இது வலியுறுத்துகிறது என்னவெனில் அவர் எல்லா மனிதர்மீதும் ஆதிக்கம் செய்கிறவராய் இருக்கிறார், பூமியை அரசாண்ட அரசர்கள் அனைவர் மீதும் இவர் ஆளுகை செய்கிறவராய் இருக்கிறார்.

3. **கர்த்தாதி கர்த்தா**: இப்பெயர் தேவதூதர்களின் மீது கர்த்தர் அடைந்த வெற்றியை சுட்டிக்காட்டுவதாய் இருக்கிறது. இவரே எல்லாவற்றிற்கும் மேலான உயர் ஆளுகை செய்கிறவராய் இருக்கிறார். எல்லா முழங்கால்களும் இவருக்கு முன்பாக முடங்கும். ஏசாயா 45:23, ரோமர் 14:11, பிலிப்பியர் 2:10.

4. **ஒருவராய் சாவாமையுள்ளவர்**: கர்த்தர் ஒருவரே இயல்பாலும், செய்கையாலும் மெய்யான அழியாமையுள்ளவராய் இருக்கிறார், இவர் தேவனாய் எப்பொழுதும் இருக்கிறவராய் இருக்கிறார், சிலுவையால் மரணத்தையும், பாவத்தையும் மேற்கொண்டவராய், மரித்து உயிர்த்தெழுந்தவராய் இருக்கிறார். அவரது வல்லமையாலும், அவரது ஸ்தானத்தாலும் நாம் நித்திய ஜீவனை அடைந்தவர்களாய் இருக்கிறோம். (நமக்கு ஒரு ஆரம்பம் இருந்தது, ஆனால் முடிவு இல்லாதவர்களாய் அவரைப் போன்று விளங்குவோம்).

5. **ஒளியில் வாசம் பண்ணுகிறவர்**: ஆதாம் ஏவாள் வீழ்ச்சிக்கு முன்னர் ஒளி அவர்களது ஆடையாய் இருந்தது, உயிர்த்தெழுந்த ஆண்டவருக்கும் ஒளி ஆடையாய் இருக்கிறது. அவர் பரிசுத்தத்தில் வாழுகிறவராய் இருக்கிறார், மற்றும் ஒருவரும் சேரக்கூடாத ஒளியில் வாசம் பண்ணுகிறவராய் இருக்கிறார். இதினிமித்தம், வெளிப்படுத்தின விஷேசத்தில் யோவான் தரிசனத்தில், அவர் கண்ட மூப்பர்கள் தங்கள் முழங்காலில் நின்று, தாங்கள் துதிபாடினார்கள். வெளி. 4:3-11.

இன்றைய அளவில் கர்த்தரைக் குறித்த சரியான தரிசனமற்றவர்களாய் காணப்படுகிறோம், அவர் பூமியில் வாசம்பண்ணின விதமாய் நாம் அவரைக் காண்கிறவர்களாய் இருக்கிறோம். அவர் ஒளியை தமது கூடாரமாகவும், வஸ்திரமாகவும் அமைத்துக்கொண்டு பரலோகில் தற்போது வாசம் பண்ணுகிறவராய் இருக்கிறார். இச்சொற்றொடரில் பவுல், தீமோத்தேயுவை கர்த்தரைக்குறித்து தெளிவான கண்ணோட்டத்தை உடையவராக வழிநடத்துகிறவராய் இருக்கிறார், அவர் தனது மகிமையில் இருக்கிறபடியால், அதற்கேற்ற வண்ணம் அவரை நாம் ஆராதிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

6. **மனுஷரில் ஒருவரும் கண்டிராதவரும், காணக்கூடாதவருமாயிருக்கிறவர்**: இது ஒரு குழப்பத்தை உருவாக்குகிற பகுதியாய் இருக்கிறது, கர்த்தரது உயிர்த்தெழுந்த சரீரத்தில் மகிமை பொருந்தினவராய் யோவானுக்கும் மற்றும் பவுலுக்கும் தரிசனமானார் என்பது குறிப்பிடத்தக்கது.

பவுல் என்ன பொருள்படக்கூறுகிறார்? அவர் கூறுவதன் பொருள், சிலுவையிலிருந்து கர்த்தர் உயிர்த்தெழுந்த சரீரத்தில் இருந்த வரை மட்டுமே அவரைக் காண இயலும், ஆனால் அவர் இருக்கிறபிரகாரம் அவரது மகிமையில் முழுமையாய் அவரைக் காண்பது இயலாத காரியம்.

வெளிப்படுத்தின விஷேசத்தில், யோவான் கர்த்தரின் முழு மகிமையடைந்த நிலையில் உள்ள தரிசனத்தை காண அவருக்கு அருள்செய்யப்பட்டபோதும், அவர் கூறுகிறார், "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை" என்கிறார். 1 யோவான் 4:12, யோவான் 6:46, நாம் உயிர்த்தெழுந்த சரீரத்தில், பரலோகில் அவரை முகமுகமாய்க் காணக்கூடிய சிலாக்கியம் நமக்கு உண்டாகலாம். 1 கொரிந்தியர் 13:12.

7. அவருக்கே கனமும் நித்திய வல்லமையும் உண்டாயிருப்பதாக: கர்த்தர் ஒருவரே கனத்திற்கும் அல்லது பயபக்திக்கும் உரியவராய் இருக்கிறார். அவர் ஒருவரே மெய்யான வல்லமையை சதாகாலமும் பெற்றவராய் இருக்கிறார்.

பவுல் முடிவுரையாக, "ஆமென்" அல்லது "அப்படியே ஆகக்கடவது" என முடிக்கிறவராய் இருக்கிறார். "நான் நம்புகிறபடியே, ஆகக்கடவது" மேற்கண்ட கருத்துக்களை மனதில் கொண்டு நாமும் ஆமென் எனக்கூறக்கடவோம், அல்லது தொடர்ந்து அவரை ஆராதித்து அவருக்குரிய மகிமையையும் கனத்தையும் செலுத்துகிறவர்களாய் இருப்போமாக!

கடைபிடிப்பதற்கான தலைமைத்துவம்:

1. சிறப்பான பந்தய வீரரைப் போன்ற முன்மாதிரியை தலைவர்கள் அமைத்துக்கொள்ளுதல் வேண்டும்: எல்லா விசுவாசிகளும் சுய அடக்கமாய் இருப்பதற்கென்றே அழைக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர். இவ்வாறு சுய அடக்கத்துடன் / கட்டுப்பாட்டுடன் இருக்க பவுல் ஒலிம்பிக் பந்தய பகுப்பாய்வினை உபயோகிக்கவராய் இருக்கிறார். ஒரு பந்தயக்காரன் தனது பந்தயத்தை முடிக்கும் முன்னர் அவன் செய்யவேண்டிய காரியங்கள் குறித்தான பிரதிபலிப்பை அவர் கூறுகிறவராய் இருக்கிறார்.

முதலாவதாக, அவர்கள் தங்களது பிரஜாஉரிமையை உறுதிப்படுத்துதல் வேண்டும்.

[prove their citizenship]. ஆவிக்குரிய ரீதியில், நாம் நமது இரட்சிப்பைக் குறித்து நிச்சயமுள்ளவர்களாய் இருக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம்.

இரண்டாவதாக, பந்தயத்தில் ஈடுபடுவதற்கு முன், பந்தய அரங்கில் பத்து மாதத்திற்கு முன்னதாகவே தொடர் பயிற்சி செய்தல் வேண்டும், அங்கு அவர்கள் உடற்பயிற்சி அரங்கத்தின் அதிகாரிகளின் கட்டுப்பாட்டில் கீழாக இருப்பர். விசுவாசிகளாகிய நாம் ஸ்தல சபையில் பிரவேசித்து, கர்த்தரின் அதிகாரத்திற்குள் இருக்கவேண்டியவர்களாய் இருக்கிறோம், அங்கு உண்மையான போதகரின் கீழ் வேதவசனங்களைக் கற்றுகொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். இவர் தனிப்பட்ட நிலையில் நமது பயிற்சியாளராய் இருக்கிறார்.

மூன்றாவதாக, ஒவ்வொரு நாளிலும் எக்காள ஒலிக்கு பதில் செய்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். எக்காள ஒலியின் அழைப்பானது அவர்கள் பயிற்சி அரங்கிற்குச் சென்று அவர்கள் பயிற்சியை ஆரம்பிப்பதற்காக ஒலிக்கப்படுகிறது. அவ்வாறு அழைக்கப்படும் அழைப்பிற்கு ஒரு முறை தவறினால் கூட, அவர் பந்தய நாளில், பந்தயத்தில் அனுமதிக்கப்படமாட்டார்கள். நாமும் கூட தேவனுக்குக் கீழாக பயிற்சி பெறுகிறவர்களாய் இருக்கிறோம், எந்த ஒரு காரியத்திலாவது தேவனுக்குக் கீழ்ப்படிய மறுப்போமானால், அவரது பணியை தொடர்ந்து செய்ய தகுதியிழக்கிறவர்களாய் காணப்படுவோம்.

நான்காவதாக, பந்த வீரர்கள் குறிப்பிட்ட சில உணவு வகைகளை மட்டுமே உணவாக அருந்துவர், மது அருந்தமாட்டார்கள், பயிற்சி காலத்தில் அவர்கள் உடலுறவு கொள்ளுதலை தவிர்த்துவிடுவர். இவைகள் அனைத்தையும் அவர்கள் சட்டப்பூர்வமாய் செயல்படுத்த வேண்டும். ஆவிக்குரிய அரங்கில், நாமும் கூட சில காரியங்களை தவிர்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், இதினிமித்தம் நாம் கர்த்தரது பணியில் கண்ணோக்கமாய் இருந்து அவர் பணியை சிறப்பாய் செய்ய இயலும்.

ஐந்தாவதாக, இறுதி தீர்ப்பை உடற்பயிற்சி அதிகாரி அளிக்கிறவராய் இருப்பர். கர்த்தர் மட்டுமே நமது காரியத்தில் ஊழியம் செய்வதற்கான வாசலை திறந்து கொடுத்து, நமது கடமையை செய்து நிறைவேற்ற அருள் செய்கிறவராய் இருக்கிறார்.

ஆறாவதாக, ஜெயம்பெறுபவருக்குரிய பிரதிபலன், (இரண்டாம், மூன்றாம் இடம்

என்பது இப்பந்தயத்தில் கிடையாது) இலைகளால் ஆன கிரீடமாய் இருக்கும் (இவ்விலைகள் ஒலிவ இலை மற்றும் ivy, laurel போன்ற இலைகளாய் இருக்கும்) இவைகள் வாடிப்போகக்கூடியவை. நமது பிரதிபலன் ஜீவ கிரீடமாய் இருக்கிறது, நீதியின் கிரீடமாய் இருக்கிறது, கிறிஸ்துவை மகிமைப்படுத்தும்படி எந்நாளும் நமக்களிக்கப்படுகிறதாய் இருக்கிறது, இவ்வாழ்க்கையில் நமக்கு நியமித்திருக்கிற பந்தயத்தை ஓடி முடிக்கும் போது கிறிஸ்து இதை நமக்கு அளிக்கிறவராய் இருக்கிறார்.

ஏழாவதாக, பந்த வீரனுக்கு அவனது சொந்த ஊரில் பெரிய அளவிலான பிரதிபலன் அளிக்கப்படும், அவனது வெற்றியை நினைவு கூறும்படி அவனது உருவ சிலை செதுக்கப்பட்டு வைக்கப்படும். (இன்றைய அளவிலும், தட்டு எறிதல், போன்ற உருவச் சிலைகள் பண்டைய கால உலகில் பல பட்டணங்களில் காணப்பட்டு வந்தது). நித்தியம் முழுவதிலும் கிருபையின் வெகுமதிகள், ஜீவனுள்ள சாட்சியாக தமது சாயலில் நம்மை உருவாக்கின கர்த்தரது வல்லமையைக் குறித்து பறைசாற்றி, அவரை மகிமை படுத்துகிறதாய் இருக்கும். ஒரு பந்தய வீரன் பூமிக்குரிய பிரதிபலனுக்காக இவை அனைத்தையும் செய்கிறவனாய் இருக்கிறான், நாம் முயற்சி செய்து செயல்படுவதோ நித்திய பிரதிபலனுக்கானதாய் இருக்கிறது.

2. உண்மைத் தலைவர்கள் சிறப்பானவர்களாய் இருக்க எதிர்பார்ப்பவர்களாய் இருப்பர்: போதகர்களாகிய நாம், நமது சபை அங்கத்தினரை மென்மையாய் நடத்துகிறவர்களாய் இருக்கிறோம், அவர்களிடமிருந்து அதிகமாய் எதுவும் எதிர்பார்ப்பதில்லை, எல்லா நேரங்களிலும் சிறப்பானவைகளை விசுவாசிகளிடமிருந்து எப்பொழுது எதிர்பார்க்கப்போகிறோம்?

3. கணக்கொப்புவித்தலைக் குறித்த உணர்வானது தலைவர்களிடம் எதிர்பார்க்கப்படுகிறது, நமக்கு ஜீவனைத் தந்த தேவனின் நம்பிக்கை வைக்க எதிர்பார்க்கப்படுகிறோம். நமது வாழ்க்கையை எவ்வாறு நடத்துகிறோம் என்பதைக் குறித்து நாம் அவருக்குக் கணக்கொப்புவிப்பவர்களாய் இருக்கிறோம். ஒவ்வொரு விசுவாசியும், நமக்கு நியமிக்கப்பட்ட கடமையிலிருந்து தவறும்போது, மிகவும் மெல்லியதான பனிப்படலத்தின் மீது பனிசறுக்கு செய்கிறவர்களாய் இருப்போம், மற்றும் இவ்வாழ்க்கையிலிருந்து எப்பொழும் அகற்றப்படக்கூடியவர்களாய் இருக்கிறோம். இவ்வாழ்வில் நமக்கு பயமின்றி பாதுகாப்பை அளிப்பது, கர்த்தர் வைக்கும் இடத்தில் அமைந்து நாம் அவர் நமக்கு நியமித்த காரியங்களை

பொறுப்புடன் செய்து நிறைவேற்றுவதாய் இருக்கிறது. இதையல்லாது வேறு காரியங்களில் ஈடுபடுவது, அவர்களுக்கு அபாயத்தைத் தேடிதருவதாய் இருக்கிறது.

4. தலைவர்கள் அவர்களது எஜமான் வந்து சேருவதை எதிர்பார்த்தல் வேண்டும். கர்த்தர் நம்மைக் கவனித்து வருகிறவராய் இருக்கிறார், நமது இராஜாவுக்கு நாம் எதை செய்து கொண்டு இருக்கிறவர்களாய் இருக்கிறோம்? நாம் எப்பொழுதும் அவரது ஸ்தானபதிகளாய், நமது இராஜா முன்னிலையில் காணப்படுகிறோம். கர்த்தர் வருகைக்காய் காத்திருந்து வாழ்கிறவர்களாய் இருக்கிறோமா? கர்த்தரின் வருகையை நம்பி, எதிர்பார்த்து, அனுதின வாழ்வில் கடைபிடித்து வாழ்கிறவர்களாய் இருக்கிறோமா? இதை நாம் உண்மையாய் செய்யும் போது, கர்த்தர் அதைப் பார்த்து, அப்போஸ்தலர் மற்றும் பண்டைய மிஷனரிமார்கள் வாழ்விலும், ஊழியத்திலும் நடப்பித்த காரியங்களை நமக்கும் நடப்பிக்கிறவராய் இருப்பார். கர்த்தர் இன்றைய அளவில் எப்படியிருக்கிறார் என்பதைக் குறித்த துள்ளியமான படத்தை மனதில் கொண்டவர்களாய் அவரது பணியை செய்வோமா? இஸ்ரவேலில் அவர் சுற்றித்திரிந்த காலத்தில் அவரைக் குறித்த நமது எண்ணங்கள் அற்பமாய் இருந்திருக்கலாம், ஆனால் உயிர்த்தெழுந்த இயேசுவை யோவான் கண்டது போல நாமும் கண்டவர்களாய் அவருக்கு முன்பாக பணிந்து குணிய வேண்டியவர்களாய் இருக்கிறோம், அவர் எல்லாம் வல்ல இராஜாதி இராஜாவும் கர்த்தாதி கர்த்தாவுமாய் இருக்கிறார். அவர் முழு வல்லமையுடனும் இவ்வுலகை உண்மையாய் அரசாளுகிறவராய் இருக்கிறார். அவர் மகிமை பொருந்தினவராய் இருக்கிறார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம், அவர் சர்வ வல்லவராய் இருக்கிறார், நமது ஆராதனைக்கு அவர் பாத்திரராய் இருக்கிறார், அவருக்கே கனத்தைச் செலுத்தி அனுதினமும் முற்றிலும் கீழ்ப்படிவோமாக.

5. தலைவர்கள் தங்களது எஜமானரின் முழுமையான மகிமையை மனதில் கொண்டவர்களாய் அவரைக்குறித்து பேச வேண்டும். போதகர்களாகிய நாம் கர்த்தரைக் குறித்து பிரசங்கம் செய்யும் போது மக்கள் கர்த்தரை எவ்வாறு தரிசிக்கிறவர்களாய் இருக்கின்றனர்? பவுல் கர்த்தரைக் குறித்து இங்கு குறிப்பிடுகிறது போல கண்டுணர்கிறவர்களாய் இருக்கிறார்களா? அவர்கள் கர்த்தரின் வல்லமை மற்றும் மகிமையை அறிந்துணர்ந்து அவருக்கு முன்பாக பணிந்து குணிகிறவர்களாய் இருக்கிறார்களா? நமது பிரசங்கம் ஜனங்கள் இயேசுவை பாசத்துடன் தழுவி அவரை மென்மையானவராய் கண்டு

கொள்ளும்படி செய்கிறதாய் இருக்கிறதா அல்லது உயிர்த்தெழுந்த ஆண்டவராய் அவரைத் தொழுது கொள்ளச் செய்கிறதாய் இருக்கிறதா? தோமா உயிர்த்தெழுந்தக் கர்த்தரைக் கண்ட போது, அவரைக் கட்டித்தழுவுகிறவராய் இல்லை மாறாக, அவர் முன்பாக விழுந்து அவரை கர்த்தரும் தேவனுமாய் தொழுது கொள்கிறவராய்க் காணப்பட்டார். யோவான் 20:28. கர்த்தரது அன்பையும் அவரது மனதுருக்கத்தையும் இழந்து போனோருக்கு தெரிவிக்கும் நாம், உயிர்த்தெழுந்த கர்த்தரின் தற்கால மற்றும் எதிர்கால நிலை, அவரது கடமை, மகிமை மற்றும் கனத்தை போதித்து வலியுறுத்தாத பட்சத்தில் தவறிழைக்கிறவர்களாய் விளங்குவோம். நாம் ஒவ்வொரு ஆராதனையின் இறுதிப்பகுதியிலும், வல்லமை மிக்க இறுதி துதியுடன் கலந்த முடிவு ஆசீர்வாதத்தை ஏறெடுக்கிறவர்களாய் இருக்கிறோமா? நமது ஆதிக்கத்தின் கீழ் உள்ள விசுவாசிகள் கர்த்தரை முழுமையாய் அறிந்துணர்ந்து அவரை ஆராதிக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

[ஊ] எபிரெயர் 10:32-39 - பயிற்சி காலத்தில் அதைரியப் படுதல் கூடாது.

"32. முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே. 33. நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் நீங்கள் வேடிக்கையாக்கப்பட்டதுமல்லாமல், அப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளிகளுமானீர்கள். 34. நான் கட்டப்பட்டிருக்கையில் என்னைக்குறித்துப் பரிதபித்ததுமன்றி, பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்திரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து, உங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய் கொள்ளையிடக் கொடுத்தீர்கள். 35. ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள். 36. நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும் படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. 37. வருகிறவர் இன்னுங் கொஞ்சகாலத்தில் வருவார், தாமதம் பண்ணார். 38. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாய் இராது என்கிறார். (ஆபகூக் 2:3, 4.) 39. நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்."

பிரதிபலிப்பு:

விசுவாசிகள் இப்பொழுது தங்களது ஆவிக்குரிய வாழ்க்கையானது தொடர்ந்து முதிர்ச்சியடையவும், கர்த்தருக்கு கீழ்படிந்து நடக்க சவால் விடப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். இவ்வசனத்தைக் கற்றுக்கொள்வதற்கு முன்னர் 2 தீமோத்தேயு 4:1-8 வசனங்களுக்கு நமது கவனத்தை திருப்புவோமாக, இவ்வசனங்களை வாசியுங்கள், பின்னர் அதைத் தொடர்ந்து 2 பேதுரு 1:12-15 வசங்களையும் வாசியுங்கள். இவ்விரு வேதபகுதிகளிலும் பவுலும், பேதுருவும் மேற்கூரிய வேதபகுதிக்கு ஒத்த நிலையில் தங்களது கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. "முன்னேற முயலுதல்" இதுவே கிறிஸ்தவ வாழ்க்கையின் இலக்காய் இருக்கிறது, இவ்வாறு முன்னேறுவது தேவனது வல்லமையால் வாழ்ந்து முன்னேறுகிறவர்களாய் இருக்கிறோம். மத்தேயு 16:24-28, 7:1-9. வேதபகுதியையும் வாசியுங்கள்.

இவ்வேதபகுதிகள் அவர்களது, கடந்தகால ஆவிக்குரிய பொறுமையைக் குறித்து நினைவுபடுத்துகின்றன. மட்டுமின்றி கடந்தகாலத்தில் முழுமையான கீழ்ப்படிதலுடன் மேற்கொண்டபடியால், நிகழ்காலத்திலும், வருங்காலத்திலும் அவ்வாறே மேற்கொள்ள வற்புறுத்தப்பட்டனர். தேவனது வார்த்தையின் சத்தியமானது அவர்களது ஆத்துமாவில், இயேசுவை அறிவதோடு நின்றுவிடாது, அவர்கள் அவரை தொடர்ந்து அறிகிற அறிவினால், விளைவுகளை ஏற்படுத்துகிறாய் இருந்தது, மற்றும் அவருடன் தங்கள் வாழ்வின் மூலம், நடந்துசெயல்படச் செய்தது, அப்படிப்பட்ட வாழ்க்கையானது, தேவனை அறிகிற அறிவையும், அவருடன் கொள்ளுகிற உறவிலிருந்தும் ஒருவரும் பிரிக்க இயலாததாய் இருந்தது. (பிலிப்பியர் 3:7-14, எபிரெயர் 13:5-6).

இதில் விளங்கும் அபாயம் என்னவெனில், இப்பொழுது கீழ்ப்படியாத வாழ்க்கை செய்வோர், அனைவரும் அகற்றப்படுவர், அவர்கள் தேவனது வார்த்தையின் மீது கொண்டிருக்கும் நம்பிக்கை பயனற்றதாகிவிடும். இவ்வசனத்தின் மூலம் நாம் கண்டுகொள்ளும் அடிப்படைக் கருத்து என்னவெனில், கைக்கொள்ள இயலாத சத்தியத்தையத்தைக் குறித்த அறிவனது பயனற்றதாய் இருக்கிறது. ஒரு தேவப்பிள்ளையின் வாழ்வில் தேவனது சத்தியமானது, கிரியை செய்யவில்லையானால், அப்படிப்பட்ட நபர் தெய்வீக சிட்சைக்கு உட்படுகிறவராய் இருக்கிறார். அவரது வாழ்வானது ஆசீர்வாதத்தை விட நியாத்தீர்ப்புக்கு உட்படுகிறதாய் இருக்கிறது. (எபிரெயர் 6:19).

இதற்கான பரிகாரம் வசனம் 36 ல் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது, இப்படிப்பட்டவர்கள்

தொடர்ந்து, ஜீவனுள்ள தேவனது வசனத்தால் போஷிக்கப்பட்டு, மற்றும் தேவனது வசனங்களைக் கைக்கொண்டு வாழ உற்சாகப்படுத்தப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். இயேசுவுக்குள் வாழும் விசுவாசிகளுக்கு எப்பொழுதும் இரு மாற்று காரியங்கள் இருக்கின்றன, தேவனது வசனத்தைக் கைக்கொண்டு ஆவிக்குரிய முன்னேற்றம் அடைதல், அல்லது கீழ்ப்படியாமையால் ஆவிக்குரிய சிட்சையில் அவர்கள் நடத்தப்படுவது. வசனம் 37-39.

32. முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் பிரகாசமாக்கப்பட்டிருந்த அந்த நாட்களில் உபத்திரவங்களாகிய மிகுந்த போராட்டத்தைச் சகித்தீர்களே.

நினைவாற்றல் என்பது, வெற்றியின் திறவுகோளாய் இருக்கிறது. நாம் வாழ்க்கையில், திறவுகோள் உண்மைகளையும் மற்றும் அனுபவங்களையும் திரும்ப நினைவுக்குக் கொண்டுவந்து வாழுவோமானால், நமது வாழ்வின் எல்லா பகுதிகளிலும் வெற்றியின் அஸ்திபாரத்தை உடையவர்களாய் வாழ முடியும். நினைவு கூறுவதற்கு, நிகழ்வுகளிலிருந்து கற்றுக்கொள்ளும் அனுபங்கள், சாத்தியக்கூறுகளை உருவாக்குகிறதாய் இருக்கிறது. விசுவாசிகளை இவ்வெழுத்தாளர் கடந்த கால அனுபவங்களை நினைகூற வற்புறுத்துகிறவராய் இருக்கிறார் "முந்தின நாட்களை நினைத்துக்கொள்ளுங்கள்" என்கிறார். இப்படிப்பட்ட சபைகள் இன்றை அளவில் அநேகமாய் இருக்கின்றன, அவைகள் பின்திரும்பிப்பார்த்து, பெரிதான எழுப்புதல் மற்றும் சுவிஷேச ஊழியங்கள் போன்றவற்றை நினைவுகூற வேண்டியவர்களாய் இருக்கின்றனர். சமீப நாட்களில், அவர்கள் மிகவும் குளிர்ந்துபோய் சாதரணமானவர்களாய் விளங்கி வருகின்றனர். ஆவிக்குரிய நிலையில் மரித்துப்போய், சடங்காச்சாரங்களை அனுசரித்து வருகிறவர்களாய் காணப்படுகின்றனர். எருசலேமில் இருந்த ஆதிகால சபையில், பெரிய அளவில் நெருக்கங்களை சந்தித்தவர்களாய் இருந்தனர். அவர்கள் கொடிய உபத்திரவங்களிலும், இழப்புகளிலும், ஆரோக்கியத்தை இழந்தவர்களாயும், சுதந்திரத்தை பரிகொடுத்தவர்களாயும், தங்களது நல்வாழ்க்கை, சொத்து சுதந்திரங்களை இழந்தவர்களாயும் இருந்தனர்.

33. நிந்தைகளாலும் உபத்திரவங்களாலும் நீங்கள் வேடிக்கையாக்கப்பட்டதுமல்லாமல், அப்படி நடத்தப்பட்டவர்களுக்குப் பங்காளிகளுமானீர்கள்.

சபையின் எல்லா அங்கத்தினரும் வித்தியாசமான வழிகளில் துன்பப்படுகிறவர்களாய் இருக்கின்றனர், சிலர் நேரடியான நெருக்கங்களில் அகப்பட்டு தவிக்கின்றனர், சரீர ரீதியான குற்றங்களினால் உண்டான தவிப்பு, சிறுமைப்படுத்தப்படுதல், நிந்திக்கப்படுதல், சிறைவாசம் செய்தல், இன்னும் சிலர் (அவர்களது குடும்பத்தில் அல்லது நண்பர்கள் வட்டாரத்தில்) அவர்கள் ஆத்துமத்தில் வாதிக்கப்படுகிறவர்களாய் இருத்தல், மற்றும் அவர்களுக்கு அன்பானவர்கள் மிகவும் மோசமான நிலையில் நடத்தப்படுதல், போன்ற துன்பங்களை அனுபவிக்கிறவர்களாய் இருக்கின்றனர். இன்றைய அளவில், சபைக்குட்பட்ட அங்கத்தினர் இது போன்ற துன்பங்களில் சிக்கி வாதிக்கப்படுகின்றவர்களாய் இருக்கின்றனர் என்பது சவாலாய் இருக்கிறது. சிலர் அவர்களது விசுவாசத்திற்காக நேரடி தாக்குதல்களை சந்திக்கிறவர்களாய் இருக்கின்றனர், மற்றவர்கள் அவர்களுடன் நின்று, அவர்களது துன்பங்களில் அவர்களுக்கு ஆதரவு செய்ய அழைக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர். நேரடியான துன்பங்களை இயேசுவுக்காக அனுபவிக்கும்போது, அவரை மகிமைப் படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம், சாத்தானின் வெறுப்பினால், அவனது தாக்குதலுக்கு உள்ளாகிறோம் என்பதை நாம் மனதில் கொள்கிறவர்களாய் இருத்தல் வேண்டும். நம்மை கர்த்தர் எங்கு நிலைநிற்க அழைத்துள்ளாரோ அங்கு நிற்கிறவர்களாய் இருத்தல் வேண்டும், அச்சூழலானது நேரடியான துன்பத்தை அனுபவிக்கிற இடமாய் இருக்கலாம், அல்லது துன்பப்படுபவருக்கு ஆதரவாய் நின்று அவர்களுக்கு ஆறுதல் செய்தலாய் இருக்கலாம். இப்படிப்பட்ட மக்கள், தெய்வீக சரித்திரத்தை உடையவர்களாய் இருக்கிறார்கள், கீழ்ப்படியாதவர்களாய் இருப்பார்களேயானால், இதனை எழுதின எழுத்தாளர் அப்படிப்படிப்பட்டவர்கள் திரும்பச் சென்று, அவர்களது இருதயத்தை திரும்ப பெலப்படுத்திக்கொள்ள வற்புறுத்துகிறவராய் இருக்கிறார்.

34. நான் கட்டப்பட்டிருக்கையில் என்னைக்குறித்துப் பரிதபித்ததுமன்றி, பரலோகத்தில் அதிக மேன்மையும் நிலையுள்ளதுமான சுதந்திரம் உங்களுக்கு உண்டென்று அறிந்து, உங்கள் ஆஸ்திகளையும் சந்தோஷமாய் கொள்ளையிடக் கொடுத்தீர்கள்.

வார்த்தையிலும், செயலிலும் இப்படிப்பட்ட ஜனங்கள் இந்நிருப எழுத்தாளருடன் நின்று அவரது துன்பத்தில் பங்கெடுக்கிறவர்களாய் இருந்தனர். இவர்கள் தங்கள் ஆஸ்திகளை மகிழ்ச்சியுடன் கொள்ளையிட ஒப்புக்கொடுக்கிறவர்களாய் இருந்தனர். இவ்வெழுத்தாளார் சிறவாசம் செய்தபோது, தங்கள் வீடு, ஆஸ்திகள்

போன்றவற்றை விற்று, அவரது நலன்கருதி அவற்றை செலவிடுகிறவர்களாய் இருந்தனர். இப்படிப்பட்ட பயபக்தியானது அவர்கள் கர்த்தர் மீதும், அவரது பரிசுத்தவான்கள் மீதும், கொண்டிருந்த அன்பை நிரூபணம் செய்கிறதாய் இருந்தது. நாமும் கூட நமது உடமைகள், நமது நேரம், நமது பணம் இவற்றின் மூலம் கர்த்தரது ஊழியர்களில் அன்பு கூறுகிறவர்களாய் இருப்பதை நிரூபணம் செய்வோமாக. அவர்கள் தங்கள் பூமிக்குரிய ஆஸ்திகளை கொடுப்பதில் மகிழ்ச்சியுள்ளவர்களாய் இருந்தனர், காரணம் அக்காலத்தில் அவர்கள் பூமிக்குரிய காரியங்களில் அக்கரை செலுத்துவதைக்காட்டிலும், பரலோக காரியங்களில் அதிக கண்ணோக்கமுள்ளவர்களாய் இருந்தனர். அவர்களது இருதயமானது நித்திய பிரதிபலன்கள் மீது கண்ணோக்கமாய் இருந்தது, அவர்கள் பூமிக்குரிய உடமைகள், வீடுகள், ஆஸ்திகள் யாவும் அநித்தியமானவைகள் என உணர்ந்திருந்தனர். பரலோக பிரதிபலன் என்பது, அவர்களில் "நிலைத்திருக்கிறதாய்" இருந்தது, அதை அவர்கள் ஒருபோதும் இழக்கவில்லை. இது ஒன்றே தங்களுக்கு இருந்த அனைத்தையும் கொடுக்க அவர்களை ஊக்கப்படுத்துவதாய் இருந்தது. இப்பூமியில் உள்ள அனைத்தும், துருப்பிடித்து அழுகிப்போகக்கூடியதாய் இருக்கிறது. இதினிமித்தம் நமது ஆஸ்திகளை பரலோகில் சேர்த்துவைக்கிறவர்களாய் இருக்கிறோம். மத்தேயு 6:19-21.

35. ஆகையால், மிகுந்த பலனுக்கேதுவான உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்.

"உங்கள் தைரியத்தை விட்டுவிடாதிருங்கள்" இவ்வெழுத்தாளர் தனது கட்டளையை subjunctive mood ல் கொடுத்து, தங்களுக்குண்டான அனைத்தையும் இழந்துவிட்டாலும், அவர்கள் கீழ்ப்படியாமையில் நிலத்திருக்கிறவர்களாய் இருந்தனர், என்பதை நமக்கு நினைவுபடுத்துகிறவராய் இருக்கிறார். இதை இவ்வெழுத்தாளர் எழுதும்போதுள்ள சொற்றொடர்கள் குறிப்பிடக்கதாய் இருக்கிறது. "உங்கள் தைரியத்தை விட்டு விடாதிருங்கள்" தேவனில் உங்களுக்கிருக்கும் உறுதியை தளரவிடாதிருங்கள்!. நம்மில் நாம் நம்பிக்கையுள்ளவர்களாய் இராது, கர்த்தரின் மீது நம்பிக்கையுடையவர்களாய் இருந்து, சார்ந்து வாழ வேண்டிய அவரது வசனமாகிய சாத்தியத்தில் நம்பிக்கை வைப்போமாக. தேவனது வசனம் ஜீவனுள்ளதும், எக்காலமும் நிலைத்திருக்கக்கூடியதாயும் இருக்கிறது, மற்றும் நமது வாழ்வில் நெருக்கங்கள், இழப்புகள் இருப்பினும், இது நமக்கு ஸ்திரத்தன்மைக்குரிய அஸ்திபாரத்தை அளிக்கிறதாய் இருக்கிறது.

இப்படிப்பட்ட ஜனங்கள் எருசலேம் வீழ்ச்சியுற்ற போது, தங்களது பூமிக்குரிய ஆஸ்திகள் அனைத்தையும் இழந்து தவிக்கிறவர்களாய் இருந்தனர். ஒவ்வொருவரும், எல்லாவற்றையும் இழந்து தவிக்கிறவர்களாயும், நிர்பந்தராயும் இருந்தனர்! இப்படிப்பட்ட பெரிதான இழப்பின் நடுவே இருந்தபோதிலும், அவர்கள் சமாதானத்துடன் காணப்பட்டனர். எருசலேமைவிட்டு ஓடிச்சென்றவர்கள், ஜனங்கள் நடுவே, தாங்கள் ஆராதிக்கும்படி இடங்களைத் தெரிவுசெய்து, ஒன்று கூடி அந்நிய தேசத்தில் கர்த்தரைத் தொழுதுகொள்ளுகிறவர்களாய் இருந்தனர். அவர்களது பிரதிபலன் எங்கு அவர்களுக்கு கிடைப்பதாய் இருக்கிறது? அவர்கள் அனைத்தையும் இழந்த நிலையில், அது பூமியில் அல்ல, பரலோகில் அவர்களுக்கு, அளிக்கப்படுவதாய் இருந்தது.

ஒரு முறைகூட இவ்வெழுத்தாளரின் கண்ணோட்டம், பூமியில் அவர்களது கீழ்ப்படிதலுக்குரிய பிரதிபலனானது, பரலோகில் அளிக்கப்படுவதைக் குறித்ததாய் இருந்தது. இப்படிப்பட்ட ஜனங்கள், பூமியில் இருக்கும், தங்களது ஆஸ்திகள், மற்றும் தங்களது உடமைகள் மீதுள்ள அவர்களது கவனத்தை விலக்கிக்கொள்ள வேண்டியவர்களாய் இருந்தனர். கடந்த நாட்களில் அவர்களுக்கிருந்த வீடு, மற்றும் பணம் யாவும் முற்றிலுமாய் அகற்றப்பட்டன, பரலோகில் அவர்களுக்காய் கட்டப்பட்டவை மட்டுமே, "பெரிதான பிரதிபலனாய்" அவர்களுக்கு கொடுக்கப்படுகிறதாய் இருந்தது. அவர்களுக்களிக்கப்பட்ட பணிமீது அவர்கள் மிகுந்த மன உறுதியுடன் செயல்படுகிறவர்களாய் இருந்தனர். எபிரெயர் 12:1,2. அல்லது அவர்கள் ஓசியாவின் நாட்களில் கீழ்ப்படியாமையினால் வாதிக்கப்பட்டவர்களைப் போன்று இருந்தனர். ஓசியா 4:1-6.

36. நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது.

அவர்களுக்கு பொறுமை வேண்டியதாய் இருந்தது, இது அவர்களிடம் இதற்கு முன்னர் இருந்ததாய் இருந்தது, ஆகையால், இப்பொழுது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால், அவர்களிடம் அதிகம் கேட்கப்படாது இருந்தது. இப்படிப்பட்ட உள்ளான பெலனை, கர்த்தர் கொடுக்கிறவராய் இருக்கிறபடியால், நாம் முன்னேறுகிறவர்களாய் இருப்போமாக. நாம் விசுவாசத்திலும், கீழ்ப்படிதலோடும் முன்னேறுகிறவர்களாய் இருத்தல் வேண்டும். கிரேக்க வார்த்தையான “hupomone”

என்பது இராணுவ சொல்லாய் இருக்கிறது, இதன் பொருள் நெருக்கப்படுகிற காலத்தில் பெலனடைவது, மற்றும் நெருக்கப்படுகிற காலங்களில் கடினப்படுவது. இதினிமித்தம், தீமைக்கு எதிர்த்து நின்று, ஜெபத்தில், மற்றும் வேதபாடத்தை முறையாய் கற்றுக்கொள்வதன் மூலம் கர்த்தரிடம் நெருங்க ஏதுவுண்டாகிறது. யாக்கோபு 4:6-10, சங்கீதம் 31:1 -8, சங்கீதம் 138:1 -3, நீதிமொழிகள் 8:33 - 36. தேவனது சித்தத்தை செய்து முடித்தபின்னர் ஆசீர்வாதம் வழிந்தோடும்,

37. வருகிறவர் இன்னுங் கொஞ்சகாலத்தில் வருவார், தாமதம் பண்ணார்.

ஏசாயா 26:20 இங்கு மேற்கோள் காட்டப்படுகிறது. இந்த மேற்கோளானது இஸ்ரவேலர், அசீரிய இராணுவத்தால் மிகவும் நெருக்கப்பட்ட காலத்தில், வட இராஜ்யம் (இஸ்ரவேல்) முழுவதுமாய் அவர்களால் சிறைபிடிக்கப்பட்டு, யூதேயாவில் பெரும்பாலானோர் அழிக்கப்பட்ட காலத்தில் ஏசாயாவால் உரைக்கப்பட்ட மேற்கோளாய் இருக்கிறது. இது "இவ்வுலக வாழ்வின் ஒழுக்க சீர்கேட்டை" பற்றியதாய் இருக்கிறது, மற்றும் இவ்வுலக வாழ்வானது "சிறிது காலம் மட்டுமே" இருந்து, பின்னர் முடிவடைகிறதாய் இருக்கிறது. தேவனது கால அட்டவணையில் முடிவு காலம் என்பது நம்முடையதல்லாததாய் இருக்கிறது, அவர் வருகிறவராய் இருக்கிறார், சரியான சமயத்தில் அவர் வந்து சேருவார். இவ்வெழுத்தாளர் எதிர்காலத்தில் கர்த்தரது வருகையின் நிச்சயத்தை நினைவுபடுத்துகிறவராய் இருக்கிறார்.

அவர்கள் எல்லா காரியங்களையும் காணவேண்டியவர்களாய் இருந்தனர், இவ்வுலகில் வாழும் வாழ்க்கைக்குரிய, நித்திய பிரதிபலன், மற்றும் முடிவுகாலம் போன்றவற்றைக் காணவேண்டியவர்களாய் இருந்தனர். இப்படிப்பட்ட யதார்த்தத்தின் மீது அவர்களது கண்களைப் பதிக்கும்போது, சடங்காச்சாரங்களால் அவர்கள் மதிமயங்கமாட்டார்கள். இதன் எழுத்தாளர் உண்மையான காரியங்களுக்கு, முறணாக "கொஞ்ச காலம்" என்பதனை இந்த யுகத்தில் கண்டுகொள்ள அழைப்பு கொடுக்கிறவராய் இருக்கிறார்.

1. சிலுவையின் அர்த்தம் குறித்த உண்மையை, தற்காலிக ஆலய வழிபாட்டுக்கு [சடங்காச்சாரம்] முறண்பாடாய் கூறுகிறார்.

2. நித்திய பிரதிபலன் குறித்த உண்மையை, தற்காலிகமாய் இவ்வுலகம் அளிக்கும்

சிற்றின்பங்களுக்கு முறண்பாடாய் கூறுகிறார்.

3. கர்த்தரின் இரண்டாம் வருகை குறித்த உண்மையை, எடுத்துக்கொள்ளப்படப்போகிற காலத்திற்குரிய "வெற்றிக்கு" முறண்பாடாய் கூறுகிறார்.

4. ஆவிக்குரிய வாழ்க்கை மற்றும் வல்லமை குறித்த உண்மையை, வெறுமை, அல்லது சடங்காச்சாரம், மற்றும் ஐசுவரியம், தேவனது நியாத்தீர்ப்பின் கீழான சமூக அந்தஸ்து போன்றவற்றிற்கு முறண்பாடாய் கூறுகிறார்.

38. விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன் மேல் என் ஆத்துமா பிரியமாய் இராது என்கிறார். (ஆபகூக் 2:3, 4.)

இங்கு மற்றொரு பழைய ஏற்பாட்டு மேற்கோள் கொடுக்கப்படுகிறது, ஆபகூக் 2:4, இது புதிய ஏற்பாட்டில், மூன்று இடங்களில் உபதேச காரியமாய் கொடுக்கப்பட்டுள்ளது, "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" ஒவ்வொரு இடத்திலும், புதிய ஏற்பாட்டு மேற்கோளானது வித்தியாசமான வார்த்தைகளைக்கொண்டு குறிப்பிடப்படுகிறதாய் இருக்கிறது. இது குறித்த வசனங்களை பார்ப்போம், ரோமர் 1:17 நீதிமான், எபிரெயர் 10:38, பிழைப்பான், கலாத்தியர் 3:11, விசுவாசத்தினால். இவ்வசனத்தின் எழுத்தாளர் இவ்வசனத்தில், தேவனது கட்டளையினின்று விழுந்து போவதால் உண்டாகும் அபாயத்தைக் குறித்து எச்சரிக்கிறவராய் இருக்கிறார்

கீழ்ப்படியாமையில் தேவன் பிரியப்படுகிறவர் அல்லர்; நாம் பின்வாங்குவோமெனில், நாம் நியாத்தீர்ப்புக்குக் கீழாக வருகிறவர்களாய் இருப்போம். கீழ்ப்படியாமையால் மரணம், கீழ்ப்படிதலினால் ஆசீர்வாதத்தில் முன்னேற்றம் உண்டாகிறதாய் இருக்கிறது. தேவன் கீழ்ப்படிதலில் பிரியப்படுகிறவராய் இருக்கிறார். நாம் தேவனுக்கு பிரியமானவர்களாய் வாழ முயலுவோமாக!

39. நாமோ கெட்டுப்போகப் பின்வாங்குகிறவர்களாயிராமல், ஆத்துமா ஈடேற விசுவாசிக்கிறவர்களாயிருக்கிறோம்."

இதன் எழுத்தாளர், எருசலேம் சபையினருடன் தன்னையும் உட்படுத்திகொள்கிறவராய் இருக்கிறார், மற்றும் அவர்களை யுத்த கால கட்டளையினிமித்தம் முன்னேற உற்சாகப்படுத்துகிறவராய் இருக்கிறார். இங்கு பின்வாங்குதல் குறித்து, மறுபடியும் அதன் விளைவுகளை எடுத்துரைக்கிறவராய் இருக்கிறார், பின்வாங்குதல் அழிவுக்கு வழிநடத்துகிறதாய் இருக்கிறது, எல்லாவற்றையும் இழப்பது, என்பது நிலைத்திருக்கும் மதிப்பீட்டை அளிக்கிறதாய் இருக்கிறது. அழிவு என்கிற பதமானது ஒன்றும் எஞ்சியிராத வண்ணம் முற்றிலும் அழிக்கப்படுதல், மற்றும் நித்திய தண்டனையாய் ஆக்கினைத்தீர்ப்புக்குட்படுதலை விவரிக்கிறதாய் இருக்கிறது.

இதன் எழுத்தாள் இருவகையான ஜனங்களைக் குறித்து கூறுகிறவராய் இருக்கிறார். முன்னேறிச் சென்று ஆசீர்வதத்தை அடைகிறவர்கள், இரண்டாவது, எதிராளிகளுடன் இணைந்து கொண்டு, பின்வாங்கிச் சென்று, அவர்களது வாழ்வில் இதற்கு முன்பெற்றிருந்த யாவற்றையும் இழந்து முற்றிலுமாக அழிக்கப்படுதல். உண்மையாக இரட்சிப்படைந்தோர், ஆசீர்வதிக்கப்படுவர், போலியான விசுவாசிகள், கீழ்ப்படிதலில் முன்னேறத் தவறி, தேவனது திட்டத்திலிருந்து வழுவிப்போகிறவர்களாய் இருக்கிறார்கள்.

இந்நிருபம் முழுவதிலும், ஒன்றுபட்ட கருத்தை எடுத்துரைக்கிறவராய் இருக்கிறார், இக்கருத்தானது கர்த்தரின் உவமைகளான விதைக்கிறவனைப் பற்றியதாய் இருக்கிறது, நல்ல நிலத்தில் விதைக்கப்பட்ட விதையானது வளர்ந்து கனிகொடுக்கக்கூடியதாயும் உண்மையானதாயும் ஆசீர்வதிக்கப்பட்டதாயும் இருக்கிறது, மற்ற விதைகள் சாபத்திற்குக் கீழாக இருக்கிறதாய் இருக்கிறது. கீழ்ப்படிதலின் மூலம் உருவாகும் முதிர்ச்சியானது, கர்த்தர் மதிப்பீட்டில், ஆவிக்குரிய உருவாக்குதலை அளிக்கிறதாய் இருக்கிறது, பின்வாங்கிச் செல்பவர்கள், பரலோக ஆசீர்வாதங்கள் யாவையும் இழக்கிறவர்களாய் இருக்கின்றனர். இதன் எழுத்தாளர் மிகவும் இவ்வசனத்தை வலியுறுத்திக் கூறுகிறவராய் இருக்கிறார், அவர்களது நித்திய முடிவை தெளிவுறக்கூறுகிறவராய் இருக்கிறார்.

நித்திய பாதுகாப்பை விசுவாசிக்கும் நாம், இதைக் கண்ணுற்று, பிரதிபலன்களை இழப்பதோடு மட்டுமல்லாது, அவர்களது உண்மை நிலையை இழந்துவிடுவதையும் இவ்வசனம் வெளிப்படுத்துகிறதாய் இருக்கிறது. தங்களை விசுவாசிகள் என்று கூறிக்கொள்பவர்கள் உண்மையிலேயே விசுவாசிகளாய் இருக்கிறார்களா? இவர்கள் விசுவாசிகளாக்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர்,

இவர்கள் கர்த்தர் மற்றும் அவரது ஜனங்களண்டையில் கூட்டிச் சேர்க்கப்பட்டவர்களாய் இருக்கின்றனர், ஆனால் இவர்கள் கர்த்தருக்கு தங்களை முற்றிலும் அற்பணிக்காதவர்களாய் விளங்கிவருகின்றனர். அவர்கள் இருதயத்தின் நிலையானது, முடிவாக கர்த்தரது கட்டளைகளைவிட்டு வழிவிலகிப்போகிறதாய் இருக்கிறது. மத்தேயு 7:13-23. இறுதி பலியிலிருந்து, பின்வாங்கிச் செல்வோர், கர்த்தருடன் கொண்ட அவர்களது உறவு போலியானது என நிருபணம் செய்து, அப்படிப்பட்டவர்கள் கர்த்தருடையவர்கள் அல்லர் என்பதை நிருபணம் செய்கிறதாய் இருக்கிறது.

கைக்கொள்ளக்கூடிய தலைமைத்துவம்:

1. தலைவர்கள் தங்களது பணி மற்றும் அதை நிறைவு செய்வதில் கவனமுள்ளவர்களாய் இருக்கின்றனர்: ஓட்டம் ஓடிமுடிக்கப்படுகிறதாய் இருக்கிறது, இது ஓட்டத்தின் துவக்கமாய் இராது, பந்தய வீரர் தங்கப்பதக்கத்தைத் தட்டிச்செல்வதாய் இருக்கிறது, இதைப்போன்றே, கர்த்தருக்கு நமது கீழ்ப்படிதலும், நித்திய பிரதிபலன்களை தட்டிச்செல்லுதலாய் இருத்தல் வேண்டும். நாம் சுதந்தரித்த அனைத்தையும் இழக்கும் அளவுக்கு கவலையீனமாய் வளராதிருக்கக்கடவோமாக. நமது கடந்தகால வெற்றியைக்குறித்து நாம் நினைவுகூறவேண்டியவர்களாய் இருக்கிறோம். அவை அனைத்தும் கர்த்தரைக் குறித்ததாய் இருக்கிறது, மற்றும் அவரது சித்தமாய் இருக்கிறது, அதைத்தொடர்ந்து கைக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். இது முன்னேறிச் செல்ல வேண்டிய காரியமாய் இருக்கிறது, ஆகையால் பின்வாங்காது இருப்போமாக, கர்த்தரைப் பின்பற்றுகிறவர்களாய் இருந்து தொடர்ந்து முன்னேறுகிறவர்களாய் இருப்போமாக.

2. தலைவர்கள் தங்களது சகத்தலைவர்களுடன் குழுவாய் இணைந்து செயல்பட வேண்டியவராய் இருக்கிறார்: வசனம் 33 ஐ நினைவு கூறுவோமாக, உலகம் முழுவதிலும் விசுவாசத்திற்காய் பாடுகளை அனுபவிக்கும், நமது சகோதரர்களுடன் இணைந்து நின்று செயல்படுதல் வேண்டும், அவற்றை ஜெபத்தின் மூலம், கொடுத்தல் மூலம், தைரியப்படுத்துகிற வார்த்தையின் மூலம் செய்கிறவர்களாய் இருத்தல் வேண்டும, மற்றும் சரீர ரீதியாக அவர்களுடன் நிற்றல் வேண்டும். நெருக்கப்படுகிற காலத்தில், விசுவாசத்திற்காக போராடும் அவர்களுக்கு, எந்த ஒரு காரியமானாலும் மனமுவந்து செய்தல் வேண்டும். கிறிஸ்தவர்கள் தேவையுடன் இருக்கும்போது, நாம் எப்பொழுதாவது நமது உடமைகளை "கொள்ளையிட" ஒப்புக்கொடுத்து இருக்கிறோமா? நாம் நமது வீடு

ஆஸ்திகளைக்காட்டிலும், தேவனது ஊழியம் மற்றும் ஊழியர்கள் முக்கியம் வாய்ந்தவர்கள் என எப்பொழுதாவது உணர்ந்ததுண்டோ? இதுவே ஆதிகால சபையயின் தரதாரமாய் நமக்கு கற்றுத்தருவணவாய் இருக்கிறது. நமது உடமைகளைக் குறித்து நாம் வெட்கத்துடன் காணப்படாமல், கர்த்தருக்காக அவரது ஊழியத்திற்காக யாவற்றையும் அற்பணிக்க நிச்சயத்துடன் இருப்போமாக!

வசனம் 35 என்ன அர்த்தத்தைத் தருகிறது என்பது குறித்து சிந்திப்போமாக. பரலோக வங்கிக்கணக்கில், நித்தியத்திற்காய் சேர்க்கப்பட்ட தொகையிலிருந்து, உங்கள் கடன் தொகையானது எல்லா நேரங்களிலும் கூடிக்கொண்டே செல்கிறதாய் இருக்கிறது. கடன் தொகையானது பெருகிக்கொண்டே செல்லும் காலத்து, "அதைப் பிரதிபலனால் சரிசெய்ய" கர்த்தருக்கு கீழ்ப்படிதல் என்பது அவசியமாய் இருக்கிறது. பரலோகில் கிருபையின் வங்கியில் நமது சேமிப்புத் தொகையானது பெருகுகிறதாய் இருத்தல் வேண்டும், அங்கு நமது சேமிப்புத் தொகையானது பெருக வேண்டுமானால், சிறிதான அளவில் கர்த்தருக்குக் கீழ்ப்படிதலின் செயல்பாடு நமது வாழ்வில் விளங்குதல் வேண்டும். அவரது வாஞ்சையெல்லாம் நம்மை ஆசீர்வதிப்பது ஆகும், இவ்வாசீர்வாதம் நமது கீழ்ப்படிதலைச் சார்ந்ததாய் இருக்கிறது. பரலோக கிருபையின் வங்கிக்கணக்கில் விசுவாசியாகிய உனது சேமிப்புத் தொகையானது எந்த அளவுக்கு இருக்கிறது? இன்றைய அளவில் கர்த்தருக்கு கீழ்ப்படிதலில் எந்த அளவுக்கு முன்னேறியுள்ளாய்?

3. தலைவர்கள் நெருக்கங்களை சகிக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்: நமது பாதையானது "கடிமானதாய்" இருக்குமேயானால், தோற்றத்தில் "கடினமாய்" காணப்படும் மக்களே அதைக்கடந்து செல்கிறவர்களாய் இருக்கின்றனர்! நாம் நெருக்கங்களை சகிக்க அழைக்கப்பட்டிருக்கிறோம், ஆசீர்வாதம் வெகுதொலைவில் இருக்கும்போது, கடினமான காலங்களில், கடினமானவர்களாக மாற ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். நாம் இலகுவான விசுவாசிகளாய் இருக்க விரும்புகிறோமா அல்லது கடினமான சூழல்களைச் சந்திக்க ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கிறோமா? எபிரெய நிருபத்தை எழுதிய எழுத்தாளர், விசுவாச வாழ்வில் நாம் பின்வாங்குகிறவர்களாய் இருப்போமானால், நமது இரட்சிப்பின் அனுபவத்திலிருந்து சந்தேகத்தை புறம்பாக்க எச்சரிக்கிறவராய் இருக்கிறார். நாம் "நீதிமான்களாய்" விளங்க வேண்டுமானால், நாம் "விசுவாசத்தினால்" "வாழ்கிறவர்களாய்" இருத்தல் வேண்டும். விசுவாசத்தினால் வாழாதவர்கள் மீது, தேவன் வாஞ்சையுள்ளவராய் இல்லை. கர்த்தரது வாஞ்சையைத் தேடுகிறவர்களாய் இருப்போமானால், நாம் கீழ்ப்படிதல் மற்றும்

விசுவாச பாதையில் நடக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

வசனம் 39 ல், "ஆத்துமா ஈடேற" என்ற சொற்றொடர் ஆர்வத்தை தூண்டுகிறதாய் இருக்கிறது, இவ்வெழுத்தாளர் விசுவாசத்தின்படி இரட்சிப்பின் மீட்பானது இம்மக்களின் பங்காய் இருக்கிறது, என்பதைச் சுட்டிக்காட்டுகிறவராய் இருக்கிறார். மற்றும் இப்படிப்பட்டவர்கள் ஓட்டப்பந்தயத்தை முடிக்கவில்லையானால், அவர்களுக்குண்டான எல்லாவற்றையும் இழந்து போகிறவர்களாய் இருக்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்டுகிறவராய் இருக்கிறார். இது அவர்களது இரட்சிப்பு மற்றும் அவர்களது நித்திய பிரதிபலன்களை இழத்தல் இவைகளை உள்ளடக்கியுள்ளதா? எழுத்தாளர் தெளிவில்லாதவராய் காணப்படுகிறார், இது இப்படிப்பட்ட ஜனங்கள் மீது நெருக்கத்தைக் கூட்டிச்சேர்ப்பதாய் இருக்கிறது. விதைக்கப்பட்ட விதையானது வளர்ந்து கனிகொடுக்கவில்லையானால், அது மதிப்பற்றதும், அழிவுக்குட்படுகிறதுமாய் இருக்கிறது.

நமது விவாதத்தில் "நித்திய பாதுகாப்பு" குறித்து சாதாரணமாய் விவாதித்த போதும், இந்நிருப எழுத்தாளர் இப்படிப்பட்ட ஜனங்கள், பாதுகாப்பற்றவர்களை குறித்து அதிகம் கவலை கொள்ளுகிறவராய் இருக்கிறார், இது போன்ற காரியம் குறித்து நாம் அதிக கவலையுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும், நமக்கு நியமிக்கப்பட்ட ஓட்டத்தை ஓடி முடிப்பதில் நிச்சயம் உள்ளவர்களாய் இருத்தல் அவசியமாய் இருக்கிறது. பழமை வாய்ந்த கால்வினிஸக்காரர்கள் நித்திய பாதுகாப்பு குறித்து பேசும்போது, பரிசுத்தவான்களின் பொறுமை குறித்து பேசுகிறவர்களாய் இருக்கின்றனர், உண்மையாய் இரட்சிக்கப்பட்டோர் விசுவாசத்தைக் காத்துக் கொண்டு, தங்களது ஓட்டத்தை ஓடிமுடிக்கிறவர்களாய் இருப்பர், அவ்வாறு ஓடி முடிக்காதவர்கள் உண்மையாய் இரட்சிப்படையாதோராய் இருக்கின்றனர்.

இப்பகுதியானது கடினமானப் பகுதியாய் இருக்கிறது, இது எல்லா விசுவாசிகளுக்கும் கலக்கத்தையும் சவாலாகவும் இருக்கிற பிரச்சனையை குறித்தும் கர்த்தருக்கு உண்மையாய் இருப்பது குறித்தும் பேசுகிறதாய் இருக்கிறது. நித்திய பாதுகாப்பு குறித்த உபதேசத்தைக் குறித்த வேதவசனங்கள், இங்கு சுட்டிக்காட்டபடுகிறதாய் இருக்கிறது, இது விசுவாசிகளுக்கு ஆறுதலை அளிக்கிற விஷயமாய் இருந்த போதிலும், இப்பகுதியில் இவ்வெழுத்தாளர் குறிப்பிடுகிற உபதேசத்தை நாம் தவறாய் வலியுறுத்தாதபடி கவனமாய் இருத்தல் வேண்டும். நமது இரடசிப்பு குறித்து மிகவும் ஆறுதலடைகிறவர்களாய் இருக்கலாம், அதேசமயம் இரட்சிப்பைச் சுட்டிக்காட்டும்படி நாம் வாழத்தவறுவோமெனில், இது

பலனளிக்காததாய் இருக்கிறது. ஆரம்பகால யூத விசுவாசிகளுக்கு இப்படிப்பட்ட காரியங்கள் குறித்து சிந்திப்பதற்கு அப்பாற்பட்டதாய் இருந்தது, மற்றும் அவர்கள் அறிக்கை செய்யும் விசுவாசமானது உண்மையற்றதாய் இருந்தது.

4. தலைவர்கள் முன்னேறுகிறவர்களாய் இருத்தல் வேண்டும்: விசுவாசத்தில் முன்னேறத் தவறும்போது, அது தவறான விசுவாசத்தையும், உருவாக்கப்பட்ட விசுவாசத்தைக் கைக்கொள்வதற்கு ஆதாரமாய் விளங்குகிறது. விசுவாசமானது நமது வாழ்வில் கிரியை செய்யாத நிலையில், அது தவறானதாய் இருப்பதை நிருபணம் செய்கிறதாய் இருக்கிறது, இயேசுவில் அறிக்கை செய்யப்படும் விசுவாசமானது, மாய்மாலமுள்ளதாயும், கிரியையில்லாத செத்த விசுவாசமாயும் விளங்குகிறது, இது பரிசுத்தமானதாயும், கீழ்ப்படிதலுடனும் செயல்படுதல் வேண்டும். இந்நிருப எழுத்தாளரின் கோரிக்கை, இப்படிப்பட்ட மக்களது வாழ்வில், கீழ்ப்படிதலின் கனியை எதிர்பார்த்தலாய் இருக்கிறது, அவ்வாறு இல்லையேல் அவர்கள் அழிவுக்குட்படுகிறவர்களாய் இருக்கின்றனர், இது தற்காலிக மற்றும் நித்தியமான அழிவைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது. அவர்கள் கீழ்ப்படிய மறுப்பார்களெனில், அவர்கள் அபாயத்திற்கு இருப்பதை தெளிவுபடுத்துகிறவராய் இருக்கிறார், இதை அவர் சுட்டிக்காட்டும் அவர்கள் காலத்தில் எருசலேமின் அழிவைக் கண்ணோக்க, குறிப்பிடுகிறவராய் இருக்கிறார். நமக்கு அளிக்கப்படும் எச்சரிப்பைக் குறித்து நாம் தெளிவில்லாதவர்களாய் இருத்தல் வேண்டும், காரணம் இதன் எளுத்தாளர் இது குறித்து மிகவும் தெள்ளத்தெளிவாய் எடுத்துரைக்கிறவராய் இருக்கிறார்.

5. தலைவர்கள் தொடர்ந்து கீழ்ப்படிகிறவர்களாய் இருத்தல் வேண்டும்: கர்த்தர் கீழ்ப்படிதலை எதிர்பார்க்கிறவராய் இருக்கிறார், கீழ்ப்படியாமைக்கு பெரிதான இழப்பு நேரிடுகிறதாய் இருக்கிறது, அதைப்போன்றே எந்த ஒருகாரியத்திலும் பின்வாங்குதலுக்கும் பெரிதான அழிவும், இழப்பும் நேரிடுகிறதாய் இருக்கிறது. இதன் எழுத்தாளர் தேவனது கொள்கையினை அளிக்கிறவராய் இருக்கிறார், இவ்வசனங்களை கருத்தாய் கற்றறிதல் வேண்டும், மற்றும் இவைகளுக்கு விரோதமாய் நாம் பிரசங்கிக்கும்போது அதைச் சோதித்தறிதல் வேண்டும். ஒரு நபர் தான் கர்த்தரது மந்தையைச் சார்ந்தவர் எனக்கூறிக்கொண்டு, கீழ்ப்படியாது வாழ்க்கை செய்வார் எனில், இப்பகுதி மூலமாய் அவரை எச்சரித்து பிரதிபலன்களை இழந்து போவது குறித்து, அவருக்கு எடுத்துரைக்க கடமைப் பட்டுள்ளோம். மற்றும் அவர்களது நித்திய முடிவைக் குறித்தும், எடுத்துக் கூறவேண்டியவர்களாய் இருக்கிறோம், கர்த்தரின் மக்கள் பழக்கப்படுத்திக்கொண்ட

பாவத்தில் வாழுதல் தவறு என்பதையும் தெளிவுற கூறுதல் வேண்டும், அவ்வாறு அவர்கள் தொடர்ந்து பாவத்தில் நிலை நிற்பார்கள் எனில் அவர்கள் கர்த்தருடையவர்களாய் இருக்கமாட்டார்கள், அவர்கள் நரக அக்கினிக்கு இரையாகும் அபாயத்தில் இருக்கிறார்கள்!

வெறும் உதடுகளால் மட்டும் அறிக்கை செய்து விட்டு, சரீர அவயவங்களால் கீழ்ப்படியாது இருப்போமெனில், அது மாய்மாலமாய் இருக்கிறது, இது உண்மையான விசுவாசமாகாது! ஒரு மனிதன் ஓட்டப்பந்தயத்தை ஓடி முடித்து, இறுதிக்கோட்டைத் தொட்டு, தனது எஜமானரால், "நல்லது உண்மையும் உத்தமும் ஊழியனே" என்றழைப்பதை தனது இருதயத்தில் உணருதல் வேண்டும். அவ்வாறு செய்யாத பட்சத்தில் அப்படிப்பட்டவர் ஒரு பந்தய வீரனைப் போன்று நடிப்பவனாய் இருக்கிறான்.

[ஊ] எபிரெயர் 11:32-40 - தெய்வீகமாய் வழிநடத்தி உருவாக்குபவர்களை நோக்கிப்பார்த்து, அவர்களது முன்மாதிரிகளை பின்பற்றுதல்:

32. பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாலமோன் என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையும் குறித்து, நான் விவரஞ்சொல்லவேண்டுமானால் காலம் போதாது. 33. விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள். 34. அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலங்கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள். 35. ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப்பெற்றார்கள். வேறு சிலர், வேறு சிலர் மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைப் பெற சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள். 36. வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும், கட்டுகளையும், காவலையும் அனுபவித்தார்கள். 37. கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைப் பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத்தோல்களையும், வெள்ளாட்டுத்தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து குறைவையும், உபத்திரவத்தையும், துன்பத்தையும் அனுபவித்தார்கள். 38. உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை, அவர்கள் வனாந்திரங்களிலேயும்,

பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். 39. இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமறபோனார்கள். 40 அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகதபடிக்கு விஷேசித்த நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.

பிரதிபலிப்பு:

32. பின்னும் நான் என்ன சொல்லுவேன்? கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா, தாவீது, சாலமோன் என்பவர்களையும், தீர்க்கதரிசிகளையும் குறித்து, நான் விவரஞ்சொல்லவேண்டுமானால் காலம் போதாது.

இந்நிருபத்தின் எழுத்தாளர், விசுவாசித்துக் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து தாங்கள் செயல்பட்ட குழுவினரான ஒரு சில மனிதர்களை இங்கு நமக்கு காட்டுகிரறவராய் இருக்கிறார். அவர் கூறுமிடத்து ஒரு பெரிய பட்டியலை அளித்து, அவர்களைக் குறித்து கூறக்கூடும், ஆனால் அவ்வாறு கூறுவாரெனில், இடமும், காலமும் போதாது எனத் துவங்குகிறவராய் இருக்கிறார். இங்கு அவர்கள் குறிப்பிடும் மனிதர்களின் குழு ஆர்வத்தைத் தூண்டுகிறவர்களாய் காணப்படுகின்றனர். இங்கு பெரிய இராஜாவாகிய தாவீதைக் காண்கிறோம், தீர்க்கதரிசிகளை அனைவரையும் சுட்டிக்காட்டி, அவர்களில் முதலாவது வரிசையில் சாமுவேல் தீர்க்கதரிசியைச் சுட்டிக்காட்டுவதைக் காண்கிறோம்.

தாவீது தவறிப்போனவராய் இருந்தும், அவர் ஒரு முறைகூட நினைவுகூறப்பட்டு, மறுபடியும் எழுந்து நிமிர்ந்து நின்று, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து சேவை செய்ததைக் காண்கிறோம். சாமுவேல் தீர்க்கதரிசி, உறுதியானவராய் விளங்கினார், நிலையானவராயும், விசுவாசத்தினால் நிறைந்தவராய், தேவ மனிதராய் விளங்கி நியாதிபதிகளையும் இராஜாக்களையும் இணக்கிறவராய் திகழ்ந்தார். தீர்க்கதரிசிகள் குழுவாக, ஆண்களும், பெண்களுமாய் நீதியினிமித்தம் துன்பங்களை அனுபவித்தவர்களாய் விளங்கினர், கீழ்க்காணும் வசனங்களில் அவர்களது சரிதையானது கூறப்படுகிறதாய் இருக்கிறது. தீர்க்கதரிசிகளைக்குறித்து விவாதிக்கும் முன்னர் நியாதிபதிகளின் குழுவில் தலைசிறந்த சிறந்த நான்கு நபர்களை மட்டும் தெரிவு செய்து நமக்களிக்கிறவராய் இருக்கிறார், அவர்களாவன கிதியோன், பாராக், சிம்சோன், யெப்தா.

இப்படிப்பட்ட மனிதர்கள் அதைரியத்தில் இருப்போருக்கு, தைரியம் அளிக்கக்கூடியவர்களாய் இருக்கின்றனர், அவர்களில் ஒருவரும் பூரணமானவர்கள்

கூறுவதற்கில்லை, இருப்பினும் அவர்கள் விசுவாசத்தைக் கையாண்டனர், அவர்களது தோல்வியிலும் மறுபடியும் எழுந்து நின்று சேவை செய்பவர்களாய் விளங்கினர். இவர்களில் ஒவ்வொருவரும், கர்த்தர் தேடுகிற கீழ்ப்படிதலை, சாதாரண விசுவாசத்தைக் கொண்டு செயல்படுத்துகிறவர்களாய் காணப்பட்டனர். ஒவ்வொரு மனிதரும், பூரணமாகக் கீழ்ப்படிந்து, பின்பற்றுவதில் தவறிழைத்தனர் மற்றும் தோல்வியுற்றனர், இறுப்பினும் ஒவ்வொருவரும் வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்திற்கு, இறுதியாய் கீழ்ப்படிந்தவர்களாகி கனப்படுத்தப்பட்டனர்

கிதியோன் பயப்படுகிற ஒரு மனிதராய் காணப்பட்டார், அவர் செயல்படுமுன்னர் அ!நேக நிலைகளில் அவர் தைரியப்படுத்தப்பட்டார். நியாதிபதிகள் 6:11-8:35. அவர் கர்த்தரைச் சார்ந்து கொண்டவராய் விளங்கினார், அவர் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து 50,000 எதிரிகளை 300 பேரைக் கொண்டு முறியடித்தார்! பாராக்கும் கிதியோனைப்போன்றே, பயமுள்ள மனிதராய் விளங்கினார், செயல்படும் மனிதராக இவரும் தைரியப்படுத்தப்பட்டார், இவர் தேவனில், தனது விசுவாசத்தை வெளிப்படுத்தி, இராணுவத்தை யுத்தம் செய்ய அழைக்கிறவராய் இருந்தார். இவர் தெபோராளுடன் செயல்படுகிறவராய் இருந்தார், அந்த நாளில் இவருக்குக்கிடைத்த வெற்றியானது தெபோராளுக்கும், யாகேலுக்கும் மனுஷீக மகிமையைக் கொண்டுவருகிறதாய் இருந்தது, பாராக் மனநிறைவுடன் கர்த்தை சேவிக்கிறவராய் விளங்கினார், அவருக்குக் கிடைத்த வெற்றி குறித்து கவலை கொள்ளாது காணப்பட்டார். அவரது கண்ணோட்டமானது, தன்னில்தானே இராது, அவரால் கிடைத்த வேற்றியின் மீதாக இருந்தது. நியாதிபதிகள் 4-5.

சிம்சோன், நியாதிபதிகள் 13 - 16, இவர் குறிப்பிடப்பட்டுள்ளவர்களில் ஹீரோ என்று கூறுவதற்கில்லை. இவரது பெலவீனம் பெண் மற்றும் விருந்து இவற்றில் விளங்கியது, இஸ்ரவேலரை விடுவிப்பதில் இவரது கடமையானது நிறைவு பெறுகிறதாய் இருந்தது. இறுதியில் இவர் மரணத்தை தழுகிறவராய் இருந்தார், இவரது மரணத்தின் போது, இவர் கீழ்ப்படிகிறவராயும், தன்னைத்தானே மீட்டுக்கொள்கிறவராயும் விளங்கினார். யெப்தா, நியாதிபதிகள் 11:1 - 12:7, இவர் தேவனுக்குச் செய்த தனது துரிதமான பொருத்தனையினால், நினைவு கூறப்படுகிறார். இவர் இஸ்ரவேலை விடுவிக்கிறவராய் விளங்கினார். இவர் தனது சாதாரன விசுவாசத்தால் அம்.மோனியரை முறியடித்தவராய் விளங்குகிறார். இவரது பொருத்தனையானது தனது விவாகமாகாத தனது குமாரத்தியை நரபலிகொடுப்பதாய் மாறியது, இவர்களில் ஒவ்வொருவரும் கர்த்தரது, கட்டளையின்படியே செயல்பட்டவர்களாய் காணப்பட்டனர், இவர்களது பெலவீனத்தில் இவர்கள் பெலம்கொண்டவர்களாய் விளங்கினர்.

விசுவாசத்தின் மிகவும் முக்கியமான அம்சமானது, உறுதியான நிலையில் கடைபிட்டிக்கப்பட்டது இங்கு விவரிக்கப்படுகிறது, இதைத் தொடர்ந்த இரு வசனங்களிலும் 33-34 ல் "செயல்படும் விசுவாசத்தின்" விளைவுகள் கூறப்படுகின்றன. இங்கு பெரிதான அளவில் பெற்ற வெற்றியானது, செயல்படும் விசுவாசத்தின் விளைவால் நிகழ்ந்தது குறித்து பட்டியலிடப்படுகிறது. மற்றும் பரிசுத்த ஆவியானவரின் பட்டயத்தால் அவர்களை மேற்கொண்டனர் என்பதை விளங்கப்பண்ணுகிறதாய் இருந்தது, மற்றும் அவர்கள் தேவனது வல்லமையை மனிதரின் விடுதலைச் செயல் மூலம் கிரியை செய்வதைக் கண்டனர்.

33. விசுவாசத்தினாலே அவர்கள் ராஜ்யங்களை ஜெயித்தார்கள், நீதியை நடப்பித்தார்கள், வாக்குத்தத்தங்களைப் பெற்றார்கள், சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்.

இவ்வசனத்தில் நாடக வடிவிலான வினைச்சொற்கள் இடம்பெறுகின்றன, நமது அனுதின வாழ்வில் கீழ்ப்படிதல் மற்றும் விசுவாசத்தினால் தேவன் செய்வதை செய்ய இயலும் என்பதனை இவ்வசனங்கள் நமக்கு தெளிவுபடுத்துகிறதாய் இருக்கின்றன.

1. இராஜ்யங்களை ஜெயித்தார்கள். இதில் உள்ள வினைச்சொல், katagonizomai - இப்பதமானது மற்றொரு வலிமை மிக்க வினைச்சொல்லாய் பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன் பொருள் எதிராளிகளை முழுவதுமாய் கீழடக்கி, எவ்வகையிலும் மறுபடியும் அவர்கள் எதிர்க்காத வண்ணம் செய்தல் என்ற பொருளினை உடையதாய் விளங்குகிறது. இப்படிப்பட்ட வெற்றியின் இரகசியம், தேவனது வார்த்தையைக் கைக்கொள்வதாலும், அதனை விசுவாசிப்பதாலும் கிடைத்ததாய் இருக்கிறது, இதினிமித்தம் விசுவாசியான போர்வீரன், நிலையான ஆவியைப் பெற்று, உறுதியான மனதுடன் அவர்களது வாழ்வில் பிரமிக்கத்தக்க காரியங்களை காண பேருதவி செய்கிறதாய் இருக்கிறது. இராணுவத்தில் வெற்றி பெறுவது என்பது, வேதாகம உபதேசங்களை அறிவதிலிருந்து அல்ல, விசுவாசித்து அவைகளைக் கைக்கொள்ளுவதினால் கிடைக்கிறதாய் இருக்கிறது.

2. நீதியை நடப்பித்தார்கள். இங்கு கூறப்படும் கிரேக்க வினைச்சொல்லானது, ergazomai இதன் பொருள் அனுதின வாழ்வில், தேவனது வெளிப்பாட்டின் சத்தியங்களை செயல்படுத்துகிறவர்களாய் இருந்தனர், மற்றும் இது அவர்களது நிலையான நீதிக்குரிய வார்த்தையாலும் செய்கைகளாலும் சாத்தியமாய்

விளங்கியது. அவர்கள் சிந்தனை மற்றும் செயல்பாடுகள் அனைத்தும் பரிசுத்த ஆவியானவரின் நடத்துதல் மூலம், அனுதின வாழ்வில் தேவனது வார்த்தையை கைக்கொள்வதன் மூலம் சாத்தியமாயிற்று.

3. வாக்குத்தங்களைப் பெற்றார்கள்: இதில் உள்ள வினைச் சொல் epitugchano இதன் பொருள், ஒரு தனிப்பட்ட நபரின் முழுமையான அற்பணிப்பின் விளவால், பெற்றுக்கொள்வதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இவர்கள் தேவனது பணிக்கென தங்களை முழுவதுமாய் அற்பணித்துக் கொண்டவர்களாய் விளங்கினர், இதினிமித்தம் கீழ்ப்படிவர்களுக்குரிய வாக்குத்தத்தங்களாக கூறப்பட்டுள்ள ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்கிறவர்களாக விளங்கினர். ஜெயம் பெற்றவர்களுக்குரிய கிரீடமானது, முழுமுயற்சியை பந்தய சாலையில் காட்டாதவர்களுக்கு அல்லது யுத்தக்களத்தில் முழுமையான முயற்சியைக் காட்டாதவர்களுக்கு அளிக்கப்பட மாட்டாது. அவர்கள் அவர்களது முழுமுயற்சியை காட்டும் பொழுது மட்டுமே அவைகள் அவர்களுக்குக் கிடைக்கிறதாய் இருக்கிறது, இதைப்போன்றே நாமும் தேவனது பணியில் முழுமையான முயற்சியைக் காட்ட வேண்டியவர்களாய் இருக்கிறோம். கிருபையின் தேவன் இவைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய அனைத்தையும் நமக்கருளுகிறவராய் இருக்கிறார். இவைகளைப் பெற்றுக்கொள்ள விசுவாசத்தைக் கைக்கொண்டு நாம் செயல்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம். இக்கருத்தை யாக்கோபு அநேக ஆண்டுகளுக்கு முன்னதாகவே சபைக்கு ஏற்படுத்தியுள்ளார். கிரியை, விசுவாசம் இவைகளுக்கிடையே வித்தியாசம் இல்லை, உண்மையான விசுவாசம் கிரியை செய்கிறதாய் இருக்கிறது.

4. சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்: அவர்கள் சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள், தாவீதைப் போல சிங்கத்தை கொன்றதன் மூலம், 1 சாமுவேல் 17:34 -37, சிம்சோனைப் போல, நியாதிபதிகள் 14:5, 6, அல்லது அவர்கள் ஜெபத்தினால் அவைகளைச் செய்தனர், தானியேல் செய்தது போல சிங்கங்களின் வாய்களைக் கண்டு, அதனை அடைத்தார்கள். தானியேல் 6:21,22.

34. அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள், பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள், பலவீனத்தில் பலங்கொண்டார்கள், யுத்தத்தில் வல்லவர்களானார்கள், அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்.

விசுவாசத்தின் மூலம் அவர்களடைந்த வெற்றியானது தொடர்கிறது:

5. அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள்: இவ்விடத்தில் கூறப்படுகிற கருத்தானது தானியேல் புஸ்தகத்தில் கூறப்பட்டு மூன்று எபிரெய வாலிபர்களைக் குறித்த கண்ணோட்டமானதாய் இருக்கிறது. தானியேல் 3:1-30, இம்மூன்று வாலிபர்களும், மரணத்தைத் தெரிவு செய்துகொண்டு, புறஜாதிய தேவர்களை ஆராதிக்க மறுத்தவர்களாய், கொடிய அக்கினியின் ஊடாக தூக்கியெறியப்பெற்று, அக்கினியின் ஊடாக கர்த்தருடன் நடந்தார்கள். அவர்கள் இம்மூன்று வாலிபரையும் பயமுறுத்தினர் மற்றும் அவதூறான காரியங்களை இவர்களுக்கெதிராய் கூறினர், இருப்பினும் இவர்கள் அவற்றைப் பொருட்படுத்தாது, தங்களைக் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து, தங்களை அவரது கரத்தில் அற்பணித்தனர். இது விசுவாசத்தின் கிரியையாய் இருக்கிறது, நெருக்கங்களின் நடுவே இவர்கள் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்து விசுவாசிக்கிறவர்களானார்கள். கொலோசெயர் 3:16, 17.

6. பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள்: இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள கிரேக்கச் சொல்லானது pheugo ஆகும். இதன் பொருள், தப்பிக்கொள்வதற்கான சமயம் அவர்களுக்குண்டாயிருந்தது. மூன்று வாலிபர்களும் அக்கினி ஜுவாலைக்குட்பட்டவர்களாய் இருந்தபோதிலும், அதிலிருந்து தப்பிக்கொள்பவராய் இருந்தனர், இவர்கள் உறுதியாய் நின்றனர், அவர்களுக்குரிய தண்டனையை ஏற்றுக்கொண்டனர். அவர்கள் அக்கினியில் தூக்கியெறியப்பட்ட சமயத்தில் கர்த்தர் அவர்கள் தப்பிக்கொள்ளும் வாசலைத் திறந்தார். இதைப்போன்றே கர்த்தர் சரியான சமயத்தில் நமக்கும் பாதுகாப்பளிக்கிறவராய் இருக்கிறார். கர்த்தர் தமது ஊழியரிடமிருந்து பகுத்தறிதலை எதிர்பார்க்கிறவராய் இருக்கிறார், நாம் எப்பொழுது நிற்க வேண்டும், எப்பொழுது யுத்தம் செய்தல் வேண்டும், எப்பொழுது ஓடுதல் வேண்டும் எப்பொழுது அமைதியாய் தண்டனையை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும் என அறிந்திருத்தல் வேண்டும், இது போன்ற ஒவ்வொரு செயல்பாடும் தேவனில் நமக்கிருக்கும் விசுவாசத்தினால் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும். 1 இராஜாக்கள் 19:2ff, 2 இராஜாக்கள் 6:31ff.

7. பலவீனத்தில் பலங்கொண்டார்கள்: உதவியற்ற நேரத்தில், வியாதிபட்ட நேரத்தில் (astheneia), நாம் பெலத்தாலும், வல்லமையாலும் நிரப்பப்படுகிறவர்களாயிருக்கிறோம் (dunamoomai). The passive voice of the verb நமக்கு நினைப்பூட்டுவது என்னவெனில், கர்த்தரின் பெலத்தை நமக்குள் வாசம் பண்ணுகிற பரிசுத்த ஆவியானவர் பெலத்தின் மூலம் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம்.

8. யுத்தத்தில் வல்லவர்களானார்கள்: இவர்களில் அநேக மனிதர்கள் வலிமைமிக்கவர்களோ, தைரியசாலிகளோ அல்ல, இவர்கள் தேவன்மீது வைத்த நம்பிக்கையினாலும், தாங்கள் எவ்வித நிபந்தனையுமின்றி தேவனுக்குக் கீழ்ப்படிந்தபடியாலும், இவர்கள் வலிமை மிக்கவர்களும் மற்றும் ஹீரோக்களுமானார்கள்.

9. அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்: அவர்கள் கீழ்ப்படிதலின் விளைவு, அந்நியருடைய சேனைகள் அனைத்தையும் முறியடித்து துரத்துகிறவர்களானார்கள். கர்த்தர் இஸ்ரவேலரை, மறுபடியும், மறுபடியும் சாதாரண மனிதரின் கீழ்ப்படிதலினாலும், அவர்கள் கர்த்தரை முழுமையாய் நம்பினபடியாலும், அவர் சொன்னபடியே எல்லாவற்றையும் செய்தபடியாலும் விடுவிக்கிறவராய் இருந்தார்.

35. ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப்பெற்றார்கள். வேறு சிலர், மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைப் பெற சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்.

இவ்வசனம் அதே போன்ற விசுவாசத்தை குறித்த ஆரம்பத்தை உடையதாய் இருக்கிறது, ஆனால் இதன் விளைவு வித்தியாசமானதாய் இருக்கிறது, விசுவாசிகள் சரீரப்பிரகாரமான விடுதலையை அடையாது இருக்கலாம், ஆனால் அவர்கள் உபத்திரவத்தை ஏற்றுக்கொண்டும் ஒருவேளை மரிக்கவும் நேரிடலாம், இருப்பினும் அப்படிப்பட்ட உபத்திரவம் மற்றும் மரணம் மகிமையாகக் குறிப்பிடப்படுகிறது, இது முன்கூட்டியே அவர்களுக்குக் கிடைத்த மகிமையான வெற்றியாய் இருக்கிறது. இந்நிருப எழுத்தாளர் நமக்கு நினைப்பூட்டுகிறது என்னவெனில், விசுவாசத்தை "நேர்மறையாக" எதிர்கொள்ளும் போது, கர்த்தர் பெரிதான உபத்திரவங்கள் ஊடாக செல்ல அனுமதிக்க நேரிடலாம், இது மனிதரின் கண்ணோட்டத்தில் "எதிர்மறையானதாய்" இருந்த போதிலும், இது தேவனது பார்வையில், "நேர்மறையானதாய்" இருக்கிறது. தீமைகளை செய்துவரும் மனிதர், ஒரு விசுவாசியைக் கொன்றுவிட்டோம் எனக்கருதலாம், ஆனால் அவர்களை சாதாரணமாய், அவர்களது நித்திய வீடாகிய பரலோகிற்கு அனுப்பிக்கொடுத்து, அங்கு பெரிதான பிரதிபலனை அடையும்படி செய்திருக்கிறார்கள்.

10. ஸ்திரீகள் சாகக்கொடுத்த தங்களுடையவர்களை உயிரோடெழுந்திருக்கப்பெற்றார்கள். 1 இராஜாக்கள் 17:8-24, and 2 இராஜாக்கள் 4:8-

37, இவ்வேதபகுதிகளில், தேவன் எலியா மற்றும் எலிசா மூலம் இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யும்படி வழிநடத்தினார்.

11. வேறு சிலர், மேன்மையான உயிர்த்தெழுதலை அடையும்படிக்கு, விடுதலைப் பெற சம்மதியாமல், வாதிக்கப்பட்டார்கள்: இக்குறிப்பானது, மிகவும் பயங்கரமான உபத்திரவங்களை அனுபவித்து, அவர்களது விசுவாசத்திற்காய், தீமை செய்யும் மனிதர்களால் கொல்லப்பட்டதை தெரிவிக்கிறரதாய் இருக்கிறது. இது நமக்கு ஞாபகப்படுத்துவது என்னவெனில், தேவனது சத்துருக்கள், அவரது பரிசுத்தவான்களை கொலை செய்தபோதிலும், அவர்களது மரணமானது தேவனது பார்வையில் விலையேறப்பட்டதாய் இருக்கிறது, கொலை செய்யப்பட்ட பரிசுத்தவான்கள் நன்றியறிதலுடன் தேவனது சமூகத்தில் பிரவேசித்து, வேதனயோ, கண்ணீரோ இல்லாதவர்களாய் பரலோகில் காணப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள். அநேகர் இவ்விதமாய் மரித்து ஆற்றப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். வெளிப்படுத்தல் 7:17, and 21:4, இவ்வேத வசனங்கள் நமக்கு கூறுவது என்னவெனில், தேவன் தாமே தமக்காய் மரித்தவர்களின் கண்ணீர் அனைத்தையும் துடைப்பார்.

12. அநேகர் விடுதலை பெற சம்மதியாமல் உபத்திரவப்படுத்தப்பட்டனர், காரணம் அவர்கள் விசுவாசத்தை மறுதலிக்க அவர்கள் விரும்பவில்லை: இஸ்ரவேலர் மற்றும் சபை குறித்த சரித்திரத்தில், இது போன்ற சாட்சிகள் உதாரணமாய் கொடுக்கப்பட்டுள்ளது, அவர்கள் புறஜாதியாரால், கர்த்தரை மறுதலிக்க துன்புறுத்தப்பட்டனர் ஆனால் அவர்களோ மறுதலிக்க மறுதலித்து, அவர்களது மனதானது கர்த்தர் உயிர்த்தெழுந்தது போல மரித்தாலும் உயிரோடு எழுப்பப்படுவோம் என்ற சத்தியத்தில் உறுதியாய் இருந்தது. அவர்கள் கொலைசெய்யப்படும் நாளைவிட உயிர்த்தெழப்போகும் நாளை தங்களது மனக்கண்களால் கண்டனர்.

36. வேறு சிலர் நிந்தைகளையும் அடிகளையும், கட்டுகளையும், காவலையும் அனுபவித்தார்கள்.

கனப்படுத்தப்படுத்தப்படுவதற்கான அழைப்புப்பட்டியல் தொடர்கிறதாய் இருக்கிறது, தங்களது விசுவாசத்திற்காய் உபத்திரவமடைந்து மரித்தவர்கள், தங்களது சுகபோக நேரங்களைக்காட்டிலும், தங்களது பரலோக பிரதிபலன்களை காண்கிறவர்களாய் இருந்தனர். இதன் எழுத்தாளர் மூன்று வழிகளில் இம்மகத்தான விசுவாசிகள்

உபத்திரவப்படுத்தப்பட்டதை இனங்காணுகிறவராய் இருக்கிறார். வாய்மொழியாக அவர்கள் தூஷிக்கப்பட்டது, சரீரப்பிரகாரமாய் அவர்கள் கொடிய வேதனைகளை அனுபவித்தது, அவர்கள் சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு அவர்களது சுதந்திரம், அவர்கள் இவ்வுலக வாழ்வில் அவர்கள் பெற்றிருந்த நேர்த்தியான காரியங்கள் அனைத்தையும் இழக்கச்செய்து கொடுமை படுத்துதல் மூலம் அவர்கள் உபத்திரவப்படுத்தப்பட்டனர்.

13. கொடிய நிந்தைகளான சோதனை: சாத்தானைச் சார்ந்தவர்கள், கொடூரமான நிலையில் மற்றவர்களை துன்பப்படுத்தி அவர்களது கடும் வேதனையைக் கண்டு மகிழ்கிறவர்களாய் இருப்பவர்கள். அவர்கள் கொடிய வேதனையை பழித்துக்காட்டி இன்னும் அதிகமாய் வேதனைபடுத்துகிறவர்களாய் இருக்கிறவர்கள். தீமையின் கொடூரமானது, நவ நாகரிகமுள்ள மக்களால் புரிந்துகொள்ள கடினமான ஒன்றாய் விளங்கிவருகிறது, இருப்பினும் எல்லா அவிசுவாசிகளின் அடிமட்டத்தில் இது போன்ற வெறுப்புணர்வானது, அவர்கள் தோற்றத்தில் எப்படி நாகரிக முள்ளவர்களாய் இருந்தாலும் இருக்கத்தான் செய்கிறது. .

14. வாரினால் அடிபட்டார்கள்: இது போன்ற வாரினால் அடிக்கப்பட்டதை நமதாண்டவரும் சகித்திருக்கிறார், அநேக மணிநேரங்கள் ஜீவனோடு மரிப்பதை இப்படிப்பட்ட தண்டனையானது உள்ளடக்கியுள்ளது. இவ்வாறு வாரினால் அடிக்கப்பட்ட நிலையில், வேதனை தாங்காது, மற்றும் தாங்கொண்ணா வேதனையின் கொடூரத்தால், அவர்களில் அநேகர் இப்படிப்பட்ட தண்டனைக்குள்ளான பின்னர் மரித்திருக்கின்றனர்.

15. மற்றவர்கள் சிறைச்சாலையில் அடைக்கப்பட்டு வாதிக்கப்பட்டனர்: சிறையில் அடைக்கப்பட்டவர்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டனர். எரேமியா முதற்கொண்டு பவுல் வரை அநேக பரிசுத்தவான்கள் சிறைத் தண்டனையை அனுபவித்தனர், இன்றைய நாட்களில் உள்ள சிறைச்சாலைகள் போன்று சுத்தமோ, சுகாதாரமோ அங்கு காணப்படவில்லை.

37. கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைப் பார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத்தோல்களையும், வெள்ளாட்டுத்தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து குறைவையும், உபத்திரவத்தையும், துன்பத்தையும் அனுபவித்தார்கள்.

இவ்வசனத்தில், இதன் எழுத்தாளர், அதிர்ச்சியூட்டக்கூடிய காரியங்களை குறிப்பிடுகிறவராய் இருக்கிறார், இதனை வாசிக்கும் விசுவாசிகள், தேவனது சேவகராய் இருப்பதற்குரிய கிரயத்தை செலுத்த ஆயத்தமுள்ளவர்களாய் இருக்க இவற்றை அடிக்கோடிட்டு காட்டுகிறவராய் இருக்கிறார். அவர்கள் துன்பங்களையும், உபத்திரவங்களையும் சகிக்க ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும், அவர்களது சொத்து, சுதந்தந்திரங்களையும், அவர்கள் வாழ்ந்த பட்டணத்தில் இருந்த செல்வாக்கு அனைத்தையும் இழக்கத் தயாரனவர்களாய் இருக்க வேண்டும் என்பதனை இதன் மூலம் நினைவுபடுத்துகிறவராய் இருக்கிறார். இவர்கள் தங்களது முன்னோர்களின் விசுவாசத்தில் நின்று, உபத்திரவங்களை அனுபவிக்க ஆயத்தமுள்ளவர்களாக வேண்டும் எனக் கூறுகிறார்.

16. சிலர் கல்லெறியுண்டு மரணமடைந்தனர்: 2 நாளாகமம் 24:20,21 ல் சகரியா முதற்கொண்டு, அப்போஸ்தலர் 7:57-60 ல் ஸ்தேவான் வரை, தேவ மனிதர்கள் இவ்வாறு கல்லெறியுண்டு மரணத்தைத் தழுவினார்கள். மாய்மால பயபக்தியானது இப்படிப்பட்ட மீறுதல்களை தூண்டி செயல்படுத்துகிறதாய் இருக்கிறது, நாற்பது வயதிற்கும் குறைவான எருசலேமின் விசுவாசிகள் கர்த்தர் மற்றும் ஸ்தேவான் மரணத்திற்கு பின்னர், இப்படிப்பட்ட மாய்மாலக்கரர்களின் வெறுப்பை உணர்ந்தபோது, அவர்கள் எருசலேமைவிட்டு வெளியேறுகிறவர்களாய் இருந்தனர். கர்த்தர் இதை எச்சரிக்கிறவரய் இருக்கிறார். மத்தேயு 23:35-37,45.

17. ஏசாயா, மனாசே இராஜாவால், மரவாளால் இருதுண்டுகளாக அறுக்கப்பட்டார். 2 சாமுவேல் 12:31 ல் இது முன்னதாகவே குறிப்பிடப்பட்டுள்ளது, பாரம்பரியம் கூறுவது என்னவெனில் ஏசாயா இது போன்ற மரணத்தைத் தழுவினார்.

18. எல்லா தேவனது பெரிய மனிதர் மற்றும் பெண்கள் அனைவரும் இப்படிப்பட்ட வேதனைக்குரிய அக்கினி சோதனையால் பரீட்சிக்கப்பட்டார்கள்: "மறுபடியும்" என்பதற்கான கிரேக்க வினைச் சொல் 'peirazo' இதன் பொருள் ஒரு உலோகத்தின் தன்மையை பரீட்சிக்க அதனை உளைகளத்தில் இட்டு பரீட்சிப்பர். இதன் எழுத்தாளர் இந்நிருபத்தை மறுபடியும் கேட்போர், [வாசிப்போர்] கர்த்தர் நமக்கு மேலாக அமர்ந்து கொண்டு, நமது குணாதிசயத்தைச் சரிபார்த்து, பிரதிபலனைப் பெற்றுக்கொள்ள நாம் தகுதியுள்ளவர்களாய் இருக்கிறோமா எனக்காண்கிறவராய் இருக்கிறார், மற்றும் மிகவும் பெரிதான பிரதிபலன்களைப் பெறும்படிக்கு, நமக்குத் தருணங்களை அளிக்கிறவராய் இருக்கிறார். எல்லாவித பரீட்சையும் விசுவாசிக்கு

பிரதிபலனை அளிக்கும் நோக்கத்தோடு அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது, இது நித்தியத்தின் கண்ணோட்டத்தில் அதிக நன்மை யானவைகளைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது.

19. மற்றவர்கள் பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தனர்: அநேக நல்ல மனிதரும், பெண்களும் கொலைசெய்யப்பட்டனர், ஆபேல் முதற்கொண்டு, நமது நாட்கள் வரையிலும், தீமை செய்வோர், நல்லவர்களின் உயிரை பறிக்கிறவர்களாய் விளங்கிவருகின்றனர். இதை நாம் எவ்வாறு புரிந்து கொள்ள இயலுகிறது? இது நித்தியத்திற்கடுத்த பெரிதான வரைபடத்தில் இடம் பெறுகிறதாய் இருக்கிறது, தற்காலிகமான கால அவஸ்தையில், தேவனை வெறுக்கும் கொடியவர்கள் செயலாற்றும் காரியங்களாய் இருக்கிறது. இது நமது இருதயத்திலும், மனதிலும் நிலையான தன்மைக்கு நம்மை வழி நடத்துகிறதாய் இருக்கிறது.

20. செம்மறியாட்டுத்தோல்களையும், வெள்ளாட்டுத்தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து குறைவையும், உபத்திரவத்தையும், துன்பத்தையும் அனுபவித்தார்கள்: இவர்கள் பல இழப்புகளை சந்தித்தவர்களாய் இருந்தனர், உலகப்பிரகாரமான காரியங்களை இழந்து தவிக்கிறவர்களாய் இருந்தனர், சொத்து சுதந்திரங்களை இழந்து தவித்தனர். இவர்கள் பொருளாதார நெருக்கடியினால் வாடி தவித்தனர், வீடு வாசல்களை இழந்து தவித்தனர், அவர்களது பாடுகள் உபத்திரவங்கள் நடுவே தேவன் இவர்கள் தேவைகளைச் சந்திக்கிறவராய் இருந்தார். பிலிப்பியர் 4:11-13. உபத்திரவமானது கொடிய வறுமையையும், (பொருளாதர நெருக்கடி) உபாதைகளையும் (தொடச்சியான நெருக்கங்கள் மற்றும் மனவேதனை) கொடிய வேதனையையும் (நீங்கள் சந்திப்போரை மிகவும் மோசமான நிலையில் நடத்துதல்) கொண்டுவருகிறதாய் இருக்கிறது. அலைந்து திரிதல் குறித்த உண்மை என்னவெனில், (தொடர்ச்சியாக எதிராளியை தவிர்ப்பதற்காய் இடம்பெயர்ந்து அலைந்து திரிதல்) உபத்திரவத்தால் ஏற்படும் ஒன்றாய் இருக்கிறது. இப்படிப்பட்டவைகள் ஊடாக தேவனது மக்கள் கடந்து சென்றவர்களாய் காணப்பட்டனர், எருசலேமில் உள்ள சபை மக்கள் இவ்வாறு அவர்களுக்கு ஏதாகிலும் சம்பவிக்கும் என்றால் அது விநோதமானது என எண்ணாத வண்ணம் இவைகளை அவர்களுக்கு இதன் எழுத்தாளர் அறிவித்து ஞாபகப்படுத்துகிறவராய் இருக்கிறார்.

38. உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை, அவர்கள் வனாந்திரங்களிலேயும், பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள்.

இதன் எழுத்தாளர், நமது விசுவாச மாதிரிகளாய் மாதா பிதாக்களை இவ்விதமான கணக்கெடுப்பின் மூலம் நமக்களிக்களிக்கிறவராய் இருக்கிறார். இவ்வுலகம் அவர்களுக்கு பாத்திரமாய் இருக்கவில்லை. அவர்கள் மலைகளிலும், வெளிகளிலும் மிருகங்களைப்போல வேட்டையாடப்படுகிறவர்களாய் இருந்தனர். இவர்கள் எடுத்துவைக்கும் ஒவ்வொரு அடிகளும் கர்த்தரின் பார்வையில் விலையேறப்பட்டதாய் இருந்தது, தேவனது வார்த்தையாகிய சத்தியத்தில் தங்களது மனதை உறுதியாய் பதித்தவர்கள், மனோரீதியாய் பாதுகாப்புடன் விளங்கினர், அவர்கள் வேட்டையாடப்பட்டும் மனம் மருளாதிருந்தனர். இதை பவுலின் வாழ்வில் காண்கிறோம், இது குறித்து பிலிப்பியர் 4 அதிகாரத்தின் முற்பகுதியில் குறிப்பிடுகிறவராய் இருக்கிறார்.

39. இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்.

இது வரைக் கண்ட விசுவாச ஹீரோக்கள் அனைவரும், தேவனது நற்சாட்சியை அவர்களது வாழ்வில் பெற்றவர்களாய் இருக்கின்றனர், மற்றும் தேவனது அளவிடமுடியாத பெரிதான பிரதிபலன்கள் நித்தியத்தில் இவர்களுக்காய் காத்திருக்கிறதாய் இருக்கிறது. "நல்லது உண்மையும், உத்தமுமுள்ள ஊழியனே" என்கிற பாராட்டையும் இவர்கள் கேட்டிருக்கின்றனர், இருப்பினும், இவர்கள் பூமியின் மீது தேவனது வெற்றியைக் காணாதவர்களாய் இருக்கின்றனர், மற்றும் நமது நாட்களில் தீமை செய்யும் மனிதர்கள், "கொடியராய் பெருகிக்கொண்டே செல்கிறதையும்" காணாதவர்களாய் இருக்கின்றனர். 2 தீமோத்தேயு 3:13. கர்த்தரின் இறுதி வெற்றியை இவர்கள் காணும் முன்னர் மரித்திருந்தும், கர்த்தருடைய வசனத்தை இவர்கள் விசுவாசித்திருந்த படியால், அது வருகிற ஒன்றாய் இருக்கிறது என்பதை அறிந்திருந்தனர், அவர்கள் பாடுகள் உபத்திரவங்களைக்காட்டிலும், வேதாகமம் அவர்களுக்கு அதிக யதார்த்தமானதாய் [உண்மையுள்ளதாய்] இருந்தது. 1 பேதுரு 1:10-21.

40 அவர்கள் நம்மையல்லாமல் பூரணராகதபடிக்கு விஷேசித்த

நன்மையானதொன்றைத் தேவன் நமக்கென்று முன்னதாக நியமித்திருந்தார்.

இந்த இறுதி வசனத்தில், இதன் எழுத்தாளர் இப்புத்தகத்தின் இரு திறவுகோள் பதங்களை நமது கவனத்துக்குக் கொண்டுவருகிறவராய் இருக்கிறார்.
மற்றும் விசுவாசிகளின் அனைவரின் ஒற்றுமையையும் இதில் கொண்டுவருகிறவராய் இருக்கிறார். இவ்வசனத்தில் உள்ள சொற்றொடர் "விஷேசித்த நன்மையான ஒன்று" - என்பது, கிறிஸ்துவின் ஆளத்துவம் மற்றும் அவரது கிரியையின் விளைவானது, பழைய ஏற்பாட்டின் வெளிப்பாட்டை நிறைவு செய்து, சபையுகத்தில் தனித்தன்மை வாய்ந்த ஒன்றை அளிக்கிறதாய் இருக்கிறது. இவ்வெளிப்பாடு இல்லாது பழைய ஏற்பாடானது பூரமற்றதாயும், நிறைவு பெறாததாயும் இருக்கிறது.

இயேசுக்கிறிஸ்துவின் ஆளத்துவம் மற்றும் அவரது கிரியைகள் போன்றவற்றிற்கு அப்பாற்பட்ட நிலையில், இந்த யுகத்தில் பரிசுத்த ஆவியானவரின் நடபடிகளின்றி, பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள் "பூரணராக்கப்படாதிருந்தனர்" அல்லது அவர்கள் முழுமைபெறாதவர்களாய் இருந்தனர். அவர்கள் நமது விசுவாசத்தை அஸ்திபாரமாய் கொண்டிருந்தனர், இருப்பினும் நமது யுகத்தில், நம் மூலமாகவும், மற்றும் தேவனது கிரியைகள் மூலமாயும் அவர்கள் முழுமைய அடைய வேண்டியதாய் இருந்தது. இதன் எழுத்தாளர் எல்லா யுகங்களையும் ஒன்றாய் இங்கு கொண்டுவருகிறவராய் இருக்கிறார், "ஒரே விசுவாசத்தினால்" நாம் அனைவரும் ஒன்றாய் கட்டப்படுவதற்கு அப்பாற்பட்ட பெரிய சத்தியம் எதுவுமில்லை, மற்றும் நாம் அனவரும் ஒன்றாய் கொண்டு வரப்படுவது இலக்காய் அமைந்து, பரலோக நித்தியத்தின் அந்தியமாய் இணைக்கிறதாய் இருக்கிறது.

கைக்கொள்வதற்கான தலைமைத்துவம்:

1. விசுவாசத்தின் செயல்பாட்டை நடைமுறை அடையாளங்களுடன் கிரியையில் கொண்டுவருவது தலைமைத்துவத்தின் செயல்பாடாய் இருக்கிறது: விசுவாசமானது அனுதின வாழ்வில் கிரியை நடப்பிக்க வில்லையானால், அது இரட்சிப்புக்கேற்ற விசுவாசமாய் இருப்பதில்லை. ராகாப் வேசியானவள், தனது "இருதயத்தில்" எதை வேண்டுமானாலும் விசுவாசித்திருக்கலாம், ஆனால் அது அவளது வாழ்வில் இரட்சிப்பை கொண்டு வந்திருக்காது, மற்றும் வேவுகாரர்களின் வாழ்விலும் இரட்சிப்பைக் கொண்டு வந்திருக்காது, "இருதயத்தில்" விசுவாசிப்பது என்பது முழுமையான ஒன்றாய் இல்லை, பிசாசுகளும் சத்தியத்தை விசுவாசித்து நடுங்குகிறவைகளாய் இருக்கின்றன யாக்கோபு 2:19. ஒரு நபர் இருதயத்தில்

சத்தியத்தை விசுவாசித்து அதற்கேற்ற கிரியை நடப்பிக்கவில்லையானால், அது செத்துப்போன விசுவாசமாய் கருதப்பட்டு அவிசுவாசிகளுடன் அழிவை கொண்டுவருகிறதாய் இருக்கிறது. அவர்கள் கிரியையே, அவர்கள் விசுவாசத்தை நிருபணம் செய்கிறதாய் இருக்கிறது, கிரியை இல்லாத விசுவாசம் உண்மையானதல்ல. ராகாப் வேசியின் விசுவாசமானது செயல்படும் விசுவாசமாய் இருந்தது, அது மறைந்திருக்கவில்லை. எருசலேமின் சபையானது தங்களது பாவங்களை இங்கு உணருகிறதாய் இருக்கிறது; அவர்கள் சத்தியத்தை விசுவாசித்தவர்களாய் விளங்கினர், ஆனால் அவர்கள் தீமையுடன் ஒத்துப்போய் நல்வாழ்வில் மகிழ்கிறவர்களாயும், பாதுகாப்பான வாழ்வு செய்கிறவர்களாயும் விளங்கினர்.

2. விசுவாசத்திற்கடுத்த காரியங்களில் உண்மையானத் தலைவர்கள், திறந்த மனதுடனும், ஒளிவுமறைவில்லாதவர்களாயும் இருத்தல் வேண்டும்: இந்நிருப எழுத்தாளர், மறைவாக செயல்படும் உண்மை விசுவாசம் என்பது கிடையாது என்பதை தெளிவுபடக்கூறுகிறவராய் இருக்கிறார், இது போன்ற விசுவாசம் மாய்மால விசுவாசமாய் இருக்கிறது, வாழ்வில் விசுவாசத்தை கிரியையில் நடப்பிக்கவில்லையானால் அது செத்ததாயும், மாய்மாலமுள்ளதாயும் விளங்குகிறது. பிசாசுகள் இயேசுவைக் குறித்து, நன்கு அறிந்திருந்து அவருக்கு முன்பாக நடுங்கின, அவர் கூறும் அனைத்தும் உண்மையென அவைகள் விசுவாசித்தன. அவைகளின் விசுவாசமானது அவைகளுக்கு அழிவைத் தேடித்தருபனவாய் இருந்தது, அவைகளின் வாழ்வில், அவைகளின் விசுவாசமானது எவ்வித மாற்றத்தையும் ஏற்படுத்தாது இருந்தன, மற்றும் விசுவாசமானது எவ்வித கிரியையையும் நடப்பிக்காது இருந்தன.

இந்நிருபத்தின் இக்கடினமான சவாலானது, யாக்கோபு நிருபத்தின் சவாலைப் போலிருந்து, நமது விசுவாசத்தை செயல்படுத்த நம்மை ஏவி எழுப்புகிறதாய் இருக்கிறது, இதன் படி செயல்படத்தவறும்போது, அதன் மீது அமர்ந்து கொண்டே அதை இழந்து போகிறவர்களாய் விளங்குவோம். விசுவாசம் கிரியை நடப்பிக்கவில்லையானால் அது உண்மையான விசுவாசமல்ல, அது இரட்சிப்பைக் கொண்டுவராது, அது உண்மையற்றதாய் இருப்பதில்லை, அது உண்மையானதாய் இருக்குமேயானால் அது இரட்சிப்பைக் கொண்டுவரும். நமது இரட்சிப்பிற்கேற்ற விசுவாசத்தை பயத்தோடும், நடுக்கத்தோடும் செயல்படுத்துவோமாக! பிலிப்பியர் 2:12. எபேசியர் 6:5. நாம் கிறிஸ்துவுக்குள் இருப்போமானால், பயத்தின் ஆவியை உடையவர்களாய் இருக்கமாட்டோம், இது போன்ற காரியங்களில், கர்த்தரின் வார்த்தையை அனுதின வாழ்வில் கைக்கொள்ள வேண்டியவர்களாய்

இருக்கிறோம். இதைக்கைக்கொள்வதில் கவலையீனமாய் இருத்தல் கூடாது. இதை ஒவ்வொரு நாளும் நமது வாழ்வில் நிருபணம் செய்கிறவர்களாய் இருத்தல் அவசியம், ஒரு இராணுவ வீரன் தனது படைத்தளபதிக்கு முன்பாக செயல்படுவது போல, யுத்தத்தில் எதிராளிகள் நெருங்கி சூழ்ந்து இருக்கையில் வீரதீர செயல்களில் ஈடுபடுவது போன்று நாமும் செயல்படுகிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

3. வேதாகம தலைவர்களிடமிருந்து எப்பொழுதும் விசுவாசத்தின் கரியங்கள் வெளிவருகிறதாய் இருக்கின்றன: இப்பகுதியில் விசுவாசத்தில் செயல்படும் காரியங்கள் குறித்து, 20 அம்சங்கள் குறித்து இந்நிருப எழுத்தாளர் நமக்கு அளித்துள்ளதைக் காண்கிறவர்களாய் இருக்கிறோம். அவரது குறிக்கோள் இந்நிருபத்தினை பெற்றுக்கொள்ளும் மக்கள் சத்தியத்திற்காக, நிலைநிற்கும் போது, அவர்களிடமிருந்து வெளிவரும் காரியங்கள் மற்றும் அவர்கள் வாழ்வில் இடம்பெறுவன குறித்து எதிர்பார்ப்புடன் எழுதியுள்ளார். எந்த ஒரு காரியத்தோடும் ஒத்துபோகாத வண்ணம், செயல்பட வற்புறுத்துகிறவராய் இருக்கிறார், விசுவாச வாழ்வில் வெளிவரும் காரியங்கள் மீது கண்ணோட்டம், தேவனது சித்தத்தின் மீதான கண்ணோட்டம், நித்திய பிரதிபலனுக்கேதுவான பூமியில் செய்யும் பணி, மற்றும் தியாகம் இவைகள் மீதான கண்ணோட்டம் போன்றவற்றை இவர் வலியுறுத்துகிறவராய் இருக்கிறார். விசுவாசமுள்ள மனிதரின் அழைப்பு, விசுவாசத்தினால் வெளிவரும் காரியங்கள், உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்கள் மற்றும் பாடு உபத்திரவங்கள் போன்றவைகளை சுட்டிக்காட்டுகிறவராய் இருக்கிறார், நித்திய ஆசீர்வாதத்திற்குள் மற்றும் பெரிதான பிரதிபலன் இவற்றில் எல்லோரும் இணைக்கப்படுகிறவர்களாய் இணைக்கப்படுகிறவர்களாய் இருக்கின்றனர்.

தாவீது, பாராக், சிம்சோன், யெப்தா, போன்றோர் ஆர்வத்தைத் தூண்டும் பட்டியலில் இடம் பெறுகிறவர்களாய் இருக்கின்றனர், இவர்கள் தங்கள் வாழ்வில் குறிப்பிட்ட அளவுக்கு தோல்வியைத் தழுவினவர்களாய் இருந்தனர், இருப்பினும் கர்த்தர் அவர்களைக் கனப்படுத்திபடியால், அவர்கள் தோல்வியை தழுவினவர்களாயிருந்தும், தேவனது பணியை தங்கள் வாழ்வில் நிறுத்திவிடாதபடி செயல்படுகிறவர்களாய் இருந்தனர். இது இதன் எழுத்தாளரின் ஒரு கருத்தாய் விளங்குகிறது. முடிவு பெறும் ஓட்டப்பந்தயமே முக்கியம் வாய்ந்ததாய் இருக்கிறது, பந்தயத்தில் பல முறை விழ நேர்ந்தாலும், ஓட்டத்தை ஓடி நன்றாய் முடிப்பதே வரவேற்கப்படுகிறதாய் இருக்கிறது. கர்த்தரின்

ஆசீர்வாதம் நமது பயத்தினால் நின்றுவிடுவதில்லை, நமது பாவத்தால் நின்றுவிடுவதில்லை, நாம் பாவத்துடனும் பயத்துடனும் ஈடுபட்டு அவைகளை மேற்கொண்டு, அவைகளுக்கு நம் வாழ்வில் மறுப்பு தெரிவிக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

தானியேலைப் போன்று, சிங்கக்குகையைக்கு எதிர்படுகிறவர்களாய் நாம் இருக்கலாம், நாம் சிங்கங்களை எதிர்கொள்ள சவால்விட்டு அழைக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம், ஒரு வேளை இது போன்ற பிரச்சனைகள் நம்மை சாப்பிட்டு ஏப்பம் விடுகிறதாய் இருக்கும், ஜெபத்தாலும், கர்த்தர் மீதுள்ள விசுவாசத்தினால் அவர் அளிக்கும் நன்மைகளை பெற்றுக்கொண்டு, அவரில் ஓய்வுடன் காணப்படுதல் அவசியமாய் இருக்கிறது. தேவனைச் சார்ந்து ஓய்ந்திருத்தல், தேவன் அளிக்கும் காரியங்களைப் பெற்று வாழ அழைப்பைப்பெற்றவர்களாய் இருக்கிறோம். நமது வாழ்நாள் பரியந்தம், அவரில் நிலைத்திருக்கும் விசுவாசிகளாய், தமது சபைக்காய் கர்த்தர் திரும்ப வரும் நாள் பரியந்தம் அவரில் நிலைத்திருப்போமாக! வாழ்வோ, சாவோ தேவன் நம்மைத் தேவன் அழைத்த அழைப்பில் நிலைநிற்கிறவர்களாய் நிலைநிற்றல், நமது வாழ்வில் முக்கியமானதாய் இருக்கிறது, உலகப்பிரகாராமாய் வாழ்ந்து செழிப்பது அல்லது பாடுகளையும் உபத்திரவங்களையும் அனுபவிப்பது போன்றவை எப்பொழுதும் பரலோக பிரதிபலன்களுக்கு ஏதுவானதாய் விளங்குகிறது. இடம், காலம், போன்றவைகளின் பிரச்சனைகளை எவ்வளவு தெளிவாய் நாம் காண்கிறவர்களாய் இருக்கிறோம்? நமக்கு முன்பாக மறைக்கப்படாமல், வெளிப்படையாய் இருக்கும் சத்தியத்தினை நாம் இங்கு காண்கிறவர்களாய் இருக்கிறோம் அல்லவா? நித்திய வாழ்வின் கண்ணோட்டத்தை நாம் பெற்றவர்களாய் இருக்கிறோமல்லவா?

மனிதருடைய பார்வையில் விசுவாசத்தால் வெளிவரும் காரியங்களில் விடுதலையானது நேர்மறையாகவும், மரணம் எதிர்மறையாக தோன்றின போதும், தேவனது கண்ணோட்டத்தில் இரு காரியங்களும் நேர்மறையானதாகவே இருக்கிறது. எல்லாவித விசுவாச கிரியைகளும் நித்திய பிரதிபலனை பெறுகிறதாய் இருக்கிறது. இறுதி வரைக்கும் உறுதியாய் நின்று தேவனுக்காய் மரணத்தை தழுவிய ஒவ்வொருவருக்கும் இரத்த சாட்சிகளின் கிரீடமானது பிரதிபலனாய் வைக்கப்பட்டுள்ளது, அல்லது நேரடியாக நித்தியத்தில் அவரது பிரசன்னத்திற்கு நுழையும் சிலாக்கியம் கிடைக்கிறதாய் இருக்கிறது. எபிரெயர் 12:1. விசுவாசிகளாகிய நீங்கள் உங்களுக்கு கர்த்தர் நியமித்துள்ள பாதையில் நடந்து செல்ல ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கிறீர்களா?

4. உண்மையானத் தலைவர்கள் மரணபரியந்தம் தங்களுக்களிக்கப்பட்ட பணியை செய்து முடிக்க ஆயத்தமுள்ளவர்களாய் இருக்கின்றனர்: ஆபேல் முதற்கொண்டு ஸ்தேவான் வரையுள்ள இரத்த சாட்சிகள் தங்களது விசுவாசத்திற்குரிய தண்டனையின் மூலம், தேவனை வெறுத்தொதுக்கும் இவ்வுலகைக் குறித்து பேசுகிறவர்களாய் இருக்கின்றனர். இதைக்குறித்து நமது பிரங்க பீடத்தில், எந்த அளவுக்கு தெளிவாக உச்சரிக்கிறவர்களாய் இருக்கிறோம்? இன்றய அளவில் பிரபலமாகி வரும் செழிப்பு சுவிஷேசத்தை அறிவிக்கிறவர்கள், அநேகரை மதிமயங்க வைத்து, உண்மையான பிரசங்கியார்கள் தங்களது சத்தத்தை உயர்த்தா வண்ணம் செய்கிறவர்களாய் இருக்கின்றனர், அவர்கள் விசுவாசத்திற்கான கிரயம் செலுத்தப்படுதலைக் குறித்து பேசாத வண்ணம் செய்கிறவர்களாய் இருக்கின்றனர். இதன் எழுத்தாளர் அநேக "வெற்றிகளை" குறித்து குறிப்பிடுகிறவராய் இருக்கிறார், இங்கு நாம் வெற்றி எனக்கூறுவதன் அர்த்தம், விசுவாசத்திற்காக பாடுகள், உபத்திரவங்கள் அல்லது மரணம் அடைவதும் "வெற்றியாகக்" கருதப்படுகிறது, இதை நாம் மனிதரின் கண்ணோட்டத்தில் காணாதவண்ணம், தேவன் காண்கிற வண்ணம் காண்கிறவர்களாய் இருக்கிறோம். இக்கருத்தை எந்த அளவிற்கு போதகர்களாகிய நாம் தெளிவுபட எடுத்துரைக்கிறவர்களாய் இருக்கிறோம்? கர்த்தரின் ஜனங்கள் பாடுகளையும் உபத்திரவங்களையும் அடையும் படி அழைக்கப்பட்டிருப்பதை புரிந்து கொண்டவர்களாய் இருக்கிறார்களா, பூமிக்குரிய அனைத்து செல்வங்களையும் இழக்க தயாராக இருக்கிறார்களா, அவருக்காய் மரிக்கவும் அவர்கள் ஆயத்தமாய் இருக்கிறார்களா? இப்படிப்பட்ட காரியங்களை நமது பிரசங்கத்தில் எடுத்துரைக்க நாம் எந்த அளவுக்கு வலிமை மிக்கவர்களாய் விளங்கி வருகிறோம் மற்றும் நமது தனிப்பட்ட வாழ்வில் இக்கருத்தின் படி வாழ எந்த அளவுக்கு வலிமை மிக்கவர்களாய் இருக்கிறோம்?

பாடுகள் உபத்திரவங்கள் என்பது வேதாகமத்தின் தலைப்பாய் இருக்கிறது மற்றும் இதை விசுவாசிகள் புரிந்து கொள்ளும் வண்ணம் தெளிவாய் அவர்களுக்கு போதிக்க கடனாளிகளாய் இருக்கிறோம், இதனை அவர்கள் கைக்கொண்டு வாழவும், முன்மாதிரிகளைப் பின்பற்றவும் அவர்களை ஊக்கப்படுத்துதல் அவசியமான ஒன்றாய் இருக்கிறது, விசுவாச ஹீரோக்களைக் குறித்து பிரசங்கிப்பது, வலிமையை தேடித்தரும், சவாலுக்குரிய காரியமாய் விளங்குகிறது, அவர்களது விடுதலை மற்றும் அவர்கள் மரணம் போன்றவற்றையும் போதிக்க கடமைபட்டுள்ளோம். இதினிமித்தம் இதைக்கேட்பவர்கள் அனைவரும், கர்த்தரை பின்பற்ற ஆயத்தப்பட்டவர்களாய், கர்த்தர் அவர்களை எந்த சூழலில் அவரது பணி செய்ய அழைத்தாலும் அவர்கள் ஆயத்தமுள்ளவர்களாய் மனமுவந்து செல்ல

பிரியப்படுகிறவர்களாய் இருப்பர். கர்த்தரின் மந்தையானது பின்பற்றுவதற்கு எவ்வகையான ஜீவனுள்ள உதாரணங்களை நாம் அவர்களுக்கு அளிக்கிறவர்களாய் இருக்கிறோம்? மிகவும் இதமான சூழலில் கர்த்தரை பின்பற்றும் விசுவாசிகளாய் அவர்களை உருவாக்குகிறவர்களாய் இருக்கிறோமா அல்லது மிகவும் கரடான, கரடுமுறடான, வலிமை மிக்க பரிசுத்தவானாய் எவ்விதமான நெருக்கங்களையும், பாடு மற்றும் உபத்திரவங்களை மேற்கொள்ளும் விசுவாசியாய் உருவாக்குகிறவர்களாய் இருக்கிறோமா?

5. தலைவர்கள் கடந்த காலத்தில் பெரிய அளவில் உருவாக்கினவர்களை அறிவித்து அவர்களிடமிருந்து கற்றுக்கொண்டவைகள் மூலம், தற்காலத்தில் உருவாக்குகிறவர்களாய், பின்பற்றுவதற்குரிய மாதிரிகளை அமைத்து கொடுக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்: கடந்த காலத்தில் அழைக்கப்பட்ட விசுவாச வீரர்களில், எத்துனை பேரைக் குறித்து நமது சபை அங்கத்தினர்கள் கேள்விப்பட்டு, அவர்கள் தனிப்பட்ட நிலையில் அவர்களைக்குறித்து பேசுகிறவர்களாய் இருக்கின்றனர்? ஜனங்கள் உதாரணங்களுடன் கற்றுக்கொள்கிறவர்களாய் இருத்தல் அவசியம், மற்றும் இப்படிப்பட்ட மனிதர்களும் மற்றும் பெண்களும் நமது முன்மாதிரிகளாய் இருக்கின்றனர். நமது முறையான போதனையானது இப்படிப்பட்ட அனைவரை குறித்து போதித்து ஜனங்களை தெளிவுபடுத்துகிறதாய் இருக்கிறதா அல்லது கர்த்தருடைய ஜனங்கள் இவர்களைக் குறித்து அறியா வண்ணம் இருக்கிறார்களா?

இப்படிப்பட்ட வேதாகம ஹீரோக்களைக் குறித்து, நமது சபை அங்கத்தினர் அறியாது இருப்பார்களேயானால், நமது போதனையில், நாம் தவறிழைக்கிறவர்களாய் காணப்படுவோம். இதை மிகவும் கவனமாய் சீர்தூக்கிப்பார்த்து, ஜனங்கள் இப்படிப்பட்ட சத்தியத்தை அறிந்து கொள்வதன் மூலம் பாவத்திற்கு விடுதலையாகி, பாதுகாப்புடன் அவர்கள் வாழ்வில் நெருக்கங்களையும், பாடுகளையும், உபத்திரவங்களையும் சந்திக்கும் போது, தைரியமாய் அவைகளின் ஊடாக செல்கிறவர்களாய் இருக்க அவர்களை ஊக்கப்படுத்துகிறவர்களாய் இருப்போமாக!

இப்பகுதியில் எபிரெயர் பதினொன்றாம் அதிகாரத்திலிருந்து, சத்தியங்களை அறிந்தோம், போதகர்களாகிய நாம் ஜெபத்தைக் குறித்தும் போதிக்க தவறிவிடுதல் கூடாது. விசுவாசத்தினால் வாழக்கூடிய இருபது காரியங்கள் வெளிப்பட்டு அவைகளைக் கண்டோம், மற்று விசுவாசிகளுக்கு இது குறித்து பயிற்சி அளித்து அவர்களை வழிநடத்தும் போது, கர்த்தர் ஜெபத்திற்கு வித்தியாசமான நிலையில்

பதில் அளிக்கிறவராய் இருக்கிறார் என்பதனையும் அவர்களுக்கு போதித்து அறிவுறுத்துவது இங்கு அவசியமாய் காணப்படுகிறது. நாம் கர்த்தரை நமது வேதனைகள் அல்லது செழிப்பு, கலக்கமான சூழலிருந்து உண்டாகும் இரட்சிப்பு, மற்றும் வருத்தங்கள் மூலம் வரும் பாடுகள், உபத்திரவங்கள் இவைகளால் தேவனை மகிமை படுத்துகிறவர்களாய் இருக்கிறோம் என்பதனையும் அவர்களுக்கு கருத்தாய் போதித்தல் அவசியமாய் காணப்படுகிறது. நமது கண்ணோட்டமானது, கர்த்தருடன் வாழும் நித்தியத்தைக் குறித்ததாய் இருக்கிறதா அல்லது தற்காலிகமாய் வாழும் இவ்வுலக வாழ்க்கையைச் சார்ந்து இருக்கிறதா?

BTB [BIBLE TOPIC BOOK] STUDIES

கிறிஸ்தவ வாழ்க்கை: பிரதிபலன்கள் மற்றும் கிரீடங்கள்:

1. வேதாகமத்தில் பிரதிபலன்கள் மற்றும் இரட்சிப்பு இவை இரண்டும் மிகக்கவனமாக வேறுபிரித்துக் கூறப்பட்டுள்ளது. இரட்சிப்பு என்பது இலவசம், தேவனிடமிருந்து கிடைக்கும் ஈவு. பிரதிபலன் என்பது பரிசுத்த ஆவியானவரின் வல்லமையில் புகழ்ச்சிக்கேதுவாக ஆற்றப்படும் சேவையாய் இருக்கிறது.

2. இரட்சிப்பு - இழந்து போனோருக்கு அளிக்கப்படும் இலவச ஈவு. (எபேசியர்2:8-9, ரோமர்6:23, யோவான்4:10. நித்திய ஜீவன். (யோவான் 3:36, யோவான் 5:24, யோவான் 6:47).

3. பிரதிபலன் - இது கர்த்தருக்காக உண்மையுடன் உழைக்கும் இரட்சிக்கப்பட்டோருக்கு அளிக்கப்படுவது. (1 கொரிந்தியர் 9:24, 25, வெளிப்படுத்தல்22:12). - இது கிறிஸ்துவின் நியாயத்தீர்ப்பில் பகிர்ந்தளிக்கப்படும். (1கொரிந்தியர் 3:11-15, 2கொரிந்தியர் 5:10, ரோமர்14:10).

4. கிரீடங்களான பிரதிபலன்கள்:-
மாசற்ற கிரீடம் - இச்சையடக்கத்தில் உண்மையுள்ளோருக்கு. (1கொரிந்தியர் 9:24-27).

மகிமையின் கிரீடம். - உபத்திரவங்களில் உண்மையுள்ளோருக்கு. (1 பேதுரு5:4).
ஜீவ கிரீடம் - பாடுகளின் கீழ் உண்மையுள்ளோருக்கு (யாக்கோபு1:12, வெளிப்படுத்தல்2:10).
நீதியின் கிரீடம் - சாட்சியில் உண்மையுள்ளோருக்கு. (2 தீமோத்தேயு 4:8).
மகிழ்ச்சியின் கிரீடம் - உண்மையாய் உழைத்தவர்களுக்கு (1 தெசலோனிக்கேயர்2:19, 20, பிலிப்பியர்4:1).

<u>நியாயத்தீர்ப்பு: - கிறிஸ்துவின் நியாயாசனம்</u>

1. சபையுகத்தில் விசுவாசிகளுக்கு மூன்று விதமான நியாயத்தீர்ப்புகள் இருக்கின்றன.
பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பு: - எல்லா மனிதரின் பாவங்களுக்காக கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து கிரயம் செலுத்தி பதிலாயாயிருக்கிறார். பாவத்தின் சம்பளம் மரனம். (ரோமர்6:23). இதினிமித்தம் கிறிஸ்துவுக்குள்ளான ஒவ்வொருவருக்கும் நியாயத்தீர்ப்பு இல்லை. (ரோமர் 8:1) 2 கொரிந்தியர் 5:19-21, கலாத்தியர் 3:13 ல் ஒருவருக்குப்பதிலாக மரிக்கும் மரணம் அளிக்கப்பட்டுள்ளது.
சுயத்தின் நியாயத்தீர்ப்பு:- நம்மை நாமே சோதித்தறிந்தால் நியாயந்தீர்க்கப்படமாட்டோம். தவறுவோமெனில், அது நமக்கு சிட்சையைக்கொண்டு வரும்.
(1 கொரிந்தியர்5:1-5, 11:31, 32, 2கொரிந்தியர் 2:5-7, எபிரெயர்12:7, 1 யோவான் 1:9).
c) கிறிஸ்துவின் நியாயாசனம்:- பிரதிபல நோக்கத்திற்காக விசுவாசிகளின் கிரியைகள் பரிசீலிக்கப்படுதல். (2 கொரிந்தியர் 5:10).

2. கிறிஸ்துவின் நியாயாசனம் பிரதிபலனளிக்கும் நேரத்தைக்குறிக்கிறது. நமது மனுஷீகக்கிரியைகள் (மரம், புல், வைக்கோல்) அக்கினி எரித்துப்போடும், பரிசுத்தாவியானவரின் பெலத்தால் உண்டான நமது கிரியைகள் (பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள்) நமது பிரதிபலனாய் இருக்கும்.
(1கொரிந்தியர் 3:11-16).

3. கிறிஸ்துவின் நியாயாசனத்துக்கு முன்பாக விசுவாசிக்கு பிரதிபலன் மறுக்கப்படலாம், ஆனால், அவரது இரட்சிப்பை அவர் ஒருபோதும் இழப்பதில்லை. (2 தீமோத்தேயு2:12-13).

4. பின்வாங்கிப்போன விசுவாசிகளுக்கு கிறிஸ்துவின் நியாயாசனத்திலிருந்து எவ்வித பிரதிபலனும் கிடைப்பதில்லை. (எபிரெயர்6:7-12).

5. கிறிஸ்துவின் நியாயாசனம் பண்டைய உலகின் தலைசிறந்த ஓட்டப்பந்தயத்திற்கு ஒப்பிட்டு விவரிக்கப்படுகிறது. (1 கொரிந்தியர் 9:24-27).

6. கிறிஸ்துவின் நியாயாசனத்தில் அளிக்கப்படும் பிரதிபலன்கள் கிருபையை அடிப்படையாகக்கொண்டு அளிக்கப்படுகிறது. (யாக்கோபு 2:12, 13).

7. நாம் கிறிஸ்துவினால் நியாயந்தீர்க்கப்படுகிறவர்களாய் இருக்கிறபடியால், நாம் மற்றவர்களை நியாயந்தீர்க்கக்கூடாது. (மத்தேயு7:1-2).

கிறிஸ்து - சிலுவையின் மீதான கிரியை:

கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து சிலுவையில் ஆற்றிய கிரியைகள்:

1. தண்டிக்கப்படுதல் / தண்டனைய ஏற்றுக்கொள்ளுதல் [Punitive]: - கிரயம் செலுத்துதலாய் இருந்தது, இயேசு தன் மீது ஏற்றுக்கொண்ட நியாயத்தீர்ப்பாய் இருந்தது, எல்லா பாவங்களுக்கான நியாயத்தீர்ப்பாய் இருந்தது. கலாத்தியர் 3:13, 2 கொரிந்தியர் 5:21.

2. பதிலாகுதல்: [Substitutionary] - இயேசுக் கிறிஸ்து நமது ஸ்தானத்தில் அவர் தமது ஜீவனைக் கொடுத்தார் / மரித்தார். மேசியாவாகிய இயேசுக்கிறிஸ்து, நமது அக்கிரமங்களுக்காய் நொறுக்கப்பட்டு, நமது மீறுதல்களுக்காய் அவர் காயப்பட்டார் என ஏசாயா தீர்க்கதரிசி, தீர்க்கதரிசனமாய் உரைத்துள்ளார். ஏசாயா 53:5,6, லேவியராகமம் 1:4, 2 கொரிந்தியர் 5:21, 1 பேதுரு 2:24.

3. தன்னார்வமாய் செயல்படுதல்: [Voluntary] - இயேசு பிதாவின் திட்டத்தை அறிந்தவராய், தன்னார்வமுள்ளவராய் சிலுவைக்குச் சென்றார். [யோவான் 10:!8] ஏசாயா சொல்கிறார், அவர் தனது முகத்தை கற்பாறையைப்போலாக்கினாராம். ஏசாயா 50:7.

4. மீட்பின் பணி: [Redemptive] - மீட்பு என்பதன் கிரேக்கச் சொல் ’exagorazo’. Agorazo

means “to buy in a slave market” Ek means “out”. Agorazo = என்பதன் பொருள் "அடிமைச் சந்தையில் கிரயம் கொடுத்து வாங்குதல்" Ek = என்பதன் பொருள் "வெளியே" என்பதாகும். இயேசுக்கிறிஸ்து இவ்வுலகில் பிரவேசித்த போது, பாவ அடிமைத்தன சந்தையில் அடிமைகளாய் இருந்தோம். இயேசு அங்கு கடந்து வந்து, நம் அனைவருக்கும் செலுத்தப்பட வேண்டிய கிரயத்தை அவர் செலுத்தி, அடிமைச் சந்தையின் கதவை திறந்து, விரும்பும் நாம் அனைவரும் விடுதலையாகி, வெளியே செல்ல வகை செய்தார். கலாத்தியர் 3:13, 4:15

5. பிராயச் சித்த செயல்பாடு: [Propitiatory] - தேவனது நியாயத்தீர்ப்பை திருப்தி செய்ய, பாவத்திற்காய் பூரணமான பலியானது அவசியப்பட்டது, கிறிஸ்து பூரணமான பலியாய் இருந்தார். ரோமர் 3:25, 1 யோவான் 3:2.

6. ஒப்புரவாக்குதல்: [Reconciling] - இதனால் தேவனுடன் சமாதானத்தின் உறவை திரும்பப் பெறுகிறவர்களாகிறோம். ரோமர் 5:1

7. பயன் தரக்கூடிய செயல்/திறன்: [Efficacious] - இது பயன் தரக்கூடிய செயலைக்குறிக்கிறது. சிலுவையின் மீதான இயேசுக்கிறிஸ்துவின் கிரியைகளில் எவராவது விசுவாசம் வைக்கும் போது, அவ்வகையான கிரியையானது இரட்சிப்பை முழுமையடையச் செய்கிறதாய் இருக்கிறது. ரோமர் s 5:9, 2 கொரிந்தியர் 5:21, எபேசியர் 2:13, எபிரெயர் 9:11-12.

மரணம்:

1. மரணம் என்பதன் பொருள் "வேறுபிரிக்கப்படுதல்"

2. மரணத்தின் வகைகள்:

சரீர மரணம் - சரீரத்திலிருந்து ஆத்துமா பிரிக்கப்படுதல் (ஆதியாகமம் 35:18).

ஆவிக்குரிய மரணம் - தேவனிடமிருந்து பிரிக்கப்படுதல், தேவனுடன் எவ்விதத் தொடர்புமின்றி இருத்தல் (எபேசியர் 2:1,12, ஆதியாகமம்2:17,3:8)

இரண்டாம் மரணம் - இது வெள்ளை சிங்காசன நியாத்தீர்ப்புக்கு பின்னர் அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் தேவனிடமிருந்து பிரிக்கப்பட்டு அவிசுவாசிகள் சதாகாலமும் தண்டிக்கப்படுவதாகும். (வெளிப்படுத்தல் 20:12-15, 21:8)

ஸ்தான நிலையில் உண்டாகும் மரணம் (Positional death) - கிறிஸ்தவர்கள் இயேசுக்கிறிஸ்துவின் மரணத்தில் இனங்கண்டு கொள்ளப்படுகின்றனர் (

பாவத்திலிருந்து வேறுபட்டு வாழ்தல்) மற்றும் அவரது உயிர்த்தெழுதலிலும் இனங்கண்டு கொள்ளப்படுகின்றனர் (நீதிக்குட்பட்டு வாழ்தல்) ரோமர் 6:3-14 கொலோசெயர் 2:12-14

பாலியல் மரணம் (Sexual death) இனப்பெருக்கம் செய்ய இயலாமை (ரோமர் 4:17-21எபிரெயர்11:11-12)

செயல்பாட்டு மரணம் (Operational death) கிரியை இல்லாத விசுவாசம் செயலற்றது (செத்தது) (யாக்கோபு 2:26)

தற்காலிக மரணம் - மாமிச சிந்தையுள்ள விசுவாசிகள் தேவனுடன் ஐக்கியமற்று இருப்பார்கள் (ரோமர் 8:6-8,13, எபேசியர் 5:14, 1 தீமோத்தேயு 5:6, யாக்கோபு1:15, வெளிப்படுத்தல் 3:1)

3. மரணத்திற்கான காரணங்கள்:

கிரியைகள் நிறைவு பெற்றுவிட்டது (யோவான் 19:30 cfலூக்கா23:46, 2 தீமோத்தேயு 4:7)

தேவனின் மகிமைக்காக - இரத்தசாட்சியாய் மரித்தல் (யோவான் 21:19, அப்போஸ்தலர் 7:55-60)

மரணத்திற்கு ஏதுவான பாவம் - தேவனுக்கு விரோதமாய் இருதயத்தைக் கடினப்படுத்தி ஒழுங்கற்று வாழும் விசுவாசிகள் (1 யோவான்5:16)

தற்கொலை - உங்களது சித்தம், உங்கள் வாழ்விற்குரிய தேவசித்தத்தை மேற்கொள்ளுதல் (1 சாமுவேல் 31:4, மத்தேயு 27:5)

தன்னிகரற்ற கிறிஸ்துவின் மரணம் - தனது சொந்த ஆவியை பிதாவினிடத்தில் ஒப்படைத்தல். (லூக்கா 23:46)

பந்தய வீரர்: (சரீரத்தை - ஒரு நோக்கத்திற்காய் கீழ்ப்படுத்துதல்)

1. பவுல் கிறிஸ்தவ வாழ்க்கையை விவரிக்கும்படியாக, பந்தய வீரர், இராணுவ வீரர், விவசாயி/பயிருடுவோர் போன்றவர்களை உதாரணமாக கூறுகிறவராய் இருக்கிறார். 1 கொரிந்தியர் 9:24-27, பிலிப்பியர் 3:15-17, 2 தீமோத்தேயு 2:5, 4:5-8, எபிரெயர் 12:1-3. Refer SOLDIER, ARMOUR, and passages referred to in EBCWA commentaries. இராணுவ வீரர், சர்வாயுதவர்க்கம் மற்றும் EBCWA வேதாகம விளக்கவுரை போன்றவற்றை ஒப்பிட்டுப்பார்க்கவும்.

2. தேவ தூதர்களின் முறண்பாடானது, ஆவிக்குரிய வல்லமையை பாதிப்பதாய்

இருப்பதால் அதற்கு பாதுகாப்பளிப்பது அவசியமாய் இருக்கிறது, ஆவிக்குரிய வல்லமை மட்டுமே ஜெயத்தை கொண்டுவருகிறதாய் இருக்கிறது, இப்படிப்பட்ட மனநிலையானது இம்மூன்று செயல்பாடுகள் மூலம் விவரிக்கப்படுகிறதாய் இருக்கிறது. Refer ANGELIC CONFLICT, ATTITUDE. பவுல் தனது சரீரத்தின் ஆசைகள் தனது இலக்கை அடைய தடையாய் இருக்க அனுமதிக்கவில்லை 1 கொரிந்தியர் 9:27, 2 கொரிந்தியர் 6:3-10, 11:23-31.

3. பண்டயக் காலத்தில் ஓட்டப்பந்தயத்திற்கான விதிமுறைகள், இன்றைய நாளில் நடைபெறும் ஒலிம்பிக் பந்தயத்தின் விதிமுறைகளைப் போன்று மிகவும் கண்டிப்பு மற்றும் நிபந்தனைகள் உடையதாய் விளங்கிற்று. பவுல் வேண்டிக்கொள்வது இப்படிப்பட்ட விதிமுறைகளின் (தேவனது திட்டத் -தின்) கருத்தை ஆவிக்குரிய நிலையில் நாமும் அனுசரித்தல் அவசியம் என வலியுறுத்துகிறவராய் இருக்கிறார். இதன் அடிப்படைக்கருத்து ஜெயம் பெறுதல் வேண்டும் என்கிற மனநிலையாகும். பந்தய வீரர் பந்தய ஒழுங்கு முறைகளையும், விதிமுறைகளையும் சரிவர கடைபிடிக்காத பட்சத்தில், இவர் ஜெயம் பெறுதல் என்பது நிச்சயமற்றதாகிவிடும், 100% அற்பணிப்புடன் செயல்பட்டு, பூர்த்தியாய் பந்தயத்தை நிறைவு செய்யவில்லை என்றாலும், அவர்கள் ஜெயம்பெறுவது கேள்விக்குறியாகிவிடும். விசுவாசிகள் வாழ்வில் இப்படிப்பட்ட விதிமுறைகளைக் கைக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர்.

4. பண்டைய காலத்தில் பந்தய விதிமுறைகள் கீழ்க்கண்டவாறு இருந்தன.

ஒவ்வொரு பந்தய வீரனும், பந்தயம் நிகழும் இடத்தின் பிரஜையாக இருத்தல் வேண்டும், அந்நிய தேசத்தார் எவரும் இப்பந்தயத்தில் பங்கு பெற அனுமதி கிடையாது.

அவர்கள் பயிற்சியின் போது, அவர்கள் பந்தய அரங்கில் வசித்தல் வேண்டும்.

அவர்களது உடற்பயிற்கான அழைப்பு எக்காளத்தை ஊதி அழைப்பதாய் இருக்கும், இப்படிப்பட்ட எல்லா அழைப்பிற்கும் அவர்கள் முழுமையாக கீழ்படிந்திருத்தல் அவசியம்.

அவர்கள் எண்ணெய் மற்றும் மணல் இவைகளை பூசிக்கொள்ளுதல் வேண்டும், அங்கு நிலவும் தட்பவெப்ப நிலையை பொருட்படுத்தக்கூடாது.

எல்லா உடற்பயிற்சியையும் முழுமையாய் நிறைவு செய்திருத்தல் வேண்டும். எல்லா உடற்பயிற்சியையும் பூர்த்தி செய்யாத பட்சத்தில் அதை உடற்பயிற்சி அளிப்பவர் அங்கீகரிக்க மாட்டார்.

கவனச்சிதறல்கள் அனைத்தும் தடைசெய்யப்படும், பாலுறவு, உறவினர்களின் சந்திப்பு, வேறு எந்தவிதமான அலுவல்கள் கண்டிப்பாய் தவிர்க்கப்படும்.

கண்டிப்பான உணவு விதிமுறையானது செயல்படுத்தப்படும், பந்தய அரங்கில் குறிப்பிட்ட உணவு வகைமட்டுமே வழங்கப்படும்.

ஒவ்வொரு பந்தயமும், வித்தியாசமான, பிரத்தியேக விதிமுறைகளைக் கொண்டதாய் இருக்கும், அவைகளை மீறுதல் கண்டிப்பாய் தவிர்க்கப்படும்.

இப்படிப்பட்ட பந்தய ஒழுங்கை ஒருவர் மீறுவார் எனில் அவர் பந்தயத்தில் கலந்துகொள்ளும் வாய்ப்பை இழக்க நேரிடும், மற்றும் அவர்களது ஜெயம் கிரீடத்தை இழக்க நேரிடும்.

5. பரிசுத்தக் குலைச்சலை தேவன் ஒரு போதும் பொறுத்துக்கொள்கிறவர்/விரும்புகிறவர் அல்லர். 1 பேதுரு 1:15-16. refer HOLINESS. பரிசுத்தம் ஒப்பிடுக: நாம் நமது கிறிஸ்தவ பந்தய சாலையில் ஓட வேண்டுமானால், தேவனது ஆவிக்குரிய தராதரத்தின்படி ஓட வேண்டியவர்களாய் இருக்கிறோம், மற்றும் 100% அற்பணிப்பு இதற்கு அவசியம், இல்லையேல் நாம் தகுதி இழக்கிறவர்களாகிவிடுவோம். நமது வாழ்வில் ஓடிய ஓட்டம் விருதாகிவிடும். Refer REWARDS. ஒப்பிடுக: பிரதிபலன்கள். நித்தியத்திற்கேதுவான வெற்றியின் தராதரத்தில் வீழ்ச்சியுறாதபடி, கனிகொடுக்கும்படி வற்புறுத்தப்படுகிறோம், தேவனது வழிநடத்துதல்படி ஓடத் தவறும் பட்சத்தில், நித்தியத்தில் தேவன் வாஞ்சிக்கும்படியான சிறப்பான காரியங்களை பெறத் தவறுகிறவர்களாகிவிடுவோம். லூக்கா 12:41-48, 13:23-30, 2 கொரிந்தியர் 13:3-6.

கிறிஸ்தவ வாழ்க்கை: அறிக்கை செய்தலும் மற்றும் மன்னிப்பும்.

1. கிறிஸ்துவின் மரணத்தின் மூலம் பாவ மன்னிப்பு உண்டானது (மத்தேயு 26:28, வெளிப்படுத்தல் 1 :5).

2. தெய்வீக மன்னிப்பானது கிறிஸ்துவில் விசுவாசம் வைக்கும் அனைவருக்கும் உரியதாய் இருக்கிறது. (அப்போஸ்தலர் 10:43, 16:31).

3. பாவத்திற்கான கிரயம் கிறிஸ்துவினால் சிலுவையில் கொடுக்கப்பட்டாயிற்று. (எபிரெயர் 9:22, 2 கொரிந்தியர் 5:21).

4. ஒரு விசுவாசி பாவம் செய்யும் போது, தேவனோடுள்ள உறவானது பாதிப்புக்குள்ளாகிறது. இப்படிப்பட்ட பாவங்களை தேவன் அறிக்கை செய்யும் போது மன்னிக்கிறவராய் இருக்கிறார், மற்றும் அறிந்தும் அறியாதும் செய்த பாவங்களை மன்னித்து அவைகளின்று அவர் கழுவுகிறவராய் இருக்கிறார். (1 யோவான் 1: 9).

5. இயேசுக் கிறிஸ்து நமது பிராயச்சித்தமாய் இருக்கிறார். (I யோவான் 2:1,2).

6. மனுஷீக மன்னிப்பானது, தேவன் நம்மை மன்னித்து ஏற்றுக்கொள்வதைப் போன்று இருத்தல் வேண்டும். (எபேசியர் 4:32). இது பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டால் மட்டுமே நிறைவேற்ற சாத்தியமாகும். (எபேசியர் 5:18, கலாத்தியர் 5:22,23).

7. ஐக்கியத்தில் திரும்பசேர்த்துக்கொள்ளப்பட வழிமுறைகள்:

[அ] உங்கள் நோக்கத்தின் உண்மைத்தன்மையை பரீட்சித்து சரிபார்த்தல் வேண்டும். [2 கொரிந்தியர் 14:5].

[ஆ] எதைக் காண்கிறீர்களோ அதன்படி செயல்படுங்கள். [ரோமர் 4:7-8].

[இ] அறிக்கை செய்வதன் மூலம் எவ்வித பாவத்திற்கானாலும் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுங்கள். [1 யோவான் 1:9, சங்கீதம் 66:18].

[ஈ] அறிக்கை செய்த பாவத்தை மறந்து விடுங்கள். அதைக் குறித்த குற்ற உணர்வு உங்களை அலைக்கழிக்க இடமளியாது இருங்கள். [பிலிப்பியர் 3:13-14, சங்கீதம் 103:10-12].

[உ] உங்கள் ஆவிக்குரிய செயல்பாடுகளுள்ள நடைக்கையை திரும்பப்

பெற்றுக்கொள்ளுங்கள். நீங்கள் இலகுவாய் பாவத்தில் விழக்கூடிய சோதனைகளுக்கு விலகியிருங்கள். [எபிரெயர் 12:12-13].

[ஊ]. தேவனுடன் ஒப்புரவான பின்னர் மற்றவர்களுடனும் ஒப்புரவாகுங்கள் [யாக்கோபு 5:16].

[எ] தொடர்ந்து முன்னேறுங்கள் மற்றும் ஆவிக்குரிய நிலையில் வளருகிறவர்களாய் இருங்கள். [2 பேதுரு 2:17-18].

நியாத்தீர்ப்பு: வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு.

1. வெள்ளை சிங்காசன நியாத்தீர்ப்பானது இறுதி நியாயத்தீர்ப்பாய் இருக்கிறது. (வெளிப்படுத்தல் 20:11, 15)

2. இப்படிப்பட்ட நியாத்தீர்ப்பில், அவிசுவாசிகள் மட்டுமே இடம் பெறுவர், கிறிஸ்தவர்களுக்கு இப்படிப்பட்ட நியாயத்தீர்ப்பு கிடையாது. (ரோமர் 8:1).

3. ஆயிர வருட அரசாட்சியின் இறுதியில் இப்படிப்பட்ட நியாத்தீர்ப்பானது நிகழும். (வெளிப்படுத்தல் 20:7-15).

4. இரட்சிப்படையாதோர் புஸ்தகங்களில் எழுதப்பட்ட அவர்கள் கிரியைகளுக்குத்தக்கவாறு, நியாத்தீர்ப்படைவர். (வெளிப்படுத்தல் 20:12).

5. இந்த நியாயத்தீர்ப்பு மனிதக் கிரியைகள் தேவ நீதியை திருப்திபடுத்துவதில்லை என்பதைக்காட்டுகிறது. தேவன் முற்றிலும், கிறிஸ்துவின் 'நற்கிரியையாகிய' சிலுவை மரணத்தினால் மட்டுமே திருப்தி கொண்டு இருப்பதை காட்டுகிறது.

6. இரட்சிப்படையாதோர், காட்டப்பட்டுள்ளபடி தேவனுடைய பரிசுத்தத்தை நிறைவேற்றி அவரை திருப்திபடுத்தத் தவறியுள்ளனர், இப்படிப்பட்டோர் நியாயந்தீர்க்கப்பட்டு, எரிகிற அக்கினியும் கந்தகமும் உள்ள கடலில் பங்கடைவர் (வெளிப்படுத்தல் 20:15).

நரகமும் மற்றும் பாதாளமும்:

1. நரகம் என்கிற பதத்திற்கான கிரேக்கச் சொல்: GEHENNA. என்பது: இப்படிப்பட்ட இடத்தில் சிறுபிள்ளைகள் மோளேகு என்னும் அந்நிய தேவருக்கு தகனபலியாகக் கொடுக்கப்படுவர். (2 நாளாகமம் 33:6, எரேமியா 7:31). மோளேகு என்பது மிகப்பெரிய விக்கிரமாக இருக்கிறது, இதன் உள்ளங்கையை விரித்த வண்ணம் இருக்கும், இதன் கையில் பிள்ளைகளை அழுந்தக் கட்டி உயிருடன் எரித்து பலி கொடுப்பர்.

2. நரகம் இதைப்போன்றே எரிகிற அக்கினிக்கடலாய் இருக்கிறது, இழந்து போனோர் தங்களது நித்தியத்தை இங்கு கழிக்க நேரிடும். (வெளிப்படுத்தல் 19:20, 20:10).

3. Hades (Gk) என்கிற பதமானது புதிய ஏற்பாட்டில் அடிக்கடி நரகம், பாதாளம் என்கிற சொற்களாய் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. இது பழைய ஏற்பாட்டு சொற்களாயும் இருக்கிறது. Hades and Sheol ஆதீசு மற்றும் பாதாளம் என்னும் ஸ்தலம், பூமியின் மையப்பகுதியில் இருக்கிறது. cf. Saul, Samuel (from Paradise or Abraham's Bosom) எந்தோரின் சூனியக்காரியின் சூனிய செயலால், சவுல், சாமுவேலை பரதீசிலிருந்து ஏறிவரக்கண்டார். (1 சாமுவேல் 28:7-19). Hades or Sheol ஆதீசு அல்லது பாதாளம் என்கிற ஸ்தலத்தில் மரித்தோரின் ஆத்துமா மற்றும் அவர்களது ஆவி உயிர்த்தெழுதலுக்காக காத்திருப்பனவையாய் இருக்கிறது. ஆதீசு என்கிற இடத்தில் ஒரு கூட்டம் தூதர்கள் காவல் செய்யப்பட்டு காக்கப்பட்டு வருகின்றனர். - TARTARUS.

4. பாதாளம் மூன்று பிரிவுகளாய் பிரிக்கப்பட்டிருக்கின்றன, அதில் ஒரு பகுதியானது மற்ற இருபகுதியினின்று பிரிக்கப்பட்டு அதன் நடுவே ஒரு "பெரிய பிளவு" காணப்படுகிறதாய் இருக்கிறது. (லூக்கா 16:19-31). லாசரு, ஐசுவரியவான் சம்பவம் உவமையல்ல, இது ஒரு உண்மைச் சம்பவமாய் கருதப்படுகிறது காரணம், இதில் கூறப்பட்டுள்ள இடம், பெயர் சம்பவம் உண்மையானதாய் இருக்கிறது.

[அ] ஆபிரகாமின் மடி அல்லது பரதீசு - இயேசுக்கிறிஸ்து பரமேறும் வரை இரட்சிப்படைந்து தாபரித்த இடமாய் இருக்கிறது. மனந்திருந்திய கள்ளனுக்கு கர்த்தர் இவ்வாறு கூறினார், "இன்று நீ என்னுடன் பரதீசிலிருப்பாய்" என்றார்.

(லூக்கா 23:43).

[ஆ] உபாதிக்கப்படுதல் - இரட்சிப்படையாதோர் தாபரிக்கும் ஸ்தலமானது, ஆயிர வருட ஆழுகையின் இறுதி வரை பாதுகாக்கப்பட்டு, கடைசி நியாயத்தீர்ப்பு வரை பாதுகாக்கப்படுகிறதாய் இருக்கிறது. இவ்விடத்தில் மிகுந்த வருத்தங்களும், பாடுகளும் நிறைந்து காணப்படும். (வெளிப்படுத்தல் 20:13).

[இ] Tartarus - தங்கள் ஆதிமேன்மையை காத்துக்கொள்ளாத தேவ தூதர்கள் சிறைப்படுத்தப்பட்டுள்ள ஸ்தலம். இப்படிப்பட்ட தேவதூதர்கள் ஆதியாகமம் 6 ம் அதிகாரத்தில் விழுந்து போனவர்கள். இது அவர்களது சிறைவாசம் செய்யும் இடமாய் இருக்கிறது. (2 பேதுரு 2:4).

5. கிறிஸ்து பரமேறினது முதற்கொண்டு பரதீசானது காலியாய் இருக்கிறது - பழை ஏற்பாட்டு இரட்சிப்படைந்தோர் அனைவரும் மூன்றாம் வானத்திற்கு எழுந்தருளிச் சென்றுள்ளனர். (2 கொரிந்தியர் 12:1-4, எபேசியர் 4:7-10).

6. இப்பொழுது மரணமடையும் விசுவாசிகள், நேரடியாக மூன்றாம் வானத்திற்குச் செல்கிறவர்களாய் இருக்கின்றனர், (கர்த்தருடன் அவரது வீட்டில் தாபரிக்க) இவர்கள் ஆவியும், ஆத்துமாவும் அங்கு செல்கிறதாய் இருக்கிறது, அவர்கள் உயிர்த்தெழுந்த சரீரம் இங்கில்லை. (2 கொரிந்தியர் 5:8).

7. ஆதீசில் இருப்பவர்கள் (உபாதிக்கப்படுகிற இடத்தில்) மகா பெரிய வெள்ளை சிங்காசன நியாத்தீர்ப்பின் போது கொண்டுவரப்படுவர். அதன் அவர்கள் நியாயந்தீர்க்கப்பட்டு அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலில் தள்ளப்படுவர். (வெளிப்படுத்தல் 20:13-15). இதுவே இறுதி நியாயத்தீர்ப்பு.

8. ஆதீசு பூமியின் மையப்பகுதியில் இருக்கிறது, (மத்தேயு 12:40; 1 சாமுவேல் 28:7-15)

9. அக்கினிக்கடலில் தண்டனைக்கு வரையறை என்பது கிடையாது.

[அ]

a) Degrees of punishment tend to deny the literal lake of fire. Nothing to indicate the temperature of the lake of fire is not constant.
b) Degrees of punishment is contrary to the doctrine of unlimited atonement. Christ died for every sin that has ever been committed. Man is not judged on the basis of his sins but human good.

(Revelation 20:11-15)
c) Degrees of punishment destroys the principle of salvation. Its concept is that one rejecter of grace gets less fire than another rejecter of grace. The unsaved are unsaved because they reject grace.
d) Degrees of punishment is based on the theory that for a thesis there is an antithesis and when they come together you have synthesis (the Hegelian fallacy).
e) False concept:- One person commits a bad sin, one person performs a marvellous good work. Obviously there must be different degrees of punishment in eternity.

பக்கம் 196

விருத்த சேதனம்:

1. ஆபிரகாமின் உடன் படிக்கையின் அடையாளமாய் விருத்தசேதனமானது தேவனால் வடிவமைக்கப்பட்டதாய் இருக்கிறது. (ஆதியாகமம் 17:10-14).

2. இது சரீர அறுவைசிகிச்சையாகவும் அதே சமயம் விருத்தசேதனமானது சடங்காச்சாரமான ஒன்றாயும் இருந்தது. (ரோமர் 2:25)

3. யூதர்களில் ஒருவனும் விருத்தசேதனமின்றி பஸ்கா பண்டிகையில் பங்கெடுத்தல் கூடாததாய் இருந்தது. (யாத்திராகமம் 12:48).

4. விருத்தசேதனம் ஆண்குழந்தையை பிரதிஷ்டை செய்வதைச் சுட்டிக்காட்டுகிறது. இது எட்டாம் நாளில் செய்யப்பட்டது. (லேவியராகமம் 12:2,3)

5. விருத்தசேதன சடங்காச்சாரம் சபையுகத்தில் முக்கியத்துவம் பெறவில்லை மற்றும் இது தவறான அறிமுகமாய் விளங்குகிறது. (1 கொரிந்தியர் 7:18,19; கலாத்தியர் 5:2,3; எபேசியர் 2:11).

6. விருத்த சேதனம் லீகலிச கருத்தினரால் ஆதரிக்கப்படுகிற கருத்தாய் மாறியது. (அப்போஸ்தலர் 15:1,24; கலாத்தியர் 6:12,13).

7. விருத்த சேதனமானது யூதர்களை இனத்தாலும், தேசத்தாலும், இனங்காணும்படி செய்கிறதாய் இருக்கிறது. (கலாத்தியர் 2:8; கொலோசெயர் 4:11; தீத்து 1:10; எபேசியர் 2:11).

8. யூதர்கள் எகிப்தில் அடைமைகளாய் இருந்த காலத்தில் தங்களது

ஆண்பிள்ளைகளுக்கு விருத்தசேதனம் செய்வதில் தவறியிருந்தனர். (யாத்திராகமம் 4:24-26).

9. இதை அவர்கள் புறக்கணித்தபடியால் அவர்கள் வனாந்திரத்தில் அலைந்து திரிவதைத் தொடர வேண்டியதாய் இருந்தது. (யோசுவா 5:4,5).

10. மோசே தனது குமாரர்களுக்கு விருத்தசேதனம் செய்வதை புறக்கணித்து இருந்தார். (யாத்திராகமம் 4:24,25).

11. ஒரு யூதக்குழந்தைக்கு விருத்த சேதனம் செய்வது, நவீன கால சபையில் ஒரு குழந்தையை பிரதிஷ்டை செய்வதற்கு சமமாய் கருதப்பட்டது. முதியோர் விருத்த சேதனமானது (ஆதியாகமம் 17:24-27). சபை யுகத்தில் விசுவாசிகளின் ஞானஸ்நானமாய் பகுப்பாய்வு செய்யப்படுகிறது.

நியாயப்பிரமான கிரியைகள் மூலம் இரட்சிப்பு (LEGALISM).

1. தேவனுடையநியாயப்பிரமாணத்தின்சிலபகுதிகள், விசுவாசிஅதைமீறாதபடிக்குஅவரின்பெலத்துக்குரியபகுதியாய்இருக்கிறது.

2. இருநபர்கள்மனிதஇயல்பின்படி, ஒரேபகுதியில்அவர்கள்பலத்தையோஅல்லதுபெலவீனத்தையோபெற்றுஇருக்கமுடியாது.

3.நியாயப்பிரமாணத்தின் ஒரு பகுதியை மீறுவதே ஒருநபரை பாவியாகத்தீர்க்கிறது என்பது நியாயப்பிரமாணத்தின் மற்றொரு பகுதியாகும் -எல்லோரும் பாவம் செய்து தேவமகிமை அற்றவர்களானோம். (ரோமர்3:23).

4. சுயகிரியைகளின் மூலம் இரட்சிக்கப்படுவதும், சுயநீதியும், எல்லாபாவங்களும், பழைய பாவசுபாவத்திலிருந்தே வருகிறது என்பதை முற்றிலும் மறந்து செயல்படுகிறது.

5. ஒவ்வொருவரும் பாவசுபாவத்தைப் பெற்றவர்களாய் இருக்கின்றனர். நியாயப்பிரமாணத்தை மீறுவது, அவைகள் இருப்பதை நிருபணம் செய்கிறதாய் இருக்கிறது.

6. சுயகிரியைகளின் மூலம் இரட்சிப்பை அடைவோர், தாங்கள் கைக்கொள்ளும் கட்டளைகளை முக்கியப்படுத்துகின்றனர். உண்மையுள்ள நபர்களோ, தாங்கள் நிறைவேற்றத்தவறும் கட்டளைகளை உணர்கின்றனர்.

7. உபதேசமானது, சுயக்கிரியைகளின் மூலம் இரட்சிப்பையும், சுயநீதியையும் கிருபையின் அடிப்படையில் நீங்கலாக்குகிறது.

8. சுயக்கிரியையின் மூலம் இரட்சிப்பு, பெலவீனரை குறுகியவட்டத்திற்குள் கொண்டுவருகிறது அல்லது பாவத்தனமையின் மீது பாவத்தை சுமத்தி, பலவீனத்தையும், இன்னொருவரை காரணம் காட்டி பாவத்தை சுமத்துவதும் வலியுறுத்தப்படுகிறது.

9. ஒருவர் தனது சொந்த பெலத்தில் தவறும்போது, சுயக்கிரியை மூலம் இரட்சிப்பை வலிறுத்துவோர், அவர்களை ஆக்கிணைக்குட்படுத்துகின்றனர். அவர்கள் எல்லோரும் பாவம்செய்து பாவத்திற்கு கீழாக இருக்கிறோம் என உணராதிருக்கிறார்கள்.

10. சிலவேளைகளில் சுயக்கிரியைகளின் மூலம் இரட்சிப்பு எனவாதிடுவோர், 1 யோவான் 1:8, மற்றும் 1 யோவான் 1:10 இவ்விரண்டு வசனங்கள் அடிப்படையில் மிக ஆணித்தரமாய் அவைகள் நிறைவேறுதல் குறித்து கூறுகின்றனர்.

11. ஒருவர் ஒரு முறை பாவம் செய்யும்போதும் மட்டுமே குற்றமனசாட்சியுடன் இருக்கமுடியும், ஆயிரமுறை அதை செய்யும்போது அவ்வாறு இருக்கமுடியாது. (யாக்கோபு 2:10).

கிறிஸ்தவ வாழ்க்கை -- கிறிஸ்துவில் நமது ஸ்தானம்:

1. இவ்வுலக அமைப்புகளில் நமக்குள்ள ஸ்தானத்தை விட கிறிஸ்துவில் நமக்கு ஒரு ஸ்தானத்தைப் பெற்று இருக்கிறோம். நாம் உலகிலிருந்து பிரிக்கப்பட்டு, இவ்வுலக அமைப்புகளிலிருந்து வித்தியாசமானவர்களாய் இருக்கிறோம். நமக்கு ஒரு புதி ஸ்தானம் இயேசுக்கிறிஸ்துவில் நமக்குண்டு. -- எபேசியர் 2:6.

2. நாம் கிறிஸ்துவுடன் புதிய பங்காளத்துவத்தைப் பெற்று இருக்கிறோம், நாம் ஒருபோதும் தனித்து இருக்கவில்லை. கொலோசெயர் 3:4, யோவான் 17. நாம் அவருடன் பரஸ்பர அந்யோந்யத்தைப் பெற்று இருக்கிறோம். இதிலிருந்து நாம் ஒருபோதும் தப்பிக்கொள்ள முடியாத சூழலில் நம்மை வைத்திருக்கிறார் என கிறிஸ்து கூறுகிறார். தப்பிக்கொள்ளும் மார்க்கம் இயேசுக்கிறிஸ்துவின் மூலம் இருக்கிறது.

3. நாம் தேவனுடன் உடன் வேலையாட்களாய் இருக்கிறோம்; நாம் அவரது பணியில் இருக்கிறோம் -- 2 கொரி. 3:9, 1:9, 6:1.

4. நாம் புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரராய் இருக்கிறோம், மனிதனுக்கு புதிய செய்தியைப் பெற்றவர்களாய் இருக்கிறோம். 1கொரி. 3:6, 6:4.

5. நாம் கிறிஸ்துவின் ஸ்தானாபதிகளாய் இருக்கிறோம் - 2 கொரி. 5:20.

6. நாம் ஜீவனுள்ள நிருபங்களாய் இருக்கிறோம்; இரட்சிக்கப்படாத இழந்து போகப்பட்ட உலகிற்கு கடிதங்களாய் இருக்கிறோம். நாமது வாழ்க்கை என்னும் புஸ்தகத்திலிருந்து கிறிஸ்துவை வாசித்து அறியக்கூடியதாய் இருத்தல் வேண்டும். நமது வாழ்க்கையும் நமது உதடுகளும் கிறிஸ்துவை மட்டுமே, அவரை மட்டுமே வெளிப்படுத்துகிறதாயும் மற்றும் அறிவிக்கிறதுமாய் இருத்தல் வேண்டும்.

7. நாம் இராஜரீக குடும்பத்தின் அங்கத்தினராய் இருக்கிறோம் -- கலாத்தியர் 6:10, 1 பேதுரு 2:9.

8. நாம் பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவருடன் இணைக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம்.

நாம் பிதாவில் இருக்கிறோம், அவர் நம்மில் இருக்கிறார் - எபேசியர் 4:6.

நாம் கிறிஸ்துவுக்குள் இருக்கிறோம் - யோவான் 14:20.

அவர் நமக்குள் இருக்கிறார் - கொலோசெயர் 1:26.

நாம் ஆவியானவருக்குள் இருக்கிறோம், அவர் நமக்குள் இருக்கிறார் - ரோமர் 8:9.

நாம் எந்நாளும் தேவனுடன் இணைக்கப்பட்டவர்களாய் இருக்கிறோம்.

உலக ஆத்துமாவில் நாம் ஒரு பகுதியல்ல. அது ஒரு புது யுகமாய் இருக்கிறது.

நாம் தனிப்பட்ட தேவனுடன் வாழும் இணைப்பில் பிரவேசித்துள்ளோம்.

9. நாம் அவர் சரீரத்தின் அங்கங்களாய் இருக்கிறோம், திராட்சைச் செடியின் கிளைகளாய் இருக்கிறோம், ஜீவனுள்ள கற்களாய் இருக்கிறோம், அவரது மாளிகையாய் இருக்கிறோம், அவரது தொழுவத்தில் உள்ள ஆடுகளாய் இருக்கிறோம், அவரது மணவாட்டியின் ஒருபகுதியாய் இருக்கிறோம், அவரது இராஜ்ஜியத்தில் ஆசாரியர்களாய் இருக்கிறோம், அவரது மகிமைக்காய் வேறுபிரிக்கப்பட்ட பரிசுத்தராய் இருக்கிறோம்.

90. கிருபை

1. சிலுவையின் அடிப்படையில் தேவன் மனிதனுக்கு சுதந்தரமாய் எல்லாவற்றையும் செய்வது கிருபையாய் இருக்கிறது. இதினிமித்தம் கிருபை என்பது தகுதியற்ற நபருக்கு தேவனிடமிருந்து கிடைக்கும் தயையாய் இருக்கிறது.

2. கிருபை தேவனுடைய பண்பைச் சார்ந்ததாய் இருக்கிறது, இதினிமித்தம் கிருபை தேவன் யார் மற்றும் அவர் எப்படிப்பட்டவர் என்பதைச் சார்ந்து இருக்கிறது. தேவன் தனது குணாதிசயங்களில் உண்மையாய் இருந்துகொண்டு மனிதனுக்கு செய்யும் தயையாய், கிருபை இருக்கிறது.

3. விசுவாசி நியாயப்பிரமாணத்தின்படி நடப்பதற்கும், கிருபைக்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்துகொள்ளவேண்டும். நியாயப்பிரமாணத்தின் படியுள்ள மனிதனின் கிரியை தேவனின் திட்டத்திற்கு இடையூறாக இருக்கிறது.

4. இரட்ச்சிப்படைந்த நபரின் வாழ்வில் தேவன் செய்யும் மிகப்பெரிய காரியம் அந்நபரை மிகத்துள்ளியமாய் தனது குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவைப்போன்று உருவாக்குவது ஆகும். இது மூன்று வகையான சுத்திகரிப்பு மூலம் நிறைவேற்றப்படுகிறது.

அந்தஸ்து ரீதியாக பரிசுத்தம்மாக்கப்படல்: இரட்சிப்பில் ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவுடன் இணைக்கப்படுகின்றனர். (எபிரெயர்1:2). இயேசுக்கிறிஸ்து பிதாவின் வலது பாரிசத்தில் அமர்ந்தபடியால் அவர் எல்லா தேவ தூதர்களைக்காட்டிலும், தனது மனுஷீக அந்தஸ்தில் உயர்ந்தவராய் விளங்குகிறார். நாம் இரட்சிக்கப்படும்போது, கிறிஸ்துவுடன் இணைப்பில் பிரவேசிப்பதால், நாம் நமது அந்தஸ்தில் தேவதூதர்களைவிட உயர்ந்தவர்களாய் இருக்கிறோம். நமது அந்தஸ்து ரீதியாக கிறிஸ்துவுடன் பிதாவின் வலது பாரிசத்தில் உட்காருகிறோம்.
அநுபவ ரீதியாக பரிசுத்தமாக்கப்படுதல்: இது பூமியில் வாழும் காலத்தில் பரிசுத்த ஆவியானவர், கிறிஸ்தவ வாழ்க்கையில் ஏற்படுத்தும் சுத்திகரிப்பு ஆகும். இக்காலத்தில் தேவனின் பண்புகளை நம்மில் ஏற்படுத்துகிறவர்களாய் இருக்கிறோம். பொன், வெள்ளி, விலையுயர்ந்த கற்கள் இவைகளைப்போல உருவாக்கப்படுகிறோம். (1 கொரிந்தியர்3:12-15)
எல்லாவற்றிற்கும் மேலான ரீதியில் பரிசுத்தமாக்கப்படுதல்: விசுவாசி உயிர்த்தெழுந்த சரீரத்தை பெற்றுக்கொள்ளும்போது, பாவத்தன்மை மற்றும் மனித நற்கிரியகளை இழக்கிறான். இக்காலக்கட்டத்தில் சரீரப்பிரகாரமாய் மனிதன் தேவதூதர்களை விட உயந்தவனாகிறான். இந்த பூரண அந்தஸ்தில் அவன் நித்திய காலமாய் இருப்பான்.

5. எல்லா விசுவாசிகளும் கிருபயை குறைந்த பட்சம் ஒருமுறையாவது ருசிபார்த்து இருக்கவேண்டும். (1 பேதுரு2:3). இது இரட்சிப்பின் போது விசுவாசிகள் குறைந்த பட்சம் 34 அந்தஸ்துகளை அவர்கள் சம்பாதிக்காத நிலையில் அல்லது அதற்கு எவ்வளவேனும் தகுதியற்ற நிலையில் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறார்கள். (எபேசியர் 2:8, 9) கிருபையைக்குறித்து குழப்பமுறுவது கிறிஸ்தவ வாழ்க்கையில் மகாப்பெரிய அபாயத்திற்கு வழி நடத்தும். (கலாத்தியர்5:4எபிரெயர்12:15).

6. கிருபயைக்குறித்த தெய்வீக மனப்பான்மை ஏசாயா 30:18,19 ல் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தேவன் தொடர்ந்து, விசுவாசிகளின் கிறிஸ்தவ வாழ்க்கையில் ஆசீர்வாதங்களை கொடுக்க காத்து இருக்கிறார்.

7. இரட்சிப்பில் உள்ள கிருபை அநேக வழிகளில் வெளிக்காட்டப்படுகிறது. இது எப்பொழுதும் இயேசுக்கிறிஸ்துவை விசுவாசிப்பதாகவே இருக்கிறது. (சங்கீதம் 103:8-12, ரோமர்3:23-4, ரோமர் 4:4, 5:20, எபேசியர்2:8, 9).

8. கிருபையை வெளிக்காட்ட கிறிஸ்தவ வாழ்க்கையில் அநேக வழிகள் உண்டு.
ஜெபம் (எபிரெயர்4:16)
உபத்திரவங்கள் / துன்பங்கள் (2 கொரிந்தியர்12:9, 10).
வளர்ச்சி (2 பேதுரு3:18).
நிலையானத்தன்மை (1 பேதுரு 5:12).
வாழ்க்கை முறை (எபிரெயர் 12:28, 2 கொரிந்தியர் 1:12).
தெய்வீக நன்மையின் உற்பத்தி (1 கொரிந்தியர்15:10, 2 கொரிந்தியர் 6:1).

9. கொடுப்பது கிருபையின் சரியான மனநிலையாய் இருக்கிறது. (2 கொரிந்தியர் 8 & 9).

10. கிறிஸ்தவ வாழ்வில் உபத்திரவங்களை கையாள கிருபை மட்டுமே ஒரே வழியாக இருக்கிறது. (2 கொரிந்தியர்12:7-10)நெருக்கப்படுகிற காலங்களிலிலும், விரோதிக்கப்படுகிற காலங்களிலும் கிருபையின் மூலம் தேவன் ஒரு விசுவாசியை ஆசீர்வதிக்கிறவராய் இருக்கிறார். (1 பேதுரு1:6,7).

11. கிருபையின் விளைவுகள்:

தேவன் பூரணராய் இருக்கிறார். அவரது திட்டம் பூரணமாய் இருக்கிறது.
பூரணமான திட்டம் பூரணமான தேவனிடமிருந்து மட்டுமே கடந்து வரமுடியும்.
தேவனுடைய திட்டத்தில் மனிதன் எதையாகிலும் செயதால், அவரது திட்டம் ஒருபோதும் பூரணமாய் இருக்கமுடியாது.
ஒருதிட்டத்தில் பெலவீன இணைப்பு இருக்குமேயானால் அத்திட்டம் பலமாய் இருக்க வாய்ப்பில்லை. இதினிமித்தம் கிருபை மனிதத் தகுதி மற்றும் மனிதத் திறமைகளை புறக்கணிக்கிறது.

நியாயப்பிரமாணத்தை அநுசரித்தல், மனிதக்கிரியைகள் போன்றவை கிருபைக்கு எதிரிகளாய் விளங்குகின்றன.
இதினிமித்தம் மனிதனின் நீதிக்கிரியைகள் தேவனது திட்டத்தில் இடம்பெறவில்லை. (ஏசாயா64:6).
f) தெய்வீக நன்மையினால் உருவாகிறதாய் இருக்கிறது. (1 கொரிந்தியர் 15:10, 2 கொரிந்தியர் 6:1)

12. கொடுப்பது சம்பந்தப்பட்ட விஷயத்தில் கிருபை என்பது சரியான மனநிலையைக் காட்டுவதாய் இருக்கிறது. (2 கொரிந்தியர் 8 & 9).

13. கிருபை என்பது கிறிஸ்தவ வாழ்வில் பாடு உபத்திரவத்துடன் ஒத்து போகும் ஒரே வழியாய் இருக்கிறது. (2 கொரிந்தியர் 12:7-10) கிருபையின் மூலம் தேவன் ஒரு விசுவாசியை அவரது நெருக்கங்கள் மற்றும் சத்துருக்களால் சூழப்பட்ட நிலையில் ஆசீர்வதிக்கக்கூடியவராய் இருக்கிறார். (1 பேதுரு 1:6,7).

14. கிருபையானது சம்பந்தப்படுத்தப்படுதல்.

[அ] தேவன் பூரணர், அவரது திட்டம் பூரணமானது.

[ஆ] பூரணமான திட்டமானது பூரணமான தேவனிடமிருந்து மட்டுமே உருவாக முடியும்.

[இ] தேவனது திட்டத்தில் மனிதன் எதையாகிலும் செய்யக்கூடுமானால், அத்திட்டம் ஒரு போதும் பூரணமானதாய் இருக்க முடியாது.

[ஈ] ஒரு திட்டத்தில் பெலவீன இணைப்பு காணப்படுமேயானால் அது வலிமையான திட்டமாய் இருப்பதற்கு சாத்தியமில்லை. கிருபையானது இதினிமித்தம் மனிதத் தகுதி, மனிதத் திறமை புறம்பாக்குகிறதாய் இருக்கிறது.

[உ] லீகலிஸம், மனிதக் கிரியைகள் கிருபையின் விரோதிகளாய் இருக்கின்றனர்.

[ஊ] மனித நீதிக்கிரியைகள் தேவனது திட்டத்தில் இதினிமித்தம் இடம் பெறாது இருக்கின்றன. (ஏசாயா 64:6)

கிருபை -- கிருபையிலிருந்து விழுதல்:

1. இரட்சின்போது, தேவனது கிருபையானது நமக்கு ஒரு ஸ்தானத்தையும், தேவனுக்கு முன்பாக நிற்க ஒரு இடத்தையும் நமக்கு அளிக்கிறதாய் இருக்கிறது. ரோமர் 5:2, எபேசியர் 1:6.

2. ஆவிக்குரிய வாழ்க்கையின் இலக்கு, நமது ஸ்தானத்தை கிறிஸ்துவில் ஏற்படுத்துவது மற்றும் நமது செயல்பாடு ஒன்றாயிருக்கவும், அதையே செய்வதாயும் இருத்தல் வேண்டும்.

3. நாம் பற்றிக்கொண்டிருப்பதிலிருந்து [cling to] விழ முடியாது. எபிரெயர் 10:23 "உறுதியாய் பிடித்துக்கொள்வது"

4. நமது கிறிஸ்தவ அற்பணிப்பிலிருந்து விலகும்பொழுது (1 தீமோத்தேயு 5:12), தேவனது கிருபையை போக்கடிக்கிறவர்களாய் இருக்கிறோம்.

5. இது இரட்சிப்பை இழந்து போவது என்பது பொருளாகாது, இது ஆவிக்குரிய வாழ்வை இழந்து போவதாய் இருக்கிறது.

6. கலாத்தியர்கள் இப்பட்டிப்பட்ட நிலமையில் இருப்பதாய் விவரிக்கப்படுகின்றனர்:
   ஆவியிலிருந்து மாம்சீகத்திற்கு திரும்புதல், கலாத்தியர் 3:3.
   கிருபையிலிருந்து (விசுவாசத்திலிருந்து) நியாப்பிரமாணத்திற்கு திரும்புதல், கலாத்தியர் 3:2
   கிருபையினின்று விழூதல் கலாத்தியர் 5:4 c/f. வச. 1-7.

7. இதைப்போன்ற நிலை எபேசிய சபையிலும் காணப்பட்டது வெளிப்படுத்தல் 2:5.

46. சபையும் இஸ்ரவேலரும்

சபை, இஸ்ரவேல் வேறு வேறாக இருக்கிறது:

1. யூதர்கள் ஆபிரகாமிலிருந்து ஆரம்பமானவர்கள் (ஆதியாகமம் 12:1-3). சபை பெந்தெகொஸ்தே நாளில் இருந்து ஆரம்பமானது (அப்போஸ்தலர் 2, கலாத்தியர் 3:26-28).

2. இஸ்ரவேலுக்கு பூமியின் மீதுள்ள ஆசீர்வாதங்கள் வாக்களிக்கப்பட்டது (உபாகமம் 28:1-14). சபைக்கு உன்னதங்களில் உள்ள ஆசீர்வாதங்கள் வாக்களிக்கப்பட்டது. (எபேசியர் 1:3; எபிரெயர் 3:1)

3. இஸ்ரவேலருக்கு தேவனோடுள்ள உறவு உடன்படிக்கையின் அடிப்படையில் இருந்தது. (ஆதியாகமம் 17:7,8). சபைக்கு தேவனோடுள்ள உறவு புதிய பிறப்பின் அடிப்படையில் இருக்கிறது. (யோவான் 1:12;13; 1 பேதுரு 1:23).

4. இஸ்ரவேலருக்குள்ள தீர்க்கதரிசனம் அனைத்தும் முக்கியமாய் பழைய ஏற்பாட்டில் இருந்து இருக்கிறது. சபைக்குள்ள தீர்க்கதரிசனங்கள் புதிய ஏற்பாட்டில் மட்டுமே இருக்கிறது.

5. இஸ்ரவேலர் எருசலேமில் மட்டும் ஆராதித்து வந்தனர் (சங்கீதம் 122:1-4). சபையானது கிறிஸ்துவின் நாமத்தில் எங்கோ இரண்டோ மூன்றோ பேர் கூடுமிடத்தில் ஆராதித்து வருகின்றனர். (மத்தேயு 18:20).

6. இஸ்ரவேலர் நியாயப்பிரமாணத்திற்கு கீழ் வாழ்ந்தனர் (எசேக்கியேல் 20:10-12). சபையோ கிருபைக்குக் கீழாய் இருக்கிறது. (யோவான் 1:17; ரோமர் 6:14).

7. இஸ்ரவேலரின் அந்தியம் பாலஸ்தீனத்துடன் முடிவடைகிறது. (ஏசாயா 60:18-21). சபையானது பூமியிலிருந்து அகற்றப்படும் (I தெசலோனிக்கேயர் 4:13-18).

8. கிறிஸ்து இஸ்ரவேலருக்கு இராஜாவாகவும், மேசியாவாகவும் இருக்கிறார். கிறிஸ்து சபைக்கு தலையாகவும் மணவாளனுமாய் இருக்கிறார்.

9. இஸ்ரவேல் யூதர்களை மட்டுமே கொண்டதாய் இருக்கிறது. சபையானது யூதர்களையும் புறஜாதியாரையும் கொண்டதாய் இருக்கிறது.

NOTES

அத்தியாயம் 7

மரணபரியந்தம் ஊழியப்பணி செய்தல்:

நவீனகாலத்தில் மேற்கத்திய நாடுகளில் பொதுவாக, ஓய்வூதியத்திற்கான விளம்பரங்களைச் செய்து வருவது சாதாரணமான ஒன்றாய் கண்டுவருகிறோம். கடைசி காலத்தில் மக்கள் போதிய அளவு சேமிக்காத பட்சத்தில் அவர்களை இரண்டாம் தரமக்களாய் கருதி வருகின்றனர். ஓய்வு பெறுவது என்பது நவீன கால கருத்தாய் இருக்கிறது. இது வேதாகம கருத்து அல்ல, வாழ்க்கையில் செய்து வரும் வேலையை நிறுத்திவிட்டு, வெளியேறுவது அந்நிய காரியமாய் வேதாகமம் கருதுகிறது.

விசுவாசிகளாகிய நாம், சம்பாத்தியத்திற்காக செய்யும் வேலையில் நமக்கு "ஓய்வு" அளிக்கலாம், அதன் பின்னர் நமது அந்திய காலத்தில் கர்த்தருக்காய் அதிகம் செயல்பட்டு, கர்த்தரை நெருங்கிச் சேர்ந்து, அவரை சந்திப்பதாய் இருத்தல் வேண்டும். "மரண பரியந்தம் கர்த்தருக்காய் ஊழியம் செய்தல்" என்கிற தலைப்பில், கீழே காண இருக்கிறோம், இது ஆரோக்கியமற்றதாகவோ அல்லது மிதமிஞ்சியதாகவோ இல்லை, இவ்வுலகை சிருஷ்டித்து, ஸ்தாபனம் செய்த, கர்த்தரின் வழியில் இதை உற்று நோக்கி, நமது இடமானது, இதில் எவ்வாறு செயல்படுவதாய் இருக்கிறது என்பதைக் காண்போம்.

1. 2 **தீமோத்தேயு** 3:1-15.

1. மேலும் கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக. 2. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், 3. சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாத வர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும்,

4. துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகப்போகப்பிரியராயும், 5. தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை விட்டு நீ விலகு. 6. பாவங்களால் நிறைந்து, பற்பல இச்சைகளால் இழுப்புண்டு, 7. எப்பொழுது கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக்கொள்ளுகிறார்கள். 8. யந்நேயும், யம்பிரேயும், மோசேக்கு எதிர்த்து நின்றது போல, இவர்களும் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள்; இவர்கள் துர்புத்தியுள்ள மனுஷர்கள். விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள். 9 ஆனாலும், இவர்கள் அதிமாய்ப் பலப்படுவதில்லை, அவ்விருவருடைய மதிகேடு எல்லாருக்கும் வெளிப்பட்டது போல, இவர்களுடைய மதிகேடும் வெளிப்படும். 10. நீயோ என் போதகத்தையும், நடக்கையையும், நோக்கத்தையும், அன்பையும், பொறுமையையும், 11. அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும், பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய், எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன். இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கிவிட்டார். 12. அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். 13. பொல்லாதவர்களும், எத்தர்களுமானவர்கள், மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களுமாயிருந்து, மென்மேலும் கேடுள்ளவர்களாவார்கள். 14. நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு. அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல், 15. கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.

பிரதிபலிப்பு:

விசுவாசிகளாகிய நாம் சரித்திரப்பூர்வமாக எங்கு இருக்கிறோம் என்பதைக் கண்டுகொண்டு, அதற்கு தகுந்தாற்போல் மிகவும் கச்சிதமாய் செயல்பட்டு, நமது சவால்களை எதிர்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். இவ்வேதபகுதியானது சரித்திரப்பூர்வமாய் நாம் எங்கு இருக்கிறோம் என்பதை நமக்கு தெளிவுபடுத்துகிறதாய் இருக்கிறது. பவுலின் கூற்றுப்படி, நாம் கடைசிக் காலத்தில் இருக்கிறோம், பொதுவான இதன் அர்த்தத்தை தெளிவுபடுத்திக்

கொண்டு, நமது ஊழியம் மற்றும் நமது வாழ்க்கையை சீர்தூக்கிப்பார்த்து சவால்களை மேற்கொள்வது அவசியமாய் இருக்கிறது. தேவனது கண்ணோட்டத்தின்படி, இவ்வுலகின் "கடைசிகாலமானது" கர்த்தர் சிலுவைக்குச் சென்ற சமயம் முதற்கொண்டு ஆரம்பமாகிவிட்டது. இக்கடைசிகாலத்தில் ஏறத்தாள 2000 ஆண்டுகளுக்கு மேல் கழித்துவிட்டோம், தீர்க்கதரிசன அடையாளங்களின் படி, இச்சரித்திரத்தின் இறுதி முடிவுக்குள்ளாக சென்று கொண்டு இருக்கிறோம்.

"கடைசிநாட்களில் கொடிய காலங்கள் வருமென்று அறிவாயாக" எனப்பவுல், தீமோத்தேயுவுக்குக் கூறுகிறவராய் இருக்கிறார். வெகுசிலரே, சரித்திர ரீதியில் சரியாக சம்பந்தப்படுத்திக் காட்டுகிறவர்களாய் இருக்கிறார்கள், இந்நாட்களில் மிகுதியானோர், அவர்கள் சரித்திரத்திரப்பிரகாரமாக எங்கு வாழ்கிறோம் என்பதை அறியாது, கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாது வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். ஒரு சரித்திரத்தில் தாங்கள் எங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்கிற அறிவை உடையவர்களாய் இருப்பார்கள் எனில், கலக்கங்களின் மத்தியில் அவர்கள் பாதுகாப்புடன் விளங்குவார்கள். அவர்கள் இதை அறியாது வாழ்வார்களேயானால், அவர்கள் தொடர்ச்சியான அபாயத்திற்குள் செல்கிறவர்களாய் இருப்பர். commentator Lock அவர்களது கவன ஈப்பின்படி, "உண்மையான கிரியை மற்றும் வெறுமையான பேச்சு இவைகளுக்கிடையே இன்னும் முறண்பாடுகள் இருக்கத்தான் செய்கிறது." என்கிறார்.(Lock, page 103). தேவனது பணியை உண்மையாய் செய்ய, அவரது திட்டத்தில் நாம் எங்கு இருக்கிறோம் என்பதை அறிவோமானால், மற்றும் இந்த யுகத்தில் நம்மிடம் என்ன எதிர்பார்க்கப்படுகிறது என அறிந்து கொள்வது அவசியமான ஒன்றாய் திகழ்கிறது.

கடைசி நாட்களில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் எனப் பவுல் தெளிவு படுத்துகிறவரய் இருக்கிறார், இதன் பொருளை அறிந்தவர்களாய், இக்காலத்திற்கேற்ப நாம் வாழ வேண்டிய சவாலுக்குள் கடந்து வந்திருக்கிறோம். கடைசி நாட்கள் என்றால் என்ன? கர்த்தரின் மரணம், உயிர்த்தெழுதல், பரமேறுதல் போன்ற நிகழ்வுகளால் இது வரையறுக்கப்படுகிறதாய் இருக்கிறது, இறுதி உலகச் சரித்திர காலகட்டமானது, கர்த்தரின் இரண்டாம் வருகைக்கு முன்னதாக துவங்கி, பாவம், மரணம், இவைகள் மற்றும் இதன் காரணனாகிய சாத்தான் போன்றவற்றைக் கர்த்தர் ஜெயிக்க வேண்டியதாய் இருந்தது.

இப்புதுயுகத்தின் பிறப்பு முதலே, விசுவாசிகள் தேவதூதர்களின் முறண்பாட்டின்

உச்சக்கட்டத்தினால், பாதிப்புக்குள்ளாகி வாழ்கிறவர்களாய் இருக்கின்றனர், மற்றும் இவ்வுகத்தின் ஆரம்ப முதலே, நம்பிக்கையின் செய்தியையும் அதை அளிப்போரையும் சாத்தான் அழிக்கத் துவங்கி விட்டான். விசுவாசிகளாகிய நமக்கு நெருக்கங்களை அளித்து, புறஜாதிய உலகிற்கும், நமக்குமிடையே பிரிவினையை அளித்து, இதன் மூலம் காணக்கூடிய வித்தியாசமானது சுவிஷேச செய்தியைப் பெருகப்பண்ணுகிறதாய் இருக்கிறது. "விசுவாசி, மற்றும் அவிசுவாசி இவர்களிடையே உள்ள வேறுபாட்டை விட்டுவிடுவது பரிசுத்தமற்ற செயலாய் இருக்கிறது." (Ironside, Pastorals, page 216).

இக்கடைசி காலத்தில் கொடிய காலங்கள் வருகிறதாய் இருக்கிறது பவுல் இப்படிப்பட்டவர்கள் அனைவரும், "ஒன்றுபோலவே இருப்பர், தொடர்ந்து தீமை செய்கிறவர்களாய் இருப்பர்" எனக் கூறவில்லை, இவர்கள் கொடிய காலங்களுக்குள் உட்படுகிறவர்களாய் இருக்கிறார்கள்." (Stott, Pastorals, page 83). இப்படிப்பட்ட வார்த்தைகள் "புதுயுக" சபை இயக்கத்திற்குள் ஒருபோதும் விழுந்துவிடாதபடி, தொடர்ச்சியாக நம்மை நினைப்பூட்டுகிறதாய் இருக்கிறது, the Post Millennial theology, பிரகாரம், சுவிஷேச செய்தியானது, மிகவும் நல்ல காலங்களையும், வெற்றியையும் எதிர்பார்க்கிறதாய் இருக்கிறது, இதனால், இவ்வுலகில் உள்ள அனைவரும், இவ்வுலக இறுதியில் இரட்சிப்படைவர். இதைப்போன்ற ஒரு தரிசனத்தை பவுல் அளிக்கவில்லை.

"சபையானது ஒரு குறிப்பிட்ட நபர்கள் குழப்பமுள்ளவர்களாய் ஒழுங்கற்று இருப்பார்களேயானால், அப்படிப்பட்டவர்களை ஆரம்பத்தில்தானே அடக்கிக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருமாறு, எச்சரிக்கப்பட்டு இதை மனதில் கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறதாய் இருக்கிறது.....வரவிருக்கும் எதிர்காலத்தில், தீமையானது பெரிய அளவில் வளர்ச்சியடைந்து, வெளிப்பிரகாரமான உலகில் மட்டுமல்ல, சபைக்குள்ளும் கூட வெளிப்பட இருக்கிறது." (Fairburn, Pastorals, page 362).

கோதுமைப் பயிர் மற்றும் களைகள் இவ்வுவமையில் கர்த்தர் விவரித்துள்ளபடி, (மத்தேயு 13:25-40), அது போல, புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள் குறித்து விவரிக்கையில், (மத்தேயு 25:1-13) சபை மற்றும் உலகம் ஒன்றர கலப்படமான திரள் கூட்டமாய் உருவாகி, அவர்கள் உண்மையான போராட்டத்தை சந்திக்கிறவர்களாய் இருப்பர், விசுவாசத்துரோகத்திற்கு எதிராக, இவர்களது இப்போராட்டம் காணப்படும். பவுல் மற்றும் நமது கர்த்தர் இவர்களது கருத்து இங்கு ஒன்றாக காணப்படுகிறது. நாம் ஜாக்கிரதையுடன் நமது

ஸ்தானத்தைக்காத்துக்கொண்டு, நாம் வாழும் சூழல், கடமை, போன்றவற்றில் ஞானமாய் நடந்து கொண்டு, கர்த்தருக்கு பலன் கொடுக்கும் சேவகராய் செயல்படுதல் அவசியமாய் இருக்கிறது. வேதகாம தலைமைத்துவம் இது போன்ற காரியங்களிலிருந்து வேறுபிரிந்து முன்மாதிரிகளாய் வாழ்ந்து, பரிசுத்தத்தின் தராதரத்தை சீர்தூக்கிப்பார்த்து வாழ வேண்டும்.

வசனம் இரண்டு முதல் ஒன்பது வரை நாம் காண்பது, "இந்நாட்களில் தீமை செய்யும் மனிதர் அளிக்கும் மன அழுத்தங்கள் இங்கு விவரிக்கப்படுகின்றன." (Stott). ஆரம்பகால சபையானது இப்படிப்பட்டவர்களைச் சந்திக்கிறதாய் இருந்தது, ஆகையால் இப்பகுதியானது, "உங்கள் எதிராளிகளை அறிந்து கொள்ளுங்கள்" என்கிற தலைப்பில் அழைக்கப்படுகிறது. யுத்தக்களத்தில் மற்றவர்களை வழிநடத்த வேண்டுமானால், உங்களுக்கு தைரியம் இருந்தால் மட்டும் போதாது, எதிராளிகளைக் குறித்த அறிவும் அவசியமாய் இருக்கிறது, இதனால் உங்களது இராணுவ வீரர்களை பத்திரமாய் காத்துக்கொள்வது சாத்தியமாகிறது.

பவுல் முதலாவது கண்டுகொள்கிற காரியம், தீமையானது "சுயத்தின் மீதான அன்பு / தற்பிரியம்" என்கிறதுடன் சம்பந்தப்பட்டதாய், ஆரம்பமாகிறதாய் இருக்கிறது. W Lock observes, "தற்பிரியத்தின் முக்கியமான காரியம் என்னவெனில், தேவனுக்குரிய கடமைகளில் ஈடுபடும் மற்றவர்களைப் புறக்கணிப்பதற்கு வழிநடத்துகிறதாய் இருக்கிறது, இதற்கு அதிகமாய் அவர்களுக்கு தீங்கு செய்ய அவர்கள் ஊக்கம் கொள்கிறவர்களாய் இருக்கிறார்கள்." (page 105). .As Wilson identifies, பண ஆசையுள்ளவர்களாய் கட்டப்படும்போது, பவுல் மாம்சீக மனிதனது திறவுகோள் பிரச்சனையை இனங்காண்கிறவராய் இருக்கிறார். 1 தீமோத்தேயு 6:10. "இது ஒழுக்கக்கேடான செயலாய் கருதப்படுகிறது...இது பணத்தால் வாங்கும் பொருட்கள் மூலம் உண்டாகிற சுயதிருப்தியை நாடுகிறதாய் இருக்கிறது." (page 151).

பவுல் மற்றும் இதர அப்போஸ்தலர்கள் பலமான கருத்தைக் கூறுகிறவர்களாய் இருக்கின்றனர், இவ்வுலகில் இருவிதமான முகாம்கள் இருக்கின்றன, அவர்களது மதிப்பீடுகள், ஆசைகள், இலக்குகள் ஒவ்வொன்றும், இருளுக்கும் வெளிச்சத்திற்கும் உள்ள வித்தியாசத்தைப்போன்று, நித்தியத்திற்குப் பின்தொடருவனவாய் திகழ்கின்றன. நாம் அனுதினமும் தெரிவு செய்து வாழவேண்டியதைச் சந்திக்கிறவர்களாய் இருக்கிறோம், நாம் எல்லாவற்றையும் கடந்த வாழ்வுக்குரிய உயரிய மதிப்பீட்டில் நிற்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், எல்லா காரியங்களிலும் அப்போஸ்தலரைப் போன்று, கர்த்தரைப்

பின்பற்றுகிறவர்களாய் இருக்கிறோமா, அல்லது இவ்வுலகுடன் ஒத்துப்போய் உலகக் காரியங்களுக்கு முக்கியத்துவம் அளித்து அதைப் பின்பற்றிச் செல்கிறவர்களாய் இருக்கிறோமா.

2 தீமோத்தேயு 3:2-4, இவ்வேதபகுதியில் காணப்படும் பதினெட்டு குணாதிசயங்களை காண்போம்: வேத வசனத்தின் அடிப்படையில், நமது வாழ்வில் இப்படிப்பட்ட காரியங்கள் உள்ளனவா என பரிசீலனை செய்து கண்டறிவோம். 2 கொரிந்தியர் 13:5. நன்மை மற்றும் தீமைக்கு உண்டாகும் பெரிதளவான யுத்தத்தில் மற்றவர்களை வழிநடத்த, தீமை செய்கிறவர்களை உடனடியாய் இனங்கண்டு, கர்த்தரைப் பின்பற்று பவர்களை எச்சரித்து அபாயத்துக்கு தப்பிக்கொள்ளச் செய்வோமாக.

2 தீமோத்தேயு 3:2-4 2. எப்படியெனில், மனுஷர்கள் தற்பிரியராயும், பணப்பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ளவர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய்தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், 3. சுபாவ அன்பில்லாதவர் களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாத வர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், 4. துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகப் போகப்பிரியராயும்,

2 Timothy 3:2-4 “For men will be lovers of their own selves, covetous, boasters, proud, blasphemers, disobedient to parents, unthankful, unholy, 3 without natural affection, trucebreakers, false accusers, incontinent, fierce, despisers of those that are good, 4 traitors, heady, high minded, lovers of pleasure more than lovers of God;

1. தற்பிரியர்: - சுயத்தை மையமாய் வைத்து செயல்படுவதன் அர்த்தம் என்னவெனில், ஒவ்வொரு காரியமும் சுயக்கரிசனையுடன் செயல்படுவதாகும், இது தேவன் அல்லது பிறர் சம்பந்தப்பட்ட நிலையில் ஒழுக்க ரீதியாக, சுயத்தை மட்டும் சார்ந்து செயல்படுவதைக் காட்டுகிறது.

2. பணப்பிரியர்: இவர்கள் பணத்தின் மீது அளவு கடந்த ஆசையுடன் காணப்படுவோர், ஒவ்வொரு காரியத்திற்கும் கிரயம் உண்டு, அதனை பணத்தின் மதிப்பீட்டினால் அளவிட்டு செயல்படுகிறவர்களாயிருப்பர்.

3. வீம்புக்காரர்: இப்படிப்பட்டவர்களை நாம் "தலைக்கர்வம் உள்ளவர்கள்" ["full of hot air";] எனக்கூறுகிறோம், இவர்கள் எவ்வித சரக்கும் இல்லாதவர்கள், அல்லது மற்றவர்கள் மீது எவ்வித கரிசனையுமின்றி, தங்களைக்குறித்து பெரிய பெரிய வார்த்தைகளை அளப்புகிறவர்களாய் இருப்பர்.

4. அகந்தையுள்ளவர்கள்: இவர்கள் திமிருடன் காணப்படுவோர், தேவனது கருத்துக்களை அறியாதவர்களாய் அவைகளை புறக்கணித்து, தீர்மானங்களை எடுக்கும் போது, தங்கள் சுயத்தை மையமாய் வைத்து தீர்மானங்களை எடுக்கிறவர்களாய் விளங்குகிறவர்கள்.

5. தூஷிக்கிறவர்கள்: தேவனை விட தங்களுக்கு எல்லாம் தெரியும் என நினைப்பவர்கள், மிகச் சீக்கிரத்தில் தேவனை நிந்தித்து அவரது வார்த்தைகளையும் நிந்திக்கிறவர்களாய் இருக்கின்றனர், சட்டதிட்டங்களால் தாங்கள் ஆளப்படுவதை நினைவுகூறாமல், தங்களைத் தாங்களே இவர்கள் ஆண்டுகொள்கிறவர்களாய், இவர்களது கண்களுக்கு நலமாய்ப் படுவதை அனுசரித்து, தேவனை விசுவாசிப்பதி மதியீனத்தை காட்டுபவர்களாய் காணப்படுவர்.

6. தாய் தகப்பன்மாருக்கு கீழ்ப்படியாதவர்கள்: ஒரு தேசமானது பெலமுள்ளதாய் இருக்க வேண்டுமானால், குடும்பத்தில் ஒருவருக்கொருவர் கனப்படுத்துவதன் மூலமும், மரியாதை செய்வதன் மூலமும் குடும்பத்தினரை கௌரவிப்பவர்களாய் திகழ்தல் வேண்டும். பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்களாகும் போது, பெற்றோரை அசட்டை செய்வதும், கீழ்ப்படியாது காணப்படுவதும், அல்லது பெற்றோர்களைக் கண்டுகொள்ளாதவர்களாய் இருப்பார்களேயானால், அப்படிப்பட்ட பிள்ளைகள், ஆரோக்கியமற்றவர்களாயும் ஒழுக்கக்கேடுள்ளவர்களாயும் இருப்பர். சமூகமானது இதினிமித்தம் வருத்தங்களை அனுபவிப்பதாய் இருக்கும், பெற்றோர்களை மதியாமலும், கனப்படுத்தாமலும் இருக்கும் பிள்ளைகள், மற்றவர்களையும் மதியாமலும், கனப்படுத்தாமலும் இருப்பர். இக்கருத்தானது சமமான நிலையில் பிள்ளைகள் மற்றும் பெற்றோர் பொருந்துமாறு கூறப்பட்டுள்ளது; பெற்றோர்கள் பிள்ளைகள் தங்களை மதிக்கும் வண்ணம் நடந்து கொள்ளுதல் வேண்டும், பிள்ளைகள் பெற்றோரை மதித்து கனப்படுத்துதல் வேண்டும்.

7. நன்றியறியாதவர்களாய் இருப்பர்: இப்பதமானது தீமை செய்யும் மக்கள், மற்றவர்களை எப்பொழுதும் குழப்பத்திற்குள்ளாக்குகிறவர்களாய் இருப்பர் என்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. நீங்கள் சிலமக்களது வாழ்வில் சிறப்பான

காரியங்களைச் செய்திருந்தும், அவர்களுக்கு மிகவும் நேர்த்தியான நல்ல காரியங்களை செய்திருந்தும், உங்கள் அன்பையும், சாந்த குணத்தையும் அசட்டைசெய்து உங்களை விரோதிப்பதற்கான காரணம் என்ன? இதற்கான பதில் மக்கள் தீமைக்குள்ளும், தவறான உபதேசங்களுக்குள்ளும் தங்களை உட்படுத்திக்கொண்டு, நித்தியம், மற்றும் தேவன் மீது தங்களது கண்ணோக்கம் இராதவண்ணம், இவர்களது குணாதிசயமானது கெட்டு, நன்றியறியாதவர்களாய் அழிக்கும்படியான மற்றும் அருவருப்பான காரியங்களை மனமகிழ்ச்சியுடன் செய்கிறவர்களாய் மாறுகிறார்கள்.

8. பரிசுத்தமில்லாதவர்கள்: பரிசுத்தம் என்பது தேவனுக்காகவும் அவரது பணிக்காகவும் வேறுபிரிக்கப்பட்டு வாழ்தாகும், பரிசுத்தமில்லாது வாழ்தல் என்பது இதற்கு எதிராய் வாழும் வாழ்வைக் காட்டுகிறது. இது சுயம் மற்றும் தீமையின்று வேறு பிரிந்து தேவனுக்காய் வாழாது இருத்தலைக் காட்டுகிறது. இது எதிராளியின் பணியில் மும்முரமாய் செயல்படுதலைக் காட்டுகிறது.

9. சுபாவ அன்பில்லாமை: அன்புகூறத் தகுதியில்லாமையான்து ஒரு நபரின் தன்மையானது மிகவும் ஆழமான மற்றும் அபாயகரமானதாய் இருப்பதைச் சுட்டிக்காட்டுகிறதாய் இருக்கிறது. மக்கள் தங்களை மட்டும் நேசிக்கிறவர்களாய் இருப்பார்களேயானால், அப்படிப்பட்டவர்கள் பிறமக்களை உண்மையாய் அன்புகூற தகுதியிழக்கிறவர்களாய் காணப்படுகின்றனர், இப்படிப்பட்டவர்களின் வார்த்தைகளை நீங்கள் நம்புதல் கூடாது.

10. இணங்காதவர்கள்: மக்கள் ஒழுக்கமின்றி வாழ்வார்களானால், அது சுய விருப்பத்தில் வேரூன்றி வாழ்கிறதைக் காட்டுகிறது, இவர்களிடம் ஒரு காரியத்தை கூட நிச்சயமுள்ளதாய் கண்டுகொள்ளுதல் அரிது. இவர்கள் காற்றைப்போன்று அலசடிபடுகிறவர்களாய் இருப்பர். ஒருவர் சுய இராஜ்ஜியத்தில் இராஜாவாய் இருப்பர் எனில், அங்கு குறைகூறுதல், மற்றும் தற்பெருமையான பேச்சு மிகுந்து காணப்படும். கர்த்தரைக் குறித்து மற்றும் அவரது வார்த்தையைக் குறித்து மக்கள் பேசவில்லையானால், அவர்கள் வீணான காரியங்கள் அனைத்தையும், அவர்கள் விரும்புகிற அனைத்தையும் குறித்து பேசித்தீர்க்கிறவர்களாய் இருப்பர்.

11. அவதூறு செய்கிறவர்கள்: - M9.

12. இச்சையடக்கமில்லாதவர்கள்: இப்படிப்பட்டவர்கள்

சுயக்கட்டுப்பாடில்லாதவர்களாய் இருப்பர். இப்படிப்பட்ட மக்கள் தங்கள் சபலம் மற்றும் மனம்போன போக்கை பின்பற்றுபவர்களாய் இருப்பர், இவர்கள் சத்தியம், மற்றும் நீதி நேர்மையை அலட்சியம் செய்து, இவர்களது இச்சைகள் மற்றும் ஆசைவிருப்பங்களுக்கு இசைய வாழ்கிறவர்களாய் இருப்பர்.

13. கொடுமையுள்ளவர்கள்: கொடூரமானவர்கள் சாத்தானின் மனிதராய் இருக்கிறார்கள். சாந்தகுணமுள்ளவர்கள் தேவனது மனிதராய் இருக்கிறார்கள். சபையில், மற்றவர்களை பீறி, காயப்படுத்தி, வார்த்தைகளாலும், செய்கைகளாலும் பிறரை உபத்திரவப்படுத்துகிறவர்களுக்குச் சபையில் இடமே இல்லை. நாம் நாய்களைப்போன்று சீறுகிறவர்களாய் இருத்தல் கூடாது. நமது கர்த்தரைப் போன்று சாந்தமிக்கவர்களாய் திகழ்தல் வேண்டும். சீறுகிற மனிதன், தவறான சகோதரனாய் இருக்கிறான்.

14. நல்லோரைப் பகைக்கிறவர்கள்: ஒரு மனிதன் தனது சிநேகிதரால் அறியப்படுகிறான், மற்றும் அவன் யாரிடம் அன்பு செலுத்துகிறவனாய் இருக்கிறானோ அவர்களைக் கொண்டு அறியப்படுகிறான். நல்ல மனிதன், நல்ல மனிதரை ஒருபோதும் அசட்டை செய்யமாட்டான். தீமையான மனிதரே அப்படிச் செய்கிறவர்களாய் இருப்பர். மற்றவர்களது சிநேகிதரையும் அவரது இருதயம் எப்படிப்பட்டது என்றும் சீர்தூக்கிப்பாருங்கள்.

15. துரோகிகள்: ஒரு நபர் உங்களைக் கனவீனப்படுத்துவார் எனில், அப்படிப்பட்டவர் எதைக்குறித்தும் யோசிக்காமல் உங்களைக் காட்டிக்கொடுப்பவராய் இருப்பர். தீமையானது சுய இன்பத்திற்காக, நல்லோரைக் காட்டிக்கொடுத்து, தற்காலிக இலாபத்திற்காய் அவர்களுக்கு தீமையிழக்க மனமுவந்து செயல்படுகிறதாய் இருக்கிறது.

16. துணிகரமுள்ளவர்கள்: சிந்திக்காமல் செயல்படுவது தீய மனிதரின் இன்னொரு பழக்கமாய் இருக்கிறது. பின்விளைவுகளைக்குறித்து இவர்கள் சிந்திக்கமாட்டார்கள், இவர்கள் முரட்டாட்டமுள்ளவர்களாயும், மதியீனமான காரியங்களில் ஈடுபடுகிறவர்களாயும் இருப்பர். இவர்கள் பிறர் நலனில் அக்கறை செலுத்தாமலும், முன்னோக்கி பார்க்கக்கூடாதவர்களுமாய் இருப்பர்.

17. இறுமாப்புள்ளவர்கள்: இப்படிப்பட்டவர்கள் முன்யோசனையின்றியும், மதியீனமாயும் செயல்படுவதோடு நில்லாது, பிறரையும் இத்தகைய சொற்களைக்

கொண்டு அழைக்கிறவர்களாய் காணப்படுவர். இவர்கள் சொந்த நடக்கையில், எந்த ஒரு பிரச்சனையையும் காணமாட்டார்கள், இவர்களது பார்வையில், தாங்கள் பூரணராய் காட்சியளிப்பவர்களாய் விளங்குவார்கள்.

18. தேவப்பிரியராயிராமல் சுகப்போகப்பிரியராய் இருப்பர்: அவர்களது தேவன் அவர்கள் வயிறு எனப்பவுல் கூறுகிறவராய் இருக்கிறார். பிலிப்பியர் 3:19. இவர்கள் தங்களுக்கு நல்லதென்று உணருகிற காரியங்களைச் செய்கிறதைக் காட்டிலும், பிறருக்கு விருப்பமான காரியங்களைச் செய்கிறவர்களாய் இருக்கிறார்கள்.

இவ்வகையான பட்டியலானது, பவுலின் நாட்களைப்போன்றே, நமது நாட்களில் சர்வசாதரணமாய் நிகழுகிறதாய் இருக்கிறது. இது சாத்தானின் மற்றொரு அடையாளமான கொள்கையாய், இக்கடைசி யுகத்தின் போது, இவ்வுலகில் நிகழ்ந்து வருகிற தீமையான கொள்கையாய் இருக்கிறது. நமது இருதயத்தையும் மனதையும் இப்படிப்பட்ட நடக்கைக்கும், இப்படிப்பட்ட மனிதர்களுக்கு விரோமாய் அமைத்துக் கொள்வது இன்றைய நாட்களில் அவசியமான ஒன்றாய் இருக்கிறது.

2 தீமோத்தேயு 3:5. தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள்; இப்படிப்பட்டவர்களை விட்டு நீ விலகு.

இந்த ஐந்தாம் வசனத்தில் பவுல்; அப்போஸ்தலரைக் குறித்த மையக்கருத்தை இனங்காணுகிறவராய் இருக்கிறார், (நாம் கருத்தில் கொள்ள வேண்டியது என்னவெனில், இப்படிப்பட்ட மக்கள் சாதாரணமாக ஐக்கியத்தில் காணப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள் - இப்படிப்பட்டவர்கள் தாங்கள் விசுவாசிகள் என்றும், கிறிஸ்துவைப் பின்பற்றுகிறவர்கள் உரிமைபாராட்டுகிறவர்களாய் இருக்கின்றனர், ஆனால் இவர்கள் வாழ்வில் இவர்கள் கொடுக்கும் கனியால் இவர்கள் இவர்கள் இன்னார் என இனம் காணுகிறவர்களாய் இருக்கிறோம்). இதினிமித்தம் இப்படிப்பட்டவர்கள் உண்மையான விசுவாசிகளைக்காட்டிலும், அதி உன்னத ஆவிக்குரியவர்களாய் தாங்களைக் காட்டிக்கொண்டு, உரிமைபாராட்டுகிறவர்களாய் இருக்கின்றனர். இதில் விளங்கும் பெரிய பிரச்சனை என்னவெனில், அவர்கள் வல்லமை மற்றும் வாழ்க்கைமுறையை கையாளுவது, இவர்களுக்குரிய இப்படிப்பட்ட வல்லமையானது சுயம் அல்லது சாத்தானிடமிருந்து வருகிறதாய் இருக்கிறது. நமது வல்லமையும், வாழ்வும் தேவன் மூலம் பரிசுத்த ஆவியானவரிடமிருந்து, நாம் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறோம்

சாத்தானின் நோக்கம், ஒரு நபரை போதைவஸ்துக்களுக்கு அடிமைப்படுத்தி ஆட்டிப்படைப்பது மட்டும் அல்ல, அவரை சுயநீதியுள்ளவராய், லீகலிஸ மாய்மாலக்காரனாய் உருவாக்குவது ஆகும். போதை வஸ்துக்களுக்கு அடிமைப் பட்டோர் விழிப்புணர்வு கொண்டு, இரட்சிப்படைய வாய்ப்புகள் ஏராளம் இருக்கிறது, ஆனால் சுயநீதிக்காரர் தங்கள் பிழைகளை உணருவது மிகவும் அரிதானதாய் இருக்கிறது. இப்படிப்பட்டவர்களுக்கு உண்மையான வல்லமையானது செயல்படாததால், அவர்களில் உருவாகும் பெருமையானது, மேற்கண்ட சுயத்திற்கடுத்த குணாதிசயங்களின் பட்டியலை இவர்களில் உருவாக்கி, கலாத்தியர் 6 ம் அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரின் கனிக்கு எதிரான மாம்சீக செயல்பாடுகளை இவர்களில் மேலோங்கச் செய்கிறதாய் இருக்கிறது. சுயநீதியானது, செத்த கிரியைகள் மற்றும் சுயநம்பிக்கை இவைகளை இவர்களில் உண்டாக்கி, சத்தியத்தைப் புறக்கணித்து வாழச்செய்கிறதாய் இருக்கிறது.

Hendricksen, அவர்கள் குறிப்பிடுகையில், "இப்படிப்பட்ட மக்கள் ஆவிக்குரிய வல்லைமையின்றி காணப்படுகிறவர்களாய் இருக்கின்றனர். இவர்களுக்கு தேவன் மீது எவ்விதப் பற்றோ, அன்போ கிடையாது, கிறிஸ்துவைக்குறித்தோ, அவரது மக்களைக்குறித்தோ எவ்வித வெளிப்பாடும் கிடையாது. இருப்பினும், இவர்கள் பரிசுத்த ஆவியினவரின் நிறைவைப் பெறாத மனிதர்களால் இருக்கிறபடியால், இவர்கள் பரிசுத்தாவியானவரின் வல்லமை குன்றி காணப்படுவதில் ஆச்சரியப்படக்கூடிய காரியம் என எதுவுமில்லை." (page 286). இவர்கள் நடிப்புத்தன்மை நிறைந்தவர்கள், மாய்மாலக்காரர்கள், நம்பிக்கை மற்றும் வல்லமையின்றி காணப்படுபவர்கள். யூதா 12. இப்படிப்பட்டவர்கள் "மழையில்லாத மேகங்கள்" எனக்குறிப்பிடப்படுகின்றனர், வறண்டு விடாய்த்துப்போன நிலத்திற்கு வாக்குப்பண்ணுகிறவர்கள் போல காணப்படுவார்கள், ஆனால் அதன் உண்மையான தேவையை சந்தியாது இருப்பவர்கள்.

இவ்வுலகில் அநேகர், விரும்பும் மதமானது, எதற்கும் கீழ்ப்படிய அவசியமில்லாததாய் இருத்தல் வேண்டும், அல்லது பாவ வாழ்க்கைக்கு எவ்வித மாற்றத்தையும் கொண்டுவராததாய் இருத்தல் வேண்டும், அது எவ்விதத்திலும் பழைய பாவசுபாவத்திற்கு பாதிப்புகளைக் கொண்டுவராததாய் இருத்தல் வேண்டும் என எதிர்பார்க்கிறவர்களாய் இருக்கின்றனர். உண்மையான கிறிஸ்தவத்தை அவர்கள் தெரிவு செய்துகொள்ளத் தவறுகிறவர்களாய் இருக்கின்றனர். அதற்கு மாறான விசுவாசத்தைத் தழுவ ஆவல் உள்ளவர்களாய்

இருக்கின்றனர். Robert Mounce அவர்கள் கூறும்பொழுது, "மக்கள் விரும்பும் மதமானது எதை எதிர்பார்த்தல் கூடாது மற்றும் எவ்வித மாற்றத்தையும் எதிர்பார்த்தல் கூடாது. அதில் சிறிதளவு, உளுத்துப்போன பாரம்பரியம் கலந்து இருத்தல் வேண்டும், எவ்விதத்திலும் மற்றவர்களுக்கு பாதிப்பை ஏற்படுத்துதல் கூடாது. இப்பட்டிப்பட்ட மக்களுக்கு விலகியிருத்தல் வேண்டும் என பவுல், தீமோத்தேயுவுக்கு ஆலோசனை அளிக்கிறவராய் இருக்கிறார்." (page 134).

கள்ளச் சகோதரர் குறித்து பவுல் மிகவும் வன்மையாய் கட்டளைக் கொடுக்கிறவராய் இருக்கிறார். இதைப்போன்று யாராகிலும் இருப்பார்களானால், அவர்களை விட்டு விலகிவாழ கட்டளையளிக்கிறவராய் இருக்கிறார். இப்படிப்பட்டோர் "anathema", [கொள்ளை நோய்] வாகக் காணப்படுகின்றனர், 1 கொரிந்தியர் 16 : 22 இப்படிப்பட்ட தொற்றுநோய் இவர்களில் காணப்படுகிறபடியால், இவர்களைவிட்டு வேறுபிரிந்து வாழ்தல் வேண்டும்.

Ironside அவர்களது ஜெபத்துடன் இணைந்து கொண்டு செயல்படுவோமாக: "தேவரீர் எங்களுக்கு உண்மையுள்ள, யதார்த்தமாய் வாழும், நித்தியத்தை மனதில் கொண்டு வாழும் வாழ்வைத் தந்தருளும், உமக்குகந்த சாட்சியாய் வாழ, அருட்பணிபுரிய, ஆசி அளித்தருளும்." (Ironside, page 220).

தலைமைத்துவம் கைக்கொள்ள வேண்டியவைகள்:

1. எதிராளியைக்குறித்த எச்சரிப்பும், அறிவும் தலைமைத்துவத்திற்கு அவசியமான ஒன்றாய் இருக்கிறது: இந்நிருபத்தில் நாம் அநேக முறை, பவுல் பணியாற்றிய எல்லாவிதப் பணியையும் கண்டிருக்கிறோம், கள்ள சகோதரருக்கு எதிராய் விசுவாசி தன்னைக் காத்துக்கொள்ளுதல் வேண்டும், மற்றும் பிறரது நடத்தை மற்றும் அவர்களது வார்த்தை இவற்றைப் பகுத்தறிதல் வேண்டும் இதினிமித்தம் விசுவாசியானவர் தீமையினால் மதியீனத்திற்குட்படாது தன்னைக் காத்துக்கொள்ள வேண்டிய வகையினை பவுல் கூறி எச்சரிப்பு செய்கிறவராய் கண்டோம். நாம் எச்சரிப்புடன் இருந்து நமது கர்த்தர் தீமையான மனிதர் குறித்து நமக்களித்துள்ள எச்சரிப்புக்கு செவிசாய்க்கிறவர்களாய் இருக்கிறோமா?

கொடிய காலத்திற்கு நாம் ஆயத்தமாய் இருப்பதற்கு நமது வாழ்வில் தேவனது வல்லமை மற்றும் அவரது கொள்கைகளைக் குறித்த ஸ்திரமான அறிவு இவற்றை நாம் சந்திக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். பிரச்சனைகளை சந்திக்க நாம் ஆயத்தமாக ஒரே வழி, வேத வசனத்தின்படி நாம் வழி நடந்து,

பரிசுத்த ஆவியானவரின் வல்லமையினால் நிரப்பப்பட்டு அனுதினம் வழிநடத்தப்படுதல் அவசியமாய் இருக்கிறது. தேவதூதர்களின் முறண்பாடானது மும்முரமாய் செயல்பட்டு வரும் இக்காலகட்டத்தில், இதைத்தவிர வேறு மார்க்கம் எதுவுமேயில்லை.

2. தலைவர்கள் தங்களது சிநேகிதரால் அறியப்படுகிறார்கள்: கள்ளப்போதகர்களைக் குறித்து போதகர் எச்சரிப்புடன் இருத்தல் அவசியமாய் இருக்கிறது. அவர்களுடன் செலவளிக்கும் நேரம் அபயாகமானதாயும், நேரத்தை வீணடிப்பதாகவும் இருக்கிறது. இப்படிப்பட்டவர்களுடன் விவாதித்தல் கூடாது, இவர்கள் எவ்வித சமூக ரீதியான தொடர்பு கொள்ளுதலோ, அல்லது சந்தை வெளிகளில் வந்தனம் செய்தலோ கூடாது, இப்படிப்பட்டவர்களை தவிர்த்து வாழுதல் அவசியமான ஒன்றாய் இருக்கிறது.

10. நீயோ என் போதகத்தையும், நடக்கையையும், நோக்கத்தையும், அன்பையும், பொறுமையையும், 11. அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும், பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய், எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன். இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கிவிட்டார். 12. அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். 13. பொல்லாதவர்களும், எத்தர்களுமானவர்கள், மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களுமாயிருந்து, மென்மேலும் கேடுள்ளவர்களாவார்கள். 14. நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு. அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல், 15. கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும்.

பிரதிபலிப்பு:

கள்ளப்போதகர்கள் குறித்து, பவுல் குறிப்பிடும் போது, அவர்கள் சிட்சிக்கப்பட்டு ஆவிக்குரிய அழிவை அடைவதாய் கூறுகிறார். பிலிப்பியர் 3:15-17. "சகோதரரே, நீங்கள் என்னோடேகூடப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்..." எனப்பவுல் கூறுகிறவராய்

இருக்கிறார். தான் தனது சொந்த மரணத்தை சந்திக்கிறவரானபடியால், தனது சொந்த அனுபவங்கள் குறித்து இளம் வயதுள்ள நண்பராகிய தீமோத்தேயுவுக்கும் இவ்வாறே கூறுகிறவராய் இருக்கிறார். மெய்யான உபதேசத்தில் நிலைத்து இருக்கவும், புத்திமானாய் எல்லாவற்றிலும் நடந்து கொள்ளவும், உபத்திரவங்களையும் பாடுகளையும் சகிக்கவும், எளிதான வழிகளை நெருக்கப்படுகிற காலங்களில் தேடாதிருக்கவும், சத்தியத்தைக் கைக்கொண்டு, எவ்விதத்திலும் கள்ள உபதேசங்களுடன் கலந்து போகாதிருக்க அறிவுறை கூறுகிறவராய் இருக்கிறார்.

மத்தேயு 7 ம் அதிகாரத்தில் நமது கர்த்தர் கூறியது போன்று, ஒரு நபர் போதனையை அவரது வாழ்வோடு சம்பந்தப்படுத்திக் காணுதல் வேண்டும். அந்நபர் தனது வாழ்வில், தெய்வீக கனிகளைக் கொடுப்பரவானால், அப்படிப்பட்டவர் சத்தியத்தில் நிலைநிற்கிறவராய் இருப்பர், அப்படிப்பட்டவர் கூறுகிறவற்றைக் கவனித்து, அவற்றை வேதவசனங்களுடன் ஒப்பிட்டுப்பார்த்து பரீட்சித்தல் வேண்டும், அவர்களது வாழ்வில் தெய்வீக கனிகளைக் கொடாதவரானால், உங்களை நீங்களே இரட்சித்துக்கொள்ளும் பிரயத்தனங்களைச் செய்து, அப்படிப்பட்டவர்கள் கள்ளப்போதகர்களானபடியால் அவர்களது வார்த்தைகளை பரிசீலனை செய்து அப்படிப்பட்டவர்களைவிட்டு விலகுங்கள். (மத்தேயு 7:15-25, லூக்கா 6:43-45).

இயேசுவைப் பின்பற்றுதல் என்பது தனிப்பட்ட காரியமாய் இருக்கிறது, இது கர்த்தருடன் உங்களுக்குள்ள தனிப்பட்ட உறவைச் சார்ந்ததாய் இருக்கிறது, பரிசுத்த ஆவியானவர் உங்களுக்குள் வாசம் பண்ணி, உங்களுக்கு தனிப்பட்ட அறிவுரைகளை அளித்து, தெய்வீகமாய் நடக்கும் போதகர் உண்மையாகவும், முறையாகவும் வேத வசனங்களை போதித்து வழிநடத்துதலை சார்ந்ததாய் இருக்கிறது. போதகரின் வரம் என்பது சபை ஐக்கியத்தில் முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது, இது சபை வளர்ச்சியில் முக்கிய பகுதியை வகிக்கிறதாய் இருக்கிறது, போதகரின் போதனைகளையும் அவரது வார்த்தைகளையும், வாழ்க்கையையும் மக்கள் கவனித்து அறிந்து அவரது வார்த்தைகளுக்கு செவிகொடுத்து அவர்கள் காண்கிறதையும், கேட்கிறதையும் வைத்து, அவர்கள் கைக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கின்றனர்

பவுல் தீமோத்தேயுவுக்கு நினைவுபடுத்துவது என்னவென்றால், இப்படிப்பட்ட காரியங்களை இவ்வசனங்களில் எடுத்துரைக்கிறவராய் இருக்கிறார். parakolutheo என்கிற கிரேக்க வினைச்சொல்லானது, இது சுட்டிக்காட்டுவது என்னவெனில்,

பவுலின் வார்த்தைகளையும், வாழ்க்கையினையும் கவனித்து அதிலிருந்து கற்றுக்கொண்டு, அவற்றின் மூலம், வாழ்விற்கான விதிமுறைகள் மற்றும் உபதேசத்தின் நடைமுறையினையும் கற்றுக்கொள்ள தீமோத்தேயுவுக்குப் பவுல் கூறுகிறவராய் இருக்கிறார். இது வேதகாம ரீதியில் உபதேசத்தை அளிக்கும் வழிமுறையாய் இருக்கிறது, இது எப்பொழுதும், போதிப்பவருடன் கொள்ளும் உறவு முறைமூலம் சாத்தியமாகிறதாய் இருக்கிறது, இதினிமித்தம் மாய்மால செய்கைகளுக்கு இடமில்லாமல் போகிறதாய் இருக்கிறது.

காலஞ்சென்ற பேராசிரியர் E M Blaiklock அவர்கள் கூறும்போது, "சத்தியத்தை நிரூபணம் செய்தல் மூலம், வஞ்சகத்தை தோற்கடிப்பது சிறப்பான முயற்சியாய் இருக்கிறது." இப்படிப்பட்ட செயலை போதகரின் சிறப்பான வாழ்க்கை மற்றும் அவர் ஆற்றும் பணி மூலம் செய்து முடிக்க இயலும். Dr Harry Ironside, நடைமுறையாய் வாழ்ந்து செயல்பட்ட போதகர் கூறும்போது, "மனிதரை நம்மைக்காட்டிலும் மேன்மையாய் உயர்த்துதல் கூடாது. தேவனுக்காக ஒருவர் வாழத்தவறும் போது, கிறிஸ்துவுடன் அந்நபர் நடக்காதபட்சத்தில், அப்படிப்பட்டவர் மற்ற மக்களுக்கு ஒரு போதும் ஆசீர்வாதமாய் இருக்க இயலாது." (IBID, page 222).

போதகருக்கான பரீட்சை குறித்து பவுல் தெளிவுடன் எடுத்துரைக்கிறவராய் இருக்கிறார். 1-5 வசனங்களில் கள்ளப்போதகரின் பதினெட்டு குணாதிசயங்கள் எடுத்துரைக்கப்படுகிறது, ஒன்பது குணாதிசயங்கள் உண்மையான போதகத் தலைவருக்கு இருக்க வேண்டியதாய் எடுத்துரைக்கப்படுகிறது.

10. நீயோ என் போதகத்தையும், நடக்கையையும், நோக்கத்தையும், அன்பையும், பொறுமையையும், 11. அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும், பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய், எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன். இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கிவிட்டார்.

1. போதகம்: - பவுலுக்கு இரகசிய உபதேசம் என எதுவும் இல்லாதிருந்தது, ஒவ்வொரு உபதேசமும் வெளிப்படையாகவும், மிகவும் தெளிவானதாகவும் இருந்தது, அவை வேதவசனங்களால் பரிசீலனை செய்யப்படக்கூடியதாயும், கர்த்தரின் வாழ்க்கை மற்றும் தனது சொந்த வாழ்விற்கு பொருந்தக்கூடியதாயும் இருந்தது. பவுலின் போதனைகள் அனைத்தும், வெளிப்படையாய் பேசக்கூடியதாயும், மற்றும் எல்லாராலும் காணக்கூடியதாயும், கேட்கக்கூடியதாயும், முறையாய் கைக்கொள்ளக்கூடியதாயும் இருந்தது.

2. நடக்கை: - இது பிரசங்க பீடத்திற்கு அல்லது போதனை செய்யும் இடத்திற்கு வெளியே ஒரு நபர் நடந்து கொள்ளும் வாழ்க்கை முறையினை சுட்டிக்காடுகிறதாய் இருக்கிறது. அவர்களது அனுதின நடக்கையில், அவர்கள் நடந்து கொள்ள வேண்டிய பிரகாரம் நடக்கிறார்களா? அவர்கள் அளிக்கும் சுவிஷேச செய்திக்கு, "பிரியம்" உண்டாக நடந்துகொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறார்கள். தீத்து 2:10.

3. நோக்கம்: - prothesis என்கிற கிரேக்க வார்த்தைக்குரிய அர்த்தம் சுட்டிக்காட்டுவது, பவுல் தனது வாழ்க்கைக்கு "வழிநடத்தும் அடிப்படைக்கொள்கையினை" ["guiding principle"] உடையவராய் இருந்தார், இக்கொள்கையானது கிறிஸ்துவை மகிமைப் படுத்துகிறதாய் இருந்தது, இப்படிப்பட்ட கொள்கைக்காய் பவுல் வாழ்ந்தார், தீமோத்தேயுவும் அப்படியே வாழ்ந்தார்.

4. விசுவாசம்: - பவுல் எதை விசுவாசித்தாரோ அவற்றை, அவரது வாழ்வின் ஒவ்வொரு தீர்மானங்களிலும், உபதேசங்களை நடைமுறைப் படுத்தப்பட்டதை காண்கிறவர்களாய் இருக்கிறோம். நாமும் பவுலைப் போன்று பரிசீலனை செய்யப்பட வேண்டியவர்களாய் இருக்கிறோம், தீர்மானங்களை எடுக்கும் போது, நாம் விசுவாசத்தைப் பயன்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம், கர்த்தரின் சித்தத்தையும், அவரது வார்த்தையையும் தேடிக் கைக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம், இப்படிப்பட்ட நிலையில் விசுவாசத்தை கைக்கொள்வது அவசியமாய் இருக்கிறது என்பதைக் காண்கிறோம். நாம் எடுக்கும் தீர்மானங்களில், நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதற்கேற்ப இருத்தல் அவசியம்.

5. நீடிய பொறுமை: - இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையானது, மிகவும் சக்திவாய்ந்த இராணுவ வார்த்தையாய் பயன்படுத்தப்பட்டுள்ளது இதன் பொருள், இராணுவ முகாமில் நீண்டகாலம் தங்கி மனோ வலிமையைப் பெறுவதைக் குறிக்கிறதாய் இருக்கிறது, இது பரிசுத்தாவியானவரின் ஆவிக்குரிய திறவுகோள் கனியாய் திகழ்கிறது. நாம் அழைக்கும் "மகாத்மா" ["big souled"] என்ற பதமானது, முதிர்ச்சியடைந்த விசுவாசியைக் குறிக்கிறதாய் இருக்கிறது, இப்படிப்பட்ட சுபாவம் ஒருவர் பரிசுத்த ஆவியானவருடன் நடக்கும் போது இயல்பாய் வருகிற ஒன்றாய் இருக்கிறது.

6. அன்பு: - அகாப்பே அன்பு ஆவியின் கனியில் மற்றொரு குணாதிசயமாய்

இருக்கிறது, இது நாம் விசுவாசிகளாய் இருப்பதற்குரிய தகுதியைக் காட்டுகிறதாய் இருக்கிறது, மற்றும் ஒரு போதகராய் இருப்பதற்கு அவசியமான பண்பாய் இருக்கிறது. இப்படிப்பட்ட அகாப்பே அன்பானது இல்லையெனில், நாம் ஓசை எழுப்புகிற கைத்தாளம் போன்று இருப்போம். (1 கொரிந்தியர் 13:1-13); நாம் மக்களுக்கு அளிக்கும்படியாக எவ்வித பொருட்களும் இல்லாதவர்களாய் விளங்குவோம்.

7. பொறுமை: - இது மற்றொரு ஆவியின் கனியாய் இருக்கிறது, இது வலியுறுத்துவது என்னவெனில், என்ன செய்ய வேண்டும் எப்பொழுது செய்யவேண்டும் என்பதை தேவனுக்கு சொல்வதைக் காட்டிலும், காரியங்கள் நிகழுவதற்காய், கர்த்தருக்கு காத்திருப்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது, கர்த்தருக்குக் காத்திருப்பது என்பதன் பொருள், நாம் செயலற்று அமைதியாய் இருப்பது எனப் பொருளாகாது. இது எல்லா நேரங்களிலும் அவரது பணி செய்ய ஆயத்தமாய் இருப்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது, மற்றும் தெளிவான வழிநடத்துதலைப் பெற்று, எப்பொழுது, எங்கு செயல்பட வேண்டும் என்பதைக் குறிக்கிறதாய் இருக்கிறது. நாம் மனுஷீக நிலையில் அவசரப்படாது, தேவனது நேரத்தை தேடி செயல்படுகிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

8. துன்பங்கள்: - ஒருவர் சத்தியத்திற்காய் நிலைநிற்கும்போது, பவுலுக்கு நேர்ந்தது போலவே, பொய்யுக்கு முக்கியத்துவம் அளிப்பவர்களின் தாக்குதலுக்கு உள்ளாக்குகிறவர்களாய் இருக்கிறார்கள். நாம் நமது சிநேகிதராலும் மற்றும் நமது எதிராளியாளியாலும் அறியப்படுகிறவர்களாய் இருக்கிறோம். சத்துருவால் உபத்திரவங்களை அடையும்போது, அதை அவர் பெருமையாக எண்ணினார், இது அவர் எதிராளிகளுக்கு பயங்கரமானவர் என்பதை ருசுப்படுத்துவதாய் இருந்தது.

கொரிந்தியருக்கு நிருபத்தினை எழுதும்போது, அதிகமான நெருக்கங்களுக்கூடாய் பவுல் கடந்து செல்கிறவராய் இருந்தார், இங்கு அவர் குறிப்பிடுகிற பாடுகள் அவருக்கு முதலாவது சம்பவித்ததாய் இருந்தது, மிஷனரி போதகராய் இருப்பவருக்கு இப்பாடுகளைக் கண்ட தீமோத்தேயுவின் மனதில், மாறாத வடுக்களை ஏற்படுத்துகிறதாய் இருந்தது.

பவுல் தான் சொன்ன மற்றும் செய்து நிறைவேற்றியவைகளால், அவைகள் அவரது குணாதிசயங்களில் காணப்பட்டு, அவர் ஆற்றிய பணியில் சாதனை படைக்க வைத்தது. அந்தியோகியா, லீஸ்திரா, இக்கோனியா போன்ற இடங்களில் அவரடைந்த உபத்திரவங்களையும், பாடுகளையும் எவ்வாறு சகித்தார், மற்றும்

கர்த்தர் அவரை அப்பாடுகளில் இருந்து எவ்வாறு மீட்டுவிட்டார், என பவுல் தீமோத்தேயுவுக்கு நினைப்பூட்டுகிறவராய் காணப்படுகிறார். அப்போஸ்தலர் 13,14. ஒவ்வொரு உபத்திரவத்திலிருந்தும் கர்த்தர் பவுலை மீட்டுவிட்டது, அவரை வெற்றி சிறக்கவைத்து, கர்த்தர் தனது அங்கீகாரத்தின் முத்திரையை அவரது ஊழியத்தில் பதிப்பதாய் இருந்தது. இறுதியான பாடுகளை அவர் சந்தித்த போது, வெற்றிசிறக்கும் வகையில் அவர் கர்த்தருக்காய் மரித்து, அவரது ஊழியத்திற்கான, கர்த்தரது அங்கீகாரத்தின் இறுதி முத்திரையைப் பெற்றுக்கொள்வதாய் இருந்தது.

பவுல் கர்த்தரில் நம்பிக்கையுடையவராய் இருந்தார், அவரது வாழ்வில் அவரடைந்தவைகள் குறித்து அவர் இறுமாப்படையவில்லை. கள்ளப்போதகரிலிருந்து எல்லாவிதங்களிலும் வேறுபட்டவராய் விளங்கினார், அவர்கள் செய்து முடித்தவைகள் குறித்து இறுமாப்புடன் காணப்பட்டனர். இப்படிப்பட்ட மனநிலையானது மெய்யான கர்த்தரது சேவகருக்கு இருப்பது கூடாது. கர்த்தரை சேவிப்பவர்கள் அனைவரும் இதை அறிந்தவர்களாய், மகிமை, துதி, கனம் அனைத்தையும், நம்மை சோதனையினின்று விடுவித்த கர்த்தர் ஒருவருக்கே உரியதாய் இருக்கிறது என்பதை உணர்ந்தவர்களாய் இருத்தல் வேண்டும். மற்றும் இப்படிப்பட்ட பாடுகளின் வழியாக நமது ஆத்துமாவை மரண கிருபைக்குள் வழிநடத்துகிறவருக்கே உரியதாய் இருக்கிறது.

ஒரு போதகர் என வருணிக்கப்படும்போது, இது நமக்கு எப்பேர்பட்ட சவாலை இருக்கிறது! Mounce அவர்கள் கூறும்பொழுது, "இன்றைய அளவில் விசுவாசிகள் உபத்திரவங்களை சந்தியாதவர்களாய் இருக்கின்றனர் காரணம், உலகமானது நன்மையானவைகளாய் பாராட்டுவதற்கு தலைப்பட்டுள்ளது, சிலவிசுவாசிகள் உண்மையான கிறிஸ்தவர்களாய் வாழ்வதற்கு தீர்மானித்துள்ளனர்." (IBID, page 141).

இப்படிப்பட்ட காரியங்களை நாம் சந்திப்பதற்கு ஆயத்தமாய் இருத்தல் வேண்டும், போதக ஊழியத்தில் தலைப்படுபவர்கள், இப்படிப்பட்ட வாழ்வை தங்களது பயிற்சி காலத்திலேயே முன்கூட்டி அனுபவிக்க ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். "உலகத்திலும், கிறிஸ்துவிலும் இருப்போருக்கு உபத்திரவம் என்பது தவிர்க்கமுடியாத ஒன்றாய் இருக்கிறது." (J R S Stott, IBID, page 96).

12. அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவ பக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்.

இவ்வசனத்தில், எல்லோரும் காணும்வண்ணம், உபத்திரவத்தின்

அடிப்படைக்காரியங்கள் உச்சரிக்கப்படுகிறதாய் இருக்கிறது. கிறிஸ்துவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் (present active participle) துன்பப்படுவார்கள்! பிசாசுகளின் உலகில் தெய்வீகமாய் நடப்பதைத் தேடுபவர்கள் அனைவரும் சத்துருவின் தாக்குதலுக்கு உள்ளாவார்கள் (passive voice of verb, dioko). யுத்த களத்தில் தாக்குதலை அடைவது வினோதமான காரியமில்லை, அது சாதாரண ஒன்றாய் இருக்கிறது, அதே சமயம் ஒரு விசுவாசியின் வாழ்வில் எவ்வித நிகழ்வுகளும் இடம் பெறாமல் இருப்பதே, வழக்கத்திற்கு மாறானதும், வினோதமான காரியமாய் இருக்கிறது. "செயல்பாடுகள் மிகுந்த பணியில்" விசுவாசிகள் ஈடுபடுகிறவர்களாய் இருக்கிறார்கள், இதன் பொருள் சத்தியத்திற்கு எதிரான தீமை என்கிற போர்களத்தில் குதித்து யுத்தம் செய்கிறவர்களாய் இருக்கின்றனர்.

13. பொல்லாதவர்களும், எத்தர்களுமானவர்கள், மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களுமாயிருந்து, மென்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்.

இவ்வசனம் நமக்கு நினைவுபடுத்துகிறது என்னவெனில், தீமை செய்கிற மனிதர்கள் எப்பொழுதும், குறிப்பிட்ட காலத்துக்கு சரித்திரத்தில் செழித்தோங்குகிறவர்களாய் விளங்கினர். இது இவ்வுகத்தின் இறுதியில் மிகவும் மோசமான நிலையை அடைந்து வருகிறதாய் இருக்கிறது. அவர்கள் தவறாய் வழிநடத்துகிறவர்களாய் இருப்பர் மற்றும் இவர்கள் மற்றவர்களால் தவறாய் வழிநடத்தப்படுகிறவர்களாயும் இருப்பர், இவ்வாறு இருக்க நமது பிரதிக்கிரியை எவ்வாறு இருத்தல் அவசியமாய் இருக்கிறது?

இப்பட்ட தீமையான சுவிஷேசகர்கள், சாத்தானின் திட்டங்களைச் செயல்படுத்துவதில் முன்னேற்றம் காண்கிறவர்களாய் இருக்கின்றனர், நாம் கர்த்தரது திட்டத்திலிருந்து வழிவிலகுகிறவர்களாய் இருத்தல் கூடாது, கர்த்தரின் திட்டமே இறுதியில் ஜெயம் பெறுகிறதாய் இருக்கிறது. விசுவாசிகளுக்கான பாதுகாப்பானது தீர்மானிக்கப்பட்டு, அவர்களது சொந்த மனதிற்கு இருக்கிறதாய் இருக்கிறது, வேதவசன உபதேசங்களைக் குறித்த முழுமையான அறிவானது, அவர்களுக்கு வேலி போன்ற பாதுகாப்பின் மதிலாய் இருந்து, அவர்களுக்கு வலிமையையும், நிலைத்தன்மையையும் அளிக்கிறதாய் இருக்கிறது.

14. நீ கற்று நிச்சயித்துக் கொண்டவைகளில் நிலைத்திரு. அவைகளை இன்னாரிடத்தில் கற்றாய் என்று நீ அறிந்திருக்கிறதுமல்லாமல்,

வசனம் 14 இதை தெளிவாக இனங்காணுகிறதாய் இருக்கிறது. தீமோத்தேயு தொடர்ந்து இவைகளைக் கைக்கொள்கிறவராய் அனுதினமும் தேவனது வார்த்தையால் போஷிக்கப்பட்டு, அவைகளைக் கைக்கொள்கிறவராய் விளங்கினார். கர்த்தரது வார்த்தையை அதிக அதிகமாய் கற்றுக்கொள்வதை இது காட்டுகிறதாய் இருக்கிறது மற்றும் அதைக் கைக்கொள்வதினால், அனுதினமும் செழித்து பெருகும் எதிராளியை சந்திக்கும்போது அவசியமான பெலனையும், பாதுகாப்பையும், அனுதினமும் அளிக்கிறதாய் இருக்கிறது. ஒரு விசுவாசிக்குள் தேவனது வார்த்தையானது, தேவனது கண்ணோட்டத்தை அளித்து, தோற்றத்தில் நிகழும் காரியங்கள் கவனச்சிதறல் ஏற்படாவண்ணம் பாதுகாக்கிறதாய் இருக்கிறது. சில காலம் சத்துருவானவன் மிகவும் வல்லமையுள்ள அரசியல்வாதியாய் காணப்படலாம், மிகவும் ஐசுவரியவானாய் காணப்படலாம், மிகவும் பிரபலமானவனாய்க் காணப்படலாம், மிகவும் வெற்றியடைபவனாய் காணப்படலாம், ஆனால் இறுதி கட்டம் வரைக்கும் தாக்குப் பிடித்தலே காரியமாய் இருக்கிறது, தேவன் எதை எண்ணுகிறாரோ அது மட்டும் இறுதிவரை நிலைத்திருக்கிறதாய் இருக்கிறது!

ஆசீர்வாதம் நிறைந்த பரீட்சை செய்யப்படும் பாதையில் செல்ல தீமோத்தேயு வற்புறுத்தப்படுகிறவராய் இருக்கிறார். இதைத் தவிர தேவனைப் பிரியப்படுத்தும் பாதை வேறில்லை, எப்படிப்பட்ட நிச்சயமானாலும் அது உபதேசத்தில் மட்டுமே இருக்கிறதாய் இருக்கிறது, நெருக்கப்படுகிற காலங்களில் இது மட்டுமே கிரியை செய்கிறதாய் இருக்கிறது. தீமோத்தேயு தேவனது வார்த்தையை பயன்படுத்திக்கொள்கிறவராய் இருந்தார், அதன் வல்லமையிலும், சத்தியத்திலும் நம்பிக்கை வைக்கிறவராய் இருந்தார், எதிர்காலத்தில் நெருக்கப்படுகிற காலத்திற்குள்ளாக கடந்து செல்ல, இதை அவர் தொடர்ந்து தனது வாழ்வில் கடைபிடிக்க வேண்டியதாய் இருந்தது. இவர் நல்ல சாட்சியைப் பெற்றவராய் இருந்தார், இவரது குழந்தைப் பருவத்திலேயே, சத்தியத்தை அறிகிற அறிவினால் நிரப்பப்பட்டவராகவும், அதில் பிரியப்படுகிறவராயும் இருந்தார்.

"கற்றுக்கொள்ளுதல் மட்டும் போதுமானதாய் இல்லை என்பது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. கற்றுக்கொண்டவைகளை எவைகளோ அவற்றை, பரிசுத்த ஆவியானவர் மூலம் இருதயத்தில் வைத்து, கைக்கொள்ளுதல் அவசியமானதாய்

இருக்கிறது, இதினிமித்தம் வாழ்வில் உறுதிப்பாட்டைக் கொண்டுவருகிறது, இப்படிப்பட்ட உறுதிப்பாடு உருமாற்றத்தைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது." (W Hendricksen, IBID, page 295). தேவனது வார்த்தை மட்டுமே ஒரு மனிதனை மெய்யான ஞானவானாய் உருவாக்குகிறதாய் இருக்கிறது, துன்பங்கள் மற்றும் பாடுகள் நடுவே அந்நபரின் இருதயத்தையும், மனதையும் காத்துக்கொள்கிறதாய் இருக்கிறது. இதற்கான வழிமுறையானது விசுவாசத்தின் மூலம் செயல்படுகிறதாய் இருக்கிறது. தேவனது வார்த்தையைக் கேட்டு, விசுவாசித்து, மற்றும் அனுதினமும் அதை வாழ்விற்குக் கைக்கொள்கிறதாய் இருக்கிறது, தேவனது வார்த்தையால் அனுதினமும் ஆத்துமத்தைப் போஷிப்பது மட்டும் அதற்கு இரட்சிப்பை உருவாக்காது, உபத்திரவக் காலத்தில் விடுவிக்கப்படுதலும், சத்துருவால் வரவிருக்கும் எல்லா சதிமோசங்களில் இருந்து காக்கப்படுவது மெய்யான இரட்சிப்பை ஆத்துமத்தில் அளிக்கிறதாய் இருக்கிறது.

வேதாகமம் தன்னில்தானே ஒருவரை இரட்சிப்படையச் செய்யாது, கிறிஸ்துவைக் குறித்துப் பேசப்படும் சத்தியத்தை எடுத்துக் கொண்டு அதை அன்புடனும், கீழ்ப்படிதலுடனும், அனுதினமும் கைக்கொண்டு, செயல்படும்போது அதில் வல்லமையையும், வளர்ச்சியையும், பாதுகாப்பையும் அனுபவிக்கிறவர்களாய் விளங்கும்போதே இரட்சிப்பானது அவர்களது வாழ்வில் அர்த்தமுள்ளதாய் இருக்கிறது. Wiersbe என்பவர் குறிப்பிடுவது போல, "வேதாகமத்தை விசுவாசிப்பதன் மூலம் நாம் இரட்சிப்படையவில்லை (யோவான் 5:39), வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளக் கிறிஸ்துவின் மீது நம்பிக்கை வைப்பதன் மூலம் இரட்சிப்படைந்துள்ளோம்." (IBID, page 160). வேதாகமம் நாம் உபயோகப்படுத்தும் உபகரணமாய் இருக்கிறது, அதை பரிசுத்த ஆவியானவரின் வல்லமைக்குள்ளாய் கைக்கொள்ளுதல் வேண்டும், நாம் நமது விக்கிரகத்தையல்ல ஆராதித்துத் தொழுது கொள்வது இல்லை, பயபக்திக்குரியவரை ஆராதித்துத் தொழுதுகொள்கிறவர்களாய் இருக்கிறோம். நாம் கூர்ந்து கவனித்து, வேதாகமத்தைக் கற்றுக்கொண்டு, அனுதின வாழ்வில் அவற்றைக் கைக்கொள்கிறவர்களாய் இருத்தல் வேண்டும், இதினால் நமக்குள் கிரியை நடப்பிக்கிற பரிசுத்த ஆவியானவரால் மறுரூபமடைகிறவர்களாய் இருக்கிறோம்.

கைக்கொள்ள வேண்டிய தலைமைத்துவம்:

1. நெருக்கங்களின் கீழ் உறுதியாய் இருத்தல்: இந்த நிரூபத்தின் எல்லா வசனங்களின் வேதபகுதியிலும் அநேக சாவால்கள் இருக்கின்றன. முதலாவதாய்

நமது வாழ்வில் "தெய்வீக கனி" கனி கொடுப்பதைக் குறித்த சவாலானது கூறப்படுகிறது, இதினால் நாம் கவரப்படவும் மற்றும் பாதுகாப்பாய் இருக்கவும் இயலுகிறதாய் இருக்கிறது. நாம் நிலை நிற்பதற்கான உபத்திரவங்களை நாம் சந்திக்க நேரிடலாம், அது நமது வெற்றிக்கு அடையாளமாய் திகழ்கிறது, நாம் அருவருக்கத்தக்கவர்களாயும், தீமையான கனிகளாலும் நிறையப்பட்டவர்களாய் இருக்கும்போது மட்டுமே, நாம் உபத்திரவங்களை சந்தியாதவர்களாய் இருக்கிறோம்.

2. விரோதங்களற்ற நிலையானது தீமை செய்யும் மனிதரை செழித்தோங்கச் செய்கிறது: இரண்டாவது சவால், நமது மனநிலையானது தீமையன மக்கள் வாழ்வில் செழிப்படைவதைக் காண்பதாய் இருக்கிறது. இதைக் காணும்போது நாம் கோபப்படுகிறவர்களாய் இருக்கிறோமா, விரோதிக்கிறவர்களாய் இருக்கிறோமா அல்லது பொறாமையுள்ளவர்களாய் இருக்கிறோமா? அவ்வாறு இருப்போமானால், நமது கண்ணோட்டத்தை பரிசீலனை செய்து பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், சரிசெய்யப்படுவதற்கான மாற்றங்களைச் செய்து கொள்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். இதன் மூலம் நித்திய ஜீவனுக்கடுத்த கண்ணோட்டத்திற்குள் திரும்ப வருகிறவர்களாய் இருக்கிறோம், தேவன் காண்பதைப் போன்று நாம் காரியங்களைக் காண்பது, மற்றும் தெய்வீக வழியில் காரியங்களைச் செய்வது, இதினால், தீமையின் தற்காலிக ஜெயமானது நம்மில் கவனச் சிதறல்களைக் கொண்டுவராது, நித்தியத்திற்கடுத்த உண்மையில் நமது கண்ணோட்டத்தைச் செலுத்தி, எல்லா மனுக்குலத்தையும் தேவன் இறுதி நியாயத்தீர்ப்பில் கொண்டு வருவதை அறிந்து செயல்பட வைக்கிறதாய் இருக்கிறது.

3. தேவனுடைய தராதரத்திற்கு தலைமைத்துவமானது அளவிடப்படுகிறது: இவ்வசனங்களின் வெளிச்சத்தின் கீழ், போதகரானவர் மறுபடியும் வருகிறவராய் இருக்கிறார். போதகர்களாகிய நாம் மேய்ப்பர்களாய், கர்த்தர் நமக்களித்துள்ள ஆத்துமாக்களின் ஆரோக்கியம் மற்றும் அவர்களது பலம் இவற்றிற்கு பொறுப்பாளிகளாய் இருக்கிறோம். பவுல் இங்கு குறிப்பிடுகிற ஒன்பது குணாதியங்களின்படி எவ்வாறு அளவிடப்படுகிறவர்களாய் இருக்கிறோம் என்பதைச் சீர்தூக்கிப்பார்க்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். நம்மால் நடத்தப்படுகிறவர்களைப் பார்த்து "என்னைப் பின்பற்றுகிறவர்களாகுங்கள்" எனக் கூற இயலுமா? அவ்வாறு கூற இயலாதவர்களாய் இருப்போமானால், நமது சிந்தனை மற்றும் நமது மனநிலைகளின் செயல்பாடுகளில் சரிசெய்ய வேண்டிய

காரியங்கள் இருக்கின்றன. நமது ஊழியத்தின் விளைவுகள் எத்தன்மையுள்ளதாய் இருக்கிறது? கர்த்தர் நம் மூலம் செயல்பட்டு, ஆவிக்குரிய வளர்ச்சியை காண்கிறவர்களாய் இருக்கிறோமா? எதிர்ப்புகள் மத்தியிலும், பல தாக்குதல்கள் மத்தியிலும் பாதுகாக்கப்பட்டு, அவற்றிலிருந்து தேவனால் விடுவிக்கப்படுகிறவர்களாய் இருக்கிறோமா? இவ்வசனங்களில் போதாகராய் இருப்பவர்களை பரிசீலனை செய்வது இவ்வசனங்களின் மற்றொரு முக்கியத்துவமாய் இருக்கிறது. இப்படிப்பட்ட சாட்சியை ஒரு மனிதர் பெற்றிராதபட்சத்தில், அவர் உழியத்திற்கு புதியவர் அல்லது அவரது ஊழியத்தில் வல்லமை குன்றி காணக்ப்படுகிறது என்பது பொருளாகிறது.

நமது நற்கிரியைகளும், அன்பினால் செய்யப்படும் செயல்பாடுகளால், சமுதாயத்தில் சில நண்பர்களை நம்முடன் சேர்க்கிறதாய் இருக்கும், நமது சுவிஷேசப் பிரசங்கமானது அடிக்கடி நமக்கு சத்துருக்களை சேர்க்கிறதாய் இருக்கிறது. தேவனற்ற மக்கள் ஒருபோல ஒரு பிரசங்கியாரைப் புகழுவதைக் குறித்து எச்சரிப்புடன் இருங்கள். மற்றவர்கள் உங்களைப் புகழும்போது, உங்களை நீங்களே அவர்கள் எதற்காக உங்களைப் புகழுகிறார்கள் என்பதைக் குறித்து கேட்டுக்கொள்ளுங்கள்.

இப்பொழுது, ஜாக்கிரதையுடன், இங்கு பகுத்தறிவுடன் காணப்பட வேண்டியது அவசியமாய் இருக்கிறது, மிக சீக்கரத்தில் எந்த ஒரு காரியத்தையும் ஆக்கினைக்குள்ளாக தீர்க்காதிருங்கள்! ஒரு போதகரின் அன்பின் செயல்பாடுகள் மற்றும் மக்களைக் குறித்த கரிசனையானது, ஜனங்கள் அப்படிப்பட்டவரைப் புகழுகிறதாய் இருக்கும், "இவர் இயேசுவைப் பிரசங்கிக்கிறார் என்பது எனக்குத் தெரியும், எனக்கு அவற்றில் ஈடுபாடு எதுவும் கிடையாது, இருப்பினும், அவர் என்ன செய்கிறாரோ அதை உயர்வாய் கருதுகிறேன், அவர் கடவுள் பற்றுமிகுந்தவர், நானோ கடவுள் பற்றில்லாதவன்." இவ்வாறு அவிசுவாசி பேசுவது உண்மையானதாயும் அர்த்தமிக்கதாயும் இருக்கிறது.

இது அப்போஸ்தலராகிய யாக்கோபின் சாட்சியாய் இருக்கிறது, அவிசுவாசிகள் அவரைக் குறிப்பிடும்போது, நீதிமானகிய யாக்கோபு என அழைக்கிறவர்களாய் இருந்தனர். அப்படிப்பட்டவர்கள் தங்களது இரட்சகரைப் புறக்கணித்தவர்களாயிருந்தும், அவரது தெய்வீக வாழ்க்கையை மதிக்கிறவர்களாய் இருந்தனர். நாம் மனிதரால் "நற்சாட்சி உடையவர்களாய்" விளங்குதல் வேண்டும், சமுதாயத்தினரால், நமது ஒழுக்க நெறி அல்லது பாவமற்ற குற்றமில்லாத வாழ்க்கைக்குரிய சாட்சியை உடையவர்களாய் இருத்தல் அவசியம்.

அவிசுவாசியானவர்கள் நம்மில் எவ்வித குற்றச்சாட்டையும் காணாதவர்களாய் இருத்தல் வேண்டும், அவ்வாறு அவர்கள் குற்றம் சாட்டுவார்களேயானால், நமது சாட்சியை இழந்து, அல்லது நமது இரட்சகரை அவமானத்திற்குள்ளாக்குகிறவர்களாய் விளங்குவோம்.

2. மகிமைக்குள் பிரவேசிக்கும் முன்னர், பவுலின் இறுதி கட்டளை:

2 தீமோத்தேயு 4:1-8.

1. நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும், அவருடைய இராஜ்ஜியத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது:
2. சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு, எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்திசொல்லு. 3.
ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, 4. சத்தியத்துக்குச்
செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும். 5.
நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாய் இரு, தீங்கநுபவி, சுவிஷேசகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. 6.
ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாய் வார்க்கப்பட்டுப் போகிறேன். நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. 7. நல்ல போராட்டத்தைப்
போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். 8.
இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார், எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.

பிரதிபலிப்புகள்:

கர்த்தரது, நியாயாசனத்தின் வெளிச்சத்தில், பூமியில் நாம் செய்த கிரியைகளுக்குத்

தக்கதாய் பிரதிபலனை அடைய நிற்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், தேவனது வார்த்தையை போதித்த போதகர் என்ற நமது பணிக்காக அவரை அணுக வேண்டியவர்களாய் இருக்கிறோம். இதன் பொருள் என்ன? கர்த்தரது வார்த்தைக்கு எந்த அளவுக்கு நாம் உண்மையுள்ளவர்களாய் நடந்து கொண்டோம், கர்த்தரது ஜனங்களைக் குறித்த கரிசனை எங்ஙனம் இருந்தது, நம்மை எதிர்ப்போரைக் குறித்து நமது மனதில் எந்த அளவுக்கு கடினத்தன்மையானது மேற்கொண்டது, என்பது இதன் பொருளாயிருக்கிறது. இந்த வசனங்களில் பவுல் அடுத்த தலைமுறை போதகர்களுக்கான ஒளிவிளக்கை தீமோத்தேயுவின் கரத்தில் அளிப்பது தெளிவுபடுத்தப்படுகிறதாய் இருக்கிறது. தனது அடிப்படைக் கருத்துக்களை தீமோத்தேயுவிடம் "ஒப்படைக்கையில்" மிகக்கவனமாய் குறிப்பிட்டு, மறுபடியும் திரும்பக்கூறுகிறவராய் இருக்கிறார்.

1. நான் தேவனுக்கு முன்பாகவும், உயிரோடிருக்கிறவர்களையும், மரித்தவர்களையும் நியாயந்தீர்க்கப்போகிற கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவுக்கு முன்பாகவும், அவருடைய பிரசன்னமாகுதலையும், அவருடைய இராஜ்ஜியத்தையும் சாட்சியாக வைத்துக் கட்டளையிடுகிறதாவது:

ரோம அதிகாரிகள், தங்களது பணிமுடிந்து செல்லும்போது, அடுத்த அதிகாரி வசம் தனது இராணுவ வீரர்களை, இரவு காவலுக்காக, ஒப்படைத்துச் செல்லும்போது, தனது இராணுவ வீரர்களுக்கு கூறும் பாணியில் பவுல் இங்கு கூறுகிறவராய் இருக்கிறார். தீமோத்தேயு "தனது பணிக்குரிய பதவி நியமணம் செய்யப்படுகிறவராய் இருக்கிறார்." (E K Simpson, IBID, page 152). இது பவுல் தனது மரணத்தைச் சந்திக்கும் போதுள்ள அவரது மனநிலையைக் காட்டுகிறதாய் இருக்கிறது, அவர் தனது இராணுவத்திற்கு திரும்பி வந்து அதை தீமோத்தேயுவின் கரத்தில் ஒப்படைத்து, தனது சந்ததியில் அவர் சந்தித்த எதிராளிகளை எதிர்த்து, சபைகளின் சரித்திரத்தில் தொடர்ந்து யுத்தங்களை மேற்கொள்ள கட்டளையிடுகிறவராய் இருக்கிறார்.

பவுல் தீமோத்தேயு பிரசங்கம் செய்ய விரும்புகிறவராய் இருக்கிறார், "தேவனது வசனத்தை மட்டும், தேவனது வசனத்தையே பிரசங்கம் செய்யக்கூறுகிறவராய் இருக்கிறார்." ,(G Wilson, IBID, page 160). Ironside அவர்கள் குறிப்பிடுகையில், "ஒவ்வொரு சுவிஷேச ஊழியருக்கும் பரிசுத்த ஆவியானவரின் கட்டளையாய் இருக்கிறது, கர்த்தரது வார்த்தையைப் பிரசங்கித்தல் வேண்டும்! அவரது ஒரே நோக்கம் தேவனை மகிமைப் படுத்தி, தனது சத்தியத்தை, தான் வழிநடத்தப்பட்டபடியே அமைத்துக்கொள்வது அவசியமாய் இருக்கிறது." (IBID, page

233). "சத்தியத்தை தான் கைக்கொள்ளுதல் வேண்டும், இதை எல்லா பணிகளிலும் அல்லது உபத்திரகாலத்திலும் கடைபிடித்தல் வேண்டும்." (Fairburn, IBID, page 384).

இராணுவ வார்த்தையான "கட்டளைக் கொடுத்தல்" என்பது, பவுல் தீமோத்தேயுவுக்கு இராணுவ கட்டளை அளிப்பதைக் காட்டுகிறதாய் இருக்கிறது, இதில் தீமோத்தேயு தான் அளிக்கவேண்டிய காரியங்களுக்கான அறிவுரைகளுக்கு செவிசாய்க்க வேண்டியவராய் இருந்தார், பிதாவாகிய தேவனது மற்றும் கர்த்தரது பிரசன்னத்தில் அளிக்கப்பட்ட இதை, மிகக்கவனமாய் கவனித்து செயல்படுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறவராய் இருக்கிறார். நமது சரீரத்தில் இருந்த காலத்திற்கான பிரதிபலன்களை கர்த்தருக்கு முன்பாக நின்று பெற்றுக்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம், தீமோத்தேயுவுக்கு பவுல் தெளிவுபடுத்த விரும்பியது என்னவெனில், பெரிதான பிரதிபலனானது தனக்காக காத்திருப்பதைக் கூறுகிறவராய் இருந்தார்.

நமக்கு நினைவு படுத்தப்படுகிற காரியம் என்னவெனில், பிரதிபலனைக் குறித்த உபதேசமானது, நித்தியம் முழுவதிலும், பிரதிபலனாது நமது, மனமகிழ்ச்சிக்காய் அளிக்கப்படும் ஒன்றாயிராமல், பிரதிபலனை அடையும்படி தனது வல்லமையை நமக்களித்து, அவற்றை பெற்றுக்கொள்ளச் செய்த கர்த்தரை மகிமைப் படுத்துவதாய் இருக்கிறது.

2. சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும், ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு, எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்திசொல்லு.

"தீமோத்தேயு பட்டணங்களுக்காய் கதறும் தேவமனிதர்." (R Mounce, IBID, page 147). நாமனைவரும் தேவனது வார்த்தையை பிரசங்கம் செய்கிறவர்களாயும், நமது தேசத்தின் பட்டணங்களுக்காக கதறுகிறவர்களுமாய் இருத்தல் வேண்டும். பறைசாற்றுபவர் (Greek - keruz) இராஜாவின் அதிகாரப்பூர்வமான செய்தியாளராய் இருக்கிறார், இவரது கடமையானது எதையும் மாற்றியமைப்பதாய் இராது, இராஜா கட்டளையிட்ட அனைத்தையும் அறிவிப்பதாய் இருக்கிறது. இதுவே போதகர்களாகிய நமது கடமையாய் இருக்கிறது, கர்த்தர் அளித்த அனைத்துகாரியங்களையும், சபை அல்லது வீட்டுக்குழுவில், தேவனது முழுஆலோசனை அடங்கிய அவரது வார்த்தையை வல்லமையாய் வலியுறுத்துவது நமது கடமையாய் இருக்கிறது. ஒரு போதகரானவர் உபதேசத்தை

கண்டிப்பாய் பிரசங்கித்தல் அவசியமானதாய் இருக்கிறது. அவர் சாதரண வேதாகம கதைகளைக் கூறாது, அதை நல்ல விவரனைகளைக் கொண்டு ஒப்பிட்டு விளக்கம் அளித்தல் வேண்டும். "உண்மையுள்ள போதமானது விளக்கங்கள், மற்றும் கைக்கொள்ளும் வேதாகம உபதேசங்கள் அடங்கியதாய் இருத்தல் வேண்டும். அவர்களது போதனை மதசார்புள்ள அளப்பும் காரியமாய் இருத்தல் கூடாது." (W Wiersbe, IBID, page 165). Mounce அவர்கள் குறிப்பிடும் போது, "பகுதி நேர ஊழியர் அடிக்கடி தங்களது விவரனைகளைத் திரும்பத் திரும்ப அளித்து களைத்து காணப்படுகிறார்கள், மற்றும் நல்நோக்கத்துடன் அவர்கள் அளிக்கும் மனோரீதியான ஆவிக்குரிய உள்நோக்கத்தை தூண்டும் காரியங்களும் இருக்கிறதாய் இருக்கிறது." (IBID, page 147).

அவசியமானது என்னவெனில், வேத வசனங்களை முறையான நிலையில் போதனை அளிப்பதாய் இருக்கிறது, இதினிமித்தம் எல்லோரும் தேவனது வசனத்தைக் கேட்கவும், புரிந்து கொள்ளவும், விசுவாசித்து கைக்கொள்ளவும் ஏதுவுண்டாகிறது. "ஆரோக்கியமான போதனையானது வலியுறுத்துவது என்னவெனில், வேதவசனத்தின் பெரிதளவிலான சத்தியத்தை அறிய வேண்டிய அவசியத்தை உணர்த்தி, அதை தேவன் அளித்துள்ள வெளிப்பாட்டின் அடிப்படையில் கற்றுக்கொண்டு செயல்படுத்த வேண்டியதன் அவசியத்தை உணரச் செய்கிறதாய் இருக்கிறது. நோக்கத்திற்காக உண்மையுடன் செயல்படுதல் மட்டும் போதாது, நாம் சத்தியத்தால் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாய் இருத்தல் வேண்டும்." (Ironside, IBID, page 235).

Stott என்பவர் வலியுறுத்தி உறுதிபடுத்துகிறார்: "நமது செய்திகளை கண்டுபிடிப்பதில் நமக்கு எவ்வித சுதந்திரமும் இல்லை, ஆனால், தேவன் உரைத்த தமது வார்த்தையை எடுத்துக்கூறுவது மட்டுமே நமது கடமையாய் இருக்கிறது மற்றும் இப்பொழுது அவைகள் சபைக்கு பரிசுத்தமான நம்பிக்கைகாய் இருக்கிறது எனக்கட்டளையிடப்பட்டுள்ளது...., வேதவசனத்தை மட்டும் உண்மையாய் போதிக்க வேண்டியது நமது கடமையாய் இருக்கிறது, இதை அறிவிக்கும்போதுள்ள விளைவுகள், பரிசுத்த ஆவியானவரின் கடமையாய் இருக்கிறது, நாம் அவரது கிரியைக்காய் பொருமையுடன் காத்திருத்தல் அவசியமாய் இருக்கிறது, ஒருவேளை மக்கள் நம்மைக் கைவிடலாம், தீமோத்தேயுவின் ஊழியமானது போதிப்பவர்களுக்கு ஆதரவு செய்கிறதாய் இருந்தது, தீமோத்தேயு தனது ஊழியத்தை நிறைவேற்றி முடிக்க வேண்டியதாய் இருந்தது." (IBID, pages 106, 108, 112).

சில மக்கள் வேதவசனத்தில் அன்பு கூறுகிறவர்களாய் இருக்கின்றனர்,

மற்றவர்கள் வேதவசனத்தால் தொடப்பட்டவர்களாய் உணர்ந்து அவற்றை வெறுக்கிறவர்களாய் காணப்படுகின்றனர். Ironside அவர்கள் தனது வயதான பிரசங்கி நண்பரைக் குறித்த ஒரு சம்பவத்தை இவ்வாறு கூறுகிறார்: "சாம் ஜோன்ஸ் கூறியது உனக்கு நினைவிருக்கலாம், "நாய்களின் கூட்டத்தில் ஒரு கல்லை எறியும்போது, அவைகளில் ஒன்று குரைக்கிறது, இப்பொழுது உனக்குத் தெரியும் எந்த நாய் அடிபட்டது என்று," (IBID, page 236). பிரசங்கித்தல் என்பதன் கிரேக்க இலக்கமானது, The aorist tense of the verb ஆக இருக்கிறது: இதன் பொருள் பிரசங்கிப்பவர் தேவனது வார்த்தையினை, சரியான நேரத்தில் சரியானவற்றை அறிவிக்கிறவராய் இருத்தல் வேண்டும், இராஜாதி இராஜாவின் கொள்கையினை அதைச் செய்கிறவராய் இருத்தல் வேண்டும். தேவனது முழுமையான ஆலோசனையை சபையனது அது இருக்கவேண்டிய பிரகாரம் செயல்படாது, தேவன் என்ன எண்ணுகிறார் என்பதனை ஜனங்கள் அறிந்து கொள்ளத்தவறுபவர்களாய் இருப்பர்.

தகுந்த சமயம் நேரிடுகிறதாய் இருக்கிறது, மற்றும் தருணங்கள் / வாய்ப்புகள் உள்ள சமயமும் கிடைக்கிறதாய் இருக்கும், மற்றவர்கள் அதை சரியான சமயமாய் எண்ணுகிறார்களோ இல்லையோ அவற்றைப் பயன்படுத்திக்கொள்வது அவசியமாய் இருக்கிறது. போதகரானவர் மிகவும் கவனமுள்ளவராயும், ஆவிக்குரியவராயும் இருந்து தருணங்களைப் பயன்படுத்திக்கொள்கிறவராய் இருத்தல் அவசியம், அதை மற்றவர்கள் ஒரு தருணம் என்பதாக கருதுகிறார்களோ இல்லையோ, இவர் அதை தருணங்களாய் பயன்படுத்திக்கொள்கிறவராய் இருத்தல் அவசியம். போதகரானவர் தனது நிலையில் "உறுதியாய் நிற்றல் வேண்டும்" (உடனடியாய் செயல்படுதல்) உண்மையாகவே தேவனது வார்த்தைக்காய் போராடுகிறவராய் இருத்தல் வேண்டும், அதை மிகவும் ஆணித்தரமாய் அறிவித்தல் வேண்டும். அவர் போதிக்கும் தருணம் ஒவ்வொன்றையும், இராணுவ வீரரைப் போன்று பணி செய்கிறவராய், போராடும் தருணங்களைப் பயன்படுத்திக்கொள்கிறவராய் இருத்தல் வேண்டும். போதகரால், போதகம் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது, "நீங்கள் சார்ந்திருப்பதாய் உணர்ந்தும், சார்ந்திராது இருப்பீர்களானால், மனிதர்கள் அவைகளை கேட்பதில் ஆர்வம்காட்ட தவறுகிறவர்களாய் இருப்பர்." (A T Hanson, IBID, page 97).

போதகரானவர், கண்டனம் செய்து, கடிந்து கொண்டு, புத்தி சொல்லும் மன நிலையில் பொறுமையுடன் காணப்பட வேண்டியவராய் இருக்கிறார். இவ்வார்த்தைகள் ஒவ்வொன்றையும் பார்ப்போம்.

1. கண்டனம் செய்தல்: - இது சட்டப்பூர்வமான வார்த்தையாய் இருக்கிறது, இதன் பொருள் நீங்கள் விரும்பும் தீர்ப்பை அளிப்பதற்கான பாதுகாப்பை உறுதிசெய்து, ஒரு வழக்கை ஆயத்தம் செய்து அளிப்பதாய் இருக்கிறது. இவ்வார்த்தையின் பொருளானது, இப்படிப்பட்ட பணியை ஆயத்தம் செய்யும்போது, வாக்குவாதம் செய்வதற்கான முயற்சியின்றி செயல்பட்டு, அதை அளிப்பதைக் குறிக்கிறதாய் இருக்கிறது.

2. கடிந்து கொள்ளுதல்: - தேவனது தராதரத்தை அளவிடமுடியாதவர்களை, கடிந்து கொள்ளுதல் மற்றும் சரிசெய்தல் மூலம் உணரவைப்பது. இதன் நோக்கமானது, ஒரு நபரில் மாற்றத்திற்கேதுவாக, அவர்கள் ஆசீர்வாதம் பெறும் நிலையில் அவர்களை நியாயந்தீர்ப்பதாய் இருக்கிறது.

3. புத்தி சொல்லுதல்: - தவறிழைக்கும் மக்களுக்கு மேற்கண்ட இரு வார்த்தைகளும் எதிர்மறையான காரியங்களைத் தெரிவிக்கிறதாய் இருக்கிறது. இந்த வார்த்தையானது சுட்டிக்காட்டுவது என்னவெனில், உக்கமளிப்பதன் மூலம், ஒரு நபரை வளருவதற்கேதுவாக சரிசெய்தலைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இவ்வார்த்தையின் அடிப்படைக்கருத்தே, "அன்புடன் சத்தியத்தை எடுத்துரைத்தல்." என்பதாய் இருக்கிறது.

4. எல்லாப்பணிகளும் நீடிய பொறுமையுடன் இருக்க வேண்டியதாய் இருக்கிறது:- பொருமை என்பது நெருக்கப்படுகிறதன் கீழாக, ஒரு போதகரில் அவரது சபை அங்கத்தினர் காணவேண்டியதாய் இருக்கிறது. ஒரு காரியத்தைக் குறித்து பிரசங்கிப்போமானால், அதை நமது வாழ்வில் காண்பிக்க ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். Mounce என்பவர் குறிப்பிடும் போது, "the ministry is no place for an individual with a short fuse,(IBID, page 148). என்கிறார்.

5. உபதேசம்:- ஒழுங்குபடுத்தப்பட்ட போதனை முறையானது எல்லாப் போதகர்களும் கடைபிடிக்க வேண்டியதாய் இருக்கிறது, இது மட்டுமே விசுவாசிகள் வளர வகை செய்கிறதாய் இருக்கிறது.

"சரித்தின் ஒவ்வொரு காலகட்டத்திலும், மனிதர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை மறுதளிக்கிறவர்களாய் காணப்பட்டனர், எரேமியா, எசேக்கியேல் காலத்தில் நிகழ்ந்தது போலவே இக்காலங்களிலும் நிகழ்கிறதாய் இருந்தது. எரேமியா 5:31. எசேக்கியேல் 33:32" .(W Hendricksen, IBID, page 311). இது போன்ற

பிரச்சனைகளை அடுத்த வசனத்தில் பவுல் எடுத்துரைக்கிறவராய் இருக்கிறார். D Guthrie அவர்கள் குறிப்பிடும்போது: "அவர்கள் எதைக் கேட்டனரோ, அது அவர்களுக்கு செவித்தினர்வை உண்டாக்கி, தொடர்ந்து காதில் நுழையாதவைகளாய் இருந்தன." (The pastoral Epistles, page 167).

3. ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு, 4. சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும்.

சில மக்கள் தங்களுத்தாங்களே போதித்துக் கொள்கிறவர்களாய் இருக்கின்றனர், இப்படிப்பட்டவர்கள் ஒருபோதும் கற்றுக்கொடுப்பதை ஏற்றுக்கொள்கிறவர்களாய் இருப்பதில்லை, அவர்களுக்கு பொருந்தும் காரியங்களை மட்டும் ஏற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை விரும்பாதவர்களாய் காணப்படுகின்றனர். இப்படிப்பட்டவர்கள் உண்மையான ஆவிக்குரிய வளர்ச்சியின்றி காணப்படுகின்றனர், இவர்களில் ஆவிக்குரிய வல்லமை குன்றிக் காணப்படுகிறது. இப்படிப்பட்டவர்கள் ஒரு விசுவாசிக்கு அளிக்கப்படும் காரசாரமான தேவனது பயிற்சிக்கு உட்படாதவர்களாய் இருக்கின்றனர். இப்படிப்பட்டவர்கள் எளிமையான வழியில் சென்று, ஆவிக்குரியவர்களாய், வல்லமையிழந்தவர்களாயும், வளர்ச்சியற்றவர்களாயும் காண விரும்புகின்றனர்.

இங்கு பவுல் குறிப்பிட்ட அளவு பரிகாசச்சொற்களைப் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார்: இப்படிப்பட்ட ஜனங்கள் அரிப்பை ஏற்படுத்தும் உண்ணியைப் போன்றும், அதனால் ஏற்படுத்து அரிப்பை சொறிந்து கொண்டு செல்கிறவர்களாய் இருக்கிறார்கள் என்கிறார். தேவனது விலையேறப்பட்ட காரியங்களைக் குறித்த அவர்களது மனநிலையானது, மிருகமானது சொறிந்துகொண்டு செல்வதைப்போன்று, அவர்கள் தங்களுக்கு நலமாய்ப் படுகிறவைகளை மட்டும் எடுத்து, சத்தியத்தை மதியாமல் சிந்திக்கத்தவறுகிறவர்களாய் இருக்கின்றனர். இவர்கள் உடனடியன மனமகிழ்ச்சி தருகிறவற்றை விரும்புகிறவர்களாய் இருக்கின்றனர். இதன் விளைவுகள் பயங்கரமானதாய் இருக்கிறது, இவர்கள் சத்தியத்திலிருந்து வழிவிலகி, தீமைக்கு நேராய்த் திரும்புகிறவர்களாய் இருக்கின்றனர், இறுதியாக அதற்கேற்ற நியாயத்திர்ப்பை அடைகிறவர்களாய் இருக்கின்றனர்.

தேவனது வார்த்தையின் போதனயினின்று பின்திரும்புவது, சத்தியத்தின் அடிப்படையினின்று பின்திரும்புவதாய் இருக்கிறது, எஞ்சியிருப்பது என்னவெனில், "கட்டுக்கதைகளும்" பழைய பாவசுபாவத்தைத் திருப்திபடுத்தும் மனதுக்கு இன்பமான கட்டுக்கதைகளும்தான், இவைகள் ஒருபோதும் ஆத்துமத்தில் வளர்ச்சியை உருவாக்குவதில்லை. சபைக்குரிய உண்மையான அபாயம் என்னவெனில், மதுவுக்கும் போதைவஸ்துக்களுக்கும் அடிமையானோர் மூலமாக அல்ல, இப்படிப்பட்டவர்கள் பாவம் செய்வர் பின்னர் மனந்திருந்துபவர்களாய் இருப்பர். உண்மையான அபாயமானது, விசுவாசிக்கிறோம் என்று கூறி, உபதேசங்களை ஜனங்கள் தூங்கிவழியுமாறு உபதேசித்து, அவர்கள் தேவதூதர்களின் முறண்பாடுகளுக்கு எதிராக செயல்படாது தடை செய்கிறவர்களாய் இருப்பவர்கள் உருவாகிறதாய் இருக்கிறது.

5. நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாய் இரு, தீங்கநுபவி, சுவிஷேசகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று.

பவுல் தீமோத்தேயுவுக்கு அவரது கடமை குறித்த தெளிவான அறிவுரைகளை அளித்துள்ளார். இவ்வறிவுரைகள் "நீயோ" எனத் துவங்குகிறதாய் இருக்கிறது, மற்றவர்கள் எதைச் செய்தாலும், நாம் தேவனுக்காக நிலைநிற்றல் வேண்டும், மற்றும் அவர்களிலிருந்து வேறுபட்டவர்களாய் இருத்தல் வேண்டும். Fairburn என்பவர் வலியுறுத்துவது என்னவெனில்: "மற்றவர்கள் எதைச் செய்தாலும், மனிதர் கேட்டாலும் கேட்காவிட்டாலும், அவர்கள் எடுத்துக்கொண்டாலும் இல்லாவிட்டாலும், இதை நீ கண்டிப்பாக செய்தாக வேண்டும்." (IBID, page 388).

கட்டளையானது உறுதியானதும் மற்றும் நேரடியானதாயும் அளிக்கப்படுகிறது, அவர்கள் முழுவதுமாய் கீழ்ப்படிய எதிர்பார்க்கப்படுகிறவர்களாய் இருக்கிறார்கள்.

1. மனத்தெளிவுள்ளவனாய் இருத்தல்: / காவல் செய்தல்: எல்லாக் காவலாளிகளுக்கும் இரவு காவல் செய்யும்போது அளிக்கப்படும் கட்டளையாய் இருக்கிறது, இது ரோம இராணுவத்தில் இப்படிப்பட்ட கட்டளையானது இருந்து வந்தது. தீமோத்தேயு, ஜாக்கிரதையுடனும், தெளிவுடனும், சுயக்கட்டுப்பாட்டுடனும், எப்பொழுதும் விழிப்புடனும், எல்லா நேரங்களிலும் எதிராளிகளுக்கு எதிராய் காவல் செய்கிறவராய் இருக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறார். அவர் எப்பொழுதும் விழிப்புடனிருந்து, போராட எச்சரிக்கப்படுகிறவராய் இருக்கிறார்.

2. தீங்கனுபவித்தல்: - தாக்குதலின் போது தீங்கனுபவித்தல் வேண்டும் மற்றும் எதிராளி உங்களை வன்மையாய் எதிர்த்து கீழேத்தள்ள எத்தனித்து உங்களுக்கு நெருக்கங்களை அளிக்கும் போது, தீங்கனுபவிப்பவர்களாய் இருத்தல் வேண்டும். இதன் பொருள், இதற்கு முன் நாம் கண்டது போல, நெருக்கப்படுகிற காலங்களில், நாம் கடினமுள்ளவர்களும், மற்றும் வலுவுள்ளவர்களாயும் இருத்தல் வேண்டும், நமது சொந்த பெலத்தைச் சார்ந்திராது, கர்த்தரையே சார்ந்திருத்தல் வேண்டும்.

3. சுவிஷேசகனுடைய வேலையைச் செய்தல்: - சுவிஷேசப்பணி மற்றும் போதித்தல் போன்ற அத்தியாவசிய பணிகளை தீமோத்தேயு கைக்கொண்டு செய்கிறவராய் இருந்தார்.

இவைகளை நிறைவேற்றுவதனால், தேவன் தமது அழைப்பின் முழு ஆதாரத்தையும் அளிக்கிறவராய் இருக்கிறார் மற்றும் அந்நபர் தேவனுக்காக கடமைபட்டுள்ள ஊழியத்தை செய்து முடிக்க இயலும். தீமோத்தேயு தனது கடமையைச் சார்ந்து இருந்தார் என நாம் கூற இயலும், அவர் அடிப்படையானவற்றைச் செய்தார், இதினிமித்தம் அவர் எந்தவிதத்திலும் அவசியமற்றவைகளுக்கு சாய்ந்து போகாதிருந்தார். புதிய பயமுறுத்தலுக்கான பதிலானது, பழைய பணிகளில் பாதுக்காக்கப்பட்டு வந்தது. இது எளிதானதாய் இருக்கவில்லை, இதினிமித்தம் துன்பங்களை எதிர்கொள்ள வேண்டியருந்த்து, இவைகளை சாதாரண நிகழ்வுகளாய் முக்கியமான நோக்கக்கங்களுக்காய் எதிர்கொள்ளவேண்டியதாய் இருந்தது. இது சுவிஷேச பரம்புதலுக்குக் காரணங்களாய் அமைந்தன." (C K Barrett, IBID, page 117). "நல்லது, உண்மையும் உத்தமுமுள்ள ஊழியனே" என ஆண்டவர் கூறுவதை கேட்க்க வேண்டும். (மத்தேயு 25:21-23,) இதுவே போதகரும், விசுவாசிகளும் வாஞ்சிக்க வேண்டிய ஒன்றாய் இருக்கிறது.

6. ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாய் வார்க்கப்பட்டுப் போகிறேன். நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது.

போதகர்களாகிய நம்மையும், தீமோத்தேயுவையும் பவுல் அழைத்து, நாம் செய்ய வேண்டிய சிறப்பானவற்றை செய்து, நமது அழைப்பை நிறைவு செய்யுமாறு கூறுகிறவராய் இருக்கிறார். இந்த வசனங்களில், தனது முதிர்ச்சியை வெளிப்படுத்தும் சாட்சியினை அளிக்கிறவராய் இருக்கிறார், இது தனது பணியை நிறைவு செய்து, தனக்கு அளிக்கப்பட்ட பணியின் பாரத்தை இறக்கி வைத்து,

நிறைவுசெய்து முடிக்கிறதை கூறுகிறவராயிருக்கிறார். இந்த சாட்சியை நம்மனைவருக்கு அறிவித்து ஞாபகப்படுத்துகிறவராய் இருக்கிறார். அவர் கூறும் இவ்வார்த்தைகளானது, நாம் அனைவரும், நமது ஊழியத்தின் இறுதியில் கூறவேண்டிய வார்த்தைகளாய் இருக்கின்றன.

இப்பகுதியை ஆரம்பிக்கும் போது, தான் தேவனுக்கென்று, பானபலியாய் வார்க்கப்பட்டு, தனது ஊழியத்திற்கு அடையாளமாக தன்னை அற்பணிப்பதைக் குறித்து பவுல் கூறுகிறவராய் இருக்கிறார். இது போன்ற பழக்கம் புறஜாதிய உலகில் நிலவி வந்தது.

பிரிதல் என்கிற வார்த்தையானது, ஒரு கப்பலானது நங்கூரத்தை அகற்றிவிட்டு புறப்படுவதற்கு ஒப்பாக கூறப்படுகிறது, பவுல் தனது மரணத்தை எதிர்நோக்கியவராய், மற்றொரு கரையின் இறுதியைக் காண, முன்னேறுவதை குறித்து காண்கிறவராய் இருக்கிறார். இது அவரது வாழ்வில் ஒரு ஆரம்பமாய் கருதப்படுகிறது, இது ஒரு புதிய அற்புதமான பிராணம் செய்து தனது எஜமானரை முகமுகமாய் காணச்செல்வதைக் காட்டுகிறதாய் இருக்கிறது. இது ஒரு நல்ல சித்தரிப்பாய் இருந்த போதிலும், பவுலின் மனதில் என்ன இருந்தது என்பதை சரிவர புரிந்து கொள்ள இயலாததாய் இருக்கிறது. இவ்வுருவகக் கருத்தானது, ஒரு மாலுமி நங்கூரக் கயிறு அறுந்து போக கப்பலைச் செலுத்துதல். அல்லது ஒரு இராணுவ வீரன் தனது கூடாரத்தை கலைந்து இடம்பெயர்தலைக்குறிக்கிறது. அடுத்த வார்த்தைகளானது, அதிகமாய் தெரிந்து கொள்ளுதலைக்குறிக்கிறதாய் இருக்கிறது. W Lock, IBID, page 114, also refer Fairburn, IBID, page 390, also as E Simpson notes, "a sense of combat predominates", IBID, page 155). பவுல் இவ்விடத்தில் இராணு உவமேயக்கருத்துக்களைப் பயன்படுத்துகிறவராய் இருக்கிறார். இவ்வாறு சித்தரிக்கப்படுவதை இவ்வசனங்கள் வாயிலாக மனதில் இறுத்திக்கொள்வது அவசியமாய் இருக்கிறது. அவர் போராடியது மட்டுமல்லாது, எதிராளியை தாக்கும்படிக்கு வழிநடத்துகிறவராயும் இருந்தார், இவ்விடத்தில் அவர் செய்த மல்யுத்தக் களத்திலிருந்து விடுபட்டு, நித்திய பிரதிபலனை அடையும்படியாய், அப்படிப்பட்ட போராட்டத்தை அடுத்த தலைமுறையினருக்கு விட்டுச் செல்கிறதை நாம் இங்கு காண்கிறோம்.

7. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்.

இது பவுலின் "இறுதிப் போராட்ட காலமாய்" ["crunch time"] இருந்தது. மரணம் எல்லாருக்கும் நேரிடுகிறதாய் இருக்கிறது! இக்காலங்களில் மக்கள் நாம் எந்த அளவுக்கு விசுவாசமுள்ளவர்களாய் இருக்கிறோம் என்பதையும் எந்த அளவுக்கு உபதேசத்தைக் கைக்கொண்டு நடக்கிறோம் என்பதையும் காண்கிறவர்களாய் இருக்கின்றனர். பவுல் தனது இறுதியாய் கைக்கொண்டவைகளை பிலிப்பியர் நிருபத்தில் கூறுகிறதைக் காண்கிறோம். (1:23, 2:17, 3:13, 14). பவுல் ஒரு வேளை தீமோத்தேயுவுக்கு இவ்வாறு எழுதக் கூறியிருப்பார் என்றால், "நான் கடந்து செல்ல ஆயத்தமுள்ளவனாய் இருக்கிறேன், எனது வாழ்க்கையை இரத்தம் சிந்தி மரிக்க ஒப்புக்கொடுக்கிறவனாய் இருக்கிறேன், இப்பொழுது பரீட்சையானது வந்திருக்கிறது, அதை இப்பொழுது முகமுகமாய் சந்திக்கிறவனாய் இருக்கிறேன்." எனக் கூறியிருப்பார். (Lock, IBID, page 112). தான் கொலை செய்யப்படும் நாள் அருகில் உண்டு எனப் பவுல் அறிந்திருந்தார். இதிலிருந்து விடுபட இயலாது என்றும், தனக்கு இதிலிருந்து கிடைக்கும் விடுதலையானது ஒரேயடியாக, பரலோகிற்கு விடுதலையுடன் செல்வதாய் இருந்தது. analusis (departure) பிரிதல் என்ற கிரேக்க பதத்தின் ஐந்துவிதமான அர்த்தத்தில், ஒன்று, ஒரு சிறைக்கைதியை சிறைச்சாலையிலிருந்து முழு விடுதலை அளித்து நிரந்தரமாய் வெளியே அனுப்புவது, இங்கு கருத்தில் கொள்ளப்படுகிறதாய் இருக்கிறது. பவுலுக்கு பரலோகம்தான் இறுதியாய் சென்றடையும் இடமாய் இருந்தது, அதைத்தான் அவர் ஆவலுடன் எதிர்நோக்குகிறவராய் இருந்தார்.

அவர் காத்திருக்கையில் அவர் மனமகிழ்ச்சியுடன் இருந்தார் மற்றும் அவ்வனுபவத்தை ஒவ்வொரு நிமிடமும் அனுபவிக்கிறவராய் இருந்தார். பேதுரு தனது இரண்டாம் நிருபத்தை எழுதும்போது, பவுல் அவருடன் இருந்தார் (அந்நிருபம் இக்காலத்தில் எழுதப்பட்டது, பவுலும், பேதுருவும் மரணதண்டனை விதிக்கப்பட்டவர்களாய் ஒரே சிறையில் இருந்தனர்) இவர்கள் புதிய ஏற்பாட்டில் பதிவு செய்யப்பட்ட உபதேசமாகிய "மரண கிருபை" என்கிற உபதேசத்திற்கு சிறந்த உதாரணங்களாய் விளங்குகின்றனர். எல்லோரும் தங்களது இறுதிக்கட்டத்தை சந்திக்க நேரிட்டது போல, இவரும் தனது வாழ்வை திரும்பக் காண்கிறவராய் இருக்கிறார். இவர் உறுதிப்படுத்திக்கொண்டவைகளை குறிப்பிடுகிறவராய் இருக்கிறார். தாராளவாத கொள்கையினரான Hanson,(IBID, page 99), உணருவது என்னவென்றால், பவுலின் நம்பிக்கையானது, தான் எழுதின ஆரம்ப நிருபங்களிலிருந்து வித்தியாசமாய் காணப்பட்டு வினோத காரியங்களை தெரிவிக்கிறவராய் இருக்கிறார்.

Ironside அவர்கள் குறிப்பிடும்போது, "இது பவுலின் அன்னப்பறவையின் பாடல்

[swan song,] என்கிறார், பவுல் மரணம் வரைக் காத்திருந்து பின்னர் பாடலாம் எனக்காத்திருக்கவில்லை. தேவனது கிருபையினால் இரட்சிக்கப்பட்ட சமயம் முதற்கொண்டே, அவரது இருதயத்தில் ஒரு பாடலை பெற்றிருந்தார், அப்பாடலை தனது வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து பாடுகிறவராய் இருந்தார்." (IBID , page 240). பவுல் தனது சாட்சியை மூன்று கருத்துக்களைக் கொண்டு தொகையிடுகிறவராய் இருக்கிறார். கிறிஸ்தவ வாழ்க்கைக்குரிய மூன்று உவமேயக் கருத்துக்களை எடுத்துரைக்கிறவரய் இருந்தார், இராணுவ வீரர், பந்தய வீரர், ஆசாரிய - போதகர்.

1. நல்ல போராட்டத்தைப் போராடினேன் - இங்கு அவர் கூறுவது, ஒவ்வொரு யுத்தத்திலும் சண்டையிட்டு வெற்றியை பெற்றுள்ளேன் மற்றும் என்னைக்கொண்டு தேவன் செய்தவைகளைக் குறித்து பேரானந்தம் கொள்கிறவனாய் இருக்கிறேன். நம்மனைவருக்கும் ஒருநாளில் இப்படிப்பட்ட பேரானந்தம் காத்திருக்கிறது.

2. என் ஓட்டத்தை முடித்தேன் - விளையாட்டு பந்தய அரங்கமானது இங்கு தோற்றமளிக்கிறதாய் இருக்கிறது, பவுல் தனது ஆரம்பகால பந்தய வீரருக்குரிய உவமேயக்கருத்தினை இங்கு மொத்தமாக கொண்டுவருகிறவராய் இருக்கிறார். இவர் பந்தய அரங்கில் ஓடுகிறவர் மட்டுமல்லாது, சட்டப்படி இவர் ஓடி, இப்பொழுது தனது வெகுமதியை எதிர்பார்க்கிறவராய் இருக்கிறார். அவர் தனது ஓட்டப்பந்தயத்தை ஓடிமுடித்து, நியாதிபதியானவரது தீர்ப்புக்காய் காத்திருக்கிறவராய் இருக்கிறார். .

3. என் விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். - "ஒரு முறை ஒப்புவிக்கப்பட்ட" விசுவாசத்தை பாதுகாத்தவராய் காணப்படுகிறார். தனது செய்தியை தீமோத்தேயுவுக்கு ஒரு உபதேசத்தையும் கூட்ட குறைக்கவோ செய்யாது, முழுமையாக அளிக்கிறவராய் காணப்படுகிறார். அவைகள் ஒவ்வொன்றும், கர்த்தர் அவருக்கு பரிசுத்த ஆவியானவர் மூலம் கற்பித்தபடியே, சுத்தமானதாயும், வல்லமை பொருந்தியதாயும் அளிக்கிறவராய் இருந்தார். பவுல் தனது ஆத்துமத்தின் பலிபீடத்தை இடைக்கட்டிக்கொண்டு, ஒவ்வொன்றையும் பாதுகாத்து, முழுமையாக தேவாலயப் பொக்கிஷம் போன்று பாதுகாப்புடன் அளிக்கிறவராய் இருந்தார். ஒப்பிடுக: CHRISTIAN LIFE: ALTAR OF THE SOUL கிறிஸ்த வாழ்க்கை: ஆத்துமத்தின் பலிபீடம்.

8. இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார், எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்.

இவருக்கு நித்திய பிரதிபலனைக் குறித்த பூரணமான நம்பிக்கை இருந்தது, நீதியுள்ள நியாதிபதி அதை அருளுவார் என்கிற நம்பிக்கை இவருக்கு மிகவும் ஆழமாய் இருந்தது. இவர் கிருபையுள்ள ஆசீர்வாதங்களை நித்தியத்தில் தக்க சமயத்தில் கிருபையாக அளிக்கப்படும் என நம்பினார். இதைப் போன்றே நித்தியத்தில் நமக்கும் அளிக்கப்படும்.

இதைப் பவுல் வெளிப்படுத்தும் வழியில், நாம் பெற்றுக்கொள்ள இருக்கும் பிரதிபலனானது, பரலோகில் ஏற்கனவே இருப்பதாக தோன்றுகிறதாய் இருக்கிறது. அவைகளின் மீது நமது பெயர்கள் எழுதப்பட்டு, அங்கு சென்று சேரும் வரைக்கும், அவைகள் நமக்காய் காத்திருக்கின்றன. பவுல் "நீதியின் கிரீடத்தை" எதிர்பார்க்கிறவராய்ப் பார்க்கிறோம். குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிடத்தக்க ஊழியத்தை கர்த்தருக்காக் செய்பவர்களுக்காய் ஜெயமெடுப்பவர்களுக்கான கிரீடம் பாதுக்காக்கப்பட்டு வருகிறது. Refer to page 127 for the study on CHRISTIAN LIFE – REWARDS AND CROWNS. கிறிஸ்தவ வாழ்க்கை: பிரதிபலன்களும் மற்றும் கிரீடங்களும் ஒப்பிட்டுப்பார்க்க.

கர்த்தரின் மறுவருகையிலே கிரீடங்களானது அளிக்கப்படுகிறதாய் தோன்றுகிறது. 1 கொரி. 3:9-15, 2 கொரி. 5:10, ரோமர்14:10, ெப்ரெயர் 6:7-12, 2 தீமோத்தேயு 2:12. இந்த யுகத்தின் முடிவிலே பூமியில், காரியங்கள் தொகையிடப்பட்டு, பரலோகில் அவைகள் அளிக்கப்படுகிறவைகளாய் இருக்கின்றன. பவுல் மற்ற பரிசுத்தவான்களுடன் இதைப் பெற்றுக்கொள்ளும்படியாக சுமார் 2000 ஆண்டுகாலமாய் காத்துக்கொண்டு வருகிறார். இருப்பினும் இப்படிப்பட்ட நிகழ்வை, மிகவும் வலுவாக உணருகிறவராய் இருந்துவருகிறார். இந்த யுகத்தின் உச்சக்கட்டத்திலே அப்படிப்பட்ட பிரதிபலன்களைப் பரிசுத்தவான்கள் பெற்றுக்கொள்கிறவர்களாய் இருக்கிறார்கள். பவுலின் கண்ணோக்கமெல்லாம், கர்த்தரது மெய்த்தன்மையைச் சார்ந்து இருக்கிறதாய் இருக்கிறது. உண்மை என்னவெனில், அவர் மரணமடைந்த பின்னர் தனது பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வது உடனடியாய் நிகழ்வதில்லை என்ற கருத்தை பவுல் உணர்ந்திருந்தார். அவர் கர்த்தரை முகமுகமாய் கண்டிருந்தார், 1 கொரிந்தியர் 15.

மற்றும் தேவனது திட்டமானது தனது காலத்தில் நிறைவேற அது அவருக்கு போதுமானதாய் இருந்தது.

சபைகளில் கர்த்தரது திருவிருந்தானது கர்த்தரின் மரணத்தை தெரிவிக்கிறதாய் இருக்கிறது, கர்த்தரின் வருகை வரை இது நினைவு கூறப்பட்டு ஆசரிக்க வேண்டியதாய் இருக்கிறது. 1 கொரிந்தியர் 11:26. உவமையில் கூறப்பட்டுள்ள மனிதனைப் போன்று "நான் திரும்ப வருமளவும் இதைக் கொண்டு வியாபாரம் பண்ணுங்கள்" என்ற கருத்தானது நமக்கு கூறப்பட்டுள்ளது. (லூக்கா 19:11ff), அவர் வெளிப்படும் நாளுக்காக ஆயத்தமுள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். (லூக்கா 21:32-36, யோவான் 21:22). இயேசு தனது சீஷர்களுக்கு சொன்னார், திரும்ப வரும்பொருட்டு அவர் சென்று, தன்னில் அன்புகூர்ந்தவர்களை திரும்ப தன்னுடன் கொண்டுவந்து எந்நாளும் அவர்கள் தன்னுடன் புதிய ஆசீர்வாதமுள்ள சூழலில் வாசம் செய்வார்கள் என்பதை அறிவித்தார். (யோவான் 14:3-28).

நமக்குள்ள பிரச்சனை என்னவென்றால், நாம் அவர் மீது கொண்டுள்ள அன்பை, முறையாக வெளிப்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். மற்றும் அதை கீழ்ப்படிதலுடன் அவர் கூறியவற்றை செயல்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். யோவான் 14:15, 21, யோவான் தனது முதலாவது நிருபத்தில், சபைகளுக்கு இன்னும் சற்று விளக்கமான முறையில் அவரை உண்மையாய், அனுதின வாழ்வில் அன்பு கூறுவதைக் குறித்து கூறுகிறவராய் இருக்கிறார். மற்றும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும், நமது இருதயத்தால், நாம் அவரில் நிலைத்திருப்பதைக் குறித்து கூறுகிறவராய் இருக்கிறார். இது மட்டுமே நமது அனுதின வாழ்வை நிரப்பி அவர் வெளிப்படும் நாள் பரியந்தம் நாம் ஆயத்தமாய் இருப்பதை காட்டுகிறதாய் இருக்கிறது. . Refer to the BTB study ABIDING IN GOD."தேவனில் நிலைத்திருப்பது' ஒப்பிட்டுப்பார்க்க:

ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் ஐக்கியத்தில் "நிலைத்திருக்குமாறு" யோவான் அழைப்புக் கொடுக்கிறவராய் இருக்கிறார், இதினிமித்தம் நாம் பாவத்திற்கு எதிர்த்து நின்று, நாம் செய்யும் அனைத்திலும் இது அவருக்கு மகிமை கொண்டுவர ஏதுவுண்டாகிறதாய் இருக்கிறது. 1 யோவான் 2:27-2:3. பாவத்திலிருந்து அனுதினமும் கழுவப்படுவதற்கு நாம் அவரில் அன்பு கூறுவது என்பது கர்த்தரின் நோக்கமாய் இருக்கிறது. வாழ்க்கை சுத்திகரிக்கப்படுவதும், எப்பொழுதும் சாட்சியாய் இருப்பதுமே அவரில் அன்பு கூறுதலின் விளைவாய் இருக்கிறது. 1 யோவான் 3:3. Harry Ironside அவர்கள் கூறும் பொழுது, "நான் சிறுபையானாய் இருந்த போது நிகழ்ந்த ஒன்றை என்னால் மறக்க இயல

வில்லை, ஒரு வயதான முதிய பிரசங்கியார் தனது ஜெபத்தில் இவ்வாறு கூறினார், 'கர்த்தராகிய தேவரீர், எனது கண்களை கர்த்தராகிய இயேசுவின் மீது பதித்து வாழ உதவி புரிந்தருளும், நான் ஒரு கொடிய வயதான மனிதனாய் மாறிவிடாதபடி என்னைக் காத்துக்கொள்ளும்." (IBID, page 244).

பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்ளும்படியாய், இக்காலத்தில் அவரது பணியை செய்து முடிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம், இருப்பினும் சில விசுவாசிகள் பிரதிபலன்களைப் பெற்றுக்கொள்வதிலே ஆசை கொண்டிருக்கிறார்கள், அவர்கள் சேவை செய்வதன் அவசியத்தை உணராதிருக்கிறார்கள். பவுல் இவ்வாறு கூறுகிறவராய் இருக்கிறார், "சுவிஷேசத்தைப் பிரசங்கியாவிட்டால் எனக்கு ஐயோ" என்கிறார். 1 கொரிந்தியர் 9:16-19. நம் அனைவருக்கும் இது போன்ற ஆவியுடையவர்களாய், கிறிஸ்துவின் மகனாக, மகளாக வாழுதல் வேண்டும்.

கைக்கொள்வதற்கான தலைமைத்துவம்:

1. தொடர்ந்து மதிப்பிடுதல் மற்றும் நிர்வாகத்திறமையுடன் செயல்படுதல் போன்றவற்றை தலைவர்கள் உணருகிறவர்களாய் இருத்தல் வேண்டும்: தேவனது வார்த்தையை நாம் கேட்கும்போது, நமது கவன ஈர்ப்பைக் குறித்து கர்த்தர் கவனிக்கிறவராய் இருக்கிறார், மற்றும் அதைக் கைக்கொள்வதில் எவ்வளவு கவனமாய் இருக்கிறோம் என்பதையும் கவனிக்கிறார். இதை நாம் நினைவு கூர்ந்து செயல்படுவது எத்துனை சிறப்பாய் இருக்கும்? கர்த்தர் நமது நியாதிபதியாய் இருக்கிறார், வேறு எந்த நபரோ அல்லது வல்லமையோ இதைச் செய்வதில்லை. இது கர்த்தரது மதிப்பிடுதலாய் இருக்கிறது, இது நித்தியம் முழுவதிலும் செயல்படுவதாய் இருக்கிறது, இது "நல்லது உண்மையும் உத்தமும் உள்ள ஊழியனே" என்றப் பாராட்டுதலை பெற்றுக்கொள்ள வாஞ்சையுள்ளவர்களாய் இருத்தலை நம்மில் தூண்டுகிறதாய் இருக்கிறது.

2. தலைவர்கள் செயல்பாட்டிற்கான போனஸ்களைப் பெற்றுக்கொள்ள எதிர்பார்க்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்: இயேசு திரும்ப வருகிறவராய் இருக்கிறார் அவர் திரும்ப வந்து, இழந்து போனோரை நியாயந்தீர்த்து தனது இராஜ்ஜியத்தை ஸ்தாபிக்கிறவராய் இருக்கிறார். நாம் இதில் பங்குபெறுகிறவர்களாய் இருக்கிறோம், இருப்பினும் சில விசுவாசிகள் இன்றைய அளவில் இறுதிகாலங்களின் உபதேசத்தினை அறிகிறவர்களாய் இருக்கிறார்கள். பவுல் தெசலோனிக்கேய பட்டணத்தில் இருக்கும்போது, சபையானது எடுத்துக்கொள்ளப்படுவதைக் குறித்த உபதேசத்தினை, உபத்திரவ காலத்தைக் குறித்த உபதேசம், மற்றும் இயேசுக்கிறிஸ்துவின் இரண்டாம் வருகை குறித்த

உபதேசம் போன்றவற்றை உபதேசிக்கிறவரய் இருந்தார். நாம் இவைகளைக் குறித்து அறிந்துகொள்ளுதல் வேண்டும், இப்படிப்பட்ட உபதேச காரியங்கள், நமது மனதை இப்பொழுது எதைச் செயதல் வேண்டும் எதை செய்தல் கூடாது என்பதின் மீது கண்ணோக்கமாய் இருக்கச் செய்கிறதாய் இருக்கிறது.

3. சரியான பணிகளைச் செய்துமுடிக்க சிறப்பான மக்களை தலைவர்கள் தேடுகிறவர்களாய் இருத்தல் வேண்டும்: சபையில் உள்ள மற்றவர்கள் எளிதான போதானைகள் மற்றும் இன்பமளிக்கும் செயல்பாடுகளை தேடும்பொழுது, நாம் உண்மையான வேதாகம தராதரத்தை தேடுகிறவர்களும், உண்மையான போதனையாளர்களை தேடி, மெய்யான உபதேசங்களை கேட்கிறவர்களாயும் அவைகளை வாழ்விற்கும், ஊழியத்திற்கும் கைக்கொள்கிறவர்களாயும் இருத்தல் வேண்டும். "செவித்திணர்வுள்ளவர்களாய்" இருப்பதை நாம் தவிர்த்தல் வேண்டும். Refer to doctrinal study on CHRISTIAN LIFE: SPIRITUAL GIFTS. கிறிஸ்தவ வாழ்க்கை: ஆவிக்குரிய வரங்கள் ஒப்பிட்டுப்பார்க்க:

ஒரு விசுவாசியாய் இருக்கும் உங்களுக்களிக்கப்பட்ட வரம் என்ன? நீங்கள் ஒரு சுவிஷேசகரானால், கர்த்தர் உங்களை அழைத்த அழைப்பை நிறைவேற்றுகிறவர்களாய் இருக்கிறீர்களா? நீங்கள் உதவி செய்யும் வரத்தினை பெற்றவர்களாய் இருப்பீர்களானால், அதனை உங்களை ஸ்தல கூடுகையில் அல்லது சபையில் எவ்வாறு பயன்படுத்துகிறவர்களாய் இருக்கிறீர்கள்? கொடுப்பதற்கான வரத்தை நீங்கள் பெற்று இருப்பீர்களானால், அதற்கேற்றவிதத்தில் சம்பாதனம் செய்து அதை எவ்வாறு பகிர்ந்தளிப்பவராய் இருக்கிறீர்கள்?

நீங்கள் போதிக்கும் ஊழியம் செய்வீர்களானால், சபையில் நீங்கள் சரியான இடத்தில் இருக்கிறவர்களாய் இருக்கிறீர்களா? உங்களுக்கு ஆலோசனை அளிக்கும், மற்றும் உற்சாகப்படுத்தும் வரம் அளிக்கப்பட்டிருக்குமேயானால், சிறு குழுக்களில் அமைந்து அங்குள்ள விசுவாசிகளின் வளர்ச்சிக்கு ஏதுவாக அவர்களை உருவாக்குகிறவர்களாய் இருக்கிறீர்களா?

4. நாம் பயன்படுத்தக்கூடாதவைகளை பயன்படுத்துவோமானால் இழக்கிறவர்களாய் இருப்போம்; தலைவர்கள் நெருக்கப்படுகிற காலங்களில் கடினமாய் உழைத்தல் வேண்டும்: மத்தேயு 25:14-30 ல் கூறிய கர்த்தரது வார்த்தைகளை நினைவு கூறுவோமாக: ஒரு தாலந்தை பெற்ற மனிதன் அதை உபயோகிக்காமல் இருந்தபடியால், அவன் எல்லாவற்றையும் இழக்க

வேண்டியதாய் இருந்தது. இன்றைய அளவில் சபையில் உள்ள அநேகர் உணருகிறது என்னவெனில், "வரங்களைக் குறித்து தாழ்வுமனப்பான்மையுள்ளவர்களாய் இருக்கின்றனர்" ஆனால் கர்த்தர் எல்லோருக்கும் வரங்களை அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (1 கொரிந்தியர் 12:7-11), அவர் தமக்குச் சித்தமானவர்களுக்கு (வசனம் 11) மற்றும் அவர்களது தகுதிக்கேற்ப (மத்தேயு 25:15), நமது வரங்களைப் பயன்படுத்துகிறோமோ அல்லது அவைகளை இழந்து போகிறவர்களாய் இருக்கிறோமோ அதைப்பொறுத்து நமது பிரதிபலன்கள் அமைக்கிறதாய் இருக்கிறது.

கர்த்தரது சித்தமானது நாம் ஒவ்வொருவரும் அவரது சித்தத்திற்கு இசைய செயல்படுவதாய் இருக்கிறது. அவர் வரங்களை அளித்துள்ளார், அவர் அவைகளைப் பயன்படுத்த நோக்கமுள்ளவராய் இருக்கிறார். (1 கொரிந்தியர் 12:20-27) இவைகளைக் குறித்து நாம் தனிப்பட்ட நிலையில் கடமைப்பட்டுள்ளவர்களாய் இருக்கிறோம்! Ironside அவர்கள் நமக்கு நினைவுபடுத்த விரும்புவது என்னவெனில்: "தங்களை கிறிஸ்துவின் பாடுகள் மற்றும் அவரது உபவத்திரம் போன்ற இவைகளில் ஈடுபடுத்திக் கொள்ளாது, தாங்கள் இவைகளை இனங்காணாது, கிறிஸ்து நம்மை தமது சிலுவை மரணத்தின் மூலம் கிரயம் கொடுத்து வாங்கியுள்ள நிலை குறித்து மகிழ்வது கிறிஸ்தவத்தின் தாழ்வான கொள்கையாய் இருக்கிறது." (IBID, page 231).

5. ஸ்தாபனத்தின் கட்டளைகள் மற்றும் அறிவுரைக் கையேடு போன்றவற்றை சமயமெடுத்து தலைவர்கள் வாசித்தல் வேண்டும்: தீமோத்தேயு மற்றும் எதிராளி விரோதமாய் யுக்கக்களத்தில் நிற்கும் போதகர்களாகிய அனைவரும், இவ்வசனத்திற்குக் கவனமாய் செவிகொடுத்தல் அவசியம். அவைகள் நமது அனுதினக் கட்டளைகளாய் இருக்கின்றன. இவற்றை செயல்படுத்தி முழுமை படுத்துதல் அவசியம். கட்டளைகள் இரு வகைகளாக அளிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது, அவைகள் எச்சரிப்புடன் கூடிய எதிர்ப்பில்லாதவைகளும் மற்றும் சபைக்குள் ஆர்வமற்ற தன்மையுடன், போதனைக்குச் செவிசாய்க்காது "யுத்தக்களத்தில்" இறங்குதல். நாம் பிரசங்கித்து, கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, உற்சாகமளித்து, உபதேசத்தைப் போதித்தல் வேண்டும், விழிப்புடனிருந்து, மிகவும்ஜாக்கிரதையுடன், தாக்குதல்களையும், எதிரான நிலைகளையும் சமாளித்து, சுவிஷேசத்தின் வேலையைச் செய்து, பின்தொடர் ஊழியங்களை மேற்கொள்ளுதல் வேண்டும்.

நமது ஊழியத்திற்கு நாம் மிகவும் கடமைபட்டுள்ளவர்களாய் இருக்கிறோம், உண்மையும் உத்தமும் உள்ள ஊழியனே என கர்த்தரால், அங்கீகாரம் பெறுவதற்கு, நமது முழுமையான ஓட்டத்தை ஓடிமுடிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் "முழு அங்கீகாரம்" அளிக்கப்பட்ட நமது பணியினை, செய்து முடிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். சிறப்பானவற்றில் எது குறைவுபடுமானாலும், அது நல்லதல்ல, நாம் மனித ஆத்துமாக்களுக்காய் யுத்தம் செய்யும், யுத்தக்களத்தில் இருக்கிறோம், மற்றும் நித்திய பிரதிபலன் அல்லது நாம் போராடுவதற்கான பந்தயப்பொருள் இவைகளைப் பெற்றுக்கொண்டு நியாயந்தீர்க்கப்படுகிறவர்களாய் இருக்கிறோம்.

6. தலைவர்கள் பணி செய்யும் காலத்து, மரணத்தை குறிந்து பயந்து வழிவிலகுதல் கூடாது: நாம் நமது சொந்த மரணத்தை சந்திக்க ஆயத்த முள்ளவர்களாய் இருக்கிறோமா? இது நம்மனைவருக்கும், இறுதி மற்றும் பெரிதான பரீட்சையாக இருக்கிறது. இதை நாம் அனைவரும் எதிர்கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம், நாம் சபை எடுத்துக்கொள்ளப்படும் சந்ததியைச் சார்ந்தவர்களாய் இருக்கிறோம். இதைக்குறித்து இன்றைய அளவில் நமது சபைகளில் ஏன் அதிகமாய் பேசப்படாது இருக்கிறது? இது இறுதியான வேதபாடமாய் அநேக இடங்களில் விளங்கிவருகிறது, இதை விசுவாசிகளுக்கு விலக்கி வைத்தல் கூடாது. பாலுறவு காரியங்களை வெளிப்படையாய் கூறும்போது, சமுதாயமானது வியாதிப்படுகிறதாய் இருக்கிறது, அநித்தியமான பாவ சிற்றின்பங்களையும் குறித்து பேசும்போது அது வியாதிப்படுகிறதாய் இருக்கிறது, மற்றும் மரணத்தைக் குறித்து பேசப்படுவதை மறுக்கிறதாய் இருக்கிறது, இப்படிப்பட்டவைகளின் விளைவானது எந்நாளும் நிலைத்து இருக்கிறவைகளாய் இருக்கின்றன.

7. எந்த ஒரு காரியத்தையும் செய்யத்தவறுதலால் உண்டாகும் வருத்தத்திற்கு தலைவர்கள் பயப்படுதல் வேண்டும்: [LEADERS FEAR HAVING ANY REGRETS] பவுல் பின் திரும்பி, மிகத்திருப்தியுடன் காணப்படுகிறார் மற்றும் சில விசுவாசியாய் இருந்த காலத்தில் செய்யத்தவறியவற்றிற்காய் சில வருத்தங்களை தெரிவிக்கிறவராய் இருக்கிறார். விசுவாசிகளாகிய நமக்கு இது நமது இலட்சியமாய் இருத்தல் வேண்டும், நமது வாழ்க்கையில் இறுதிகட்டத்தில், அதன் உண்மை மதிப்பீட்டைக் காணுதல் வேண்டும். பண்டை கால கிரேக்க தத்துவ ஞானி இவ்வாறு கூறுகிறார்: "மரிக்கும் வரையில் ஒருமனிதனும் மகிழ்ச்சியை அழைப்பதில்லை" ["Call no man happy until he is dead".] இதன் மூலம் அர்த்தம் கொள்ளப்படுவது என்னவெனில், மரிக்கும் தருணத்திற்கு முன்பு, அவர் தெரிந்து

கொண்டவைகள் உண்மையிலே அவருக்கு பயனுள்ளதாய் இருந்ததா? என்று எண்ணிப்பார்த்து திருப்தியடைவதும் மற்றும் அவைகளின் ஏறாளத்தினால் மகிழ்ச்சியடைவதும் குறிப்பிடத்தக்கதாய் இருக்கிறது. பவுல் தேவனுடன் உள்ள தன ஸ்தானம் குறித்து மிகவும் ஆறுதலுடன் காணப்படுகிறார், அவருக்களிக்கப்பட்ட கடமைகளாது மிகவும் திருப்திகரமான நிலையில் செய்து முடிக்கப்பட்டதாய் காணப்பட்டது.

நமது இறுதிகாலமானது அடிக்கடி நமது வாழ்வின் உச்சக்கட்டத்தின் பிரதிபலிப்பாய் இருக்கிறது. பவுல் ஊழியத்தில் வாழ்நாள் எல்லாம் தனது வாழ்க்கையை ஊற்றுகிறவராய் காணப்பட்டார், இறுதியாய் அவர் வார்க்கப்பட்டது, தனது வாழ்வில் தொடர்ந்து ஊற்றப்பட்டதன் இறுதி விளைவாய் இருக்கிறது. பவுல் மரணப்படுக்கையில் காணப்படவில்லை, அல்லது மரணத்தின் போது எவ்வித அறிக்கை செய்கிறவராய் விளங்க வில்லை. அவர் ஜீவிக்கிறவராய் மரணத்தை நோக்கி செல்கிறவராய் இருந்தார், தொடர்ந்து கிறிஸ்துவைப் பற்றிக்கொண்டவராய்க் காணப்பட்டார், மற்றும் எல்லாவற்றையும் செய்து முடித்தவராய் மரணத்தை தழுவுகிறவராய் இருந்தார். பவுல் நமக்கு விடுக்கும் வேண்டுகோள் என்னவென்றால், ஒவ்வொரு நாளும் நாம் முறண்பாடற்ற வாழ்க்கை வாழும்படி, அந்த நாள்தான் நமது வாழ்நாளில் இறுதி நாள் என்றெண்ணி, நமது கர்த்தரை ஒவ்வொரு நாளும் பிரியப்படுத்த வேண்டும் என்கிறார்.

பவுல் கர்த்தருக்கு ஒரு யுத்தவீரனாய் இருந்தார், நாம் அனைவரும் அவரது சேனையில் அங்கங்களாய் இருக்கிறோம். நம்மை வெறுத்து ஒதுக்கும் சத்துருவுக்கு விரோதமாய் யுத்தத்தில் தலைப்படுகிறவர்களாய் இருக்கிறோம். அனுதினமும் நமது சர்வாயுத வர்க்கங்களை அணிந்து கொண்டு, அனுதினமும், வேதப்பாடம் மற்றும் ஜெபத்தின் மூலம் கட்டளைகளைப் பெற்று, அனுதினமும் தீமை மற்றும் பாவம் போன்றவைகளின் எல்லாவித தோற்றங்களுக்கு எதிராய் செயல்பட்டு, இவை அனைத்தையும் சமாதானம் பண்ணும் இராணுவ வீரரின் பணியாக மேற்கொண்டு கிறிஸ்துவைப் பின்பற்றி செயல்படுதல் வேண்டும். இவ்வாறு செயல்படுவதன் மூலம், கர்த்தர் அளித்த பணியை செய்து முடித்து, அவரது பாராட்டைப் பெறுகிறவர்களாய் இருப்போம். நமக்கு ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் கொண்டுவரும் காரியங்களை மதித்து, நடந்து கொள்ளுதல் அவசியமாய் விளங்குகிறது.

நம் ஒவ்வொருவருக்கும், வரங்கள் அளிக்கப்பட்டு, இவைகளைப் பயன்படுத்தி

ஊழியம் செய்ய நியமிக்கப்பட்டுள்ளோம். நமது பணியி, இவைகளை கீழ்ப்படிதலுடன் முறையாய் பயன்படுத்த வேண்டியவர்களாய் இருக்கிறோம். மற்றவர்களின் ஸ்தானத்தை முறையற்ற நிலையில் எடுத்துக்கொள்ள முயற்சித்தல் கூடாது, நாம் கர்த்தரிடத்திலிருந்து பெற்றுக்கொண்ட கட்டளையை நிறைவேற்றுகிறவர்களாய் காணப்படுதல் வேண்டும். நாம் "சட்டரீதியாக செயலாற்றுகிறவர்களாய்" இருத்தல் வேண்டும். கிறிஸ்துவின் சரீரத்திற்குள் (எல்லா விசுவாசிகளின் ஐக்கியத்திற்குள்) ஒழுங்கீனமான காரியங்களில் தலையிடுதல் கூடாது, மாறாக மற்றவர்களுடன் இணைந்து செயலாற்றி, நமக்காக தமது ஜீவனை அளித்த கர்த்தருக்கு மகிமை கொண்டுவருகிறவர்களாய் இருத்தல் வேண்டும். நமது கண்ணோட்டம் எல்லாம் பரலோகத்தின் மீது இருத்தல் வேண்டும், பூமிக்குரியவைகள் மீது இருத்தல் கூடாது. நாம் பரலோக சிந்தையுள்ளவர்களாய் வாழ்தல் வேண்டும், பூமிக்குரிய சிந்தையுள்ளவர்களாய் வாழ்தல் கூடாது. இதற்கு முன் உள்ள அதிகாரத்தில் கண்ட வண்ணம், நம்மனைவருக்கும் ஒரு முக்கியமான பரீட்சையானது வைக்கப்படுகிறதாய் இருக்கிறது, கர்த்தருக்கடுத்த காரியங்களில் நமது இருதயத்தைப் பதித்தவர்களாய் ஒவ்வொரு காரியங்களையும் செய்து முடிக்கிறவர்களாய் இருத்தல் வேண்டும்.

8. தங்களது எஜமானருக்கு தங்களை முற்றிலும் அற்பணித்தவர்களாய் தலைவர்கள் இருத்தல் வேண்டும்: கிறிஸ்துவின் வருகைக்காய் நாம் காத்திருக்கிறவர்களாய் இருக்கிறோமா? இப்படிப்பட்ட உள்ளார்வத்தை நாம் காண்பித்து, தற்போதைய பணிகளில் ஈடுபடுகிறவர்களாய் காணப்படுகிறோமா? இப்படிப்பட்ட வழிகளில் நமது ஆவலை நாம் காண்பிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். அவரது வருகை என்பது அதிக நிச்சயமான ஒன்றாய் இருக்கிறது, மற்றும் அவர் அளிக்கும் பிரதிபலன்கள் என்பதும் நிச்சயமுள்ளதாய் இருக்கிறது.

Ironside அவர்கள் இக்கருத்தை நினைவு கூறும்போது, "எந்த ஒரு வேதவசனமும், கர்த்தரது பணிக்கான வரத்தை, வாக்குத்தத்த பிரதிபலன்களாய், மரணத்திற்குப் பின் அளிக்கப்படுகிறது எனபதைக் குறித்து கூறுவதை நான் அறியேன். நீங்கள் கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கும்போது அவைகள் அளிக்கப்பட்டு, அது பயன்படுத்தப்பட்டு, அதற்கான பிரதிபலனானது அதற்குரிய காலத்தில் அளிக்கப்படுகிறதாய் இருக்கிறது." (IBID, page 249). அநேகர் தங்களது மரணத்தின் போது அநேக காரியங்களை விட்டு அகலுவதைக் காண்கிறோம், அவைகளை உயிருடன் இருக்கும் காலத்து அவரது பணிக்காய் கொடுத்து செல்வது எத்துனை பயனுள்ளதாய் இருக்கும்? இவ்வாறு மரிக்கும் போது தங்களது ஆஸ்திகளை விட்டுச்செல்வது சிறப்பானது என்றாலும், அதற்கேற்ற பலன் நித்தியத்தில் இராமற்

போகிறதாய் இருக்கிறது. விசுவாசிகளாகிய உங்களது நேரத்தை, ஜெபத்தை, கர்த்தரின் ஆசீர்வாதமான உங்கள் பொருளாதாரத்தை [பணத்தை] இப்பொழுது கொடுக்கிறவர்களாய் இருப்பீர்களானால், அவற்றை இப்பொழுது செய்யப்படும் கர்த்தரின் அருட்பணியில் செலவளிக்கப்பட கொடுக்கும்போது, அவைகள் நித்திய முழுவதிலும் ஆசீர்வாதங்களை நமக்கு அளிக்கிறதாய் இருக்கிறது.

9. தலைவர்கள் தாங்கள் செயல்படுத்தும் காரியங்களின் சரியான தராதரத்தைப் பரிசீலனை செய்தல் வேண்டும்: போதகர்களாகிய நாம் தேட வேண்டிய சாட்சியினை, பவுல் உடையவராய் காணப்படுகிறார். இப்பொழுது செய்து வரும் ஊழியத்தில் நாம் கீழ்க்கண்டவாறு சொல்ல இயலுமா?

1. கர்த்தர் நம்மை வைத்துள்ள இடத்தில் நாம் இருந்து, முழுமனதுடன் அவரது சேவைக்கு அற்பணம் செய்து, அங்குள்ள போராட்டங்களில் அவருக்காக ஜெயம்பெற இயலுமா?

2. நமக்கு முன்பாக செயல்படும்படி உள்ள ஒவ்வொரு காரியத்திலும், அவரது சட்டதிட்டங்களை அனுசரித்து செயல்பட்டு, நமது வாழ்க்கையில் அவர் எதிர்பார்க்கும் காரியங்களில் திருப்தியடைய அடைய இயலுமா?

3. பெற்றுக்கொள்ளப்பட்ட எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப்படிந்து, நாம் பெற்ற சத்தியத்தை மிகவும் விலையேறப்பட்டதாய் பாதுகாக்க இயலுமா?

பிரதிபலன்கள் நாம் மகிமையடையும்படியாக இல்லை ஆனால் கர்த்தருக்கு அவைகள் மகிமையைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது, இது நித்தியம் அனைத்திலும், சாதாரண தேவனது பிள்ளைகளால், தங்களை முழுவதுமாய் அவருக்கு அற்பணித்து, கர்த்தரது வல்லமையைக் கொண்டு, இப்பிரதிபலன்கள் பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதை நினைவு கூர்ந்து, தேவனுக்கு மகிமையைக் கொண்டுவருகிறதாய் இருக்கிறது. கர்த்தருக்குச் செய்யும் பணிகள் அனைத்தையும், இராணுவ வீரர், பந்தயக்காரர், மற்றும் ஆசாரியர் போன்றவர்களின் மனநிலையுடன் செய்து நிறைவேற்றி, நமது எஜமானரின், நல்லது உண்மையும் உத்தமும் உள்ள ஊழியனே என்ற பாராட்டைப் பெற எதிர்பார்த்து, தற்காலிக ஆதாயத்தில் நமது கண்ணோட்டத்தைச் செலுத்தாது, நித்திய காரியங்களில் கண்ணோட்டத்தைச் செலுத்துவது அவசியமானதாய் இருக்கிறது.

முடிவான / இறுதிக் கருத்துக்கள்:

இதுவரை இக்கையேட்டின் மூலம் கற்றுக்கொண்டவைகளின் அடிப்படையில் சில காரியங்களின் பிரதிபலிப்பை கீழ்க் காண்போம்:

1. எபிரெயர் 12:1-3ல், நமது வாழ்க்கையின் ஓட்டப்பந்தயத்தை ஓடுகிறதைக் குறித்து கண்டோம்.
சுவிஷேச வேத பகுதிகளில், மத்தேயு 20:25-28, மாற்கு 10:43-45, லூக்கா 22:24-27, யோவான் 13:1-17. -- நாம் கர்த்தருடைய மந்தையை வழிநடத்துகிறவர்களாய் இருக்கிறோம், நாம் அவைகளை துரத்திவிடுதல் கூடாது, மற்றும் அவைகளை அடக்கியாளுதல் கூடாது, அல்லது அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளுதலோ, அவற்றை நிந்தித்தலோ கூடாது.

2. தலைமைத்துவ குணாதிசயங்களை நியாந்தீர்ப்பதன் தராதரமானது, கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவின் ஆளத்துவம் மற்றும் அவரது சேவையை அடிப்படையாய் கொண்டு நியாயந்தீர்த்தல் வேண்டும் எனப்பார்த்தோம். ஏசாயா 53, பிலிப்பியர் 2:5-8,

3. தலைமைத்துவத்தின் தகுதிகள் குறித்து, தெரிந்தெடுக்கப்பட்ட பவுலின் நிருபத்திலிருந்து கற்றுக்கொண்டோம்.

1 தீமோத்தேயு, தீத்து - உண்மையான தலைமைத்துவத்தின் ஆதாரம் என்பது ஆவியானவரின் கனியானது அவர்களது வாழ்வில் விளங்குதல் வேண்டும். அவர்களது வாழ்வில் நீதியின் கனியானது இல்லையென்றால், அவர்களது ஊழியமானது சட்டப்பூர்வமானதல்லாததாய் இருக்கிறது. கர்த்தரது மக்கள் அவரது பணியை, பரிசுத்த ஆவியானவரின் வல்லமையாலும், மற்றும் வழிநடத்துதலின் பேரிலும் செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றனர். இதையல்லாது வேறு வல்லமையால் அவர்கள் செய்யும் பணியானது, சத்துவின் ஆதாரமாய் இருந்து, தலைமைத்துவ பணியிலிருந்து அவர்களை தகுதி இழக்கச் செய்கிறதாய் இருக்கிறது. கலாத்தியர் 5:13-26.

4. பேதுரு எழுதின முதல் நிருபத்தில், கர்த்தரால் நாம் உயர்த்தப்படுவதற்கான உண்மையான வழிமுறையானது, அலுவலக அரசியல், பிரபலம், பணம் அல்லது சுயவிருப்பங்கள் போன்றவைகளால் அல்ல என்பதனைக் கண்டோம். 1 பேதுரு 5:5-9.

5. "சேவகத் தன்மையுடன் கூடிய தலைமைத்துவம்" என்கிற கருத்தில், புதிய ஏற்பாட்டு சுவிஷேசங்கள், மற்றும் நிருபங்களிலிருந்து கண்டோம்.

அப்போஸ்தலர் அனைவரும் தங்களை அடிமைகளாய் கண்டுகொள்கிறவர்களாய் இருந்தனர். அவர்கள் தங்களைக் கர்த்தரின் அடிமைகளாய் கண்டுகொள்கிறவகளாய் இருந்தனர். நாம் வேதவசனங்களுக்கு உண்மையாய் இருப்போமானால், நாம் கர்த்தருக்காய் நின்று, சேவை செய்ய இயலும். மற்றும் அப்போஸ்தல அஸ்திபாரத்தின் மீது நின்று, நாவினாலும் வாழ்க்கையாலும் ஊழியம் செய்து, கர்த்தரைப்போன்றும், அப்போஸ்தலரைப்போன்றும் அவரது பணியை செய்து நிறைவேற்றுகிறவர்களாய் இருப்போம். . மத்தேயு 10:24-31, 18:23-35, 20:27-28, 23:8-12, 25:31-45, மாற்கு 9:33-37, 10:42-45, லூக்கா 16:1-13, யோவான் 12:24-26, 13:16, 15:15-21. ரோமர் 1:1, கொலோசெயர் 10-14, 2 தீமோத்தேயு 2:21-26, தீத்து 1:1, யாக்கோபு 1:1, 2 பேதுரு 1:1, யூதா 1.

6. நாம் கர்த்தரின் பணியில் இராணுவ வீரர்கள் என்பதனைக் கண்டோம். இராணுவ வீரர் கவனச்சிதறல்களுக்கு இடம் கொடுக்க மாட்டார், தன்னை திசை திருப்பும் வேறு எந்த காரியத்திலும் ஈடுபடமாட்டார், யுத்தத்தில் மரிக்க நேரிட்டாலும், யுத்தம் செய்து மரிப்பார். ஒரு இராணுவ வீரரை, யுத்தத்தில் எந்த ஒரு காரியமும் தடுத்து நிறுத்த இயலாது. இராணுவ வீரரின் தனக்குக் கட்டளை கொடுக்கும் மேலதிகாரிக்கு கீழ்ப்படிந்து செயல்பட்டு அதற்கு எந்த ஒரு காரியமும் குறுக்கே வராது பார்த்துக்கொள்கிறவராய் இருக்கிறார். 1 கொரிந்தியர் 9:24-27, 2 கொரிந்தியர் 5:9-20, கலாத்தியர் 5:5-11, 1 தீமோத்தேயு 6:11-16, எபிரெயர் 10:32-39, 11:32FF.

7. இறுதியாய் மரணபரியந்தம் நாம் சேவை செய்தல் வேண்டும் என்பதைக் கண்டு நிறைவு செய்துள்ளோம் - கிறிஸ்தவ தலைமைத்துவத்தில் ஓய்வு பெறுவது என்பது இல்லை. 2 தீமோத்தேயு 3:1-15, 4:1-8.

பிரதிபலிப்பு:

<u>ஏமி கார்மைக்கேல் அம்மையாரின் "அன்பின் அறிக்கை"</u>

எனது வாக்குறுதி: கர்த்தாவே நீர் எனக்கு எதைச் சொன்னாலும், அதை உமது கிருபையால் செய்வேன்.
எனது கர்த்தாவே, எனது கிறிஸ்துவே, உமது அன்பானது என்னை நெருக்கி ஏவுகிறதாய் இருக்கிறது.
எனது நம்பிக்கை: நான் உமக்கு ஒப்புக்கொடுத்ததை, நீர் காத்துக்கொள்ள வல்லவராய் இருக்கிறீர்.
எனது மனமகிழ்ச்சி: தேவரீர்! உமது சித்தம் செய்வது.
எனது ஒழுங்கு முறை: உமது அன்பு நியமிப்பதை மட்டுமே தெரிந்து கொள்வேன், மற்றவற்றை நான் தெரிந்து கொள்ளமாட்டேன்.
எனது ஜெபம்: எனது சித்தத்தை உறுதிபடுத்தி, அதை உம்முடையதாக்கிக்கொள்ளும்.
எனது இலட்சியம்: வாழ்வதற்காக அன்பு கூர்வேன் -- அன்புகூர்ந்து வாழ்வேன்.
எனது பங்கு: எனது சுதந்தரத்தில், கர்த்தர்தாமே எனது பங்காய் இருக்கிறார்.

இந்த ஒப்பற்ற மிஷனரி அவர்களின் அறிக்கையானது, கர்த்தரைப் பின்பற்றும் நம்முடைய அறிக்கையாயும் இருக்கட்டும்.

BTB [BIBLE TOPIC BOOK] STUDIES

கிறிஸ்தவ வாழ்க்கை: ஆத்துமாவின் பலிபீடம்:

1. பலிபீடம் என்பது, பலிகளை செலுத்தும் இடமாய் கருதப்படுகிறது, ஜனங்கள் தேவனின் பரிசுத்த வேண்டுகோளுக்கிணங்கி, தங்களது பாவங்களுக்காய் ஒரு பலி மிருகத்தின் மூலம் பாவப் பிராயச்சித்தம் செய்வதைக் காட்டுகிறதாய் இருக்கிறது ஒவ்வொரு நாளும் தேவனை நமது ஜெபத்தில், கர்த்தரின் பலியின் மூலம், சந்திக்கிறவர்களாய் இருக்கிறோம், அவரது மாசற்ற இரத்தமானது தேவனுடைய சிங்காசன அறைக்குள் செல்ல நமக்கு வகை செய்கிறதாய் இருக்கிறது. எபிரெயர் 4:16, 6:19, 13:6.

2. பழைய ஏற்பாட்டுக் காலத்தில், பலிபீடத்தில் கர்த்தரது பணி செய்வோர், போஜன பலிகளைப் புசிக்கிறவர்களாய் இருந்தனர்; அவர்கள் கர்த்தரது ஆசீர்வாதங்களில் பங்கு பெறுகிறவர்களாய் இருந்தனர். கர்த்தரின் ஆசீர்வாதங்களில் தற்போது பங்கு பெறுபவர்களாய் இருக்கிறோம், கிறிஸ்துவின்

தியாகக் கிரியைகளானது, உலகப்பிரகாரமான ஆலயத்தைக் காட்டிலும், நமது ஆத்துமத்தில் தேவனைச் சந்திக்க நம்மை ஏதுவுண்டாக்குகிறதாய் இருக்கிறது. எபிரெயர் 13:10. நமது சரீரமானது, பரிசுத்த ஆவியானவரின் ஆலயமாய் இருக்கிறது. 1 கொரிந்தியர் 3:16-17, 6:19, 2 கொரிந்தியர் 6:16.

3. நமது ஆத்துமத்தில் உள்ள பலிபீடமானது, இப்பூமியில் அநித்தியமாய் வாசம் செய்கிறோம் என்பதை நமக்கு நினைவு படுத்துகிறதாய் இருக்கிறது, இப்பூமியில் அவரது பணியை செய்து நிறைவேற்றி, புதிய வானம், புதிய பூமியாகிய பெரிதான அண்டசராசரத்திற்காக முன்குறிக்கப்பட்டிருக்கிறது. எபிரெயர் 11:9-16, 12:22, வெளிப்படுத்தல் 21.

4. நமது சரீரத்தாலும், மற்றும் நமது ஆத்துமத்தின் பலிபீடத்தாலும் நாம் கர்த்தரின் சேவையை செய்து வருகிறோம். முகமாய், அவரது முகத்திற்கு முன்பாய் சேவை செய்யும் நாளை எதிர்பார்க்கிறவர்களாய் இருக்கிறோம். 1 கொரிந்தியர் 13:12, 2 கொரிந்தியர் 5:1-10.

நிலைத்து இருத்தல்:

1. நிலைத்து இருத்தல் என்ற வார்த்தை பூரண பராமரிப்பு, தேவைகளை சந்திப்பது, போஷிப்பது, மற்றும் ஐக்கியம் குறித்து பேசுகிறது. உபாகமம் 33:27-28

2. தேவனுடைய பராமரிப்பில் வாழ்தல் என்பது "நிலைத்து இருத்தல்" என்பதின் திறவுகோலாய் இருக்கிறது. யோவான் 13:17

3. "நிலைத்து இருத்தல்" என்பதன் பொருள் ஒவ்வொரு விசுவாசியின் வாழ்வில், ஒவ்வொரு பகுதியிலும் அவசியமான ஒவ்வொரு தேவைகளுக்கும் அளிக்கப்படும் முழுமையான பராமரிப்பு ஆகும். சங்கீதம் 23:1,5. 91:1-10 யோவான் 15:4; யாக்கோபு 1:2-4.

4. யோவான் 15:4ன் படி நிலைத்திருத்தல் என்பது aorist imperative ingressive, ஆக உள்ளது, இது ஒரு கட்டளையாய் அளிக்கப்பட்டு, எல்லாக் காலங்களிலும் செயல்படுத்த வேண்டுவதை வலியுறுத்துகிறதாய் இருக்கிறது, காரணம் இது

முழுமையான பராமரிப்பை அளிக்கிறதாய் இருக்கிறது. சங்கீதம் 91:1-2.

5. ஒரு தேவனுடைய பிள்ளை அவரில் "நிலைத்திராதபடி" இருக்கும் படியாக, நிபந்தனையோ, அல்லது சமயமோ ஒருபோதும் அளிக்கப்படவில்லை. சங்கீதம் 91:1, 4, 9-10a

6.. உலகப்பிரகாரமான பிரச்சனைகள் அநித்தியமானவைகள், பலதரப்பட்டவைகள், ஆனால் அவைகளுக்கு உண்டான தெய்வீகத்தீர்வுகள் முழுமையானது. ஆதியாகமம் 50:20 ரோமர் 8:28.

7. நாம் அவரில் நிலைத்து இருக்கும்பொழுது மட்டுமே, இயேசுக்கிறிஸ்து நமது வீடாகிய இருதயத்தில் தரித்து இருக்கமுடியும். எபேசியர் 3;16,17, கொலோசியர் 3:15,16.

CHRISTIAN LIFE: GIFTS - SPIRITUAL GIFTS

கிறிஸ்தவ வாழ்க்கை: வரங்கள் - ஆவிக்குரிய வரங்கள்

1. மூன்று பொதுவான வேதபகுதிகள் ஆவிக்குரிய வரங்களை பட்டியலிட்டுள்ளன. (எபேசியர் 4:11, 1 கொரிந்தியர் 12:28-30,ரோமர் 12:3-8).

2. ஊழியத்தில் பயன்பட மற்றும் சபையைக் கட்டிஎழுப்பப்பட, ஆவிக்குரிய வரங்கள் அளிக்கப்பட்டதன் நோக்கமாயிருக்கிறது. (எபேசியர் 4:8-13).

3. இரட்சிப்பின்போது இவ்வரங்களை பரிசுத்தாவியானவர் அளிக்கிறார். (1 கொரிந்தியர் 12)

4. சில வரங்கள் தற்காலிகமாய் இருக்கின்றன (1 கொரிந்தியர் 13:8-10) மற்றும் சில வரங்கள் நிரந்தரமானவைகள் (1 கொரி. 12:28 cf. 1 கொரி. 13:8).

5. வேதாகமப் பகுப்பு முழுமையடைவதற்கு முன்னர் தற்காலிக வரங்கள் பயன்படுத்தப்பட்டன. தற்காலிக வரங்களின் நோக்கம் முழுமை பெற்ற வேதாகமத்தின் இடத்திலிருந்து கொண்டு செயல்படுவது ஆகும். (1கொரிந்தியர் 13:8-10).

6. ஆவிகுரிய வரங்களின் செயல்பாடுகள் முற்றிலும் பரிசுத்தாவியானவரின் நிறைவினால் மட்டுமே மெய்யானதாய் இருக்கமுடியும். (அப்போஸ்தலர்2:4).

STUDY	CHAPTER
ABIDING IN GOD தேவனில் நிலைத்திருத்தல்	7
ANGELS – ANGELIC CONFLICT தூதர்கள் - தூதர்களின் முறண்பாடு.	4
ATHLETICS பந்தய வீரர்.	6
BIBLE: BIBLE AND THE BELIEVER: வேதாகமம் வேதாகமும் விசுவாசியும்	4
CHRIST: BRANCH கிறிஸ்து: கிளை	2
CHRIST: CELEBRITYSHIP OF CHRIST கிறிஸ்து: கிறிஸ்துவின் பிரபலத்துவம்.	2
CHRIST: CRIES FROM THE CROSS கிறிஸ்து: சிலுவையில் கதறியவைகள்.	2
CHRIST: DEITY OF CHRIST கிறிஸ்து: கிறிஸ்துவின் தெய்வீகம்.	5
CHRIST: HUMILIATION AND EXULTATION	2
CHRIST: HYPOSTATIC UNION ; கிறிஸ்து: இருத் தன்மைகளின் இணைப்பு.	2
CHRIST: IMPECCABILITY OF CHRIST கிறிஸ்து: கிறிஸ்துவின் பிழையற்ற வாழ்க்கை.	2
CHRIST: KENOSIS OF CHRIST கிறிஸ்து: கிறிஸ்து வெறுமையாக்கப்படுதல்.	2
CHRIST: MEDIATORSHIP கிறிஸ்து: மத்தியஸ்தர்	2
CHRIST: OBEDIENCE OF JESUS CHRIST கிறிஸ்து: இயேசுக்கிறிஸ்துவின் கீழ்ப்படிதல்	2
CHRIST: RESURRECTION APPEARANCES கிறிஸ்து: உயிர்த்தெழுதலும், காட்சியளித்தலும்.	2
CHRIST: RESURRECTION BODY கிறிஸ்து: உயிர்த்தெழுந்த சரீரம்.	2
CHRIST: SACRIFICE OF CHRIST கிறிஸ்து: கிறிஸ்துவின் தியாக பலி.	2
CHRIST: TRIALS OF CHRIST கிறிஸ்து: கிறிஸ்து நியாயம் விசாரிக்கப்படுதல்.	2
CHRIST TYPES: PASSOVER AS A TYPE OF	2

CHRIST கிறிஸ்து ஒப்புமை: பஸ்கா கிறிஸ்துவுக்கு ஒப்புமையாய் கூறப்படுதல்.	
CHRIST: WORK ON THE CROSS கிறிஸ்து: சிலுவையில் கிறிஸ்துவின் பணி.	6
CHRISTIAN LIFE: ALTAR OF THE SOUL கிறிஸ்தவ வாழ்க்கை: ஆத்துமத்தின் பலி பீடம்.	7
CHRISTIAN LIFE AMBASSADOR கிறிஸ்தவ வாழ்க்கை: ஸ்தானாபதி	5
CHRISTIAN LIFE: BLESSING OF THE BELIEVER கிறிஸ்தவ வாழ்க்கை: விசுவாசியின் ஆசீர்வாதம்.	4
CHRISTIAN LIFE: CHRIST FORMED IN YOU கிறிஸ்தவ வாழ்க்கை: கிறிஸ்து உன்னில் உருவாதல்	5
CHRISTIAN LIFE: CONFESSION AND FORGIVENESS கிறிஸ்தவ வாழ்க்கை: அறிக்கசெய்தலும், மன்னித்தலும்.	6
CHRISTIAN LIFE: DOUBT கிறிஸ்தவ வாழ்க்கை: சந்தேகம்.	4
CHRISTIAN LIFE – ETERNAL SECURITY கிறிஸ்தவ வாழ்க்கை: நித்திய பாதுகாப்பு.	5
CHRISTIAN LIFE: FAITH கிறிஸ்தவ வாழ்க்கை: விசுவாசம்.	4
CHRISTIAN LIFE: FAITH – OVERCOMING BY FAITH கிறிஸ்தவ வாழ்க்கை: விசுவாசத்தால் மேற்கொள்ளுதல்.	4
CHRISTIAN LIFE: MENTAL ATTITUDE கிறிஸ்தவ வாழ்க்கை: மன நிலை.	3
CHRISTIAN LIFE: LOVE கிறிஸ்தவ வாழ்க்கை: அன்பு.	5
CHRISTIAN LIFE: OBEDIENCE கிறிஸ்தவ வாழ்க்கை: கீழ்ப்படிதல்.	4
CHRISTIAN LIFE: POSITION IN CHRIST கிறிஸ்தவ வாழ்க்கை: கிறிஸ்துவில் நமது ஸ்தானம்.	6
CHRISTIAN LIFE – REWARDS AND CROWNS	6

கிறிஸ்தவ வாழ்க்கை: பிரதிபலனும் கிரீடங்களும்.	
CHRISTIAN LIFE: SERVICE கிறிஸ்தவ வாழ்க்கை: சேவை.	5
CHRISTIAN LIFE: SOLDIER – CHRISTIAN SOLDIER கிறிஸ்தவ வாழ்க்கை: இராணுவ வீரர் - கிறிஸ்தவ இராணுவவீரர்.	4
CHRISTIAN LIFE: SPIRITUAL GIFTS கிறிஸ்தவ வாழ்க்கை: ஆவிக்குரிய வரங்கள்.	7
CHRISTIAN LIFE: STEWARDSHIP கிறிஸ்தவ வாழ்க்கை: உக்கிராணத்துவம்.	5
CHRISTIAN LIFE: SUBMISSION கிறிஸ்தவ வாழ்க்கை: ஒப்புக்கொடுத்தல்	4
CHRISTIAN LIFE: SUFFERING கிறிஸ்தவ வாழ்க்கை: பாடுகள்	4
CHRISTIAN LIFE : VIRTUES கிறிஸ்தவ வாழ்க்கை: நற்குணங்கள்	5
CHURCH AND ISRAEL சபையும் இஸ்ரவேலும்	6
CHURCH: APOSTLESHIP சபை: அப்போஸ்தலத்துவம்	5
CHURCH – CHURCH DISCIPLINE சபை: சபையின் ஒழுங்கு நடவடிக்கை.	3
CHURCH: MINISTERS சபை: ஊழியர்கள்	5
CHURCH: SHEPHERDING THE SHEEP சபை: ஆடுகளை மேய்த்தல்	5
CIRCUMCISION விருத்த சேதனம்	6
DEATH மரணம்	6
FEAR பயம்	4

STUDIES

STUDIES [continued]

STUDY	CHAPTER
GOD: CHARACTER OF GOD தேவன்: தேவனின் குணாதிசயம்	5
GOD: COMFORT FOR BELIEVERS தேவன்: விசுவாசிகளின் ஆறுதல்	4
GOD: DIVINE INSTITUTIONS – FAMILY தேவன்: தெய்வீக நிறுவனங்கள்	3
GOD: DIVINE INSTITUTIONS – MARRIAGE தேவன்: நிறுவனங்கள் - திருமணம்.	3
GOD: ELECTION AND PREDESTINATION தேவன்: தெரிந்தெடுத்தலும் முன்குறிக்கப்படுதலும்	5
GOD: PLAN OF GOD தேவன்: தேவனது திட்டம்.	5
GOD: TRINITY தேவன்: திரித்துவம்	5
GRACE கிருபை	6
GRACE: FALLING FROM GRACE கிருபை: கிருபையினின்று விழுதல்.	6
HEALING: NO HEALING IN THE ATONEMENT குணமாதல்: பிரயாச் சித்தத்தில் குணமாதல் என்பது இல்லை.	2
HELL AND HADES நரகமும் பாதாளமும்	6
HOLY SPIRIT: EFFECTIVE CALLING பரிசுத்த ஆவியானவர்: பயனுள்ள அழைப்பு.	2
HOLY SPIRIT: MINISTRY IN THE NEW TESTAMENT பரிசுத்த ஆவியானவர்: புதிய ஏற்பாடில் அவரது ஊழியம்.	2
HOLY SPIRIT: OPERATION பரிசுத்த ஆவியானவர்: அவரது செயல்பாடுகள்.	2
HOPE நம்பிக்கை	5
JUDGMENT:GREAT WHITE THRONE நியாயத்தீர்ப்பு: வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு.	6
JUDGMENT: JUDGMENT SEAT OF CHRIST நியாயத்தீர்ப்பு: கிறிஸ்துவின்	6

நியாயாசனம்.	
LEGALISM லீகலிசம் [நியாயப்பிரமாணத்தைக் கைக்கொண்டு செயல்படுதல்]	6
MIRACLES: HEALING AND MIRACLES அற்புதங்கள்: குணமாதலும் அற்புதங்களும்.	2
OFFERINGS: LEVITICAL OFFERINGS REPRESENTING CHRIST காணிக்கைகள்: லேவியரின் காணிக்கைகள் கிறிஸ்துவைப் பிரதிபலித்தல்	2
PRAYER ஜெபம்	5
SALVATION: ATONEMENT – UNLIMITED ATONEMENT இரட்சிப்பு பிராயசித்தம் - வரையரையற்ற பிராயசித்தம்.	2
SALVATION: EXPIATION AND PROPITIATION, இரட்சிப்பு: பரிகாரம் மற்றும் பிராயச்சித்தம்	2
SALVATION: IMPUTATION இரட்சிப்பு: குற்றம் சுமத்தப்படல்	2
SALVATION: JUSTIFICATION இரட்சிப்பு: நீதிமானக்கப்படுதல்	2
SALVATION: RECONCILIATION. இரட்சிப்பு: ஒப்புரவாக்கப்படுதல்	2
SALVATION: REDEMPTION இரட்சிப்பு: மீட்பு	2
SALVATION: REGENERATION இரட்சிப்பு: திரும்ப உருவாக்கப்படுதல்.	2
SIN: FALL OF MAN. பாவம்: மனிதனின் வீழ்ச்சி.	2

----- 000000000 ------

இயேசுக்கிறிஸ்து யார்?

பேராசிரியர் சைமன் கிரீன்லீஃப் எல்லா காலங்களுக்கும் தலைசிறந்த வழக்கறிஞராய் விளங்கிவருகிறார். அவரது "நிச்சயத்தைக் குறித்த பிரமாணங்கள்" “Laws of Evidence” அநேக ஆண்டுகாலங்களாய் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் எல்லாராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட, நிலையான ஒழுங்குமுறை பரிசீலனைக்குரிய விஷயமாய் இருந்து வருகிறது. அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள ஒரு பல்கலைக் கலகத்தில் அவர் சட்டம் போதித்துக் கொண்டு இருந்த சமயத்தில், அங்குள்ள மாணவர்களில் ஒருவன் சரித்தர பூர்வமான ஒருவரை "நிச்சயத்தைக் குறித்த பிரமாணங்களைக்கொண்டு" விவரிக்க முடியுமா என வினவினான். கிரீன்லீஃப் அம்மாணவனை நோக்கி விவரிக்க முடியும் என ஒத்துக்கொண்டவராய், அச்சரித்திரப் பூர்வமான நபர் யார் என அவனை நோக்கி வினவினார். அதற்கு அம்மாணவன் மறுமொழியாக, பரிசீலனைக்குரிய அந்நபர் இயேசுக்கிறிஸ்து என்றான். பேராசிரியர் கிரீன்லீஃப் ஒத்துக்கொண்டவராய் பரிசீலனைக்காக

இயேசுக்கிறிஸ்துவை எடுத்துக்கொள்ள முன்வந்தார், அவர் தனது பரிசீலனையை முடித்துக்கொண்ட போது, அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டார்.

அதன் பின்னர் பேராசிரியர் கிரீன்லீஃப் அமெரிக்க ஐக்கிய தேசத்தில் உள்ள எல்லா நீதி சார்ந்த அலுவலர் அனைவருக்கும் வெளிப்படையான ஒரு கடிதத்தை எழுதி அதில் தான் தனிப்பட்ட விதத்தில் இயேசுக்கிறிஸ்துவை கண்டுகொண்ட விதத்தை விவரித்து இருந்தார். இயேசுக்கிறிஸ்துவைக் குறித்த விஷயங்கள் சரித்திரப்பூர்வமாய் மிகத் துள்ளியமானவை என முழு நிச்சயத்துடன் ஆதாரங்களுடன் எழுதி அனுப்பினார். மட்டுமல்லாது இயேசுக்கிறிஸ்து மனிதரைவிட மேம்பட்டவர் என்றும், அவர் கடவுளோ அல்லது இல்லையோ என்பதை பரிசீலித்த போது, அவர் கடவுளைத் தவிர வேறு எவருமல்லர் என்பதை மிக உறுதியாய் ஆராய்ந்து கண்டுகொண்டேன். அவரைக் கடவுளாய் கண்டுகொண்டமாத்திரத்தில் அவரை எனது சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டேன் என எழுதினார். ஆகவே நீதித்துறையில் பணியாற்றும் ஒவ்வொரு நபரும் "நிச்சயத்தைக் குறித்த பிரமாணத்தை" பயன்படுத்தும் பொழுது, அவரைக்குறித்து தவறாய் புறிந்துகொள்வதை தவிர்த்து, ஒருவேளை அவரை உங்களது சொந்த இரட்சகராய் அவரை ஏற்றுக்கொள்ளவில்லை என்றாலும் மேற்கூறிய பிரமாணத்தின் மூலம் அவர் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்து என்றும் சரித்திரப் பூர்வமாய் அவரைக் குறித்த விஷயங்கள் அனைத்தும் முற்றிலும் உண்மை என்பதையும் கண்டுகொள்ளுங்கள் என எழுதி முடித்தார்.

<u>நான் எவ்வாறு இரட்சிப்படைய முடியும்?</u>

மனுக்குலத்தில் உள்ள ஒவ்வொருக்கும் இரட்சிப்பு என்பது கிடைக்கக்கூடியதாய் இருக்கிறது. இரட்சிப்பு என்பது மிகவும் முக்கியம் வாய்ந்ததாகவும், தேவனின் அண்டசராசரத்தில் அனைவராலும் எடுத்துக்கொள்ளப் படக்கூடியதாயும் இருக்கிறது. பாவிகளின் இரட்சிப்பு என்பது தேவன் பாவத்தை கண்டும், காணாமல் கடந்து செல்லும் காரியமாகாது. தேவன் பாவிகளை முற்றிலும் நீதியின் அடிப்படையில், தனது தெய்வீக பரிசுத்த குணாதிசயத்தின் அடிப்படையில், இரட்சிக்கிறவராய் இருக்கிறார். இது கிருபை என அழைக்கப்படுகிறது. இது தேவனை மட்டும் சார்ந்ததாய் இருக்கிறது, இதற்கென மனிதன் எவ்வித கிரியையும் நடப்பிக்க அவசியமில்லை. அளவிட முடியாத இவ்வண்ட சராசரத்தின் சிருஷ்டிப்பானது, தேவன் பாவிகளை இரட்சிக்கும் திட்டத்தை விட, மிகவும் குறைவாகவே எடுத்துக்கொள்ளப்படுகிறது.

எப்படியிருப்பினும், தேவனுடைய இரட்சிப்பை ஒரு பாவி ஏற்றுக்கொள்வது என்பது வாழ்வில் மிக எளிதான ஒன்றாய் இருக்கிறது. ஒருவர் ஐசுவரியவானாய் இருத்தல் அவசியமற்றது, ஞானமுள்ளவராகவோ, மற்றும் படிப்பறிவுள்ளவராகவோ இருத்தல் அவசியமற்றது. வயதோ அல்லது தோலின் நிறமோ இதற்கு எவ்விதமான தடையையும் கொண்டுவருவது இல்லை. தேவனுடைய மீட்பில் இருக்கும் எண்ணிமுடியாத நன்மைகளானது, மிக எளிதாய் ஏற்றுக்கொள்ளும் அடிப்படையில் இருக்கிறது, இப்பரந்த அண்டசராசரத்தில் ஒருவரும் இதை அடைந்து கொள்வதற்கு விதிவிலக்கின்றி காணப்படுகின்றனர்.

நான் ஒரு கிறிஸ்தவனாவது எவ்வாறு?

ஒரு எளிய படி எடுத்து வைப்பதை மூன்று பிரிவுகளாய் பிரிக்கலாம். முதலாவது, நான் ஒரு பாவியாய் இருக்கிறேன் என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியம். (ரோமர் 3:23; 6:23; எசேக்கியேல் 18:4; யோவான் 5:24).

இரண்டாவதாக, பூரணமாய் இருக்கும் சர்வ வல்லமையுள்ள தேவனுடன் உறவுகொள்ளும் விருப்பத்தை உணருதல் வேண்டும், மற்றும் அவ்வாறு உறவுகொள்ள நான் பூரணமற்றவனாய் இருக்கிறேன் என்பதை உணருதல் வேண்டும், நான் கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவே ஒரே இரட்சகர் என்று கண்டுகொள்ள அவசியமாய் இருக்கிறது. (1 கொரி. 15:3; 1 பேதுரு 2:24; ஏசாயா 53:6; யோவான். 3:16).

மூன்றாவதாக, எனது சொந்த சுயசித்தத்தை பயன்படுத்தி கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை எனது இரட்சகராய் ஏற்றுக்கொண்டுள்ளேன் மற்றும் அவரை தனிப்பட்ட விதத்தில் அவர் எனக்காய் மரித்தார் என்று விசுவாசித்து, எனது தனிப்பட்ட வாழ்வின் வழியாகவும், அவரைத் தனிப்பட்ட ஒரு நபராகவும் ஏற்றுக்கொள்ளுதல் அவசியமான ஒன்றாய் இருக்கிறது. (யோவான் 1:12; 3:36; அப். 16:31; 4:12).

இரட்சிப்பின் விளைவுகள்:

இதன் விளைவுகள் என்பது நம்புவதற்கறிய அற்புதமானதாய் இருக்கிறது:

எனது பாவங்கள் அகற்றப்பட்டுவிட்டன. (யோவான் 1:29),

நான் தற்பொழுது நித்திய ஜீவனை அடைந்து இருக்கிறேன் (1 யோவான் 5:11,12),

நான் கிறிஸ்துவுக்குள் புது ஜீவியாய் மாறி இருக்கிறேன் (2 கொரி. 5:17),

பரிசுத்த ஆவியானவர் எனது வாழ்வை தமது வாசஸ்தலமாய் எடுத்துக் கொண்டுள்ளார் (1 கொரி. 6:19),

நான் ஒருபோதும் அழிந்து போவதில்லை (யோவான் 10:28-30).

இவ்வுண்மைகள் வாழ்வின் மிகப்பெரிய பரிமாற்றங்களாய் இருக்கின்றன. இதுவே எல்லா மக்களின் இலக்காய் இருக்கிறது; இதுவே நாம் இங்கிருப்பதற்கு மேலான நோக்கமாய் இருக்கிறது. கிறிஸ்தவராகதவர்களை கர்த்தராகிய இயேசுக்கிறிஸ்துவை பின்பற்றச் செய்யும் இவ்வெளிய போதனைகளால் உற்சாகப்படுத்தி, தேவனுடைய பரிசுத்த குடும்பத்தில் மறுபடி பிறந்த்து நித்திய வாழ்வையடைய உற்சாகப்படுத்துங்கள். (மத். 11:28; யோவான் 1:12; அப். 4:12; 16:31).

© Evangelical Bible College of Western Australia - PO Box I63 Armadale Western Australia 6992

Many other Christian resources are available freely from our internet web site: www.ebcwa.org.au and www.newstartbibleministries.org.au for weekly messages.

For further information contact Dr Peter Moses at PO Box 163 Armadale WA 6992 Tel 61 8 9399 1978 or email pjmoses@bigpond.com.au

We encourage you to freely copy and distribute these materials to your Pastor and friends. You only, need written permission from EBCWA if you intend using the materials in publications for resale. We encourage wide distribution freely!